புதிய எற்பாடு

நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய

இயேசுகிறிஸ்துவின்

புதிய ஏற்பாடு

இது மூலபாஷையாகிய கிரேக்கு பாஷைக்கு இசையத்

திருத்திய மொழிபெயர்ப்பு (1954)

மத்தேயு சுவிசேஷம்

1 ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின்
குமாரன் இயேசு கிறிஸ்துவின் வம்ச அட்ட
வணை:
2 ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்;
ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; யாக்
கோபு யூதாவையும் அவன் சகோதரரையும்
3 பெற்றான்; யூதா பேரேசையும் சேராவையும்
தாமாரினிடம் பெற்றான்; பேரேஸ் எஸ்ரோ
மைப் பெற்றான்; எஸ்ரோம் ஆராமைப்
4 பெற்றான்; ஆராம் அம்மினதாபைப் பெற்
றான்; அம்மினதாப் நகசோனைப் பெற்றான்;
5 நகசோன் சல்மோனைப் பெற்றான்; | சல்
மோன் போவாசை ராகாபினிடம் பெற்
றான்; போவாஸ் ஓபேத்தை ரூத்தினிடம்
பெற்றான்; ஓபேத் ஈசாயைப் பெற்றான்;
6 ஈசாய் தாவீதரசனைப் பெற்றான்.
தாவீது உரியாவின் மனைவியாயிருந்த
வளிடம் சாலொமோனைப் பெற்றான்;
7 சாலொமோன் ரெகொபெயாமைப் பெற்
றான்; ரெகொபெயாம் அபியாவைப் பெற்
றான்; அபியா ஆசாவைப் பெற்றான்; |
8 ஆசா யோசபாத்தைப் பெற்றான்; யோச
பாத் யோராமைப் பெற்றான்; யோராம் உசி
9 யாவைப் பெற்றான்; உசியா யோதாமைப்
பெற்றான்; யோதாம் ஆகாசைப் பெற்றான்;
ஆகாஸ் எசேக்கியாவைப் பெற்றான்; |
10 எசேக்கியா மனாசேயைப் பெற்றான்; மனாசே
ஆமோனைப் பெற்றான்; ஆமோன் யோசியா
11 வைப் பெற்றான்; பாபிலோனுக்குச் சிறைப்
பட்டுப்போகும் காலத்தில் யோசியா எகொ
னியாவையும் அவன் சகோதரரையும் பெற்
றான்.
12 பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போன
பின் எகொனியா சலாத்தியேலைப் பெற்றான்;
சலாத்தியேல் செருபாபேலைப் பெற்றான்;
13 செருபாபேல் அபியூத்தைப் பெற்றான்;
அபியூத் எலியாக்கீமைப் பெற்றான்; எலி
14 யாக்கீம் ஆசோரைப் பெற்றான்; ஆசோர்
சாதோக்கைப் பெற்றான்; சாதோக்கு
ஆகீமைப் பெற்றான்; ஆகீம் எலியூத்தைப்
15 பெற்றான்; எலியூத் எலெயாசாரைப் பெற்
றான்; எலெயாசார் மாத்தானைப் பெற்றான்;
மாத்தான் யாக்கோபைப் பெற்றான்; | யாக் 16
கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்
பைப் பெற்றான்; அவளிடம் கிறிஸ்து எனப்
படுகிற இயேசு பிறந்தார்.
ஆகவே இந்தத் தலைமுறைகளெல்லாம்: 17
ஆபிரகாம்முதல் தாவீதுவரைக்கும் பதினாலு;
தாவீதுமுதல் பாபிலோனுக்குச் சிறைப்
பட்டுப்போன காலம்வரைக்கும் பதினாலு;
பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப்போன
காலமுதல் கிறிஸ்துவரைக்கும் பதினாலு.
இயேசு கிறிஸ்துவினுடைய பிறப்பின் 18
விவரம்: அவருடைய தாயாராகிய மரியாள்
யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கை
யில், அவர்கள் கூடிவருமுன் அவள் கர்ப்ப
வதியானதாகத் தெரியவந்தது; அது பரி
சுத்த ஆவியினால் உண்டானது. அவள் புரு 19
ஷன் யோசேப்பு நீதிமானாயிருந்து, அவளை
அவமானத்துக்குள்ளாக்க மனமில்லாமல்,
இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனை
யாயிருந்தான். அவன் இப்படி யோசித்துக் 20
கொண்டிருக்கையில், கர்த்தரின் தூதன்
சொப்பனத்தில் அவனுக்குத் தோன்றி:
தாவீதின் குமாரனாகிய யோசேப்பே,
உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்
கொள்ளப் பயப்படாதே; அவளிடம் உற்ப
வித்திருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்
டானது. அவள் ஒரு குமாரனைப் பெறு 21
வாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவா
யாக; தமது ஜனத்தின் பாவங்களை நீக்கி
அவர்களை இரட்சிப்பவர் அவரே என்றான்.
இதோ, கன்னிகையானவள் கர்ப்பவதி 22
யாகி
ஒரு குமாரனைப் பெறுவாள்;
அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடு
வார்கள்
என்று தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தர்
உரைத்தது நிறைவேற இதெல்லாம் நடந்
தது. இம்மானுவேல் என்பதற்குக் கடவுள் 23
நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்.
யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து 24
கர்த்தரின் தூதன் தனக்குக் கட்டளையிட்ட
படியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு,

25 அவள் குமாரனைப் பெற்றெடுக்குமளவும்
அவளை அறியாதிருந்தான்; அவருக்கு இயேசு
என்று பேரிட்டான்.

2 ஏரோது அரசன் நாட்களில் யூதேயாவி
லுள்ள பெத்லெகேமில் இயேசு பிறந்தபின்
சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து எருசலேமுக்கு
2 வந்து: யூதருக்கு அரசனாகப் பிறந்தவர்
எங்கே இருக்கிறார்? கிழக்கிலே அவருடைய
நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து
3 கொள்ள வந்தோம் என்றார்கள். அதைக்
கேட்டபோது, ஏரோது அரசன் கலங்கி
னான்; அவனோடேகூட எருசலேம் முழுதும்
4 கலங்கிற்று. அவன் ஜனத்தின் பிரதான
ஆசாரியர் வேதபாரகர் எல்லாரையும் கூடி
வரச் செய்து: கிறிஸ்து பிறப்பது எங்கே
5 என்று அவர்களிடம் விசாரிக்க, அவர்கள்
அவனிடம்: யூதேயாவிலுள்ள பெத்லெகே
மிலே பிறப்பார்;
6 யூதேயா நாடே, பெத்லெகேமே, யூதா
வின் பிரபுக்களுக்குள் நீ சிறியதே
யல்ல;
என் ஜனமாகிய இஸ்ரவேலை மேய்த்து
நடத்தும் பிரபு
உன்னிடத்திலிருந்து புறப்படுவார்
என்று தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்
கிறதே என்றார்கள்.
7 அப்பொழுது ஏரோது, சாஸ்திரிகளை இரக
சியமாய் அழைத்து, நட்சத்திரம் காணப்
பட்ட காலத்தைக்குறித்து அவர்களிடம்
8 திட்டமாய் விசாரித்து: நீங்கள் போய்,
பிள்ளையைக்குறித்துத் திட்டமாய் விசாரி
யுங்கள்; நீங்கள் அதைக் கண்டபின்பு,
நானும் வந்து அதைப் பணிந்துகொள்ளும்
படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி,
அவர்களை பெத்லெகேமுக்கு அனுப்பினான்.
9 ராஜா சொன்னதை அவர்கள் கேட்டுப்
போனார்கள். கிழக்கிலே அவர்கள் கண்ட
நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்கு
மேல் வந்து நிற்கும் வரைக்கும் அவர்கள்
10 முன் சென்றது. அவர்கள் அந்த நட்சத்
திரத்தைக் கண்டபோது, மிகுந்த ஆனந்த
11 சந்தோஷமடைந்தார்கள். அவர்கள் அந்த
வீட்டுக்குள் பிரவேசித்து, தாயாராகிய மரி
யாளிடமிருந்த பிள்ளையைக் கண்டு, சாஷ்
டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்து
கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத்
திறந்து, பொன்னையும் தூபவர்க்கத்தையும்
வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்
12 கையாகப் படைத்தார்கள். பின்பு ஏரோ
துவினிடத்திற்குத் திரும்பிப் போகவேண்
டாம் என்று அவர்கள் சொப்பனத்தில் கடவு
ளால் எச்சரிக்கப்பட்டு, வேறு வழியாய்த்
தங்கள் தேசத்திற்குப் போய்விட்டார்கள்.
அவர்கள் போனபின், இதோ, கர்த்தரு 13
டைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்
குத் தோன்றி: ஏரோது பிள்ளையைக் கொலை
செய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து,
பிள்ளையையும் அதன் தாயையும் கூட்டிக்
கொண்டு எகிப்துக்குத் தப்பி ஓடிப்போய்,
நான் உனக்குச் சொல்லும் வரைக்கும்
அங்கே இரு என்றான். அவன் எழுந்து, 14
இரவிலே பிள்ளையையும் அதன் தாயா
ரையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குப்
போய், ஏரோதுவின் மரணபரியந்தம் 15
அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்
னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று
தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தர் உரைத்
தது நிறைவேற இப்படி நடந்தது.
அப்பொழுது ஏரோது சாஸ்திரிகள் 16
தன்னை வஞ்சித்ததை கண்டு மிகுந்த கோபங்
கொண்டு, ஆட்களை அனுப்பி, தான் சாஸ்திரி
களினிடம் திட்டமாய் விசாரித்த காலத்தின்
படியே, பெத்லெகேமிலும் அதன் சகல
எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதும் அதற்
குட்பட்டதுமான எல்லா ஆண் குழந்தை
களையும் கொலைசெய்தான்.
ராமாவிலே சத்தம் கேட்டது, 17
அழுகை! மிகுந்த புலம்பல்!
ராகேல் தன் பிள்ளைகள் நிமித்தம்
அழுது,
அவைகள் இல்லாதபடியால் ஆறுதல்
அடைய மனமில்லாதிருந்தாள்
என்று | எரேமியா தீர்க்கதரிசியின் மூல 18
மாய் உரைக்கப்பட்டது அப்பொழுது நிறை
வேறிற்று.
ஏரோது இறந்தபின், கர்த்தருடைய 19
தூதன் எகிப்திலே யோசேப்புக்குச் சொப்ப
னத்தில் தோன்றி: நீ எழுந்து பிள்ளையை 20
யும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு
இஸ்ரவேல் தேசத்துக்குப் போ; பிள்ளையின்
பிராணனை வாங்கத்தேடினவர்கள் இறந்
தார்கள் என்றான். அவன் எழுந்து பிள்ளை 21
யையும் அதன் தாயாரையும் கூட்டிக்
கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு வந்தான்.
ஆகிலும், அர்கெலாவு, தன் தகப்பனாகிய 22
ஏரோதுவின் ஸ்தானத்தில் பட்டத்துக்கு
வந்து யூதேயாவில் அரசாளுகிறான் என்று
கேள்விப்பட்டு, அங்கே போகப் பயந்தான்.
அப்பொழுது அவன் சொப்பனத்தில் கடவு
ளால் எச்சரிப்படைந்து, கலிலேயா நாட்
டின் புறங்களுக்கு விலகிப்போய், நாச 23
ரேத்து என்னும் ஊரில் வந்து வாசஞ்செய்
தான். நசரேயன் எனப்படுவார் என்று

தீர்க்கதரிசிகளின் மூலமாய் உரைக்கப்
பட்டது நிறைவேற இப்படி நடந்தது.

3 அந்நாட்களில் யோவான் ஸ்நானகன்
2 வந்து: மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்
யம் சமீபித்திருக்கிறது என்று யூதேயாவின்
வனாந்தரத்தில் பிரசங்கம் பண்ணினான்.
3 கர்த்தரின் வழியை ஆயத்தப்படுத்
துங்கள், அவர் பாதைகளைச் செவ்வை
பண்ணுங்கள்
என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனு
டைய சத்தம்
என்பதாக ஏசாயா தீர்க்கதரிசியினால்
4 உரைக்கப்பட்டவன் இவனே. இந்த
யோவான் ஒட்டக மயிர் உடை தரித்துத்
தன் அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்
கொண்டிருந்தான்; வெட்டுக்கிளியும் காட்
5 டுத்தேனும் அவன் ஆகாரம். அப்பொழுது
எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் யோர்
தானுக்கு அடுத்த சுற்றுப்புறம் அனைத்திலு
6 மிருந்தவர்கள் அவனிடம் போய், தங்கள்
பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான்
நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்று
7 வந்தார்கள். பரிசேயரிலும் சதுசேயரிலும்
அநேகர் ஞானஸ்நானம் பெற வருகிறதை
அவன் கண்டு: விரியன் பாம்புக்குட்டி
களே! வருங்கோபத்துக்குத் தப்பிக்கொள்ள
உங்களுக்கு வகை காட்டினவன் யார்?
8 மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுங்கள்.
9 ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று
உங்களுக்குள் சொல்லிக்கொள்ள நினைக்க
வேண்டாம். ஆபிரகாமுக்கு இந்தக் கற்
களிலிருந்து பிள்ளைகளைப் பிறப்பிக்கக்
கடவுள் வல்லவர் என்று உங்களுக்குச்
10 சொல்லுகிறேன். இப்பொழுது மரங்களின்
வேர் அருகே கோடரி வைத்திருக்கிறது.
ஆகவே, நல்ல கனி கொடாத மரமெல்
லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்
11 படும். மனந்திரும்புதலுக்கென்று நான்
ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்
கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிற
வரோ என்னிலும் வல்லவர், அவர் பாத
ரட்சைகளைச் சுமக்க நான் தகுந்தவனல்ல;
அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினா
லும் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுப்
12 பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்
கிறது; அவர் தமது களத்தை முற்றும்
விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்
தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்
கினியினால் சுட்டெரிப்பார் என்றான்.
13 அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம்
பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு
யோர்தானுக்கருகே அவனிடம் வந்தார்.
அவனோ: நான் உம்மாலே ஞானஸ்நானம் 14
பெறவேண்டியவனாயிருக்க, நீர் என்னிடம்
வருகிறீரே என்று சொல்லி அவரைத் தடுத்
துப்பார்த்தான். இயேசுவோ, இப்பொழுது 15
இடங்கொடு, சகல நீதியையும் இப்படி
நிறைவேற்றுவது நமக்கு ஏற்றது என்றார்.
அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்
தான். இயேசு ஞானஸ்நானம் பெற்ற 16
வுடனே ஜலத்திலிருந்து கரையேறினார்.
வானம் திறவுண்டது; தேவ ஆவி புறாவைப்
போல இறங்கித் தம்மேல் வருகிறதைக் கண்
டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு 17
சத்தம் பிறந்து: இவர் என் நேச குமாரன்,
இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று
உரைத்தது.

அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக் 4
கப்படுவதற்கு ஆவியினாலே வனாந்தரத்திற்
குக் கொண்டுபோகப்பட்டார். அவர் இரவு 2
பகல் நாற்பதுநாள் உபவாசித்தபின், அவ
ருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது 3
சோதனைக்காரன் அவரிடம் வந்து: நீர் தேவ
குமாரனேயானால், இந்தக் கற்கள் அப்பங்க
ளாகும்படி சொல்லும் என்றான். அவரோ: 4
மனுஷன் ஆகாரத்தினால் மாத்திரமல்ல,
கடவுள் வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு
வார்த்தையினாலும் பிழைப்பான் என்று
எழுதியிருக்கிறது என்றார். அப்பொழுது 5
பிசாசு அவரைத் திருநகரத்திற்குக் கொண்டு
போய், தேவாலயத்து உப்பரிகையின்மேல்
அவரை நிறுத்தி: நீர் தேவகுமாரனேயானால் 6
கீழே குதித்துவிடும்;
அவர் உம்மைக்குறித்துத் தம் தூதருக்
குக் கட்டளையிடுவார்;
உமது பாதம் கல்லில் படாதபடி
அவர்கள் உம்மைத் தங்கள் கைகளில்
ஏந்திக்கொள்வார்கள்
என்று எழுதியிருக்கிறது என்றான். இயேசு 7
அவனிடம்: உன் கடவுளாகிய கர்த்தரைச்
சோதிக்கவேண்டாம் என்று எழுதியிருக்
கிறதே என்றார். பின்னும் பிசாசு அவரை 8
மிகவும் உயர்ந்த மலைமேல் கொண்டுபோய்,
உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைக
ளின் மகிமையையும் அவருக்குக் காண்
பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என் 9
னைப் பணிந்துகொண்டால் இவைகளெல்
லாவற்றையும் உமக்குத் தருவேன் என்று
சொன்னான். அப்பொழுது இயேசு: அப் 10
பாலே போ, சாத்தானே; உன் கடவுளாகிய
கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவ
ரையே சேவிப்பாயாக என்று எழுதியிருக்கி

11 றதே என்றூர். அப்பொழுது பிசாசு அவரை
விட்டுப் போனான். உடனே, தேவதூதர்
வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.
12 யோவான் சிறையில் வைக்கப்பட்டான்
என்று இயேசு கேள்விப்பட்டு, கலிலேயா
13 வுக்குப் போய், | நாசரேத்தை விட்டு, செபு
லோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லை
களிலிருக்கும் கடற்கரைக்கருகான கப்பர்
நகூமுக்கு வந்து வாசஞ்செய்தார்.
14 கடற்கரை வழியிலும் யோர்தானுக்கு
அப்புறத்திலுமுள்ள
செபுலோன் நாடும், நப்தலி நாடுமாகிய
புறஜாதியாரின் கலிலேயாவிலே,
15 இருளில் உட்கார்ந்திருந்த ஜனங்கள்
பெரிய ஒளியைக் கண்டார்கள்.
மரணப் பிரதேசத்திலும் மரண நிழலிலும்
உட்கார்ந்திருந்தவர்களுக்கு
ஒளி உதித்தது
16 என்று | ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாய்
உரைக்கப்பட்டது நிறைவேற இப்படி
நடந்தது.
17 அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள்,
பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று
பிரசங்கிக்கத் தொடங்கினார்.
18 அவர் கலிலேயாக் கடலோரமாய் நடந்து
போகையில், சகோதரர் இருவரைக் கண்
டார். அவர்கள், பேதுரு என்னப்பட்ட
சீமோனும் அவன் சகோதரன் அந்திரேயா
வுமே. இவர்கள் மீன் பிடிக்கிறவர்கள்;
19 கடலில் வலை வீசிக்கொண்டிருந்தார்கள்.
அவர் அவர்களைப் பார்த்து: என் பின்னே
வாருங்கள்; உங்களை மனுஷரைப் பிடிக்கிற
20 வர்களாக்குவேன் என்றார். உடனே
அவர்கள் வலைகளைவிட்டு அவரைப் பின்
21 பற்றினார்கள். அவர் அவ்விடம் விட்டுப்
போகையில், செபெதேயுவின் மகன் யாக்
கோபு, அவன் சகோதரன் யோவான் என்ற
வேறு இரண்டு சகோதரரைக் கண்டார்.
இவர்கள் தங்கள் தகப்பன் செபெதேயு
வுடன் படவில் இருந்து வலைகளைப் பழுது
பார்த்துக்கொண்டிருந்தார்கள்; அவர்களை
22 யும் அழைத்தார். உடனே அவர்கள் தங்கள்
படவையும் தகப்பனையும் விட்டு அவரைப்
பின்பற்றினார்கள்.
23 பின்பு அவர் கலிலேயா எங்கும் சுற்றி
நடந்து, அவர்கள் ஜெபாலயங்களில் உப
தேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிர
சங்கித்து, ஜனங்களில் காணப்பட்ட சகல
வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கிக்
24 குணமாக்கினார். அவருடைய கீர்த்தி சீரியா
எங்கும் பிரபல்யமாயிற்று. பல வியாதி
களும் வேதனைகளுமுள்ள சகல பிணியாளி
களையும், பேய் பிடித்தவர்களையும், சந்திர
ரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவ
ரிடம் கொண்டுவந்தார்கள்; அவர்களை அவர்
குணமாக்கினார். கலிலேயாவிலும் தெக்கப் 25
போலியிலும் எருசலேமிலும் யூதேயாவிலும்
யோர்தானுக்கு அப்புறத்திலு மிருந்து திரள்
திரளாய் ஜனங்கள் வந்து அவருக்குப் பின்
சென்றார்கள்.

அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின் 5
மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது,
அவருடைய சீஷர் அவரிடம் வந்தார்கள்.
அப்பொழுது அவர் அவர்களுக்கு உபதேச 2
மாகத் திருவாய்மலர்ந்தருளினதாவது:—
ஆவியில் தரித்திரர் பாக்கியவான்கள்; பர 3
லோக ராஜ்யம் அவர்களுடையது.
துயரப்படுவோர் பாக்கியவான்கள்; 4
அவர்கள் தேற்றப்படுவார்கள்.
சாந்தகுணமுள்ளோர் பாக்கியவான்கள்; 5
அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்.
நீதியின்மேல் பசிதாகமுள்ளோர் பாக்கிய 6
வான்கள்; அவர்கள் திருப்தி அடைவார்கள்.
இரக்கமுள்ளோர் பாக்கியவான்கள்; 7
அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.
இருதயத்தில் சுத்தமுள்ளோர் பாக்கிய 8
வான்கள்; அவர்கள் கடவுளைத் தரிசிப்
பார்கள்.
சமாதானம்பண்ணுவோர் பாக்கிய 9
வான்கள்; அவர்கள் கடவுளின் புத்திரர்
என்னப்படுவார்கள்.
நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் 10
பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்க
ளுடையது.
என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன் 11
பப்படுத்தி, எல்லாவித தீயமொழிகளையும்
உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்க
ளானால் நீங்கள் பாக்கியவான்கள். சந் 12
தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்
தில் உங்களுக்குப் பலன் மிகுதி; உங்க
ளுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும்
அப்படியே துன்பப்படுத்தினார்கள்.
பூமிக்கு உப்பு நீங்களே; உப்பு சாரமற் 13
றுப்போனால் எதினால் சாரமேற்றப்படும்?
மனுஷர் அதை வெளியே கொட்டி மிதிப்ப
தற்கேயொழிய வேறொன்றுக்கும் உதவாது.
உலகத்துக்கு வெளிச்சம் நீங்களே; மலை 14
யின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்தி
ராது. விளக்கைக்கொளுத்தி மரக்காலின் கீழ் 15
வைக்காமல் விளக்குத்தண்டின்மேல் வைப்
பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள
யாவருக்கும் வெளிச்சந்தரும். இவ்விதமாய், 16
மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு,

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை
மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம்
அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.
17 நியாயப்பிரமாணத்தையாவது தீர்க்கதரி
சனங்களையாவது குலைத்துப்போட வந்தேன்
என்று எண்ணாதேயுங்கள்; குலைத்துப்
போடவல்ல, நிறைவேற்றவே வந்தேன்.
18 வானமும் பூமியும் ஒழிந்துபோய் எல்லாம்
நிகழும் மட்டும் நியாயப்பிரமாணத்திலுள்ள
ஒரு சிறு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின்
உறுப்பாகிலும் ஒழிந்துபோகாதென்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
19 ஆகையால், மிகச் சிறிதான இந்தக் கற்பனை
களில் ஒன்றை மீறி, அவ்விதமாய் மனுஷ
ருக்குப் போதிக்கிறவன் எவனும் பரலோக
ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் எனப்
படுவான்; இவைகளைக் கைக்கொண்டு
போதிக்கிறவன் எவனோ அவன் பரலோக
20 ராஜ்யத்தில் பெரியவன் எனப்படுவான். வேத
பாரகர் பரிசேயர் என்பவர்கள் நீதியிலும்
உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், நீங்கள்
பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பதேயில்லை
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
21 கொலைசெய்யவேண்டாம்; கொலைசெய்
கிறவன் நியாயவிசாரணைக்கு ஆளாவான்
என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதா
22 கக் கேட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்
குச் சொல்லுகிறேன்: தன் சகோதரன்மேல்
கோபங்கொள்ளும் எவனும் நியாயவிசா
ரணைக்கு ஆளாவான். தன் சகோதரனை
உதவாதவனே என்று சொல்லுகிறவன்
ஆலோசனைச்சங்க விசாரணைக்கு ஆளா
வான். மதிகேடனே என்று சொல்லுகிறவன்
23 எரிநரகத்துக்கு ஆளாவான். இப்படியிருப்
பதினால், பலிபீடத்தின்மேல் உன் காணிக்
கையைச் செலுத்தும்போது, உன் சகோ
தரனுக்கு உன்மேல் மனவருத்தம் உண்
டென்று அங்கே நீ நினைத்துக்கொண்டால்,
24 அவ்விடத்தில் பலிபீடத்தின் முன்னே உன்
காணிக்கையை வைத்துவிட்டு, போய் முன்பு
உன் சகோதரனோடு சமாதானமாகி, பின்பு
வந்து உன் காணிக்கையைச் செலுத்து.
25 உன் எதிரி உன்னை நியாயாதிபதியினிடம்
ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச்
சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ
சிறையில் வைக்கப்படாமலும் இருக்கும்
படி நீ வழியிலிருக்கும்போதே சீக்கிரம் உன்
26 எதிரியோடு நல்மனம் பொருந்திக்கொள். நீ
கடைசிக் காசைக் கொடுத்துத் தீர்க்கு
மட்டும் அவ்விடத்திலிருந்து வெளியேறவே
மாட்டாய் என்று மெய்யாகவே உனக்குச்
சொல்லுகிறேன்.

விபசாரஞ் செய்யவேண்டாம் என்று 27
உரைக்கப்பட்டதாகக் கேட்டிருக்கிறீர்கள்.
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஒரு 28
ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும்
தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்
செய்தாயிற்று. நீ இடறிவிழ உன் வலது 29
கண் ஏதுவாயிருந்தால் அதைப் பிடுங்கி
எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நர
கத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும் உன்
அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது
உனக்கு நலமாகும். நீ இடறிவிழ உன் 30
வலது கை ஏதுவாயிருந்தால் அதைத்
தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவ
தும் நரகத்துக்குப் போவதைப்பார்க்கிலும்
உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்
போவது உனக்கு நலமாகும்.
தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும் 31
தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்
கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் 32
உங்களுக்குச் சொல்லுகிறேன்; விபசாரத்தி
னிமித்தமேயன்றி, தன் மனைவியைத் தள்ளி
விடுகிறவன் எவனும் அவள் விபசாரியாகும்
படி செய்கிறான்; தள்ளப்பட்டவளை விவா
கஞ்செய்கிறவனும் விபசாரஞ்செய்கிறவனா
வான்.
அன்றியும், பொய்யாணையிடவேண்டாம்; 33
நீ ஆணையிட்டுச் செய்த பொருத்தனைகளைக்
கர்த்தருக்குச் செலுத்தவேண்டும் என்று பூர்
வத்தாருக்கு உரைக்கப்பட்டதாகக் கேட்
டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லு 34
கிறேன்: ஆணையிடவே வேண்டாம்; வானத்
தின் பேரிலும் ஆணையிடவேண்டாம், அது
கடவுளின் சிங்காசனம்; பூமியின்பேரிலும் 35
ஆணையிடவேண்டாம், அது அவருடைய
பாதபடி; எருசலேமை நோக்கியும் ஆணை
யிடவேண்டாம், அது பரமராஜாவின் நக
ரம்; உன் சிரசின்பேரிலும் ஆணையிடவேண் 36
டாம், தலைமயிரில் ஒன்றையாவது வெண்
மையாக்கவோ கறுப்பாக்கவோ உன்னால்
இயலாதே. உங்கள் பேச்சில் ஆம் என்பதை 37
ஆம் எனவும், இல்லை என்பதை இல்லை
எனவும் சொல்லுங்கள், இதற்கு மிஞ்சின
தெல்லாம் தீமையால் விளைவதேயாம்.
கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் 38
என்று உரைக்கப்பட்டதாகக் கேட்டிருக்
கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகி 39
றேன்: தீமைக்கு எதிர்த்துநிற்கவேண்டாம்;
உன்னை வலது கன்னத்தில் அறைகிற
வனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்
காட்டு. உன்னோடு வழக்காடி உன் உள் 40
வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள விரும்புகிற
வனுக்கு உன் மேல்வஸ்திரத்தையும்

41 விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல்
தூரம் வரக் கட்டாயப்படுத்தினால் அவ
42 னோடு இரண்டு மைல் தூரம் போ. உன்னி
டம் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடம்
கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்
கோணாதே.
43 உன் அயலானில் அன்புகூரு, உன் சத்
துருவையோ பகை என்று சொல்லப்பட்ட
44 தாகக் கேட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்
குச் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களில்
அன்புகூருங்கள்; உங்களைத் துன்பப்படுத்து
கிறவர்களுக்காக ஜெபஞ்செய்யுங்கள்.
45 இப்படிச் செய்தால் பரலோகத்திலிருக்கிற
உங்கள் பிதாவுக்குப் பிள்ளைகளாவீர்கள்;
அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும்
தமது சூரியனை உதிக்கச்செய்து, நீதியுள்ள
வர்கள்மேலும் நீதியில்லாதவர்கள் மேலும்
46 மழைபெய்யச்செய்கிறார். உங்களில் அன்பு
கூருகிறவர்களிலே நீங்களும் அன்புகூருவீர்
களானால் உங்களுக்குப் பலன் என்ன?
ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்க
47 ளல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம்
வாழ்த்துவீர்களானால் நீங்கள் விசேஷமாய்ச்
செய்கிறதென்ன? புறஜாதியாரும் அப்படிச்
48 செய்கிறார்களல்லவா? ஆகையால், பர
லோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண
சற்குணராயிருக்கிறதுபோல நீங்களும்
பூரண சற்குணராயிருங்கள்.

6 மனுஷர் காணவேண்டுமென்று அவர்
கள்முன் உங்கள் தர்மத்தைச் செய்யாத
படி எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால்
பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்
தில் உங்களுக்குப் பலனில்லை.
2 ஆகையால், நீ தானதர்மம் செய்யும்
போது, மனுஷர் புகழவேண்டுமென்று
மாயக்காரர் ஆலயங்களிலும் தெருக்களிலும்
செய்வதுபோல உனக்குமுன் தாரை ஊது
வியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்
தாயிற்றென்று மெய்யாகவே உங்களுக்குச்
3 சொல்லுகிறேன். நீயோ தானதர்மம் செய்
யும்போது, உன் தர்மம் அந்தரங்கத்திலிருக்
கும்படி, உன் வலது கை செய்கிறதை உன்
4 இடது கை அறியாதிருக்கக்கடவது. அப்
பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன்
பிதா உனக்குப் பிரதிபலனளிப்பார்.
5 அன்றியும், நீங்கள் ஜெபஞ்செய்யும்போது
மாயக்காரரைப்போல் இருக்கவேண்டாம்;
மனுஷர் காணும்படி ஜெபாலயங்களிலும்
வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபஞ்
செய்வதே அவர்களுக்குப் பிரியம்;
அவர்கள் தங்கள் பலனை அடைந்தாயிற்
றென்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன். நீயோ ஜெபஞ்செய்யும் 6
போது, உன் அறைக்குள் போய், உன்
கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற
உன் பிதாவை நோக்கி ஜெபஞ்செய்; அப்
பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன்
பிதா உனக்குப் பிரதிபலனளிப்பார். அன்றி 7
யும், நீங்கள் ஜெபஞ்செய்யும்போது புறஜாதி
களைப்போல வீண் வார்த்தைகளை அலப்ப
வேண்டாம்; சொல் மிகுதியினிமித்தம்
தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று
அவர்கள் நினைக்கிறார்கள். நீங்களோ அவர் 8
களைப்போல் இருக்கவேண்டாம்; நீங்கள்
உங்கள் பிதாவைக் கேட்கு முன்னமே
உங்களுக்கு இன்னின்னது தேவை என்பது
அவருக்குத் தெரியும். ஆதலால் நீங்கள் 9
ஜெபஞ்செய்ய வேண்டியவிதமாவது:
பரமண்டலங்களிலிருக்கிற எங்கள்
பிதாவே,
உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக;
உம்முடைய ராஜ்யம் வருவதாக; 10
உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே
செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும்
செய்யப்படுவதாக;
அன்றன்று வேண்டிய எங்கள் ஆகா 11
ரத்தை இன்று எங்களுக்குத் தாரும்;
எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன் 12
னித்திருக்கிறதுபோல எங்கள் கடன்களை
எங்களுக்கு மன்னியும்;
எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணா 13
மல், [1]தீமையினின்று எங்களை இரட்சித்
தருளும்;
[ராஜ்யமும், வல்லமையும், மகிமையும்,
என்றென்றைக்கும் உம்முடையவைகளே,
ஆமேன்] என்பதே.
மனுஷர் மீறுதல்களை நீங்கள் அவர் 14
களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா
உங்களுக்கும் மன்னிப்பார்; மனுஷருக்கு 15
நீங்கள் மன்னியாதிருந்தால், உங்கள் பிதா
உங்கள் மீறுதல்களையும் மன்னியார்.
நீங்கள் உபவாசிக்கும்போதெல்லாம் 16
மாயக்காரரைப்போல முகவாடலாய்
இருக்கவேண்டாம்; தாங்கள் உபவாசிக்கி
றதை மனுஷர் காணும்பொருட்டுத் தங்கள்
முகங்களை விகாரப்படுத்துகிறார்கள்;
அவர்கள் தங்கள் பலனை அடைந்தாயிற்
றென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்
லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது, 17

[1] தீயோனினின்று என்றும் திருப்பலரம்.

உபவாசிக்கிறதாக மனுஷருக்கல்ல அந்தரங்
கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்
படி, உன் தலைக்கு எண்ணெய் தடவி உன்
18 முகத்தைக் கழுவு. அப்பொழுது அந்தரங்
கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்குப்
பிரதிபலனளிப்பார்.

19 பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்
களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே
பூச்சியும் துருவும் அழிக்கும்; இங்கே திருட
20 ரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோ
கத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச்
சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது
துருவாவது அழிக்கிறதுமில்லை, அங்கே
திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை.
21 உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ
அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். |
22 கண்ணே சரீரத்தின் விளக்கு. உன் கண்
தெளிவாயிருந்தால், உன் முழுச்சரீரத்திலும்
23 வெளிச்சமிருக்கும்; உன் கண் கெட்டதாயி
ருந்தால், உன் முழுச்சரீரத்திலும் இருளிருக்
கும். இப்படியிருக்க, உன்னிலுள்ள வெளிச்
சம் இருண்டுபோனால், இருள் எவ்வளவு
24 அதிகமாகும்! இரண்டு எஜமான்களுக்கு
ஊழியஞ்செய்ய ஒருவனாலும் முடியாது;
ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்
பான்; அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு
மற்றவனை அசட்டைபண்ணுவான்; நீங்கள்
கடவுளுக்கும் உலகப்பொருளுக்கும்
25 ஊழியஞ் செய்யமுடியாது. இப்படியிருப்ப
தால், எதை உண்போம் எதைக் குடிப்போ
மென்று உங்கள் உயிருக்காகவும், எதை
உடுப்போமென்று உங்கள் உடலுக்காகவும்
கவலைப்படாதிருங்களென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன். உணவைவிட உயிரும்,
உடையைவிட உடலும் முக்கியமல்லவா?
26 ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்
பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை,
அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில்
சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும்
உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்;
அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷ
27 மானவர்களல்லவா? கவலைப்படுகிறதினாலே
உங்களில் எவன் தன் வளர்த்தியோடு ஒரு
28 முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும்
நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப்
புஷ்பங்கள் எப்படி வளருகின்றனவென்று
கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்
29 கிறதுமில்லை நூற்கிறதுமில்லை; ஆயினும்,
சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமை
யிலும் இவைகளில் ஒன்றைப்போல் உடுத்தி
யிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லு
30 கிறேன். இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்
பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குக்
கடவுள் இவ்விதமாய் உடுத்தினாரானால்,
அற்ப விசுவாசிகளே, உங்களுக்கு உடுத்து
வது அதிக நிச்சயமல்லவா? ஆதலால், 31
எதை உண்போம், எதைக் குடிப்போம்,
எதை உடுப்போமென்று கவலைப்படவேண்
டாம். இவற்றையெல்லாம் புறஜாதியார் 32
நாடித்தேடுகிறார்கள். இவையெல்லாம்
உங்களுக்குத் தேவையென்று உங்கள் பரம
பிதாவுக்குத் தெரியும். முதலாவது அவ 33
ருடைய ராஜ்யத்தையும் நீதியையும்
தேடுங்கள், அப்பொழுது இவையெல்லாம்
உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகை 34
யால், நாளையத்தினத்திற்காகக் கவலைப்
படாதேயுங்கள், நாளையத்தினம் தனக்காகக்
கவலைப்பட்டுக்கொள்ளும். அந்தந்த
நாளுக்கு அதனதன் பாடு போதும்.

நீங்கள் தீர்ப்புப்பெறாதபடி நீங்களும் 7
தீர்ப்புச் செய்யாதிருங்கள். நீங்கள் செய் 2
கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்ப்புப்
பெறுவீர்கள்; நீங்கள் அளக்கிற அளவின்
படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீ 3
உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைக் கவனி
யாமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற
துரும்பைப் பார்க்கிறதென்ன? அல்லது, 4
உன் சகோதரனிடத்தில்: நான் உன் கண்
ணிலிருக்கிற துரும்பை எடுத்துவிடட்டும்
என்று நீ சொல்வதெப்படி? இதோ, உன்
கண்ணில் உத்திரம் இருக்கிறதே. மாயக்கா 5
ரனே, முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்தி
ரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோ
தரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்
போடத் தெளிந்த பார்வையடைவாய்.

பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடா 6
தேயுங்கள்; உங்கள் முத்துக்களைப் பன்றி
கள்முன் போடாதேயுங்கள்; போட்டால்
தங்கள் கால்களால் அவற்றை மிதித்துத்
திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிவிடும்.

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் 7
கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது
கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொ
ழுது உங்களுக்குத் திறக்கப்படும். கேட் 8
கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுவான்;
தேடுகிறவன் கண்டடைவான்; தட்டுகிற
வனுக்குத் திறக்கப்படும். தன்னிடம் 9
அப்பத்தைக் கேட்கும் மகனுக்குக் கல்
லைக் கொடுக்கும் மனுஷன் எவனாகிலும் உங்
களில் உண்டோ? மீனைக் கேட்டால் அவ 10
னுக்குப் பாம்பைக் கொடுப்பதுண்டோ?
ஆகவே, நீங்கள் பொல்லாதவர்களாயிருந் 11
தும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்

கொடுக்க அறிந்திருக்க, பரலோகத்திலிருக்
கிற உங்கள் பிதா தம்மிடம் கேட்கிறவர்
களுக்கு நலமானவைகளைக் கொடுப்பது
எவ்வளவு அதிக நிச்சயம்!
12 ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைக
ளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை
யெல்லாம் நீங்களும் அப்படியே அவர்
களுக்குச் செய்யுங்கள். நியாயப்பிரமாண
மும் தீர்க்கதரிசனங்களும் இதுவே.
13 இடுக்கமான வாசல்வழியாய் உட்செல்
லுங்கள்; அழிவுக்குப் போகும் வழி அக
லம், வாசலும் விரிவு; அதன் வழியாய் உட்
14 செல்கிறவர்கள் பலர். ஜீவனுக்குப் போகும்
வாசலோ இடுக்கம், வழியும் நெருக்கம்;
அதைக் கண்டுகொள்ளுகிறவர்கள் சிலர்.
15 கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கை
யாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப்
போர்த்துக்கொண்டு உங்களிடம் வரு
வார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்
16 கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளி
னாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடி
களில் திராட்சப்பழங்களையும் நெரிஞ்சில்
களில் அத்திப்பழங்களையும் பறிப்பா
17 ருண்டோ? அப்படியே நல்ல மரமெல்லாம்
நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட
மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்.
18 நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்க
முடியாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக்
19 கொடுக்கமுடியாது. நல்ல கனி கொடாத
மரமெல்லாம் வெட்டுண்டு நெருப்பிலே
20 போடப்படும். ஆதலால் அவர்களுடைய
கனிகளினாலே அவர்களை அறிந்துகொள்
21 வீர்கள். ஆண்டவரே, ஆண்டவரே என்று
என்னிடம் சொல்லுகிற ஒவ்வொருவனு
மல்ல, பரலோகத்திலிருக்கிற என் பிதாவின்
சித்தததைச் செய்கிறவனே பரலோக ராஜ்
22 யத்திற்குட் பிரவேசிப்பான். அந்நாளில்
அநேகர் என்னை நோக்கி: ஆண்டவரே,
ஆண்டவரே, உமது நாமத்தினாலே தீர்க்க
தரிசனம் உரைத்தோமல்லவா? உமது
நாமத்தினாலே பேய்களைத் துரத்தினோம் அல்
லவா? உமது நாமத்தினாலே அநேக வல்ல
செயல்களைச் செய்தோம் அல்லவா என்
23 பார்கள். அப்பொழுது: நான் ஒருகாலும்
உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்
காரரே, என்னைவிட்டு அகன்று போங்க
ளென்று வெளிப்படையாய்க் கூறுவேன்.
24 ஆகையால் நான் சொல்லிய இந்த வார்த்
தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்
கிறவன் எவனோ, அவன் கற்பாறையின்மேல்
தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனு
25 ஷனுக்கு ஒப்பாவான். பெருமழை
சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்ற
டித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது
கற்பாறையின்மேல் அஸ்திபாரம் போடப்
பட்டிருந்ததால் விழவில்லை. நான் சொல் 26
லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவை
களின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ,
அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்
டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பா
வான். பெருமழை சொரிந்து, பெருவெள் 27
ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்
டின்மேல் மோதினபோது அது விழுந்தது;
அழிவும் பெரிதாயிற்று.
இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி 28
முடித்தபோது, அவர் வேதபாரகரைப்
போல் போதியாமல், அதிகாரமுடையவராய்
அவர்களுக்குப் போதித்துவந்தபடியால்,
ஜனங்கள் அவருடைய போதகத்தைக் 29
குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

அவர் மலையிலிருந்து இறங்கினபோது, 8
திரளான ஜனங்கள் அவருக்குப் பின்சென்
றார்கள். அப்பொழுது, குஷ்டரோகி ஒரு 2
வன் வந்து, அவரைப் பணிந்து: ஆண்ட
வனே, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்த
மாக்க உம்மாலாகும் என்று சொல்ல, அவர் 3
தமது கையை நீட்டி அவனைத் தொட்டு:
எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்.
உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்த
மானான். இயேசு அவனை நோக்கி: இதை 4
நீ ஒருவருக்கும் சொல்லாதபடி பார்; ஆயி
னும், நீ போய் ஆசாரியனுக்கு உன்
னைக் காண்பித்து, மோசே கட்டளையிட்ட
காணிக்கையை அவர்களுக்குச் சாட்சியாகச்
செலுத்து என்றார்.
அவர் கப்பர்நகூமுக்குட் சென்றபோது, 5
நூற்றுக்கதிபதி ஒருவன் அவரிடம் வந்து:
ஆண்டவனே, வீட்டிலே என் வேலைக்காரன் 6
திமிர்வாதமாய்க்கிடந்து கொடிய வேதனைப்
படுகிறான் என்று அவரை வேண்டிக்
கொண்டான். அவர்: நான் வந்து அவனைச் 7
சொஸ்தமாக்குவேன் என்று அவனிடம்
சொன்னார். நூற்றுக்கதிபதியோ: ஆண்ட 8
வனே, நீர் என் வீட்டினுட் பிரவேசிக்க
நான் தகுந்தவனல்ல; வார்த்தை மாத்திரம்
சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன்
சொஸ்தமாவான். நானும் அதிகாரத்துக்குக் 9
கீழ்ப்பட்ட மனுஷன், எனக்குக் கீழே
சேவகரும் உண்டு; நான் ஒருவனைப்
போவென்றால் போகிறான், மற்றொருவனை
வாவென்றால் வருகிறான், என் அடிமையை,
இதைச் செய்யென்றால் செய்கிறான் என்
றான். இயேசு இதைக்கேட்டு ஆச்சரியப் 10

பட்டு, தமக்குப்பின் செல்லுகிறவர்களை
நோக்கி: இப்படிப்பட்ட விசுவாசத்தை
நான் இஸ்ரவேலில் எவனிடத்திலும் கண்ட
தில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச்
11 சொல்லுகிறேன். அநேகர் கிழக்கிலும் மேற்
கிலுமிருந்து வந்து, பரலோக ராஜ்யத்தில்
ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்க
12 ளோடு பந்தியிருப்பார்கள். ராஜ்யத்தின்
புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்
படுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பு
மாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லு
13 கிறேன் என்றார். பின்பு இயேசு நூற்றுக்
கதிபதியைப் பார்த்து: நீ போ, உன் விசுவா
சத்தின்படியே உனக்கு ஆகக்கடவது என்
றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்
காரன் சொஸ்தமானான்.
14 இயேசு பேதுருவின் வீட்டுக்கு வந்த
போது அவன் மாமி ஜுரமாய்க் கிடக்
15 கிறதைக் கண்டார். அவர் அவள் கையைத்
தொடவே ஜுரம் அவளைவிட்டு நீங்கிற்று;
அவள் எழுந்திருந்து அவருக்குப் பணி
16 விடை செய்தாள். சாயங்காலமானபோது,
பேய் பிடித்திருந்த அநேகரை அவரிடம்
கொண்டுவந்தார்கள்; வார்த்தையினாலே
அவர் ஆவிகளைத் துரத்தி, பிணியாளிக
17 ளெல்லாரையும் குணமாக்கினார். அவர்
நமது பலவீனங்களைத் தாமே எடுத்துக்
கொண்டு நமது நோய்களைச் சுமந்தார் என்று
ஏசாயா தீர்க்கதரிசியின்மூலமாய் உரைக்கப்
பட்டது நிறைவேற இப்படி நடந்தது.
18 இயேசு தம்மைச்சுற்றி ஜனக்கூட்டம்
இருக்கக்கண்டு அக்கரைக்குப் போகக் கட்
19 டளையிட்டார். அப்பொழுது வேதபாரகன்
ஒருவன் வந்து: போதகரே, நீர் எங்கே
போனாலும் உம்மைப் பின்பற்றிவருவேன்
20 என்றான். அதற்கு இயேசு: நரிகளுக்குக்
குழிகளுண்டு, ஆகாயத்துப் பறவைகளுக்
குக் கூடுகளுண்டு, மனுஷகுமாரனுக்கோ
21 தலைசாய்க்க இடமில்லை என்றார். சீஷரில்
வேறொருவன் அவரை நோக்கி: ஆண்ட
வரே, முதலில் நான் போய் என் தகப்பனை
அடக்கம்பண்ண எனக்கு உத்தரவு கொடு
22 மென்று சொல்ல, | இயேசு: மரித்தோர்
தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்
டும், நீயோ என்னைப் பின்பற்றிவா என்றார்.
23 அவர் படவில் ஏறவே சீஷரும் பின்
24 சென்று ஏறினார்கள். அப்பொழுது பெரும்
புயல் காற்று கடலில் எழும்பினதால் படவு
அலைகளால் மூடப்பட்டது. அவரோ நித்தி
25 ரையாயிருந்தார். அவர்கள் வந்து அவரை
எழுப்பி: ஆண்டவரே, எங்களை ரட்சியும்,
26 மடிந்துபோகிறோம் என்றார்கள். அதற்கு
அவர்: அற்பவிசுவாசிகளே, ஏன் பயப்படு
கிறீர்கள் என்று சொல்லி, எழுந்து, காற்றை
யும் கடலையும் அதட்டினார்; உடனே
மிகுந்த அமைதல் உண்டாயிற்று. அந்த 27
மனுஷர் ஆச்சரியப்பட்டு: இவர் எப்படிப்
பட்டவரோ! காற்றும் கடலும் இவருக்குக்
கீழ்ப்படிகின்றனவே என்றார்கள்.
அவர் அக்கரையில் கதரேனர் நாட்டுக்கு 28
வந்தபோது, பேய்பிடித்திருந்த இருவர் கல்
லறைகளிலிருந்து வெளியேறி அவருக்கு
எதிரே வந்தார்கள்; அவர்கள் மிகக் கொடி
யராயிருந்தபடியால், எவனும் அந்த வழி
யாகச் செல்ல இயலாதிருந்தது. அவர்கள் 29
சத்தமிட்டுக் கூப்பிட்டு: தேவ குமாரனே,
எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம்
வருமுன்னே எங்களை வேதனைப்படுத்தவா
இங்கே வந்தீர் என்றார்கள். அவர்களுக் 30
குத் தூரத்தில் ஒரு பெரிய பன்றிக்கூட்டம்
மேய்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது 31
பேய்கள்: நீர் எங்களைத் துரத்துவீரானால்,
அந்தப் பன்றிக்கூட்டத்திற்குள் எங்களை
அனுப்பிவிடுமென்று அவரை வேண்டிக்
கொண்டன. அதற்கு அவர்: போங்கள் 32
என்றார். அவைகள் வெளியேறிப் பன்றி
களுக்குள் போகவே அப்பன்றிக்கூட்டம்
முழுவதும் மேட்டிலிருந்து கடலில் பாய்ந்து
தண்ணீரில் மாண்டது. அவைகளை மேய்த் 33
துக்கொண்டிருந்தவர்கள் ஓட்டம்பிடித்து
ஊருக்குட் சென்று, நடந்தவற்றையும் பேய்
பிடித்திருந்தவர்களுக்குச் சம்பவித்தவைகளை
யும் அறிவித்தார்கள். ஊரார் யாவரும் 34
இயேசுவைக் காண ஊருக்கு வெளியே வந்
தார்கள். அவரைக் கண்டு, தங்கள் திசை
யைவிட்டுப்போகும்படி அவரை வேண்டிக்
கொண்டார்கள்.

அப்பொழுது அவர் படவிலேறி, கடலைக் 9
கடந்து தமது சொந்த ஊருக்கு வந்தார்.
அங்கே படுக்கையில் கிடந்த ஒரு திமிர்வா 2
தக்காரனை அவரிடம் கொண்டுவந்தார்கள்.
இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு,
திமிர்வாதக்காரனிடம்: மகனே, தைரியமா
யிரு, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன
என்றார். வேதபாரகரில் சிலர்: இவன் தேவ 3
தூஷணம் பேசுகிறானென்று தங்களுக்குள்
சொல்லிக்கொண்டார்கள். இயேசு அவர் 4
கள் சிந்தனைகளை அறிந்து: உங்கள் இருதயங்
களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிற
தென்ன? உன் பாவங்கள் மன்னிக்கப்பட் 5
டனவென்று சொல்வதோ, எழுந்து நட
வென்று சொல்வதோ, எது எளிது? ஆயி 6
னும், பூமியிலே பாவங்களை மன்னிக்க

மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்
பதை நீங்கள் அறியவேண்டுமென்று
சொல்லி, திமிர்வாதக்காரனிடம்: நீ எழுந்
திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு
7 உன் வீட்டுக்குப் போ என்றார். அவன்
8 எழுந்து தன் வீட்டுக்குப் போனான். அதைக்
கண்ட ஜனங்கள் திகிலடைந்து, மனுஷ
ருக்கு இப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த
கடவுளை மகிமைப்படுத்தினார்கள்.
9 இயேசு அவ்விடம் விட்டு அப்பால்
போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்
திருந்த ஒருவனைக் கண்டார். அவன் பேர்
மத்தேயு. அவர் அவனிடம்: என்னைப் பின்
பற்றிவா என்றார். அவன் எழுந்து அவ
ரைப் பின்பற்றிப்போனான்.
10 பின்பு, வீட்டிலே அவர் பந்தியிருக்கை
யில், அநேக ஆயக்காரரும் பாவிகளும்
வந்து இயேசுவோடும் அவர் சீஷரோடும்
11 பந்தியிருந்தார்கள். அதைக் கண்ட பரி
சேயர் அவர் சீஷரிடத்தில்: உங்கள்
போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும்
போஜனம் பண்ணுகிறதென்ன என்றார்கள்.
12 அவர் அதைக் கேட்டு: பிணியாளிகளுக்கு
வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுக
13 முள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. பலியை
யல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்ப
தின் பொருளை நீங்கள் போய்க் கற்றுக்
கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவி
களையே அழைக்க வந்தேன் என்றார்.
14 அப்பொழுது யோவானுடைய சீஷர்
அவரிடம் வந்து: நாங்களும் பரிசேயரும்
உபவாசிக்கிறோமே; உம்முடைய சீஷர்
உபவாசியாமல் இருக்கிறதென்ன என்று
15 கேட்டார்கள். அதற்கு இயேசு: மண
வாளன் தங்களோடிருக்குமட்டும் கலியா
ணக்காரர் துயரப்படுவதெப்படி? மண
வாளன் அவர்களை விட்டு எடுபடும் நாட்கள்
வரும், அப்பொழுது உபவாசிப்பார்கள்.
16 ஒருவனும் கோடித்துண்டைப் பழைய
வஸ்திரத்தோடே இணைக்கமாட்டான்;
இணைத்தால், அதனோடே இணைத்த துண்டு
வஸ்திரத்தை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும்
17 பெரிதாகும். புதுத் திராட்சரசத்தைப் பழந்
துருத்திகளில் வார்த்துவைக்கிறதில்லை,
வார்த்துவைத்தால் துருத்திகள் கிழியும்,
இரசமும் சிந்திப்போம், துருத்திகளும்
கெட்டுப்போம்; புது இரசத்தைப் புதுத்
துருத்திகளில் வார்த்துவைப்பார்கள், அப்
பொழுது இரண்டும் பத்திரமாய்க் காக்கப்
படும் என்றார்.
18 அவர் இவைகளைப்பற்றி அவர்களோடு
பேசிக்கொண்டிருக்கையிலேயே தலைவன்
ஒருவன் வந்து அவரைப்பணிந்து: என்
மகள் இப்பொழுதுதான் இறந்துபோனாள்;
ஆகிலும், நீர் வந்து அவள்மேல் உமது
கையை வையும், அவள் பிழைப்பாள் என்
றான். இயேசு எழுந்து தம்முடைய சீஷ 19
ரோடுகூட அவன் பின்னே போனார். பன்னி 20
ரண்டு வருஷமாய்ப் பெரும்பாட்டினால்
வருந்தின ஒரு ஸ்திரீ: நான் அவர் வஸ்திரத் 21
தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவே
னென்று தனக்குள் எண்ணிக்கொண்டு,
அவர்பின் வந்து அவர் வஸ்திரத்தின் ஓரத்
தைத் தொட்டாள். இயேசு திரும்பி அவ 22
ளைப் பார்த்து: மகளே, தைரியமாயிரு, உன்
விசுவாசம் உன்னைக் குணமாக்கினது என்
றார். அந்நேரமே அந்த ஸ்திரீ குணமானாள்.
தலைவன் வீட்டுக்குள் இயேசு வந்து, 23
தாரை ஊதுகிறவர்களையும் சந்தடி செய்கிற
ஜனக்கூட்டத்தையும் கண்டு: விலகுங்கள், 24
இச்சிறு பெண் சாகவில்லை, நித்திரையா
யிருக்கிறாள் என்றார். அவர்களோ அவரைப்
பார்த்து நகைத்தார்கள். ஜனக்கூட்டத்தை 25
வெளியே துரத்திவிட்டு, அவர் உள்ளே
போய், அந்தச் சிறு பெண்ணின்கையைப்
பிடித்தார்; உடனே அவள் எழுந்திருந்தாள்.
இச்செய்தி அத்தேசமெங்கும் பரவிற்று. 26
இயேசு அவ்விடம் விட்டு அப்பால் 27
போகையில், குருடர் இருவர் அவர் பின்னே
சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு
இரங்கும் என்று சத்தமிட்டுக் கூப்பிட்
டார்கள். அவர் வீட்டிற்கு வந்தபின்பு 28
அந்தக் குருடர் அவரிடம் வந்தார்கள்.
இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய
எனக்கு வல்லமை உண்டென்று நம்புகிறீர்
களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்:
ஆம், ஆண்டவனே என்றார்கள். அப் 29
பொழுது அவர்கள் கண்களை அவர் தொட்டு:
நீங்கள் நம்புகிறபடி உங்களுக்கு ஆகக்கட
வது என்று சொல்லவே, அவர்கள் கண்கள் 30
திறக்கப்பட்டன. இது ஒருவருக்கும் தெரி
யாதபடி பாருங்கள் என்று இயேசு அவர்
களுக்குக் கண்டிப்பாய்ச் சொன்னார். அவர் 31
களோ புறப்பட்டு, தேசமெங்கும் அவரு
டைய கீர்த்தியைப் பிரசித்தம் பண்ணி
னார்கள்.
அவர்கள் புறப்படுகையில், பேய் பிடித்த 32
ஊமையன் ஒருவனை அவரிடம் கொண்டு
வந்தார்கள். பேயைத் துரத்தின பின் ஊமை 33
யன் பேசினான். ஜனங்கள் ஆச்சரியப்பட்டு:
இஸ்ரவேலில் இப்படி ஒருகாலும் கண்ட
தில்லை என்றார்கள். பரிசேயரோ: இவன் 34
பேய்களின் தலைவனாலே பேய்களை ஓட்டுகிறா
னென்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

35 இயேசு சகல ஊர்களையும் கிராமங்களை
யும் சுற்றிப்போய், அவர்கள் ஜெபாலயங்
களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்
தைப் பிரசங்கித்து, சகல வியாதிகளையும்
சகல நோய்களையும் நீக்கி அவர்களைக் குண
36 மாக்கி வந்தார். அவர் ஜனங்களைக் கண்ட
பொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடு
கள்போல் அலைக்கழிந்து சிதறுண்டு போ
யிருந்ததால், அவர்கள்மேல் மனமுருகி:
37 அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்
38 சம்; ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது
அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி
அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்று
தம்முடைய சீஷரைப்பார்த்துச் சொன்னார்.

10 அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்
பன்னிருவரையும் தம்மிடம் அழைத்து,
அசுத்த ஆவிகளைத் துரத்தவும் சகல வியாதி
களையும் சகல நோய்களையுங் குணமாக்கவும்
அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.
2 அப்பன்னிரு [1]அப்போஸ்தலர் நாமங்க
ளாவன: முந்தினவனாகிய பேதுரு எனப்
பட்ட சீமோன், அவன் சகோதரன் அந்தி
ரேயா, செபதேயுவின் குமாரன் யாக்கோபு,
3 அவன் சகோதரன் யோவான், | பிலிப்பு,
பர்த்தொலொமேயு, தோமா, ஆயக்காரனாகிய
மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்
4 கோபு, ததேயு, | கானானியனாகிய சீமோன்,
அவரைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரி
யோத்து என்பவைகளே.
5 இந்தப்பன்னிருவரையும் இயேசு அனுப்
பினார். அனுப்புகையில் அவர்களுக்கு
அவர் கட்டளையிட்டுச் சொன்னதாவது:
நீங்கள் புறஜாதியார் இடங்களுக்குப் போகா
மலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசி
6 யாமலும், காணாமற்போன ஆடுகளாகிய
இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்.
7 போகும்போது, பரலோக ராஜ்யம் சமீபித்
8 திருக்கிறதென்று பிரசங்கியுங்கள், வியாதி
யுள்ளவர்களைக் குணமாக்குங்கள், மரித்
தோரை எழுப்புங்கள், குஷ்டரோகிகளைச்
சுத்தமாக்குங்கள், பேய்களைத் துரத்துங்கள்;
இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க்
9 கொடுங்கள். உங்கள் கச்சைகளில் பொன்
வெள்ளி செம்புக்காசுகளைத் தேடி வைத்துக்
10 கொள்ள வேண்டாம். வழிக்குப் பையா
வது, இரண்டு அங்கி, பாதரட்சை, தடி
யாவது வேண்டாம், வேலையாள் தன் ஆகா
11 ரத்துக்குப் பாத்திரன். எந்த ஊருக்காவது
கிராமத்துக்காவது நீங்கள் போகும்பொழுது,
அங்கே ஏற்ற மனுஷன் யாரென்று விசாரித்
தறிந்து அவ்வூரை விடுமளவும் அவனுடன்
தங்கியிருங்கள். வீட்டுக்குள் போகும்போது 12
அதை வாழ்த்துங்கள்; அந்த வீடு ஏற்றதா 13
யிருந்தால், நீங்கள் கூறின சமாதானம்
அவ்வீட்டின்மேல் வரக்கடவது; ஏற்ற
தல்லாததாயிருந்தால், நீங்கள் கூறின சமா
தானம் உங்களிடம் திரும்பட்டும். எவனா 14
கிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும்
நீங்கள் சொல்லுகிறதைக் கேளாமலும்
போனால், அந்த வீட்டையாவது ஊரையா
வது விட்டுப் புறப்படும்போது, உங்கள்
கால்களில் படிந்த தூசியையும் உதறி
விடுங்கள். நியாயத்தீர்ப்புநாளில் சோதோம் 15
கொமோராவுக்கு நேரிடுவதைப் பார்க்கிலும்
அதற்கு நேரிடுவது அதிகக் கடினமாகும்
என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு
கிறேன்.
இதோ, ஓநாய்கள் மத்தியில் ஆடுகளை 16
அனுப்பினாற்போல நான் உங்களை அனுப்பு
கிறேன். ஆகையினால் பாம்புகளைப்போல்
விவேகமுள்ளவர்களும் புறாக்களைப்போல்
கபடற்றவர்களுமாயிருங்கள். மனுஷருக்கு 17
எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் உங்
களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்
கொடுத்து, தங்கள் ஜெபாலயங்களில்
உங்களை வாரினால் அடிப்பார்கள். என் 18
னிமித்தம் நீங்கள் அதிகாரிகளிடத்திற்கும்
இராஜாக்களிடத்திற்கும் கொண்டுபோகப்
பட்டு, அவர்களுக்கும் புறஜாதியாருக்கும்
முன்பாகச் சாட்சிகளாயிருப்பீர்கள்.
அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது. 19
எதை எப்படிப் பேசுவோம் என்று கவலைப்
படவேண்டாம். நீங்கள் பேசவேண்டுவது
அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்;
பேசுகிறவர்கள் நீங்களல்ல, உங்களிலிருந்து 20
பேசுகிறவர் உங்கள் பிதாவின் ஆவியே.
சகோதரன் தன் சகோதரனை மரணத்துக்கு 21
ஒப்புக்கொடுப்பான், தகப்பன் தன்
பிள்ளையை ஒப்புக்கொடுப்பான்; பெற்றோ
ருக்கு விரோதமாய்ப் பிள்ளைகள் எழும்பி
அவர்களைக் கொலைசெய்வார்கள். என் 22
நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும்
பகைக்கப்படுவீர்கள்; முடிவுபரியந்தம்
நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.
இந்த ஊரில் உங்களைத் துன்பப்படுத்தினால் 23
அடுத்த ஊருக்கு ஓடிப்போங்கள்; மனுஷ
குமாரன் வருவதற்குள்ளாக நீங்கள் இஸ்ர
வேலின் ஊர்களையெல்லாம் சுற்றித்தீரா
தென்று மெய்யாகவே உங்களுக்குச்

1 அனுப்பப்பட்டவர்கள் என்று பொருள்படும்.

24 சொல்லுகிறேன். சீஷன் தன் குருவிலும்
வேலைக்காரன் தன் எஜமானிலும் மேலானவ
25 னல்ல. சீஷன் தன் குருவைப்போலவும்
வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும்
ஆவது போதும். வீட்டெஜமானையே பெயல்
செபூல் என்று சொன்னார்களானால் அவன்
வீட்டாரை எத்தனை அதிகம் சொல்வார்கள்!
26 அவர்களுக்குப் பயப்படாதேயுங்கள்;
வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை,
27 அறியப்படாத இரகசியமுமில்லை. நான்
உங்களுக்கு இருளில் சொல்லுகிறதை
வெளிச்சத்திலே சொல்லுங்கள்; நீங்கள்
காதுக்குள் கேட்கிறதை வீடுகளின்மேல்
நின்று பிரசித்தஞ்செய்யுங்கள்.
28 ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களா
யிராமல் சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்கு
அஞ்சவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்
தையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே
29 பயப்படுங்கள். ஒரு காசுக்கு இரண்டு
அடைக்கலான் குருவிகள் விற்கின்றன
வல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின்றி
அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே
30 விழாது. உங்கள் தலைமயிரெல்லாம் எண்
31 ணப்பட்டிருக்கிறது. ஆதலால் அஞ்சவேண்
டாம்; அநேகம் அடைக்கலான் குருவிகளி
லும் நீங்கள் விசேஷமானவர்கள்.
32 மனுஷர்முன் என்னை அறிக்கைபண்ணு
கிறவன் எவனோ, அவனை நானும் பரலோ
கத்திலிருக்கிற என் பிதாவின்முன் அறிக்கை
33 பண்ணுவேன். மனுஷர்முன் எவனாகிலும்
என்னை மறுதலிப்பானாகில், அவனை நானும்
பரலோகத்திலிருக்கிற என் பிதாவின்முன்
மறுதலிப்பேன்.
34 பூமியின்மேல் சமாதானத்தை அனுப்ப
வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதே
யுங்கள்; சமாதானத்தையல்ல, பட்டயத்
35 தையே அனுப்ப வந்தேன். மகனைத் தகப்ப
னுக்கும், மகளைத் தாய்க்கும், மருமகளை
மாமிக்கும் விரோதமாய்ப் பிரித்துவிட வந்
36 தேன். ஒருவனுடைய சத்துருக்கள் அவன்
37 வீட்டாரே. என்னை நேசிப்பதிலும் தகப்பனை
யாவது தாயையாவது அதிகமாய் நேசிக்கிற
வன் எனக்கு ஏற்றவனல்ல; என்னை நேசிப்
பதிலும் மகனையாவது மகளையாவது அதிக
மாய் நேசிக்கிறவன் எனக்கு ஏற்றவன்
38 அல்ல; தன் சிலுவையை எடுத்துக்கொண்டு
என்னைப் பின்பற்றாதவன் எனக்கு ஏற்றவ
39 னல்ல. தன் ஜீவனைக் கண்டடைந்தவன்
அதை இழந்துபோவான், என்னிமித்தம்
தன் ஜீவனை இழந்தவனோ அதைக் கண்ட
டைவான்.
40 உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை
ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்
கொள்ளுகிறவனோ என்னை அனுப்பினவரை
ஏற்றுக்கொள்ளுகிறான். தீர்க்கதரிசியின் 41
நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்
கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்குரிய பல
னைப் பெறுவான்; நீதிமானின் நாமத்தி
னிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிற
வன் நீதிமானுக்குரிய பலனைப் பெறுவான்.
சீஷனின் நாமத்தினிமித்தம் இச்சிறியரில் 42
ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம்
குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனைப்
பெறாமற்போகான் என்று மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பதாம்.

இயேசு தம் சீஷர் பன்னிருவருக்கும் **11**
கட்டளைகொடுத்து முடித்த பின்பு, அவர்க
ளுடைய ஊர்களில் உபதேசிக்கவும் பிர
சங்கிக்கவும் அவ்விடம்விட்டுப் போனார்.
கிறிஸ்துவின் செயல்களைச் சிறைச்சாலை 2
யில் கேள்விப்பட்ட யோவான் தன் சீஷரை
அனுப்பி: | வருகிறவர் நீர்தானோ? அல்லது 3
வேறொருவரை நாங்கள் எதிர்பார்க்கவேண்
டுமோ என்று கேட்டான். இயேசு அவர் 4
களிடம்: நீங்கள் கேட்கிறவைகளையும் காண்
கிறவைகளையும் யோவானிடம் போய் அறிவி
யுங்கள்; குருடர் பார்வையடைகிறார்கள், 5
சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்ட
ரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர்
கேட்கிறார்கள், மரித்தோர் எழுப்பப்படு
கிறார்கள்! தரித்திரருக்கு நற்செய்தி அறிவிக்
கப்படுகிறது. என் விஷயமாய் இடறிவிழாத 6
வன் எவனோ அவன் பாக்கியவான் என்றார்.
அவர்கள் போகையில், இயேசு யோவா 7
னைக் குறித்து ஜனங்களிடம் பேசத்
தொடங்கி: எதைப் பார்க்க வனாந்தரத்திற்
குப் போனீர்கள்? காற்றினாலசையும் நாண
லையோ? அல்லவென்றால் எதைப் பார்க்கப் 8
போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனு
ஷனையோ? மெல்லிய வஸ்திரந்தரித்திருக்
கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்
கிறார்கள். அல்லவென்றால் எதற்காகப் 9
போனீர்கள்? தீர்க்கதரிசியைப் பார்க்கவோ?
ஆம், தீர்க்கதரிசியிலும் மேன்மையுள்ள
வனையே என்று உங்களுக்குச் சொல்லு
கிறேன்.

இதோ, நான் என் தூதனை 10
உமக்கு முன்பாக அனுப்புகிறேன்;
அவன் உமக்கு முன்னே போய்,
உமது வழியை ஆயத்தம் பண்ணுவான்

என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்
பட்டவன் இவனே. ஸ்திரீகளிடம் பிறந்த 11
வர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்

கிலும் பெரியவன் ஒருவனும் தோன்றின
தில்லை; பரலோக ராஜ்யத்தில் சிறியவனே
அவனிலும் பெரியவன் என்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
12 யோவான்ஸ்நானகன் நாட்கள் தொடங்கி
இதுவரைக்கும் பரலோக ராஜ்ய விஷய
மாய்ப் பலவந்தஞ்செய்கிறார்கள்;பலவந்தஞ்
செய்கிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளு
13 கிறார்கள். சகல தீர்க்கதரிசிகளும் நியாயப்
பிரமாணமும் யோவான் வரைக்கும் தீர்க்க
14 தரிசனம் உரைத்ததுண்டு. நீங்கள் ஏற்றுக்
கொள்ள மனமாயிருந்தால், வரப்போகிறவ
15 னாகிய எலியா இவன்தான். காதுள்ளவன்
கேட்கக்கடவன்.

16 இந்தச் சந்ததியை யாருக்கு ஒப்பிடு
வேன்? சந்தை வெளிகளில் உட்கார்ந்து
மறுபக்கத்தாரைப் பார்த்து:

17 உங்களுக்குக் குழல் ஊதினோம், நீங்கள்
கூத்தாடவில்லை;
ஒப்பாரிவைத்தோம், நீங்கள் மாரடிக்க
வில்லை

என்று சொல்லுகிற பிள்ளைகளுக்கு இது
18 ஒப்பாயிருக்கிறது. யோவான் போஜன
பானம்பண்ணாதவனாய் வந்தான்; அவன்
பேய் பிடித்திருக்கிறவன் என்கிறார்கள்.
19 மனுஷகுமாரன் போஜனபானம்பண்ணுகிற
வராய் வந்தார்; போஜனப்பிரியன், மதுபா
னப்பிரியன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்
கும் சிநேகிதன் என்கிறார்கள். ஞானமோ
தன் செயல்களால் நியாயமென்று தீர்க்கப்
பட்டது என்றார்.

20 பின்பு, தமது வல்ல செயல்களில் பல
வற்றைச் செய்யக் கண்ட ஊர்கள் மனந்
திரும்பாததினால் அவைகளைக் கண்டித்துப்
21 பேசத்தொடங்கி: ஐயோ! கோராசினே,
ஐயோ! பெத்சாயிதா, உங்களில் செய்யப்
பட்ட வல்ல செயல்கள் தீருவிலும் சீதோ
னிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்
பொழுதே இரட்டிலும் சாம்பலிலும் இருந்து
22 மனந்திரும்பியிருப்பார்கள். நியாயத்தீர்ப்பு
நாளிலே தீரு சீதோன் ஊர்களுக்கு நேரிடு
வதைப்பார்க்கிலும் உங்களுக்கு நேரிடுவது
அதிகக் கடினமாகும் என்று உங்களுக்குச்
23 சொல்லுகிறேன். கப்பர்நகூமே, நீ வான
பரியந்தம் உயர்த்தப்படுவாயோ? பாதாள
பரியந்தம் தாழ்ந்துபோவாய். உன்னில்
செய்யப்பட்ட வல்ல செயல்கள் சோதோ
மிலே செய்யப்பட்டிருந்ததானால்; அது இந்
24 நாள்வரைக்கும் நிலைத்திருந்திருக்கும். நியா
யத்தீர்ப்புநாளில் சோதோம் நாட்டுக்கு
நேரிடுவதைப்பார்க்கிலும் உனக்கு நேரிடு
வது அதிகக் கடினமாகும் என்று உனக்குச்
சொல்லுகிறேன் என்றார்.

அக்காலத்தில் இயேசு திருவாய் 25
மலர்ந்து: பிதாவே, வானத்துக்கும் பூமிக்
கும் ஆண்டவரே, இவைகளை ஞானிகளுக்
கும் விவேகிகளுக்கும் மறைத்துப் பாலக
ருக்கு வெளிப்படுத்தினபடியால், உம்மை
ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம், பிதாவே, இதுவே 26
உமது திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது.
சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக் 27
கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர
வேறொருவனும் குமாரனை அறியான்; குமார
னும், குமாரன் எவனுக்கு பிதாவை வெளிப்
படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும்
தவிர வேறொருவனும் அவரை அறியான்.
வருந்தியுழைத்துப் பாரம் சுமக்கிறவர் 28
களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில்
வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறு
தல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ் 29
மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை
உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்
தில் கற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது
உங்கள் ஆத்துமாக்களுக்கு நீங்கள் இளைப்
பாறுதல் கண்டடைவீர்கள்; என் நுகம் 30
மெதுவு, என் சுமை இலேசு என்று
சொன்னார்.

அக்காலத்தில் இயேசு ஓய்வுநாளில் பயிர் **12**
வழியே போனார்; அவருடைய சீஷர் பசி
யாயிருந்து, கதிர்களைக் கொய்து, தின்னத்
தொடங்கினார்கள். பரிசேயர் அதைக்கண்டு 2
அவரிடம்: ஓய்வுநாளில் செய்யத்தகாததை,
இதோ, உம்முடைய சீஷர் செய்கிறார்களே
என்று சொல்ல, | அவர்: தாவீதும் அவனோ 3
டிருந்தவர்களும் பசியாயிருந்தபோது அவன்
செய்ததை நீங்கள் வாசிக்கவில்லையா? அவன் 4
கடவுளின் வீட்டிற்குட்சென்று, ஆசாரியர்
தவிர வேறொருவரும் புசிக்கத்தகாத தேவ
சமுகத்து அப்பங்களை அவனும் அவனோ
டிருந்தவர்களும் புசித்தார்களே. அன்றியும், 5
ஓய்வுநாட்களில் ஆசாரியர்கள் தேவாலயத்
தில் ஓய்ந்திராமல், ஓய்வுநாளை வேலை
நாளாக்கினாலும் குற்றமில்லாதிருக்கிறார்கள்
என்று நீங்கள் வேதத்தில் வாசிக்கவில்லையா?
தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக் 6
கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
பலியையல்ல இரக்கத்தையே விரும்பு 7
கிறேன் என்பதின் கருத்து இன்னதென்று
அறிந்தீர்களானால், குற்றமில்லாதவர்களை
நீங்கள் குற்றப்படுத்தமாட்டீர்கள். ஓய்வு 8
நாளுக்கு மனுஷகுமாரனே ஆண்டவர்
என்றார்.

9 அவர் அவ்விடம் விட்டு அப்பால் போய்
அவர்கள் ஜெபாலயத்துக்குட் சென்றார்.
10 அங்கே சூம்பின கையன் ஒருவன் இருந்
தான். அப்பொழுது அவர்மேல் அவர்கள்
குற்றஞ்சாட்டும் நோக்கமுடையவர்களாய்:
ஓய்வுநாளில் சுணமாக்குகிறது நியாயமா
11 என்று கேட்டார்கள். அதற்கு அவர்:
உங்களில் எந்த மனுஷனாவது தனக்கிருந்த
ஒரே ஆடு ஓய்வுநாளில் குழியில் தவறி
விழுந்தால், அதைத் தூக்கி வெளியே
12 விடாமலிருப்பானோ? ஆட்டைப்பார்க்கிலும்
மனுஷன் எவ்வளவோ விசேஷமானவன்!
ஆதலால், ஓய்வுநாளில் நன்மைசெய்வது
13 நியாயந்தான் என்று சொன்னார். பின்பு
அந்த மனுஷனை நோக்கி: உன் கையை
நீட்டு என்றார். அவன் நீட்டினான்; அது
சுகப்பட்டு மறு கையைப்போலாயிற்று.
14 பரிசேயரோ வெளியே போய், அவரை
எப்படிக் கொலைசெய்யலாமென்று அவ
ருக்கு விரோதமாய் ஆலோசித்தார்கள்.
15 இயேசு அதை அறிந்து அவ்விடம் விட்டு
விலகிப்போனார். அநேகர் அவருக்குப்
பின்சென்றார்கள். அவர்களெல்லாரையும்
16 அவர் சுணமாக்கினார். தம்மைப் பிரசித்தம்
பண்ணாதபடி அவர்களுக்குக் கண்டிப்
17 பாய்க் கட்டளையிட்டார். இதோ, நான்
தெரிந்தெடுத்த என் தாசன்,
என் ஆத்துமாவுக்குப் பிரியமாயிருக்கிற
என் நேசன்,
என் ஆவியை அவர்மேல் அமரப்பண்
ணுவேன்,
அவர் புறஜாதியாருக்கு நியாயத்தைக்
கூறி அறிவிப்பார்.
18 வாக்குவாதம் செய்யவுமாட்டார், கூக்
குரலிடவுமாட்டார்;
அவர் சத்தத்தை ஒருவனும் வீதிகளில்
கேட்பதுமில்லை.
19 நியாயம் வெற்றிபெற அவர் செய்யும்
வரை,
நெரிந்த நாணலை முறியார்,
மங்கியெரிகிற திரியை அணையார்,
20 அவர் நாமத்தின்மேல் புறஜாதியார் நம்
பிக்கை வைப்பார்கள்
21 என்று | ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாய்
உரைக்கப்பட்டது நிறைவேற இப்படி
நடந்தது.
22 அப்பொழுது, பேய்பிடித்த ஒருவனை
அவரிடம் கொண்டுவந்தார்கள்; அவன்
குருடன், ஊமையன்; ஊமையன் பேசவும்
பார்க்கவுந்தக்கதாக அவனைக் சுணமாக்கி
23 னார். ஜனங்களெல்லாரும் பிரமித்து: தாவீ
தின் குமாரன் இவர்தானோ என்றார்கள்.

பரிசேயரோ அதைக் கேட்டு: இவன் பேய 24
களின் தலைவனாகிய பெயல்செபூலினாலே
பேய்களை ஓட்டுகிறானேயல்லாமல் மற்றப்
படியல்ல என்றார்கள். அவர் அவர்க 25
ளுடைய சிந்தனைகளை அறிந்து அவர்களைப்
பார்த்து: தனக்குத்தானே விரோதமாய்ப்
பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்
போம்; தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்
திருக்கிற எந்த ஊரும் எந்த வீடும் நிலைநிற்
காது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால், 26
தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்
கிறதாகுமே. அப்படியானால் அவன் ராஜ்
யம் எப்படி நிலைநிற்கும்? நான் பேய்களைப் 27
பெயல்செபூலினாலே துரத்தினால், உங்கள்
பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்து
கிறார்கள்? ஆகையால், உங்களை நியாயந்
தீர்ப்பவர்கள் அவர்களே. நான் பேய்களைக் 28
கடவுளுடைய ஆவியினாலே துரத்தினால்,
கடவுள் ராஜ்யம் உங்களிடம் வந்தாயிற்று.
அன்றியும், பலவானை முந்திக் கட்டினாலொ 29
ழியப் பலவானுடைய வீட்டுக்குள் ஒருவன்
புகுந்து, அவன் உடைமைகளைக் கொள்ளை
யிடுவது எப்படி? கட்டினானேயாகில்,
அவன் வீட்டைக் கொள்ளையடித்துவிடுவான்.
என்னோடே இராதவன் எனக்கு விரோதி; 30
என்னோடு கூட்டிச்சேர்க்காதவன் சிதறடிக்
கிறவன். ஆதலால், நான் உங்களுக்குச் 31
சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தத்
தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்
படும்; ஆவியானவரை நிந்திக்கும் தூஷ
ணமோ மன்னிக்கப்படாது. எவனாகிலும் 32
மனுஷ குமாரனுக்கு விரோதமாக ஒரு
வார்த்தை சொன்னால், அது அவனுக்கு மன்
னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த
ஆவிக்கு விரோதமாகப் பேசுவானானால்,
அவன் இம்மையிலும் மறுமையிலும் மன்
னிப்படையான். நீங்கள் மரத்தை நல்லதாக் 33
குங்கள், அப்பொழுது அதன் கனியும் நல்ல
தாகும்; மரத்தைக் கெட்டதாக்குங்கள், அப்
பொழுது அதன் கனியும் கெட்டதாகும்.
மரம் கனியினாலே அறியப்படும். | விரியன் 34
பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாத
வர்களாயிருக்க, நலமானவைகளைப் பேசுவ
தெப்படி? இருதயத்தின் நிறைவிலிருந்து
வாய் பேசும். நல்ல மனுஷன் நல்ல பொக்கி 35
ஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டு
கிறான்; பொல்லாத மனுஷன் பொல்லாத
பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை
எடுத்துக் காட்டுகிறான். மனுஷர் பேசும் 36
ஒவ்வொரு வீண் வார்த்தைக்கும் நியாயத்
தீர்ப்பு நாளிலே கணக்குக் கொடுக்கவேண்டு
மென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

37 நீ குற்றமற்றவன் என்று தீர்க்கப்படுவதும்
உன் வார்த்தைகளினாலேதான், நீ குற்றவாளி
என்று தீர்க்கப்படுவதும் உன் வார்த்தை
களினாலேதான் என்றார்.
38 அப்பொழுது வேதபாரகரிலும் பரிசேய
ரிலும் சிலர் அவரிடம் வந்து: போதகரே,
நீர் எங்களுக்கு ஓர் அடையாளம் காட்ட
வேண்டுமென்று விரும்புகிறோமென்று
39 சொல்ல, | அவர்: இந்த பொல்லாத
விபசார சந்ததியார் அடையாளம் தேடு
கிறார்கள்; ஆயினும், யோனா தீர்க்கதரிசியின்
அடையாளத்தையேயன்றி வேறே அடை
யாளத்தை இவர்களுக்குக் கொடுக்கப்படுவ
40 தில்லை. யோனா இராப்பகல் மூன்றுநாள்
பெரிய மீனின் வயிற்றில் இருந்ததுபோல,
மனுஷ குமாரனும் இரவும் பகலும் மூன்று
நாள் பூமியின் இருதயத்தில் இருப்பார்.
41 நினிவே பட்டணத்தார் நியாயத்தீர்ப்பில்
இச்சந்ததி யாரோடெழுந்து நின்று, இவர்
கள்மேல் குற்றஞ்சாட்டுவார்கள். அவர்கள்
யோனாவின் பிரசங்கத்துக்கிணங்கி மனந்
திரும்பினார்களே. இதோ, இங்கே இருக்
42 கிறவர் யோனாவிலும் பெரியவர். தென்
தேசத்து அரசி இச்சந்ததியாரோடெழுந்து
நின்று, நியாயத்தீர்ப்பில் இவர்கள்மேல்
குற்றஞ்சாட்டுவாள். இவள் பூமியின் கடை
யாந்தரங்களிலிருந்து சாலொமோனின்
ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ,
இங்கே இருக்கிறவர் சாலொமோனிலும்
43 பெரியவர். அசுத்த ஆவி ஒரு மனுஷனை
விட்டுப் போகும்போது, வறண்ட இடங்
களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும்
44 கண்டடையாமல்: நான் விட்டுவந்த என்
வீட்டுக்குத் . திரும்பிப் போவேனென்று
சொல்லி, அங்கே வந்து, அந்த வீடு
வெறுமையாகவும் பெருக்கி ஜோடிக்கப்
பட்டதாகவும் இருக்கக் கண்டு, திரும்பிப்
45 போய்த் தன்னிலும் பொல்லாத வேறு ஏழு
ஆவிகளைத் தன்னோடே கூட்டிக்கொண்டு
வந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்.
அப்பொழுது அந்த மனுஷனின் முன்னிலை
மையிலும் அவன் பின்னிலைமை அதிகக்
கேடுள்ளதாகும். இந்தப் பொல்லாத சந்ததி
யாருக்கும் இப்படியே ஆகும் என்றார்.
46 அவர் ஜனங்களோடே இன்னும் பேசிக்
கொண்டிருக்கையில், அவர் தாயாரும்
சகோதரரும் அவரிடம் பேசவேண்டு
மென்று வெளியே நின்றுகொண்டிருந்
47 தார்கள். அப்பொழுது ஒருவன் அவரிடம்:
இதோ, உம் தாயாரும் உம் சகோதரரும்
உம்மோடே பேசவேண்டுமென்று வெளியே
48 நிற்கிறார்கள் என்றான். அவரோ தம்மிடம்
இப்படிச் சொன்னவனுக்கு: என் தாயார்
யார்? என் சகோதரர் யார் என்று சொல்லி,
தமது கையைத் தம் சீஷருக்கு நேரே 49
நீட்டி: இதோ, என் தாயும் என் சகோதர
ரும் இவர்களே. பரலோகத்திலிருக்கிற 50
என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன்
எவனோ, அவனே எனக்குச் சகோதரனும்
சகோதரியும் தாயுமாம் என்றார்.

இயேசு அன்றைய தினமே வீட்டி **13**
லிருந்து வெளியே போய்க் கடலோரத்தில்
உட்கார்ந்தார். திரளான ஜனங்கள் அவரிடம் 2
கூடிவந்தபடியால், அவர் ஒரு படவில் ஏறி
உட்கார்ந்தார்; ஜனங்களெல்லாரும் கரை
யிலே நின்றார்கள். அவர் பல காரியங்களை 3
உவமைகளாக அவர்களுக்குச் சொன்னார்:
விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப்
போனான். அவன் விதைக்கையில் சில 4
விதைகள் பாதையில் விழுந்தன; பறவைகள்
வந்து அவற்றைப் பட்சித்துப்போட்டன.
சில விதைகள் அதிக மண்ணில்லாத கற் 5
பாறை இடங்களில் விழுந்தன; ஆழமான
மண்ணில்லாததினால் அவை சீக்கிரம்
முளைத்தன; வெயில் ஏறினபோதோ அவை 6
தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்து
போயின. சில விதைகள் முள்ளுள்ள 7
இடங்களில் விழுந்தன; முள் வளர்ந்து
அவற்றை நெருக்கிப்போட்டது. சில 8
விதைகளோ நல்ல நிலத்தில் விழுந்து, சில
நூறாகவும், சில அறுபதாகவும், சில முப்
பதாகவும் பலன் தந்தன. காதுள்ளவன் 9
கேட்கக்கடவன் என்றார்.
சீஷர் அவரிடம் வந்து: ஏன் அவர்க 10
ளோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று
கேட்க, | அவர்: பரலோக ராஜ்யத்தின் இர 11
கசியங்களை அறியும்படி உங்களுக்கு அரு
ளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்பட
வில்லை. உள்ளவன் எவனோ அவனுக்குக் 12
கொடுக்கப்படும், பரிபூரணமுமாகும்; இல்
லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ள
தும் எடுத்துக்கொள்ளப்படும். அவர்கள் 13
கண்டும் காணாதவர்களாயும் கேட்டும்
கேளாதவர்களாயும் உணர்ந்துகொள்ளாத
வர்களாயும் இருக்கிறபடியினால், நான் உவ
மைகளாக அவர்களோடே பேசுகிறேன்.
காதாரக் கேட்டும் உணரமாட்டீர்கள், 14
கண்ணாரக் கண்டும் அறியமாட்டீர்கள்;
இந்த ஜனங்கள் தங்கள் கண்களால் 15
காணாமலும்,
காதுகளால் கேளாமலும்,
இருதயத்தால் உணராமலும்,
மனந்திரும்பாமலும்,

நான் இவர்களைக் குணமாக்காமலும்
இருக்கும்படி,
இவர்கள் இருதயம் கொழுத்துப்
போயிற்று;
கேளாதபடி தங்கள் காதுகளை மந்த
மாக்கிக்கொண்டார்கள்;
தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள்
என்ற ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்க
16 ளிடம் நிறைவேறுகிறது. உங்கள் கண்
களோ பாக்கியமுள்ளவைகள், அவைகள்
காண்கின்றன. உங்கள் காதுகளும் பாக்கிய
முள்ளவைகள், அவைகள் கேட்கின்றன.
17 அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும்
நீங்கள் காண்கிறவைகளைக் காணவும்
நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும்
விரும்பியும், காணாமலும் கேளாமலும்
போனார்களென்று மெய்யாகவே உங்க
ளுக்குச் சொல்லுகிறேன்.
18 ஆகையால், விதைக்கிறவனைப்பற்றிய
19 உவமையை நீங்கள் கேளுங்கள்: ஒருவன்
ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணரா
திருக்கும்போது, தீயோன் வந்து, அவன்
இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்
துக்கொள்ளுகிறான்; அவனே பாதையில்
20 விதைக்கப்பட்டவன். கற்பாறை இடங்
களில் விதைக்கப்பட்டவன் வசனத்தைக்
கேட்டு அதை உடனே சந்தோஷத்தோடே
21 ஏற்றுக்கொள்ளுகிறவன்; ஆகிலும், தன்னில்
வேரில்லாதவனாய் இவன் கொஞ்சக்காலம்
மாத்திரம் நிலைத்திருப்பான்; வசனத்தினிமித்
தம் உபத்திரவமும் துன்பமும் உண்டான
22 வுடனே இடறிவிழுகிறான். முள்ளுள்ள
இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்
தைக் கேட்கிறவனாயிருந்தும், பிரபஞ்சத்
தின் கவலையும் ஐசுவரியத்தின் வஞ்சகமும்
வசனத்தை நெருக்கிப்போடுகிறதினால், அவ
23 னும் பலனற்றுப்போகிறான். நல்ல நிலத்
தில் விதைக்கப்பட்டவனே, வசனத்தைக்
கேட்டு உணருகிறவனாய், ஒன்று நூறாகவும்,
ஒன்று அறுபதாகவும், ஒன்று முப்பதாகவும்
பலன் தருகிறான் என்றார்.
24 வேறொரு உவமையை அவர்களுக்குச்
சொல்லிக்காட்டினார்: பரலோக ராஜ்யம்
தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த
25 மனுஷனுக்கு ஒப்பாகும். மனுஷர் நித்
திரைபண்ணுகையில் அவன் சத்துரு வந்து
கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப்
26 போனான். பயிர் வளர்ந்து கதிர்விட்ட
27 போது, களைகளும் காணப்பட்டன. வீட்
டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடம்
வந்து: ஐயா, நீர் உமது நிலத்தில் நல்ல
விதையை விதைத்ததில்லையோ? அதில்
களைகள் உண்டானதெப்படி என்றார்கள்.
அதற்கு அவன்: அதைச் சத்துரு செய்தான் 28
என்று சொல்ல, வேலைக்காரர்: நாங்கள்
போய் அவைகளைப் பிடுங்கிப்போடுவது
உமக்கு இஷ்டமா என்று கேட்டார்கள்.
அதற்கு அவன்: வேண்டாம், களைகளைப் 29
பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்
கூட வேரோடே பிடுங்கிவிடாதபடிக்கு,
இரண்டையும் அறுப்புமட்டும் வளர 30
விடுங்கள்! அறுப்புக்காலத்தில் நான் அறுக்
கிறவர்களிடம்: முதலாவது களைகளைப்
பிடுங்கி அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக்
கட்டுகளாகக்கட்டுங்கள்; கோதுமையையோ
என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள்
என்பேன் என்று சொன்னான் என்றார்.
வேறொரு உவமையை அவர்களுக்கு 31
எடுத்துக்காட்டினார்: பரலோக ராஜ்யம்
கடுகுவிதைக்கு ஒப்பாகும்; அதை ஒரு
மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்
தான். அது சகல விதைகளிலும் சிறிது; 32
வளரும்போதோ செடிகளைப்பார்க்கிலும்
பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதன்
கிளைகளில் வந்தடையத்தக்க மரமாகும்
என்றார்.
வேறொரு உவமையை அவர்களுக்குச் 33
சொன்னார்: பரலோக ராஜ்யம் புளித்த
மாவுக்கு ஒப்பாகும், ஒரு ஸ்திரீ அதை
எடுத்து மூன்றுபடி மாவில் புதைத்துவைத்
தாள், முழுதும் புளித்தது என்றார்.
இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களி 34
டத்தில் உவமைகளாகப் பேசினார்; உவமை
யினாலேயன்றி அவர்களிடம் ஒன்றையும்
பேசவில்லை.
உவமைகளாகப் பேச என் வாயைத் 35
திறப்பேன்,
உலகத்தோற்றமுதல் மறைந்திருந்தவை
களை வெளியாக்கிவிடுவேன்
என்று தீர்க்கதரிசியின் மூலமாய் உரைக்கப்
பட்டது நிறைவேற இப்படி நடந்தது.
அப்பொழுது அவர் ஜனங்களை அனுப்பி 36
விட்டு வீட்டுக்கு வந்தார்; அவருடைய
சீஷர் அவரிடம் வந்து: நிலத்தில் களைகளை
விதைத்த உவமையை எங்களுக்குத் தெளி
வாக்கவேண்டுமென்று கேட்க, | அவர்: 37
நல்ல விதையை விதைக்கிறவர் மனுஷ
குமாரன்; | நிலம் உலகம்; நல்ல விதை 38
ராஜ்யத்தின் புத்திரர்; களைகள் தீயோனின்
புத்திரர்; அவைகளை விதைக்கிற சத்துரு 39
பிசாசு; அறுப்பு யுகமுடிவு; அறுக்கிற
வர்கள் தேவதூதர். களைகளைச் சேர்த்து 40
அக்கினியால் சுட்டெரிக்கிறதுபோல, யுக
முடிவில் நடக்கும். மனுஷகுமாரன் தம் 41

தூதரை அனுப்புவார்; இடறலுக்குக் கார
ணமாயிருக்கிற யாவற்றையும், அக்கிரமம்
செய்கிறவர்களையும் அவருடைய ராஜ்யத்தி
42 லிருந்து அவர்கள் சேர்த்தெடுத்து, அக்கினிச்
சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகை
43 யும் பற்கடிப்புமாயிருக்கும். அப்போது
நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே
சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்.
காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.
44 பின்னும் அவர்: பரலோக ராஜ்யம் நிலத்
தில் மறைந்திருக்கிற புதையலுக்கு ஒப்பா
கும்; அதை ஒரு மனுஷன் கண்டு மறைத்து
வைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே
போய்த் தனக்குரிய யாவற்றையும் விற்று
அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்.
45 மேலும், பரலோக ராஜ்யம் நல்ல முத்துக்
களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாகும்;
46 அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு,
போய், தனக்குரிய யாவற்றையும் விற்று
அதை வாங்குகிறான்.
47 அன்றியும், பரலோக ராஜ்யம் கடலில்
போடப்பட்டுச் சகலவிதமான மீன்களையும்
சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பா
48 கும்; அது நிறைந்தபோது அதைக் கரை
யில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக்
கூடைகளில் சேர்த்துக்கொண்டு, ஆகாத
49 வைகளை எறிந்துபோடுவார்கள். இப்படியே
யுகமுடிவில் நடக்கும். தேவதூதர் புறப்
பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்
50 லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச்
சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகை
யும் பற்கடிப்புமாயிருக்கும் என்றார்.
51 இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்
களா என்று அவர் கேட்க, அவர்கள்: ஆம்,
52 அறிந்துகொண்டோம் என்றார்கள். அவரோ
அவர்களிடம்: இப்படியிருக்கிறபடியால்,
பரலோக ராஜ்யத்துச் சீஷனாகித் தேறின
வேதபாரகன் எவனும் தன் பண்டகசாலையி
லிருந்து புதியவைகளையும் பழையவைகளை
யும் எடுத்துக்கொடுக்கிற வீட்டெஜமான்
ஒருவனுக்கு ஒப்பாவான் என்றார்.
53 இயேசு இந்த உவமைகளைச் சொல்லி
54 முடித்தபின்பு அவ்விடம் விட்டு, தம்
சொந்த ஊருக்கு வந்து, அவர்களுடைய
ஜெபாலயத்திலே அவர்களுக்கு உபதேசம்
பண்ணிக்கொண்டிருந்தார். அவர்கள் பிர
மித்து: இந்த ஞானமும் வல்ல செயல்
களும் இவனுக்கு எங்கிருந்து வந்தன?
55 இவன் தச்சன் மகன் அல்லவோ? இவன்
தாயின் பேர் மரியாளல்லவோ? யாக்கோபு
யோசேப்பு சீமோன் யூதா என்பவர்கள்
இவன் சகோதரரல்லவோ? இவன் சகோதரிக 56
ளெல்லாரும் நம்மிடம் இருக்கிறார்களல்
லவோ? இப்படியிருக்க இவையெல்லாம் இவ
னுக்கு எங்கிருந்து வந்தன என்று சொல்லி, |
அவர் விஷயமாய் இடறினார்கள். இயேசுவோ 57
அவர்களிடம்: ஒரு தீர்க்கதரிசி தன்
ஊரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்
கும் கனமடையாதிரான் என்றார். அவர்களு 58
டைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே
அநேக வல்ல செயல்களைச் செய்யவில்லை.

ஆக்காலத்தில் ஏரோது [1]சிற்றரசன் **14**
இயேசுவின் பிரஸ்தாபத்தைக் கேள்விப்
பட்டு, | தன் ஊழியக்காரரிடம்: இவன் 2
யோவான் ஸ்நானகன்; இவன் மரித்தோரி
லிருந்து எழுந்தான்; ஆகையால் இவனிடம்
வல்ல செயல்கள் விளங்குகின்றன என்
றான். ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்பு 3
வின் மனைவி ஏரோதியாளினிமித்தம் யோவா
னைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்திருந்
தான். ஏனெனில், யோவான்: நீர் அவளை 4
வைத்துக்கொண்டிருப்பது நியாயமல்ல
வென்று அவனுக்குச் சொல்லிவந்தான்.
ஏரோது அவனைக் கொலைசெய்ய மனமா 5
யிருந்தும், ஜனங்கள் அவனைத் தீர்க்கதரிசி
யென்று எண்ணிவந்தபடியால் அவர்களுக்
குப் பயந்திருந்தான். அப்படியிருக்க, 6
ஏரோதுவின் ஜன்மநாள் கொண்டாடப்படு
கிறபோது, ஏரோதியாளின் குமாரத்தி
அவர்கள் நடுவே நடனஞ்செய்தாள். அது
ஏரோதுவுக்குப் பிரியமாயிருந்தது. அதினி 7
மித்தம், அவள் எதைக் கேட்டாலும் தருவ
தாக அவளுக்கு ஆணையிட்டு வாக்குக்
கொடுத்தான். தன் தாய் தூண்டிவிட்ட 8
படியே அவள்: யோவான் ஸ்நானகனின்
தலையை இங்கேதானே ஒரு தட்டில் எனக்
குத் தாருமென்று கேட்டாள். அரசன் மன 9
வருத்தப்பட்டான். ஆயினும், ஆணைகளி
னிமித்தமும் பந்தியில் கூட இருந்தவர்களி
னிமித்தமும் அதைக் கொடுக்கக் கட்டளை
யிட்டு, ஆள் அனுப்பிக் காவற்கூடத்திலே 10
யோவானைச் சிரச்சேதம்பண்ணுவித்தான்.
அவனுடைய சிரசை ஒரு தட்டிலே 11
கொண்டுவந்து, அச்சிறு பெண்ணுக்குக்
கொடுத்தார்கள்; அவள் அதைத் தன் தாயி
னிடத்தில் கொண்டுபோனாள். அவன் 12
சீஷர் வந்து, உடலை எடுத்து அடக்கம்
பண்ணி, பின்பு போய் அந்தச் சங்கதியை
இயேசுவுக்கு அறிவித்தார்கள்.

1 சிற்றரசன் என்னும் பதம் கிரேக்கில் காற்பங்கு தேசாதிபதி என்று பொருள்படும்.

13 இயேசு அதைக் கேட்டு, அவ்விடம்விட்
டுப் படவிலேறி வனாந்தரமான ஓர் இடத்
துக்குத் தனியே போனார். ஜனங்கள் அதைக்
கேள்விப்பட்டு, ஊர்களிலிருந்து கால்நடை
யாய் அவரைத் தொடர்ந்து போனார்கள்.
14 அவர் வெளியே வந்து, திரளான ஜனங்களைக்
கண்டு, அவர்கள்மேல் மனதுருகி, அவர்
களில் நோயாளிகளைக் குணமாக்கினார்.
15 சாயங்காலமானபோது, சீஷர் அவரிடம்
வந்து: இது வனாந்தரமான இடம், நேரமு
மாயிற்று; ஜனங்கள் கிராமங்களுக்குப்
போய்த் தங்களுக்குப் போஜன பதார்த்தங்
களைக் கொள்ளும்படி அவர்களை அனுப்பி
16 விடவேண்டும் என்றார்கள். இயேசுவோ:
அவர்கள் போக அவசியமில்லை; நீங்களே
அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள் என்
17 றார். அதற்கு அவர்கள்: இங்கே எங்களி
டத்தில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்
களுமேயல்லாமல் வேறொன்றுமில்லை என்
18 றார்கள். அவர்: அவைகளை என்னிடம்
19 கொண்டுவாருங்கள் என்றார். அப்பொழுது
அவர் ஜனங்களைப் புல்லின்மேல் பந்தியிருக்
கக் கட்டளையிட்டு, அந்த ஐந்து அப்பங்
களையும் இரண்டு மீன்களையும் எடுத்து,
வானத்தை அண்ணாந்துபார்த்து, ஆசீர்
வதித்து, அப்பங்களைப் பிட்டுச் சீஷரிடத்தில்
கொடுத்தார்; சீஷர் ஜனங்களுக்குக் கொடுத்
20 தார்கள். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தி
யடைந்தார்கள்; மிஞ்சின துணிக்கைகளைப்
பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள்.
21 சாப்பிட்டவர்கள், ஸ்திரீகள் பிள்ளைகள்
தவிர, ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்.
22 தாம் ஜனங்களை அனுப்பிவிடுகையில்,
தம் சீஷர் உடனே படவில் ஏறவும், தமக்கு
முன்னே அக்கரைக்குப் போகவும் அவர்
23 களைக் கட்டாயப்படுத்தினார். அவர் ஜனங்
களை அனுப்பிவிட்டபின்பு, தனியே ஜெபம்
பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்
காலமானபோது அங்கே தனிமையாயிருந்
24 தார். அதற்குள்ளாகப் படவு கரையிலிருந்து
வெகுதூரம் போயிருந்தது; எதிர்காற்றடிக்
கவே அது அலைகளினால் அலைவுபட்டது.
25 இரவின் நாலாம் ஜாமத்தில் இயேசு கடலின்
26 மேல் நடந்து அவர்களிடம் வந்தார். அவர்
கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர் கண்டு
கலங்கி, ஆவேசமென்று சொல்லி, பயத்தி
27 னால் அலறினார்கள். உடனே இயேசு அவர்
களோடே பேசி: தைரியமாயிருங்கள், நான்
28 தான், பயப்படாதிருங்கள் என்றார். அதற்
குப் பேதுரு: ஆண்டவரே, நீரேயானால்,
நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடம் வரக்
29 கட்டளையிடும் என்று சொன்னான். அவர்:
வா என்றார். அப்பொழுது பேதுரு படவை
விட்டிறங்கி, ஜலத்தின்மேல் நடந்து இயேசு
வைக் கிட்டிவந்தான். காற்றைக் கண்ட 30
போதோ பயந்து, அமிழ்ப்போகையில்:
ஆண்டவரே, என்னை இரட்சியும் என்று
கதறிக் கூப்பிட்டான். உடனே இயேசு 31
கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்ப
விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்
றார். அவர்கள் படவில் ஏறவே காற்று 32
அமர்ந்தது. அப்பொழுது படவில் உள்ள 33
வர்கள்: மெய்யாகவே நீர் தேவகுமாரன்
என்று சொல்லி அவரைப் பணிந்துகொண்
டார்கள்.

பின்பு அவர்கள் கடலைக் கடந்து கெனே 34
சரேத்து நாட்டில் கரை சேர்ந்தார்கள்.
அவ்விடத்து மனுஷர் அவரை இன்னா 35
ரென்று அறிந்து, சுற்றுப்புறமெங்கும்செய்தி
அனுப்பி, பிணியாளிகளெல்லாரையும் அவ
ரிடம் கொண்டுவந்து, அவர் வஸ்திரத்தின் 36
ஓரத்தையாகிலும் அவர்கள் தொடும்படி
உத்தரவாகவேண்டுமென்று அவரை வேண்
டிக்கொண்டார்கள்; தொட்ட யாவரும்
முற்றும் குணமானார்கள்.

அப்பொழுது எருசலேமிலிருந்து பரி **15**
சேயரும் வேதபாரகரும் இயேசுவினிடம்
வந்து: உம்முடைய சீஷர் முன்னோரின் 2
பாரம்பரியத்தை மீறி நடக்கிறதென்ன? கை
கழுவாமல் போஜனம்பண்ணுகிறார்களே
என்றார்கள். அதற்கு அவர்: நீங்கள் உங்கள் 3
பாரம்பரியத்தினிமித்தம் கடவுளுடைய
கற்பனையை மீறி நடக்கிறதென்ன? உன் 4
தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ண
வேண்டுமென்றும், தகப்பனையாவது தாயை
யாவது சபிக்கிறவன் சாகவே சாகவேண்டு
மென்றும் கடவுள் சொல்லியிருக்கிறாரே.
நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது 5
தாயையாவது நோக்கி: உனக்கு உதவியாகக்
கொடுக்கக்கூடியதைக் கடவுளுக்குப்
படைத்தாயிற்றென்று சொல்வானானால்,
அவன் தன் தகப்பனையாவது தாயையா 6
வது கனம்பண்ணவேண்டுவதில்லை என்று
சொல்லி உங்கள் பாரம்பரியத்தினிமித்தம்
கடவுள் வார்த்தையை அவமாக்கினீர்கள்.

இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் 7
என்னைக் கனம்பண்ணுகிறார்கள்;
அவர்கள் இருதயத்துக்கும் எனக்குமோ
வெகு தூரம்;
மனுஷ கற்பனைகளை உபதேசங்களாக 8
உபதேசித்து,
வீணாக எனக்கு ஆராதனை செய்கிறார்கள்
என்று | மாயக்காரராகிய உங்களைப்பற்றி 9

ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் உரைத்
தான் என்றார்.
10 பின்பு அவர் ஜனங்களைத் தம்மிடம் வர
வழைத்து, அவர்களை நோக்கி: நீங்கள்
11 கேட்டு உணருங்கள். வாய்க்குள்ளே
போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது,
வாயிலிருந்து வெளிப்படுகிறதே மனுஷனைத்
12 தீட்டுப்படுத்தும் என்றார். அப்பொழுது
சீஷர் அவரிடம் வந்து: பரிசேயர் இந்த
வார்த்தையைக் கேட்டு இடறினார்கள் என்
பது உமக்குத் தெரியுமா என்று சொல்ல, |
13 அவர்: என் பரமபிதா நடாத நாற்றெல்
14 லாம் வேரோடே பிடுங்கப்படும். அவர்களை
விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழி
காட்டுகிற குருடர்; குருடனுக்குக் குருடன்
வழிகாட்டுவானானால் இருவரும் குழியில்
15 விழுவார்களே என்றார். பேதுரு: இந்த
உவமையை எங்களுக்கு விளக்கிக் காட்ட
16 வேண்டுமென்று கேட்க, | அவர்: நீங்களும்
17 இன்னும் உணர்வில்லாதவர்களா? வாய்க்
குள்ளே போகிறதெல்லாம் வயிற்றில் சென்று
வெளியே கழிந்துபோம் என்பது உங்களுக்
18 குத் தெரியாதா? வாயிலிருந்து வெளிப்படு
கிறவைகளோ இருதயத்திலிருந்து புறப்
பட்டு வரும்; அவைகளே மனுஷனைத்
19 தீட்டுப்படுத்தும். எப்படியெனில், பொல்
லாத சிந்தனைகள், கொலைபாதகங்கள்,
விபசாரங்கள், வேசித்தனங்கள், களவுகள்,
பொய்ச் சாட்சிகள், தூஷணங்களாகிய
இவைகள் இருதயத்திலிருந்து வெளிப்பட்டு
20 வரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்
படுத்துகிறவைகள்; கை கழுவாமல் சாப்பிடு
கிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது
என்றார்.
21 இயேசு அவ்விடம்விட்டு விலகி, தீரு
சீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப்
22 போனார். அந்தத் திசைகளில் குடியிருந்த
கானான் நாட்டு ஸ்திரீ ஒருத்தி அவரிடம்
வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே,
எனக்கு இரங்கும்; என் மகள் பேயினால்
கொடிய வேதனைப்படுகிறாள் என்று
23 சொல்லிக்கூப்பிட்டாள். அவளுக்கு அவர்
ஒரு வார்த்தையும் பதில்சொல்லவில்லை.
அப்பொழுது அவர் சீஷர் வந்து: இவள்
நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே;
அவளை அனுப்பிவிடும் என்று அவரை
24 வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர்:
இஸ்ரவேல் வீட்டாருள் காணாமற்போன
ஆடுகளிடம் அனுப்பப்பட்டேனேயன்றி,
25 மற்றப்படியல்ல என்றார். அவள் வந்து:
ஆண்டவரே, எனக்கு உதவிசெய்யும்
26 என்று அவரைப் பணிந்துகொள்ள, | அவர்:
பிள்ளைகளின் ஆகாரத்தை எடுத்து நாய்க்
குட்டிகளுக்குப் போடுகிறது அழகல்ல
என்றார். அவள்: மெய்தான், ஆண்டவரே, 27
என்றாலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்
களின் மேசையிலிருந்து விழும் துணிக்கை
களைத் தின்னுமே என்றாள். இயேசு அதைக் 28
கேட்டு: அம்மா, உன் விசுவாசம் பெரிது;
நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது
என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்
கியமானாள்.
இயேசு அவ்விடம் விட்டு, கலிலேயாக் 29
கடற்கரை வழியே போய், ஒரு மலையின்
மேல் ஏறி அங்கே உட்கார்ந்தார். அப் 30
பொழுது, சப்பாணிகள், ஊனர், குருடர்,
ஊமையர் முதலிய அநேகரைத் திரளான
ஜனங்கள் அவர் பாதத்தில் கொண்டுவந்து
விட்டார்கள்; அவர்களை அவர் குணமாக்கி
னார். ஊமையர் பேசுகிறதையும், ஊனர் 31
சொஸ்தமடைகிறதையும், சப்பாணிகள்
நடக்கிறதையும், குருடர் பார்க்கிறதையும்
ஜனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு, இஸ்ர
வேலின் கடவுளை மகிமைப்படுத்தினார்கள்.
பின்பு இயேசு தம்முடைய சீஷரை 32
அழைத்து: ஜனங்கள்மேல் பரிதாபங்கொள்
ளுகிறேன், இவர்கள் என்னிடம் மூன்று
நாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லா
திருக்கிறார்கள்; இவர்களைப் பட்டினியாய்
அனுப்பிவிட எனக்கு மனமில்லை, வழியில்
சோர்ந்துபோவார்களே என்றார். அதற் 33
குச் சீஷர்: இத்தனை திரளான ஜனங்களைத்
திருப்திசெய்வதற்கு வேண்டிய ஆகாரம்
இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி அகப்
படும் என்றார்கள். இயேசு: உங்களிடம் 34
எத்தனை அப்பங்கள் உண்டென்று கேட்
டார். அவர்கள்: ஏழு அப்பங்களும் சில
சிறு மீன்களும் உண்டு என்றார்கள். அப் 35
பொழுது அவர் ஜனங்களைத் தரையில் பந்தி
யிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஏழு அப் 36
பங்களையும் அந்த மீன்களையும் எடுத்து,
கடவுளுக்கு நன்றிசெலுத்தி, பிட்டு, சீஷ
ரிடம் கொடுத்தார்; சீஷர் ஜனங்களுக்குப்
பரிமாறினார்கள். எல்லாரும் சாப்பிட்டுத் 37
திருப்தியடைந்தார்கள்; மிஞ்சின துணிக்கை
களை ஏழு கூடை நிறைய எடுத்தார்கள்.
சாப்பிட்டவர்கள், ஸ்திரீகள் பிள்ளைகள் 38
தவிர, நாலாயிரம் புருஷர். அவர் ஜனங் 39
களை அனுப்பிவிட்டு, படவிலேறி மகதா
வின் எல்லைகளில் வந்து சேர்ந்தார்.

அப்பொழுது பரிசேயரும் சதுசேயரும் 16
அவரிடம் வந்து, வானத்திலிருந்து ஓர்
அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்க

வேண்டுமென்று சோதித்துக் கேட்க, |
2 அவர்: மாலையில், செவ்வானமிட்டிருக்
கிறது, அதனால் வெளிவாங்கும் என்று
3 சொல்லுகிறீர்கள். காலையில், செவ்வான
மும் மந்தாரமுமாயிருக்கிறது, இன்றைக்குக்
காற்றும் மழையும் வரும் என்று சொல்லு
கிறீர்கள். வானத்தின் தோற்றத்தை நிதா
னிக்க உங்களுக்குத்தெரியுமே, காலங்களின்
அடையாளங்களை நிதானிக்க உங்களால்
4 கூடாதா? பொல்லாத விபசார சந்ததியார்
அடையாளம் தேடுகிறார்கள்; யோனாவின்
அடையாளத்தையேயன்றி வேறே அடை
யாளத்தை இவர்களுக்குக் கொடுப்பதில்லை
என்று சொல்லி அவர்களை விட்டுப்போனார்.
5 அவருடைய சீஷர் அக்கரை சேர்ந்த
போது, அப்பங்களைக் கொண்டுவர மறந்து
6 போயிருந்தார்கள். இயேசு அவர்களிடம்:
பரிசேயர் சதுசேயர் என்பவர்களின் புளித்த
மாவுக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றார்.
7 நாம் அப்பங்களைக் கொண்டுவரவில்லையே
என்று அவர்கள் தங்களுக்குள்ளே யோசனை
8 பண்ணிக்கொண்டார்கள். இயேசு அதை
அறிந்து: அற்பவிசுவாசிகளே, உங்களிடம்
அப்பங்கள் இல்லாததைக்குறித்து நீங்கள்
உங்களுக்குள்ளே யோசனைபண்ணுகிற
9 தென்ன? உங்களுக்கு இன்னும் உணர்வில்
லையா? ஐந்து அப்பங்களை ஐயாயிரம்பேருக்
குப் பகிர்ந்து, மிஞ்சினதை எத்தனை கூடை
10 நிறைய எடுத்தீர்கள் என்பதும், ஏழு அப்
பங்களை நாலாயிரம்பேருக்குப் பகிர்ந்து,
மிஞ்சினதை எத்தனை கூடை நிறைய எடுத்
தீர்கள் என்பதும் உங்களுக்கு ஞாபக
11 மில்லையா? பரிசேயர் சதுசேயர் என்பவர்
களின் புளித்த மாவுக்கு எச்சரிக்கையா
யிருக்கவேண்டும் என்று நான் சொன்னது
ஆகாரத்தைக் குறித்ததல்லவென்று நீங்கள்
12 உணராதிருக்கிறது எப்படி என்றார். எச்
சரிக்கையாயிருங்களென்று அவர் சொன்
னது அப்பத்துப் புளித்தமாவைக்குறித்துச்
சொல்லாமல், பரிசேயர் சதுசேயர் என்பவர்
களின் உபதேசத்தைக்குறித்தே சொன்னார்
என்று அப்பொழுது அறிந்துகொண்
டார்கள்.
13 பின்பு இயேசு பிலிப்புச் செசரியாவின்
திசைகளுக்கு வந்தபோது: மனுஷகுமாரனை
யார் என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள்
14 என்று தம் சீஷரிடம் கேட்க, | அவர்கள்:
சிலர் யோவான்ஸ்நானகன் என்றும் சிலர்
எலியா என்றும் வேறு சிலர் எரேமியா
அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும்
சொல்லுகிறார்கள் என்றார்கள். அப் 15
பொழுது அவர்: என்னை யார் என்று நீங்கள்
சொல்லுகிறீர்கள் என்று கேட்க, சீமோன் 16
பேதுரு: நீர் ஜீவனுள்ள கடவுளின் குமார
னாகிய கிறிஸ்து என்றான். இயேசு அவ 17
னிடம்: யோனாவின் குமாரன் சீமோனே,
நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும்
இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பர
லோகத்திலிருக்கிற என் பிதாவே இதை
உனக்கு வெளிப்படுத்தினார். நான் உனக் 18
குச் சொல்லுகிறதைக் கேள்: நீ பேதுரு[1],
இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டு
வேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை
மேற்கொள்வதில்லை. பரலோக ராஜ்யத்தின் 19
திறவுகோல்களை உனக்குத் தருவேன். பூலோ
கத்தில் நீ கட்டுவது எதுவோ அது பர
லோகத்திலும் கட்டப்பட்டதாகும். பூலோ
கத்தில் நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது
பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டதா
கும் என்றார். தாம் கிறிஸ்து என்று ஒரு 20
வருக்கும் சொல்லாதபடி அப்பொழுது
சீஷருக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்
டார்.
அதுமுதல் இயேசு கிறிஸ்து தாம் எருச 21
லேமுக்குப் போய் மூப்பராலும் பிரதான
ஆசாரியராலும் வேதபாரகராலும் பல
பாடுகள் பட்டு, கொலையுண்டு, மூன்றாம்
நாளில் எழுப்பப்படவேண்டும் என்ப
தைத் தம் சீஷர்களுக்கு எடுத்துக்காட்டத்
தொடங்கினார். அப்பொழுது பேதுரு அவ 22
ரைத் தனியே அழைத்து: ஐயோ! ஆண்ட
வரே, அது வேண்டாம். இது ஒருபோதும்
உமக்கு நேரிடுவதில்லை என்று அவரைக்
கண்டிக்கத் தொடங்கினான். அவரோ 23
திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப்
பின்னாகப் போ, சாத்தானே, நான் இடற
லாயிருக்கிறாய்; கடவுளுக்குரியவை
களைச் சிந்தியாமல் மனுஷருக்குரியவைகளைச்
சிந்திக்கிறாய் என்றார்.
அப்பொழுது இயேசு தம் சீஷரைப் 24
பார்த்து: ஒருவன் எனக்குப் பின்னே வர
விரும்பினால், அவன் தன்னைத்தான்
வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்
கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் 25
ஜீவனை[2] இரட்சிக்க விரும்புகிறவன் அதை
இழந்து போவான்; என்னிமித்தமாகத் தன்
ஜீவனை இழந்துபோகிறவனோ அதைக் கண்
டடைவான். ஒருவன் உலகம் முழுவதை 26
யும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்
ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு

[1] கற்பாறை என்று பொருள்படும். [2] கிரேக்க பதம் ஜீவனென்றும் ஆத்துமாவென்றும் பொருள்படும்.

லாபமென்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு
27 ஈடாக எதைக் கொடுப்பான்? மனுஷகுமா
ரன் தம்முடைய பிதாவின் மகிமையில் தம்
தூதரோடு வரப்போகிறார்; அப்பொழுது
அவனவன் செய்கைக்குத்தக்கபடி அவனவ
28 னுக்குப் பிரதிபலனளிப்பார். இங்கே நிற்கிற
வர்களில் சிலர் மனுஷகுமாரன் தமது ராஜ்
யத்தில் வருவதைக் காணுமுன் மரணத்தை
ருசிபார்ப்பதில்லை என்று மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

17 ஆறுநாளுக்குப்பின்பு இயேசு பேதுரு
வையும் யாக்கோபையும் அவன் சகோ
தரன் யோவானையும் கூட்டிக்கொண்டு,
தனியே ஓர் உயர்ந்த மலையின்மேல் போய்,
2 அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்;
அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்
தது, அவர் வஸ்திரங்கள வெளிச்சத்தைப்
3 போல வெண்மையாயின. மோசேயும்
எலியாவும் அவரோடு பேசுகிறவர்களாகச்
4 சீஷருக்குத் தோன்றினார்கள். அப்பொழுது
பேதுரு இயேசுவினிடம்: ஆண்டவரே,
நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்
குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒன்றும்,
மோசேக்கு ஒன்றும், எலியாவுக்கு ஒன்று
மாக, மூன்று கூடாரங்களைப் போடுவேன்
5 என்றான். அவன் பேசுகையில், ஒளியுள்ள
ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது.
இவர் என் நேசகுமாரன், இவரில் பிரியமா
யிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள்
என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம்
6 உண்டாயிற்று. சீஷர் அதைக் கேட்டு,
முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்
7 தார்கள். அப்பொழுது இயேசு வந்து அவர்
களைத் தொட்டு: எழுந்திருங்கள், பயப்படா
8 திருங்கள் என்றார். அவர்கள் தங்கள் கண்
களை ஏறெடுத்துப் பார்க்கவே, இயேசு ஒரு
வரைத் தவிர வேறொருவரையும் காண
வில்லை.
9 அவர்கள் மலையிலிருந்து இறங்குகிற
போது, இயேசு அவர்களிடம்: மனுஷகுமா
ரன் மரித்தோரிலிருந்து எழுப்பப்படும்
வரைக்கும் இந்தத் தரிசனத்தை ஒருவருக்
கும் சொல்லவேண்டாம் என்று கட்டளை
10 யிட்டார். அப்பொழுது சீஷர் அவரை
நோக்கி: எலியா முந்தி வரவேண்டுமென்று
வேதபாரகர் சொல்லுகிறார்களே, அதெப்
11 படியென்று கேட்க, | அவர்: எலியா வந்து
எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்
12 தான். ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று
உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறி
யாமல், தங்கள் இஷ்டப்படியே அவனுக்
குச் செய்தார்கள்; மனுஷகுமாரனும் அவர்
களால் இவ்விதமாய்ப் பாடுபடப்போகிறார்
என்றார். அவர் யோவான் ஸ்நானகனைக்குறித் 13
துத் தங்களிடம் பேசினார் என்று சீஷர்கள்
அப்பொழுது அறிந்துகொண்டார்கள்.
அவர்கள் ஜனங்களிடத்தில் வந்தபோது, 14
ஒருவன் அவரிடம் வந்து அவர்முன் முழங்
கால்படியிட்டு: ஐயனே, என் மகனுக்கு 15
இரங்கும், அவன் சந்திரரோகியாய்க்
கொடிய வேதனைப்படுகிறான்; அடிக்கடி
தீயிலும் அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான்.
அவனை உம்முடைய சீஷரிடத்தில் 16
கொண்டுவந்தேன்; அவனைச் சொஸ்தமாக்க
அவர்களால் முடியாமற்போயிற்று என்
றான். இயேசுவோ அதைக் கேட்டு: விசு 17
வாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியே,
எதுவரைக்கும் நான் உங்களோடிருப்
பேன்? எதுவரைக்கும் உங்களிடத்தில்
பொறுமையாயிருப்பேன்? அவனை இங்கே
என்னிடம் கொண்டுவாருங்கள் என்றார்.
இயேசு பேயை அதட்டவே, அது அவனை 18
விட்டு வெளியேறினது; அந்நேரமே அந்த
இளைஞன் சொஸ்தமானான். அப்பொழுது 19
சீஷர் இயேசுவினிடம் தனியே வந்து:
அதைத் துரத்திவிட ஏன் எங்களால் முடி
யாமற்போயிற்று என்று கேட்க, | அவர்: 20,
உங்கள் விசுவாசக் குறைவினாலேதான்; 21
கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்
கிருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து:
இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று
சொல்ல, அது அப்புறம் போம்; உங்களால்
முடியாத காரியம் ஒன்றுமிராதென்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்
என்றார்.
அவர்கள் கலிலேயாவிலே கூடிவருகை 22
யில், இயேசு அவர்களிடம்: மனுஷகுமா
ரன் மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்
படுவார். அவர்கள் அவரைக் கொலைசெய் 23
வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்
தெழுந்திருப்பார் என்றார். அவர்கள் மிகுந்த
துக்கமடைந்தார்கள்.
அவர்கள் கப்பர்நகூமுக்கு வந்தபோது, 24
வரிப்பணம்[1] வாங்குகிறவர்கள் பேதுருவி
னிடம் வந்து: உங்கள் போதகர் வரிப்
பணம் செலுத்துகிறதில்லையோ என்று கேட்
டார்கள்; | செலுத்துகிறார் என்றான். அவன் 25
வீட்டிற்குள் வந்தபோது, அவன் பேசு
கிறதற்கு முன்னமே இயேசு அவனிடம்:

[1] வரிப்பணம்—ஆளுக்கு அரை சேக்கல், சமார் ஒரு ரூபாய்.

சீமோனே, உனக்கு எப்படித் தோன்று
கிறது? பூமியின் ராஜாக்கள் தீர்வையையும்
வரியையும் யாரிடம் வாங்குகிறார்கள்,
தங்கள் பிள்ளைகளிடமோ அந்நியரிடமோ
26 என்று கேட்டார். அதற்குப் பேதுரு: அந்
நியரிடமே என்று சொல்ல, இயேசு: அப்
படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்த
27 வேண்டுவதில்லை. ஆகிலும், நாம் அவர்க
ளுக்கு இடறலாயிராதபடி, நீ கடலுக்குப்
போய்த் தூண்டில்போட்டு, முதலாவது படு
கிற மீனைப் பிடித்து, அதன் வாயைத் திறக்
கவே ஒரு வெள்ளி நாணயத்தைக் காண்
பாய்; அதை எடுத்து, எனக்காகவும் உனக்
காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார்.

18 அவ்வேளையிலே சீஷர் இயேசுவினிடம்
வந்து: பரலோக ராஜ்யத்தில் எவன் பெரியவ
2 னென்று கேட்டார்கள். அவர் ஒரு பிள்ளை
யைத் தம்மிடம் அழைத்து, அதை அவர்கள்
3 நடுவே நிறுத்தி: நீங்கள் மனந்திரும்பிப்
பிள்ளைகளைப்போலானாலொழிய, பரலோக
ராஜ்யத்தில் பிரவேசிப்பதேயில்லை என்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
4 ஆகையால், இந்தப் பிள்ளையைப்போலத்
தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே
5 பரலோக ராஜ்யத்தில் பெரியவன். இப்படிப்
பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினி
மித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை
6 ஏற்றுக்கொள்ளுகிறான். என்பேரில் நம்
பிக்கையாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒரு
வன் இடறிவிழக் காரணமாயிருக்கிறவன்
எவனோ அவன் கழுத்தில் பெரிய ஏந்திரக்
கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே
அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நல
7 மாம். இடறச்செய்யும் காரணங்களினி
மித்தம், ஐயோ, உலகத்துக்குக் கேடுவரும்;
அக்காரணங்கள் வராமற்போகாது, என்றா
லும் எந்த மனுஷனால் அவைகள் வருகின்ற
னவோ, ஐயோ, அவனுக்குக் கேடுவரும்.
8 உன் கையாவது உன் காலாவது நீ இடறி
விழ ஏதுவாயிருந்தால், அதைத் தறித்து
எறிந்துபோடு; நீ இரண்டு கையுடைய
வனாய், அல்லது இரண்டு காலுடையவனாய்
நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப்
பார்க்கிலும், ஊனனாய் அல்லது சப்பாணி
யாய் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது
9 உனக்கு நலம். உன் கண் நீ இடறிவிழ
ஏதுவாயிருந்தால், அதைப் பிடுங்கி எறிந்து
போடு; இரண்டு கண்ணுடையவனாய் எரி
நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும்
ஒற்றைக் கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவே
10, சிப்பது உனக்கு நலம். இந்தச் சிறியரில்
ஒருவனை அற்பமாய் எண்ணாதபடி 11
பாருங்கள்; பரலோகத்தில் அவர்களுக்குரிய
தூதர்கள் பரலோகத்திலிருக்கிற என் பிதா
வின் சமுகத்தை எப்பொழுதும் தரிசித்துக்
கொண்டிருக்கிறார்கள் என்று உங்களுக்குச்
சொல்லுகிறேன். உங்களுக்கு எப்படித் 12
தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு நூறு
ஆடுகளிருக்க, அவைகளில் ஒன்று தப்பிப்
போனால், அவன் மற்றத் தொண்ணூற்றொன்
பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப் போய்,
தப்பிப்போனதைத் தேடாமலிருப்பானோ?
அவன் அதைக் கண்டுபிடித்தால், தப்பிப் 13
போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக்
குறித்துச் சந்தோஷப்படுகிறதைப்பார்க்கி
லும், அதைக்குறித்து அதிகமாய்ச் சந்தோ
ஷப்படுவான் என்று மெய்யாகவே உங்க
ளுக்குச் சொல்லுகிறேன். அதுபோலவே, 14
இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் அழிந்துபோ
வது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா
வின் சித்தமல்ல.

உன் சகோதரன் குற்றஞ்செய்தால், அவ 15
னிடம் போய், நீயும் அவனும் தனித்திருக்
கையில், அவன் குற்றத்தை அவனுக்கு
உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்
தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்
கொண்டாய். அவன் செவிகொடாமற் 16
போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய
வாக்கினாலே காரியமெல்லாம் நிலைவரப்படும்
படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்
டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் 17
செவிகொடாமற்போனால், அதைச் சபைக்
குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவி
கொடாதிருப்பானானால், அவன் உனக்குப்
புறஜாதியான்போலவும் ஆயக்காரன்போலவு
மிருப்பானாக. பூலோகத்திலே நீங்கள் எவை 18
களைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்
திலும் கட்டப்பட்டனவாம்; பூலோகத்திலே
நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ
அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்
பட்டனவாம் என்று மெய்யாகவே உங்க
ளுக்குச் சொல்லுகிறேன். அல்லாமலும், 19
உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்
கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக்
குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்
தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவி
னால் அது அவர்களுக்கு அருளப்படும்
என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு
கிறேன். இரண்டுபேராவது மூன்றுபேரா 20
வது என் நாமத்திலே எங்கே கூடியிருக்
கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில்
இருக்கிறேன் என்றார்.

அப்பொழுது பேதுரு அவரிடத்தில் 21

வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு
விரோதமாய்க் குற்றஞ்செய்துவந்தால், நான்
எத்தனைதரம் அவனுக்கு மன்னிக்கவேண்
டும்? ஏழு தரமட்டுமோ என்று கேட்க, |
22 இயேசு: ஏழுதரம் மாத்திரமல்ல, ஏழெழுபது
தரமட்டும் என்று உனக்குச் சொல்லு
23 கிறேன். இதினிமித்தம் பரலோக ராஜ்யம்
தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்க
வேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பா
24 கும்; அவன் கணக்குப்பார்க்கத்தொடங்கின
போது, [1]பதினாயிரம் தாலந்து கடன்பட்ட
வன் ஒருவனை அவன் முன் கொண்டுவந்
25 தார்கள். கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்
வாகம் இல்லாதபடியால், அரசன் அவனை
யும் அவன் மனைவி மக்களையும் அவனுக்
குண்டான யாவற்றையும் விற்றுக் கடனைத்
26 தீர்க்கும்படி கட்டளையிட்டான். அப்
பொழுது அந்த ஊழியக்காரன் பணிந்து
வணங்கி: என்மேல் பொறுமையாயிரும்,
எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத்
27 தீர்ப்பேன் என்றான். அந்த ஊழியக்கார
னுடைய எஜமான் மனமிரங்கி, அவனை விடு
தலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்
28 னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த
ஊழியக்காரன் வெளியே போய், தன்
னிடத்தில் [2]நூறு திநாரியம் கடன்பட்டி
ருந்த உடன்வேலைக்காரரில் ஒருவனைக்
கண்டு, அவனைப் பிடித்துத் தொண்டையை
நெரித்து: நீ பட்ட கடனைத் தீர்த்துவிடு
29 என்று சொல்ல, அவன் உடன்வேலைக்
காரன் அவன் காலில் விழுந்து: என்மேல்
பொறுமையாயிரும், உமக்குக் கொடுத்துத்
தீர்ப்பேன் என்று அவனை வேண்டிக்கொண்
30 டான். அவனோ சம்மதியாமல் போய்,
அவன் பட்ட கடனைக் கொடுத்துத்தீர்க்கு
மளவும் அவனைச் சிறையில் வைத்தான்.
31 அவன் உடன்வேலைக்காரர் நடந்ததைக்
கண்டு மிகவும் துக்கப்பட்டுத் தங்கள் எஜ
மானிடம் வந்து, நடந்ததையெல்லாம் அறி
32 வித்தார்கள். அப்பொழுது அவனுடைய
எஜமான் அவனைத் தன்னிடம் அழைத்து:
பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை
வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன்
முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்
33 டேன். நான் உனக்கு இரங்கினதுபோல
நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்க
34 வேண்டாமோ என்று சொல்லி, கோப
மடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம்
தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபா
திக்கிறவர்களிடம் அவனை ஒப்புக்கொடுத்
தான். உங்களில் ஒவ்வொருவனும் தன் தன் 35
சகோதரனுக்கு மனப்பூர்வமாய் மன்னியா
மற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு
இப்படியே செய்வார் என்றார்.

இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி 19
முடித்தபின்பு, கலிலேயாவைவிட்டு, யோர்
தானைக் கடந்து, யூதேயாவின் எல்லைகளுக்கு
வந்தார். திரளான ஜனங்கள் அவருக்குப் 2
பின் சென்றார்கள்; அவ்விடத்தில் அவர்
அவர்களைக் குணமாக்கினார்.

அப்பொழுது பரிசேயர் அவரிடம் வந்து: 3
ஒருவன் தன் மனைவியை எக்காரணத்தினா
லாகிலும் தள்ளிவிடுவது நியாயமா என்று
சோதித்துக் கேட்க, | அவர்: 4

ஆதியிலே சிருஷ்டி கர்த்தா
அவர்களை ஆணும் பெண்ணுமாகப்
படைத்தார்

என்பதையும்,

இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனை 5
யும் தாயையும்விட்டுத்
தன் மனைவியோடே இசைந்திருப்பான்,
இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்

என்று அவர் சொன்னதையும் நீங்கள்
வாசிக்கவில்லையா? ஆகவே, இனி அவர்கள் 6
இருவரல்ல, ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்;
இப்படியிருக்க, கடவுள் இணைத்ததை மனு
ஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்.
அதற்கு அவர்கள்: அப்படியானால், தள்ளு 7
தற்சீட்டைக் கொடுத்து அவளைத் தள்ளி
விடலாமென்று மோசே ஏன் கட்டளை
யிட்டார் என்று கேட்க, | அவர்: உங்கள் 8
மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள்
இருதயக் கடினத்தினிமித்தம் மோசே உங்க
ளுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதல் அப்
படியிருந்ததில்லை. ஆதலால், உங்களுக்குச் 9
சொல்லுகிறேன்: எவனாகிலும் விபசாரத்தி
னிமித்தமேயன்றி, தன் மனைவியைத் தள்ளி
விட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணி
னால், அவன் விபசாரஞ்செய்கிறான் என்றார்.
அவருடைய சீஷர் அவரிடம்: கணவன் 10
மனைவி காரியம் இப்படியிருந்தால், விவா
கம் பண்ணுகிறது நல்லதல்லவென்று
சொல்ல, | அவர்: வரம்பெற்றவர்களே தவிர 11
மற்ற எவரும் இந்த வசனத்தை அங்கீகரிப்ப
தில்லை. தாயின் வயிற்றிலிருந்து அண்ண 12
கராய்ப் பிறந்தவர்களும் உண்டு; மனுஷரால்
அண்ணகராக்கப்பட்டவர்களும் உண்டு;
பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்
ணகராக்கிக்கொண்டவர்களும் உண்டு.

1 சுமார் மூன்றேகால்கோடி ரூபாய். 2 சுமார் ஐம்பது ரூபாய்.

இதை அங்கீகரிக்க வல்லவன் அங்கீகரிக்
கக்கடவன் என்றார்.
13 அப்பொழுது, சிறுபிள்ளைகளின்மேல்
அவர் கைகளை வைத்து ஜெபம்பண்ணும்படி
அவர்களை அவரிடம் கொண்டுவந்தார்கள்;
கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டி
14 னார்கள். இயேசுவோ: சிறுபிள்ளைகள் என்
னிடத்தில் வருவதற்கு இடங்கொடுங்கள்;
அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பர
லோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடை
15 யது என்று சொல்லி, அவர்கள்மேல் கைகளை
வைத்து, பின்பு அவ்விடம்விட்டுப் புறப்
பட்டுப் போனார்.
16 அப்பொழுது ஒருவன் அவரிடம் வந்து:
போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு
எந்த நன்மையை நான் செய்யவேண்டும்
17 என்று கேட்க, | அவர்: நன்மையைப்
பற்றி நீ என்னிடம் கேட்பானேன்? நல்லவர்
என்பவர் ஒருவரே; நீ ஜீவனில் பிரவேசிக்க
விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள்
18 என்றார். எவை என்று அவன் கேட்க,
இயேசு: கொலைசெய்யவேண்டாம், விபசா
ரஞ் செய்யவேண்டாம், களவு செய்யவேண்
டாம், பொய்ச்சாட்சி சொல்லவேண்டாம்,
19 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்
பண்ணவேண்டும்; உன்னிடத்தில் நீ அன்பு
கூருவதுபோல அயலானிடத்திலும் அன்பு
கூரவேண்டும் என்பவைகளே என்றார்.
20 அந்த வாலிபன் அவரிடம்: இவைகளை
யெல்லாம் கைக்கொண்டிருக்கிறேன்; இன்
னும் என்னிடத்தில் குறைவு என்ன என்
21 றான். அதற்கு இயேசு: நீ பூரண சற்குண
னாக விரும்பினால், போய் உனக்குள்ள
வற்றை விற்றுத் தரித்திரருக்குக் கொடு;
அப்பொழுது பரலோகத்தில் உனக்கு ஐசு
வரியம் இருக்கும்; பின்பு வந்து என்னைப்
22 பின்பற்று என்றார். அந்த வாலிபன்
மிகுந்த ஆஸ்தியுள்ளவனாய் இருந்தபடியால்,
இந்த வார்த்தையைக் கேட்டபொழுது
துக்கத்தோடு போய்விட்டான்.
23 அப்பொழுது இயேசு தம்முடைய சீஷ
ரிடம்: ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில்
பிரவேசிப்பது அரிதென்று மெய்யாகவே
24 உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும்
ஐசுவரியவான் கடவுளுடைய ராஜ்யத்தில்
பிரவேசிப்பதைப்பார்க்கிலும் ஒட்டகம்
ஊசியின் காதில் நுழைவது எளிதென்று
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
25 சீஷர் அதைக் கேட்டு மிகவும் பிரமிப்
படைந்து: அப்படியானால், யார் இரட்சிக்
கப்படக்கூடும் என்று கேட்க, இயேசு 26
அவர்களை உற்றுப்பார்த்து: மனுஷரால்
இது ஆகாததுதான்; கடவுளாலே எல்லா
மாகும் என்றார். அப்பொழுது பேதுரு 27
அவரிடம்: இதோ, நாங்கள் எல்லாவற்றை
யும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே;
எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று
கேட்க, | இயேசு அவர்களிடம்: யாவும் 28
புதிதாக்கப்படும் காலத்தில் மனுஷகுமாரன்
தமது மகிமையுள்ள சிங்காசனத்தில் வீற்
றிருக்கும்போது, என்னைப் பின்பற்றின நீங்க
ளும் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்
களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னி
ரண்டு சிங்காசனங்களில் வீற்றிருப்பீர்கள்
என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு
கிறேன். என் நாமத்தினிமித்தம் வீட்டை 29
யாவது, சகோதரரையாவது, சகோதரிகளை
யாவது, தகப்பனையாவது, தாயையாவது,
பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்ட
வன் எவனோ, அவன் பல மடங்கு பெற்று,
நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளு
வான்; ஆகிலும், முந்தினோர் அநேகர் 30
பிந்தினோரும், பிந்தினோர் அநேகர் முந்தினோ
ரும் ஆவார்கள்.

பரலோக ராஜ்யம் திராட்சத்தோட்டத் 20
தையுடைய வீட்டெஜமான் ஒருவனுக்கு
ஒப்பாகும்; அவன் தன் தோட்டத்துக்கு
வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே
போனான். வேலையாட்களுடன் நாளொன் 2
றுக்கு ஒரு [1]திநாரியம் கூலி பேசி அவர்களைத்
தன் திராட்சத்தோட்டத்துக்கு அனுப்பி
னான். மூன்றாம் மணிவேளையிலும் அவன் 3
போய், கடைத்தெருவில் சும்மா நிற்கிற
வேறு சிலரைக் கண்டு: நீங்களும் திராட்சத் 4
தோட்டத்துக்குப் போங்கள், நியாயமான
படி உங்களுக்குக் கூலி கொடுப்பேன் என்
றான்; அவர்களும் போனார்கள். மறுபடியும் 5
ஆறாம் ஒன்பதாம் மணிவேளைகளிலும் அவன்
போய் அப்படியே செய்தான். பதினோராம் 6
மணிவேளையிலும் அவன் போய், சும்மா நிற்
கிற வேறு சிலரைக் கண்டு: நீங்கள் பகல்
முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன
என்று கேட்க, | அவர்கள்: எவரும் எங் 7
களை வேலைக்கு அமர்த்தவில்லை என்றார்கள்.
அவன் அவர்களிடம்: நீங்களும் திராட்சத்
தோட்டத்துக்குப் போங்கள் என்றான்.
சாயங்காலமானபோது, திராட்சத்தோட் 8
டத்து எஜமான் தன் காரியக்காரனிடம்: நீ
வேலையாட்களை அழைத்து, பிந்தினவர்கள்

[1] திநாரியம் ஏறக்குறைய அரை ரூபாய்க்குச் சமம்.

தொடங்கி முந்தி வந்தவர்கள் வரைக்கும்
9 கூலிகொடு என்றான். அப்படியே பதினோ
ராம் மணிவேளையில் அமர்த்தப்பட்டவர்கள்
வந்து ஆளுக்கு ஒவ்வொரு திநாரியம் வாங்கி
10 னார்கள். முந்தி அமர்த்தப்பட்டவர்கள்
வந்தபோது, தங்களுக்கு அதிகம் கிடைக்
கும் என்று எண்ணினார்கள்; அவர்களும்
ஆளுக்கு ஒவ்வொரு திநாரியமே வாங்கி
11 னார்கள். வாங்கவே, எஜமானுக்கு விரோ
12 தமாய் முறுமுறுத்து: கடைசியில் வந்த
இவர்கள் ஒரு மணிநேரம் வேலைசெய்
தார்கள், நாங்களோ பகலின் கஷ்டத்தை
யும் வெயிலின் உக்கிரத்தையும் சகித்தோம்;
ஆயினும் அவர்களையும் எங்களுக்குச் சம
13 மாக்கினீரே என்றார்கள். அவனோ அவர்
களில் ஒருவனிடம்: சிநேகிதனே, நான்
உனக்கு அநியாயஞ்செய்யவில்லை; நீ என்
னிடம் ஒரு திநாரியத்துக்குச் சம்மதிக்க
14 வில்லையோ? உன்னுடையதை நீ வாங்கிக்
கொண்டு போ, உனக்குக் கொடுத்ததுபோல்
கடைசியில் வந்த இவனுக்கும் கொடுப்பது
15 என் இஷ்டம்; என்னுடையதை என்
இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகார
மில்லையா? நான் தயாளனாயிருப்பதினால், நீ
16 வன்கண்ணனானாயோ என்றான். இவ்வித
மாக, பிந்தினோர் முந்தினோரும், முந்தினோர்
பிந்தினோரும் ஆவார்கள் என்றார்.
17 இயேசு எருசலேமுக்குப் போகிறபோது
பன்னிருவரையும் தனியே அழைத்து, வழி
18 யிலே அவர்களிடம்: இதோ, எருசலேமுக்
குப் போகிறோம்; மனுஷகுமாரன் பிரதான
ஆசாரியரிடத்திலும் வேதபாரகரிடத்திலும்
ஒப்புக்கொடுக்கப்படுவார்; அவர்கள்
அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத்
19 தீர்த்து, | அவரைப் பரிகாசஞ்செய்யவும்,
வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறை
யவும், புறஜாதியாரிடம் ஒப்புக்கொடுப்
பார்கள். அவரோ மூன்றாம் நாளிலே எழுப்
பப்படுவார் என்றார்.
20 அப்பொழுது செபெதேயுவின் குமார
ருடைய தாய் தன் குமாரரோடுகூட அவ
ரைப் பணிந்து ஒரு விண்ணப்பஞ்செய்து
21 கொள்ள அவரிடம் வந்தாள். அவர் அவ
ளிடம்: உனக்கு என்ன வேண்டும் என்று
கேட்க, அவள்: உம்முடைய ராஜ்யத்திலே
என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒரு
வன் உமது வலதுபாரிசத்திலும், ஒருவன்
உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்
கும்படி அருள் செய்யவேண்டும் என்றாள்.
22 அதற்கு இயேசு: நீங்கள் கேட்டுக்கொள்ளு
கிறது இன்னதென்று உங்களுக்குத் தெரிய
வில்லை; நான் குடிக்கப்போகிற பாத்திரத்தில்
குடிக்க உங்களாலாகுமா என்று கேட்க,
அவர்கள்: ஆகும் என்றார்கள். அப்போது 23
அவர்: என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்
பீர்கள்; ஆயினும் என் வலது பாரிசத்திலும்
என் இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்
கும்படி அருளுவது என் காரியமல்ல; என்
பிதாவினால் எவர்களுக்கு அது ஆயத்தம்
பண்ணப்பட்டிருக்கிறதோ, அவர்களுக்கே
அது உரியது என்றார். மற்றப் பத்துப் 24
பேரும் அதைக் கேட்டு அந்த இரண்டு
சகோதரர் பேரிலும் கோபங்கொண்
டார்கள். அப்பொழுது இயேசு அவர்களைத் 25
தம்மிடம் அழைத்து: புறஜாதியாரை ஆளு
கிறவர்கள் அவர்கள்மேல் துரைத்தனம்
பண்ணுகிறார்கள் என்றும், பிரதானிகள்
அவர்கள்மேல் சர்வாதிகாரஞ் செலுத்து
கிறார்கள் என்றும் உங்களுக்குத் தெரியும்.
உங்களுக்குள் அப்படி அல்ல; உங்களில் 26
பிரதானியாயிருக்க விரும்புகிறவன் எவனும்
உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருப்
பான்; உங்களில் தலைவனாயிருக்க விரும்புகிற 27
எவனும் உங்களுக்கு அடிமையாயிருப்
பான். அப்படியே மனுஷகுமாரனும் ஊழி 28
யங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்
செய்யவும் அநேகரை மீட்கும்பொருளாகத்
தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்
என்றார்.
அவர்கள் எரிகோவைவிட்டுப் போகை 29
யில் பெரிய ஜனக்கூட்டம் அவருக்குப்
பின் சென்றது. வழியோரம் உட்கார்ந் 30
திருந்த இரண்டு குருடர், இயேசு அவ்
வழியே வருகிறார் என்று கேள்விப்பட்டு:
ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்க
ளுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.
அவர்கள் பேசாதிருக்கும்படி ஜனங்கள் 31
அவர்களை அதட்டினார்கள். அவர்களோ:
ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்க
ளுக்கு இரங்கும் என்று இன்னும் அதிக
மாய்க் கூப்பிட்டார்கள். இயேசு நின்று 32
அவர்களை அழைத்து: நான் உங்களுக்கு
என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறீர்கள்
என்று கேட்க, | அவர்கள்: ஆண்டவரே, 33
எங்கள் கண்களைத் திறக்கவேண்டும்
என்றார்கள். இயேசு மனமுருகி அவர்கள் 34
கண்களைத் தொட்டார்; உடனே அவர்கள்
பார்வையடைந்து அவருக்குப் பின்சென்
றார்கள்.

அவர்கள் எருசலேமைச் சமீபித்து **21**
ஒலிவமலையில் பெத்பகேயுக்கு வந்தபோது,
இயேசு சீஷரில் இரண்டுபேரை அனுப்பி:
உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக் 2

குப் போங்கள்; போனவுடனே, அங்கே
ஒரு கழுதையையும் அதனோடே குட்டியை
யும் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அவிழ்த்து
3 என்னிடம் கொண்டுவாருங்கள். ஒருவன்
உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால்:
இவைகள் ஆண்டவருக்குத் தேவையென்று
சொல்லுங்கள்; உடனே அவைகளை அனுப்பி
விடுவார் என்று அவர்களுக்குச் சொன்னார்.
4 இதோ, உன் ராஜா சாந்தகுணமுள்ளவ
ராய்,
கழுதையின்மேல், கழுதைக்குட்டியாகிய
மறியின்மேல், ஏறிக்கொண்டு
உன்னிடம் வருகிறாரென்று
சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்
5 என்று | தீர்க்கதரிசியின் மூலமாய் உரைக்
கப்பட்டது நிறைவேற இது நடந்தது.
6 சீஷர் போய், இயேசு தங்களுக்குக் கட்டளை
7 யிட்டபடியே செய்து, கழுதையையும்
குட்டியையும் கொண்டுவந்து, அவைகள்
மேல் தங்கள் வஸ்திரங்களைப் போடவே,
அவர் அவைகளின்மேல் உட்கார்ந்தார்.
8 திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை
வழியிலே விரித்தார்கள்; மற்றவர்கள் மரக்
கிளைகளைத்தறித்து வழியிலே பரப்பினார்கள்.
9 முன் நடப்பாரும் பின் நடப்பாருமாகிய
ஜனங்கள்:
தாவீதின் குமாரனுக்கு [1]ஓசன்னா!
கர்த்தரின் நாமத்தில் வருகிறவர் ஆசீர்
வதிக்கப்பட்டவர்,
உன்னதத்திலே ஓசன்னா
என்று சொல்லி ஆரவாரஞ்செய்தார்கள்.
10 அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கவே,
நகரம் முழுதும் இவர் யார் என்று சொல்
11 லிக் கலங்கினது. அதற்கு ஜனங்கள்:
இவர் கலிலேயா நாட்டு நாசரேத்தூர்
இயேசுவென்னும் தீர்க்கதரிசி என்றார்கள்.
12 இயேசு தேவாலயத்திற்குள் பிரவேசித்து,
ஆலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிற
வர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி,
காசுக்காரருடைய மேசைகளையும் புறா விற்
கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்து:
13 என்னுடைய வீடு ஜெபவீடு எனப்படும்
என்று எழுதியிருக்கிறது, நீங்களோ
அதைக் கள்ளர் குகையாக்குகிறீர்களே
14 என்றார். அப்பொழுது குருடரும் சப்பாணி
களும் தேவாலயத்திலே அவரிடம் வந்
15 தார்கள்; அவர்களைக் குணமாக்கினார். அவர்
செய்த அதிசயங்களையும், தாவீதின் குமார
னுக்கு ஓசன்னா! என்று தேவாலயத்திலே
ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும் பிரதான
ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு கோபப்
பட்டு, | அவரை நோக்கி: இவர்கள் 16
சொல்லுகிறது உமக்குக் கேட்கிறதா என்
றார்கள். அதற்கு இயேசு: ஆம், கேட்கிறது;
பாலகர் வாயினாலும் குழந்தைகள் வாயினா
லும் துதியை நிறைவாக்கிக்கொண்டீர் என்
பதை நீங்கள் ஒருகாலும் வாசிக்கவில்லையா
என்று சொல்லி, அவர்களைவிட்டு நகரத் 17
திற்கு வெளியே பெத்தானியாவுக்குப் போய்
அங்கே இராத்தங்கினார்.
காலையில் அவர் நகரத்துக்குத் திரும்பி 18
வருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று.
அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத் 19
தைக் கண்டு, அதனண்டைபோய், அதிலே
இலைகளையேயன்றி வேறொன்றையும் காணா
மல்: இனி ஒருகாலும் உன்னிடத்தில்
கனி உண்டாகாதிருப்பதாக என்றார்;
உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று.
சீஷர் இதைக் கண்டு பிரமிப்படைந்து: 20
இந்த அத்திமரம் இத்தனை சீக்கிரமாய்ப்
பட்டுப்போனதெப்படி என்று சொல்ல, |
இயேசு: நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாச 21
முள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்
திற்கு நேரிட்டதை நீங்கள் செய்வதுமல்லா
மல், இந்த மலையைப்பார்த்து: நீ பெயர்ந்து
சமுத்திரத்திலே தள்ளுண்டுபோவென்று
சொன்னாலும் அப்படி ஆகும் என்று மெய்
யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.
மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் 22
ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ
அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.
அவர் தேவாலயத்திற்குட் சென்று உப 23
தேசித்துக் கொண்டிருக்கையில், பிரதான
ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அவரிடம்
வந்து: நீர் இவைகளை எந்த அதிகாரத்தினால்
செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக்
கொடுத்தவர் யார் என்று கேட்க, | இயேசு: 24
நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக்
கேட்கிறேன், அதை எனக்குச் சொல்வீர்
களானால், நானும் இன்ன அதிகாரத்தினால்
இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்
குச் சொல்லுவேன். யோவானுடைய ஸ்நா 25
னம் எங்கிருந்து வந்தது? பரலோகத்தி
லிருந்தோ மனுஷரிடத்திலிருந்தோ என்று
கேட்டார். அவர்களோ: பரலோகத்திலிருந்து
என்று சொல்லுவோமானால், பின் ஏன்
அவனை நம்பவில்லை என்று நம்மைக் கேட்
பார்; மனுஷரிடத்திலிருந்து என்று சொல்லு 26
வோமானால், ஜனங்களுக்குப் பயப்படுகி
றோம், எல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசி

[1] இரட்சித்தருளும், கடாட்சித்தருளும் என்று பொருள்படும்.

யென்று எண்ணுகிறார்களே என்று தங்க
27 ளுக்குள்ளே ஆலோசித்து, இயேசுவினி
டம்: எங்களுக்குத் தெரியாது என்றார்கள்.
அப்பொழுது அவர்: இன்ன அதிகாரத்தினால்
இவைகளைச் செய்கிறேனென்று நானும்
28 உங்களுக்குச் சொல்லேன். உங்களுக்கு
எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷ
னுக்கு இரண்டு மக்கள் இருந்தார்கள்;
மூத்தவனிடத்தில் அவன் வந்து: மகனே, நீ
போய் இன்றைக்குத் திராட்சத்தோட்டத்
29 தில் வேலைசெய் என்றான். அதற்கு அவன்:
போகிறேன் ஐயா என்றான்; எனினும் போக
30 வில்லை. இரண்டாம் மகனிடத்திலும் அவன்
வந்து அப்படியே சொல்ல, அவன்: போக
மாட்டேன் என்று சொல்லியும், பின்பு மனஸ்
31 தாபப்பட்டுப் போனான். இவ்விருவரில்
எவன் தகப்பனுடைய சித்தப்படி செய்த
வன் என்று கேட்டார்; அதற்கு அவர்கள்:
பிந்தினவன்தான் என்றார்கள். அப்பொழுது
இயேசு அவர்களை நோக்கி: ஆயக்காரரும்
வேசிகளும் உங்களுக்குமுந்திக் கடவுள்
ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
32 ஏனென்றால், யோவான் நீதிமார்க்கமாய்
உங்களிடம் வந்திருந்தும் நீங்கள் அவனை
நம்பவில்லை, ஆயக்காரரும் வேசிகளுமோ
அவனை நம்பினார்கள்; அதை நீங்கள் கண்
டும் அவனை நம்பும்படி பின்பாகிலும் மனஸ்
தாபப்படவில்லையே.

33 இன்னும் ஒரு உவமையைக் கேளுங்கள்.
வீட்டெஜமானாகிய ஒரு மனுஷன் இருந்
தான். அவன் திராட்சத்தோட்டம் உண்
டாக்கி, அதைச்சுற்றி வேலியடைத்து, அதில்
ஆலையை நாட்டி, கோபுரத்தையும் கட்டி,
குடியானவர்களுக்கு அதைக் குத்தகையாக
விட்டுப் புறதேசத்துக்குப் போயிருந்தான்.
34 கனிகாலம் சமீபித்தபோது, கனிகளை வாங்கி
வரும்படி தன் ஊழியக்காரரைக் குடியான
35 வர்களிடம் அனுப்பினான். அவர்களோ
அந்த ஊழியக்காரரைப் பிடித்து, ஒருவனை
அடித்தார்கள், ஒருவனைக் கொலைசெய்
36 தார்கள், ஒருவனைக் கல்லெறிந்தார்கள். பின்
னும் அவன் முந்தினவர்களிலும் அதிகமான
வேறே ஊழியக்காரரை அனுப்பினான்;
அவர்களையும் அப்படியே செய்தார்கள்.
37 கடைசியிலே அவன்: என் குமாரனை மதிப்
பார்கள் என்று சொல்லி, தன் குமாரனை
38 அவர்களிடத்தில் அனுப்பினான். குடியா
னவர்களோ குமாரனைக் கண்டபோது:
இவன் சுதந்தரவாளி, இவனைக் கொன்று
இவன் சுதந்தரத்தை எடுத்துக்கொள்வோம்
வாருங்கள் என்று ஒருவரோடொருவர்
சொல்லிக்கொண்டு, அவனைப் பிடித்துத் 39
திராட்சத் தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக்
கொலைசெய்தார்கள். அப்படியிருக்க, திராட் 40
சத்தோட்டத்து எஜமான் வரும்போது, குடி
யானவர்களை என்ன செய்வான் என்று
கேட்க, | அவர்கள்: அந்தக் கொடியரைக் 41
கொடுமையாய் அழித்துவிட்டு, ஏற்ற காலங்
களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கும்
வேறே குடியானவர்களிடம் தோட்டத்தை
விடுவான் என்றார்கள். இயேசு அவர்க 42
ளிடம்:

வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்
ளின கல்லே
கோடிக்குத் தலைக்கல்லாயிற்று;
அது கர்த்தராலே ஆயிற்று,
அது நமது கண்களுக்கு ஆச்சரியம்

என்று நீங்கள் வேதத்தில் ஒருகாலும்
வாசிக்கவில்லையா? ஆகையால், நான் உங் 43
களுக்குச் சொல்லுகிறேன், கேளுங்கள்:
கடவுள் ராஜ்யம் உங்களிடத்திலிருந்து
நீக்கப்பட்டு அதன் கனிகளைத் தரும் ஜனத்
திற்குக் கொடுக்கப்படும். இந்தக் கல்லின் 44
மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்;
இது எவன்மேல் விழுமோ அவனை இது நசுக்
கிப்போடும் என்றார். பிரதான ஆசாரியரும் 45
பரிசேயரும் அவருடைய உவமைகளைக்
கேட்டு, தங்களைக் குறித்துச் சொல்லுகிறார்
என்று அறிந்து, அவரைப் பிடிக்க வகை 46
தேடினார்கள்; ஆகிலும் ஜனங்கள் அவரைத்
தீர்க்கதரிசியென்று எண்ணினபடியினால்
அவர்களுக்குப் பயந்திருந்தார்கள்.

இவைகளுக்கிசைய இயேசு மறுபடி **22**
யும் அவர்களோடே உவமைகளாய்ப்
பேசிச் சொன்னது என்னவென்றால்:
பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியா 2
ணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாகும்.
அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு 3
வரச்சொல்லும்படி அவன் தன் வேலைக்
காரரை அனுப்பினான்; அவர்களோ வரமன
மில்லாதிருந்தார்கள். மறுபடியும் அவன் 4
வேறு வேலைக்காரரை அனுப்பி: நீங்கள்
போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்
பண்ணினேன், என் எருதுகளும் கொழுக்க
வைத்த ஜந்துக்களும் அடிக்கப்பட்டன,
எல்லாம் ஆயத்தமாயிற்று, கலியாணத்திற்கு
வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்
களுக்குச் சொல்லுங்களென்று சொன்னான்.
அவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒரு 5
வன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியா
பாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர் 6
களோ அவன் வேலைக்காரரைப் பிடித்து

அவமானப்படுத்திக் கொலைசெய்தார்கள்.
7 ராஜா கோபங்கொண்டு, தன் சேனைகளை
அனுப்பி, அந்தக்கொலைபாதகரை அழித்து,
8 அவர்கள் ஊரையும் சுட்டெரித்தான். அப்
பொழுது அவன் தன் வேலைக்காரரிடம்:
கலியாண விருந்து ஆயத்தமாயிற்று, அழைக்
கப்பட்டவர்களோ அதற்கு அபாத்திரராய்ப்
9 போனார்கள். ஆகையால், நீங்கள் வழிச்
சந்திகளிலே போய், காணும் யாவரையும்
கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு
10 வாருங்கள் என்றான். அந்த வேலைக்காரர்
வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்
லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்
கொண்டு வந்தார்கள். கலியாண சாலையில்
விருந்தாளிகள் நிறைந்தார்கள்.
11 விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா
உள்ளே வந்தபோது, கலியாண வஸ்திரம்
தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு:
12 சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவ
னாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்க,
13 பதில் சொல்ல அவனுக்கு வாயில்லை. அப்
பொழுது ராஜா பணிவிடைக்காரரிடம்: இவ
னைக் கையும் காலும் கட்டிக்கொண்டு
போய், புறம்பான இருளிலே போடுங்கள்,
அங்கே அழுகையும் பற்கடிப்புமாயிருக்கும்
14 என்றான். இப்படியாக, அழைக்கப்பட்ட
வர்கள் அநேகர், தெரிந்தெடுக்கப்பட்டவர்
களோ சிலர் என்றார்.
15 அப்பொழுது பரிசேயர் போய், பேச்
சிலே அவரை அகப்படுத்தும்படி யோசனை
16 பண்ணி, தங்கள் சீஷரை ஏரோதியரோடு
அவரிடம் அனுப்பினார்கள். அவர்கள்
வந்து: போதகரே, நீர் சத்தியமுள்ளவர்,
கடவுளுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப்
போதிக்கிறவர், நீர் முகதாட்சிணியம் இல்
லாதவர், எவனைக் குறித்தும் உமக்குக் கவை
17 யில்லை, இது எங்களுக்குத்தெரியும். ஆகவே,
உமக்கு எப்படித் தோன்றுகிறது? இராய
னுக்கு வரிசெலுத்துகிறது நியாயமோ, அல்
லவோ? அதை எங்களுக்குச் சொல்லும்
18 என்று கேட்டார்கள். இயேசு அவர்கள்
துர்க்குணத்தை அறிந்து: மாயக்காரரே,
19 நீங்கள் என்னைச் சோதிக்கிறதென்ன? வரிக்
காசை எனக்குக் காட்டுங்கள் என்றார்.
அவர்கள் ஒரு தினாரியத்தை அவரிடம்
20 கொண்டுவந்தார்கள். அப்பொழுது அவர்
அவர்களிடம்: இந்தச் சொரூபமும் மேலெ
ழுத்தும் யாருடையவை என்று கேட்க, |
21 இராயனுடையவை என்றார்கள். அதற்கு
அவர்: அப்படியானால், இராயனுடையதை
இராயனுக்கும், கடவுளுடையதைக் கடவு
22 ளுக்கும் செலுத்துங்கள் என்றார். அவர்கள்
அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவரை
விட்டுப் போய்விட்டார்கள்.
உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிக்கிற 23
சதுசேயர் அன்றையதினம் அவரிடம் வந்து:
போதகரே, ஒருவன் பிள்ளை இல்லாமல் 24
இறந்துபோனால், அவனுடைய சகோதரன்
அவன் மனைவியை விவாகம்பண்ணி, தன்
சகோதரனுக்குச் சந்தானம் உண்டாக்க
வேண்டும் என்று மோசே சொன்னாரே. எங் 25
களுக்குள்ளே சகோதரர் ஏழுபேர் இருந்
தார்கள்; மூத்தவன் விவாகஞ்செய்து,
மரித்து, சந்தானமில்லாததினால் தன்
மனைவியைத் தன் சகோதரனுக்கு விட்டுப்
போனான். அப்படியே இரண்டாம் மூன்றும் 26
சகோதரன்முதல் ஏழாம் சகோதரன் வரைக்
கும் செய்தார்கள். எல்லாருக்கும் பின்பு 27
அந்தப் பெண்ணும் இறந்துபோனாள்.
இப்படியிருக்க, உயிர்த்தெழுதலில் அவ் 28
வேழுபேரில் எவனுக்கு அவள் மனைவியா
வாள்? அவர்கள் எல்லாரும் அவளை விவா
கஞ்செய்திருந்தார்களே என்று கேட்க, |
இயேசு: நீங்கள் வேதாகமங்களையும் கடவு 29
ளுடைய வல்லமையையும் அறியாமல்
மோசம்போகிறீர்கள். உயிர்த்தெழுதலில் 30
கொள்வனையும் கொடுப்பனையுமில்லை;
அவர்கள் பரலோகத்திலே தூதரைப்போல்
இருப்பார்கள். மரித்தோர் உயிர்த்தெழு 31
தலைப்பற்றி: நான் ஆபிரகாமின் கடவுளும்,
ஈசாக்கின் கடவுளும், யாக்கோபின் கடவு
ளுமாயிருக்கிறேன் என்று கடவுள் உங்க
ளுக்கு உரைத்ததை நீங்கள் வாசிக்கவில்
லையா? அவர் மரித்தோரின் கடவுளல்ல, 32
ஜீவனுள்ளோரின் கடவுளே என்றார்.
ஜனங்கள் இதைக் கேட்கவே அவருடைய 33
போதகத்தைக்குறித்துப் பிரமித்தார்கள்.
அவர் சதுசேயரை வாயடைத்தார் என்று 34
பரிசேயர் கேள்விப்பட்டு, ஒன்றாய்க் கூடி
னார்கள். அவர்களில் நியாயசாஸ்திரி ஒரு 35
வன் அவரைச் சோதிக்கும்படி: போதகரே, 36
நியாயப்பிரமாணத்தில் எந்தக் கற்பனை பிர
தானமானதென்று கேட்க, | அவர்: உன் 37
கடவுளாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இரு
தயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும்
உன் முழு மனத்தோடும் அன்புகூரவேண்
டும். இதுவே பிரதானமும் முதன்மையு 38
மான கற்பனை. இதற்குச் சமானமாயிருக்கிற 39
இரண்டாம் கற்பனையோ, உன்னிடத்தில் நீ
அன்புகூருவதுபோல உன் அயலானிடத்
திலும் அன்புகூரவேண்டும் என்பதே. இவ் 40
விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமா
ணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும்
அடங்கியிருக்கின்றன என்றார்.

41 பரிசேயர் கூடியிருக்கையில், இயேசு
42 அவர்களைப் பார்த்து: கிறிஸ்துவைக் குறித்து
நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாரு
டைய குமாரன் என்று கேட்க, அவர் தாவீ
43 தின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்:
அப்படியானால், தாவீது ஆவியினாலே
அவரை ஆண்டவர் என்று சொல்லுகிறது
எப்படி?

44 கர்த்தர் என் ஆண்டவரிடம்:
நான் உம்முடைய சத்துருக்களை
உமது பாதத்தின்கீழ்ப் போடுமட்டும்
நீர் என் வலதுபாரிசத்தில் உட்காரும்
என்றார்
45 என்று சொன்னானே. தாவீது அவரை
ஆண்டவரென்று சொல்லியிருக்க, அவ
னுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி
46 என்றார். ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்
தையும் பதில்சொல்ல முடியாதிருந்தது.
அன்று முதல் ஒருவனும் அவரிடம்
கேள்வி கேட்கத் துணியவில்லை.

23 பின்பு இயேசு ஜனங்களையும் சீஷரையும்
2 பார்த்து: வேதபாரகரும் பரிசேயரும்
மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்திருக்
3 கிறார்கள்; ஆகவே, அவர்கள் உங்களுக்குச்
சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு
செய்யுங்கள்; அவர்கள் செய்கைகளின்
படியோ செய்யாதிருங்கள்; அவர்கள்
சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதே
4 போகிறார்கள். பாரமான சுமைகளைக் கட்டி
மனுஷர் தோள்களின்மேல் வைக்கிறார்கள்,
தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத்
5 தொடமாட்டார்கள். தங்கள் கிரியைகளை
யெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று
செய்கிறார்கள்; தங்கள் [1]காப்பு நாடாக்களை
அகலமாக்கி, வஸ்திரத்தொங்கல்களைப் பெரி
6 தாக்குகிறார்கள். விருந்துகளில் முதல்
இடங்களையும், ஜெபாலயங்களில் முதல் ஆச
7 னங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்
களையும், மனுஷரால் ரபீ என்று அழைக்கப்
8 படுவதையும் விரும்புகிறார்கள். நீங்களோ
ரபீ என்று அழைக்கப்படவேண்டாம்;
உங்களுக்குக் குருவாயிருக்கிறவர் ஒருவரே,
9 நீங்கள் எல்லாரும் சகோதரர். பூலோகத்
தில் ஒருவனையும் உங்கள் பிதா என்று
அழைக்கவேண்டாம்; பரலோகத்திலிருக்
10 கிற ஒருவரே உங்களுக்குப் பிதா. நீங்கள்
போதகரென்றும் அழைக்கப்படவேண்
டாம்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப்
11 போதகர். உங்களில் பெரியவன் உங்களுக்
குப் பணிவிடைக்காரனாயிருப்பான். தன்னை 12
உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்
னைத் தாழ்த்துகிறவனோ உயர்த்தப்படு
வான்.

ஐயோ! மாயக்காரராகிய வேதபார 13,
கரே, பரிசேயரே, மனுஷர் பிரவேசியாத 14
படி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப்போடு
கிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறது
மில்லை; பிரவேசிக்கிறவர்களைப் பிரவேசிக்க
விடுகிறதுமில்லை.

ஐயோ! மாயக்காரராகிய வேதபாரகரே, 15
பரிசேயரே, ஒருவனை உங்கள் மார்க்கத்தில்
சேர்த்துக்கொள்ளும்படி சமுத்திரத்தையும்
பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவனை
உங்கள் மார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளும்
போது, அவனை உங்களிலும் இரட்டிப்பாய்
நரகத்தின் மகனாக்குகிறீர்கள்.

ஐயோ! குருடரான வழிகாட்டிகளே, 16
எவனாகிலும் தேவாலயத்தின்பேரில் ஆணை
யிட்டால், அது ஒன்றுமில்லையென்றும், எவ
னாகிலும் தேவாலயத்தின் பொன்னின்பேரில்
ஆணையிட்டால், அவன் கட்டுப்பட்டவ
னென்றும் சொல்லுகிறீர்கள். மதிகேடரே, 17
குருடரே, எது பெரிது? பொன்னோ,
பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவா
லயமோ? மேலும், எவனாகிலும் பலிபீடத் 18
தின்பேரில் ஆணையிட்டால், அது ஒன்று
மில்லையென்றும், எவனாகிலும் அதன்
மேலிருக்கிற காணிக்கையின்பேரில் ஆணை
யிட்டால், அவன் கட்டுப்பட்டவனென்றும்
சொல்லுகிறீர்கள். குருடரே, எது பெரிது? 19
காணிக்கையோ, காணிக்கையைப் பரிசுத்த
மாக்குகிற பலிபீடமோ? ஆகையால் பலி 20
பீடத்தின்பேரில் ஆணையிடுகிறவன் அதன்
பேரிலும் அதன்மேலுள்ள எல்லாவற்றின்
பேரிலும் ஆணையிடுகிறான். தேவாலயத் 21
தின்பேரில் ஆணையிடுகிறவன் அதன்பேரி
லும் அதில் வாசமாயிருக்கிறவர்பேரிலும்
ஆணையிடுகிறான். வானத்தின்பேரில் ஆணை 22
யிடுகிறவன் கடவுளுடைய சிங்காசனத்தின்
பேரிலும் அதில் வீற்றிருக்கிறவர்பேரிலும்
ஆணையிடுகிறான்.

ஐயோ! மாயக்காரராகிய வேதபாரகரே, 23
பரிசேயரே, நீங்கள் புதினாவிலும் வெந்தயத்
திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி,
நியாயப்பிரமாணத்தில் விசேஷித்தவைகளா
கிய நியாயத்தையும் இரக்கத்தையும் விசு
வாசத்தையும் விட்டுவிட்டீர்கள்; இவைகளை
யும் செய்யவேண்டும், அவைகளையும் விடா
திருக்கவேண்டும். குருடரான வழிகாட்டி 24

---

[1] எண். 15: 38, 39 பார்க்கவும்.

களே, நீங்கள் கொசுவை வடிகட்டி ஒட்ட
கத்தை விழுங்குகிறவர்கள்.
25 ஐயோ! மாயக்காரராகிய வேதபாரகரே,
பரிசேயரே, போஜனபான பாத்திரங்களின்
வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்;
உட்புறத்திலோ கொள்ளையும் துர் ஆசாபாச
26 மும் நிறைந்திருக்கின்றன. குருடனான பரி
சேயனே, பாத்திரத்தின் வெளிப்புறம் சுத்த
மாகும்படி அதன் உட்புறத்தை முதலாவது
சுத்தமாக்கு.
27 ஐயோ! மாயக்காரராகிய வேதபாரகரே,
பரிசேயரே, வெள்ளையடித்த கல்லறை
களுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவைகள்
புறம்பே அலங்காரமாய்க் காணப்படும்.
உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளும்
சகல அசுத்தங்களும் நிறைந்திருக்கும்.
28 அப்படியே நீங்களும் புறம்பே மனுஷருக்கு
நீதிமான்களென்று காணப்பட்டும், உள்
ளேயோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும்
நிறைந்திருக்கிறீர்கள்.
29 ஐயோ! மாயக்காரராகிய வேதபாரகரே,
பரிசேயரே, நீங்கள் தீர்க்கதரிசிகளின் கல்ல
றைகளைக் கட்டி, நீதிமான்களின் சமாதி
30 களைச் சிங்காரித்து: எங்கள் பிதாக்களின்
நாட்களில் இருந்திருந்தோமானால், தீர்க்க
தரிசிகளின் இரத்தப்பழிக்கு நாங்கள்
உடந்தையாயிருந்திருக்கமாட்டோம் என்
31 கிறீர்கள். ஆகவே, நீங்கள் தீர்க்கதரிசிகளைக்
கொலைசெய்தவர்களின் மக்களென்பதற்கு
32 நீங்களே சாட்சிகள். நீங்களும் உங்கள்
பிதாக்களின் அக்கிரம அளவை நிரப்
33 புங்கள். சர்ப்பங்களே, விரியன் பாம்புக்
குட்டிகளே, நரகாக்கினைக்கு எப்படித் தப்
34 பித்துக்கொள்வீர்கள்? இதினிமித்தம்,
இதோ, தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும்
வேதபாரகரையும் உங்களிடம் அனுப்பு
கிறேன்; அவர்களில் சிலரைக் கொல்லு
வீர்கள், சிலுவையில் அறைவீர்கள், சிலரை
உங்கள் ஜெபாலயங்களில் வாரினாலடித்து
35 ஊருராய்த் துன்பப்படுத்துவீர்கள்; நீதிமா
னாகிய ஆபேலின் இரத்தம் முதல் தேவா
லயத்திற்கும்பலிபீடத்திற்கும் நடுவே நீங்கள்
கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய
சகரியாவின் இரத்தம்வரைக்கும், பூமியில்
சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழி
யெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்
36 படிச் செய்வீர்கள். இவைகளெல்லாம்
இந்தச் சந்ததியின்மேல் வருமென்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
37 எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசி
களைக் கொலைசெய்து, உன்னிடம் அனுப்பப்
பட்டவர்களைக் கல்லெறிகிறவளே, கோழி
தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே
கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக
நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக்
கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனமாயிருந்
தேன்; நீங்களோ மனமில்லாதிருந்தீர்கள்.
உங்கள் வீடு உங்களுக்கே விடப்படும். 38
கர்த்தருடைய நாமத்தில் வருகிறவர் ஆசீர் 39
வதிக்கப்பட்டவர் என்று நீங்கள் சொல்லு
மளவும், இதுமுதல் என்னைக் காணாதிருப்
பீர்கள் என்று உங்களுக்குச் சொல்லு
கிறேன் என்றார்.

இயேசு தேவாலயத்தை விட்டுப் போகை **24**
யில், அவருடைய சீஷர் தேவாலயத்தின்
கட்டடங்களை அவருக்குக்காண்பிக்க அவரி
டம் வந்தார்கள். அவர் அவர்களைப் பார்த்து: 2
இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே, இவ்
விடத்தில் கல்லின்மேல் கல்லிராதபடி எல்
லாம் இடிபட்டுப்போகும் என்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்
என்றார்.
அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந் 3
திருக்கையில், சீஷர் அவரிடம் தனித்து
வந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்
கும்? உம்முடைய வருகைக்கும் யுக முடி
வுக்கும் அடையாளமென்ன? எங்களுக்குச்
சொல்லவேண்டுமென்று கேட்க, இயேசு 4
அவர்களைப் பார்த்து: ஒருவனும் உங்களை
வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்;
நானே கிறிஸ்து என்று என் நாமத்தைத் 5
தரித்துக்கொண்டு அநேகர் வருவார்கள்,
அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களையும் 6
யுத்தச்செய்திகளையும் கேட்கப்போகிறீர்கள்,
கலங்காதபடி பாருங்கள்; இவைகள் சம்ப
விக்கவேண்டியதே, முடிவோ இன்னும்
இல்லை. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் 7
ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்
பும்; இங்கும் அங்கும் பஞ்சங்களும் பூமி
யதிர்ச்சிகளும் உண்டாகும். இவையெல் 8
லாம் வேதனைகளின் ஆரம்பமே.
அப்பொழுது உங்களை உபத்திரவத்துக்கு 9
ஒப்புக்கொடுத்துக்கொலைசெய்வார்கள்;என்
நாமத்தினிமித்தம் புறஜாதியார் யாவரும்
உங்களைப் பகைப்பார்கள். அப்பொழுது 10
அநேகர் இடறிவிழுவார்கள்; ஒருவரை
யொருவர் காட்டிக்கொடுப்பார்கள்; ஒரு
வரையொருவர் பகைப்பார்கள். கள்ளத் 11
தீர்க்கதரிசிகள் அநேகர் எழும்பி, பலரை
வஞ்சிப்பார்கள். அக்கிரமம் மிகுதியாவ 12
தினால் பெரும்பான்மையோரில் அன்பு
தணிந்துபோம். முடிவுபரியந்தம் நிலைநிற் 13
பவனே இரட்சிக்கப்படுவான். ராஜ்யத்துக் 14

சூரிய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்கு
முள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப்
பிரசங்கிக்கப்படும், அப்போதுதான் முடிவு
வரும்.
15 ஆகவே, தானியேல் தீர்க்கதரிசியின்மூல
மாய் உரைக்கப்பட்ட பாழாக்கும் அரு
வருப்பு பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக்காணும்
போது—வாசிக்கிறவன் கவனிக்கக்கடவன்
16 —யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்கு
17 ஓடிப்போகட்டும். வீட்டின்மேல் இருக்
கிறவன் தன் வீட்டில் உள்ளவைகளை
18 எடுப்பதற்கு இறங்கவேண்டாம். வயலில்
இருக்கிறவன் தன் வஸ்திரத்தை எடுப்பதற்
19 குத் திரும்பவேண்டாம். அந்நாட்களில்
கர்ப்பவதிகளுக்கும் பால் கொடுக்கிறவர்
20 களுக்கும், ஐயோ, பரிதாபம்! நீங்கள்
ஓடிப்போவது மாரிகாலத்திலாவது ஓய்வு
நாளிலாவது நேரிடாதபடி வேண்டிக்கொள்
21 ளுங்கள். அக்காலத்தில் மிகுந்த உபத்திரவ
முண்டாயிருக்கும்; அப்படிப்பட்ட உபத்
திரவம் உலகமுண்டானதுமுதல் இந்நாள்
வரையும் நேரிட்டதுமில்லை, இனி நேரிடப்
22 போவதுமில்லை. அந்நாட்கள் குறைக்கப்
படாதிருந்தால், மனுமக்களில் எவனும் தப்
பிப்போவதில்லை. தெரிந்தெடுக்கப்பட்டவர்
களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்
23 கப்படும். அப்பொழுது எவனாகிலும் உங்
களிடம்: இதோ, கிறிஸ்து இங்கே இருக்
கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று
24 சொன்னால் நம்பாதேயுங்கள். ஏனெனில்,
கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசி
களும் எழும்பி, கூடுமானால் தெரிந்தெடுக்
கப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப்
பெரிய அடையாளங்களையும் அற்புதங்களை
25 யும் செய்வார்கள். முன்னதாக உங்க
26 ளுக்கு அறிவித்திருக்கிறேன். ஆகையால்:
அதோ, வனாந்தரத்தில் இருக்கிறார் என்று
உங்களுக்குச் சொல்வார்களானால் புறப்
படாதேயுங்கள்; இதோ, உள்ளறைகளில்
இருக்கிறார் என்று சொல்லுவார்களானால்
27 நம்பாதேயுங்கள். மின்னல் கிழக்கில்
தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறது
போல மனுஷகுமாரன் வருகையும் இருக்
28 கும். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள்
வந்து கூடும்.
29 அந்நாட்களில் உபத்திரவம் முடிந்த
வுடனே சூரியன் அந்தகாரப்படும், சந்திரன்
தன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்
திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்
30 தின் சத்துவங்கள் அசைக்கப்படும். அப்
பொழுது மனுஷகுமாரனுடைய அடை
யாளம் வானத்தில் தோன்றும், தோன்றவே
பூமியிலுள்ள சகல ஜாதியாரும் மாரடிப்
பார்கள்; மனுஷகுமாரன் மிகுந்த வல்லமை
யோடும் மகிமையோடும் வானத்தின் மேகங்
களின்மேல் வருகிறதைக் காண்பார்கள்.
பெரிய எக்காள சத்தத்தோடே அவர் தம் 31
தூதரை அனுப்புவார்; அவர்கள் வானத்தின்
ஒரு முனைமுதற்கொண்டு மறுமுனைமட்டும்
நாலுதிசைகளிலுமிருந்து அவரால் தெரிந்
தெடுக்கப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்
பார்கள்.
அத்திமரத்திலிருந்து வரும் உவமையைக் 32
கற்றுக்கொள்ளுங்கள்; அது இளங்கிளை
யாகி இலை துளிர்க்கும்போது, வசந்தகாலம்
சமீபம் என்று அறிவீர்கள். அப்படியே நீங் 33
களும் இவைகளையெல்லாம் காணும்போது,
அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார்
என்று அறிந்துகொள்ளுங்கள். இவை 34
யெல்லாம் சம்பவித்துத் தீரும்வரை இந்தச்
சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன். வானமும் 35
பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தை
களோ ஒருபோதும் ஒழிந்துபோவதில்லை.
அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா 36
ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான்; பர
லோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்,
குமாரனுங்கூட அறியார். நோவாவின் 37
நாட்கள் எப்படியோ அப்படியே மனுஷ
குமாரன் வருகையும் இருக்கும். எப்படி 38
யெனில், ஜலப்பிரளயத்துக்கு முன்னான
நாட்களில், நோவா பேழைக்குள் பிரவே
சித்த நாள்வரை, ஜனங்கள் புசித்தும் குடித்
தும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும்
வந்தார்கள். ஜலப்பிரளயம் வந்து அனை 39
வரையும் வாரிக்கொண்டு போகுமட்டும்
அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. அப்
படியே மனுஷகுமாரன் வருகையும் இருக்
கும். அப்பொழுது வயலில் இரண்டுபேர் 40
இருப்பார்கள்; ஒருவன் கொண்டுபோகப்
படுவான், மற்றவன் கைவிடப்படுவான்.
எந்திரம் அரைக்கும் இரண்டு ஸ்திரீகள் 41
இருப்பார்கள்; ஒருத்தி கொண்டுபோகப்படு
வாள், மற்றவள் கைவிடப்படுவாள். ஆகவே 42
உங்கள் ஆண்டவர் இன்ன நாளிலே வரு
வாரென்று உங்களுக்குத் தெரியாதிருக்கிற
படியினால் விழித்திருங்கள். திருடன் 43
இன்ன ஜாமத்தில் வருவானென்று வீட்
டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், தன் வீட்
டைக் கன்னமிடவொட்டாதபடி விழித்தி
ருப்பான் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.
அப்படியே நீங்களும் ஆயத்தமாயிருங்கள்; 44
நீங்கள் நினையாத நாழிகையில் மனுஷ
குமாரன் வருவார்.

45 ஏற்ற வேளையிலே தன் வீட்டாருக்குப்
போஜனங்கொடுக்கும்படி எஜமான் நிய
மித்த உண்மையும் விவேகமுமுள்ள வேலைக்
46 காரன் யார்? எஜமான் வரும்போது அப்
படியே செய்யக் காணப்படும் வேலைக்காரன்
47 பாக்கியவான். தனக்குள்ள யாவற்றின்
மேலும் அவனை நியமிப்பானென்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
48 அந்தப் பொல்லாத வேலைக்காரனோ: என்
எஜமான் வர நாள் செல்லும் என்று தன்
49 உள்ளத்திலே சொல்லிக்கொண்டு, தன்
உடன் வேலைக்காரரை அடிக்கத் தொடங்கி,
வெறியரோடே புசிக்கவும் குடிக்கவும் தலைப்
50 பட்டால், அந்த வேலைக்காரன் எதிர்பாராத
நாளிலும் அறியாத நாழிகையிலும் அவன்
51 எஜமான் வந்து, அவனைத் துண்டித்து,
மாயக்காரரோடே அவனுக்குப் பங்கை நிய
மிப்பான்; அங்கே அழுகையும் பற்கடிப்பு
மாயிருக்கும்.

25 அப்பொழுது, பரலோக ராஜ்யம் தங்கள்
தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவா
ளனை எதிர்கொண்டழைக்கப் புறப்பட்ட
பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாகும்.
2 அவர்களில் ஐந்து பேர் புத்தியில்லாத
3 வர்கள், ஐந்துபேர் புத்தியுள்ளவர்கள். புத்தி
யில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்
துக்கொண்டுபோகும்போது, எண்ணெயை
4 யும் கூடக் கொண்டுபோகவில்லை. புத்தி
யுள்ளவர்களோ தங்கள் தீவட்டிகளோடு
கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெ
5 யையும் கொண்டுபோனார்கள். மணவாளன்
வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும்
நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிட்
6 டார்கள். நடுராத்திரியிலே: அதோ, மண
வாளன், அவரை எதிர்கொண்டழைக்கப்
புறப்படுங்கள் என்ற பெருஞ்சத்தம் உண்
7 டாயிற்று. அப்பொழுது அந்தக் கன்னி
கைகள் எல்லாரும் எழுந்திருந்து தங்கள்
8 தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தி
யில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி:
உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்
சம் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள்
அணைந்துபோகின்றனவே என்று சொல்ல,
9 புத்தியுள்ளவர்கள்: அப்படியல்ல, எங்க
ளுக்கும் உங்களுக்கும் போதாதே; விற்கிற
வர்களிடம் போய் உங்களுக்கு வாங்கிக்
10 கொள்ளுங்கள் என்றார்கள். அப்படியே
அவர்கள் வாங்கப்போகையில் மணவாளன்
வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள்
அவரோடுகூடக் கலியாண வீட்டிற்குள்
பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்
டது. பின்பு மற்றக் கன்னிகைகளும் வந்து: 11
ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத்
திறக்கவேண்டும் என்றார்கள். அவரோ: 12
நீங்கள் எனக்குத் தெரியாது என்று மெய்யா
கவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்
றார். ஆகையால், விழித்திருங்கள்; அந்த 13
நாளாவது நாழிகையாவது உங்களுக்குத்
தெரியாதே.

இது எப்படியெனில், புறதேசத்துக்குப் 14
பிரயாணமாய்ப் போகிற ஒரு மனுஷன் தன்
ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்தி
களை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்தது
போலாகும். அவனவனுடைய திறமைக் 15
குத் தக்கபடி, ஒருவனிடத்தில் ஐந்து
தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்
தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக்
கொடுத்துப் பிரயாணப்பட்டுப் போனான்.
ஐந்து தாலந்து வாங்கினவன் உடனே 16
போய் அதை வைத்து வியாபாரம்பண்ணி
இன்னும் ஐந்து சம்பாதித்தான். அப்படியே 17
இரண்டு வாங்கினவனும் இன்னும் இரண்டு
சம்பாதித்தான். ஒன்று வாங்கினவனோ 18
போய் நிலத்தைத் தோண்டி, தன் எஜ
மான் பணத்தைப் புதைத்து வைத்தான்.
வெகு காலமானபின் அந்த ஊழியக்காரரு 19
டைய எஜமான் திரும்பிவந்து அவர்கள்
கணக்கைப் பார்த்தான. அப்பொழுது 20
ஐந்து தாலந்து வாங்கினவன் இன்னும் ஐந்து
தாலந்தும் கொண்டுவந்து: ஐயா, ஐந்து
தாலந்து என்னிடம் ஒப்புவித்தீரே; இதோ,
இன்னும் ஐந்து தாலந்து சம்பாதித்தேன் என்
றான். அவனுடைய எஜமான் அவனிடம்: 21
நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள
ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மை
யாயிருந்தாய், அதிகத்தின்மேல் உன்னை அதி
காரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய
சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்.
இரண்டு தாலந்து வாங்கினவனும் வந்து: 22
ஐயா, இரண்டு தாலந்து என்னிடம் ஒப்பு
வித்தீரே; இதோ, இன்னும் இரண்டு
தாலந்து சம்பாதித்தேன் என்றான். அவனு 23
டைய எஜமான்: நல்லது, உத்தமமும் உண்
மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்
திலே உண்மையாயிருந்தாய், அதிகத்தின்
மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்;
உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிர
வேசி என்றான். ஒரு தாலந்து வாங்கின 24
வனும் வந்து: ஐயா, நீர் கடினமான மனுஷ
னென்று அறிவேன். நீர் விதைக்காத இடத்
தில் அறுக்கிறவர்; தூற்றாத இடத்தில் சேர்க்
கிறவர். ஆகவே, நான் பயந்து சென்று, 25
உமது தாலந்தை நிலத்தில் புதைத்து

வைத்தேன்; இதோ, உம்முடைய பொருள்
26 என்றான். அதற்கு அவன் எஜமான்:
பொல்லாத ஊழியனே, சோம்பேறீ, நான்
விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்ப
தும் தூற்றாத இடத்தில் சேர்க்கிறவனென்ப
27 தும் உனக்குத் தெரிந்திருந்ததே. அப்படி
யானால் நீ என் பணத்தைக் காசுக்காரர் வசம்
விட்டுவைத்திருக்கவேண்டும்; அப்பொழுது
நான் வந்து என்னுடையதை வட்டியோடே
28 வாங்கிக்கொள்வேனே என்று சொல்லி: அவ
னிடமிருந்து தாலந்தை எடுத்துப் பத்துத்
29 தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள்; உள்ள
வனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்,
பரிபூரணமும் ஆகும்; இல்லாதவனிட
மிருந்தோ உள்ளதும் எடுத்துக்கொள்ளப்
30 படும். பிரயோஜனமற்ற இந்த ஊழியக்
காரனைப் புறம்பான இருளிலே தள்ளி
விடுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பு
மாயிருக்கும் என்றான்.

31 அன்றியும், மனுஷகுமாரன் தமது மகிமை
யில் சகல தூதரோடும் வரும்போது, தமது
மகிமையுள்ள சிங்காசனத்தின்மேல் வீற்
32 றிருப்பார். அப்பொழுது சகல ஜாதியா
ரும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படு
வார்கள்; மேய்ப்பன் செம்மறியாடுகளையும்
வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கி
றதுபோல அவர்களை அவர் பிரித்து,
33 செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்தி
லும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்தி
34 லும் நிறுத்துவார். அப்பொழுது ராஜா
தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப்
பார்த்து: வாருங்கள், என் பிதாவினுடைய
வர்களாய் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே,
உலகத் தோற்றமுதல் உங்களுக்காக
ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்
35 தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியா
யிருந்தேன், எனக்குப் போஜனங்
கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என்
தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்
தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்;
36 வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்
கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன்,
என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்
தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்
37 பார். அதைக் கேட்டு நீதிமான்கள்: ஆண்
டவரே, உம்மை நாங்கள் எப்பொழுது பசி
யுள்ளவராகக் கண்டு போஜனங்கொடுத்
தோம்? உம்மை எப்பொழுது தாகமுள்ள
வராகக் கண்டு தாகத்தைத்தீர்த்தோம்?
38 உம்மை எப்பொழுது அந்நியராகக்கண்டு
சேர்த்துக்கொண்டோம்? உம்மை எப்
பொழுது வஸ்திரமில்லாதவராகக் கண்டு வஸ்
திரங்கொடுத்தோம்? உம்மை எப்பொழுது 39
வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவ
ராகவும் கண்டு உம்மைப் பார்க்கவந்தோம்
என்பார்கள். அப்பொழுது ராஜா: இந்த 40
மிகச்சிறியரான என் சகோதரரில் ஒருவ
னுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ
அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்
என்பார். இடது பக்கத்தில் நிற்பவர்களைப் 41
பார்த்து அவர்: சாபத்துக்குட்பட்டவர்
களே, என்னை விட்டு, பிசாசுக்கும் அவன்
தூதருக்கும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்
கிற நித்திய அக்கினிக்குள் போங்கள். பசி 42
யாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜ
னங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன்,
நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; அந் 43
நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்
துக்கொள்ளவில்லை; வஸ்திரமில்லாதிருந்
தேன், நீங்கள் வஸ்திரங்கொடுக்கவில்லை;
வியாதியுள்ளவனும் காவலிலடைபட்ட
வனும் இருந்தேன், நீங்கள் விசாரிக்க
வரவில்லை என்பார். அதற்கு அவர்கள்: 44
ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும்
தாகமுள்ளவராகவும் அந்நியராகவும் வஸ்திர
மில்லாதவராகவும் வியாதிப்பட்டவராகவும்
காவலிலடைபட்டவராகவும் நாங்கள் எப்
பொழுது கண்டு உதவிசெய்யாதிருந்தோம்
என்பார்கள். அப்பொழுது அவர் அவர்க 45
ளிடம்: மிகச்சிறியராகிய இவர்களில் ஒரு
வனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்
களோ அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள்
என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்
லுகிறேன் என்பார். அப்படியே இவர்கள் 46
நித்திய ஆக்கினைக்குப்போவார்கள்; நீதிமான்
களோ நித்திய ஜீவனுக்குள் போவார்கள்
என்றார்.

இயேசு இந்த வார்த்தைகளையெல்லாம் 26
சொல்லி முடித்தபின்பு, தம்முடைய சீஷ
ரிடம்: இரண்டு நாளுக்குப்பிறகு பஸ்கா 2
பண்டிகை வருமென்பது உங்களுக்குத்
தெரியும்; அப்பொழுது மனுஷகுமாரன்
சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்
கொடுக்கப்படுவார் என்றார்.

அப்பொழுது பிரதான ஆசாரியரும் 3
ஜனத்தின் மூப்பரும் காய்பா என்ற பிரதான
ஆசாரியன் அரண்மனையில் கூடிவந்து,
இயேசுவைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலை 4
செய்ய ஆலோசனை பண்ணினார்கள். ஆகி 5
லும், ஜனத்தில் கலகமுண்டாகாதபடி,
பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது
என்றார்கள்.

6 இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகி
யான சீமோன் வீட்டில் இருக்கையில்,
7 ஒரு ஸ்திரீ விலையுயர்ந்த பரிமள தைல
முள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு
வந்து, அவர் போஜன பந்தியிலிருக்கும்
போது, அந்தத் தைலத்தை அவர் சிரசின்
8 மேல் ஊற்றினாள். சீஷர் அதைக் கண்டு
கோபங்கொண்டு: இந்த வீண் செலவு என்
9 னத்திற்கு? இதை அதிக விலைக்கு விற்று
ஏழைகளுக்குக் கொடுக்கலாமே என்
10 றார்கள். இயேசுவோ இதை அறிந்து அவர்
களிடம்: நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன்
தொந்தரவு செய்கிறீர்கள்? நல்ல செய்கை
11 எனக்குச் செய்தாளே. ஏழைகள் எப்
போதும் உங்களோடு இருக்கிறார்கள்;
நானோ எப்போதும் உங்களோடிரேன்.
12 இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்
மேல் ஊற்றினது என்னை அடக்கம்
பண்ணுவதற்கு எத்தனமான செய்கையா
13 கும். இந்தச் சுவிசேஷம் உலகமுழுவதி
லும் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்
கங்கே இவள் செய்ததும் இவள் ஞாபகார்த்
தமாய்ச் சொல்லப்படும் என்று மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
14 அப்பொழுது பன்னிருவரில் ஒருவனா
கிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான
15 ஆசாரியரிடத்திற்குப் போய்: நான் அவரை
உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன்;
நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்
றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்
16 ளிக்காசை நிறுத்துக் கொடுத்தார்கள். அது
முதல் அவன் அவரைக் காட்டிக்கொடுப்ப
தற்குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.
17 புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின்
முதல் நாளிலே சீஷர் இயேசுவினிடம்
வந்து: பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள்
எங்கே உமக்கு ஆயத்தம்பண்ண விரும்பு
18 கிறீர் என்று கேட்க, அவர்: நீங்கள் நக
ரத்திலே இன்னானிடத்திற்குப் போய்: என்
வேளை சமீபமாயிருக்கிறது, உன் வீட்டிலே
என் சீஷரோடு பஸ்காவை ஆசரிப்பேன்
என்று போதகர் சொல்லுகிறாரென்று அவ
19 னுக்குச் சொல்லுங்கள் என்றார். இயேசு
தங்களுக்குக் கட்டளையிட்டபடியே சீஷர்
செய்து, பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள்.
20 சாயங்காலமானபோது, பன்னிரு சீஷ
21 ரோடுங்கூட அவர் பந்தியிருந்தார். அவர்கள்
போஜனம்பண்ணுகையில், அவர்: உங்களில்
ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்
என்று மெய்யாகவே உங்களுக்குச்
22 சொல்லுகிறேன் என்றார். அப்பொழுது
அவர்கள் மிகவும் துக்கங்கொண்டு, அவரை
நோக்கி: ஆண்டவரே, நான்தானோ என்று
ஒவ்வொருவராய்க் கேட்கத்தொடங்க,
அவர்: என்னோடேகூடத் தாலத்தில் கை 23
யிட்டவனே என்னைக் காட்டிக்கொடுப்
பான். மனுஷகுமாரன் தம்மைக்குறித்து 24
எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும்,
மனுஷகுமாரனை எந்த மனுஷன் காட்டிக்
கொடுக்கிறானோ, ஐயோ! அவனுக்குக் கேடு
வரும். அந்த மனுஷன் பிறவாதிருந்தானா
னால் அவனுக்கு நலம் என்றார். அவரைக் 25
காட்டிக்கொடுக்கிற யூதாசும் அவரிடம்:
ரபீ, நான்தானோ என்று சொல்ல, அவர்:
நீ சொன்னபடிதான் என்றார்.
அவர்கள் போஜனம் பண்ணுகையில், 26
இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து,
அதைப் பிட்டு, சீஷருக்குக் கொடுத்து:
வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய
சரீரம் என்றார். பின்பு பாத்திரத்தை 27
எடுத்து, நன்றிசெலுத்தி, அவர்களுக்குக்
கொடுத்து: எல்லாரும் இதிலே பானம்பண்
ணுங்கள்; இது உடன்படிக்கைக்குரிய 28
என்னுடைய இரத்தம்; பாவமன்னிப்புக்
கென்று இது அநேகருக்காகச் சிந்தப்படுகி
றது. இந்தத் திராட்சப்பழரசத்தை என் 29
பிதாவின் ராஜ்யத்திலே நான் உங்களோடு
கூடப் புதிதாய்ப் பானம்பண்ணும் நாள்
வரைக்கும் இதுமுதல் இதில் பானம்பண்
ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லு
கிறேன் என்றார்.
அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டுப் பாடி 30
முடித்து, புறப்பட்டு ஒலிவமலைக்குப்
போனார்கள். அப்பொழுது இயேசு அவர் 31
களிடம்:
மேய்ப்பனை வெட்டுவேன்,
மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும்
என்று எழுதியிருக்கிறபடி, இந்த இரவிலே
நீங்கள் எல்லாரும் என் விஷயமாய் இடறி
விழுவீர்கள். நான் உயிரோடெழுப்பப் 32
பட்டபின்போ, உங்களுக்குமுன் கலிலே
யாவுக்குப் போவேன் என்றார். இதைக் 33
கேட்ட பேதுரு: உமது விஷயமாய் எல்லா
ரும் இடறினாலும் நான் ஒருகாலும் இட
றேன் என்றான். இயேசு அவனிடம்: இந்த 34
இரவிலேயே சேவல் கூவுகிறதற்குமுன் நீ
என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று
மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்
றார். அதற்குப் பேதுரு: நான் உம்மோடே 35
மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை
மறுதலிக்கவே மாட்டேன் என்றான். சீஷர்
எல்லாரும் அப்படியே சொன்னார்கள்.
அப்பொழுது இயேசு அவர்களோடே 36
கெத்செமனே என்னும் இடத்திற்கு வந்து

சீஷரை நோக்கி: நான் அங்கே போய்
ஜெபித்து வருமளவும் நீங்கள் இங்கே
37 உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி, பேதுரு
வையும் செபெதேயுவின் குமாரர் இருவரை
யும் கூட்டிக்கொண்டுபோய், துக்கமடைய
38 வும் வியாகுலப்படவும் தொடங்கினார். அப்
பொழுது அவர் அவர்களிடம்: என் ஆத்
துமா மரணத்துக்கேதுவான பெருந்துக்கங்
கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி
என்னோடு விழித்திருங்கள் என்று சொல்லி,
39 சற்று அப்பால் போய் முகங்குப்புற
விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம்
என்னைவிட்டு நீங்கக்கூடுமானால், நீங்குவ
தாக; ஆகிலும், என் சித்தத்தின்படியல்ல,
உம்முடையசித்தத்தின்படியே ஆகக்கடவது
40 என்று ஜெபம்பண்ணினார். பின்பு அவர்
சீஷரிடம் வந்து, அவர்கள் நித்திரை செய்
கிறதைக்கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள்
ஒரு மணிநேரமாவது என்னோடு விழித்
41 திருக்கமுடியாதோ? நீங்கள் சோதனைக்குட்
படாதபடி விழித்திருந்து ஜெபஞ்செய்
யுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்
42 சமோ பலவீனமுள்ளது என்றார். அவர்
மறுபடியும் இரண்டாந்தரம் போய்: என்
பிதாவே, இதில் நான் பானம்பண்ணினா
லொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடா
தாகில், உமது சித்தமே ஆவதாக என்று
43 ஜெபித்து, திரும்பவும் வந்து அவர்கள்
நித்திரை செய்கிறதைக் கண்டார்; அவர்க
ளுடைய கண்கள் மிகுந்த நித்திரை மயக்க
44 மாயிருந்தன. அவர் மறுபடியும் அவர்களை
விட்டுப்போய், மூன்றாந்தரமும் அந்த
வார்த்தைகளையே மறுபடியும் சொல்லி
45 ஜெபித்து, | தம்முடைய சீஷரிடம் வந்து:
இனி நித்திரைசெய்து இளைப்பாறுங்கள்,
மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில்
ஒப்புக்கொடுக்கப்படும் வேளை வந்தது.
46 எழுந்திருங்கள், போவோம்; இதோ, என்
னைக் காட்டிக்கொடுக்கிறவன் வந்துவிட்
டான் என்றார்.
47 அவர் இன்னும் பேசிக்கொண்டிருக்கை
யில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்
வந்தான்; அவனோடு பிரதான ஆசாரியரும்
ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான
ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும்
48 பிடித்துக்கொண்டு வந்தார்கள். அவரைக்
காட்டிக்கொடுக்கிறவன்: நான் எவனை முத்த
மிடுவேனோ அவன்தான், அவனைப் பிடித்
துக்கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு
49 அடையாளம் சொல்லியிருந்தான். உடனே
அவன் இயேசுவினிடம் போய்: ரபீ, வாழ்க
என்று சொல்லி அவரை முத்தமிட்டான்.
இயேசு அவனை நோக்கி: சிநேகிதனே, எதற் 50
காக வந்திருக்கிறாய் என்றார். அப்பொழுது
அவர்கள் கிட்டவந்து இயேசுவின்மேல்
கைபோட்டு அவரைப் பிடித்தார்கள்.
இயேசுவோடிருந்தவர்களில் ஒருவன் 51
கையை நீட்டி, தன் பட்டயத்தை உருவி,
பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக்
காதற வெட்டினான். அப்பொழுது இயேசு 52
அவனிடம்: உன் பட்டயத்தைத் திரும்ப
அதன் உறையிலே போடு; பட்டயத்தை
எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து
போவார்கள். நான் என் பிதாவினிடம் 53
வேண்டிக்கொள்ள முடியாதென்றும், வேண்
டிக்கொண்டால் அவர் பன்னிரண்டு [1]லேகி
யோனுக்கு அதிகமான தூதரை இப்
பொழுதே எனக்கு உதவியாக அனுப்ப
மாட்டார் என்றும் நினைக்கிறாயோ? அப் 54
படிச் செய்வேனானால் இவ்விதமாய்ச் சம்ப
விக்கவேண்டும் என்கிற வேத வாக்கியங்கள்
எப்படி நிறைவேறும் என்றார். அந்த 55
வேளையிலே இயேசு ஜனங்களை நோக்கி:
கள்ளனைப் பிடிக்கப்போகிறதுபோல நீங்கள்
பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்
கொண்டு என்னைப் பிடிக்க வந்தீர்களே,
நான் தினந்தோறும் தேவாலயத்தில் உட்
கார்ந்து உபதேசித்துக்கொண்டிருந்தேன்,
அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்
லையே. ஆகிலும், தீர்க்கதரிசிகளின் வேத 56
வாக்கியங்கள் நிறைவேறும்படி இவைக
ளெல்லாம் சம்பவித்திருக்கின்றன என்றார்.
அப்பொழுது சீஷரெல்லாரும் அவரை
விட்டு ஓடிப்போனார்கள்.
இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் 57
பிரதான ஆசாரியன் காய்பாவினிடம்
கொண்டுபோனார்கள்; அங்கே வேதபார
கரும் மூப்பரும் கூடிவந்திருந்தார்கள்.
பேதுரு தூரத்திலே அவருக்குப் பின் 58
சென்று, பிரதான ஆசாரியனுடைய அர
மனைவரைக்கும் வந்து உட்சென்று, முடி
வைப் பார்க்கும்படி சேவகரோடே உட்
கார்ந்தான்.
பிரதான ஆசாரியரும் ஆலோசனைச் சங் 59
கத்தார் அனைவரும் இயேசுவைக் கொலை
செய்யும்படி அவருக்கு விரோதமாய்ப்
பொய்ச்சாட்சி தேடினார்கள். அநேக 60
பொய்ச்சாட்சிகள் வந்தும் தேடிய சாட்சி
யம் கிடைக்கவில்லை; கடைசியில் இருவர்
வந்து: கடவுளின் ஆலயத்தை இடித்துப் 61

[1] சுமார் 6,000 போர்ச்சேவகர் அடங்கிய சேனைப் பிரிவு.

போட்டு மூன்று நாளுக்குள்ளே அதைக்
கட்ட என்னால் ஆகும் என்று இவன் சொன்
62 னான் என்றார்கள். அப்பொழுது பிரதான
ஆசாரியன் எழுந்திருந்து அவரைப் பார்த்து:
நீ ஒன்றும் பதில் சொல்லுகிறதில்லையா?
இவர்கள் உனக்கு விரோதமாய்ச் சொல்லு
63 கிற சாட்சி என்ன என்றான். இயேசுவோ
பேசாமலிருந்தார். அப்பொழுது பிரதான
ஆசாரியன் அவரிடம்: நீ தேவகுமாரனாகிய
கிறிஸ்துதானா? ஜீவனுள்ள கடவுள்பேரில்
உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன்; அதை
64 எங்களுக்குச் சொல் என்றான். அதற்கு
இயேசு: ஆம், நீர் சொன்னபடிதான்; அன்றி
யும், மனுஷகுமாரன் சர்வவல்லவருடைய
வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்
தின் மேகங்கள் மேல்வருவதையும் இதுமுதல்
காண்பீர்களென்று உங்களுக்குச் சொல்லு
65 கிறேன் என்றார். அப்பொழுது பிரதான
ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்
கொண்டு: இவன் பேசினது தேவதூஷ
ணம்; இனி நமக்குச் சாட்சிகள் எதற்கு?
பாருங்கள், இப்பொழுது இவன் தூஷணத்
66 தைக் கேட்டீர்களே; உங்களுக்கு எப்படித்
தோன்றுகிறது என்று கேட்க, அவர்கள்:
இவன் மரணதண்டனை பெறத்தக்கவன்
67 என்றார்கள். அப்பொழுது அவர் முகத்தில்
துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர்
68 அவரை அறைந்து: | கிறிஸ்துவே, உன்னை
அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியி
னால் எங்களுக்குச் சொல் என்றார்கள்.
69 பேதுரு வெளியே அரமனை முற்றத்தில்
உட்கார்ந்திருந்தான். அப்பொழுது வேலைக்
காரி ஒருத்தி அவனிடம் வந்து: கலிலேய
னாகிய இயேசுவோடு நீயும் இருந்தாய் என்று
70 சொல்ல, | அவன்: நீ சொல்லுகிறது எனக்
குத் தெரியவில்லை என்று எல்லாருக்கும்
71 முன்பாக மறுதலித்தான். அவன் வாசல்
மண்டபத்திற்குப் போனபொழுது வேறொ
ருத்தி அவனைக்கண்டு: இவனும் நசரேய
னாகிய இயேசுவோடிருந்தான் என்று அங்கே
72 இருந்தவர்களுக்குச் சொன்னாள். அவனோ:
அந்த மனுஷன் எனக்குத் தெரியாது என்று
சொல்லி மறுபடியும் ஆணையிட்டு மறுதலித்
73 தான். சற்று நேரத்துக்குப்பின் அங்கே
நின்றவர்கள் பேதுருவினிடம் வந்து: மெய்
யாகவே நீயும் அவர்களிலொருவன்; உன்
பேச்சு உன்னைக் காட்டிக்கொடுக்கிறதே
74 என்றார்கள். அப்பொழுது அவன்: அந்த
மனுஷன் எனக்குத் தெரியாது என்று
சொல்லி, சபித்துக்கொள்ளவும் சத்தியம்
பண்ணவும் தொடங்கினான். உடனே
75 சேவல் கூவிற்று. அதைக் கேட்ட பேதுரு:
சேவல் கூவுகிறதற்குமுன் நீ என்னை மூன்று
தரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்
னிடம் சொன்ன வார்த்தையை நினைத்துக்
கொண்டு, வெளியே போய், மனங்கசந்து
அழுதான்.

விடியற்காலமானபோது, சகல பிரதான 27
ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் இயேசு
வைக் கொலைசெய்யும்படி, அவருக்கு
விரோதமாக ஆலோசனை செய்து, அவ 2
ரைக்கட்டி நடத்திக்கொண்டுபோய், தேசாதி
பதி பிலாத்துவினிடம் ஒப்புக்கொடுத்
தார்கள். அப்பொழுது அவரைக் காட்டிக் 3
கொடுத்த யூதாஸ் அவர் ஆக்கினைக்குள்ளா
கத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபப்
பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப்
பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்
திற்கும் திரும்பக் கொண்டுபோய்: குற்ற 4
மில்லாத இரத்தத்தை நான் காட்டிக்
கொடுத்துப் பாவஞ்செய்தேன் என்றான்.
அவர்களோ: எங்களுக்கென்ன, அது உன்
பாடு என்றார்கள். அப்பொழுது அவன் 5
அந்த வெள்ளிக்காசைத் தேவாலயத்திலே
எறிந்துவிட்டு, போய் நான்றுகொண்டான்.
பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை 6
எடுத்து: இது இரத்தக் கிரயமானதால்
காணிக்கைப் பெட்டியிலே இதைப் போட
லாகாதென்று சொல்லி, ஆலோசனைபண் 7
ணினபின்பு, அந்நியரை அடக்கம்பண்
ணும் இடமாகக் குயவனுடைய நிலத்தை
அதனாலே கொண்டார்கள். இதினிமித்தம் 8
அந்த நிலம் இந்நாள்வரைக்கும் இரத்த
நிலம் எனப்படுகிறது.

இஸ்ரவேலின் புத்திரருக்குள் விலைபேசி 9
மதிப்பிடப்பட்டவரின்
விலையாகிய முப்பது வெள்ளிக்காசை
எடுத்து,
குயவனுடைய நிலத்தை வாங்கக் 10
கொடுத்தார்கள்;
கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டது
இதுவே
என்று எரேமியா தீர்க்கதரிசியின்மூலமாய்
உரைக்கப்பட்டது அப்பொழுது நிறை
வேறிற்று.

இயேசு தேசாதிபதிக்குமுன் நின்றார். 11
தேசாதிபதி அவரைப் பார்த்து: நீ யூத
ருடைய ராஜாவா என்று கேட்க, இயேசு:
ஆம், நீர் சொல்லுகிறபடிதான் என்றார்.
பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர்மேல் 12
குற்றஞ்சாட்டுகையில், அவர் பதில் ஒன்றும்
சொல்லவில்லை. அப்பொழுது பிலாத்து 13
அவரைப் பார்த்து: இவர்கள் உன்மேல் எத்

தனையோ குற்றங்களைச் சாட்டுகிறார்களே,
நீ அவைகளைக் கேட்கவில்லையா என்றான்.
14 அவரோ ஒரு வார்த்தைக்கும் பதில் சொல்ல
வில்லை; அதைக் கண்டு தேசாதிபதி மிகவும்
ஆச்சரியப்பட்டான்.
15 பண்டிகை காலத்தில் ஜனங்கள் விரும்பும்
கைதி ஒருவனைத் தேசாதிபதி அவர்களுக்கு
16 விடுதலைசெய்வது வழக்கம். அச்சமயத்தில்
பரபாஸ் என்னும் பேர்போன கைதி ஒரு
17 வன் இருந்தான். அவர்கள் கூடிவந்திருந்த
போது, பிலாத்து அவர்களிடம்: எவனை
நான் உங்களுக்கு விடுதலையாக்க விரும்பு
கிறீர்கள்? பரபாசையோ, கிறிஸ்து எனப்
படுகிற இயேசுவையோ என்று கேட்டான்.
18 பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்
தார்கள் என்று அவனுக்குத் தெரியும்.
19 அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்
கையில், அவன் மனைவி அவனிடம் ஆள்
அனுப்பி: அந்த நீதிமான் காரியத்தில் உமக்
குச் சம்பந்தமே வேண்டாம்; இன்றைக்குச்
சொப்பனத்தில் அவர்நிமித்தம் வெகு பாடு
பட்டேன் என்று சொல்லச் சொன்னாள்.
20 பரபாசை விடுதலைசெய்யக் கேட்டுக்
கொள்ளவும், இயேசுவைக் கொலை செய்
விக்கவும், பிரதான ஆசாரியரும் மூப்பரும்
21 ஜனங்களைத் தூண்டிவிட்டார்கள். தேசாதி
பதி அவர்களிடம்: இவ்விருவரில் எவனை
நான் உங்களுக்கு விடுதலைசெய்யவேண்டும்
என்று கேட்க, அவர்கள்: பரபாசை என்
22 றார்கள். அப்போது பிலாத்து: அப்படி
யானால், கிறிஸ்து எனப்பட்ட இயேசுவை
நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்
டான். அவனைச் சிலுவையில் அறையும்
23 என்று எல்லாரும் சொன்னார்கள். தேசாதி
பதியோ: ஏன், என்ன பொல்லாப்புச் செய்
தான் என்று கேட்க, அவர்கள்: அவனைச்
சிலுவையில் அறையும் என்று இன்னும்
அதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்.
24 தன்னால் ஒன்றும் ஆகவில்லையென்றும்,
கலகமே அதிகமாகிறதென்றும் பிலாத்து
கண்டு, தண்ணீரை அள்ளி, ஜனங்கள் முன்
னிலையில் கைகளைக் கழுவி: இந்த இரத்தப்
பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே
25 பார்த்துக்கொள்ளுங்கள் என்றான். அதற்கு
ஜனங்களெல்லாரும்: இவன் இரத்தப்பழி
எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும்
26 இருப்பதாக என்றார்கள். அப்பொழுது
அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலை
செய்து, இயேசுவையோ வாரினால் அடிப்
பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்
புக்கொடுத்தான்.
27 அப்பொழுது தேசாதிபதியின் போர்ச்
சேவகர் இயேசுவைக் கோட்டைமாளிகைக்
குள்ளே கொண்டுபோய், பட்டாளம் முழு
வதையும் அவரிடம் கூட்டி, அவர் வஸ்தி 28
ரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை
அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடி 29
யைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து,
அவர் வலதுகையில் ஒரு நாணற்கோலைக்
கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்
படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க
என்று அவரைப் பரிகாசஞ்செய்து, அவர் 30
மேல் துப்பி, கோலை எடுத்து அவரைச்
சிரசில் அடித்தார்கள். அவரைப் பரிகாசஞ் 31
செய்தபின்பு, அவருக்கு உடுத்தின
மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்
திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச்
சிலுவையில் அறைய நடத்திக்கொண்டு
போனார்கள்.
போகையில், சிரேனே ஊரானாகிய 32
சீமோன் என்பவனை அவர்கள் கண்டு, அவ
ருடைய சிலுவையைச் சுமக்கும்படி
அவனைக் கட்டாயப்படுத்தினார்கள். கபால 33
ஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும் கொல்
கொதா என்னும் இடத்துக்கு அவர்கள்
வந்தபோது, கசப்புக் கலந்த காடியை 34
அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்;
அவரோ அதை ருசிபார்த்து, குடிக்கச்
சம்மதிக்கவில்லை. அவரைச் சிலுவையில் 35
அறைந்துவிட்டு, சீட்டுப்போட்டு அவரு
டைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுக்
கொண்டார்கள். அவர்கள் அங்கே 36
உட்கார்ந்து அவரைக் காவல் காத்துக்
கொண்டிருந்தார்கள். அன்றியும், அவர் 37
குற்றத்தைக் காட்டும்படி: இவன் யூதரு
டைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி,
அவர் சிரசுக்குமேல் வைத்தார்கள். அப் 38
பொழுது அவருடைய வலதுபக்கத்தில் ஒரு
வனும் அவருடைய இடதுபக்கத்தில் ஒரு
வனுமாக இரண்டு கொள்ளைக்காரர் அவ
ரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்
டார்கள். அந்த வழியாய் நடந்துபோகிற 39
வர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவா 40
லயத்தை இடித்து மூன்று நாட்களில்
கட்டுகிறவனே, நீ தேவகுமாரனானால்
உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவை
யிலிருந்து இறங்கிவா என்று அவரைத்
தூஷித்தார்கள். பிரதான ஆசாரியரும் 41
அப்படியே வேதபாரகரோடும் மூப்ப
ரோடும் சேர்ந்து பரிகாசம்பண்ணி: மற்ற 42
வர்களை இரட்சித்தான்; தன்னைத்தான்
இரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை;
இவன் இஸ்ரவேலின் ராஜாவாமே! இப்
பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்

டும். அப்பொழுது இவனை நம்புவோம்.
43 கடவுள்மேல் நம்பிக்கையாயிருந்தானே;
அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்
பொழுது இவனை மீட்டுவிடட்டும், இவன்
தன்னைக் கடவுளின் குமாரனென்று
44 சொல்லிக்கொண்டானே என்றார்கள். அவ
ரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட
கொள்ளைக்காரரும் அப்படியே அவரை
நிந்தித்தார்கள்.
45 ஆறாம் மணிநேரமுதல் ஒன்பதாம் மணி
நேரம் வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம்
46 உண்டாயிற்று. ஏறக்குறைய ஒன்பதாம்
மணிநேரத்தில் இயேசு: ஏலீ, ஏலீ, லமா
சபக்தானி என்று மிகுந்த சத்தமிட்டுக்
கூப்பிட்டார்; அதற்கு, என் கடவுளே, என்
கடவுளே, ஏன் என்னைக் கைவிட்டீர்
47 என்று அர்த்தமாம். அங்கே நின்றவர்
களில் சிலர் இதைக் கேட்டபொழுது:
இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்
48 றார்கள். உடனே அவர்களில் ஒருவன்
ஓடி, கடற்காளானை எடுத்து, காடியிலே
தோய்த்து, அதை ஒரு கோலில் மாட்டி
49 அவருக்குக் குடிக்கக் கொடுத்தான். மற்ற
வர்களோ: பொறு, எலியா இவனை இரட்
சிக்க வருவானோ பார்ப்போம் என்றார்கள்.
50 இயேசு மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்
பிட்டு, ஆவியை விட்டார்.
51 அப்பொழுதே, தேவாலயத்தின் திரை
மேலே தொடங்கிக் கீழே வரைக்கும் இரண்
டாகக் கிழிந்தது; பூமியும் அதிர்ந்தது;
52 கன்மலைகளும் பிளந்தன; கல்லறைகளும்
திறந்தன; நித்திரையடைந்திருந்த அநேக
பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்
53 திருந்தன. அவர் உயிர்த்தெழுந்தபின்பு
இவர்கள் கல்லறைகளைவிட்டு வெளிப்பட்டு,
திருநகரத்தினுட் சென்று, அநேகருக்குக்
54 காணப்பட்டார்கள். நூற்றுக்கதிபதியும்
அவனோடு இயேசுவைக் காவல் காத்திருந்த
வர்களும் பூமியதிர்ச்சியையும்சம்பவித்தவை
களையும் கண்டு மிகவும் பயந்து: மெய்யா
கவே இவர் தேவகுமாரன் என்றார்கள்.
55 தூரநின்று பார்த்துக்கொண்டிருந்த
அநேக ஸ்திரீகளும் அங்கே இருந்தார்கள்.
இவர்கள் கலிலேயாவிலிருந்து இயேசுவைத்
தொடர்ந்து வந்து அவருக்குப் பணிவிடை
56 செய்தவர்கள். அவர்களுக்குள்ளே மகத
லேனா மரியாளும்,யாக்கோபுக்கும் யோசேப்
புக்கும் தாயாகிய மரியாளும், செபெதேயு
வின் குமாரருடைய தாயும் இருந்தார்கள்.
57 சாயங்காலமானபோது, அரிமத்தியா
ஊரானாகிய யோசேப்பு என்னும் ஐசுவரிய
வான் ஒருவன் வந்தான். இவனும் இயேசு
வுக்குச் சீஷன். இவன் பிலாத்துவினிடம் 58
போய் இயேசுவின் சரீரத்தைக் கேட்டான்.
அதைக் கொடுக்கப் பிலாத்து கட்டளையிட்
டான். யோசேப்பு சரீரத்தை எடுத்து, துய்ய 59
தான மெல்லிய துணியிலே சுற்றி, தான் 60
கற்பாறையில் வெட்டியிருந்த தன் புதிய
கல்லறையிலே அதை வைத்து, கல்லறை
யின் வாசலில் ஒரு பெரிய கல்லை உருட்டி
வைத்துப் போனான். மகதலேனா மரியா 61
ளும் மற்ற மரியாளும் அங்கே கல்லறைக்கு
எதிராக உட்கார்ந்திருந்தார்கள்.
அடுத்த நாளில், அதாவது ஆயத்த 62
நாளின் மறுநாளில், பிரதான ஆசாரியரும்
பரிசேயரும் பிலாத்துவினிடம் கூடிவந்து:
ஐயா, அந்த மோசக்காரன் உயிரோடிருக் 63
கும்போது, மூன்று நாளுக்குப்பின் எழுந்
திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு
ஞாபகமிருக்கிறது. ஆகையால் அவனு 64
னுடைய சீஷர் வந்து அவனைத் திருடிக்
கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்
தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்
கும், முந்தின மோசத்தைப்பார்க்கிலும் பிந்
தின மோசம் கொடிதாகாதபடிக்கும், நீர்
மூன்றாம் நாள்வரைக்கும் கல்லறையைப்
பத்திரப்படுத்தக் கட்டளையிடவேண்டும்
என்றார்கள். அதற்குப் பிலாத்து: உங்க 65
ளுக்குக் காவற்சேவகர் உண்டே, போய்
உங்களுக்குத் தோன்றுகிறபடி பத்திரப்
படுத்திக்கொள்ளுங்கள் என்றான். அவர்கள் 66
போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல்
வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தி
னார்கள்.

ஓய்வுநாள் முடிந்தது. வாரத்தின் **28**
முதலாம் நாள் விடிந்து வருகையில், மகத
லேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்ல
றையைப் பார்க்க வந்தார்கள். இதோ, 2
பெரிய பூமி அதிர்ச்சியுண்டாயிற்று; கர்த்த
ருடைய தூதன் வானத்திலிருந்து இறங்கி
வந்து வாசலிலிருந்த கல்லை உருட்டித்
தள்ளி, அதன்மேல் உட்கார்ந்தான். அவன் 3
ரூபம் மின்னல்போலவும் அவன் வஸ்திரம்
உறைந்த மழைபோல் வெண்மையாகவும்
இருந்தது. அவனைப்பற்றிய பயத்தினால் 4
காவலாளர் நடுநடுங்கிச் செத்தவர்கள்
போலானார்கள். தேவதூதன் அந்த ஸ்திரீ 5
களை நோக்கி: நீங்கள் பயப்படவேண்டாம்;
சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத்
தேடுகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்.
அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே 6
உயிர்த்தெழுந்தார்; அவரை வைத்த
இடத்தை வந்து பாருங்கள்; சீக்கிரமாய்ப் 7

போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார்
என்று அவருடைய சீஷருக்குச் சொல்
லுங்கள். அவர் உங்களுக்குமுன் கலிலே
யாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக்
காண்பீர்கள்; உங்களுக்குச் சொல்லிவிட்
8 டேன் என்றான். அவர்கள் சீக்கிரமாய்க்
கல்லறையை விட்டு, பயத்தோடும் மகா
சந்தோஷத்தோடும் அவருடைய சீஷருக்கு
9 அறிவிக்க ஓடினார்கள். ஓடவே, இயேசு
தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க
என்றார். அவர்கள் கிட்டவந்து அவர்
பாதங்களைத் தழுவி அவரைப் பணிந்து
10 கொண்டார்கள். இயேசு அவர்களிடம்:
பயப்படாதிருங்கள்; நீங்கள்போய், கலிலே
யாவுக்குப் போகும்படி என் சகோதரருக்
குச் சொல்லுங்கள்; அங்கே என்னைக் காண்
பார்கள் என்றார்.
11 அவர்கள் போகையில், காவலாளரில்
சிலர் நகரத்துக்குள் போய் நடந்த யாவற்
றையும் பிரதான ஆசாரியருக்கு அறிவித்
12 தார்கள். இவர்கள் மூப்பரோடே கூடி
வந்து ஆலோசனை செய்து, சேவகருக்குப்
13 போதுமான பணங்கொடுத்து: நாங்கள் நித்
திரை செய்கையில், அவனுடைய சீஷர் இர
வில் வந்து, அவனைக் களவாய்க் கொண்டு
போய்விட்டார்கள் என்று சொல்லுங்கள்;
இது தேசாதிபதியின் காதுக்கெட்டினால், 14
நாங்கள் அவருக்குச் சமாதானஞ்சொல்லி
உங்களைத் தப்புவிப்போம் என்றார்கள்.
அவர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு தங் 15
களுக்குக் கற்பிக்கப்பட்டபடியே செய்
தார்கள். யூதருக்குள்ளே இந்தப் பேச்சு
உண்டாகி இந்நாள்வரைக்கும் பிரசித்தமா
யிருக்கிறது.
பதினொரு சீஷருமோ இயேசு தங்களுக் 16
குக் குறித்திருந்தபடி கலிலேயாவிலுள்ள
மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் 17
அவரைக் கண்டு பணிந்துகொண்டார்கள்;
சிலரோ சந்தேகப்பட்டார்கள். அப் 18
பொழுது இயேசு கிட்ட வந்து அவர்களை
நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதி
காரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்
கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் 19
போய்ச் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள்;
பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்
திற்குள்ளாக அவர்களுக்கு ஞானஸ்நானங்
கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளை 20
யிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்
ளும்படி அவர்களுக்கு உபதேசியுங்கள்.
இதோ, யுக முடிவுபரியந்தம் சகல நாட்களி
லும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்
என்றார்.

மார்க்கு சுவிசேஷம்

1 தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவி
னுடைய சுவிசேஷத்தின் ஆரம்பம்.
2 இதோ, நான் என் தூதனை உமக்குமுன்
பாக அனுப்புகிறேன்;
அவன் உமக்கு வழியை ஆயத்தம்பண்
ணுவான்.
3 கர்த்தரின் வழியை ஆயத்தப்படுத்துங்கள்,
அவர் பாதைகளைச் செவ்வைபண்
ணுங்கள் என
வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய
சத்தம்
என்று ஏசாயா தீர்க்கதரிசன ஆகமத்தில்
4 எழுதியிருக்கிறபடி, யோவான்ஸ்நானகன்
வந்து, பாவமன்னிப்புக்கென்று மனந்
திரும்புதலுக்குரிய ஞானஸ்நானத்தைக்
குறித்து வனாந்தரத்தில் பிரசங்கம்பண்ணிக்
5 கொண்டிருந்தான். யூதேயா தேசம் முழுதும்
எருசலேம் நகரத்தார் யாவரும் அவனிடம்
போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு,
யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம்
6 பெற்றுவந்தார்கள். யோவான் ஒட்டக
மயிர் உடை தரித்து, தன் அரையில் வார்க்
கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்.
வெட்டுக்கிளியையும் காட்டுத் தேனையும்
7 புசித்துவந்தான். அவன்: என்னிலும் வல்
லவர் எனக்குப்பின் வருகிறார், அவர் பாத
ரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்
8 கவும் நான் தகுந்தவனல்ல. நான் ஜலத்தி
னால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்
தேன்; அவரோ பரிசுத்த ஆவியினால் உங்க
ளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று
பிரசங்கித்தான்.
9 அந்த நாட்களில், இயேசு கலிலேயாவி
லுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து, யோர்
தான் நதியில் யோவானால் ஞானஸ்நானம்
10 பெற்றார். அவர் ஜலத்திலிருந்து கரையே
றும்போது, உடனே வானம் பிளவுண்டு
ஆவியானவர் புறாவைப்போல் தம்மேல்
11 இறங்குகிறதைக் கண்டார். மேலும்: நீர் என்
நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கி
றேன் என்று வானத்திலிருந்து சத்தம்
உண்டாயிற்று.
12 உடனே ஆவியானவர் அவரை வனாந்த
13 ரத்திற்குப் போகத் தாண்டிவிட்டார். அவர்
நாற்பதுநாள் வனாந்தரத்தில் தங்கி,
சாத்தானால் சோதிக்கப்பட்டு, காட்டுமிரு
கங்களின் நடுவிலே சஞ்சரித்துக்கொண்
டிருந்தார். தேவதூதர் அவருக்குப் பணி
விடை செய்துவந்தார்கள்.
யோவான் சிறைக்கு ஒப்புவிக்கப்பட்ட 14
பின்பு இயேசு கலிலேயாவுக்கு வந்து, கடவு
ளின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் 15
நிறைவேறியிருக்கிறது, கடவுள் ராஜ்யம்
சமீபித்திருக்கிறது; மனந்திரும்பிச் சுவிசே
ஷத்தில் நம்பிக்கை வையுங்கள் என்றார்.
அவர் கலிலேயாக் கடலோரமாய்ப் 16
போகையில், சீமோனையும் அவன் சகோத
ரன் அந்திரேயாவையும் கண்டார். இவர்கள்
மீன் பிடிக்கிறவர்கள், கடலில் வலை
வீசிக்கொண்டிருந்தார்கள். இயேசு அவர் 17
களைப்பார்த்து: என் பின்னே வாருங்கள்,
உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்கு
வேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை 18
விட்டு அவரைப் பின்பற்றினார்கள். அவர் 19
சற்று அப்பால் போகவே, செபெதேயு
வின் மகன் யாக்கோபையும் அவன் சகோத
ரன் யோவானையும் கண்டார். அவர்கள்
படவிலே வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்
டிருந்தார்கள். உடனே அவர்களையும் 20
அழைக்க, அவர்கள் தங்கள் தகப்பன்
செபெதேயுவைக் கூலியாட்களோடு பட
விலே விட்டு அவருக்குப் பின்சென்றார்கள்.
அப்பால் கப்பர்நகூமுக்குள் போனார்கள். 21
உடனே அவர் ஓய்வுநாளில் ஜெபாலயத்தில்
பிரவேசித்துப் போதகம் பண்ணினார். அவர் 22
வேதபாரகரைப்போலப் போதியாமல் அதி
காரமுடையவராய் அவர்களுக்குப் போதித்து
வந்தபடியால், அவருடைய போதகத்தைக்
குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.
அந்நேரம் அவர்களுடைய ஜெபாலயத் 23
திலே அசுத்த ஆவி பிடித்த ஒரு மனுஷன்
இருந்தான். அவன்: நசரேயனாகிய இயே 24
சுவே, எங்களுக்கும் உமக்குமென்ன? எங்
களைக் கெடுக்க வந்தீர்; நீர் இன்னாரென்று
எனக்குத் தெரியும், நீர் கடவுளின் பரி
சுத்தர் என்று சத்தமிட்டுச் சொன்னான்.
அதற்கு இயேசு: பேசாதே, இவனை விட்டு 25
வெளியே போ என்று அதை அதட்டவே,

26 அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து,
மிகுந்த சத்தமிட்டு, அவனை விட்டுப் போய்
27 விட்டது. எல்லாரும் பிரமித்து: இது
என்ன? இது புதிய உபதேசம், அதிகார
முடையது. இவர் அசுத்த ஆவிகளுக்கும்
கட்டளையிடுகிறார், அவைகள் இவருக்குக்
கீழ்ப்படிகின்றனவே என்று தங்களுக்குள்
28 சொல்லிக்கொண்டார்கள். உடனே அவ
ருடைய பிரஸ்தாபம் கலிலேயாவின் சுற்றுப்
29 புறமெங்கும் பரவிற்று. உடனே அவர்கள்
ஜெபாலயத்தை விட்டு வெளியே வந்து,
யாக்கோபோடும் யோவானோடுங்கூட,
சீமோன் அந்திரேயா என்பவர்கள் வீட்டுக்
30 குப் போனார்கள். அங்கே சீமோனுடைய
மாமி ஜுரமாய்க் கிடந்தாள்; அவளைப்
பற்றி உடனே அவருக்குச் சொன்னார்கள்.
31 அவர் கிட்டப்போய்க் கையைப்பிடித்து
அவளைத் தூக்கிவிடவே, ஜுரம் அவளை
விட்டு நீங்கிற்று; அவள் அவர்களுக்குப்
பணிவிடை செய்தாள்.
32 சாயங்காலமாகிச் சூரியன் அஸ்தமிக்
கவே, சகல பிணியாளிகளையும் பேய் பிடித்
தவர்களையும் அவரிடம் கொண்டுவந்
33 தார்கள். ஊர் முழுதும் வீட்டு வாசலுக்கு
34 முன் வந்து கூடிவிட்டது. பலவித வியாதி
களினால் பீடிக்கப்பட்ட அநேகரை அவர்
குணமாக்கி, அநேக பேய்களையும் துரத்தி
விட்டார். அந்தப் பேய்கள் அவரை அறிந்
திருந்தபடியால், அவைகள் பேச அவர்
இடங்கொடுக்கவில்லை.
35 அதிகாலையில் இருட்டோடே அவர்
எழுந்து வனாந்தரமான இடத்திற்குப் போய்
36 அங்கே ஜெபித்துக்கொண்டிருந்தார். சீமோ
னும் அவனோடே இருந்தவர்களும் அவ
37 ரைப் பின்தொடர்ந்துபோய், அவரைக்
கண்டபோது: உம்மை எல்லாரும் தேடுகி
38 றார்கள் என்று சொல்ல, | அவர்: இவ்
விடம் விட்டு அடுத்த ஊர்களுக்குப்போ
வோம் வாருங்கள்; அங்கும் நான் பிரசங்
கிக்கவேண்டும்; இதற்காகவே நான் புறப்
39 பட்டு வந்தேன் என்று சொல்லி, கலிலேயா
நாடெங்கும் போய், அவர்களுடைய ஜெபா
லயங்களில் பிரசங்கித்துக்கொண்டும் பேய்
களைத் துரத்திக்கொண்டுமிருந்தார்.
40 குஷ்டரோகி ஒருவன் அவரிடம் வந்து,
அவர் முன் முழங்கால்படியிட்டு: உமக்குச்
சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலா
41 கும் என்று வேண்டிக்கொண்டான். அவர்
மனமுருகி, தமது கையை நீட்டி, அவனைத்
தொட்டு: எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு
42 என்றார். உடனே குஷ்டரோகம் அவனை
விட்டு நீங்கிற்று, அவன் சுத்தமானான்.
அவர் அவனுக்குக் கண்டிப்பாய்க் கட்டளை 43
யிட்டு: நீ ஒருவருக்கும் ஒன்றும் சொல்லாத
படி பார்; ஆயினும் நீ போய் ஆசாரியனுக்கு 44
உன்னைக் காண்பித்து, நீ சுத்தமானதினிமித்
தம், மோசே கட்டளையிட்டவைகளை அவர்
களுக்குச் சாட்சியாகச் செலுத்து என்று
சொல்லி, உடனே அவனைத் துரிதப்படுத்தி
அனுப்பினார். அவனோ போய், வெகுவாய்ப் 45
பிரஸ்தாபப்படுத்தி, இச்செய்தியைப் பரவச்
செய்தான். அதினிமித்தம் அவர் பகிரங்கமாய்
எந்த ஊருக்குள்ளும் செல்லக்கூடாமல்,
வெளியே வனாந்தரமான இடங்களில் தங்கி
வந்தார். எத்திசையிலுமிருந்து ஜனங்கள்
அவரிடம் வந்துகொண்டிருந்தார்கள்.

சில நாட்களுக்குப்பின்பு அவர் மறு **2**
படியும் கப்பர்நகூமுக்கு வந்தார். அவர்
வீட்டிலிருக்கிறாரென்று கேள்விப்பட்டு,
அநேக ஜனங்கள் கூடிவந்ததினால் வாச 2
லுக்கு முன்னும் இடமில்லாமற்போயிற்று;
அவர்களுக்கு அவர் வசனத்தைச் சொல்
லிக்கொண்டிருந்தார். அப்பொழுது நாலு 3
பேர் ஒரு திமிர்வாதக்காரனை அவரிடம்
சுமந்துகொண்டுவந்தார்கள்; ஜனக்கூட்ட 4
மிருந்ததால் அவனை அவர்முன் கொண்டு
போய் வைக்கமுடியாமல், அவர் இருந்த
இடத்தில் மேல்தட்டைப் பிரித்துத் திறப்
பாக்கி, திமிர்வாதக்காரன் படுத்திருந்த படுக்
கையை இறக்கினார்கள். இயேசு அவர்கள் 5
விசுவாசத்தைக் கண்டு திமிர்வாதக்கார
னிடம்: மகனே, உன் பாவங்கள் உனக்கு
மன்னிக்கப்பட்டன என்றார். அங்கே 6
வேதபாரகர் சிலர் உட்கார்ந்திருந்தார்கள்.
இவன் இப்படிப் பேசுகிறதென்ன? தேவ 7
தூஷணம் சொல்லுகிறானே; கடவுள் ஒரு
வரேயன்றிப் பாவங்களை மன்னிக்க வல்லவர்
யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்
துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்க 8
ளுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று
இயேசு உடனே தமது ஆவியில் அறிந்து:
நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச்
சிந்திக்கிறதென்ன? இந்தத் திமிர்வாதக்கார 9
னிடம், உன் பாவங்கள் மன்னிக்கப்பட்
டனவென்று சொல்வதோ, எழுந்து உன்
படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று
சொல்வதோ எது எளிது? என்றாலும், 10
பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷ
குமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை
நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி,
திமிர்வாதக்காரனிடம்: | நீ எழுந்து, உன் 11
படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்
டுக்குப்போ என்று உனக்குச் சொல்லு

12 கிறேன் என்றார். உடனே அவன் எழுந்து
தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்
லாருக்கும் முன்பாக வெளியே போனான்.
இதைக் கண்டு யாவரும் பிரமித்து: நாம்
ஒருகாலும் இப்படிக் கண்டதில்லையே
என்று சொல்லி, கடவுளை மகிமைப்படுத்தி
னார்கள்.
13 அவர் மறுபடியும் கடலோரம் போகவே
ஜனங்களெல்லாரும் அவரிடம் வந்தார்கள்;
அவர்களுக்குப் போதித்துக்கொண்டிருந்
14 தார். அவர் அப்பால் போகையில், அல்பேயு
வின் குமாரன் லேவி ஆயத்துறையில் உட்
கார்ந்திருக்கிறதைக் கண்டு: என்னைப் பின்
பற்றி வா என்றார்; அவன் எழுந்து அவ
15 ரைப் பின்பற்றிப்போனான். அவன் வீட்டில்
அவர் பந்தியிருக்கையில், ஆயக்காரர்
பாவிகள் அநேகர் இயேசுவோடும் அவருக்
குப் பின்செல்லும் சீஷர் அநேகரோடும் பந்தி
16 யிருந்தார்கள். அவர் ஆயக்காரரோடும் பாவி
களோடும் போஜனம்பண்ணுகிறதைப் பரி
சேயரைச் சேர்ந்த வேதபாரகர் கண்டு, அவ
ருடைய சீஷரிடம்: அவர் ஆயக்காரரோடும்
பாவிகளோடும் போஜனம்பண்ணுகிற
தென்ன என்று சொல்லிக்கொண்டார்கள்.
17 இயேசு அதைக்கேட்டு: பிணியாளிகளுக்கு
வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுக
முள்ளவர்களுக்கு வேண்டியதில்லை; நீதிமான்
களையல்ல, பாவிகளையே அழைக்கவந்தேன்
என்று அவர்களிடம் சொன்னார்.
18 யோவானுடைய சீஷரும் பரிசேயரு
டைய சீஷரும் உபவாசித்துவந்தார்கள்.
அவர்கள் அவரிடம் வந்து: யோவானு
டைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும்
உபவாசிக்கிறார்களே, உம்முடைய சீஷர்
உபவாசியாமலிருக்கிறதென்ன என்று கேட்
19 டார்கள். அதற்கு இயேசு: மணவாளன்
தங்களோடிருக்கையில் கலியாணக்காரர்
உபவாசிப்பதெப்படி? மணவாளன் தங்க
ளுடன் இருக்குமளவும் உபவாசிக்க
20 முடியாது. மணவாளன் அவர்களை விட்டு
எடுபடும் நாட்கள் வரும், அந்நாளிலே உப
21 வாசிப்பார்கள். ஒருவனும் கோடித்துண்
டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்க
மாட்டான்; இணைத்தால் அதனோடு
இணைத்த புதுத்துண்டு பழையதை அதிக
22 மாய்க் கிழிக்கும், பீறலும் பெரிதாகும். ஒரு
வனும் புதுத்திராட்சரசத்தைப் பழந் துருத்தி
களில் வார்த்து வைக்கமாட்டான்; வார்த்து
வைத்தால் இரசம் துருத்திகளைக் கிழித்
துப்போடும், இரசமும் துருத்திகளும் கெட்
டுப்போம்; புது இரசத்தைப் புதுத் துருத்தி
களில் வார்த்து வைப்பார்கள் என்றார்.

பின்பு அவர் ஓய்வுநாளில் பயிர்வழியே 23
போனபோது, அவருடைய சீஷர் கதிர்களைக்
கொய்துகொண்டு நடந்துபோகத் தொடங்கி
னார்கள். பரிசேயர் அவரைப் பார்த்து: செய் 24
யத்தகாததை ஓய்வுநாளில், இதோ, இவர்கள்
செய்கிறதென்ன என்று சொல்ல, | அவர்: 25
தாவீதுக்குக் குறையுண்டானபோது,
அவனும் அவனோடிருந்தவர்களும் பசியா
யிருக்கையில், அவன் செய்ததை நீங்கள்
ஒருகாலும் வாசிக்கவில்லையா? அபியத்தார் 26
என்னும் பிரதான ஆசாரியன் காலத்தில்,
கடவுளுடைய வீட்டிற்குட் சென்று, ஆசா
ரியர் தவிர வேறொருவரும் புசிக்கக்கூடாத
தேவசமுகத்து அப்பங்களைத் தானும் புசித்
துத் தன்னோடிருந்தவர்களுக்கும் கொடுத்
தானே என்று சொன்னார். பின்னும், ஓய்வு 27
நாள் மனுஷனுக்காகப் படைக்கப்பட்டது,
மனுஷன் ஓய்வுநாளுக்காகப் படைக்கப்
படவில்லை; ஆகவே மனுஷகுமாரன் ஓய்வு
நாளுக்கும் ஆண்டவர் என்றார்.

திரும்பவும் அவர் ஜெபாலயத்துக்குப் 3
போனார். அங்கே சூம்பின கையன் ஒருவன்
இருந்தான். அவர்மேல் குற்றஞ்சாட்டும் 2
நோக்கமுடையவர்களாய், ஓய்வுநாளில்
இவனைக் குணமாக்குவாரோ என்று அவ
ரைக் கவனித்துப்பார்த்துக் கொண்டிருந்
தார்கள். அவர் சூம்பின கையனைப் பார்த்து: 3
எழுந்து நடுவே வா என்று சொல்லி, |
அவர்களைப் பார்த்து: ஓய்வுநாளில் நன்மை 4
செய்வதோ தீமை செய்வதோ, ஜீவனைக்
காப்பதோ கொல்வதோ, எது நியாயம் என்
றார்; அவர்களோ பேசாமலிருந்தார்கள்.
அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித் 5
தம் அவர் விசனப்பட்டு, கோபத்துடனே
சுற்றிப்பார்த்து, அந்த மனுஷனை நோக்கி:
உன் கையை நீட்டு என்றார்; அவன்
நீட்டினான்; அவன் கை சொஸ்தமாயிற்று.
பரிசேயர் வெளியே போய் அவரை எப்ப 6
டிக் கொலைசெய்யலாமென்று அவருக்கு
விரோதமாய் உடனே ஏரோதியரோடு ஆலோ
சனை செய்தார்கள்.
இயேசுவோ விலகி, தம்முடைய சீஷ 7
ரோடு கடலோரத்துக்குப் போனார். கலிலே
யாவிலிருந்து வந்திருந்த திரள் ஜனங்கள் அவ
ருக்குப் பின்சென்றார்கள். யூதேயாவிலும், 8
எருசலேமிலும், இதுமேயாவிலும், யோர்தா
னுக்கு அப்புறத்திலும், தீருசீதோன் சுற்றுப்
புறங்களிலுமிருந்து திரள் ஜனங்கள் அவர்
செய்தவைகளையெல்லாம் கேள்விப்பட்டு,
அவரிடம் வந்தார்கள். அவர் அநேகரைச் 9
சொஸ்தமாக்கினபடியால், நோயாளிகளெல்

லாரும் அவரைத் தொடவேண்டுமென்று
10 அவர்மேல் விழுந்து நெருக்கினார்கள். ஜனக்
கூட்டம் மிகுதியாயிருக்கவே, அவர்கள்
தம்மை நெருக்கிவிடாதபடி தமக்கு ஒரு
படவை ஆயத்தம்பண்ணச் சீஷரிடம்
11 சொன்னார். அசுத்த ஆவிகளும் அவரைக்
கண்டபோதெல்லாம் அவர் காலில்
விழுந்து: நீர் தேவகுமாரன் என்று சத்த
12 மிட்டன. அவைகள் தம்மைப் பிரசித்தம்
பண்ணாதபடி வெகு கண்டிப்பாய்க் கட்
டளையிட்டார்.
13 பின்பு அவர் மலையின்மேல் ஏறி, தமக்
குச் சித்தமானவர்களைத் தம்மிடம் அழைத்
தார். அவர்கள் அவரிடத்திற்கு வந்தார்கள்.
14 அப்பொழுது அவர் பன்னிரண்டு பேரை
நியமித்து, அவர்கள் தம்மோடுகூட இருக்க
வும், பிரசங்கம்பண்ணும்படி தாம் அவர்
15 களை அனுப்பவும், பேய்களைத் துரத்தும்
அதிகாரமுடையவர்களாய் இருக்கவும்,
16 அவர்களை ஏற்படுத்தினார். அவர்கள்
யாரெனில்: சீமோன், இவனுக்குப் பேதுரு
17 என்று பெயரிட்டார்; செபெதேயுவின்
குமாரன் யாக்கோபு, யாக்கோபின்
சகோதரன் யோவான், இவ்விருவருக்கும்
இடிமுழக்க மக்களென்று அர்த்தங்கொள்
ளும் போவனெர்கெஸ் என்கிற பெயரிட்
18 டார்; அந்திரேயா, பிலிப்பு, பர்த்தொலொ
மேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின்
குமாரன் யாக்கோபு, ததேயு, கானானியனா
19 கிய சீமோன், அவரைக் காட்டிக்கொடுத்த
யூதாஸ்காரியோத்து என்பவர்களே.
20 பின்பு வீட்டுக்கு வந்தார்; அவர்கள்
சாப்பிடுவதற்கும் சமயமில்லாதபடி அநேக
ஜனங்கள் மறுபடியும் வந்து கூடினார்கள்.
21 அதைக் கேள்விப்பட்ட அவருடைய
இனத்தார்: அவர் மதிமயங்கியிருக்கிறார்
என்றுசொல்லி அவரைப் பிடித்துக்கொள்ள
22 வந்தார்கள். எருசலேமிலிருந்து வந்த வேத
பாரகர்: இவன் பெயெல்செபூல் பிடித்த
வன், பேய்களின் தலைவனாலே பேய்களை
23 ஓட்டுகிறான் என்றார்கள். அவர்களைத் தம்
மிடம் அழைத்து, உவமைகள் மூலமாய்
அவர்களோடு பேசினார்: சாத்தானைச் சாத்
24 தான் துரத்துவது எப்படி? ஒரு ராஜ்யம்
தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்
தால், அந்த ராஜ்யம் நிலைநிற்கமுடியாதே.
25 ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாய்ப்
பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமுடி
26 யாதே. சாத்தான் தனக்குத்தானே விரோத
மாய் எழும்பிப் பிரிந்திருந்தால், அவன்
நிலைநிற்கமுடியாது, அவனுக்கு முடிவு
27 வந்தாயிற்று. பலவானை முந்திக் கட்டினா
லொழிய ஒருவனும் பலவானுடைய வீட்
டுக்குள் புகுந்து, அவன் உடைமைகளைக்
கொள்ளையிடமுடியாது; கட்டினானேயாகில்,
அவன் வீட்டைக் கொள்ளையடித்துவிடு
வான். மெய்யாகவே நான் உங்களுக்குச் 28
சொல்லுகிறேன்: மனுப்புத்திரர் செய்யும்
எல்லாப் பாவங்களும் அவர்கள் பேசும்
எந்தத் தூஷணமும் அவர்களுக்கு மன்னிக்
கப்படும்; ஒருவன் பரிசுத்த ஆவிக்கு 29
விரோதமாகத் தூஷணம் பேசுவானாகில்,
அவன் என்றென்றைக்கும் மன்னிப்படை
யாமல் நித்திய பாவத்திற்கு ஆளாவான்
என்றார். இவன் அசுத்த ஆவி பிடித்திருக் 30
கிறவன் என்று அவர்கள் சொன்னபடி
யினால் அவர் இப்படிச் சொன்னார்.
அப்பொழுது அவர் தாயாரும் சகோதர 31
ரும் வந்து வெளியே நின்று, அவரை
அழைக்கும்படி அவரிடம் ஆள் அனுப்பி
னார்கள். அவரைச் சுற்றிலும் ஜனங்கள் 32
உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள்: இதோ,
உம் தாயாரும் உம் சகோதரரும் உம்
சகோதரிகளும் வெளியே நின்று உம்மைத்
தேடுகிறார்களென்று சொல்ல, | அவர்: என் 33
தாயாரும் என் சகோதரரும் யார் என்று
சொல்லி, தம்மைச் சூழ உட்கார்ந்திருந்த 34
வர்களைச் சுற்றிப்பார்த்து: இதோ, என்
தாயும் என் சகோதரரும் இவர்களே; கடவு 35
ளின் சித்தப்படி செய்கிறவன் எவனோ
அவனே என் சகோதரன், என் சகோதரி,
என் தாய் என்றார்.

அவர் மறுபடியும் கடலோரத்தில் போத **4**
கம்பண்ணத் தொடங்கினார். திரளான
ஜனங்கள் அவரிடம் கூடிவந்தபடியால்,
அவர் கடலில் ஒரு படவிலேறி உட்கார்ந்
தார்; ஜனங்களெல்லாரும் கடற்கரையில்
இருந்தார்கள். அவர் பல காரியங்களை உவ 2
மைகளாக அவர்களுக்குப் போதித்துக்
கொண்டிருந்தார். போதிக்கிறபொழுது: |
கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக் 3
கப்போனான். அவன் விதைக்கையில், சில 4
விதைகள் பாதையில் விழுந்தன; பறவைகள்
வந்து அவற்றைப் பட்சித்துப்போட்டன.
சில விதைகள் அதிக மண்ணில்லாத கற் 5
பாறை நிலத்தில் விழுந்தன; ஆழமான
மண்ணில்லாததினால் சீக்கிரம் முளைத்தன; |
வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், 6
வேரில்லாமையால் உலர்ந்துபோயின. சில 7
விதைகள் முள்ளுக்குள் விழுந்தன; முள்
வளர்ந்து அவற்றை நெருக்கிப்போட்டது;
அவை பலன் கொடுக்கவில்லை. சில விதை 8
களோ நல்ல நிலத்தில் விழுந்தன; அவை

முளைத்து வளர்ந்து, முப்பதும் அறுபதும்
9 நூறுமாக விளைந்து, பலன் தந்தன. கேட்கக்
காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று அவர்
களுக்குச் சொன்னார்.
10 அவர் தனித்திருக்கும்போது, பன்னிருவ
ரோடுங்கூட அவரைச் சூழ்ந்திருந்தவர்கள்
அவரிடம் உவமைகளைப்பற்றிக் கேட்
11 டார்கள். அவர்: கடவுள் ராஜ்யத்தின்
இரகசியம் உங்களுக்கு அருளப்பட்டது;
வெளியே இருக்கிறவர்களோ,
12 ஒருகாலும் மனந்திரும்பி
மன்னிப்புப் பெறாதிருப்பதற்கேதுவாய்,
கண்ணாரக் கண்டும் அறியாமலும்,
காதாரக்கேட்டும் உணராமலுமிருக்கும்
படி, எல்லாம் அவர்களுக்கு உவமைகளாக
13 ஏற்படுகிறதென்று சொன்னார். பின்னும்
அவர்களிடம்: இந்த உவமை உங்களுக்குத்
தெரியவில்லையா? தெரியாவிட்டால் மற்ற
உவமைகளையெல்லாம் எப்படி அறிவீர்கள்?
14 விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.
15 பாதையில் விதைக்கப்பெறுகிறவர்கள்
இவர்களே: வசனத்தைக் கேட்டவுடனே
சாத்தான் வந்து அவர்களுக்குள் விதைக்
கப்பட்ட வசனத்தை எடுத்துவிடுகிறான்.
16 அப்படியே கற்பாறை இடங்களில் விதைக்
கப்பெறுகிறவர்கள் வசனத்தைக் கேட்கும்
போதெல்லாம் அதை உடனே சந்தோஷத்
17 தோடு ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆகிலும்,
தங்களில் வேர் இல்லாதவர்களாய், கொஞ்
சக்காலம் மாத்திரம் நிலைத்திருக்கிறார்கள்,
வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்ப
மும் உண்டானவுடனே இடறிவிழுகிறார்கள்.
18 முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பெறு
கிறவர்கள் வசனத்தைக் கேட்கிறார்கள்;
19 ஆயினும், பிரபஞ்சக் கவலைகளும், ஐசுவரி
யத்தின் வஞ்சகமும், மற்றவைகளைப்பற்றிய
இச்சைகளும் உட்புகுந்து வசனத்தை
நெருக்கிப்போடுகிறது; ஆதலால் அது பல
20 னற்றுப்போகிறது. நல்ல நிலத்தில் விதைக்
கப்பெற்றவர்களோ வசனத்தைக் கேட்டு
ஏற்றுக்கொண்டு, முப்பதும் அறுபதும்
நூறுமாகப் பலன் தருகிறார்கள் என்று
சொன்னார்.
21 பின்னும் அவர் அவர்களிடம்: விளக்
கைக் கொண்டுவருவது எதற்கு? மரக்கா
வின் கீழாகினும் கட்டிலின் கீழாகினும்
வைப்பதற்கா? தண்டின்மேல் வைப்பதற்
22 கல்லவா? பகிரங்கமாகாத அந்தரங்கம்
ஒன்றுமில்லை, வெளிப்படாத மறைபொரு
23 ளும் ஒன்றுமில்லை. கேட்க ஒருவனுக்
குக் காதிருந்தால் அவன் கேட்கக்கடவன்
24 என்றார். பின்னும் அவர் அவர்களிடம்:
நீங்கள் எதைக் கேட்கிறீர்கள் என்பதைப்
பற்றி எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள்
அளக்கிற அளவின்படியே உங்களுக்கு
அளக்கப்படும், அதிகமும் கொடுக்கப்படும்.
உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப் 25
படும்; இல்லாதவனெவனோ அவனிடத்தில்
உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்
என்றார்.
பின்னும் அவர்: கடவுள் ராஜ்யம், ஒரு 26
மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து,
இரவும் பகலும் தூங்கியும் விழித்துமிருக்க, 27
அவனுக்குத் தெரியாத விதமாய் விதை
முளைத்துப் பயிராகிறதுபோலாகும். நிலம் 28
முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதி
ரிலே நிறைந்த மணியையும் பலனைத்
தானாய்க் கொடுக்கும். பயிர் விளைந்திருக் 29
கும்போதோ, அறுப்பு வந்துவிட்டதென்று
அறுக்கிறதற்கு ஆள் விடுகிறான் என்றார்.
பின்னும்: கடவுள் ராஜ்யத்தை எதற்கு 30
ஒப்பிடுவோம்? அல்லது எந்த உவமையைச்
சொல்லி அதைக் காட்டுவோம்? அது ஒரு 31
கடுகுவிதையைப்போலாகும்; இது பூமி
யில் விதைக்கப்படும்போது, பூமியிலுள்ள
சகல விதைகளிலும் சிறியதே; விதைக்கப் 32
பட்டபின்போ, வளர்ந்து, சகல செடிகளி
லும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள்
அதன் நிழலின்கீழ் வந்தடையத்தக்க
பெரிய கிளைகளை விடும் என்று சொன்னார்.
அவர்கள் கேட்டறியும் திராணிக்குத் 33
தக்கதாக, அவர் இப்படிப்பட்ட அநேக
உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்
தைப் போதித்துவந்தார். உவமையினாலே 34
யன்றி அவர்களிடம் பேசவில்லை; தம்மு
டைய சீஷருக்கோ எல்லாவற்றையும்
தனியே விளக்கிக் காட்டி வந்தார்.
அதே நாளில் சாயங்காலமானபோது, 35
அவர் அவர்களைப்பார்த்து: அக்கரைக்குப்
போவோமென்று சொல்ல, அவர்கள் ஜனங் 36
களை அனுப்பிவிட்டு, அவர் படவிலிருந்த
படியே அவரைக் கொண்டுபோனார்கள்.
வேறே படவுகளும் அவரோடு போயின.
அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டா 37
னது. அலைகள் படவின்மேல் மோதவே,
படவு நிரம்ப ஆரம்பித்தது. அவரோ பட 38
வின் பின்னணியத்தில் தலையணை வைத்து நித்
திரை செய்துகொண்டிருந்தார். அவர்கள்
அவரை எழுப்பி: போதகரே, நாங்கள்
மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா
என்றார்கள். அவர் விழித்தெழுந்து காற்றை 39
அதட்டி, கடலைப் பார்த்து: இரையாதே.
சும்மா இரு என்றார். அப்பொழுது காற்று
நின்றது; மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

40 அவரோ அவர்களிடம்: இப்படிப் பயப்படு
வானேன்? உங்களுக்கு ஏன் இன்னும் நம்
41 பிக்கை வரவில்லை என்றார். அவர்கள்
மிகவும் பயந்து: இவர் யாரோ! காற்றும்
கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே
என்று ஒருவரோடொருவர் சொல்லிக்
கொண்டார்கள்.

5 அவர்கள் கடலுக்கு அக்கரையில் கெர
2 சேனர் நாட்டில் வந்துசேர்ந்தார்கள். அவர்
படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த
ஆவியுள்ள ஒரு மனுஷன் கல்லறைகளி
லிருந்து அவருக்கு எதிராக வந்தான். |
3 கல்லறைகள் அவன் தங்குமிடம். சங்கிலி
களினாலுங்கூட ஒருவனும் அவனைக் கட்டி
4 வைக்க முடியாமலிருந்தது. அவன் பல
முறை விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும்
கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து
விலங்குகளை ஒடித்துப்போடுவான். அவனை
5 அடக்க ஒருவனாலும் முடியவில்லை. அவன்
இராப்பகல் எப்பொழுதும் கல்லறைகளி
லும் மலைகளிலும் அலறி, கற்களால் தன்
னைக் காயப்படுத்திக்கொண்டிருந்தான்.
6 அவன் தூரத்திலிருந்து இயேசுவைக் கண்டு
ஓடிவந்து அவரைப் பணிந்துகொண்டு:
7 இயேசுவே, உன்னதமான கடவுளின் குமா
ரனே, எனக்கும் உமக்கும் என்ன? கட
வுள்மேல் ஆணை, என்னை வேதனைப்படுத்த
வேண்டாமென்று மிகுந்த சத்தமிட்டு அல
8 றிச் சொன்னான். அவர் அவனைப்பார்த்து:
அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டு
வெளியே வா என்று சொன்னதினாலே
9 இப்படிச் சொன்னான். அவர்: உன் பேர்
என்னவென்று அவனைக் கேட்க, அவன்:
நாங்கள் அநேகராதலால் என் பேர் [1]லேகி
10 யோன் என்று சொல்லி, அந்த நாட்டி
லிருந்து தங்களை அனுப்பிவிடாதபடி அவரை
11 மிகவும் வேண்டிக்கொண்டான். அவ்
விடத்தில் மலையருகே பெரிய பன்றிக்கூட்
12 டம் மேய்ந்துகொண்டிருந்தது. அந்தப்
பேய்கள்: பன்றிகளுக்குள் போகும்படி
எங்களை அவைகளிடம் அனுப்பும் என்று
13 அவரிடம் வேண்டிக்கொள்ள, இயேசு
அவைகளுக்கு உத்தரவு கொடுத்தார்.
உடனே அசுத்த ஆவிகள் வெளியேறிப்
பன்றிகளுக்குள் புகுந்தன; புகவே, பன்றிக்
கூட்டம் மேட்டிலிருந்து கடலில் பாய்ந்து
அமிழ்ந்து மாண்டது. பன்றிகள் ஏறக்
14 குறைய இரண்டாயிரம். அவைகளை மேய்த்
துக்கொண்டிருந்தவர்கள் ஓட்டம்பிடித்து,
இதை ஊரிலும் சுற்றுப்புறங்களிலும் அறி
வித்தார்கள். அறிவிக்கவே, சம்பவித்தது
இன்னதென்று பார்க்கும்படி ஜனங்கள் வந்
தார்கள். அவர்கள் இயேசுவினிடம் வந்து, 15
லேகியோன் என்ற பேய் பிடித்திருந்தவன்
வஸ்திரம் தரித்து, புத்தி தெளிந்து உட்கார்ந்
திருக்கிறதைக் கண்டு, திகிலடைந்தார்கள்.
பேய் பிடித்திருந்தவனுக்கு நேரிட்டதையும் 16
பன்றிகள் சங்கதியையும் பார்த்துக்கொண்
டிருந்தவர்கள் அவர்களுக்கு விவரித்துச்
சொன்னார்கள். அதைக் கேட்கவே, தங்கள் 17
திசையை விட்டுப்போகும்படி அவரை
வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்கள்.
அப்படியே அவர் படவில் ஏறும்பொழுது, 18
பேய்பிடித்திருந்தவன் அவரோடே இருக்கும்
படி உத்தரவு கேட்க, இயேசு அவனுக்கு 19
உத்தரவு கொடாமல்: நீ உன் வீட்டிற்குப்
போய், கர்த்தர் உனக்கு எவ்வளவு பெரிய
காரியங்களைச் செய்து இரக்கம் பாராட்டினா
ரென்று உன் பந்துக்களுக்கு அறிவி என்று
சொன்னார். அப்படியே அவன் போய், 20
இயேசு தனக்கு எவ்வளவு பெரிய காரியங்
களைச் செய்தாரென்று தெக்கப்போலி நாட்
டில் பிரசித்தம்பண்ணத் தொடங்கினான்;
எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.
இயேசு படவிலேறி மறுபடியும் இக் 21
கரைக்கு வந்தபோது, திரளான ஜனங்கள்
அவரிடம் வந்து கூடினார்கள். அவர் கட
லோரத்திலிருந்தார். அப்பொழுது ஜெபா 22
லயத் தலைவரில் ஒருவன், யவீரு என்பவன்,
அங்கு வந்து அவரைக் காணவே, அவர்
பாதத்தில் விழுந்து: என் மகள் மரண 23
அவஸ்தையில் இருக்கிறாள்; அவள் குண
மாகிப் பிழைக்கும்படி நீர் வந்து, அவள்
மேல் உமது கைகளை வைத்தருளும் என்று
அவரை மிகவும் வேண்டிக்கொண்டான். |
அவர் அவனோடுகூடப் போனார். திரளான 24
ஜனங்கள் அவருக்குப் பின்சென்று, அவரை
நெருக்கிக்கொண்டிருந்தார்கள்.
பன்னிரண்டு வருஷம் பெரும்பாடுள்ள 25
ஒரு ஸ்திரீ இருந்தாள். இவள் அநேக 26
வைத்தியர்களால் பல பாடுபட்டு, தனக்
குண்டானவைகளையெல்லாம் செலவழித்
தும் சற்றாகிலும் குணமடையாமல், வியாதி
அதிகரிக்கப்பெற்றவள். இவள் இயேசு 27
வைப்பற்றிய சங்கதிகளைக் கேள்விப்பட்டு:
நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும்
தொட்டால் குணமடைவேன் என்று சொல்
லிக்கொண்டு, ஜனக்கூட்டத்தில் அவருக் 28
குப் பின்னாக வந்து அவர் வஸ்திரத்தைத்

[1] மத். 26: 53 பார்க்க.

29 தொட்டாள். உடனே அவளுடைய உதிரப்
பெருக்கு நின்றுபோயிற்று; தன் பாடு
நீங்கிச் சுகமடைந்ததை அவள் சரீரத்தில்
30 உணர்ந்தாள். உடனே இயேசு தம்மி
லிருந்து வல்லமை வெளிப்பட்டதைத்
தமக்குள் அறிந்து,ஜனக்கூட்டத்தில் திரும்பி:
என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று
31 கேட்டார். அதைக் கேட்ட அவருடைய
சீஷர்: திரளான ஜனங்கள் உம்மை நெருக்
கிக்கொண்டிருக்கிறதை நீர் கண்டும் என்
னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே
32 என்றார்கள். இதைச் செய்தவளைக் காணும்
படி அவர் சுற்றிலும் பார்த்துக்கொண்
33 டிருந்தார். அந்த ஸ்திரீயோ தனக்குச் சம்ப
வித்ததை அறிந்து, பயந்து நடுங்கி, அவர்
முன்பாக வந்து விழுந்து, உண்மையை
34 யெல்லாம் அவருக்குச் சொன்னாள். அவர்
அவளைப் பார்த்து: மகளே, உன் விசுவாசம்
உன்னைக் குணமாக்கினது, சமாதானத்
தோடே போய், உன் பாடு நீங்கிச் சுகமா
யிரு என்றார்.
35 அவர் இன்னும் பேசிக்கொண்டிருக்கை
யில், ஜெபாலயத்தலைவன் வீட்டிலிருந்து
சிலர் வந்து: உம்முடைய மகள் மரித்துப்
போனாள், போதகரை இனி தொந்தரவு
36 செய்வானேன் என்றார்கள். அவர்கள்
சொன்ன வார்த்தை அவர் காதிற்படவே,
இயேசு ஜெபாலயத்தலைவனைப் பார்த்து: பயப்
படாதே, நம்பிக்கையுள்ளவனாகவே இரு
37 என்று சொன்னார். பின்பு, பேதுரு, யாக்
கோபு, யாக்கோபின் சகோதரன் யோவான்
இவர்களைத் தவிர வேறொருவரும் தம்
மோடு வருகிறதற்கு இடங்கொடாமல், |
38 ஜெபாலயத்தலைவன் வீட்டுக்கு வந்து, சந்
தடியையும் மிகவும் அழுது புலம்புகிறவர்
39 களையும் கண்டு, | உள்ளே சென்று: நீங்கள்
சந்தடிபண்ணி அழுகிறதென்ன? பிள்ளை
மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்
40 என்று சொன்னார்; சொல்லவே, அவர்கள்
அவரைப் பார்த்து நகைத்தார்கள். எல்லா
ரையும் அவர் வெளியே துரத்திவிட்டு, பிள்
ளையின் தகப்பனையும் தாயையும், தம்மோடு
வந்தவர்களையும் அழைத்துக்கொண்டு,
பிள்ளை இருந்த அறைக்குட்சென்று, |
41 பிள்ளையின் கையைப் பிடித்து: தலீத்தா கூமி
என்றார்; அதற்கு: சிறு பெண்ணே, எழுந்
திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று
42 அர்த்தமாம். உடனே சிறு பெண் எழுந்து
நடந்தாள்; அவள் பன்னிரண்டு வயதுள்ள
வள். உடனே அவர்கள் மிகவும் ஆச்சரி
43 யப்பட்டுப் பிரமித்தார்கள். அதை ஒருவ
ரும் அறியவேண்டாம் என்று அவர்களுக்
குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார். அவ
ளுக்கு ஆகாரம் கொடுக்கும்படி சொன்
னார்.

அவர் அவ்விடம் விட்டுத் தம் சொந்த 6
ஊருக்கு வந்தார்; அவர் சீஷரும் அவ
ரைத் தொடர்ந்துவந்தார்கள். ஓய்வுநாள் 2
வந்தபோது, ஜெபாலயத்தில் உபதேசம்
பண்ணத்தொடங்கினார். அநேகர் கேட்டுப்
பிரமிப்படைந்து: இவைகள் இவனுக்கு
எங்கேயிருந்து வந்தன? இவனுக்கு அருளப்
பட்டிருக்கும் ஞானம் எப்படிப்பட்டது?
இவன் கைகளால் இவ்வித வல்ல செயல்கள்
நடந்து வருகின்றனவே, இதென்ன? |
இவன் தச்சனல்லவோ? மரியாள் மகனல் 3
லவோ? யாக்கோபு, யோசே, யூதா, சீமோன்
என்பவர்களுக்கு இவன் சகோதரன் அல்
லவோ? இவன் சகோதரிகளும் இங்கே
நம்மிடம் இருக்கிறார்கள் அல்லவோ
என்று சொல்லி அவர் விஷயமாய் இடறி
னார்கள். அவர்களிடம் இயேசு: தீர்க்க 4
தரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் சுற்றத்
தாரிலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்
கும் கனமடையாதிரான் என்றார். அங்கே 5
அவர் சில நோயாளிகள்மேல் கைகளை
வைத்து அவர்களைக் குணமாக்கினதேயன்றி,
வேறொரு வல்லசெயலும் செய்யமுடியா
மற்போயிற்று. அவர்களுடைய அவிசுவா 6
சத்தைப்பற்றி ஆச்சரியப்பட்டார்.
அவர் கிராமங்களிலே சுற்றித்திரிந்து உப
தேசஞ் செய்துகொண்டுவந்தார். பன்னிரு 7
வரையும் தம்மிடம் அழைத்து, இருவர்
இருவராய் அவர்களை அனுப்பத்தொடங்கி,
அசுத்த ஆவிகள்மேல் அவர்களுக்கு அதி
காரம் கொடுத்தார். வழிக்குத் தடியைத் 8
தவிர, ஆகாரம், பை, கச்சையில் காசு
இவைகளைக் கொண்டுபோகவேண்டா
மென்றும், பாதரட்சைகளைப் போட்டுக் 9
கொண்டு போவதன்றி, இரண்டு அங்கிகளைத்
தரித்துக்கொண்டு போகவேண்டாமென்றும்
அவர்களுக்குக் கட்டளையிட்டார். பின்பு 10
அவர்களைப் பார்த்து: நீங்கள் எங்கேயாகிலும்
ஒரு வீட்டுக்குப் போனால், அவ்விடத்தை
விட்டுப் போகுமளவும் அங்கேயே தங்கி
யிருங்கள். எந்த ஊரிலாகிலும் உங்களை 11
ஏற்றுக்கொள்ளாமலும், நீங்கள் சொல்வ
தைக் கேளாமலும் போனால், நீங்கள் அவ்
விடம் விட்டுப் போகும்போது, அவர்களுக்
குச் சாட்சியாக உங்கள் கால்களில் படிந்த
தூசியை உதறிப்போடுங்கள் என்றார். அப் 12
படியே அவர்கள் போய், மனந்திரும்ப
வேண்டும் என்று பிரசங்கித்து, பல பேய் 13

களைத் துரத்தி, பல நோயாளிகளை எண்
ணெய் பூசிக் குணமாக்கிவந்தார்கள்.
14 அவருடைய பேர் பிரசித்தமானது;
ஏரோது அரசனும் அவரைப்பற்றிக்
கேள்விப்பட்டான். யோவான் ஸ்நானகன்
மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டான்,
ஆகையால் இவனிடம் இந்த வல்ல
செயல்கள் விளங்குகின்றன என்றார்கள்.
15 சிலரோ அவன் எலியா என்றார்கள். வேறு
சிலர்: அவன் தீர்க்கதரிசிகளில் ஒருவனைப்
போன்ற தீர்க்கதரிசி என்று சொன்னார்கள்.
16 ஏரோது அதைக் கேட்டபொழுது: அவன்
நான் சிரச்சேதம்பண்ணின யோவான்தான்;
அவன் எழுந்தான் என்று சொன்னான்.
17 ஏரோது தன் சகோதரன் பிலிப்புவின்
மனைவி ஏரோதியாளைத் தனக்கு மனைவியாக்
18 கிக்கொண்டிருந்தான். உம் சகோதரன்
மனைவியை நீர் வைத்துக்கொள்வது நியாய
மல்ல என்று யோவான் ஏரோதுக்குச்
சொல்லிக்கொண்டிருந்தான். ஆதலால்
ஏரோதியாளினிமித்தம், ஏரோது சேவகரை
அனுப்பி, யோவானைப் பிடித்துக் கட்டிக்
19 காவலில் வைத்திருந்தான். ஏரோதியாள்
அவன்மேல் குரோதங்கொண்டு அவனைக்
கொன்றுபோட விரும்பினாள். ஆயினும்
20 அவளால் முடியாமற்போயிற்று. ஏனென்
றால், யோவான் நீதியும் பரிசுத்தமுமுள்ளவ
னென்று ஏரோது அறிந்து, அவனுக்குப்
பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன்
பேசுவதைக் கேட்டு மிகவும் மனங்கலங்கி
யும், அவன் சொல்லை விருப்பத்தோடே
21 கேட்டுவந்தான். பின்பு சமயம் வாய்த்தது;
எப்படியென்றால், ஏரோது தன் ஜன்ம
நாளில் தன் பிரபுக்களுக்கும், சேனாதிபதிக
ளுக்கும், கலிலேயாநாட்டுப் பிரதானிகளுக்
22 கும் விருந்துபண்ணினபோது, ஏரோதி
யாளின் குமாரத்தி உள்ளே வந்து நடனஞ்
செய்து, ஏரோதுவையும் அவனோடுகூடப்
பந்தியிருந்தவர்களையும் சந்தோஷப்படுத்தி
னாள். அப்பொழுது ராஜா அந்தச் சிறு
பெண்ணினிடம்: நீ விரும்புவது எதுவானா
லும் அதை என்னிடம் கேள், உனக்குத்
23 தருவேன் என்று சொன்னதுமல்லாமல், நீ
என்னிடத்தில் எதைக் கேட்டாலும், அது
என் ராஜ்யத்தில் பாதியானாலும், அதை
உனக்குத் தருவேன் என்று அவளுக்கு
24 ஆணையுமிட்டான். அவள் வெளியே
போய், நான் என்ன கேட்கவேண்டும்
என்று தன் தாயினிடம் கேட்டாள்.
அவள்: யோவான்ஸ்நானகனுடைய தலை
25 யைக் கேள் என்றாள். அவள் உடனே
திரும்பி ராஜாவினிடம் விரைந்துவந்து: நீர்
இந்தக்ஷணமே ஒரு தட்டில் யோவான்
ஸ்நானகனுடைய தலையை எனக்குத் தர
வேண்டும் என்று கேட்டாள். அதைக் கேட் 26
கவே, ராஜா மிகுந்த துக்கமடைந்தான்.
ஆயினும், ஆணைகளினிமித்தமும், பந்தியிருந்
தவர்களினிமித்தமும், அவளுக்கு அதை
மறுக்க மனமில்லாமல், ராஜா உடனே 27
சேவகனை அனுப்பி, அவனுடைய தலையைக்
கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அப் 28
படியே அவன் போய், காவற்கூடத்திலே
அவனைச்சிரச்சேதம்பண்ணி, அவன்தலையை
ஒரு தட்டிலே கொண்டுவந்து அந்தச் சிறு
பெண்ணுக்குக் கொடுத்தான்; சிறு பெண்
அதைத் தாயினிடம் கொடுத்தாள். அவ 29
னுடைய சீஷர் அதைக் கேள்விப்பட்டு,
வந்து, அவன் உடலை எடுத்து, ஒரு கல்
லறையில் வைத்தார்கள்.
அப்போஸ்தலர் இயேசுவினிடம் கூடி 30
வந்து, தாங்கள் செய்தவைகள் உபதேசித்
தவைகள் யாவற்றையும் அவருக்கு அறி
வித்தார்கள். அவர் அவர்களிடம்: சற்று 31
இளைப்பாறும்படி வனாந்தரமான ஓர் இடத்
திற்குத் தனியே போவோம் வாருங்கள்
என்றார். அநேகர் வருவதும் போவதுமா
யிருந்தபடியினால், போஜனம்பண்ணுகிற
தற்கும் அவர்களுக்குச் சமயமில்லை. அப் 32
படியே படவிலேறி வனாந்தரமான ஓர்
இடத்திற்குத் தனியே போனார்கள்.
அவர்கள் போகிறதை ஜனங்கள் கண் 33
டார்கள். அநேகர் இதை அறிந்துகொண்டு,
சகல ஊர்களிலுமிருந்து கால் நடையாய்
அவ்விடத்திற்கு ஓடி, அவர்களுக்குமுன்னே
அங்கே சேர்ந்தார்கள். அவர் வெளியே 34
வந்து திரளான ஜனங்களைக் கண்டு, அவர்கள்
மேய்ப்பனில்லாத ஆடுகள்போலிருந்தபடி
யால், அவர்கள்மேல் மனமுருகி, பற்பல
காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத்
தொடங்கினார். இதற்குள் நேரமாய்விடவே, 35
சீஷர் அவரிடம் வந்து: இது வனாந்தர
மான இடம், வெகுநேரமுமாயிற்று; சுற்றி 36
யிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும்
போய், தங்களுக்கு ஆகாரம் கொள்ளும்படி
இவர்களை அனுப்பிவிடவேண்டும் என்று
சொன்னார்கள். அவர்: நீங்களே அவர் 37
களுக்குப் போஜனங்கொடுங்கள் என்றார்.
அதற்கு அவர்கள்: நாங்கள் போய் இருநூறு
தினாரியத்துக்கு அப்பங்களை வாங்கி இவர்
களுக்குப் புசிக்கும்படி கொடுக்கவேண்
டுமோ என்றார்கள். அவர்: உங்களிடம் எத் 38
தனை அப்பங்களுண்டு, போய்ப் பாருங்கள்
என்றார். அவர்கள் பார்த்துவந்து:
ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்

39 உண்டு என்றார்கள். அப்பொழுது, எல்லா
ரையும் பசும்புல்லின்மேல் பந்தி பந்தி
யாக உட்காரவைக்கும்படி அவர்களுக்குக்
40 கட்டளையிட்டார். அப்படியே வரிசை வரி
சையாய், நூறுநூறு பேராகவும், ஐம்பதைம்
41 பது பேராகவும், உட்கார்ந்தார்கள். அவர்
அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்
களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து
பார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டு
அவர்களுக்குப் பரிமாறும்படி சீஷரிடம்
கொடுத்துக்கொண்டிருந்தார். அப்படியே
இரண்டு மீன்களையும் எல்லாருக்கும் பங்
42 கிட்டார். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தி
43 யடைந்தார்கள். பன்னிரண்டு கூடை
நிறையத் துணிக்கைகளையும் மீன்களில்
44 மிஞ்சினதையும் எடுத்தார்கள். அப்பங்
களைச் சாப்பிட்டவர்கள் ஐயாயிரம் புருஷர்.
45 தம்முடைய சீஷரை அவர் உடனே
படவிலேற்றி, தாம் ஜனங்களை அனுப்பிவிடு
கையில், தமக்குமுன்னே அக்கரையில் பெத்
சாயிதாவுக்குப் போகும்படி அவர்களை அவ
46 சரப்படுத்தினார். ஜனங்களை அனுப்பிவிட்ட
பின்பு, அவர் ஜெபம்பண்ண மலையின்மேல்
47 ஏறினார். சாயங்காலமானபோது, படவு
நடுக்கடலிலிருந்தது; அவரோ கரையில்
48 தனித்திருந்தார். அப்பொழுது எதிர்காற்றா
யிருந்தபடியினால், அவர்கள் தண்டுவலிக்க
வருத்தப்படுகிறதை அவர் கண்டு, இராத்
திரியில் நாலாம் ஜாமத்தில் கடலின்மேல்
நடந்து அவர்களிடம் வந்து, அவர்களைக்
கடந்து அப்பால் போகவேண்டுமென்றிருந்
49 தார். அவர் கடலின்மேல் நடக்கிறதை
அவர்கள் கண்டு, ஆவேசமென்று எண்ணிச்
50 சத்தமிட்டு அலறினார்கள். அவர்களெல்லா
ரும் அவரைக் கண்டு கலக்கமடைந்தார்கள்.
உடனே அவர் அவர்களோடு பேசி: தைரிய
மாயிருங்கள், நான்தான், பயப்படாதிருங்கள்
51 என்று சொல்லி, அவர்கள் இருந்த
படவிலேறினார். ஏறவே, காற்று அமர்ந்
தது; அதனால் அவர்கள் தங்களுக்குள்ளே
52 மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள்
இருதயம் கடினமுள்ளதாயிருந்தபடியினால்
அப்பங்களைப் பற்றியதை அவர்கள் உணரா
மற்போனார்கள்.
53 அவர்கள் கடலைக் கடந்து கெனேச
ரேத்து நாட்டிற்குவந்து, கரைபிடித்தார்கள்.
54 அவர்கள் படவிலிருந்து இறங்கினவுடனே
ஜனங்கள் அவரை இன்னாரென்று அறிந்து,
55 அந்தச் சுற்றுப்புறமெங்கும் ஓடித்திரிந்து,
பிணியாளிகளைப் படுக்கைகளில் கிடத்தி,
அவர் வந்திருக்கிறாரென்று கேள்விப்பட்ட
இடங்களுக்கெல்லாம் சுமந்துவரத் தொடங்
கினார்கள். அல்லாமலும், அவர் சென்ற 56
ஊர்கள் கிராமங்கள் பட்டிகள் எவைகளோ
அவைகளின் சந்தைவெளிகளிலே வியாதிக்
காரரை வைத்து, அவர் வஸ்திரத்தின் ஓரத்
தையாகிலும் அவர்கள் தொடும்படி உத்தர
வாகவேண்டும் என்று அவரை வேண்டிக்
கொண்டார்கள்; அவரைத் தொட்ட யாவ
ரும் குணமடைந்தார்கள்.

எருசலேமிலிருந்து வந்த பரிசேயரும் 7
வேதபாரகரில் சிலரும் அவரிடம் கூடிவந்
தார்கள். அவர் சீஷரில் சிலர் தீட்டான, 2
அதாவது கழுவாத, கைகளால் போஜனம்
பண்ணுகிறதை அவர்கள் பார்த்தார்கள்.
பரிசேயர் முதலிய யூதர் அனைவரும் முன் 3
னோரின் பாரம்பரியத்தை அனுசரித்து, நன்
றாய்க் கைகழுவினாலொழிய சாப்பிடமாட்
டார்கள்; கடையிலிருந்து வரும்போது, தண் 4
ணீர் தெளித்துக்கொள்ளாமல் சாப்பிடமாட்
டார்கள்; அப்படியே கிண்ணங்கள் ஜாடிகள்
செப்புக்குடங்களைக் கழுவுகிறதுமல்லாமல்,
வேறு அநேக ஆசாரங்களையும் கைக்
கொண்டுவருவார்கள். ஆகவே, பரிசேய 5
ரும் வேதபாரகரும் அவரிடம்: உம்முடைய
சீஷர் முன்னோரின் பாரம்பரியத்தின்படி
நடவாமல் இருக்கிறதென்ன! தீட்டான
கைகளால் போஜனம்பண்ணுகிறார்களே
என்று கேட்க, | அவர் அவர்களிடம்: 6
மாயக்காரராகிய உங்களைப்பற்றி ஏசாயா நன்
றாய்த் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறான்:
இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால்
என்னைக் கனம்பண்ணுகிறார்கள்;
அவர்கள் இருதயத்திற்கும் எனக்குமோ
வெகு தூரம்;
மனுஷ கற்பனைகளை உபதேசங்களாக 7
உபதேசித்து,
வீணாக எனக்கு ஆராதனைசெய்கிறார்கள்
என்றானே. நீங்கள் கடவுளின் கட்டளை 8
யைத் தள்ளிவிட்டு, மனுஷ பாரம்பரி
யத்தை அனுசரித்து வருகிறீர்கள் என்றார்.
பின்னும் அவர் அவர்களை நோக்கி: 9
நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்
கொள்ளும்படி கடவுளின் கட்டளைகளை
அசட்டை செய்கிறது நன்று! நன்று! உன் 10
தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ண
வேண்டும் என்றும், தகப்பனையாவது
தாயையாவது நிந்திக்கிறவன் சாகவே சாக
வேண்டும் என்றும் மோசே சொல்லியிருக்
கிறான். நீங்களோ, ஒருவன் தன் தகப்பனை 11
யாவது தாயையாவது பார்த்து: உனக்கு
உதவியாக நான் கொடுக்கக்கூடியது கொர்
பான், அதாவது தேவார்ப்பணம், என்று

12 சொல்வானானால், பின்பு அவன் தன் தகப்
பனுக்கும் தாய்க்கும் ஒன்றும் கொடுக்க
13 வேண்டாம் என்று தடுக்கிறீர்கள். இவ்வா
றாக, நீங்கள் போதிக்கிற இந்தப் பாரம்பரி
யத்தினால் கடவுளின் வசனத்தை அவமாக்கு
கிறீர்கள். இவற்றைப்போன்ற மற்றும்
அநேககாரியங்களையும் செய்கிறீர்கள் என்று
சொன்னார்.
14 பின்பு அவர் ஜனங்களை மறுபடியும் தம்
மிடம் அழைத்து அவர்களை நோக்கி: நீங்கள்
எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து உண
15, ருங்கள். மனுஷனுக்கு வெளியே யிருந்து
16 அவனுக்குள் போகிறதொன்றும் அவனைத்
தீட்டுப்படுத்தமுடியாது; மனுஷனுக்குள்
ளிருந்து வெளிப்படுகிறவைகளே அவ
னைத்தீட்டுப்படுத்துகிறவைகளாம் என்றார்.
17 அவர் ஜனங்களைவிட்டு வீட்டுக்குள் வந்த
போது, அவர் சீஷர் இந்த உவமையைப்
18 பற்றி அவரிடம் விசாரிக்கவே, | அவர்:
நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்
களா? வெளியேயிருந்து மனுஷனுக்குள்
போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த
முடியாதென்று நீங்கள் அறிந்து கொள்ள
19 வில்லையா? அது அவன் இருதயத்தினுள்
போகாமல் வயிற்றில் சென்று, வெளியே
கழிந்துபோகுமென்று சொன்னார். இப்
படிச் சொல்லி, சகல உணவுகளையும் சுத்த
20 மென்று தீர்த்தார். பின்னும் அவர்: மனுஷ
னுக்குள்ளிருந்து வெளிப்படுகிறதே மனுஷ
21 னைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில்,
மனுஷருடைய இருதயத்திலிருந்து பொல்
லாத சிந்தனைகளும், வேசித்தனங்களும்,
22 களவுகளும், கொலைகளும், | விபசாரங்
களும், பொருளாசைகளும், பொல்லாப்பு
களும், கபடும், காமவிகாரமும், வன்கண்
ணும், நிந்தனையும், பெருமையும், மதி
23 கேடும் வெளிப்படுகின்றன. பொல்லாங்
கான இவையெல்லாம் உள்ளத்திலிருந்து
வெளிப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்
என்றார்.
24 பின்பு அவர் எழுந்து அவ்விடம் விட்டு
விலகி, தீருவின் திசைகளுக்குப் போனார்.
அங்கே ஒரு வீட்டுக்குட்சென்று, ஒருவரும்
அதை அறியாதிருக்க விரும்பியும், அவர்
மறைவாயிருக்க முடியாமற்போயிற்று.
25 அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு சிறு பெண்
இருந்தாள். அவள் தாய் உடனே அவ
ரைப்பற்றிக் கேள்விப்பட்டு, வந்து அவர்
26 பாதத்தில் விழுந்தாள். இவள் கிரேக்க
ஸ்திரீ, சீரோபேனிக்கியா நாட்டாள். தன்
மகளைப் பிடித்திருந்த பேயைத் துரத்திவிடும்
படி அவள் அவரை வேண்டிக்கொண்டாள்.

அவர் அவளைப்பார்த்து: முந்திப் பிள்ளைகள் 27
திருப்தியடையட்டும், பிள்ளைகளின் ஆகா
ரத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப்போடு
கிறது அழகல்ல என்றார். அதற்கு அவள்: 28
மெய்தான், ஆண்டவனே, ஆகிலும் மேசை
யின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் குழந்
தைகள் சிந்துகிற துணிக்கைகளைத் தின்னுமே
என்றாள். அப்பொழுது அவர்: நீ சொன்ன 29
அந்த வார்த்தையினிமித்தம் போகலாம்;
பேய் உன் மகளை விட்டு நீங்கிப்போயிற்று
என்றார். அவள் தன் வீட்டுக்கு வந்த 30
பொழுது, தன் மகள் கட்டிலில் படுத்திருக்
கிறதையும் பேய் நீங்கிவிட்டதையும் கண்
டாள்.
மறுபடியும் அவர் தீருவின் எல்லைகளை 31
விட்டு, சீதோன் வழியாகச் சென்று, தெக்
கப்போலியின் எல்லைகளைக் கடந்து கலி
லேயாக் கடலருகே வந்தார். அங்கே 32
கொன்னை வாயனான ஒரு செவிடனை அவ
ரிடம் கொண்டுவந்து, அவர் தமது கையை
அவன்மேல் வைக்கும்படி வேண்டிக்கொண்
டார்கள். அவர் அவனை ஜனக்கூட்டத்தை 33
விட்டுத் தனியே அழைத்துக்கொண்டுபோய்,
தமது விரல்களை அவன் காதுகளிலிட்டு,
உமிழ்ந்து, அவன் நாவைத் தொட்டு, |
வானத்தை அண்ணாந்துபார்த்து, பெரு 34
மூச்சுவிட்டு, எப்பத்தா என்றார். அதற்குத்
திறவுண்டுபோ என்று அர்த்தமாம். அவன் 35
செவிகள் திறவுண்டன; உடனே அவன்
நாவின் கட்டு அவிழ்ந்தது, அவன் செவ்வை
யாய்ப் பேசினான். அதை ஒருவருக்கும் 36
சொல்லவேண்டாமென்று அவர்களுக்குக்
கட்டளையிட்டார்; ஆகிலும், எவ்வளவு அதி
கமாய் அவர்களுக்குக் கட்டளையிட்டாரோ
அவ்வளவு அதிகமாய் அவர்கள் அதைப்
பிரசித்தம்பண்ணி, இவர் எல்லாவற்றை 37
யும் நன்றாய்ச் செய்திருக்கிறார்; செவிடர்
கேட்கவும் ஊமையர் பேசவும் செய்கிறார்
என்று சொல்லி, மிகவும் அதிகமாய்ப் பிர
மித்தார்கள்.

அந்த நாட்களிலே திரளான ஜனங்கள் 8
மறுபடியும் கூடியிருந்தார்கள். அவர்கள்
சாப்பிடுகிறதற்கு ஒன்றுமில்லாதிருக்கவே,
இயேசு தம்முடைய சீஷரை அழைத்து:
ஜனங்கள்மேல் பரிதாபங்கொள்ளுகிறேன், 2
இவர்கள் இப்பொழுது என்னிடம் மூன்று
நாள் தங்கியிருந்து, சாப்பிட ஒன்றுமில்லா
திருக்கிறார்கள்; மேலும் நான் இவர்களைப் 3
பட்டினியாய்வீட்டிற்கு அனுப்பிவிட்டால்,
வழியில் சோர்ந்துபோவார்கள்; இவர்களில்
சிலர் தூரத்திலிருந்து வந்தவர்கள் என்றார்.

4 அதற்கு அவர் சீஷர்: இந்த வனாந்தரத்திலே
ஒருவன் எங்கேயிருந்து ஆகாரங்கொண்டு
வந்து இவர்களைத் திருப்திசெய்யலாமென்று
5 சொல்ல,| அவர்: உங்களிடம் எத்தனை அப்
பங்கள் உண்டு என்று கேட்டார். அவர்கள்:
6 ஏழு என்றார்கள். அவர் ஜனங்களைத்
தரையிலே பந்தியிருக்கக் கட்டளையிட்டு,
அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து, கடவு
ளுக்கு நன்றிசெலுத்தி, பிட்டு, பரிமாறும்
படி தம் சீஷரிடம் கொடுத்துக்கொண்
டிருந்தார்; அவர்கள் ஜனங்களுக்குப் பரி
7 மாறினார்கள். சில சிறு மீன்களும் அவர்
களிடம் இருந்தன; அவர் அவைகளையும்
ஆசீர்வதித்து அவர்களுக்குப் பரிமாறும்படி
8 சொன்னார். அவர்கள் சாப்பிட்டுத் திருப்தி
அடைந்தார்கள்; மிஞ்சின துணிக்கைகளை
9 ஏழு கூடை நிறைய எடுத்தார்கள். அங்
கிருந்தவர்கள் ஏறக்குறைய நாலாயிரம்
10 பேர். அவர்களை அனுப்பிவிட்டு,| அவர்
தம்முடைய சீஷரோடு உடனே படவிலேறி,
தல்மனூத்தாவின் புறங்களுக்கு வந்தார்.
11 அப்பொழுது பரிசேயர் வந்து அவ
ரோடே தர்க்கிக்கத் தொடங்கி, அவரைச்
சோதிக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடை
யாளத்தைத் தேடி அவரிடம் கேட்க,
12 அவர் தமது ஆவியில் பெருமூச்சுவிட்டு:
இந்தச் சந்ததியார் அடையாளம் தேடுகிற
தென்ன? இந்தச் சந்ததியாருக்கு ஒரு அடை
யாளமும் கொடுக்கப்படுவதில்லையென்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறே
13 னென்று சொல்லி, அவர்களைவிட்டு மறு
படியும் படவிலேறி அக்கரைக்குப் போய்
விட்டார்.
14 சீஷர் அப்பங்களைக் கொண்டுவர மறந்து
போயிருந்தார்கள்; படவில் அவர்களிடம்
15 ஒரு அப்பம் மாத்திரம் இருந்தது. அவர்
அவர்களைப் பார்த்து: நீங்கள் பரிசேய
ருடைய புளித்தமாவுக்கும் ஏரோதுவின்
புளித்தமாவுக்கும் எச்சரிக்கையாயிருக்கப்
16 பாருங்கள் என்று கட்டளையிட, அவர்கள்:
நம்மிடம் அப்பங்களில்லையே என்று தங்
களுக்குள்ளே யோசனை பண்ணிக்கொண்
17 டார்கள். அவர் அதை அறிந்து அவர்களை
நோக்கி: உங்களிடம் அப்பங்களில்லையே
என்று நீங்கள் யோசனைபண்ணுகிறதென்ன?
இன்னும் சிந்தியாமலும் உணராமலும் இருக்
கிறீர்களா? உங்கள் இருதயம் கடினப்பட்
18 டுப்போயிற்றா? உங்களுக்குக் கண்களிருந்
தும் காணாதிருக்கிறீர்களா? காதுகளிருந்தும்
கேளாதிருக்கிறீர்களா? நினைவுகூராமலுமிருக்
19 கிறீர்களா? நான் ஐந்து அப்பங்களை ஐயாயிரம்
பேருக்குப் பகிர்ந்தபோது, மிஞ்சின
துணிக்கைகளை எத்தனை கூடை நிறைய
எடுத்தீர்கள் என்று கேட்டார்; பன்னிரண்டு
என்றார்கள். நான் ஏழு அப்பங்களை நாலா 20
யிரம் பேருக்குப் பகிர்ந்தபோது, மிஞ்சின
துணிக்கைகளை எத்தனை கூடைநிறைய எடுத்
தீர்கள் என்று கேட்டார்; ஏழு என்றார்கள்.
அப்படியிருக்க, நீங்கள் இன்னும் உணர்ந்து 21
கொள்ளவில்லையா என்றார்.
அவர்கள் பெத்சாயிதா ஊருக்கு வந் 22
தார்கள்; அப்பொழுது ஒரு குருடனை அவரி
டம் கொண்டுவந்து, அவனைத் தொடும்படி
அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர் 23
குருடனுடைய கையைப்பிடித்து அவனைக்
கிராமத்துக்கு வெளியே கூட்டிக்கொண்டு
போய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்
மேல் தமது கைகளை வைத்து: உனக்கு ஏதா
கிலும் தெரிகிறதா என்று கேட்டார்.
அவன் ஏறிட்டுப் பார்த்து: நடக்கிற மனு 24
ஷரைப் பார்க்கிறேன், அவர்கள் மரங்கள்
போல் தோன்றுகிறார்கள் என்றான். பின்பு 25
அவர் மறுபடியும் அவன் கண்களின்மேல்
கைகளை வைக்கவே, அவன் தன் கண்களை
விழித்துப் பார்த்தான். நல்ல பார்வை
அடைந்து, எல்லாவற்றையும் தெளிவாய்க்
கண்டான். அவர் அவனிடம்: நீ கிரா 26
மத்திற்குள் போக வேண்டாமென்று
சொல்லி, அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்
டார்.
பின்பு இயேசுவும் அவருடைய சீஷரும் 27
புறப்பட்டு, பிலிப்புச்செசரியா பட்டணத்
தையடுத்த கிராமங்களுக்குப் போனார்கள்.
வழியிலே அவர் தம்முடைய சீஷரைப்
பார்த்து: ஜனங்கள் என்னை யார் என்று
சொல்லுகிறார்கள் என்று கேட்க,|
அவர்கள்: யோவான்ஸ்நானகன் என்று 28
சொல்லுகிறார்கள்; சிலரோ எலியா என்
றும் வேறுசிலரோ தீர்க்கதரிசிகளில் ஒருவர்
என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.
அவர்: என்னை யார் என்று நீங்கள் சொல்லு 29
கிறீர்கள் என்று கேட்க, பேதுரு: நீர்
கிறிஸ்து என்று மறுமொழியளித்தான். தம் 30
மைப்பற்றி எவருக்கும் சொல்லாதபடி அவர்
களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.
அப்பொழுது அவர் அவர்களிடம்: மனுஷ 31
குமாரன் பல பாடுகள்பட்டு, மூப்பராலும்
பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும்
ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொலை
யுண்டு, மூன்றுநாளுக்குப் பின்பு உயிர்த்
தெழுந்திருக்க வேண்டுமென்று போதிக்கத்
தொடங்கினார். இந்தச் சங்கதியை அவர் 32
வெளிப்படையாகவே சொல்லிவந்தார். அப்
பொழுது பேதுரு அவரைத் தனியே

அழைத்து, அவரைக் கண்டித்துப் பேசத்
33 தொடங்கினான். அவரோ திரும்பித் தம் சீஷ
ரைப் பார்த்து, பேதுருவைக் கண்டித்து:
எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, கடவு
ளுக்குரியவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்
குரியவைகளை நீ சிந்திக்கிறாய் என்று சொன்
னார்.
34 பின்பு அவர் ஜனங்களையும் தம்முடைய
சீஷரையும் தம்மிடம் அழைத்து: ஒருவன்
என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன்
தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை
எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்
35 கடவன். [1]தன் ஜீவனை இரட்சிக்க விரும்பு
கிறவன் அதை இழந்துபோவான், என்னி
மித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும்
தன் ஜீவனை இழந்துபோகிறவனே அதை
36 இரட்சித்துக்கொள்ளுவான். மனுஷன்
உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்
கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்
37 தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன்
தன் ஜீவனுக்கு ஈடாக எதைக் கொடுப்பான்?
38 விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததி
யில் என்னைப்பற்றியும் என் வார்த்தைகளைப்
பற்றியும் எவன் வெட்கப்படுவானோ,
அவனைப்பற்றி மனுஷகுமாரனும் தம்மு
டைய பிதாவின் மகிமையில் பரிசுத்த
தூதர்களோடு வரும்போது வெட்கப்படு
9 வார். இங்கே நிற்கிறவர்களில் சிலர் கடவுள்
ராஜ்யம் வல்லமையோடு வந்திருப்பதைக்
காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லை
யென்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்று சொல்லி முடித்
தார்.
2 ஆறுநாளுக்குப்பின்பு, இயேசு பேதுரு
வையும் யாக்கோபையும் யோவானையும்
கூட்டிக்கொண்டு, தனியே ஓர் உயர்ந்த
மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்
3 பாக மறுரூபமானார். அவர் வஸ்திரங்கள்
அதிகப் பிரகாசமான வெண்மையாயின.
பூமியிலே வண்ணான் அவ்வளவு வெண்மை
4 யாக்கமுடியாது. அப்பொழுது எலியா
மோசேயோடுகூட அவர்களுக்குத் தோன்றி
னான்; அவர்கள் இயேசுவோடு பேசிக்கொண்
5 டிருந்தார்கள். பேதுரு இயேசுவினிடம்:
ரபீ, நாம் இங்கே இருக்கிறது நல்லது;
உமக்கு ஒன்றும், மோசேக்கு ஒன்றும், எலி
யாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களைப்
6 போடுவோமாக என்றான். அவர்கள் மிகவும்
பயந்திருந்தபடியால், தான் சொல்லவேண்டி
யது இன்னதென்று தெரியாமல் இப்படிச்
சொன்னான். அப்பொழுது ஒரு மேகம் வந்து 7
அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்
நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்
என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம்
பிறந்தது. உடனே அவர்கள் சுற்றிலும் 8
பார்த்தபோது, இயேசு ஒருவரைத் தவிர
வேறொருவரையும் தங்களண்டை காண
வில்லை.
அவர்கள் மலையிலிருந்து இறங்குகிற 9
போது, அவர்: நீங்கள் கண்டவைகளை
மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்
திருக்கும் வரைக்கும் ஒருவருக்கும் சொல்ல
வேண்டாம் என்று அவர்களுக்குக் கட்டளை
யிட்டார். மரித்தோரிலிருந்து எழுந்திருப் 10
பது என்னவென்று அவர்கள் ஒருவரோ
டொருவர் விசாரித்துக்கொண்டு, அந்த
வார்த்தையை மனத்தில் வைத்துக்கொண்
டார்கள். எலியா முந்தி வரவேண்டுமென்று 11
வேதபாரகர் சொல்லுகிறார்களே என்று
அவரிடம் கேட்க, | அவர்: எலியா முந்தி 12
வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது
மெய்தான். என்றாலும் மனுஷகுமாரன் பல
பாடுகள்பட்டு அலட்சியம் செய்யப்படுவா
ரென்று அவரைப்பற்றி எழுதியிருக்கிறதே,
அது எப்படி? எலியா வந்தாயிற்று, 13
அவனைக்குறித்து எழுதியிருக்கிறபிரகாரம்
தங்கள் இஷ்டப்படியே அவனுக்குச் செய்
தார்களென்று உங்களுக்குச் சொல்லு
கிறேன் என்றார்.
அவர்கள் சீஷரிடம் வந்தபோது, அவர் 14
களைச்சுற்றித் திரள்ஜனங்கள் இருப்பதையும்
அவர்களோடே வேதபாரகர் வாதாடுவதை
யும் கண்டார்கள். ஜனங்களெல்லாரும் 15
அவரைக் கண்டவுடனே மிகவும் பிரமித்து,
ஓடிவந்து, அவரை உபசரித்தார்கள். அவர் 16
அவர்களிடம்: நீங்கள் இவர்களோடு எதைப்
பற்றி வாதாடுகிறீர்கள் என்று கேட்க,
ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரைப் 17
பார்த்து: போதகரே, ஊமை ஆவி பிடித்த
என் மகனை உம்மிடம் கொண்டுவந்தேன்;
அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே 18
அவனைக் கீழே தள்ளுகிறது; அப்பொழுது
அவன் நுரைதள்ளி, பல்லைக்கடித்து,
சோர்ந்துபோகிறான்; அதைத் துரத்திவிடும்
படி உம்முடைய சீஷரிடம் கேட்டேன்;
அவர்களால் முடியாமற்போயிற்று என்
றான். அவரோ இதைக் கேட்டு அவர்களி 19
டம்: விசுவாசமில்லாத சந்ததியே, எது
வரைக்கும் நான் உங்களோடிருப்பேன்? எது
வரைக்கும் உங்களிடத்தில் பொறுமையா

[1] கிரேக்க பதம் ஜீவனென்றும் ஆத்துமாவென்றும் பொருள்படும்.

யிருப்பேன்? அவனை என்னிடம் கொண்டு
20 வாருங்கள் என்றார். அவனை அவரிடம்
கொண்டுவந்தார்கள். அந்த ஆவி அவரைக்
கண்டவுடனே அவனுக்கு வலிப்பு உண்
டாக்கினது; அவன் தரையில் விழுந்து,
21 நுரைதள்ளிப் புரண்டான். அவர் அவனு
டைய தகப்பனைப்பார்த்து: இது இவனுக்கு
வந்து எவ்வளவு காலமாயிற்று என்று கேட்
டார். அதற்கு அவன்: சிறுவயது முதற்
22 கொண்டே இருக்கிறது; இவனைக் கொன்று
விடும்படி அது அநேகந்தரம் தீயிலும்
தண்ணீரிலும் தள்ளினதுண்டு; உம்மால்
ஏதாகிலும் செய்யமுடியுமானால் எங்கள்
மேல் மனமிரங்கி, எங்களுக்கு உதவிசெய்யும்
23 என்று கெஞ்சினான். இயேசு அவனிடம்:
முடியுமானால் என்றாயே! விசுவாசிக்கிறவ
24 னுக்கு எல்லாம் முடியும் என்றார். உடனே
பிள்ளையின் தகப்பன்: எனக்கு விசுவாசம்
உண்டு, என் அவிசுவாசம் நீங்கும்படி
உதவிசெய்யும் என்று சத்தமிட்டுக் கேட்
25 டான். ஜனக்கூட்டம் ஓடிவருகிறதை
இயேசு கண்டு, அந்த அசுத்த ஆவியை
அதட்டி: ஊமையும் செவிடுமான ஆவியே,
இவனைவிட்டு வெளியே போ, இனி இவ
னுக்குள் போகாதே என்று உனக்கு நான்
கட்டளையிடுகிறேன் என்று சொன்னார்.
26 சொல்லவே, அது சத்தமிட்டு, அவனுக்கு
வலிப்பு உண்டாக்கி வெளியேறினது. அவன்
செத்தவன்போல் கிடந்தான்; அநேகர்
அவன் செத்துப்போனான் என்றும் சொன்
27 னார்கள். இயேசுவோ அவன் கையைப்
பிடித்து அவனைத் தூக்கினார்; அவன்
28 எழுந்து நின்றான். அவர் வீட்டுக்குள்
செல்லவே, அதைத் துரத்திவிட எங்களால்
முடியாமற்போனதென்ன என்று அவரு
டைய சீஷர்கள் அவரிடம் தனித்துக்
29 கேட்டார்கள். அதற்கு அவர்: இவ்வகைப்
பேய் ஜெபத்தினாலன்றி மற்றெவ்விதத்தினா
லும் போகாது என்றார்.

30 அவ்விடம் விட்டு, கலிலேயாவில் பிரயா
ணஞ் செய்துகொண்டிருந்தார்கள்; அதை
ஒருவரும் அறியாதிருக்கவேண்டுமென்று
31 விரும்பினார். ஏனெனில் அவர் தம் சீஷ
ருக்குப் போதகம்பண்ணி: மனுஷகுமாரன்
மனுஷர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படு
கிறார், அவர்கள் அவரைக் கொலைசெய்
வார்கள்; கொல்லப்பட்ட மூன்றும் நாளிலே
உயிர்த்தெழுந்திருப்பார் என்று சொல்லிக்
32 கொண்டுவந்தார். அவர் சொன்னது அவர்
களுக்கு விளங்கவில்லை; அவரிடம் கேட்க
வும் பயந்தார்கள்.

அவர்கள் கப்பர்நகூமுக்கு வந்தார்கள். 33
வீட்டில் இருக்கும்போது, அவர் அவர்களி
டம்: நீங்கள் வழியில் எதைப்பற்றி விவா
தம் செய்துகொண்டு வந்தீர்கள் என்று கேட்
டார். அவர்கள் பேசாமலிருந்தார்கள்; 34
ஏனெனில் எவன் பெரியவன் என்று
அவர்கள் வழியில் ஒருவரோடொருவர்
விவாதம் செய்திருந்தார்கள். அவர் உட் 35
கார்ந்து பன்னிருவரையும் அழைத்து: எவ
னாகிலும் தலைவனாயிருக்க விரும்பினால்,
அவன் எல்லாரிலும் கடையானவனும் எல்
லாருக்கும் பணிவிடைக்காரனும் இருப்பா
னென்று சொல்லி, ஒரு சிறு பிள்ளையை 36
எடுத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி,
அதை அணைத்துக்கொண்டு: இப்படிப் 37
பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என்
நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன்
என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்
றுக்கொள்ளுகிறவன் என்னையல்ல, என்னை
அனுப்பினவரையே ஏற்றுக்கொள்ளுகிறான்
என்றார்.

யோவான் அவரிடம்: போதகரே, ஒருவன் 38
உமது நாமத்தினாலே பேய்களைத் துரத்து
கிறதைக் கண்டோம்; அவன் நம்மைப் பின்
பற்றாதவனாதலால், அவனைத் தடுக்கப் பார்த்
தோம் என்றான். இயேசுவோ: அவனைத் 39
தடுக்கவேண்டாம்; என் நாமத்தினாலே வல்ல
செயலைச் செய்கிறவன் எளிதாய் என்னைப்
பற்றித் தீது பேசமாட்டான். நமக்கு 40
விரோதமாயிராதவன் நமக்குச் சார்பான
வன். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களா 41
யிருப்பதினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம்
தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவனும் தன்
பலனைப் பெறாமற்போகான் என்று மெய்யா
கவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

என்னில் விசுவாசமாயிருக்கிற இந்தச் 42
சிறியரில் ஒருவன் இடறிவிழக் காரணமா
யிருக்கிறவன் எவனோ, அவன் கழுத்தில்
பெரிய ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தில்
அவனைத் தள்ளிப்போடுகிறது அவனுக்கு
நலம். நீ இடறிவிழ உன் கை ஏதுவா 43,
யிருந்தால், அதைத் தறித்துப்போடு; நீ 44
இரண்டு கையுடையவனாய் அவியாத அக்
கினியுள்ள நரகத்துக்குப் போவதைப்பார்க்
கிலும், ஊனனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்
பது நலம். நீ இடறிவிழ உன் கால் 45,
ஏதுவாயிருந்தால், அதைத் தறித்துப்போடு, 46
நீ இரண்டு காலுடையவனாய் நரகத்தில் தள்
ளப்படுவதைப்பார்க்கிலும், சப்பாணியாய்
ஜீவனுக்குள் பிரவேசிப்பது நலம். நீ இடறி 47
விழ உன் கண் ஏதுவாயிருந்தால், அதைப்
பிடுங்கிப்போடு, நீ இரண்டு கண்ணுடையவ

னாய் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கி
லும், ஒற்றைக் கண்ணனாய்க் கடவுள் ராஜ்
48 யத்திற்குள் பிரவேசிப்பது நலம். நரகத்தில்
அவர்கள் புழு சாகாது, அக்கினியும் அவி
49 யாது. எவனும் அக்கினியினால் உப்பிடப்
50 பெறுவான். உப்பு நல்லதுதான்; உப்பு சார
மற்றுப்போனாலோ, அதை எதினால் சார
மாக்குவீர்கள்? உங்களில் உப்புடையவர்
களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமா
தானமாயுமிருங்கள் என்றார்.

10 அவர் எழுந்து, அவ்விடம் விட்டு யோர்
தானைக் கடந்து, யூதேயாவின் எல்லைகளுக்கு
வந்தார்; திரளான ஜனங்கள் மறுபடியும்
அவரிடம் கூடிவந்தார்கள். அவர் தமது
வழக்கப்படியே மறுபடியும் அவர்களுக்கு
2 உபதேசித்தார். பரிசேயர் அவரிடம் வந்து:
புருஷன் மனைவியைத் தள்ளிவிடுவது நியா
யமா என்று அவரைச் சோதித்துக் கேட்
3 டார்கள். அதற்கு அவர்: மோசே உங்க
ளுக்குக் கட்டளையிட்டிருக்கிறது என்ன
4 என்று கேட்டார். அவர்கள்: தள்ளுதற்
சீட்டை எழுதிக்கொடுத்து அவளைத் தள்ளி
விடலாமென்று மோசே உத்தரவு கொடுத்
5 திருக்கிறார் என்றார்கள். இயேசு அவர்களி
டம்: உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம்
அவர் இந்தக் கட்டளையை உங்களுக்கு
6 எழுதிக்கொடுத்தார். சிருஷ்டிப்பு முதல்,
அவர்களை ஆணும் பெண்ணுமாகப்
படைத்தார்;
7 இதினிமித்தம் ஒருவன் தன் தகப்பனை
யும் தாயையும் விட்டு நீங்குவான்,
8 இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்;
ஆகவே இனி அவர்கள் இருவரல்ல, ஒரே
9 மாம்சமாயிருக்கிறார்கள். இப்படியிருக்க,
கடவுள் இணைத்ததை மனுஷன் பிரிக்கா
10 திருக்கக்கடவன் என்றார். வீட்டுக்குட்
செல்லவே, அவருடைய சீஷர் இந்தக் காரி
யத்தைப்பற்றி மறுபடியும் அவரிடம் விசா
11 ரித்தார்கள். அவர் அவர்களிடம்: எவனாகி
லும் தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொ
ருத்தியை விவாகஞ்செய்தால், அவன் மனை
விக்குத் துரோகியாய் விபசாரஞ்செய்கிறான்.
12 மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு
வேறொருவனை விவாகஞ்செய்தால், அவள்
விபசாரஞ்செய்கிறாள் என்றார்.
13 அப்பொழுது சிறு பிள்ளைகளை அவர்
தொடும்படி அவரிடம் கொண்டுவந்
தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்
14 அதட்டினார்கள். இயேசுவோ அதைக்
கண்டு விசனப்பட்டு: சிறு பிள்ளைகள் என்
னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்;
அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; கடவுள்
ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.
கடவுள் ராஜ்யத்தைச் சிறு பிள்ளையைப் 15
போல் ஏற்றுக்கொள்ளாதவன் எவனும்
அதில் பிரவேசிப்பதேயில்லை என்று மெய்யா
கவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று
சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு, 16
அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை
ஆசீர்வதித்தார்.
அவர் வழிநடந்து வெளியே செல்லுகை 17
யில், ஒருவன் அவரிடம் ஓடிவந்து, முழங்
கால்படியிட்டு: நல்ல போதகரே, நித்திய
ஜீவனைச் சுதந்தரிப்பதற்கு நான் என்ன
செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு 18
இயேசு: நீ என்னை நல்லவர் என்று சொல்
வானேன்? கடவுள் ஒருவர் தவிர நல்லவர்
ஒருவருமில்லையே. கொலைசெய்யவேண் 19
டாம், விபசாரஞ்செய்யவேண்டாம், களவு
செய்யவேண்டாம், பொய்ச்சாட்சி சொல்ல
வேண்டாம், வஞ்சனைசெய்யவேண்டாம்,
உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்
பண்ணவேண்டும் முதலிய கற்பனைகள்
உனக்குத் தெரியுமே என்று சொல்ல,
அவன்: போதகரே; இவைகளையெல்லாம் 20
என் சிறு வயதுமுதல் கைக்கொண்டிருக்கி
றேன் என்றான். இயேசு அவனை உற்றுப் 21
பார்த்து, அவனில் அன்புகூர்ந்து: உன்னி
டம் குறைவு ஒன்று உண்டு; நீ போய், உள்ள
வற்றை விற்று, தரித்திரருக்குக் கொடு;
அப்பொழுது பரலோகத்தில் உனக்கு ஐசு
வரியமிருக்கும்; பின்பு வந்து என்னைப்
பின்பற்று என்றார். அவன் மிகுந்த ஆஸ்தி 22
யுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்
தையைக் கேட்டு, முகம் வாடி, துக்கத்
தோடே போய்விட்டான்.
அப்பொழுது இயேசு சுற்றிப்பார்த்து: 23
ஐசுவரியமுள்ளவர்கள் கடவுள் ராஜ்யத்தில்
பிரவேசிப்பது எவ்வளவு அரிது என்று தம்
சீஷரிடம் சொன்னார். சீஷர் அவருடைய 24
வார்த்தைகளைக் கேட்டுப் பிரமித்தார்கள்.
இயேசு பின்னும் அவர்களைப் பார்த்து:
பிள்ளைகளே, கடவுள் ராஜ்யத்தில் பிரவேசிப்
பது எவ்வளவு அரிது. ஐசுவரியவான் 25
கடவுள் ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்
பார்க்கிலும், ஒட்டகம் ஊசியின் காதில்
நுழைவது எளிது என்றார். அவர்கள் 26
மிகவும் பிரமிப்படைந்து: அப்படியானால்
யார் இரட்சிக்கப்படக்கூடும் என்று தங்க
ளுக்குள்ளே பேசிக்கொண்டார்கள். இயேசு 27
அவர்களை உற்றுப்பார்த்து: இது மனுஷ
ரால் ஆகாததுதான், கடவுளாலோ ஆகாத
தல்ல; கடவுளால் எல்லாமாகும் என்றார்.

28 பேதுரு அவரிடம்: இதோ, நாங்கள் எல்லா
வற்றையும்விட்டு உம்மைப் பின்பற்றி
னோமே என்று சொல்லத் தொடங்கினான்.
29 அதற்கு இயேசு: என்னிமித்தமாகவும் சுவி
சேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது,
சகோதரரையாவது, சகோதரிகளையாவது,
தாயையாவது, தகப்பனையாவது, பிள்ளைகளை
யாவது, நிலங்களையாவது விட்டவன் எவ
30 னும், இப்பொழுது இம்மையிலே துன்பங்
களோடுகூட நூறத்தனையாக, வீடுகளையும்,
சகோதரரையும் சகோதரிகளையும், தாய்களை
யும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமை
யிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
31 ஆகிலும், முந்தினோர் அநேகர் பிந்தினோரும்,
பிந்தினோர் அநேகர் முந்தினோரும் ஆவார்கள்
என்றார்.
32 பின்பு அவர்கள் எருசலேமுக்குப் பிர
யாணம்போகும் வழியில், இயேசு சீஷருக்கு
முன் நடந்துகொண்டிருந்தார்; அவர்கள்
திகைத்தவர்களாய்ப் போனார்கள், பின்வந்த
வர்களோ பயந்தார்கள். அப்பொழுது அவர்
பன்னிருவரையும் தம்மிடம் அழைத்து,
தமக்குச் சம்பவிக்கப்போகிறவைகளை அவர்
களுக்கு மறுபடியும் சொல்லத்தொடங்கி
33 னார்: இதோ, எருசலேமுக்குப் போகிறோம்;
மனுஷகுமாரன் பிரதான ஆசாரியரிடத்தி
லும் வேதபாரகரிடத்திலும் ஒப்புக்கொடுக்
கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்
கினைக்குள்ளாகத் தீர்த்து, புறஜாதியாரிடம்
34 ஒப்புக்கொடுப்பார்கள். அவர்கள் அவ
ரைப் பரிகாசஞ்செய்து, அவர்மேல் துப்பி,
அவரை வாரினால் அடித்து, அவரைக்
கொலைசெய்வார்கள்; மூன்றுநாளுக்குப்பின்
அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார்.
35 செபெதேயுவின் குமாரர் யாக்கோபும்
யோவானும் அவரிடம் வந்து: போதகரே,
நாங்கள் கேட்டுக்கொள்ளப்போகிறது
எதுவோ அதை நீர் எங்களுக்குச் செய்ய
வேண்டுமென்றுவிரும்புகிறோம்என்றார்கள்.
36 அவர் அவர்களிடம்: நான் உங்களுக்கு
என்ன செய்யவேண்டுமென்று விரும்பு
37 கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு
அவர்கள்: உமது மகிமையிலே, எங்களில்
ஒருவன் உமது வலதுபாரிசத்திலும், ஒருவன்
உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்
கும்படி எங்களுக்கு அருள்செய்ய வேண்டும்
38 என்றார்கள். இயேசுவோ அவர்களிடம்:
நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்ன
தென்று உங்களுக்குத் தெரியவில்லை. நான்
குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும்
நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும்
உங்களாலாகுமா என்றார். அதற்கு அவர்கள்: 39
ஆகும் என்றார்கள். இயேசு அவர்களைப்
பார்த்து: நான் குடிக்கும் பாத்திரத்தில் குடிப்
பீர்கள்; நான் பெறும் ஸ்நானத்தையும் பெறு
வீர்கள். ஆயினும், என் வலதுபாரிசத்திலும் 40
என் இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்
படி அருளுவது என் காரியமல்ல. எவர்க
ளுக்கு அது ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கி
றதோ அவர்களுக்கே அது உரியது என்றார்.
அதைக் கேட்டு மற்றப் பத்துப்பேரும் யாக் 41
கோபு யோவான்மேல் கோபங்கொள்ளத்
தொடங்கினார்கள். இயேசு அவர்களைத் தம் 42
மிடம் அழைத்து: புறஜாதியாரை ஆளுகிற
வர்களாக எண்ணப்படுகிறவர்கள் அவர்கள்
மேல் துரைத்தனம்பண்ணுகிறார்கள் என்
றும், அவர்களில் பிரதானிகள் அவர்கள்
மேல் சர்வாதிகாரம் செலுத்துகிறார்கள் என்
றும் உங்களுக்குத் தெரியும். உங்களுக்குள் 43
ளேயோ அப்படி அல்ல. உங்களில் பிரதா
னியாயிருக்க விரும்புகிறவன் எவனும் உங்
களுக்குப் பணிவிடைக்காரனாயிருப்பான்;
உங்களில் தலைவனாயிருக்க விரும்புகிற எவ 44
னும் எல்லாருக்கும் அடிமையாயிருப்பான்.
மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி 45
வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை
மீட்கும் பொருளாகத் தமது ஜீவனைக்
கொடுக்கவும் வந்தார் என்றார்.
அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். 46
அவரும் அவருடைய சீஷரும் பெரிய ஜனக்
கூட்டமும் எரிகோவைவிட்டுப் போகும்
போது, திமேயுவின் மகன் பர்திமேயு என்
னும் கண் தெரியாத பிச்சைக்காரன் ஒரு
வன் வழியோரம் உட்கார்ந்திருந்தான். நச 47
ரேயனாகிய இயேசு வருகிறாரென்று அவன்
கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமா
ரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிடத்
தொடங்கினான். அவன் பேசாதிருக்கும்படி 48
அநேகர் அவனை அதட்டினார்கள். அவனோ:
தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்
என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டுக் 49
கொண்டிருந்தான். இயேசு நின்று அவனை
அழைத்து வரச்சொன்னார். அவர்கள் குரு
டனை அழைத்து: தைரியமாயிரு, எழுந்திரு,
அவர் உன்னை அழைக்கிறார் என்றார்கள்.
உடனே அவன் தன் மேல்வஸ்திரத்தை 50
எறிந்துவிட்டு, குதித்தெழுந்து, இயேசுவி
னிடம் வந்தான். இயேசு அவனை நோக்கி: 51
நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்
றிருக்கிறாய் என்றார். அதற்குக் குருடன்:
[1]ரபூனி, நான் பார்வையடைய வேண்டும்

1 ரபூனி என்பது என் குருவே என்று பொருள்படும்.

52 என்றான். இயேசு அவனிடம்: நீ போகலாம்;
உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கினது
என்றார். உடனே அவன் பார்வை அடைந்து
வழியிலே அவருக்குப் பின்சென்றான்.

11 அவர்கள் எருசலேமைச் சமீபித்து ஒலிவ
மலையில் பெத்பகே பெத்தானியா என்னும்
ஊர்களுக்கு வந்தபோது, அவர் தம் சீஷரில்
2 இருவரை அனுப்பி: உங்களுக்கு எதிரே
யிருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; அத
னுட்சென்றவுடனே, ஒருவனும் ஒருகாலும்
ஏறியிராத ஒரு கழுதைக்குட்டியைக் கட்டி
யிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக்
3 கொண்டுவாருங்கள். ஏன் இப்படிச் செய்
கிறீர்கள் என்று ஒருவன் உங்களிடம் கேட்
டால், இது ஆண்டவருக்குத் தேவையென்
றும், உடனே அதை இவ்விடத்திற்குத்
திரும்ப அனுப்பிவிடுவார் என்றும் சொல்
4 லுங்கள் என்றார். அவர்கள் போய், வெளியே
தெருவில் வாசலருகே கட்டியிருந்த அந்தக்
குட்டியைக் கண்டு, அதை அவிழ்த்தார்கள்.
5 அவிழ்க்கவே, அங்கே நின்றவர்களில் சிலர்:
நீங்கள் என்ன செய்கிறீர்கள்? குட்டியை
6 அவிழ்க்கிறீர்களே என்றார்கள். இயேசு
சொல்லியிருந்தபடி அவர்கள் சொல்லவே,
7 அவர்களைப் போகவிட்டார்கள். அந்தக் குட்
டியை இயேசுவினிடம் கொண்டுவந்து,
அதன்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்
டார்கள்; அவர் அதன்மேல் உட்கார்ந்தார்.
8 அநேகர் தங்கள் வஸ்திரங்களை வழியிலே
விரித்தார்கள்; வேறு சிலர் வயல்வெளிகளில்
அறுத்த இலைதழைகளை வழியிலே பரப்பி
9 னார்கள். முன் நடப்பாரும் பின் நடப்
பாரும்:

ஓசன்னா!
கர்த்தரின் நாமத்தில் வருகிறவர் ஆசீர்
வதிக்கப்பட்டவர்;
10 வருகிற ராஜ்யம், நம் பிதாவாகிய தாவீ
தின் ராஜ்யம், ஆசீர்வதிக்கப்பட்டது;
உன்னதத்திலே ஓசன்னா!

என்று சொல்லி ஆரவாரஞ்செய்தார்கள்.
11 அவர் எருசலேமுக்கு வந்து, தேவாலயத்திற்
குட்சென்று, எல்லாவற்றையும் சுற்றிப்
பார்த்து, சாயங்காலமாய்விட்டதால், பன்
னிருவரோடுங்கூடப் பெத்தானியாவுக்குப்
போனார்.
12 மறுநாளில் அவர்கள் பெத்தானியாவி
லிருந்து வருகையில், அவருக்குப் பசியுண்
13 டாயிற்று. இலைகளுள்ள ஒரு அத்திமரத்தை
அவர் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும்
அகப்படுமோவென்று பார்க்க வந்தார்.
அவர் அதனருகே வந்தபோது, அதிலே இலை
களையேயன்றி வேறொன்றையும் காண
வில்லை; அது அத்திப்பழக் காலமல்ல.
இயேசு அதைப் பார்த்து: இனி ஒருகாலும் 14
ஒருவனும் உன்னிடம் கனியைப் புசியா
திருக்கக்கடவன் என்றார்; அதை அவரு
டைய சீஷர் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.
அவர்கள் எருசலேமுக்கு வந்தார்கள்; 15
இயேசு தேவாலயத்திற்குள் பிரவேசித்து,
ஆலயத்திலே விற்கிறவர்களையும் கொள்ளு
கிறவர்களையும் துரத்தத் தொடங்கினார்.
காசுக்காரருடைய மேசைகளையும் புறா விற்
கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்துப்
போட்டார். ஒருவனும் தேவாலயத்தின் வழி 16
யாகப் பண்டம்பாடி எதையும் கொண்டு
போக அவர் இடங்கொடுக்கவில்லை. அவர் 17
அவர்களுக்கு உபதேசித்து: என் வீடு சகல
ஜாதியாருக்கும் ஜெபவீடு எனப்படும் என்று
எழுதியிருக்கவில்லையா? நீங்களோ அதைக்
கள்ளர் குகையாக்கினீர்களே என்று சொன்
னார். அதைப் பிரதான ஆசாரியரும் வேத 18
பாரகரும் கேட்டு, அவரைக் கொலைசெய்ய
வகை தேடினார்கள்; ஆகிலும் ஜனமெல்லாம்
அவருடைய உபதேசத்தைப்பற்றி ஆச்சரி
யப்பட்டபடியினால், அவருக்குப் பயந்திருந்
தார்கள்.
சாயங்காலந்தோறும் அவர்கள் நகரத்தை 19
விட்டுப் போவார்கள். மறுநாள் காலையிலே 20
அவர்கள் அவ்வழியாய்ப் போகும்போது,
அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போ
யிருக்கக் கண்டார்கள். பேதுருவுக்கு ஞாப 21
கம் வரவே, அவன் அவரிடம்: ரபீ, இதோ,
நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்
றான். இதைக் கேட்ட இயேசு: கடவுள் 22
மேல் நம்பிக்கையாயிருங்கள். எவனாகிலும் 23
இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்
திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி,
தான் சொன்னபடியே ஆகிறதென்று தன்
இருதயத்தில் சந்தேகப்படாமல் நம்பினால்,
அப்படியே ஆகும் என்று மெய்யாகவே உங்
களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால் நீங்கள் 24
எவைகளை ஜெபித்துக் கேட்டுக்கொள்வீர்
களோ, அவைகளைப் பெற்றுக்கொண்டோம்
என்று நம்புங்கள், அப்பொழுது அவைகள்
உங்களுக்குக் கிடைக்கும் என்று சொல்லு
கிறேன். நீங்கள் ஜெபிக்க நிற்கும்போதெல் 25,
லாம், ஒருவன்பேரில் உங்களுக்கு ஏதேனும் 26
குறை இருக்குமானால், பரலோகத்திலிருக்கிற
உங்கள் பிதாவும் உங்கள் மீறுதல்களை உங்
களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை
அவனுக்கு மன்னியுங்கள் என்று சொன்னார்.
அவர்கள் மறுபடியும் எருசலேமுக்கு 27
வந்தார்கள். அவர் தேவாலயத்தில் உலாவிக்

கொண்டிருக்கையில், பிரதான ஆசாரி
யரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடம்
28 வந்து: நீர் இவைகளை எந்த அதிகாரத்தினால்
செய்கிறீர்? இவைகளைச் செய்ய உமக்கு
இந்த அதிகாரங்கொடுத்தவர் யார் என்று
29 கேட்க, | இயேசு: நானும் உங்களிடம்
ஒரு காரியத்தைக் கேட்கிறேன், நீங்கள்
எனக்குப் பதில் சொல்லுங்கள், அப்பொழுது
நானும் இன்ன அதிகாரத்தினாலே இவை
களைச் செய்கிறேனென்று உங்களுக்குச்
30 சொல்லுவேன். யோவானுடைய ஸ்நானம்
பரலோகத்திலிருந்து வந்ததோ? மனுஷ
ரிடத்திலிருந்து வந்ததோ? எனக்குப் பதில்
31 சொல்லுங்கள் என்றார். அவர்கள் தங்க
ளுக்குள்ளே ஆலோசிக்கிறவர்களாய்: பர
லோகத்திலிருந்து என்று சொல்வோமானால்,
பின் ஏன் அவனை நம்பவில்லை என்று
32 கேட்பார்; மனுஷரிடத்திலிருந்து என்று
சொல்வோமா?—ஜனங்களுக்குப் பயந்து
கொண்டிருந்தார்கள்; எல்லாரும் யோவானை
மெய்யாகத் தீர்க்கதரிசியென்று எண்ணி
33 னார்கள். ஆகவே, அவர்கள் இயேசுவி
னிடம்: எங்களுக்குத் தெரியாதென்று
சொல்லிவிட்டார்கள். அப்பொழுது
இயேசு: இன்ன அதிகாரத்தினால் இவை
களைச் செய்கிறேன் என்று நானும் உங்களுக்
குச் சொல்லேன் என்றார்.

12 பின்பு அவர் உவமைகள் மூலமாய்
அவர்களோடு பேசத் தொடங்கினார்: ஒரு
மனுஷன் ஒரு திராட்சத்தோட்டம் உண்
டாக்கி, அதைச்சுற்றி வேலியடைத்து,
ஆலையை நாட்டி, கோபுரத்தையும் கட்டி,
குடியானவர்களுக்கு அதைக் குத்தகையாக
விட்டு, புறதேசத்துக்குப் போயிருந்தான்.
2 குடியானவர்களிடம் திராட்சத்தோட்டத்துக்
கனிகளில் தன் பாகத்தை வாங்கிவரும்படி,
பருவகாலத்தில் அவர்களிடம் ஒரு ஊழியக்
3 காரனை அனுப்பினான். அவர்களோ அவ
னைப்பிடித்து, அடித்து, வெறுங்கையாய்
4 அனுப்பிவிட்டார்கள். பின்பு அவன்
வேறொரு ஊழியக்காரனை அவர்களிடம்
அனுப்பினான்; அவர்கள் அவனைத் தலையில்
5 அடித்து, அவமானப்படுத்தினார்கள். வேறொ
ருவனை அனுப்பினான்; அவனையோ கொலை
செய்தார்கள். வேறு அநேகரையும் அனுப்
பினான்; அவர்களில் சிலரை அடித்து, சில
6 ரைக் கொலை செய்தார்கள். இன்னும் அவ
னிடம் ஒருவன் இருந்தான், அவனுக்கு
அவன் அருமையான குமாரன்; என் குமா
ரனை மதிப்பார்களென்று சொல்லி, அவனை
யும் கடைசியிலே அவர்களிடத்தில் அனுப்பி
னான். அந்தக் குடியானவர்களோ: இவன் 7
சுதந்தரவாளி, இவனைக் கொன்றுபோடு
வோம் வாருங்கள்; அப்பொழுது சுதந்தரம்
நம்முடையதாகும் என்று ஒருவரோடொரு
வர் சொல்லிக்கொண்டு, அவனைப் பிடித் 8
துக் கொலைசெய்து, திராட்சத்தோட்டத்திற்
குப் புறம்பே எறிந்துவிட்டார்கள். இப்படி 9
யிருக்க, திராட்சத்தோட்டத்து எஜமான்
என்ன செய்வான்? அவன் வந்து குடி
யானவர்களை அழித்து, வேறே ஆட்களிடம்
தோட்டத்தை விடுவான்.

வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று 10
தள்ளின கல்லே
கோடிக்குத் தலைக்கல்லாயிற்று,
அது கர்த்தராலே ஆயிற்று, 11
அது நமது கண்களுக்கு ஆச்சரியம்
என்னும் வாக்கியத்தை நீங்கள் வாசிக்க
வில்லையா என்றார். இந்த உவமையைத் 12
தங்களைக் குறித்துச் சொன்னாரென்று
அவர்கள் அறிந்து, அவரைப் பிடிக்க வகை
தேடினார்கள்; ஆகிலும் ஜனத்துக்குப் பயந்து,
அவரைவிட்டுப் போய்விட்டார்கள்.

அவர்கள் பேச்சிலே அவரை அகப் 13
படுத்தும்படி, பரிசேயரிலும் ஏரோதியரி
லும் சிலரை அவரிடம் அனுப்பினார்கள்.
அவர்கள் வந்து: போதகரே, நீர் சத்தியமுள் 14
ளவர், முகதாட்சிணியம் இல்லாதவர்; எவ
னைக்குறித்தும் உமக்குக் கவையில்லை, கடவு
ளின் மார்க்கத்தை நீர் சத்தியமாய்ப் போதிக்
கிறவர்; இது எங்களுக்குத் தெரியும். இராய
னுக்கு வரி செலுத்துகிறது நியாயமோ அல்
லவோ? நாம் கொடுக்கலாமோ கொடுக்க
லாகாதோ என்று கேட்டார்கள். அவர்கள் 15
மாய்மாலத்தை அவர் அறிந்து அவர்களைப்
பார்த்து: நீங்கள் என்னைச் சோதிக்கிற
தென்ன? ஒரு நிகாரியத்தை என்னிடம்
கொண்டுவந்து காண்பியுங்கள் என்றார்.
அவர்கள் அதைக் கொண்டுவந்தார்கள். 16
அப்பொழுது அவர்: இந்தச் சொரூப
மும் மேலெழுத்தும் யாருடையவை என்று
கேட்க, இராயனுடையவை என்றார்கள்.
அதற்கு இயேசு: இராயனுடையவைகளை 17
இராயனுக்கும், கடவுளுடையவைகளைக்
கடவுளுக்கும் செலுத்துங்கள் என்றார்.
அவர்கள் அவரைப்பற்றி மிகவும் ஆச்சரி
யப்பட்டார்கள்.

உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற 18
சதுசேயர் அவரிடம் வந்து: போதகரே, 19
ஒருவனுடைய சகோதரன் பிள்ளையில்லா
மல் தன் மனைவியை விட்டு இறந்துபோனால்,
அவனுடைய சகோதரன் அவன் மனைவியை
விவாகஞ்செய்து, தன் சகோதரனுக்குச் சந்

தானம் உண்டாக்கவேண்டுமென்று மோசே
20 எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே. சகோ
தரர் ஏழுபேர் இருந்தார்கள்; மூத்தவன்
ஒரு பெண்ணை விவாகஞ்செய்து, சந்தான
21 மில்லாமல் இறந்துபோனான். இரண்டாம்
சகோதரனும் அவளை விவாகஞ்செய்து, சந்
தானமில்லாமல் இறந்துபோனான். மூன்றாம்
22 சகோதரனும் அப்படியே. ஏழு பேருக்கும்
சந்தானமில்லை. எல்லாருக்கும் கடைசியில்
அந்தப் பெண்ணும் இறந்துபோனாள்.
23 உயிர்த்தெழுதலில், அவர்கள் எழுந்திருக்கும்
போது, அவர்களில் எவனுக்கு அவள் மனைவி
யாவாள்? ஏழுபேரும் அவளை மனைவியா
கக் கொண்டிருந்தார்களே என்றுகேட்க,
24 இயேசு அவர்களிடம்: நீங்கள் வேதாக
மங்களையும், கடவுளின் வல்லமையையும்
அறிந்துகொள்ளாததினால் அல்லவா மோசம்
25 போகிறீர்கள். மரித்தோர் உயிரோடெழுந்
திருக்கும்போது கொள்வனையும் கொடுப்
பனையுமில்லை. அவர்கள் பரலோகத்திலே
26 தூதரைப்போலிருப்பார்கள். மரித்தோர்
எழுப்பப்படுவார்கள் என்பதைப்பற்றிக்
கடவுள் கூறியிருக்கிறதை மோசேயின் ஆக
மத்தில் முட்செடியைப்பற்றிய பாகத்தில்
நீங்கள் வாசிக்கவில்லையா? நான் ஆபிரகா
மின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்
கோபின் கடவுள் என்று சொல்லியிருக்
27 கிறாரே. அவர் மரித்தோரின் கடவுள்
அல்ல, ஜீவனுள்ளோரின் கடவுள். நீங்கள்
மிகவும் மோசம் போகிறீர்கள் என்றார்.
28 அவர்கள் தர்க்கித்ததைக் கேட்டிருந்த
வேதபாரகரில் ஒருவன், அவர்களுக்கு மிக
நன்றாய் உத்தரவு சொன்னாரென்று அறிந்து,
அவரிடம் வந்து: கற்பனைகளிலெல்லாம்
முதன்மையான கற்பனை எதுவென்று கேட்
29 டான். இயேசு அவனிடம்: இஸ்ரவேலே
கேள், நம்முடைய கடவுளாகிய கர்த்தர்
30 ஒருவரே கர்த்தர்; நீ உன் முழு இருதயத்
தோடும், உன் முழு ஆத்துமாவோடும்,
உன் முழு மனத்தோடும், உன் முழு பலத்
தோடும் உன் கடவுளாகிய கர்த்தரிடம்
அன்புகூரவேண்டும் என்பதே முதன்மை
31 யான கற்பனை. உன்னிடத்தில் நீ அன்பு
கூருவதுபோல உன் அயலானிடத்திலும்
அன்புகூரவேண்டும் என்பது இரண்டாம்
கற்பனை. இவைகளிலும் பெரிய கற்பனை
32 வேறொன்றுமில்லை என்றார். அதைக்கேட்ட
வேதபாரகன்: சரிதான் போதகரே, நீர்
சொன்னது உண்மை; ஒருவரே இருக்கிறவர்,
33 அவரேயன்றி வேறொருவருமில்லை. முழு
இருதயத்தோடும், முழு மனத்தோடும், முழு
பலத்தோடும் அவரிடம் அன்புகூருகிறதும்,

தன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல் அயலா
னிடத்தில் அன்புகூருகிறதுமே சகல சர்
வாங்க தகனபலிகளையும் மற்ற பலிகளையும்
பார்க்கிலும் சிரேஷ்டம் என்றான். அவன் 34
விவேகமாய் உத்தரவுசொன்னதை இயேசு
கண்டு: கடவுள் ராஜ்யத்துக்கும் உனக்கும்
வெகுதூரமில்லை என்றார். அதன்பின் ஒரு
வரும் அவரிடம் யாதொரு கேள்வியும் கேட்
கத் துணியவில்லை.

இயேசு தேவாலயத்திலே உபதேசம் 35
பண்ணுகையில், அவர்: கிறிஸ்து தாவீதின்
குமாரனென்று வேதபாரகர் சொல்வதெப்
படி? தாவீதுதானே பரிசுத்த ஆவியினால்: 36

கர்த்தர் என் ஆண்டவரிடம்:
நான் உம்முடைய சத்துருக்களை
உமது பாதத்தின்கீழ்ப் போடுமட்டும்
நீர் என் வலதுபாரிசத்தில் உட்காரும்
என்று சொன்னார்

என்றான் அல்லவா? தாவீதுதானே அவரை 37
ஆண்டவரென்று சொல்லியிருக்க, அவ
னுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி
என்று சொன்னார். அநேக ஜனங்கள் அவ
ருடைய உபதேசத்தை விருப்பத்தோடே
கேட்டுவந்தார்கள்.

அவர் உபதேசம்பண்ணுகையில்: வேத 38
பாரகரைப்பற்றி எச்சரிக்கையாயிருங்கள்.
அவர்கள் நீண்ட அங்கிகளைத் தரித்துக்
கொண்டு திரிய விரும்புகிறார்கள். சந்தை
வெளிகளில் வந்தனங்களையும், ஜெபாலயங் 39
களில் முதல் ஆசனங்களையும், விருந்துகளில்
முதல் இடங்களையும் விரும்புகிறார்கள்.
விதவைகளின் வீடுகளைப் பட்சிக்கிறார்கள், 40
பார்வைக்கோ நீண்ட ஜெபஞ்செய்கிறார்கள்.
அவர்கள் அதிகத் தண்டனை பெறுவார்கள்
என்றார்.

இயேசு காணிக்கைப்பெட்டிக்கு எதிராக 41
உட்கார்ந்து, பெட்டியில் ஜனங்கள் பணம்
போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்;
ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப்
போட்டார்கள்: ஏழையான ஒரு விதவை 42
யும் வந்து ஒரு துட்டுக்குச் சரியான
இரண்டு காசைப் போட்டாள். அவர் தம் 43
சீஷரை அழைத்து: காணிக்கைப் பெட்டி
யில் பணம் போட்ட மற்றெல்லாரிலும்
இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்
டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன்; அவர்களெல்லாரும் 44
தங்கள் செல்வப் பெருக்கத்திலிருந்தெடுத்
துப் போட்டார்கள், இவளோ தனக்குரிய
யாவற்றையும், தன் ஜீவனத்துக்கானதை
யெல்லாம், தன் வறுமையிலிருந்து போட்டு
விட்டாள் என்றார்.

13 அவர் தேவாலயத்தை விட்டுப் போகை
யில் அவருடைய சீஷர்களில் ஒருவன் அவ
ரைப் பார்த்து: போதகரே, பாரும், எப்
பேர்ப்பட்ட கற்கள்! எப்பேர்ப்பட்ட கட்
2 டடங்கள் என்று சொல்ல, இயேசு அவ
னிடம்: இந்தப் பெரிய கட்டடங்களைப்
பார்க்கிறாயே; இவ்விடத்தில் கல்லின்மேல்
கல் இராதபடி எல்லாம் இடிக்கப்பட்டுப்
போகும் என்றார்.

3 அவர் தேவாலயத்துக்கு எதிராக ஒலிவ
மலையின்மேல் உட்கார்ந்திருக்கையில்,
பேதுரு யாக்கோபு யோவான் அந்திரேயா
என்பவர்கள் அவரிடம் தனித்து வந்து:
4 இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?
இவைகளெல்லாம் நிறைவேறித் தீருங்
காலத்துக்கு அடையாளம்என்ன? எங்களுக்
5 குச் சொல்லும் என்றார்கள். இயேசு அவர்க
ளோடு பேசத்தொடங்கி: ஒருவனும் உங்களை
வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.
6 நானே அவர் என்று என் நாமத்தைத்
தரித்துக்கொண்டு அநேகர் வருவார்கள்,
7 அநேகரை வஞ்சிப்பார்கள். யுத்தங்களை
யும் யுத்தச் செய்திகளையும் கேள்விப்படும்
போது கலங்காதிருங்கள்; இவைகள் சம்ப
விக்கவேண்டியதே; முடிவு இன்னுமில்லை.
8 ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும் ராஜ்யத்
துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்;
இங்குமங்கும் பூமியதிர்ச்சிகள் உண்டாகும்;
பஞ்சங்களும் உண்டாகும்; இவைகள்
வேதனைகளின் ஆரம்பம்.

9 நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள். உங்
களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்
கொடுப்பார்கள். ஜெபாலயங்களில் அடிக்
கப்படுவீர்கள்; என்னிமித்தம் அதிபதிகளுக்
கும் ராஜாக்களுக்கும் முன் அவர்களுக்குச்
10 சாட்சியாக நிறுத்தப்படுவீர்கள். முத
லாவது, சகல ஜாதியாரிடத்திலும் சுவிசேஷம்
11 பிரசங்கிக்கப்படவேண்டும். அவர்கள் உங்
களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்
போது, என்ன பேசுவோமென்று முன்ன
தாகவே கவலைப்படாதிருங்கள். அந்நாழி
கையிலே உங்களுக்கு எது அருள்செய்
யப்படுமோ அதையே பேசுங்கள்; பேசுகிற
வர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே.
12 சகோதரன் சகோதரனையும், தகப்பன்
பிள்ளையையும் மரணத்துக்கு ஒப்புக்கொ
டுப்பார்கள்; பெற்றோருக்கு விரோதமாய்ப்
பிள்ளைகள் எழும்பி, அவர்களைக் கொலை
13 செய்வார்கள். என் நாமத்தினிமித்தம் எல்
லாரும் உங்களைப் பகைப்பார்கள். முடிவு
பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்
படுவான்.

மேலும், பாழாக்கும் அருவருப்பு நிற்கத் 14
தகாத இடத்தில் நிற்க நீங்கள் காணும்
போது—வாசிக்கிறவன் கவனிக்கக்கடவன்
—யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்கு
ஓடிப்போகக்கடவர்கள். வீட்டின்மேல் இருக்கிற 15
வன் இறங்கவும், தன் வீட்டிலே எதையாகி
லும் எடுத்துக்கொள்ள உள்ளேபோகவும்
வேண்டாம். வயலில் இருக்கிறவன் தன் 16
வஸ்திரத்தை எடுப்பதற்குத் திரும்பவேண்
டாம். அந்நாட்களில் கர்ப்பவதிகளுக் 17
கும் பால் கொடுக்கிறவர்களுக்கும், ஐயோ,
பரிதாபம்! நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத் 18
தில் நேரிடாதபடிவேண்டிக்கொள்ளுங்கள்.
அந்த நாட்கள் உபத்திரவ நாட்களாம். 19
கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்ததுமுதல்
இதுவரைக்கும் இப்படிப்பட்ட உபத்திர
வம் நேரிட்டதுமில்லை, இனி நேரிடப்
போவதுமில்லை. கர்த்தர் அந்நாட்களைக் 20
குறைக்காதிருந்தால், மனுமக்களில் எவ
னும் தப்பிக்கொள்வதில்லை; தாம் தெரிந்
தெடுத்தவர்களினிமித்தமோ அவர் அந்த
நாட்களைக் குறைத்திருக்கிறார். அப் 21
பொழுது எவனாகிலும் உங்களிடம்: இதோ,
கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே
இருக்கிறார் என்று சொன்னால் நம்பா
திருங்கள். ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக் 22
களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி,
கூடுமானால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களை
யும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களை
யும் அற்புதங்களையும் செய்வார்கள்.
நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள்; எல்லா 23
வற்றையும் முன்னதாக உங்களுக்கு அறி
வித்திருக்கிறேன்.

அந்நாட்களிலே அந்த உபத்திரவத்திற் 24
குப்பின்பு சூரியன் அந்தகாரப்படும், சந்
திரன் தன் வெளிச்சத்தைக் கொடாதிருக்கும்,
நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழுந்து 25
கொண்டிருக்கும், வானத்திலுள்ள சத்து
வங்களும் அசைக்கப்படும். அப்பொழுது 26
மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும்
மகிமையோடும் மேகங்களில் வருகிறதைக்
காண்பார்கள். அப்பொழுது அவர் தம் 27
தூதரை அனுப்பி, பூமியின் கடைமுனை
முதற்கொண்டு வானத்தின் கடைமுனை
மட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து
தாம் தெரிந்தெடுத்தவர்களைக் கூட்டிச்சேர்ப்
பார்.

அத்திமரம் கற்பிக்கும் உவமையை அதி 28
லிருந்து கற்றுக்கொள்ளுங்கள்; அது இளங்
கிளையாகி இலை துளிர்க்கும்போது, வசந்த
காலம் சமீபமென்று அறிவீர்கள். அப் 29
படியே நீங்களும் இவைகள் சம்பவிக்கிற

தைக் காணும்போது, அவர் சமீபமாய்
வாசலருகே வந்திருக்கிறார் என்று அறிந்து
30 கொள்ளுங்கள். இவையெல்லாம் சம்பவித்
துத்தீருமளவுக்கும் இந்தச் சந்ததி ஒழிந்து
போகாதென்று மெய்யாகவே உங்களுக்
31 குச் சொல்லுகிறேன். வானமும் பூமியும்
ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒரு
32 போதும் ஒழிந்துபோவதில்லை. அந்த நாளை
யும் அந்த நாழிகையையும் பிதா தவிர மற்
றொருவனும் அறியான்; பரலோகத்திலுள்ள
தூதர்களும் அறியார்கள், குமாரனுங்கூட
33 அறியார். அக்காலத்தை நீங்கள் அறியாத
படியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்
34 திருங்கள். இது எப்படியெனில், தன்
வீட்டைவிட்டுப் புறத்தேசத்துக்குப் பிரயா
ணம்போன ஒரு மனுஷன் தன் ஊழியக்கார
ருக்கு அதிகாரங்கொடுத்து, அவனவனுக்கு
அவனவன் வேலையையும் நியமித்து, விழித்
திருக்கும்படி காவல் காக்கிறவனுக்குக் கட்
35 டளையிட்டதுபோலாகும். ஆகையால் விழித்
திருங்கள்; வீட்டெஜமான் எப்பொழுது வரு
வாரென்று உங்களுக்குத் தெரியாது. சாயங்
காலமோ, நடு இராத்திரியோ, சேவல் கூவும்
நேரமோ, காலையோவென்று உங்களுக்குத்
36 தெரியாது. அவர் திடீரென்று வந்து, உங்
களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடி
37 யாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். நான் உங்
களுக்குச் சொல்லுகிறதை எல்லாருக்கும்
சொல்லுகிறேன், விழித்திருங்கள் என்று
சொல்லிமுடித்தார்.

14 பஸ்காவும் புளிப்பில்லாத அப்பப்பண்
டிகையும் வர இரண்டு நாளிருந்தது. பிர
தான ஆசாரியரும் வேதபாரகரும் அவ
ரைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்ய
2 வகை தேடினார்கள். ஜனங்களுக்குள் கலக
முண்டாகாதபடி, பண்டிகையிலே அப்
படிச் செய்யலாகாது என்றார்கள்.
3 அவர் பெத்தானியாவில் குஷ்டரோகி
யான சீமோன் வீட்டில் போஜனபந்தியிருக்
கையில், ஒரு ஸ்திரீ விலையுயர்ந்த நளத்தம்
என்னும் சுயமான தைலமுள்ள வெள்ளைக்
கல் பரணியைக் கொண்டுவந்து, உடைத்து,
அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல்
4 ஊற்றினாள். அப்பொழுது சிலர் தங்களுக்
குள்ளே கோபங்கொண்டு: இந்தத்
தைலத்தை ஏன் வீண்செலவு செய்யவேண்
5 டும்? இதை முந்நூறு திநாரியத்துக்கு அதிக
மான கிரயத்துக்கு விற்று, ஏழைகளுக்குக்
கொடுக்கலாமே என்று சொல்லி, அவள்
6 மேல் சினங்கொண்டார்கள். இயேசுவோ:
அவளை விட்டுவிடுங்கள்; அவளை ஏன்
தொந்தரவு செய்கிறீர்கள்? நல்ல செய்கை
எனக்குச் செய்தாளே. ஏழைகள் எப் 7
போதும் உங்களோடிருக்கிறார்கள், நீங்கள்
விரும்பும்போதெல்லாம் அவர்களுக்கு
நன்மை செய்யலாம்; நானோ எப்போதும்
உங்களோடிரேன். இவள் தன்னால் கூடிய 8
தைச் செய்தாள்; என் அடக்கத்திற்கென்று
என் சரீரத்தில் தைலம்பூச முந்திக்கொண்
டாள். சுவிசேஷம் உலகம் முழுவதிலும் 9
எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்
கங்கே இவள் செய்ததும் இவள் ஞாப
கார்த்தமாய்ச் சொல்லப்படும்என்று மெய்யா
கவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரி 10
யோத்து என்பவன் அவரைப் பிரதான ஆசா
ரியருக்குக் காட்டிக்கொடுக்க அவர்களி
டம் போனான். அவர்கள் அதைக் கேட்டுச் 11
சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணங்
கொடுக்க வாக்களித்தார்கள். தகுந்த சம
யத்தில் அவரைக் காட்டிக்கொடுக்க வகை
தேடிக்கொண்டிருந்தான்.
பஸ்கா பலியிடும் நாளில், அதாவது புளிப் 12
பில்லாத அப்பப்பண்டிகையின் முதல்
நாளில், அவர் சீஷர் அவரிடம் வந்து: நீர்
பஸ்காவைப் புசிப்பதற்கு நாங்கள் எங்கே
போய் ஆயத்தம்பண்ண விரும்புகிறீர் என்று
கேட்க, அவர் தம்முடைய சீஷரில் இரு 13
வரை அனுப்பி: நீங்கள் நகரத்திற்குள் போங்
கள்; தண்ணீர்க்குடம் சுமந்துவருகிற ஒரு
மனுஷன் அங்கே உங்களுக்கு எதிர்ப்படு
வான், அவனைத் தொடர்ந்து போங்கள்.
அவன் எந்த வீட்டிற்குட் செல்லுகிறானோ 14
அந்த வீட்டெஜமானிடம்: நான் என் சீஷ
ரோடு பஸ்காவைப் புசிக்கும் என் அறை
எங்கேயென்று போதகர் கேட்கிறார் என்று
சொல்லுங்கள். கம்பளம் முதலானவைகள் 15
விரித்து ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற
பெரிய மேல் அறையை அவன் உங்களுக்
குக் காண்பிப்பான்; அங்கே நமக்காக ஆயத்
தம்பண்ணுங்கள் என்று சொன்னார். அப் 16
படியே சீஷர் அவரைவிட்டு நகரத்தினுட்
சென்று, தங்களுக்கு அவர் சொன்ன
படியே கண்டு, பஸ்காவை ஆயத்தம்பண்ணி
னார்கள்.
சாயங்காலமானபோது, அவர் பன்னிரு 17
வரோடுங்கூட வந்தார். அவர்கள் பந்தி 18
யமர்ந்து போஜனம்பண்ணுகையில் இயேசு:
உங்களில் ஒருவன், என்னோடு போஜனம்
பண்ணுகிறவனே, என்னைக் காட்டிக்கொடுப்
பான் என்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்றார். இதைக் கேட்கவே, 19
அவர்கள் துக்கங்கொண்டு, நான்தானோ

என்று ஒருவன் ஒருவனாய் அவரிடம்
20 கேட்கத் தொடங்கினார்கள். அவரோ அவர்
களிடம்: பன்னிருவரில் ஒருவனே, என்
னோடேகூடத் தாலத்தில் கையிடுகிறவனே
21 அவன். மனுஷகுமாரன் தம்மைக்குறித்து
எழுதியிருக்கிறபடியே போகிறார், ஆகிலும்
மனுஷகுமாரனை எந்த மனுஷன் காட்டிக்
கொடுக்கிறானோ, ஐயோ! அவனுக்குக் கேடு
வரும். அந்த மனுஷன் பிறவாதிருந்தானா
னால் அவனுக்கு நலம் என்றார்.
22 அவர்கள் போஜனம்பண்ணுகையில்,
அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து,
அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து:
நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள், இது என்
23 னுடைய சரீரம் என்றார். பின்பு பாத்தி
ரத்தை எடுத்து, நன்றிசெலுத்தி, அவர்க
ளுக்குக் கொடுத்தார். அவர்களெல்லாரும்
24 அதில் பானம்பண்ணினார்கள். அப்பொழுது
அவர்: இது உடன்படிக்கைக்குரிய என்னு
டைய இரத்தம், இது அநேகருக்காகச் சிந்
25 தப்படுகிறது. நான் திராட்சப்பழரசத்தைக்
கடவுள் ராஜ்யத்திலே புதிதாய்ப் பானம் பண்
ணும் நாள்வரைக்கும் இனி இதில் பானம்
பண்ணுவதில்லையென்று மெய்யாகவே உங்
களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
26 அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டுப் பாடி
முடித்து, புறப்பட்டு, ஒலிவ மலைக்குப்
27 போனார்கள். அப்பொழுது இயேசு அவர்களி
டம்: நீங்கள் எல்லாரும் இடறிவிழுவீர்கள்.
மேய்ப்பனை வெட்டுவேன்,
ஆடுகள் சிதறடிக்கப்படும்
28 என்று எழுதியிருக்கிறதே. நான் உயி
ரோடெழுப்பப்பட்ட பின்போ உங்களுக்கு
முன் கலிலேயாவுக்குப் போவேன் என்றார்.
29 இதைக் கேட்ட பேதுரு: எல்லாரும் இடறி
னாலும் நான் இடறேன் என்று சொன்னான்.
30 இயேசு அவனிடம்: இன்றையதினமே,
இந்த இரவிலேயே, சேவல் இரண்டுதரம்
கூவுகிறதற்குமுன் நீ என்னை மூன்றுதரம்
மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்
31 குச் சொல்லுகிறேன் என்றார். அவனோ:
நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்
தாலும் உம்மை மறுதலிக்கவே மாட்டேன்
என்று வற்புறுத்திச் சொன்னான். எல்லாரும்
அப்படியே சொல்லிக்கொண்டிருந்தார்கள்.
32 பின்பு கெத்செமனே என்னும் இடத்
திற்கு வந்தார்கள். அவர் தம்முடைய
சீஷரை நோக்கி: நான் ஜெபித்து வருமளவும்
இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி,
33 பேதுருவையும் யாக்கோபையும் யோவானை
யும் கூட்டிக்கொண்டுபோய், திகைக்கவும்
34 வியாகுலப்படவும் தொடங்கினார். அப்
பொழுது அவர்களிடம்: என் ஆத்துமா
மரணத்துக்கேதுவானபெருந்துக்கங்கொண்
டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி, விழித்
திருங்கள் என்று சொல்லி, சற்று அப்பால் 35
போய், தரையிலே விழுந்து, கூடுமானால்
அந்த நாழிகை தம்மைவிட்டு நீங்கிப்போகும்
படி வேண்டிக்கொண்டு: அப்பா பிதாவே, 36
எல்லாம் உம்மாலே ஆகும்; இந்தப் பாத்
திரத்தை என்னிடமிருந்து எடுத்துவிடும்;
ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்
முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது
என்றார். பின்பு அவர் வந்து அவர்கள் 37
நித்திரை செய்கிறதைக் கண்டு, பேதுருவை
நோக்கி: சீமோனே, நித்திரை செய்கிறாயா?
ஒருமணி நேரமாவது விழித்திருக்கமுடி
யாதோ? நீங்கள் சோதனைக்குட்படாதபடி 38
விழித்திருந்து ஜெபஞ்செய்யுங்கள். ஆவி
உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீன
முள்ளது என்றார். அவர் மறுபடியும் போய் 39
அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபித்
தார். அவர் திரும்பவும் வந்து அவர்கள் 40
நித்திரை செய்கிறதைக் கண்டார்; அவர்கள்
கண்கள் மிகுந்த நித்திரை மயக்கமாயிருந்
தன, அவருக்கு மறுமொழியாக இன்னது
சொல்வதென்று அறியாதிருந்தார்கள்.
அவர் மூன்றாந்தரம் வந்து: இனி நித்திரை 41
செய்து இளைப்பாறுங்கள். ஆயிற்று, வேளை
வந்துவிட்டது; இதோ, மனுஷகுமாரன்
பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்
கப்படுகிறார். எழுந்திருங்கள், போவோம்; 42
இதோ, என்னைக் காட்டிக்கொடுக்கிறவன்
வந்துவிட்டான் என்றார்.
உடனே, அவர் இன்னும் பேசிக்கொண் 43
டிருக்கையில், பன்னிருவரில் ஒருவனாகிய
யூதாஸ் வந்தான்; அவனோடு பிரதான ஆசாரி
யரும் வேதபாரகரும் மூப்பரும் அனுப்
பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும்
தடிகளையும் பிடித்துக்கொண்டுவந்தார்கள்.
அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நான் 44
எவனை முத்தமிடுவேனோ அவன்தான்.
அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டு
போங்கள் என்று அவர்களுக்குக் குறிப்புச்
சொல்லியிருந்தான். அவன் வந்தவுடனே 45
அவரண்டையில் சேர்ந்து, ரபீ என்று
சொல்லி, அவரை முத்தமிட்டான். அப் 46
பொழுது அவர்கள் அவர்மேல் கைபோட்டு
அவரைப்பிடித்தார்கள். கூடநின்றவர்களில் 47
ஒருவன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசா
ரியனுடைய வேலைக்காரனைக்காதற வெட்டி
னான். இயேசு அவர்களைப் பார்த்து: கள்ள 48
னைப் பிடிக்கப்போகிறதுபோல, நீங்கள்
பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்

49 கொண்டு என்னைப் பிடிக்கவந்தீர்கள். நான்
தினந்தோறும் உங்கள் நடுவிலே தேவாலயத்
தில் உபதேசித்துக்கொண்டிருந்தேன், அப்
பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே;
ஆயினும், வேதவாக்கியங்கள் நிறைவேறும்
50 படி இது நடக்கிறது என்றார். அப்பொழுது
எல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள்.
51 வாலிபன் ஒருவன் ஒரு துப்பட்டியை
மாத்திரம் தன்மேல் போர்த்துக்கொண்டு
அவர்பின்னே போனான்; அவனையும் பிடிக்க
52 வந்தார்கள். அவனோ துப்பட்டியைப்
போட்டுவிட்டு, ஆடையில்லாமல் ஓட்டம்
பிடித்தான்.
53 இயேசுவை அவர்கள் பிரதான ஆசாரிய
னிடம் கொண்டுபோனார்கள்; அப்பொழுது
ஆசாரியர் மூப்பர் வேதபாரகர் எல்லாரும்
54 கூடிவந்தார்கள். பேதுரு தூரத்திலே அவ
ருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரிய
னுடைய அரமனை முற்றத்திற்கு வந்து, சேவ
கரோடே உட்கார்ந்து, நெருப்பு வெளிச்சத்
55 தில் குளிர்காய்ந்துகொண்டிருந்தான். அப்
பொழுது பிரதான ஆசாரியரும் ஆலோசனைச்
சங்கத்தாரனைவரும் இயேசுவைக் கொலை
செய்யும்படி அவருக்கு விரோதமாகச்சாட்சி
56 தேடினார்கள்; தேடியும் கிடைக்கவில்லை.
அநேகர் அவருக்கு விரோதமாகப் பொய்ச்
சாட்சி சொல்லியும், சாட்சியங்கள் ஒன்றுக்
57 கொன்று பொருந்தவில்லை. சிலர் எழுந்து:
கை வேலையாகிய இந்தத் தேவாலயத்தை
நான் இடித்துப்போட்டு, கைவேலையல்லாத
வேறொன்றை மூன்றுநாளுக்குள்ளே கட்டு
வேன் என்று இவன் சொன்னதை
58 நாங்கள் கேட்டோம் என்று | அவருக்கு
விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொன்
59 னார்கள். அப்படியிருந்தும் அவர்கள் சாட்சி
60 பொருந்தாமற்போயிற்று. அப்பொழுது பிர
தான ஆசாரியன் எழுந்து நடுவே நின்று,
இயேசுவைப் பார்த்து: நீ ஒன்றும் பதில்
சொல்லுகிறதில்லையா? இவர்கள் உனக்கு
விரோதமாய்ச் சொல்லுகிற சாட்சி என்ன
61 என்று கேட்டான். அவரோ பேசாமலிருந்
தார், பதில் ஒன்றும் சொல்லவில்லை. மறு
படியும் பிரதான ஆசாரியன் அவரைப்
பார்த்து: நீ ஸ்தோத்திரத்துக்குரியவரின்
குமாரனாகிய கிறிஸ்துதானா என்று கேட்க, |
62 இயேசு: நான்தான் அவர் என்று சொல்லி,
பின்னும்: மனுஷகுமாரன் சர்வ வல்லவ
ருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதை
யும் வானத்தின் மேகங்களோடு வருவதை
63 யும் நீங்கள் காண்பீர்கள் என்றார். பிர
தான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்
துக்கொண்டு: இனி நமக்குச் சாட்சிகள்
எதற்கு? இந்தத் தேவதூஷணத்தைக் கேட் 64
டீர்களே, உங்களுக்கு எப்படித் தோன்று
கிறது என்றான். அதைக் கேட்ட யாவரும்:
இவன் மரண தண்டனை பெறத்தக்கவன்
என தீர்த்தார்கள். அப்பொழுது சிலர் அவர் 65
மேல் துப்பவும், அவருடைய முகத்தை
மூடி அவரைக் குட்டி, ஞானதிருஷ்டியினால்
சொல் என்று சொல்லவும் தொடங்கி
னார்கள். அவரைச் சேவகர் வசம் ஒப்பு
விக்கவே, அவர்களும் அவரைக் கன்னத்தில்
கையினால் அறைந்தார்கள்.
பேதுரு கீழே அரமனை முற்றத்திலிருக் 66
கையில், பிரதான ஆசாரியனுடைய வேலைக்
காரிகளில் ஒருத்தி வந்தாள். குளிர்காய்ந்து 67
கொண்டிருந்த பேதுருவை அவள் கண்டு,
அவனை உற்றுப்பார்த்து: இயேசு என்னும்
நசரேயனோடே நீயும் இருந்தாய் என்றாள்.
அதற்கு அவன்: எனக்குத் தெரியாது, நீ 68
சொல்லுகிறது எனக்கு விளங்கவில்லை
என்று மறுதலித்து, வெளியே வாசல் மண்
டபத்திற்குப் போனான்; அப்பொழுது
சேவல் கூவிற்று. அந்த வேலைக்காரி அவ 69
னைக் கண்டு: இவன் அவர்களில் ஒருவன்
என்று அருகே நின்றவர்களுக்குத் திரும்ப
வும் சொல்ல ஆரம்பிக்க, அவன் மறுபடியும் 70
மறுதலித்தான். திரும்பவும் சற்று நேரத்
துக்குப் பின்பு அருகே நிற்கிறவர்கள்
பேதுருவினிடம்: மெய்யாகவே நீ அவர்
களில் ஒருவன், நீ கலிலேயன் என்றார்கள்.
அவனோ: நீங்கள் சொல்லுகிற இந்த மனு 71
ஷன் எனக்குத் தெரியாது என்று சொல்லி,
சபித்துக்கொள்ளவும் சத்தியம்பண்ணவும்
தொடங்கினான். உடனே சேவல் இரண் 72
டாந்தரம் கூவிற்று. சேவல் இரண்டுதரம்
கூவுகிறதற்குமுன் நீ என்னை மூன்றுதரம்
மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில்
சொன்ன வார்த்தையைப் பேதுரு நினைவு
கூர்ந்து, விம்மி விம்மி அழுதான்.

விடியற்காலமானவுடனே பிரதான ஆசாரி **15**
யரும் மூப்பரும் வேதபாரகரும் ஆலோ
சனைச் சங்கத்தாரனைவரும் கூடி யோசனை
பண்ணி, இயேசுவைக் கட்டிக்கொண்டு
போய், பிலாத்துவினிடம் ஒப்புக்கொடுத்
தார்கள். பிலாத்து அவரைப் பார்த்து: நீ 2
யூதருடைய ராஜாவா என்று கேட்க அவர்:
ஆம், நீர் சொல்லுகிறபடிதான் என்றார்.
பிரதான ஆசாரியர் அவர்மேல் அநேக 3
குற்றங்களைச் சாட்டினார்கள். அப்பொழுது 4
பிலாத்து மறுபடியும் அவரைப் பார்த்து: நீ
பதில் ஒன்றும் சொல்லுகிறதில்லையா! இதோ,
பார், இவர்கள் உன்மேல் எத்தனையோ

குற்றங்களைச் சாட்டுகிறார்களே என்று கேட்
5 டான். இயேசுவோ அதன்பின் பதில்
ஒன்றும் சொல்லவில்லை; பிலாத்து ஆச்சரி
யப்பட்டான்.
6 பண்டிகைக்காலத்தில் ஜனங்கள் கேட்டுக்
கொள்ளும் ஒரு கைதியை அவர்களுக்கு
7 அவன் விடுதலை செய்துவருவான். பரபாஸ்
என்னும் ஒருவனிருந்தான், கலகத்தில்
கொலைசெய்த கலகக்காரரோடு அவன்
8 கட்டுண்டவன். ஜனங்கள் வந்து, வழக்கத்
தின்படியே தங்களுக்குச் செய்யவேண்டு
மென்று கேட்டுக்கொள்ளத் தொடங்கி
9 னார்கள். பிலாத்து அவர்களிடம்: நான் யூத
ருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலை
செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களா
10 என்று கேட்டான். பொறாமையினாலே பிர
தான ஆசாரியர் அவரை ஒப்புக்கொடுத்
11 தார்களென்று அவன் அறிந்திருந்தான். பிர
தான ஆசாரியரோ, பரபாசையே தங்களுக்கு
விடுதலைசெய்வது நல்லதென்று சொல்லும்
12 படி ஜனங்களை ஏவிவிட்டார்கள். இதைக்
கேட்ட பிலாத்து திரும்பவும் அவர்களிடம்:
அப்படியானால் யூதருடைய ராஜாவென்று
நீங்கள் சொல்லுகிறவனை நான் என்னசெய்ய
13 வேண்டும் என்று கேட்டான். அவனைச்
சிலுவையில் அறையும் என்று மறுபடியும்
14 சத்தமிட்டுச் சொன்னார்கள். அதற்குப்
பிலாத்து: ஏன், என்ன பொல்லாப்புச் செய்
தான் என்றான். அவர்களோ: அவனைச்
சிலுவையில் அறையும் என்று பின்னும்
அதிகமாய்க் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்.
15 பிலாத்து ஜனங்களைத் திருப்திசெய்யும் மன
முள்ளவனாய், பரபாசை அவர்களுக்கு
விடுதலைசெய்து, இயேசுவையோ வாரினால்
அடிப்பித்து, சிலுவையில் அறையும்படி
ஒப்புக்கொடுத்தான்.
16 அப்பொழுது போர்ச்சேவகர் அவரைக்
கோட்டைமாளிகைக்குள்ளே கொண்டு
போய், பட்டாளம் முழுவதையும் கூட்டி
17 னார்கள். சிவப்பான மேலங்கியை அவருக்கு
உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப்
18 பின்னி அவருக்குச் சூட்டி: யூதருடைய
ராஜாவே, வாழ்க என்று அவரை வாழ்த்தி,
19 அவரைச் சிரசில் கோலால் அடித்து, அவர்
மேல் துப்பி, முழங்கால்படியிட்டு அவரை
20 வணங்கினார்கள். அவரைப் பரிகாசம்பண்
ணினபின்பு சிவப்பான அங்கியைக் கழற்றி,
அவருடையவஸ்திரங்களை அவருக்கு உடுத்தி,
அவரைச் சிலுவையில் அறையும்படி
வெளியே நடத்திக்கொண்டுபோனார்கள்.
21 சிரேனே ஊரானும், அலெக்சந்தருக்கும்
ரூப்புவுக்கும் தகப்பனுமாகிய சீமோன்
எனப்பட்ட ஒருவன் வயல்வெளியிலிருந்து
அவ்வழியே வருகையில், அவருடைய சிலு
வையைச் சுமக்கும்படி அவனைக் கட்டா
யப்படுத்தினார்கள். கபாலஸ்தலம் என்று 22
அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும்
இடத்துக்கு அவரைக் கொண்டுபோய்,
வெள்ளைப்போளம் கலந்த திராட்சரசத்தை 23
அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவ
ரோ அதை வாங்கிக்கொள்ளவில்லை. அவ 24
ரைச் சிலுவையில் அறைந்தார்கள். அவர்
வஸ்திரங்களில் ஒவ்வொருவனுக்கு இன்னின்
னதென்று தெரிந்துகொள்ளும்படி சீட்டுப்
போட்டுப் பங்கிட்டுக்கொண்டார்கள். அவ 25
ரைச் சிலுவையில் அறைந்தது மூன்றாம்
மணிநேரம். யூதருடைய ராஜா என்று அவர் 26
குற்றத்தைக்காட்டும் விலாசம் மேலே எழுதி
யிருந்தது. அவருடைய வலதுபாரிசத்தில் 27,
ஒருவனும் அவருடைய இடதுபாரிசத்தில் 28
ஒருவனுமாக, இரண்டு கொள்ளைக்காரரை
அவரோடுகூடச் சிலுவைகளில் அறைந்
தார்கள். அந்த வழியாய் நடந்துபோகிற 29
வர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆ! ஆ!
தேவாலயத்தை இடித்து மூன்று நாட்களில்
கட்டுகிறவனே, சிலுவையிலிருந்து இறங்கி 30
உன்னை நீயே இரட்சித்துக்கொள் என்று அவ
ரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான 31
ஆசாரியரும் வேதபாரகரோடு சேர்ந்து பரி
காசம்பண்ணி: மற்றவர்களை இரட்சித்தான்,
தன்னைத்தான் இரட்சித்துக்கொள்ளத் திரா
ணியில்லை; நாம் கண்டு நம்பும்படி இஸ்ர 32
வேலுக்கு ராஜாவாகிய கிறிஸ்து இப்பொழுது
சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும் என்று
சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவரோடு
கூடச் சிலுவைகளில் அறையப்பட்டவர்
களும் அவரை நிந்தித்தார்கள்.
ஆறாம் மணிநேரமாகவே பூமியெங்கும் 33
அந்தகாரம் உண்டாயிற்று; ஒன்பதாம் மணி
நேரம் வரைக்கும் அப்படியே இருந்தது.
ஒன்பதாம் மணிநேரத்திலே இயேசு: 34
எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி என்று
மிகுந்தசத்தமிட்டுக் கூப்பிட்டார். அதற்கு:
என் கடவுளே, என் கடவுளே, ஏன் என்
னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.
அங்கே நின்றவர்களில் சிலர் அதைக் கேட்ட 35
பொழுது: இதோ, எலியாவைக் கூப்
பிடுகிறான் என்றார்கள். ஒருவன் ஓடி, கடற் 36
காளானைக் காடியிலே தோய்த்து, அதை
ஒரு நாணற்கோலில் மாட்டி, அவருக்குக்
குடிக்கக்கொடுத்து: பொறுங்கள், எலியா
இவனை இறக்க வருவானோ பார்ப்போம்
என்றான். இயேசு மகா சத்தமிட்டு ஜீவனை 37
விட்டார். அப்பொழுது தேவாலயத்தின் 38

திரை மேலே தொடங்கிக் கீழே வரைக்கும்
39 இரண்டாகக் கிழிந்தது. அவருக்கு எதிரே
நின்ற நூற்றுக்கதிபதி அவர் இப்படி ஜீவனை
விட்டதைக் கண்டபோது: மெய்யாகவே
இந்த மனுஷன் தேவகுமாரன் என்றான்.
40 ஸ்திரீகள் சிலர் தூர நின்று பார்த்துக்கொண்
டிருந்தார்கள்; அவர்களுக்குள் மகதலேனா
மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்
கும் தாயாகிய மரியாளும் சலோமே என்
41 பவளும் இருந்தார்கள்; அவர் கலிலே
யாவிலிருந்தபோதே இவர்கள் அவரைத்
தொடர்ந்துவந்து அவருக்குப் பணிவிடை
செய்தவர்கள். அவரோடுகூட எருசலே
முக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும்
இருந்தார்கள்.
42 அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு
என்னும் ஒருவனிருந்தான். இவன் கனம்
பொருந்திய ஆலோசனைச்சங்கத்தான். கட
வுள் ராஜ்யம் வரக் காத்திருந்தவன். சாயங்
43 காலமானபோது, ஓய்வுநாளுக்கு முந்தின
ஆயத்த நாளானதால், இவன் பிலாத்து
வினிடம் துணிந்துபோய், இயேசுவின் சரீரத்
44 தைக் கேட்டான். அவர் இதற்குள் மரித்
துப்போனாரோ என்று பிலாத்து ஆச்சரி
யப்பட்டு, நூற்றுக்கதிபதியை வரவழைத்து:
அவர் மரித்து நேரமாயிற்றோ என்று விசா
45 ரித்தான். நூற்றுக்கதிபதியினாலே அதை
அறிந்துகொண்டு, உடலை யோசேப்பினி
46 டம் கொடுத்தான். அவன் போய் மெல்லிய
துணியை வாங்கிக்கொண்டுவந்து, அவரை
இறக்கி, அந்தத் துணியிலே சுற்றி, கற்
பாறையில் வெட்டியிருந்த கல்லறையிலே
அவரை வைத்து, கல்லறையின் வாசலில்
47 ஒரு கல்லை உருட்டிவைத்தான். அவரை
வைத்த இடத்தை மகதலேனா மரியாளும்
யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்துக்
கொண்டிருந்தார்கள்.

16 ஓய்வுநாள் முடிந்தபின், மகதலேனா மரி
யாளும் யாக்கோபின் தாயாகிய மரியாளும்
சலோமே என்பவளும் அவருக்குப் பூச
வேண்டுமென்று சுகந்தவர்க்கங்களை வாங்கி
2 னார்கள். வாரத்தின் முதல்நாள் அதிகாலை
யில் சூரியோதயத்திலே அவர்கள் கல்ல
3 றைக்கு வந்தார்கள். கல்லறையின் வாசலி
லிருந்து கல்லை நமக்காக எவன் புரட்டித்
தள்ளுவான் என்று ஒருவரோடொருவர்
4 சொல்லிக்கொண்டார்கள். அவர்கள் வந்து
ஏறிட்டுப் பார்த்தபோது அது தள்ளப்பட்
டிருக்கக் கண்டார்கள். அந்தக் கல் மிக
5 வும் பெரிது. அவர்கள் கல்லறைக்குட்
சென்று, வெள்ளையங்கி தரித்திருந்த ஒரு
வாலிபன் வலதுபக்கம் உட்கார்ந்திருக்கிற
தைக் கண்டு திகைத்தார்கள். அவனோ அவர் 6
களைப்பார்த்து: திகைக்கவேண்டாம்; சிலு
வையில் அறையுண்ட நசரேயனாகிய இயேசு
வைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்
தார்; அவர் இங்கே இல்லை; இதோ, அவரை
வைத்த இடம். நீங்கள் போய்: அவர் உங் 7
களுக்குமுன் கலிலேயாவுக்குப் போகிறார்,
அவர் உங்களுக்குச் சொன்னபடியே அங்கே
அவரைக் காண்பீர்கள் என்று அவர் சீஷ
ருக்கும் பேதுருவுக்கும் சொல்லுங்கள் என்
றான். நடுக்கமும் திகைப்பும் அவர்களைப் 8
பிடித்தபடியால், அவர்கள் வெளியே வந்து
கல்லறையைவிட்டு ஓடிப்போனார்கள்;
அவர்கள் ஒருவருக்கும் ஒன்றும் சொல்ல
வில்லை; பயந்திருந்தார்கள்.

வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே 9
இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரி
யாளுக்கு முதல்முதல் தரிசனமானார். அவ
ளிடத்திலிருந்து அவர் ஏழு பேய்களைத்
துரத்தியிருந்தார். அவள் போய் அவரோடு 10
கூடச் சஞ்சரித்திருந்தவர்களுக்கு அதை
அறிவித்தாள். அவர்கள் துக்கப்பட்டு
அழுதுகொண்டிருந்தார்கள். அவர் உயி 11
ரோடிருக்கிறாரென்றும், அவள் அவரைக்
கண்டாளென்றும் அவர்கள் கேள்விப்பட்ட
பொழுது நம்பவில்லை.
அதன்பின்பு அவர்களில் இரண்டு பேர் 12
ஒரு கிராமத்துக்கு வழிநடந்து போகிற
பொழுது, அவர்களுக்கு வேறு ரூபமாய்த்
தரிசனமானார். அவர்களும் போய் அதை 13
மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; அவர்
களையும் அவர்கள் நம்பவில்லை.
பதினொருவரும் போஜன பந்தியிலிருக் 14
கும்போது அவர்களுக்கு அவர் தரிசனமாகி,
உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்
களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம்,
அவர்கள் அவிசுவாசத்தைப்பற்றியும் இரு
தயக் கடினத்தைப்பற்றியும் அவர்களைக்
கடிந்துகொண்டார்.
அவர் அவர்களிடம்: நீங்கள் உலகமெங் 15
கும் போய், சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்
தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுடைய 16
வனாய் ஞானஸ்நானம்பெற்றவன் இரட்சிக்
கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்
குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாச 17
முடையவர்களிடம் இவ்வடையாளங்கள்
விளங்கும்: என் நாமத்தில் பேய்களைத்
துரத்துவார்கள்; புதிய பாஷைகளைப் பேசு
வார்கள்; | சர்ப்பங்களை எடுப்பார்கள்; 18
சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்

தாலும் அவர்கள் சேதமடையார்கள்; வியாதி
யஸ்தர்மேல் கைகளை வைக்க அவர்கள்
குணமடைவார்கள் என்றார்.
19 அவர்களுடனே பேசினபின்பு, ஆண்டவ
ராகிய இயேசு பரலோகத்துக்கு எடுத்துக்
கொள்ளப்பட்டு, கடவுளின் வலதுபாரி
சத்தில் உட்கார்ந்தார். அவர்களோ புறப் 20
பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணி
னார்கள். ஆண்டவர் அவர்களுடனே
கூடக் கிரியை நடப்பித்து, அவர்களிடம்
விளங்கின அடையாளங்களினாலே வச
னத்தை உறுதிப்படுத்தினார்.

லூக்கா சுவிசேஷம்

1 கனம்பொருந்திய தெயோப்பிலுவே, ஆதி
முதல் கண்ணாரக் கண்டவர்களும் திரு
வசனத்தின் ஊழியருமானவர்கள் நமக்கு
2 ஒப்புக்கொடுத்தபடியே, நமக்குள்ளே நிறை
வேறித் தீர்ந்த காரியங்களை அநேகர்
கிரமப்படுத்திச் சரித்திரம் எழுத ஏற்பட்
3 டிருக்கிறபடியால், அவற்றையெல்லாம்
ஆரம்பமுதல் திட்டமாய் ஆராய்ச்சிசெய்
திருக்கிற நானும், உமக்கு உபதேசிக்கப்
பட்ட காரியங்கள் முழு நிச்சயம்
என்பதை நீர் அறிந்துகொள்ளவேண்டு
4 மென்று, அவைகளை உமக்கு ஒழுங்காய்
எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று

5 யூதேயா தேசத்தின் ராஜாவாகிய ஏரோது
வின் நாட்களில், அபியாவின் ஆசாரிய
வகுப்பைச் சேர்ந்த சகரியா என்னும் பேர்
கொண்ட ஆசாரியன் ஒருவன் இருந்தான்.
அவன் மனைவி ஆரோனுடைய குமாரத்தி
களில் ஒருத்தி. அவள் பேர் எலிசபெத்து.
6 அவர்கள் இருவரும் கடவுளுக்குமுன் நீதி
மான்கள், கர்த்தருடைய சகல கற்பனை
களின்படியும் நியமங்களின்படியும் குற்ற
7 மற்றவர்களாய் நடந்துவந்தவர்கள். அவர்
களுக்குப் பிள்ளையில்லை; எலிசபெத்து
மலடி, இருவருமே வயது சென்றவர்கள்.

8 அப்படியிருக்க, அவன் தன் ஆசாரிய
வகுப்பின் முறைப்படி கடவுள் சந்நிதானத்
தில் ஆசாரிய ஊழியஞ்செய்துவருகிற
9 போது, ஆசாரிய ஊழியத்தின் வழக்கப்
படி, தூபங்காட்டுவதற்குச் சீட்டு அவன்
பேருக்கு விழுந்தது; அவன் கர்த்தருடைய
10 ஆலயத்திற்குள் பிரவேசித்தான். தூபங்
காட்டுகிற வேளையிலே ஜனத்திரளெல்லாம்
கூட்டமாய் வெளியே ஜெபம்பண்ணிக்
11 கொண்டிருந்தது. அப்பொழுது கர்த்த
ருடைய தூதன் ஒருவன் தூப பீடத்தின்
வலது பக்கத்திலே நின்று அவனுக்குக்
12 காணப்பட்டான். சகரியா அவனைக்கண்டு
கலங்கினான், பயமும் அவனைப் பிடித்தது.
13 தூதனோ அவனை நோக்கி: சகரியாவே, பயப்
படாதே உன் ஜெபம் கேட்கப்பட்டது;
உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு
ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு
14 யோவான் என்று பெயரிடுவாய்; உனக்குச்
சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும்;
அநேகர் அவன் பிறப்பைப்பற்றிச் சந்தோ
ஷப்படுவார்கள். அவன் கர்த்தரின் பார்வை 15
யில் பெரியவனாயிருப்பான், திராட்சரசமும்
மதுவும் குடியான், தன் தாயின் கர்ப்பத்தி
லிருந்தே பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்
டிருப்பான். அவன் இஸ்ரவேலின் புத்திர 16
ரில் அநேகரை அவர்கள் கடவுளாகிய
கர்த்தரிடம் திருப்புவான். அவன் எலியா 17
வின் ஆவியும் பலமும் உடையவனாய் அவ
ருக்கு முன்னே நடந்து, பிதாக்களுடைய
இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்
படியாதவர்களை நீதிமான்களின் விவேகத்திற்
கும் திருப்பி, கர்த்தருக்குத் தகுதியான ஒரு
ஜனத்தை அவருக்கு ஆயத்தப்படுத்துவான்
என்றான். அப்பொழுது சகரியா தேவ 18
தூதனை நோக்கி: இதை நான் எதினால் அறி
வேன்; நான் கிழவன், என் மனைவியும் வயது
சென்றவளாயிற்றே என்று சொல்ல, தேவ 19
தூதன் அவனிடம்: நான் கடவுள் சந்நிதி
யில் நிற்கும் காபிரியேல்; உன்னிடம் பேச
வும் உனக்கு இந்த நற்செய்தியை அறிவிக்க
வும் அனுப்பப்பட்டு வந்தேன்; தகுந்த 20
காலத்தில் நிறைவேறப்போகிற என் வார்த்
தைகளை நீ நம்பாதபடியினால், இவைகள்
சம்பவிக்கும் நாள்மட்டும், நீ பேச முடி
யாமல் மௌனமாயிருப்பாய் என்றான்.
ஜனங்கள் சகரியாவுக்குக் காத்திருந்து, 21
அவன் தேவாலயத்தில் தாமதிக்கவே ஆச்சரி
யப்பட்டார்கள். அவன் வெளியே வந்த 22
போதோ அவர்களிடத்தில் பேசமுடியாம
லிருந்தான்; அதனாலே ஆலயத்தில் ஒரு தரி
சனங் கண்டானென்று அறிந்தார்கள்.
அவன் அவர்களுக்குச் சைகை காட்டி
ஊமையாயிருந்தான். அவனுடைய பணி 23
விடை நாட்கள் முடியவே தன் வீட்டுக்குப்
போனான்.

அந்நாட்களுக்குப் பின்பு அவன் மனைவி 24
எலிசபெத்து கர்ப்பந்தரித்து: ஜனங்களுக்
குள்ளே எனக்குண்டாயிருந்த நிந்தையை
நீக்கும்படி கர்த்தர் இந்த நாட்களில் கண்
ணோக்கமாகி, எனக்கு இப்படிச் செய் 25
தருளினார் என்று சொல்லி, ஐந்து மாதம்
வெளிப்படாதிருந்தாள்.

26 ஆறும் மாதத்திலே கலிலேயாவிலுள்ள
நாசரேத்தூரில் தாவீதின் வம்சத்தானான
யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷ
னுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னி
கையினிடம் காபிரியேல் தூதன் கடவு
27 ளாலே அனுப்பப்பட்டான்; அந்தக் கன்னி
28 கையின் பேர் மரியாள். அவள் இருந்த
இடத்தில் தேவதூதன் பிரவேசித்து:
கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்
29 னுடனே இருக்கிறார் என்றான். அவளோ
அவன் வார்த்தையினால் கலங்கி, இந்த
வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்
30 தித்துக்கொண்டிருந்தாள். தூதன் அவளை
நோக்கி: மரியாளே, பயப்படாதே, நீ
31 கடவுளிடத்தில் கிருபை பெற்றாய். நீ
கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்,
அவருக்கு இயேசு என்று பெயரிடுவாய்.
32 அவர் பெரியவராயிருப்பார், உன்னதமான
வருடைய குமாரன் எனப்படுவார்; கடவு
ளாகிய கர்த்தர் அவருடைய பிதாவாகிய
தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக்
33 கொடுப்பார். அவர் யாக்கோபின் வம்
சத்தை என்றென்றைக்கும் அரசாளுவார்;
அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்
34 றான். மரியாள் தூதனிடம்: இது எப்படி
யாகும்? புருஷனை அறியேனே என்றாள்.
35 அதற்குத் தேவதூதன்: பரிசுத்த ஆவி உன்
மேல் வரும்; உன்னதமானவருடைய வல்
லமை உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்
னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது
36 தேவ குமாரன் எனப்படும். உன் இனத்
தாளாகிய எலிசபெத்தும் தன் முதிர்
வயதிலே ஒரு மகனைக் கர்ப்பந்தரித்திருக்
கிறாள்; மலடியென்று சொல்லப்பட்ட
37 அவளுக்கு இது ஆறும் மாதம். கடவுளால்
ஆகாத காரியம் ஒன்றுமில்லை என்றான்.
38 அதற்கு மரியாள்: இதோ, நான் கர்த்த
ரின் அடிமை, உம்முடைய வார்த்தையின்
படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்
பொழுது தேவதூதன் அவளைவிட்டுப்
போனான்.

39 அந்நாட்களில் மரியாள் எழுந்து
மலைநாட்டுக்குத் தீவிரமாய்ப் போய், யூதா
40 வில் ஓர் ஊரில் | சகரியாவின் வீட்டுக்குள்
சென்று, எலிசபெத்தை வாழ்த்தினாள்.
41 எலிசபெத்து மரியாளுடைய வாழ்த்துதலைக்
கேட்டபொழுது, அவளுடைய கர்ப்பத்தி
லிருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்து
பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, |
42 உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே
நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்
43 தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என்
ஆண்டவரின் தாயார் என்னிடம் எழுந்
தருளிவர எனக்குக் கிடைத்ததெப்படி?
நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்த 44
வுடனே, என் கர்ப்பத்திலுள்ள பிள்ளை
களிப்பாய்த் துள்ளிற்று. விசுவாசித்தவளே 45
பாக்கியவதி, கர்த்தர் அவளுக்குச் சொன்ன
வைகள் நிறைவேறித் தீரும் என்றாள்.
அதைக் கேட்ட மரியாள்: 46

என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்து
கிறது;
என் ஆவி என் இரட்சகராகிய கடவுளில் 47
களிகூர்ந்திருக்கிறது.
அவர் தம் அடிமையின் தாழ்வைக் கண் 48
ணோக்கினார்;
இது முதல் எல்லாச் சந்ததிகளும்
என்னைப் பாக்கியவதி என்பார்கள்.
வல்லமையுடையவர் பெரிதானவைகளை 49
எனக்குச் செய்தார்;
அவர் நாமம் பரிசுத்தமுள்ளது.
அவருடைய இரக்கம் அவருக்குப் பயந் 50
தவர்களுக்குத் தலைமுறை தலை
முறைக்குமுள்ளது.
தமது புயத்தினாலே பராக்கிரமஞ்செய் 51
தார், தங்கள் இருதய சிந்தையில் இறு
மாப்புடையவர்களைச் சிதறடித்தார்.
பலவான்களைச் சிங்காசனங்களிலிருந்து 52
தள்ளி, தாழ்வானவர்களை உயர்த்தினார்.
பசியுள்ளவர்களை நன்மைகளினால் 53
நிரப்பி, ஐசுவரியவான்களை வெறுமை
யாய் அனுப்பிவிட்டார்.
நம்முடைய பிதாக்களுக்கு அவர் 54
சொன்னபடியே, ஆபிரகாமுக்கும்
அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும்
இரக்கம் செய்ய நினைத்து, தம் தாசனா 55
கிய இஸ்ரவேலை ஆதரித்தார்

என்றாள். மரியாள் ஏறக்குறைய மூன்று 56
மாதம் அவளுடனே இருந்து தன் வீட்டுக்
குத் திரும்பிப்போனாள்.

எலிசபெத்துக்குப் பிரசவகாலம் வந்த 57
போது அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்.
கர்த்தர் அவளிடம் தமது இரக்கத்தைப் 58
பெரிதாக்கினாரென்று அவளுடைய அயல
கத்தாரும் பந்துஜனங்களும் கேள்விப்பட்டு,
அவளுடனே சந்தோஷப்பட்டார்கள். எட் 59
டாம் நாளிலே அவர்கள் பிள்ளைக்கு விருத்த
சேதனஞ்செய்ய வந்து, தகப்பனுடைய
நாமத்தின்படி அதற்குச் சகரியா என்று
பேரிடப்போனார்கள். அப்பொழுது அதன் 60
தாய்: அப்படியல்ல, அதற்கு யோவான்
என்று பேரிடவேண்டும் என்றாள். அதற்கு 61
அவர்கள்: உன் சுற்றத்தாரில் இப்பேருள்ள
வன் ஒருவனும் இல்லையே என்று சொல்லி, |

62 அதன் தகப்பனை நோக்கி: குழந்தைக்கு
என்ன பேரிடுவது உமக்குப் பிரியம் என்று
63 சைகையினால் கேட்டார்கள். அவன் எழுத்
துப் பலகையைக் கேட்டு வாங்கி: இவன்
பேர் யோவான் என்று எழுதினான்; எல்லா
64 ரும் ஆச்சரியப்பட்டார்கள். உடனே அவ
னுடைய வாயையும் நாவையும் கட்டி
யிருந்த கட்டு நீங்கவே, அவன் கடவுளைத்
65 துதித்துப் பேசினான். அதனால் அவர்களைச்
சுற்றி வாசமாயிருந்த யாவருக்கும் பயமுண்
டாயிற்று. யூதேயாவின் மலைநாடெங்கும்
இந்த வர்த்தமானங்களெல்லாவற்றையுங்
66 குறித்துப் பேசிக்கொண்டார்கள். அவை
களைக் கேள்விப்பட்டவர்களெல்லாரும்
தங்கள் மனத்திலே அவைகளை வைத்துக்
கொண்டு, இந்தப் பிள்ளை எப்படிப்பட்ட
தாகுமோ என்றார்கள். கர்த்தருடைய கரம்
அதனோடே இருந்தது.

67 பிள்ளையின் தகப்பன் சகரியா பரிசுத்த
ஆவியினால் நிறைந்து, தீர்க்கதரிசனமாகச்
சொன்னதாவது:

68 இஸ்ரவேலின் கடவுளாகிய கர்த்தர்
ஸ்தோத்திரத்திற்குரியவர்;
அவர் தமது ஜனத்தைக் கடாட்சித்து
அவர்களுக்கு மீட்பை உண்டுபண்ணி
னார்.
69 தமது பரிசுத்த தீர்க்கதரிசிகள் வாயினால்
ஆதிமுதல் அவர் சொன்னபடியே,
70 நம்முடைய சத்துருக்களினின்றும்
நம்மைப் பகைக்கிற யாவருடைய கையி
னின்றும்
நம்மை இரட்சித்தருளினார்.
71 நம்முடைய பிதாக்கள்மேல் அவர் வைத்த
இரக்கத்தைக் காட்டுவதற்காகவே,
72 தமது பரிசுத்த உடன்படிக்கையையும்
நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு
இட்ட ஆணையையும் நினைத்தருளி,
73 நம்முடைய சத்துருக்களின் கைகளி
னின்று நாம் விடுதலையாக்கப்பட்டு
74 உயிரோடிருக்கும் நாளெல்லாம்
பக்தியோடும் நீதியோடும் பயமில்லாமல்
அவருக்கு முன்பாக
ஊழியஞ்செய்ய அவர் நமக்கு அருள்
செய்யும்பொருட்டு
75 தம் தாசனாகிய தாவீதின் வம்சத்திலே
நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்
படுத்தினார்.
76 நீயோ பாலகனே, உன்னதமானவரு
டைய தீர்க்கதரிசி எனப்படுவாய்.
77 நம்முடைய கடவுளின் உருக்கமான
இரக்கத்தினிமித்தம் பாவமன்னிப்பி
னால் வரும் இரட்சிப்பைக் கர்த்த
ருடைய ஜனத்துக்குத் தெரியப்படுத்
தும் பொருட்டு,
அவருக்கு முன்னாக நடந்துபோய் அவர்
வழிகளை ஆயத்தஞ்செய்வாய்.
அந்தகாரத்திலும் மரண இருளிலும் 78
உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்
சம் தரவும், நம்முடைய கால்களைச்
சமாதான வழியில் நடத்தவும்,
அவ்விரக்கத்தினால் உன்னதத்திலிருந்து 79
தோன்றிய அருணோதயம்
நம்மைச் சந்தித்திருக்கிறது
என்பதே.

பிள்ளையோ வளர்ந்து, ஆவியிலே பலங் 80
கொண்டது. இஸ்ரவேலுக்குத் தன்னைக்
காண்பிக்கும் நாள்வரைக்கும் அவன் வனாந்
தரங்களிலே இருந்தான்.

அந்நாட்களில் உலகமெங்கும் ஜனத் 2
தொகையைப் பதிவுசெய்யவேண்டுமென்று
அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது. சீரியா 2
நாட்டிலே கிரேனியு என்பவன் தேசாதி
பதியாயிருந்தபோது இந்த முதலாம் கணக்
குப் பதிவுசெய்யப்பட்டது. அந்தப்படியே 3
பதிவுசெய்யும்பொருட்டு எல்லாரும் தங்கள்
தங்கள் ஊர்களுக்குப் போனார்கள். அப் 4
பொழுது யோசேப்பும், தான் தாவீதின் வம்
சத்தானும் குடும்பத்தானுமாயிருந்தபடியி
னாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்
டிருந்த மரியாளுடனே கணக்கில் பதிவு
செய்வதற்காக, கலிலேயா நாட்டிலுள்ள 5
நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள
பெத்லெகேம் என்னும் தாவீதின் ஊருக்குப்
போனான். அவள் கர்ப்பவதியாயிருந்தாள்
அவர்கள் அவ்விடத்தில் இருக்கையில், அவ 6
ளுக்குப் பிரசவகாலம் வந்துவிட்டது.
அவள் தன் முதற்பேறான குமாரனைப் 7
பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இட
மில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணி
களில் சுற்றி, தொழுவத்தின் முன்னணையில்
படுக்கவைத்தாள்.

அப்பொழுது அந்தப் பக்கங்களிலே 8
மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இர
விலே தங்கள் மந்தையைக் காத்துக்கொண்
டிருந்தார்கள். கர்த்தருடைய தூதன் அவர் 9
களிடம் வந்து நின்றான், கர்த்தருடைய
மகிமை அவர்களைச் சுற்றிப் பிரகாசித்தது,
அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவ 10
தூதன் அவர்களிடம்: பயப்படாதிருங்கள்;
இதோ, எல்லா ஜனத்துக்குமுரிய பெரிய
சந்தோஷத்தை உங்களுக்கு நற்செய்தியாக
அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய 11
கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத்

12 தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளை
யைத் துணிகளில் சுற்றி முன்னணையில்
படுக்கவைத்திருக்கக் காண்பீர்கள். இதுவே
உங்களுக்கு அடையாளம் என்றான்.
13 அக்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத்
தூதனுடனே சேர்ந்து:
14 உன்னதத்தில் கடவுளுக்கு மகிமை,
பூமியில் மனுஷருக்குள் சமாதானம்,
மனுஷர்மேல் அவருக்குப் பிரியம்
என்று சொல்லிக் கடவுளைத் துதித்தார்கள்.
15 தேவதூதர்கள் அவர்களைவிட்டுப்பரலோ
கத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒரு
வரையொருவர் நோக்கி: கர்த்தர் நமக்கு
அறிவித்திருக்கிற இச்சம்பவத்தை நாம்
பெத்லெகேமுக்குப் போய்ப் பார்ப்போம்
16 வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய்
வந்து, மரியாளையும் யோசேப்பையும்
முன்னணையில் படுத்திருக்கிற குழந்தையை
17 யும் கண்டார்கள்; கண்டு, அந்தப் பிள்ளை
யைக்குறித்துத் தங்களுக்குச் சொல்லப்
18 பட்ட செய்தியை அறிவித்தார்கள். இதைக்
கேட்ட யாவரும் மேய்ப்பர் தங்களுக்குச்
சொன்னவற்றைக்குறித்து ஆச்சரியப்பட்
19 டார்கள். மரியாளோ அந்தச் செய்திகள்
எல்லாவற்றையும் தன் இருதயத்திலே
வைத்துச் சிந்தித்துக்கொண்டிருந்தாள்.
20 மேய்ப்பர் தங்களுக்குச் சொல்லப்பட்ட
தின்படியே கேட்டுக் கண்ட எல்லாவற்றை
யும்பற்றிக் கடவுளை மகிமைப்படுத்தி, துதித்
துக்கொண்டு திரும்பிப்போனார்கள்.
21 பிள்ளைக்கு விருத்தசேதனஞ் செய்யவேண்
டிய எட்டாம் நாளிலே, கர்ப்பத்தில்
அது உற்பவிக்கிறதற்குமுன் தேவதூதன்
சொல்லியிருந்தபடி, அதற்கு இயேசு என்று
பேரிட்டார்கள்.
22 மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி
அவர்களுடைய சுத்திகரிப்பு நாட்கள்
23 நிறைவேறினபோது, முதற்பேறான எந்த
ஆணும் கர்த்தருக்குப் பரிசுத்தமானதெனப்
படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமா
ணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்
24 தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும், கர்த்த
ருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லி
யிருக்கிறபடி, ஒரு ஜோடு காட்டுப் புறாவை
யாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது
பலியாகச் செலுத்தவும், அவரை எருசலே
25 முக்குக் கொண்டுபோனார்கள். சிமியோன்
என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எரு
சலேமில் இருந்தான்; அவன் நீதியும் பக்தி
யும் உள்ளவன், இஸ்ரவேலின் ஆறுதல்
வரக் காத்திருந்தவன்; அவன்மேல் பரிசுத்த
26 ஆவி இருந்தார். கர்த்தருடைய கிறிஸ்துவை
நீ காணுமுன்னே மரணத்தைக் காணமாட்
டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவ
னுக்கு அறிவிக்கப்பட்டுமிருந்தது. அவன் 27
ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்தில் வந்
திருந்தான். இயேசு என்னும் பிள்ளையின் 28
விஷயமாய் நியாயப்பிரமாண முறைமை
யின்படி செய்வதற்குப் பெற்றோர் அவரை
உள்ளே கொண்டுவருகையில், அவன் அவ
ரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, கட
வுளை ஸ்தோத்திரித்து:
ஆண்டவரே, உமது வார்த்தையின்படி 29
உம்முடைய அடியேனை இப்பொழுது
சமாதானத்தோடே போகவிடுகிறீர்;
புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாக 30
வும்,
உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு
மகிமையாகவும்,
சகல ஜனங்களுக்கும் முன்பாக 31
நீர் ஆயத்தம்பண்ணின உமது இரட்சணி 32
யத்தை
என் கண்கள் கண்டன என்றான்.
அவரைக்குறித்துச் சொல்லப்பட்டவை 33
களைப்பற்றி அவருடைய தாய் தந்தையர்
ஆச்சரியப்பட்டார்கள். சிமியோன் அவர் 34
களை ஆசீர்வதித்து, அவருடைய தாயாராகிய
மரியாளை நோக்கி: இதோ, அநேக
ருடைய இருதய சிந்தனைகள் பகிரங்கமா
கும் வண்ணம், இஸ்ரவேலில் அநேகர் விழு
கிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், எதிர்
பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர்
நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்து 35
மாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும்
என்றான். ஆசேர் கோத்திரத்தாளும் 36
பானுவேலின் மகளுமாகிய அன்னாள் என்
னும் ஒரு தீர்க்கதரிசினி இருந்தாள்; அவள்
கன்னிப்பிராயத்தில் விவாகமானது முதல்
ஏழு வருஷம் புருஷனோடு வாழ்ந்தவள்,
வயதுசென்றவள், எண்பத்துநாலு வய 37
துள்ள விதவை. அவள் தேவாலயத்தை
விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவா
சித்து, ஜெபம்பண்ணி, ஆராதனை செய்து
கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே 38
வந்து நின்று, கடவுளைப் புகழ்ந்து, எருசலே
முக்கு மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்
கும் அவரைக்குறித்துப் பேசினாள். கர்த்த 39
ருடைய நியாயப்பிரமாணத்தின்படி எல்லா
வற்றையும் அவர்கள் செய்து முடித்தபின்பு,
கலிலேயா நாட்டிலுள்ள தங்கள் ஊராகிய
நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள்.
பிள்ளையோ வளர்ந்து பலங்கொண்டு 40
ஞானத்தினால் நிறைந்தது; கடவுளுடைய
கிருபையும் அவர்மேல் இருந்தது.

41 அவர் பெற்றோர் வருஷந்தோறும்
பஸ்கா பண்டிகைக்கு எருசலேமுக்குப்
42 போவார்கள். அவருக்குப் பன்னிரண்டு வய
தானபோது, அவர்கள் அந்தப் பண்டிகை
43 முறைமையின்படி போய், பண்டிகை
நாட்கள் முடிந்தபின் திரும்புகையில்,
இயேசுவென்னும் பிள்ளையாண்டான் எருச
லேமில் இருந்துவிட்டார்; இது அவர்
பெற்றோருக்குத் தெரியாமற்போயிற்று.
44 அவர் பிரயாணக்காரர் கூட்டத்தில் இருப்
பாரென்று அவர்கள் நினைத்து, ஒருநாள்
பிரயாணம் வந்து, உறவின் முறையாரிடத்
திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவ
45 ரைத் தேடினார்கள். காணாததினாலே அவ
ரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத்
46 திரும்பிப்போனார்கள். மூன்றுநாளுக்குப்
பின், அவர் தேவாலயத்தில் போதகர் நடு
வில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசு
கிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும்
47 கண்டார்கள். அவர் பேசக்கேட்ட யாவ
ரும் அவர் அறிவையும் அவர் பகர்ந்த
விடைகளையும் பார்த்துப் பிரமித்தார்கள்.
48 தாய்தகப்பன்மாரும் அவரைக்கண்டு ஆச்
சரியப்பட்டார்கள். அப்பொழுது அவரு
டைய தாயார் அவரை நோக்கி: மகனே,
ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்?
இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்
தோடே உன்னைத் தேடினோமே என்றாள்.
49 அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடி
னீர்கள்? என் பிதாவின் வீட்டில் நான்
இருக்கவேண்டியதென்று உங்களுக்குத்
50 தெரியாதோ என்றார். அவர் தங்களுக்குச்
சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்து
51 கொள்ளவில்லை. பின்பு அவர்களோடு போய்
நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்கு
அடங்கி நடந்துவந்தார். அவர் தாயாரோ
இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்
திலே வைத்துக் காத்துக்கொண்டாள்.
52 இயேசு ஞானத்திலும் வளர்த்தியிலும் அதி
கரித்து, கடவுளுக்கும் மனுஷருக்கும் பிரிய
ராக மேன்மேலும் வளர்ந்து வந்தார்.

3 திபேரியுராயன் ராஜ்யபாரம் பண்ணின
பதினைந்தாம் வருஷம், சகரியாவின் குமாரன்
யோவானுக்கு வனாந்தரத்திலே கடவுளின்
2 வார்த்தை வந்தது. அக்காலத்தில் பொந்தியு
பிலாத்து யூதேயாவில் தேசாதிபதியும், ஏரோது
கலிலேயாவில் [1]சிற்றரசனும், அவன் சகோ
தரனாகிய பிலிப்பு இத்துரேயா திராகோனித்தி
நாடுகளில் சிற்றரசனும், லிசானியா அபி
லேனேயில் சிற்றரசனுமாயிருந்தார்கள்;
அன்னாவும் காய்பாவும் பிரதான ஆசாரியரா
யிருந்தார்கள். யோவான் யோர்தானுக் 3
கடுத்த சுற்றுப்புறமெங்கும் போய், பாவ
மன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்குரிய
ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்து
வந்தான். அவன் பிரசங்கித்தது ஏசாயா 4
தீர்க்கதரிசியினுடைய வார்த்தைகளின் ஆக
மத்தில் எழுதியிருக்கிற பிரகாரமே. அதா
வது:

கர்த்தரின் வழியை ஆயத்தப்படுத்
துங்கள்,
அவர் பாதைகளைச் செவ்வைபண்
ணுங்கள்,
பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், 5
சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்
படும்,
கோணலானவைகள் செவ்வையாகும்,
கரடானவைகள் சமவழிகளாகும்,
மனுமக்கள் யாவரும் கடவுளின் இரட் 6
சிப்பைக் காண்பார்கள்
என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனு
டைய சத்தம்

என்பதே. அவன் தன்னிடம் ஞான 7
ஸ்நானம் பெறும்படிக்குப் புறப்பட்டு வந்த
திரளான ஜனங்களைப் பார்த்து: விரியன்
பாம்புக்குட்டிகளே! வருங்கோபத்துக்குத்
தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகை
காட்டினவன் யார்? மனந்திரும்புதலுக் 8
கேற்ற கனிகளைக் கொடுங்கள்; ஆபிரகாம்
எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்
குள்ளே சொல்லிக்கொள்ளத் தொடங்க
வேண்டாம்; கடவுள் இந்தக் கற்களிலிருந்து
ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்ப வல்ல
வர் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
இப்பொழுதே மரங்களின் வேர் அருகே 9
கோடரி வைத்திருக்கிறது; நல்ல கனி
கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்
கினியிலே போடப்படும் என்றான். இதைக் 10
கேட்ட ஜனங்கள்: அப்படியானால் நாங்கள்
என்ன செய்யவேண்டும் என்று கேட்க, |
அவன் அவர்களிடம்: இரண்டு அங்கிகளை 11
உடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்க
வேண்டும்; ஆகாரத்தை உடையவனும் அப்
படியே செய்யவேண்டும் என்றான். ஆயக் 12
காரரும் ஞானஸ்நானம் பெற வந்து அவ
னிடம்: போதகரே, நாங்கள் என்ன செய்ய
வேண்டும் என்று கேட்க, | அவன்: உங்களுக் 13
குக் குறித்திருக்கிறதற்கு அதிகமாய் ஒன்றும்
வாங்காதிருங்கள் என்றான். போர்ச்சேவ 14

1 சிற்றரசன் என்னும் பதம் கிரேக்கில் கால்பங்கு தேசாதிபதி என்று பொருள்படும்.

கரும் அவனை நோக்கி: நாங்கள் என்ன
செய்யவேண்டும் என்று கேட்க, அவன்:
நீங்கள் இடுக்கண் செய்யாமலும்பொய்யாய்க்
குற்றஞ்சாட்டாமலும், உங்கள் சம்பளமே
போதும் என்றிருங்கள் என்றான்.
15 ஜனங்கள் எதிர்பார்த்திருக்கவே,
யோவான் கிறிஸ்துதானோ என்று எல்லாரும்
தங்கள் இருதயங்களில் ஆலோசித்துக்
16 கொண்டிருக்கையில், யோவான் எல்லா
ரையும் பார்த்து: நான் ஜலத்தினால் உங்க
ளுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன்;
என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார்,
அவருடைய பாதரட்சைகளின் வாரை
அவிழ்க்கிறதற்கும் நான் தகுந்தவனல்ல,
அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினா
லும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்
17 பார். தம் களத்தை முற்றும் விளக்குவதற்
குத் தூற்றுக்கூடை அவர் கையிலிருக்
கிறது, கோதுமையைத் தமது களஞ்சியத்தில்
சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினி
18 யினால் சுட்டெரிப்பார் என்றான். வேறு
அநேக புத்திமதிகளையும் சொல்லி, ஜனங்க
ளுக்கு நற்செய்தியைப் பிரசங்கித்தான்.
19 ஏரோது சிற்றரசன் தன் சகோதரன்
மனைவி ஏரோதியாளினிமித்தமாகவும், தான்
செய்த மற்றப் பொல்லாங்குகளினிமித்த
மாகவும் யோவானாலே கண்டிக்கப்பட்ட
20 போது, தான் செய்த மற்றெல்லாப் பொல்
லாங்குகளோடுங்கூட யோவானையும் காவ
லில் அடைத்துவைத்தான்.
21 ஜனங்களெல்லாரும்ஞானஸ்நானம்பெற்ற
போது இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று,
ஜெபம்பண்ணுகையில், வானம் திறவுண்
22 டது; பரிசுத்த ஆவி புறா ரூபங்கொண்டு
அவர்மேல் இறங்கினார். அப்பொழுது
வானத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்து: நீர்
என் நேச குமாரன்; உம்மில் பிரியமாயிருக்
கிறேன் என்று உரைத்தது.
23 ஊழிய ஆரம்ப காலத்தில் இயேசு ஏறக்
குறைய முப்பது வயதுள்ளவராயிருந்தார்.
அவர் யோசேப்பின் குமாரன் என்று எண்
ணப்பட்டார்; அந்த யோசேப்பு ஏலியின்
24 குமாரன்; | ஏலி மாத்தாத்தின் குமாரன்; மாத்
தாத்து லேவியின் குமாரன்; லேவி மெல்கி
யின் குமாரன்; மெல்கி யன்னாயின் குமாரன்;
25 யன்னாய் யோசேப்பின் குமாரன்; | யோ
சேப்பு மத்தத்தியாவின் குமாரன்; மத்தத்தியா
ஆமோசின் குமாரன்; ஆமோஸ் நாகூமின்
குமாரன்; நாகூம் எஸ்லியின் குமாரன்;
26 எஸ்லி நங்காயின் குமாரன்; | நங்காய்
மாகாத்தின் குமாரன்; மாகாத்து மத்தத்தியா
வின் குமாரன்; மத்தத்தியா சேமேயின் குமா
ரன்; சேமேய் யோசேக்கின் குமாரன்;
யோசேக்கு யோதாவின் குமாரன்; | யோதா 27
யோவன்னாவின் குமாரன்; யோவன்னா
ரேசாவின் குமாரன்; ரேசா செருபாபே
லின் குமாரன்; செருபாபேல் சலாத்தி
யேலின் குமாரன்; சலாத்தியேல் நேரியின்
குமாரன்; | நேரி மெல்கியின் குமாரன்; 28
மெல்கி அத்தியின் குமாரன்; அத்தி கோசா
மின் குமாரன்; கோசாம் எல்மோதாமின்
குமாரன்; எல்மோதாம் ஏரின் குமாரன்; | ஏர் 29
ஏசுவின் குமாரன்; ஏசு எலியேசரின்
குமாரன்; எலியேசர் யோரீமின் குமாரன்;
யோரீம் மாத்தாத்தின் குமாரன்; மாத்தாத்து
லேவியின் குமாரன்; லேவி சிமியோனின் 30
குமாரன்; சிமியோன் யூதாவின் குமாரன்;
யூதா யோசேப்பின் குமாரன்; யோசேப்பு
யோனாமின் குமாரன்; யோனாம் எலியாக்
கீமின் குமாரன்; எலியாக்கீம் மெலெயாவின் 31
குமாரன்; மெலெயா மென்னாவின் குமாரன்;
மென்னா மாத்தாத்தாவின் குமாரன்; மாத்
தாத்தா நாத்தாமின் குமாரன்; நாத்தாம்
தாவீதின் குமாரன்; தாவீது ஈசாயின் குமா 32
ரன்; ஈசாய் ஓபேதின் குமாரன்; ஓபேத்
போவாசின் குமாரன்; போவாஸ் சாலாவின்
குமாரன்; சாலா நகசோனின் குமாரன்; |
நகசோன் அமினதாபின் குமாரன்; அமின 33
தாபு அத்மீனின் குமாரன்; அத்மீன் ஆர்
னியின் குமாரன்; ஆர்னி எஸ்ரோமின்
குமாரன்; எஸ்ரோம் பேரேசின் குமாரன்;
பேரேஸ் யூதாவின் குமாரன்; | யூதா யாக் 34
கோபின் குமாரன்; யாக்கோபு ஈசாக்கின்
குமாரன்; ஈசாக்கு ஆபிரகாமின் குமாரன்;
ஆபிரகாம் தேராகின் குமாரன்; தேராகு
நாகோரின் குமாரன்; நாகோர் செரூகின் 35
குமாரன்; செரூகு ரெகூவின் குமாரன்;
ரெகூ பேலேகின் குமாரன்; பேலேகு ஏபே
ரின் குமாரன்; ஏபேர் சாலாவின் குமாரன்;
சாலா காயினானின் குமாரன்; காயினான் 36
அர்ப்பகசாத்தின் குமாரன்; அர்ப்பகசாத்
சேமின்குமாரன்; சேம்நோவாவின் குமாரன்;
நோவா லாமேக்கின் குமாரன்; | லாமேக்கு 37
மெத்தூசலாவின் குமாரன்; மெத்தூ
சலா ஏனோக்கின் குமாரன்; ஏனோக்கு யாரே
தின் குமாரன்; யாரேத் மகலாலெயேலின்
குமாரன்; மகலாலெயேல் காயினானின்
குமாரன், | காயினான் ஏனோசின் குமா 38
ரன்; ஏனோஸ் சேத்தின் குமாரன்; சேத் ஆதா
மின் குமாரன்; ஆதாம் கடவுளின் குமா
ரன்.

இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்த 4
வராய் யோர்தானைவிட்டுத் திரும்பினார்.

ஆவியானவரால் அவர் வனாந்தரத்தில் நடத்
2 தப்பட்டு, நாற்பது நாள் பிசாசினால் சோதிக்
கப்பட்டார். அந்நாட்களில் அவர் ஒன்
றும் சாப்பிடவில்லை; அவை முடியவே அவ
3 ருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது
பிசாசு அவரிடம்: நீர் தேவகுமாரனேயா
னால், இந்தக் கல் அப்பமாகும்படி சொல்
4 லும் என்றான். அதற்கு இயேசு: மனுஷன்
பிழைப்பது ஆகாரத்தினால் மாத்திரமல்ல
5 என்று எழுதியிருக்கிறது என்றார். பின்பு
பிசாசு அவரை மேலே கொண்டுபோய்,
உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு
க்ஷணப்பொழுதிலே அவருக்குக் காட்டி:
6 இந்த அதிகாரம் முழுமையையும் இவற்றின்
மகிமையையும் உமக்குத் தருவேன்; அது
எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது;
எனக்கு இஷ்டமானவனுக்கு அதைக்
7 கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்து
கொண்டால் எல்லாம் உம்முடையதாகும்
8 என்று சொன்னான். அதற்கு இயேசு: உன்
கடவுளாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு,
அவர் ஒருவரையே சேவிப்பாயாக என்று
9 எழுதியிருக்கிறதே என்றார். பின்பு அவன்
அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய்,
தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை
நிறுத்தி: நீர் தேவகுமாரனேயானால், இங்
கிருந்து கீழே குதித்துவிடும்.

10 உம்மைப் பாதுகாக்கும்படி
உம்மைக் குறித்துத் தம்முடைய
தூதருக்குக் கட்டளையிடுவார்

என்றும்,

11 உமது பாதம் கல்லில் படாதபடி
அவர்கள் உம்மைத் தங்கள் கைகளில்
ஏந்திக்கொள்வார்கள்

என்றும் எழுதியிருக்கிறது என்று
12 சொல்ல, | இயேசு அவனிடம்: உன் கடவு
ளாகிய கர்த்தரைச் சோதிக்கவேண்டாம்
என்றும் சொல்லியிருக்கிறதே என்றார்.
13 பிசாசு சோதனை எல்லாம் முடித்தபின்பு
சிலகாலம் அவரை விட்டு விலகிப்
போனான்.

14 பின்பு இயேசு ஆவியின் வல்லமையுடை
யவராய்க் கலிலேயாவுக்குத் திரும்பிப்
போனார். அவர் பிரஸ்தாபம் சுற்றுப்புற
15 மெங்கும் எட்டினது. அவர்களுடைய
ஜெபாலயங்களில் அவர் உபதேசித்து
வந்தார்; எல்லாரும் அவரைப் புகழ்ந்
தார்கள்.

16 தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு
அவர் வந்து, தமது வழக்கத்தின்படியே
ஓய்வுநாளில் ஜெபாலயத்தினுட் சென்று,
17 வாசிக்க எழுந்து நின்றார். ஏசாயா தீர்க்க
தரிசியின் புஸ்தகத்தை அவரிடம் கொடுத்
தார்கள். அவர் புஸ்தகத்தை விரித்து:

கர்த்தருடைய ஆவி என்மேலிருக்கிறது; 18
தரித்திரருக்கு நற்செய்தியை அறிவிக்க
அவர் என்னை அபிஷேகம் பண்ணி
னார்.
சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும்
குருடருக்குப் பார்வையையும்
பிரசித்தப்படுத்தவும்,
நொறுங்குண்டவர்களை விடுதலையாக்க
வும்,
கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் 19
பிரசித்தப்படுத்தவும்,
அவர் என்னை அனுப்பினார்

என்று எழுதியிருக்கிற இடத்தை அவர்
கண்டு, வாசித்து, | புஸ்தகத்தைச் சுருட் 20
டிப் பணிவிடைக்காரனிடம் கொடுத்து
உட்கார்ந்தார். ஜெபாலயத்திலுள்ள எல்லா
ருடைய கண்களும் அவர்மேல் நோக்க
மாயிருந்தன. அப்பொழுது அவர் அவர்க 21
ளோடே பேசத் தொடங்கி: உங்கள்
காதுகள் கேட்க இந்த வேதவாக்கியம்
இன்றையதினம் நிறைவேறிற்று என்றார்.
எல்லாரும் அவரை மெச்சி, அவருடைய 22
வாயிலிருந்து வந்த கிருபையுள்ள வார்த்தை
களைக் கேட்டு ஆச்சரியப்பட்டு: இவன்
யோசேப்பின் குமாரன் அல்லவா என்
றார்கள். அவர் அவர்களிடம்: வைத்தியனே, 23
உன்னைத்தானே குணமாக்கிக்கொள் என்கிற
பழமொழியைச் சொல்லி, நாங்கள் கேள்விப்
பட்டபடி கப்பர்நகூமில் நீ செய்த
கிரியைகள் எவைகளோ அவைகளை உன்
சொந்த ஊராகிய இவ்விடத்திலும் செய்
என்று நீங்கள் என்னிடம் சொல்லுவீர்கள்
என்பது நிச்சயம். நானோ மெய்யாகவே உங் 24
களுக்குச் சொல்லுகிறேன்: தீர்க்கதரிசி ஒரு
வனும் தன் சொந்த ஊரில் அங்கீகரிக்கப்பட
மாட்டான். எலியாவின் நாட்களிலே மூன்று 25
வருஷமும் ஆறு மாதமும் வானம் அடை
பட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்ச
முண்டாயிருந்தபோது, இஸ்ரவேலருக்குள்
அநேக விதவைகள் இருந்தார்கள். ஆயி 26
னும், அவர்களில் ஒருத்தியினிடமும் எலியா
அனுப்பப்படாமல், சீதோன் நாட்டிலுள்ள
சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்
திற்கே அனுப்பப்பட்டான். அல்லாமலும், 27
எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் இஸ்ர
வேலருக்குள்ளே அநேக குஷ்டரோகிகள்
இருந்தார்கள், அவர்களிலோ ஒருவனும்
சுத்தமாக்கப்படவில்லை, சீரியா தேசத்தா
னாகிய நாகமானே சுத்தமாக்கப்பட்டான்
என்று உண்மையாய் உங்களுக்குச் சொல்லு

28 கிறேன் என்றார். ஜெபாலயத்திலிருந்த
யாவரும் இவைகளைக் கேட்டபொழுது,
29 கோபமூண்டு | எழுந்திருந்து, தங்கள் ஊர்
கட்டியிருந்த மலையில், ஊருக்கு வெளியே
செங்குத்தான இடமட்டும் அவரைத் தள்
ளிக்கொண்டுபோய், அங்கிருந்து கீழேதள்ளி
30 விடப் பார்த்தார்கள். அவரோ அவர்கள்
நடுவே சென்று, கடந்துபோய் விட்டார்.
31 பின்பு அவர் கலிலேயாவிலுள்ள கப்பர்
நகூம் ஊருக்கு வந்து, ஓய்வுநாட்களில்
ஜனங்களுக்குப் போதகம்பண்ணினார்.
32 அவர் பேச்சு அதிகாரமுள்ளதாயிருந்தபடி
யால், அவருடைய போதகத்தைக்குறித்து
33 அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஜெபா
லயத்திலே அசுத்தப் பேயின் ஆவி பிடித்
திருந்த ஒருமனுஷன் இருந்தான். அவன்: |
34 ஐயோ! நசரேயனாகிய இயேசுவே, எங்க
ளுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்
கவா வந்தீர்? நீர் இன்னாரென்று எனக்குத்
தெரியும், நீர் கடவுளின் பரிசுத்தர் என்று
35 உரத்த சத்தமிட்டுச் சொல்லவே, | இயேசு:
பேசாதே, இவனைவிட்டு வெளியே போ
என்று அதை அதட்டினார்; அப்பொழுது
பேய் அவனை மத்தியில் விழத்தள்ளி, அவ
னுக்கு ஒரு சேதமுஞ்செய்யாமல் அவனை
36 விட்டுப் போய்விட்டது. எல்லாரும் பிர
மித்து: இது என்ன வார்த்தையோ! அதிகா
ரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவி
களுக்கும் கட்டளையிடுகிறார்; அவைகள்
வெளியேறுகின்றனவே என்று ஒருவரோ
37 டொருவர் பேசிக்கொண்டார்கள். அவர்
பிரஸ்தாபம் சுற்றுப்புறமெங்கும் எட்டினது.
38 பின்பு அவர் எழுந்து ஜெபாலயத்தை
விட்டுப்போய், சீமோன் வீட்டிற்குச் சென்
றார்; சீமோனுடைய மாமி கொடிய ஜுர
மாய்ப் படுத்திருந்தாள். அவளுக்காக
39 அவரை வேண்டிக்கொள்ள, அவர் அவ
ளிடம் குனிந்து நின்று, ஜுரம் நீங்கும்படி
அதட்டினார், அது அவளைவிட்டு நீங்கிற்று;
உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்
குப் பணிவிடை செய்தாள்.
40 சூரியன் அஸ்தமனமாகும்போது,
நானாவித வியாதிகளால் வருந்தினவர்கள்
எவர்களிடம் இருந்தார்களோ அவர்கள்
அந்நோயாளிகளை அவரிடம் கொண்டுவந்
தார்கள். அவர்கள் ஒவ்வொருவர்மேலும்
அவர் தமது கைகளை வைத்து, அவர்களைக்
41 குணமாக்கிவந்தார். பேய்களும்: நீர் தேவ
குமாரன் என்று சத்தமிட்டு, அநேகரை
விட்டு வெளியேறின. அவரைக் கிறிஸ்து
என்றுபேய்கள் அறிந்திருந்தபடியால் அவை
களைப் பேசவொட்டாமல் அதட்டினார்.

உதயமானபோது, அவர் வீட்டைவிட்டு 42
வனாந்தரமான ஓரிடத்திற்குப் போனார். திர
ளான ஜனங்கள் அவரைத் தேடி அவரிடம்
வந்து, தங்களைவிட்டுப்போகாதபடி அவரை
நிறுத்திக்கொள்ளப் பார்த்தார்கள். அவரோ 43
அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும்
கடவுள் ராஜ்ய நற்செய்தியைப் பிரசங்
கிக்கவேண்டும், இதற்காகவே அனுப்பப்
பட்டேனென்று சொல்லி, யூதேயாவின் 44
ஜெபாலயங்களில் பிரசங்கித்துவந்தார்.

பின்பு அவர் கெனேசரேத்துக் கட 5
லருகே நின்றபோது, திரளான ஜனங்கள்
கடவுளின் வசனத்தைக் கேட்கும்படி அவ
ரிடம் நெருங்கி வந்தார்கள். அப்பொழுது 2
கடற்கரையிலே நின்ற இரண்டு படவுகளைக்
கண்டார். மீன் பிடிக்கிறவர்கள் அவை
களை விட்டிறங்கி, வலைகளை அலசிக்கொண்
டிருந்தார்கள். அப்பொழுது அந்தப் படவு 3
களில் ஒன்றில் ஏறினார்; அது சீமோனுடை
யது; அதைக் கரையிலிருந்து சற்றே தள்
ளும்படி அவனைக் கேட்டுக்கொண்டு,
அந்தப்படவில் உட்கார்ந்து, ஜனங்களுக்
குப் போதகம்பண்ணினார். அவர் போதகம் 4
பண்ணிமுடித்தபின்பு, சீமோனிடம்: ஆழத்
திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்பிடிக்கும்
படி உங்கள் வலைகளைப் போடுங்கள் என்று
சொல்ல, | சீமோன்: ஐயரே, இராமுழு 5
வதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும்
அகப்படவில்லை, ஆகிலும் உமது சொற்
படியே வலைகளைப்போடுகிறேன் என்றான்.
அந்தப்படியே அவர்கள் செய்து, திரளான 6
மீன்களைப் பிடித்தார்கள்; வலைகள் கிழியத்
தொடங்குகையில், மற்றப் படவிலிருந்த 7
கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி
செய்யும்படி சைகை காட்டினார்கள்;
அவர்கள் வந்து, இருபடவுகளும் அமிழத்
தக்கதாக நிரப்பினார்கள். சீமோன் பேதுரு 8
அதைக்கண்டு, இயேசுவின் காலில்விழுந்து,
ஆண்டவரே, நான் பாவியான மனுஷன்,
நீர் என்னைவிட்டுப் போகவேண்டும் என்
றான். அவர்கள் திரளான மீன்களைப் பிடித்த 9
நிமித்தம், அவனும் அவனோடிருந்த யாவ
ரும், மற்றும் அவன் கூட்டாளிகளான
செபெதேயுவின் குமாரர் யாக்கோபும்
யோவானும் பிரமித்துப்போனார்கள். அப் 10
பொழுது இயேசு: பயப்படாதே, இதுமுதல்
நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய்
என்று அவனிடம் சொன்னார். அவர்கள் 11
தங்கள் படவுகளைக் கரையில் கொண்டு
போய் நிறுத்தி, எல்லாவற்றையும்விட்டு
அவரைப் பின்பற்றினார்கள்.

12 பின்பு அவர் ஓர் ஊரில் இருக்கையில்,
குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன்
வந்தான். அவன் இயேசுவைக் கண்டு
முகங்குப்புற விழுந்து: ஆண்டவனே, உமக்
குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்
மால் ஆகும் என்று அவரை வேண்டிக்
13 கொண்டான். அவர் தமது கையை நீட்டி,
அவனைத் தொட்டு: எனக்குச் சித்தமுண்டு,
சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம்
14 அவனைவிட்டு நீங்கிற்று. அவர் அவனை
நோக்கி: நீ இதை ஒருவருக்கும் சொல்லா
மல், போய் உன்னை ஆசாரியனுக்குக் காண்
பித்து, நீ சுத்தமானதினிமித்தம் மோசே கட்
டளையிட்டபடியே அவர்களுக்குச் சாட்சி
யாகச் செலுத்து என்று கட்டளையிட்டார்.
15 ஆயினும், அவர் பிரஸ்தாபம் அதிகமாகப்
பரவிற்று. திரளான ஜனங்கள் அவர் உப
தேசத்தைக் கேட்கவும், அவரால் தங்கள்
பிணிகளை நீக்கிக்கொள்ளவும் கூடிவந்
16 தார்கள். அவரோ விலகிப்போய், வனாந்
தரத்தில் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்.
17 ஒருநாள் அவர் உபதேசித்துக்கொண்டி
ருக்கும்போது, கலிலேயா யூதேயா நாடுகளி
லுள்ள சகல கிராமங்களிலும் எருசலேம்
நகரத்திலுமிருந்து வந்த பரிசேயரும் நியாய
சாஸ்திரிகளும் உட்கார்ந்திருக்கையில், பிணி
யாளிகளைக் குணமாக்கும்படி கர்த்தரின்
18 வல்லமை அவரில் விளங்கிற்று. சில
மனுஷர் திமிர்வாதக்காரன் ஒருவனைப்
படுக்கையோடே சுமந்துகொண்டு வந்து,
அவனை உள்ளே கொண்டுபோகவும் அவர்
முன்பாக வைக்கவும் வகைதேடினார்கள்.
19 ஜனக்கூட்டத்தினிமித்தம் அவனை உள்ளே
கொண்டுபோக வழிகாணாமல், வீட்டின்
மேல் ஏறி, தட்டோடுகள் வழியாய் இயேசு
வுக்கு முன்பாக அவனைப் படுக்கையோடே
20 மத்தியில் இறக்கினார்கள். அவர்கள் விசு
வாசத்தை அவர் கண்டு: மனுஷனே, உன்
பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன
21 என்றார். இதைக் கேட்ட வேதபாரகரும்
பரிசேயரும்: தேவதூஷணம் பேசுகிற
இவன் யார்? கடவுள் ஒருவரேயன்றி,
பாவங்களை மன்னிக்க வல்லவர் யார்
22 என்று சிந்திக்கத் தொடங்கினார்கள். இயேசு
அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்க
ளிடம்: உங்கள் இருதயங்களில் நீங்கள்
23 சிந்திக்கிறதென்ன? உன் பாவங்கள் உனக்கு
மன்னிக்கப்பட்டனவென்று சொல்வதோ,
எழுந்து நடவென்று சொல்வதோ, எது
24 எளிது? என்றாலும், பூமியிலே பாவங்களை
மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம்
உண்டென்பதை நீங்கள் அறியவேண்டு
மென்று சொல்லி, திமிர்வாதக்காரனைப்
பார்த்து: நீ எழுந்து உன் படுக்கையை
எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப்போ
என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.
உடனே அவன் அவர்கள் முன்பாக 25
எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்
கொண்டு, கடவுளை மகிமைப்படுத்தி, தன்
வீட்டுக்குப் போனான். எல்லாரும் திகைத்து, 26
கடவுளை மகிமைப்படுத்தி, பயம் நிறைந்தவர்
களாகி, அபூர்வமான காரியங்களை இன்று
கண்டோம் என்றார்கள்.
இதன்பின் அவர் புறப்பட்டு, ஆயத் 27
துறையில் உட்கார்ந்திருந்த லேவி என்னும்
ஆயக்காரன் ஒருவனைக் கண்டு: என்னைப்
பின்பற்றிவா என்றார். அவன் எல்லா 28
வற்றையும் விட்டு எழுந்து, அவரைப்
பின்பற்றிப்போனான். இந்த லேவி தன் 29
வீட்டிலே அவருக்குப் பெரிய விருந்து
செய்தான். அநேக ஆயக்காரரும் மற்றவர்
களும் அவர்களோடு பந்தியிருந்தார்கள்.
அதைக் கண்ட பரிசேயரும் அவர்களைச் 30
சேர்ந்த வேதபாரகரும் அவர் சீஷரிடம்
முறுமுறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும்
பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிற
தென்ன என்றார்கள். இயேசு அவர்களி 31
டம்: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்
டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு
வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவி 32
களையே மனந்திரும்புவதற்கு அழைக்க
வந்தேன் என்றார்.
அவர்களோ அவரிடம்: யோவானுடைய 33
சீஷர் பலமுறை உபவாசித்து ஜெபம்பண்
ணிக்கொண்டு வருகிறார்கள், பரிசேயரு
டைய சீஷரும் அப்படியே செய்கிறார்கள்;
உம்முடைய சீஷரோ போஜனபானம்
பண்ணுகிறார்களே, அதெப்படி என்று
கேட்டார்கள். அதற்கு இயேசு: மண 34
வாளன் தங்களோடிருக்கையில் நீங்கள்
கலியாணக்காரரை உபவாசிக்கச் செய்ய
லாகுமா? மணவாளன் அவர்களை விட்டு 35
எடுபடும் நாட்கள் வரும், அந்நாட்களிலே
உபவாசிப்பார்கள் என்றார். அவர்களுக்கு 36
ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவ
னும் புதிய வஸ்திரத்திலிருந்து ஒரு துண்
டைக் கிழித்து, அதைப் பழைய வஸ்திரத்
தோடு இணைக்கமாட்டான்; இணைத்தால்
புதியதைக் கிழிப்பான்; புதிய துண்டும்
பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது. ஒருவ 37
னும் புதுத் திராட்சரசத்தைப் பழந்துருத்தி
களில் வார்த்துவைக்க மாட்டான்; வார்த்து
வைத்தால் புது இரசம் துருத்திகளைக் கிழித்து
விடும், இரசமும் சிந்திப்போம், துருத்தி

38 களும் கெட்டுப்போம். புது இரசத்தைப்
புதுத் துருத்திகளில் வார்த்துவைக்க வேண்
39 டும். பழைய இரசத்தைக் குடித்துப் பழகின
வன் புதியதை விரும்பமாட்டான், பழை
யதே நல்லதென்று சொல்லுவான் என்றார்.

6 ஓர் ஓய்வுநாளிலே அவர் பயிர்வழியே
போகையில், அவருடைய சீஷர் கதிர்களைக்
கொய்து, கைகளினால் நிமிட்டித்தின்றார்கள்.
2 பரிசேயரில் சிலர் அவர்களைப் பார்த்து:
ஓய்வுநாளில் செய்யத்தகாததை நீங்கள்
3 செய்கிறதென்ன என்றார்கள். இதைக்
கேட்ட இயேசு அவர்களிடம்: தாவீதும்
அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்த
போது அவன் செய்ததை நீங்கள் வாசிக்க
4 வில்லையா? அவன் கடவுளின் வீட்டிற்குட்
சென்று, ஆசாரியர் மாத்திரமே தவிர
வேறொருவரும் புசிக்கத் தகாத தேவசமு
கத்து அப்பங்களை வாங்கி, தானும் புசித்து,
தன்னோடிருந்தவர்களுக்கும் கொடுத்தானே
5 என்று கூறி, ஓய்வுநாளுக்கு ஆண்டவர்
மனுஷகுமாரனே என்று சொன்னார்.
6 வேறொரு ஓய்வுநாளில் அவர் ஜெபால
யத்துக்குட்போய் உபதேசித்தார். அங்கே
சூம்பின வலது கையன் ஒருவன் இருந்
7 தான். வேதபாரகரும் பரிசேயரும் அவர்
மேல் குற்றஞ்சாட்டும் நோக்கமுடைய
வர்களாய், ஓய்வுநாளில் குணமாக்குவாரோ
என்று அவரைக் கவனித்துப் பார்த்துக்
8 கொண்டிருந்தார்கள். அவரோ அவர்கள்
சிந்தனைகளை அறிந்து, சூம்பின கையனைப்
பார்த்து: எழுந்து நடுவே நில் என்று
9 சொல்ல, அவன் எழுந்து நின்றான். அப்
பொழுது இயேசு அவர்களிடம்: ஓய்வு
நாளில் நன்மை செய்வதோ தீமை செய்
வதோ, ஜீவனைக் காப்பதோ கொல்வதோ,
எது நியாயமென்று உங்களைக் கேட்கிறேன்
10 என்று சொல்லி, அவர்களெல்லாரையும்
சுற்றிப்பார்த்து, அந்த மனுஷனிடம்: உன்
கையை நீட்டு என்றார். அவன் நீட்டி
11 னான்; அவன் கை சொஸ்தமாயிற்று. அவர்
களோ மூர்க்கவெறிகொண்டு, இயேசுவை
என்ன செய்யலாமென்று ஒருவரோடொரு
வர் ஆலோசித்தார்கள்.
12 அந்நாட்களில் அவர் ஜெபம் பண்ணும்
படி ஒரு மலைக்குப்போய், இராமுழுவதும்
கடவுளை நோக்கி ஜெபித்துக்கொண்டிருந்
13 தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்
முடைய சீஷரை வரவழைத்து, அவர்களில்
பன்னிருவரைத் தெரிந்தெடுத்து, அவர்
களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்
14 டார். அவர்கள்: பேதுரு என்று அவர்
பேரிட்ட சீமோன், அவன் சகோதரன்
அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு,
பர்த்தொலொமேயு, | மத்தேயு, தோமா, 15
அல்பேயுவின் குமாரன் யாக்கோபு,
செலோத்தே என்ற சீமோன், | யாக்கோ 16
பின் சகோதரன் யூதா, அவரைக் காட்டிக்
கொடுத்த யூதாஸ்கரியோத்து என்பவர்களே.
இவர்களுடனே அவர் இறங்கி, சமமான 17
ஒரு இடத்திலே நின்றார். அவருடைய
சீஷரில் அநேகரும், யூதேயா முழுவதிலும்
எருசலேமிலும் தீரு சீதோன் கடற்கரை
களிலுமிருந்து வந்த திரள் ஜனங்களும்
அங்கிருந்தார்கள். அவர் உபதேசத்தைக் 18
கேட்கவும், தங்கள் பிணிகளைத் தீர்த்துக்
கொள்ளவும் இவர்கள் எல்லாரும் வந்திருந்
தார்கள். அசுத்த ஆவிகளால் வாதிக்கப்
பட்டவர்களும் வந்து ஆரோக்கியமடைந்
தார்கள். அவரிடமிருந்து வல்லமை புறப் 19
பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியி
னாலே, ஜனங்கள் யாவரும் அவரைத்
தொடும்படி பிரயாசப்பட்டார்கள்.
அப்பொழுது அவர் கண்களை ஏறெடுத்து, 20
தம்முடைய சீஷரைப் பார்த்து:
தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள்,
கடவுள் ராஜ்யம் உங்களுடையது.
இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் 21
பாக்கியவான்கள், நீங்கள் திருப்தியடை
வீர்கள்.
இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கிய
வான்கள், நீங்கள் நகைப்பீர்கள்.
மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் 22
உங்களைப் பகைத்து, உங்களை விலக்கி
வைத்து, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்
தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்
போது நீங்கள் பாக்கியவான்கள். அந் 23
நாளிலே மனமகிழ்ந்து துள்ளிக் குதியுங்கள்;
பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாகும்.
தீர்க்கதரிசிகளுக்கு அவர்கள் பிதாக்களும்
அப்படியே செய்தார்கள்.
ஐயோ! ஐசுவரியவான்களே, நீங்கள் 24
உங்கள் ஆறுதலை அடைந்து தீர்ந்தது.
ஐயோ! இப்பொழுது நிறைவுள்ளவர் 25
களே, நீங்கள் பசியாயிருப்பீர்கள்.
ஐயோ! இப்பொழுது நகைக்கிறவர்களே,
இனித் துக்கப்பட்டு அழுவீர்கள்.
எல்லா மனுஷரும் உங்களைப் புகழ்ந்து 26
பேசும்போது, ஐயோ! உங்களுக்குக் கேடு
வரும்; கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு அவர்கள்
பிதாக்களும் அப்படியே செய்தார்கள். கேட் 27
கிற உங்களுக்கோ நான் சொல்லுகிறேன்:
உங்கள் சத்துருக்களில் அன்புகூருங்கள்;
உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை

28 செய்யுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை
ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்
29 களுக்காக ஜெபம்பண்ணுங்கள். உன்னை
ஒரு கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்
னத்தையும் திருப்பிக்கொடு. உன் மேலா
டையை எடுத்துக்கொள்ளுகிறவனை உன்
உள்ளாடையையும் எடுத்துக்கொள்ளத்
30 தடைபண்ணாதே; உன்னிடம் கேட்கிறவன்
எவனுக்கும் கொடு; உன்னுடையதை
எடுத்துக்கொள்ளுகிறவனிடத்தில் அதைத்
31 திரும்பக் கேளாதே. மனுஷர் உங்களுக்கு
எப்படிச் செய்யவேண்டுமென்று விரும்பு
கிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்
32 களுக்குச் செய்யுங்கள். உங்களிடம் அன்பு
கூருகிறவர்களில் நீங்களும் அன்புகூர்ந்தால்,
உங்களுக்குக் கிடைக்கும் நன்றியென்ன?
பாவிகளும் தங்களிடம் அன்புகூருகிறவர்
33 களில் அன்புகூருகிறார்களே. உங்களுக்கு
நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மை
செய்தால், உங்களுக்குக் கிடைக்கும் நன்றி
யென்ன? பாவிகளும் அப்படியே செய்
34 கிறார்கள். திரும்பக் கொடுப்பார்களென்று
எதிர்பார்த்து நீங்கள் கடன் கொடுத்தால்,
உங்களுக்குக் கிடைக்கும் நன்றியென்ன?
தாங்கள் சரியளவாய்த் திரும்பப் பெற்றுக்
கொள்ளும்படி, பாவிகளும் பாவிகளுக்குக்
35 கடன் கொடுக்கிறார்களே. நீங்களோ
உங்கள் சத்துருக்களில் அன்புகூருங்கள்
நன்மைசெய்யுங்கள், திரும்பக் கிடைக்கு
மென்று கருதாமல் கடன் கொடுங்கள்; அப்
பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்
கும். நீங்கள் உன்னதமானவருடைய பிள்
ளைகளாயிருப்பீர்கள்; நன்றிகெட்டவர்களுக்
கும் பொல்லாதவர்களுக்கும் அவர் நன்மை
36 செய்கிறாரே. உங்கள் பிதா இரக்கமுள்ள
வராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்க
37 முள்ளவர்களாயிருங்கள். நீங்கள் தீர்ப்புச்
செய்யாதிருங்கள்; அப்பொழுது நீங்களும்
தீர்ப்புப் பெறாதிருப்பீர்கள். மற்றவர்களை
ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதிருங்கள், அப்
பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத்
தீர்க்கப்படாதிருப்பீர்கள். விடுதலை பண்
ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலை
38 பண்ணப்படுவீர்கள். கொடுங்கள், அப்
பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்;
அமுக்கிக் குலுக்கிச் சரிந்துவிழும்படி நன்
றாய் அளந்து, உங்கள் மடியிலே போடு
வார்கள். நீங்கள் அளக்கிற அளவின்படியே
உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்.
39 பின்னும் அவர் ஒரு உவமையை அவர்
களுக்குச் சொன்னார்: குருடனைக் குருடன்
வழிநடத்துவானோ? இருவரும் குழியில்
விழுவார்களல்லவா? சீஷன் தன் குருவினும் 40
மேலானவனல்ல, தேறினவன் எவனும் தன்
குருவைப்போலிருப்பான். நீ உன் கண்ணி 41
லிருக்கிற உத்திரத்தைக் கவனியாமல், உன்
சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப்
பார்க்கிறதென்ன? அல்லது நீ உன் கண்ணி 42
லிருக்கிற உத்திரத்தைப் பாராமலிருந்து
கொண்டு, உன் சகோதரனிடத்தில்: சகோத
ரனே, உன் கண்ணிலிருக்கிற துரும்பை
நான் எடுத்துவிடட்டும் என்று நீ சொல்வ
தெப்படி? மாயக்காரனே, முன்பு உன்
கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்
போடு, பின்பு உன் சகோதரன் கண்ணி
லிருக்கிற துரும்பை எடுத்துப்போடத் தெளி
வாய்ப் பார்ப்பாய். நல்ல மரம் கெட்ட 43
கனி கொடாது, கெட்ட மரம் நல்ல கனி
கொடாது. அந்தந்த மரம் அதனதன் கனி 44
யினால் அறியப்படும்; முட்செடிகளில் அத்
திப்பழங்களைப் பறிப்பாருமில்லை, நெருஞ்சிச்
செடியில் திராட்சப்பழங்களை அறுப்பாரும்
இல்லை. இருதயமாகிய நல்ல பொக்கிஷத்தி 45
லிருந்து நல்ல மனுஷன் நல்லதை எடுத்துக்
காட்டுகிறான்; பொல்லாத பொக்கிஷத்தி
லிருந்து பொல்லாத மனுஷன் பொல்லாததை
எடுத்துக் காட்டுகிறான். இருதயத்தின்
நிறைவிலிருந்து அவனவன் வாய் பேசும்.
நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாம 46
லிருந்துகொண்டு, என்னை ஆண்டவரே,
ஆண்டவரே என்று அழைக்கிறதென்ன?
என்னிடம் வந்து, என் வார்த்தைகளைக் 47
கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் எவ
னும் யாருக்கு ஒப்பாவானென்று உங்களுக்
குக் காட்டுவேன். ஆழமாய்த்தோண்டி, கற் 48
பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடு
கட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாவான்; வெள்
ளம் வந்து நீரோட்டம் அந்த வீட்டின்மேல்
மோதியும், அது நன்றாய்க் கட்டப்பட்டிருந்
ததால், அதை அசைக்கமுடியாமற்போ
யிற்று. என் வார்த்தைகளைக்கேட்டும் அவை 49
களின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்
லாமல் பூமியின்மேலே வீடுகட்டினவனுக்கு
ஒப்பாவான்; நீரோட்டம் அதன்மேல்
மோதவே அது விழுந்தது; அவ்வீட்டுக்குச்
சேதமும் அதிகமாயிற்று என்றார். அவர் 7
தமது வார்த்தைகளையெல்லாம் ஜனங்கள்
காது கேட்கச் சொல்லிமுடித்தபின் கப்பர்
நகூமுக்குட் சென்றார்.
அங்கே நூற்றுக்கதிபதி ஒருவனுடைய 2
வேலைக்காரன் வியாதிப்பட்டு மரண அவஸ்
தையிலிருந்தான்; எஜமானுக்கு அவன் அரு
மையானவன். அவன் இயேசுவைப்பற்றிக் 3
கேள்விப்பட்டபோது, அவர் வந்து தன்

வேலைக்காரனைக் குணமாக்கவேண்டுமென்று
அவரை வேண்டிக்கொள்ளும்படி, யூதரின்
மூப்பரில் சிலரை அவரிடம் அனுப்பினான்.
4 அவர்கள் இயேசுவினிடம் வந்து: நீர் இந்தத்
தயவுசெய்கிறதற்கு அவன் ஏற்றவன்.
5 அவன் நமது ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு
ஒரு ஜெபாலயத்தையும் கட்டினான் என்று
சொல்லி, அவரை வருந்தி அழைத்
6 தார்கள். | இயேசு அவர்களோடு போனார்.
வீட்டுக்குச் சமீபமானபோது, நூற்றுக்கதிபதி
தன் சிநேகிதர் சிலரை அழைத்து: ஐயனே,
உமக்கு இந்தத் தொந்தரவு வேண்டாம், நீர்
என் வீட்டிற்குள் பிரவேசிக்க நான் தகுந்தவ
7 னல்ல; நான் உம்மிடத்தில் வரவும் என்னை
ஏற்றவனாக எண்ணவில்லை; வார்த்தை மாத்
திரம் சொல்லும், என் வேலைக்காரன்
8 சொஸ்தமாவான். நானும் அதிகாரத்துக்குக்
கீழ்ப்பட்ட மனுஷன், எனக்குக் கீழே சேவ
கரும் உண்டு; நான் ஒருவனைப் போவென்
றால் போகிறான், மற்றொருவனை வாவென்
றால் வருகிறான்; என் அடிமையை இதைச்
செய்யென்றால் செய்கிறான் என்று அவ
9 ரிடம் சொல்லும்படி அனுப்பினான். இயேசு
இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்
சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிற திர
ளான ஜனங்களைத் திரும்பிப் பார்த்து: இப்
படிப்பட்ட விசுவாசத்தை நான் இஸ்ரவேலி
லும் கண்டதில்லை என்று உங்களுக்குச்
10 சொல்லுகிறேன் என்றார். அனுப்பப்பட்ட
வர்கள் வீட்டுக்குத் திரும்பிவந்தபோது,
வேலைக்காரன் சுகமாயிருப்பதைக் கண்
டார்கள்.
11 அதற்கப்பால் அவர் நாயீன் என்னும்
ஓர் ஊருக்குப் போனார்; அவருடைய சீஷ
ரும் திரளான ஜனங்களும் அவருடன்
12 போனார்கள். அவர் ஊரின் வாசலுக்குச் சமீ
பமாய் வந்தபோது, மரித்துப்போன ஒரு
வனை அடக்கம்பண்ணும்படி வெளியே
கொண்டுவந்தார்கள். அவன் தன் தாய்க்கு
ஒரே மகன், அவளோ கைம்பெண்; ஊராரில்
13 வெகு ஜனம் அவளுடன் வந்தது. ஆண்ட
வர் அவளைப் பார்த்து அவள்மேல் மன
14 முருகி: அழாதே என்று சொல்லி, | கிட்ட
வந்து பாடையைத் தொட்டார்; அதைச்
சுமந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது
அவர்: வாலிபனே, எழுந்திரு என்று
15 உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்
தவன் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கி
னான்; அவனைத் தாயினிடம் ஒப்புவித்தார்.
16 எல்லாரும் பயம்பிடித்தவர்களாய்: நமக்
குள் மகா தீர்க்கதரிசி ஒருவர் தோன்றியிருக்
கிறார், கடவுள் தமது ஜனத்தைச் சந்தித்தார்
என்று சொல்லி, கடவுளை மகிமைப்படுத்தி
னார்கள்: அவரைப்பற்றிய இந்தச் செய்தி 17
யூதேயா நாடு முழுவதிலும் சுற்றுப்புறங்கள்
யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.
இவைகளையெல்லாம் யோவானுடைய 18
சீஷர் அவனுக்கு அறிவித்தார்கள். அப்
பொழுது யோவான் தன் சீஷரில் இருவரை
அழைத்து: | வருகிறவர் நீர்தானோ? அல்லது 19
வேறொருவரை நாங்கள் எதிர்பார்க்கவேண்
டுமோ என்று கேட்க ஆண்டவரிடம்
அனுப்பினான். அவர்கள் அவரிடம் வந்து: 20
வருகிறவர் நீர்தானோ, அல்லது வேறொரு
வரை நாங்கள் எதிர்பார்க்கவேண்டுமோ
என்று கேட்கும்படி யோவான் ஸ்நானகன்
எங்களை உம்மிடம் அனுப்பினார் என்றார்கள்.
அந்தச் சமயத்திலே நோய்களையும் கொடிய 21
வியாதிகளையும் பொல்லாத ஆவிகளையும்
கொண்டிருந்த அநேகரை அவர் குணமாக்கி,
அநேக குருடருக்குப் பார்வையளித்தார்.
அவர் அவர்களைப்பார்த்து: கண்டவைகளை 22
யும் கேட்டவைகளையும் நீங்கள் போய்
யோவானுக்கு அறிவியுங்கள்; குருடர் பார்
வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கி
றார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள்,
செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர்
எழுப்பப்படுகிறார்கள், தரித்திரருக்கு நற்
செய்தி அறிவிக்கப்படுகிறது: என் விஷய 23
மாய் இடறி விழாதவன் எவனோ அவன்
பாக்கியவான் என்றார்.
யோவானுடைய தூதர் போனபின்பு 24
அவர் யோவானைக்குறித்து ஜனங்களிடம்
பேசத்தொடங்கி: எதைப்பார்க்க வனாந்தரத்
திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும்
நாணலையோ? அல்லவென்றால் எதைப் 25
பார்க்கப் போனீர்கள்? மெல்லிய வஸ்திரந்
தரித்த மனுஷனையோ? அலங்கார வஸ்திரந்
தரித்துச் செல்வமாய் வாழ்கிறவர்கள் அர
சர் மாளிகைகளில் இருக்கிறார்கள். அல்ல 26
வென்றால் எதைப் பார்க்கப் போனீர்கள்?
தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியி
லும் மேன்மையுள்ளவனையே என்று உங்க
ளுக்குச் சொல்லுகிறேன்.

இதோ, என் தூதனை உமக்கு முன்பாக 27
அனுப்புகிறேன்,
அவன் உமக்கு முன்னே போய் உமது
வழியை ஆயத்தம்பண்ணுவான்

என்று எழுதிய வாக்கியத்தால் குறிக்கப்
பட்டவன் இவனே. ஸ்திரீகளிடம் பிறந்த 28
வர்களில் யோவானிலும் பெரியவன் ஒரு
வனுமில்லை; கடவுள் ராஜ்யத்திலுள்ள
சிறியவனோ அவனிலும் பெரியவனென்று
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

29 இதைக் கேட்ட சகல ஜனங்களும் ஆயக்
காரருங்கூடயோவானுடைய ஞானஸ்நானம்
பெற்றவர்களாய், கடவுள் நீதிபரர் என்று
30 ஒத்துக்கொண்டார்கள். பரிசேயரும் நியாய
சாஸ்திரிகளுமோ அவனால் ஞானஸ்நானம்
பெறாமல், கடவுளின் ஆலோசனையைத்
தங்கள் விஷயத்தில் அவமாக்கிக்கொண்
31 டார்கள். பின்னும் இயேசு: இந்தச் சந்ததி
யாரை எதற்கு ஒப்பிடுவேன்? இவர்கள்
32 எதைப்போலிருக்கிறார்கள்? சந்தை வெளி
யில் உட்கார்ந்து ஒருவரையொருவர் கூப்
பிட்டு:

உங்களுக்குக் குழல் ஊதினோம், நீங்கள்
கூத்தாடவில்லை;
ஒப்பாரி வைத்தோம், நீங்கள் அழ
வில்லை

என்று சொல்லுகிற பிள்ளைகளைப்போலிருக்கி
33 றார்கள். யோவான்ஸ்நானகன் அப்பம் புசி
யாதவனும் திராட்சரசம் குடியாதவனுமாய்
வந்தான்; நீங்கள்: அவன் பேய்பிடித்திருக்
34 கிறவன் என்கிறீர்கள். மனுஷகுமாரன்
போஜனபானம் பண்ணுகிறவராய் வந்தார்;
போஜனப்பிரியன், மதுபானப்பிரியன்,
ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்
35 என்கிறீர்கள். ஞானமோ தன் பிள்ளைகள்
யாவராலும் நியாயமென்று தீர்க்கப்பட்டது
என்றார்.

36 பரிசேயரில் ஒருவன் தன்னோடு போஜ
னம் பண்ணவேண்டுமென்று அவரைக்
கேட்டுக்கொண்டான்; அவர் அந்தப் பரி
சேயன் வீட்டுக்குப் போய்ப் பந்தியிருந்தார்.
37 அந்த ஊரிலிருந்த பாவியான ஒரு ஸ்திரீ,
அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்
கிறதை அறிந்து, ஒரு வெள்ளைக்கல் பரணி
38 யில் பரிமள தைலம் கொண்டுவந்து, அவர்
பாதத்தருகே பின்னாக நின்று அழுது, அவ
ருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால்
நனைக்கத் தொடங்கி, தன் தலைமயிரினால்
துடைத்து, அவர் பாதங்களைத் திரும்பத்
திரும்ப முத்தமிட்டு, பரிமள தைலத்தைப்
39 பூசினாள். அவரை அழைத்த பரிசேயன்
அதைக் கண்டு: இவர் தீர்க்கதரிசியென்றால்
தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும்
இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்
பார்; இவள் பாவியாயிற்றே என்று தனக்
40 குள் சொல்லிக்கொண்டான். இயேசு அவ
னிடம்: சீமோனே, உனக்கு நான் ஒரு
காரியம் சொல்லவேண்டும் என்றார்.
அதற்கு அவன்: சொல்லும், போதகரே,
41 என்றான். அப்பொழுது அவர்: ஒருவனிடம்
இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒரு
வன் ஐந்நூறு தினாரியமும், மற்றவன் ஐம்பது
தினாரியமும் கொடுக்கவேண்டியதாயிருந்
தது. கடனைத் தீர்க்க அவர்களுக்கு நிர்வாக 42
மில்லாதபோது, இருவருக்கும் மன்னித்து
விட்டான். இவர்களில் எவன் அவனிடம்
அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல்
என்றார். அதற்குச் சீமோன்: எவனுக்கு 43
அதிகம் மன்னித்துவிட்டானோ அவனே
என்று நினைக்கிறேன் என்றான். அவர் அவ
னிடம்: சரியாய் நிதானித்தாய் என்று
சொல்லி, அந்த ஸ்திரீயின் பக்கமாய்த் 44
திரும்பி, சீமோனை நோக்கி: இந்த ஸ்திரீ
யைப் பார்க்கிறாயா? உன் வீட்டிற்குள்
வந்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர்
தந்ததில்லை. இவளோ தன் கண்ணீரி
னால் என் கால்களை நனைத்துத் தலைமயிரி
னால் அவைகளைத் துடைத்தாள். நீ எனக்கு 45
முத்தங்கொடுத்ததில்லை, இவளோ நான்
உள்ளே வந்ததுமுதல் என் பாதங்களை
ஓயாமல் முத்தமிட்டாள். நீ என் தலையில் 46
எண்ணெய் பூசினதில்லை, இவளோ என்
பாதங்களில் பரிமள தைலம் பூசினாள். ஆத 47
லால் நான் உனக்குச் சொல்லுகிறேன்:
இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்
கப்பட்டன, இவள் மிகவும் அன்புகூர்ந்
தாள். எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்
கப்படுகிறதோ அவன் கொஞ்சமாய் அன்பு
கூருவான் என்று சொல்லி, அவளைப் 48
பார்த்து: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்
டன என்றார். அப்பொழுது கூடப் பந்தி 49
யிருந்தவர்கள்: பாவங்களையும் மன்னிக்கிற
இவர் யார் என்று தங்களுக்குள்ளே சொல்
லிக்கொள்ளத் தொடங்கினார்கள். அவரோ: 50
உன் விசுவாசம் உன்னை ரட்சித்தது, சமா
தானமாய்ப் போ என்று அந்த ஸ்திரீயி
னிடம் சொன்னார்.

அதற்கப்பால் அவர் ஊரூராய்க் கிராமங் 8
கிராமமாய்ச் சுற்றித்திரிந்து, கடவுள்
ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைப் பிரசங்
கித்து அறிவித்துவந்தார். பன்னிருவரும்
அவருடன் இருந்தார்கள். மேலும், பொல் 2
லாத ஆவிகளையும் வியாதிகளையும் அவர்
நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு
பேய்கள் நீங்கின மகதலேனாள் என்ற
மரியாளும், ஏரோதுவின் காரியக்காரன் 3
கூசாவின் மனைவி யோவன்னாளும், சூசன்னா
ளும், மற்றும் அநேக ஸ்திரீகளும் அவர்க
ளோடிருந்தார்கள். இவர்கள் தங்கள்
ஆஸ்திகளால் அவர்களுக்கு ஊழியஞ்செய்து
வந்தார்கள்.

பற்பல ஊர்களிலிருந்து திரளான 4
ஜனங்கள் அவரிடம் வந்து கூடினபோது,

5 அவர் உவமையாகச் சொன்னது: | விதைக்
கிறவன் ஒருவன் தன் விதையை விதைக்கப்
போனான். அவன் விதைக்கையில் சில
விதைகள் பாதையில் விழுந்து மிதியுண்
டன; ஆகாயத்துப் பறவைகள் வந்து அவற்
6 றைப் பட்சித்துப்போட்டன. சில விதைகள்
கற்பாறையின்மேல் விழுந்தன; அவை
முளைத்தபின் ஈரமில்லாததினால் உலர்ந்து
7 போயின. சில விதைகள் முள்ளுக்குள்
விழுந்தன; முள்கூடவே வளர்ந்து அவற்றை
8 நெருக்கிப் போட்டது. சில விதைகளோ
நல்ல நிலத்தில் விழுந்தன, அவை வளர்ந்து
ஒன்று நூறாகப் பலன் தந்தன என்றார்.
இவைகளைச் சொல்லி: கேட்கக் காதுள்ள
வன் கேட்கக்கடவன் என்று சத்தமிட்டுக்
கூறினார்.
9 இந்த உவமையின் கருத்தென்னவென்று
அவருடைய சீஷர் அவரிடம் கேட்க, |
10 அவர்: கடவுள் ராஜ்யத்தின் இரகசியங்
களை அறியும்படி உங்களுக்கு அருளப்
பட்டது, மற்றவர்களுக்கோ, அவர்கள்
கண்டும் காணாதவர்களாயும் கேட்டும் உண
ராதவர்களாயுமிருக்க, அவைகள் உவமை
11 களாகச் சொல்லப்படுகின்றன. அந்த உவ
மையின் கருத்தாவது: விதை கடவுளின் வச
12 னம், பாதையில் விதைக்கப் பெற்றவர்கள்
வசனத்தைக் கேட்டவர்கள்; அவர்கள்
நம்பி ரட்சிக்கப்படாதபடி பிசாசு வந்து
வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து
13 எடுத்துவிடுகிறான். கற்பாறையின்மேல்
விதைக்கப்பெற்றவர்கள் கேட்கும்போதெல்
லாம் சந்தோஷமாய் வசனத்தை ஏற்றுக்
கொள்ளுகிறார்கள்; ஆகிலும் இவர்களுக்கு
வேரில்லாதபடியினால், கொஞ்சக் காலம்
மாத்திரம் நம்பியிருந்து சோதனை காலத்தில்
14 வழுவிப்போகிறார்கள். முள்ளுக்குள் விழுந்
தவைகள் வசனத்தைக் கேட்டும் கவலைகளி
னாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களி
னாலும் வரவர நெருக்கப்பட்டு, பலன்
கொடாமற்போகிறவர்களைக் குறிக்கும்.
15 நல்ல நிலத்தில் விழுந்தவைகளோ, செம்மை
யான நல் இருதயத்திலே வசனத்தைக்
கேட்டு, அதைக் காத்து, பொறுமையுடனே
பலன் தருகிறவர்களைக் குறிக்கும்.
16 ஒருவனும் விளக்கைக் கொளுத்தி
அதைப் பாத்திரத்தினாலே மூடவுமாட்டான்,
கட்டிலின் கீழே வைக்கவுமாட்டான்;
உள்ளே வருகிறவர்களுக்கு வெளிச்சம் தெரி
யும்படி அதை விளக்குத்தண்டின்மேல்
17 வைப்பான். பகிரங்கமாகாத அந்தரங்கமு
மில்லை, அறியப்பட்டு வெளிப்படாத மறை
18 பொருளுமில்லை. ஆகலால், நீங்கள் எப்ப
டிக் கேட்கிறீர்கள் என்பதைக்குறித்து எச்ச
ரிக்கையாயிருங்கள்; உள்ளவனெவனோ
அவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவ
னெவனோ அவனிடத்திலிருந்து தனக்குண்
டென்று அவன் நினைக்கிறதும் எடுத்துக்
கொள்ளப்படும் என்றார்.
அவருடைய தாயாரும் சகோதரரும் அவ 19
ரிடம் வந்தார்கள்; ஜனக்கூட்டம் இருந்தி
னால் அவரண்டையில் அவர்கள் சேர முடிய
வில்லை. உம்முடைய தாயாரும் உம் 20
முடைய சகோதரரும் உம்மைப் பார்க்க
வேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள்
என்று அவருக்கு அறிவித்தார்கள். அவரோ 21
அவர்களிடம்: கடவுளுடைய வசனத்தைக்
கேட்டு அதன்படி செய்யும் இவர்களே
எனக்குத் தாயும் எனக்குச் சகோதரருமாம்
என்றார்.
பின்பு ஒருநாள் அவர் தம்முடைய சீஷ 22
ரோடு படவில் ஏறியிருக்கையில்: கடலின்
அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்
றார்; அப்படியே போனார்கள். படவு ஓடுகை 23
யில் அவர் தூங்கிவிட்டார். அப்பொழுது
கடலின்மேல் சுழல்காற்று வரவே படவில்
தண்ணீர் நிறைந்துவந்தது; அவர்கள் அபா
யத்திலிருந்தார்கள். அவர்கள் அவரிடம் 24
வந்து: ஐயரே, ஐயரே, மடிந்துபோகிறோம்
என்று அவரை எழுப்பினார்கள்; அவர்
விழித்தெழுந்து காற்றையும் ஜலத்தின்
கொந்தளிப்பையும் அதட்டினார்; அதட்
டவே, அவைகள் நின்றுபோய், அமைதல்
உண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: 25
உங்கள் நம்பிக்கை எங்கே என்றார்.
அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு: இவர்
யாரோ? காற்றுக்கும் கடலுக்கும் கட்டளை
யிடுகிறார், அவைகள் இவருக்குக் கீழ்ப்படி
கின்றனவே என்று ஒருவருக்கொருவர்
சொல்லிக்கொண்டார்கள்.
பின்பு கலிலேயாவுக்கு எதிரான கெரசே 26
னர் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.
அவர் கரையிறங்கவும், பேய்கள் பிடித்த 27
அந்த ஊரான் ஒருவன் அவருக்கு எதிர்ப்
பட்டான்; அவன் நெடுநாளாய் வஸ்திரந்தரி
யாதவன், வீட்டில் தங்காமல் கல்லறை
களிலே தங்கினவன். அவன் இயேசுவைக் 28
கண்டபோது கூக்குரலிட்டு, அவருக்குமுன்
பாக விழுந்து: இயேசுவே, உன்னதமான
கடவுளின் குமாரனே, எனக்கும் உமக்கும்
என்ன? என்னை வேதனைப்படுத்தாதிருக்க
உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்று
மிகவும் சத்தமிட்டுச் சொன்னான். அசுத்த 29
ஆவி அந்த மனுஷனை விட்டுப்போகும்படி
அவர் கட்டளையிட்டிருந்தார். பலமுறை

அது அவனைப் பிடித்துவந்தது; அவன்
சங்கிலிகளினாலும் விலங்குகளினாலும் கட்
டுண்டு காவல்பண்ணப்பட்டிருந்தும், கட்டு
களை முறித்துப்போட்டிருந்தான். பேய்
அவனை வனாந்தரத்துக்குத் துரத்தியிருந்தது.
30 இயேசு அவனைப்பார்த்து: உன் பேர் என்ன
வென்று கேட்க, அவன்: [1]லேகியோன் என்
றான். பல பேய்கள் அவனுக்குள் புகுந்
திருந்தபடியால் அந்தப் பேரைச் சொன்
31 னான். தங்களைப் பாதாளக்குழிக்குட்போகக்
கட்டளையிடாதபடி அவைகள் அவரை
32 வேண்டிக்கொண்டன. அவ்விடத்தில்
அநேகம் பன்றிகள் கூட்டமாய் மலையிலே
மேய்ந்துகொண்டிருந்தன. அவைகளுக்குள்
போகும்படி தங்களுக்கு உத்தரவுகொடுக்
கப் பேய்கள் அவரை வேண்டிக்கொண்
டன; அவைகளுக்கு உத்தரவு கொடுத்தார்.
33 அப்படியே பேய்கள் அந்த மனுஷனைவிட்டு
வெளியேறி, பன்றிகளுக்குள் புகுந்தன.
புகவே, பன்றிக்கூட்டம் மேட்டிலிருந்து
கடலிலே பாய்ந்து அமிழ்ந்துபோனது.
34 அவைகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்கள்
நடந்ததைக் கண்டு, ஓட்டம்பிடித்து, ஊரி
லும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள்.
35 சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள்
ஊருக்கு வெளியே இயேசுவினிடம் வந்து,
பேய்கள் விட்டுப்போன மனுஷன் வஸ்திரந்
தரித்து, புத்திதெளிந்து, இயேசுவின் பாதத்
தருகே உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு,
36 திகிலடைந்தார்கள். பேய்கள் பிடித்திருந்த
வன் எவ்விதமாய்ச் சொஸ்தமானானென்று
கண்டவர்கள் அதை அவர்களுக்கு அறிவித்
37 தார்கள். அப்பொழுது கெரசேனருடைய
சுற்றுப்புறத்து ஜனத்திரளெல்லாம் மிகவும்
திகிலடைந்து, தங்களைவிட்டுப் போகும்படி
அவரை வேண்டிக்கொண்டார்கள். அந்தப்
படி அவர் படவிலேறித் திரும்பிப்
38 போகையில், பேய்கள் நீங்கின மனுஷன்
அவரோடேகூட இருக்கும்படி உத்தரவு
39 கேட்டான். அவரோ: | நீ உன் வீட்டுக்குத்
திரும்பிப்போய், கடவுள் உனக்கு எவ்
வளவு பெரிய காரியங்களைச் செய்திருக்கிறா
ரென்று விவரித்துச் சொல் என்று சொல்லி,
அவனை அனுப்பிவிட்டார். அப்படியே
அவன் போய், இயேசு தனக்கு எவ்வளவு
பெரிய காரியங்களைச் செய்தாரென்று
ஊரெங்கும் பிரசித்தப்படுத்தினான்.
40 இயேசு திரும்பிவந்தபோது ஜனக்கூட்
டம் அவரை வரவேற்றுக்கொண்டது; எல்
லாரும் அவருக்காகக் காத்திருந்தார்கள்.
41 ஜெபாலயத் தலைவனாகிய யவீரு என்னும்
பேருள்ள ஒருவன் வந்து, இயேசுவின்
பாதத்தில் விழுந்து, பன்னிரண்டு வயதுள்ள
தன் ஒரே மகள் மரண அவஸ்தையிலிருந்த
படியால், தன் வீட்டிற்கு வரும்படி அவரை 42
வேண்டிக்கொண்டான். அவர் போகையில்
திரளான ஜனங்கள் அவரை நெருக்கிக்
கொண்டு வந்தார்கள்.
அப்பொழுது பன்னிரண்டு வருஷம் 43
பெரும்பாடுள்ளவளாய் ஒருவனாலும் குண
மாகாதிருந்த ஒரு ஸ்திரீ | அவர் பின்னாக 44
வந்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத்
தொட்டாள்; தொடவே அவளுடைய
பெரும்பாடு நின்றுபோயிற்று. என்னைத் 45
தொட்டது யார் என்று இயேசு கேட்டார்.
நாங்கள் தொடவில்லை என்று எல்லாரும்
சொல்லவே, பேதுரு: ஐயரே, திரளான
ஜனங்கள் உம்மைச் சூழ்ந்து நெருக்கிக்
கொண்டிருக்கிறார்களே என்றான். இயேசு: 46
ஒருவர் என்னைத் தொட்டதுண்டு,
என்னிலிருந்து வல்லமை வெளிப்பட்டதை
அறிந்தேன் என்றார். அந்த ஸ்திரீ, தான் 47
மறைந்திருக்கவில்லையென்று கண்டு, நடுங்கி
வந்து அவர் முன்பாக விழுந்து, தான்
அவரைத் தொட்ட காரணத்தையும்
உடனே தான் குணமானதையும் எல்லா
ஜனங்கள் முன்னிலையிலும் அவருக்கு அறி
வித்தாள். அவரோ அவளிடம்: மகளே, 48
உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கினது,
சமாதானமாய்ப் போ என்றார்.
அவர் இன்னும் பேசிக்கொண்டிருக்கை 49
யில், ஜெபாலயத் தலைவன் வீட்டிலிருந்து
ஒருவன் வந்து: உம்முடைய மகள் மரித்துப்
போனாள், இனிப் போதகரைத் தொந்தரவு
செய்யவேண்டாம் என்றான். இயேசு 50
அதைக் கேட்டு அவனிடம்: பயப்படாதே,
நம்பிக்கையுள்ளவனாகவேயிரு, அவள் சுகப்
படுவாள் என்றார். அவர் வீட்டுக்குள் 51
வந்தபோது, பேதுரு, யாக்கோபு, யோவான்,
பெண்ணின் தாய் தகப்பன் இவர்களைத்
தவிர வேறொருவரும் தம்மோடு உள்ளே
போக இடங்கொடுக்கவில்லை. எல்லாரும் 52
அவளுக்காக அழுது மாரடித்துக்கொண்
டிருந்தார்கள். அவரோ: அழாதிருங்கள்,
அவள் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்
கிறாள் என்றார். அவள் மரித்துப்போனா 53
ளென்று அவர்களுக்குத் தெரிந்ததினால் அவ
ரைப் பார்த்து நகைத்தார்கள். அவரோ 54
அவளுடைய கையைப்பிடித்து: சிறு
பெண்ணே, எழுந்திரு என்று கூப்பிட, |
அவள் உயிர் திரும்ப வந்தது; உடனே 55
அவள் எழுந்திருந்தாள்; அவளுக்கு ஆகா

[1]லேகியோன், மத். 26: 53 பார்க்க.

56 ரங்கொடுக்கக் கட்டளையிட்டார். அவன்
பெற்றோர் பிரமித்தார்கள்; சம்பவித்ததை
ஒருவருக்கும் சொல்லாமலிருக்கும்படி
அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

9 அவர் பன்னிருவரையும் ஒன்றாய் வர
வழைத்து, சகல பேய்களையும் துரத்தவும்
வியாதிகளைத் தீர்க்கவும் அவர்களுக்கு
வல்லமையும் அதிகாரமும் கொடுத்து,
2 கடவுள் ராஜ்யத்தைப் பிரசங்கிக்கவும் பிணி
யாளிகளைக் குணமாக்கவும் அவர்களை அனுப்
3 பினார். அனுப்பும்போது அவர்களிடம்:
வழிக்கு ஒன்றையும் எடுத்துக்கொண்டு
போகவேண்டாம். தடி, பை, ஆகாரம், காசு
முதலிய எதுவும் வேண்டாம். ஆளுக்கு
4 இரண்டு அங்கிகளும் வேண்டாம். எந்த
வீட்டிற்குள் போவீர்களோ அங்கே தங்கி,
5 அங்கிருந்து புறப்படுங்கள். உங்களை ஏற்றுக்
கொள்ளாதவர்கள் எவர்களோ அவர்க
ளுடைய ஊரைவிட்டுப் புறப்படும்போது,
அவர்களுக்கு விரோதமான சாட்சியாக
உங்கள் கால்களில் படிந்த தூசியை
உதறிப்போடுங்கள் என்று சொன்னார்.
6 அவர்கள் போய், கிராமந்தோறும் சுற்றித்
திரிந்து, எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்
கித்து, பிணியாளிகளைக் குணமாக்கினார்கள்.
7 ஏரோது சிற்றரசன் நடக்கிறவைகளை
யெல்லாம் கேள்விப்பட்டான். யோவான்
மரித்தோரிலிருந்து எழுந்தான் என்று சில
8 ரும், எலியா தோன்றினான் என்று சிலரும்,
பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவன்
எழுந்துவிட்டான் என்று சிலரும் பேசிக்
கொண்டபடியால், அவன் திகைத்து:
9 யோவானை நான் சிரச்சேதஞ்செய்தேன், நான்
கேள்விப்படுகிற இப்படிப்பட்ட காரியங்
களைச் செய்கிற இவர் யார் என்று சொல்லி
அவரைப் பார்க்கப் பிரயத்தனப்பட்டான்.
10 அப்போஸ்தலர் திரும்பிவந்து, தாங்கள்
செய்த யாவற்றையும் அவருக்கு விவரித்
துச் சொன்னார்கள். அவர் அவர்களைக்
கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி பெத்
சாயிதா என்னும் ஊருக்குப் போனார்.
11 திரளான ஜனங்கள் அதை அறிந்து, அவரைத்
தொடர்ந்துபோனார்கள்; அவர்களை அவர்
ஏற்றுக்கொண்டு, கடவுள் ராஜ்யத்தைப்
பற்றி அவர்களோடு பேசி, சுகம் வேண்டிய
12 வர்களைச் சொஸ்தமாக்கினார். பொழுது
சாயும் நேரமாகவே, பன்னிருவரும் அவரி
டம்வந்து: நாம் இருக்கிற இடம் வனாந்தரம்;
ஜனங்கள் சுற்றியிருக்கிற ஊர்களுக்கும் கிரா
மங்களுக்கும் போய்த் தங்கவும், தங்களுக்கு
ஆகாரம் பார்த்துக்கொள்ளவும் அவர்களை
அனுப்பிவிடும் என்றார்கள். அதற்கு அவர்: 13
நீங்களே அவர்களுக்குப் போஜனங்
கொடுங்கள் என்றார். அதற்கு அவர்கள்: எங்
களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்க
ளும் மாத்திரம் உண்டு; இந்த ஜனங்களெல்
லாருக்கும் போஜனங்கொடுக்கவேண்டிய
தானால், நாங்கள் போய் வாங்கிக்கொண்டு
வரவேண்டுமே என்றார்கள். ஏறக்குறைய 14
ஐயாயிரம் புருஷர் இருந்தார்கள். அவர்க
ளைப் பந்திக்கு ஐம்பதுபேராக உட்காரவை
யுங்கள் என்று தம் சீஷருக்குச் சொன்னார்.
அவர்கள் அப்படியே செய்து எல்லாரையும் 15
உட்காரவைத்தார்கள். அப்பொழுது அவர் 16
அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்
களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து
பார்த்து, அவைகளை ஆசீர்வதித்து, பிட்டு,
ஜனங்களுக்குப் பரிமாறும்படி சீஷரிடம்
கொடுத்தார். எல்லாரும் சாப்பிட்டுத் 17
திருப்தியடைந்தார்கள். அவர்கள் சாப்பிட்டு
மிஞ்சின துணிக்கைகள் பன்னிரண்டுகூடை
நிறைய எடுக்கப்பட்டன.

பின்பு அவர் தனித்து ஜெபம்பண்ணிக் 18
கொண்டிருக்கையில், சீஷர் பக்கத்திலிருந்
தார்கள். அப்போது அவர் அவர்களிடம்:
ஜனங்கள் என்னை யார் என்று சொல்லுகி
றார்கள் என்று கேட்க, அவர்கள்: யோவான் 19
ஸ்நானகன் என்று சொல்லுகிறார்கள்;
சிலரோ எலியா என்றும், வேறு சிலரோ
பூர்வகாலத்துத் தீர்க்கதரிசிகளில் ஒருவர்
உயிர்த்தெழுந்தார் என்றும் சொல்லுகி
றார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்: 20
என்னை யார் என்று நீங்கள் சொல்லுகி
றீர்கள் என்று கேட்க, பேதுரு: நீர் கடவு
ளின் கிறிஸ்து என்றான். அவர்கள் இதை எவ 21
ருக்கும் அறிவியாதபடி கண்டிப்பாய்ச்
சொல்லிக் கட்டளையிட்டார். மேலும், 22
மனுஷகுமாரன் பல பாடுகள்பட்டு, மூப்ப
ராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரக
ராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு,
கொலையுண்டு, மூன்றாம் நாளில் எழுப்பப்
படவேண்டும் என்று சொன்னார். பின்பு 23
அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என்
னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்
னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநு
தினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்
பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க 24
விரும்புகிறவன் அதை இழந்துபோவான்;
என்னிமித்தமாகத் தன் [1]ஜீவனை இழந்து

[1] கிரேக்க பதம் ஜீவனென்றும் ஆத்துமாவென்றும் பொருள்படும்.

போகிறவனே அதை இரட்சித்துக்கொள்
25 வான். மனுஷன் உலகம் முழுவதையும்
ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்னைத்
தான் இழந்து நஷ்டப்படுத்தினால் அவ
26 னுக்கு லாபம் என்ன? என்னைப்பற்றியும் என்
வார்த்தைகளைப்பற்றியும் எவன் வெட்கப்படு
வானே அவனைப்பற்றி மனுஷகுமாரனும்,
தமக்கும் பிதாவுக்கும் பரிசுத்த தூதருக்கு
முரிய மகிமையில் வரும்போது, வெட்கப்
27 படுவார். இங்கே நிற்கிறவர்களில் சிலர் கட
வுள் ராஜ்யத்தைக் காணுமுன், மரணத்தை
ருசிபார்ப்பதில்லையென்று உண்மையாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
28 இந்த வார்த்தைகளை அவர் சொல்லி
ஏறக்குறைய எட்டு நாளானபின்பு, அவர்
பேதுருவையும் யோவானையும் யாக்கோபை
யும் கூட்டிக்கொண்டு, ஜெபஞ்செய்வ
29 தற்கு ஒரு மலையின்மேல் ஏறினார். ஜெபஞ்
செய்கையில், அவர் முகரூபம் மாறிற்று,
அவருடைய வஸ்திரம் வெண்மையாய் மின்
30 னொளி வீசினது. மோசே எலியா என்னும்
இரண்டுபேர் மகிமையில் தோன்றி, அவ
31 ரோடு சம்பாஷித்து, அவர் எருசலேமிலே
நிறைவேற்றப்போகிற அவருடைய மரணத்
தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.
32 பேதுருவும் அவனோடிருந்தவர்களும்
நித்திரைமயக்கமாயிருந்தார்கள். அவர்கள்
விழித்தபோதோ அவருடைய மகிமையை
யும் அவரோடு நின்ற இருவரையும் கண்
33 டார்கள். அவ்விருவரும் அவரைவிட்டுப்
போகையில், பேதுரு இயேசுவினிடம்:
ஐயரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது;
உமக்கு ஒன்றும், மோசேக்கு ஒன்றும்,
எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்
களைப் போடுவோம் என்றான். தான்
சொன்னது இன்னதென்று அவனுக்குத்
34 தெரியவில்லை. இவைகளை அவன் சொல்லு
கையில், ஒரு மேகம் வந்து அவர்கள்மேல்
நிழலிட்டது; அவர்கள் அந்த மேகத்துக்
35 குள் வருகையில் பயந்தார்கள். அப்
பொழுது: இவர் என் குமாரன், நான்
தெரிந்துகொண்டவர், இவருக்குச் செவி
கொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு
36 சத்தம் பிறந்தது. அந்தச் சத்தம் பிறக்
கவே இயேசு தனித்திருக்கக் கண்டார்கள்.
தாங்கள் கண்டவைகளில் ஒன்றையும்
அவர்கள் அந்நாட்களில் எவருக்கும் அறி
வியாமல் மௌனமாயிருந்தார்கள்.
37 மறுநாளில் அவர்கள் மலையிலிருந்திறங்
கினபோது, திரளான ஜனங்கள் அவருக்கு
38 எதிர்கொண்டு வந்தார்கள். ஜனக்கூட்டத்தி
லிருந்து ஒருவன் சத்தமிட்டு: போதகரே,
என் மகனைக் கண்ணோக்கவேண்டுமென்று
உம்மைக் கெஞ்சுகிறேன், அவன் எனக்கு
ஒரே பிள்ளை; ஒரு ஆவி அவனைப் பிடிக்கும், 39
பிடிக்கவே அலறுவான்; அவனுக்கு வலிப்பு
வரும், வாய் நுரைதள்ளும்; அது அவனை
விட்டு அகல்வது அரிது; அகலும்போதும்
அவனை நொறுக்கிவிடும். அதைத் துரத்தி 40
விடும்படி உம்முடைய சீஷரை வேண்டிக்
கொண்டேன்; அவர்களால் முடியாமற்
போயிற்று என்றான். இதைக் கேட்ட 41
இயேசு: விசுவாசமில்லாத மாறுபாடுள்ள
சந்ததியே, நான் எதுவரைக்கும் உங்களோ
டிருப்பேன், உங்களிடத்தில் பொறுமையா
யிருப்பேன், உன் மகனை இங்கே கொண்டுவா
என்றார். அவன் சமீபித்து வருகையில், 42
பேய் அவனைக் கீழே தள்ளி, அவனுக்கு
வலிப்பு வரப்பண்ணிற்று. இயேசுவோ
அந்த அசுத்த ஆவியை அதட்டி, பையனைக்
குணமாக்கி அவன் தகப்பனிடம் ஒப்புக்
கொடுத்தார். அப்பொழுது எல்லாரும் கடவு 43
ளின் மகத்துவத்தைக்கண்டு பிரமித்தார்கள்.
அவர் செய்த யாவையும் குறித்து அனை
வரும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்க,
அவர் தம்முடைய சீஷரிடம்: நீங்கள் இந்த 44
வார்த்தைகளைக் கவனித்துக் கேளுங்கள்;
மனுஷகுமாரன் மனுஷர் கைகளில்
ஒப்புக்கொடுக்கப்படுவார் என்றார். அவர் 45
சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை.
அவர்கள் உணர்ந்துகொள்ளாதபடி அது
மறைவாயிருந்தது. இந்தக் காரியத்தைப்
பற்றி அவரிடம் கேட்கவும் பயந்தார்கள்.
தங்களில் எவன் பெரியவன் என்கிற 46
விவாதம் அவர்களுக்குள் உண்டாயிற்று.
இயேசு அவர்கள் இருதயத்தின் யோசனையை 47
அறிந்து, ஒரு சிறுபிள்ளையை எடுத்து,
அதைத் தமதருகே நிறுத்தி: இந்தச் சிறு 48
பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்
கொள்ளுகிறவன் எவனும் என்னை ஏற்றுக்
கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளு
கிறவன் எவனும் என்னை அனுப்பினவரை
ஏற்றுக்கொள்ளுகிறான்; உங்களெல்லாரிலும்
எவன் சிறியவனோ அவனே பெரியவன்
என்று அவர்களிடம் சொன்னார்.
இதைக் கேட்ட யோவான்: ஐயரே, ஒரு 49
வன் உமது நாமத்தினாலே பேய்களைத் துரத்து
கிறதை நாங்கள் கண்டு, அவன் எங்க
ளோடு உம்மைப் பின்பற்றாதவனானபடி
யால், அவனைத் தடுக்கப் பார்த்தோம்
என்று அவரிடம் சொன்னான். இயேசு 50
அவனிடம்: தடுக்கவேண்டாம்; உங்களுக்கு
விரோதமாயிராதவன் உங்களுக்குச் சார்
பானவன் என்றார்.

51 அவர் எடுத்துக்கொள்ளப்படும் நாட்கள்
நிறைவேறும்பொழுது, எருசலேமுக்குப்
போகும்படி அவர் மன உறுதிக்கொண்டு,
தம் முகத்தை எருசலேமுக்கு நேரே திருப்பி
52 னார். அவர் தமக்கு முன்னாகத் தூதர்களை
அனுப்பினார். அவர்கள் போய், அவருக்கு
இடத்தை ஆயத்தம்பண்ணும்படி சமாரிய
ருடைய ஒரு கிராமத்திற்குட் சென்றார்கள்.
53 அவர் எருசலேமுக்குப் போக நோக்கி
யிருந்தபடியினால் அவ்வூரார் அவரை
54 ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய சீஷர்
யாக்கோபும் யோவானும் இதைக் கண்ட
போது: ஆண்டவரே, வானத்திலிருந்து
அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி
நாங்கள் சொல்வது உமக்குச் சித்தமா என்று
55 கேட்டார்கள். அவர் திரும்பி அவர்களை
56 அதட்டினார். பின்பு அவர்கள் வேறொரு
கிராமத்துக்குப் போனார்கள்.
57 அவர்கள் வழியிலே போகையில் ஒரு
வன் அவரிடம்: நீர் எங்கே போனாலும்
உம்மைப் பின்பற்றிவருவேன் என்றான்.
58 அதற்கு இயேசு அவனிடம்: நரிகளுக்குக்
குழிகளுண்டு, ஆகாயத்துப் பறவைகளுக்
குக் கூடுகளுண்டு, மனுஷகுமாரனுக்கோ
தலைசாய்க்க இடம் இல்லை என்றார்.
59 வேறொருவனை அவர் பார்த்து: என்னைப்
பின்பற்றிவா என்றார். அவனோ: முன்பு
நான் போய் என் தகப்பனை அடக்கம்
பண்ண எனக்கு உத்தரவு கொடும் என்
60 றான். அதற்கு இயேசு: மரித்தோர் தங்கள்
மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்; நீபோ
போய்க் கடவுள் ராஜ்யத்தைப் பிரசித்தப்
61 படுத்து என்றார். வேறொருவனும் அவரி
டம்: ஆண்டவரே, உம்மைப் பின்பற்று
வேன்; ஆயினும், முன்பு நான் போய்,
வீட்டிலுள்ளவர்களிடம் வழியனுப்பிக்
கொள்ள எனக்கு உத்தரவு கொடும் என்
62 றான். இயேசு அவனிடம்: கலப்பையில்
தன் கையை வைத்துப் பின்னிருக்கிறவை
களைத் திரும்பிப் பார்க்கிற எவனும் கடவுள்
ராஜ்யத்துக்கு அருகனல்ல என்றார்.

10 இவைகளுக்குப் பின்பு ஆண்டவர்
வேறே எழுபது பேரை நியமித்து, தாம்
போகவிருந்த ஒவ்வொரு ஊருக்கும் இடத்
திற்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்
2 டிரண்டு பேராக அனுப்பினார். அனுப்பும்
போது அவர் அவர்களிடம்: அறுப்பு மிகுதி,
வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால்
அறுப்பின் எஜமான் தமது அறுப்புக்கு
வேலையாட்களை அனுப்பும்படி அவரை
வேண்டிக்கொள்ளுங்கள். புறப்பட்டுப் 3
போங்கள்; ஓநாய்கள் மத்தியில் ஆட்டுக்
குட்டிகளை அனுப்பினாற்போல உங்களை
அனுப்புகிறேன். பணப்பையையாவது 4
வேறு பையையாவது பாதரட்சைகளையாவது
கொண்டுபோகவேண்டாம்; வழியிலே ஒரு
வரையும் வாழ்த்த நிற்கவேண்டாம். நீங்கள் 5
எந்த வீட்டினுட் சென்றாலும் இந்த வீட்
டுக்குச் சமாதானம் என்று முத
லாவது சொல்லுங்கள். [1]சமாதான சீலன் 6
அங்கேயிருந்தால், நீங்கள் கூறின சமா
தானம் அவனிடம் தங்கும், இல்லாதிருந்
தால் அது உங்களிடமே திரும்பிவிடும்.
அந்த வீட்டிலேயே நீங்கள் தங்கி அவர்கள் 7
வீட்டிலுள்ளதைச் சாப்பிடுங்கள்; வேலை
யாள் தன் கூலிக்குப் பாத்திரன். வீட்டுக்கு
வீடு போகவேண்டாம். நீங்கள் ஓர் 8
ஊருக்குப் போகும்போது அவர்கள் உங்களை
ஏற்றுக்கொண்டால், அவர்கள் உங்களுக்
குக் கொடுப்பவைகளைப் புசித்து, அவ் 9
விடத்திலுள்ள பிணியாளிகளைக் குணமாக்கி,
கடவுள் ராஜ்யம் உங்களுக்குச் சமீபித்திருக்
கிறதென்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.
ஓர் ஊருக்குப் போகும்போது அவர்கள் 10
உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதன்
வீதிகளிலே நீங்கள் போய்: எங்கள் கால் 11
களில் ஒட்டின உங்கள் ஊர்த்தூசியையும்
உங்களுக்கு விரோதமாய்த் துடைத்துப்
போடுகிறோம், ஆயினும் கடவுள் ராஜ்யம்
சமீபித்திருக்கிறதென்பதை அறிந்துகொள்
ளுங்கள் என்று சொல்லுங்கள். அந்த 12
நாளிலே சோதோமுக்கு நேரிடுவதைப்
பார்க்கிலும் அந்த ஊருக்கு நேரிடுவது
அதிகக் கடினமாகும் என்று உங்களுக்குச்
சொல்லுகிறேன். ஐயோ! கொராசினே, 13
ஐயோ! பெத்சாயிதாவே, உங்களில் செய்யப்
பட்ட வல்ல செயல்கள் தீருவிலும் சீதோ
னிலும் செய்யப்பட்டிருந்தால், அப்
பொழுதே இரட்டிலும் சாம்பலிலும் உட்
கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள். நியா 14
யத்தீர்ப்பில் தீருவுக்கும் சீதோனுக்கும்
நேரிடுவதைப்பார்க்கிலும்உங்களுக்குநேரிடு
வது அதிகக் கடினமாகும். நீயோ, 15
கப்பர்நகூமே, வானபரியந்தம் உயர்த்தப்
படுவாயோ? பாதாளபரியந்தம் தாழ்ந்து
போவாய். உங்களுக்குச் செவிகொடுக்கிற 16
வன் எனக்கே செவிகொடுக்கிறான்; உங்
களை அசட்டைபண்ணுகிறவன் என்னை
அசட்டைபண்ணுகிறான்; என்னை அசட்
டைபண்ணுகிறவனோ என்னை அனுப்பின
வரை அசட்டைபண்ணுகிறான் என்றார்.

[1] கிரேக்கு பாஷையில்: சமாதானத்தின் மகன்.

17 அந்த எழுபது பேரும் சந்தோஷத்தோடு
திரும்பிவந்து: ஆண்டவரே, உமது நாமத்
தில் பேய்களும் எங்களுக்குக் கீழ்ப்படிகின்
18 றன என்றார்கள். அவரோ: சாத்தான்
வானத்திலிருந்து மின்னலைப்போல் விழுகிற
19 தைக் கண்டேன். சர்ப்பங்களையும் தேள்
களையும் மிதிக்கவும், சத்துருவின் சகல
வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்க
ளுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன்;
20 ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தாது. ஆகி
லும், ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிற
தைப்பற்றி நீங்கள் சந்தோஷப்படாமல்
உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதி
யிருக்கிறதைப்பற்றிச் சந்தோஷப்படுங்கள்
என்றார்.

21 அந்நேரமே அவர் பரிசுத்த ஆவியில் அக
மகிழ்ந்து: பிதாவே, வானத்துக்கும் பூமிக்
கும் ஆண்டவரே, இவைகளை ஞானிகளுக்
கும் விவேகிகளுக்கும் மறைத்து, பாலக
ருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை
ஸ்தோத்திரிக்கிறேன்; ஆம், பிதாவே, இதுவே
உமது திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது.
22 சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்
கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர
வேறொருவனும் குமாரன் இன்னாரென்று
அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு
அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கி
றாரோ அவனும் தவிர வேறொருவனும் பிதா
23 இன்னாரென்று அறியான் என்றார். பின்பு
அவர் சீஷர் முகமாய்த் திரும்பி, அவர்களி
டம் தனித்து: நீங்கள் காண்கிறவைகளைக்
காணும் கண்கள் பாக்கியமுள்ளவைகள்.
24 அநேக தீர்க்கதரிசிகளும் ராஜாக்களும்
நீங்கள் காண்கிறவைகளைக் காணவும்,
நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும்
விரும்பியும், காணாமலும் கேளாமலும்
போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லு
கிறேன் என்றார்.

25 நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து,
அவரைச் சோதிக்கும்படி: போதகரே,
நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி
நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்
26 டான். அதற்கு அவர்: நியாயப்பிரமாணத்
தில் என்ன எழுதியிருக்கிறது? நீ வாசிக்கிறது
27 என்ன என்று கேட்க, | அவன்: உன் கடவு
ளாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருத
யத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும்
உன் முழு பலத்தோடும் உன் முழு மனத்
தோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில்
அன்புகூருவதுபோல உன் அயலானிடத்தி
லும் அன்புகூரவேண்டும் என்று எழுதியிருக்
28 கிறது என்றார். அவர்: நீ சொன்னது சரி,
அப்படியே செய், அப்பொழுது பிழைப்
பாய் என்றார். தான் கேள்வி கேட்டது 29
நியாயமென்று காண்பிக்க மனமாய் அவன்
இயேசுவினிடம்: எனக்கு அயலான் யார்
என்று கேட்டான். அதற்கு இயேசு: ஒரு 30
மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்
குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்
டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை
உரிந்துகொண்டு, அவனை அடித்து, குற்றுயி
ராக விட்டுப்போனார்கள். ஒரு ஆசாரியன் 31
தற்செயலாய் அந்த வழியே வந்து, அவனைக்
கண்டு, ஒரு பக்கமாய் விலகிப்போனான்.
அப்படியே ஒரு லேவியனும் அந்த இடத் 32
துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய்
விலகிப்போனான். பிரயாணஞ்செய்த சமா 33
ரியன் ஒருவனோ அவ்விடம் வரவே, அவ
னைக் கண்டு மனமுருகி, கிட்டப் போய் 34
அவன் காயங்களில் எண்ணெயும் திராட்ச
ரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, தான்
சவாரிசெய்த மிருகத்தின்மேல் அவனை
ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய் அவ
னைப் பராமரித்தான். மறுநாளிலே இரண்டு 35
திநாரியத்தை எடுத்து, சத்திரத்தான் கையில்
கொடுத்து: நீ இவனை விசாரித்துக்கொள்,
அதிகமாய் ஏதாகிலும் செலவழித்தால், நான்
திரும்பிவரும்போது அதை உனக்குத் தரு
வேன் என்றான். இப்படியிருக்க கள்ளர் 36
கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று
பேரில் எவன் அயலானாக உனக்குத்
தோன்றுகிறான் என்று கேட்க, அவன்: 37
அவனுக்கு இரக்கஞ்செய்தவனே என்றான்.
அப்பொழுது இயேசு: நீயும் போய் அப்
படியே செய் என்றார்.

அவர்கள் பிரயாணமாய்ப் போகையில் 38
அவர் ஒரு கிராமத்திற்குட் சென்றார்.
அங்கே மார்த்தாள் என்னும் ஒரு ஸ்திரீ
அவரைத் தன் வீட்டிலே வரவேற்று உப
சரித்தாள். அவளுக்கு மரியாள் என்னும் 39
ஒரு சகோதரி இருந்தாள்; அவள் ஆண்ட
வர் பாதத்தருகே உட்கார்ந்து, அவருடைய
வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.
மார்த்தாளோ அதிக வேலைசெய்வதில் மிகவும் 40
வருத்தப்பட்டு அவரிடம் வந்து: ஆண்ட
வரே, நான் தனியே வேலைசெய்யும்படி என்
சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக்
குறித்து உமக்குக் கவையில்லையா? எனக்கு
உதவிசெய்ய அவளுக்குச் சொல்லும்
என்றாள். ஆண்டவரோ அவளிடம்: 41
மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரி
யங்களைப்பற்றிக் கவலைப்பட்டுக் கலங்கு
கிறாய்; தேவையானது கொஞ்சமே, தேவை 42
யானது ஒன்றே; மரியாள் தன்னைவிட்டு

எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண
டாள் என்றார்.

11 அவர் ஒரு இடத்தில் ஜெபஞ்செய்து
கொண்டிருந்தார். ஜெபஞ்செய்து முடிக்
கவே, அவர் சீஷரில் ஒருவன்: ஆண்டவரே,
யோவான் தன் சீஷருக்குக் கற்றுக்கொடுத்
ததுபோல நீரும் ஜெபஞ்செய்ய எங்களுக்
குக் கற்றுக்கொடும் என்று அவரிடம்
2 கேட்டான். அதற்கு அவர்: நீங்கள் ஜெபஞ்
செய்யும்போது, பிதாவே, உம்முடைய
நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய
3 ராஜ்யம் வருவதாக; அன்றன்று வேண்டிய
எங்கள் ஆகாரத்தை அன்றன்று எங்களுக்
4 குத் தாரும்; எங்கள் பாவங்களை எங்களுக்கு
மன்னியும், நாங்களும் எங்களிடத்தில்
கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே;
எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாதிரும்
என்று சொல்லுங்கள் என்றார்.
5 பின்னும் அவர் அவர்களை நோக்கி: உங்
களில் ஒருவன் தனக்குச் சிநேகிதனாயிருக்
கிறவனிடம் நடுராத்திரியில் போய்: சிநேகி
6 தனே, என் சிநேகிதன் ஒருவன் வழிப்
பிரயாணமாய் என்னிடம் வந்திருக்கிறான்,
அவன்முன் வைக்கிறதற்கு என்னிடம்
ஒன்றுமில்லை, மூன்று அப்பங்களை நீ எனக்
குக் கடனாகத் தரவேண்டுமென்று கேட்டுக்
7 கொள்ள, உள்ளே இருக்கிறவன்: என்
னைத் தொந்தரவு செய்யாதே, கதவு பூட்டி
யாயிற்று, என் பிள்ளைகளும் என்னோடு
படுத்திருக்கிறார்கள், நான் எழுந்திருந்து
உனக்குத் தரமுடியாது என்று சொல்
8 வானோ? அவன் தனக்குச் சிநேகிதனா
யிருக்கிறதினிமித்தம் எழுந்து அவனுக்குக்
கொடாவிட்டாலும், அவன் வெட்கமின்றி
அலட்டுகிறதினிமித்தமாவது எழுந்திருந்து,
அவனுக்குத் தேவையானதைக் கொடுப்
பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
9 மேலும் நான் உங்களுக்குச் சொல்லு
கிறேன்: கேளுங்கள், அப்பொழுது உங்க
ளுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்
பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள்,
அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.
10 கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளு
வான்; தேடுகிறவன் கண்டடைவான்; தட்டு
11 கிறவனுக்குத் திறக்கப்படும். தன் மகன்
தன்னிடம் மீனைக் கேட்க, மீனுக்குப்
பதிலாகப் பாம்பைக் கொடுக்கும் தகப்பன்
12 உங்களில் உண்டோ? அல்லது முட்டை
யைக் கேட்டால் அவனுக்குத் தேளைக்
13 கொடுப்பதுண்டோ? நீங்கள் பொல்லாதவர்
களாயிருந்தும் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல
ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்க, பரலோ
கத்திலிருக்கிற பிதா தம்மிடம் கேட்கிறவர்
களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது
எவ்வளவு அதிக நிச்சயம் என்றார்.
பின்பு அவர் ஊமையாயிருந்த ஒரு 14
பேயைத் துரத்திக்கொண்டிருந்தார். பேய்
போய்விடவே ஊமையன் பேசினான்;
ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர் 15
களில் சிலர்: இவன் பேய்களின் தலைவனாகிய
பெயல்செபூலினாலே பேய்களை ஓட்டுகிறான்
என்றார்கள். வேறு சிலர் அவரைச் சோதிக் 16
கும்படி வானத்திலிருந்து ஒரு அடையா
ளத்தை அவரிடம் கேட்டார்கள். அவரோ 17
அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து, அவர்
களைப் பார்த்து: தனக்குத்தானே விரோத
மாய்ப் பிரிந்திருக்கும் எந்த ராஜ்யமும்
பாழாய்ப்போம், பிரிந்திருக்கும் எந்த வீடும்
விழுந்துபோம். சாத்தானும் தனக்குத்தானே 18
விரோதமாய்ப் பிரிந்திருந்தால், அவன் ராஜ்
யம் எப்படி நிலைநிற்கும்? பெயல்செபூலினால்
நான் பேய்களைத் துரத்துகிறேன் என்கிறீர்
களே. நான் பேய்களைப் பெயல்செபூலினாலே 19
துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை
யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால் உங்
களை நியாயந்தீர்ப்பவர்கள் அவர்களே. நான் 20
பேய்களைக் கடவுளுடைய விரலினாலே துரத்
தினாலோ, கடவுள் ராஜ்யம் உங்களிடம்
வந்தாயிற்று. ஆயுதந்தரித்த பலவான் தன் 21
அரமனையைக் காக்கிறபோது அவனுடைய
வைகள் பத்திரப்பட்டிருக்கும். அவனிலும் 22
அதிக பலவான் வந்து அவனை மேற்கொள்
வானேயாகில், அவன் நம்பியிருந்த சர்வா
யுதவர்க்கத்தையும் பறித்துக்கொண்டு, அவ
னிடம் கொள்ளையிட்ட பொருளைப் பங்கிடு
வான். என்னோடிராதவன் எனக்கு விரோதி, 23
என்னோடு கூட்டிச் சேர்க்காதவன் சிதறடிக்
கிறவன். அசுத்த ஆவி ஒரு மனுஷனை 24
விட்டுப் போகும்போது, வறண்ட இடங்
களில் அலைந்து இளைப்பாறுதல் தேடியும்
கண்டடையாமல்: நான் விட்டுவந்த என்
வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று
சொல்லி, | வந்து, அது பெருக்கி ஜோடிக் 25
கப்பட்டிருக்கக் கண்டு, திரும்பிப் போய்த் 26
தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவி
களைக் கூட்டிக்கொண்டுவந்து, உட்புகுந்து,
அங்கே குடியிருக்கும். அப்பொழுது அந்த
மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன்
பின்னிலைமை அதிகக் கேடுள்ளதாகும்
என்றார்.
அவர் இவைகளைச் சொல்லுகையில் 27
ஜனக்கூட்டத்தில் ஒரு ஸ்திரீ அவரை நோக்கி:
உம்மைச் சுமந்த கர்ப்பமும் நீர் பாலுண்ட

முலைகளும் பாக்கியமுள்ளவைகளென்று
28 சத்தமிட்டுச் சொன்னாள். அவரோ: சரி
தான்; ஆயினும், கடவுளின் வார்த்தையைக்
கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்
களே பாக்கியவான்கள் என்றார்.
29 ஜனங்கள் திரள்திரளாய்க் கூடிவந்து
கொண்டிருக்கிறபொழுது அவர் பேசத்
தொடங்கி: இந்தச் சந்ததியார் பொல்லாத
வர்கள், அடையாளம் தேடுகிறார்கள்; ஆயி
னும், யோனாவின் அடையாளத்தையேயன்றி
வேறே அடையாளத்தை இவர்களுக்குக்
30 கொடுப்பதில்லை. யோனா நினிவே பட்
டணத்தாருக்கு அடையாளமானான். அது
போல மனுஷகுமாரனும் இந்தச் சந்ததிக்கு
31 அடையாளமாவார். தென்தேசத்து அரசி
இச்சந்ததியின் மனுஷரோடெழுந்து நின்று,
நியாயத்தீர்ப்பில் இவர்கள்மேல் குற்றஞ்
சாட்டுவாள். இவள் பூமியின் கடையாந்
தரங்களிலிருந்து சாலொமோனின் ஞானத்
தைக் கேட்க வந்தாள். இதோ, இங்கிருக்
கிறவர் சாலொமோனிலும் பெரியவர்.
32 நினிவே பட்டணத்தார் யோனாவின் பிரசங்
கத்துக்கிணங்கி மனந்திரும்பினார்களே;
அவர்கள் இச்சந்ததியாரோடு நியாயத்தீர்ப்
பில் எழுந்துநின்று இவர்கள்மேல் குற்றஞ்
சாட்டுவார்கள். இதோ, இங்கிருக்கிறவர்
யோனாவிலும் பெரியவர்.
33 ஒருவனும் விளக்கைக் கொளுத்தி மறை
விடத்திலாவது மரக்காலின் கீழேயாவது
வைக்காமல், உள்ளே வருகிறவர்களுக்கு
வெளிச்சம் தெரியும்படி அதை விளக்குத்
34 தண்டின்மேல் வைப்பான். உன் கண்ணே
உன் சரீரத்தின் விளக்கு. உன் கண் தெளி
வாயிருந்தால், உன் முழுச்சரீரத்திலும்
வெளிச்சம் இருக்கும்; உன் கண் பொல்லாத
தாயிருந்தால், உன் சரீரத்தில் இருள் இருக்
35 கும். இப்படியிருக்க, உன்னிலுள்ள
வெளிச்சம் இருளாயிருக்குமோ என்பதைக்
36 கவனித்துக்கொள். ஒரு பாகத்திலும் இரு
ளில்லாமல் உன் சரீரம் முழுவதும் வெளிச்ச
மாயிருந்தால், விளக்கு தன் பிரகாசத்தினால்
உனக்கு வெளிச்சம் தருகிறதுபோல உன்
சரீரம் வெளிச்சம் நிறைந்திருக்கும் என்றார்.
37 அவர் இப்படிப் பேசிக்கொண்டிருக்கை
யில், தன்னுடனேகூட அவர் போஜனம்
பண்ணவேண்டுமென்று பரிசேயன் ஒருவன்
அவரைக் கேட்டுக்கொண்டான்; அவர்
38 உள்ளே வந்து உட்கார்ந்தார். அவர் போஜ
னம் பண்ணுகிறதற்குமுன் கை கால் கழு
வாததைப் பரிசேயன் கண்டு ஆச்சரியப்
39 பட்டான். ஆண்டவரோ அவனிடம்:
பாருங்கள், பரிசேயராகிய நீங்கள் போஜன
பான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச்
சுத்தமாக்குகிறீர்கள், உங்கள் உட்புறத்
திலோ கொள்ளையும் பொல்லாப்பும் நிறைந்
திருக்கின்றன. மதிகேடரே, வெளிப்புறத்தை 40
உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்
டாக்கவில்லையோ? உங்களுக்குள்ளவற்றில் 41
தர்மம் கொடுங்கள், அப்பொழுது, சகலமும்
உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்.
ஐயோ! பரிசேயரே, புதினா, மருக் 42
கொழுந்து முதலிய சகல பூண்டுகளிலும்
தசமபாகம் செலுத்தி, நியாயத்தையும்
கடவுள் அன்பையும் அசட்டையாய் விட்டு
விடுகிறீர்கள்; இவைகளையும் செய்யவேண்
டும், அவைகளையும் விடாதிருக்கவேண்டும்.
ஐயோ! பரிசேயரே, ஜெபாலயங்களில் முதல் 43
ஆசனத்தையும், சந்தை வெளிகளில் வந்த
னங்களையும் விரும்புகிறீர்கள். ஐயோ! 44
மறைந்திருக்கிற பிரேதக்குழிகளைப்போ
லிருக்கிறீர்கள், அவைகள்மேல் நடக்கிற
மனுஷருக்கு அவைகள் தெரியாதிருக்
கின்றன என்றார்.
அதைக் கேட்ட நியாயசாஸ்திரி ஒருவன் 45
அவரிடம்: போதகரே, நீர் இப்படிச்
சொல்லி எங்களையும் அவமானப்படுத்து
கிறீரே என்றான். அதற்கு அவர்: நியாய 46
சாஸ்திரிகளே, ஐயோ! சுமக்கிறதற்கரிய
சுமைகளை மனுஷர்மேல் சுமத்துகிறீர்கள்;
நீங்களோ அந்தச் சுமைகளை ஒரு விரலினா
லும் தொடமாட்டீர்கள். ஐயோ! உங்கள் 47
பிதாக்கள் கொலைசெய்த தீர்க்கதரிசிகளுக்
குக் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள். ஆகை 48
யால் உங்கள் பிதாக்களுடைய கிரியை
களுக்கு நீங்களும் சாட்சிகளாகி உடன்
படுகிறீர்கள். அவர்கள் கொன்றார்கள்,
நீங்கள் கட்டுகிறீர்கள். அதினிமித்தமே: 49
நான் தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலரை
யும் அவர்களிடம் அனுப்புவேன்; அவர்
களில் சிலரைக் கொலைசெய்து, சிலரைத்
துன்பப்படுத்துவார்கள்; இப்படிச் செய்வதி 50
னால், ஆபேலின் இரத்தம்முதல் பலிபீடத்
துக்கும் தேவாலயத்துக்கும் நடுவே கொலை
யுண்ட சகரியாவின் இரத்தம்வரைக்கும்,
உலகத்தோற்றமுதல் சிந்தப்பட்ட சகல
தீர்க்கதரிசிகளின் இரத்தமும் இந்தச்
சந்ததியினிடம் கேட்கப்படும் என்று தேவ
ஞானம் சொல்லியிருக்கிறது. நிச்சயமாகவே 51
இந்தச் சந்ததியினிடம் அது கேட்கப்படும்
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
ஐயோ! நியாயசாஸ்திரிகளே, அறிவின் திறவு 52
கோலை எடுத்துவிட்டீர்கள்; நீங்கள் உட்பிர
வேசித்ததில்லை, பிரவேசிக்கிறவர்களையும்
தடுத்துவிட்டீர்கள் என்றார்.

53 அவர் அவ்விடம்விட்டுப் போனபோது,
வேதபாரகரும் பரிசேயரும் அவரைக்
கடுமையாய் நெருக்கி, வாய்மொழிகளில்
54 அவரை அகப்படுத்த வேண்டுமென்று | பல
காரியங்களைப்பற்றிப் பேசும்படி அவரைத்
தந்திரமாய்த் தூண்ட ஆரம்பித்தார்கள்.

12 அச்சமயத்தில் ஆயிரக்கணக்கான
ஜனங்கள் ஒருவரையொருவர் மிதிக்கத்தக்க
தாய்க்கூடிவந்திருக்கையில், அவர் முதலாவது
தம்முடைய சீஷரோடு பேசத்தொடங்கி:
பரிசேயருடைய மாயமாகிய புளித்தமாவுக்கு
2 எச்சரிக்கையாயிருங்கள். வெளியாக்கப்
படாத மறைபொருளுமில்லை, அறியப்
3 படாத இரகசியமுமில்லை. ஆனபடியால்,
நீங்கள் இருளிலே பேசினது எதுவோ அது
வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள்
அறைகளில் காதிலே சொன்னது எதுவோ
4 அது வீடுகளின்மேலிருந்து கூறப்படும். என்
சிநேகிதராகிய உங்களுக்கு நான் சொல்லு
கிறேன்: சரீரத்தைக் கொலைசெய்து, அதன்
பின் அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்
5 லாதவர்களுக்கு அஞ்சவேண்டாம். நீங்கள்
இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று
உங்களுக்குக் காண்பிக்கிறேன்; கொலை
செய்தபின்பு, நரகத்திலே தள்ள அதிகார
முள்ளவருக்குப் பயப்படுங்கள்; ஆம், அவ
ருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச்
6 சொல்லுகிறேன். இரண்டு காசுக்கு ஐந்து
அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள்
அல்லவா? ஆயினும் அவற்றில் ஒன்றேனும்
கடவுள் சந்நிதியில் மறக்கப்படுவதில்லை.
7 உங்கள் தலைமயிரெல்லாமே எண்ணப்பட்டி
ருக்கிறது. பயப்படவேண்டாம், அநேக
அடைக்கலான் குருவிகளிலும் நீங்கள்
8 விசேஷமானவர்கள். அன்றியும் நான் உங்க
ளுக்குச் சொல்லுகிறேன்: மனுஷர்முன்
என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ
அவனை மனுஷகுமாரனும் கடவுளின் தூதர்
9 முன் அறிக்கைபண்ணுவார். மனுஷர்முன்
என்னை மறுதலிக்கிறவன் கடவுளின் தூதர்
10 முன் மறுதலிக்கப்படுவான். எவனாகிலும்
மனுஷகுமாரனுக்கு விரோதமாய் ஒரு
வார்த்தை சொன்னால் அது அவனுக்கு
மன்னிக்கப்படும்; பரிசுத்த ஆவிக்கு விரோத
மாய்த் தூஷணம் பேசுகிறவனுக்கோ மன்
11 னிக்கப்படாது. ஜெபாலயங்களுக்கும்
துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும்
முன் உங்களைக்கொண்டுபோய் விடும்போது,
எப்படி, என்ன உத்தரவு சொல்லுவோ
மென்றும், எதைப் பேசுவோமென்றும் கவ
12 லைப்படவேண்டாம். நீங்கள் பேசவேண்
டியவைகளைப் பரிசுத்தஆவி அந்நேரத்திலே
உங்களுக்குப் போதிப்பார் என்றார்.
ஜனக்கூட்டத்தில் ஒருவன் அவரைப் 13
பார்த்து: போதகரே, சுதந்தர சொத்தைப்
பாகம் பிரித்து, என் பங்கை எனக்குத் தரும்
படி என் சகோதரனுக்குச் சொல்லும் என்று
கேட்டுக்கொண்டான். அவர்: மனுஷனே, 14
என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும்
பங்கிடுகிறவனாகவும் வைத்தவன் யார் என்று
சொல்லி, | அவர்களிடம்: எவ்விதப் பொரு 15
ளாசைக்கும் இடங்கொடாதபடி எச்சரிக்
கையாயிருக்கப் பாருங்கள். ஒருவனுடைய
ஜீவன் அவனுடைய செல்வப் பெருக்கத்தில்
இல்லை என்றார். ஒரு உவமையையும் அவர் 16
களுக்குச் சொன்னார்: ஐசுவரியமுள்ள ஒரு
வனுடைய நிலம் நன்றாய் விளைந்தது.
அதைக் கண்டு அவன் தனக்குள் சிந்தனை 17
செய்து: நான் என்ன செய்வேன்? என் விளை
பொருட்களைச் சேர்த்துவைக்கிறதற்கு இடம்
இல்லையே; ஒன்று செய்வேன், என் களஞ்சி 18
யங்களை இடித்துப் பெரிதாய்க் கட்டி,
என் தானியம் யாவையும் என் பொருள்
களையும் அங்கே சேர்த்துவைத்து, பின்பு: 19
ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்
களுக்கு அநேக பொருள்கள் சேர்த்து
வைக்கப்பட்டிருக்கின்றன; நீ சுகவாசி
யாய்ப் புசித்துக் குடித்துக் களிப்பாயிரு
என்று என் ஆத்துமாவிடம் சொல்லுவேன்
என்று சொல்லிக்கொண்டான். கடவுளோ 20
அவனிடம்: மதிகேடனே, இந்த இராத்
திரியிலே உன்னிடமிருந்து உன் உயிரை
வாங்கிவிடுவார்கள்; அப்பொழுது நீ
சேர்த்துவைத்தது யாருடையதாகும் என்
றார். கடவுளிடத்தில் ஐசுவரியவானாயிரா 21
மல், தனக்காகவே பொருளைச் சேர்க்கிறவன்
இப்படியே இருக்கிறான் என்றார்.
பின்னும் அவர் தம்முடைய சீஷரிடம்: 22
இப்படியிருப்பதால், உங்களுக்குச் சொல்லு
கிறேன், எதை உண்போமென்று உங்கள்
உயிருக்காகவும், எதை உடுப்போமென்று
உங்கள் உடலுக்காகவும் கவலைப்படா
திருங்கள். உணவைவிட உயிரும், உடை 23
யைவிட உடலும் முக்கியம். காகங்களைக் 24
கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்
கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, அவை
களுக்குப் பண்டசாலையுமில்லை, களஞ்சியமு
மில்லை, ஆயினும் அவைகளையும் கடவுள்
பிழைப்பூட்டுகிறார் பறவைகளிலும்
நீங்கள் எவ்வளவோ விசேஷமானவர்கள்.
கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் 25
வளர்த்தியோடு ஒரு முழத்தைக் கூட்டு
வான்? இவ்விதமாய், மிகவும் அற்பமான 26

காரியத்தையும் உங்களால் செய்யமுடியாதி
ருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் கவலைப்
27 படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்களைக்
கவனித்துப்பாருங்கள்; அவைகள் நூற்கிறது
மில்லை நெய்கிறதுமில்லை; ஆயினும், சாலொ
மோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும்
இவைகளில் ஒன்றைப்போல் உடுத்தியிருந்த
தில்லை என்று உங்களுக்குச் சொல்லுகி
28 றேன். இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்
பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குக்
கடவுள் இவ்விதமாய் உடுத்தினானால்,
அற்பவிசுவாசிகளே, உங்களுக்கு உடுத்து
29 வது அதிக நிச்சயமல்லவா? ஆதலால் எதை
உண்போமோ, எதைக் குடிப்போமோ
என்று நீங்கள் சந்தேகப்பட்டுத் தேட
30 வேண்டாம்; இவற்றையெல்லாம் உலகத்தி
லுள்ள புறஜாதியார் நாடித்தேடுகிறார்கள்;
இவை உங்களுக்குத் தேவையென்பது
31 உங்கள் பிதாவுக்குத் தெரியும். அவருடைய
ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது
இவைகள் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்
32 படும். பயப்படாதே, சிறு மந்தையே,
உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுப்பது
33 உங்கள் பிதாவுக்குப் பிரியம். உங்களுக்கு
உள்ளவைகளை விற்றுத் தர்மங்கொடுங்கள்.
பழமையாய்ப் போகாத பணப்பைகளையும்
பரலோகத்திலே குறையாத ஐசுவரியத்தை
யும் உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள்.
அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி
34 கெடுக்கிறதுமில்லை. உங்கள் ஐசுவரியம்
எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இரு
தயமும் இருக்கும்.
35 உங்கள் அரைகள் கட்டியிருக்கவேண்
டும், உங்கள் விளக்குகள் எரிந்துகொண்
36 டிருக்கவேண்டும். தங்கள் எஜமான் கலி
யாண விருந்திலிருந்து வந்து தட்டும்போது,
அவனுக்கு உடனே திறக்கும்படி எதிர்
பார்த்துக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்
37 பாயிருங்கள். எஜமான் வரும்போது விழித்
திருக்கக் காணும் ஊழியக்காரரே பாக்கிய
வான்கள்; அவன் அரைகட்டிக்கொண்டு,
அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, அவர்க
ளண்டை வந்து, பணிவிடை செய்வான்
என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லு
38 கிறேன். அவன் இரண்டாம் ஜாமத்திலாவது
மூன்றும் ஜாமத்திலாவது வந்து, அவர்கள்
அப்படியே இருக்கக் கண்டால், அவ்வூழி
39 யக்காரர் பாக்கியவான்கள். திருடன் இன்ன
நேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்
குத் தெரிந்திருந்தால், தன் வீட்டைக் கன்ன
மிடவொட்டான் என்பதை அறிந்துகொள்
40 ளுங்கள். அப்படியே நீங்கள் நினையாத நாழி
கையில் மனுஷகுமாரன் வருவார்; ஆகை
யால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார்.
அப்பொழுது பேதுரு அவரிடம்: ஆண் 41
டவரே, இந்த உவமையை எங்களுக்குச்
சொல்லுகிறீரோ, எல்லாருக்கும் சொல்லுகி
றீரோ என்று கேட்க, | ஆண்டவர்: தன் 42
ஊழியருக்கு ஏற்ற வேளையில் படியளப்
பதற்கு எஜமான் அவர்கள்மேல் அதிகாரி
யாக நியமிக்கும் உண்மையும் விவேகமு
முள்ள உக்கிராணக்காரன் யார்? எஜமான் 43
வரும்போது அப்படியே செய்யக் காணப்
படும் ஊழியக்காரன் பாக்கியவான். தனக் 44
குள்ள யாவற்றின்மேலும் அவனை நியமிப்
பான் என்று உண்மையாகவே உங்களுக்
குச் சொல்லுகிறேன். அந்த ஊழியக்காரனோ: 45
என் எஜமான் வர நாள் செல்லும் என்று
தன் உள்ளத்திலே சொல்லிக்கொண்டு,
வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும்
அடிக்கவும், புசித்துக் குடித்து வெறிக்கவும்
தலைப்பட்டால், அந்த ஊழியக்காரன் 46
எதிர்பாராத நாளிலும் அறியாத நாழிகை
யிலும் அவன் எஜமான் வந்து, அவனைத்
துண்டித்து, உண்மையில்லாதவர்களோடே
அவனுக்குப் பங்கை நியமிப்பான். தன் 47
எஜமானுடைய சித்தத்தை அறிந்தும்
ஆயத்தமாயிராமலும், அவன் சித்தத்தின்படி
செய்யாமலும்போன ஊழியக்காரனுக்கு
அநேக அடிகள் கிடைக்கும். அறியாதவனு 48
யிருந்து அடிகளுக்கு ஏதுவானவைகளைச்
செய்தவனுக்கோ சில அடிகள் கிடைக்கும்.
எவனிடம் அதிகம் கொடுக்கப்படுகிறதோ
அவனிடம் அதிகம் கேட்கப்படும்; எவனி
டம் அதிகம் ஒப்புவிப்பார்களோ அவனி
டம் இன்னும் அதிகம் கேட்பார்கள்.
பூமியின்மேல் அக்கினியைப் போட வந் 49
தேன்; ஏற்கனவே அது பற்றி எரிந்திருக்க
எவ்வளவோ விரும்புகிறேன். ஆகிலும் நான் 50
பெறவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது
முடிந்து தீருமளவும் எனக்கு எவ்வளவோ
மனநெருக்கம். சமாதானத்தைப் பூமியில் 51
கொடுக்க வந்தேன் என்று நினைக்கிறீர்
களோ? அல்ல, பிரிவினையையே என்று
உங்களுக்குச் சொல்லுகிறேன். எப்படி 52
யெனில், இதுமுதல் ஒரே வீட்டில் ஐந்து
பேர் பிரிந்திருப்பார்கள்; இரண்டுபேருக்கு
விரோதமாய் மூன்றுபேரும், மூன்றுபேருக்கு
விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்
பார்கள். தகப்பன் மகனுக்கும் மகன் தகப் 53
பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்
கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்
கும் விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள்
என்றார்.

54 பின்னும் அவர் ஜனங்களிடம்: மேற்கே
மேகம் எழும்புகிறதை நீங்கள் காணும்
போது, மழை பெய்யுமென்று உடனே
சொல்லுகிறீர்கள்; அந்தப்படியே பெய்யும்.
55 தென்றல் அடிக்கும்போது உஷ்ணம் உண்
டாகுமென்று சொல்லுகிறீர்கள்; அப்படியே
56 உண்டாகும். மாயக்காரரே, பூமியின் தோற்
றத்தையும் வானத்தின் தோற்றத்தையும்
நிதானித்தறிய உங்களுக்குத் தெரியுமே,
இந்தக் காலத்தையோ நிதானித்தறியாமற்
57 போகிறதெப்படி? நியாயம் இன்னதென்று
நீங்களே தீர்த்துக்கொள்ளாமலிருக்கிற
58 தென்ன? உன் எதிரி உன்னை நியாயாதிபதி
முன் இழுத்துக்கொண்டுபோகாமலும், நியா
யாதிபதி உன்னைச் சேவகனிடம் ஒப்புக்
கொடாமலும், சேவகன் உன்னைச் சிறையில்
வைக்காமலுமிருக்கும்படி, நீ உன் எதிரி
யோடு அதிகாரியினிடம் போகிற வழியி
லேயே அவனோடு சமாதானஞ்செய்து
59 கொள்ளப் பிரயாசப்படு. நீ கடைசிக்
காசைக் கொடுத்துத் தீர்க்குமட்டும் சிறையி
லிருந்து வெளியேறுவதேயில்லை என்று
உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

13 பிலாத்து சில கலிலேயருடைய இரத்
தத்தை அவர்களுடைய பலிகளோடே கலந்
திருந்தான்; அந்த வேளையிலே அங்கே இருந்
தவர்களில் சிலர் அந்தச் செய்தியை அவ
2 ருக்கு அறிவித்தார்கள். அவர் அதைக்
கேட்டு: அந்தக் கலிலேயருக்கு இவைகள்
நேரிட்டதினாலே, எல்லாக் கலிலேயரிலும்
அவர்கள் பெரும்பாவிகளென்று நினைக்கி
3 றீர்களோ? அப்படியல்லவென்று உங்களுக்
குச் சொல்லுகிறேன், நீங்கள் மனந்திரும்பா
மற்போனால் அப்படியே எல்லாரும்
4 அழிந்துபோவீர்கள். சீலோவாமிலே கோபு
ரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்
றதே; அவர்கள் எருசலேமில் குடியிருக்கிற
மனுஷரெல்லாரிலும் பெருங்குற்றவாளிக
5 ளென்று நினைக்கிறீர்களோ? அப்படியல்ல
வென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்;
நீங்கள் மனந்திரும்பாமற்போனால் அப்
படியே எல்லாரும் அழிந்துபோவீர்கள்
என்றார்.
6 இந்த உவமையையும் அவர்களுக்குச்
சொன்னார்: ஒருவன் தன் திராட்சத்தோட்
டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்;
அவன் வந்து அதிலே கனியைத் தேடின
7 போது ஒன்றையும் காணவில்லை. அப்
பொழுது அவன் தோட்டக்காரனைக் கூப்
பிட்டு: இதோ, மூன்று வருஷமாய் இந்த
அத்திமரத்திலே கனியைத் தேடிவருகிறேன்,
ஒன்றையும் காணவில்லை, இதை வெட்டிப்
போடு; இது ஏன் நிலத்தை வியர்த்தமாக்க
வேண்டும் என்றான். அதற்கு அவன்: 8
ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்;
நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்
போடுவேன்; அடுத்த வருஷத்தில் கனி 9
கொடுத்தால் நல்லது, கொடாவிட்டால்
இதை வெட்டிப்போடலாம் என்று சொன்
னான் என்றார்.
ஓய்வுநாளில் அவர் ஒரு ஜெபாலயத்தில் 10
போதித்துக்கொண்டிருந்தார். பிணியுண் 11
டாக்கும் ஆவி பதினெட்டு வருஷமாய்ப்
பிடித்திருந்த ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள்.
அவள் கொஞ்சமேனும் நிமிரமுடியாத
கூனி. இயேசு அவளைக் கண்டு, தம்மிடம் 12
அழைத்து: அம்மா, உன் பிணியினின்று
விடுபட்டாய் என்று சொல்லி, அவள்மேல் 13
தமது கைகளை வைத்தார்; உடனே அவள்
நிமிர்ந்து கடவுளை மகிமைப்படுத்தினாள்.
ஜெபாலயத்தலைவனோ, இயேசு ஓய்வுநாளிலே 14
சொஸ்தமாக்கினதைக் கண்டு கோப
மடைந்து, ஜனங்களை நோக்கி: வேலை செய்
கிறதற்கு ஆறுநாள் உண்டே, அந்நாட்
களிலே நீங்கள் வந்து குணமாக்கிக்கொள்
ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச் செய்ய
லாகாது என்றான். ஆண்டவரோ அவனி 15
டம்: மாயக்காரரே, உங்களில் ஒவ்வொரு
வனும் ஓய்வுநாளில் தன் மாட்டையாவது
தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து
அவிழ்த்துக்கொண்டுபோய், அதற்குத் தண்
ணீர் காட்டுகிறதில்லையா? இவள் ஆபிரகா 16
மின் மகள்; இதோ, பதினெட்டு வருஷ
மாய்ச் சாத்தானால் கட்டப்பட்டிருந்தவள்,
இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து
அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார்.
அவர் அப்படிச் சொன்னபோது, அவரை 17
விரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்
டார்கள். ஜனங்களெல்லாரும் அவர் செய்த
சகல மகிமையான செய்கைகளையும் பற்றிச்
சந்தோஷித்தார்கள்.
அப்போது அவர்: கடவுள் ராஜ்யம் 18
எதற்கொப்பாகும்? அதை எதற்கு ஒப்பிடு
வேன்? அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாகும்; 19
அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் தோட்
டத்திலே போட்டான்; அது வளர்ந்து மர
மாயிற்று; ஆகாயத்துப் பறவைகள் அதன்
கிளைகளில் வந்தடைந்தன என்றார். மேலும் 20
அவர்: கடவுள் ராஜ்யத்தை நான் எதற்கு
ஒப்பிடுவேன்? அது புளித்தமாவுக்கு ஒப்பா 21
கும். ஒரு ஸ்திரீ அதை எடுத்து, மூன்றுபடி
மாவில் புதைத்துவைத்தாள், அது முழு
தும் புளித்தது என்றார்.

22 அவர் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப்
போகும்போது, ஊர்தோறும் கிராமங்
தோறும் உபதேசம்பண்ணிக்கொண்டு
23 போகையில், ஒருவன் அவரிடம் வந்து:
ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள்
சிலர்தானே என்று கேட்டான். அவர்
24 அவர்களிடம்: இடுக்கமான வாசல்வழியாய்
உட்செல்லப் பிரயாசப்படுங்கள்; அநேகர்
உட்செல்ல வகைதேடுவார்கள், ஆயினும்
அவர்களால் முடியாமற்போகுமென்று உங்
25 களுக்குச் சொல்லுகிறேன். வீட்டெஜமான்
எழுந்து கதவைப் பூட்டினபின்பு, நீங்கள்
வெளியே நின்று: ஆண்டவரே, எங்களுக்
குத் திறக்கவேண்டுமென்று சொல்லிக்
கதவைத் தட்ட ஆரம்பிக்கும்போது, அவர்:
நீங்கள் எங்கிருந்து வந்தவர்களோ தெரி
யாது என்று உங்களுக்குச் சொல்லுவார்.
26 அப்பொழுது நீங்கள்: நாங்கள் உமது சமு
கத்தில் போஜனபானம்பண்ணினோமே, நீர்
எங்கள் வீதிகளில் போதகம்பண்ணினீரே
என்று சொல்லத் தொடங்குவீர்கள்.
27 அவரோ: நீங்கள் எங்கிருந்து வந்தவர்களோ
தெரியாது; அக்கிரமச் செய்கைக்காரராகிய
நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்று
28 போங்கள் என்று சொல்லுவார். ஆபிரகா
மும் ஈசாக்கும் யாக்கோபும் சகல தீர்க்க
தரிசிகளும் கடவுள் ராஜ்யத்திலிருக்கவும்,
நீங்களோ புறம்பே தள்ளப்பட்டிருக்கவும்
நீங்கள் காணும்போது, அங்கே அழுகை
29 யும் பற்கடிப்புமாயிருக்கும். கிழக்கிலும்
மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமிருந்து
ஜனங்கள் வந்து, கடவுள் ராஜ்யத்தில் பந்தி
30 யிருப்பார்கள். பிந்தினோர் சிலர் முந்தினோ
ராவார், முந்தினோர் சிலர் பிந்தினோராவார்
என்றார்.
31 அந்நேரத்தில் சில பரிசேயர் அவரிடம்
வந்து: நீர் இவ்விடம்விட்டுப் போய்விடும்,
ஏரோது உம்மைக் கொல்ல மனமாயிருக்கி
32 றான் என்று சொல்ல, | அவர்: நான் இன்
றைக்கும் நாளைக்கும் பேய்களைத் துரத்தி,
வியாதியுள்ளவர்களைக் குணமாக்கி, மூன்றாம்
நாளில் முற்றுப்பெறுவேனென்று நீங்கள்
போய் அந்த நரியினிடம் சொல்லுங்கள்.
33 இன்றும் நாளையும் மறுநாளும் நான் நட
மாடவேண்டும்; எருசலேமுக்கு வெளியே
தீர்க்கதரிசி ஒருவன் மடிந்துபோகலாகாது.
34 எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக்
கொலைசெய்து, உன்னிடம் அனுப்பப்பட்ட
வர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன்
குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச்
சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்
தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச்
சேர்த்துக்கொள்ள மனமாயிருந்தேன்; நீங்
களோ மனமில்லாதிருந்தீர்கள். உங்கள் வீடு 35
உங்களுக்கே விட்டுவிடப்படும்; கர்த்த
ருடைய நாமத்தில் வருகிறவர் ஆசீர்வதிக்கப்
பட்டவர் என்று நீங்கள் சொல்லும் நாள்
வருமளவும் என்னைக் காணாதிருப்பீர்கள்
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்
என்றார்.

பரிசேயர் தலைவரில் ஒருவன் வீட்டுக்கு 14
அவர் ஓய்வுநாளில் போஜனம்பண்ணப்
போயிருந்தபோது, அவர்கள் அவரைக்
கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.
நீர்க்கோவை வியாதியுள்ள ஒருவன் அவர் 2
முன் இருந்தான். இயேசு நியாயசாஸ்திரி 3
களையும் பரிசேயரையும் பார்த்து: ஓய்வு
நாளில் குணமாக்குவது நியாயமா நியாய
மில்லையா என்று கேட்டார். அவர்களோ 4
பேசாமலிருந்தார்கள். அப்பொழுது அவர்
அவனைப் பிடித்துக் குணமாக்கி அனுப்பி
விட்டு, | அவர்களை நோக்கி: உங்களில் 5
ஒருவனுடைய மகனாவது மாடாவது
கிணற்றிலே விழுந்தால், ஓய்வுநாளென்றா
லும் அவன் உடனே தூக்கிவிடானோ என்
றார். அதற்குப் பதிற்சொல்ல அவர்களால் 6
முடியாமற்போயிற்று.
விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந் 7
தியில் முதன்மையான இடங்களைத் தெரிந்து
கொண்டதை அவர் கவனித்து, அவர்க
ளுக்கு உபமானமாக: ஒருவன் உன்னைக் 8
கலியாணத்துக்கு அழைத்திருந்தால், பந்தி
யில் முதன்மையான இடத்தில் உட்கா
ராதே. உன்னிலும் மதிப்புள்ளவனை அவன்
அழைத்திருந்தால், உன்னையும் அவனையும் 9
அழைத்தவன் உன்னிடம் வந்து: இவருக்கு
இடங்கொடு என்பான்; அப்பொழுது நீ
வெட்கத்தோடே கடைசி இடத்திற்குப்
போகவேண்டியதாகும். நீ அழைக்கப்பட் 10
டிருக்கும்போது, போய்க் கடைசி இடத்தில்
உட்காரு. அப்பொழுது உன்னை அழைத்
தவன் வந்து: சிநேகிதனே, உயர்ந்த இடத்
துக்கு வாரும் என்று சொல்லும்போது
உன்னுடனே பந்தியிருக்கிறவர்களுக்கு முன்
பாக நீ கனம்பெறுவாய். தன்னைத்தான் 11
உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படு
வான், தன்னைத்தான் தாழ்த்துகிறவனோ
உயர்த்தப்படுவான் என்று சொன்னார்.
அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனி 12
டம்: நீ பகலிலாவது இரவிலாவது விருந்து
செய்யும்போது, உன் சிநேகிதரையாகிலும்,
உன் சகோதரரையாகிலும், உன் பந்துஜனங்
களையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தா

ரையாகிலும் அழைக்கவேண்டாம்; அழைத்
தால் அவர்களும் உன்னைத் திரும்ப அழைப்
பார்கள், அப்பொழுது உனக்குக் கைம்
13 மாறு கிடைத்துத்தீரும். நீ விருந்துசெய்யும்
போது, ஏழைகளையும் ஊனரையும் சப்பாணி
14 களையும் குருடரையும் அழை; அப்பொழுது
நீ பாக்கியவானாவாய்; அவர்கள் உனக்குக்
கைம்மாறுசெய்ய இயலாதவர்கள், நீதிமான்
களின் உயிர்த்தெழுதலில் உனக்குக் கைம்
மாறு கிடைக்கும் என்றார்.
15 அவரோடு பந்தியிருந்தவர்களில் ஒருவன்
இவைகளைக் கேட்டபொழுது, அவரைப்
பார்த்து: கடவுள் ராஜ்பத்தில் விருந்துண்
16 கிறவன் பாக்கியவான் என்றான். அவரோ
அவனிடம்: ஒரு மனுஷன் பெரிய விருந்தை
ஆயத்தம்பண்ணி, அநேகரை அழைத்திருந்
17 தான். விருந்துநேரம் வரவே தன் ஊழியக்
காரனைக் கூப்பிட்டு: அழைக்கப்பட்டவர்
களிடம் நீ போய், விருந்து ஆயத்தமாயிருக்
கிறது, வாருங்களென்று சொல் என அனுப்
18 பினான். அவர்களெல்லாரும் ஒன்றுபோல்
போக்குச் சொல்லத் தொடங்கினார்கள்.
முதல்வன்: ஒரு வயலைக் கொண்டேன்,
நான் அவசியமாய்ப் போய் அதைப் பார்க்க
வேண்டும், என்னை மன்னிக்கக் கேட்டுக்
19 கொள்ளுகிறேன் என்றான். வேறொருவன்:
ஐந்து ஏர் மாடு கொண்டேன், அவற்றைச்
சோதித்துப் பார்க்கப்போகிறேன்; என்னை
மன்னிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்
20 றான். வேறொருவன்: ஒரு பெண்ணைக்
கலியாணஞ் செய்திருக்கிறேன், அதனால் வர
21 முடியாது என்றான். அந்த ஊழியக்காரன்
திரும்பிவந்து, இவைகளைத் தன் எஜமா
னுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்
டெஜமான் கோபங்கொண்டு, தன் ஊழியக்
காரனிடம்: நீ பட்டணத்தின் வீதிகளிலும்
தெருக்களிலும் சீக்கிரமாய்ப் போய், ஏழை
களையும் ஊனரையும் குருடரையும் சப்
பாணிகளையும் இங்கே கூட்டிக்கொண்டுவா
22 என்றான். ஊழியக்காரன்: ஐயா, நீர் கட்
டளையிட்டபடி செய்தாயிற்று, இன்னும்
23 இடம் இருக்கிறது என்றான். அப்பொழுது
எஜமான் ஊழியக்காரனிடம்: நீ பெருவழி
களிலும் வேலிகளருகிலும் போய், ஜனங்களை
உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்
கொண்டுவா, என் வீடு நிறையவேண்டும்;
24 அழைத்திருந்த அந்த மனுஷரில் ஒருவனும்
என் விருந்தை ருசிப்பதில்லையென்று உங்க
ளுக்குச் சொல்லுகிறேன் என்றான் என்று
சொன்னார்.
25 திரளான ஜனங்கள் அவரோடே வழி
நடந்துபோகையில், அவர்கள் முகமாய்
அவர் திரும்பி: என்னிடம் வருகிற ஒருவன் 26
தன் தகப்பனையும் தாயையும் மனைவியை
யும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோ
தரிகளையும் தன் சொந்த ஜீவனையுங்கூட
வெறுக்காவிட்டால், எனக்குச் சீஷனா
யிருக்கமுடியாது. தனக்குரிய சிலுவையைச் 27
சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாத
வன் எனக்குச் சீஷனாயிருக்கமுடியாது.
உங்களில் கோபுரங்கட்ட விரும்பும் எந்த 28
மனிதன் முதலாவது உட்கார்ந்து செல
வைக் கணக்கிட்டு, அதைக் கட்டிமுடிப்
பதற்குப் போதுமான பொருள் உண்டா
என்று பாராமலிருப்பான்? அஸ்திபாரமிட்ட 29
பின் கட்டிமுடிக்க வகையற்றுப்போனால்,
அதைக் காண்கிறவர்கள் எல்லாரும் பரிகா
சஞ்செய்யத் தொடங்கி: இவன் கட்ட 30
ஆரம்பித்தான், முடிக்கவோ வகையற்றுப்
போனான் என்று பேசுவார்களே. எந்த 31
அரசன் மற்றொரு அரசனோடு போர்கலக்கப்
போகும்போது, தன்னுடைய பதினாயிரம்
பேரைக்கொண்டு, தனக்கு விரோதமாய்
வருகிறவனுடைய இருபதினாயிரம் பேரை
எதிர்க்கமுடியுமோ என்று முதலாவது உட்
கார்ந்து ஆலோசியாமலிருப்பான்? எதிர்க்க 32
முடியாதென்று கண்டால், மற்றவன்
தூரத்திலிருக்கும்போது தன்னுடைய பிரதி
நிதிகளை அனுப்பி, சமாதான நிபந்தனை
களைத் தேடுவானே. அப்படியே, உங்களில் 33
தனக்கு உள்ளவைகளையெல்லாம் விட்டு
விடாத எவனும் எனக்குச் சீஷனாயிருக்க
முடியாது. உப்பு நல்லதுதான்: ஆயினும் 34
உப்பு சாரமற்றுப்போனால், எதினால்
சாரமாக்கப்படும்? அது நிலத்துக்காகிலும் 35
எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே
கொட்டிப்போடுவார்கள். கேட்கக் காதுள்
ளவன் கேட்கக்கடவன் என்றார்.

சகல ஆயக்காரரும் பாவிகளும் அவர் **15**
சொல்வதைக் கேட்க அவரருகே வந்து
கொண்டிருந்தார்கள். பரிசேயரும் வேத 2
பாரகரும் முறுமுறுத்து: இவன் பாவிகளை
ஏற்றுக்கொண்டு அவர்களோடு சாப்பிடு
கிறான் என்றார்கள்.
அவர்களுக்கு அவர் இந்த உவமையைச் 3
சொன்னார்: உங்களில் எந்த மனுஷன் 4
நூறு ஆடுகளையுடையவனாயிருந்து, அவை
களில் ஒன்று காணாமற்போனால், தொண்
ணூற்றொன்பது ஆடுகளையும் காட்டிலே
விட்டுப்போய், காணாமற்போன ஆட்டைக்
கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியான்?
கண்டுபிடிக்கவே, அவன் சந்தோஷமாய் 5
அதைத் தன் தோளின்மேல் போட்டுக்

6 கொண்டு, | வீட்டுக்கு வந்து, சிநேகிதரை
யும் அயலாரையும் கூட வரவழைத்து:
காணாமற்போன என் ஆட்டைக் கண்டு
பிடித்தேன், என்னோடு சந்தோஷப்படுங்கள்
7 என்பானே. அதுபோலவே, மனந்திரும்ப
அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதி
மான்களைப்பற்றி உண்டாகும் சந்தோஷத்
தைப் பார்க்கிலும், மனந்திரும்பும் ஒரே
பாவியினிமித்தம் பரலோகத்தில் உண்டா
கும் சந்தோஷம் அதிகமாகும் என்று உங்க
ளுக்குச் சொல்லுகிறேன்.
8 அன்றியும், எந்த ஸ்திரீ பத்து வெள்ளிக்
காசையுடையவளாயிருந்து, அதில் ஒரு
வெள்ளிக்காசு காணாமற்போனால், விளக்
கைக் கொளுத்தி, வீட்டைப் பெருக்கி,
அதைக் கண்டுபிடிக்குமளவும் கவனமாய்த்
9 தேடாமலிருப்பாள்? கண்டுபிடிக்கவே, தன்
சிநேகிதிகளையும் அயல் வீட்டுக்காரிகளையும்
கூட வரவழைத்து: காணாமற்போன வெள்
ளிக்காசைக் கண்டுபிடித்தேன், என்னோடு
10 சந்தோஷப்படுங்கள் என்பாளே. அது
போலவே, மனந்திரும்புகிற ஒரே பாவியி
னிமித்தம் கடவுளின் தூதருக்குள் சந்
தோஷமுண்டாகும் என்று உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்றார்.
11 பின்னும் அவர்: ஒரு மனுஷனுக்கு
12 இரண்டு மக்கள் இருந்தார்கள். அவர்களில்
இளையவன் தகப்பனிடம் வந்து: தகப்பனே,
சொத்தில் எனக்குரிய பங்கை எனக்குத்
தாரும் என்றான். அவன் அவர்களுக்குத் தன்
13 சொத்தைப் பங்கிட்டுக்கொடுத்தான். சில
நாளுக்குள் இளைய மகன் எல்லாவற்றையும்
சேர்த்துக்கொண்டு, தூரதேசம் போய்,
அங்கே துன்மார்க்க ஜீவியஞ்செய்து, தன்
14 சொத்தை விரயஞ்செய்துவிட்டான். எல்லா
வற்றையும் அவன் செலவழித்தபின்பு, அத்
தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று.
அப்பொழுது அவன் சாப்பாட்டுக்கும் வழி
15 யில்லாமல், அத்தேசத்தான் ஒருவனிடம்
போய் ஒட்டிக்கொண்டான். அவன் அவ
னைத் தன் வயல்களில் பன்றிமேய்க்க அனுப்
16 பினான். பன்றி தின்னும் தவிட்டைத் தின்று
தன் வயிற்றை நிரப்ப ஆசைப்பட்டான்;
17 அவனுக்குக் கொடுப்பாரோ இல்லை. அவ
னுக்குப் புத்தி தெளிந்தபோது அவன்: என்
தகப்பனுக்கு எத்தனையோ கூலிக்கார
ருண்டு, அவர்களெல்லாரும் பூர்த்தியாய்ச்
சாப்பிடுகிறார்கள்; நானோ இங்கே பசியினால்
18 சாகிறேன். நான் எழுந்து என் தகப்ப
னிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு
விரோதமாகவும் உமது பார்வையிலும்
19 பாவஞ்செய்தேன். இனி உம்முடைய மகன்
என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திர
னல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவ
னாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்
என்று சொல்லி, எழுந்து தன் தகப்பனிடம் 20
வந்தான். அவன் தூரத்தில் வரும்போதே
அவன் தகப்பன் அவனைக் கண்டு, மன
முருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டி முத்த
மிட்டான். மகனோ தகப்பனிடம்: தகப் 21
பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமது
பார்வையிலும் பாவஞ்செய்தேன், இனி உம்
முடைய மகன் என்று சொல்லப்படு
வதற்கு நான் பாத்திரனல்ல என்று சொன்
னான். தகப்பனோ தன் வேலைக்காரரைக் 22
கூப்பிட்டு: நீங்கள் சீக்கிரம் போய் உயர்ந்த
வஸ்திரம் கொண்டுவந்து இவனுக்கு உடுத்தி,
இவன் கைக்கு மோதிரமும் கால்களுக்குப்
பாதரட்சைகளும் போடுங்கள். கொழுத்த 23
கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள்; நாம்
புசித்துச் சந்தோஷங்கொண்டாடுவோம்.
என் மகனாகிய இவன் மரித்திருந்தான், 24
திரும்பவும் உயிரோடு வந்தான்; காணாமற்
போயிருந்தான், திரும்பவும் காணப்பட்
டான் என்றான். அப்படியே அவர்கள் சந்
தோஷங்கொண்டாடத் தொடங்கினார்கள்.
அவனுடைய மூத்த மகன் வயலிலிருந்தான். 25
அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய் வரு
கிறபோது, ஆடல் பாடல்களைக் கேட்டு,
வேலைக்காரரில் ஒருவனை அழைத்து இது 26
என்னவென்று விசாரிக்க, | அவன்: உம்மு 27
டைய சகோதரன் வந்தார், அவர் சுகத்
துடனே திரும்பி வந்து சேர்ந்தபடியினாலே
உம் தகப்பனார் கொழுத்த கன்றை அடித்
தார் என்றான். அப்பொழுது அவன் கோப 28
மடைந்து, உள்ளே போகமாட்டேனென்று
நின்றுவிட்டான். தகப்பனோ வெளியேவந்து
அவனை வருந்தியழைத்தான். அவனோ தகப்ப 29
னிடம் இத்தனை வருஷகாலமாய் நான் உமக்
குத் தொண்டுசெய்துவருகிறேன்; ஒருகாலும்
உமது கட்டளையை மீறினதில்லை. அப்படி
யிருந்தும், என் சிநேகிதரோடே நான்
சந்தோஷங்கொண்டாடும்படி நீர் ஒருகாலும்
எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையும் கொடுத்த
தில்லை. உம்முடைய மகனாகிய இவனோ 30
வேசிகளிடம் உமது சொத்தை அழித்து
விட்டு, திரும்பிவந்தவுடனே இவனுக்காகக்
கொழுத்த கன்றை அடித்தீரே என்றான்.
அதற்கு அவன்: மகனே, நீ எப்போதும் என் 31
னோடிருக்கிறாய், எனக்குள்ளவைகளெல்
லாம் உன்னுடையவைகளே. உன் சகோ 32
தரனாகிய இவனோ மரித்திருந்தான், திரும்ப
வும் உயிரோடு வந்தான்; காணாமற்போயிருந்
தான், திரும்பவும் காணப்பட்டான்; ஆகை

யால் நாம் சந்தோஷங்கொண்டாடி மன
மகிழவேண்டுமே என்று சொன்னான் என்
றார்.

16 மேலும் அவர் தம்முடைய சீஷரை
நோக்கி: ஐசுவரியவான் ஒருவனுக்கு ஓர்
உக்கிராணக்காரன் இருந்தான்; தன் எஜமா
னுடைய சொத்துக்களை இவன் அழித்துப்
போடுகிறதாக அவனுக்கு அறிவிக்கப்
2 பட்டது. அப்பொழுது எஜமான் அவனை
வரவழைத்து: உன்னைக்குறித்து நான் இப்
படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்
கிராணக் கணக்கை ஒப்புவி, இனி நீ உக்
கிராணக்காரனாயிருக்கமுடியாது என்றான்.
3 உக்கிராணக்காரனே தனக்குள் யோசித்து:
நான் என்ன செய்வேன், உக்கிராண வேலையி
லிருந்து என் எஜமான் என்னைத் தள்ளிப்
போடுகிறானே; கொத்துகிறதற்கு எனக்
குச் சக்தியில்லை, இரக்கவும் வெட்கப்படு
4 கிறேன். உக்கிராண வேலையைவிட்டு என்
னைத் தள்ளிவிடும்போது, மற்றவர்கள் என்
னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்ளும்
படி நான் செய்யவேண்டியது இன்ன
தென்று அறிந்துகொண்டேன் என்று
5 சொல்லி, தன் எஜமானிடம் கடன்பட்ட
வர்களை ஒவ்வொருவனாக வரவழைத்து, முத
லாவது வந்தவனைப் பார்த்து: நீ என் எஜமா
னிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என்று
6 கேட்டான். அவன்: நூறு குடம் எண்
ணெய் என்றான். உக்கிராணக்காரன் அவ
னிடம்: நீ உன் சீட்டை வாங்கி, உட்
கார்ந்து, ஐம்பது என்று சீக்கிரமாய் எழுது
7 என்றான். பின்பு அவன் வேறொருவனைப்
பார்த்து: நீ பட்ட கடன் எவ்வளவு என்று
கேட்க, அவன்: நூறுகலம் கோதுமை என்
றான். அவன்: நீ உன் சீட்டை வாங்கி,
8 எண்பது என்று எழுது என்றான். எஜமான்
இதை அறிந்து, அநீத உக்கிராணக்காரன்
இதை யுக்தியோடு செய்தானென்று அவனை
மெச்சிக்கொண்டான். வெளிச்சத்தின் பிள்ளை
களைப்பார்க்கிலும் இந்த யுகத்தின் பிள்ளைகள்
தங்கள் தலைமுறையாருக்கு ஏற்க யுக்தி
9 யாய் நடந்துகொள்ளுகிறார்கள். அநீதத்
திற்கேதுவான உலகப்பொருளால் உங்க
ளுக்குச் சிநேகிதரைச் சம்பாதித்துக்கொள்
ளுங்கள். அப்பொருள் இல்லாமற்
போகும்போது அவர்கள் உங்களை நித்திய
வீடுகளில் வரவேற்பார்களென்று நான்
10 உங்களுக்குச் சொல்லுகிறேன். கொஞ்சத்
தில் உண்மையுள்ளவன் அதிகத்திலும்
உண்மையுள்ளவன். கொஞ்சத்தில் நேர்மை
யில்லாதவன் அதிகத்திலும் நேர்மையில்லா
தவன். அநீதத்திற்கேதுவான உலகப் 11
பொருள் விஷயத்தில் நீங்கள் உண்மை
யற்றவர்களாய்ப்போனால், யார் உங்களிடம்
மெய்ப்பொருளை நம்பி ஒப்புவிப்பார்கள்?
மற்றவர்களுக்குரியதில் நீங்கள் உண்மை 12
யற்றவர்களாய்ப் போனால், உங்களுக்கு
எதையும் சொந்தமாகக் கொடுப்பவர் யார்?
எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான் 13
களுக்கு ஊழியஞ்செய்யமுடியாது; ஒருவ
னைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்;
அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்ற
வனை அசட்டைபண்ணுவான். நீங்கள் கட
வுளுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்
செய்ய முடியாது என்றார்.
பணப்பிரியரான பரிசேயர் இவைகளை 14
யெல்லாம் கேட்டு அவரை இகழ்ந்தார்கள்
அவர் அவர்களிடம்: மனுஷர்முன் உங்களை 15
நீதிமான்களாக நீங்கள் காட்டுகிறீர்கள்,
கடவுளோ உங்கள் இருதயங்களை அறிந்
திருக்கிறார்; மனுஷருக்குள் மேன்மையாக
எண்ணப்படுவது கடவுளுக்குமுன் அரு
வருப்பாம். நியாயப்பிரமாணமும் தீர்க்க 16
தரிசிகளும் யோவான் காலம்வரைக்கும் சரி;
அதுமுதல் கடவுள் ராஜ்யம் நற்செய்தியாய்
அறிவிக்கப்பட்டுவருகிறது; யாவரும் அதற்
குள் பலவந்தமாய்ப் பிரவேசிக்கிறார்கள்
நியாயப்பிரமாணத்தில் ஒரு எழுத்தின் 17
உறுப்பாகிலும் விழுந்துபோவதைப்பார்க்கி
லும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது
எளிதாகும். தன் மனைவியைத் தள்ளிவிட்டு 18
வேறொருத்தியை விவாகம்பண்ணுகிறவன்
விபசாரஞ்செய்கிறான்; புருஷனாலே தள்ளப்
பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விப
சாரஞ்செய்கிறான்.
ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந் 19
தான்; அவன் இரத்தாம்பரமும் விலையுயர்ந்த
வஸ்திரமும் தரித்து அநுதினமும் சம்பிரம
மாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு 20
என்னும் பேர்கொண்ட தரித்திரன் ஒருவ
னும் இருந்தான்; அவன் புண்கள் நிறைந்த
வனாய், அந்த ஐசுவரியவானுடைய வாச
லருகே கிடந்து, அவனுடைய மேசையி 21
லிருந்து விழும் துணிக்கைகளாலே தன்
பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள்
வந்து அவன் புண்களை நக்கும். அந்தத் 22
தரித்திரன் மரித்தான்; தேவதூதர் அவனை
ஆபிரகாமின் மடியிலே கொண்டுபோய்விட்
டார்கள். ஐசுவரியவானும் மரித்தான்;
அவனை அடக்கஞ்செய்தார்கள். அவன் 23
பாதாளத்திலே வேதனைப்படுகிறவனாய்த் தன்
கண்களை ஏறெடுத்து, தூரத்தில் ஆபிரகா
மையும் அவன் மடியிலே லாசருவையும்

24 கண்டான். காணவே அவன்: தகப்ப
னாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி,
லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில்
தோய்த்து என் நாவைக் குளிரப்பண்ணும்
படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்
கினி ஜுவாலையில் வேதனைப்படுகிறேனே
25 என்று கூப்பிட்டான். ஆபிரகாமோ:
மகனே, நீ உயிரோடிருக்குங்காலத்தில் உன்
நன்மைகளை அனுபவித்துத் தீர்த்தாய், லாச
ருவும் அப்படியே தீமைகளை அனுப்பவித்
துத் தீர்த்தான், அதை நினைத்துக்கொள்; இப்
பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ
26 வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்
விடத்திலிருந்து உங்களிடத்திற்குப் போக
விரும்புகிறவர்கள் கடக்கமுடியாதபடிக்
கும், அவ்விடத்திலிருந்து ஒருவரும் எங்க
ளிடத்திற்குக் கடந்துவராதபடிக்கும், எங்
களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்
பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்
27 றான். அவன்: அப்படியானால், தகப்பனே,
நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்
பும்படி உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.
28 எனக்கு ஐந்து சகோதரருண்டு, வேதனை
யுள்ள இந்த இடத்துக்கு அவர்களும்
வராதபடி அவன் போய் அவர்களுக்குத்
திட்டமாய்ச் சாட்சி பகரட்டும் என்றான்.
29 ஆபிரகாமோ: மோசேயும் தீர்க்கதரிசிகளும்
அவர்களுக்கு உண்டு, அவர்கள் அவர்
களுக்குச் செவிகொடுக்கட்டும் என்று
30 சொல்ல, | அவன்: அப்படியல்ல, தகப்ப
னாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒரு
வன் அவர்களிடம் போனால் மனந்திரும்பு
31 வார்கள் என்றான். ஆபிரகாமோ: அவர்கள்
மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவி
கொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒரு
வன் எழுந்துபோனாலும் நம்பமாட்டார்கள்
என்று சொன்னான் என்றார்.

17 அவர் தம்முடைய சீஷரிடம்: இடறச்
செய்யும் காரணங்கள் வராமல் போவது
அசாத்தியம்; ஆயினும் அவைகள் எவனால்
வருகிறதோ, ஐயோ! அவனுக்குக் கேடு
2 வரும். அவன் இந்தச் சிறியவரில் ஒருவனை
இடறச் செய்வதைப்பார்க்கிலும், அவன்
கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி அவனைச்
சமுத்திரத்தில் தள்ளிப்போடுவது அவனுக்கு
3 நலமாகும். உங்களைப்பற்றி எச்சரிக்கையா
யிருங்கள். உன் சகோதரன் பாவஞ்செய்
தால் அவனைக் கடிந்துப் பேசு. அவன்
மனந்திரும்பினால், அவனுக்கு மன்னிப்
4 பாயாக. அவன் ஒரேநாளில் ஏழுதரம்
உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து,
ஏழுதரமும் உன்னிடம் வந்து: நான்
மனந்திரும்புகிறேன் என்று சொன்னால்,
அவனுக்கு மன்னிக்கவேண்டும் என்
றார்.
பின்பு அப்போஸ்தலர் ஆண்டவரிடம்: 5
எங்களுக்கு அதிக விசுவாசம் தாரும் என்
றார்கள். ஆண்டவர்: கடுகுவிதையளவு 6
விசுவாசம் உங்களுக்கு இருந்தால், நீங்கள்
இந்தக் காட்டத்திமரத்தைப் பார்த்து, நீ
வேரோடே பிடுங்குண்டு கடலில் நடப்படு
என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்
படியும். மேலும் உங்களில் ஒருவனுடைய 7
அடிமை உழுது, அல்லது மந்தை மேய்த்து,
வயலிலிருந்து வரும்போது, எஜமான்: நீ
உடனே வந்து சாப்பிட உட்காரு என்று
அவனுக்குச் சொல்வானோ? நீ எனக்குச் 8
சாப்பாடு ஆயத்தம்பண்ணி, அரைகட்டிக்
கொண்டு, நான் போஜனபானம்பண்ணித்
தீருமட்டும் எனக்குப் பணிவிடைசெய்,
அதற்குப்பின் நீ சாப்பிடலாம் என்று அவ
னுக்குச் சொல்லுவானல்லவா? தான் கட் 9
டளையிட்டவைகளை அந்த வேலைக்காரன்
செய்ததற்காக அவனுக்கு உபசாரவார்த்தை
சொல்வானோ? அப்படிச் செய்யமாட்
டானே. அப்படியே நீங்களும் உங்களுக்குக் 10
கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்து
முடித்தபின்பு: நாங்கள் பிரயோஜனமற்ற
அடிமைகள், செய்யக் கடமைப்பட்டிருந்த
தைத்தான் செய்தோம் என்று சொல்லுங்கள்
என்றார்.
அவர் எருசலேமுக்குப் பிரயாணம்பண் 11
ணுகையில், சமாரியா கலிலேயா நாடுக
ளுக்கு இடையே நடந்துபோனார். அவர் 12
ஒரு கிராமத்திற்குள் போகும்போது, குஷ்ட
ரோகமுள்ள பத்துப்பேர் அவருக்கு எதிராக
வந்து, தூரத்திலே நின்று: | இயேசு ஐயரே, 13
எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்
டார்கள். அவர்களை அவர் பார்த்து: நீங்கள் 14
போய் ஆசாரியருக்கு உங்களைக் காண்பி
யுங்கள் என்றார். அந்தப்படி அவர்கள்
போகையில் சுத்தமானார்கள். அவர்களில் 15
ஒருவன், தான் ஆரோக்கியமானதைக்
கண்டு, உரத்த சத்தத்தோடே கடவுளை மகி
மைப்படுத்திக்கொண்டு, திரும்பிவந்து, |
அவருடைய பாதத்தில் முகங்குப்புற 16
விழுந்து அவருக்கு நன்றிசெலுத்தினான்;
அவன் சமாரியன். இயேசு அவனைக் கண்டு: 17
பத்துப் பேரும் சுகமாகவில்லையோ? மற்ற
ஒன்பது பேர் எங்கே? இந்த அந்நியனே 18
யொழிய கடவுளை மகிமைப்படுத்துகிறதற்கு
வேறொருவரும் திரும்பிவரவில்லையா என்று
சொல்லி, | அவனைப் பார்த்து: நீ எழுந்து 19

போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது
என்றார்.
20 கடவுள் ராஜ்யம் எப்பொழுது வரு
மென்று பரிசேயர் அவரிடம் கேட்க,
அவர்: கடவுள் ராஜ்யம் கண்ணாரக்காண
21 வராது. இதோ, இங்கே என்றும், அதோ,
அங்கே என்றும் சொல்லவும் மாட்டார்கள்.
கடவுள் ராஜ்யம் உங்களுக்குள்ளேயே
22 இருக்கிறது என்று சொல்லி, தம்முடைய
சீஷரைப் பார்த்து: மனுஷகுமாரனுடைய
நாட்களில் ஒன்றைக் காணவேண்டுமென்று
நீங்கள் ஆசைப்படுங்காலம் வரும்; ஆயி
23 னும் அதைக் காணாமற்போவீர்கள். இதோ,
இங்கே என்றும், அதோ, அங்கே என்றும்
சிலர் உங்களிடம் சொல்லுவார்கள்; நீங்
களோ போகாமலும் பின்தொடராமலும்
24 இருங்கள். வானத்தின் ஒரு திசை முதல்
மறு திசைவரைக்கும் மின்னல் மின்னிப்
பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனும்
25 தமது நாளில் இருப்பார்; ஆனால் அதற்கு
முன்னே அவர் அநேக பாடுகள்பட்டு,
இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று
26 தள்ளப்படவேண்டியதாகும். நோவாவின்
நாட்களிலிருந்ததுபோல மனுஷகுமாரன்
27 நாட்களிலும் இருக்கும். நோவா பேழைக்
குள் பிரவேசித்த நாள் வரை ஜனங்கள்
புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டும்
கொடுத்துமிருந்தார்கள். ஜலப்பிரளயம்
வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது.
28 அப்படியே லோத்தினுடைய நாட்களிலும்
நடந்தது; ஜனங்கள் புசித்தார்கள், குடித்
தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்
29 டார்கள், வீடு கட்டினார்கள். லோத்து
சோதோமை விட்டுப்போன நாளிலே வானத்
திலிருந்து அக்கினியும் கந்தகமும் சொரிந்து
30 எல்லாரையும் அழித்துப்போட்டது. மனுஷ
குமாரன் வெளிப்படும் நாளிலும் அப்
31 படியே நடக்கும். அந்த நாளிலே வீட்டின்
மேலிருப்பவன் வீட்டினுள்ள தன் சாமான்
களை எடுத்துக்கொள்ள இறங்கவேண்டாம்;
அப்படியே வயலிலிருக்கிறவன் பின்னிட்டுத்
32 திரும்பவேண்டாம். லோத்தின் மனைவியை
33 நினைத்துக்கொள்ளுங்கள். தன் ஜீவனைக்
காப்பாற்றிக்கொள்ள வகைதேடுகிறவன்
எவனும் அதை இழந்துபோவான், இழந்து
போகிறவன் எவனும் அதை உயிரோடு
34 காத்துக்கொள்வான். அந்த இராத்திரியில்
ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டு
பேரில் ஒருவன் கொண்டுபோகப்படுவான்,
35 மற்றவன் கைவிடப்படுவான். இரண்டு
36 ஸ்திரீகள் ஒன்றாய் ஏந்திரம் அரைத்துக்
கொண்டிருப்பார்கள்; ஒருத்தி கொண்டு
போகப்படுவாள், மற்றவள் கைவிடப்படு
வாள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்
என்றார். அவர்கள்: எங்கே, ஆண்டவரே, 37
என்று அவரிடம் கேட்க, அவர்: பிணம்
எங்கேயோ அங்கே கழுகுகளும் வந்து
கூடும் என்று அவர்களுக்குச் சொன்னார்.

சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் 18
ஜெபம்பண்ணவேண்டும் என்பதைப்பற்றி
அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச்
சொன்னார். ஒரு பட்டணத்தில் நியாயாதிபதி 2
ஒருவன் இருந்தான்; அவன் கடவுளுக்குப்
பயப்படாதவன், மனுஷரை மதியாதவன்.
அந்தப் பட்டணத்தில் ஒரு விதவை இருந் 3
தாள்; அவள் அவனிடம் போய்: என்
எதிராளியின் கைக்குத் தப்பும்படி எனக்கு
நியாயஞ்செய்யுமென்று விண்ணப்பஞ்
செய்துகொண்டேயிருந்தாள். சிலகாலம் 4
அவனுக்கு மனமில்லாதிருந்தது. பின்பு
அவன்: நான் கடவுளுக்குப் பயப்படாமலும்
மனுஷரை மதியாமலுமிருந்தும், இந்த 5
விதவை என்னைத் தொந்தரவுசெய்து
கொண்டேயிருக்கிறபடியினால், இவளுக்கு
நியாயஞ்செய்வேன்; இல்லையானால் இவள்
வந்து என்னை ஓயாமல் அலட்டிக்கொண்டே
யிருப்பாள் என்று தனக்குள்ளே சொல்லிக்
கொண்டான் என்றார். பின்னும் ஆண்ட 6
வர்: அநீதனான அந்த நியாயாதிபதி சொன்ன
தைக் கவனியுங்கள். கடவுளால் தெரிந் 7
தெடுக்கப்பட்டவர்களாய், இராப்பகல்
அவரை நோக்கிக் கூப்பிடுகிறவர்கள் விஷ
யத்தில் அவர் தாமதித்தாலும் நியாயஞ்செய்
யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர் 8
களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்
குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷ
குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்
தைக் காண்பாரோ என்றார்.

அன்றியும், தங்களை நீதிமான்களென்று 9
நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின
சிலரைப் பார்த்து இந்த உவமையைச்
சொன்னார்: இரண்டு மனுஷர் ஜெபம்பண் 10
ணத் தேவாலயத்திற்குப் போனார்கள்; ஒரு
வன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.
பரிசேயன் நின்று: கடவுளே, பறிகாரர், 11
அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற
மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்
போலவும் நான் இராததினால் உமக்கு
நன்றிசெலுத்துகிறேன். வாரத்தில் இரண்டு 12
தரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்தி
லெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன்
என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்.
ஆயக்காரனோ தூரத்தில் நின்று, தன் கண் 13

கண்ணையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியா
மல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: கட
வுளே, பாவியாகிய எனக்கு இரங்கும் என்
14 றான். அவனல்ல, இவனே நீதிமானாக ஏற்றுக்
கொள்ளப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத்
திரும்பினான் என்று உங்களுக்குச் சொல்லு
கிறேன்; தன்னை உயர்த்துகிறவன் எவனும்
தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிற
வன் உயர்த்தப்படுவான் என்றார்.
15 அவர் தொடவேண்டுமென்று குழந்தை
களை அவரிடம் கொண்டுவந்தார்கள். சீஷர்
அதைக் கண்டு, கொண்டுவந்தவர்களை அதட்
16 டினார்கள். இயேசுவோ அக்குழந்தைகளைத்
தம்மிடம் அழைத்து: சிறுபிள்ளைகள் என்
னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்.
அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்;
கடவுள் ராஜ்யம் அப்படிப்பட்டவர்களு
17 டையது. சிறுபிள்ளையைப்போல் கடவுள்
ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாதவன் எவ
னும் அதில் பிரவேசிப்பதேயில்லை என்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்
என்றார்.
18 அப்பொழுது தலைவன் ஒருவன்: நல்ல
போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரிப்ப
தற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று
19 அவரைக் கேட்டான். அதற்கு இயேசு: நீ
என்னை நல்லவரென்று சொல்வானேன்?
கடவுள் ஒருவர் தவிர நல்லவர் ஒருவரு
20 மில்லையே. விபசாரஞ்செய்யவேண்டாம்,
கொலைசெய்யவேண்டாம், களவுசெய்ய
வேண்டாம், பொய்ச்சாட்சி சொல்லவேண்
டாம், உன் தகப்பனையும் உன் தாயையும்
கனம்பண்ணவேண்டும் முதலிய கற்பனைகள்
21 உனக்குத் தெரியுமே என்றார். அவனோ:
இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல்
22 கைக்கொண்டிருக்கிறேன் என்றான். இயேசு
அதைக்கேட்டு: இன்னும் உன்னிடம்
குறைவு ஒன்று உண்டு; உனக்குள்ள யாவற்
றையும் விற்று, தரித்திரருக்குப் பங்கிட்டுக்
கொடு, அப்பொழுது பரலோகத்தில் உனக்கு
ஐசுவரியமிருக்கும்; பின்பு வந்து என்னைப்
23 பின்பற்று என்றார். அவன் அதிக ஐசுவரிய
முள்ளவனானபடியினால், இவைகளைக்
கேட்டபொழுது மிகுந்த துக்கமடைந்தான்.
24 இயேசு அவனைப் பார்த்தவராய்: ஐசுவரிய
முள்ளவர்கள் கடவுள் ராஜ்யத்தில் பிரவே
25 சிப்பது எவ்வளவு அரிது. ஐசுவரியவான்
கடவுள் ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்
கிலும், ஒட்டகம் ஊசியின் காதில் நுழைவது
26 எளிது என்றார். அதைக் கேட்டவர்கள்:
அப்படியானால் யார் இரட்சிக்கப்படக்
27 கூடும் என்றார்கள். அதற்கு அவர்: மனுஷ
ரால் ஆகாதவைகள் கடவுளால் ஆகும் என்
றார். பேதுருவோ: இதோ, நாங்கள் எங்க 28
ளுக்குரியவைகளை விட்டு உம்மைப் பின்
பற்றினோமே என்றான். அவர் அவர்களி 29
டம்: கடவுள் ராஜ்யத்தினிமித்தம் வீட்டை
யாவது, மனைவியையாவது, சகோதரரையா
வது, பெற்றோரையாவது, பிள்ளைகளையாவது
விட்டவன் எவனும் | இம்மையில் அதிக 30
மானவைகளையும், மறுமையிலே நித்திய
ஜீவனையும் அடையாமற்போவதில்லை என்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்
என்றார்.
பின்பு அவர் பன்னிருவரையும்தமது பக்க 31
மாய் அழைத்து: எருசலேமுக்குப் போகி
றோம், மனுஷகுமாரனைப்பற்றித் தீர்க்க
தரிசிகள் எழுதியவைகளெல்லாம் நிறை
வேறும். அவர் புறஜாதியாரிடத்தில் ஒப்புக் 32
கொடுக்கப்படுவார், அவர்கள் அவரைப்
பரிகாசஞ்செய்து, அவமானப்படுத்தி, அவர்
மேல் துப்பி, | வாரினால் அடித்து, கொலை 33
செய்வார்கள்; மூன்றாம் நாளிலே அவர் உயி
ரோடே எழுந்திருப்பார் என்றார். இவை 34
களில் ஒன்றையும் அவர்கள் உணரவில்லை;
இது அவர்களுக்கு மறைபொருளாயிருந்
தது; அவர் சொன்னவைகளை அவர்கள்
அறிந்துகொள்ளவில்லை.
அவர் எரிகோவைச் சமீபித்தபோது, 35
வழியோரத்தில் ஒரு குருடன் உட்கார்ந்து
பிச்சைகேட்டுக்கொண்டிருந்தான். ஜனக் 36
கூட்டம் கடந்துபோகிற சத்தத்தை அவன்
கேட்டு, இது என்னவென்று விசாரித்தான்.
நசரேயனாகிய இயேசு போகிறாரென்று அவ 37
னுக்கு அறிவிக்க, | அவன்: இயேசுவே, 38
தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்
என்று கூப்பிட்டான். அவன் பேசாமலிருக் 39
கும்படி, முன் நடந்தவர்கள் அவனை அதட்
டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே,
எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிக
மாய்க்கூப்பிட்டுக்கொண்டிருந்தான். இயேசு 40
நின்று: அவனைத்தம்மிடம் கூட்டிக்கொண்டு
வரும்படி சொன்னார். அவன் கிட்ட வரவே,
அவர்: | நான் உனக்கு என்ன செய்ய 41
வேண்டும் என்றிருக்கிறாய் என்றுகேட்டார்.
அதற்கு அவன்: ஆண்டவனே, நான்
பார்வை அடையவேண்டும் என்றான்.
இயேசு அவனிடம்: நீ பார்வை அடைவா 42
யாக, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கி
னது என்றார். உடனே அவன் பார்வை 43
அடைந்து, கடவுளை மகிமைப்படுத்திக்
கொண்டே அவருக்குப் பின்சென்றான்.
ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு, கடவு
ளைப் புகழ்ந்தார்கள்.

19 அவர் எரிகோவினுட்சென்று அதன்
2 வழியே நடந்துபோனார். சகேயு என்னும்
ஒரு மனுஷன் இருந்தான்; அவன் ஆயக்கா
3 ரர் தலைவன், ஐசுவரியவான். இயேசு
இன்னார் என்று பார்க்க இவன் வகை
தேடினான். அவன் குள்ளனானபடியால்
ஜனக்கூட்டத்தில் அவரைப் பார்க்கமுடி
4 யாமல், அவர் போகும் வழியில் முன்னாக
ஓடிப்போய், அவரைப் பார்க்கும்படி ஒரு
5 காட்டத்திமரத்தில் ஏறியிருந்தான். இயேசு
அந்த இடத்திற்கு வரவே, அண்ணாந்து
பார்த்து: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி
வா, இன்று நான் உன் வீட்டில் தங்க
வேண்டும் என்று அவனிடம் சொல்ல,
6 அவன் சீக்கிரமாய் இறங்கிச் சந்தோஷத்
தோடே அவரை வரவேற்றுக்கொண்டான்.
7 அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான
மனுஷனிடம் தங்கப்போனாரே என்று
8 முறுமுறுத்தார்கள். சகேயு நின்று, ஆண்ட
வரை நோக்கி: ஆண்டவரே, இதோ, என்
ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக்
கொடுத்துவிடுகிறேன். நான் எவனையாவது
வஞ்சித்து எதையாகிலும் வாங்கினதுண்டா
னால், அதை நாலத்தனையாகத் திரும்பக்
9 கொடுக்கிறேன் என்றான். இயேசு அவனை
நோக்கி: இந்த வீட்டுக்கு இன்று இரட்
சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக்
10 குமாரனே. காணாமற்போனதைத் தேடவும்
இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்
கிறார் என்றார்.
11 அவர்கள் இவைகளைக் கேட்டுக்கொண்
டிருக்கையில், அவர் எருசலேமுக்குச் சமீ
பித்திருந்தபடியினாலும், கடவுள் ராஜ்யம்
சீக்கிரமாய் வெளிப்படுமென்று அவர்கள்
நினைத்தபடியினாலும், ஒரு உவமையை அவர்
12 களுக்குச் சொன்னார்: பிரபு ஒருவன் ராஜாதி
காரம் பெற்றுக்கொண்டுவரத் தூரதேசம்
13 போனான். போகும்போது தன் ஊழியக்கா
ரரில் பத்துப்பேரை அழைத்து, அவர்களிடம்
பத்து [1]ராத்தல் திரவியம் கொடுத்து: நான்
திரும்பி வருமளவும் இதை வைத்து வியா
பாரம்செய்துகொண்டிருங்கள் என்று சொன்
14 னான். அவனுடைய குடிகள் அவனைப்
பகைத்து: இவன் எங்கள்மேல் ராஜாவா
யிருக்கிறது எங்களுக்குச் சம்மதமில்லை
யென்று சொல்லும்படி அவன் பின்னே பிரதி
15 நிதிகளை அனுப்பினார்கள். அவனோ ராஜாதி
காரத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பிவந்
தான். வந்தவுடன், தன்னிடம் பணம்
வாங்கியிருந்த அந்த ஊழியக்காரரில் அவ
னவன் வியாபாரஞ்செய்து சம்பாதித்தது இவ்
வளவென்று அறியும்படி அவர்களைத் தன்
னிடம் அழைத்துவரச் சொன்னான். அப் 16
பொழுது முதலாம் ஊழியக்காரன் வந்து:
ஐயா, உம்முடைய ராத்தலினால் பத்து ராத்
தல் ஆதாயம் கிடைத்தது என்றான். எஜ 17
மான் அவனிடம்: நல்லது, உத்தம ஊழி
யக்காரனே; அற்பத்தில் நீ உண்மையுள்ள
வனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்
களின்மேல் அதிகாரியாயிரு என்றான். அப் 18
படியே இரண்டாம் ஊழியக்காரன் வந்து:
ஐயா, உம்முடைய ராத்தலினால் ஐந்து
ராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான்.
அவனிடமும்: நீயும் ஐந்து பட்டணங் 19
களுக்கு அதிகாரியாயிரு என்றான். பின்பு 20
மற்றவன் வந்து: ஐயா, இதோ, உமது
ராத்தல், இதை ஒரு துணியில் முடிந்து
வைத்திருந்தேன். நீர் கடினமான மனுஷ 21
னென்று உமக்குப் பயந்திருந்தேன், நீர்
வைக்காததை எடுக்கிறவர் விதைக்காததை
அறுக்கிறவர் என்றான். அதற்கு அவன்: 22
பொல்லாத ஊழியனே, உன் வாயைக்
கொண்டே உன்னை நியாயந்தீர்க்கிறேன்.
வைக்காததை நான் எடுக்கிறவனும், விதைக்
காததை அறுக்கிறவனுமான கடினமுள்ள
மனுஷனென்பது உனக்குத் தெரிந்திருந்ததே,
பின்னை ஏன் என் பணத்தைக் காசுக்கடை 23
யிலே நீ விட்டுவைக்கவில்லை? வைத்திருந்
தால், நான் வந்து அதை வட்டியோடே வரப்
பற்றிக்கொள்வேனே என்று சொல்லி,
சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி: அந்த 24
ராத்தலை அவன் கையிலிருந்து வாங்கி, பத்து
ராத்தல் உள்ளவனுக்குக் கொடுங்கள்
என்றான். அதற்கு அவர்கள்: ஐயா, 25
அவனுக்குப் பத்து ராத்தல் இருக்கிறதே
என்றார்கள். அதற்கு அவன்: உள்ளவன் 26
எவனுக்கும் கொடுக்கப்படும், இல்லாதவனி
டத்திலிருந்தோ உள்ளதும் எடுத்துக்கொள்
ளப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகி
றேன். அன்றியும், தங்கள்மேல் நான் ராஜா 27
வாகச் சம்மதமில்லாதிருந்த என் சத்துருக்
களை இங்கே கொண்டுவந்து, என்முன் வெட்
டிப்போடுங்கள் என்று சொன்னான் என்றார்.
இவைகளைச் சொன்னபின்பு அவர் எருச 28
லேமுக்குப் போக முந்தி நடந்துபோனார்.
அவர் ஒலிவம் என்னும் மலையின் அருகான 29
பெத்பகே பெத்தானியா ஊர்களைச் சமீபித்த
போது, தம்முடைய சீஷரில் இருவரை
அனுப்பி: உங்களுக்கு எதிரே இருக்கிற 30
கிராமத்துக்குப் போங்கள், அதனுட்செல்லும்

[1] ஒரு ராத்தல் ஐம்பது ரூபாய்க்குச் சமமாம்.

போது, ஒரு மனுஷனும் ஒருகாலும் ஏறி
யிராத கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக்
காண்பீர்கள்; அதை அவிழ்த்துக்கொண்டு
31 வாருங்கள். அதை ஏன் அவிழ்க்கிறீர்க
ளென்று யாராவது உங்களிடம் கேட்டால்,
அது ஆண்டவருக்குத் தேவையென்று
32 சொல்லுங்கள் என்றார். அனுப்பப்பட்ட
வர்கள் போய், தங்களுக்கு அவர் சொன்ன
33 படியே கண்டார்கள். கழுதைக்குட்டியை
அவர்கள் அவிழ்க்கும்போது அதற்கு
உடையவர்கள்: குட்டியை ஏன் அவிழ்க்
34 கிறீர்கள் என்று கேட்க, | அவர்கள்: அது
ஆண்டவருக்குத் தேவையென்று சொல்லி
35 விட்டு, அதை இயேசுவினிடம் கொண்டு
வந்து, தங்கள் வஸ்திரங்களைக் குட்டியின்
மேல் போட்டு, இயேசுவை அதன்மேல்
36 ஏற்றினார்கள். அவர் போகையில் தங்கள்
37 வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள். அவர்
பட்டணத்துக்குச் சமீபமாக ஒலிவமலையின்
சரிவில் வருகையில், சீஷர் திரளெல்லாம்
தாங்கள் கண்ட சகல வல்லசெயல்களையுங்
குறித்துச் சந்தோஷங்கொண்டு:

38 கர்த்தரின் நாமத்தில் வருகிறவராகிய
ராஜா ஆசீர்வதிக்கப்பட்டவர்.
பரலோகத்திலே சமாதானமும்
உன்னதத்திலே மகிமையும் உண்டாவ
தாக

என்று மிகுந்த சத்தமாய்க் கடவுளைத் துதிக்
39 கத் தொடங்கினார்கள். அப்பொழுது ஜனக்
கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவரி
டம்: போதகரே, உம்முடைய சீஷரைக்
40 கண்டியும் என்று சொல்ல, | அவர்:
இவர்கள் பேசாமலிருந்தால், கல்லுகளே
கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லு
கிறேன் என்றார்.

41 அவர் சமீபித்தபோது, நகரத்தைப்
42 பார்த்து அதற்காக அழுது: இந்த நாளிலா
கிலும் சமாதானத்துக்கு ஏதுவானவைகளை
நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும்;
இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு
43 மறைந்திருக்கின்றன. உன் சந்திப்பின்
காலத்தை நீ அறியாமற் போனபடியால்,
உனக்கு நாட்கள் வரும், அந்நாட்களில்
உன் சத்துருக்கள் உன்னைச்சூழ மதில்
போட்டு உன்னை வளைந்துகொண்டு,
44 எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, உன்
னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும்
நிர்மூலமாக்கி, உன்னிடம் கல்லின்மேல் கல்
இராதபடி செய்வார்கள் என்று சொன்னார்.

45 அவர் தேவாலயத்திற்குள் பிரவேசித்து,
அதிலே விற்கிறவர்களை வெளியே துரத்தத்
46 தொடங்கி: என்னுடைய வீடு ஜெப வீடு
என்று எழுதியிருக்கிறது, நீங்களோ அதைக்
கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.

அவர் நாடோறும் தேவாலயத்தில் உப 47
தேசித்துவந்தார். பிரதான ஆசாரியரும்
வேதபாரகரும் ஜனத்தின் பிரதானிகளும்
அவரைக் கொலைசெய்ய வகைதேடியும்,
ஜனங்களெல்லாரும் அவர் உபதேசத்தை 48
ஆவலாய்க்கேட்டு அவரை அண்டிக்கொண்
டிருந்தபடியால், இன்னதுதான் செய்யலா
மென்று வகை காணாதிருந்தார்கள்.

அவர் தேவாலயத்தில் ஒருநாள் ஜனங்க 20
ளுக்கு உபதேசித்து, நற்செய்தியை பிரசங்
கித்துக்கொண்டிருந்தபோது, பிரதான ஆசா
ரியரும் வேதபாரகரும் மூப்பரோடு அவ
ரிடம் கூடிவந்து: நீர் இவைகளை எந்த அதி 2
காரத்தினால் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை
உமக்குக் கொடுத்தவர் யார்? எங்களுக்குச்
சொல்லும் என்று கேட்க, | அவர்: நானும் 3
உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்
கிறேன், அதை எனக்குச் சொல்லுங்கள்.
யோவானுடைய ஸ்நானம் பரலோகத்தி 4
லிருந்து வந்ததோ, மனுஷரிடத்திலிருந்து
வந்ததோ என்று கேட்டார். அவர்கள் தங் 5
களுக்குள்ளே ஆலோசனைசெய்து: பரலோ
கத்திலிருந்து என்று சொல்வோமானால்,
பின் ஏன் அவனை நம்பவில்லை என்று கேட்
பார்; மனுஷரிடத்திலிருந்து என்று சொல் 6
வோமானால், ஜனங்களெல்லாரும் நம்மேல்
கல்லெறிவார்கள்; அவர்கள் அவனைத் தீர்க்க
தரிசியென்று திட்டமாய் நம்பியிருக்கிறார்
களே என்று சொல்லிக்கொண்டு: அது 7
எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை என்று
சொல்லிவிட்டார்கள். அப்பொழுது இயேசு: 8
இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்
கிறேனென்று நானும் உங்களுக்குச் சொல்
லேன் என்றார்.

அவர் ஜனங்களுக்கு இந்த உவமையைச் 9
சொல்லத் தொடங்கினார்: ஒரு மனுஷன் ஒரு
திராட்சத்தோட்டம் உண்டாக்கி, குடியான
வர்களுக்கு அதைக் குத்தகையாக விட்டு,
நெடுநாளாகப் புறதேசத்துக்குப் போயிருந்
தான். பருவகாலத்தில், திராட்சத்தோட்டத் 10
தின் கனிகளில் தன் பாகத்தைக் கொடுத்
தனுப்பும்படி குடியானவர்களிடம் ஒரு
ஊழியக்காரனை அனுப்பினான். அவர்களோ
அவனை அடித்து வெறுங்கையாய் அனுப்பி
விட்டார்கள். பின்பு அவன் வேறொரு 11
ஊழியக்காரனை அனுப்பினான்; அவனையும்
அவர்கள் அடித்து, அவமானப்படுத்தி,
வெறுங்கையாய் அனுப்பிவிட்டார்கள்.
அவன் மூன்றாம் முறையும் ஒரு ஊழியக்கா 12

ரனை அனுப்பினான்; இவனையும் காயப்
13 படுத்தித் துரத்திவிட்டார்கள். அப்பொழுது
திராட்சத்தோட்டத்து எஜமான்: நான்
என்ன செய்வேன், என் அருமையான குமா
ரனை அனுப்புவேன், ஒருவேளை அவனை மதிப்
பார்கள் என்று சொல்லிக்கொண்டான்.
14 குடியானவர்களோ அவனைக் கண்டு: இவன்
சுதந்தரவாளி, சுதந்தரம் நம்முடையதா
கும்படி இவனைக் கொன்றுபோடுவோம்
வாருங்கள் என்று ஒருவரோடொருவர்
15 பேசிக்கொண்டு, அவனைத் திராட்சத்தோட்
டத்திற்குப் புறம்பே தள்ளி, கொலைசெய்
தார்கள். இப்படியிருக்க, திராட்சத்தோட்
டத்து எஜமான் அவர்களை என்ன செய்
16 வான்? அவன் வந்து இந்தக் குடியானவர்களை
அழித்து, மற்றவர்களிடம் தோட்டத்தை
விடுவான் என்றார். அவர்கள் அதைக்கேட்டு:
ஐயோ, அப்படி வேண்டாம் என்றார்கள்.
17 அவரோ அவர்களை உற்றுப்பார்த்து: அப்
படியானால்,

வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்
ளின கல்லே
கோடிக்குத் தலைக்கல்லாயிற்று

என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின்
18 கருத்தென்ன? அந்தக் கல்லின்மேல் விழுகிற
வன் எவனும் நொறுங்கிப்போவான், அது
எவன்மேல் விழுமோ அவனை அது நசுக்கிப்
போடும் என்றார்.
19 வேதபாரகரும் பிரதான ஆசாரியரும் தங்
களைக்குறித்து இந்த உவமையைச் சொன்னா
ரென்று அறிந்து, அந்நேரத்திலே அவரைப்
பிடிக்க வகைதேடினார்கள்; ஆகிலும் ஜனங்
20 களுக்குப் பயந்திருந்தார்கள். அவர்கள்
சமயம்பார்த்திருந்து, தேசாதிபதியின் ஆளு
கைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக்
கொடுப்பதற்கேதுவாக, அவருடைய பேச்
சிலே குற்றங்கண்டுபிடிக்கும்படி தங்களை
உண்மையுள்ளவர்கள்போலக் காண்பிக்கிற
வேவுகாரரை அவரிடம் அனுப்பினார்கள்
21 அவர்கள் வந்து: போதகரே, பேசுவதிலும்
உபதேசிப்பதிலும் நீர் நேர்மையானவர்,
முகதாட்சிணியமில்லாமல் கடவுளின் மார்க்
கத்தை உண்மையாய்ப் போதிக்கிறவர், இது
22 எங்களுக்குத் தெரியும். இராயனுக்கு வரி
செலுத்துகிறது நியாயமோ அல்லவோ
23 என்று கேட்டார்கள். அவர்கள் தந்திரத்தை
24 அவர் அறிந்து, அவர்களைப் பார்த்து: | ஒரு
தினாரியத்தை எனக்குக் காட்டுங்கள்;
இதிலிருக்கும் சொரூபமும் மேலெழுத்தும்
யாருடையவை என்று கேட்க, அவர்கள்:
25 இராயனுடையவை என்றார்கள். அதற்கு
அவர்: அப்படியானால் இராயனுடையவை
களை இராயனுக்கும், கடவுளுடையவை
களைக் கடவுளுக்கும் செலுத்துங்கள் என்று
சொல்லிவிட்டார். ஜனங்களுக்கு முன்பாக 26
அவரைப் பேச்சிலே குற்றங்கண்டுபிடிக்க
முடியாமல், அவர் சொன்ன மறுமொழி
யைக் கேட்டு அவர்கள் ஆச்சரியப்பட்டு,
மவுனமாயிருந்தார்கள்.
உயிர்த்தெழுதல் இல்லையென்று சாதிக்கிற 27
சதுசேயரில் சிலர் அவரிடம் வந்து: போத 28
கரே, ஒருவன் மனைவியையுடையவனா
யிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால்,
அவனுடைய சகோதரன் அவன் மனைவியை
விவாகஞ்செய்து, தன் சகோதரனுக்குச் சந்
தானமுண்டாக்கவேண்டும் என்று மோசே
எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே. |
சகோதரர் ஏழு பேர் இருந்தார்கள். அவர் 29
களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகஞ்
செய்து பிள்ளையில்லாமல் இறந்துபோனான்.
பின்பு இரண்டாம் சகோதரனும், மூன்றாம் 30
சகோதரனும் முறையே அவளை விவாகஞ்
செய்தார்கள். அப்படியே ஏழு பேரும் 31
அவளை விவாகஞ்செய்து பிள்ளையில்லாமல்
இறந்துபோனார்கள். பின்பு அந்தப் 32
பெண்ணும் இறந்துபோனாள். இப்படி 33
யிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில்
எவனுக்கு அவள் மனைவியாவாள்? ஏழு
பேரும் அவளை மனைவியாகக் கொண்டிருந்
தார்களே என்று கேட்க, | இயேசு: இந்த 34
யுகத்தின் பிள்ளைகள் பெண் கொண்டும்
பெண் கொடுத்தும் வருகிறார்கள். அந்த 35
யுகத்தையும் மரித்தோரிலிருந்து எழுந்
திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்
ணப்படுவோர் கொள்வதுமில்லை கொடுப்பது
மில்லை. இனி அவர்கள் மரிக்கவுமாட் 36
டார்கள், அவர்கள் தேவதூதரைப்போலா
வார்கள். அவர்கள் உயிர்த்தெழுதலின்
பிள்ளைகளானதால் கடவுளின் பிள்ளைகளுமா
யிருக்கிறார்கள். மரித்தோர் எழுப்பப்படு 37
வார்கள் என்பதை மோசேயும் முட்செடி
யைப்பற்றிய வாசகத்தில் தெரியக் காட்டி
யிருக்கிறான். கர்த்தரை ஆபிரகாமின்
கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின்
கடவுள் என்று சொல்லியிருக்கிறானே.
அவர் மரித்தோரின் கடவுளல்ல, ஜீவனுள் 38
ளோரின் கடவுளே; அவருக்கு எல்லாரும்
ஜீவனுள்ளவர்களே என்றார். அப்பொழுது 39
வேதபாரகரில் சிலர் அதைக் கேட்டு:
போதகரே, நன்றாய்ச் சொன்னீர் என்றார்கள்.
அதன் பின்பு அவர்கள் அவரிடம் ஒன்றும் 40
கேட்கத் துணியவில்லை.
அவரோ அவர்களிடம்: கிறிஸ்து தாவீ 41
தின் குமாரன் என்று எப்படிச் சொல்லு

42 கிறார்கள்? தாவீதுதானே சங்கீத புஸ்தகத்
தில்:
கர்த்தர் என் ஆண்டவரிடம்:
43 நான் உம்முடைய சத்துருக்களை
உமக்குப் பாதபடியாக்கிப் போடுமட்
டும்
நீர் என் வலது பாரிசத்தில் உட்காரும்
என்றார்
44 எனச் சொல்லுகிறானே. தாவீது அவரை
ஆண்டவரென்று சொல்லியிருக்க, அவ
னுக்கு அவர் குமாரனாயிருப்பதெப்படி
என்றார்.
45 ஜனங்களெல்லாரும் கேட்க அவர் தம்
46 முடைய சீஷரை நோக்கி: வேதபாரகரைப்
பற்றி எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள்
நீண்ட அங்கிகளைத் தரித்துக்கொண்டு திரிய
விரும்புகிறார்கள். சந்தைவெளிகளில் வந்
தனங்களையும், ஜெபாலயங்களில் முதல் ஆச
னங்களையும், விருந்துகளில் முதல் இடங்
47 களையும் விரும்புகிறார்கள். விதவைகளின்
வீடுகளைப் பட்சிக்கிறார்கள்; பார்வைக்கோ
நீண்ட ஜெபஞ்செய்கிறார்கள். அவர்கள்
அதிகத் தண்டனை பெறுவார்கள் என்றார்.

21 அவர் கண்களை ஏறெடுத்து ஐசுவரிய
வான்கள் காணிக்கைப்பெட்டியிலே தங்கள்
காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார்.
2 ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு
3 காசைப் போடுகிறதையும் கண்டு: மற்றெல்
லாரிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப்
போட்டாள் என்று உண்மையாக உங்களுக்
4 குச் சொல்லுகிறேன். அவர்களெல்லாரும்
தங்கள் செல்வப் பெருக்கத்திலிருந்தெடுத்
துக் காணிக்கையில் போட்டார்கள்;
இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவ
னத்துக்கானதையெல்லாம் போட்டுவிட்
டாள் என்றார்.
5 சிறந்த கற்களினாலும் பொருத்தனைப்
பொருள்களினாலும் தேவாலயம் அலங்கரிக்
கப்பட்டிருக்கிறதென்று சிலர் சொன்ன
6 போது, அவர்: | நீங்கள் பார்க்கிற இவை
களில் கல்லின்மேல் கல்லிராதபடி எல்லாம்
இடிக்கப்படும் நாட்கள் வருகின்றன என்
7 றார். அவர்கள் அவரைப் பார்த்து: போத
கரே, இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?
இவைகள் சம்பவிக்கும் காலத்துக்கு அடை
8 யாளம் என்ன என்று கேட்க, | அவர்: நீங்
கள் வஞ்சிக்கப்படாதபடி எச்சரிக்கையா
யிருங்கள்; நானே அவர் என்று என் நாமத்
தைக்கொண்டு அநேகர் வருவார்கள், காலம்
சமீபித்தது என்றும் சொல்லுவார்கள்; அவர்
9 களுக்குப் பின்செல்லாதேயுங்கள். யுத்தங்
களையும் கலகங்களையும்பற்றி நீங்கள் கேள்
விப்படும்போது, திகிலடையாதேயுங்கள்.
இவைகள் முன்னதாகச் சம்பவிக்கவேண்டி
யதே; முடிவு உடனே வராது என்றார்.
பின்னும் அவர் அவர்களைப் பார்த்து: 10
ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்
துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்.
இங்குமங்கும் மகா பூமியதிர்ச்சிகளும், 11
கொள்ளைநோய்களும், பஞ்சங்களும் உண்
டாகும்; வானத்திலிருந்து பயங்கரமான
தோற்றங்களும் பெரிய அடையாளங்களும்
உண்டாகும். இவைகளெல்லாம் நடப்ப 12
தற்குமுன் என் நாமத்தினிமித்தம் அவர்கள்
உங்களைப் பிடித்து, ராஜாக்கள் முன்பாக
வும் அதிபதிகள் முன்பாகவும் உங்களைக்
கொண்டுபோய், ஜெபாலயங்களுக்கும்
சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்துத்
துன்பப்படுத்துவார்கள். நீங்கள் சாட்சியா 13
யிருப்பதற்கு இது ஏதுவாயிருக்கும். ஆகை 14
யால், என்ன உத்தரவு சொல்லுவோமென்று
முன்னதாகவே கவலைப்படாதிருக்கும்படி
உங்கள் மனத்தில் நிர்ணயம்பண்ணிக்கொள்
ளுங்கள். உங்கள் விரோதிகள் யாவரும் 15
எதிர்பேசவும் எதிர்நிற்கவும் முடியாத வாக்
கையும் ஞானத்தையும் நானே உங்களுக்
குக் கொடுப்பேன். உங்கள் பெற்றோரும், 16
சகோதரரும், பந்துஜனங்களும், சிநேகிதரும்
உங்களை ஒப்புக்கொடுப்பார்கள்; உங்களில்
சிலரைக் கொலைசெய்வார்கள். என் நாமத்தி 17
னிமித்தம் எல்லாரும் உங்களைப் பகைப்
பார்கள். ஆயினும், உங்கள் தலைமயிரில் 18
ஒன்றாகிலும் அழியாது. நீங்கள் நிலைநிற்ப 19
தினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்
கொள்வீர்கள்.
சேனைகள் எருசலேமைச் சூழ்ந்திருப் 20
பதை நீங்கள் காணும்போது, அது பாழா
குங்காலம் சமீபமென்று அறியுங்கள். அப் 21
பொழுது யூதேயாவிலுள்ளவர்கள் மலைக
ளுக்கு ஓடிப்போகட்டும், எருசலேமிலிருக்
கிறவர்கள் வெளியேறிப்போகட்டும்; நாட்
டுப்புறங்களிலிருக்கிறவர்கள் அதனுள் வரா
திருக்கட்டும். எழுதியிருக்கிற யாவும் நிறை 22
வேறும்படி, பழிவாங்கும் நாட்கள் அவை
களே. அந்நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் 23
பால் கொடுக்கிறவர்களுக்கும், ஐயோ!
பரிதாபம்! பூமியில் மிகுந்த இடுக்கணும்,
இந்த ஜனத்தின்மேல் கோபமும் உண்டாயி
ருக்கும்; பட்டயக்கருக்கினால் விழுவார்கள்; 24
சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்
போவார்கள்; புறஜாதியாரின் காலங்கள்
நிறைவேறும் வரைக்கும் எருசலேம் புற
ஜாதியாரால் மிதிக்கப்பட்டதாயிருக்கும்.

25 சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்
களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமி
யில் சமுத்திரமும் அலைகளும் முழங்குவ
தால் ஜனங்கள் தத்தளித்து மனங்கலங்கு
26 வார்கள். வானத்தின் சத்துவங்கள் அசைக
கப்படும்; ஆதலால் பூமியில் வரும் ஆபத்து
களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால்
மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்.
27 அப்பொழுது மனுஷகுமாரன் வல்லமை
யோடும் மிகுந்த மகிமையோடும் மேகத்தில்
28 வருகிறதைக் காண்பார்கள். இவைகள்
சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள்
மீட்பு சமீபித்ததென்று நீங்கள் நிமிர்ந்து
பார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள்
என்றார்.
29 ஒரு உவமையையும் அவர்களுக்குச்
சொன்னார்: அத்திமரத்தையும் மற்றெல்லா
30 மரங்களையும் பாருங்கள். அவைகள் துளிர்
விடுகிறதை நீங்கள் காணும்போது, வசந்த
காலம் சமீபமென்று அறிந்துகொள்ளு
31 கிறீர்கள். அப்படியே நீங்களும் இவைகள்
சம்பவிக்கிறதைக் காணும்போது, கடவுள்
ராஜ்யம் சமீபமென்று அறிந்துகொள்
32 ளுங்கள். எல்லாம் சம்பவித்துத் தீரும்
வரை இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
33 வானமும் பூமியும் ஒழிந்துபோம், என்
வார்த்தைகளோ ஒருபோதும் ஒழிந்துபோவ
தில்லை.
34 உங்கள் இருதயங்கள் பெருந்தீனியினா
லும் வெறியினாலும் லௌகீகக் கவலைகளினா
லும் எப்போதாகிலும் பாரமடையாதபடி
உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.
இல்லாவிட்டால், அந்த நாள் திடீரெனக்
கண்ணியைப்போல் உங்கள்மேல் வரும்.
35 அது பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்
36 மேலும் வந்தே தீரும். ஆகையால் இனிச்
சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம்
நீங்கள் தப்பவும், மனுஷகுமாரன் முன்
னிலையில் நிற்கவும் வல்லமை பெறும்
படி எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்
திருங்கள் என்றார்.
37 அவர் பகற்காலங்களில் தேவாலயத்திலே
உபதேசம்பண்ணிக்கொண்டிருந்து, இராக்
காலங்களில் வெளியே போய், ஒலிவம் என்
38 னும் மலையிலே தங்குவார். ஜனங்களெல்
லாரும் அவர் உபதேசத்தைக் கேட்க அதி
காலமே தேவாலயத்தில் அவரிடம் வந்து
கூடுவார்கள்.

22 பஸ்கா எனப்பட்ட புளிப்பில்லாத
2 அப்பப் பண்டிகை சமீபித்தது. அப்
பொழுது பிரதான ஆசாரியரும் வேத
பாரகரும், ஜனங்களுக்குப் பயந்திருந்தபடி
யால், அவரைக் கொலைசெய்வது எப்படி
என்று வகை தேடினார்கள்.
பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்து 3
என்னும் யூதாசுக்குள் சாத்தான் புகுந்
தான். அவன் பிரதான ஆசாரியரிடத்திலும் 4
சேனைத்தலைவரிடத்திலும் போய், அவரைக்
காட்டிக்கொடுக்கும் வகையைக் குறித்து
அவர்களோடே ஆலோசனைபண்ணினான்.
அவர்கள் சந்தோஷப்பட்டு அவனுக்குப் 5
பணங்கொடுக்க உடன்பட்டார்கள். அவன் 6
அதற்குச் சம்மதித்து, ஜனக்கூட்டமில்லாத
வேளையில் அவரைக் காட்டிக் கொடுப்பதற்
குச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான்.
பஸ்கா ஆட்டைப் பலியிடவேண்டிய 7
புளிப்பில்லாத அப்பப் பண்டிகைநாள்
வந்தது. அப்பொழுது அவர் பேதுருவை 8
யும் யோவானையும் அழைத்து: நாம் பஸ்கா
வைப் புசிக்கும்படி நீங்கள்போய் நமக்கு
ஆயத்தம்பண்ணுங்கள் என்றார். அவர்கள்: 9
நாங்கள் எங்கே ஆயத்தம்பண்ண விரும்பு
கிறீர் என்று கேட்க, | அவர்: நீங்கள் 10
நகரத்திற்குள் போகும்போது தண்ணீர்க்
குடம் சுமந்துவருகிற ஒருவன் அங்கே
உங்களுக்கு எதிர்ப்படுவான், நீங்கள் அவ
னைத் தொடர்ந்துபோய் அவன் செல்லும்
வீட்டிற்குள் நீங்களும் சென்று, அந்த 11
வீட்டெஜமானிடம்: நான் என் சீஷரோடு
பஸ்காவைப் புசிக்கும் அறை எங்கே
என்று போதகர் உம்மிடம் கேட்கிறார்
என்று சொல்லுங்கள். கம்பளம் முதலான 12
வைகள் விரித்திருக்கிற பெரிய மேல்
அறையை அவன் உங்களுக்குக் காண்பிப்
பான், அங்கே ஆயத்தம்பண்ணுங்கள்
என்று சொன்னார். அவர்கள் போய், 13
தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டு,
பஸ்காவை ஆயத்தம்பண்ணினார்கள்.
வேளை வந்தபோது, அவரும் அவருடன் 14
அப்போஸ்தலரும் பந்தியமர்ந்தார்கள். அப் 15
பொழுது அவர் அவர்களிடம்: நான் பாடு
படுகிறதற்கு முன்னே உங்களுடனேகூட
இந்தப் பஸ்காவைப் புசிக்க மிகவும் ஆசை
கொண்டிருந்தேன். கடவுள் ராஜ்யத்தில் 16
இது நிறைவேறுமளவும் நான் இனி
இதைப் புசிப்பதேயில்லையென்று உங்களுக்
குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, பாத் 17
திரத்தை எடுத்து, நன்றிசெலுத்தி: நீங்கள்
இதை வாங்கி உங்களுக்குள்ளே பங்கிட்டுக்
கொள்ளுங்கள். கடவுள் ராஜ்யம் வருமள 18
வும் இனி நான் திராட்சப்பழரசத்தைப்
பானம்பண்ணுவதில்லையென்று உங்களுக்

19 குச் சொல்லுகிறேன் என்றார். பின்பு அவர்
அப்பத்தை எடுத்து, நன்றிசெலுத்தி, அதைப்
பிட்டு, அவர்களிடம் கொடுத்து: இது உங்க
ளுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய
சரீரம்; என்னை நினைவுகூரும்படி இதைச்
20 செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணின
பின்பு அவர் அப்படியே பாத்திரத்தையும்
கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்கா
கச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தி
னாலாகும் புதிய உடன்படிக்கை என்றார்.
21 பின்னும்: இதோ, என்னைக் காட்டிக்
கொடுக்கிறவன் கை என்னுடனே பந்தியி
22 லிருக்கிறது. தீர்மானிக்கப்பட்டிருக்கிற
படியே மனுஷகுமாரன் போகிறார்; என்றா
லும், எந்த மனுஷன் அவரைக் காட்டிக்
கொடுக்கிறானோ, ஐயோ! அவனுக்குக் கேடு
23 வரும் என்றார். அப்பொழுது அவர்கள்:
நம்மில் யார் இப்படிச் செய்வானென்று
தங்களுக்குள் விசாரிக்கத் தொடங்கி
னார்கள்.
24 அன்றியும் தங்களில் எவன் பெரியவனாக
எண்ணப்படுவான் என்று அவர்களுக்
குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று.
25 அவரோ அவர்களிடம்: புறஜாதியாரின்
ராஜாக்கள் அவர்கள்மேல் ஆளுகை செய்கி
றார்கள், அவர்கள்மேல் அதிகாரம் செலுத்து
கிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகி
26 றார்கள். உங்களுக்குள்ளோ அப்படி அல்ல;
உங்களில் பெரியவன் சிறியவனைப்போல
வும்; தலைவன் பணிவிடைக்காரனைப்போல
27 வும் இருக்கவேண்டும். பந்தியிருக்கிறவனோ,
பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரிய
வன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? நானோ
உங்கள் நடுவில் பணிவிடைக்காரனைப்
28 போல் இருக்கிறேன். எனக்கு நேரிட்ட
சோதனைகளில் என்னோடு நிலைத்திருந்தவர்கள்
29 நீங்களே. ஆகவே, என் பிதா எனக்கு
அரசாட்சியை ஏற்படுத்தினதுபோல,
நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்.
30 நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில்
போஜனபானம் பண்ணி, இஸ்ரவேலின்
பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்
தீர்க்கிறவர்களாகச் சிங்காசனங்களின்மேல்
31 உட்காருவீர்கள். சீமோனே, சீமோனே,
கோதுமையைச் சுளகினால் புடைக்கிறது
போல் சாத்தான் உங்களைப் புடைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.
32 நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடி
உனக்காக ஜெபித்தேன்; நீ குணப்பட்டபின்
உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்.
33 அவன்: ஆண்டவரே, காவலிலும் சாவிலும்
உம்மைப் பின்பற்றி வர ஆயத்தமாயிருக்
கிறேன் என்று சொல்ல, | அவர்: பேதுருவே, 34
இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்குமுன், நீ
என்னை அறியவில்லையென்று மூன்றுதரம்
மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லு
கிறேன் என்றார்.
பின்னும் அவர் அவர்களிடம்: பணப் 35
பையும் வேறு பையும் பாதரட்சைகளு
மில்லாமல் நான் உங்களை அனுப்பின
போது, ஏதாகிலும் உங்களுக்குக் குறை
யிருந்ததா என்று கேட்க, அவர்கள்: ஒரு
குறையுமிருந்ததில்லை என்றார்கள். பின்னும் 36
அவர்: இப்பொழுதோ பணப் பை உடை
யவன் அதை எடுத்துக்கொள்ளட்டும்,
வேறு பை உடையவனும் அப்படியே
செய்யட்டும்; பட்டயமில்லாதவன் தன்
வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்
கடவன்; அக்கிரமக்காரரில் ஒருவராக 37
எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிறது
என்னிடம் நிறைவேறித் தீரவேண்டிய
தென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; என்
னைப்பற்றியது நிறைவேறுகிறது என்றார்.
அவர்களோ: ஆண்டவரே, இதோ, இங்கே 38
இரண்டு பட்டயமுண்டு என்றார்கள்.
அவர்: போதும் போதும் என்றார்.
அவர் வெளியே வந்து, வழக்கத்தின 39
படியே ஒலிவமலைக்குப் போனார்; சீஷரும்
அவரைத் தொடர்ந்து போனார்கள். அவ் 40
விடத்தில் சேர்ந்தபோது அவர் அவர்களைப்
பார்த்து: நீங்கள் சோதனைக்குட்படாத
படி ஜெபஞ்செய்யுங்கள் என்று சொல்லி, |
அவர்களைவிட்டுப் பிரிந்து, கல்லெறிதூரம் 41
அப்புறம் போய், முழங்கால்படியிட்டு:
பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் 42
பாத்திரத்தை என்னிடமிருந்து எடுத்து
விடும்; ஆயினும் என்னுடைய சித்தமல்ல,
உம்முடைய சித்தமே ஆகக்கடவது
என்று ஜெபித்தார். அப்பொழுது வானத்தி 43
லிருந்து ஒரு தூதன் அவருக்குக் காணப்
பட்டு அவரைப் பலப்படுத்தினான். அவர் 44
மிகவும் வியாகுலப்பட்டு, இன்னும் அதிக
ஊக்கத்தோடு ஜெபித்துக்கொண்டிருந்தார்.
அவர் வேர்வை இரத்தப் பெருந்துளிகள்
போல் தரையிலே விழுந்தது. அவர் ஜெபஞ் 45
செய்து முடித்து எழுந்திருந்து, தம் சீஷரி
டம் வந்து, அவர்கள் துக்கத்தினாலே
சோர்ந்து நித்திரைசெய்கிறதைக்கண்டு:
நீங்கள் நித்திரைசெய்கிறதென்ன? சோதனைக் 46
குட்படாதபடி எழுந்திருந்து ஜெபஞ்செய்
யுங்கள் என்றார்.
அவர் இன்னும் பேசுகையில், ஒரு ஜனக் 47
கூட்டம் வந்தது. அவர்களுக்கு முன்
நடந்துவந்தவன் பன்னிருவரில் ஒருவனா

கிய யூதாஸ் என்பவனே. இவன் இயே
சுவை முத்தமிடும்படி அவரிடம் சேர, |
48 இயேசு அவனைப் பார்த்து: யூதாசே, முத்
தத்தினாலேயோ மனுஷகுமாரனைக் காட்டிக்
49 கொடுக்கிறாய் என்றார். அவரைச் சூழ
நின்றவர்கள் நேரிடப்போவதைக் கண்டு:
ஆண்டவரே, நாங்கள் பட்டயத்தினாலே
50 வெட்டலாமா என்றார்கள். அப்படியே
அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரிய
னின் வேலைக்காரனை வலதுகாதற வெட்டி
51 னான். இயேசுவோ: இம்மட்டில் நிறுத்
துங்கள் என்று சொல்லி, அவன் காதைத்
தொட்டு அவனைச் சொஸ்தப்படுத்தினார்.
52 பின்பு, இயேசு தம்மைப் பிடிக்கவந்த
பிரதான ஆசாரியரையும் தேவாலயத்துச்
சேனைத்தலைவரையும் மூப்பரையும் பார்த்து:
கள்ளனைப் பிடிக்கப்போகிறதுபோல நீங்கள்
பட்டயங்களையும் தடிகளையும் எடுத்து வந்
53 தீர்களோ? நான் தினந்தோறும் உங்களு
டனே தேவாலயத்தில் இருக்கையில் நீங்கள்
என்னைப் பிடிக்கக் கை நீட்டவில்லை; இது
வோ உங்கள் வேளை, இது அந்தகாரத்தின்
அதிகாரம் என்றார்.
54 அவர்கள் அவரைப் பிடித்து, பிரதான
ஆசாரியன் வீட்டிற்குக் கொண்டுபோ
னார்கள். பேதுரு தூரத்திலே பின்சென்
55 றான். முற்றத்திலே நெருப்பைமூட்டி அதைச்
சுற்றி உட்கார்ந்தவர்கள் நடுவில் பேதுரு
56 வும் உட்கார்ந்தான். அப்பொழுது ஒரு
வேலைக்காரி அவனை வெளிச்சத்தண்டை
யில் உட்கார்ந்திருக்கக் கண்டு, அவனை
உற்றுப் பார்த்து: இவனும் அவனோடிருந்
57 தான் என்றாள். அதற்கு அவன்: அம்மா,
அவனை எனக்குத் தெரியாது என்று மறுத
58 லித்தான். சற்றுநேரத்துக்குப்பின் வேறொரு
வன் அவனைக் கண்டு: நீயும் அவர்களில்
ஒருவன் என்றான். அதற்குப் பேதுரு:
மனுஷனே, நான் அவர்களில் ஒருவனல்ல
59 என்றான். ஏறக்குறைய ஒருமணி நேரத்துக்
குப்பின் வேறொருவன் அவனைப் பார்த்து:
மெய்யாகவே இவனும் அவனோடிருந்தான்,
இவன் கலிலேயன்தான் என்று சாதித்தான்.
60 பேதுருவோ: மனுஷனே, நீ சொல்லுகிறது
எனக்குத் தெரியாது என்றான். உடனே,
அவன் இன்னும் பேசிக்கொண்டிருக்கும்
61 போதே சேவல் கூவிற்று. அப்பொழுது
ஆண்டவர் திரும்பிப் பேதுருவை நோக்கிப்
பார்த்தார். சேவல் கூவுகிறதற்குமுன் நீ
என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று
ஆண்டவர் தன்னிடம் சொன்ன வார்த்தை
62 யைப் பேதுரு நினைத்துக்கொண்டு, வெளியே
போய் மனங்கசந்து அழுதான்.

இயேசுவைப் பிடித்திருந்த மனுஷர் 63
அவரைப் பரிகாசம்பண்ணி அடித்து, |
அவருடைய கண்களைக் கட்டி: உன்னை 64
அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டி
யினால் சொல் என்று அவரைக் கேட்டது
மன்றி, மற்றும் அநேக தூஷண வார்த்தை 65
களையும் அவருக்கு விரோதமாகச் சொன்
னார்கள்.

பொழுது விடிந்தபோது, பிரதான ஆசா 66
ரியரும் வேதபாரகருமாகிய ஜனத்தின் மூப்
பர் சபை கூட்டங்கூடி, தங்கள் ஆலோ
சனைச் சங்கத்தின்முன் அவரைக் கொண்டு
வந்து: | நீ கிறிஸ்துவா, அதை எங்களுக்குச் 67
சொல் என்றார்கள். அவரோ: நான் உங்
களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள்;
நான் வினவினாலும் எனக்கு விடையளிக்க 68
மாட்டீர்கள்; ஆயினும், இதுமுதல் மனுஷ 69
குமாரன் வல்லமையுள்ள கடவுளின் வலது
பாரிசத்தில் வீற்றிருப்பார் என்றார். அதைக் 70
கேட்ட யாவரும்: அப்படியானால் நீ தேவ
குமாரனா என்று கேட்க, அவர்: நீங்கள்
சொல்லுகிறபடியே நான் அவர்தான் என்
றார். அப்பொழுது அவர்கள்: இனி வேறு 71
சாட்சி நமக்கு வேண்டுமா? இவன் வாயி
லிருந்து நாமே கேட்டோம் என்றார்கள்.

அவர்களைச் சேர்ந்த ஜனத்திரளெல்லாம் 23
எழுந்திருந்து, அவரைப் பிலாத்துவினிடம்
கொண்டுபோய், அவர்மேல் குற்றஞ்சாட் 2
டத் தொடங்கி: இவன் எங்கள் ஜனத்துக்
குள் கலகம் உண்டாக்குகிறான்; இராய
னுக்கு வரி கொடுக்கவேண்டியதில்லை என்
கிறான்; தன்னைக் கிறிஸ்து ராஜா என்கிறான்;
இவற்றைநாங்களே கண்டோம்என்றார்கள்.
பிலாத்து அவரைப் பார்த்து: நீ யூதரு 3
டைய ராஜாவா என்று கேட்க, அவர் அவ
னிடம்: நீர் சொல்லுகிறபடிதான் என்றார்.
அப்பொழுது பிலாத்து பிரதான ஆசாரியர் 4
களையும் ஜனங்களையும் நோக்கி: இந்த மனு
ஷனில் நான் ஒரு குற்றமும் காணவில்லை
என்றான். அவர்களோ: இவன் கலிலேயா 5
நாடு தொடங்கி இவ்விடம் வரைக்கும்
யூதேயா தேசமெங்கும் உபதேசம்பண்ணி,
ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகி
றான் என்று வற்புறுத்திச் சொன்னார்கள்.
பிலாத்து இதைக் கேட்டபொழுது: இவன் 6
கலிலேயனோ என்று விசாரித்து, அவர் 7
ஏரோதுவின் அதிகாரத்துக்குட்பட்டவர்
என்றறிந்து, அந்நாட்களில் எருசலேமில்
வந்திருந்த ஏரோதுவினிடத்திற்கு அவரை
அனுப்பினான். ஏரோது இயேசுவைக் கண்ட 8
போது, மிகவும் சந்தோஷப்பட்டான்; அவ

ரைப்பற்றி அநேக காரியங்களைக் கேள்விப்
பட்டிருந்தபடியால், அவர் செய்யும் ஏதாவது
அடையாளத்தைப் பார்க்கவேண்டுமென்று
விரும்பி, அவரைக் காணும்படி வெகு
9 நாளாய் ஆசித்து நோக்கியிருந்தான். ஆகவே,
அவரிடம் அநேக கேள்விகளைக் கேட்டு விசா
ரித்தான். அவர் அவனுக்கு மறுமொழி ஒன்
10 றும் சொல்லவில்லை. பிரதான ஆசாரியரும்
வேதபாரகரும் அவர்மேல் ஒரே நிலையாய்க்
குற்றஞ்சாட்டிக்கொண்டே நின்றார்கள்.
11 அப்பொழுது ஏரோது தன் போர்ச்சேவகரோ
டுங்கூட அவரை அலட்சியஞ்செய்து, பரிகா
சம்பண்ணி, பளபளப்பான வஸ்திரத்தை
அவருக்கு உடுத்தி, அவரைத் திரும்பப்
12 பிலாத்துவினிடம் அனுப்பினான். முன்னே
ஒருவருக்கொருவர் பகைவராயிருந்த பிலாத்
துவும் ஏரோதுவும் அன்றையதினம் சிநேகித
ரானார்கள்.
13 பிலாத்து பிரதான ஆசாரியரையும் அதிகா
ரிகளையும் ஜனங்களையும் கூடிவரச்செய்து, |
14 அவர்களைப் பார்த்து: ஜனங்களைக் கல
கத்துக்குத் தூண்டிவிடுகிறவனென்று
இந்த மனுஷனை என்னிடம் கொண்டு
வந்தீர்கள்; நான் உங்களுக்குமுன்
விசாரித்தபோது, நீங்கள் சாட்டுகிற
குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடம்
15 காணவில்லை; ஏரோதுவும் குற்றம் காண
வில்லை; இவனை நம்மிடம் திரும்ப
அனுப்பினாரே; மரணத்துக்கேதுவாக
16, இவன் ஒன்றும் செய்யவில்லை; ஆகவே,
17 இவனைத் தண்டித்து விடுதலையாக்குவேன்
18 என்றான். ஜனங்கள் ஒரேசத்தமாய்: இவ
னைத் தொலைத்துவிடும், பரபாசை எங்க
ளுக்கு விடுதலையாக்கிவிடும் என்று கூச்ச
19 லிட்டார்கள். அந்தப் பரபாசோ நகரத்தில்
நடந்த ஒரு கலகத்தினிமித்தமும் கொலை
பாதகத்தினிமித்தமும் காவலிலே வைக்கப்
20 பட்டிருந்தவன். இயேசுவை விடுதலையாக்க
வேண்டுமென்று பிலாத்து மறுபடியும்
21 அவர்களிடம் பேச, | அவர்கள்: அவனைச்
சிலுவையில் அறையும், சிலுவையில் அறை
22 யும் என்று கூக்குரலிட்டார்கள். அவன்
மூன்றாந்தரம் அவர்களை நோக்கி: ஏன்,
இவன் என்ன பொல்லாப்புச் செய்தான்?
மரணத்துக்கேதுவான குற்றமொன்றும் இவ
னிடம் நான் காணவில்லையே; நான் இவ
னைத் தண்டித்து விடுதலையாக்குவேன் என்
23 றான். அப்படியிருந்தும், அவரைச் சிலு
வையில் அறையவேண்டுமென்று அவர்கள்
உரத்த சத்தமிட்டு, விடாப்பிடியாய்க் கேட்
டார்கள். அவர்கள் சத்தம் மேற்கொண்
24 டது அவர்கள் கேட்டுக்கொண்டபடியே
ஆகட்டும் என்று பிலாத்து தீர்ப்புச்செய்து,
கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தி 25
னிமித்தமும் காவலில் வைக்கப்பட்டிருந்த
வனை அவர்கள் கேட்டுக்கொண்டபடியே
விடுதலை செய்து, இயேசுவையோ அவர்கள்
இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான்.
அவர்கள் அவரைக் கொண்டுபோகையில், 26
வயல்வெளியிலிருந்து வருகிற சிரேனே ஊரா
னாகிய சீமோனைப் பிடித்து, சிலுவையை
இயேசுவின் பின்னே சுமந்துகொண்டுவரும்
படி அதை அவன்மேல் வைத்தார்கள்.
திரள் ஜனங்களும் அவருக்காக மாரடித் 27
துப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவர்
பின்னே போனார்கள். இயேசுவோ அவர்கள் 28
முகமாய்த் திரும்பி: எருசலேமின் குமா
ரத்திகளே, நீங்கள் என் நிமித்தம் அழா
மல், உங்கள் நிமித்தமும் உங்கள் பிள்ளைகள்
நிமித்தமும் அழுங்கள். மலடிகள் பாக்கிய 29
வதிகளென்றும், பிள்ளைபெறாத கர்ப்பங்
களும் பால்கொடாத முலைகளும் பாக்கிய
முள்ளவைகளென்றும் சொல்லப்படும் நாட்
கள் வரும். அப்பொழுது மலைகளை நோக்கி: 30
எங்கள்மேல் விழுங்களென்றும், குன்றுகளை
நோக்கி: எங்களை மறைத்துக்கொள்ளுங்க
ளென்றும் சொல்லத் தொடங்குவார்கள்.
பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், 31
பட்டமரத்துக்கு என்ன செய்யப்படும்
என்றார்.
அவரோடேகூடக் கொல்லப்படுவதற் 32
குக் குற்றவாளிகளாகிய வேறே இரண்டு
பேரையும் கொண்டுபோனார்கள்.
கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட 33
இடத்திற்கு அவர்கள் வந்தபோது, அங்கே
அவரையும், அவருடைய வலதுபக்கத்தில்
ஒரு குற்றவாளியையும், அவருடைய இடது
பக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவை
களில் அறைந்தார்கள். அப்பொழுது 34
இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும்,
தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியா
திருக்கிறார்களே என்றார். அவர்கள் சீட்டுப்
போட்டு அவர் வஸ்திரங்களைப் பங்கிட்டுக்
கொண்டார்கள். ஜனங்கள் நின்று பார்த் 35
துக்கொண்டிருந்தார்கள். அதிகாரிகளும்:
இவன் மற்றவர்களை இரட்சித்தான்; இவன்
கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட கிறிஸ்து
வானால், தன்னைத்தானே இரட்சித்துக்கொள்
ளட்டும் என்று இகழ்ந்து பேசினார்கள்.
போர்ச்சேவகரும் கிட்டவந்து, புளிப்பான 36
காடியை அவரிடம் நீட்டி: | நீ யூதருடைய 37
ராஜாவானால், உன்னை நீயே இரட்சித்துக்
கொள் என்று அவரைப் பரிகாசம்பண்ணி
னார்கள். இவன் யூதருடைய ராஜா 38

என்று எழுதி அவருக்குமேலே வைக்கப்
பட்டிருந்தது.
39 சிலுவையில் தொங்கின குற்றவாளிகளில்
ஒருவன்: நீ கிறிஸ்துதானே! உன்னையும்
எங்களையும் இரட்சித்துக்கொள் என்று
40 அவரைத் தூஷித்தான். மற்றவனோ அவனை
நோக்கி: நீயும் இதே ஆக்கினைக்குட்பட்ட
வனாயிருக்கிறாயே, கடவுளுக்குப் பயப்படு
41 கிறதில்லையா? நாம் நியாயமாய்த் தண்டிக்கப்
படுகிறோம், நாம் செய்தவைகளுக்குத் தக்க
பலனை அடைகிறோம்; இவரோ தகாத
தொன்றையும் செய்யவில்லையே என்று
42 அவனைக் கண்டித்து,| பின்னும்: இயேசுவே
நீர் உமது ராஜ்யத்தில் வரும்போது அடி
யேனை நினைத்தருளும் என்று சொல்ல,|
43 அவர்: இன்றைக்கு நீ என்னுடனேகூடப்
பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே
உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.
44 ஏறக்குறைய ஆறாம் மணி நேரமாயிருந்
தது; ஒன்பதாம் மணி நேரம்வரைக்கும் பூமி
45 யெங்கும் அந்தகாரமுண்டாயிற்று. சூரியன்
இருண்டது, தேவாலயத்தின் திரை நடுவில்
46 இரண்டாகக் கிழிந்தது. அப்பொழுது
இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில்
என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா
சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்
47 படிச் சொல்லி ஜீவனை விட்டார். நூற்றுக்
கதிபதி சம்பவித்ததைக் கண்டு: மெய்யாகவே
இந்த மனுஷன் நீதிபரன் என்று சொல்
48 லிக் கடவுளை மகிமைப்படுத்தினான். இந்
தக் காட்சியைப் பார்க்கக் கூடிவந்திருந்த
ஜனங்களெல்லாரும் சம்பவித்தவைகளைப்
பார்த்தபொழுது, தங்கள் மார்பில் அடித்
49 துக்கொண்டு திரும்பினார்கள். அவருக்கு
அறிமுகமானவர்களெல்லாரும், கலிலேயா
விலிருந்து அவரைப் பின்தொடர்ந்துவந்த
ஸ்திரீகளும் இவைகளைப் பார்த்துக்கொண்டு
தூரத்திலே நின்றார்கள்.
50 யோசேப்பு என்னும் பேர்கொண்ட ஒரு
வன் இருந்தான். இவன் யூதநாட்டு அரிமத்
தியா ஊரிலிருந்து வந்தவன், ஆலோசனைச்
சங்கத்தாரில் ஒருவன், உத்தமன், நீதிமான்;
51 மற்றவர்களுடைய ஆலோசனைக்கும் செய்
கைக்கும் சம்மதியாதவன்; கடவுளின் ராஜ்
52 யம் வரக் காத்திருந்தவன். இவன் பிலாத்து
வினிடம் போய், இயேசுவின் சரீரத்தைக்
53 கேட்டு, | அதை இறக்கி, மெல்லிய துணி
யிலே சுற்றி, கற்பாறையில் வெட்டியிருந்த
ஒரு கல்லறையிலே அவரை வைத்தான்.
அதில் ஒருவனையும் ஒருகாலும் அடக்கஞ்
54 செய்ததில்லை. அந்த நாள் ஆயத்தநாள்;
ஓய்வுநாள் ஆரம்பிக்கிற நேரமுமாயிற்று.

கலிலேயாவிலிருந்து அவருடனேகூட வந் 55
திருந்த ஸ்திரீகளும் பின்சென்று, கல்லறை
யையும் அவருடைய சரீரத்தை வைத்த
விதத்தையும் பார்த்துவிட்டு, திரும்பிப்போய், 56
சுகந்தவர்க்கங்களையும் பரிமள தைலங்களை
யும் ஆயத்தஞ்செய்து, கற்பனையின்படியே
ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையில் **24**
தாங்கள் ஆயத்தஞ்செய்த சுகந்தவர்க்கங்களை
அவர்கள் எடுத்துக்கொண்டு கல்லறைக்கு
வந்தபோது, கல்லறையிலிருந்து கல் புரட் 2
டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்
டார்கள். உள்ளே சென்றபோதோ ஆண்டவ 3
ராகிய இயேசுவின் சரீரத்தைக் காணவில்லை.
அதைப்பற்றி அவர்கள் மிகவும் கலங்கிக் 4
கொண்டிருக்கையில், பிரகாசமுள்ள வஸ்தி
ரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே
வந்து நின்றார்கள். அந்த ஸ்திரீகள் பயந்து 5
தலைகுனிந்து தரையைப் பார்த்துக்கொண்டு
நிற்கையில், அந்த இருவரும் அவர்களை
நோக்கி: உயிரோடிருக்கிறவரை நீங்கள்
மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் 6
இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்.
அவர் கலிலேயாவிலிருக்கும்போது உங்களுக்
குச் சொன்னதை நினைத்துக்கொள்ளுங்கள்.
மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் 7
கைகளில் ஒப்புக் கொடுக்கப்பட்டு, சிலு
வையில் அறையுண்டு, மூன்றாம்நாள் எழுந்
திருக்கவேண்டியதென்று சொன்னாரே என்
றார்கள். அப்பொழுது அவர் வார்த்தை 8
களை அவர்கள் நினைவுகூர்ந்து, கல்லறையை 9
விட்டுத் திரும்பி, இந்தச் சங்கதிகளெல்லா
வற்றையும் பதினொருவருக்கும் மற்ற யாவருக்
கும் அறிவித்தார்கள். இவர்கள், மகதலேனா 10
மரியாளும் யோவன்னாளும் யாக்கோபின்
தாயாகிய மரியாளுமே. இவர்களும் இவர்
களோடிருந்த மற்ற ஸ்திரீகளும் இவைகளை
அப்போஸ்தலருக்குச் சொன்னார்கள். இவ் 11
வார்த்தைகள் அவர்களுக்கு வீண்பேச்சா
கத்தோன்றினதினால் இவர்களை அவர்கள் நம்ப
வில்லை. பேதுருவோ எழுந்திருந்து, கல் 12
லறைக்கு ஓடி அதற்குள்ளே குனிந்து
பார்க்கையில், துணிகள் மாத்திரம் அங்கே
இருக்கக் கண்டு சம்பவித்ததைப்பற்றி ஆச்
சரியப்பட்டுக்கொண்டு வீட்டுக்குப் போய்
விட்டான்.

அவர்களில் இரண்டு பேர் அன்றைய 13
தினமே எருசலேமுக்கு ஏழு எட்டுமைல்
தூரமான எம்மாவு என்னும் கிராமத்துக்
குப்போனார்கள். போகையில் இந்த வர்த்த 14
மானங்கள் யாவையுங்குறித்து அவர்கள்

ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.
15 இப்படி அவர்கள் பேசிச் சம்பாஷித்
துக்கொண்டு நடக்கையில், இயேசு தாமே
சேர்ந்து அவர்களோடேகூட நடந்துபோனார்.
16 ஆனாலும் அவரை இன்னாரென்று அறிந்து
கொள்ளாதபடி அவர்கள் கண்கள் மறைக்
17 கப்பட்டிருந்தன. அவர் அவர்களிடம்:
நீங்கள் வழிநடந்து ஒருவருக்கொருவர்
சொல்லிக்கொள்ளுகிற இந்தக் காரியங்கள்
என்னவென்று கேட்க, அவர்கள் முகம்
18 வாடி நின்றுவிட்டார்கள். அவர்களில் கிலெ
யோப்பா எனப்பட்ட ஒருவன்: எருசலே
மில் தங்கியிருந்தும் இந்நாட்களில் அங்கு
நடந்தவைகளை நீர் மாத்திரம் அறியாமலிருக்
19 கிறீரோ என்று பதில் சொன்னான். அவர்:
எவைகள் என்று கேட்க, அவர்கள்: நசரேய
னாகிய இயேசுவைப்பற்றிய சங்கதிகளே.
அவர் கடவுளுக்கு முன்பாகவும் எல்லா
ஜனத்துக்கு முன்பாகவும் செய்கையிலும்
வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கதரிசியா
20 யிருந்தார். பிரதான ஆசாரியரும் நம்
முடைய அதிகாரிகளும் அவரை மரண
ஆக்கினைக்குள்ளாக ஒப்புக்கொடுத்து, சிலு
21 வையில் அறைந்தார்கள். நாங்களோ இஸ்ர
வேலை மீட்கப்போகிறவர் இவரே என்று
எதிர்பார்த்து நம்பியிருந்தோம். அதுவு
மன்றி இவைகள் சம்பவித்து இன்று
22 மூன்றாம் நாளாகிறது. அதுமாத்திர
மல்ல, எங்களைச் சேர்ந்த சில ஸ்திரீகளும்
23 அதிகாலமே கல்லறைக்குப் போய், அவரு
டைய சரீரத்தைக் காணாமல் திரும்பிவந்து,
அவர் உயிரோடிருக்கிறார் என்று சொன்ன
தேவதூதரைத் தரிசித்தோம் என்று சொல்லி
24 எங்களைப் பிரமிக்கப்பண்ணினார்கள். எங்
களோடிருந்தவர்களில் சிலர் கல்லறைக்குப்
போய், ஸ்திரீகள் சொன்னபடியே இருக்கக்
கண்டார்கள்; அவரையோ காணவில்லை என்
25 றார்கள். அப்பொழுது அவர் அவர்களை
நோக்கி: புத்தியில்லாதவர்களே, தீர்க்க
தரிசிகள் சொன்ன யாவையும் நம்பமாட்
26 டாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து
இவ்விதமாகப் பாடுபட்டு, தமது மகிமை
யில் பிரவேசிக்கவேண்டியதில்லையா என்று
27 சொல்லி, மோசேயிலும் சகல தீர்க்கதரிசி
களிலும் இருந்து தொடங்கி, எல்லா ஆகமங்
களிலும் தம்மைப்பற்றி எழுதியிருந்தவை
களை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.
28 அவர்கள் போகும்கிராமத்தைச் சமீபிக்கவே,
அவர் அதற்கப்பால் போகிறவர்போல் தம்
29 மைக் காண்பித்தார். அவர்களோ: நீர் எங்க
ளுடனே தங்கியிரும், சாயங்காலமாயிற்று,
பொழுதும் போயிற்று என்று அவரை வருந்

திக் கேட்டுக்கொள்ள, அவர் அவர்களுடனே
தங்கும்படி உள்ளே போனார். அவர்களோடே 30
அவர் பந்தியிருக்கையில் அவர் அப்பத்தை
எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்
களுக்குக் கொடுத்தார். அவர்கள் கண்கள் 31
திறக்கப்படவே, அவரை இன்னாரென்று
அறிந்தார்கள். அவரோ அவர்களுக்கு
மறைந்துபோனார். மறையவே, அவர்கள் ஒரு 32
வரையொருவர் பார்த்து: வழியிலே அவர்
நம்மோடு பேசி, வேதாகமங்களை நமக்கு
விளக்கிக்காட்டினபொழுது, நமது இருதயம்
நமக்குள்ளே கொழுந்துவிட்டு எரியவில்
லையா என்று சொல்லிக்கொண்டு, அந்நே 33
ரமே எழுந்திருந்து, எருசலேமுக்குத் திரும்
பிப்போய், பதினொருவரும் அவர்களோ
டிருந்தவர்களும் கூடியிருந்த இடத்தில்
அவர்களைக் கண்டார்கள். அவர்கள்: ஆண் 34
டவர் உண்மையாகவே உயிர்த்தெழுந்து
சீமோனுக்குத் தரிசனமானார் என்று சொன்
னார்கள். வழியில் நடந்தவைகளையும் அவர் 35
அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கையில்
தாங்கள் அவரை அறிந்துகொண்டதையும்
இவர்கள் விவரித்துச் சொன்னார்கள்.

அவர்கள் இவைகளைப்பற்றிப் பேசிக் 36
கொண்டிருக்கையில், அவர் தாமே அவர்கள்
நடுவிலே வந்து நின்று, அவர்களைப் பார்த்து:
உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர்கள் 37
திகைத்துப் பயந்து, ஒரு ஆவியைக் காண்
கிறதாக நினைத்தார்கள். அவரோ அவர்களைப் 38
பார்த்து: நீங்கள் ஏன் கலங்குகிறீர்கள்?
உங்கள் இருதயங்களில் சந்தேகம் பிறப்ப
தென்ன? நான்தான் என்று என் கைகளை 39
யும் என் கால்களையும் பாருங்கள், என்னைத்
தொட்டுப் பாருங்கள்; எனக்கு மாம்ச
மும் எலும்புகளும் இருக்கிறதாக நீங்கள்
காண்கிறீர்கள்; இவைகள் ஒரு ஆவிக்கு
இராதே என்று சொல்லி, தம்முடைய 40
கைகளையும் கால்களையும் அவர்களுக்குக்
காண்பித்தார். அவர்களோ சந்தோஷத்தி 41
னால் நம்பாமல் இன்னும் ஆச்சரியப்பட்டுக்
கொண்டிருக்கையில், அவர் அவர்களிடம்:
புசிக்க ஏதாகிலும் இங்கே உண்டா என்று
கேட்டார். அவர்கள் பொரித்த மீன்கண் 42
டத்தை அவருக்குக் கொடுக்க, அதை அவர் 43
வாங்கி அவர்கள் முன்னிலையில் புசித்தார்.

பின்பு அவர் அவர்களைப் பார்த்து: 44
மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்க
தரிசிகளின் ஆகமங்களிலும், சங்கீதங்களி
லும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைக
ளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று,
நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச்
சொல்லிவந்தவைகள் இவைகளே என்றார்.

45 அப்பொழுது வேதாகமங்களை அறிந்துகொள்
ளும்படி அவர்கள் மனத்தை அவர் திறந்து,
46 அவர்களைப் பார்த்து: | கிறிஸ்து பாடுபட்டு
மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்து எழுந்
47 திருக்கவேண்டும் என்றும், மனந்திரும்பு
தலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்
கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய
நாமத்திலே பிரசங்கிக்கப்படவேண்டும் என்
48 றும் எழுதியிருக்கிறது. இவைகளுக்கு
49 நீங்கள் சாட்சிகள். என் பிதா வாக்குத்தத்
தம்பண்ணினதை நான் உங்களுக்கு
அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்தி
லிருந்து வரும் பலத்தால் தரிப்பிக்கப்படும்
வரைக்கும் நகரத்திலேயே இருங்கள் என்
றார்.

அவர் பெத்தானியாவரைக்கும் அவர்களை 50
அழைத்துக்கொண்டுபோய், தம்முடைய
கைகளை உயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார்.
அவர்களை ஆசீர்வதிக்கையிலேயே அவர்களை 51
விட்டுப் பிரிந்து, பரலோகத்துக்கு எடுத்
துக்கொள்ளப்பட்டார். அவர்கள் அவ 52
ரைப் பணிந்துகொண்டு, மிகுந்த சந்தோஷ
மாய் எருசலேமுக்குத் திரும்பிவந்து,
நாடோறும் தேவாலயத்திலே கடவுளைப் 53
புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள்.

யோவான் சுவிசேஷம்

1 ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த
வார்த்தை கடவுளோடிருந்தது; அந்த
2 வார்த்தை கடவுளுமாயிருந்தது. அவர்
ஆதியிலே கடவுளோடிருந்தார்.
3 சகலமும் அவர் மூலமாய் உண்டா
யிற்று; உண்டானதொன்றும் அவரையல்லா
4 மல் உண்டாகவில்லை. அவரில் ஜீவன் இருந்
தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியா
5 யிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்
கிறது, இருள் அதை மேற்கொள்ளவில்லை.
6 கடவுளிடத்திலிருந்து அனுப்பப்பட்ட
ஒரு மனுஷன் வந்தான். அவன் பேர்
7 யோவான். தன் மூலமாய் எல்லாரும் விசு
வாசிக்கவேண்டுமென்று அந்த ஒளியைக்
குறித்துச் சாட்சி கொடுக்க அவன் சாட்சி
8 யாக வந்தான். அவன் அந்த ஒளியல்ல;
அந்த ஒளியைக்குறித்துச் சாட்சி
9 கொடுக்க வந்தவனே. எந்த மனுஷனுக்
கும் வெளிச்சத்தைத் தருகிற மெய்யான
ஒளி உலகத்தில் வந்துகொண்டிருந்தது.
10 அவர் உலகத்தில் இருந்தார்; உலகம்
அவர்மூலமாய் உண்டாயிற்று; உலகமோ
11 அவரை அறிந்துகொள்ளவில்லை. அவர்
தமக்குச் சொந்தமானவற்றில் வந்தார், அவ
ருக்குச் சொந்தமானவர்களோ அவரை
12 ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை ஏற்றுக்
கொண்டவர்கள் எத்தனைபேரோ அத்தனை
பேரும், அதாவது அவர் நாமத்தில் விசுவாசம்
வைக்கிறவர்கள் யாவரும், கடவுளின்
பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம்
13 கொடுத்தார். அவர்கள், இரத்தம் மாம்ச
சித்தம் புருஷ சித்தம் என்கிறவைகளினா
லல்ல, கடவுளாலே பிறந்தவர்கள்,
14 வார்த்தையானவர் மாம்சமானார்; கிருபை
யும் சத்தியமும் நிறைந்தவராய் நம்மிடத்தில்
தங்கியிருந்தார். அவருடைய மகிமையைத்
தரிசித்தோம்; அது பிதாவுக்கு ஒரே பேறான
15 வருக்கேற்ற மகிமையாயிருந்தது. யோவான்
அவரைக்குறித்து: எனக்குப் பின்வருகிறவர்
எனக்கு முதல்வர், ஆதலால் அவர் என்னி
லும் பெரியவரானார் என்று நான் முன்
சொல்லியிருந்தவர் இவரே என்று சத்தமிட்
16 டுச் சாட்சி பகர்ந்தான். அவருடைய பரி
பூரணத்திலிருந்து நாம் எல்லாரும் கிருபை
யின்மேல் கிருபை பெற்றோம். மோசேயின் 17
மூலமாய் நியாயப்பிரமாணம் கொடுக்கப்
பட்டது; இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க்
கிருபையும் சத்தியமும் உண்டாயின. கட 18
வுளை ஒருவனும் ஒருகாலும் கண்டதில்லை;
பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான
கடவுளே அவரை வெளிப்படுத்தினார்.
நீர் யார் என்று கேட்பதற்கு யூதர்கள் 19
ஆசாரியரையும் லேவியரையும் எருசலேமி
லிருந்து யோவானிடம் அனுப்பினபொழுது,
அவன் கூறிய சாட்சியம்: | நான் கிறிஸ்து 20
வல்ல என்று அறிக்கையிட்டான், மறுக்கா
மலே அறிக்கையிட்டான். அப்பொழுது 21
அவர்கள்: பின்னை என்ன? நீர் எலியாவோ
என்று கேட்க, அவன்: நான் அவனல்ல என்
றான். நீர் தீர்க்கதரிசியானவரோ என்றதற்
கும் அல்லவென்றான். பின்னும் அவர்கள் 22
அவனிடம்: நீர் யார்? எங்களை அனுப்
பினவர்களுக்கு நாங்கள் பதில் சொல்ல
வேண்டுமே; உம்மைக்குறித்து என்ன சொல்
லுகிறீர் என்று கேட்டார்கள். அவன்: 23
ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடி, கர்த்தரின்
வழியைச் செவ்வைபண்ணுங்கள் என்று
வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தம்
நான் என்றான்.
அனுப்பப்பட்டவர்கள் பரிசேயரைச் 24
சேர்ந்தவர்கள். அவர்கள் அவனைப் பார்த்து: 25
நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, தீர்க்க
தரிசியானவருமல்லவென்றால் நீர் ஞான
ஸ்நானம் கொடுக்கிறதேன் என்று கேட்
டார்கள். யோவான் அவர்களிடம்: நான் 26
ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்;
உங்களுக்குத் தெரியாத ஒருவர் உங்கள்
நடுவில் நிற்கிறார். எனக்குப் பின்வருகிறவர் 27
அவரே; அவர் பாதரட்சையின் வாரை
அவிழ்க்க நான் ஏற்றவனல்ல என்றான்.
யோர்தானுக்கு அக்கரையில், யோவான் 28
ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருந்த
பெத்தானியாவிலே இவைகள் நடந்தன.
மறுநாள் இயேசு தன்னிடம் வருகிறதை 29
அவன் கண்டு: இதோ, உலகத்தின் பாவத்
தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.
எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவர் 30
எனக்கு முதல்வர், ஆதலால் என்னிலும்

பெரியவரானார் என்று நான் சொன்னேனே,
31 அவர் இவர்தான். எனக்கும் இவர் தெரியா
திருந்தது; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்
படும்பொருட்டாக நான் ஜலத்தினாலே
ஞானஸ்நானம் கொடுக்கிறவனாய் வந்தேன்
32 என்றான். பின்னும் யோவான் சாட்சியாக:
ஆவியானவர் புறாவைப்போல வானத்தி
லிருந்து இறங்கி இவர்மேல் தங்குவதைக்
33 கண்டேன். எனக்கும் இவர் தெரியாதிருந்
தது; ஆயினும் ஜலத்தினால் ஞானஸ்நானம்
கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்:
ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை
நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியி
னால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று
34 எனக்குச் சொல்லியிருந்தார். அப்படியே
நான் கண்டு, இவரே தேவகுமாரனென்று
சாட்சிகொடுத்து வருகிறேன் என்றான்.
35 மறுநாள் யோவானும் அவன் சீஷரில்
இருவரும் நின்றுகொண்டிருக்கும்போது,
36 நடந்துபோகிற இயேசுவை அவன் உற்றுப்
பார்த்து: இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்
37 றான். அவன் சொன்னதை அவ்விரண்டு
சீஷரும் கேட்டு இயேசுவுக்குப் பின்சென்
38 றார்கள். இயேசு திரும்பி, அவர்கள் பின்னே
வருகிறதைக் கண்டு, அவர்களிடம்: என்ன
தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்:
ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று
கேட்டார்கள்; ரபீ என்பதற்குக் குரு என்று
39 அர்த்தம். அவர்: வாருங்கள், காண்பீர்கள்
என்றார். அவர்கள் வந்து அவர் தங்கி
யிருந்த இடத்தைக் கண்டு அன்றையதினம்
அவரோடு தங்கினார்கள். அப்பொழுது ஏறக்
40 குறையப் பத்தாம் மணி வேளை. யோவான்
சொன்னதைக் கேட்டு அவருக்குப் பின்
சென்ற இருவரில் ஒருவன் சீமோன் பேதுரு
41 வின் சகோதரன் அந்திரேயா. அவன் முதலா
வது தன் சகோதரன் சீமோனைக் கண்டு
பிடித்து அவனிடம்: மேசியாவைக் கண்டு
கொண்டோம் என்று சொன்னான்; மேசியா
என்பதற்குக் [1]கிறிஸ்து என்று அர்த்தம்.
42 அவனை இயேசுவினிடம் கூட்டிக்கொண்டு
வந்தான். இயேசு அவனை உற்றுப்பார்த்து:
நீ யோவானின் மகன் சீமோன், நீ கேபா
எனப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப்
[2]பேதுரு என்று அர்த்தம்.
43 மறுநாள் இயேசு கலிலேயாவுக்குப் போக
மனமாயிருந்து, பிலிப்புவைக் கண்டு: நீ என்
44 னைப் பின்பற்றிவா என்றார். அந்திரேயாவை
யும் பேதுருவையும்போல, பிலிப்பு பெத்
சாயிதா ஊரான். பிலிப்பு நாத்தான்வேலைக் 45
கண்டுபிடித்து: நியாயப்பிரமாணத்தில்
மோசேயும், (தங்கள் ஆகமங்களில்) தீர்க்க
தரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டு
பிடித்தோம். அவர் யோசேப்பின் குமாரனா
கிய நாசரேத்தூர் இயேசுவே என்றான். நாத் 46
தான்வேலோ: நாசரேத்திலிருந்து யாதொரு
நன்மையும் உண்டாகக்கூடுமோ என்றான்.
அதற்குப் பிலிப்பு: வந்து பார் என்று சொன்
னான். இயேசு நாத்தான்வேல் தம்மிடம் வரக் 47
கண்டு, அவனைக்குறித்து: இதோ, கபடற்ற
உத்தம இஸ்ரவேலன் என்றார். அதற்கு நாத் 48
தான்வேல்: நீர் என்னை எப்படி அறிவீர் என்
றான். இயேசு அவனிடம்: பிலிப்பு உன்னை
அழைக்குமுன், நீ அத்திமரத்தின் கீழிருக்
கும்போது உன்னைக் கண்டேன் என்றார்.
அதற்கு நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவகுமா 49
ரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான்.
இயேசு அவனிடம்: அத்திமரத்தின் கீழே 50
உன்னைக் கண்டேனென்று நான் உனக்குச்
சொன்னதினிமித்தமா நம்புகிறாய்; இவற்றி
லும் பெரிதானவைகளைக் காண்பாய் என்
றார். பின்னும் அவர்: மெய்யாகவே மெய் 51
யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்,
வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்
மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதை
யும் அவரிடம் இறங்குகிறதையும் நீங்கள்
காண்பீர்கள் என்று அவனுக்குச் சொன்
னார்.

மூன்றாம் நாளில் கலிலேயாவிலுள்ள **2**
கானா ஊரில் ஒரு கலியாணம் நடந்தது;
இயேசுவின் தாயாரும் அங்கே இருந்தாள்.
இயேசு தம் சீஷரோடுகூட அந்தக் கலியா 2
ணத்துக்கு அழைக்கப்பட்டார். திராட்ச 3
ரசம் குறைந்துபோனபோது இயேசுவின்
தாய் அவரைப் பார்த்து: அவர்களுக்குத்
திராட்சரசம் இல்லை என்றாள். இயேசு அவ 4
ளிடம்: அம்மா, எனக்கும் உனக்கும் என்ன?
என் வேளை இன்னும் வரவில்லை என்றார்.
அவர் தாய் வேலைக்காரரைப் பார்த்து: 5
அவர் உங்களுக்கு ஏதேது சொல்லுகிறாரோ
அதையெல்லாம் செய்யுங்கள் என்றாள்.
யூதரின் சுத்திகரிப்பு முறைமைக்கிசைய, 6
ஆறு கல்தொட்டிகள் அங்கே வைத்திருந்
தது; ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம்
தண்ணீர் பிடிக்கும். இயேசு: தொட்டி 7
களில் தண்ணீர் நிரப்புங்கள் என்று அவர்
களுக்குச் சொன்னார்; அவர்கள் அவைகளை

[1] கிறிஸ்து என்ற கிரேக்கு பதம் அபிஷேகம்பண்ணப்பட்டவர் என்று பொருள்படும்.

[2] பேதுரு என்ற கிரேக்கு பதம் கற்பாறை என்று பொருள்படும்.

8 வாய்மட்டும் நிரப்பினார்கள். அவர் அவர்க
ளிடம்: இப்பொழுது மொண்டு, பந்தி
விசாரிப்புக்காரனிடம் கொண்டுபோங்கள்
என்றார்; அவர்கள் கொண்டுபோனார்கள்.
9 திராட்சரசமாய் மாறின தண்ணீரைப் பந்தி
விசாரிப்புக்காரன் ருசிபார்த்தான். அது எங்
கிருந்து வந்ததென்று அவனுக்குத் தெரி
யாது, தண்ணீரை மொண்டுவந்த வேலைக்
காரருக்குத்தான் தெரியும். பந்தி விசா
ரிப்புக்காரன் மணவாளனை அழைத்து
10 அவனிடம்: எந்த மனுஷனும் முதலில்
நல்ல திராட்சரசத்தைப் பரிமாறி, ஜனங்கள்
நன்றாய்க் குடித்தபின் கீழ்த்தரமானதைப்
பரிமாறுவான்; நீரோ நல்ல ரசத்தை இது
11 வரைக்கும் வைத்திருந்தீரே என்றான். கலி
லேயாவிலுள்ள கானாவிலே இயேசு தமது
அடையாளங்களுக்கு ஆரம்பமாக இதைச்
செய்து, தமது மகிமையை வெளிப்படுத்தி
னார். அவருடைய சீஷர் அவரில் விசு
வாசம் வைத்தார்கள்.
12 அதன்பின்பு அவர் தம்முடைய தாயாரோ
டும் சகோதரரோடும் சீஷரோடும் கப்பர்நகூ
முக்குப் போனார். அவர்கள் அங்கே சில
நாள் தங்கினார்கள்.
13 யூதரின் பஸ்கா பண்டிகை சமீபிக்கவே,
14 இயேசு எருசலேமுக்குப் போனார். அங்கே
தேவாலயத்தில் ஆடு மாடு புறா விற்கிறவர்
களையும் காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதை
15 யும் அவர் கண்டு, கயிற்றினால் ஒரு சாட்டை
உண்டுபண்ணி, எல்லாரையும் ஆடுமாடு
களையும் தேவாலயத்துக்கு வெளியே துரத்தி,
காசுக்காரருடைய காசுகளைக் கொட்டி,
16 மேசைகளைக் கவிழ்த்துப்போட்டார். புறா
விற்கிறவர்களைப் பார்த்து: இவைகளை இங்
கிருந்து எடுத்துப்போங்கள்; என் பிதாவின்
வீட்டை வியாபார வீடாக்கவேண்டாம்
17 என்றார். உமது வீட்டைப்பற்றிய வைராக்
கியம் என்னைப் பட்சித்துவிடுமென்று எழுதி
யிருக்கிறதை அவர் சீஷர் நினைவுகூர்ந்
18 தார்கள். இதைக் கண்ட யூதர்: நீர் இவை
களைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடை
யாளத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர்
19 என்று அவரைக் கேட்டார்கள். அதற்கு
இயேசு: இந்த ஆலயத்தை இடித்துப்
போடுங்கள்; மூன்றுநாளில் அதை எழுப்பி
20 விடுவேன் என்றார். அப்பொழுது யூதர்:
இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு
வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று
நாளில் எழுப்பிவிடுவீரோ என்றார்கள்.
21 அவரோ தமது சரீரமாகிய ஆலயத்தைக்
22 குறித்துப் பேசினார். அவர் இதைச் சொன்
னதை அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்
பட்டபின் அவருடைய சீஷர் நினைவு
கூர்ந்து, வேதவாக்கியத்தையும் இயேசு
சொன்ன வார்த்தையையும் நம்பினார்கள்.
பஸ்கா பண்டிகைக் காலத்தில் அவர் எருச 23
லேமிலிருக்கையில், அவர் செய்த அடை
யாளங்களைக் கண்ட அநேகர் அவர் நாமத்
தில் விசுவாசம் வைத்தார்கள். இயேசுவோ 24
தாமே எல்லாரையும் அறிகிறவரானபடி
யால் அவர்களை நம்பி இணங்கவில்லை.
மனுஷரிலிருப்பதை அவர் அறிந்தவ 25
ராதலால் மனுஷரைக் குறித்து எவனும்
சாட்சிசொல்வது அவருக்கு அவசியமில்லா
திருந்தது.

நிக்கொதேமு என்னும் ஒரு மனுஷன் **3**
இருந்தான். அவன் ஒரு பரிசேயன், யூத
ருடைய அதிகாரிகளில் ஒருவன். அவன் 2
இராக்காலத்தில் அவரிடம் வந்து: ரபீ, நீர்
கடவுளிடமிருந்து போதகராக வந்திருக்கிறீ
ரென்பது எங்களுக்குத் தெரியும். கடவுள்
தன்னோடிருந்தாலன்றி நீர் செய்கிற இந்த
அடையாளங்களை எவனும் செய்யமுடி
யாதே என்றான். அதைக் கேட்ட இயேசு: 3
ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால்
கடவுள் ராஜ்யத்தைக் காணமுடியாதென்று
மெய்யாகவே மெய்யாகவே உனக்குச்
சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொ 4
தேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கை
யில் எப்படிப் பிறக்கலாகும்? அவன் தன்
தாயின் கர்ப்பத்திற்குள் இரண்டாந்தரம்
பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான்.
அதைக் கேட்ட இயேசு: ஒருவன் ஜலத்தி 5
னாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால்
கடவுள் ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கமுடியா
தென்று மெய்யாகவே மெய்யாகவே உனக்
குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப் 6
பது மாம்சம், ஆவியினால் பிறப்பது ஆவி.
நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டுமென்று 7
நான் உனக்குச் சொன்னதைப்பற்றி அதிச
யப்படவேண்டாம். காற்று தனக்கு இஷ்ட 8
மான இடத்தில் வீசுகிறது, அதன் சத்
தத்தைக் கேட்கிறாய்; ஆகிலும் அது எங்கி
ருந்து வருகிறதென்றும் எங்கே போகிற
தென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால்
பிறந்தவன் எவனும் அப்படியே இருக்
கிறான் என்றார். அதைக் கேட்ட நிக்கொ 9
தேமு: இவைகள் எப்படி ஆகுமென்றான்.
இயேசு அவனுக்குச் சொன்னதாவது: 10
இஸ்ரவேலில் நீ போதகனாயிற்றே, இவை
களை அறியாயா? மெய்யாகவே மெய்யாகவே 11
நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள்
எங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுகி

றோம், நாங்கள் கண்டதைப்பற்றிச் சாட்சி
கொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்
12 சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. பூமியி
லுள்ளவைகளை நான் உங்களுக்குச் சொல்ல
நீங்கள் நம்பாமற்போனால், பரலோகத்தி
லுள்ளவைகளை உங்களுக்குச் சொல்வேனா
13 னால் எப்படி நம்புவீர்கள்? பரலோகத்தி
லிருந்து இறங்கினவராகிய மனுஷகுமாரனே
யல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒரு
14 வனுமில்லை. மோசே சர்ப்பத்தை வனாந்தரத்
தில் உயர்த்தினதுபோல மனுஷகுமாரனும்,
15 விசுவாசமாயிருக்கிறவன் எவனும் அவருக்
குள் நித்திய ஜீவனைப் பெறும்படி உயர்த்தப்
படவேண்டும்.

16 கடவுள் தம்முடைய ஒரே பேறான குமா
ரனில் விசுவாசமாயிருக்கிறவன் எவனும்
கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனைப் பெறும்
படி, அவரைத் தந்தருளி, இவ்வளவாய்
17 உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை
நியாயந்தீர்க்கக் கடவுள் தம்முடைய
குமாரனை உலகத்தில் அனுப்பாமல், உலகம்
அவராலே இரட்சிக்கப்படுவதற்கென்றே
18 அவரை அனுப்பினார். அவரில் விசுவாச
மாயிருக்கிறவன் நியாயந்தீர்க்கப்படான்;
விசுவாசமில்லாதவனோ கடவுளின் ஒரே
பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாச
மாயிராதபடியினால் நியாயந்தீர்க்கப்பட்டா
19 யிற்று. ஒளி உலகத்தில் வந்திருக்கிறது;
மனுஷருடைய செய்கைகளோ பொல்லாத
வைகளாதலால் அவர்கள் ஒளியைப்பார்க்
கிலும் இருளை அதிகமாய் நேசித்தார்கள்;
அவர்களுக்கு இதுவே நியாயத்தீர்ப்பா
20 கிறது. தீமையை நடப்பிக்கிறவன் எவ
னும் ஒளியைப் பகைக்கிறான், தன்
செய்கைகள் கண்டிக்கப்படாதபடி ஒளியி
21 னிடத்தில் வராதிருக்கிறான். உண்மையைச்
செய்கிறவனோ, தன் செய்கைகள் கடவுளுக்
குள் செய்யப்பட்டவைகள் என்று வெளி
யாகும்படி, ஒளியினிடத்தில் வருகிறான்.

22 இவைகளுக்குப்பின்பு இயேசுவும் அவரு
டைய சீஷரும் யூதேயா நாட்டிற்கு வந்
தார்கள்; அங்கே அவர் அவர்களோடே சஞ்
சரித்து ஞானஸ்நானம் கொடுத்துவந்தார்.
23 சாலீம் ஊருக்குச் சமீபமான அயினோன்
என்னும் இடத்தில் அதிகத் தண்ணீர் இருந்த
படியினால் யோவானும் அங்கே ஞான
ஸ்நானம் கொடுத்துவந்தான்; ஜனங்கள் அவ
னிடம் வந்து ஞானஸ்நானம் பெற்றுக்
24 கொண்டிருந்தார்கள். யோவான் இன்னும்
25 காவலில் வைக்கப்படவில்லை. அப்பொழுது
சுத்திகரிப்பைப்பற்றி யோவானுடைய சீஷ
ருக்கும் ஒரு யூதனுக்கும் தர்க்கமுண்டா
யிற்று. அவர்கள் யோவானிடம் வந்து: 26
ரபீ, உம்மோடு யோர்தானுக்கு அக்கரையில்
ஒருவர் இருந்தார்; அவரைக்குறித்து நீர்
சாட்சி பகர்ந்தீரே; இதோ பாரும், அவர்
ஞானஸ்நானம் கொடுக்கிறார், எல்லாரும்
அவரிடம் போகிறார்கள் என்றார்கள்.
அதற்கு யோவான் சொன்னதாவது: பரலோ 27
கத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்
டாலொழிய அவன் ஒன்றையும் எடுத்துக்
கொள்ளமுடியாது. நான் கிறிஸ்துவல்ல, 28
அவருக்குமுன் அனுப்பப்பட்டவன் என்று
நான் சொன்னதற்கு நீங்களே எனக்குச்
சாட்சிகள். மணவாட்டியை உடையவனே 29
மணவாளன்; மணவாளனுடைய தோழனோ
அருகே நின்று அவனுடைய சத்தத்தைக்
கேட்டு மணவாளனுடைய குரலினால்
மிகவும் சந்தோஷப்படுகிறான்; என்னு
டைய இந்தச் சந்தோஷம் சம்பூரணமா
யிற்று. அவர் பெருகவேண்டும்; நானோ 30
சிறுகவேண்டும்.

உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லா 31
ருக்கும் மேலானவர்; பூமியிலிருந்துண்டான
வன் பூமிக்குரியவன், பூமிக்குரியவைகளைப்
பேசுகிறான்; பரலோகத்திலிருந்து வருகிறவர்
எல்லாருக்கும் மேலானவர். தாம் கண்ட 32
தையும் கேட்டதையும் சாட்சியாகச் சொல்
லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும்
ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. அவர் சாட்சியை 33
ஏற்றுக்கொள்ளுகிறவன் கடவுள் சத்திய
முள்ளவரென்று முத்திரைபோடுகிறான்.
கடவுளால் அனுப்பப்பட்டவர் கடவுளின் 34
வார்த்தைகளைப் பேசுகிறார்; அவர் தம்மு
டைய ஆவியை அளவுபார்த்துக்கொடுக்கிற
தில்லை. பிதாவானவர் குமாரனில் அன்பு 35
கூர்ந்து எல்லாவற்றையும் அவர் கையில்
ஒப்புக்கொடுத்திருக்கிறார். குமாரனில் விசு 36
வாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனையுடைய
வன்; குமாரனுக்கு அடங்காதவனோ ஜீவனைக்
காண்பதில்லை, கடவுளின் கோபம் அவன்
மேல் நிலைக்கும்.

யோவானைப்பார்க்கிலும் இயேசு அநே 4
கரைச் சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுக்
கிறாரென்று பரிசேயர் கேள்விப்பட்டதாக
ஆண்டவருக்குத் தெரியவந்தபோது, அவர் 2
யூதேயாவைவிட்டு மறுபடியும் கலிலேயா
வுக்குப் போனார். ஞானஸ்நானம் கொடுத்த 3
வரோ இயேசுவல்ல, அவர் சீஷரே. அவர் 4
சமாரியா வழியாய்ப் போகவேண்டியதா
யிருந்தபடியால், சீகார் என்ற சமாரிய 5
ஊருக்கு வந்தார். அது யாக்கோபு தன்
குமாரன் யோசேப்புக்குக் கொடுத்த நிலத்

6 தூக்கருகே இருந்தது. அங்கே யாக்கோ
பின் கிணறு இருந்தது. இயேசு பிரயா
ணத்தினால் களைப்படைந்தவராய் அந்தக்
கிணற்றினருகே உட்கார்ந்தார்; ஏறக்குறைய
7 ஆறாம் மணி வேளையிருக்கும். அப்பொழுது
சமாரிய ஸ்திரீ ஒருத்தி தண்ணீர் மொள்ள
வந்தாள். இயேசு அவளிடம்: தாகத்துக்குத்
8 தா என்றார். ஏனெனில் அவர் சீஷர்
போஜன பதார்த்தங்களை வாங்கிவரும்படி
9 ஊருக்குள் போயிருந்தார்கள். சமாரிய ஸ்திரீ
அவரைப் பார்த்து: நீர் யூதன், நான் சமாரிய
ஸ்திரீ; தாகத்துக்குத் தா வென்று என்னிடம்
கேட்கிறதெப்படி என்றாள். ஏனெனில்,
யூதர் சமாரியருடன் உறவாடுகிறதில்லை.
10 இயேசுவோ: கடவுளின் ஈவும், தாகத்துக்
குத் தா என்று உன்னிடம் கேட்கிறவர்
இன்னார் என்பதும் உனக்குத் தெரிந்திருந்
தால், நீயே அவரிடம் கேட்டிருப்பாய்,
அவர் உனக்கு ஜீவ தண்ணீரைக் கொடுத்
திருப்பார் என்று அவளுக்குப் பதில் உரைத
11 தார். அதற்கு அவள்: ஐயா, மொள்ளுகிற
தற்கு உம்மிடம் ஒன்றுமில்லை, கிணறு
ஆழம். அப்படியிருக்க எங்கேயிருந்து
12 உமக்கு ஜீவ தண்ணீர் கிடைக்கும்? நம்மு
டைய பிதாவாகிய யாக்கோபிலும் நீர் பெரி
யவரோ? அவர் இந்தக் கிணற்றை எங்களுக்
குத் தந்தார். அவரும் அவர் பிள்ளைகளும்
அவர் மிருகங்களும் இதிலே குடித்ததுண்டே.
13 என்றாள். அதற்கு இயேசு: இந்தத் தண்
ணீரில் குடிக்கிற எவனும் மறுபடியும் தாகம்
14 அடைவான். நான் கொடுக்கும் தண்ணீரில்
குடிக்கிறவனோ ஒருகாலும் தாகம் அடை
யான். நான் அவனுக்குக் கொடுக்கும் தண்
ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவனுக்
கேதுவாக ஊறுகிற நீரூற்றாகும் என்றார்.
15 அந்த ஸ்திரீ அவரைப் பார்த்து: ஐயா, எனக்
குத் தாகமுண்டாகாமலும், நான் தண்ணீர்
மொள்ள இவ்வளவு தூரம் வராமலுமிருக்
கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத்
16 தாரும் என்று சொல்ல, | அவர்: நீ போய்
உன் புருஷனை அழைத்துக்கொண்டு இங்கே
17 வா என்றார். அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷ
னில்லை என்று சொல்ல, இயேசு அவ
ளிடம்: எனக்குப் புருஷன் இல்லையென்று
18 நீ சொன்னது சரிதான். உனக்கு ஐந்து புரு
ஷர் இருந்தார்கள்; இப்பொழுது உனக்
கிருக்கிறவனோ உன் புருஷனல்ல; நீ சொன்
19 னது உண்மையே என்றார். அப்பொழுது
அந்த ஸ்திரீ அவரிடம்: ஐயா, நீர் தீர்க்க
20 தரிசி என்று காண்கிறேன். எங்கள் முன்
னோர் இந்த மலையில் தொழுதுகொண்
டார்கள்; நீங்களோ, தொழுதுகொள்ள
வேண்டிய ஸ்தலம் எருசலேமிலிருக்கிறது
என்கிறீர்கள் என்றாள். அதற்கு இயேசு: 21
அம்மா, என்னை நம்பு; காலம் வருகிறது, அப்
பொழுது நீங்கள் பிதாவைத் தொழுதுகொள்
வது இந்த மலையிலுமல்ல, எருசலேமிலு
மல்ல. நீங்கள் உங்களுக்குத் தெரியாததைத் 22
தொழுதுகொள்ளுகிறீர்கள்; நாங்கள் எங்க
ளுக்குத் தெரிந்திருக்கிறதைத் தொழுது
கொள்ளுகிறோம். ஏனெனில் இரட்சிப்பு
யூதரிடமிருந்து வருகிறது. ஆயினும் 23
காலம் வருகிறது, அது வந்துமாயிற்று; அப்
பொழுது மெய்ப்பக்தர் பிதாவை ஆவியிலும்
உண்மையிலும் தொழுதுகொள்வார்கள்.
அப்படிப்பட்டவர்களையே பிதா தம்மைத்
தொழுதுகொள்ளுகிறவர்களாகத் தேடுகிறார்.
கடவுள் ஆவியாயிருக்கிறார்; அவரைத் 24
தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியிலும்
உண்மையிலும் தொழுதுகொள்ளவேண்டும்
என்றார். அதற்கு அந்த ஸ்திரீ: கிறிஸ்து 25
என்னப்படுகிற மேசியா வருகிறாரென்று
எனக்குத் தெரியும், அவர் வரும்போது
எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்று
சொல்ல, | இயேசு அவளிடம்: உன்னுடனே 26
பேசுகிற நானே அவர் என்றார்.

அத்தருணத்தில் அவருடைய சீஷர் 27
வந்து, அவர் ஒரு ஸ்திரீயோடு பேசுகிறதைக்
கண்டு ஆச்சரியப்பட்டார்கள். ஆகிலும்
என்ன தேடுகிறீரென்றாவது, ஏன் அவ
ளுடனே பேசுகிறீரென்றாவது ஒருவனும்
கேட்கவில்லை. அப்பொழுது அந்த ஸ்திரீ 28
தன் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே
போய், ஜனங்களைப் பார்த்து: | வாருங்கள், 29
நான் செய்த யாவற்றையும் ஒரு மனுஷன்
எனக்கு அறிவித்தார்; அவரைப் பாருங்கள்;
அவர் கிறிஸ்துதானோ என்றாள். அப் 30
பொழுது அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு
அவரிடம் வந்துகொண்டிருந்தார்கள்.

இதற்குள் சீஷர் அவரிடம்: ரபீ, சாப் 31
பிடும் என்று வேண்டிக்கொள்ள, | அவர்: 32
நான் சாப்பிடுவதற்கு உங்களுக்குத் தெரி
யாத போஜனம் ஒன்று உண்டு என்றார்.
சீஷர் இதைக் கேட்டு ஒருவரையொருவர் 33
பார்த்து: யாராவது அவருக்குச் சாப்பாடு
கொண்டுவந்திருப்பானோ என்று பேசிக்
கொண்டார்கள். இயேசு அவர்களிடம்: 34
என்னை அனுப்பினவருடைய சித்தத்தைச்
செய்து, அவருடைய வேலையை முடிப்பதே
என் போஜனம். அறுப்புக்காலம் வர இன் 35
னும் நாலு மாதம் செல்லும் என்று நீங்கள்
சொல்லுகிறதில்லையா? நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்: உங்கள் கண்களை ஏறெடுத்
துப் பாருங்கள். வயல் நிலங்கள் விளைந்து

இப்பொழுதே அறுப்புக்கு வெண்மையா
36 யிருக்கின்றன; விதைக்கிறவனும் அறுக்கிற
வனும் ஒருமித்துச் சந்தோஷப்படும்படி,
அறுக்கிறவன் கூலிபெற்று நித்திய ஜீவனுக்
கென்று பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான்.
37 விதைக்கிறவன் வேறே, அறுக்கிறவன்
வேறே என்கிற பழமொழியின் உண்மை
38 இதிலே விளங்கும். நீங்கள் வருந்தி
உழைக்காததை அறுக்க நான் உங்களை
அனுப்பினேன்; மற்றவர்கள் உழைத்
தார்கள், அவர்கள் உழைப்பின் பலன்
உங்களுக்குக் கிடைத்தது என்றார்.
39 நான் செய்த யாவற்றையும் எனக்குச்
சொன்னாரென்று சாட்சி பகர்ந்த அந்த ஸ்திரீ
யின் வார்த்தையினிமித்தம் அந்த ஊர்ச்
சமாரியரில் அநேகர் அவரில் விசுவாசம்
40 வைத்தார்கள். ஆகையால் சமாரியர் அவ
ரிடம் வந்து, தங்களிடம் தங்கியிருக்க
வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அவர்
41 இரண்டு நாள் அங்கே தங்கினார். அப்
பொழுது அவருடைய வார்த்தையினிமித்
42 தம் இன்னும் பலர் நம்பினார்கள். அவர்கள்
அந்த ஸ்திரீயினிடம்: இனி நாங்கள்
நம்புவது உன் பேச்சினிமித்தமல்ல; நாங்
களே கேட்டு, இவர் மெய்யாகவே உலக
ரட்சகர் என்று தெரிந்துகொண்டோம் என்
றார்கள்.
43 அந்த இரண்டு நாளுக்குப்பின்பு அவர்
அவ்விடம்விட்டுக் கலிலேயாவுக்குப்
44 போனார். ஒரு தீர்க்கதரிசிக்குத் தன்
சொந்த ஊரிலே கனமில்லையென்று இயேசு
45 தாமே சொல்லியிருந்தார். எருசலேமில்
பண்டிகையிலே அவர் செய்த யாவற்றையும்
பார்த்திருந்த கலிலேயர், அவர் கலிலேயா
வுக்கு வந்தபோது, அவரை ஏற்றுக்கொண்
டார்கள்; அவர்களும் பண்டிகைக்குப்
போயிருந்தார்கள்.
46 இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரச
மாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு
மறுபடியும் வந்தார். அப்பொழுது ராஜா
வின் உத்தியோகஸ்தரில் ஒருவனுடைய
மகன் கப்பர்நகூமிலே வியாதியாயிருந்தான்.
47 இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு
வந்தாரென்று அந்த மனுஷன் கேள்விப்
பட்டபோது அவரிடம்போய், அவர் வந்து
தன் மகனைக் குணமாக்கவேண்டுமென்று
வேண்டிக்கொண்டான். அவன் மகன்
48 மரண அவஸ்தையிலிருந்தான். அதைக்
கேட்ட இயேசு அவனிடம்: நீங்கள் அடை
யாளங்களையும் அற்புதங்களையும் கண்டா
லன்றி நம்பவேமாட்டீர்கள் என்று
49 சொல்ல, | உத்தியோகஸ்தன்: ஐயனே, என்
பிள்ளை சாகுமுன் வாரும் என்றான். இயேசு: 50
நீ போ, உன் மகன் பிழைத்திருக்கிறான்
என்று அவனுக்குச் சொன்னார். இயேசு
தனக்குச் சொன்ன வார்த்தையை அந்த மனு
ஷன் நம்பிப் போனான். அவன் போகையில் 51
அவனுடைய வேலைக்காரர் அவனுக்கு எதிர்
கொண்டுவந்து, அவனுடைய பையன்
பிழைத்திருக்கிறதாகச் சொன்னார்கள். அப் 52
பொழுது எந்த மணிநேரத்தில் அவனுக்குக்
குணம் உண்டாயிற்றென்று அவர்களிடம்
விசாரிக்க, அவர்கள்: நேற்று ஏழாம் மணி
நேரத்தில் ஜுரம் அவனை விட்டது என்
றார்கள். உன் மகன் பிழைத்திருக்கிறா 53
னென்று இயேசு தன்னுடனே சொன்ன மணி
நேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து,
அவனும் அவன் வீட்டாரனைவரும் விசுவாசித்
தார்கள். இயேசு யூதேயாவிலிருந்து கலிலே 54
யாவுக்கு மறுபடியும் வந்து செய்த இரண்
டாம் அடையாளம் இது.

இவைகளுக்குப்பின்பு யூதருடைய **5**
பண்டிகை ஒன்று வந்தது; அப்பொழுது
இயேசு எருசலேமுக்குப் போனார். எபி 2
ரேயு பாஷையிலே பெத்சாதா என்னப்படும்
ஒரு குளம் எருசலேமில் ஆட்டுவாசலருகே
இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்க
ளுண்டு. அவைகளிலே திரளான குருடர், 3
சப்பாணிகள், சூம்பின உறுப்புடைய
வர்கள் முதலான வியாதிக்காரர் படுத்திருப்
பார்கள். (தண்ணீர் எப்பொழுது கலங்கும்
என்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள்.
ஏனெனில் சில சமயங்களிலே தேவதூதன் 4
ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீ
ரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கின
பின்பு யார் முதல் முதல் அதில் இறங்கு
வானோ அவன் எப்படிப்பட்ட வியாதியுள்ள
வனாயிருந்தாலும் குணமாவான்.) அங்கே 5
ஒரு மனுஷன் இருந்தான்; அவன் முப்பத்
தெட்டு வருஷம் வியாதியாயிருந்தவன்.
அவன் படுத்திருப்பதை இயேசு கண்டு, 6
அவன் நெடுநாள் நோயாளி என்றறிந்து,
குணமாக உனக்கு மனமுண்டா என்று
கேட்க, வியாதிக்காரன் அவரைப் பார்த்து: 7
ஐயனே, தண்ணீர் கலக்கப்படும்போது
குளத்தில் என்னை விடுகிறதற்கு ஆளில்லை;
நான் போகிறதற்குள் வேறொருவன் எனக்கு
முன் இறங்கிவிடுகிறான் என்றான். இயேசு 8
அவனிடம்: எழுந்திரு, உன் படுக்கையை
எடுத்துக்கொண்டு நடந்துபோ என்றார்.
உடனே அந்த மனுஷன் குணமாகி, தன் 9
படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து
போனான். அந்த நாள் ஓய்வுநாள். | ஆத 10

லால் யூதர்கள் சொஸ்தமாக்கப்பட்டவனைப்
பார்த்து: இது ஓய்வுநாளாயிற்றே; நீ படுக்
கையை எடுத்துக்கொண்டு போகிறது
11 நியாயமாகாது என்றார்கள். அவனோ அவர்
களிடம்: என்னைக் குணமாக்கினவர், உன்
படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து
போவென்று எனக்குச் சொன்னார் என்
12 றான். உன் படுக்கையை எடுத்துக்கொண்டு
நடந்துபோவென்று உன்னிடம் சொன்ன
மனுஷன் யார் என்று அவனிடம் கேட்
13 டார்கள். சுகமடைந்தவனுக்கோ அவர்
இன்னாரென்று தெரியாது; அவ்விடத்தில்
ஜனக்கூட்டம் அதிகமாயிருந்ததால் இயேசு
14 விலகிவிட்டார். அதற்குப்பின்பு இயேசு
அவனைத் தேவாலயத்தில் கண்டு: இதோ
பார், நீ குணமடைந்துவிட்டாய்; அதிகக்
கேடானதொன்றும் உனக்கு நேரிடாதபடி
15 இனிப் பாவஞ்செய்யாதே என்றார். அந்த
மனுஷன் போய், தன்னைக் குணமாக்கினவர்
இயேசு என்று யூதருக்கு அறிவித்தான்.
16 இயேசு இவற்றை ஓய்வுநாளில் செய்தபடி
யால் யூதர் அவரைத் துன்பப்படுத்த வகை
17 தேடினார்கள். இயேசு அதை அறிந்து
அவர்களைப் பார்த்து: என் பிதா இதுவரைக்
கும் கிரியை செய்துவருகிறார், நானும்
18 கிரியை செய்துவருகிறேன் என்றார். அவர்
ஓய்வுநாளை மீறினதுமல்லாமல், தம்மைக்
கடவுளுக்குச் சமமாக்கி, கடவுளைத் தம்மு
டைய சொந்தப் பிதாவென்றும் சொல்லி
வந்தபடியால் யூதர் அவரைக் கொலைசெய்ய
முன்னிலும் அதிகமாய் வகை தேடினார்கள்.
19 ஆகவே இயேசு அவர்களிடம்: மெய்யா
கவே மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்: பிதா செய்யக் குமாரன்
காண்பதெதுவோ அதையேயன்றித் தாமா
கவே அவர் எதையும் செய்யமுடியாது;
பிதா எவைகளைச் செய்கிறாரோ அவை
களைக் குமாரனும் அப்படியே செய்கிறார்.
20 பிதா குமாரனை நேசித்து, தாம் செய்கிறவற்
றையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்;
நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவற்றி
லும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக்
21 காண்பிப்பார். பிதா மரித்தோரை எழுப்பி
உயிர்ப்பிக்கிறதுபோல குமாரனும் தமக்குச்
22 சித்தமானவர்களை உயிர்ப்பிக்கிறார். பிதா
வைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும்
குமாரனையும் கனம்பண்ணவேண்டுமென்று,
பிதாவானவர் தாமாக ஒருவருக்கும் தீர்ப்
பிடாமல், தீர்ப்பிடும் அதிகாரம் முழுவதை
யும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.
23 குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை
அனுப்பின பிதாவையும் கனம்பண்ணாத
வனே. மெய்யாகவே மெய்யாகவே நான் உங் 24
களுக்குச் சொல்லுகிறேன்: என் வார்த்தை
யைக் கேட்டு என்னை அனுப்பினவரை
நம்புகிறவன் நித்திய ஜீவனை உடையவன்;
அவன் தீர்ப்புக்காளாகான்; அவன் மரணத்தி
லிருந்து ஜீவனுக்குள் வந்தாயிற்று. மெய் 25
யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்: காலம் வருகிறது, வந்து
மாயிற்று. அப்பொழுது மரித்தோர் தேவ
குமாரனுடைய சத்தத்தைக் கேட்பார்கள்,
கேட்டவர்கள் பிழைப்பார்கள். பிதா 26
தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கிறது
போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவ
னுடையவராயிருக்கும்படி அருள் செய்தி
ருக்கிறார். அவர் மனுஷகுமாரனாயிருக்கிற 27
படியால் தீர்ப்பிடும் அதிகாரத்தையும் அவ
ருக்குக் கொடுத்தருளினார். இதைக்குறித்து 28
ஆச்சரியப்பட வேண்டாம், பிரேதக் குழி
களிலுள்ள அனைவரும் அவர் சத்தத்தைக்
கேட்கும் காலம் வருகிறது. அப்பொழுது, 29
நன்மை செய்தவர்கள் ஜீவனுக்கென்றும்
தீமையை நடப்பித்தவர்கள் ஆக்கினைக்
கென்றும் எழுந்து புறப்படுவார்கள்.

நானாகவே எதையும் செய்யமுடியாது. 30
நான் கேட்கிறபடியே தீர்ப்பிடுகிறேன்; என்
சித்தத்தையல்ல என்னை அனுப்பின பிதா
வின் சித்தத்தையே நான் நாடுகிறபடியால்
என் தீர்ப்பு நியாயமாம். என்னைக்குறித்து 31
நானே சாட்சி சொன்னால் என் சாட்சி மெய்
யாயிராது. என்னைக்குறித்துச் சாட்சி சொல் 32
லுகிறவரோ வேறொருவர்; அவர் என்னைக்
குறித்துச் சொல்லுகிற சாட்சி மெய்யென்று
எனக்குத் தெரியும். நீங்கள் யோவானிடம் 33
ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தி
யத்திற்கே சாட்சி சொன்னான். நான் அங் 34
கீகரிக்கிற சாட்சியம் மனுஷ சாட்சியமல்ல;
நீங்கள் இரட்சிக்கப்படவேண்டுமென்றே
இவைகளைச் சொல்லுகிறேன். அவன் எரிந்து 35
பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; அவன்
வெளிச்சத்தில் நீங்கள் கொஞ்சக்காலம்
களிகூர மனமாயிருந்தீர்கள். எனக்கோ 36
யோவானுடைய சாட்சியத்திலும் மேலான
சாட்சியம் உண்டு; நான் நிறைவேற்றும்படி
பிதா எனக்குக் கொடுத்தவைகளும் நான்
செய்துவருகிறவைகளுமான கிரியைகளே
பிதா என்னை அனுப்பினாரென்று என்னைக்
குறித்துச் சாட்சி கொடுக்கின்றன. என்னை 37
அனுப்பின பிதா தாமே என்னைக்குறித்துச்
சாட்சி பகர்ந்திருக்கிறார்; நீங்கள் ஒருகாலும்
அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர்
ரூபத்தைக் கண்டதுமில்லை, அவர் 38
வார்த்தை உங்களில் தரித்திருக்கிறதுமில்லை;

அவர் அனுப்பினவரை நீங்கள் நம்புகிறதில்
39 லையே. வேதாகமங்களை ஆராய்ந்து பார்க்கி
றீர்கள், ஏனெனில் அவைகளில் உங்க
ளுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள்
எண்ணுகிறீர்கள். என்னைக்குறித்துச் சாட்சி
40 கொடுக்கிறவைகள் அவைகளே. அப்படி
யிருந்தும், உங்களுக்கு ஜீவன் உண்டாகும்
படி என்னிடம் வர உங்களுக்கு மனமில்லை.
41 மனுஷரால் வரும் புகழை நான் அங்கீகரிக்
42 கிறதில்லை. நான் உங்களை அறிந்துகொண்
டேன், கடவுளின் அன்பு உங்களிலில்லையே.
43 நான் என் பிதாவின் நாமத்தில் வந்தேன்.
நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை;
வேறொருவன் தன் சுய நாமத்தில் வருவானா
44 னால் அவனை அங்கீகாரஞ்செய்வீர்கள். ஏக
தெய்வமாகிய கடவுளிடமிருந்து வருகிற
மகிமையை நாடாமல், ஒருவரிடமிருந்
தொருவர் புகழை அங்கீகரித்துக்கொள்ளும்
45 நீங்கள் நம்புவதெப்படி? பிதாவினிடத்தில்
நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவே
னென்று நினைக்கவேண்டாம்; உங்கள்மேல்
குற்றஞ்சாட்டுகிற ஒருவன் உண்டு, அவன்
நீங்கள் நன்னம்பிக்கை வைத்திருக்கிற
46 மோசேயே. நீங்கள் மோசேயை நம்பினீர்க
ளானால் என்னையும் நம்பியிருப்பீர்கள்;
47 அவன் என்னைக் குறித்து எழுதினான். அவன்
எழுதினவைகளை நீங்கள் நம்புகிறதில்லை
யானால் நான் சொல்லுகிறவைகளை நீங்கள்
எப்படி நம்புவீர்கள் என்றார்.

6 இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரி
யாக்கடல் என்ற கலிலேயாக்கடலின் அக்
2 கரைக்குப் போனார். அவர் நோயாளிகளி
டத்தில் செய்துவந்த அடையாளங்களைத்
திரளான ஜனங்கள் கண்டு அவருக்குப் பின்
3 சென்றார்கள். இயேசு மலையிலேறி அங்கே
4 தம்முடைய சீஷரோடு உட்கார்ந்தார். அப்
பொழுது பஸ்கா என்னும் யூதருடைய பண்
5 டிகை சமீபித்திருந்தது. இயேசு தமது கண்
களை ஏறெடுத்து, திரளான ஜனங்கள் தம்
மிடம் வருகிறதைக் கண்டு: இவர்கள் சாப்
பாட்டுக்கு அப்பங்களை நாம் எங்கே வாங்க
6 லாமென்று பிலிப்புவைக் கேட்டார். அவ
னைப் பரீட்சிக்கும்படி இப்படிக் கேட்டார்;
தாம் செய்யப்போகிறது இன்னதென்பது
7 அவருக்குத் தெரியும். அதற்குப் பிலிப்பு:
இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சங்
கொஞ்சம் எடுத்துக்கொள்வதற்கும், இரு
நூறு தினாரியத்து அப்பங்களும் போதாதே
8 என்றான். அப்பொழுது அவர் சீஷரில்
ஒருவன், சீமோன் பேதுருவின் சகோதரன்
9 அந்திரேயா: இங்கே ஒரு பையன் இருக்
கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோ
துமை அப்பங்களும் இரண்டு மீன்களும்
உண்டு. இத்தனைபேருக்கு அவைகள் எம்
மாத்திரம் என்று அவரிடத்தில் சொன்னான்.
இயேசு: ஜனங்களைப் பந்தியமரச் செய் 10
யுங்கள் என்றார். அது நல்ல புல்தரை. பந்தி
யமர்ந்த புருஷர் ஏறக்குறைய ஐயாயிரம்
பேர். இயேசு அந்த அப்பங்களை எடுத்து, 11
நன்றிசெலுத்தி, பந்தியிருந்தவர்களுக்குப்
பகிர்ந்துகொடுத்தார். அப்படியே மீன்களை
யும் அவர்களுக்கு வேண்டியமட்டும்
பகிர்ந்துகொடுத்தார். அவர்கள் திருப்தி 12
யடைந்தபின் அவர்: மிஞ்சின துணிக்கை
களைச் சேர்த்துவையுங்கள், ஒன்றும் சேத
மாகக்கூடாது என்று தம்முடைய சீஷ
ருக்குச் சொன்னார். அந்தப்படியே அவர்கள் 13
சேர்த்து, ஐந்து வாற்கோதுமை அப்பங்
களில் ஜனங்கள் சாப்பிட்டு மிஞ்சின துணிக்
கைகளைப் பன்னிரண்டு கூடை நிரப்பி
னார்கள். இயேசு செய்த இவ்வடையா 14
ளத்தை அந்த மனுஷர் கண்டு: மெய்யாகவே
இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி
என்றார்கள்.

அவர்கள் வந்து தம்மை ராஜாவாக் 15
கும்படி பிடித்துக்கொள்ளப்போகிறார்கள்
என்று இயேசு அறிந்து, மறுபடியும் தனியே
விலகி மலையில் போய்விட்டார்.

சாயங்காலமானபோது, அவருடைய 16
சீஷர் கடற்கரைக்குப் போய், | படவு ஏறி, 17
கப்பர்நகூமுக்கு நேராய், கடலின் அக்
கரைக்குப் போனார்கள். அதற்குள் இருட்டி
விட்டது. இயேசு இன்னும் அவர்களிடம்
வரவில்லை. பெருங்காற்றடித்துக் கடல் 18
கொந்தளித்தது. அவர்கள் ஏறக்குறைய 19
மூன்று நாலு மைல் தூரம் தண்டு வலித்
துப்போகவே, இயேசு கடலின்மேல்
நடந்து, படவுக்குச் சமீபமாய் வருகிறதைக்
கண்டு பயந்தார்கள். அவர் அவர்களைப் 20
பார்த்து: நான்தான், பயப்படாதிருங்கள்
என்றார். அப்பொழுது அவரைப் பட 21
வில் ஏற்றுக்கொள்ள மனமாயிருந்தார்கள்;
உடனே படவு அவர்கள் இறங்கவேண்டிய
கரைபோய்ச் சேர்ந்தது.

மறுநாளில் கடலின் அக்கரையில் 22
ஜனங்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.
அங்கே ஒரே ஒரு படவு தவிர வேறே படவு
இருந்ததில்லையென்பதையும், அப்படவில்
சீஷர் மாத்திரம் போனதேயல்லாமல் இயேசு
போனதில்லை என்பதையும் கண்டிருந்
தார்கள். ஆண்டவர் நன்றிசெலுத்திக் 23
கொடுத்த ஆகாரத்தை ஜனங்கள் சாப்பிட்ட
இடத்திற்குச் சமீபமாக வேறு படவுகள்

24 திபேரியாவிலிருந்து வந்தன. இயேசுவாவது
அவர் சீஷராவது இந்தப் பக்கத்தில் இல்லை
யென்று ஜனங்கள் கண்டபோது, இந்தப்
படவுகளிலேறி, இயேசுவைத் தேடிக் கப்பர்
25 நகூமுக்கு வந்தார்கள். கடலின் அக்கரை
யிலே அவர்கள் அவரைக் கண்டு: ரபீ, நீர்
எப்பொழுது இவ்விடம் வந்தீரென்று கேட்
26 டார்கள். கேட்கவே, இயேசு அவர்களிடம்:
மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்
குச் சொல்லுகிறேன்: நீங்கள் என்னைத் தேடு
கிறது அடையாளங்களைக் கண்டதினாலல்ல,
ஆகாரம் புசித்துத் திருப்தியானதினாலேயே.
27 அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல,
நித்திய ஜீவனுக்கென்று நிலைக்கிற போஜனத்
திற்காகவே உழையுங்கள்; அதை மனுஷ
குமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவ
ரைப் பிதாவாகிய கடவுள் முத்திரித்திருக்
28 கிறார் என்றார். அப்பொழுது அவர்கள்:
கடவுளின் சித்தத்திற்கு இசையக் கிரியை
நடப்பிக்கும்படி நாங்கள் செய்யவேண்டுவ
தென்ன என்று அவரைக் கேட்டார்கள்.
29 இயேசு இதைக் கேட்டு: அவர் அனுப்பின
வரில் நீங்கள் விசுவாசம் வைப்பதே
கடவுளின் சித்தத்திற்கு இசைந்தகிரியையாம்
30 என்றார். அதற்கு அவர்கள்: அப்படியானால்
நாங்கள் கண்டு உம்மை விசுவாசிக்கும்படி
நீர் செய்கிற அடையாளமென்ன, நீர் நடப்
31 பிக்கும் கிரியை என்ன? வானத்திலிருந்து
அவர்களுக்கு ஆகாரம் புசிக்கக் கொடுத்தா
ரென்று எழுதியிருக்கிறபடி, நம்முடைய
பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்
32 தார்களே என்றார்கள். அதற்கு இயேசு:
மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்
குச் சொல்லுகிறேன்: வானத்திலிருந்து வந்த
ஆகாரத்தை உங்களுக்குக் கொடுத்தவன்
மோசேயல்ல; வானத்திலிருந்து வந்த மெய்
யான ஆகாரத்தை உங்களுக்குக் கொடுக்
33 கிறவர் என் பிதாவே. பரத்திலிருந்து இறங்கி
உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற
ஆகாரமே கடவுள் அருளிய ஆகாரம் என்
34 றார். அப்பொழுது அவர்கள்: ஆண்டவரே,
இந்த ஆகாரத்தை எப்பொழுதும் எங்களுக்
35 குத் தாரும் என்றார்கள். இயேசு அவர்களைப்
பார்த்து: ஜீவாகாரம் நானே, என்னிடத்தில்
வருகிறவன் பசியடைவதேயில்லை, என்
னில் விசுவாசம் வைக்கிறவன் ஒருகாலும்
36 தாகமடைவதேயில்லை. நீங்கள் என்
னைக் கண்டிருக்கிறீர்கள்; கண்டும் விசுவா
சிக்கிறதில்லையென்று உங்களுக்குச் சொன்
37 னேன். பிதா எனக்குக் கொடுக்கிற யாவும்
என்னிடத்தில் வரும், என்னிடத்தில் வரு
38 கிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. என்
சித்தத்தைச் செயவதறகலல, என்னை அனுப்
பினவரின் சித்தத்தைச் செய்வதற்கே நான்
பரத்திலிருந்து இறங்கி வந்தேன். அவர் 39
எனக்குத் தந்தருளிய யாவற்றிலும் ஒன்றை
யேனும் நான் இழந்துபோகாமல் கடைசி
நாளில் அவற்றை எழுப்பவேண்டுமென்
பதே என்னை அனுப்பினவரின் சித்தம்.
குமாரனைக் கண்டு அவரில் விசுவாசம் 40
வைக்கிறவன் எவனும் நித்திய ஜீவனை
உடையவனாகவேண்டும் என்பதே என்
பிதாவின் சித்தம்; நான் அவனைக் கடைசி
நாளில் எழுப்புவேன் என்றார்.
பரத்திலிருந்து இறங்கி வந்த ஆகாரம் 41
நானே என்று அவர் சொன்னதினிமித்தம்
யூதர்கள் அவரைக்குறித்து முறுமுறுத்து:
இவன் யோசேப்பின் குமாரன் இயேசு 42
அல்லவா; இவன் தகப்பனும் தாயும் நமக்
குத் தெரியுமே அப்படியிருக்க, நான்
பரத்திலிருந்து இறங்கிவந்தேனென்று இவன்
சொல்வதெப்படி என்றார்கள். அதைக் 43
கேட்ட இயேசு: உங்களுக்குள்ளே முறு
முறுக்கவேண்டாம். என்னை அனுப்பின 44
பிதா இழுத்துக்கொண்டாலொழிய ஒருவ
னும் என்னிடம் வரமுடியாது; நான்
அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்.
எல்லாரும் கடவுளாலே போதிக்கப்பட்ட 45
வர்களாவார்கள் என்று தீர்க்கதரிசன ஆக
மங்களில் எழுதியிருக்கிறதே. பிதாவினிடம்
கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும்
என்னிடத்தில் வருவான். கடவுளிடத்தி 46
னின்று வந்தவரே தவிர வேறொருவரும்
பிதாவைக் கண்டதில்லை; பிதாவைக் கண்
டிருக்கிறவர் இவரே. மெய்யாகவே மெய்யா 47
கவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்:
விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை
யுடையவன். ஜீவாகாரம் நானே. 48
உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னா 49
வைப் புசித்துவந்தும் மரித்தார்கள். இதிலே 50
புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி பரத்தி
லிருந்து இறங்கும் ஆகாரம் இதுவே. பரத்தி 51
லிருந்து இறங்கின ஜீவனுள்ள ஆகாரம்
நானே; இந்த ஆகாரத்தில் புசிக்கிறவன் என்
றென்றைக்கும் பிழைப்பான். நான் கொடுக்
கும் ஆகாரம் உலகத்தின் ஜீவனுக்காக நான்
கொடுக்கும் என் மாம்சமே என்றார்.
அதைக் கேட்ட யூதர்: இவன் தன் மாம் 52
சத்தை நமக்குப் புசிக்கக் கொடுப்பதெப்படி
என்று தங்களுக்குள்ளே வாக்குவாதஞ்
செய்தார்கள். அதற்கு இயேசு: மெய்யா 53
கவே மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்: மனுஷகுமாரன் மாம்
சத்தை நீங்கள் புசித்து அவர் இரத்தத்தைப்

பானம்பண்ணினாலொழிய நீங்கள்
54 உங்களுக்குள் ஜீவனுடையவர்களல்ல. என்
மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப்
பானம்பண்ணுகிறவன் நித்திய ஜீவனை
உடையவன்; நான் அவனைக் கடைசி
55 நாளில் எழுப்புவேன். என் மாம்சமே
மெய்யான போஜனம், என் இரத்தமே மெய்
56 யான பானம். என் மாம்சத்தைப் புசித்து
என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன்
என்னில் நிலைத்திருக்கிறான், நானும் அவ
57 னில் நிலைத்திருக்கிறேன். ஜீவனுள்ள பிதா
என்னை அனுப்பினதுபோலவும், நான் பிதா
வினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்
னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்
58 பான். பரத்திலிருந்திறங்கின ஆகாரம்
இதுவே; இது உங்கள் பிதாக்கள் புசித்த
மன்னாவைப்போன்றதல்ல, அவர்கள் மரித்
தார்களே; இந்த ஆகாரத்தைப் புசிக்கிற
வனோ என்றென்றைக்கும் பிழைப்பான்
59 என்றார். கப்பர்நகூமிலுள்ள ஜெபாலயத்
தில் அவர் உபதேசிக்கையில் இவைகளைச்
சொன்னார்.
60 அவருடைய சீஷரில் பலர் இவைகளைக்
கேட்டு: இந்த உபதேசம் கடினமானது;
இதைக் கேட்கக்கூடியவன் யார் என்றார்கள்.
61 தம்முடைய சீஷர்கள் அதைக்குறித்து
முறுமுறுக்கிறார்களென்று இயேசு தமக்குள்
அறிந்து அவர்களிடம்: இது உங்களுக்கு
62 இடறலாயிருக்கிறதா? அப்படியானால்
மனுஷகுமாரன் தாம் முன்னிருந்த இடத்
திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் கண்டால்
63 எப்படியிருக்கும்? ஆவியே உயிர்ப்பிக்கிறது,
மாம்சமோ ஒன்றுக்கும் உதவாது; நான்
உங்களுக்குச் சொன்ன வசனங்கள் ஆவியும்
64 ஜீவனுமாம். ஆகிலும் உங்களுக்குள் விசு
வாசமில்லாதவர்களும் உண்டு என்றார்.
விசுவாசமில்லாதவர்கள் இன்னாரென்றும்,
தம்மைக் காட்டிக்கொடுப்பவன் இன்னா
னென்றும் ஆதிமுதலே இயேசுவுக்குத் தெரி
65 யும். பின்னும் அவர்: பிதாவினால் அருளப்
பட்டாலன்றி ஒருவனும் என்னிடத்திற்கு
வரமுடியாதென்பதை இதினிமித்தமே உங்
களுக்குச் சொன்னேன் என்றார்.
66 அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர்
அவரைவிட்டுப் பின்வாங்கிப்போனார்கள்;
அப்புறம் அவர்கள் அவரோடு நடக்க
67 வில்லை. அப்பொழுது இயேசு பன்னிரு
வரையும் பார்த்து: நீங்களும் போய்விட
மனமாயிருக்கிறீர்களோவென்று கேட்க,
68 சீமோன் பேதுரு அவரிடம்: ஆண்டவரே,
யாரிடத்திற்குப் போவோம், நித்திய ஜீவ
69 வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர்
கடவுளின் பரிசுத்தர் என்று நாங்கள்
நம்பி அறிந்திருக்கிறோம் என்றான். இயேசு 70
அவர்களிடம்: பன்னிருவராகிய உங்களை
நானே தெரிந்தெடுக்கவில்லையா? ஆயினும்,
உங்களில் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்
றார். ஸ்காரியோத்தூர் சீமோன் மகனான 71
யூதாசைக்குறித்து அவர் இதைச் சொன்னார்;
அவனே அவரைக் காட்டிக்கொடுக்கப்
போகிறவன், பன்னிருவரில் ஒருவன்.

இவைகளுக்குப்பின்பு இயேசு கலிலே 7
யாவிலே சுற்றித்திரிந்தார். யூதர் அவரைக்
கொலைசெய்ய வகைதேடினபடியால் அவர்
யூதேயாவில் சுற்றித்திரிய மனமில்லாதிருந்
தார். கூடாரப்பண்டிகை என்னும் யூதஉற் 2
சவம் சமீபமாயிருந்தது. ஆனபடியால் அவ 3
ருடைய சகோதரர் அவரைப் பார்த்து: இவ்
விடம் விட்டு யூதேயாவுக்குப் போம், உம்
முடைய சீஷரும் நீர் செய்யும் கிரியைகளைப்
பார்க்கட்டும்; பிரபலமாயிருக்க விரும்புகிற 4
எவனும் அந்தரங்கத்தில் ஒன்றையும் செய்
யானே; நீர் இப்படிப்பட்டவைகளைச் செய்
கிறவரானால் உலகத்துக்கு உம்மை வெளிப்
படுத்தும் என்று சொன்னார்கள். அவர் 5
சகோதரரும் அவரில் விசுவாசம் வைக்க
வில்லை. இயேசுவோ அவர்களிடம்: என் 6
வேளை இன்னும் வரவில்லை, உங்கள்
வேளையோ எப்பொழுதுந்தான். உலகம் 7
உங்களைப் பகைக்கமுடியாது; என்னையோ
பகைக்கிறது. அதன் கிரியைகள் பொல்
லாதவைகளென்று நான் சாட்சிகொடுக்
கிறதே காரணம். நீங்கள் பண்டிகைக்குப் 8
போங்கள்; நான் இன்னும் இந்தப் பண்டி
கைக்குப் போகிறதில்லை; என் வேளை இன்
னும் நிறைவாகவில்லையென்று சொன்னார்.
இவைகளை அவர்களுக்குச் சொல்லி, கலி 9
லேயாவிலே இருந்துவிட்டார்.
அவருடைய சகோதரர் பண்டிகைக்குப் 10
போனபின்பு அவரும் போனார். அவர் பகி
ரங்கமாயல்ல, அந்தரங்கமாய்ப் போகிறவர்
போல் போனார். பண்டிகையில் யூதர்: 11
அந்த மனுஷன் எங்கே என்று அவரைத்
தேடினார்கள். ஜனங்களுக்குள் அவரைப் 12
பற்றி உண்டாயிருந்த முணுமுணுப்புக்
கொஞ்சமல்ல; சிலர், அவர் நல்லவரென்
றும், வேறு சிலர், அப்படியல்ல, அவன்
ஜனங்களை வஞ்சிக்கிறவனென்றும் சொல்லிக்
கொண்டார்கள். ஆனாலும் யூதருக்குப் 13
பயந்திருந்ததினால் ஒருவனும் அவரைக்
குறித்துப் பகிரங்கமாய்ப் பேசவில்லை.
பாதிப்பண்டிகையானபோது, இயேசு 14
தேவாலயத்துக்குப் போய், உபதேசஞ்

15 செய்துவந்தார். ஆகவே, யூதர்கள்: இவர்
சாஸ்திரோபதேசம் பெறாதவராயிருந்தும்
சாஸ்திரங்கள் இவருக்கு எப்படித் தெரிய
வந்தனவென்று ஆச்சரியப்பட்டார்கள்.
16 அதைக் கேட்ட இயேசு: என் உபதேசம்
என்னுடையதல்ல, என்னை அனுப்
17 பினவருடையது. ஒருவன் அவருடைய
சித்தத்தைச் செய்ய மனமாயிருப்பானானால்
இந்த உபதேசம் கடவுளால் உண்டாயிருக்
கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ
18 என்று அவன் அறிந்துகொள்வான். சுய
மாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத்
தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகி
மையைத் தேடுகிறவனோ உண்மையுள்ள
19 வன், அவனில் அநீதியில்லை. நியாயப்பிர
மாணத்தை மோசே உங்களுக்குக் கொடுக்க
வில்லையா? அப்படியிருந்தும் உங்களில்
ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தைக்
கைக்கொள்ளுகிறதில்லை; நீங்கள் என்னை
ஏன் கொலைசெய்யத் தேடுகிறீர்கள் என்றார்.
20 அதற்கு ஜனங்கள்: நீ பேய்பிடித்தவன்;
உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறவன் யார்
21 என்றார்கள். அதைக் கேட்ட இயேசு அவர்
களிடம்: ஒரே கிரியையைச் செய்தேன்,
அதைக்குறித்து எல்லாரும் ஆச்சரியப்படு
22 கிறீர்கள். பாருங்கள், மோசே உங்களுக்கு
விருத்தசேதனத்தை நியமித்தான்; என்றா
லும் அது மோசேயினால் உண்டாகவில்லை,
பிதாக்களால் உண்டாயிற்று; அதன்படி
நீங்கள் ஓய்வுநாளிலும் மனுஷனை விருத்த
23 சேதனம் செய்கிறீர்கள். மோசேயின் நியா
யப்பிரமாணம் மீறப்படாதபடிக்கு ஓய்வு
நாளில் மனுஷன் விருத்தசேதனம் பெற்
றால், நான் ஓய்வுநாளில் ஒரு மனுஷனுக்குச்
சர்வாங்க சுகம் அளித்ததினாலே என்மேல்
24 எரிச்சல் கொள்ளுகிறீர்களோ? தோற்
றத்தின்படி தீர்ப்புச்செய்யாமல் நியாய
மாய்த் தீர்ப்புச் செய்யுங்கள் என்றார்.
25 ஆகவே, எருசலேம் நகரத்தாரில்
சிலர்: இவனையல்லவா அதிகாரிகள் கொலை
26 செய்யத் தேடுகிறார்கள்; இதோ, இவன்
பகிரங்கமாய்ப் பேசுகிறானே; இவனுக்கு
அவர்கள் ஒன்றும் சொல்லுகிறதில்லையே;
இவனே கிறிஸ்து என்று மெய்யாய் அறிந்
27 திருக்கிறார்களோ? அல்ல, இவன் இன்ன
இடத்திலிருந்து வந்தவனென்று அறிந்திருக்
கிறோம், கிறிஸ்து வரும்போதோ அவர்
இன்ன இடத்திலிருந்து வருகிறவரென்று
ஒருவனும் அறியமாட்டானே என்றார்கள்.
28 ஆகவே, இயேசு தேவாலயத்தில் உபதேசிக்
கையில் சத்தமிட்டு: நீங்கள் என்னை அறி
வீர்கள், நான் எங்கேயிருந்து வந்தேனென்
றும் அறிவீர்கள்; நான் என் சுயமாய் வர
வில்லை, என்னை அனுப்பினவர் மெய்ப்
பொருளானவர், அவரை நீங்கள் அறியா
திருக்கிறீர்கள். நானோ அவரை அறிந்திருக் 29
கிறேன். நான் அவரிடமிருந்து வந்திருக்
கிறேன், அவரே என்னை அனுப்பினார் என்
றார். இதினிமித்தம் அவரைப் பிடிக்க 30
வகைதேடினார்கள்; ஆயினும் அவருடைய
வேளை இன்னும் வராதபடியினால் ஒருவனும்
அவர்மேல் கைபோடவில்லை.
ஜனக்கூட்டத்திலோ அநேகர் அவரில் 31
விசுவாசம் வைத்து: கிறிஸ்து வரும்போது
இவர் செய்திருக்கிற அடையாளங்களைப்
பார்க்கிலும் அதிகம் செய்வாரோ என்று
சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஜனங்கள் 32
அவரைக்குறித்து இப்படி முணுமுணுத்துப்
பேசிக்கொள்ளுகிறதைப் பரிசேயர் கேட்ட
பொழுது, அவரைப் பிடிக்கும்படி பிரதான
ஆசாரியரும் பரிசேயரும் சேவகரை அனுப்
பினார்கள். இயேசு அதை அறிந்து: இன்னும் 33
கொஞ்சக்காலம் உங்களோடிருக்கிறேன்,
பின்பு என்னை அனுப்பினவரிடம் போகி
றேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள், தேடி 34
னாலும் காணமாட்டீர்கள்; நான் எங்கே
இருப்பேனோ அங்கே நீங்கள் வர
முடியாது என்றார். அதைக் கேட்ட யூதர்: 35
நாம் கண்டுபிடிக்கமுடியாதபடி இவர்
எங்கே போவார்? கிரேக்கருக்குள்ளே சிதறி
யிருக்கிறவர்களிடம் போய், கிரேக்கருக்கு
உபதேசஞ்செய்வாரோ? நீங்கள் என்னைத் 36
தேடுவீர்கள், தேடினாலும் காணமாட்டீர்கள்
என்றும், நான் எங்கே இருப்பேனோ அங்கே
நீங்கள் வரமுடியாது என்றும் அவர் சொன்ன
இவ்வார்த்தை என்னவென்று தங்களுக்
குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.
பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான 37
நாளில் இயேசு நின்று சத்தமிட்டு: ஒருவன்
தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து
பானம்பண்ணக்கடவன். என்னில் விசு 38
வாசம்வைக்கிறவன் எவனோ அவன் உள்
ளத்திலிருந்து, வேதவாக்கியம் சொல்லிய
படி, ஜீவ தண்ணீருள்ள நதிகள் பாய்ந்
தோடும் என்றார். தம்மில் விசுவாசம் வைப் 39
பவர்கள் பெறப்போகிற ஆவியானவரைக்
குறித்து இப்படிச் சொன்னார். இயேசு
இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால்
ஆவி இன்னும் அருளப்படவில்லை. ஜனங் 40
களில் சிலர் இந்த வார்த்தைகளைக் கேட்டு:
மெய்யாகவே இவர்தான் அந்தத் தீர்க்கதரிசி
என்று சொல்லிக்கொண்டார்கள். வேறு 41
சிலர், இவர்தான் கிறிஸ்து என்று சொல்லிக்
கொண்டார்கள். வேறு சிலரோ: கிறிஸ்து

42 கலிலேயாவிலிருந்தோ வருவார்? தாவீதின்
சந்ததியிலும் தாவீது இருந்த பெத்லெகேம்
ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவாரென்று
வேதவாக்கியம் சொல்லவில்லையா என்
43 றார்கள். இவ்விதமாக அவர்நிமித்தம் ஜனங்
44 களில் பிரிவினை உண்டாயிற்று. அவர்க
ளில் சிலர் அவரைப் பிடிக்க மனமாயிருந்
தார்கள், இருந்தாலும் ஒருவனும் அவர்
45 மேல் கைபோடவில்லை. ஆகவே, பிரதான
ஆசாரியர் பரிசேயராகிய இவர்களிடத்திற்கு
அந்தச் சேவகர் வந்தார்கள். இவர்கள்
சேவகரைப் பார்த்து: நீங்கள் அவனைக்
கொண்டுவராமற்போனதென்ன என்று
46 கேட்க, | சேவகர்: இந்த மனுஷன் பேசு
கிறதுபோல் ஒருவனும் ஒருகாலும் பேசின
47 தில்லை என்றார்கள். இதைக்கேட்ட பரி
சேயர்: நீங்களும் மோசம்போனீர்களோ?
48 அதிகாரிகளிலாவது பரிசேயரிலாவது
யாதொருவர் அவரில் விசுவாசம் வைத்த
49 துண்டோ? நியாயப்பிரமாணத்தை அறியா
தவர்களாகிய இந்த ஜனங்களோ சாபத்துக்
50 குள்ளானவர்கள் என்றார்கள். முந்தி அவ
ரிடம் வந்தவனும் அவர்களிலொருவனு
மாகிய நிக்கொதேமு என்பவன் அவர்க
51 ளைப் பார்த்து: ஒருவனை முதலாவது விசா
ரித்து அவன் செய்கிறது இன்னதென்று
அறிந்தாலொழிய நமது பிரமாணம்
அவனைக் குற்றவாளியென்று தீர்க்குமோ
52 என்றான். அதற்கு அவர்கள்: நீரும்
கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு
தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை
ஆராய்ந்து பாரும் என்றார்கள்.

53 பின்பு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள்
8 வீட்டுக்குப் போனார்கள். இயேசுவோ ஒலிவ
2 மலைக்குப் போனார். காலையிலே அவர் திரும்ப
வும் தேவாலயத்திற்கு வந்தார். ஜனங்களெல்
லாரும் அவரிடம் வரவே, அவர் உட்
கார்ந்து அவர்களுக்கு உபதேசஞ்செய்தார்.
3 அப்பொழுது விபசாரத்தில் பிடிபட்ட ஒரு
ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும்
அவரிடம் கொண்டுவந்து, நடுவே நிறுத்தி:
4 போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும்
5 மெய்யுமாய்ப் பிடிபட்டாள். இப்படிப்
பட்ட ஸ்திரீகளைக் கல்லெறிந்து கொல்ல
வேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்
தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறானே; நீர்
6 சொல்லுகிறதென்ன என்றார்கள். அவர்மேல்
குற்றஞ்சுமத்தவேண்டும் என்று அவரைச்
சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள்.
இயேசுவோ குனிந்து விரலினால் தரை
7 யிலே எழுதிக்கொண்டிருந்தார். அவர்கள்
ஓயாமல் அவரைக் கேட்டுக்கொண்டிருக்
கையில், அவர் நிமிர்ந்து அவர்களைப்
பார்த்து: உங்களில் பாவமில்லாதவனெவனோ
அவன் முதலாவது இவள்மேல் கல்லெறி
யக்கடவனென்று சொல்லி, மறுபடியும் 8
குனிந்து தரையிலே எழுதிக்கொண்டிருந்
தார். அவர்களோ அதைக் கேட்டு, தங்கள் 9
மனச்சாட்சியினால் கண்டிக்கப்பட்டு, பெரி
யோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்
வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு
அங்கே தனியே இருந்தார்; அந்த ஸ்திரீ
நடுவே நின்றாள். இயேசு நிமிர்ந்து அந்த 10
ஸ்திரீயைத் தவிர வேறொருவரையும் காணா
மல்: அம்மா, உன்மேல் குற்றஞ்சாட்டின
வர்கள் எங்கே? உனக்கு ஆக்கினைத் தீர்ப்பிடு
வார் ஒருவருமில்லையா என்று அவளிடம்
சொல்ல, | அவள்: ஒருவருமில்லை, ஆண்ட 11
வரே என்றாள். இயேசு அவளிடம்: நானும்
உனக்கு ஆக்கினைத் தீர்ப்பிடுகிறதில்லை; நீ
போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார்.

மறுபடியும் இயேசு அவர்களிடம் பேசி: 12
உலகத்துக்கு ஒளி நானே; என்னைப் பின்
பற்றுகிறவன் இருளில் நடப்பதேயில்லை,
ஜீவ வெளிச்சத்தை அடைந்திருப்பான்
என்றார். பரிசேயர் இதைக் கேட்டு அவ 13
ரிடம்: உன்னைக்குறித்து நீயே சாட்சி
சொல்லுகிறாய்; உன் சாட்சியம் உண்மை
யாகாது என்று சொல்ல, | இயேசு: என் 14
னைக்குறித்து நானே சாட்சி சொன்னாலும்
என் சாட்சியம் உண்மையே; ஏனெனில்
நான் எங்கிருந்து வந்தேனென்றும், எங்கே
போகிறேனென்றும் எனக்குத் தெரியும்;
நான் எங்கிருந்து வருகிறேனென்றும்,
எங்கே போகிறேனென்றும் உங்களுக்குத்
தெரியாது. நீங்கள் மாம்சமுறைப்படி 15
தீர்ப்பிடுகிறீர்கள், நான் ஒருவனுக்கும் தீர்ப்
பிடுகிறதில்லை. நான் தீர்ப்பிட்டாலும் என் 16
தீர்ப்பு யதார்த்தம்; ஏனெனில் நான் தனி
மையாயிருக்கவில்லை, நானும் என்னை அனுப்
பினவரும் இருக்கிறோம். இருவர் சொல் 17
லும் சாட்சியம் உண்மையென்று உங்கள்
நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே.
என்னைக்குறித்து நான் சாட்சி சொல்லு 18
கிறேன், என்னை அனுப்பின பிதாவும் என்
னைக்குறித்துச் சாட்சி சொல்லுகிறார் என்
றார். அவர்கள்: உம்முடைய பிதா எங்கே 19
என்று கேட்க, இயேசு அவர்களிடம்: என்
னையும் அறியீர்கள், என் பிதாவையும் அறி
யீர்கள்; என்னை அறிந்திருந்தால் என் பிதா
வையும் அறிந்திருப்பீர்கள் என்றார். தேவா 20
லயத்தில் அவர் உபதேசிக்கையில் காணிக்

கைப்பெட்டியிருக்கும் இடத்தில் இந்த
வசனங்களைப் பேசினார். அவர் வேளை இன்
னும் வராதபடியினால் ஒருவனும் அவரைப்
பிடிக்கவில்லை.
21 அவர் மறுபடியும் அவர்களைப் பார்த்து:
நான் போய்விடுவேன்; நீங்கள் என்னைத்தேடு
வீர்கள், உங்கள் பாவத்திலே சாவீர்கள்;
நான் போகிற இடத்துக்கு நீங்கள் வர
22 முடியாது என்றார். அப்பொழுது யூதர்:
நான் போகிற இடத்துக்கு நீங்கள் வர
முடியாதென்கிறானே; தற்கொலை செய்து
கொள்வானோ என்று பேசிக்கொண்
23 டார்கள். அவர் அவர்களிடம்: நீங்கள் கீழே
யிருந்து வந்தவர்கள், நான் மேலேயிருந்து
வந்தவர்; நீங்கள் இந்த உலகத்திற்குரிய
வர்கள், நான் இந்த உலகத்திற்குரியவரல்ல.
24 நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள்
என்று நான் உங்களுக்குச் சொன்னது இது
பற்றியேதான்; நானே அவர் என்று நீங்கள்
நம்பாவிட்டால் உங்கள் பாவங்களில்
25 சாவீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: நீர்
யார் என்று கேட்க, இயேசு: நான் எவ
ரென்று உங்களுக்குச் சொல்லிவந்தேனோ,
26 நான் அவர்தான். உங்களைப்பற்றிப் பேச
வும் தீர்ப்பிடவும் வேண்டிய காரியங்கள்
அநேகம் எனக்குண்டு. என்னை அனுப்பின
வரோ உண்மையுள்ளவர். அவரிடம்
கேட்டவைகளையே நான் உலகத்துக்குச்
27 சொல்லுகிறேன் என்றார். பிதாவைக்குறித்
துத் தங்களிடம் பேசினாரென்று அவர்கள்
28 அறியாதிருந்தார்கள். ஆகையால், இயேசு
அவர்களைப் பார்த்து: நீங்கள் மனுஷ
குமாரனை உயர்த்தினபின், நானே அவரென்
றும், நான் என் சுயமாய் ஒன்றும் செய்
யாமல் பிதா எனக்குக் கற்பித்தபடியே இவற்
றைப் பேசுகிறேனென்றும் அறிவீர்கள்.
29 என்னை அனுப்பினவர் என்னோடே இருக்
கிறார், அவருக்குப் பிரியமானவைகளை நான்
எப்பொழுதும் செய்கிறபடியால், அவர்
என்னைத் தனியே விட்டதில்லை என்று
30 சொன்னார். அவர் இவற்றைச் சொல்லவே
பலர் அவரில் விசுவாசம் வைத்தார்கள்.
31 அதை அறிந்த இயேசு தம்மை விசுவா
சித்த யூதரைப் பார்த்து: என் வார்த்தையில்
நிலைகொண்டிருந்தால் மெய்யாகவே நீங்கள்
32 என் சீஷர்; சத்தியத்தை அறிந்துகொள்
வீர்கள், சத்தியம் உங்களைச் சுயாதீன
33 ராக்கும் என்றார். அதற்கு அவர்கள்:
நாங்கள் ஆபிரகாமின் சந்ததியார், நாங்கள்
ஒருகாலும் ஒருவனுக்கும் அடிமைகளான
தில்லை; நீங்கள் சுயாதீனராவீர்களென்று
நீர் சொல்வதெப்படி என்று சொல்ல,
இயேசு அவர்களிடம்: மெய்யாகவே மெய் 34
யாகவே நான் உங்களுக்குச் சொல்லு
கிறேன்: பாவஞ்செய்கிறவன் எவனும்
பாவத்துக்கு அடிமை. அடிமையானவன் 35
என்றைக்கும் வீட்டிலே நிலைத்திரான்;
குமாரனோ என்றைக்கும் நிலைத்திருக்கிறார்.
ஆகையால் குமாரன் உங்களைச் சுயாதீன 36
ராக்கிவிட்டால் மெய்யாகவே நீங்கள் சுயா
தீனராவீர்கள். நீங்கள் ஆபிரகாமின் 37
சந்ததியாரென்பது எனக்குத் தெரியும்.
ஆயினும், உங்களுக்குள்ளே என் வார்த்
தைக்கு இடம் இல்லாததினால் என்னைக்
கொலைசெய்யத் தேடுகிறீர்கள். நான் என் 38
பிதாவோடிருந்து கண்டவற்றைச் சொல்லு
கிறேன், அப்படியே நீங்களும் உங்கள்
பிதாவினிடமிருந்து கேட்டவற்றைச்
செய்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: 39
ஆபிரகாமே எங்கள் பிதா என்று சொல்ல,
இயேசு: நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளா
யானால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்
யுங்கள். கடவுளிடமிருந்து கேட்ட சத்தி 40
யத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய
என்னை நீங்கள் கொல்லத் தேடுகிறீர்கள்,
ஆபிரகாம் இப்படிச் செய்ததில்லையே.
நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் 41
செய்கிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்:
நாங்கள் வேசித்தனத்தில் பிறந்தவர்களல்ல;
ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் கடவுளே
என்றார்கள். இயேசு அவர்களிடம்: கடவுள் 42
உங்கள் பிதாவானால் என்னில் அன்பு
கூருவீர்கள். நான் கடவுளிடமிருந்து புறப்
பட்டு வந்திருக்கிறேன்; நான் சுயமாய் வர
வில்லை, அவரே என்னை அனுப்பினார். என் 43
பேச்சை நீங்கள் ஏன் அறியாமலிருக்
கிறீர்கள்? என் வார்த்தையைக் கேட்க முடி
யாததினாலேயே. நீங்கள் உங்கள் பிதாவா 44
கிய பிசாசுக்குரியவர்கள்; உங்கள் பிதாவின்
இச்சைகளின்படி செய்ய நீங்கள் மனமா
யிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு
மனுஷ கொலைபாதகன்; சத்தியம் அவனில்
இல்லாதபடியால் அவன் சத்தியத்தில் நிலைத்
திருக்கவில்லை; அவன் பொய் பேசும்போ
தெல்லாம்தன் இயல்பின்படியே பேசுகிறான்;
அவன் பொய்யன், பொய்க்குப் பிதா. நான் 45
உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடி
யினால் நீங்கள் என்னை நம்புகிறதில்லை. என் 46
னில் பாவம் உண்டென்று உங்களில் யார்
என்னைக் குற்றப்படுத்துவான்? நான் சத்தியத்
தைச் சொன்னால் நீங்கள் ஏன் என்னை நம்பு
கிறதில்லை? கடவுளுக்குரியவன் கடவுளின் 47
வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கிறான்;
நீங்கள் கடவுளுக்குரியவர்களல்ல, ஆதலால்

48 செவிகொடுக்கிறதில்லை என்றார். அப்
பொழுது யூதர் அவரிடம்: உன்னைச் சமாரிய
னென்றும் பேய்பிடித்தவனென்றும் நாங்கள்
சொல்லுகிறது சரிதானல்லவா என்று
49 சொல்ல, | இயேசு: நான் பேய்பிடித்த
வனல்ல, நான் என் பிதாவைக் கனம்
பண்ணுகிறேன், நீங்களோ என்னைக் கன
50 வீனப்படுத்துகிறீர்கள். நான் என் மகிமை
யைத் தேடுகிறதில்லை ;அதைத் தேடுகிறவர்
ஒருவர் இருக்கிறார்; அவரே நியாயந்தீர்க்
51 கிறவர். மெய்யாகவே மெய்யாகவே நான்
உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஒருவன்
என் வார்த்தையைக் கைக்கொண்டால்
அவன் என்றென்றைக்கும் மரணத்தைக்
52 காண்பதில்லை என்றார். யூதர் அவரைப்
பார்த்து: நீ பேய்பிடித்தவனென்று இப்
பொழுது அறிந்துகொண்டோம். ஆபிரகாம்
மரித்தார், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்.
நீயோ: ஒருவன் என் வார்த்தையைக்
கைக்கொண்டால் என்றென்றைக்கும்
மரணத்தை ருசிபார்ப்பதேயில்லை என்கிறாய்
53 எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரிய
வனோ? அவர் மரித்தார், தீர்க்கதரிசிகளும்
மரித்தார்கள்; உன்னை யாரென்று பாராட்
54 டிக்கொள்ளுகிறாய் என்றார்கள். அதற்கு
இயேசு: என்னை நானே மகிமைப்படுத்து
வேனானால் என் மகிமை ஒன்றுமில்லை. என்
பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர்;
அவரை உங்கள் கடவுள் என்று நீங்கள்
55 சொல்லுகிறீர்கள். என்றாலும் நீங்கள்
அவரை அறிந்துகொள்ளவில்லை. நான்
அவரை அறிவேன். அவரை அறியேன்
என்று நான் சொல்லுவேனாகில் உங்களைப்
போலவே நானும் பொய்யனாயிருப்பேன்;
அவரை நான் அறிவேன், அவர் வார்த்தை
56 யைக் கைக்கொள்ளுகிறேன். உங்கள் பிதா
வாகிய ஆபிரகாம் எனது நாளைக் காண ஆவல்
கொண்டு மகிழ்ந்திருந்தான்; கண்டு களி
57 கூர்ந்தான் என்றார். அதைக் கேட்ட யூதர்:
உனக்கு இன்னும் ஐம்பது வயதாக
வில்லையே, நீ ஆபிரகாமைக் கண்டாயோ
58 என்றார்கள். அதற்கு இயேசு: ஆபிரகாம்
பிறக்கும் முன்னமே நான் இருக்கிறேன்
என்று மெய்யாகவே மெய்யாகவே நான்
59 உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அப்
பொழுது அவர்மேல் எறியும்படி கற்களை
எடுத்துக்கொண்டார்கள். இயேசுவோ
மறைந்து தேவாலயத்தைவிட்டுப் போனார்.

9 அவர் அப்பாற்போகையில் பிறவிக்குரு
2 டன் ஒருவனைக் கண்டார். அவர் சீஷர்
அவரிடம்: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்
தது யார் செய்த பாவம்? இவன் செய்ததோ,
இவன் பெற்றோர் செய்ததோ என்று கேட்
டார்கள். அதற்கு இயேசு: அது இவன் 3
செய்த பாவமுமல்ல, இவன் பெற்றோர்
செய்த பாவமுமல்ல; கடவுளின் கிரியைகள்
இவனிடம் வெளிப்படும்பொருட்டே இப்
படிப் பிறந்தான். பகற்காலமிருக்குமட் 4
டும் என்னை அனுப்பினவரின் கிரியைகளை
நாம் செய்யவேண்டும்; ஒருவனும் வேலை
செய்யமுடியாத இராக்காலம் வருகிறது.
நான் உலகத்திலிருக்கும் நாளெல்லாம் 5
நான் உலகத்துக்கு ஒளி என்றார். இவை 6
களைச் சொல்லித் தரையிலே துப்பி, உமிழ்
நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக்
குருடனுடைய கண்களில் பூசி: நீ போய், 7
சீலோவாம் குளத்திலே கழுவு என்றார்.
சீலோவாம் என்பது அனுப்பப்பட்டவர்
என்று பொருள்படும். அப்படியே அவன்
போய்க் கழுவி, கண் தெரிந்தவனாய்த் திரும்
பினான். அப்பொழுது அயலகத்தாரும், 8
அவனைப் பிச்சைக்காரனாய் இதற்குமுன்
கண்டிருந்தவர்களும்: உட்கார்ந்து பிச்சை
கேட்டுக்கொண்டிருந்தவன் இவனே அல்
லவா என்றார்கள். சிலர்: இவன்தான் 9
என்றார்கள். வேறு சிலர்: அல்ல, அவனைப்
போலிருக்கிறான் என்றார்கள். அவனோ:
நான்தான் அவன் என்றான். ஆகவே, 10
அவர்கள் அவனிடம்: உன் கண்கள் திற
வுண்டது எப்படி என்று கேட்க, அவன்: 11
இயேசு எனப்பட்டவர் சேறுண்டாக்கி
என் கண்களில் பூசி, நீ சீலோவாமுக்குப்
போய்க் கழுவு என்றார்; அப்படியே நான்
போய்க் கழுவிப் பார்வையடைந்தேன் என்
றான். அப்பொழுது அவர்கள் அவனிடம்: 12
அவர் எங்கே என்று கேட்க, எனக்குத்
தெரியாது என்றான்.

முன் குருடனாயிருந்த அவனைப் பரிசேய 13
ரிடத்திற்குக் கொண்டுபோனார்கள்.
இயேசு சேறுண்டாக்கி அவன் கண்களைத் 14
திறந்த நாள் ஓய்வுநாள். ஆதலால் பரி 15
சேயரும் அவனைப் பார்த்து: எப்படிப் பார்
வையடைந்தாய் என்று திரும்பவும் கேட்
டார்கள். அதற்கு அவன்: அவர் என் கண்
களில் சேற்றைப் பூசினார், கழுவினேன்,
காண்கிறேன் என்றான். அதைக் கேட்ட 16
பரிசேயரில் சிலர்: இந்த மனுஷன் கடவு
ளிடமிருந்து வந்தவனல்ல, இவன் ஓய்வு
நாளை ஆசரிக்கவில்லையே என்றார்கள்.
வேறு சிலர்: பாவியாயிருக்கிற மனுஷன்
இப்படிப்பட்ட அடையாளங்களை எப்படிச்
செய்வான் என்றார்கள். இவ்விதமாய் அவர்
களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று.

17 அவர்கள் மறுபடியும் குருடனைப் பார்த்து:
உன் கண்களைத் திறந்தானே, அவனைக்
குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்று
கேட்க, அவன்: அவர் தீர்க்கதரிசி என்றான்.
18 அவன் குருடனாயிருந்து பார்வையடைந்
ததை யூதர் நம்பாமல், பார்வையடைந்தவ
னுடைய பெற்றோரை அழைப்பித்து, |
19 அவர்களிடம்: குருடனாய்ப் பிறந்தான்
என்று நீங்கள் சொல்லுகிற உங்கள் மகன்
இவன்தானா? இவனானால் இவனுக்கு இப்
பொழுது கண் தெரிகிறது எப்படி என்று
20 கேட்க, | அவன் பெற்றோர்: இவன் எங்கள்
மகன்தான் என்றும், குருடனாய்ப் பிறந்தான்
21 என்றும் எங்களுக்குத் தெரியும். இப்பொ
ழுது இவன் பார்வையடைந்த வகையோ
எங்களுக்குத் தெரியாது; இவன் கண்களைத்
திறந்தவன் இன்னான் என்பதும் எங்க
ளுக்குத் தெரியாது; இவனைக் கேளுங்கள்,
இவன் பெரியவன், இவனே தன் காரியத்
22 தைச் சொல்லுவான் என்றார்கள். அவ
னுடைய தாய்தகப்பன்மார் யூதருக்குப்
பயந்து இப்படிச் சொன்னார்கள். ஏனெ
னில் அவரைக் கிறிஸ்து என்று எவனாவது
அறிக்கைபண்ணுவானானால், அவனைச்
சபைக்கு விலக்கிவைக்கவேண்டுமென்று
யூதர் அதற்கு முன்னமே கட்டுப்பாடு செய்
23 திருந்தார்கள். இதினிமித்தம் அவன் பெற்
றோர்: இவன் பெரியவன், இவனைக்
24 கேளுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே,
குருடனாயிருந்த மனுஷனை அவர்கள் இரண்
டாந்தரம் அழைத்து: நீ கடவுளுக்கு மகிமை
செலுத்து, இந்த மனுஷன் பாவியென்று
எங்களுக்குத் தெரியும் என்றார்கள்.
25 அவனோ அதைக் கேட்டு: அவர் பாவியோ
அல்லவோ எனக்குத் தெரியாது; ஒன்று
தான் எனக்குத் தெரியும்: நான் குருடனா
யிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்
26 என்று சொன்னான். அவர்கள்: உனக்கு
என்ன செய்தான், உன் கண்களை எப்படித்
27 திறந்தான் என்று அவனைக் கேட்க, அவன்:
முன்னமே உங்களுக்குச் சொல்லியாயிற்று,
நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும்
நீங்கள் அதைக் கேட்க விரும்புகிறதென்ன?
நீங்களும் அவருக்குச் சீஷராக விரும்புகிறீர்
28 களோ என்று சொன்னான். அப்பொழுது
அவர்கள் அவனை வைது: நீ அவனுடைய
சீஷன், நாங்களோ மோசேயின் சீஷர்.
29 மோசேயோடு கடவுள் பேசினாரென்று எங்
களுக்குத் தெரியும், இவன் எங்கேயிருந்து
வந்தவனோ எங்களுக்குத் தெரியாது என்
30 றார்கள். அதற்கு அந்த மனுஷன்: இதுதான்
ஆச்சரியம்; அவர் எங்கேயிருந்து வந்தா
ரென்று உங்களுக்குத் தெரியாதோ? அவர்
என் கண்களைத் திறந்தாரே. கடவுள் பாவி 31
களுக்குச் செவிசாய்க்கிறதில்லையென்று நமக்
குத் தெரியும்; ஒருவன் தேவபக்தியுள்ளவனா
யிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்
வானானால், அவனுக்குச் செவிசாய்ப்பார்.
பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் 32
திறந்தான் என்று உலகம் உண்டானது
முதல் கேள்விப்பட்டதேயில்லை. அவர் 33
கடவுளிடமிருந்து வந்திருந்தாலொழிய
அவர் யாதொன்றும் செய்யமுடியாது என்
றான். அதைக் கேட்ட அவர்கள்: முழுதும் 34
பாவத்தில் பிறந்த நீயா எங்களுக்குப்
போதிக்கிறாய் என்று சொல்லி அவனை
வெளியே துரத்திவிட்டார்கள்.

அவனை அவர்கள் வெளியே துரத்திவிட் 35
டதை இயேசு கேள்விப்பட்டு அவனைக்
கண்டுபிடித்து: நீ மனுஷகுமாரனில் விசு
வாசம் வைக்கிறாயா என்றார். அதற்கு 36
அவன்: அவரில் நான் விசுவாசம் வைக்கும்
படி அவர் யார், ஆண்டவரே என்றான்.
இயேசு அவனைப் பார்த்து: நீ அவரைக் 37
கண்டிருக்கிறாய், உன்னோடு பேசுகிறவ
ரும் அவர்தான் என்றார். உடனே அவன்: 38
விசுவாசிக்கிறேன், ஆண்டவரே என்று
சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான்.

அப்பொழுது இயேசு: தீர்ப்பு உண் 39
டாகவே நான் இந்த உலகத்தில் வந்தேன்,
காணாதவர்கள் காணவும், காண்கிறவர்கள்
குருடராகவுமே வந்தேன் என்றார். அவரோ 40
டிருந்த பரிசேயர் இவைகளைக் கேட்ட
பொழுது: நாங்களும் குருடரோ என்று
சொல்ல, | இயேசு அவர்களிடம்: நீங்கள் 41
குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவ
மிராது; இப்பொழுதோ, காண்கிறோம்
என்று நீங்கள் சொல்லுகிறபடியினால்
உங்கள் பாவம் நிலைநிற்கிறது என்றார்.

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்க **10**
ளுக்குச் சொல்லுகிறேன்: ஆட்டுத்தொழுவத்
துக்குள் வாசல்வழியாய்ச் செல்லாமல் வேறு
வழியாய் ஏறுகிறவன் திருடனும் கொள்ளைக்
காரனுமாம், வாசல் வழியாய்ச் செல்லுகிற 2
வனோ ஆடுகளின் மேய்ப்பன். வாசல்காக் 3
கிறவன் அவனுக்கு வாசலைத் திறக்கிறான்;
ஆடுகளும் அவன் குரலைக் கேட்கின்றன.
அவன் தன் சொந்த ஆடுகளைப் பேர்
சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே
நடத்திக்கொண்டு போகிறான். அவன் தன் 4
ஆடுகள் எல்லாவற்றையும் வெளியே விட்ட
பின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்து
போகிறான்; ஆடுகளுக்கு அவன் குரல்

தெரிந்திருக்கிறபடியினால், அவைகள் அவ
5 னுக்குப் பின்செல்லும். அன்னியரின் குரல்
அவைகளுக்குத் தெரியாததால் அவைகள்
அன்னியனுக்குப் பின்செல்லாமல் அவனை
6 விட்டோடிப்போம் என்றார். இதை இயேசு
அவர்களுக்கு உபமானமாய்ச் சொன்னார்;
அவர்களோ அவர் சொன்னது இன்ன
தென்று அறிந்துகொள்ளவில்லை.
7 ஆகவே இயேசு மறுபடியும் அவர்க
ளிடம்: மெய்யாகவே மெய்யாகவே நான்
உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆடுகளுக்கு
8 நானே வாசல். எனக்கு முன் வந்தவர்களெல்
லாரும் திருடரும் கொள்ளைக்காரருமே.
ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்க
9 வில்லை. நானே வாசல், என் வழியாய்
ஒருவன் உட்சென்றால் அவன் இரட்சிப்
படைவான். அவன் உள்ளும் புறம்பும்
சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்.
10 திருடன் திருடவும் கொல்லவும் அழிக்க
வுமேயன்றி வேறொன்றுக்கும் வரான்.
நானோ அவைகள் ஜீவனைப் பெறவும், அதை
மிகவும் அதிகமாய்ப் பெறவுமே வந்தேன்.
11 நானே நல்ல மேய்ப்பன். நல்ல மேய்ப்
பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக்
12 கொடுக்கிறான். கூலிக்காரனோ மேய்ப்பனு
மல்ல, ஆடுகளை உடையவனுமல்ல,
ஓநாய் வருகிறதைக் கூலிக்காரன் கண்டு
ஆடுகளை விட்டுவிட்டு ஓடிப்போகிறான்;
அப்பொழுது ஓநாய் ஆடுகளைக் கவ்விப்
13 பிடித்து அவைகளைச் சிதறடிக்கும். அவன்
கூலிக்காரனானபடியால் ஓடிப்போகிறான், ஆடு
களைப்பற்றி அவனுக்கு அக்கறையில்லை.
14 நானே நல்ல மேய்ப்பன். பிதா என்னை
அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை
15 அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னு
டையவைகளை அறிந்திருக்கிறேன், என்னு
டையவைகள் என்னை அறிந்திருக்கின்றன;
ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்
16 கிறேன். இத்தொழுவத்திற்குரியவைகளல்
லாத வேறே ஆடுகளும் எனக்குண்டு;
அவைகளையும் நான் நடத்திக்கொண்டுவர
வேண்டும், அவைகள் என் குரலைக் கேட்
கும்; அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே
17 மேய்ப்பனுமாகும். நான் என் ஜீவனைக்
கொடுக்கிறபடியினால் பிதா என்னில்
அன்பாயிருக்கிறார்; திரும்பப் பெற்றுக்
கொள்ளும்படி நான் அதைக் கொடுக்கி
18 றேன். ஒருவனும் அதை என்னிடமிருந்து
எடுத்துக்கொள்ளான், நானே அதைக்
கொடுக்கிறேன்; அதைக் கொடுக்கவும்
எனக்கு அதிகாரம் உண்டு, அதைத் திரும்பப்
பெற்றுக்கொள்ளவும் எனக்கு அதிகாரம்
உண்டு. இந்த நியமத்தை என் பிதாவி
னிடம் பெற்றுக்கொண்டேன் என்றார்.
இவ்வார்த்தைகளினிமித்தம் யூதருக் 19
குள்ளே மறுபடியும் பிரிவினை உண்டா
யிற்று. அவர்களில் அநேகர்: இவன் பேய் 20
பிடித்தவன், பிதற்றுகிறான்; இவன் சொல்
வதை ஏன் கேட்கிறீர்கள் என்றார்கள்.
வேறே சிலர்: இவைகள் பேய்பிடித்தவனு 21
டைய சொற்களல்லவே; குருடருடைய கண்
களைப் பேய் திறக்கக்கூடுமோ என்றார்கள்.
பின்பு எருசலேமிலே தேவாலயப் பிர 22
திஷ்டைப் பண்டிகை வந்தது; அது மாரி
காலம். இயேசு தேவாலயத்தில் சாலொமோ 23
னுடைய மண்டபத்திலே உலாவிக்கொண்
டிருக்கையில், யூதர் அவரைச் சூழ்ந்து 24
கொண்டு: எதுவரைக்கும் எங்களைச் சந்தே
கத்துக்குள்ளிருக்கச் செய்வீர்? நீர்தான்
கிறிஸ்துவானால் எங்களுக்குத் தெளிவாய்ச்
சொல்லிவிடும் என்று கேட்க, இயேசு அவர் 25
களிடம்: உங்களுக்குச் சொல்லிவிட்டேன்,
நீங்களோ நம்புகிறதில்லை. என் பிதாவின்
நாமத்தில் நான் செய்கிற கிரியைகளே
என்னைக்குறித்துச் சாட்சியிடுகின்றன. நீங் 26
களோ என் ஆடுகளோடு சேர்ந்தவர்களல்
லாததினால் என்னை நம்புகிறதில்லை; என் 27
ஆடுகள் என் குரலைக் கேட்கும்; நான்
அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள்
எனக்குப் பின்செல்லுகின்றன. நான் அவை 28
களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்;
அவைகள் ஒருகாலும் அழிந்துபோவதே
யில்லை, ஒருவனும் அவைகளை என் கையி
லிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவை 29
களை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும்
பெரியவர்; பிதாவின் கையிலிருந்து பறித்
துக்கொள்ளவோ ஒருவனாலும் முடியாது.
நானும் பிதாவும் ஒன்றே என்றார். 30
அவர்மேல் கல்லெறியும்படி யூதர் மறுபடி 31
யும் கற்களை எடுத்துக்கொண்டார்கள்.
இயேசு அதைக் கண்டு: என் பிதாவின் நற் 32
கிரியைகள் பலவற்றை நீங்கள் காணும்படி
செய்தேன். அவைகளில் எந்தக் கிரியையி
னிமித்தம் என்மேல் கல்லெறியப்போகி
றீர்கள் என்றார். அதற்கு யூதர்: நற்கிரியையி 33
னிமித்தம் நாங்கள் கல்லெறியாமல், தேவ
தூஷணத்தினிமித்தமும், நீ மனுஷனாயிருக்க
உன்னைக் கடவுளாக்குகிறதினிமித்தமுமே
கல்லெறிகிறோம் என்றார்கள். அதைக் 34
கேட்ட இயேசு அவர்களிடம்: நீங்கள்
தேவர்களென்று சொன்னேன் என்பதாய்
உங்கள் நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்
கிறதல்லவா? கடவுளின் வார்த்தையைப் 35
பெற்றுக்கொண்டவர்களைத் தேவர்கள்

என்று அவர் சொல்லியிருக்கிறாரே. வேத
வாக்கியம் குலைந்துபோக முடியாதே.
36 அப்படியிருக்க, பிதா பிரதிஷ்டைசெய்து
உலகத்தில் அனுப்பியிருக்கிற நான் என்னைத்
தேவகுமாரன் என்றதினாலே தேவதூஷணஞ்
சொன்னாய் என்று நீங்கள் சொல்லுகிறீர்
37 களா? என் பிதாவின் கிரியைகளை நான்
செய்யாதிருந்தால், நீங்கள் என்னை நம்பா
38 திருங்கள். செய்வேனேயானால், பிதா என்னி
லும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள்
அறிந்து கண்டுகொள்ளும்படி, நீங்கள்
என்னை நம்பாமற்போனாலும் என் கிரியை
39 களை நம்புங்கள் என்றார். இதினிமித்தம்
அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்கத்
தேடினார்கள்; அவரோ அவர்கள் கைக்குத்
தப்பி விலகிக்கொண்டார்.
40 யோர்தானுக்கு அக்கரையிலே, ஆரம்பத்
தில் யோவான் ஞானஸ்நானம் கொடுத்துக்
கொண்டிருந்த இடத்துக்கு இயேசு மறுபடி
41 யும் போய் அங்கே தங்கினார். அநேகர் அவ
ரிடம் வந்து: யோவான் ஒரு அடையாளத்
தையும் செய்யவில்லை, ஆகிலும் இவரைக்
குறித்து யோவான் சொன்னவையெல்லாம்
42 மெய்யாயின என்றார்கள். அவ்விடத்திலே
அநேகர் அவரில் விசுவாசம் வைத்தார்கள்.

11 லாசரு என்ற ஒருவன் வியாதிப்பட்
டிருந்தான். அவன் பெத்தானியா ஊரான்;
அது மரியாள் அவள் சகோதரி மார்த்தாள்
2 இவர்களுடைய ஊர். ஆண்டவருக்குப்
பரிமளதைலம் பூசி, தன தலைமயிரால் அவ
ருடைய பாதங்களைத் துடைத்தவள் அந்த
மரியாளே; வியாதியாயிருந்த லாசரு அவள்
3 சகோதரன். அவனுடைய சகோதரிகள்:
ஆண்டவரே, நீர் நேசிக்கிறவன் வியாதியா
யிருக்கிறான் என்று அவருக்குச் சொல்லி
4 அனுப்பினார்கள். இயேசு அதைக் கேட்ட
பொழுது: இந்த வியாதி மரணத்துக்கேது
வானதல்ல; தேவகுமாரன் மகிமைப்படும்படி
இது கடவுளின் மகிமை விளங்குவதற்கேது
5 வானது என்றார். இயேசு மார்த்தாளிடத்
திலும் அவளுடைய சகோதரியினிடத்திலும்
லாசருவினிடத்திலும் அன்புகூர்ந்திருந்தார்.
6 அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்
விப்பட்டபொழுது, தாம் இருந்த இடத்
திலே பின்னும் இரண்டு நாள் தங்கி, |
7 அதன்பின்பு சீஷரைப்பார்த்து: நாம்
மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம்
8 வாருங்கள் என்றார். அதற்குச் சீஷர்: ரபீ,
இப்பொழுதுதானே யூதர் உம்மைக் கல்லெறி
யப் பார்த்தார்கள், மறுபடியும் நீர் அங்கு
9 போகிறீரோ என்று சொல்ல, | இயேசு: பக
லுக்குப் பன்னிரண்டு மணி நேரமல்லவா?
ஒருவன் பகலில் நடப்பானாகில் அவன்
இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிற
படியினால் இடறுவதில்லை. ஒருவன் 10
இரவிலே நடப்பானாகில் தன்னிடம் வெளிச்
சம் இல்லாதபடியினால் இடறுவான் என்
றார். இவைகளை அவர் சொல்லி, பின்னும் 11
அவர்களிடம்: நம் சிநேகிதன் லாசரு
நித்திரைசெய்கிறான், நான் அவனை எழுப்பும்
படி போகிறேன் என்றார். அதற்கு அவர் 12
சீஷர்: ஆண்டவரே, நித்திரைசெய்தால் சுக
மாவான் என்றார்கள். இயேசு அவனு 13
டைய மரணத்தைக்குறித்து அப்படிச்
சொன்னார்; அவர்களோ, நித்திரைசெய்து
இளைப்பாறுகிறதைக் குறித்துப் பேசினா
ரென்று நினைத்தார்கள். அப்பொழுது 14
இயேசு: லாசரு மரித்துப்போனான் என்று
வெளிப்படையாய்ச் சொல்லி, நீங்கள் விசு 15
வாசமுள்ளவர்களாகும்படி, நான் அங்கே
இராததினால் உங்கள்நிமித்தம் சந்தோஷப்
படுகிறேன்; ஆயினும் அவனிடம் போவோம்
வாருங்கள் என்றார். திதிமு என்னப்பட்ட 16
தோமா அதைக் கேட்டுத் தன் உடன் சீஷ
ரைப் பார்த்து: அவரோடுகூடச் சாகும்படி
நாமும் போவோம் வாருங்கள் என்றான்.
இயேசு போய்ச் சேர்ந்தபோது அவனைக் 17
கல்லறையில் வைத்து நாலு நாளாயிற்
றென்று கண்டார். பெத்தானியா எருசலே 18
முக்குச் சமீபம், ஏறக்குறைய இரண்டு
மைல் தூரமிருக்கும். யூதரில் அநேகர் 19
மார்த்தாள் மரியாள் என்பவர்கள் சகோதர
னினிமித்தம் அவர்களுக்கு ஆறுதல்
சொல்ல வந்திருந்தார்கள். இப்படியிருக்க, 20
இயேசு வருகிறாரென்று மார்த்தாள் கேள்விப்
பட்டு அவரைச் சந்திக்கப் போனாள்; மரி
யாளோ வீட்டிலே உட்கார்ந்திருந்தாள்.
மார்த்தாள் இயேசுவைக் கண்டு: ஆண்ட 21
வரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோ
தரன் மரித்திரான்; இப்பொழுதும் நீர் கடவு 22
ளிடம் கேட்டுக்கொள்ளுகிறவைகள் எவை
களோ அவைகளைக் கடவுள் உமக்குத்
தருவாரென்பது எனக்குத் தெரியும் என்
றாள். இயேசு அவளிடம்: உன் சகோதரன் 23
எழுந்திருப்பான் என்றார் அதற்கு மார்த் 24
தாள்: கடைசி நாள் உயிர்த்தெழுதலில்
அவன் எழுந்திருப்பானென்று எனக்குத்
தெரியும் என்றாள். இயேசு அவளிடம்: 25
உயிர்த்தெழுதலும்ஜீவனும் நானே: என்னில்
விசுவாசம்வைக்கிறவன் மரித்தாலும் பிழைப்
பான்; உயிரோடிருந்து என்னில் விசுவாசம் 26
வைக்கிறவன் எவனும் என்றென்றைக்கும்
மரிப்பதேயில்லை. இதை நம்புகிறாயா

27 என்றார். அதற்கு அவள்: ஆம் ஆண்டவரே,
நீரே கிறிஸ்து, தேவகுமாரன், உலகத்தில்
வருகிறவர் என்று நம்பியிருக்கிறேன் என்
28 றாள். இதைச் சொன்னபின்பு அவள்
போய்த் தன் சகோதரியாகிய மரியாளை
இரகசியமாய் அழைத்து: போதகர் வந்திருக்
கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள்.
29 அவள் அதைக் கேட்கவே, சீக்கிரம்
30 எழுந்து அவரிடம் வந்தாள். இயேசு இன்
னும் கிராமத்துக்குள் வரவில்லை, மார்த்தாள்
அவரைக்கண்ட இடத்திலே இருந்தார்.
31 வீட்டில் அவளோடிருந்து அவளுக்கு ஆறு
தல் சொல்லிக்கொண்டிருந்த யூதர் மரியாள்
சீக்கிரம் எழுந்துபோகிறதைக்கண்டு, அவள்
அழுகிறதற்குக் கல்லறைக்குப் போகிறாள்
என்று நினைத்து அவள்பின்னே போனார்கள்.
32 இயேசு இருந்த இடத்திற்கு மரியாள் வந்து,
அவரைக் கண்டு, அவர் பாதத்தில் விழுந்து:
ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால்
என் சகோதரன் மரித்திரான் என்றாள்.
33 அவள் அழுகிறதையும் அவளோடு வந்த
யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்ட
போது, ஆவியிலே துடிப்படைந்து, தமக்
34 குள் கலங்கி: அவனை வைத்த இடமெங்கே
என்றார். வந்து பாரும், ஆண்டவரே என்
35 றார்கள். இயேசு கண்ணீர்விட்டார்.
36 அதைக் கண்ட யூதர்: இதோ, இவர் அவனை
எவ்வளவாய் நேசித்தார் என்று சொல்லிக்
37 கொண்டார்கள். அவர்களில் சிலரோ:
குருடன் கண்களைத் திறந்த இவருக்கு இவ
னைச் சாகாதிருக்கப்பண்ணுவது கூடாத
38 காரியமா என்றார்கள். அப்பொழுது இயேசு
மறுபடியும் தமக்குள் துடிப்படைந்தவ
ராய்க் கல்லறையினிடம் வந்தார். அது
ஒரு குகை; அதை மூட ஒரு கல் வைத்
39 திருந்தது. இயேசு: கல்லை எடுத்துவிடுங்கள்
என்றார். மரித்தவன் சகோதரி மார்த்தாள்
அவரிடம்: ஆண்டவரே, இப்பொழுது
நாறுமே, நாலு நாளாயிற்றே என்று
40 சொல்ல, | இயேசு: நீ நம்புவாயானால் கடவு
ளின் மகிமையைக் காண்பாய் என்று நான்
41 உனக்குச் சொல்லவில்லையா என்றார். அப்
பொழுது கல்லை எடுத்துவிட்டார்கள்.
இயேசு தமது கண்களை ஏறெடுத்து: பிதாவே,
நீர் எனக்குச் செவிசாய்த்தபடியால் உமக்கு
42 நன்றிசெலுத்துகிறேன். எப்பொழுதும்
எனக்குச் செவிசாய்க்கிறீர் என்பது எனக்
குத் தெரியும். ஆயினும், நீர் என்னை
அனுப்பினீரென்பதை இவர்கள் நம்பும்படி
சூழ்ந்துநிற்கும் ஜனக்கூட்டத்தினிமித்தமே
43 இதைச் சொன்னேன் என்றார். இவைகளைச்
சொல்லி: லாசருவே, வெளியே வா என்று
மகா சத்தமாய்க் கூப்பிட்டார். அப் 44
பொழுது மரித்தவன் வெளியே வந்தான்.
அவன் கால்களும் கைகளும் பிரேதத்துணி
களினால் கட்டுண்டிருந்தன, அவன் முகத்
தில் துணி சுற்றியிருந்தது. இயேசு அவர்
களைப் பார்த்து: கட்டவிழ்த்து இவனைப்
போகவிடுங்கள் என்றார்.

அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து 45
இயேசு செய்தவைகளைக் கண்ட யூதரில்
அநேகர் அவரில் விசுவாசம் வைத்தார்கள்.
அவர்களில் சிலரோ பரிசேயரிடம் போய் 46
இயேசு செய்தவைகளை அவர்களுக்கு அறி
விக்கவே, பிரதான ஆசாரியரும் பரிசேயரும் 47
ஆலோசனைச் சங்கத்தைக் கூடிவரச்செய்து:
நாம் என்ன செய்கிறது? இந்த மனுஷன்
அநேக அடையாளங்களைச் செய்கிறானே;
நாம் இவனை இப்படியே விட்டுவிடுவோ 48
மானால் எல்லாரும் இவனில் விசுவாசம் வைப்
பார்கள்; அப்பொழுது ரோமர் வந்து நமது
ஸ்தலத்தையும் ஜனத்தையும் கைப்பற்றிக்
கொள்வார்களே என்றார்கள். அவர்களில் 49
ஒருவனாகிய காய்பா, அந்த வருஷத்துப்
பிரதான ஆசாரியன், அவர்களைப் பார்த்து:
உங்களுக்கு ஒன்றும் தெரியாது! ஜனமுழு 50
வதும் அழிவதைப்பார்க்கிலும் ஜனத்திற்காக
ஒரே மனுஷன் மரிப்பது உங்களுக்கு நலம்
என்கிற சிந்தனை உங்களுக்கில்லை என்றான்.
இது அவன் சுயமாய்ச் சொன்னதல்ல, அந்த 51
வருஷத்துப் பிரதான ஆசாரியனானதால்,
யூத ஜனத்திற்காகவும், | அந்த ஜனத்திற்காக 52
மாத்திரமல்ல, சிதறியிருக்கிற கடவுளின்
பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்த்துக்கொள்ள
வேண்டுமென்று அவர்களுக்காகவும் அவர்
மரிக்கப்போகிறார் என்று தீர்க்கதரிசன
மாகச் சொன்னான். ஆகவே, அவரைக் 53
கொலைசெய்யும்படி அந்நாள்முதல் ஆலோ
சனை செய்தார்கள்.

ஆகையால் இயேசு அதன்பின்பு பகிரங்க 54
மாய் யூதருக்குள்ளே நடமாடித் திரியாமல்,
அவ்விடம்விட்டு வனாந்தரத்துக்குச் சமீப
மான நாட்டில் எப்பிராயீம் என்னும் ஊருக்
குப் போய், அங்கே தம் சீஷரோடு தங்கி
யிருந்தார். யூதருடைய பஸ்கா பண்டிகை 55
சமீபித்திருந்தது. அதற்குமுன்னே அநேகர்
தங்களைச் சுத்திசெய்துகொள்ளும்படி நாட்டி
லிருந்து எருசலேமுக்குப் போய், இயேசு 56
வைத் தேடினார்கள். தேவாலயத்தில் நிற்கை
யில் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து:
உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது, அவர்
பண்டிகைக்கு வரமாட்டாரோ என்று பேசிக்
கொண்டார்கள். பிரதான ஆசாரியரும் 57
பரிசேயரும் அவரைப் பிடிக்க விரும்பி,

அவர் இருக்கிற இடத்தை எவனாவது அறிந்
திருந்தால், அதை அறிவிக்க வேண்டு
மென்று கட்டளையிட்டிருந்தார்கள்.

12 பஸ்கா பண்டிகை வர ஆறுநாளுக்கு
முன்னே இயேசு பெத்தானியாவுக்கு வந்
தார். அது அவர் உயிரோடெழுப்பின லாச
2 ருவின் ஊர். அங்கே அவருக்கு விருந்து
செய்தார்கள்; மார்த்தாள் பணிவிடை
செய்துகொண்டிருந்தாள். அவரோடு பந்தி
3 யிருந்தவர்களில் லாசருவும் ஒருவன். அப்
பொழுது மரியாள் விலையுயர்ந்த சுயமான
நளத்தம் என்னும் தைலம் ஒரு இராத்தல்
கொண்டுவந்து, இயேசுவின் பாதங்களில்
பூசி, தன் தலைமயிரால் அவர் பாதங்களைத்
துடைத்தாள்; வீடு முழுவதும் தைலத்தின்
4 பரிமளத்தால் நிறைந்தது. அப்பொழுது
அவர் சீஷரில் ஒருவனும் அவரைக் காட்
டிக்கொடுக்கப்போகிறவனுமாகிய யூதாஸ்
5 கரியோத்து: இந்தத் தைலத்தை முந்நூறு
திநாரியத்துக்கு விற்று ஏன் தரித்திரருக்குக்
6 கொடுக்கவில்லை என்றான். அவன் தரித்திர
ருக்காகக் கவலைப்பட்டு இப்படிச் சொல்ல
வில்லை; தான் திருடனானபடியினாலும் பணப்
பெட்டியை வைத்துக்கொண்டு அதிலே
போடப்பட்டதை அபகரித்துக்கொள்ளுகிற
வனானபடியினாலும் இப்படிச் சொன்னான்.
7 இயேசு அதைக் கேட்டு: இவளை விட்டுவிடு,
என்னை அடக்கம்பண்ணும் நாளுக்காக
8 இவள் இதை வைத்திருந்தாள்போலும். தரித்
திரர் எப்பொழுதும் உங்களிடம் இருக்கிறார்
கள், நானோ எப்பொழுதும் இரேன் என்றார்
9 அப்பொழுது யூதரில் திரளான ஜனங்கள்
அவர் அங்கேயிருக்கிறதை அறிந்து, இயேசு
வுக்காக மாத்திரமல்ல, அவர் மரித்தோரி
லிருந்து எழுப்பின லாசருவைக் காண்பதற்
10 காகவும் வந்தார்கள். பிரதான ஆசாரியர்
லாசருவையும் கொலைசெய்ய ஆலோசனை
11 பண்ணினார்கள்; ஏனெனில், யூதரில் அநே
கர் லாசருவினிமித்தம் போய், இயேசுவில்
விசுவாசம் வைத்தார்கள்.
12 பண்டிகைக்கு வந்திருந்த திரளான
ஜனங்கள் இயேசு எருசலேமுக்கு வருகிறா
13 ரென்று மறுநாள் கேள்விப்பட்டு, குருத்
தோலைகளைப் பிடித்துக்கொண்டு அவருக்கு
எதிர்கொள்ளும்படி புறப்பட்டுப்போய்:

ஓசன்னா,
கர்த்தருடைய நாமத்தில் வருகிற
இஸ்ரவேலின் ராஜா
ஆசீர்வதிக்கப்பட்டவர்

என்று ஆர்ப்பரித்தார்கள்.
14 சீயோன் குமாரத்தியே, பயப்படாதே,

இதோ, உன் ராஜா
கழுதைக்குட்டியின்மேல் ஏறி வருகிறார்

என்று எழுதப்பட்டபடி, இயேசு ஒரு கழு 15
தைக்குட்டியைக் கண்டு அதன்மேல் ஏறி
உட்கார்ந்தார். இவைகளை அவருடைய 16
சீஷர் முதலில் அறிந்துகொள்ளவில்லை.
இயேசு மகிமையடைந்தபிற்பாடோ, இப்
படி அவரைக்குறித்து எழுதியிருக்கிறதை
யும், தாங்கள் இப்படி அவருக்குச் செய்த
தையும் அவர்கள் நினைவுகூர்ந்தார்கள்.
அவர் லாசருவைக் கல்லறையிலிருந்து வரும் 17
படி கூப்பிட்டு அவனை உயிரோடெழுப்பின
போது அவரோடிருந்த ஜனங்கள் அதைக்
குறித்துச் சாட்சி பகர்ந்துவந்தார்கள். அப் 18
படிப்பட்ட அடையாளத்தை அவர் செய்
தார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டதி
னால் அவர்கள் அவருக்கு எதிர்கொண்டு
போனார்கள். அதைக் கண்ட பரிசேயர்: 19
பாருங்கள், நீங்கள் செய்கிறதெல்லாம் வீண்;
இதோ, உலகமே அவன்பின்னால் போய்விட்
டது என்று ஒருவரோடொருவர் சொல்லிக்
கொண்டார்கள்.
பண்டிகையில் தொழுதுகொள்ள வந்த 20
வர்களில் சில கிரேக்கர் இருந்தார்கள்.
கலிலேயா நாட்டுப் பெத்சாயிதா ஊரான் 21
பிலிப்புவினிடம் அவர்கள் வந்து: ஐயா,
இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று
கேட்டுக்கொண்டார்கள். பிலிப்பு வந்து 22
அதை அந்திரேயாவுக்குச் சொன்னான்;
அந்திரேயாவும் பிலிப்புவும் அதை
இயேசுவுக்குச் சொன்னார்கள். சொல்லவே 23
இயேசு அவர்களிடம்: மனுஷகுமாரன் மகி
மைப்படும் வேளை வந்துவிட்டது. மெய் 24
யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்: கோதுமைமணி நிலத்தில்
விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்,
செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்
கும். தன் ஜீவனை நேசிக்கிறவன் அதை 25
இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன்
ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய
ஜீவனுக்கென்று காத்துக்கொள்ளுவான்.
ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்வானானால் 26
என்னைப் பின்பற்றக்கடவன்; நான் எங்கே
இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்கார
னும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழி
யஞ்செய்வானானால் அவனைப் பிதா கனம்
பண்ணுவார். இப்பொழுது என் ஆத் 27
துமா கலங்குகிறது. நான் என்ன சொல்லு
வேன்? பிதாவே, இந்த வேளையினின்று
என்னை இரட்சியும். ஆனாலும், இதற்காகவே
இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே, 28
உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்

றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேன்,
இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்று
29 வானத்திலிருந்து சத்தம் பிறந்தது. அங்கே
நின்று அதைக் கேட்ட ஜனங்கள்: இடி
முழக்கமுண்டாயிற்று என்றார்கள். வேறு
சிலர்: தேவதூதன் அவரிடம் பேசினான்
30 என்றார்கள். இயேசுவோ: இந்தச் சத்தம்
பிறந்தது என் பொருட்டல்ல, உங்கள்
31 பொருட்டுத்தான். இப்பொழுதே இந்த
உலகத்திற்குத் தீர்ப்பு உண்டாகிறது, இப்
பொழுதே இந்த உலகத்தின் அதிபதி
32 வெளியே தள்ளப்படுவான். நானே பூமியி
லிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்
லாரையும் என்னிடம் இழுத்துக்கொள்ளு
33 வேன் என்றார். தாம் இன்னவிதமான
மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக்
34 குறிக்கும்படி இப்படிச் சொன்னார். சொல்
லவே ஜனங்கள் அவரிடம்: கிறிஸ்து என்
றென்றைக்கும் இருக்கிறார் என்று நியாயப்
பிரமாணத்தில் சொல்லியதை நாங்கள்
கேட்டிருக்கிறோம்; அப்படியிருக்க, மனுஷ
குமாரன் உயர்த்தப்படவேண்டியதென்று
எப்படிச் சொல்லுகிறீர்; இந்த மனுஷகுமா
35 ரன் யார் என்றார்கள். அதற்கு இயேசு:
இன்னும் கொஞ்சக்காலம் ஒளி உங்களிடத்
தில் இருக்கும்; இருளில் நீங்கள் அகப்
படாதபடி ஒளி உங்களோடிருக்கையில்
நடவுங்கள்; இருளில் நடக்கிறவனுக்குத்
தான் போகிற இடம் இன்னதென்று தெரி
36 யாது; ஒளி உங்களோடிருக்கையில் ஒளி
யின்மேல் விசுவாசம் வைத்திருங்கள்; அப்
பொழுது ஒளியின் பிள்ளைகளாவீர்கள்
என்று அவர்களுக்குச் சொன்னார். இவை
களை இயேசு சொல்லி அவர்களை விட்டுப்
போய் மறைந்துகொண்டார்.
37 அவர் இத்தனை அடையாளங்களை அவர்
களுக்கு முன்பாகச் செய்திருந்தும் அவர்கள்
அவரில் விசுவாசம் வைக்கவில்லை
38 கர்த்தாவே, எங்கள்மூலமாய்க் கேள்விப்
பட்டதை நம்பினவன் யார்?
கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்
பட்டது
என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம்
நிறைவேறும்படி இப்படி நடந்தது.
39 மேலும்:
அவர்கள் தங்கள் கண்களால் காணாமலும்,
40 இருதயத்தால் உணராமலும்,
மனந்திரும்பாமலும்,
நான் அவர்களைக் குணமாக்காமலும்
இருக்கும்படி,
அவர்கள் கண்களை அவர் குருடாக்கி,
அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார்
என்று ஏசாயா சொன்னதற்கிசைவாக
அவர்களால் நம்பமுடியாமற்போயிற்று.
ஏசாயா அவருடைய மகிமையைக் கண்ட 41
தினால் அவரைக்குறித்துப் பேசி இவைகளைச்
சொன்னான். அப்படியிருந்தும், அதிகாரி 42
களிலும் அநேகர் அவரில் விசுவாசம் வைத்
தார்கள். ஆகிலும் சபைக்கு விலக்கிவைக்
கப்படாதபடி பரிசேயர் நிமித்தம் அவர்கள்
அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள்.
கடவுளால் வருகிற மகிமையிலும் மனுஷ 43
ரால் வருகிற மகிமையை அவர்கள் அதிக
மாய் விரும்பினார்கள்.
இயேசுவோ சத்தமிட்டு: என்னில் விசு 44
வாசம்வைக்கிறவன் என்னிலல்ல, என்னை
அனுப்பினவரில் விசுவாசம் வைக்கிறான்.
என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பின 45
வரைக் காண்கிறான். என்னில் விசுவாசம் 46
வைக்கிறவனெவனும் இருளில் இருந்து
விடாதபடிக்கு நான் உலகத்தில் ஒளியாக
வந்திருக்கிறேன். ஒருவன் என் வசனங் 47
களைக் கேட்டுக் கைக்கொள்ளாமற்போனால்,
அவனை நியாயந்தீர்ப்பது நானல்ல; நான்
உலகத்தை நியாயந்தீர்க்க வராமல் உல
கத்தை இரட்சிக்க வந்தேன். என்னைத் 48
தள்ளி, என் வசனங்களை ஏற்றுக்கொள்ளாத
வனை நியாயந்தீர்ப்பது ஒன்றிருக்கிறது; நான்
சொன்ன வார்த்தையே அவனைக் கடைசி
நாளில் நியாயந்தீர்க்கும். அதை நான் 49
சுயமாய்ப் பேசவில்லை, நான் சொல்லவும்
பேசவும் வேண்டியது இன்னதென்று என்னை
அனுப்பிய பிதாவே எனக்குக் கற்பித்திருக்
கிறார். அவர் கற்பனை நித்திய ஜீவன் என்று 50
எனக்குத் தெரியும். ஆகையால் நான் பேசு
கிறவைகளைப் பிதா எனக்குச் சொன்ன
படியே பேசுகிறேன் என்றார்.

பஸ்கா பண்டிகைக்கு முன்னே இயேசு **13**
இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப்
போகும்படியான தமது வேளை வந்ததென்று
அறிந்து, இவ்வுலகத்திலிருக்கிற தம்முடைய
வர்களிடத்தில் தாம் அன்புகூர்ந்தபடியே
முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு
கூர்ந்தார். அவர்கள் போஜனஞ்செய்து 2
கொண்டிருந்தார்கள். அவரைக் காட்டிக்
கொடுக்கும்படி சீமோன் குமாரன் யூதாஸ்
காரியோத்தின் இருதயத்தைப் பிசாசு தூண்டி
விட்டிருந்தான். பிதா எல்லாவற்றையும் 3
தமது கையில் ஒப்புக்கொடுத்தாரென்பதை
யும், தாம் கடவுளிடத்திலிருந்து வந்ததை
யும், கடவுளிடத்திற்குப் போகிறதையும்
இயேசு அறிந்திருந்து, போஜனத்தை விட் 4
டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து,

ஒரு துணியை எடுத்து அரையிலே கட்டிக்
5 கொண்டு, பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து,
சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம்
கட்டிக்கொண்டிருந்த துணியினால் துடைக்
6 கவும் தொடங்கினார். அவர் சீமோன் பேதுரு
வினிடம் வந்தபோது அவன் அவரிடம்:
ஆண்டவரே, என் கால்களை நீர் கழுவலாமா
7 என்று கேட்க, | இயேசு: நான் செய்கிறது
இன்னதென்று இப்பொழுது உனக்குத் தெரி
யாது, இனிமேல் அறிந்துகொள்வாய் என்
8 றார். அதற்குப் பேதுரு: நீர் ஒருகாலும்
என் கால்களைக் கழுவப்படாது என்றான்.
இயேசு: நான் உன்னைக் கழுவினாலொழிய
என்னோடு உனக்குப் பங்கில்லை என்றார்.
9 அதைக் கேட்ட சீமோன் பேதுரு: ஆண்ட
வரே, என் கால்களை மாத்திரமல்ல, என்
கைகளையும் என் தலையையுங்கூடக் கழுவ
10 வேண்டும் என்றான். இயேசு அவனிடம்:
முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழு
வினால் போதும், மற்றப்படி அவன் முழுவ
தும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்தமா
யிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாருமல்ல என்
11 றார். தம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் அவ
ருக்குத் தெரிந்திருந்தபடியால், நீங்களெல்
லாரும் சுத்தமுள்ளவர்களல்ல என்றார்.
12 அவர்களுடைய கால்களை அவர் கழுவின
பின்பு, தமது வஸ்திரங்களைத் தரித்துக்
கொண்டு, திரும்ப உட்கார்ந்து அவர்களைப்
பார்த்து: நான் உங்களுக்குச் செய்ததை
13 அறிந்திருக்கிறீர்களா? நீங்கள் என்னைப்
போதகரென்றும் ஆண்டவரென்றும்
சொல்லுகிறீர்கள்; நீங்கள் சொல்லுகிறது
சரி, நான் போதகர்தான், ஆண்டவர்தான்.
14 ஆண்டவரும் போதகருமாகிய நானே
உங்கள் கால்களைக் கழுவினேனாகில் நீங்
களும். ஒருவருடைய கால்களை ஒருவர்
15 கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான்
உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும்
செய்யும்படி உங்களுக்கு மாதிரி காண்பித்
16 தேன். மெய்யாகவே மெய்யாகவே நான்
உங்களுக்குச் சொல்லுகிறேன்: வேலைக்
காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல,
அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பின
17 வரிலும் பெரியவனல்ல. இவைகள் உங்க
ளுக்குத் தெரிந்திருக்கிறதா? இவைகளைச்
செய்வீர்களானால் நீங்கள் பாக்கியவான்கள்.
18 உங்கள் எல்லாரையுங்குறித்து நான் பேச
வில்லை, நான் தெரிந்தெடுத்தவர்களை அறி
வேன்; ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறும்
படி, என் போஜனத்தைச் சாப்பிடுகிறவன்
19 என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான். அது
சம்பவிக்கும்போது, நானே அவரென்று
நீங்கள் நம்பும்பொருட்டு, இப்பொழுதே,
அது சம்பவிப்பதற்கு முன்னமே, அதை உங்
களுக்குச் சொல்லுகிறேன். நான் அனுப்பு 20
கிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை
ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்
கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை
ஏற்றுக்கொள்ளுகிறான் என்று மெய்யாகவே
மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு
கிறேன் என்றார்.
இயேசு இவைகளைச் சொன்ன பின்பு 21
ஆவியிலே கலங்கி: உங்களில் ஒருவன் என்
னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யா
கவே மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்று வற்புறுத்திச்
சொன்னார். யாரைக்குறித்துப் பேசுகிறாரோ 22
என்று சீஷர் அப்பொழுது மனந்திகைத்து
ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்தார்கள்.
அவருடைய சீஷரில், இயேசுவுக்கு அன்பா 23
யிருந்த ஒருவன் இயேசுவின் மார்பருகே
சாய்ந்திருந்தான் யாரைக்குறித்துப் பேசு 24
கிறாரென்று சொல்லும்படி சீமோன் பேதுரு
அவனுக்குச் சைகை காட்டினான். அவன் 25
இருந்தபடியே இயேசுவின் மார்பில் படும்
படி பின்புறம் சாய்ந்து அவரிடம்: ஆண்ட
வரே, அவன் யார் என்றான். அதற்கு 26
இயேசு: நான் துணிக்கையைத் தோய்த்து
எவனுக்குக் கொடுப்பேனோ அவன்தான்
என்று சொல்லி, துணிக்கையைத்
தோய்த்து, ஸ்காரியோத்தார் சீமோன் மக
னான யூதாசுக்கு எடுத்துக் கொடுத்தார்.
துணிக்கையை அவன் வாங்கினபின்பு, 27
சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்
பொழுது இயேசு: நீ செய்கிறதைச் சீக்கிரம்
செய் என்றார். அவர் எதைக் கருதி இப் 28
படி அவனிடம் சொன்னாரென்று பந்தி
யிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை.
யூதாஸ் பணப்பெட்டியை வைத்துக்கொண் 29
டிருந்தபடியினால், அவன் போய்ப் பண்டி
கைக்குத் தேவையானவைகளைக் கொள்
ளவோ தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்
கவோ இயேசு அவனிடம் சொன்னதாகச்
சிலர் நினைத்தார்கள். ஆகவே, அவன் 30
துணிக்கையை வாங்கிக்கொண்டு உடனே
வெளியே போய்விட்டான். அது இராக்
காலம்.
அவன் வெளியே போய்விடவே, இயேசு: 31
இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்பட்
டார், க்டவுளும் அவரில் மகிமைப்பட்டார்.
கடவுள் அவரில் மகிமைப்பட்டாரே 32
யானால், கடவுள் அவரைத் தம்மில் மகிமைப்
படுத்துவார். சீக்கிரம் அவரை மகிமைப்
படுத்துவார். பிள்ளைகளே, இன்னும் 33

கொஞ்சகாலம் உங்களோடிருப்பேன்,
நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும்
நான் போகிற இடத்துக்கு நீங்கள் வர
முடியாதென்று நான் யூதருக்குச் சொன்னது
போல் இப்பொழுது உங்களுக்குச் சொல்லு
34 கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பு
கூரவேண்டும் என்னும் புதிய கற்பனையை
உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்
களில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் ஒரு
35 வரிலொருவர் அன்புகூரவேண்டும். நீங்கள்
ஒருவரிலொருவர் அன்புகூர்ந்தால், நீங்கள்
என் சீஷரென்று எல்லாரும் அதனால்
அறிந்துகொள்வார்கள்.
36 சீமோன் பேதுரு அவரைப் பார்த்து:
ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர்
என்றான். இயேசு அவனிடம்: நான்
போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என்
னைத் தொடர்ந்துவரமுடியாது; பிற்பாடு வரு
37 வாய் என்றார். அதற்குப் பேதுரு: ஆண்ட
வரே, ஏன் இப்பொழுது உம்மைத்
தொடர்ந்துவரமுடியாது? உமக்காக என்
ஜீவனையும் கொடுப்பேன் என்று சொன்
38 னான். அதைக் கேட்டு இயேசு: எனக்காக
உன் ஜீவனைக் கொடுப்பாயா? மெய்யாகவே
மெய்யாகவே நான் உனக்குச் சொல்லு
கிறேன்: சேவல் கூவுமுன்னே நீ என்னை
மூன்றுதரம் மறுதலிப்பாய் என்றார்.

14 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக.
கடவுளில் விசுவாசமாயிருக்கிறீர்களே, என்
2 னிலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின்
வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு;
அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்
குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை
உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகி
3 றேனே. நான் போய் உங்களுக்காக
ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேனேயாகில்,
நானிருக்கிற இடத்திலே நீங்களும் இருக்
கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை
4 என்னிடம் சேர்த்துக்கொள்ளுவேன். நான்
போகிற இடத்திற்கு வழி உங்களுக்குத்
5 தெரியும் என்றார். தோமா அவரிடம்:
ஆண்டவரே, நீர் போகிற இடம் தெரி
யாதே, வழி எப்படித் தெரியும் என்று
6 சொல்ல, | இயேசு அவனிடம்: வழியும்
சத்தியமும் ஜீவனும் நானே; என்னாலேயன்றி
7 ஒருவனும் பிதாவினிடம் வரான். என்னை
அறிந்துகொண்டீர்களானால், என் பிதாவை
யும் அறிந்திருப்பீர்கள்; இதுமுதல் நீங்கள்
அவரை அறிந்துகொள்ளுகிறவர்களாயிருப்
பீர்கள்; அவரைக் கண்டுமிருக்கிறீர்கள் என்
றார். பிலிப்பு அவரிடம்: ஆண்டவரே, 8
பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது
எங்களுக்குப் போதும் என்று சொல்ல,
இயேசு: பிலிப்புவே, இவ்வளவு காலம் நான் 9
உங்களோடிருந்தும் நீ என்னை அறிந்து
கொள்ளவில்லையா? என்னைக் கண்டவன்
பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க,
பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று
நீ சொல்வதெப்படி? நான் பிதாவிலும் பிதா 10
என்னிலும் இருக்கிறதை நீ நம்புகிற
தில்லையா? நான் உங்களுக்குச் சொல்லுகிற
வசனங்களை என் சுயமாய்ப் பேசவில்லை.
என்னில் நிலைத்திருக்கிற பிதாவே தமது
கிரியைகளைச் செய்கிறார். என்னை நம் 11
புங்கள்; நான் பிதாவில் இருக்கிறேன்,
பிதா என்னில் இருக்கிறார்; அப்படி
யில்லாவிட்டால் என் கிரியைகளினிமித்
தமே நம்புங்கள்.
மெய்யாகவே மெய்யாகவே நான் உங்க 12
ளுக்குச் சொல்லுகிறேன்: நான் பிதாவினிடம்
போகிறபடியினால், என்னில் விசுவாசம்
வைக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத்
தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும்
பெரியவைகளையும் செய்வான். நீங்கள் 13
என் நாமத்தில் எதைக் கேட்பீர்களோ
குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக
அதைச் செய்வேன். என் நாமத்தில் நீங்கள் 14
என்னிடம் எதைக் கேட்டாலும் அதை
நான் செய்வேன். நீங்கள் என்னில் அன்பு 15
கூர்ந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளு
வீர்கள். நான் பிதாவை வேண்டிக் 16
கொள்ளுவேன், அப்பொழுது என்றென்
றைக்கும் உங்களோடிருக்கும்படி சத்திய
ஆவியானவராகிய வேறொரு [1]சகாயரை
அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் 17
அவரை ஏற்றுக்கொள்ளமுடியாது, அது
அவரைக் காண்கிறதுமில்லை, அறிகிறது
மில்லை; நீங்களோ அவரை அறிவீர்கள்,
அவர் உங்களோடு வசிக்கிறார், உங்க
ளுக்குள்ளும் இருப்பார். நான் உங்களைத் 18
திக்கற்றவர்களாக விடேன், உங்களிடம்
வருகிறேன். இன்னும் கொஞ்சக்காலத்தில் 19
உலகம் என்னைக் காணாது, நீங்களோ
என்னைக் காண்பீர்கள்; நான் பிழைத்
திருக்கிறேன், நீங்களும் பிழைப்பீர்கள்.
நான் என் பிதாவிலும் நீங்கள் என்னி 20
லும் நான் உங்களிலும் இருக்கிறதை
அந்நாளிலே நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.
என் கற்பனைகளையுடையவனாய் அவைகளைக் 21

[1] நியாயஸ்தலம் முதலிய இடங்களில் ஒருவனுக்குத் துணைநின்று பேசுகிறவர் என்பது பொருள்.

கைக்கொள்ளுகிறவனே என்னில் அன்பு
கூருகிறவன்; என்னிடம் அன்புகூருகிற
வனில் என் பிதா அன்புகூருவார், நானும்
அவனில் அன்புகூர்ந்து அவனுக்கு என்னை
22 வெளிப்படுத்துவேன் என்றார். ஸ்காரியோத்
தூரானல்லாத யூதாஸ் அவரிடம்: ஆண்ட
வரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்
படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்
படுத்துவதற்கு நடந்ததென்ன என்றான்.
23 அதைக் கேட்ட இயேசு: ஒருவன் என்னில்
அன்புகூர்ந்தால், என் வார்த்தையைக் கைக்
கொள்ளுவான், என் பிதா அவனில் அன்பு
கூருவார்; நாங்கள் அவனிடம் வந்து அவ
24 னோடே வாசம்பண்ணுவோம். என்னில்
அன்புகூராதவன் என் வார்த்தைகளைக்
கைக்கொள்ளான். நீங்கள் கேட்கிற
வார்த்தை என்னுடையதல்ல, என்னை
அனுப்பின பிதாவினுடையது.
25 நான் உங்களோடு தங்கியிருக்கையில்
இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.
26 என் நாமத்தில் பிதா அனுப்பப்போகிற பரி
சுத்த ஆவியாகிய சகாயரோ எல்லாவற்றை
யும் உங்களுக்குப் போதித்து, நான் உங்க
ளுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்க
ளுக்கு நினைப்பூட்டுவார்.
27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்
போகிறேன், என் சமாதானத்தையே உங்க
ளுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்
கிறதுபோல நான் உங்களுக்குக் கொடுக்கிற
தில்லை. உங்கள் இருதயம் கலங்கவும்
வேண்டாம், அதைரியப்படவும் வேண்டாம்.
28 நான் போவேன் என்றும், திரும்ப உங்களி
டம் வருவேன் என்றும் நான் உங்களுடனே
சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள் என்
னில் அன்புகூர்ந்தால் நான் பிதாவினிடம்
போகிறேனென்று சந்தோஷப்படுவீர்கள்;
ஏனெனில் பிதா என்னிலும் பெரியவர்.
29 இது நடக்கும்போது நீங்கள் நம்பும்படி
யாக நடப்பதற்குமுன்னமே இதை உங்க
30 ளுக்குச் சொன்னேன். இனி நான் உங்க
ளோடு அநேக காரியங்களைப் பேசுவதில்லை.
இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவ
31 னுக்கு என்னிடம் ஒன்றுமில்லை. நான்
பிதாவில் அன்புகூருகிறேன் என்றும், பிதா
எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கி
றேன் என்றும் உலகம் அறியும்படி இப்படி
நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்விட்
டுப் போவோம் வாருங்கள் என்றார்.

15 நான் மெய்யான திராட்சச்செடி, பயி
2 ரிடுகிறவர் என் பிதா. என்னில் கனி
கொடாத கொடி எதுவோ அதை அவர்
அறுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிற
கொடி எதுவோ அது அதிகக் கனி கொடுக்
கும்படி அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் 3
உங்களிடம் பேசியிருக்கிற வார்த்தையினால்
நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கி
றீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் 4
உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது
திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது
தானாய்க் கனி கொடுக்கமுடியாதே. என்
னில் நிலைத்திராவிட்டால் நீங்களும் கனி
கொடுக்கமுடியாது. நான் திராட்சச்செடி, 5
நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும்
நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன்
மிகுந்த கனிகொடுப்பான்; என்னையல்லா
மல் நீங்கள் ஒன்றும் செய்யமுடியாது. ஒரு 6
வன் என்னில் நிலைத்திராவிட்டால், கொடி
யைப்போல வெளியே எறியுண்டு உலர்ந்து
போவான்; அவைகளைச் சேர்த்து அக்கினி
யிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்து
போம். நீங்கள் என்னிலும் என் வார்த் 7
தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள்
விரும்பியதைக் கேளுங்கள், அது உங்க
ளுக்கு ஆகும். நீங்கள் மிகுந்த கனிகொடுப் 8
பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்
கும் சீஷராயிருப்பீர்கள். பிதா என்னில் 9
அன்புகூர்ந்ததுபோல நானும் உங்களில்
அன்புகூர்ந்தேன்; என் அன்பில் நிலைத்
திருங்கள். நான் என் பிதாவின் கற்பனை 10
களைக் கைக்கொண்டு அவர் அன்பில் நிலைத்
திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனை
களைக் கைக்கொண்டிருந்தால் என் அன்பில்
நிலைத்திருப்பீர்கள். என் சந்தோஷம் உங் 11
களில் இருக்கும்படிக்கும் உங்கள் சந்
தோஷம் நிறைவாகும்படிக்கும் இவைகளை
உங்களுக்குச் சொன்னேன். நான் உங்களில் 12
அன்புகூர்ந்ததுபோல நீங்களும் ஒருவரி
லொருவர் அன்புகூருங்கள்; இதுவே என்
கற்பனை. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் 13
தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் பெரி
தான அன்பு யாரிடத்திலுமில்லை. நான் 14
உங்களுக்குக் கட்டளையிடுகிறதைச் செய்
வீர்களானால், நீங்கள் எனக்குச் சிநேகிதர்.
இனி நான் உங்களை வேலைக்காரரென்று 15
சொல்லுகிறதில்லை, வேலைக்காரனுக்குத் தன்
எஜமான் செய்வது தெரியாது. உங்
களையோ சிநேகிதர் என்றேன், என் பிதாவி
னிடம் நான் கேட்ட யாவற்றையும் உங்க
ளுக்கு அறிவித்தேனே. நீங்கள் என்னைத் 16
தெரிந்தெடுக்கவில்லை, நான் உங்களைத்
தெரிந்தெடுத்தேன், நீங்கள் என் நாமத்தில்
பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ
அதை அவர் உங்களுக்குக் கொடுக்கும்

படியாக நீங்கள் போய்க் கனி கொடுக்க
வும், உங்கள் கனி நிலைத்திருக்கவும், நான்
17 உங்களை ஏற்படுத்தினேன். நீங்கள் ஒருவரி
லொருவர் அன்புகூரவேண்டுமென்றே
இவைகளை உங்களுக்குக் கட்டளையிடுகி
றேன்.
18 உலகம் உங்களைப் பகைத்தால், அது
உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்
19 னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள்
உலகத்துக்குரியவர்களாயிருந்தால், உலகம்
தன்னுடையதை நேசித்திருக்கும். நீங்களோ
உலகத்துக்குரியவர்களல்ல; நான் உங்
களை உலகத்திலிருந்து தெரிந்தெடுத்தேன்,
அந்தக் காரணத்தினாலே உலகம் உங்களைப்
20 பகைக்கிறது. வேலைக்காரன் தன் எஜமானி
லும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்
குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்
கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்
பப்படுத்தினார்களானால், உங்களையும் துன்
பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வார்த்
தையைக் கைக்கொண்டார்களானால்,
உங்கள் வார்த்தையையும் கைக்கொள்ளு
21 வார்கள். என்னை அனுப்பினவர் அவர்களுக்
குத் தெரியாதபடியினால், என் நாமத்தினி
மித்தமே இவற்றையெல்லாம் உங்களுக்குச்
22 செய்வார்கள். நான் வந்து அவர்களிடத்தில்
பேசாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவ
மிராது. இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்
குறித்துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு
23 இடமில்லை. என்னைப் பகைக்கிறவன் என்
24 பிதாவையும் பகைக்கிறான். வேறொருவரும்
செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்
குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்
குப் பாவமிராது; இப்பொழுதோ அவர்கள்
என்னையும் என் பிதாவையும் கண்டிருக்கி
றார்கள், கண்டும் பகைத்திருக்கிறார்கள்.
25 காரணமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்
என்று அவர்களுடைய வேதத்தில் எழுதி
யிருக்கிற வார்த்தை நிறைவேறும்படி இப்
26 படியாயிற்று. பிதாவினிடத்திலிருந்து நான்
உங்களுக்கு அனுப்பப்போகிற சகாயர்,
அதாவது பிதாவினிடத்திலிருந்து புறப்
பட்டு வருகிற சத்திய ஆவியானவர், வரும்
போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி
27 பகர்வார். நீங்களும் முதலிலிருந்தே என்
னோடிருக்கிறபடியால் சாட்சி பகர்வீர்கள்.

16 நீங்கள் இடறிவிழாதபடி இவைகளை
உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.
2 அவர்கள் உங்களைச் சபைக்கு விலக்கிவைப்
பார்கள்; உங்களைக் கொல்லுகிற எவனும்
தான் கடவுளுக்குத் தொண்டுசெய்கிறதாக
நினைக்கும் காலம் வருகிறது. அவர்கள் 3
பிதாவையும் என்னையும் அறிந்துகொள்
ளாதபடியினால் இவைகளைச் செய்வார்கள்.
இவைகள் நடைபெறும் காலம் வரும் 4
போது, நான் உங்களுக்குச் சொன்னே
னென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை
உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான்
உங்களோடிருந்தபடியினால் ஆதிமுதலே
இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை.
இப்பொழுதோ என்னை அனுப்பினவரிடம் 5
போகிறேன். எங்கே போகிறீரென்று உங்க
ளில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை.
நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதி 6
னால் உங்கள் இருதயம் துக்கம் நிறைந்திருக்
கிறது. ஆனாலும் நான் உங்களுக்கு உண் 7
மையைச் சொல்லுகிறேன், நான் போய்விடு
கிறது உங்களுக்கு நலம்; நான் போகாதிருந்
தால், சகாயரானவர் உங்களிடம் வரமாட்
டார்; போவேனேயாகில் அவரை உங்களி
டம் அனுப்புவேன். அவர் வந்து, பாவத் 8
தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்
தீர்ப்பைக்குறித்தும் உலகத்தைக் கண்டித்து
உணர்த்துவார். அவர்கள் என்னில் விசு 9
வாசம் வைக்காதபடியால் பாவத்தைக்குறித்
தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடி 10
நான் என் பிதாவினிடம் போகிறபடியால்
நீதியைக்குறித்தும், இந்த உலகத்தின் அதி 11
பதி நியாயந்தீர்க்கப்பட்டபடியால் நியாயத்
தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்து
வார். இன்னும் அநேக காரியங்களை நான் 12
உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கி
றது, இப்பொழுதோ நீங்கள் அவைகளைத்
தாங்கமுடியாது. சத்திய ஆவியாகிய அவர் 13
வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும்
உங்களை நடத்துவார்; அவர் சுயமாய்ப்
பேசாமல் தாம் கேட்கிற யாவற்றையும்
சொல்லி, வரப்போகிறவைகளை உங்களுக்கு
அறிவிப்பார். அவர் என்னுடையதில் 14
எடுத்து உங்களுக்கு அறிவிப்பாராதலால்
என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினு 15
டையவைகள் யாவும் என்னுடையவைகள்,
அதனாலேதான் அவர் என்னுடையதில்
எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன்.
இன்னும் கொஞ்சக்காலம், பின்பு என் 16
னைப் பாராதிருப்பீர்கள்; மறுபடியும் கொஞ்
சக்காலம், அப்பொழுது என்னைக் காண்
பீர்கள் என்றார். அவர் சீஷரில் சிலர்: 17
இன்னும் கொஞ்சக்காலம், பின்பு என்னைப்
பாராதிருப்பீர்கள் என்றும், மறுபடியும்
கொஞ்சக்காலம், அப்பொழுது என்னைக்
காண்பீர்கள் என்றும், பிதாவினிடம்
போகிறபடியால் என்றும் அவர் நமக்குச்

சொல்லுகிறது என்னவென்று ஒருவரோ
18 டொருவர் பேசிக்கொண்டார்கள். கொஞ்
சக்காலம் என்கிறாரே, இதென்ன? அவர்
சொல்லுகிறது இன்னதென்று நமக்குத்
தெரியவில்லையே என்று சொல்லிக்கொண்
19 டிருந்தார்கள். அதைக் குறித்துத் தம்மிடம்
கேட்கும்படி அவர்கள் விரும்புகிறதை
இயேசு அறிந்து, அவர்களைப் பார்த்து: இன்
னும் கொஞ்சக்காலம், பின்பு என்னைப்
பாராதிருப்பீர்கள்; மறுபடியும் கொஞ்சக்
காலம், அப்பொழுது என்னைக் காண்பீர்க
ளென்று நான் சொன்னதைக் குறித்து
நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்
20 களோ? மெய்யாகவே மெய்யாகவே நான்
உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள்
அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோ
ஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள்,
உங்கள் துக்கமோ சந்தோஷமாக மாறும்.
21 ஒரு ஸ்திரீ பிரசவிக்கும்போது தன் காலம்
வந்துவிட்டபடியால் துக்கப்படுகிறாள்;
பிள்ளைபெற்றபின்போ குழந்தை உலகத்தில்
பிறந்ததென்கிற சந்தோஷத்தினால் அப்புறம்
22 வேதனையை நினையாள். அப்படியே நீங்க
ளும் இப்பொழுது துக்கப்படுகிறீர்கள்;
நான் மறுபடியும் உங்களைக் காண்பேன்,
அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்
படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும்
உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடுவ
23 தில்லை. அந்த நாளிலே நீங்கள் என்னிடத்
தில் ஒன்றும் கேட்பதில்லை. மெய்யாகவே
மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு
கிறேன்: நீங்கள் பிதாவினிடம் கேட்டுக்
கொள்வதெதுவோ அதை என் நாமத்தில்
24 அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்
கும் நீங்கள் என் நாமத்தில் ஒன்றும் கேட்ட
தில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள்
சந்தோஷம் நிறைவாகும்படி பெற்றுக்
கொள்வீர்கள்.
25 இவைகளை நான் உபமானமாய் உங்க
ளுடனே பேசினேன்; காலம் வரும், அப்
பொழுது நான் உபமான முறையாய் உங்க
ளுடனே பேசாமல், பிதாவைக்குறித்து
வெளிப்படையாக உங்களுக்கு அறிவிப்
26 பேன். அந்நாளில் என் நாமத்தில் கேட்டுக்
கொள்ளுவீர்கள். உங்களுக்காகப் பிதாவை
நான் மன்றாடுவேனென்று உங்களுக்குச்
27 சொல்லவில்லை. நீங்கள் என்னை நேசித்து,
நான் கடவுளிடமிருந்து வந்தேனென்று
நம்பியிருக்கிறபடியினால், பிதா தாமே
28 உங்களை நேசிக்கிறார். நான் பிதாவினிட
மிருந்து புறப்பட்டு உலகத்தில் வந்தேன்;
திரும்ப உலகத்தை விட்டுப் பிதாவினிடம்
போகிறேன் என்றார். அதைக் கேட்ட 29
சீஷர்: இதோ, இப்பொழுது நீர் வெளிப்
படையாய்ப் பேசுகிறீர், உபமானம் ஒன்றும்
சொல்லுகிறதில்லை. எல்லாம் உமக்குத் தெரி 30
யும் என்றும், உம்மை ஒருவனும் கேள்வி
கேட்கவேண்டுவதில்லையென்றும், இப்
பொழுது எங்களுக்குத் தெரியும். நீர் கடவு
ளிடத்திலிருந்து புறப்பட்டு வந்தீரென்று
இதினாலே நம்புகிறோம் என்றார்கள். அதற்கு 31
இயேசு: இப்பொழுது நம்புகிறீர்களோ?
நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் 32
இடத்துக்குப்போய், என்னைத் தனியே
விட்டுவிடும் காலம் வருகிறது, அது வந்து
மாயிற்று. ஆனாலும் நான் தனித்திரேன்,
பிதா என்னோடே இருக்கிறார். என்னில் 33
உங்களுக்குச் சமாதானம் இருக்கும்
பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்
னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திர
வம் உண்டு; ஆனாலும் தைரியமாயிருங்கள்,
நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.

இயேசு இவைகளைப் பேசினபின்பு தமது **17**
கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: பிதாவே,
வேளை வந்தது. குமாரன் உம்மை மகிமைப்
படுத்தும்படி நீர் உம்முடைய குமாரனை
மகிமைப்படுத்தும். நீர் உம்முடைய குமார 2
னுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர்
நித்திய ஜீவனைக் கொடுக்கும்பொருட்டு
மனுமக்கள் யாவர்மேலும் நீர் அவருக்கு
அதிகாரம் கொடுத்தீரே. மெய்யான ஒரே 3
கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பினவ
ராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே
நித்திய ஜீவன். நான் செய்யும்படி நீர் எனக் 4
குத் தந்த வேலையைச் செய்து முடித்து,
பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தி
னேன். பிதாவே, உலகம் உண்டாகிற 5
தற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கிருந்த
மகிமையால் இப்பொழுது நீர் என்னை உம்
மிடத்தில் மகிமைப்படுத்தும். உலகத்தி 6
லிருந்து நீர் எனக்குத் தந்த மனுஷருக்கு
உமது நாமத்தை வெளிப்படுத்தினேன்.
அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள்,
அவர்களை எனக்குத் தந்தீர், உமது வார்த்
தையை அவர்கள் கைக்கொண்டிருக்
கிறார்கள். நீர் எனக்குத் தந்தவைகளெல் 7
லாம் உம்மிடமிருந்து வருகின்றனவென்று
இப்பொழுது அறிந்திருக்கிறார்கள். எப்படி 8
யெனில், நீர் எனக்குத் தந்த வார்த்தைகளை
நான் அவர்களுக்குக் கொடுத்தேன்,
அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்
டார்கள், நான் உம்மிடத்திலிருந்து புறப்
பட்டு வந்தேனென்று நிச்சயமாய் அறிந்

தார்கள், நீர் என்னை அனுப்பினீரென்று
நம்பிக்கொண்டார்கள்.
9 நான் அவர்களுக்காக வேண்டிக்
கொள்ளுகிறேன். உலகத்துக்காக அல்ல,
நீர் எனக்குத் தந்தவர்களுக்காகவே வேண்
டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்மு
10 டையவர்கள்; என்னுடையவைகள் யாவும்
உம்முடையவைகள், உம்முடையவைகள்
என்னுடையவைகள்; அவர்களில் நான்
11 மகிமைப்பட்டிருக்கிறேன். இனி உலகத்தி
லிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்;
நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த
பிதாவே, அவர்களும் நம்மைப்போல்
ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத் தந்த
உமது நாமத்தில் அவர்களைக் காத்துக்
12 கொள்ளும். நான் அவர்களோடிருக்கை
யில் நீர் எனக்குத் தந்த உமது நாமத்தில்
அவர்களைப் பாதுகாத்துக் காப்பாற்றினேன்.
வேதவாக்கியம் நிறைவேறும்படி, அழிவின்
மகன் அழிந்துபோனானேயன்றி, அவர்களில்
13 வேறொருவனும் அழிந்துபோகவில்லை. இப்
பொழுது நான் உம்மிடம் வருகிறேன்;
அவர்கள் உள்ளத்தில் என் சந்தோஷம
நிறைவாகும்படி உலகத்தில் இவைகளைச்
14 சொல்லுகிறேன். நான் உம்முடைய வார்த்
தையை அவர்களுக்குக் கொடுத்தேன்;
நான் உலகத்துக்குரியவரல்லாதது போல
அவர்களும் உலகத்துக்குரியவர்களல்ல;
ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது.
15 நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்
கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளா
மல், நீர் அவர்களைத் தீமைக்கு விலக்கிக்
காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.
16 நான் உலகத்துக்குரியவரல்லாததுபோல
அவர்களும் உலகத்துக்குரியவர்களல்ல.
17 சத்தியத்தில் அவர்களைப் பிரதிஷ்டை செய்
18 யும்; உமது வார்த்தையே சத்தியம். நீர்
என்னை உலகத்தில் அனுப்பினதுபோல
நானும் அவர்களை உலகத்தில் அனுப்பி
19 யிருக்கிறேன். அவர்களும் சத்தியத்தில்
பிரதிஷ்டை செய்யப்பட்டவர்களாகும்படி
அவர்களுக்காக நான் என்னைத்தானே
பிரதிஷ்டை செய்கிறேன்.
20 நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளு
கிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தை
யினால் என்னில் விசுவாசம் வைக்கிறவர்
களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.
21 பிதாவே, நீர் என்னை அனுப்பினதை
உலகம் நம்புவதற்காக, அவர்களெல்லாரும்
ஒன்றாயிருக்கவும், நீர் என்னிலும் நான்
உம்மிலும் இருக்கிறதுபோல அவர்கள்
நம்மிலிருக்கவும் வேண்டிக்கொள்ளுகி
றேன். நீர் என்னை அனுப்பினீரென்றும், 22
நீர் என்னில் அன்புகூர்ந்ததுபோல அவர்
களிலும் அன்புகூர்ந்தீரென்றும் உலகம்
அறிந்துகொள்ளும்படி, நாம் ஒன்றாயிருக் 23
கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கத்
தக்கதாக, நான் அவர்களிலும் நீர் என்னிலு
மிருப்பதினால் அவர்கள் ஒன்றாகிப் பூரணப்
படும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை
நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.
பிதாவே, உலகத்தோற்றத்துக்குமுன் என் 24
னில் அன்புகூர்ந்து நீர் எனக்குத் தந்த என்
மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள்
காணும்படியாக, நான் எங்கே இருக்கி
றேனோ அங்கே அவர்களும் என்னோடுகூட
இருக்க விரும்புகிறேன். நீதியுள்ள பிதாவே, 25
உலகம் உம்மை அறிந்துகொள்ளவில்லை,
நானோ உம்மை அறிந்துகொண்டேன்; நீர்
என்னை அனுப்பினதை இவர்களும் அறிந்து
கொண்டார்கள். நீர் என்னில் வைத்த 26
அன்பு அவர்களிலிருக்கும்படிக்கும் நானும்
அவர்களிலிருக்கும்படிக்கும் உம்முடைய
நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தி
னேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன்
என்றார்.

இயேசு இவைகளைச் சொன்னபின்பு **18**
தம்முடைய சீஷரோடு கெதரோன் என்னும்
நீரோடைக்கு அப்புறம் போனார். அங்கே
ஒரு தோட்டமிருந்தது. அவரும் அவரு
டைய சீஷரும் அதற்குள் சென்றார்கள்.
இயேசுவும் அவருடைய சீஷரும் அடிக்கடி 2
அங்கே போய்க் கூடுவதுண்டு. ஆதலால்
அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாசுக்கும்
அந்த இடம் தெரியும். பட்டாளத்தை 3
யும், பிரதான ஆசாரியர் பரிசேயருடைய
சேவகரில் சிலரையும் யூதாஸ் கூட்டிக்
கொண்டு, பந்தங்களோடும் தீவட்டிக
ளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு
வந்தான். இயேசு தமக்கு நேரிடப்போகிற 4
யாவற்றையும் அறிந்து, எதிரே வந்து அவர்
களைப் பார்த்து: யாரைத் தேடுகிறீர்கள்
என்றார். அவர்கள் அவரிடம்: நசரேயனா 5
கிய இயேசுவை என்று சொல்ல, நான்தான்
என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த
யூதாசும் அவர்களோடு நின்றான். நான்தான் 6
என்று அவர் அவர்களிடம் சொல்லவே,
அவர்கள் பின்னிட்டுத் தரையில் விழுந்
தார்கள். அவர் மறுபடியும் அவர்களிடம்: 7
யாரைத் தேடுகிறீர்களென்று கேட்டார்.
அவர்கள்: நசரேயனாகிய இயேசுவை என்று
சொல்ல, | இயேசு: நான்தான் என்று உங் 8
களுக்குச் சொன்னேனே; நீங்கள் என்னைத்

தேடுகிறதானால், இவர்களைப் போக
9 விடுங்கள் என்றார். நீர் எனக்குத் தந்த
வர்களில் ஒருவனையும் நான் இழந்துபோக
வில்லையென்று அவர் சொல்லிய வார்த்தை
நிறைவேறும்படி இப்படி நடந்தது.
10 சீமோன் பேதுருவினிடம் ஒரு பட்டய
மிருந்தது. அவன் அதை உருவி, பிரதான
ஆசாரியன் வேலைக்காரனைத் தாக்கி, அவன்
வலது காதற வெட்டினான்; அந்த வேலைக்
11 காரன் பேர் மல்குஸ். அப்பொழுது இயேசு
பேதுருவைப் பார்த்து: பட்டயத்தை உறை
யில் போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்
திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ
என்றார்.
12 அப்பொழுது பட்டாளமும் [1]சேனாதிபதி
யும் யூதருடைய சேவகரும் இயேசுவைப்
13 பிடித்து, அவரைக் கட்டி, | முதலாவது
அவரை அன்னாவினிடம் கொண்டு
போனார்கள்; அவன் அந்த வருஷத்துப்
பிரதான ஆசாரியனாகிய காய்பாவின்
14 மாமன். ஜனத்திற்காக ஒரே மனுஷன் மரிப்
பது நலமென்று யூதருக்கு ஆலோசனை
சொன்னவன் இந்தக் காய்பாவே.
15 சீமோன் பேதுருவும் வேறொரு சீஷனும்
இயேசுவுக்குப் பின்சென்றார்கள். அந்தச்
சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுக
மானவன்; அவன் இயேசுவோடு பிரதான
ஆசாரியன் அரமனைக்குள் சென்றான்.
16 பேதுருவோ வாசலருகே வெளியே நின்றான்.
அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறி
முகமாயிருந்த மற்றச் சீஷன் வெளியே
வந்து, வாசல் காக்கிறவளிடம் பேசி,
பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டு
17 போனான். அப்பொழுது வாசல்காக்கிற
வேலைக்காரி பேதுருவினிடம்: நீயும் அந்த
மனுஷனுடைய சீஷரில் ஒருவனா என்று
18 கேட்க, அவன்: அல்லவென்றான். குளிரா
யிருந்தபடியினால் வேலைக்காரரும் சேவக
ரும் கரிநெருப்பு வளர்த்து, நின்று குளிர்
காய்ந்துகொண்டிருந்தார்கள்; பேதுருவும்
அவர்களோடு நின்று குளிர்காய்ந்துகொண்
டிருந்தான்.
19 பிரதான ஆசாரியன் இயேசுவினிடம்
அவர் சீஷரைக்குறித்தும் போதகத்தைக்
20 குறித்தும் விசாரித்தான். விசாரிக்கவே
இயேசு அவனிடம்: நான் பகிரங்கமாய்
உலகத்துக்குச் சொன்னேன்; சகல யூதரும்
கூடிவருகிற ஜெபாலயங்களிலேயும் தேவா
லயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்
தேன்; அந்தரங்கத்தில் நான் ஒன்றும் பேசின
தில்லை. நீர் என்னிடம் விசாரிக்கிறதென்ன? 21
நான் பேசினதென்னவென்று அதைக் கேட்
டவர்களிடம் விசாரியும்; நான் பேசின
வைகள் அவர்களுக்குத் தெரியும் என்றார்.
அவர் இவைகளைச் சொல்லவே, சமீபத்தில் 22
நின்ற சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரி
யனுக்குப் பதில் சொல்லுகிறது இப்படித்
தானாவென்று இயேசுவை ஒரு அறை
அறைந்தான். இயேசு அவனைப் பார்த்து: 23
நான் பேசினது தப்பு என்றால் அதை
ஒப்புவி; பேசினது சரியானால் என்னை ஏன்
அடிக்கிறாய் என்று சொன்னார். அப் 24
பொழுது அன்னா பிரதான ஆசாரியனாகிய
காய்பாவினிடத்திற்கு அவரைக் கட்டுண்
டவராக அனுப்பிவிட்டான்.
இப்படியிருக்க, சீமோன் பேதுரு குளிர் 25
காய்ந்து நின்றுகொண்டிருக்கையில், சிலர்
அவனிடம்: அவனுடைய சீஷரில் நீயும்
ஒருவனா என்றார்கள். அவனோ மறுதலித்து,
அல்லவென்றான். பிரதான ஆசாரியனு 26
டைய வேலைக்காரரில் ஒருவன், பேதுரு
காதற வெட்டினவனுக்கு இனத்தான்:
நான் உன்னை அவனோடு தோட்டத்தில்
பார்க்கவில்லையா என்றான். பேதுரு மறு 27
படியும் மறுதலித்தான்; உடனே சேவல்
கூவிற்று.
அவர்கள் இயேசுவைக் காய்பாவி 28
னிடத்திலிருந்து கோட்டை மாளிகைக்குக்
கொண்டுபோனார்கள். அப்பொழுது விடியற்
காலம். தீட்டுப்படாமல் பஸ்காவைப் புசிக்
கும்படி அவர்கள் மாளிகைக்குள் செல்லா
திருந்தார்கள். ஆகையால் பிலாத்து அவர்க 29
ளிடம் வெளியே வந்து: இந்த மனுஷன்
மேல் என்ன குற்றஞ்சாட்டுகிறீர்கள் என்று
கேட்க, | அவர்கள் அவனிடம்: இவன் 30
குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்
மிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கமாட்டோம்
என்றார்கள். அப்பொழுது பிலாத்து: 31
இவனை நீங்கள் கொண்டுபோய் உங்கள்
பிரமாணத்தின்படி தீர்ப்பிடுங்கள் என்று
அவர்களுக்குச் சொன்னான். அதைக்
கேட்ட யூதர்: ஒருவனுக்கும் மரணத்தீர்ப்
பிட எங்களுக்கு அதிகாரமில்லை என்றார்கள்.
தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப் 32
போகிறாரென்பதைக் குறிக்கும்படி இயேசு
சொல்லியிருந்த வார்த்தை நிறைவேற இப்ப
டிச் சொன்னார்கள்.
பிலாத்து திரும்பவும் மாளிகைக்குள் 33
போய் இயேசுவை அழைத்து: நீயா யூத
ருடைய ராஜா என்று கேட்க, இயேசு: 34

[1] கிரேக்க பதம் ஆயிரம் பேருக்கு அதிபதி என்று பொருள்படும்.

நீர் சுயமாய் இப்படிச் சொல்லுகிறீரோ?
மற்றவர்கள் என்னைக்குறித்து உம்மோடு
35 பேசினார்களோ என்றார். அதற்குப்
பிலாத்து: நான் யூதனா? உன் ஜனங்களும்
பிரதான ஆசாரியரும் உன்னை என்னிடம்
ஒப்புக்கொடுத்தார்கள், நீ என்ன செய்தாய்
36 என்றான். இயேசு: என் ராஜ்யம் இவ்வுல
கத்திற்குரியதல்ல; என் ராஜ்யம் இவ்வுலகத்
திற்குரியதானால், நான் யூதரிடம் ஒப்புக்
கொடுக்கப்படாதபடி என் ஆட்கள்
போராடியிருப்பார்களே; ஆகவே, என் ராஜ்
யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்.
37 அதற்குப் பிலாத்து: பின்னை நீ ராஜாதானோ
என்று கேட்க, இயேசு: நான் ராஜாவென்று
நீரே சொல்லுகிறீர்; சத்தியத்தைக்குறித்துச்
சாட்சிசொல்ல நான் பிறந்தேன், இதற்
கென்றே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தி
யத்திற்குரியவன் எவனும் என் சத்தத்துக்
38 குச் செவிகொடுக்கிறான் என்றார். பிலாத்து
அவரிடம்: சத்தியமாவது என்ன என்றான்.
இதைச் சொல்லி அவன் மறுபடியும்
வெளியே யூதரிடம் வந்து: நான் அவனி
39 டம் ஒரு குற்றமும் காணேன். பஸ்கா
பண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை
விடுதலைசெய்கிற வழக்கமுண்டே; யூதரின்
ராஜாவை நான் உங்களுக்கு விடுதலைசெய்
வது உங்களுக்கு இஷ்டமா என்று கேட்க, |
40 அவர்கள் மறுபடியும் கூக்குரலிட்டு: இவனை
யல்ல, பரபாசையே என்றார்கள். அந்தப்
பரபாசோ கொள்ளைக்காரன்.

19 அப்பொழுது பிலாத்து இயேசுவைப்
2 பிடித்து வாரினால் அடிப்பித்தான். போர்ச்
சேவகர் முட்களினால் ஒரு முடியைப்பின்னி
அவர் சிரசின்மேல் வைத்து, சிவப்பான ஒரு
மேலங்கியை அவருக்கு உடுத்தினார்கள்.
3 பின்பு அவரிடத்தில் வந்து: யூதருடைய
ராஜாவே, வாழ்க என்று சொல்லிக்கொண்டு
அவரை அறைமேல் அறை அறைந்தார்கள்.
4 பிலாத்து மறுபடியும் வெளியே வந்து அவர்
களைப் பார்த்து: இதோ, இவனை வெளியே
உங்களிடம் கொண்டுவருகிறேன்; நான்
இவனிடம் ஒரு குற்றமும் காணவில்லை,
இதை அறிந்துகொள்ளுங்கள் என்றான்.
5 இயேசு முள்முடியும் சிவப்பான மேலங்கி
யும் தரித்தவராய் வெளியே வரவே,
பிலாத்து அவர்களிடம்: இதோ இந்த மனு
6 ஷன் என்றான். பிரதான ஆசாரியரும்
சேவகரும் அவரைக் கண்டபோது:
சிலுவையில் அறையும், சிலுவையில் அறை
யும் என்று கூக்குரலிட்டார்கள். பிலாத்து
அவர்களிடம்; நீங்களே இவனைக் கொண்டு
போய்ச் சிலுவையில் அறையுங்கள், நான்
இவனிடம் குற்றம் காணேன் என்றான்.
அதைக் கேட்ட யூதர் அவனிடம்: எங்க 7
ளுக்கு ஒரு சட்டமுண்டு, அந்தச் சட்டத்
தின்படி இவன் சாகவேண்டும்; இவன்
தன்னைத் தேவகுமாரனாக்கினான் என்றார்கள்.
இந்த வார்த்தையைக் கேட்டபொழுது 8
பிலாத்து முன்னிலும் அதிகமாய்ப் பயந்து,
மறுபடியும மாளிகைக்குள்ளே போய், 9
இயேசுவினிடம்: நீ எங்கிருந்து வந்தவன்
என்று கேட்க, இயேசு பதிற்சொல்லாதிருந்
தார். அப்பொழுது பிலாத்து: நீ என்னிடம் 10
பேசாதிருக்கிறாயா? உன்னை விடுதலைசெய்ய
வும் எனக்கு அதிகாரம் உண்டு, உன்னைச்
சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம்
உண்டு; இது உனக்குத் தெரியாதா என்
றான். அதற்கு இயேசு: பரத்திலிருந்து 11
உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்
மேல் உமக்கு அதிகாரம் ஒன்றுமிராது;
ஆகவே, என்னை உம்மிடம் ஒப்புக்கொடுத்
தவனுக்கு அதிகப் பாவமுண்டு என்றார்.
இதைக் கேட்டதும் பிலாத்து அவரை விடு 12
தலைபண்ணப் பார்த்தான். யூதரோ கூக்குர
லிட்டு: இவனை விடுதலைசெய்தால் நீர் இராய
னுக்குச் சிநேகிதனல்ல; தன்னை ராஜாவாக்கு
கிறவன் எவனும் இராயனுக்கு விரோதி என்
றார்கள். பிலாத்து இந்த வார்த்தைகளைக் 13
கேட்டு, இயேசுவை வெளியே கொண்டு
வந்து, நியாயாசனத்தில் உட்கார்ந்தான்.
அது கற்றளம் என்றும், எபிரேயு பாஷை
யில் கபத்தா என்றும் வழங்குமிடத்திலிருந்
தது. அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்த 14
நாள். ஏறக்குறைய ஆறும் மணிநேரமா
யிற்று. அவன் யூதரைப் பார்த்து: இதோ,
உங்கள் ராஜா என்று சொல்லவே, |
அவர்கள்: இவனைத் தொலைத்துவிடும், 15
தொலைத்துவிடும், சிலுவையில் அறையும்
என்று கூக்குரலிட்டார்கள். அதற்குப்
பிலாத்து: உங்கள் ராஜாவையா நான்
சிலுவையில் அறைவது என்றான். அதற்
குப் பிரதான ஆசாரியர்: இராயனேயல்லா
மல் எங்களுக்கு வேறே ராஜா இல்லை என்
றார்கள். அப்பொழுது அவரைச் சிலுவை 16
யில் அறையும்படி அவர்களிடம் ஒப்புக்
கொடுத்தான்.

அவர்கள் இயேசுவைக் கொண்டு
போனார்கள். அவர் சிலுவையைத் தாமே 17
சுமந்துகொண்டு, வெளியே கபாலஸ்தலம்
என்கிற இடத்திற்குப் போனார். அதை
எபிரேயு பாஷையில் கொல்கொதா என்று
சொல்வார்கள். அங்கே அவரைச் சிலுவை 18
யில் அறைந்தார்கள்; அவரோடே வேறு

இரண்டுபேரை இருபக்கங்களிலும், இயேசு
வையோ மத்தியிலும் அறைந்தார்கள்.
19 பிலாத்து ஒரு விலாசத்தை எழுதிச் சிலுவை
யின்மேல் போடுவித்தான். நசரேயனாகிய
இயேசு யூதரின் ராஜா என்று அதில்
20 எழுதியிருந்தது. இயேசு சிலுவையில்
அறையப்பட்ட இடம் நகரத்துக்குச் சமீப
மானதால் யூதரில் அநேகர் அந்த விலா
சத்தை வாசித்தார்கள்; அது எபிரேயு, லத்
தீன், கிரேக்கு பாஷைகளில் எழுதியிருந்
21 தது. யூதருடைய பிரதான ஆசாரியர்
அதைக் கண்டு பிலாத்துவினிடம்: யூதரின்
ராஜா என்று நீர் எழுதாமல், தான் யூதரின்
ராஜா என்று அவன் சொன்னதாக எழுதும்
22 என்றார்கள். அதற்குப் பிலாத்து: நான்
எழுதினது எழுதினதே என்றான்.
23 போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவை
யில் அறைந்தபின்பு, அவர் வஸ்திரங்களை
எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்
வொரு பங்காக நாலு பங்கு வைத்தார்கள்;
அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி
தையலில்லாமல் மேலே தொடங்கி முழு
24 வதும் நெய்யப்பட்டிருந்தது. ஆகையால்
அவர்கள்: நாம் இதைக் கிழியாமல்,
யாருக்கு வருமோ என்று இதைக்குறித்துச்
சீட்டுப்போடுவோம் என்று ஒருவரோடொரு
வர் பேசிக்கொண்டார்கள்.

என் வஸ்திரங்களைத் தங்களுக்குள் பங்
கிட்டுக்கொண்டு,
என் உடையின்மேல் சீட்டுப்போட்
டார்கள்

என்கிற வேதவாக்கியம் நிறைவேற இப்படி
நடந்தது. போர்ச்சேவகர் இவைகளைச்
25 செய்தபோது, இயேசுவினுடைய சிலுவை
யின் பக்கத்தில் அவர் தாயாரும், அவர்
தாயாரின் சகோதரியும், கிலோப்பாவின்
மரியாளும், மகதலேனா மரியாளும் நின்று
26 கொண்டிருந்தார்கள். அப்பொழுது இயேசு
தம்முடைய தாயாரும் தமக்கு அன்பா
யிருந்த சீஷனும் அருகே நிற்கக்கண்டு,
தாயாரிடம்: அம்மா, அதோ, உன் மகன்
27 என்றார். பின்பு சீஷனை நோக்கி: அதோ,
உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச்
சீஷன் அவளைத் தன் வீட்டிலே ஏற்றுக்
கொண்டான்.
28 அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று
இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறை
வேறும்படி, தாகமாயிருக்கிறேன் என்றார்.
29 காடி நிறைந்த ஒரு பாத்திரம் அங்கே இருந்
தது; அவர்கள் கடற்காளானைக் காடியிலே
தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி
30 அவர் வாய்க்கு நீட்டினார்கள். இயேசு
காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று
சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை
ஒப்புக்கொடுத்தார்.
அது ஆயத்தநாள்; அடுத்த நாள் விசே 31
ஷித்த ஓய்வுநாள். அந்த ஓய்வுநாளில்
உடல்கள் சிலுவைகளில் இருக்காதபடி,
காலெலும்புகளை முறித்து அவைகளை எடுத்து
விட யூதர் பிலாத்துவினிடம் போய்க் கேட்
டுக்கொண்டார்கள். அந்தப்படியே போர்ச் 32
சேவகர் போய், அவரோடு அறையப்பட்
டிருந்தவர்களில் ஒருவனுடைய காலெலும்பு
களையும் மற்றவனுடைய காலெலும்புகளை
யும் முறித்தார்கள். அவர்கள் இயேசுவி 33
னிடத்தில் வந்தபோதோ அவர் மரித்திருக்
கிறதைக் கண்டார்கள், ஆகையால் அவர்
காலெலும்புகளை முறிக்கவில்லை. ஆகிலும், 34
போர்ச்சேவகரில் ஒருவன் அவர் விலாவில்
ஈட்டியால் குத்தினான்; உடனே இரத்தமும்
தண்ணீரும் வெளிப்பட்டன. அதைக் 35
கண்டவன் சாட்சிசொல்லியிருக்கிறான்;
அவன் சாட்சியம் உண்மை; தான் சொல்லு
கிறது உண்மையென்று அவன் அறிந்திருக்
கிறான்; நீங்கள் நம்பும்படி இதைச் சொல்லி
யிருக்கிறான். அவர் எலும்புகளில் ஒன் 36
றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேத
வாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்
தன. அல்லாமலும் தாங்கள் குத்தினவரை 37
நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு
வேதவாக்கியம் சொல்லுகிறது.
இவைகளுக்குப்பின்பு, இயேசுவின் சரீ 38
ரத்தை எடுத்துக்கொண்டுபோகும்படி, அரி
மத்தியா ஊரான் யோசேப்பு பிலாத்துவி
னிடம் உத்தரவு கேட்டான். இந்த
யோசேப்பு இயேசுவுக்குச் சீஷன்; ஆயினும்
யூதருக்குப் பயந்து அந்தரங்க சீஷனாயிருந்
தான். பிலாத்து உத்தரவு கொடுக்கவே,
அவன் வந்து இயேசுவின் சரீரத்தை எடுத்
துக்கொண்டுபோனான். ஆரம்பத்தில் அவ 39
ரிடம் இரவில் வந்த நிக்கொதேமுவும்
வெள்ளைப்போளமும் கரியபோளமும்
கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல்
கொண்டுவந்தான். அவர்கள் இயேசுவின் 40
சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம்பண்
ணும் முறைமையின்படியே அதைச் சுகந்த
வர்க்கங்களோடு துணிகளில் சுற்றினார்கள்.
அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத் 41
தில் ஒரு தோட்டம் இருந்தது. அந்தத்
தோட்டத்தில் ஒருகாலும் ஒருவனையும் வைத்
திராத ஒரு புதிய கல்லறை இருந்தது. யூத
ருடைய ஆயத்தநாளாயிருக்கவே, அந்தக் 42
கல்லறை சமீபமாயிருந்தபடியினால், அவ்
விடத்திலே இயேசுவை வைத்தார்கள்.

20 வாரத்தின் முதல்நாள் காலையில் இருட்
டோடே மகதலேனா மரியாள் கல்லறைக்கு
வந்தாள். கல்லறையை அடைத்திருந்த
2 கல் எடுபட்டிருக்க அவள் கண்டு, ஓடி,
சீமோன் பேதுருவினிடமும் இயேசு
நேசித்த மற்றச் சீஷனிடமும் போய்:
ஆண்டவரைக் கல்லறையிலிருந்து எடுத்
துக்கொண்டுபோய்விட்டார்கள், அவரை
வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை
3 என்றாள். அப்பொழுது பேதுருவும் மற்றச்
சீஷனும் கல்லறைக்குப் போகும்படி புறப்
4 பட்டார்கள். இருவரும் ஒருமித்து
ஓடவே, பேதுருவைப் பார்க்கிலும் மற்றச்
சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறைக்கு
5 வந்தான். குனிந்து உள்ளே பார்த்தபோது
துணிகள் கிடக்கிறதைக் கண்டான்,
6 உள்ளே போகவில்லை. சீமோன் பேதுரு
அவனுக்குப்பின்னே வந்து கல்லறைக்குள்
போனான். அங்கே துணிகள் கிடக்கிறதை
7 யும், அவர் தலையை மூடியிருந்த துணி
மற்றத் துணிகளுடனே வைத்திராமல்
தனியே ஓரிடத்திலே சுருட்டி வைத்திருக்
8 கிறதையும் கண்டான். முந்திக் கல்ல
றைக்குவந்த மற்றச் சீஷனும் அப்பொழுது
9 உள்ளே போய், கண்டு நம்பினான். அவர்
மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டு
மென்று வேதவாக்கியம் சொல்வது அவர்
10 களுக்கு இன்னும் தெரியவில்லை. அதன்
பின்பு சீஷர் தங்கள் இடத்திற்குத் திரும்
பினார்கள்.
11 மரியாளோ கல்லறையினருகே வெளியே
நின்று அழுதுகொண்டிருந்தாள். அப்படி
அழுதுகொண்டிருக்கையில் அவள் குனிந்து
12 கல்லறைக்குள்ளே பார்த்து, இயேசுவின்
சரீரத்தை வைத்திருந்த இடத்திலே வெள்
ளுடை தரித்த இரண்டு தூதர் தலைமாட்
டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக
13 உட்கார்ந்திருக்கக் கண்டாள். அவர்கள்
அவளைப் பார்த்து: அம்மா, ஏன் அழுகிறாய்
என்று கேட்க, அவள்: என் ஆண்டவரை
எடுத்துக்கொண்டுபோய்விட்டார்கள்,
அவரை வைத்த இடம் எனக்குத் தெரிய
14 வில்லை என்றாள். இவைகளைச் சொல்லிப்
பின்னாகத் திரும்பவே, இயேசு நிற்கிறதைக்
கண்டாள். ஆனாலும் அவர் இயேசு என்று
15 அவளுக்குத் தெரியவில்லை. இயேசு அவ
ளைப்பார்த்து: அம்மா, ஏன் அழுகிறாய்?
யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவ
ரைத் தோட்டக்காரனென்று நினைத்து:
ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோன
துண்டானால், அவரை வைத்த இடத்தை
எனக்குச் சொல்லும், நான் போய் அவரை
எடுத்துக்கொள்ளுவேன் என்றாள். இயேசு 16
அவளை நோக்கி: மரியாளே என்றார்.
அவள் திரும்பிப் பார்த்து, எபிரேயு பாஷை
யில், ரபூனி என்றாள்; அதற்குக் குருவே
என்று அர்த்தமாம். இயேசு அவளைப் 17
பார்த்து: என்னைப்பற்றிப்பிடித்துக்கொள்
ளாதே; நான் இன்னும் என் பிதாவினிடத்
திற்கு ஏறிப்போகவில்லை. நீ என் சகோதர
ரிடம் போய், என் பிதாவும் உங்கள் பிதா
வும், என் கடவுளும் உங்கள் கடவுளுமா
யிருக்கிறவரிடம் நான் ஏறிப்போகிறேன்
என்று அவர்களுக்குச் சொல் என்றார். மகத 18
லேனா மரியாள் போய், தான் ஆண்டவ
ரைக் கண்டதையும் அவர் தனக்கு இவை
களைச் சொன்னதையும் சீஷருக்கு அறிவித்
தாள்.
வாரத்தின் முதல் நாளாகிய அன்றைய 19
தினம் சாயங்காலம், சீஷர் கூடியிருந்த
இடத்தில், யூதர் பயத்தினால் கதவுகள்
பூட்டியிருந்தும், இயேசு வந்து நடுவே
நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்.
அவர் இதைச் சொல்லி, தமது கைகளையும் 20
விலாவையும் அவர்களுக்குக் காண்பித்
தார். சீஷர் ஆண்டவரைக் கண்டு சந்
தோஷப்பட்டார்கள். இயேசு மறுபடியும் 21
அவர்களிடம் உங்களுக்குச் சமாதானம்;
பிதா என்னை அனுப்பினதுபோல நானும்
உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி |
அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் 22
பெற்றுக்கொள்ளுங்கள். எவர்களுடைய 23
பாவங்களை நீங்கள் மன்னிக்கிறீர்களோ
அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்பட்டி
ருக்கும்; எவர்களுடைய பாவங்களை நீங்கள்
மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்
களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.
பன்னிருவரில் ஒருவனாகிய திதிமு எனப் 24
பட்ட தோமாவோ இயேசு வந்திருந்தபோது
அவர்களோடிருக்கவில்லை. ஆகவே, மற்றச் 25
சீஷர்: ஆண்டவரைக் கண்டோம் என்று
அவனுக்குச் சொன்னார்கள். அவனோ அவர்
களிடம்: அவருடைய கைகளில் ஆணி
களினாலுண்டான தழும்பை நான் பார்த்து,
ஆணியிருந்த இடத்திலே என் விரலையிட்டு,
என் கையை அவருடைய விலாவிலே வைத்
தாலொழிய நம்பவேமாட்டேன் என்றான்.
மறுபடியும் எட்டுநாளுக்குப்பின் அவர் 26
சீஷர் முன்போலவே வீட்டுக்குள் இருந்
தார்கள்; தோமாவும் அவர்களோடிருந்
தான். கதவுகள் பூட்டியிருந்தும்,
இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்
குச் சமாதானம் என்றார். பின்பு அவர் 27
தோமாவைப் பார்த்து: நீ உன் விரலை

இங்கே நீட்டி என் கைகளைப் பார், உன்
கையை நீட்டி என் விலாவிலே வை, அவி
சுவாசமுள்ளவனாயிராமல் விசுவாசமுள்ள
28 வனாயிரு என்றார். இதைக்கேட்ட தோமா
அவரிடம்: என் ஆண்டவரே, என் கட
29 வுளே என்றான். அதற்கு இயேசு:
தோமாவே, நீ என்னைக் கண்டதினாலேயோ
நம்பினாய்! காணாமலே நம்புகிறவர்கள்
பாக்கியவான்கள் என்றார்.
30 இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு
அநேக அடையாளங்களையும் இயேசு தம்
முடைய சீஷருக்குமுன்பாகச் செய்தார்.
31 இவைகளோ, இயேசு தேவகுமாரனாகிய
கிறிஸ்து என்று நீங்கள் நம்புவதற்கும்,
நம்பி அவர் நாமத்தில் ஜீவனை அடைவதற்
கும் எழுதப்பட்டிருக்கின்றன.

21 இவைகளுக்குப்பின்பு இயேசு திபேரியா
கடலருகே மறுபடியும் சீஷருக்குத் தரிசன
மளித்தார்; தரிசனமளித்த விவரமாவது:
2 சீமோன் பேதுருவும், திதிமு எனப்பட்ட
தோமாவும், கலிலேயாநாட்டுக் கானாவூர்
நாத்தான்வேலும், செபெதேயுவின் குமார
ரும், அவருடைய சீஷரில் வேறு இரண்டு
3 பேரும் கூடியிருந்தார்கள் சீமோன் பேதுரு
மற்றவர்களைப் பார்த்து: மீன்பிடிக்கப்
போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்:
நாங்களும் உன்னோடே வருகிறோம் என்
றார்கள். அவர்கள் போய்ப் படவேறினார்கள்.
அந்த இராத்திரியில் ஒன்றும் அகப்பட
4 வில்லை. விடியற்காலமாகவே இயேசு கரை
யில் நின்றார், நின்றவர் இயேசு என்று சீஷ
5 ருக்குத் தெரியவில்லை. இயேசு அவர்களைப்
பார்த்து: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதா
கிலும் உங்களிடத்தில் உண்டா என்றார்.
அதற்கு அவர்கள்: ஒன்றுமில்லை என்
6 றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் பட
வின் வலதுபுறம் வலைபோடுங்கள், அப்
பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார்.
அப்படியே போட்டபோது திரளான மீன்
அகப்பட்டதினால் வலையை இழுக்க முடி
7 யாமற்போய்விட்டது. இயேசுவுக்கு அன்பா
யிருந்த சீஷன் அதைக் கண்டு, பேதுருவி
னிடம்: அவர் ஆண்டவர் என்றான். அவர்
ஆண்டவர் என்று கேட்கவே, சீமோன்
பேதுரு வஸ்திரமில்லாதவனாயிருந்தபடி
யால், தன் மேலாடையைக் கட்டிக்கொண்டு
8 கடலில் குதித்தான். மற்றச் சீஷரோ படவி
லிருந்தபடியே மீனுள்ள வலையை இழுத்
துக்கொண்டு வந்தார்கள். அவர்கள்
இருந்த தூரம் அதிகமல்ல, அது ஏறக்
9 குறைய இரு நூறு முழம். அவர்கள்
கரையிலே வந்திறங்கினபோது, கரிநெருப்
புப் போட்டிருக்கிறதையும், அதன்மேல்
மீன் வைத்திருக்கிறதையும் அப்பத்தையும்
கண்டார்கள். இயேசு அவர்களிடம்: நீங்கள் 10
இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்
றைக் கொண்டுவாருங்கள் என்றார். சீமோன் 11
பேதுரு படவிலேறி வலையைக் கரையிலிழுத்
தான். அதில் பெரிய மீன்கள் நிறைந்
திருந்தன, இருந்த மீன்கள் நூற்றைம்பத்து
மூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை
கிழியவில்லை. இயேசு அவர்களிடம்: வந்து 12
போஜனம்பண்ணுங்கள் என்றார். சீஷரில்
ஒருவனும், நீர் யார் என்று அவரைக்
கேட்கத் துணியவில்லை; அவர் ஆண்டவர்
தானென்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது.
இயேசு வந்து அப்பத்தை எடுத்து அவர் 13
களுக்குக் கொடுத்தார், அப்படியே மீனை
யும் அவர்களுக்குக் கொடுத்தார். இயேசு 14
மரித்தோரிலிருந்து எழுந்து தம் சீஷருக்
குத் தரிசனமானது இது மூன்றாம் முறை.
அவர்கள் போஜனம்பண்ணி முடியவே, 15
இயேசு சீமோன் பேதுருவைப் பார்த்து:
யோவான் குமாரனாகிய சீமோனே, இவர்
களிலும் அதிகமாய் நீ என்னில் அன்புகூரு
கிறாயா என்றார். அவன்: ஆம் ஆண்டவரே,
உம்மை நேசிக்கிறேன் என்பது உமக்குத்
தெரியும் என்றான். அவர்: என் ஆட்டுக்
குட்டிகளைப் போஷிப்பாயாக என்றார்.
இரண்டாந்தரம் அவர் அவனிடம்: 16
யோவான் குமாரனாகிய சீமோனே, நீ என்
னில் அன்புகூருகிறாயா என்றார். அதற்கு
அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்
கிறேன் என்பது உமக்குத் தெரியும் என்
றான். அவர், என் ஆடுகளை மேய்ப்பாயாக
என்றார். மூன்றாந்தரம் அவர் அவனைப் 17
பார்த்து: யோவான் குமாரனாகிய சீமோனே,
நீ என்னை நேசிக்கிறாயா என்றார். மூன்றாந்
தரம் என்னை நேசிக்கிறாயா என்று அவர்
தன்னைக் கேட்டபடியினால், பேதுரு துக்கப்
பட்டு: ஆண்டவரே, எல்லாம் உமக்குத்
தெரியும், நான் உம்மை நேசிக்கிறேன் என்
பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு:
என் ஆடுகளைப் போஷிப்பாயாக என்றார்.
மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் 18
சொல்லுகிறேன்: நீ வாலிபனாயிருந்தபோது,
உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு
உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து
திரிந்தாய்; நீ முதிர்வயதாகும்போதோ உன்
கைகளை நீட்டுவாய், வேறொருவன் உன்
அரையைக் கட்டி உனக்கு இஷ்டமில்லாத
இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான்
என்றார். இன்னவிதமான மரணத்தினாலே 19

அவன் கடவுளை மகிமைப்படுத்துவான் என்
பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்.
அவர் இதைச்சொல்லி அவனிடம்: என்
20 னைப் பின்பற்றிவா என்றார். பேதுரு திரும்
பிப் பார்த்து இயேசுவுக்கு அன்பாயிருந்த
சீஷன் பின்னே வருகிறதைக் கண்டான்.
இராப்போஜனப் பந்தியில் அவர் மார்பண்
டையில் சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக்
காட்டிக்கொடுக்கிறவன் யார் என்று கேட்ட
21 வன் இவனே. அவனைக் கண்டு பேதுரு
இயேசுவினிடம்: ஆண்டவரே, இவன்
22 காரியமென்ன என்றான். அதற்கு இயேசு:
நான் வருமளவும் இவனிருக்க எனக்குச்
சித்தமானால் உனக்கென்ன? நீ என்னைப்
23 பின்பற்றி வா என்றார். ஆகையால்,
அந்தச் சீஷன் மரிப்பதில்லை என்கிற
பேச்சு சகோதரருக்குள்ளே பரவிற்று. ஆனா
லும், அவன் மரிப்பதில்லை என்று இயேசு
சொல்லாமல், நான் வருமளவும் இவனி
ருக்க எனக்குச் சித்தமானால் உனக்கென்ன
என்று சொன்னார்.

அந்தச் சீஷனே இவைகளைக்குறித்துச் 24
சாட்சி பகர்ந்து இவைகளை எழுதினவன்;
அவனுடைய சாட்சியம் மெய்யென்று எங்
களுக்குத் தெரியும்.

இயேசு செய்த வேறு அநேக காரியங்க 25
ளும் உண்டு; அவைகளை ஒவ்வொன்றாக
எழுதினால், எழுதப்படும் புஸ்தகங்களை உல
கந்தானும் கொள்ளாதென்று எண்ணு
கிறேன்.

அப்போஸ்தலர் நடபடிகள்

1 தெயோப்பிலுவே, இயேசுவானவர் தாம்
உயர எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்
கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்
கின யாவற்றையுங்குறித்து முதலாம்
2 பிரபந்தம் எழுதினேன். அவர் தாம்
தெரிந்தெடுத்த அப்போஸ்தலருக்குப் பரி
சுத்த ஆவியினால் கட்டளையிட்டபின் எடுத்
3 துக்கொள்ளப்பட்டார். அவர் பாடுபட்ட
பின்பு, நாற்பது நாளாய் அவர்களுக்குத் தரி
சனமாகி, கடவுள் ராஜ்யத்துக்குரியவற்றை
உபதேசித்து, பல தெளிவான அடையாளங்
களினால் தம்மை உயிருள்ளவராக அவர்
4 களுக்குக் காண்பித்தார். அவர் அவர்க
ளோடு கூடிவந்திருக்கும்போது: யோவான்
ஜலத்தினால் ஞானஸ்நானங்கொடுத்தான்;
நீங்களோ சில நாளுக்குள்ளே பரிசுத்த
ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவீர்கள்;
5 ஆகையால் எருசலேமை விட்டுப்போகாமல்
நீங்கள் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதா
வின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்
திருங்கள் என்று கட்டளையிட்டார்.
6 ஆகவே, கூடிவந்திருந்தவர்கள் அவரிடம்:
ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை
இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுக்கிறீர்
7 என்று கேட்க, | அவர்: பிதா தமது ஆதீ
னத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளை
களையும் அறிவது உங்களுக்கு அடுத்த
8 தல்ல. பரிசுத்த ஆவி உங்கள்மேல் வரும்
போதோ நீங்கள் பலமடைந்து, எருசலே
மிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும்
பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச்
9 சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். இவை
களை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்
துக்கொண்டிருக்கையில், அவர் உயர எடுத்
துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்க
ளுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை
10 எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது
அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக்
கொண்டிருக்கையில், வெண் வஸ்திரம்
தரித்த இருவர் அவர்களருகே நின்று:
11 கலிலேயரே, நீங்கள் ஏன் வானத்தைப்
பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள்? உங்க
ளிடத்திலிருந்து வானத்துக்கு எடுத்துக்
கொள்ளப்பட்ட இந்த இயேசு எவ்விதமாக
வானத்துக்குள் போகக் கண்டீர்களோ அவ்
விதமாகவே வருவார் என்றார்கள்.
அப்பொழுது அவர்கள் ஒலிவமென்னும் 12
மலையிலிருந்து எருசலேமுக்குத் திரும்பி
னார்கள்; அது எருசலேமுக்குச் சமீபம்,
ஓய்வுநாள் பிரயாண தூரம். அவர்கள் 13
அங்கே வந்தபோது தாங்கள் தங்கியிருந்த
மேல்வீட்டில் ஏறினார்கள். அவர்கள்,
பேதுரு யோவான் யாக்கோபு அந்திரேயா,
பிலிப்பு தோமா, பர்த்தொலொமேயு
மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு,
செலோத்தே என்ற சீமோன், யாக்கோபின்
குமாரன் யூதாஸ் என்பவர்களே. இவர்கள் 14
யாவரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயா
ராகிய மரியாளோடும் அவர் சகோதரரோடுங்
கூட, ஏகமனமாய் ஜெபத்தில் தரித்திருந்
தார்கள்.
அந்நாட்களில் ஏறக்குறைய நூற்றிருபது 15
பேர் ஒன்றாய்க் கூடியிருந்தபோது, பேதுரு
சகோதரர் நடுவே எழுந்து நின்று: சகோ 16
தரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழி
காட்டியான யூதாசைக்குறித்துப் பரிசுத்த
ஆவி தாவீதின் வாயினால் முன் உரைத்த
வேதவாக்கியம் நிறைவேறவேண்டியதா
யிருந்தது; அவன் எங்களில் ஒருவனாக 17
எண்ணப்பட்டு, இந்த ஊழியத்தில் பங்கு
பெற்றான். (அநீதத்தின் கூலியினால் அவன் 18
ஒரு நிலத்தைச் சம்பாதித்தான்; அவன்
முகங்குப்புற விழவே, அவன் வயிறு
வெடித்துக் குடல்களெல்லாம் சரிந்து
போயின. இது எருசலேமிலுள்ள குடிகள் 19
யாவருக்கும் தெரியலாயிற்று; ஆகவே,
அந்த நிலம் அவர்கள் பாஷையில் அக்கெல்
தமா எனப் பேர்பெற்றது. அதற்கு இரத்த
நிலம் என்பது பொருள்.) சங்கீத புஸ்த 20
கத்தில்:

அவன் வாசஸ்தலம் பாழாவதாக,
எவனும் அதில் குடிபுகாதிருப்பானாக

என்றும்,

அவன் கண்காணிப்பை வேறொருவன்
பெறுவானாக

என்றும் எழுதியிருக்கிறது. இப்படியிருப்ப 21
தால், யோவான் ஞானஸ்நானங்கொடுத்த
காலமுதல் ஆண்டவராகிய இயேசு நம்

மிடத்திலிருந்து உயர எடுத்துக்கொள்ளப்
22 பட்ட நாள்வரைக்கும், அவர் நம்மோடு
சஞ்சரித்த காலமெல்லாம் எங்களோடு
கூடவே இருந்த மனுஷரில் ஒருவன், அவ
ருடைய உயிர்த்தெழுதலுக்கு எங்களோடு
23 சாட்சியாகவேண்டும் என்றான். அப்
பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறு
நாமமுள்ள பர்சபா எனப்பட்ட யோசேப்பு,
24 மத்தியா என்ற இருவரை நிறுத்தி: ஆண்ட
வரே, எல்லாருடைய இருதயங்களையும்
அறிகிறவரே, யூதாஸ் என்பவன் தனக்குரிய
இடத்துக்குப் போகும்படி இந்த ஊழியத்
திலும் இந்த அப்போஸ்தல பதவியிலும்
விட்டுப்போன இடத்தைப் பெறுவதற்கு,
25 இவ்விருவரில் தேவரீர் தெரிந்தெடுத்தவன்
எவனென்று எங்களுக்குக் காண்பித்தரு
26 ளும் என்று ஜெபித்தார்கள். பின்பு அவர்
களைக்குறித்துச் சீட்டுப்போட்டார்கள்,
சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது;
விழவே, அவன் பதினொரு அப்போஸ்தல
ரோடும் சேர்த்துக்கொள்ளப்பட்டான்.

2 பெந்தெகொஸ்தே நாள் வந்தபோது
எல்லாரும் ஒருமனப்பட்டு கூடியிருந்தார்கள்.
2 அப்பொழுது வேகமாய் அடிக்கிற பலத்த
காற்றைப்போல வானத்திலிருந்து சடிதியாய்
ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள்
உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்
3 பிற்று. அக்கினிமயமான நாவுகள்போலப்
பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக்
காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர்
4 மேலும் வந்து அமர்ந்தன. யாவரும்
பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்;
தாங்கள் வசனிக்கும்படி ஆவி அருளிய
படியே இதர பாஷைகளில் பேசத் தொடங்
5 கினார்கள். வானத்தின் கீழுள்ள சகல
ஜாதியாரிலுமிருந்து வந்திருந்த பக்தியுள்ள
யூதர் அப்பொழுது எருசலேமில் குடியிருந்
6 தார்கள். அந்தச் சத்தம் உண்டாகவே
ஜனத்திரள் கூடிவந்தது. தங்கள் தங்கள்
பாஷையில் அவர்கள் பேசுகிறதை ஒவ்
வொருவனும் கேட்டபடியினால் கலங்கி
7 னார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்
பட்டு: இதோ, பேசுகிற இவர்கள் யாவரும்
8 கலிலேயர் அல்லவா? அப்படியிருக்க, நம்
மில் அவரவர் ஜென்மபாஷையில் இவர்கள்
பேசக் கேட்கிறோமே; இதெப்படி?
9 பார்த்தரும், மேதரும், எலாமீத்தரும்,
மெசொப்பொத்தாமியா யூதேயா கப்பத்
10 தோக்கியா பொந்து ஆசியா | பிரிகியா பம்பி
லியா எகிப்து தேசங்களிலும் சிரேனே
பட்டணத்துக்குச் சமீபமான லீபியாவின்
பிரதேசங்களிலும் குடியிருக்கிறவர்களும்,
இங்கே சஞ்சரிக்கிற ரோமரும், | யூதரும், 11
யூதமார்க்கத்தில் சேர்ந்தவர்களும், கிரேத்த
ரும், அரபியருமாகிய நாம் கடவுளின் மகத்து
வங்களை இவர்கள் நமது பாஷைகளில்
பேசக் கேட்கிறோமே என்றார்கள். எல்லா 12
ரும் பிரமித்துத் திகைப்படைந்து: இது
என்னவாகுமோ என்று ஒருவரோடொருவர்
சொல்லிக்கொண்டார்கள். மற்றவர்களோ: 13
இவர்கள் மதுபானம் நிறைந்தவர்களென்று
பரிகாசம்பண்ணினார்கள்.

அப்பொழுது பேதுரு பதினொருவரோடுங் 14
கூட எழுந்துநின்று, அவர்களைப் பார்த்து,
உரத்த சத்தமாய் வசனித்து: யூதரே, எரு
சலேமில் குடியிருக்கிற சகல ஜனங்களே,
இதை அறிந்துகொள்வீர்களாக. என் வார்த்
தைகளுக்குச் செவிகொடுங்கள். நீங்கள் 15
நினைக்கிறபடி இவர்கள் வெறிகொண்டவர்க
ளல்ல, இது பொழுதுவிடிந்து மூன்றாம்
மணி வேளைதானே. தீர்க்கதரிசியாகிய 16
யோவேலின் மூலமாய் உரைக்கப்பட்டது
இதுவே:

கடைசி நாட்களில் 17
மனுமக்கள் யாவர்மேலும் என் ஆவியை
ஊற்றுவேன்,
அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள்
குமாரத்திகளும்
தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்;
உங்கள் வாலிபர் தரிசனங்களையும்
உங்கள் முதியோர் சொப்பனங்களையும்
காண்பார்கள்;
என்னுடைய அடிமைகள் மேலும், 18
என்னுடைய அடிமைப் பெண்கள்
மேலும்
அந்நாட்களில் என் ஆவியை ஊற்று
வேன்,
அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனம்
சொல்லுவார்கள்.
உயர வானத்திலே அற்புதங்களையும், 19
தாழ பூமியிலே இரத்தம், அக்கினி,
புகைக்காடு ஆகிய
அடையாளங்களையும் காட்டுவேன்;
பெரிதும் மகிமை விளங்குவது மதா 20
கர்த்தருடைய நாள் வருமுன்னே
சூரியன் இருளாகவும்
சந்திரன் இரத்தமாகவும் மாறும்.
அப்பொழுது கர்த்தரின் நாமத்தைத் 21
தொழுதுகொள்ளுகிறவனெவனோ
அவன் இரட்சிக்கப்படுவான்
என்று கடவுள் உரைக்கிறார்.
இஸ்ரவேலரே, இந்த வார்த்தைகளைக் 22
கேளுங்கள்: உங்களுக்குத் தெரிந்திருக்கிற

படி, நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு
கடவுள் உங்கள் மத்தியில் வல்ல செயல்
களையும் அற்புதங்களையும் அடையாளங்களை
யும் செய்து, அவரை உங்களுக்கு வெளிப்
23 படையாகக் காண்பித்தார். கடவுளுடைய
திட்டமான ஆலோசனையினாலும் அவரு
டைய முன்னறிவினாலும் ஒப்புக்கொடுக்கப்
பட்ட இந்த இயேசுவை அக்கிரமக்காரர்
கையினால் நீங்கள் சிலுவையிலறைந்து
24 கொலைசெய்தீர்கள். கடவுள் மரண உபாதி
களின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பி
னார்; மரணத்தினால் அவர் கட்டிவைக்கப்
25 படுவது அசாத்தியம். அவரைக் குறித்துத்
தாவீது:

கர்த்தரை எப்பொழுதும்
எனக்குமுன் வைத்து நோக்கிக்கொண்
டிருந்தேன்;
நான் அசைக்கப்படாதபடி
அவர் என் வலதுபாரிசத்தில் இருக்
கிறார்.
26 ஆகவே என் இருதயம் மகிழ்ந்தது,
என் நாவு களிகூர்ந்தது;
என் மாம்சமுங்கூட நன்னம்பிக்கையில்
தங்கும்.
27 என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்;
உம்முடைய பரிசுத்தவானை அழிவு
காணவிடீர்;
28 ஜீவ வழிகளை எனக்குத் தெரியப்படுத்தி
னீர்;
உமது சந்நிதானத்தில்
என்னைச் சந்தோஷத்தினால் நிரப்புவீர்

என்று சொல்லுகிறான்.
29 சகோதரரே, கோத்திரப்பிதாவாகிய தாவீ
தைக்குறித்து நான் உங்களோடு தாராள
மாய்ப் பேசலாம். அவன் மரணமடைந்து
அடக்கம்பண்ணப்பட்டான்; அவன் கல்
லறை இந்நாள்வரைக்கும் நம்மிடமிருக்கி
30 றது. அவன் தீர்க்கதரிசியானதால் தனது
சந்ததியில் ஒருவரைத் தன் சிங்காசனத்தில்
வீற்றிருக்கச் செய்வதாகக் கடவுள் ஆணை
யிட்டுச் சொன்னதை அவன் அறிந்திருந்து,
31 அவர் பாதாளத்திலே விடப்படுவதில்லை
யென்றும் அவர் மாம்சம் அழிவைக் காண்ப
தில்லையென்றும் முன்னறிந்தவனாக, கிறிஸ்து
வின் உயிர்த்தெழுதலைக்குறித்துப் பேசினான்.
32 இந்த இயேசுவைக் கடவுள் எழுப்பினார்;
இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகள்.
33 ஆகவே, அவர் கடவுளின் வலது கரத்தால்
உயர்த்தப்பட்டு, வாக்குத்தத்தம்பண்ணப்
பட்ட பரிசுத்த ஆவியைப் பிதாவினிட
மிருந்து பெற்று, நீங்கள் இப்பொழுது
காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப்
பொழிந்தருளினார். தாவீது பரலோகத்திற்கு 34
எழுந்துபோகவில்லையே.

கர்த்தர் என் ஆண்டவரிடம்:
நான் உம்முடைய சத்துருக்களை
உமக்குப் பாதபடியாக்கிப்போடுமட்டும்,
நீர் என் வலது பாரிசத்தில் உட்காரும் 35
என்றார்

என்பதாக அவனே சொல்லியிருக்கிறான்.
ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த 36
இந்த இயேசுவையே கடவுள் ஆண்டவரும்
கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் வீட்
டாரனைவரும் நிச்சயமாய் அறிந்துகொள்
வார்களாக என்று சொன்னான்.

அவர்கள் இதைக் கேட்டபொழுது இரு 37
தயத்தில் குத்தப்பட்டவர்களாகி, பேதுரு
வையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து:
சகோதரரே, நாங்கள் என்னசெய்யவேண்டும்
என்றார்கள். பேதுரு அவர்களிடம்: நீங்கள் 38
மனந்திரும்பிப் பாவமன்னிப்புக்கென்று ஒவ்
வொருவரும் இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே
ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்
பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப்
பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்க 39
ளுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், தூரத்தி
லுள்ள யாவருக்கும், நம்முடைய கடவுளா
கிய ஆண்டவர் வரவழைக்கும் யாவருக்கும்
உரியது என்று சொன்னான். இன்னும் 40
அநேக வார்த்தைகளைக்கொண்டு வற்புறுத்திக்
கூறி: கோணலான இந்தச் சந்ததியைவிட்டு
விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்
என்று புத்தி சொன்னான். அவன் வார்த் 41
தையை ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்
நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்
குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்
பட்டார்கள். அவர்கள் அப்போஸ்தலர் உப 42
தேசத்திலும் அன்னியோன்னியத்திலும் அப்
பம் பிட்குதலிலும் ஜெபங்களிலும் தரித்தி
ருந்தார்கள்.

எல்லாருக்கும் பயமுண்டாயிற்று; 43
அநேக அற்புதங்களும் அடையாளங்களும்
அப்போஸ்தலரால் செய்யப்பட்டன. விசு 44
வாசிகளனைவரும் ஒன்றாயிருந்து, யாவற்றை
யும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள்.
காணியாட்சிகளையும் உடைமைகளையும் 45
விற்று, அவனவன் அவசியத்துக்குத்தக்க
படி எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்துவந்
தார்கள். அவர்கள் ஏகமனமாய்த் தேவால 46
யத்தில் அநுதினமும் தரித்திருந்து, வீடுக
ளில் அப்பம் பிட்டு, மகிழ்ச்சியோடும் கபட
மில்லாத இருதயத்தோடும் போஜனம்
பண்ணி, கடவுளைத் துதித்துவந்தார்கள்.
ஜனங்களெல்லாரும் அவர்களிடத்தில் பிரிய 47

மாயிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை
ஆண்டவர் அநுதினமும் ஒன்றாகச் சேர்த்
துக்கொண்டுவந்தார்.

3 ஜெபவேளையாகிய ஒன்பதாம்மணி நேரத்
தில் பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்
2 குப் போய்க்கொண்டிருக்கையில், தாயின்
கர்ப்பத்திலிருந்து சப்பாணியாயிருந்த ஒரு
மனுஷனைச் சிலர் தூக்கிக்கொண்டுவந்
தார்கள்; தேவாலயத்திற்குள் போகிறவர்க
ளிடம் பிச்சை கேட்கும்படி நாடோறும்
அவனை அலங்காரவாசல் எனப்பட்ட
தேவாலய வாசலண்டையில் வைப்பார்கள்.
3 தேவாலயத்திற்குள் பிரவேசிக்கப்போகிற
பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு
4 பிச்சைகேட்டான். பேதுருவும் யோவானும்
அவனை உற்றுப்பார்த்தார்கள். பேதுரு:
5 எங்களைப் பார் என்றான். அவர்களிடம்
ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி
அவன் அவர்களைக் கவனித்துப் பார்த்தான்.
6 அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்
னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்
ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய
இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நட
7 என்று சொல்லி, வலது கையைப் பிடித்து
அவனைத் தூக்கிவிட்டான்; உடனே அவன்
பாதங்களும் கணுக்களும் பலங்கொண்டன.
8 அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்;
நடந்து குதித்துக் கடவுளைத் துதித்துக்
கொண்டு அவர்களோடு தேவாலயத்திற்குட்
9 சென்றான். அவன் நடக்கிறதையும் கடவு
ளைத் துதிக்கிறதையும் ஜனங்களெல்லாரும்
10 கண்டு, தேவாலயத்தின் அலங்கார வாச
லண்டையில் பிச்சைகேட்க உட்கார்ந்திருந்
தவன் இவனே என்று அறிந்து, அவனுக்
குச் சம்பவித்ததைக்குறித்து மிகவும் பிர
மித்துத் திகைத்தார்கள்.
11 அவன் பேதுருவையும் யோவானையும்
பற்றிக்கொண்டிருக்கையில், ஜனங்களெல்
லாரும் பிரமிப்படைந்தவர்களாய்ச் சாலொ
மோன் மண்டபம் என்ற மண்டபத்தில்
12 அவர்களிடம் ஓடிவந்தார்கள். பேதுரு
அதைக் கண்டு ஜனங்களைப்பார்த்து: இஸ்ர
வேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்
படுகிறதென்ன? நாங்கள் சுயசக்தியினாலா
வது சுயபக்தியினாலாவது இவனை நடக்கப்
பண்ணினோமென்று நீங்கள் எங்களை உற்
13 றுப்பார்க்கிறதென்ன? ஆபிரகாம் ஈசாக்கு
யாக்கோபு என்பவர்களின் கடவுளாகிய நம்
பிதாக்களின் கடவுள் தம்முடைய [1]தாசனா
கிய இயேசுவை மகிமைப்படுத்தினார்; நீங்
களோ அவரை ஒப்புக்கொடுத்து, பிலாத்து
அவரை விடுதலையாக்கத் தீர்மானித்தபோது
அவனுக்கு முன்பாக அவரை மறுதலித்
தீர்கள். பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை 14
நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை உங்க
ளுக்குத் தயவாய் அளிக்கவேண்டுமென்று
கேட்டு, ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; 15
அவரைக் கடவுள் மரித்தோரிலிருந்தெழுப்
பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகள். நீங்கள் 16
பார்க்கிறவனும் உங்களுக்குத் தெரிந்தவனு
மாகிய இவனை, அவர் நாமத்தைப் பற்றும்
விசுவாசத்தினாலே, அவர் நாமமே பலப்
படுத்தினது; அவரால் உண்டாகிய விசு
வாசமே உங்களெல்லாருக்குமுன்பாக இந்
தப் பூரண சுகத்தை இவனுக்குக் கொடுத்
தது. இப்பொழுதும், சகோதரரே, உங்கள் 17
அதிகாரிகளைப்போலவே நீங்களும் அறியா
மையினாலே இதைச் செய்தீர்களென்று
எனக்குத் தெரியும். கடவுளோ தாம் 18
அபிஷேகம்பண்ணினவர் பாடுபடவேண்டு
மென்று தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாயி
னாலும் முன்னறிவித்தவைகளை இப்படி நிறை
வேற்றினார். உங்கள் பாவங்கள் நீக்கப் 19
படும்பொருட்டு மனந்திரும்பிக் குணப்
படுங்கள். அப்பொழுது ஆண்டவருடைய 20
சமுகத்திலிருந்து இளைப்பாறும் காலம்
வரும்படி, உங்களுக்காக முன்குறிக்கப்
பட்ட கிறிஸ்துவாகிய இயேசுவை அவர்
அனுப்புவார்; யாவும் சீருக்கு வரும் காலம் 21
வரைக்கும் அவர் பரலோகத்தில் இருக்க
வேண்டியது; யுகாரம்பமுதல் கடவுள் தம்
பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாயினால்
இதைப்பற்றித் திருவுளம்பற்றினார்:
கர்த்தராகிய கடவுள் 22
என்னைப்போன்ற ஒரு தீர்க்கதரிசியை
உங்கள் சகோதரரிலிருந்து உங்களுக்
கென்று எழும்பப்பண்ணுவார்;
அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லா
வற்றிலும்
அவருக்குச் செவிகொடுப்பீர்களாக.
அந்தத் தீர்க்கதரிசிக்குச் செவிகொடா 23
தவனெவனோ
அவன் ஜனத்திலிராதபடி நிர்மூலமாக்கப்
படுவான்
என்று மோசே சொன்னான். சாமுவேல் 24
முதல் தொடர்ச்சியாகத் தீர்க்கதரிசனம்
உரைத்தவர்கள் அனைவரும் இந்த நாட்
களை முன்னறிவித்தார்கள். அந்தத் தீர்க்க 25
தரிசிகளுக்கும்,

[1] ஏசாயா 42: 1 ஒத்துப்பார்க்க.

உன் சந்ததியில்
பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்
வதிக்கப்படும்
என்று கடவுள் ஆபிரகாமுக்குச் சொல்லி
உங்கள் பிதாக்களோடு செய்த உடன்படிக்
26 கைக்கும் நீங்கள் புத்திரர். கடவுள் தம்
தாசனை முதலாவது உங்கள்பொருட்டே
எழுப்பி, உங்களில் ஒவ்வொருவரையும்
உங்கள் பொல்லாங்குகளிலிருந்து விலக்கி
உங்களை ஆசீர்வதிக்கிறவராக அவரை
அனுப்பினார் என்றான்.

4 அவர்கள் ஜனங்களிடம் பேசிக்கொண்
டிருக்கையில், ஆசாரியரும் தேவாலயச்
சேனைத்தலைவனும் சதுசேயரும் வந்து,
2 அவர்கள் ஜனங்களுக்கு உபதேசிக்கிறதி
னிமித்தமும், மரித்தோரிலிருந்து உயிர்த்
தெழுவதுண்டென்பதை இயேசுவை முன்
னிட்டுப் பிரசங்கிக்கிறதினிமித்தமும் சினங்
3 கொண்டு, | அவர்களைப் பிடித்தார்கள்; அப்
பொழுது சாயங்காலம், ஆகையினால் மறு
நாள்வரைக்கும் அவர்களைக் காவலில் வைத்
4 தார்கள். வசனத்தைக் கேட்டவர்களில்
அநேகர் விசுவாசிகளானார்கள்; புருஷர்
தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிற்று.
5 மறுநாள் அவர்கள் அதிகாரிகளும் மூப்
பரும் வேதபாரகரும் எருசலேமில் கூட்டங்
6 கூடினார்கள். அவர்களோடு பிரதான ஆசாரி
யன் அன்னாவும், காய்பா யோவான் அலெக்
சந்தர் இவர்களும், பிரதான ஆசாரிய குடும்
பத்தைச் சேர்ந்தோர் அனைவரும் இருந்
7 தார்கள். அப்பொழுது அவர்களை நடுவே
நிறுத்தி: நீங்கள் எந்த வல்லமையினால்,
எந்த நாமத்தினால், இதைச் செய்தீர்கள்
8 என்று விசாரித்தார்கள். பேதுரு பரிசுத்த
ஆவியினாலே நிறைந்தவனாய் அவர்களைப்
பார்த்து: ஜனத்தின் அதிகாரிகளே, மூப்பரே,
9 பிணியாளிக்குச் செய்யப்பட்ட நன்மை
விஷயமாய், இவன் எதினாலே குணமானா
னென்று நீங்கள் இன்று எங்களை விசாரணை
10 செய்கிறதானால், உங்களெல்லாருக்கும்,
இஸ்ரவேல் ஜனம் அனைத்துக்கும் இது
தெரிந்திருக்கட்டும்: நீங்கள் சிலுவையில்
அறைந்தவரும் கடவுள் மரித்தோரிலிருந்து
எழுப்பினவருமாகிய நசரேயன் இயேசு
கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் குண
மாகி உங்கள் முன்னிலையில் நிற்கிறான்.
11 வீடு கட்டுகிறவர்களாகிய நீங்கள் அற்ப
மாய் எண்ணின அவரே கோடிக்குத் தலைக்
12 கல்லானவர். வேறொருவராலும் இரட்சிப்
பில்லை; நாம் இரட்சிப்பைப் பெறுவதற்கு
வானத்தின்கீழ் மனுஷருக்குள் அருளப்
பட்ட வேறொரு நாமமுமில்லை என்று
சொன்னான்.
பேதுருவும் யோவானும் பேசுகிற தைரி 13
யத்தை அவர்கள் கண்டு, இவர்கள் கல்வி
யறியாத சாமான்ய மனிதரென்று அறிந்து
ஆச்சரியப்பட்டார்கள். இவர்கள் இயேசு
வுடன் இருந்தவர்களென்றும் அறியலா
னார்கள். சுகமடைந்த மனுஷன் அவர்க 14
ளோடு நிற்கிறதை அவர்கள் கண்டபடியால்
எதிர்பேச அவர்களுக்கு இடமில்லை. அப் 15
பொழுது ஆலோசனைச் சங்கத்தைவிட்டு
வெளியே போகும்படி அவர்களுக்குக் கட்
டளையிட்டு, தங்களுக்குள்ளே யோசனை
செய்து: இந்த மனுஷரை நாம் என்ன 16
செய்யலாம்? வெளிப்படையான அடையாள
மொன்று இவர்களால் செய்யப்பட்டது,
அது எருசலேமில் குடியிருக்கிற யாவருக்
கும் தெரியும், அதை நாம் மறுக்கமுடி
யாது. ஆயினும் இது ஜனத்துக்குள் இன் 17
னும் அதிகமாய்ப் பரவாதபடி, எவரோடும்
இந்த நாமத்தைப்பற்றி இனிமேல் பேசக்
கூடாதென்று அவர்களைப் பயமுறுத்து
வோம் என்று சொல்லிக்கொண்டு, அவர் 18
களை அழைத்து, இயேசுவின் நாமத்தைப்
பற்றி எவ்வளவும் பேசவும் உபதேசிக்கவும்
கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்
டார்கள். பேதுருவும் யோவானுமோ அவர்க 19
ளிடம்: கடவுளுக்குச் செவிகொடுப்பதிலும்
உங்களுக்குச் செவிகொடுப்பது கடவுளுக்கு
முன் நியாயமாகுமோ, நிதானியுங்கள்.
நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளை 20
யும் சொல்லாமலிருக்க எங்களால் முடியா
தென்று சொன்னார்கள். நடந்ததைப்பற்றி 21
ஜனங்கள் எல்லாரும் கடவுளை மகிமைப்
படுத்திவந்தபடியால், அவர்களைத் தண்டிக்க
வகையொன்றும் காணாமல், இன்னும் அதிக
மாய்ப் பயமுறுத்தி அவர்களை விடுதலைசெய்
தார்கள். அற்புதமாய்ச் சொஸ்தமடைந்த 22
வன் நாற்பது வயதுக்கு மேற்பட்டவன்.
அவர்கள் விடுதலையானபின் தங்களைச் 23
சேர்ந்தவர்களிடம் வந்து, பிரதான ஆசாரிய
ரும் மூப்பரும் தங்களுக்குச் சொன்ன
யாவற்றையும் அறிவித்தார்கள். அவர்கள் 24
அதைக் கேட்கவே, ஏகமனமாய்க் கடவுளை
நோக்கிச் சத்தமிட்டு: ஆண்டவரே, வானம்
பூமி சமுத்திரங்களையும் அவைகளிலுள்ள
யாவற்றையும் படைத்தவர் நீரே.
புறஜாதிகள் கொந்தளிப்பானேன்? 25
ஜனங்கள் வீண் காரியங்களைச் சிந்திப்பா
னேன்?
கர்த்தருக்கும் அவர் அபிஷேகம்பண் 26
ணினவருக்கும் விரோதமாக

பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்றார்கள்,
அதிகாரிகளும் ஒன்றாய்க் கூட்டங்கூடி
னார்கள்
என்று எங்கள் பிதாவும் உம்முடைய தாச
னுமாகிய தாவீதின் வாயினால், தேவரீர்
பரிசுத்த ஆவியைக்கொண்டு உரைத்தீர்.
27 அந்தப்படியே, நீர் அபிஷேகம் பண்ணின
உம்முடைய பரிசுத்த தாசனாகிய இயேசு
வுக்கு விரோதமாய், ஏரோதும் பொந்தியு
பிலாத்துவும் புறஜாதிகளோடும் இஸ்ரவேல்
ஜனங்களோடும் இந்தப் பட்டணத்தில்
28 மெய்யாகவே கூட்டங்கூடினார்கள். நடந்
தேறவேண்டுமென்று உமது கரமும் ஆலோ
சனையும் முன்குறித்த யாவற்றையும் இவ்
29 விதமாய்ச் செய்துமுடித்தார்கள். இப்
பொழுது, ஆண்டவரே, அவர்கள் பயமுறுத்
30 தலைக் கவனித்து, பிணியாளிகளைச் சொஸ்த
மாக்க உமது கரத்தை நீட்டி, உம்முடைய
பரிசுத்த தாசனாகிய இயேசுவின் நாமத்தின்
மூலமாய் அடையாளங்களையும் அற்புதங்
களையும் நடப்பித்து, உம்முடைய அடியார்
உமது வார்த்தையை முழு தைரியத்தோடும்
கூறும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்
31 செய்யும் என்று ஜெபித்தார்கள். ஜெபிக்
கவே, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்
தது; அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியி
னால் நிரப்பப்பட்டு, கடவுளின் வார்த்தை
யைத் தைரியமாய்க் கூறிவந்தார்கள்.
32 விசுவாசிகளாகிய கூட்டத்தார் ஒரே
இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களா
யிருந்தார்கள். ஒருவனும் தனக்குள்ளவை
களில் ஒன்றையும் தன்னுடையதென்று
சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப்
33 பொதுவாயிருந்தது. ஆண்டவராகிய இயேசு
வின் உயிர்த்தெழுதலைப்பற்றி அப்போஸ்தலர்
மிகுந்த வல்லமையாய்ச் சாட்சி பகர்ந்து
வந்தார்கள்; அவர்களெல்லாரும் மிகுந்த
அருள்பெற்றவர்களாய் விளங்கினார்கள்.
34 நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள்
அவைகளை விற்று, விற்றவைகளின் கிரயத்
35 தைக் கொண்டுவந்து, அப்போஸ்தலர்
பாதங்களண்டை வைப்பார்கள். அவனவன்
அவசியத்துக்குத்தக்கபடி பகிர்ந்துகொடுக்
கப்படும்; அவர்களில் ஒருவனுக்கும் ஒரு
குறையுமிருந்ததில்லை.
36 யோசேப்பென்னும் லேவியனொருவனிருந்
தான், அவன் சீப்புரு தீவான். இவனுக்கு
அப்போஸ்தலர் பர்னபா என்று பேரிட்
டிருந்தார்கள்; சகாயசீலன் என்பது அதற்
37 குப் பொருள். இவன் தனக்கிருந்த நிலத்தை
விற்று, கிரயத்தைக் கொண்டுவந்து அப்
போஸ்தலர் பாதங்களண்டை வைத்தான்.

அனனியா என்பவனும் அவன் மனைவி 5
சப்பீராளும் தங்கள் நிலத்தை விற்றார்கள்.
அதன் கிரயத்தில் ஒரு பங்கை அவன் 2
வஞ்சித்துவைத்து, ஒரு பங்கைக் கொண்டு
வந்து அப்போஸ்தலர் பாதங்களண்டை
வைத்தான்; அவன் மனைவியும் அதற்கு
உடந்தையாயிருந்தாள். பேதுரு: அனனி 3
யாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை
வஞ்சித்துவைத்துப் பரிசுத்த ஆவியினிடம்
பொய் சொல்லும்படி சாத்தான் உன் இரு
தயத்தை நிரப்பினதென்ன? அது இருந்த 4
போது உன்னுடையதாயிருக்கவில்லையோ?
அதை விற்றபின்னும் அதன் கிரயம் உன்
வசத்திலிருந்ததல்லவோ? இப்படிச் செய்ய
உன் இருதயத்தில் நீ எண்ணங்கொண்ட
தென்ன? மனுஷரிடத்திலல்ல, கடவுளிடத்
திலே நீ பொய் சொன்னாய் என்றான். இந்த 5
வார்த்தைகளைக் கேட்கவே, அனனியா
விழுந்து ஜீவனை விட்டான்; அதைக் கேள்விப்
பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டா
யிற்று. வாலிபர் எழுந்து, அவனைத் துணியில் 6
சுற்றி, வெளியே கொண்டுபோய் அடக்கம்
பண்ணினார்கள். ஏறக்குறைய மூன்று மணி 7
நேரத்துக்குப்பின் அவன் மனைவி உள்ளே
வந்தாள்; நடந்தது அவளுக்குத் தெரியாது.
பேதுரு அவளிடம்: நிலத்தை இவ்வளவுக் 8
குத்தானா கொடுத்தீர்கள்? எனக்குச் சொல்
என்று கேட்க, அவள்: ஆம், இவ்வளவுக்
குத்தான் என்றாள். பேதுரு அவளைப் 9
பார்த்து: ஆண்டவரின் ஆவியைச் சோதிக்
கும்படி நீங்கள் ஒருமனப்பட்டதென்ன?
உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்களின்
கால்கள், இதோ, வாசற்படியிலே வந்திருக்
கின்றன, உன்னையும் வெளியே கொண்டு
போவார்கள் என்றான். உடனே அவன் 10
பாதத்தில் அவள் விழுந்து ஜீவனை விட்டாள்.
வாலிபர் உள்ளே வந்து, அவளை மரித்தவ
ளாகக் கண்டு, அவளையும் வெளியே கொண்டு
போய், அவள் புருஷனண்டையில் அடக்
கம்பண்ணினார்கள். சபையாரெல்லாருக் 11
கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்ற
யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று.
அப்போஸ்தலர் கைகளினால் அநேக 12
அடையாளங்களும் அற்புதங்களும்
ஜனங்கள் நடுவில் செய்யப்பட்டன. எல்
லாரும் ஏகமனமாய்ச் சாலொமோன் மண்ட
பத்தில் இருந்தார்கள். மற்றவர்களில் ஒரு 13
வரும் அவர்களுடன் சேர்ந்துகொள்ளத்
துணியவில்லை. ஜனங்களோ அவர்களை
மேன்மைப்படுத்தினார்கள். திரளான புருஷ 14
ரும் ஸ்திரீகளும் ஆண்டவரிடத்தில் விசுவா
சம் வைத்தவர்களாகி, அதிகமதிகமாய்ச்

15 சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ஆகவே,
பேதுரு நடந்துபோகையில் யார்மேலாகிலும்
அவன் நிழலாவது படும்படி, பிணியாளி
களைக் கட்டில்களிலும் படுக்கைகளிலும்
கிடத்தி வெளியே வீதிகளில் கொண்டுவந்து
16 வைப்பார்கள். எருசலேமைச் சுற்றியிருந்த
ஊர்களிலிருந்து திரள் ஜனங்கள் பிணியாளி
களையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்
பட்டவர்களையும் கொண்டுவந்து அங்கே
கூடினார்கள்; அவர்களெல்லாரும் சொஸ்த
மாக்கப்பட்டார்கள்.
17 பிரதான ஆசாரியனும் அவனைச் சேர்ந்த
அனைவருமாகிய சதுசேய சமயத்தினர்
எழும்பி, பொறாமையினால் நிறைந்தவர்க
18 ளாய், | அப்போஸ்தலரைப் பிடித்து, பொது
வான சிறைச்சாலையில் போட்டார்கள்.
19 ஆண்டவரின் தூதன் ஒருவன் இரவிலே
சிறைச்சாலைக் கதவுகளைத் திறந்து அவர்களை
20 வெளியே அழைத்துவந்து: நீங்கள் போய்த்
தேவாலயத்தில் நின்று, இந்தஜீவவசனங்கள்
யாவற்றையும் ஜனங்களுக்குக் கூறுங்கள்
21 என்றான். அவர்கள் அதைக் கேட்டு, அதி
காலையில் தேவாலயத்திற்குட் சென்று, உப
தேசம் செய்துகொண்டிருந்தார்கள். பிர
தான ஆசாரியனும் அவனைச் சேர்ந்தவர்
களும் வந்து, ஆலோசனைச் சங்கத்தாரையும்
இஸ்ரவேல் புத்திரரின் மூப்பர் சங்கத்தார்
அனைவரையும் வரவழைத்து, அப்போஸ்தல
ரைக் கொண்டுவரும்படி சிறைச்சாலைக்குச்
22 சேவகரை அனுப்பினார்கள். போனவர்கள்
சிறைச்சாலையில் அவர்களைக் காணாமல்
23 திரும்பி வந்து: சிறைச்சாலை மிகுந்த பத்திர
மாய்ப் பூட்டியிருக்கவும், காவற்காரர் கதவு
களுக்குமுன் நிற்கவும் கண்டோம். திறந்த
பொழுதோ உள்ளே ஒருவரையும் காண
24 வில்லை என்று அறிவித்தார்கள். இந்த
வார்த்தைகளைக் கேட்கவே, தேவாலயச்
சேனைத்தலைவனும் பிரதான ஆசாரியரும்
இது என்ன ஆகுமோ என்று அவர்களைக்
25 குறித்துத் திகைப்புற்றார்கள். அப்பொழுது
ஒருவன் வந்து: நீங்கள் காவலில் வைத்த
மனுஷர், இதோ, தேவாலயத்தில் நின்று
ஜனங்களுக்கு உபதேசம் செய்துகொண்
டிருக்கிறார்களென்று அவர்களுக்கு அறிவித்
26 தான். அறிவிக்கவே, சேனைத்தலைவன் சேவக
ரோடு போய் அவர்களை அழைத்துவந்தான்;
ஜனங்கள் கல்லெறிவார்களென்று பயந்து
27 அவர்களைப் பலவந்தஞ் செய்யவில்லை. அவர்
களை அழைத்துவந்து, ஆலோசனைச் சங்கத்
தின்முன் நிறுத்தவே, பிரதான ஆசாரியன்
28 அவர்களை வினவி: நீங்கள் இந்த நாமத்தைப்
பற்றி உபதேசம் செய்யக்கூடாதென்று
நாங்கள் உங்களுக்குக் கண்டிப்பாய்க்
கட்டளையிட்டோமே. அப்படியிருந்தும்,
உங்கள் உபதேசத்தினால் எருசலேமை
நிரப்பிவிட்டீர்கள். அந்த மனுஷனின்
இரத்தப் பழியை எங்கள்மேல் சுமத்த
வேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்
னான். அதைக் கேட்ட பேதுருவும் மற்ற 29
அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்
படிவதைப்பார்க்கிலும் கடவுளுக்கே கீழ்ப்
படிவது அவசியம். நீங்கள் மரத்திலே 30
தொங்கவைத்துக் கொலைசெய்த இயேசுவை
நம் பிதாக்களின் கடவுள் எழுப்பி, இஸ்ர 31
வேலுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்
னிப்பையும் அருளும்படி, அவரை அதிபதி
யாகவும் இரட்சகராகவும் தமது வலதுகரத்
தினால் உயர்த்தினார். இந்தச் சங்கதிகளுக்கு 32
நாங்கள் சாட்சிகள்; கடவுள் தமக்குக் கீழ்ப்
படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த
ஆவியும் சாட்சி என்றார்கள்.

அதை அவர்கள் கேட்டபொழுது, மிக 33
வும் மூர்க்கங்கொண்டு அவர்களைக் கொன்று
போட விரும்பினார்கள். ஆலோசனைச் சங் 34
கத்தில் கமாலியேல் என்னும் பரிசேயன்
ஒருவன் இருந்தான். இவன் சகல ஜனங்
களாலும் மதிக்கப்பெற்ற நியாயசாஸ்திரி.
இவன் எழுந்து, அந்த மனுஷரைச் சிறிது
நேரம் வெளியே கொண்டுபோகச் சொல்லி, |
சங்கத்தாரைப் பார்த்து: இஸ்ரவேலரே, 35
இந்த மனுஷர் விஷயத்தில் நீங்கள் செய்யப்
போகிறதைக்குறித்து எச்சரிக்கையா
யிருங்கள். இந்நாட்களுக்கு முன்னே 36
தெயுதாஸ் தோன்றி, தன்னை ஒரு பெரியவ
னாகப் பாராட்டினான்; ஏறக்குறைய நானூறு
பேர் அவனோடு சேர்ந்தார்கள்; அவன்
கொலையுண்டான், அவனை நம்பின அனைவ
ரும் சிதறுண்டு அவமானார்கள். அவனுக் 37
குப் பின்பு, ஜனத்தொகை பதிவுசெய்த நாட்
களில், கலிலேயன் யூதாஸ் தோன்றி, தன்
னைப் பின்பற்ற அநேக ஜனங்களை இழுத்
தான்; அவனும் அழிந்தான்; அவனை நம்பி
யிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள்.
இப்பொழுதும் நான் உங்களுக்குச் சொல்லு 38
கிறேன், இந்த மனுஷருக்கு ஒன்றும் செய்ய
வேண்டாம், இவர்களை விட்டுவிடுங்கள்.
இந்த யோசனையாவது இந்தக் காரியமாவது
மனுஷராலுண்டாயிருந்தால் ஒழிந்துபோம்;
கடவுளாலுண்டாயிருந்தாலோ அதை 39
ஒழித்துவிட உங்களால் முடியாது; நீங்கள்
கடவுளோடு போர்செய்கிறவர்களாகவும்
காணப்படக்கூடுமே என்றான். அவர்கள் 40
அவன் யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்
தலரை அழைத்து, அவர்களை அடித்து,

இயேசுவின் நாமத்தைப்பற்றிப் பேசக்கூடா
தென்று கட்டளையிட்டு அவர்களை விடுதலை
41 செய்தார்கள். அவர்கள் ஆலோசனைச் சங்
கத்தைவிட்டுப்போய், அந்த நாமத்துக்காகத்
தாங்கள் அவமானமடையப் பாத்திரராய்
எண்ணப்பட்டபடியால் மனமகிழ்ந்தார்கள்.
42 தேவாலயத்திலும் வீடுகளிலும் நாள்தோ
றும் இடைவிடாமல் உபதேசம் செய்து,
இயேசுவே கிறிஸ்து என்ற நற்செய்தியைப்
பிரசங்கித்து வந்தார்கள்.

6 அந்நாட்களில் சீஷர் தொகை பெருகின
போது, கிரேக்க யூதர் தங்கள் விதவைகள்
அன்றாடகப் பராமரிப்பில் சரியாய்க்
கவனிக்கப்படவில்லையென்று, எபிரேய
யூதருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.
2 அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்
டத்தை வரவழைத்து: நாங்கள் கடவுளின்
வார்த்தையைப் போதிப்பதை விட்டு, பந்தி
விசாரணையிலே இருப்பது தகுதியல்ல.
3 ஆதலால், சகோதரரே, உங்களில் பரிசுத்த
ஆவியும் ஞானமும் நிறைந்து நல்லவர்க
ளென்று மதிப்புப் பெற்றிருக்கிற ஏழு
பேரைத் தெரிந்தெடுங்கள்; அவர்களை இந்த
4 வேலைக்கு ஏற்படுத்துவோம்; நாங்களோ
ஜெபத்திலும் திருவசனத்தின் ஊழியத்திலும்
5 தரித்திருப்போம் என்றார்கள். அவர்கள்
சொன்னது கூட்டத்தாரனைவருக்கும்
பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாச
மும் பரிசுத்த ஆவியும் நிறைந்தவனாகிய
ஸ்தேவான், பிலிப்பு, பிரொகோரு, நிக்கா
னோர், தீமோன், பர்மெனா, யூதமார்க்கத்தில்
சேர்ந்த அந்தியோகியா பட்டணத்தானாகிய
நிக்கொலா என்ற இவர்களைத் தெரிந்
6 தெடுத்து, அப்போஸ்தலர்முன் நிறுத்தி
னார்கள். அவர்கள் ஜெபஞ்செய்து, இவர்கள்
மேல் கைகளை வைத்தார்கள்.
7 கடவுளின் வசனம் விருத்தியடைந்தது;
சீஷர் தொகை எருசலேமில் மிகவும் பெரு
கிற்று; ஆசாரியரிலும் அநேகர் விசுவாசத்
துக்குக் கீழ்ப்படிந்துவந்தார்கள்.
8 ஸ்தேவான் கிருபையும் வல்லமையும்
நிறைந்தவனாய் ஜனங்களுக்குள் அற்புதங்
களையும் பெரிய அடையாளங்களையும்
9 செய்துவந்தான். அப்பொழுது லிபர்த்தீனர்,
சிரேனே பட்டணத்தார், அலெக்சந்திரியா
பட்டணத்தார், சிலிசியா நாட்டார், ஆசியா
நாட்டாராகிய இவர்களின் ஜெபாலயங்களைச்
சேர்ந்தவர்களில் சிலர் கிளம்பி ஸ்தேவா
10 னோடு தர்க்கம்பண்ணினார்கள். அவன்
பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்து
11 நிற்க அவர்களால் முடியவில்லை. ஆகவே,
மோசேக்கும் கடவுளுக்கும் விரோதமாக
இவன் தூஷணவார்த்தைகளைப் பேசக் கேட்
டோம் என்று சொல்லும்படி மனுஷரை ஏற்
படுத்தி, ஜனங்களையும் மூப்பரையும் வேதபார 12
கரையும் கிளப்பி விட்டு, வந்து, அவனைப்
பிடித்து, ஆலோசனைச் சங்கத்துக்கு இழுத்
துக்கொண்டுபோய், பொய்ச்சாட்சிகளை
நிறுத்தினார்கள். இவர்கள்: இந்த மனுஷன் 13
பரிசுத்த ஸ்தலத்துக்கும் நியாயப்பிரமாணத்
துக்கும் விரோதமாய் ஓயாமல் பேசுகிறான்;
அந்த நசரேயனாகிய இயேசு இந்த ஸ்தலத்தை 14
அழித்துவிட்டு, மோசே நமக்கு ஒப்புவித்த
முறைமைகளை மாற்றுவானென்று இவன்
சொல்லக்கேட்டோம் என்றார்கள். ஆலோச 15
னைச்சங்கத்தில் உட்கார்ந்திருந்த அனைவரும்
அவனைக்கூர்ந்துபார்த்தபோது, அவன் முகம்
தேவதூதன் முகம்போலிருக்கக் கண்
டார்கள்.

பிரதான ஆசாரியன்: காரியம் இப்படித் 7
தானா என்று அவனைக் கேட்க, அவன்: 2
சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள். நம்
முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரில்
குடியேறுகிறதற்குமுன், மெசொப்பொத்தா
மியா நாட்டிலிருக்கும்போது, மகிமையின்
கடவுள் அவனுக்குத் தரிசனமாகி: உன் 3
தேசத்தையும் உன் இனத்தையும் விட்டு நீ
புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும்
தேசத்துக்கு வா என்றார். அப்படியே 4
அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்
பட்டு, காரானூரில் வந்து குடியேறினான்.
அவன் தகப்பன் மரித்தபின் அவ்விடத்தை
விட்டு, இப்பொழுது நீங்கள் குடியிருக்கிற
இத்தேசத்தில் அவனைக் கடவுள் குடியேற்றி
னார். இதில் ஒரு அடி நிலத்தையாகிலும் 5
அவர் அவனுக்குச் சுதந்தரமாகக் கொடா
மல், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்
போதே: உனக்கும் உனக்குப் பின்வரும்
உன் சந்ததிக்கும் இதைக் காணியாட்சியா
கத் தருவேன் என்று வாக்குக் கொடுத்தார்.
அன்றியும், அவன் சந்ததியார் அந்நிய 6
தேசத்தில் பரதேசிகளாயிருப்பார்களென்
றும், அத்தேசத்தார் அவர்களை அடிமைக
ளாக்கி நானூறு வருஷம் துன்பப்படுத்து
வார்களென்றும் கடவுள் அவனிடம்
சொல்லி, அவர்கள் அடிமைகளாய்ச் சேவிக் 7
கும் ஜனத்துக்கு நானே தீர்ப்பிடுவேன்;
அதன்பின் அவர்கள் புறப்பட்டுவந்து இவ்
விடத்திலே எனக்கு ஆராதனை செய்வார்கள்
என்று உரைத்தார். விருத்தசேதன உடன் 8
படிக்கையையும் அவனுக்கு ஏற்படுத்தினார்.
அந்தப்படியே அவன் ஈசாக்கைப் பெற்று,

எட்டாம் நாளில் அவனுக்கு விருத்தசேத
னஞ்செய்தான். ஈசாக்கு யாக்கோபையும்
யாக்கோபு பன்னிரு கோத்திரப்பிதாக்களையும்
9 பெற்றார்கள். கோத்திரப்பிதாக்கள்
பொறாமைகொண்டு யோசேப்பை எகிப்துக்
குக் கொண்டுபோகும்படி விற்றுப்போட்
டார்கள்; கடவுளோ அவனோடிருந்து,
10 சகல உபத்திரவங்களினின்றும் அவனை
விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன்
சமுகத்தில் அவனுக்குக் கிருபையையும்
ஞானத்தையும் அருளினார்; பார்வோன்
அவனை எகிப்து தேசத்திற்கும் தன் வீட்டைத்
திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினான்.
11 பின்பு எகிப்து முழுவதிலும் கானான் தேசத்
திலும் பஞ்சமும் மிகுந்த கஷ்டமும் உண்
டாகவே, நம்முடைய பிதாக்களுக்கு ஆகா
12 ரம் கிடையாமற்போயிற்று. அப்பொழுது
எகிப்திலே தானியம் உண்டென்று யாக்
கோபு கேள்விப்பட்டு, நம்முடைய பிதாக்
13 களை முதலாந்தரம் அனுப்பினான். இரண்
டாந்தரம் தன் சகோதரர் சென்றபோது
யோசேப்பு அவர்களுக்குத் தன்னைத் தெரியப்
படுத்தினான். யோசேப்பின் வம்சம் பார்வோ
14 னுக்குத் தெரியவந்தது. யோசேப்பு தன்
தகப்பன் யாக்கோபையும் அவன் குடும்பத்
தார் அனைவரையும் அழைத்துவரச் சொல்லி
யனுப்பினான். அவர்கள் எழுபத்தைந்து
15 பேர். அந்தப்படி யாக்கோபு எகிப்துக்குப்
போனான். அவனும் நம்முடைய பிதாக்
16 களும் மரித்து, அங்கேயிருந்து சீகேமுக்
குக் கொண்டுவரப்பட்டு, கல்லறையில்
வைக்கப்பட்டார்கள்; சீகேமில் ஏமோரின்
சந்ததியாரிடம் ஆபிரகாம் கிரயங்கொடுத்து
17 வாங்கின கல்லறை அது. கடவுள் ஆபிரகா
முக்கு அருளின வாக்குத்தத்தம் நிறை
வேறும் காலம் சமீபித்தபோது, நமது
ஜனம் எகிப்தில் பலுகிப் பெருகியிருந்தது.
18 அப்பொழுது யோசேப்பை அறியாத வேறு
ராஜன் எகிப்திலே ஆளத் தொடங்கினான்.
19 இவன் நம்முடைய வம்சத்தாரைச் சர்ப்பனை
யாய் நடத்தி, அவர்கள் குழந்தைகள்
உயிரோடிராதபடி அவைகளை வெளியே
போட்டுவிடச்செய்து, நம்முடைய பிதாக்
களைத் துன்பப்படுத்தினான்.
20 அக்காலத்திலே மோசே பிறந்தான்;
அவன் திவ்விய சவுந்தரியமுள்ளவன்;
மூன்று மாதமளவும் தன் தகப்பன் வீட்டி
21 லேயே வளர்க்கப்பட்டான். அவனை
வெளியே போட்டுவிட்டபோது, பார்வோ
னுடைய குமாரத்தி அவனை எடுத்து, தனக்
22 குப் பிள்ளையாக வளர்த்தாள். எகிப்தி
யரின் சகல ஞானத்தையும் மோசே கற்றுக்
கொண்டு, வாக்கிலும் செய்கையிலும்
வல்லவனானான். அவனுக்கு நாற்பது வய 23
தாகையில், இஸ்ரவேல் புத்திரராகிய தன்
சகோதரரைச் சந்திக்கவேண்டுமென்று
அவன் மனத்தில் எண்ணமுண்டாயிற்று.
அப்பொழுது அவர்களில் ஒருவன் அநியாய 24
மாய் நடத்தப்படுகிறதை அவன் கண்டு,
அவனுக்குத் துணைநின்று, எகிப்தியனை
வெட்டி, துன்பப்பட்டவனுக்காகப் பழி
வாங்கினான். தன் கையினால் கடவுள் தங்க 25
ளுக்கு இரட்சிப்பைத் தந்தருளுகிறாரென்ப
தைத் தன் சகோதரர் அறிந்துகொள்வார்க
ளென்று அவன் நினைத்தான்; அவர்களோ
அதை உணர்ந்துகொள்ளவில்லை. மறு 26
நாளிலே அவர்கள் சண்டை செய்துகொண்
டிருக்க, அவன் எதிர்ப்பட்டு: மனுஷரே,
நீங்கள் சகோதரர், ஒருவருக்கொருவர் ஏன்
அநியாயஞ்செய்கிறீர்களென்று சொல்லிச்
சமாதானம்பண்ணப் பார்த்தான். அயலா 27
னுக்கு அநியாயஞ்செய்தவன் அவனைத்
தள்ளி: எங்கள்மேல் அதிகாரியாகவும் நியா
யாதிபதியாகவும் உன்னை ஏற்படுத்தினவன்
யார்? நேற்று நீ எகிப்தியனைக் கொன்றது 28
போல என்னையும் கொல்லப் பார்க்கிறாயோ
என்றான். மோசே இந்த வார்த்தையைக் 29
கேட்டு ஓடிப்போய், மீதியான் தேசத்தில் சஞ்
சரித்துக்கொண்டிருந்தான்; அங்கே அவ
னுக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள். பின் 30
னும் நாற்பது வருஷம் நிறைவேறவே, சீனாய்
மலையின் வனாந்தரத்தில் முட்செடி எரிகிற
அக்கினி ஜுவாலையில் தேவதூதன் அவ
னுக்குத் தரிசனமானான். மோசே அந்தக் 31
காட்சியைக் கண்டு அதிசயப்பட்டான்;
அதை உற்றுப்பார்க்கும்படி அவன் சமீ
பித்து வருகையில்: நான் உன் பிதாக்களின் 32
கடவுள், ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு
என்பவர்களின் கடவுள் என்று கர்த்தர் திரு
வுளம்பற்றின சத்தம் பிறந்தது. மோசே
நடுக்கங்கொண்டு உற்றுப்பார்க்கத் துணிய
வில்லை. கர்த்தர்: உன் கால்களிலிருக்கிற 33
பாதரட்சைகளைக் கழற்றிவிடு; நீ நிற்கிற
இடம் பரிசுத்த பூமி. எகிப்திலிருக்கிற 34
என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்
கவே பார்த்தேன், அவர்கள் பெருமூச்சைக்
கேட்டேன், அவர்களை விடுவிக்கும்படி
இறங்கிவந்தேன்; இப்போது, நீ வா, நான்
உன்னை எகிப்திற்கு அனுப்புவேன் என்று
அவனுக்குச் சொன்னார். உன்னை அதிகாரி 35
யாகவும் நியாயாதிபதியாகவும் ஏற்படுத்தின
வன் யாரென்று சொல்லி அவர்கள் மறுத்து
விட்ட இந்த மோசேயையே, முட்செடியில்
அவனுக்குத் தரிசனமான தூதனைக்

கொண்டு, கடவுள் தலைவனாகவும் மீட்பனாக
36 வும் அனுப்பினார். இவன் எகிப்து தேசத்
திலும் சிவந்த சமுத்திரதித்லும் வனாந்தரத்தி
லும் நாற்பது வருஷ காலமாய் அற்புதங்
களையும் அடையாளங்களையும் செய்து அவர்
37 களை அழைத்துக்கொண்டுவந்தான். என்
னைப் போன்ற ஒரு தீர்க்கதரிசியை உங்கள்
சகோதரரிலிருந்து கடவுள் உங்களுக்காக
எழும்பப்பண்ணுவாரென்று இஸ்ரவேல் புத்
திரரிடம் சொன்னவன் இந்த மோசேயே.
38 சீனாய் மலையில் தன்னிடம் பேசின தூத
னோடும் நம் பிதாக்களோடும் வனாந்தரத்துச்
சபையில் இருந்தவனும், நமக்குக் கொடுக்
கும்படி ஜீவனுள்ள வாக்கியங்களைப் பெற்ற
39 வனும் இவனே. நம்முடைய பிதாக்களோ
இவனுக்குக் கீழ்ப்படிய மனமற்று, இவ
னைத் தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில்
40 எகிப்தையே நினைத்தவர்களாய், ஆரோ
னைப் பார்த்து: எங்களுக்கு முன் செல்லும்
தெய்வங்களை எங்களுக்கு உண்டாக்கும்,
எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்து
வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்
41 ததோ தெரியவில்லை என்று சொல்லி, அந்
நாட்களில் ஒரு கன்றுக்குட்டியைச் செய்து,
அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள்
கைகள் உண்டாக்கினவைகளில் களிகூர்ந்
42 தார்கள். ஆகவே கடவுள் அவர்களை விட்டு
விலகி, வானத்தின் சேனையை வணங்கும்படி
அவர்களை ஒப்புக்கொடுத்தார்.

இஸ்ரவேல் வம்சத்தாரே,
வனாந்தரத்தில் நாற்பது வருஷகாலமாய்
யாகங்களையும் பலிகளையும்
எனக்குச் செலுத்தினீர்களோ?
43 மோளோகினுடைய கூடாரத்தையும்
ரொம்பாதேவனின் நட்சத்திரத்தையும்
சுமந்தீர்கள்;
இவைகளே பணிந்துகொள்ளும்படி
நீங்கள் செய்துகொண்ட உருவங்கள்.
ஆகையால் உங்களைப் பாபிலோனுக்
கப்பால் குடிபெயரச் செய்வேன்

என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதி
யிருக்கிறது இதுவே.
44 நீ பார்த்த மாதிரியின்படியே அதைச்
செய்யவேண்டுமென்று மோசேயோடு பேசி
னவர் கட்டளையிட்ட பிரகாரம் சாட்சியக்
கூடாரம் வனாந்தரத்தில் நம் பிதாக்களுக்கு
45 இருந்தது. நம்முடைய பிதாக்கள் அதை
முறை முறையாய்ப் பெற்று, கடவுள் அவர்
களுக்கு முன்பாகத் துரத்திவிட்.ட புறஜாதி
களின் காணியாட்சிக்குள் யோசுவாவோடு
கூட அதைக்கொண்டுவந்து, தாவீதின் நாள்
46 வரைக்கும் வைத்திருந்தார்கள் இவன் கட
வுளிடம் தயவு பெற்றவனாய், யாக்கோ
பின் வீட்டாருக்காக ஒரு ஆலயத்தைத்
தான் ஏற்படுத்தவேண்டுமென்று விண்ணப்
பஞ்செய்தான். சாலொமோனோ அவருக்கு 47
ஒரு வாசஸ்தலத்தைக் கட்டினான். ஆகி 48
லும், கைகளினால் செய்யப்பட்டவைகளில்
உன்னதமானவர் வசிப்பதில்லை.

வானம் என் சிங்காசனம், 49
பூமி என் பாதபடி,
எப்படிப்பட்ட வீட்டை நீங்கள் எனக்
குக் கட்டுவீர்கள்?
நான் இளைப்பாறும் ஸ்தலம் எது?
இவைகள் யாவற்றையும் என் கரம் 50
உண்டாக்கவில்லையா
என்று கர்த்தர் உரைக்கிறார்

என்று தீர்க்கதரிசி சொன்னது அதுவே.
வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருத 51
யத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம்
பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைப்போல
நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும்
எதிர்த்து நிற்கிறீர்கள். தீர்க்கதரிசிகளில் 52
யாரை உங்கள் பிதாக்கள் துன்பப்படுத்தாம
லிருந்தார்கள்? நீதிபரரின் வருகையை முன்
னறிவித்தவர்களை அவர்கள் கொலைசெய்
தார்கள். இப்பொழுது நீங்கள் அந்த நீதிப
ரைக் காட்டிக்கொடுத்தவர்களும் அவரைக்
கொலைசெய்தவர்களுமானீர்கள். தேவதூதர் 53
மூலமாய் நியாயப்பிரமாணத்தைப் பெற்றும்
கைக்கொள்ளாமற்போனீர்கள் என்று சொன்
னான்.
இவைகளைக் கேட்கவே, அவர்கள் தங்கள் 54
இருதயங்களில் மூர்க்கங்கொண்டு அவனைப்
பார்த்துப் பல்லைக் கடித்தார்கள். அவன் 55
பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய்
வானத்தை அண்ணாந்துபார்த்து, கடவுளு
டைய மகிமையையும் கடவுளின் வலது
பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும்
கண்டு: அதோ, வானங்கள் திறந்திருக்கிற 56
தையும், மனுஷ குமாரன் கடவுளின் வலது
பாரிசத்தில் நிற்கிறதையும் பார்க்கிறேன்
என்றான். அவர்களோ உரத்த சத்தமாய்க் 57
கூக்குரலிட்டு, தங்கள் காதுகளை அடைத்துக்
கொண்டு, ஏகமனமாய் அவன்மேல் பாய்ந்து,
அவனை நகரத்துக்கு வெளியே தள்ளிக் கல் 58
லெறிந்தார்கள். சவுல் என்னும் ஒரு
வாலிபன் பாதத்தருகே சாட்சிகள் தங்கள்
வஸ்திரங்களை வைத்தார்கள். அப்பொழுது: 59
ஆண்டவராகிய இயேசுவே, என் ஆவியை
ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் ஜெபிக்
கையில் அவனைக் கல்லெறிந்தார்கள்.
அவனோ முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, 60
இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தா

திரும் என்று மிகுந்த சத்தமிட்டு வேண்டி
னான். இதைச்சொல்லி நித்திரையடைந்
தான்.

8 அவன் கொலைக்குச் சவுலும் உடன்பட்
டிருந்தான்.

அந்நாளில் எருசலேம் சபைக்கு மிகுந்த
துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்
தவிர மற்ற யாவரும் யூதேயா சமாரியா நாடு
2 களில் சிதறுண்டுபோனார்கள். பக்தியுள்ள
மனுஷர் ஸ்தேவானை அடக்கம்பண்ணி அவ
னுக்காக மிகவும் துக்கங் கொண்டாடி
3 னார்கள். சவுலோ வீடுதோறும் நுழைந்து,
புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துப்
போய்க் காவலில் போடுவித்து, சபையைப்
பாழாக்கிவந்தான்.
4 சிதறுண்டவர்கள் நற்செய்தி வசனத்
5 தைப் பிரசங்கித்துத் திரிந்தார்கள். பிலிப்பு
சமாரியாவின் பட்டணத்திற்குப் போய், அங்
குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைப் பிரசங்
6 கித்தான். பிலிப்பு சொன்னவைகளை
ஜனங்கள் கேட்டு, அவன் செய்துவந்த
அடையாளங்களைக் கண்டு, அவன் சொன்ன
வைகளை ஏகமனமாய்க் கவனித்துவந்தார்கள்.
7 அசுத்த ஆவிகள் பிடித்த அநேகரிலிருந்து
அவைகள் மிகுந்த சத்தமிட்டு வெளிப்
பட்டன. அநேக திமிர்வாதக்காரரும் சப்
8 பாணிகளும் சொஸ்தமானார்கள். அந்தப்
பட்டணத்தில் மிகுந்த சந்தோஷம் உண்
டாயிற்று.
9 சீமோன் என்னும் ஒரு மனுஷனிருந்
தான். அவன், முன்னே அந்தப் பட்ட
ணத்தில் மந்திரவித்தைக்காரனாய், தன்னை
ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா
ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணிக்கொண்
10 டிருந்தவன். மகத்து என்னும் தெய்வ
சக்தி இவனே என்று சொல்லி, சிறியவன்
முதல் பெரியவன் வரைக்கும் எல்லாரும்
அவனைப் பற்றிக்கொண்டிருந்தார்கள்.
11 அவன் வெகு காலமாய்த் தன் மந்திரவித்
தைகளைக்கொண்டு அவர்களைப் பிரமிக்கப்
பண்ணினதினால் அவனைப் பற்றிக்கொண்
12 டிருந்தார்கள். கடவுள் ராஜ்யத்தையும்
இயேசுகிறிஸ்துவின் நாமத்தையும் குறித்த
நற்செய்தியைப் பிரசங்கித்த பிலிப்புவை
அவர்கள் நம்பினபோது, புருஷரும் ஸ்திரீ
13 களும் ஞானஸ்நானம் பெற்றார்கள். சீமோ
னும் நம்பி ஞானஸ்நானம்பெற்று, பிலிப்பு
வண்டையிலே தரித்திருந்து, அடையாளங்
களும் மகத்தான வல்ல செயல்களும் நடக்
கிறதைக் கண்டு பிரமித்தான்.
14 சமாரியர் கடவுளின் வார்த்தையை ஏற்
றுக்கொண்டதை எருசலேமிலிருந்த அப்
போஸ்தலர் கேள்விப்பட்டு, பேதுருவையும்
யோவானையும் அவர்களிடம் அனுப்பி
னார்கள். இவர்கள் வந்தபொழுது, அவர்கள் 15
பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி
அவர்களுக்காக ஜெபம்பண்ணினார்கள்.
அதுவரைக்கும் அவர்களில் ஒருவர்மேலும் 16
ஆவி இறங்கவில்லை. ஆண்டவராகிய இயேசு
வின் நாமத்திற்குள்ளாக அவர்கள் ஞானஸ்
நானம் மாத்திரம் பெற்றிருந்தார்கள். அப் 17
போஸ்தலர் அவர்கள்மேல் கைகளை
வைக்கவே, அவர்கள் பரிசுத்த ஆவியைப்
பெற்றார்கள். அப்போஸ்தலர் கைகளை வைப் 18
பதினால் ஆவி அருளப்படுகிறதைச் சீமோன்
கண்டபோது, அவர்களிடம் பணங்கொண்டு
வந்து: நான் எவன்மேல் என் கைகளை 19
வைக்கிறேனோ அவன் பரிசுத்த ஆவியைப்
பெறும்படி எனக்கும் இந்த அதிகாரத்தைக்
கொடுங்கள் என்று கேட்டான். பேதுரு 20
அவனைப் பார்த்து: கடவுளின் வரத்தைப்
பணத்தினால் வாங்கிக்கொள்ளலாமென்று நீ
நினைத்தபடியால் உன் பணம் உன்னோடு
நாசமாகக்கடவது. உன் இருதயம் கடவுள் 21
முன் நேர்மையாயிராதபடியால் இந்தக் காரி
யத்தில் உனக்குப் பங்குமில்லை பாகமு
மில்லை. ஆகவே, நீ உன் துர்க்குணத்தை 22
விட்டு மனந்திரும்பி, ஆண்டவரை நோக்கி
வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்
தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்பட
லாம். நீ கசப்பான பிச்சிலும் பாவ பந்தத் 23
திலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன்
என்றான். சீமோன் அதைக் கேட்டு: நீங்கள் 24
சொன்னவைகளில் ஒன்றும் எனக்கு நேரி
டாதபடி நீங்களே எனக்காக ஆண்டவரை
வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்.

அவர்கள் ஆண்டவரின் வார்த்தையை 25
வற்புறுத்திக் கூறி அறிவித்து, அநேக
சமாரிய கிராமங்களில் நற்செய்தியைப்
பிரசங்கித்து, எருசலேமுக்குத் திரும்பிவந்
தார்கள்.

பின்பு ஆண்டவரின் தூதன் பிலிப்புவி 26
னிடம்: நீ எழுந்து தெற்கே சென்று,
பாழாய்க்கிடக்கிற காத்சாவுக்கு எருசலேமி
லிருந்து செல்லுகிற வழியாய்ப் போ என்
றான்; அப்படியே அவன் எழுந்து போனான்.
எத்தியோப்பியன் ஒருவன் அவ்வழியாய்ப் 27
போய்க்கொண்டிருந்தான். இவன் எத்தி
யோப்பிய அரசி கந்தாகே என்பவளிடம்
அதிகாரம் வகித்திருந்த ஓர் அண்ணகன்,
அவள் பொக்கிஷம் அனைத்திற்கும் தலைவன்.
ஆராதிக்கும்படி இவன் எருசலேமுக்குப்
போயிருந்து, ஊருக்குத் திரும்பிப் போகை 28

யில், இரதத்தில் உட்கார்ந்து, ஏசாயா
தீர்க்கதரிசனம் வாசித்துக்கொண்டிருந்
29 தான். நீ போய் அந்த இரதத்தோடு சேர்ந்து
கொள் என்று ஆவியானவர் பிலிப்புவுக்குச்
30 சொல்லவே, பிலிப்பு ஓடிப்போய்ச் சேர்ந்
தான். ஏசாயா தீர்க்கதரிசனத்தை அவன்
வாசிக்கிறதைக் கேட்டு: நீர் வாசிக்கிறது
31 உமக்கு விளங்குகிறதா என்ருன். அதற்கு
அவன்: ஒருவன் எனக்கு வழிகாட்டினு
லன்றி அது எப்படி விளங்குமென்று
சொல்லி, பிலிப்பு ஏறித் தன்னேடு உட்
32 காரும்படி கேட்டுக்கொண்டான். அவன்
வாசித்துக்கொண்டிருந்த வேதபாகம்:

அவர் ஒரு ஆட்டைப்போல
அடிக்கப்படுவதற்குக் கொண்டுபோகப்
பட்டார்,
மயிர் கத்திரிக்கிறவன்முன் ஓர் ஆட்டுக்
குட்டி சத்தமிடாதிருக்கிறதுபோல,
அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.
33 அவருடைய தாழ்வில்
அவர் தீர்ப்பு எடுபட்டுப்போயிற்று;
அவர் சந்ததியை யாராலே விவரித்துச்
சொல்லிமுடியும்?
பூமியினின்று அவர் ஜீவன் எடுத்துக்
கொள்ளப்படுகிறதே

34 என்பது. அண்ணகன் பிலிப்புவைப்
பார்த்து: தீர்க்கதரிசி இதை யாரைக்குறித்
துச் சொல்லுகிருர்? தம்மைக் குறித்தோ
வேருருவரைக் குறித்தோ? எனக்குச்
சொல்லும்படி உம்மை வேண்டிக்கொள்ளு
35 கிறேன் என்ருன். அப்பொழுது பிலிப்பு
தன் வாயைத் திறந்து, இந்த வேதவாக்கியத்தி
லிருந்து தொடங்கி, இயேசுவைப்பற்றிய
நற்செய்தியை அவனுக்குப் பிரசங்கித்தான்.
36, அவர்கள் வழியே போய்க்கொண்டிருக்கை
37 யில் தண்ணீர் இருந்த ஓரிடத்திற்கு வந்
தார்கள். வரவே, அண்ணகன்: இதோ
தண்ணீர், நான் ஞானஸ்நானம் பெறத் தடை
38 யென்ன என்ருன். இரதத்தை நிறுத்த
அவன் கட்டளையிடவே, பிலிப்புவும் அண்
ணகனும் தண்ணீரில் இறங்கினுர்கள்;
பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்
39 தான். அவர்கள் தண்ணீரிலிருந்து ஏறின
பொழுது, ஆண்டவரின் ஆவி பிலிப்புவைச்
சடிதியில் கொண்டுபோய்விட்டார். அண்
ணகன் சந்தோஷம் நிறைந்தவனுய்த் தன்
வழியே போனபடியால், அப்புறம் அவனைக்
40 காணவில்லை. பிலிப்பு ஆசோத்தில் காணப்
பட்டான்; அவன் செசரியாவுக்கு வரும்
வரையில் சகல ஊர்களிலும் சுற்றித்திரிந்து,
நற்செய்தியைப் பிரசங்கித்துவந்தான்.

சவுல் மூர்க்கங்கொண்டவனுய் ஆண்டவ 9
ரின் சீஷரைப் பயமுறுத்தவும் கொலைசெய்
யவும் எத்தனித்து, பிரதான ஆசாரியரிடம்
போய், இந்த மார்க்கத்தாரில் யாரையாவது 2
தான் கண்டுபிடித்தால், அவர்கள் புருஷ
ராஞலும் ஸ்திரீகளாஞலும், அவர்களைக்
கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி,
தமஸ்குவிலிருந்த ஜெபாலயங்களுக்குக் கடி
தங்களைக் கேட்டு வாங்கினுன். அவன் பிர 3
யாணஞ்செய்து தமஸ்குவைச் சமீபித்த
போது, சடிதியில் வானத்திலிருந்து ஒரு
வெளிச்சம் அவனைச் சுற்றிப் பிரகாசித்தது;
அவன் தரையிலே விழுந்தான். விழவே, 4
சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்
படுத்துகிருய் என்று தன்னிடம் சொல்லு
கிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு 5
அவன்: ஆண்டவரே, நீர் யார் என்று
கேட்க, அவர்: நீ துன்பப்படுத்துகிற
இயேசுவே நான்; இப்பொழுது நீ எழுந்து, 6
பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்
டியது இன்னதென்று அங்கே உனக்குச்
சொல்லப்படும் என்ருர். அவனேடு பிரயா 7
ணஞ்செய்த மனுஷர் அந்தச் சத்தத்தைக்
கேட்டும், ஒருவரையும் காணுமல் பேச்சற்று
நின்றுவிட்டார்கள். சவுல் தரையிலிருந்து 8
எழுந்தான்; கண்களைத் திறந்தபோது ஒன்றும்
தெரியவில்லை. அப்பொழுது கைலாகு
கொடுத்து அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக்
கொண்டுபோனுர்கள். அவன் மூன்று நாளள 9
வும் பார்வையற்று, அன்னபானம் ஒன்றும்
இல்லாதிருந்தான்.

தமஸ்குவில் அனனியா என்னும் ஒரு 10
சீஷன் இருந்தான். அவனுக்கு ஆண்டவர்
தரிசனமாகி: அனனியாவே என்று கூப்பிட,
அவன்: ஆண்டவரே, இதோ அடியேன்
என்ருன். அப்பொழுது ஆண்டவர்: நீ 11
எழுந்து நேர்தெரு என்னும் தெருவுக்குப்
போய், யூதாவின் வீட்டில் சவுல் என்னும்
தர்சுப் பட்டணத்தான் ஒருவனைத் தேடு;
அவன் ஜெபஞ்செய்துகொண்டிருக்கிருன்;
அனனியா என்னும் ஒருவன் தன்னிடம் 12
வரவும், தான் பார்வை பெறும்படி தன்மேல்
கைகளை வைக்கவும் தரிசனங்கண்டிருக்
கிருன் என்ருர். அதற்கு அனனியா: 13
ஆண்டவரே, இந்த மனுஷன் உம்முடைய
பரிசுத்தவான்களுக்கு எருசலேமில் எத்த
னையோ பொல்லாங்குகளைச் செய்தானென்று
அவனைக்குறித்துப் பலர் சொல்லக் கேட்
டிருக்கிறேன். இங்கேயும் உமது நாமத் 14
தைத் தொழுதுகொள்ளுகிற யாவரையும்
கட்டுவதற்கு அவன் பிரதான ஆசாரியரிட
மிருந்து அதிகாரம் பெற்று வந்திருக்கிருனே

15 என்றான். அதற்கு ஆண்டவர்: நீ போ; புற
ஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல்
புத்திரருக்கும் என் நாமத்தைச் சுமந்து
கொண்டு போவதற்கு அவன் நான் தெரிந்
16 தெடுத்த பாத்திரம். என் நாமத்தினிமித்தம்
அவன் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டு
மென்பதை நான் அவனுக்குக் காண்பிப்
17 பேன் என்றார். அனனியா போய், அந்த
வீட்டிற்குட் சென்று, அவன்மேல் தன்
கைகளை வைத்து: சகோதரனே, சவுலே, நீ
வந்த வழியில் உனக்குத் தரிசனமான
ஆண்டவராகிய இயேசு, நீ பார்வை பெறும்
படிக்கும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்
படிக்கும் என்னை அனுப்பினார் என்று
18 சொன்னான். உடனே அவன் கண்களி
லிருந்து செதில்கள் போன்றவை விழுந்தன;
அவன் பார்வை அடைந்து, எழுந்திருந்து,
19 ஞானஸ்நானம் பெற்றான். அதன்பின்
போஜனம்பண்ணிப் பலமடைந்தான்.
சவுல் தமஸ்குவிலுள்ள சீஷரோடு சில
20 நாள் தங்கியிருந்து, இயேசுவே தேவகுமார
னென்று தாமதமின்றி ஜெபாலயங்களில்
21 பிரசங்கித்துவந்தான். கேட்டவர்கள் அனை
வரும் பிரமித்து: இந்நாமத்தைத் தொழுது
கொள்ளுகிறவர்களை எருசலேமில் நாச
மாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக்
கட்டிப் பிரதான ஆசாரியரிடம் கொண்டு
போகும்படி, அதே நோக்கமாய் வந்தவன்
22 இவனல்லவா என்றார்கள். சவுலோ அதிக
மதிகமாய்ப் பலங்கொண்டு, இவரே கிறிஸ்து
என்று ரூபித்து, தமஸ்குவில் குடியிருக்கிற
23 யூதர் மனங்கலங்கும்படி செய்தான். வெகு
நாள் சென்றபின்பு, யூதர் அவனைக் கொன்று
போடும்படி ஆலோசனை செய்தார்கள்.
24 அவர்கள் சதியோசனை சவுலுக்குத்
தெரியவந்தது. அவனைக் கொல்லும்படி
அவர்கள் இரவும் பகலும் பட்டணத்தின்
வாசல்களைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.
25 அவன் சீஷரோ இரவிலே அவனைக்
கொண்டுபோய், ஒரு கூடையில் வைத்து
மதில்வழியாய் இறக்கிவிட்டார்கள்.
26 சவுல் எருசலேமுக்கு வந்தபோது சீஷ
ரோடு சேர்ந்துகொள்ளப் பார்த்தான்; அவர்
களோ அவனைச் சீஷனென்று நம்பாமல்,
எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள்.
27 அப்பொழுது பர்னபா அவனைச் சேர்த்துக்
கொண்டு, அப்போஸ்தலரிடம் அழைத்து
வந்து, வழியிலே அவன் ஆண்டவரைக்
கண்டதையும் அவர் அவனோடு பேசினதை
யும் தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்
தில் தைரியமாயப் பிரசங்கித்ததையும் அவர்
களுக்கு விவரித்துச் சொன்னான். அவன் 28
எருசலேமில் அவர்களிடம் வந்துபோய்க்
கொண்டிருந்து, ஆண்டவரின் நாமத்தில்
தைரியமாய்ப் பிரசங்கித்து, கிரேக்க யூத 29
ருடனே பேசி, தர்க்கித்துவந்தான்; அவர்
களோ அவனைக் கொன்றுவிடப் பிரயத்த
னம் செய்துவந்தார்கள். சகோதரர் அதை 30
அறிந்து, அவனைச் செசரியாவுக்கு அழைத்
துப்போய், தர்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள்.
யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளி 31
லெங்கும் சபை சமாதானமுற்று, பக்தியில்
தேறி, ஆண்டவருக்குப் பயப்படுகிற பயத்
தில் நடந்து, பரிசுத்த ஆவியின் சகாயத்தி
னால் பெருகிவந்தது.
பேதுரு சகல இடங்களுக்கும் போய்ச் 32
சுற்றிவருகையில் லித்தாவில் குடியிருந்த
பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான்.
அங்கே எட்டு வருஷம் படுக்கையில் கிடந்த 33
ஐனேயா என்னும் ஒருவனைக் கண்டான்;
அவன் திமிர்வாதக்காரன். பேதுரு அவனி 34
டம்: ஐனேயாவே, இயேசுகிறிஸ்து உன்னைச்
சொஸ்தமாக்குகிறார்; நீ எழுந்து, உன் படுக்
கையை நீயே போட்டுக்கொள் என்றான்.
உடனே அவன் எழுந்திருந்தான். | லித்தாவி 35
லும் சாரோனிலும் குடியிருந்தவர்கள் அனை
வரும் அவனைக் கண்டு, ஆண்டவரிடம்
திரும்பினார்கள்.
யோப்பாவில் தபீத்தாள் என்னும் சீஷி 36
ஒருத்தி இருந்தாள்; தபீத்தாள் என்பதற்குத்
[1]தொர்க்காள் என்று அர்த்தம். அவள்
நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதி
யாய்ச் செய்துவந்தவள். அந்நாட்களில் 37
அவள் வியாதிப்பட்டு மரித்தாள். அவளைக்
குளிப்பாட்டி மேல்வீட்டில் கிடத்திவைத்
தார்கள். லித்தா யோப்பாவுக்குச் சமீபம். 38
பேதுரு அங்கே இருக்கிறானென்று சீஷர்
கேள்விப்பட்டு, தாமதமின்றித் தங்களிடத்
திற்கு வரவேண்டுமென்று அவனைக்கேட்டுக்
கொள்ள இரண்டுபேரை அவனிடம்
அனுப்பினார்கள். பேதுரு எழுந்து அவர்க 39
ளோடு போனான். அவன் போய்ச் சேரவே
அவர்கள் அவனை மேல் வீட்டிற்கு அழைத்
துப்போனார்கள். விதவைகளெல்லாரும் பக்
கத்தில் நின்று, தொர்க்காள் தங்களோடிருக்
கையில் செய்திருந்த பல அங்கிகளையும்
வஸ்திரங்களையும் காண்பித்துக்கொண்டு
அழுதார்கள். பேதுரு எல்லாரையும் 40
வெளியே அனுப்பிவிட்டு, முழங்காற்படி
யிட்டு ஜெபித்தான். பின்பு பிரேதத்திற்கு

[1] பெண்மான்.

நேரே திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்
றான். அவள் தன் கண்களைத் திறந்து,
பேதுருவைக்கண்டு எழுந்து உட்கார்ந்தாள்.
41 அவன் அவள் கையைப் பிடித்து எழுந்
திருக்கச் செய்து, பரிசுத்தவான்களையும்
விதவைகளையும் கூப்பிட்டு, உயிருள்ளவ
ளாக அவளை அவர்கள் முன் நிறுத்தினான்.
42 இது யோப்பாவிலெங்கும் தெரியவந்தது;
அநேகர் ஆண்டவர்மேல் நம்பிக்கை வைத்
43 தார்கள். பின்பு அவன் யோப்பாவில் தோல்
பதனிடுகிற சீமோன் என்னும் ஒருவனிடம்
வெகுநாள் தங்கியிருந்தான்.

10 செசரியா பட்டணத்தில் கொர்நேலியு
என்னும் ஒருவன் இருந்தான். இவன் இத்
தாலியா பட்டாளமென்ற பட்டாளத்திலே
2 நூற்றுக்கதிபதி, | பக்தியுள்ளவன், தன் வீட்
டார் அனைவரோடும் கடவுளுக்குப் பயந்த
வன், ஜனங்களுக்கு அதிகத் தானதருமம்
செய்பவன், எப்பொழுதும் கடவுளை நோக்கி
3 ஜெபஞ்செய்துகொண்டிருப்பவன். ஒருநாள்
பகலில் ஏறக்குறைய ஒன்பதாம் மணிநேரம்
கடவுளின் தூதன் தன்னிடம் வரவும்,
கொர்நேலியுவே என்று தன்னை அழைக்க
வும் பிரத்தியட்சமாய்த் தரிசனம் கண்
4 டான். அவன் தூதனை உற்றுப்பார்த்துப்
பயந்து: ஆண்டவனே, என்ன என்று கேட்க,
தூதன்: உன் ஜெபங்களும் உன் தருமங்க
ளும் கடவுள் சந்நிதியில் ஞாபகார்த்தமாய்
5 வந்து எட்டியிருக்கின்றன. இப்பொழுது நீ
யோப்பாவுக்கு ஆட்களை அனுப்பி, பேதுரு
என்னும் மறுநாமமுள்ள சீமோனை
6 அழைப்பி. அவன் தோல் பதனிடுகிற
சீமோன் என்னும் ஒருவனிடம் தங்கியிருக்
கிறான்; இவன் வீடு கடலோரத்திலிருக்கிறது
7 என்று சொன்னான். தன்னோடு பேசின
தேவதூதன் போனபின்பு, அவன் தன் வீட்டு
வேலைக்காரரில் இருவரையும் தன்னண்டை
காத்து நிற்கிற போர்ச்சேவகரில் பக்தியுள்ள
8 ஒருவனையும் அழைத்து, எல்லாவற்றையும்
அவர்களுக்கு விவரித்துச் சொல்லி, யோப்
பாவுக்கு அவர்களை அனுப்பினான்.
9 மறுநாளில் அவர்கள் பிரயாணஞ்செய்து,
அந்த ஊருக்குச் சமீபமாய் வருகையில்,
பேதுரு ஜெபம்பண்ணும்படி வீட்டின்மேல்
ஏறினான்; அது ஏறக்குறைய ஆறாம் மணி
10 நேரம். அவனுக்கு அதிகப் பசி உண்டா
னது, சாப்பிட விரும்பினான். அவர்கள்
ஆயத்தம்பண்ணுகையில், அவன் பரவச
11 மாகி, வானம் திறந்திருக்கிறதாகவும்,
பெரியதுப்பட்டி போன்றதொன்று நான்கு
முனைகளிலும் பிடிபட்டதாய்ப் பூமியின்
மேல் இறங்கிவருகிறதாகவும், பூமியிலுள்ள 12
சகலவித நாலுகால் பிராணிகளும் ஊரும்
பிராணிகளும் ஆகாயத்துப் பறவைகளும்
அதில் இருக்கிறதாகவும் கண்டான்.
பேதுருவே, எழுந்திரு, அடித்துச் சாப்பிடு 13
என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம்
கேட்டது. பேதுருவோ: அப்படியல்ல, 14
ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமான
யாதொன்றையும் நான் ஒருகாலும் சாப்
பிட்டதில்லையே என்றான். அப்பொழுது: 15
கடவுள் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக
எண்ணாதே என்று இரண்டாந்தரமும் ஒரு
சத்தம் கேட்டது. மூன்று தடவை 16
இப்படி நடந்தது. உடனே அது வானத்
துக்குத் திரும்ப எடுத்துக்கொள்ளப்
பட்டது.
தான் கண்ட தரிசனம் யாதாகுமோ 17
வென்று பேதுரு தனக்குள் திகைத்துக்
கொண்டிருக்கையில், கொர்நேலியு அனுப்
பிய மனுஷர் சீமோன் வீட்டை விசாரித்துக்
கொண்டே வாசற்படியில் வந்து நின்று:
பேதுரு என்னும் மறுநாமமுள்ள சீமோன் 18
இங்கே தங்கியிருக்கிறாரா என்று கேட்
டார்கள். பேதுரு தரிசனத்தைப்பற்றிச் 19
சிந்தித்துக்கொண்டிருக்கையில், ஆவியான
வர்: இதோ, இரண்டு மனுஷர் உன்னைத்
தேடுகிறார்கள். நீ எழுந்து இறங்கி, ஒன்றுக் 20
கும் சந்தேகப்படாமல் அவர்களோடு போ;
நானே அவர்களை அனுப்பினேனென்று அவ
னுக்குச் சொன்னார். பேதுரு அந்த மனுஷ 21
ரிடம் இறங்கிப்போய்: இதோ, நீங்கள்
தேடுகிறவன் நான்தான், நீங்கள் வந்த காரி
யம் என்ன என்று கேட்க, | அவர்கள்: 22
கொர்நேலியு என்னும் நூற்றுக்கதிபதி ஒரு
வர் இருக்கிறார். அவர் நீதிமான், கடவு
ளுக்குப் பயப்படுகிறவர்; யூதஜனங்கள்
அனைவராலும் நல்லவரென்று மதிப்புப்பெற்
றவர்; உம்மைத் தமது வீட்டுக்கு அழைப்
பித்து, நீர் சொல்லும் வார்த்தைகளைக்
கேட்கவேண்டுமென்று இவர் பரிசுத்த தூத
னால் கட்டளைபெற்றார் என்றார்கள். அப் 23
பொழுது பேதுரு அவர்களை உள்ளே
அழைத்து அவர்களுக்கு உபசாரஞ்செய்
தான்.
மறுநாளில் அவன் எழுந்து அவர்க
ளோடு புறப்பட்டான்; யோப்பாவிலிருந்த
சகோதரரில் சிலரும் அவனோடு போனார்கள்.
மறுநாள் செசரியாவைச் சேர்ந்தார்கள். 24
கொர்நேலியு தன் சுற்றத்தாரையும் நெருங்
கின சிநேகிதரையும் கூட்டிவைத்து,
அவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்
டிருந்தான். பேதுரு உள்ளே வரவே, 25

கொர்நேலியு அவனுக்கு எதிர்கொண்டு
போய், அவன் பாதத்தில் விழுந்து பணிந்து
26 கொண்டான். பேதுருவோ: எழுந்திரும்,
நானும் ஒரு மனுஷன்தான் என்று
சொல்லி, அவனைத் தூக்கி எடுத்தான்.
27 அவனோடு பேசிக்கொண்டே உள்ளேபோய்
அநேகர் கூடிவந்திருக்கிறதைக் கண்டு,
28 அவர்களைப் பார்த்து: இதர ஜாதியானோடு
உறவாடுவதும் அவன் வீட்டுக்குப் போவ
தும் யூதனுக்கு அடாத காரியம் என்று
நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; ஆயினும்,
எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும்
அசுத்தனென்றும் சொல்லக்கூடாதென்று
29 கடவுள் எனக்குக் காண்பித்தார். ஆகை
யால் நீங்கள் என்னை அழைப்பித்தபோது
நான் தடுத்துப் பேசாமல் வந்தேன். இப்
போது என்ன காரியமாய் என்னை அழைத்
30 தீர்களென்று கேட்கிறேன் என்றான். அப்
பொழுது கொர்நேலியு: நாலு நாட்களுக்கு
முன் இந்நேரம் நான் என் வீட்டில் ஒன்ப
தாம் மணி ஜெபஞ்செய்துகொண்டிருந்
தேன். பிரகாசமான வஸ்திரம் தரித்த ஒரு
31 மனுஷன் எனக்குமுன் நின்று: கொர்நேலி
யுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது;
உன் தானதருமங்கள் கடவுள் சந்நிதியில்
32 நினைத்தருளப்பட்டன. யோப்பாவுக்கு
ஆள் அனுப்பி, பேதுரு என்னும் மறுநாம
முள்ள சீமோனை வரவழை; அவன்
கடலோரத்தில், தோல் பதனிடுகிற சீமோன்
33 வீட்டில் தங்கியிருக்கிறான் என்றார். அப்
படியே நான் தாமதமின்றி உம்மிடத்திற்கு
ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல
காரியம்; கர்த்தர் உமக்குக் கட்டளையிட்
டிருக்கிற யாவற்றையும் கேட்கும்படி
நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே
கடவுள் சந்நிதியில் கூடியிருக்கிறோம் என்று
சொன்னான்.
34 அப்பொழுது பேதுரு வாய்திறந்து: கட
வுள் பட்சபாதமுள்ளவரல்ல என்றும்,
35 அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிற
வன் எந்த ஜாதியானாயினும் அவருக்கு
உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்து
36 கொள்ளுகிறேன். எல்லாருக்கும் ஆண்டவ
ராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்,
கடவுள் சமாதானத்தை நற்செய்தியாகக்
கூறி, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுப்பின
37 வார்த்தை இதுவே. யோவான் பிரசங்கித்த
ஞானஸ்நானத்துக்குப்பின் கலிலேயா
தொடங்கி யூதேயா முழுவதிலும் நாசரேத்
தூர் இயேசுவின் விஷயமாய் நடந்தது
உங்களுக்குத் தெரியும். கடவுள் அவரைப் 38
பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும்
அபிஷேகம் பண்ணினார். கடவுள் அவரோ
டிருந்தபடியால் அவர் நன்மை செய்கிறவ
ராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட
யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்
திரிந்தார். யூதரின் நாட்டிலும் எருசலேமி 39
லும் அவர் செய்தவைகள் யாவற்றிற்கும்
நாங்கள் சாட்சிகள். அவரை மரத்தில்
தொங்கவைத்துக் கொலைசெய்தார்கள்.
கடவுள் அவரை மூன்றாம் நாளில் எழுப்பி, 40
பிரத்தியட்சமாய்க் காணப்படச் செய்தார்.
ஜனங்கள் எல்லாருக்குமல்ல, சாட்சிக 41
ளாகக் கடவுளால் முன் குறிக்கப்பட்டவர்
களும் அவர் மரித்தோரிலிருந்து எழுந்த
பின் அவரோடு போஜனபானம் பண்ணின
வர்களுமாகிய எங்களுக்கே காணப்படச்
செய்தார். மேலும், உயிரோடிருக்கிறவர் 42
களுக்கும் மரித்தோருக்கும் கடவுளால்
ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி இவரே
என்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும்
சாட்சி பகரவும் அவர் எங்களுக்குக் கட்
டளையிட்டார். இவரில் விசுவாசம் வைக் 43
கிற எவனும் இவர் நாமத்தினால் பாவமன்
னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிக
ளெல்லாரும் இவரைக்குறித்தே சாட்சி
கொடுக்கிறார்கள் என்று சொன்னான்.

பேதுரு இவற்றைப் பேசிக்கொண்டிருக் 44
கையிலேயே, வார்த்தையைக்கேட்ட யாவர்
மேலும் பரிசுத்த ஆவி இறங்கினார்.
அவர்கள் [1]நாவுகளால் பேசி, கடவுளை மகி 45
மைப்படுத்தினார்கள். பேதுருவோடு வந் 46
திருந்த விருத்தசேதனக்காரரான விசுவா
சிகள் இதைக் கேட்டு, பரிசுத்த ஆவியின்
வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்
பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். அப் 47
பொழுது பேதுரு: நம்மைப்போல் பரிசுத்த
ஆவியைப் பெற்ற இவர்கள் ஞானஸ்நானம்
பெறாதபடி எவனாகிலும் தண்ணீரை விலக்க
லாமா என்று சொல்லி, இயேசுகிறிஸ்து 48
வின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம்
கொடுக்கும்படி கட்டளையிட்டான். அப்
பொழுது சிலநாள் அங்கே தங்கும்படி
அவனை வேண்டிக்கொண்டார்கள்.

புறஜாதியாரும் கடவுளின் வார்த்தையை **11**
ஏற்றுக்கொண்டார்களென்று யூதேயாவி
லிருக்கிற அப்போஸ்தலரும் சகோதரரும்
கேள்விப்பட்டார்கள். பேதுரு எருசலே 2
முக்குத் திரும்பி வந்தபோது, விருத்தசேத

---

[1] 1 கொரி. 12: 10 பார்க்க.

3 னக்காரர்: விருத்தசேதனமில்லாத மனுஷ
ரிடம் நீர் போய் அவர்களோடே போஜனம்
பண்ணினீரென்று அவனோடே வாதாடி
4 னார்கள். பேதுரு இந்தக் காரியத்தை முதலி
லிருந்து ஒழுங்காய் அவர்களுக்கு விவ
5 ரித்து: நான் யோப்பா ஊரில் ஜெபம்பண்
ணிக்கொண்டிருக்கையில் பரவசமாகி ஒரு
தரிசனம் கண்டேன்; பெரிய துப்பட்டி
போன்றதொன்று நான்கு முனைகளிலும் பிடி
பட்டதாய், வானத்திலிருந்து இறங்கி என்
6 னண்டை வந்தது. நான் அதை உற்றுக்
கவனித்துப் பார்க்கவே, பூமியிலுள்ள நாலு
கால் பிராணிகளையும் காட்டு மிருகங்களை
யும் ஊரும் பிராணிகளையும் ஆகாயத்துப்
பறவைகளையும் அதில் கண்டேன்.
7 பேதுருவே, எழுந்திரு, அடித்துச் சாப்பிடு
என்று என்னிடம் சொல்லுகிற ஒரு சத்தத்
8 தையும் கேட்டேன். நானோ: அப்படியல்ல,
ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமான
யாதொன்றும் ஒருகாலும் என் வாய்க்குள்
9 போனதில்லையே என்றேன். இரண்டாந்
தரமும்: கடவுள் சுத்தமாக்கினவைகளை நீ
தீட்டாக எண்ணாதே என்று வானத்தி
10 லிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. இப்
படி மூன்றுதரம் நடந்தது; அப்பொழுது
எல்லாம் திரும்ப வானத்திற்கு எடுத்துக்
11 கொள்ளப்பட்டது. செசரியாவிலிருந்து
என்னிடம் அனுப்பப்பட்ட மூன்று மனு
ஷர் அந்நேரமே நான் இருந்த வீட்டின்முன்
12 வந்து நின்றார்கள். நான் ஒன்றுக்கும்
சந்தேகப்படாமல் அவர்களோடு போகும்
படி ஆவியானவர் எனக்குக் கட்டளையிட்
டார். சகோதரராகிய இந்த ஆறுபேரும்
என்னோடு வந்தார்கள்; அந்த மனுஷ
13 னுடைய வீட்டுக்குள் போனோம். அவன்,
தன் வீட்டில் தேவதூதன் நிற்கிறதைக்
கண்டதாகவும், அந்தத் தூதன்: யோப்பா
வுக்கு ஆள் அனுப்பிப் பேதுரு என்னும்
14 மறுநாமமுள்ள சீமோனை அழைப்பி, நீயும்
உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்
கேதுவான வார்த்தைகளை அவன் உனக்குச்
சொல்லுவானென்று தனக்குச் சொன்ன
15 தாகவும் எங்களுக்கு அறிவித்தான். நான்
பேசத்தொடங்கவே, பரிசுத்த ஆவியானவர்
ஆதியில் நம்மேல் இறங்கினதுபோலவே
16 அவர்கள்மேலும் இறங்கினார். யோவான்
ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தான்,
நீங்களோ பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நா
னம் பெறுவீர்களென்று ஆண்டவர் சொன்ன
வார்த்தையை அப்பொழுது நினைத்துக்
17 கொண்டேன். ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவில் விசுவாசம் வைத்த நமக்குக்
கடவுள் அருளின அதே வரத்தை அவர்
களுக்கும் அருளினாரானால், கடவுளைத்
தடுக்க நான் எம்மாத்திரம் என்று சொன்
னான். இவைகளைக் கேட்டபொழுது 18
அவர்கள் அமர்ந்து: அப்படியானால் ஜீவனுக்
கேதுவான மனந்திரும்புதலைப் புறஜாதியா
ருக்குங்கூட கடவுள் அருளிவிட்டார்
என்று கடவுளை மகிமைப்படுத்தினார்கள்.
ஸ்தேவான் விஷயமாய் உண்டான உபத் 19
திரவத்தினால் சிதறிப்போனவர்கள் திருவச
னத்தை யூதருக்கேயன்றி வேறொருவருக்கும்
கூறாமல், பெனிக்கியா நாடு, சீப்புரு தீவு,
அந்தியோகியா பட்டணம் வரைக்கும் சுற்
றித் திரிந்தார்கள். அவர்களில் சீப்புரு 20
தீவாரும் சிரேனே பட்டணத்தாருமாகிய
சிலரோ அந்தியோகியா பட்டணத்துக்கு
வந்து, ஆண்டவராகிய இயேசுவைப்பற்றிய
நற்செய்தியைப் பிரசங்கித்து, கிரேக்கருக்
கும் அறிவித்தார்கள். ஆண்டவருடைய 21
கரம் அவர்களோடிருந்தது; விசுவாசித்த
அநேக ஜனங்கள் ஆண்டவரிடத்தில் திரும்
பினார்கள். இவர்களைப்பற்றிய பிரஸ்தாபம் 22
எருசலேமிலுள்ள சபையார் காதுக்கு
எட்டவே, அந்தியோகியாவுக்குப் போகும்
படி பர்னபாவை அனுப்பினார்கள். அவன் 23
போய்ச் சேர்ந்து, கடவுளுடைய கிருபை
யைக் கண்டபோது, சந்தோஷப்பட்டு, மன
நிர்ணயமாய் ஆண்டவரில் நிலைத்திருக்கும்
படி எல்லாருக்கும் புத்திசொன்னான்.
அவன் நல்லவன், பரிசுத்த ஆவியும் விசு 24
வாசமும் நிறைந்தவன். அநேக ஜனங்கள்
ஆண்டவரிடம் சேர்க்கப்பட்டார்கள்.
பின்பு சவுலைத் தேடும்படி அவன் தர்சுவுக் 25
குப் போனான்; அவனைக் கண்டு அந்தியோகி 26
யாவுக்கு அழைத்துகொண்டுவந்தான். ஒரு
வருஷமளவும் அவர்கள் சபையில் கூடவே
யிருந்து அநேக ஜனங்களுக்கு உபதேசித்து
வந்தார்கள். சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள்
என்கிற பேர் முதல் முதல் அந்தியோகியா
விலே வழங்கலாயிற்று.
அந்நாட்களில் எருசலேமிலிருந்து தீர்க்க 27
தரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.
அவர்களில் அகபு என்னும் ஒருவன் 28
எழுந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம்
வரப்போகிறதென்று ஆவியானவராலே
குறிப்பிட்டான். கிலவுதியுராயன் காலத்தில்
அப்படியே பஞ்சம் உண்டாயிற்று. சீஷரில் 29
ஒவ்வொருவனும் அவனவன் திராணிக்குத்
தக்கபடி யூதேயாவில் குடியிருக்கிற சகோ
தரருக்கு உதவியாகப் பணம் சேகரித்து
அனுப்பவேண்டுமென்றுதீர்மானித்தார்கள்.
அப்படியே அவர்கள் சேகரித்து, பர்னபா 30

சவுல் என்பவர்களின் கையில் கொடுத்து,
மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள்.

12 அக்காலத்தில் ஏரோதுராஜா சபையா
ரில் சிலரைப் பிடித்துத் துன்பப்படுத்தி,
2 யோவானின் சகோதரனாகிய யாக்கோபைப்
பட்டயத்தினால் கொன்றுபோட்டான்.
3 யூதருக்கு அது பிரியமென்று அவன்
கண்டு பேதுருவையும் பிடித்தான். அந்த
நாட்கள் புளிப்பில்லா அப்பப்பண்டிகை
4 நாட்கள். அவனைப் பிடித்துச் சிறையில்
போட்டான். பஸ்கா பண்டிகைக்குப்பின்
அவனை ஜனத்தினிடம் வெளியே கொண்டு
வரலாமென்று அவன் எண்ணங்கொண்டவ
னாய், அவனைக் காக்கும்படி, பிரிவுக்கு
நான்கு போர்ச்சேவகருள்ள நான்கு பிரி
5 வார் வசம் ஒப்புவித்தான். பேதுரு இவ்
விதமாய்ச் சிறையில் காக்கப்பட்டிருக்கை
யில், சபையார் அவனுக்காகக் கடவுளிடம்
ஊக்கமாய் ஜெபஞ்செய்துவந்தார்கள்.
6 ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்
படி குறித்திருந்த நாளுக்கு முந்தின இர
வில், பேதுரு இரண்டு சங்கிலிகளினால்
கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே
தூங்கிக்கொண்டிருந்தான்; காவற்காரரும்
கதவுக்கு வெளியே சிறைச்சாலையைக் காத்
7 துக்கொண்டிருந்தார்கள். ஆண்டவரின்
தூதன் ஒருவன் அங்கே வந்து நின்றான்;
அறையில் வெளிச்சம் பிரகாசித்தது. அவன்
பேதுருவை விலாவிலே தட்டி: சீக்கிரம்
எழுந்திரு என்று எழுப்பவே, சங்கிலிகள்
அவன் கைகளிலிருந்து கழன்று விழுந்தன.
8 தூதன் அவனைப் பார்த்து: அரைகட்டிக்
கொள், பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்
என்றான். அவன் அப்படிச் செய்யவே,
உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு
9 என் பின்னே வா என்றான். அப்படியே
அவன் புறப்பட்டுப் பின்சென்றான்; தூத
னால் நடந்தது மெய்யென்று தெரியவில்லை,
தான் தரிசனம் காண்கிறதாக நினைத்தான்.
10 அவர்கள் முதற் காவலையும் இரண்டாம்
காவலையும் கடந்து, நகரத்திற்குள் போகிற
இருப்புக் கதவண்டை வந்தபோது அது
தானாகவே அவர்களுக்குத் திறந்தது;
அவர்கள் வெளியேறி ஒரு தெரு நெடுக நடந்
தார்கள்; உடனே தூதன் அவனை விட்டு
11 அகன்றான். பேதுருவுக்குத் தெளிவு வந்த
போது, ஆண்டவர் தம் தூதனை அனுப்பி
ஏரோதுவின் கைக்கும் யூதருடைய முழு
எண்ணத்திற்கும் என்னை விடுதலையாக்கினார்
என்று எனக்கு இப்பொழுது உண்மை
12 யாய்த் தெரிகிறது என்றான். அவன் இப்
படி நிச்சயித்துக்கொண்டு, மார்க்கு என்
னும் மறுநாமமுள்ள யோவானின் தாயா
கிய மரியாள் வீடு வந்து சேர்ந்தான்;
அங்கே அநேகர் கூடி ஜெபஞ்செய்துகொண்
டிருந்தார்கள். அவன் வாசற் கதவைத் 13
தட்டவே, ரோதை என்னும் வேலைக்காரி
ஒருத்தி யாரென்று கேட்கவந்தாள். அவள் 14
பேதுருவின் குரலை அறிந்து சந்தோஷம்
நிறைந்தவளாய், கதவைத் திறவாமலே
உள்ளே ஓடி, பேதுரு வாசலுக்கு வெளியே
நிற்கிறாரென்று அறிவித்தாள். அவர்கள்: 15
நீ பிதற்றுகிறாய் என்றார்கள். அவளோ:
இல்லை, நான் சொல்லுகிறது மெய்தான்
என்று சாதித்தாள். அவர்கள்: அது அவ
ருடைய தூதனாயிருக்கவேண்டும் என்
றார்கள். பேதுருவோ தட்டிக்கொண்டேயி 16
ருந்தான். அவர்கள் திறந்தபோது, அவனைக்
கண்டு பிரமித்தார்கள். அவர்கள் பேசாம 17
லிருக்கும்படி அவன் கையினால் சைகை
காட்டி, ஆண்டவர் தன்னை எப்படிச்
சிறையிலிருந்து விடுதலையாக்கினாரென்று
விவரித்து, இவற்றை யாக்கோபுக்கும் சகோ
தரருக்கும் அறிவியுங்கள் என்று சொல்லி,
புறப்பட்டு வேறொரு இடத்திற்குப்போனான்.
பொழுது விடியவே, பேதுருவுக்குச் சம்ப 18
வித்ததென்னவோ என்று சேவகருக்குள்
உண்டான கலக்கம் கொஞ்சமல்ல. ஏரோது 19
அவனைத் தேடியும் கண்டுபிடியாமற்போன
போது, காவலாளரை விசாரணைசெய்து,
அவர்களுக்குத் தண்டனை விதித்து, யூதே
யாவைவிட்டு செசரியாவுக்குப் போய்
அங்கே தங்கினான்.

ஏரோது தீரியர்பேரிலும் சீதோனியர் 20
பேரிலும் மிகவும் கோபமாயிருந்தான்.
இவர்கள் தேசத்திற்கு ராஜாவின் தேசத்தி
லிருந்தே உணவுப்பொருட்கள் வருவது
வழக்கம். ஆகையினால், இவர்கள் ஏகமன
மாய் ஏரோது ராஜாவினிடம் வந்து, அவன்
வீட்டுப் பிரதானி பிலாஸ்துவைத் தங்கள்
கைவசமாக்கிக்கொண்டு, சமாதானம் கேட்
டுக்கொண்டார்கள். குறித்த ஒரு தினத்தில் 21
ஏரோது ராஜவஸ்திரம் தரித்துச் சிங்காசனத்
தில் உட்கார்ந்து அவர்களுக்குப் பிரசங்கம்
பண்ணினான். அதைக் கேட்ட ஜனங்கள்: 22
இது மனுஷ சத்தமல்ல, தேவ சத்தம்
என்று ஆரவாரஞ்செய்தார்கள். அவன் 23
கடவுளுக்கு மகிமையைச் செலுத்தாதபடி
யினால், உடனே கர்த்தரின் தூதன்
அவனை அடித்தான்; அவன் புழுப்புழுத்துச்
செத்தான்.

ஆண்டவரின் வசனம் விர்த்தியடைந்து 24
பெருகிக்கொண்டே வந்தது.

25 பர்னபாவும் சவுலும் தங்கள் உபகார
ஊழியத்தைச் செய்து முடித்தபின், மார்க்கு
என்னும் மறுநாமமுள்ள யோவானைக் கூட்
டிக்கொண்டு, எருசலேமிலிருந்து திரும்பி
னார்கள்.

13 அந்தியோகியாவில், அங்குள்ள சபை
யிலே, தீர்க்கதரிசிகளும் போதகரும் இருந்
தார்கள்; அவர்கள்: பர்னபா, நீகர் எனப்
பட்ட சிமியோன், சிரேனே ஊரான் லூகியு,
சிற்றரசன் ஏரோதோடு வளர்ந்த மனாயீன்,
2 சவுல் என்பவர்களே. அவர்கள் ஆண்டவ
ருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்
கொண்டிருக்கும்போது, பரிசுத்த ஆவியான
வர்: பர்னபாவையும் சவுலையும் நான்
அழைத்த ஊழியத்திற்கென்று எனக்காகப்
பிரத்தியேகப்படுத்திவிடுங்கள் என்று திரு
3 வுளம்பற்றினார். அப்பொழுது உபவாசித்து
ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை
வைத்து அவர்களை அனுப்பிவிட்டார்கள்.
4 இப்படியாக அவர்கள் பரிசுத்த ஆவி
யினால் அனுப்பப்பட்டு, செலூக்கியா பட்
டணத்துக்கு வந்து, அங்கே கப்பலேறிச்
5 சீப்புருதீவுக்குப் போனார்கள். அவர்கள்
சாலமி பட்டணத்தில் வந்து, யூதரின்
ஜெபாலயங்களில் கடவுளின் வார்த்தையை
அறிவித்துவந்தார்கள். யோவான் அவர்
களுக்கு உதவிக்காரனா யிருந்தான்.
6 அவர்கள் பாப்போ பட்டணம் வரைக்கும்
தீவைக் கடந்துவந்தபோது, பர்யேசு என்
னும் ஒரு யூதனைக் கண்டார்கள்; இவன்
மந்திரவித்தைக்காரன், கள்ளத் தீர்க்கதரிசி.
7 அவன் விவேகியான செர்கியு பவுல் என்
னும் அதிபதியோடிருந்தான். அந்த அதி
பதி பர்னபாவையும் சவுலையும் அழைத்து,
அவர்களிடம் கடவுளின் வார்த்தையைக்
8 கேட்க ஆசையாயிருந்தான். அந்த எலிமா
அவர்களுக்கு எதிர்த்து நின்று, அதிபதியை
விசுவாசத்தினின்று விலக்கும்படி பிரயாசப்
பட்டான். எலிமா என்ற பேருக்கு மந்திர
9 வித்தைக்காரன் என்று அர்த்தம். அப்
பொழுது பவுல் என்னும் நாமத்தையு
முடைய சவுல் பரிசுத்த ஆவி நிறைந்தவனாய்
10 அவனை உற்றுப்பார்த்து: எல்லாக் கபடமும்
எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே,
பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகை
ஞனே, ஆண்டவரின் செம்மையான வழி
களைப் புரட்டுவதைவிட்டு ஓயமாட்டாயோ?
11 இந்நேரமே ஆண்டவரின் கை உன்மே
லிருக்கிறது; சூரியனைக் காணாதபடி நீ
சிலகாலம் குருடனாயிருப்பாய் என்று
சொன்னான்; உடனே மந்தாரமும் இருளும்
அவனைச் சூழ்ந்தன; அவன் அங்குமிங்கும்
தடவி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடி
னான். சம்பவித்ததை அதிபதி கண்டு, 12
ஆண்டவரின் உபதேசத்தைப்பற்றிப் பிர
மிப்படைந்து விசுவாசியானான்.
அப்பால் பவுலும் அவனைச் சேர்ந்தவர் 13
களும் பாப்போவைவிட்டுக் கப்பலேறி,
பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணம்
சேர்ந்தார்கள். யோவான் அவர்களைவிட்டுப்
பிரிந்து எருசலேமுக்குத் திரும்பினான்.
அவர்கள் பெர்கேயைவிட்டுப் பிரயாணஞ் 14
செய்துகொண்டே பிசீதியா நாட்டு அந்தி
யோகியாவுக்கு வந்து, ஓய்வுநாளில் ஜெபா
லயத்திற்குப் போய் உட்கார்ந்தார்கள்.
நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன ஆகம 15
மும் வாசித்து முடிந்தபின்பு, ஜெபாலயத்
தலைவர்கள்: சகோதரரே, நீங்கள் ஜனங்க
ளுக்குப் போதனையாகச் சொல்லத்தக்கது
ஏதாகிலுமிருந்தால் சொல்லுங்கள் என்று
கேட்கும்படி அவர்களிடம் ஆள் அனுப்பி
னார்கள்.
அப்பொழுது பவுல் எழுந்திருந்து கை 16
யமர்த்தி: இஸ்ரவேலரே, கடவுளுக்குப்
பயந்து நடக்கிறவர்களே, கேளுங்கள். இஸ்ர 17
வேலாகிய இந்த ஜனத்தின் கடவுள் நம்
முடைய பிதாக்களைத் தெரிந்தெடுத்து,
எகிப்து தேசத்தில் அவர்கள் பரதேசிகளா
யிருந்தபோது இந்த ஜனத்தை உயர்த்தி,
தமது புயபலத்தினால் அங்கிருந்து அவர்
களைப் புறப்படப்பண்ணினார். நாற்பது வரு 18
ஷமாய் வனாந்தரத்தில் அவர்கள் நடத்தை
யைச் சகித்துவந்தார். கானான் தேசத்தில் 19
ஏழு ஜாதிகளை அழித்து, அவர்கள் தேசத்தை
இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிட்
டுக் கொடுத்தார். ஏறக்குறைய நானூற் 20
றைம்பது வருஷமாயிற்று. இவற்றின்பின்,
சாமுவேல் தீர்க்கதரிசி வரைக்கும் அவர்
களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார்.
பின்னும் அவர்கள் தங்களுக்கு ஒரு ராஜா 21
வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்;
அப்படியே கடவுள் பென்யமீன் கோத்திரத்
தானும் கீசினுடைய குமாரனுமான சவுலை
நாற்பது வருஷகாலம் அவர்களுக்குக்
கொடுத்தார். பின்பு அவர் அவனைத் தள்ளி, 22
தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்
படுத்தி: ஈசாயின் குமாரன் தாவீதை என்
இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்.
எனக்குச் சித்தமான யாவற்றையும் அவன்
செய்வான் என்று அவனைப்பற்றிச் சாட்சி
கொடுத்தார். இவன் சந்ததியிலிருந்து 23
கடவுள், தமது வாக்குத்தத்தத்தின்படியே,
இஸ்ரவேலுக்கு இரட்சகராக இயேசுவைத்

24 தோன்றப்பண்ணினார். இவர் வருகிறதற்கு
முன்னே மனந்திரும்புதலுக்குரிய ஞானஸ்
நானத்தை யோவான் இஸ்ரவேல் ஜனம்
25 அனைத்துக்கும் பிரசங்கித்தான். யோவான்
தன் ஓட்டத்தை முடிக்கையில்: நீங்கள்
என்னை யாரென்று நினைக்கிறீர்கள்? நான்
அவர் அல்ல, எனக்குப்பின் ஒருவர் வரு
கிறார், அவர் பாதரட்சையை அவிழ்க்கிற
தற்கும் நான் ஏற்றவனல்ல என்றான்.
26 சகோதரரே, ஆபிரகாம் வம்சத்தின் புத்திரரே,
கடவுளுக்குப் பயந்து நடக்கிற மற்றவர்
களே, இந்த இரட்சிப்பின் வார்த்தை நமக்கு
27 அனுப்பப்பட்டிருக்கிறது. எருசலேம் குடி
களும் அவர்கள் அதிகாரிகளும், அவரை
யும் ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற
தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களையும் அறியா
மல், அவருக்குத் தீர்ப்பிட்டு அந்த வாக்கி
28 யங்களை நிறைவேற்றினார்கள். மரணத்திற்கு
ஏதுவானதொன்றும் அவரிடம் காணாதிருந்
தும் அவரைக் கொன்றுவிடும்படி பிலாத்து
29 வைக் கேட்டுக்கொண்டார்கள். அவரைப்
பற்றி எழுதியிருக்கிறவைகள் யாவற்றையும்
அவர்கள் செய்து முடித்தபின், அவரை
மரத்திலிருந்து இறக்கிக் கல்லறையில் வைத்
30 தார்கள். கடவுளோ அவரை மரித்தோரி
31 லிருந்து எழுப்பினார். தம்மோடு கலிலேயாவி
லிருந்து எருசலேமுக்கு வந்தவர்களுக்கு
அவர் பல நாட்களாகத் தரிசனமானார்.
அவர்கள் இப்பொழுது ஜனத்துக்குமுன்
32 அவருக்குச் சாட்சிகள். கடவுள் இயேசுவை
எழுப்பினதினால், தாம் பிதாக்களுக்கு அரு
ளிய வாக்குத்தத்தத்தை அவர்களுடைய
பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினார்
என்ற நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கி
33 றோம். அப்படியே இரண்டாம் சங்கீதத்
திலும்:

நீர் என்னுடைய குமாரன்,
இன்று நான் உம்மை ஜனிப்பித்தேன்

34 என்று எழுதியிருக்கிறது. இனி அவர் ஒரு
போதும் அழிவுக்குட்படாதபடி கடவுள்
அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்
என்பதைப்பற்றி:

தாவீதுக்கு அருளின பரிசுத்த வரங்களை
உங்களுக்குக் கட்டளையிடுவேன்;
அவை தவறாதவை

35 என்று திருவுளம்பற்றினார். அது காரண
மாகவே:

உம்முடைய பரிசுத்தவான்
அழிவைக் காணவொட்டீர்

என்று வேறொரு இடத்திலும் சொல்லி
36 யிருக்கிறது. தாவீது தன் காலத்தாருக்கு
ஊழியஞ்செய்தபின், கடவுள் சித்தப்படி
நித்திரையடைந்து, தன் பிதாக்களிடம் சேர்க்
கப்பட்டு அழிவைக் கண்டான். கடவுள் 37
எழுப்பினவரோ அழிவைக் காணவில்லை.
ஆதலால், சகோதரரே, நான் சொல்லு 38
கிறது உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்;
இவர்மூலமாய் உங்களுக்குப் பாவமன்
னிப்பு அறிவிக்கப்படுகிறது; மோசேயின் 39
நியாயப்பிரமாணத்தினால் நீங்கள் எவைகளி
னின்று விடுதலையாகி நீதிமான்களாகத்
தீர்க்கப்பட முடியாதிருந்ததோ அவைகளி
னின்று, இவரில் விசுவாசம் வைக்கிற
எவனும், இவராலே விடுதலையாகி நீதிமா
னாகத் தீர்க்கப்படுகிறான். ஆகவே: 40

அசட்டைக்காரரே, பாருங்கள்.
ஆச்சரியப்படுங்கள், அழிந்துபோங்கள்!
உங்கள் நாட்களில் நான் ஒரு செயல்
செய்வேன்;
ஒருவன் அதை உங்களுக்கு விவரித்தா
லும்
நீங்கள் அந்தக் காரியத்தை நம்பவே
மாட்டீர்கள்

என்று | தீர்க்கதரிசனங்களில் சொல்லியிருக் 41
கிறது உங்களுக்கு நேரிடாதபடி பார்த்துக்
கொள்ளுங்கள் என்று சொல்லி முடித்
தான்.

அவர்கள் வெளியே போகையில், அடுத்த 42
ஓய்வுநாளிலும் இவைகளைத் தங்களுக்குச்
சொல்லவேண்டும் என்று ஜனங்கள் கேட்
டுக்கொண்டார்கள். சபை கலைந்துபோன 43
பின்பு யூதரிலும் யூதமார்க்கத்தில் சேர்ந்த
பக்தியுள்ளவர்களிலும் அநேகர் பவுலையும்
பர்னபாவையும் தொடர்ந்துபோனார்கள்.
அவர்களோடு இவர்கள் பேசி, கடவுளின்
கிருபையில் நிலைகொண்டிருக்கும்படி அவர்
களுக்குப் புத்தி சொன்னார்கள்.

அடுத்த ஓய்வுநாளில் கொஞ்சங்குறையப் 44
பட்டணம் முழுவதும் கடவுளின் வார்த்தை
யைக் கேட்கும்படி கூடிவந்தது. யூதரோ 45
ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமை
நிறைந்து, தூஷணம் பேசிக்கொண்டு, பவுல்
சொன்னவைகளுக்கு எதிர்வாதம் செய்
தார்கள். பவுலும் பர்னபாவுமோவெனில் 46
அவர்களிடம் தைரியமாய்ப் பேசி: கடவுள்
வார்த்தையை முதலாவது உங்களுக்குச்
சொல்லவேண்டியதிருந்தது; நீங்களோ
அதைத் தள்ளி உங்களை நித்திய ஜீவனுக்கு
அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடி
யால், இதோ, புறஜாதியாரிடம் திரும்பு
கிறோம்.

நீர் பூமியின் கடைசிபரியந்தமும் 47
இரட்சிப்பாயிருக்கும்படி,

உம்மைப் புறஜாதியாருக்கு
வெளிச்சமாக ஏற்படுத்தினேன்
என்று கர்த்தர் எங்களுக்குக் கட்டளை
யிட்டது இதுவே என்று சொன்னார்கள்.
48 புறஜாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்
பட்டு ஆண்டவர் வார்த்தையை மகிமைப்
படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்
கப்பட்டவர்கள் அனைவரும் நம்பினார்கள்.
49 ஆண்டவர் வார்த்தை அந்நாடெங்கும்
50 பிரபல்யமாயிற்று. யூதரோ பக்தியுள்ள
சீமாட்டிகளையும் பட்டணத்துப் பெரிய
மனுஷரையும் தூண்டிவிட்டு, பவுலையும்
பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து,
தங்கள் எல்லைகளுக்கப்பால் அவர்களைத்
51 துரத்திவிட்டார்கள். இவர்கள் தங்கள் கால்
களில் படிந்த தூசியை அவர்களுக்கு
விரோதமாக உதறிவிட்டு இக்கோனியாவுக்
52 குப்போனார்கள். சீஷர் சந்தோஷத்தினாலும்
பரிசுத்த ஆவியினாலும் நிறைந்திருந்தார்கள்.

14 இக்கோனியாவிலும் அவர்கள் அதேவித
மாய் யூதரின் ஜெபாலயத்திற்குப் போய்
யூதரிலும் கிரேக்கரிலும் திரள் ஜனங்கள்
2 நம்பத்தக்கதாகப் பேசினார்கள். இணங்காத
யூதரோ சகோதரருக்கு விரோதமாகப் புற
ஜாதியாரின் மனத்தை எழுப்பிவிட்டு, பகை
3 யுண்டாக்கினார்கள். இப்படியிருக்க,
அவர்கள் அங்கே வெகுநாள் தங்கி ஆண்ட
வரைப்பற்றித் தைரியமாய்ப் பேசினார்கள்;
அவர் தமது கிருபையின் வார்த்தைக்குச்
சாட்சியமாக அடையாளங்களும் அற்புதங்
களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்
4 படி அநுக்கிரகம் பண்ணினார். ஊர் ஜனத்
திரளோ இரண்டுபட்டு, சிலர் யூதரையும்
சிலர் அப்போஸ்தலரையும் சேர்ந்துகொண்
5 டார்கள். புறஜாதியாரும் யூதரும் அவர்கள்
அதிகாரிகளும் மும்முரமாய் வந்து, அப்
போஸ்தலரை அவமானப்படுத்தவும் கல்
6 லெறியவும் எத்தனிப்பதை | அவர்கள்
அறிந்து, லிக்கவோனியா நாட்டு ஊர்களா
கிய லீஸ்திராவுக்கும் தெர்பைக்கும் அவை
களின் சுற்றுப்புறங்களுக்கும் தப்பியோடி,
7 அங்கே நற்செய்தியைப் பிரசங்கித்துவந்
தார்கள்.
8 லீஸ்திராவில் கால்கள் வழங்காத ஒருவன்
இருந்தான், அவன் தாயின் கர்ப்பத்தி
லிருந்தே சப்பாணி, ஒருபோதும் நடந்தறி
9 யாதவன். இவன் உட்கார்ந்து பவுல் பேசு
கிறதைக் கேட்டுக்கொண்டிருந்தான். பவுல்
அவனை உற்றுப்பார்த்து, குணமாகிறதற்
கேற்ற நம்பிக்கை அவனுக்கு உண்டென்று
10 கண்டு: நீ எழுந்து காலூன்றி நிமிர்ந்து நில்
என்று உரத்த சத்தத்தோடே சொன்னான்.
சொல்லவே, அவன் குதித்தெழுந்து நடந்
தான். பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு 11
சத்தமிட்டு, தேவர்கள் மனுஷரூபமெடுத்து
நம்மிடம் இறங்கி வந்திருக்கிறார்கள் என்று
லிக்கவோனியா பாஷையில் சொன்னார்கள்.
பர்னபாவைத் தேயுஸ் என்றும், பவுல் முக் 12
கிய பிரசங்கியானதால் அவனை ஹெர்மேஸ்
என்றும் சொன்னார்கள். அல்லாமலும், 13
பட்டணத்து முகப்பிலிருந்த தேயுஸ்
கோவில் பூசாரி எருதுகளையும் பூமாலைகளை
யும் வாசற்படியிலே கொண்டுவந்து, ஜனங்க
ளோடே சேர்ந்து பலியிட மனமாயிருந்தான்.
அப்போஸ்தலராகிய பவுலும் பர்னபாவும் 14
அதைக் கேட்டபொழுது, தங்கள் வஸ்திரங்
களைக் கிழித்துக்கொண்டு, ஜனக்கூட்டத்
துக்குள் பாய்ந்து, உரத்த சத்தமிட்டு: |
மனுஷரே, நீங்கள் இப்படிச் செய்கிற 15
தென்ன? நாங்களும் உங்களைப்போன்ற
தன்மையுள்ள மனுஷர்தானே; வீணான
இவைகளை நீங்கள் விட்டு, வானத்தையும்
பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளி
லுள்ள யாவற்றையும் படைத்த ஜீவனுள்ள
கடவுளிடம் திரும்பவேண்டுமென்பதை
உங்களுக்கு நற்செய்தியாகக் கூறுகிறோம்.
சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களை 16
யும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்
டிருந்தார். ஆயினும், அவர் நன்மை செய்து 17
வந்து, வானத்திலிருந்து மழைகளையும்
செழிப்புள்ள காலங்களையும் உங்களுக்குத்
தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும்
உங்கள் இருதயங்களை நிரப்பி, இவ்வித
மாகத் தம்மைப்பற்றிச் சாட்சியம் அருளாம
லிருந்ததில்லை என்று சொன்னார்கள்.
இப்படி அவர்கள் சொல்லியும் தங்களுக்குப் 18
பலியிடாதபடி ஜனங்களைத் தடுப்பது அரிதா
யிருந்தது.
பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனி 19
யாவிலுமிருந்து யூதர் வந்து ஜனங்களை வசப்
படுத்தி, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்
துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்
டணத்துக்கு வெளியே இழுத்துக்கொண்டு
போனார்கள். சீஷர் அவனைச் சூழ்ந்து நிற் 20
கையில் அவன் எழுந்து ஊருக்குள்
போனான். மறுநாள் பர்னபாவோடு தெர்
பைக்குப் புறப்பட்டுப் போனான். அந்த 21
ஊரில் அவர்கள் நற்செய்தியைப் பிரசங்
கித்து அநேகரைச் சீஷராக்கி, அதன்பின்
லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தி
யோகியாவுக்கும் திரும்பினார்கள். சீஷரின் 22
மனத்தை அவர்கள் ஸ்திரப்படுத்தி, விசுவாசத்
தில் நிலைத்திருக்கவேண்டுமென்று புத்தி

சொல்லி: அநேக உபத்திரவங்களின் வழி
யாய் நாம் கடவுள் ராஜ்யத்தில் பிரவேசிக்க
23 வேண்டும் என்று உபதேசித்தார்கள். அல்
லாமலும், சபைதோறும் அவர்களுக்கு
மூப்பர்களை ஏற்படுத்தி, உபவாசித்து ஜெபம்
பண்ணி, அவர்கள் விசுவாசம் வைத்த
ஆண்டவருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்.
24 பின்பு பிசீதியா நாட்டைக் கடந்து, பம்பி
25 லியா நாட்டிற்கு வந்து, பெர்கேயில் திரு
வசனத்தைக் கூறி, அத்தாலியா ஊருக்குப்
26 போனார்கள். அங்கே கப்பலேறி அந்தி
யோகியாவுக்குச் சென்றார்கள். இவ்வித
மாய் அவர்கள் செய்து முடித்த வேலைக்
கென்று முதலில் கடவுளின் கிருபைக்கு
அவர்கள் ஒப்புவிக்கப்பட்ட இடம் அதுவே.
27 அவர்கள் அங்கே சேர்ந்தபொழுது சபை
யைக் கூடிவரப்பண்ணி, கடவுள் தங்களோ
டிருந்து செய்த யாவற்றையும், அவர் புற
ஜாதிகளுக்கு விசுவாசத்தின் வாசலைத் திறந்த
28 தையும் அறிவித்தார்கள். அவர்கள்
அங்கே சீஷரோடு தங்கின காலம் கொஞ்ச
மல்ல.

15 யூதேயாவிலிருந்து சிலர் வந்து: நீங்கள்
மோசேயின் முறைமையின்படி விருத்தசேத
னஞ் செய்துகொள்ளாவிட்டால், இரட்சிக்
கப்பட முடியாதென்று சகோதரருக்குப்
2 போதித்துவந்தார்கள். அதனால் பவுலுக்
கும் பர்னபாவுக்கும் அவர்களோடு உண்
டான போராட்டமும் தர்க்கமும் கொஞ்ச
மல்ல. இந்த வாக்குவாத விஷயமாய்ப்
பவுலும் பர்னபாவும் அவர்களில் வேறு சில
ரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தல
ரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போக
3 வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அந்தப்
படியே அவர்கள் சபையாரால் வழிவிட்
டனுப்பப்பட்டு, புறஜாதியார் மனந்திரும்
பின செய்தியை விவரமாய் அறிவித்துக்
கொண்டு, பெனிக்கியா சமாரியா நாடு
களின் வழியாய்ப் போய், சகோதரர் எல்லா
ருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்
4 கினார்கள். அவர்கள் எருசலேமுக்கு
வரவே, சபையாரும் அப்போஸ்தலரும்
மூப்பரும் அவர்களை வரவேற்றுக்கொண்
டார்கள். அப்போது, கடவுள் தங்களோ
டிருந்து செய்தவைகளையெல்லாம் அவர்கள்
5 அறிவித்தார்கள். பரிசேய சமயத்தாரில்
விசுவாசிகளான சிலரோ எழுந்து: அவர்
களுக்கு விருத்தசேதனஞ்செய்கிறதும்
மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்
கொள்ள அவர்களுக்குக் கட்டளையிடுகிறதும்
அவசியம் என்றார்கள்.

அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் 6
காரியத்தைக்குறித்து ஆலோசனைசெய்யும்
படி கூடினார்கள். மிகுந்த தர்க்கம் உண் 7
டானபோது, பேதுரு எழுந்து அவர்களைப்
பார்த்து: சகோதரரே, புறஜாதியார் என்
வாயினாலே சுவிசேஷ வார்த்தையைக்கேட்டு
நம்பும்படி கடவுள் அநேக நாட்களுக்கு
முன்னே உங்களுக்குள் என்னைத் தெரிந்
தெடுத்தார்; இது உங்களுக்குத் தெரிந்த
காரியம். இருதயங்களை அறிகிற கடவுள் 8
பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளினது
போலவே அவர்களுக்கும் தந்தருளி, அவர்
களைக்குறித்துச் சாட்சிகொடுத்தார். விசு 9
வாசத்தின் மூலமாய் அவர்கள் இருதயங்
களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்
கும் யாதொரு வித்தியாசமும் காட்டாதிருந்
தார். இப்படியிருக்க, நம் பிதாக்களாகி 10
லும் நாமாகிலும் சுமக்கமுடியாத நுகத்
தைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்தி, நீங்கள்
கடவுளைச் சோதிப்பானேன்? ஆண்டவரா 11
கிய இயேசுவின் கிருபையினாலே அவர்கள்
இரட்சிக்கப்படுகிறது எப்படியோ அப்
படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று
நம்புகிறோமே என்றான்.

கூடிவந்திருந்த சபையெல்லாம் 12
அமர்ந்திருந்து, பர்னபாவும் பவுலும் தங்க
ளைக்கொண்டு கடவுள் புறஜாதிகளுக்குள்
செய்த அடையாளங்கள் அற்புதங்கள்
யாவற்றையும் விவரித்துச் சொல்லுகிறதைக்
கேட்டது.

அவர்கள் சொல்லிமுடிக்கவே, யாக்கோபு 13
பேசத்தொடங்கி: சகோதரரே, நான் சொல்லு
கிறதைக் கேளுங்கள். கடவுள் தமது நாமத் 14
திற்காகப் புறஜாதிகளிலிருந்து ஒரு ஜனத்தை
முதல்முதல் தெரிந்தெடுத்தருளின விதத்
தைச் சிமியோன் விவரித்தாரே. அதற்குத் 15
தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளும் ஒத்திருக்
கின்றன:

இவைகளுக்குப்பின்பு நான் திரும்பி 16
வந்து,
விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை
மறுபடியும் எடுத்துக் கட்டுவேன்.
அதில் பழுதாய்ப்போனவைகளை மறுபடி
யும் எடுத்துக்கட்டி,
அதை நேராய் நிறுத்துவேன்.
மற்ற மனுஷரும் 17
எனது நாமம் தரிக்கப்பெற்ற புறஜாதி
யார் யாவரும்
கர்த்தரைத்தேடி வந்தடையும்படி
செய்வேனென்று
யுகாரம்பமுதல் இவைகளை வெளியாக் 18
கின கர்த்தர் கூறுகிறார்

19 என்று எழுதியிருக்கிறது. ஆதலால், புற
ஜாதிகளில் கடவுளிடம் திரும்புகிறவர்களைக்
20 கலங்கப்பண்ணலாகாது. ஆனாலும், விக்கிர
கங்களாலாகும் தீட்டுகளுக்கும், வேசித்
தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததற்கும்,
இரத்தத்திற்கும் விலகியிருக்கும்படி அவர்
களுக்கு நாம் எழுதவேண்டும்; இதுவே என்
21 தீர்மானம். ஏனெனில், பூர்வகாலந்
தொடங்கி, சகல பட்டணங்களிலும், ஓய்வு
நாள்தோறும், ஜெபாலயங்களில் மோசே
யின் ஆகமங்கள் வாசிக்கப்பட்டும் பிரசங்
கிக்கப்பட்டும் வருகின்றன என்றான்.
22 அப்பொழுது தங்களில் சிலரைத் தெரிந்
தெடுத்து, பவுலோடும் பர்னபாவோடும் அந்தி
யோகியாவுக்கு அனுப்புவது அப்போஸ்தல
ருக்கும் மூப்பருக்கும் சபையாரெல்லாருக்
கும் நலமாகக்கண்டது. சகோதரரில் விசே
ஷித்தவர்களாகிய பர்சபா என்ற யூதாசும்
சீலாவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.
23 இவர்கள் கையில் அவர்கள் எழுதியனுப்பின
நிருபமாவது: அப்போஸ்தலரும் மூப்பரு
மான சகோதரர் அந்தியோகியாவிலும் சீரியா
விலும் சிலிசியாவிலுமுள்ள புறஜாதியாரில்
சகோதரரானவர்களுக்கு வாழ்த்துதல்
24 சொல்லி எழுதிக்கொள்வது: சிலர் எங்களிட
மிருந்து வந்து, உங்கள் மனத்தைக் குழப்பி,
தங்கள் வார்த்தைகளால் உங்களைக் கலக்கி
னார்கள் என்று கேள்விப்பட்டோம். இவர்
களுக்கு நாங்கள் கட்டளையொன்றும்
25 கொடுத்ததில்லை. ஆதலால், நம்முடைய
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்
திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்
கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப்
பிரியமானவர்களுமாகிய பர்னபா பவுல்
26 என்பவர்களோடுங்கூட, நாங்கள் தெரிந்
தெடுத்த சிலரை உங்களிடம் அனுப்ப
வேண்டுமென்று ஏகமனமாய்த் தீர்மானித்
27 தோம். அப்படியே யூதாசையும் சீலாவை
யும் அனுப்புகிறோம்; அவர்களும் இவை
களை வாய்மொழியாக உங்களுக்கு அறிவிப்
28 பார்கள். அவசியமான இவைகளையல்லா
மல் பாரமான வேறொன்றையும் உங்கள்
மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்
கும் எங்களுக்கும் நலமாகக்கண்டது.
29 விக்கிரகங்களுக்குப் பலியிட்டவைகளுக்
கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்த
தற்கும், வேசித்தனத்திற்கும் விலகியிருப்பது
அவசியம். இவைகளுக்கு நீங்கள் உங்களை
விலக்கிக் காத்துக்கொள்வது உசிதம். சுகமா
யிருப்பீர்களாக என்பதே.
30 அப்படியே அவர்கள் விடைபெற்று,
அந்தியோகியாவுக்கு வந்து, சபையைக்
கூடிவரச்செய்து, நிருபத்தை ஒப்புவித்
தார்கள். அதை அவர்கள் வாசித்து, அதனா 31
லுண்டாகிய ஆதரவினால் சந்தோஷப்பட்
டார்கள். யூதாஸ் சீலா என்பவர்களும் 32
தீர்க்கதரிசிகளாயிருந்தபடியினாலே அநேக
வார்த்தைகளினால் சகோதரரை ஆதரித்து
ஸ்திரப்படுத்தினார்கள். சிலகாலம் அங்கே 33,
தங்கியிருந்தபின், சகோதரரிடமிருந்து சமா 34
தானத்தோடு விடைபெற்று, தங்களை
அனுப்பினவர்களிடம் போனார்கள். பவுலும் 35
பர்னபாவுமோ அந்தியோகியாவில் தங்கி,
வேறே அநேகரோடும் ஆண்டவரின் வார்த்
தையை உபதேசித்து நற்செய்தியாகப் பிரசங்
கித்து வந்தார்கள்.
சில நாளுக்குப்பின் பவுல் பர்னபாவைப் 36
பார்த்து: நாம் ஆண்டவரின் வார்த்தையை
அறிவித்திருக்கிற சகல ஊர்களிலுமுள்ள
சகோதரர் எப்படி இருக்கிறார்களென்று
திரும்பப் போய்ப் பார்ப்போம் வாரும் என்
றான். மார்க்கு என்னும் யோவானைக் 37
கூட்டிக்கொண்டுபோக பர்னபா விரும்பி
னான். பவுலோ: பம்பிலியா நாட்டில் 38
நம்மை விட்டுப் பிரிந்து, நம்மோடு
வேலைக்கு வராத அவனைக் கூட்டிக்கொண்டு
போவது நல்லதல்ல என்றான். இதைப் 39
பற்றி அவர்களுக்குள் கடுமையான தர்க்கம்
உண்டானபடியால் ஒருவரையொருவர் விட்
டுப் பிரிந்தார்கள். பர்னபா மார்க்குவைக்
கூட்டிக்கொண்டு, கப்பலேறி, சீப்புருவுக்
குப் போனான். பவுலோ சீலாவைத் தெரிந் 40
தெடுத்து, சகோதரரால் ஆண்டவரின் கிரு
பைக்கு ஒப்புவிக்கப்பட்டுப் பிரயாணமாய்ப்
போய், சீரியாவிலும் சிலிசியாவிலும் சுற்றித் 41
திரிந்து சபைகளை ஸ்திரப்படுத்திவந்தான்.

அதற்குப் பிறகு அவன் தெர்பைக்கும் **16**
லீஸ்திராவுக்கும் போனான். அங்கே தீமோத்
தேயு என்னும் ஒரு சீஷன் இருந்தான்;
அவன் தாய் விசுவாசியான யூத ஸ்திரீ, தகப்
பனோ கிரேக்கன். அவன் லீஸ்திராவிலும் 2
இக்கோனியாவிலுமுள்ள சகோதரரால்
நல்லவனென்று மதிப்புப்பெற்றவன். அவன் 3
தன்னோடு வரவேண்டுமென்று பவுல் விரும்பி
னான். அவன் தகப்பன் கிரேக்கனென்று
அவ்விடங்களிலிருந்த யூதரெல்லாருக்கும்
தெரிந்திருந்தபடியால் அவர்கள் நிமித்தம்
அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினான்.
அவர்கள் ஊர்தோறும் போகையில், எருச 4
லேமிலிருக்கும் அப்போஸ்தலரும்
மூப்பரும் தீர்மானித்த விதிகளைக் கைக்
கொள்ளும்படி அவர்களுக்கு ஒப்புவித்
தார்கள். சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப் 5

பட்டு நாளுக்குநாள் தொகையில்
பெருகின.
6 அவர்கள் ஆசியா நாட்டில் திருவசனத்
தைப் பிரசங்கியாதபடி பரிசுத்த ஆவியினால்
தடுக்கப்பட்டவர்களாய், பிரிகியா கலாத்
தியா பிரதேசத்தைக் கடந்துபோனார்கள்.
7 அவர்கள் மீசியா நாட்டுக்கு எதிரே வந்த
போது பித்தினியா நாட்டுக்குப் போகப் பிர
யாசப்பட்டார்கள்; இயேசுவின் ஆவியோ
8 அவர்களைப் போகவிடவில்லை. அவர்கள்
மீசியா பக்கமாய்ச் சென்று துரோவாவுக்கு
9 வந்தார்கள். அங்கே இரவில் பவுல் ஒரு
தரிசனங்கண்டான். அதில், மக்கெதோ
னியா தேசத்தானொருவன் நின்று: நீர் மக்கெ
தோனியாவுக்குக் கடந்துவந்து எங்களுக்கு
உதவிசெய்யும் என்று அவனை வேண்டிக்
10 கொண்டான். அந்தத் தரிசனத்தை அவன்
கண்டதும் அவர்களுக்கு நற்செய்
தியை அறிவிக்கும்படி கடவுள் எங்களை
அழைத்தாரென்று நாங்கள் நிர்ணயித்துக்
கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப்
புறப்பட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணி
னோம்.
11 துரோவாவில் கப்பலேறி, சமொத்தி
ராக்கே தீவுக்கு நேராய்ச் சென்று, மறு
நாளில் நெயாப்பொலி பட்டணத்துக்குப்
12 போனோம். அங்கிருந்து பிலிப்பி பட்ட
ணத்துக்கு வந்து சிலநாள் அங்கே தங்கி
யிருந்தோம். அது மக்கெதோனியா தேசத்
தில் இந்தப் பிரிவின் பிரதான பட்டணம்,
13 ரோம குடியிருப்பு ஸ்தானம். ஓய்வுநாளில்
நாங்கள் பட்டண வாசலுக்கு வெளியே
ஆற்றின் ஓரமாய்ப் போனோம்; ஜெபம்
பண்ணுகிற இடம் அங்கே இருக்குமென்று
எண்ணினோம். அந்த இடத்திற்கு வந்து
உட்கார்ந்து, அங்கே கூடிவந்திருந்த ஸ்திரீ
14 களிடம் பேசிக்கொண்டிருந்தோம். கேட்டுக்
கொண்டிருந்தவர்களில் லீதியாளென்னும்
ஒரு ஸ்திரீ இருந்தாள்; அவள் இரத்தாம்
பரம் விற்கிறவள், தியத்தைரா ஊராள்,
தேவ பக்தியுள்ளவள். பவுல் சொல்லியவை
களைக் கவனிக்கும்படி ஆண்டவர் அவள்
15 இருதயத்தைத் திறந்தருளினார். அவளும்
அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற
பின், அவள்: ஆண்டவரிடம் நான் விசுவாச
முள்ளவளென்று நீங்கள் எண்ணினால் என்
வீட்டில் வந்து தங்கியிருங்களென்று எங்
களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்.
16 ஜெபம்பண்ணுகிற இடத்துக்கு நாங்கள்
போகையில் ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்
பட்டாள்; அவள் குறிசொல்ல ஏவுகிற
ஆவியையுடையவள், குறிசொல்லுகிறதினால்
தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயம்
கிடைக்கச்செய்தவள். அவள் பவுலையும் 17
எங்களையும் பின்தொடர்ந்து: இவர்கள் உன்
னதமான கடவுளின் அடியார், இரட்சிப்பின்
வழியை உங்களுக்கு அறிவிக்கிறார்கள்
என்று சத்தமிட்டாள். பல நாட்களாக 18
இப்படியே செய்துகொண்டு வந்தாள்.
பவுல் வியாகுலப்பட்டுத் திரும்பிப் பார்த்து:
நீ இவளை விட்டுப்போகும்படி இயேசு
கிறிஸ்துவின் நாமத்தில் உனக்குக் கட்டளை
யிடுகிறேன் என்று அந்த ஆவிக்குச் சொன்
னான்; அந்நேரமே அது போய்விட்டது.
அவள் எஜமான்கள் தங்கள் ஆதாய நம் 19
பிக்கை போய்விட்டதென்று கண்டு, பவுலை
யும் சீலாவையும் பிடித்து, அம்பலத்தி
லிருந்த அதிபதிகளிடம் இழுத்துக்கொண்டு
போனார்கள். அவர்களை அதிகாரிகளிடம் 20
கொண்டுபோய்: யூதராகிய இந்த மனுஷர்
நமது பட்டணத்தைக் கலக்குகிறார்கள்;
ரோமராகிய நாம் அங்கீகரிக்கவும் அனுசரிக் 21
கவும் தகாத முறைமைகளைப் போதிக்கி
றார்கள் என்றார்கள். அப்பொழுது ஜனங்கள் 22
கூட்டங்கூடி அவர்களுக்கு விரோதமாய்
எழும்பினார்கள். அதிகாரிகள் அவர்கள்
வஸ்திரங்களைக் கிழித்து அவர்களை அடிக்கச்
சொன்னார்கள். அவர்களை அநேக அடி 23
அடித்துச் சிறைச்சாலையிலே வைத்து, அவர்
களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்
சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள்.
அவன் இப்படிப்பட்ட கட்டளை பெற்று 24
அவர்களை உட்காவலறையில் அடைத்து
அவர்கள் கால்களைத் தொழுமரத்திலடித்
தான். பவுலும் சீலாவுமோ நடுராத்திரியில் 25
ஜெபம் பண்ணி, கடவுளைத் துதித்துப் பாடி
னார்கள்; சிறையிலிருந்தவர்கள் அதைக்
கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடிதியில் 26
பூமி மிகவும் அதிர்ந்தது; அதனால் சிறைச்
சாலையின் அஸ்திபாரங்கள் அசைந்தன;
உடனே கதவுகளெல்லாம் திறவுண்டன;
எல்லாருடைய கட்டுகளும் கழன்று
போயின. சிறைச்சாலைக்காரன் திடுக்கிட் 27
டெழுந்து சிறைச்சாலையின் கதவுகள் திறந்
திருக்கிறதைக் கண்டு, சிறையிலிருந்தவர்கள்
ஓடிப்போயிருப்பார்களென்று எண்ணி,
பட்டயத்தை உருவித் தன்னைக் கொன்று
கொள்ளப் போனான். பவுலோ மிகுந்த 28
சத்தமிட்டு: உனக்குத் தீங்கு ஒன்றும்
செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும்
இங்கே இருக்கிறோம் என்றான். அப் 29
பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்
சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்
கும் சீலாவுக்கும் முன்விழுந்து, அவர்களை 30

வெளியே அழைத்து வந்து: ஐயன்மாரே,
இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய
31 வேண்டும் என்று கேட்டான். அதற்கு
அவர்கள்: ஆண்டவராகிய இயேசுவை விசு
வாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும்
இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி,
32 அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்
கும் கடவுளின் வார்த்தையைப் போதித்
33 தார்கள். மேலும் இரவில் அந்நேரத்தி
லேயே அவன் அவர்களை அழைத்துப்போய்,
அவர்கள் காயங்களைக் கழுவினான். அவனும்
அவனுடையவர்கள் அனைவரும் உடனே
34 ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன்
அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்
கொண்டுபோய் அவர்களுக்குப் போஜன
மளித்து, கடவுளை விசுவாசித்துத் தன் வீட்
டார் அனைவரோடுங்கூட மகிழ்ச்சியாயிருந்
தான்.
35 பொழுது விடியவே அதிகாரிகள் தலை
யாரிகளை அனுப்பி: அந்த மனுஷரை விட்டு
விடு என்று சொல்லச் சொன்னார்கள்.
36 சிறைச்சாலைக்காரன் பவுலுக்கு இவ்வார்த்தை
களை அறிவித்து: உங்களை விடுதலை செய்யும்
படி அதிகாரிகள் சொல்லியனுப்பியிருக்கி
றார்கள்; இப்பொழுது நீங்கள் புறப்பட்டுச்
சமாதானத்தோடு போங்கள் என்றான்.
37 பவுலோ அவர்களிடம்: ரோமராகிய எங்களை
அவர்கள் விசாரணை செய்யாமல், பகிரங்க
மாக அடித்துச் சிறைச்சாலையில் வைத்
தார்கள்; இப்பொழுது இரகசியமாய் எங்க
ளைத் துரத்திவிடுகிறார்களோ? அப்படியல்ல,
அவர்களே வந்து எங்களை வெளியே
அழைத்து அனுப்பிவிடட்டும் என்றான்.
38 தலையாரிகள் இந்தச் சங்கதியை அதிகாரி
களுக்கு அறிவித்தார்கள். அவர்கள் ரோமர்
என்று அதிகாரிகள் கேள்விப்பட்டபொழுது
39 பயந்து, வந்து அவர்களோடு நல்ல
வார்த்தை சொல்லி, அவர்களை வெளியே
அழைத்துச் சென்று, பட்டணத்திலிருந்து
போய்விடும்படி கேட்டுக்கொண்டார்கள்.
40 அப்படியே அவர்கள் சிறைச்சாலையிலிருந்து
வெளியேறி லீதியாளினிடத்திற்குப் போய்,
சகோதரரைக் கண்டு அவர்களைத் தைரியப்
படுத்தினபின் போய்விட்டார்கள்.

17 அவர்கள் அம்பிபொலி அப்பொ
லோனியா பட்டணங்களைக் கடந்து தெச
லோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள்;
அங்கே யூதருக்கு ஒரு ஜெபாலயம் இருந்
2 தது. பவுல் தன் வழக்கப்படியே அவர்க
ளிடம் போய், மூன்று ஓய்வுநாட்களாக
வேதவாக்கியங்களைக்கொண்டு அவர்களோடு
தர்க்கஞ்செய்து, கிறிஸ்து பாடுபடவும் மரித் 3
தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டிய
தென்றும், தான் அறிவிக்கிற இந்த
இயேசுவே கிறிஸ்து என்றும் அவர்களுக்கு
விளக்கிக் காட்டினான். அவர்களில் சிலரும், 4
பக்தியுள்ள கிரேக்கரில் திரளானவர்களும்,
பிரதான ஸ்திரீகளில் பலரும் அதை ஒப்புக்
கொண்டு பவுலையும் சீலாவையும் சேர்ந்து
கொண்டார்கள். யூதர் பொறாமைகொண்டு 5
பொல்லாதவர்களான சில வீணரைச் சேர்த்
துக்கொண்டு, கூட்டங்கூடி, பட்டணத்தில்
அமளியுண்டாக்கி, யாசோன் வீட்டைத்
தாக்கி, ஊரார்முன் கொண்டுவரும்படி அவர்
களைத் தேடினார்கள். அவர்களைக் காணாமல் 6
யாசோனையும் சில சகோதரரையும் பட்ட
ணத்து அதிகாரிகளிடம் இழுத்து வந்து:
உலகத்தைக் குழப்பினவர்கள் இங்கேயும்
வந்திருக்கிறார்கள். இவர்களை யாசோன் 7
வரவேற்றுக்கொண்டான். இவர்களெல்லா
ரும் இயேசு என்னும் வேறொருவனை ராஜா
என்று சொல்லிக்கொண்டு, ராயனுடைய
சட்டங்களுக்கு விரோதமாய் நடக்கிறார்க
ளென்று கூக்குரலிட்டு, இவைகளைக் கேட் 8
டுக்கொண்டிருந்த ஜனங்களையும் பட்ட
ணத்து அதிகாரிகளையும் கலங்கப்பண்ணி
னார்கள். பின்பு அவர்கள் யாசோனிடத்தி 9
லும் மற்றவர்களிடத்திலும் ஜாமீன் வாங்கிக்
கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள்.
உடனே சகோதரர் பவுலையும் சீலாவை 10
யும் இரவிலே பெரோயா பட்டணத்துக்கு
அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே
சேர்ந்து, யூதரின் ஜெபாலயத்திற்குப்
போனார்கள். இந்த யூதர் தெசலோனிக்கே 11
யில் இருந்தவர்களைப்பார்க்கிலும் பெருந்
தன்மையுடையவர்கள், திருவசனத்தை
மனோவாஞ்சையாய் ஏற்றுக்கொண்டு, காரி
யம் இப்படியிருக்கிறதா என்று தினந்
தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து
பார்த்துவந்தார்கள். அவர்களில் அநேக 12
ரும் கிரேக்க சீமாட்டிகள் புருஷர் பலரும்
விசுவாசிகளானார்கள். பெரோயாவிலும் 13
கடவுளின் வார்த்தை பவுலினால் அறிவிக்கப்
பட்டதென்று தெசலோனிக்கேயரான யூதர்
அறிந்து, அங்கேயும் வந்து ஜனங்களை
எழுப்பிவிட்டுக் கலக்கினார்கள். உடனே 14
சகோதரர் பவுலைச் சமுத்திரம் வரைக்கும்
போகும்படி அனுப்பிவிட்டார்கள். சீலாவும்
தீமோத்தேயுவும் அங்கே தங்கியிருந்தார்கள்.
பவுலை வழியனுப்ப வந்தவர்கள் அத்தேனே 15
பட்டணம் வரைக்கும் அவனைக் கூட்டி
வந்து, சீலாவும் தீமோத்தேயுவும் அதிசீக்
கிரம் அவனிடம் வரும்படி அவர்களுக்குச்

சொல்லக் கட்டளை பெற்றுக்கொண்டு,
போய்விட்டார்கள்.
16 அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்கள்
வரக் காத்துக்கொண்டிருக்கையில், அந்தப்
பட்டணம் விக்கிரகங்கள் நிறைந்திருக்கிற
தைக் கண்டு, தன் ஆவியில் வைராக்கியங்
17 கொண்டு, ஜெபாலயத்தில் யூதரோடும் பக்தி
யுள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்
பட்டவர்களோடும் தினந்தோறும் தர்க்கஞ்
18 செய்துவந்தான். எப்பிக்கூரரும் ஸ்தோயிக்
கருமான தத்துவ சாஸ்திரிகளில் சிலர் அவ
னோடே விவாதம்பண்ணிவந்தார்கள். சிலர்:
இந்த வாயாடி சொல்ல விரும்புகிறதென்ன
என்றார்கள். சிலர்: இவன் அந்நிய தேவதை
களை அறிவிக்கிறவனாகத் தெரிகிறது என்
றார்கள். அவன் இயேசுவையும் உயிர்த்
தெழுதலையும் நற்செய்தியாகப் பிரசங்கித்த
படியினால் அப்படிச் சொன்னார்கள்.
19 அவர்கள் அவனை அரையொபாகுக்கு
அழைத்துப்போய்: நீர் சொல்லுகிற புதிதான
உபதேசம் இன்னதென்று நாங்கள் அறிய
20 லாமா? விபரீத காரியங்களை எங்கள்
காதுகள் கேட்கப்பண்ணுகிறீர்; அவற்றின்
கருத்து இன்னதென்று அறிய விரும்பு
21 கிறோம் என்றார்கள். அத்தேனே பட்ட
ணத்தாரனைவரும், அங்கே தங்குகிற அந்நி
யரும், நூதன காரியங்களைச் சொல்வதிலும்
கேட்பதிலுமேயொழிய வேறொன்றிலும்
பொழுதுபோக்குகிறதில்லை.
22 அப்பொழுது பவுல் அரையொபாகின்
நடுவில் நின்று: அத்தேனரே, நீங்கள் எவ்
விதத்திலும் மிகுந்த தேவதாபக்தியுள்ளவர்க
23 ளென்று காண்கிறேன். எப்படியென்றால்,
நான் சுற்றித்திரிந்து நீங்கள் வணங்குகிற
வைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது,
அறியப்படாத கடவுளுக்கு என்று எழுதி
யிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்;
நீங்கள் அறியாமல் ஆராதிக்கிறதெதுவோ
அதையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.
24 உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும்
படைத்த கடவுள் வானத்துக்கும் பூமிக்கும்
கர்த்தர்; கைகளினால் செய்யப்பட்ட
கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிற
25 தில்லை; எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்
தையும் யாவற்றையும் கொடுக்கிற அவர்,
தமக்கு ஏதோ ஒன்று தேவையாயிருப்பது
போல் மனுஷர் கைகளால் பணிவிடை
26 கொள்ளுகிறதுமில்லை. மனுஷ ஜாதியான
சகல ஜனங்களையும், அவர் ஒன்றிலிருந்தே
உண்டுபண்ணி, பூமியின்மீதெங்கும் குடி
யிருக்கச்செய்து, குறிக்கப்பட்ட காலங்களை
யும் குடியிருப்பின் எல்லைகளையும் அவரவ
ருக்கு ஏற்படுத்தியிருக்கிறார். கடவுளாகிய 27
தம்மை அவர்கள் தடவியாகிலும் தேடிக்
கண்டுபிடிக்கத்தக்கதாக அவர் அப்படிச்
செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும்
தூரமானவரல்ல. நாம் அவருக்குள் பிழைக் 28
கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்
படியே உங்கள் கவிஞரிலும் சிலர்: நாம்
அவர் சந்ததியார் என்று சொல்லியிருக்கி
றார்கள். நாம் கடவுளின் சந்ததியாரா 29
யிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினா
லும் யுக்தியினாலும் உருவாக்கப்பட்ட
பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத்
தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்க
லாகாது. அறியாமையின் காலங்களைக் 30
கடவுள் காணாதவர்போலிருந்தார்; இப்
பொழுதோ எல்லா இடங்களிலுமுள்ள
யாவரும் மனந்திரும்பவேண்டுமென்று
மனுஷருக்குக் கட்டளையிடுகிறார். ஏனெ 31
னில் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே
அவர் தாம் நியமித்த புருஷனைக்கொண்டு
பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்க்கப்
போகிறார்; அவரை மரித்தோரிலிருந்து
எழுப்பினதினாலே இதை எல்லாருக்கும்
நிச்சயப்படுத்தியிருக்கிறார் என்று சொன்
னான்.
மரித்தோரின் உயிர்த்தெழுதல் என்பதை 32
அவர்கள் கேட்டபொழுது சிலர் பரிகாசம்
பண்ணினார்கள்; வேறு சிலரோ: இன்னொரு
தடவை நீர் இதைப்பற்றிப் பேசுவதைக்
கேட்போம் என்றார்கள். இப்படியிருக்க, 33
பவுல் அவர்களைவிட்டுப் போய்விட்டான்.
சிலரோ அவனைச் சேர்ந்துகொண்டு விசுவாசி 34
களானார்கள். அவர்களில் அரையொபாகின்
நியாயாதிபதிகளில் ஒருவனாகிய தியொனீசியு
என்பவனும், தாமரி என்னும் ஒரு ஸ்திரீ
யும், இவர்களோடு வேறு சிலரும் இருந்
தார்கள்.

அதன்பின்பு அவன் அத்தேனே பட்ட **18**
ணத்தைவிட்டு, கொரிந்து பட்டணத்துக்கு
வந்தான். பொந்து தேசத்தானாகிய ஆக்கிலா 2
என்னும் ஒரு யூதனையும் அவன் மனைவி
பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு அவர்க
ளிடத்திற்குப் போனான். யூதரெல்லாரும்
ரோமாபுரியைவிட்டுப் போகும்படி கிலவுதியு
ராயன் கட்டளை பிறப்பித்திருந்தபடியால்,
இவர்கள் இத்தாலியாவை விட்டு அப்போது
தான் வந்திருந்தார்கள். அவர்கள் கூடாரஞ் 3
செய்கிற தொழிலாளிகள். பவுலும் அதே
தொழில் செய்கிறவனானபடியினால் அவர்க
ளிடம் தங்கி வேலைசெய்துகொண்டுவந்தான்.
ஓய்வுநாள்தோறும் அவன் ஜெபாலயத்திலே 4

பேசி, யூதரும் கிரேக்கரும் ஒப்புக்கொள்ளத்
தக்கதாகத் தர்க்கஞ் செய்துவந்தான்.
5 மக்கெதோனியாவிலிருந்து சீலாவும்
தீமோத்தேயுவும் வந்தபோது, இயேசுவே
கிறிஸ்து என்று யூதருக்குப் பவுல் வற்பு
றுத்திக்கூறி, திருவசனத்தை இடைவிடாமல்
6 போதித்துக்கொண்டிருந்தான். அவர்கள்
எதிர்த்துநின்று தூஷித்தபோது, அவன்
தன் வஸ்திரங்களை உதறிவிட்டு: உங்கள்
இரத்தப்பழி உங்கள் தலைமேலே இருக்கும்,
நான் குற்றமற்றவன். இதுமுதல் புறஜாதியா
ரிடம் போகிறேனென்று அவர்களிடம்
7 சொல்லி, | அவ்விடத்தைவிட்டு, தேவபக்தி
யுள்ளவனான தித்தியு யுஸ்து என்னும் ஒரு
வன் வீட்டிற்கு வந்தான்; அவன் வீடு
8 ஜெபாலயத்தை அடுத்திருந்தது. ஜெபால
யத் தலைவன் கிறிஸ்பு தன் வீட்டார் அனைவ
ரோடும் ஆண்டவரை விசுவாசித்தான்.
கொரிந்தியரில் அநேகரும் கேட்டு, விசுவா
9 சித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள். இர
விலே ஆண்டவர் பவுலுக்குத் தரிசனமாகி:
10 பயப்படாதே, பேசு, மவுனமாயிராதே; | நான்
உன்னோடிருக்கிறேன், உனக்குத் தீங்கு
செய்யும்படி ஒருவனும் உன்னைத் தொடுவ
தில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு
11 அநேக ஜனங்கள் உண்டு என்றார். கடவு
ளின் வார்த்தையை அவர்கள் நடுவில் உப
தேசம்பண்ணிக்கொண்டு, ஒரு வருஷமும்
ஆறு மாதமும் அவன் அங்கே இருந்து
விட்டான்.
12 கல்லியோன் அகாயாநாட்டு அதிபதியா
யிருக்கையில், யூதர் ஏகமனமாய்ப் பவுலுக்கு
விரோதமாய் எழும்பி அவனை நியாயாசனத்
13 தின்முன் கொண்டுபோய்: இவன் நியாயப்
பிரமாணத்துக்கு விரோதமான முறையாய்க்
கடவுளை வணங்கும்படி மனுஷருக்குப்
14 போதிக்கிறான் என்றார்கள். பவுல் பேச
வாயெடுக்கையில் கல்லியோன் யூதரைப்
பார்த்து: யூதரே, இது அநியாயம் அல்லது
மகா அக்கிரமம் என்றால், நான் உங்களுக்
குப் பொறுமையாய்ச் செவிகொடுப்பது
15 நியாயம்; இது சொற்களுக்கும் நாமங்களுக்
கும் உங்கள் வேதத்துக்கும் அடுத்த
விவாதம் என்றால், நீங்களே பார்த்துக்கொள்
ளுங்கள், இவற்றை விசாரிக்க எனக்கு மன
16 மில்லை என்று சொல்லி, அவர்களை நியாயா
17 சனத்தினின்று துரத்திவிட்டான். எல்லா
ரும் ஜெபாலயத் தலைவன் சொஸ்தேனே
யைப் பிடித்து, நியாயாசனத்தின்முன் அடித்
தார்கள். கல்லியோன் இவற்றில் ஒன்றை
யும் கவனிக்கவில்லை.
18 பவுலோ இன்னும் வெகு நாள் அங்கே
தங்கியபின், சகோதரரிடம் உத்தரவு பெற்
றுக்கொண்டு, தனக்குப் பொருத்தனை
இருந்தபடியால் கெங்கிரேயாவில் தலைச்
சவரம்பண்ணிக்கொண்டு, சீரியாநாட்டுக்
குப் போகக் கப்பலேறினான். பிரிஸ்கில்லா
ளும் ஆக்கிலாவும் அவனோடு போனார்கள்.
அவர்கள் எபேசுவுக்கு வந்தார்கள்; அவன் 19
அவர்களை அங்கே விட்டு நீங்கி, ஜெபாலயத்
திற்குப் போய் யூதரோடு தர்க்கஞ்செய்தான்.
அவன் இன்னும் சிலகாலம் தங்களோடு 20
இருக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்
கொண்டபோது, அவன் சம்மதிக்கவில்லை.
கடவுளுக்குச் சித்தமானால் தான் திரும்பி 21
அவர்களிடம் வருவதாகச் சொல்லி விடை
பெற்றுக்கொண்டு, கப்பலேறி, எபேசுவை
விட்டுப் போனான். செசரியாவுக்கு வந் 22
திறங்கி, எருசலேமுக்குப் போய், சபையை
வினவிக்கொண்டு, அந்தியோகியாவுக்குப்
போனான். அங்கே சிலகாலம் தங்கியபின் 23
புறப்பட்டு, முறையே கலாத்தியா பிரதேசத்
திலும் பிரிகியாவிலும் சுற்றித்திரிந்து, சீஷ
ரெல்லாரையும் ஸ்திரப்படுத்திவந்தான்.
அப்பொல்லோ என்னும் யூதன் ஒருவன் 24
எபேசுவுக்கு வந்தான். இவன் அலெக்சந்
திரியா பட்டணத்தான், சாதுரியவான்,
வேதாகமங்களில் வல்லவன். அவன் ஆண் 25
டவரின் மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு,
ஆவியில் அனலுள்ளவனாய் இயேசுவுக்கடுத்
தவைகளைப் பேசித் திட்டமாய்ப் போதித்துக்
கொண்டுவந்தான். அவன் யோவான்
கொடுத்த ஞானஸ்நானத்தைமாத்திரம் அறிந்
தவன். அவன் ஜெபாலயத்தில் தைரிய 26
மாய்ப் பேசத் தொடங்கினான். பிரிஸ்கில்லா
ளும் ஆக்கிலாவும் அவன் பேசுகிறதைக்
கேட்டு, அவனைக் கூட்டிக்கொண்டுபோய்,
கடவுளின் மார்க்கத்தை அதிகத் திட்டமாய்
அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்.
பின்பு அவன் அகாயாவுக்குக் கடந்துபோக 27
விரும்புகையில் சகோதரர் அவனை உற்சா
கப்படுத்தி, அவனை வரவேற்றுக்கொள்ளும்
படி சீஷருக்கு எழுதினார்கள். அவன்
அங்கே வந்துசேர்ந்து, கிருபையின் மூல
மாய் விசுவாசிகளானவர்களுக்கு மிகவும்
உதவியாயிருந்தான். அவன் வெளிப்படை 28
யாக யூதரோடு பலமாய் எதிர்வாதஞ்செய்து,
இயேசுவே கிறிஸ்து என்று வேதவாக்கியங்
களைக்கொண்டு காட்டினான்.

அப்பொல்லோ கொரிந்துவில் இருக்கை **19**
யில், பவுல் மேட்டுப்பிரதேசங்களின் வழி
யாய்ப் போய், எபேசுவுக்கு வந்தான். அங்கே
சில சீஷரைக் கண்டு: நீங்கள் விசுவாசிக 2

ளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்
களா என்று கேட்டான். அதற்கு அவர்கள்:
பரிசுத்த ஆவி உண்டென்பதையே நாங்கள்
3 கேள்விப்படவில்லை என்றார்கள். அப்படி
யானால் நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்
றீர்கள் என்று அவன் கேட்க, அவர்கள்:
யோவான் கொடுத்த ஞானஸ்நானம் என்
4 றார்கள். அப்பொழுது பவுல்: யோவான்
தனக்குப்பின் வருகிறவராகிய இயேசுவை
விசுவாசிக்கவேண்டுமென்று ஜனங்களுக்குச்
சொல்லி, மனந்திரும்புதலுக்குரிய ஞானஸ்
நானத்தைக் கொடுத்தானே என்றான்.
5 அதைக் கேட்டபோது, ஆண்டவராகிய
இயேசுவின் நாமத்திற்குள்ளாக அவர்கள்
6 ஞானஸ்நானம் பெற்றார்கள். பவுல் அவர்கள்
மேல் கைகளை வைக்கவே, பரிசுத்த ஆவி
அவர்கள்மேல் வந்தார்; அப்பொழுது
அவர்கள் [1]நாவுகளால் பேசி, தீர்க்கதரிசனம்
7 சொன்னார்கள். அவர்கள் எல்லாரும் ஏறக்
குறையப் பன்னிரண்டுபேர்.
8 பின்பு அவன் ஜெபாலயத்திற்குப்போய்,
தைரியமாய்ப் பேசி, மூன்று மாதமளவும்
கடவுள் ராஜ்யத்தைப்பற்றித் தர்க்கஞ்
செய்து, கேட்டவர்கள் ஒப்புக்கொள்ளும்
9 படி செய்ய முயன்றான். சிலர் கடினப்
பட்டு, இணங்காதவர்களாகி, ஜனத்திரளின்
முன் இந்த மார்க்கத்தைப்பற்றித் தீதுபேசின
போது, அவன் அவர்களைவிட்டு விலகி,
சீஷரைப் பிரத்தியேகப்படுத்திக்கொண்டு,
திறன்னு என்பவனுடைய வித்தியாசாலையில்
அநுதினமும் தர்க்கஞ் செய்துவந்தான்.
10 இப்படி இரண்டு வருஷகாலம் நடந்து
வந்ததினால் ஆசியாவில் குடியிருந்த யூதர்
கிரேக்கர் யாவரும் ஆண்டவரின் வார்த்தை
11 யைக் கேட்டார்கள் பவுலின் கைகளினால்
கடவுள் விசேஷித்த அற்புதங்களை நடப்பித்
12 தருளினார். அவன்மேல் பட்ட உறுமால்
களையும் கச்சைகளையும் கொண்டுபோய்
வியாதிக்காரர்மேல் போட, வியாதிகள் அவர்
களை விட்டு நீங்கிப்போயின; பொல்லாத
13 ஆவிகளும் அகன்றன. அப்பொழுது
தேசாந்தரிகளான யூத மந்திரவாதிகளில்
சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்த
வர்கள்மேல் ஆண்டவராகிய இயேசுவின்
திருநாமத்தை உச்சரிக்கத் துணிந்து: பவுல்
பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணை
யிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்
14 என்றார்கள். இப்படிச் செய்தவர்கள் யூத
பிரதான ஆசாரியன் ஸ்கேவா என்னும் ஒரு
15 வன் குமாரர் ஏழுபேர். பொல்லாத ஆவி
அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன்,
பவுலும் தெரியும், நீங்கள் யார் என்று
சொல்லவே, பொல்லாத ஆவியுடைய மனு 16
ஷன் அவர்கள்மேல் பாய்ந்து, அவர்களை
அடக்கி, இருவரையும் மேற்கொண்டான்.
அவர்கள் ஆடைகளை இழந்தவர்களாய்,
காயப்பட்டு அந்த வீட்டைவிட்டு ஓட்டம்
பிடித்தார்கள். இது எபேசுவில் குடி 17
யிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும்
தெரியவரவே அவர்களனைவருக்கும் பயம்
பிடித்தது. ஆண்டவராகிய இயேசுவின்
நாமம் மகிமைப்பட்டது. விசுவாசிகளான 18
வர்களில் அநேகர் வந்து தங்கள் செய்கை
களைத் தெரிவித்து அறிக்கையிட்டார்கள்.
மாயவித்தைக்காரரில் அநேகர் தங்கள் 19
புஸ்தகங்களைக் கொண்டுவந்து எல்லாருக்கும்
முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவற்றின்
கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினா
யிரம் வெள்ளிக்காசு என்று கண்டார்கள்.
இப்படியாக ஆண்டவரின் வார்த்தை பல 20
மாய் விருத்தியடைந்து மேற்கொண்டது.
இவைகள் முடியவே, பவுல் மக்கெ 21
தோனியா அகாயா நாடுகளில் சுற்றித்
திரிந்து, எருசலேமுக்குப் போகும்படி
ஆவிக்குள் நிர்ணயித்துக்கொண்டு: நான்
அங்கே போனபின்பு ரோமாபுரியையும்
பார்க்கவேண்டுமென்று சொல்லி, தனக்கு 22
உதவிசெய்தவர்களில் இருவராகிய தீமோத்
தேயுவையும் எரஸ்துவையும் மக்கெதோனி
யாவுக்கு அனுப்பிவிட்டு, தான் பின்னும்
சிலகாலம் ஆசியாவிலே தங்கினான்.
அக்காலத்தில் இந்த மார்க்கத்தைப்பற்றி 23
உண்டான கலகம் கொஞ்சமல்ல. தெமேத் 24
திரியு என்னும் ஒரு தட்டான் [2]அர்த்தெமி
தேவியின் கோவில்போன்ற சிறு கோவில்களை
வெள்ளியினால் செய்து, தொழிலாளருக்கு
மிகுந்த ஆதாயம் வருவித்துக்கொண்டிருந்
தான். இவர்களையும் இப்படிப்பட்டவை 25
களைச் செய்கிற மற்றத் தொழிலாளரையும்
அவன் கூடிவரச்செய்து: மனுஷரே, இந்தத்
தொழிலினால் நமக்கு நல்ல பிழைப்பு
உண்டாயிருக்கிறதென்று உங்களுக்குத்
தெரியும். இப்படியிருக்க, கைகளினால் 26
செய்யப்பட்ட தேவர்கள் தேவர்களல்ல
வென்று இந்தப் பவுல் சொல்லி, எபேசுவில்
மாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா
எங்கும் அநேக ஜனங்களுக்குப் போதித்து,
அவர்களை வசப்படுத்திக்கொண்டான் என்று
நீங்கள் கண்டும் கேட்டும் வருகிறீர்கள்.
இதனால் நமது தொழில் மதிப்பற்றுப் 27

[1] 1 கொரி. 12: 10 பார்க்க. [2] தியானாள்

போவதுமல்லாமல், மகாதேவியாகிய அர்த்
தெமியின் கோவில் எண்ணமற்றுப்போகு
மென்றும், ஆசியா முழுமையும் பூச்சக்கர
மும் சேவிக்கிற அவள் மகத்துவம் அற்றுப்
போகுமென்றும் பயப்பட ஏதுவாயிருக்
28 கிறது என்று சொன்னான். அவர்கள்
இதைக்கேட்டுக் கோபம் நிறைந்தவர்களாய்:
எபேசியரின் அர்த்தெமியே பெரியவள்
29 என்று சத்தமிட்டார்கள். பட்டணம் எங்
கும் அமளி உண்டாயிற்று. பவுலுக்கு
வழித்துணையாய் வந்திருந்த மக்கெதோனிய
ராகிய காயுவையும் அரிஸ்தர்க்குவையும்
அவர்கள் இழுத்துக்கொண்டு, ஏகமனமாய்
30 அரங்கசாலைக்கு ஓடினார்கள். பவுல் கூட்
டத்துக்குள் போக மனமாயிருந்தான்;
31 சீஷரோ அவனைப் போகவிடவில்லை. ஆசியா
நாட்டுத் தலைவரில் அவனுக்குச் சிநேகிதரா
யிருந்த சிலரும் அவனிடம் ஆள் அனுப்பி,
அரங்கசாலைக்குள் போகவேண்டாம் என்று
32 எச்சரித்தார்கள். கூட்டத்தில் அமளியுண்
டாகவே, சிலர் இப்படியும் சிலர் அப்படியு
மாகக் கூச்சலிட்டார்கள்; தாங்கள் கூடி
வந்த காரணம் இன்னதென்று பெரும்பால
33 ருக்குத் தெரியாது. அப்பொழுது யூதர்
தூண்டிவிடவே, ஜனக்கூட்டத்தில் சிலர்
அலெக்சந்தர் என்பவனை முன்னிற்கத்
தள்ளிவிட்டார்கள். அலெக்சந்தர் கை
யமர்த்தி, ஜனங்களுக்கு நியாயத்தை எடுத்
34 துப்பேச மனமாயிருந்தான். அவன் யூத
னென்று அவர்கள் அறிந்தபோது, எபேசிய
ரின் அர்த்தெமியே பெரியவளென்று
இரண்டு மணிநேரம் எல்லாரும் ஏகமாய்ச்
35 சத்தமிட்டுக்கொண்டிருந்தார்கள். பட்ட
ணத்துச் சம்பிரதியானவன் ஜனங்களை
அமர்த்தி: எபேசியரே, எபேசியரின் பட்ட
ணம் மகாதேவியாகிய அர்த்தெமிக்கும்
வானத்திலிருந்து விழுந்த சிலைக்கும் க்ஷேத்
திர பரிபாலனன் என்பதை அறியாதவ
36 னுண்டோ? இவை எதிர்பேசப்படாத காரி
யங்கள்; நீங்கள் அமர்ந்திருக்கவேண்டும்,
37 ஒன்றும் பதறிச் செய்யவேண்டாம். இந்த
மனுஷரை இங்கே கொண்டுவந்தீர்கள்;
இவர்கள் கோவிற் கொள்ளைக்காரருமல்ல,
நம் தேவியைத் தூஷிக்கிறவர்களுமல்ல;
38 தெமேத்திரியுவுக்கும் அவனைச் சேர்ந்த
தொழிலாளிகளுக்கும் ஒருவன்மேல் ஏதே
னும் வழக்கு இருந்தால், நியாயம் விசா
ரிக்கும் நாட்களுண்டு, அதிபதிகளும் இருக்
கிறார்கள்; ஒருவர்பேரிலொருவர் வழக்
39 காடிக்கொள்ளட்டும். நீங்கள் வேறே
யாதேனுமொரு காரியத்தைப்பற்றி விசாரிக்
கிறதானால், அது கிரமமாய்க் கூடும் சபை
யில் தீர்க்கப்படும். இன்றைய கலகத்தைப் 40
பற்றி நம்மேல் குற்றம் சாட்டப்பட ஏது
உண்டு; இது காரணமில்லாமல் நடந்திருக்
கிறது. இந்த அமளிக்கு நாம் நியாயஞ்
சொல்ல முடியாதே என்று சொன்னான்.
இப்படிச் சொல்லிக் கூட்டத்தை அனுப்பி 41
விட்டான்.

கலகம் அமர்ந்தபின்பு பவுல் சீஷரை வர 20
வழைத்துத் தைரியப்படுத்தி, விடைபெற்
றுக்கொண்டு, மக்கெதோனியாவுக்குப்
போகப் புறப்பட்டான். அவன் அந்தப் 2
பிரதேசங்களில் சுற்றித்திரிந்து, சீஷர்களுக்கு
வெகுவாய்ப் புத்திசொல்லி, அவர்களைத்
தைரியப்படுத்திவிட்டு, கிரேக்கு தேசம்
போய்ச் சேர்ந்தான். அங்கே அவன் மூன்று 3
மாதம் தங்கியபின், கப்பலேறி, சீரியா
தேசத்துக்குப் போகவேண்டுமென்றிருக்கை
யில், யூதர் அவனுக்கு விரோதமாய்ச் சதி
யோசனை செய்துகொண்டிருந்தபடியால்,
மக்கெதோனியா வழியாய்த் திரும்பிப்போகத்
தீர்மானித்தான். பிருவின் குமாரனாகிய 4
பெரோயா ஊரான் சோபத்தர், தெசலோனிக்
கேயரில் அரிஸ்தர்க்கு, செக்குந்து, தெர்பை
ஊரான் காயு, தீமோத்தேயு, ஆசியா நாட்
டாராகிய தீகிக்கு, துரோப்பீமு என்ற
இவர்கள் அவனோடே கூடப்போனார்கள்.
இவர்கள் முன்னதாகப் போய், துரோவாவில் 5
எங்களுக்காகக் காத்திருந்தார்கள். புளிப் 6
பில்லா அப்பப்பண்டிகை நாட்களுக்குப்
பின் நாங்கள் கப்பலேறி, பிலிப்பியைவிட்டு,
ஐந்து நாட்களுக்குள் துரோவாவுக்கு அவர்க
ளிடம் போய்ச் சேர்ந்தோம். அங்கே ஏழு
நாள் தங்கியிருந்தோம்.

வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட் 7
கும்படி நாங்கள் கூடிவந்திருக்கையில்,
பவுல் மறுநாள் புறப்படவேண்டுமென்
றிருந்தபடியால், சீஷரோடு பேசி, நடுராத்திரி
வரையில் நெடுநேரம் பிரசங்கித்துக்கொண்
டிருந்தான். நாங்கள் கூடியிருந்த மேல் 8
வீட்டில் அநேக விளக்குகளிருந்தன. ஐத்திகு 9
என்னும் வாலிபன் ஒருவன் ஜன்னலில்
உட்கார்ந்திருந்தான். பவுல் நெடுநேரம்
பேசிக்கொண்டிருக்கையில், அவன் மிகுந்த
தூக்கங்கொண்டு, நித்திரை மயக்கத்தினால்
சாய்ந்து, மூன்றும் மெத்தையிலிருந்து கீழே
விழுந்து, மரித்தவனாக எடுக்கப்பட்டான்.
பவுல் இறங்கிப்போய், அவனைக் கட்டி 10
அணைத்துக்கொண்டு: சந்தடி செய்யவேண்
டாம், இவன் உயிர் இவனுக்குள் இருக்
கிறது என்றான். பின்பு மேலே போய், 11
அப்பம் பிட்டு, போஜனஞ்செய்து, விடியு

மட்டும் வெகுநேரம் சம்பாஷித்துக்கொண்
12 டிருந்தபின் புறப்பட்டான். வாலிபனை உயி
ருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவரவே,
அவர்கள் அடைந்த ஆறுதலுக்கு அள
வில்லை.
13 பவுல் அஸ்ஸோ பட்டணம் வரைக்கும்
கரைவழியாய்ப் போகவேண்டுமென்றிருந்த
தால், அவன் திட்டம்பண்ணியிருந்தபிர
காரம், நாங்கள் முன்னதாகக் கப்பலேறி,
அவனை ஏற்றிக்கொள்ளும்படி அங்கே
14 போயிருந்தோம். அஸ்ஸோவில் அவன் எங்க
ளோடு சேர்ந்தபோது, நாங்கள் அவனை ஏற்
றிக்கொண்டு மித்திலேனே பட்டணத்துக்கு
15 வந்தோம். நாங்கள் கப்பலேறி, அவ்விடம்
விட்டு, மறுநாளில் கீயுதீவுக்கு எதிராக
வந்து, இரண்டாம் நாள் சாமுதீவுக்கு
நேராய்ச்சென்று, அடுத்த நாள் மிலேத்துப்
16 பட்டணத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். கூடு
மானால் பெந்தெகொஸ்தே நாளில் எருசலே
மில் இருக்கவேண்டுமென்று பவுல் துரிதப்
பட்டபடியால், ஆசியாவில் காலதாமதஞ்
செய்யாதபடி எபேசுவைக் கடந்துபோக
வேண்டுமென்று தீர்மானித்திருந்தான்.
17 மிலேத்துவிலிருந்து அவன் எபேசுவுக்கு
ஆள் அனுப்பி, சபையின் மூப்பரை வர
18 வழைத்தான். அவர்கள் வந்து சேரவே,
அவன் அவர்களிடம்: நான் ஆசியா நாட்
டில் கால்வைத்த நாள் தொடங்கி, இங்
கிருந்த காலமெல்லாம் உங்களோடு இன்ன
விதமாய் இருந்தேனென்பது உங்களுக்குத்
19 தெரியும். மிகுந்த தாழ்மையோடும் கண்
ணீரோடும், யூதரின் சதியோசனைகளால்
எனக்கு நேரிட்ட சோதனைகளிலும் நான்
20 ஆண்டவரைச் சேவித்தேன். பிரயோஜன
மானவைகளில் ஒன்றையும் நான் உங்
களுக்கு மறைத்துவைக்காமல், பகிரங்கமாக
வும் வீடுவீடாகவும் உங்களுக்கு உபதே
21 சித்து அறிவித்தேன். கடவுளிடம் மனந்
திரும்புவதைப்பற்றியும், நம்முடைய ஆண்
டவராகிய இயேசுவில் விசுவாசம் வைப்ப
தைப்பற்றியும் நான் யூதருக்கும் கிரேக்கருக்
22 கும் வற்புறுத்திக் கூறினேன். ஆவியில் கட்
டுண்டவனாய் இப்பொழுது எருசலேமுக்
குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடப்
போகிற காரியங்கள் எனக்குத் தெரியாது.
23 கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்குக்
காத்திருக்கின்றனவென்று பரிசுத்த ஆவி
யானவர் பட்டணந்தோறும் வற்புறுத்திக்
கூறுகிறார். அது மாத்திரம் எனக்குத்
24 தெரியும். ஆகிலும் என் உயிரை ஒரு
பொருட்டாக மதியேன், அருமையாக எண்
ணேன்; என் ஓட்டத்தை முடிக்கவும்,
கடவுளுடைய கிருபையின் சுவிசேஷத்தை
வற்புறுத்திக் கூறும்படி ஆண்டவராகிய
இயேசுவினிடம் நான் பெற்றுக்கொண்ட
ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்பு
கிறேன். நான் உங்களுக்குள் சுற்றித் திரிந்து 25
ராஜ்யத்தைப் பிரசங்கித்ததைக் கேட்டவர்க
ளாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்
தைக் காண்பதில்லை என்பது எனக்குத்
தெரியும். கடவுளின் ஆலோசனையில் ஒன் 26
றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லா
வற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.
ஆதலால் எல்லாருடைய இரத்தப்பழிக்கும் 27
நான் நீங்கினவனென்று இன்றையதினம்
உங்களுக்கு வற்புறுத்திக் கூறுகிறேன். உங் 28
களைக்குறித்தும், கடவுள் தமது சுய இரத்தத்தி
னால் சம்பாதித்துக்கொண்ட தமது சபையை
மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களை அத்தி
யட்சர்களாக வைத்த மந்தை முழுவதையுங்
குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். நான் 29
போனபின்பு மந்தையைத் தப்பவிடாத
கொடிய ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.
சீஷர்களைத் தங்கள்பின்னே இழுத்துக்கொள் 30
ளும்படி மாறுபாடானவைகளைப் பேசுகிற
வர்கள் உங்களிலும் எழும்புவார்களென்பது
எனக்குத் தெரியும். ஆனபடியால் விழித் 31
திருங்கள்; நான் மூன்று வருஷகாலம் இர
வும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல்
ஒவ்வொருவருக்கும் புத்திசொல்லி வந்தே
னென்பதை நினைத்துக்கொள்ளுங்கள். இப் 32
பொழுது உங்களை ஆண்டவருக்கும் அவர்
கிருபையின் வார்த்தைக்கும் ஒப்புவிக்
கிறேன்; பக்தி விருத்தியையும், பரிசுத்தமாக்
கப்பட்ட அனைவருக்குள்ளும் சுதந்தரத்தை
யும் கொடுப்பதற்கு அது வல்லமையுள்ளது.
எவனுடைய வெள்ளிக்கும் பொன்னுக்கும் 33
வஸ்திரத்துக்கும் நான் ஆசைப்படவில்லை.
எனக்கும் என்னோடிருந்தவர்களுக்கும் 34
வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே
வேலைசெய்தன என்று நீங்கள் அறிவீர்கள்.
இவ்விதமாய் உழைத்து, பலவீனரைத் 35
தாங்கவேண்டுமென்றும், வாங்குவதைப்
பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியமென்று
ஆண்டவராகிய இயேசு சொன்ன வார்த்தை
களை நினைத்துக்கொள்ளவேண்டுமென்றும்,
எல்லாவற்றிலும் உங்களுக்கு மாதிரி காண்
பித்தேன் என்று சொன்னான்.
இவைகளைச் சொன்னபின்பு, அவன் 36
அவர்களெல்லாரோடும் முழங்காற்படியிட்டு
ஜெபித்தான். அவர்களெல்லாரும் மிகவும் 37
அழுது, இனி என் முகத்தை நீங்கள் காண்ப
தில்லை என்று அவன் சொன்ன வார்த்தையி
னாலே அதிகமாய்த் துக்கப்பட்டு, பவுலின் 38

கழுத்தைக் கட்டி, திரும்பத் திரும்ப முத்த
மிட்டு, கப்பல் வரைக்கும் போய் அவனை
வழிவிட்டனுப்பினார்கள்.

21 நாங்கள் அவர்களை விட்டுப்பிரிந்து துறை
பெயர்ந்தபின் நேராய்ச் சென்று, கோஸ்
தீவையும் மறுநாளில் ரோது தீவையும்
சேர்ந்து, அவ்விடம்விட்டுப் பத்தாரா பட்
2 டணத்துக்கு வந்தோம். பெனிக்கியா நாட்
டுக்குப் போகிற ஒரு கப்பலை அங்கே கண்டு
3 அதில் ஏறிப்போனோம். சீப்புருதீவு எங்க
ளுக்குத் தென்பட்டபோது அதை இடது
புறமாக விட்டு, சீரியா நாட்டிற்குச்சென்று
தீருவின் கரைபிடித்தோம்; அங்கே கப்பலின்
சரக்குகளை இறக்கவேண்டியதாயிருந்தது.
4 சீஷரைத் தேடிக் கண்டுபிடித்து அங்கே
ஏழுநாள் தங்கினோம். அவர்கள் ஆவியினால்
ஏவப்பட்டு, பவுலினிடம்: எருசலேமில் நீர்
கால்வைக்க வேண்டாமென்று சொன்
5 னார்கள். அந்த நாட்கள் முடிந்தபின்
நாங்கள் புறப்பட்டுப் போகையில், அவர்க
ளெல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைக
ளோடும் பட்டணத்துக்கு வெளியே எங்க
ளோடு வந்து வழிவிட்டனுப்பினார்கள்.
கடற் கரையிலே நாங்கள் முழங்காற்படி
6 யிட்டு ஜெபம்பண்ணி, ஒருவரிடமொருவர்
விடைபெற்றுக்கொண்டு கப்பலேறினோம்;
அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி
னார்கள்.
7 நாங்கள் தீருவை விட்டுக் கப்பல் யாத்
திரை செய்து, பித்தொலெமாய் பட்டணத்
தில் வந்திறங்கினோம். அங்கே சகோதரரை
வினவிக்கொண்டு அவர்களிடம் ஒரு நாள்
8 தங்கினோம். மறுநாளில் நாங்கள் புறப்
பட்டு, செசரியாவுக்கு வந்து, ஏழுபேரில்
ஒருவனாகிய பிலிப்பு என்னும் சுவிசேஷகன்
வீட்டிற்குப் போய் அவனிடம் தங்கினோம்.
9 தீர்க்கதரிசனஞ்சொல்லும் நாலு குமாரத்
திகள் அவனுக்கு இருந்தார்கள், இவர்கள்
10 கன்னிகைகள். நாங்கள் பலநாள் அங்கே
தங்கியிருக்கையில், அகபு என்னும் ஒரு
தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான்.
11 அவன் எங்களிடம் வந்து, பவுலின்
கச்சையை எடுத்து, தன் கால்களையும் கை
களையும் கட்டிக்கொண்டு: இந்தக் கச்சையை
யுடையவனை எருசலேமில் யூதர் இவ்வித
மாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்
புக்கொடுப்பார்களென்று பரிசுத்த ஆவி
12 யானவர் சொல்லுகிறார் என்றான். இவை
களைக் கேட்டபொழுது, எருசலேமுக்குப்
போகவேண்டாமென்று நாங்களும் அவ்
விடத்தாரும் பவுலை வேண்டிக்கொண்டோம்.
அவனோ: நீங்கள் செய்கிற இது என்ன? 13
அழுது என் மனம் உடையச் செய்கிறீர்
களே. நானோ ஆண்டவராகிய இயேசுவின்
நாமத்திற்காக எருசலேமில் கட்டப்படுவ
தற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்
தமாயிருக்கிறேன் என்றான். அவன் சம்மதி 14
யாதபடியினால், ஆண்டவரின் சித்தம்
ஆகக்கடவதென்று அமர்ந்திருந்தோம்.
அந்த நாட்களுக்குப்பின் நாங்கள் பிர 15
யாணத்துக்கு ஆயத்தஞ்செய்துகொண்டு
எருசலேமுக்குப் போனோம். செசரியா 16
பட்டணத்துச் சீஷரில் சிலர் எங்களோடு
வந்தார்கள். சீப்புருதீவானும், முதலி
லிருந்து சீஷனாயிருந்தவனுமாகிய மினா
சோன் என்னும் ஒருவனிடத்தில் நாங்கள்
தங்கும்படி, அவனிடத்திற்கு எங்களைக்
கூட்டிக்கொண்டு போனார்கள்.
நாங்கள் எருசலேமுக்கு வந்தபோது 17
சகோதரர் எங்களைச் சந்தோஷமாய் வர
வேற்றுக்கொண்டார்கள். மறுநாள் பவுல் 18
எங்களைக் கூட்டிக்கொண்டு யாக்கோபி
னிடத்திற்குப் போனான்; அங்கே மூப்பரெல்
லாரும் கூடியிருந்தார்கள். அவர்களை அவன் 19
வாழ்த்தி, தன் ஊழியத்தின் மூலமாய்க்
கடவுள் புறஜாதிகள் நடுவில் செய்தவைகளை
ஒவ்வொன்றாய் விவரித்துச் சொன்னான்.
அவர்கள் அதைக் கேட்டு, கடவுளை மகி 20
மைப்படுத்தினார்கள். பின்பு அவனிடம்:
சகோதரனே, யூதருக்குள் பல்லாயிரம்பேர்
விசுவாசிகளாயிருக்கிறதைக் காண்கிறீரே,
அவர்களெல்லாரும் நியாயப்பிரமாணத்தைக்
குறித்து வைராக்கியமுள்ளவர்கள். புறஜாதி 21
களிடத்திலிருக்கிற யூதரெல்லாரும் தங்கள்
பிள்ளைகளுக்கு விருத்தசேதனஞ்செய்யாம
லும், முறைமைகளின்படி நடவாமலு
மிருந்து, மோசேயை விட்டு மாறுபட நீர்
உபதேசிக்கிறீரென்று இவர்களுக்கு உம்
மைப்பற்றிப் போதிக்கப்பட்டிருக்கிறது.
இப்படியிருக்க, செய்யவேண்டியதென்ன? 22
நீர் வந்திருக்கிறீரென்று இவர்கள் கேள்விப்
படுவது நிச்சயம். ஆகையால் நாங்கள் 23
உமக்குச் சொல்லுகிறதைச் செய்யும்.
பொருத்தனை பண்ணிக்கொண்ட நாலுபேர்
எங்களிடமிருக்கிறார்கள்; அவர்களைச் சேர்த் 24
துக்கொண்டு, நீரும் அவர்களோடு சுத்திகரிப்
புச் செய்துகொள்ளும். அவர்கள் தலைச்
சவரஞ்செய்துகொள்வதற்கு அவர்களுக்காக
நீரே செலவுசெய்யும். அப்படிச்செய்தால்
உம்மைப்பற்றிப் போதிக்கப்பட்டவைகள்
அபத்தமென்றும், நீரும் நியாயப்பிரமாணத்
தைக் கைக்கொண்டு நடக்கிறவரென்றும்
யாவரும் அறிந்துகொள்வார்கள். விக்கிரகங் 25

களுக்குப் பலியிட்டதற்கும், இரத்தத்திற்
கும், நெருக்குண்டு செத்ததற்கும், வேசித்
தனத்திற்கும் விசுவாசிகளான புறஜாதியார்
விலகியிருந்து தங்களைக் காத்துக்கொள்ள
வேண்டுமென்று நாங்கள் அவர்களைப்பற்றித்
தீர்மானம்பண்ணி, அவர்களுக்கு எழுதி
26 யனுப்பினோமே என்றார்கள். அப்பொழுது
பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக்கொண்டு,
மறுநாள் அவர்களோடு தானும் சுத்திகரிப்
புச் செய்துகொண்டு, தேவாலயத்தில் பிரவே
சித்து, சுத்திகரிப்பு நாட்கள் எப்பொழுது
நிறைவேறுமென்றும் அவர்களில் ஒவ்வொரு
வனுக்காகவும் எப்பொழுது பலி செலுத்தப்
படுமென்றும் தெரிவித்தான்.
27 அந்த ஏழு நாட்களும் நிறைவேறிவரு
கையில், ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்
அவனைத் தேவாலயத்திலே கண்டு, ஜனங்க
ளெல்லாரையும் எழுப்பிவிட்டு, அவன்மேல்
28 கைபோட்டு, கூக்குரலிட்டு: இஸ்ரவேலரே,
உதவிசெய்யுங்கள். ஜனத்துக்கும் நியாயப்
பிரமாணத்துக்கும் இந்த ஸ்தலத்துக்கும்
விரோதமாக எல்லாருக்கும் எங்கும்
போதித்துவருகிறவன் இவன்தான். அது
மாத்திரமல்ல, தேவாலயத்திற்குள் கிரேக்
கரையும் கொண்டுவந்து, இந்தப் பரிசுத்த
ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்
29 றார்கள். எபேசியனாகிய துரோப்பீமு
முன்னே நகரத்தில் பவுலோடுகூட இருந்
ததை அவர்கள் கண்டிருந்தபடியால், பவுல்
அவனைத் தேவாலயத்திற்குள் கொண்டுவந்
திருப்பான் என்று நினைத்துக்கொண்டார்கள்.
30 நகரம் முழுவதும் அமளியுண்டாயிற்று.
ஜனங்கள் கூட்டமாய் ஓடிவந்து, பவுலைப்
பிடித்து, அவனைத் தேவாலயத்திற்கு
வெளியே இழுத்துக்கொண்டுபோனார்கள்;
உடனே கதவுகள் பூட்டப்பட்டன.
31 அவர்கள் அவனைக் கொலைசெய்ய எத்தனிக்
கையில், எருசலேம் முழுவதும் குழப்பமா
யிருக்கிறதென்று சேனாதிபதிக்குச் செய்தி
32 வந்தது. உடனே அவன் போர்ச்சேவகரை
யும் நூற்றுக்கதிபதிகளையும் கூட்டிக்கொண்டு,
இறங்கி அவர்களிடம் ஓடிவந்தான்; சேனாதி
பதியையும் போர்ச்சேவகரையும் அவர்கள்
கண்டபோது பவுலை அடிக்கிறதை நிறுத்தி
33 விட்டார்கள். அப்பொழுது சேனாதிபதி
கிட்ட வந்து, அவனைப் பிடித்து, இரண்டு
சங்கிலிகளினால் கட்டச்சொல்லி: இவன்
யார், என்ன செய்தானென்று கேட்டான்.
34 ஜனக்கூட்டத்தில் சிலர் இப்படியும் சிலர்
அப்படியுமாகக் கூக்குரலிட்டார்கள். சந்தடி
யாயிருந்ததினால் அவன் நிச்சயத்தை அறிய
முடியாமல், அவனைக் கோட்டைக்குள்
கொண்டுபோகும்படி கட்டளையிட்டான்.
அவன் படிகளண்டை வந்தபோது, ஜனக் 35
கூட்டத்தின் உக்கிரத்தினிமித்தம் போர்ச்
சேவகர் அவனைத் தூக்கிக்கொண்டுபோக
நேரிட்டது. திரள் ஜனங்கள் பின்தொடர்ந்து, 36
இவனைத் தொலைத்துவிடும் என்று கூச்சலிட்
டார்கள். அவர்கள் பவுலைக் கோட்டைக் 37
குள் கொண்டுபோகிற சமயத்தில் அவன்
சேனாதிபதியினிடம்: நான் உம்மோடு ஒரு
வார்த்தை பேசலாமா என்று கேட்க, அவன்:
கிரேக்கு பாஷை உனக்குத் தெரியுமா?
இந்த நாட்களுக்குமுன் கலகமுண்டாக்கி, 38
நாலாயிரம் கொலைபாதகரை வனாந்தரத்திற்
குக் கொண்டுபோன எகிப்தியன் நீ அல்லவோ
என்றான். அதற்குப் பவுல்: நான் யூதன், 39
சிலிசியா நாட்டுத் தர்சு பட்டணத்தான்,
அது அற்பமான ஊரல்ல. ஜனங்களிடம்
பேச எனக்கு உத்தரவாகவேண்டுமென்று
உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்
றான். உத்தரவானபோது, பவுல் படிகளில் 40
நின்று ஜனங்களைக் கையமர்த்தினான்; மிகுந்த
அமைதலுண்டானபோது, அவன் எபிரேயு
பாஷையில் பேசிச் சொன்னதாவது:

சகோதரரே, பிதாக்களே, நான் இப் **22**
பொழுது உங்களுக்குச் சொல்லப்போகிற
நியாயத்தைக் கேளுங்கள் என்றான். அவன் 2
எபிரேயு பாஷையில் தங்களிடம் பேசியதை
அவர்கள் கேட்டபொழுது அதிக அமைத
லானார்கள். அப்பொழுது அவன்: | நான் 3
யூதன்; சிலிசியா நாட்டுத் தர்சு பட்டணத்தில்
பிறந்தவன்; இந்த எருசலேம் நகரத்தில்
வளர்ந்து, கமாலியேலின் பாதத்தருகே முன்
னோரின் நியாயப்பிரமாணத் திட்டவட்டத்
தின்படியே பாடங்கற்றவன்; இன்றைய
தினம் நீங்களெல்லாரும் கடவுள் விஷயத்
தில் வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறது
போல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்
தேன். நான் இந்த மார்க்கத்தாரான புருஷ 4
ரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலை
களில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்
படுத்தினேன். பிரதான ஆசாரியரும் மூப்பர் 5
சபைமுழுவதும் அதற்குச் சாட்சிகள்;
அவர்களிடமிருந்து நான் சகோதரருக்கு
நிருபங்களைக் கேட்டு வாங்கிக்கொண்டு
தமஸ்குவிலிருக்கிறவர்களையும் கட்டி, தண்
டனைக்கென்று எருசலேமுக்குக் கொண்டு
வரும்படி அங்கே போகப் பிரயாணமாயிருந்
தேன். அப்படியே நான் போகையில், தமஸ் 6
குவைச் சமீபித்தபோது, மத்தியான வேளை
யில், சடிதியாய் வானத்திலிருந்து பெரிய
வெளிச்சம் என்னைச்சுற்றிப் பிரகாசித்தது; |

7 நான் தரையில் விழுந்தேன். விழவே:
சவுலே, சவுலே, என்னை ஏன் துன்பப்படுத்து
கிறாய் என்று என்னிடம் சொன்ன ஒரு
8 சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான்:
நீர் யார், ஆண்டவரே என்றேன். அவர்:
நீ துன்பப்படுத்துகிற நசரேயன் இயேசுவே
9 நான் என்றார். என்னோடிருந்தவர்கள்
வெளிச்சத்தைக் கண்டார்கள், என்னிடம்
பேசினவர் சத்தத்தையோ கேட்கவில்லை.
10 அப்பொழுது நான்: ஆண்டவரே, நான்
என்ன செய்யவேண்டுமென்று கேட்க,
ஆண்டவர் என்னிடம்: நீ எழுந்து தமஸ்கு
வுக்குப் போ; நீ செய்யும்படி நியமிக்கப்
பட்டவைகள் எல்லாவற்றையுங்குறித்து
அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.
11 அந்த வெளிச்சத்தின் மகிமையினால் நான்
பார்வையற்றுப்போனேன்; என்னோடிருந்த
வர்கள் எனக்குக் கைலாகுகொடுத்து என்னை
வழிநடத்தவே தமஸ்குவுக்கு வந்தேன்.
12 அங்கே அனனியா என்னும் ஒருவன் இருந்
தான். இவன் நியாயப்பிரமாணத்தின்படி
பக்தியுள்ளவன், அங்கே குடியிருந்த யூதர்
எல்லாராலும் நல்லவனென்று மதிப்புப்
13 பெற்றவன். இவன் என்னிடம் வந்து
நின்று: சகோதரனே, சவுலே, பார்வை
யடைவாயாக என்றான்; அந்நேரமே நான்
பார்வையடைந்து அவனை ஏறிட்டுப் பார்த்
14 தேன். அப்பொழுது அவன்: நம் பிதாக்க
ளின் கடவுளுடைய திருவுளத்தை நீ அறிய
வும், நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய
திருவாய்மொழியைக் கேட்கவும், அவர்
15 தாமே உன்னை முன்னமே நியமித்தார்; நீ
கண்டவைகளையும் கேட்டவைகளையும்
குறித்து மனுஷரெல்லாருக்கும் முன்பாக
16 அவருக்குச் சாட்சியாயிருப்பாய். இப்
பொழுது நீ தாமதிப்பானேன்? எழுந்து
அவர் நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞான
ஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் நீங்கக்
17 கழுவப்படு என்று சொன்னான். நான் எருச
லேமுக்குத் திரும்பிவந்து தேவாலயத்தில்
ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கையில், ஞான
திருஷ்டியடைந்து அவரைத் தரிசித்தேன்.
18 அவர் என்னிடம்: நீ தாமதியாமல் சீக்கிர
மாய் எருசலேமை விட்டுப் போ, நீ என்னைப்
பற்றிச் சொல்லும் சாட்சியத்தை இவர்கள்
19 அங்கீகரிக்கமாட்டார்கள் என்றார். அதற்கு
நான்: ஆண்டவரே, உம்மில் விசுவாசம்
வைத்தவர்களை நான் காவலில் போட்டு
20 ஜெபாலயங்களில் அடித்ததையும், உம்
முடைய சாட்சியாகிய ஸ்தேவானின் இரத்
தம் சிந்தப்படும்போது, நானும் உடன்பட்ட
வனாய் அருகே நின்று, அவனைக் கொன்றவர்
களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டிருந்
தேன் என்பதையும் இவர்கள் அறிந்திருக்
கிறார்களே என்று சொல்ல, | அவர்: நீ போ, 21
நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்
தில் அனுப்புவேன் என்று சொன்னார்.

இந்த வார்த்தைவரைக்கும் அவன் சொன் 22
னதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.
இதைக் கேட்கவே: இப்படிப்பட்டவனைப்
பூமியிலிருந்து தொலைத்துவிடும்; இவன்
உயிரோடிருக்கலாகாது என்று மிகுந்த
சத்தமிட்டுச் சொன்னார்கள். இவ்விதமாய் 23
அவர்கள் கூக்குரலிட்டு, தங்கள் வஸ்திரங்
களை எறிந்துவிட்டு, ஆகாயத்திலே புழுதி
யைத் தூற்றிக்கொண்டிருக்கையில், சேனாதி 24
பதி அவனைக் கோட்டைக்குள் கொண்டு
வரக் கட்டளையிட்டு, அவர்கள் அவனுக்கு
விரோதமாய் இப்படிக் கூக்குரலிட்ட கார
ணத்தை அறியும்படி அவனைச் சவுக்கா
லடித்து விசாரிக்கச் சொன்னான். அந்தப் 25
படியே அவர்கள் அவனை வாரினால் அழுந்
தக் கட்டும்போது, பவுல் சமீபத்தில் நின்ற
நூற்றுக்கதிபதியைப் பார்த்து: ரோமனும்
விசாரணை செய்யப்படாதவனுமாயிருக்கிற
மனுஷனைச் சவுக்காலடிக்க உங்களுக்கு
அதிகாரம் உண்டா என்றான். நூற்றுக்கதிபதி 26
அதைக்கேட்டு, சேனாதிபதியினிடம் போய்
இதை அறிவித்து: நீர் என்ன செய்யப்
போகிறீர்? இவன் ரோமன் என்று சொல்ல, |
சேனாதிபதி பவுலினிடம் வந்து: நீ ரோமனா? 27
எனக்குச்சொல் என்றான். அதற்கு அவன்:
ஆம் என்றான். அதைக்கேட்ட சேனாதிபதி: 28
மிகுந்த திரவியம் கொடுத்து நான் இந்தச்
சிலாக்கியத்தைச் சம்பாதித்தேன் என்றான்.
பவுல்: நானோ இந்தச் சிலாக்கியத்திற்குரிய
வனாகப் பிறந்தேன் என்றான். அவனை 29
விசாரிக்க இருந்தவர்கள் உடனே அவனை
விட்டுவிட்டார்கள். அவன் ரோமன் என்று
அறிந்து, அவனைக் கட்டுவித்ததினிமித்தம்
சேனாதிபதியும் பயந்தான்.

யூதர் பவுலின்மேல் சாட்டிய குற்றம் 30
இன்னதென்று அவன் திட்டமாய் அறிய
விரும்பி, மறுநாளில் அவனைக் கட்ட
விழ்த்து, பிரதான ஆசாரியரையும் ஆலோச
னைச் சங்கத்தார் அனைவரையும் கூடிவரக்
கட்டளையிட்டு, அவனைக் கீழே கொண்டு
போய் அவர்கள்முன் நிறுத்தினான்.

பவுல் ஆலோசனைச் சங்கத்தாரை உற் **23**
றுப்பார்த்து: சகோதரரே, இந்நாள்வரைக்
கும் எல்லா விஷயங்களிலும் நன்மனச்
சாட்சியோடே நான் கடவுள் முன்பாக
நடந்துவந்திருக்கிறேன் என்று சொன்னான்.

2 பிரதான ஆசாரியன் அனனியா அவனை
வாயில் அடிக்கும்படி பக்கத்தில் நின்றவர்
3 களுக்குக் கட்டளையிட்டான். அப்பொழுது
பவுல் அவனிடம்: வெள்ளையடித்த சுவரே,
கடவுள் உம்மை அடிப்பார்; நியாயப்
பிரமாணத்தின்படி என்னை நியாயம் விசாரிக்
கிறவராய் உட்கார்ந்திருக்கிற நீர் நியாயப்
பிரமாணத்திற்கு விரோதமாய் என்னை அடிக்
4 கச் சொல்லலாமா என்றான். சமீபத்தில்
நின்றவர்கள்: கடவுளின் பிரதான ஆசாரி
5 யரை வைகிறாயா என்றார்கள். அதற்குப்
பவுல்: சகோதரரே, இவர் பிரதான ஆசா
ரியரென்று எனக்குத் தெரியாது; உன்
ஜனத்தின் அதிபதியைத் தீதுசொல்லாயாக
6 என்று எழுதியிருக்கிறதே என்றான். அவர்
களில் சதுசேயர் ஒரு பங்கும் பரிசேயர் ஒரு
பங்குமாயிருக்கிறார்களென்று பவுல் அறிந்து:
சகோதரரே, நான் பரிசேயன், பரிசேயர்
மகன். மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்
பற்றும் நன்னம்பிக்கையைக் குறித்து நியா
யந்தீர்க்கப்படுகிறேன் என்று ஆலோசனைச்
சங்கத்தில் சத்தமிட்டுச் சொன்னான்.
7 அவன் இதைச் சொன்னபோது, பரிசேயருக்
கும் சதுசேயருக்கும் கலகம் உண்டாயிற்று;
8 கூட்டம் இரண்டுபட்டது. சதுசேயர்
உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவ
தூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லு
கிறவர்கள். பரிசேயரோ அவ்விரண்டும்
உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறவர்கள்.
9 மிகுந்த கூக்குரல் உண்டாகவே, பரிசேய
வகுப்பைச் சேர்ந்த வேதபாரகர் சிலர்
எழுந்து: இந்த மனுஷனில் ஒரு பொல்லாங்
கையும் காணோம்; ஒரு ஆவி அல்லது தேவ
தூதன் இவனோடு பேசியிருந்தால் என்ன
10 என்று வாதாடினார்கள். மிகுந்த கலகமுண்
டானபோது, பவுல் அவர்களால் பீறுண்டு
போவானென்று சேனாதிபதி பயந்து, போர்ச்
சேவகர் கீழேபோய் அவனை அவர்கள் நடுவி
லிருந்து இழுத்துக் கோட்டைக்குள்
கொண்டுபோய்விடும்படி கட்டளையிட்டான்.
11 அந்த இரவில் ஆண்டவர் அவன் அருகே
நின்று: தைரியமாயிரு, என்னைப்பற்றிய
வைகளை நீ எருசலேமில் சாட்சியாய்ச்
சொன்னதுபோல ரோமாவிலும் சாட்சி
சொல்லவேண்டும் என்றார்.
12 விடியற்காலமானபோது யூதரில் சிலர்
ஒன்றுசேர்ந்து, தாங்கள் பவுலைக் கொல்லு
மளவும் புசிப்பதுமில்லை குடிப்பதுமில்லை
என்று சபதம்பண்ணிக்கொண்டார்கள்.
13 இப்படிக் கட்டுப்பாடு பண்ணிக்கொண்ட
14 வர்கள் நாற்பதுபேருக்கு அதிகம். அவர்கள்
பிரதான ஆசாரியரிடமும் மூப்பரிடமும்
போய்: நாங்கள் பவுலைக் கொலைசெய்யுமள
வும் ஒன்றையும் ருசிபார்ப்பதில்லையென்று
உறுதியான சபதம்பண்ணிக்கொண்டோம்.
ஆதலால் ஆலோசனைச் சங்கத்தாரோடுகூட 15
நீங்களும் போய், அவன் காரியத்தை அதி
கத் திட்டமாய் அறிந்துகொள்ள மனமுள்ள
வர்கள்போல் சேனாதிபதிக்குக் காண்பித்து,
அவர் அவனை உங்களிடம் கூட்டிக்கொண்டு
வரும்படி கேளுங்கள்; அவன் கிட்ட வரு
கிறதற்குள்ளே நாங்கள் அவனைக் கொன்று
போட ஆயத்தமாயிருக்கிறோம் என்றார்கள்.
பவுலின் சகோதரி மகன் இந்தச் சர்ப்பனை 16
யைக் கேள்விப்பட்டு, போய்க் கோட்டைக்
குள் சென்று, பவுலுக்கு அறிவித்தான்.
பவுல் நூற்றுக்கதிபதிகளில் ஒருவனை 17
அழைத்து: இந்த வாலிபனைச் சேனாதிபதியி
னிடம் கூட்டிக்கொண்டுபோம்; இவன் அவ
ருக்கு அறிவிக்கவேண்டிய காரியம் ஒன்
றுண்டு என்றான். அப்படியே அவன் இவ 18
னைச் சேனாதிபதியினிடம் கூட்டிக்கொண்டு
போய்: காவலில் இருக்கிற பவுல் என்னை
அழைத்து, இந்த வாலிபனை உம்மிடம்
கொண்டுபோகும்படி என்னைக் கேட்டுக்
கொண்டான்; இவன் உமக்கு ஒரு காரியம்
சொல்லவேண்டுமென்றிருக்கிறான் என்றான்.
அப்பொழுது சேனாதிபதி அவன் கையைப் 19
பிடித்துத் தனியே அழைத்துப்போய்: நீ
எனக்கு அறிவிக்கவேண்டிய காரியமென்ன
வென்று கேட்க, | அவன்: யூதர் பவுலின் 20
காரியத்தை அதிகத் திட்டமாய் விசாரிக்
கிறதுபோல நீர் நாளைக்கு அவனை ஆலோச
னைச் சங்கத்தாரிடம் கொண்டுவரும்படி
உம்மைக் கேட்டுக்கொள்ள உடன்பட்
டிருக்கிறார்கள். நீர் அவர்களுக்குச் சம் 21
மதிக்கவேண்டாம்; அவர்களில் நாற்பது
பேருக்கு அதிகமானவர்கள் அவனைப் பிடிக்
கப் பதிவிருக்கிறார்கள்; அவனைக் கொலை
செய்யுமளவும் தாங்கள் புசிப்பதுமில்லை
குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணி,
இப்பொழுது உமது உத்தரவுக்காகக் காத்துக்
கொண்டு ஆயத்தமாயிருக்கிறார்கள் என்றான்.
அப்பொழுது சேனாதிபதி: நீ இவைகளை 22
எனக்கு அறிவித்ததாக ஒருவருக்கும் சொல்
லாதே என்று கட்டளையிட்டு, வாலிபனை
அனுப்பிவிட்டான். பின்பு அவன் நூற்றுக் 23
கதிபதிகளில் இருவரை அழைத்து: செசரியா
வரைக்கும் போகும்படி இருநூறு போர்ச்
சேவகரையும் எழுபது குதிரைவீரரையும்
இருநூறு ஈட்டிக்காரரையும் ஆயத்தப்படுத்
துங்கள்; இராத்திரியில் மூன்றாம் மணி
வேளையில் ஆயத்தமாயிருக்கவேண்டும்;
பவுலை ஏற்றி, தேசாதிபதி பேலிக்ஸினிடம் 24

பத்திரமாய்க் கொண்டுபோகும்படி குதிரை
களையும் பார்த்துவையுங்கள் என்று சொன்
25 னான். பின்வருமாறு ஒரு நிருபத்தையும்
26 எழுதினான்: கனம்பொருந்திய தேசாதிபதி
யாகிய பேலிக்ஸ் என்பவருக்கு, கிலவுதியு
லீசியா வாழ்த்துதல் சொல்லி அறிவிக்கிறது:
27 யூதர் இந்த மனுஷனைப் பிடித்துக் கொல்லப்
போகிற சமயத்தில், நான் போர்ச்சேவகரோடு
போய், இவன் ரோமனென்று அறிந்து இவனை
28 விடுவித்தேன். அவர்கள் இவன்மேல் சாட்
டின குற்றத்தை அறியவேண்டுமென்று
இவனை அவர்கள் ஆலோசனைச் சங்கத்துக்
29 குக் கொண்டுபோனேன். அவர்களுடைய
வேதத்திற்கடுத்த தர்க்க விஷயங்களைப்பற்றி
இவன் குற்றஞ்சாட்டப்பட்டவன் என்று
விளங்கினதேயல்லாமல், மரணத்துக்காவது
விலங்குக்காவது ஏதுவான குற்றமொன்றை
30 யும் நான் காணவில்லை. இவனுக்கு விரோத
மாய்ச் சதியோசனை செய்திருக்கிறார்களென்று
எனக்குத் தெரியவந்தபோது, உடனே
இவனை உம்மிடம் அனுப்பியிருக்கிறேன்;
குற்றஞ்சாட்டுகிறவர்கள் இவனுக்கு விரோத
மாய்ச் சொல்லவேண்டியவைகளை உமக்கு
முன் சொல்லும்படி அவர்களுக்குக் கட்
டளையிட்டிருக்கிறேன் என்பதே.
31 அவன் அவர்களுக்குக் கட்டளையிட்ட
படியே போர்ச்சேவகர் பவுலைக் கூட்டிக்
கொண்டு, இராத்திரியில் அந்திப்பத்திரி
32 ஊருக்குப் போனார்கள். மறுநாள் குதிரை
வீரரை அவனோடு போகும்படி அனுப்பி
விட்டு, கோட்டைக்குத் திரும்பிவிட்
33 டார்கள். போனவர்கள் செசரியா சேர்ந்து,
நிருபத்தைத் தேசாதிபதியினிடம் கொடுத்து,
பவுலையும் அவன்முன்னே நிறுத்தினார்கள்.
34 தேசாதிபதி அதை வாசித்து, எந்த நாட்டா
னென்று கேட்டு, சிலிசியா நாட்டானென்று
35 அறிந்தபோது: உன்மேல் குற்றஞ்சாட்டுகிற
வர்களும் வந்திருக்கும்போது உன் காரியத்
தைத் திட்டமாய் விசாரிப்பேனென்று
சொல்லி, ஏரோதுவின் கோட்டை மாளிகை
யில் அவனைக் காவல்பண்ணும்படி கட்டளை
யிட்டான்.

24 ஐந்து நாளுக்குப்பின்பு பிரதான ஆசா
ரியனாகிய அனனியா சில மூப்பரோடும்
தெர்த்துல்லு என்னும் நியாயவாதியோடும்
போனான். இவர்கள் பவுலுக்கு விரோத
மாய்த் தேசாதிபதியினிடம் பிராதுபண்ணி
2 னார்கள். அவன் அழைக்கப்பட்டபோது
தெர்த்துல்லு குற்றஞ்சாட்டத் தொடங்கி:
கனம்பொருந்திய பேலிக்ஸே, உம்மாலே
நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை
அனுபவிக்கிறதையும், உமது பராமரிப்பி
னால் இந்த ஜனத்துக்குள் சீர்திருத்தங்கள்
உண்டாயிருக்கிறதையும், நாங்கள் எவ்விதத் 3
திலும் எங்கும் மிகுந்த நன்றியறிதலோடு
ஒப்புக்கொள்ளுகிறோம். உம்மை நான் 4
அநேக வார்த்தைகளினால் அலட்டமாட்
டேன். நாங்கள் சுருக்கமாய்ச் சொல்வதை
நீர் பொறுமையாய்க் கேட்கவேண்டுமென்று
பிரார்த்திக்கிறேன். இந்த மனுஷன் கொள்ளை 5
நோயென்றும், பூச்சக்கரத்திலுள்ள சகல
யூதருக்குள்ளும் கலகம் எழுப்புகிறவனென்
றும், நசரேயர் மதப்பிரிவுக்கு முதலாளி
யென்றும் கண்டோம். தேவாலயத்தை 6,
இவன் தீட்டுப்படுத்தப்பார்த்தான். நாங்கள் 7
இவனைப் பிடித்துக்கொண்டோம். நாங்கள் 8
இவன்மேல் சாட்டுகிற குற்றங்கள் எல்லா
வற்றையும்பற்றி அவனிடத்திலிருந்தே நீர்
விசாரணைசெய்து அறிந்துகொள்ளலாம் என்
றான். இதற்கு யூதரும் இசைந்து, 9
இவைகள் யதார்த்தந்தான் என்றார்கள்.
பவுல் பேசும்படி தேசாதிபதி சைகை 10
காட்டினபோது அவன்: நீர் அநேக வருஷ
காலமாய் இந்த ஜனத்துக்கு நியாயாதிபதியா
யிருக்கிறீர் என்று அறிந்து அதிகத் தைரிய
மாய் என் நியாயத்தைச் சொல்லுகிறேன்.
நான் தொழுதுகொள்ளும்படி எருசலேமுக் 11
குப் போனதுமுதல் இதுவரைக்கும் பன்னி
ரண்டு நாளுக்கு மேல் ஆகவில்லை என்று
நீர் அறிந்துகொள்ளலாம்; தேவாலயத்திலாகி 12
லும் ஜெபாலயங்களிலாகிலும் நகரத்திலாகி
லும் நான் எவரோடும் தர்க்கம்பண்ணினதை
யாவது, ஜனங்களுக்குள் கலகமெழுப்பின
தையாவது இவர்கள் கண்டதேயில்லை. இப் 13
பொழுது என்மேல் சாட்டுகிற குற்றங்களை
இவர்கள் ரூபிக்கமுடியாது. எங்கள் முன் 14
னோரின் கடவுளை நானும் வணங்குகிறேன்;
நியாயப்பிரமாணத்துக்கடுத்த யாவற்றையும்
தீர்க்கதரிசன ஆகமங்களில் எழுதியிருக்கிற
யாவற்றையும் நம்புகிறேன்; நீதியுள்ளவர்
களுக்கும் நீதியில்லாதவர்களுக்கும் உயிர்த்
தெழுதல் இருக்குமென்று இவர்கள் நம்பு
கிறதுபோலவே நானும் கடவுளை முன்
னிட்டு நம்புகிறேன். ஆயினும், மதபேதம் 15
என்று இவர்கள் சொல்லுகிற மார்க்கத்தின்
படியே அவரை வணங்குகிறேன் என்று
ஒப்புக்கொள்ளுகிறேன். இதனால் கடவுளுக் 16
கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும்
குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனா
யிருக்கும்படி நான் பிரயாசப்படுகிறேன்.
நான் என் ஜனத்தாருக்குத் தர்மப்பணத்தை 17
ஒப்புவிக்கவும் காணிக்கைகளைச் செலுத்த
வும் அநேக வருஷங்களுக்குப்பின் வந்தேன்.

18 செலுத்துகையில், ஜனக்கூட்டமும் அமளியு
மில்லாமல் தேவாலயத்தில் நான் சுத்திகரித்
துக்கொண்டிருக்கும்போது என்னைக் கண்
19 டார்கள். அங்கே ஆசியா நாட்டாரான சில
யூதர் இருந்தார்கள்; எனக்கு விரோதமான
காரியம் ஏதாகிலும் அவர்களுக்கிருந்தால்
அவர்களே உமக்கு முன்பாக வந்து குற்றஞ்
20 சாட்டவேண்டும். இல்லாவிட்டால், நான்
அவர்கள் நடுவில் நின்றபோது, மரித்தோ
ரின் உயிர்த்தெழுதலைக்குறித்து இன்று
உங்களாலே நியாயந்தீர்க்கப்படுகிறேனென்று
சத்தமிட்டுச் சொன்ன அந்த ஒரு சொல்
21 லையேயன்றி, ஆலோசனைச் சங்கத்தார்முன்
நான் நின்றபோது தாங்கள் என்ன அக்கிர
மத்தை என்னிடம் கண்டார்கள் என்று
இவர்களே சொல்லட்டும் என்றான்.
22 இந்த மார்க்கத்தின் விஷயங்களைத் திட்ட
மாய் அறிந்திருந்த பேலிக்ஸ்: சேனாதிபதியா
கிய லீசியா வரும்போது, உங்கள் காரியங்
களைத் தீர விசாரிப்பேன் என்று சொல்லி,
23 விசாரணையைத் தள்ளிவைத்து, | பவுலைக்
காவல்பண்ணவும் கண்டிப்பில்லாமல்
நடத்தவும் அவனுடையவர்களில் எவரும்
அவனுக்கு ஊழியஞ்செய்வதைத் தடை
செய்யாதிருக்கவும் நூற்றுக்கதிபதிக்குக் கட்
டளையிட்டான்.
24 சில நாளுக்குப்பின்பு, பேலிக்ஸ் யூதஸ்திரீ
யாகிய தன் மனைவி துருசில்லாளோடு வந்து
பவுலை அழைப்பித்து, கிறிஸ்து இயேசுவைப்
பற்றும் விசுவாசத்தைக்குறித்து அவன்
25 சொல்வதைக் கேட்டான். நீதியையும்
இச்சையடக்கத்தையும் இனிவரும் நியாயத்
தீர்ப்பையும்பற்றி பவுல் விவரித்துப் பேசுகை
யில் பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது
நீ போகலாம், எனக்குச் சமயம் வாய்க்கும்
போது உன்னைத் திரும்ப அழைப்பேன்
26 என்றான். தனக்குப் பவுல் பணங்கொடுப்பா
னென்று அவன் எதிர்பார்த்திருந்தான். ஆத
லால்தான் அவன் அநேகந்தரம் அவனை
அழைத்து அவனோடு சம்பாஷித்தான்.
27 இரண்டு வருஷஞ்சென்றபின்பு, பேலிக்ஸின்
ஸ்தானத்தில் பொர்க்கியு பெஸ்து தேசாதிபதி
யாக வந்தான்; அப்பொழுது பேலிக்ஸ் யூத
ரின் தயவை நாடினவனாய்ப் பவுலைக் காவலி
லேயே வைத்துவிட்டுப்போனான்.

25 பெஸ்து தேசாதிபதியாக வந்து மூன்று
நாளுக்குப்பின்பு செசரியாவிலிருந்து எருச
2 லேமுக்குப் போனான். பிரதான ஆசாரியரும்
யூதரின் தலைவரும் அவனிடம் பவுலுக்கு
3 விரோதமாகப் பிராதுபண்ணினார்கள்; வழி
யிலே பதிவிருந்து அவனைக் கொன்றுபோடு
வதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, பெஸ்து
தங்கள்மேல் தயவுவைத்து எருசலேமுக்கு
அவனை அழைப்பிக்க வேண்டிக்கொண்
டார்கள். அதைக் கேட்ட பெஸ்து: செசரி 4
யாவிலே பவுல் காவலில் இருக்கிறான்,
நானும் சீக்கிரம் அங்கே போகிறேன். உங்க 5
ளில் திறமையுள்ளவர்கள் என்னோடுகூட
வந்து, அந்த மனுஷனிடம் தகாதது ஏதாகி
லும் உண்டானால் அவன்மேல் குற்றஞ்
சாட்டட்டும் என்றான்.
அவன் அவர்களிடத்தில் எட்டு அல்லது 6
பத்து நாளுக்குமேல் இராமல் செசரியாவுக்
குப் போய், மறுநாளில் நியாயாசனத்தில்
உட்கார்ந்து பவுலைக் கொண்டுவரும்படி
கட்டளையிட்டான். அவன் வந்தபோது 7
எருசலேமிலிருந்து வந்த யூதர் அவனைச்
சூழ்ந்து நின்று, தாங்கள் ரூபிக்கமுடியாத
அநேகக் கொடிய குற்றங்களை அவன்மேல்
சாட்டினார்கள். அதற்குப் பவுல்: யூதரின் 8
நியாயப்பிரமாணத்துக்காகிலும் தேவாலயத்
துக்காகிலும் இராயனுக்காகிலும் விரோதமாக
நான் ஒரு குற்றமும் செய்ததில்லை என்று
தன் நியாயத்தைச் சொன்னான். பெஸ்துவோ 9
யூதரின் தயவை நாடினவனாய்ப் பவுலி
னிடம்: நீ எருசலேமுக்கு வந்து அவ்
விடத்தில் இந்தக் காரியங்களைக் குறித்து
எனக்குமுன்பாக நியாயம் விசாரிக்கப்படச்
சம்மதிக்கிறாயா என்று கேட்க, | பவுல்: 10
நான் இராயனுடைய நியாயாசனத்தின்முன்
நிற்கிறேன்; இங்கேயே நான் விசாரிக்கப்பட
வேண்டும். யூதருக்கு நான் தீமை ஒன்றும்
செய்ததில்லை, அதை நீரும் நன்றாய் அறிவீர்.
நான் தீமைசெய்து மரணதண்டனைக்கேது 11
வானதொன்றை நடப்பித்ததுண்டானால்,
மரணதண்டனைக்குப் பின்வாங்கமாட்டேன்.
இவர்கள் என்மேல் சாட்டுகிற குற்றங்கள்
முற்றிலும் அபத்தமானால், அவர்களுக்குத்
தயவுகாட்ட ஒருவரும் என்னை அவர்க
ளிடம் ஒப்புக்கொடுக்கலாகாது. இராய
னுக்கு அபயமிடுகிறேன் என்றான். பெஸ்து 12
தன் ஆலோசனைக்காரருடனே கலந்து பேசி:
நீ இராயனுக்கு அபயமிட்டாய், இராய
னிடத்திற்கே போவாய் என்று சொன்னான்.
சில நாள் செல்லவே அகிரிப்பா ராஜா 13
வும் பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் கண்டு
கொள்ளும்படி செசரியாவுக்கு வந்தார்கள்.
அவர்கள் அங்கே அநேக நாள் தங்கியிருக் 14
கையில், பெஸ்து பவுலைப்பற்றிய சங்கதிகளை
ராஜாவுக்கு விவரித்து: பேலிக்ஸ் காவலில்
வைத்துவிட்டுப்போன ஒருவன் இருக்
கிறான். நான் எருசலேமுக்குப் போன 15
போது பிரதான ஆசாரியரும் யூதரின் மூப்

பரும் அவனைப்பற்றி என்னிடம் பேசி,
அவனுக்கு விரோதமாகத் தீர்ப்புச்செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.
16 அதற்கு நான்: குற்றஞ்சாட்டப்பட்டவன்
குற்றஞ்சாட்டினவர்களுக்கு முகமுகமாய்
நின்று, தன்மேல் செய்த பிராதுக்குப் பிரதி
வாதஞ்செய்ய அவனுக்கு இடங்கிடைக்
கிறதற்குமுன் எவனையும் தண்டனைக்கு ஒப்
புக்கொடுக்கிறது ரோமருக்கு வழக்கமல்ல
என்று அவர்களுக்குச் சொன்னேன்.
17 அவர்கள் இங்கே கூடிவந்தபோது நான்
எவ்வளவும் தாமதியாமல் மறுநாள் நியாயா
சனத்தில் உட்கார்ந்து அவனைக் கொண்டு
18 வரக் கட்டளையிட்டேன். அப்பொழுது,
குற்றஞ்சாட்டினவர்கள் அவனைச் சூழ்ந்து
நின்று, நான் நினைத்திருந்த குற்றங்களில்
ஒன்றையும் அவன்மேல் சுமத்தாமல், |
19 தங்கள் மதாசாரங்களைப்பற்றியும், மரித்துப்
போனவனும் இன்னும் உயிரோடிருக்கிற
தாகப் பவுல் சாதிக்கிறவனுமாகிய இயேசு
என்னும் ஒருவனைப்பற்றியும் ஏதோ சில
தர்க்க விஷயங்களை அவனுக்கு விரோத
20 மாய்க் கொண்டுவந்தார்கள். இவற்றை எப்
படி விசாரிப்பதென்று வழி தெரியாமல்: நீ
எருசலேமுக்குப்போய் அங்கே இவைகளைக்
குறித்து நியாயம் விசாரிக்கப்பட விரும்பு
21 கிறாயா என்று நான் கேட்க, பவுல் தான்
இராயனுடைய விசாரணைக்கென்று வைக்
கப்படவேண்டுமென்று அபயமிடவே, நான்
அவனை இராயனிடம் அனுப்புமளவும்
காவல்பண்ணும்படி கட்டளையிட்டேன்
22 என்று சொன்னான். அப்பொழுது அகி
ரிப்பா பெஸ்துவைப்பார்த்து: அவன் சொல்லு
கிறதை நானும் கேட்க விரும்புகிறேன்
என்றான். அதற்கு அவன்: நாளைக்கு நீர்
கேட்கலாம் என்றான். |
23 மறுநாளில் அகிரிப்பாவும் பெர்னீக்கே
யாளும் மிகுந்த ஆடம்பரத்துடன் வந்து,
சேனாபதிகளோடும் பட்டணத்துப் பிரதான
மனுஷரோடும் சபாமண்டபத்தில் பிரவேசித்
தார்கள். உடனே பெஸ்துவின் கட்டளைப்
24 படி பவுல் கொண்டுவரப்பட்டான். அப்
பொழுது பெஸ்து: அகிரிப்பா ராஜாவே,
எங்களோடு கூடியிருக்கிறவர்களே, நீங்கள்
பார்க்கிற இந்த மனுஷனைக்குறித்து யூத
ஜனங்களெல்லாரும் எருசலேமிலும் இவ்
விடத்திலும் என்னை வருந்திக் கேட்டுக்
கொண்டு, இவன் இனி உயிரோடிருக்கிறது
தகாதென்று சொல்லிக் கூக்குரலிட்டார்கள்.
25 இவன் மரண தண்டனைக்கேதுவானதொன்
றையும் செய்யவில்லை என்று நான் அறிந்து
கொண்டேன். இவன் தானே இராயனுக்கு
அபயமிட்டபடியினால் அவரிடத்தில்
இவனை அனுப்பத் தீர்மானம்பண்ணினேன்.
இவனைக்குறித்து என் ஆண்டவனுக்கு 26
எழுதுகிறதற்கு நிச்சயமானதொன்றும்
எனக்குத் தெரியவில்லை. இவனை விசாரித்
துக் கேட்டபின்பு எழுதத்தக்க விசேஷம்
ஏதாகிலும் எனக்கு விளங்கும்படி, உங்க
ளுக்குமுன்பாக, விசேஷமாய் அகிரிப்பா
ராஜாவே, உமக்கு முன்பாக, இவனைக்
கொண்டுவந்திருக்கிறேன். காவல்பண்ணப் 27
பட்ட ஒருவன்மேல் சாட்டின குற்றங்கள்
எவையென்று குறிப்பிட்டுக் காட்டாமல்
அவனை அனுப்புவது யுக்தமல்லவென்று
எனக்குத் தோன்றுகிறது என்றான்.

அகிரிப்பா பவுலைப் பார்த்து: நீ உனக் **26**
காகப் பேச உனக்கு உத்தரவாகிறதென்று
சொல்லவே, பவுல் கையை நீட்டித் தன்
நியாயத்தை எடுத்துக்காட்டத் தொடங்கி
னான்:
அகிரிப்பா ராஜாவே, யூதர் என்மேல் 2
சாட்டுகிற சகல காரியங்களைக் குறித்தும்
நான் இன்றைக்கு உமக்குமுன் நியாயஞ்
சொல்ல வாய்த்தது என் பாக்கியம் என்
றெண்ணுகிறேன். யூதருக்குள் வழங்கி 3
வரும் சகல முறைமைகளையும் தர்க்கங்களை
யும் நீர் நன்றாய் அறிந்தவரானதால் அப்படி
எண்ணுகிறேன்; நான் சொல்வதைப்
பொறுமையோடு கேட்கும்படி உம்மை
வேண்டிக்கொள்ளுகிறேன். ஆதிமுதல் 4
எருசலேமில் என் ஜனத்தாருக்குள்ளிருந்து,
என் சிறுவயதுமுதல் நான் நடந்த நடக்கை
யூதர் எல்லாருக்கும் தெரியும். முற்காலத்தி 5
லிருந்தே அவர்கள் என்னை அறிந்தவர்க
ளானதால், நமது மார்க்கத்திலுள்ள அதிகக்
கண்டிப்பான பிரிவுக்கு இசைந்தபடி நான்
பரிசேயனாய் நடந்துவந்தேனென்று சாட்சி
சொல்ல அவர்களுக்கு மனமிருந்தால்
சொல்லலாம். கடவுள் நம் பிதாக்களுக்கு 6
அருளிச்செய்த வாக்குத்தத்தத்தைப்பற்றிய
நன்னம்பிக்கையினிமித்தம் நான் இப்
பொழுது விசாரணைக்குக் கொண்டுவரப்
பட்டவனாய் நிற்கிறேன். நம்முடைய பன் 7
னிரண்டு கோத்திரத்தாரும் இரவு பகல்
இடைவிடாமல் அவரைச் சேவித்து, அந்த
வாக்குத்தத்தம் நிறைவேற நம்பிக்கையோடு
எதிர்பார்த்துவருகிறார்கள். ராஜாவே, அந்த
நம்பிக்கையைக்குறித்தே யூதர் என்மேல்
குற்றஞ்சாட்டுகிறார்கள். கடவுள் மரித் 8
தோரை எழுப்புவது நம்பப்படாத காரிய
மென்று நீங்கள் தீர்க்கிறதென்ன? நசரேய 9
னாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய்

நான் அநேகக் காரியங்களைச் செய்யவேண்டு
10 மென்று நினைத்தேன். எருசலேமில் அப்
படியே செய்தேன். நான் பிரதான ஆசாரிய
ரிடம் அதிகாரம்பெற்று, பரிசுத்தவான்களில்
அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்
தேன்; அவர்கள் கொலைசெய்யப்படுகையில்
11 நானும் சம்மதிகொடுத்தேன். சகல ஜெபால
யங்களிலும் அநேகந்தரம் நான் அவர்களைத்
தண்டித்து, தேவதூஷணஞ்சொல்லக் கட்
டாயப்படுத்தினேன்; அவர்கள்பேரில் மூர்க்க
வெறிகொண்டவனாய் அந்நிய பட்டணங்கள்
வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தி
12 வந்தேன். இப்படிச் செய்துவருகையில்,
நான் பிரதான ஆசாரியரிடம் அதிகாரமும்
உத்தரவும் பெற்று, தமஸ்குவுக்குப் போகும்
13 போது, | மத்தியான வேளையில், ராஜாவே,
வழியில் வானத்திலிருந்து ஒரு வெளிச்சம்
என்னையும் என்னோடு பிரயாணம்பண்ணின
வர்களையும் சுற்றிப் பிரகாசிக்கக் கண்டேன்.
அதன் பிரகாசம் சூரிய பிரகாசத்திலும் அதி
14 கம். நாங்களெல்லாரும் தரையிலே விழுந்த
போது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன்
துன்பப்படுத்துகிறாய்? தாற்றுக்கோலுக்கு
எதிர்த்து உதைப்பது உனக்குக் கஷ்டமாம்
என்று எபிரேயு பாஷையில் என்னிடம்
சொன்ன ஒரு சத்தத்தைக் கேட்டேன்.
15 அப்பொழுது நான்: நீர் யார், ஆண்டவரே
என்றேன். அதற்கு ஆண்டவர்: நீ துன்பப்
16 படுத்துகிற இயேசுவே நான். இப்பொழுது
நீ எழுந்து காலூன்றி நில். உன்னை ஊழி
யக்காரனாகவும், நீ கண்டவைகளையும் நான்
உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்
போகிறவைகளையுங்குறித்து உன்னைச் சாட்சி
யாகவும் நியமிப்பதற்காக உனக்குத் தரிசன
17 மானேன். இந்த ஜனத்தாரிடத்திற்கும் புற
ஜாதியாரிடத்திற்கும் உன்னை அனுப்பு
18 கிறேன். அவர்கள் இருளைவிட்டு ஒளியி
னிடத்திற்கும், சாத்தானின் அதிகாரத்தை
விட்டுக் கடவுளிடத்திற்கும் திரும்பி, பாவ
மன்னிப்பையும், என்னைப் பற்றும் விசுவா
சத்தினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்
குள் சுதந்தரத்தையும் பெறும்பொருட்டு
அவர்களுடைய கண்களைத் திறக்கும்படி
உன்னை அனுப்புகிறேன். அவர்கள் கைக்கு
19 உன்னை நீங்கலாக்கிவிடுவேன் என்றார். ஆகை
யால், அகிரிப்பா ராஜாவே, நான் அந்தப்
பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாமற்போக
20 வில்லை. முன்பு தமஸ்குவிலும் எருசலேமி
லும் யூதேயா நாடு முழுவதிலும் உள்ளவர்க
ளிடத்திற்கும், பின்பு புறஜாதியாரிடத்திற்
கும் நான் போய், அவர்கள் மனமாறி,
கடவுளிடத்திற்குத் திரும்பி, மனமாறுதலுக்
கேற்ற கிரியைகளைச் செய்யவேண்டுமென்று
அறிவித்தேன். இவைகளினிமித்தமே தேவா 21
லயத்தில் என்னைப் பிடித்துக் கொலைசெய்ய
யூதர் பிரயத்தனம்பண்ணினார்கள். நானோ 22
கடவுளிடமிருந்து வரும் சகாயத்தைப்
பெற்று, இந்நாள்வரைக்கும் சிறியோருக்கும்
பெரியோருக்கும் சாட்சிகூறிக்கொண்டே
வருகிறேன். தீர்க்கதரிசிகளும் மோசேயும் 23
முன்னமே சொல்லியிருந்தபடியே, கிறிஸ்து
பாடுபடவேண்டியதென்றும், மரித்தோர்
உயிர்த்தெழுதலில் அவர் முதல்வராகி, இந்த
ஜனத்தாருக்கும் புறஜாதியாருக்கும் ஒளி
யைப் பிரசித்தப்படுத்துகிறவர் என்றும்
சொல்லுகிறேனேயன்றி வேறொன்றையும்
நான் சொல்லுகிறதில்லை என்றான்.

இவ்விதமாய் அவன் தன் நியாயத்தைச் 24
சொல்லுகையில், பெஸ்து உரத்த சத்தமாய்:
பவுலே, நீ பைத்தியக்காரன், அதிகக் கல்வி
உனக்குப் பைத்தியமுண்டாக்குகிறது
என்று சொல்ல, | அவன்: கனம்பொருந்திய 25
பெஸ்துவே, நான் பைத்தியக்காரனல்ல,
நான் வசனிக்கிறவைகள் சத்தியமும்
நிதானமுமுள்ள வார்த்தைகள். இவைகளை 26
ராஜா அறிவார்; ஆகையால் தைரியமாய்
அவர்முன் பேசுகிறேன்; இவற்றில் ஒன்றும்
அவருக்குமறைவானதல்ல என்பது எனக்கு
நிச்சயம்; இது ஒரு மூலையில் நடந்த காரிய
மல்ல. அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசி 27
களை நம்புகிறீரா? நம்புகிறீர் என்று எனக்
குத் தெரியும் என்றான். அகிரிப்பா பவுலைப் 28
பார்த்து: அற்பப் பிரயாசத்தினாலேயே நீ
என்னைக் கிறிஸ்தவனாக்கிவிடலாம் என்
றிருக்கிறாய் என்று சொல்ல, | பவுல்: நீர் 29
மாத்திரமல்ல இன்று என் வசனத்தைக்கேட்
கிற யாவரும், அற்பத்தினாலோ, அதிகத்தி
னாலோ, இந்தக் கட்டுகள் தவிர முழுவதும்
என்னைப்போலாகும்படி கடவுளை முன்னிட்
டுக் கோருகிறேன் என்றான்.

ராஜாவும் தேசாதிபதியும் பெர்னீக்கே 30
யாளும் அவர்களோடு உட்கார்ந்திருந்தவர்
களும் எழுந்து, | தனியே போய், இந்த 31
மனுஷன் மரணத்துக்காவது கட்டுகளுக்
காவது ஏதுவானதொன்றையும் செய்ய
வில்லையென்று ஒருவரோடொருவர் பேசிக்
கொண்டார்கள். அகிரிப்பா பெஸ்துவி 32
னிடம்: இவன் இராயனுக்கு அபயமிடா
திருந்தால் இவனை விடுதலைபண்ணலாகும்
என்றான்.

நாங்கள் கப்பலேறி இத்தாலியா தேசத் **27**
துக்குப் போகும்படி தீர்மானிக்கப்பட்ட
போது, பவுலையும் வேறு சில கைதிகளையும்

அகுஸ்து பட்டாளத்தைச் சேர்ந்த யூலியு
என்னும் பேர்கொண்ட நூற்றுக்கதிபதியி
2 னிடம் ஒப்புவித்தார்கள். ஆசியா நாட்டுக்
கரையிலுள்ள துறைகள் வழியாய் ஓடும்படி
யிருந்த அதிரமித்தியம் ஊர்க்கப்பல் ஒன்றில்
நாங்கள் ஏறிப் புறப்பட்டோம். மக்கெ
தோனியா தேசத்துத் தெசலோனிக்கே
பட்டணத்தான் அரிஸ்தர்க்கு எங்களோ
3 டிருந்தான். மறுநாள் சீதோன் துறைபிடித்
தோம். யூலியு பவுலைப் பட்சமாய் நடத்தி
அவன் தன் சிநேகிதரிடம் போய்ப் பராமரிப்
படையும்படி உத்தரவு கொடுத்தான்.
4 நாங்கள் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு,
எதிர்காற்றாயிருந்தபடியினால் சீப்புருதீவின்
5 ஒதுக்கிலே சென்றோம். பின்பு சிலிசியா
பம்பிலியா நாடுகளின் கடலைக் கடந்து,
லீசியா நாட்டு மீறாப்பட்டணம் சேர்ந்தோம்.
6 இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சந்
திரியா பட்டணத்துக் கப்பலை நூற்றுக்கதிபதி
அங்கே கண்டு எங்களை அதில் ஏற்றினான்.
7 காற்று எங்களுக்கு அனுகூலமாயிராதபடியி
னால், நாங்கள் வெகு நாள் மெதுவாய்ச்
சென்று, கஷ்டத்தோடே கினீதுக்கு
எதிரே வந்து, சல்மோனே ஊருக்கு எதிராய்,
கிரேத்தாத் தீவின் ஒதுக்கில் சென்றோம்.
8 கஷ்டத்தோடு கரையோரமாய்ச் சென்று,
நல்லதுறைகள் என்னும் இடத்திற்கு வந்
தோம்; லசேய பட்டணம் அதற்குச் சமீப
மாயிருந்தது.
9 வெகுகாலஞ்சென்று, உபவாசநாளும்
கழிந்துபோகவே, இனிக் கப்பல் யாத்திரை
செய்கிறது மோசத்திற்கு ஏதுவானபடியால்,
10 பவுல் அவர்களைப் பார்த்து: மனுஷரே, இந்த
யாத்திரையினால் சரக்குக்கும் கப்பலுக்கும்
மாத்திரமல்ல, நமது உயிருக்குங்கூடச்
சேதமும் மிகுந்த நஷ்டமும் உண்டாகு
மென்று காண்கிறேன் என்று சொல்லி அவர்
11 களை எச்சரித்தான். பவுல் சொன்னதைப்
பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானை
யும் நூற்றுக்கதிபதி அதிகமாய் நம்பினான்.
12 அந்தத் துறைமுகம் மழைகாலத்தில் தங்குவ
தற்கு வசதியாயிராதபடியினால், அவ்
விடத்தை விட்டு, கூடுமானால் கிரேத்தாத்
தீவில் பேனிக்ஸ் துறைமுகம் சேர்ந்து,
மழைகாலத்தில் அங்கே தங்கலாமென்று
அவர்களில் பெரும்பாலார் ஆலோசனை
சொன்னார்கள். அந்தத் துறைமுகம் தென்
மேற்கையும் வடமேற்கையும் நோக்கியது.
13 தென்றல் மெதுவாய் அடித்தபோது, தாங்கள்
கோரினது கைகூடி வந்ததென்று எண்ணி,
துறையை விட்டுப் பெயர்ந்து கிரேத்தாத்
தீவின் கரையோரமாகச் சென்றார்கள்.
கொஞ்ச நேரத்துக்குள் [1]யூராக்கிலோன் 14
என்னும் கடுங்காற்று அதிலிருந்து அடித் -
தது. கப்பல் அதில் அகப்பட்டு, காற்றுக்கு 15
எதிர்த்துப்போக முடியாதிருந்ததினால் அதன்
போக்கிலே அடித்துக்கொண்டுபோகப்பட்
டோம். அப்படிக் கிலவுதா என்னும் ஒரு 16
சிறு தீவின் ஒதுக்கில் செல்லுகையில் வெகு
கஷ்டத்தோடு படவை வசப்படுத்தினோம்.
அதை அவர்கள் தூக்கியெடுத்தபின்பு 17
கயிறு முதலியவற்றால் கப்பலின் அடியைச்
சுற்றிக் கட்டினார்கள். சிர்த்திஸ் என்னும்
சொரிமணலிலே அகப்படுவோம் என்று
பயந்து, பாய்களை இறக்கி, அப்படியே
கொண்டுபோகப்பட்டார்கள். மேலும், 18
பெருங்காற்றில் நாங்கள் மிகவும் அடிபட்ட
படியினால், மறுநாள் சில சரக்குகளைக்
கடலில் எறிந்துவிட்டார்கள். மூன்றாம் 19
நாளில் கப்பலின் தளவாடங்களைத் தங்கள்
கைகளினாலே எடுத்து எறிந்தார்கள். அநேக 20
நாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது
காணப்படவில்லை; அடித்த காற்றுமழை
கொஞ்சமல்ல; இனித் தப்பிப் பிழைப்போ
மென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்
போயிற்று. அநேக நாள் அவர்கள் போஜ 21
னம்பண்ணாமலிருக்கவே, பவுல் அவர்கள்
நடுவில் நின்று: மனுஷரே, இந்தச் சேதமும்
நஷ்டமும் வராதபடி என் சொல்லைக் கேட்
டுக் கிரேத்தாத்தீவை விட்டுப் புறப்படா
மலே இருந்திருக்கவேண்டியது. ஆகிலும் 22
திடமனமாயிருங்களென்று இப்பொழுது
உங்களுக்குத் தைரியஞ்சொல்லுகிறேன்.
கப்பற்சேதமேயல்லாமல் உங்களில் ஒருவ
னுக்கும் உயிர்ச்சேதம் வராது. என்னை 23
ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவரு
மான கடவுளுடைய தூதன் இந்த இராத்திரி
யில் என்னிடம் வந்து நின்று: பவுலே, 24
பயப்படாதே, நீ இராயனுக்குமுன் நிற்க
வேண்டும். உன்னோடு யாத்திரை பண்ணு
கிற யாவரையும் கடவுள் உனக்குத் தந்
தருளினார் என்று சொன்னான்; ஆனபடியி 25
னால், மனுஷரே, தைரியமாயிருங்கள்.
எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே
நடக்கும் என்று கடவுளிடம் நம்பிக்கையா
யிருக்கிறேன். ஆயினும் நாம் ஒரு தீவில் 26
விழவேண்டியதாயிருக்கும் என்றான்.
பதினாலாம் இராத்திரியானபோது நாங்கள் 27
ஆதிரியாக் கடலிலே அலைவுபட்டுச் செல்லு
கையில், ஒரு கரை கிட்டிவருகிறதாக நடு

[1] வாடைக்கொண்டல்.

ஜாமத்தில் கப்பலாட்களுக்குத் தோன்றிற்று.
28 உடனே அவர்கள் விழுதுவிட்டு இருபது
பாகமென்று கண்டார்கள்; சற்று அப்புறம்
போனபொழுது, மறுபடியும் விழுதுவிட்டுப்
பதினைந்து பாகமென்று கண்டார்கள்.
29 பாறையிடங்களில் விழுவோமென்று பயந்து,
பின்னணியத்திலிருந்து நாலு நங்கூரங்களைப்
போட்டு, பொழுது எப்போது விடியுமோ
30 என்றிருந்தார்கள். அப்பொழுது கப்ப
லாட்கள் முன்னணியத்திலிருந்து நங்கூரங்
களைப் போடப்போகிற பாவனையாய்ப் பட
வைக் கடலில் இறக்கிக் கப்பலைவிட்டு
31 ஓடிப்போக வகைதேடுகையில், பவுல் நூற்
றுக்கதிபதியையும் சேவகரையும் பார்த்து:
இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள்
32 தப்பிப் பிழைக்கமுடியாது என்றான். அப்
பொழுது போர்ச்சேவகர் படவின் கயிறுகளை
அறுத்து அதைத் தாழவிட்டார்கள்.
33 பொழுதுவிடியப்போகையில், எல்லாரும்
போஜனம்பண்ணும்படி பவுல் அவர்களுக்
குத் தைரியஞ்சொல்லி: நீங்கள் இன்று பதி
னாலுநாளாய்க் காத்துக்கொண்டு ஒன்றும்
சாப்பிடாமல் பட்டினியாயிருக்கிறீர்கள்.
34 போஜனம்பண்ணும்படி உங்களை வேண்டிக்
கொள்ளுகிறேன். நீங்கள் தப்பிப் பிழைப்ப
தற்கு அது அனுகூலமாகும்; உங்களில்
எவனுக்கும் ஒரு தலைமயிராவது சேதப்
35 படாது என்றான். இவற்றைச் சொல்லி,
அப்பத்தை எடுத்து, எல்லாருக்கும் முன்பா
கவும் கடவுளுக்கு நன்றிசெலுத்தி, அதைப்
36 பிட்டுச் சாப்பிடத் தொடங்கினான். அப்
பொழுது எல்லாரும் தைரியமடைந்து சாப்
37 பிட்டார்கள்; கப்பலில் மொத்தமாக இரு
38 நூற்றெழுபத்தாறுபேர் இருந்தோம். திருப்தி
யாகச் சாப்பிட்டபின்பு அவர்கள் கோதுமை
யைக் கடலில் எறிந்து கப்பலை இலகுவாக்கி
39 னார்கள். பொழுதுவிடிந்தபின்பு இன்ன பூமி
யென்று அறியாதிருந்தார்கள். அப்பொழுது
சமமான கரையுள்ள ஒரு குடா அவர்களுக்
குத் தென்பட்டது; அதற்குள் கப்பலை ஓட்ட
40 லாகுமோவென்று ஆலோசித்து, நங்கூரங்
களைக் கடலிலே விட்டுவிட்டு, சுக்கான்களின்
கட்டுகளைத் தளரவிட்டு, முன் பாயைக்
காற்றுமுகமாய் விரித்து, கரைக்கு நேராய்
41 ஓடவிட்டார்கள். இருபுறமும் கடல்
மோதிய ஒரு இடத்தில் கப்பல் அகப்படவே
அதைக் கரைதட்ட வைத்தார்கள்; முன்
னணியம் ஊன்றி அசையாமலிருந்தது, பின்
னணியமோ அலைகளின் பலத்தினால் உடைய
42 ஆரம்பித்தது. அப்பொழுது கைதிகளில்
ஒருவனும் நீந்தி ஓடிப்போகாதபடி அவர்
களைக் கொன்றுபோடவேண்டுமென்பது
போர்ச்சேவகரின் ஆலோசனை. நூற்றுக்கதி 43
பதி பவுலைக் காப்பாற்ற விரும்பி, அவர்கள்
ஆலோசனையைத் தடுத்து, நீந்தத் தெரிந்த
வர்கள் முந்திக் கடலில் குதித்துக் கரை
யேறவும், மற்றவர்களில் சிலர் பலகைகள் 44
மேலும் சிலர் கப்பல் துண்டுகள்மேலும்
போய்க் கரையேறவும் கட்டளையிட்டான்;
இவ்விதமாய் எல்லாரும் தப்பிக் கரை
சேர்ந்தார்கள்.

நாங்கள் தப்பிக் கரைசேர்ந்தபின் அந்தத் **28**
தீவின் பேர் மெலித்தாவென்று அறிந்து
கொண்டோம். அந்நிய பாஷைக்காரரான 2
அந்தத் தீவார் எங்களுக்குக் காட்டிய உப
சாரம் சாமானியமானதல்ல. அடித்துக்
கொண்டிருந்த மழையினிமித்தமும் குளிரி
னிமித்தமும் அவர்கள் நெருப்பை மூட்டி
எங்கள் அனைவரையும் ஏற்றுக்கொண்
டார்கள். பவுல் விறகுக் குச்சிகளை வாரிச் 3
சேர்த்து அந்த நெருப்பின்மேல் போடுகை
யில், ஒரு விரியன் பாம்பு அனலுறைத்து
வெளிப்பட்டு அவன் கையைக் கவ்விக்
கொண்டது. பாம்பு அவன் கையில் 4
தொங்குகிறதை அந்த ஜனங்கள் கண்ட
போது: இந்த மனுஷன் கொலைபாதகன்,
இதற்குச் சந்தேகமில்லை; இவன் சமுத்திரத்
துக்குத் தப்பி வந்தும் தெய்வநீதி இவனைப்
பிழைக்கவிடவில்லையென்று தங்களுக்குள்
சொல்லிக்கொண்டார்கள். அவனோ அந்தப் 5
பாம்பை உதறிப்போட்டு, ஒரு தீங்கும்
அடையாதிருந்தான். அவனுக்கு வீக்கங் 6
காணும், அல்லது அவன் திடீரென விழுந்து
சாவானென்று அவர்கள் பார்த்துக்கொண்
டிருந்தார்கள்; நெடுநேரமாய்ப் பார்த்துக்
கொண்டிருந்தும் விபரீதமானதொன்றும்
அவனுக்கு வராததைக் கண்டபோது
அவர்கள் அபிப்பிராயம் மாறி, இவன் ஒரு
தெய்வமென்று சொல்லிக்கொண்டார்கள்.
புப்பிலியு என்பவன் அந்தத் தீவுக்கு 7
முதலாளி. அவன் நிலங்கள் அந்த இடத்
திற்குச் சமீபமாயிருந்தன; அவன் எங்களை
வரவேற்று, மூன்றுநாள் பட்சமாய் உபசரித்
தான். புப்பிலியுவின் தகப்பன் ஜுரத்தினா 8
லும் இரத்தபேதியினாலும் வருத்தப்பட்டுக்
கிடந்தான்; பவுல் அவனிடம் போய் ஜெபம்
பண்ணி, அவன்மேல் கைகளை வைத்து, அவ
னைக் குணமாக்கினான். இது நடந்தபின்பு 9
தீவிலிருந்த மற்ற வியாதிக்காரரும் வந்து,
சொஸ்தமடைந்தார்கள். அவர்கள் பலவா 10
றாக எங்களுக்கு மரியாதைசெய்து, நாங்கள்
கப்பலேறி போகிறபோது எங்களுக்குத்
தேவையானவைகளை ஏற்றினார்கள்.

11 மூன்று மாதம் சென்றபின், மிதுனம்
என்னும் அடையாளமுடைய அலெக்சந்
திரியா கப்பலில் நாங்கள் ஏறிப் புறப்பட்
டோம். அது அந்தத் தீவில் மழைகாலத்
12 திற்குத் தங்கியிருந்தது. புறப்பட்டு, சீர
கூசா பட்டணம் சேர்ந்து, அங்கே மூன்று
13 நாள் தங்கினோம். அவ்விடம்விட்டுச் சுற்றிச்
சென்று, ரேகியு துறைமுகத்துக்கு வந்து
சேர்ந்தோம். மறுநாளில் தென்றல் காற்
றெழும்பவே, இரண்டாம் நாள் புத்தேயோலி
14 பட்டணத்திற்கு வந்து, அங்கே சகோதர
ரைக் கண்டோம்; நாங்கள் தங்களிடம் ஏழு
நாள் தங்கும்படி அவர்கள் வேண்டிக்
கொண்டார்கள்; இவ்விதமாய் நாங்கள்
15 ரோமாபுரிக்கு வந்தோம். நாங்கள் வருகிற
செய்தியைக் கேள்விப்பட்டு, அங்கிருந்த
சகோதரர் அப்பியு சந்தைவரைக்கும், முச்
சத்திரம்வரைக்கும், எங்களுக்கு எதிர்
கொண்டு வந்தார்கள்; பவுல் அவர்களைக்
கண்டு, கடவுளுக்கு நன்றிசெலுத்தி, தைரிய
மடைந்தான்.

16 நாங்கள் ரோமாபுரியில் சேர்ந்தபோது
பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே
தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவுபெற்
றுக்கொண்டான்.

17 மூன்று நாளுக்குப்பின்பு, பவுல் யூதரில்
பிரதானமானவர்களை வரவழைத்தான்;
அவர்கள் கூடிவந்தபோது அவன் அவர்
களைப் பார்த்து: சகோதரரே, நமது ஜனத்துக்
கும் நம் முன்னோரின் முறைமைகளுக்கும்
விரோதமானதொன்றையும் நான் செய்யாம
லிருந்தும், எருசலேமிலிருந்து ரோமர் கை
களில் கைதியாக ஒப்புக்கொடுக்கப்பட்
18 டேன். அவர்கள் நியாயம் விசாரித்தபோது,
என்னிடம் மரணதண்டனைக்கேதுவான
குற்றமொன்றும் காணாதபடியினால், என்னை
19 விடுதலைசெய்ய விரும்பினார்கள். யூதர்
அதற்கு எதிர்பேசவே, நான் இராயனுக்கு
அபயமிடவேண்டியதாயிற்று. என் ஜனத்
தார்மேல் யாதொரு குற்றஞ்சாட்டவேண்டு
மென்று நான் அப்படிச் செய்யவில்லை.
20 இதின் நிமித்தமாக உங்களைக் காணவும்
உங்களோடு பேசவும் உங்களை அழைப்பித்
தேன். இஸ்ரவேலருடைய நன்னம்பிக்கை
யின்பொருட்டே இந்தச் சங்கிலியால்
21 கட்டப்பட்டிருக்கிறேன் என்றான். அதற்கு
அவர்கள்: உன்னைக்குறித்து யூதேயாவி
லிருந்து எங்களுக்குக் காகிதம் வரவுமில்லை,
சகோதரரில் எவராவது வந்து உனக்கு
விரோதமாகத் தீமையொன்றையும் அறிவிக்
22 கவுமில்லை, பேசவுமில்லை. இந்த மதப்
பிரிவுக்கு விரோதமாய் எங்கும் பேசிக்
கொள்ளப்படுகிறதாக நாங்கள் அறிகிறபடி
யால், உன் கருத்து இன்னதென்று கேட்
டறிவது நியாயமென்று எண்ணுகிறோம்
என்றார்கள்.

அவர்கள் அவனுக்குக் குறித்த ஒரு 23
நாளில் அநேகம்பேர் அவன் தங்கியிருந்த
வீட்டிற்கு அவனிடம் வந்தார்கள். அவன்
காலைதொடங்கி மாலைவரைக்கும், மோசே
யின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசி
களின் ஆகமங்களிலுமிருந்து இயேசுவைப்
பற்றி அவர்களுக்குப் போதித்து, கடவுள்
ராஜ்யத்தைக்குறித்து வற்புறுத்தி விவரித்
தான். சிலர் அவன் சொன்னவைகளை 24
ஒப்புக்கொண்டார்கள், சிலரோ நம்பாமற்
போனார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் 25
ஒவ்வாமல் கூட்டத்தை விட்டுப் போகை
யில், பவுல் அவர்களுக்கு ஒரே ஒரு காரியத்
தைச் சொன்னான்; அதாவது:

காதாரக் கேட்டும் உணரமாட்டீர்கள், 26
கண்ணாரக் கண்டும் அறியமாட்டீர்கள்.
இந்த ஜனங்கள் கண்களால் காணாமலும், 27
காதுகளால் கேளாமலும்,
இருதயத்தால் உணராமலும்,
மனந்திரும்பாமலும்,
நான் இவர்களைக் குணமாக்காமலும்
இருக்கும்படி,
இவர்கள் இருதயம் கொழுத்துப்போ
யிற்று;
கேளாதபடி தங்கள் காதுகளை மந்தமாக்
கிக்கொண்டார்கள்,
தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள்
என்று இந்த ஜனத்தினிடம் போய்ச்
சொல்

என்று பரிசுத்த ஆவி ஏசாயா தீர்க்கதரிசி
யின் மூலமாய் உங்கள் பிதாக்களுக்கு நன்
றாய்ச் சொல்லியிருக்கிறார். ஆதலால் 28,
கடவுள் அருளும் இந்த இரட்சிப்பு புற 29
ஜாதியாருக்கு அனுப்பப்பட்டிருக்கிற
தென்று உங்களுக்குத் தெரிந்திருக்கட்டும்;
அவர்கள் அதற்குச் செவிகொடுப்பார்கள்
என்பது.

பின்பு பவுல் தனக்கு வாடகைக்கு 30
அமர்த்தியிருந்த வீட்டில் இரண்டு வருஷம்
முழுவதும் தங்கி, தன்னிடம் வந்த யாவரை
யும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரிய 31
மாய்க் கடவுள் ராஜ்யத்தைக்குறித்துப்பிரசங்
கித்து, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைப்
பற்றியவைகளை உபதேசித்துக்கொண்டிருந்
தான். ஒருவனும் அவனுக்குத் தடை
செய்யவில்லை.

ரோமருக்கு எழுதின நிருபம்

1 கிறிஸ்து இயேசுவின் அடியானும், அப்
போஸ்தலனாக அழைக்கப்பட்டுக் கடவுளின்
சுவிசேஷத்தின்பொருட்டுப் பிரத்தியேக
2 மாக்கப்பட்டவனுமாகிய பவுல், ரோமாபுரி
யில் கடவுளால் அன்புகூரப்பெற்றுப் பரி
சுத்தராகும்படி அழைக்கப்பட்ட யாவருக்
3 கும் எழுதுவதாவது: நம்முடைய பிதாவா
கிய கடவுளிடமிருந்தும் ஆண்டவராகிய
இயேசு கிறிஸ்துவினிடமிருந்தும் உங்களுக்
குக் கிருபையும் சமாதானமும் உண்டாவ
4 தாக. கடவுள் தம் தீர்க்கதரிசிகளின்
மூலமாய்த் தம் குமாரனைப்பற்றிய சுவி
சேஷத்தைப் பரிசுத்த வேதவாக்கியங்களில்
5 முன்னமே வாக்களித்தார். இவர் மாம்சத்
தின்படி தாவீதின் வம்சத்தில் தோன்றினவர்,
மரித்தோரிலிருந்தெழுந்ததினால் பரிசுத்த
முள்ள ஆவியின்படி தேவகுமாரனென்று
பலமாய் ரூபிக்கப்பட்டவர்; அவரே நம்
முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.
6 புறஜாதியார் யாவருக்குள்ளும் அவர் நாமத்
தின்பொருட்டு விசுவாசத்தின் கீழ்ப்படிதலை
உண்டுபண்ணும்படி நாங்கள் அவர்மூல
மாய்க் கிருபையையும் அப்போஸ்தல
7 ஊழியத்தையும் பெற்றோம். அவர்களோடு
கூட நீங்களும் இயேசுகிறிஸ்துவில் அழைக்
கப்பட்டு அவருடையவர்களாய் இருக்கி
றீர்கள்.

8 உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிர
சித்தமாகிறபடியினாலே நான் உங்களெல்லா
ருக்காகவும் இயேசுகிறிஸ்துமூலமாய் முத
லாவது என் கடவுளுக்கு நன்றிசெலுத்து
9 கிறேன். நான் உங்களை இடைவிடாமல்
எப்போதும் என் ஜெபங்களில் நினைத்துவரு
கிறேன் என்பதற்கு அவர் குமாரனின் சுவி
சேஷத்திலே நான் என் ஆவியில் சேவிக்கிற
10 கடவுளே சாட்சி. கடவுளின் சித்தப்படி
எப்படியாவது சமீபகாலத்தில் உங்களிடம்
வந்துசேர, பிரயாணம் வாய்க்கும்படி
11 அவரை வேண்டிக்கொள்ளுகிறேன். நீங்கள்
ஸ்திரப்படுவதற்கு ஆவிக்குரிய வரம் ஏதே
12 னும் உங்களுக்குக் கொடுக்கும்படி, அதா
வது நீங்களும் நானும் ஒருவர் விசுவா
சத்தை ஒருவர் கண்டு உங்கள் நடுவில் நாம்
ஒன்றாய் உற்சாகமடையும்படி, உங்களைக்
காண ஆசையாயிருக்கிறேன். சகோதரரே, 13
புறஜாதிகளான மற்றவர்களுக்குள் எனக்
குப் பலன் கிடைத்ததுபோலவே உங்களுக்
குள்ளும் ஏதேனும் பலன் கிடைக்கும்படி
உங்களிடம் வரப் பலமுறை நிர்ணயித்திருந்
தும் இதுவரைக்கும் தடைப்பட்டேன்;
இதை நீங்கள் அறியாதிருக்க எனக்கு மன
மில்லை. கிரேக்கருக்கும் மிலேச்சருக்கும், 14
ஞானிகளுக்கும் மூடருக்கும் நான் கடமைப்
பட்டவன். ஆதலால், ரோமாபுரியிலிருக் 15
கிற உங்களுக்கும் நான் சுவிசேஷத்தைப்
பிரசங்கிக்க ஆவலாயிருக்கிறேன். சுவிசே 16
ஷத்தைப்பற்றி நான் வெட்கப்படேன். விசு
வாசிக்கிறவன் எவனுக்கும், முன்பு யூதனுக்
கும் பின்பு கிரேக்கனுக்கும், அது இரட்சிப்
புக்கேதுவான தேவ வல்லமை. விசுவாசத் 17
தினால் நீதிமான் பிழைப்பான் என்று எழுதி
யிருக்கிறபடி, கடவுளின் நீதி விசுவாசத்தில்
தொடங்கி, விசுவாசம் வளருவதற்காக
அந்தச் சுவிசேஷத்தில் வெளியாக்கப்படு
கிறது.

ஏனெனில், சத்தியத்தை அநியாயத்தி 18
னாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய
சகல அவபக்தி அநியாயங்களின்மேலும்
கடவுளின் கோபம் வானத்திலிருந்து வெளி
யாக்கப்படுகிறது. கடவுளைப்பற்றி அறியக் 19
கூடியதெதுவோ அது அவர்களுக்குள் பிரத்தி
யக்ஷமாயிருக்கிறது; கடவுளே அதை அவர்
களுக்குப் பிரத்தியக்ஷமாக்கினார். எப்படி 20
யென்றால், காணப்படாதவைகளாகிய அவ
ருடைய நித்திய வல்லமை தெய்வத்துவம்
என்பவைகள், படைக்கப்பட்டவைகளின்
மூலமாய், உலக சிருஷ்டிப்பு முதற்
கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆத
லால் அவர்கள் போக்குச்சொல்ல இட
மில்லை. அவர்கள் கடவுளை அறிந்தும் அவ 21
ரைக் கடவுளென்று மகிமைப்படுத்தாமலும்
அவருக்கு நன்றிசெலுத்தாமலுமிருந்து,
தங்கள் சிந்தனைகளில் வீணரானார்கள்.
விவேகமில்லாத அவர்கள் இருதயம்
இருண்டுபோயிற்று. அவர்கள் தங்களை 22
ஞானிகளென்று சாதித்துக்கொண்டே மூட
ராகி, அழிவில்லாத கடவுளின் மகிமையை 23
அழிவுள்ள மனுஷர் பறவைகள் மிருகங்கள்

ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய
ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்.
24 இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருத
யங்களிலுள்ள இச்சைகளினாலே ஒருவரோ
டொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்
படுத்தக் கடவுள் அவர்களை அசுத்தத்திற்கு
25 ஒப்புக்கொடுத்தார். அவர்கள் கடவுளின்
சத்தியத்தைப் பொய்யாக மாற்றி, சிருஷ்
டிகரை விட்டுச் சிருஷ்டியைத் தொழுது
சேவித்தார்களே. அவர் என்றைக்கும்
ஸ்தோத்திரத்துக்குரியவர். ஆமேன்.
26 இதினிமித்தம் கடவுள் அவர்களை இழி
வான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்
கொடுத்தார். அவர்களுடைய பெண்கள்
சுபாவ அநுபவத்தைச் சுபாவத்துக்கு
விரோதமான அநுபவமாக மாற்றினார்கள்.
27 அப்படியே ஆண்களும் இயற்கையான ஸ்திரீ
அநுபவத்தை விட்டு, ஒருவர்மேலொருவர்
விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடு ஆண்
அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள்
தப்பு நடக்கைக்குத்தக்கப் பிரதிபலனைத்
தங்களுக்குள் அடைந்தார்கள்.
28 கடவுளைத் தங்கள் அறிவில் பற்றிக்கொள்
வதை அவர்கள் வெறுத்தபடியால் தகாதவை
களைச் செய்யும்படி சீர்கேடான சிந்தைக்கு
அவர் அவர்களை ஒப்புக்கொடுத்தார்.
29 அவர்கள் சகல அநியாயமும் பொல்லாப்பும்
பொருளாசையும் துர்க்குணமும் நிறைந்த
வர்கள், பொறாமை கொலை சண்டை வஞ்ச
கம் வன்மம் நிரம்பினவர்கள், புறங்கூறு
30 கிறவர்கள், அவதூறுபண்ணுகிறவர்கள்,
கடவுளைப் பகைக்கிறவர்கள், அகந்தைக்
காரர், இறுமாப்புள்ளவர்கள், வீம்புக்காரர்,
பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிற
வர்கள், பெற்றோர்க்கு அடங்காதவர்கள், |
31 விவேகமற்றவர்கள், நம்பிக்கைத்துரோகிகள்,
சுபாவ அன்பில்லாதவர்கள், இரக்கமில்
32 லாதவர்கள். இப்படிப்பட்டவைகளை
நடப்பிக்கிறவர்கள் மரணதண்டனைக்குரிய
வர்களென்னும் தெய்வநியமத்தை அவர்கள்
நன்றாய் அறிந்திருந்தும் அவைகளைத் தாங்
களே செய்துவருகிறார்கள். அதுவுமன்றி,
அவைகளைச் செய்கிற மற்றவர்களுக்கும்
இணங்கிச் சம்மதிக்கிறார்கள்.

2 ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளிக
ளாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி,
போக்குச் சொல்லுவதற்கு உனக்கு இட
மில்லை; நீ எந்தக் காரியத்தில் மற்றவனைக்
குற்றவாளியாகத் தீர்க்கிறாயோ, அந்தக்
காரியத்தில் உன்னைத்தானே ஆக்கினைக்குள்
ளாகத் தீர்த்துக்கொள்ளுகிறாய். ஏனெனில்,
தீர்ப்பிடுகிற நீ அதே காரியங்களைச் செய்
கிறாய். இப்படிப்பட்டவைகளைச் செய்கிற 2
வர்கள்மேல் கடவுளின் தீர்ப்பு சத்தியத்திற்
கிசைந்ததென்று நமக்குத் தெரியும்.
இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களைக் 3
குற்றவாளிகளென்று தீர்த்தும் அவைகளைச்
செய்கிறவனே, நீ கடவுளின் தீர்ப்புக்குத்
தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ?
அல்லது, நீ மனந்திரும்பும்படி கடவுளின் 4
தயாளம் உன்னை ஏவுகிறதென்று அறியாமல்,
அவருடைய தயாளம் பொறுமை நீடிய
சாந்தம் இவற்றின் பெருக்கத்தை அசட்டை
பண்ணுகிறாயோ? கோபம் விளங்குவதும் 5
கடவுளின் நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படுவது
மான அந்நாளில், உன் மனக்கடினத்திற்கும்
மாறாத இருதயத்திற்கும் ஏற்றபடி, உனக்
காகக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளு
கிறாயே. அவனவன் செய்கைகளுக்குத் தக்க 6
படி அவர் அவனவனுக்குப் பலனளிப்பார்.
விடாமுயற்சியாய் நற்செய்கைகளைச் செய்து, 7
மகிமையையும் கனத்தையும் அழியாமையை
யும் தேடுகிறவர்களுக்கு நித்தியஜீவனை
அளிப்பார். முரட்டாட்டமாயிருந்து சத்தி 8
யத்திற்குக் கீழ்ப்படியாமல் அநியாயத்திற்
குக் கீழ்ப்படிகிறவர்களுக்கோ உக்கிர
கோபாக்கினை வரும். முன்பு யூதரிலும் 9
பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்கு செய்கிற
எந்த மனுஷனின் ஆத்துமாவுக்கும் உபத்
திரவமும் வியாகுலமும் உண்டாகும்.
முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் 10
எவன் நன்மை செய்கிறானோ அவனுக்கு
மகிமையும் கனமும் சமாதானமும் உண்
டாகும். கடவுளிடத்தில் பட்சபாதமில்லை. 11
எத்தனைபேர் நியாயப்பிரமாணமில்லாமல் 12
பாவஞ்செய்தார்களோ அத்தனை பேரும்
நியாயப்பிரமாணமில்லாமல் அழிந்துபோ
வார்கள்; எத்தனை பேர் நியாயப்பிரமா
ணத்துக்குட்பட்டுப் பாவஞ்செய்தார்களோ
அத்தனைபேரும் நியாயப்பிரமாணத்தினாலே
தீர்ப்புப் பெறுவார்கள். நியாயப்பிரமா 13
ணத்தைக் கேட்கிறவர்கள் கடவுள்முன்
நீதிமான்களாவதில்லை; நியாயப்பிரமாணத்
தைக் கைக்கொள்ளுகிறவர்களே நீதிமான்க
ளாகத் தீர்க்கப்படுவார்கள். நியாயப்பிர 14
மாணமில்லாத புறஜாதியார் நியாயப்பிர
மாணத்திற்கிசைந்தவைகளை இயற்கையாய்ச்
செய்யும்போது, நியாயப்பிரமாணமில்லாத
இவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்
பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்கள் மனச் 15
சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும்,
குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்கள்
சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினா

னும், நியாயப்பிரமாணத்தின் பொருள்
தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிற
16 தென்று காண்பிக்கிறார்கள். என் சுவிசே
ஷத்தின்படி கடவுள் கிறிஸ்து இயேசுவைக்
கொண்டு மனுஷரின் அந்தரங்கங்களை
நியாயந்தீர்க்கும் நாளில் இது விளங்கும்.
17 நீ யூதனென்று பெயர்வகித்து, நியாயப்
பிரமாணத்தின்மேல் சார்ந்து, கடவுளில்
18 பெருமைபாராட்டி, நியாயப்பிரமாண உப
தேசம்பெற்றவனாய்த் தேவ சித்தத்தை
அறிந்துகொண்டு, நன்மை தீமை இன்ன
19 தென்று வகையறுக்கிறாய். ஞானம் சத்தியம்
என்பவற்றின் சட்டத்தை நியாயப்பிரமா
ணத்தில் உடையவனாய், உன்னைக் குருட
ருக்கு வழிகாட்டியாகவும், இருளிலிருப்ப
20 வர்களுக்கு வெளிச்சமாகவும், பேதைகளுக்
குக் கற்பிக்கிறவனாகவும், குழந்தைகளுக்
21 குப் போதகனாகவும் எண்ணுகிறாய். இப்படி
யிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ
உனக்குத்தானே போதித்துக்கொள்ளுகிற
தில்லையா? களவுசெய்யக்கூடாதென்று பிர
22 சங்கிக்கிற நீ களவுசெய்கிறாயா? விபசாரம்
செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விப
சாரம் செய்கிறாயா? விக்கிரகங்களை அரு
வருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடு
23 கிறாயா? நியாயப்பிரமாணத்தில் பெருமை
பாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறி
நடந்து கடவுளைக் கனவீனம்பண்ணுகிறாயா?
24 எழுதியிருக்கிறபடி, புறஜாதிகளுக்குள்
உங்கள் நிமித்தம் கடவுள் நாமம் தூஷிக்
கப்படுகிறதே.
25 நீ நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு
நடந்தால் விருத்தசேதனம் பிரயோஜன
முள்ளதுதான்; நீ நியாயப்பிரமாணத்தை
மீறி நடக்கிறவனானால் உன் விருத்தசேத
னம் விருத்தசேதனமில்லாமையாயிற்றே.
26 ஆதலால், விருத்தசேதனமில்லாதவன் நியா
யப்பிரமாண விதிகளைக் கைக்கொண்டால்
அவனுடைய விருத்தசேதனமில்லாமை
விருத்தசேதனமாகவே எண்ணப்படாதோ?
27 இயற்கையின்படி விருத்தசேதனமில்லாதவ
னாய் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்று
கிறவன், வேத எழுத்தும் விருத்தசேதன
மும் உள்ளவனாய் நியாயப்பிரமாணத்தை
28 மீறுகிற உன்னை நியாயந்தீர்ப்பானே. புறம்
பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாகச்
சரீரத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும்
29 விருத்தசேதனமல்ல. உள்ளாக யூதனான
வனே யூதன்; எழுத்தின்படியல்ல ஆவியின்
படியான இருதய விருத்தசேதனமே விருத்த
சேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்
மனுஷராலல்ல, கடவுளால் வரும்.

இப்படியிருக்க, யூதனானவனுக்குச் 3
சிலாக்கியமென்ன? விருத்தசேதனத்தினா
லாகும் பிரயோஜனமென்ன? எவ்விதத்திலும் 2
அதிகமே. முதலாவது, கடவுளின் வாக்கி
யங்கள் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்
டன. | ஆனாலுமென்ன? அவர்களில் சிலர் 3
விசுவாசமில்லாதவர்களாய்ப் போனதினால்
அவர்கள் அவிசுவாசம் கடவுளின் உண்
மையை அவமாக்குமோ? இல்லவே இல்லை. 4
கடவுளே சத்தியபரர் என்றும் எந்த மனுஷ
னும் பொய்யனென்றும் காணப்படட்டும்.
நீர் உமது வார்த்தைகளில் நீதிபரராகவும்,
உமது நியாயம் விசாரிக்கப்படும்போது
ஜெயம்பெற்றவராகவும் விளங்கவேண்டும்
என்று எழுதியிருக்கிறது. நமது அநீதம் 5
கடவுளின் நீதியை விளங்கப்பண்ணுமானால்
என்ன சொல்லுவோம்? கோபாக்கினையைச்
செலுத்துகிற கடவுள் அநீதரா?—மனுஷர்
பேசுகிற பிரகாரம் பேசுகிறேன்—அல்லவே 6
அல்ல; கடவுள் அநீதரானால் அவர் உல
கத்தை நியாயந்தீர்ப்பதெப்படி? அன்றியும், 7
என் பொய்யினால் கடவுளின் சத்தியம் அவ
ருடைய மகிமைக்கென்று பெருகினதுண்
டானால் நான் பாவியென்று இன்னும்
தீர்க்கப்படுவானேன்? நன்மை வரும்படிக் 8
குத் தீமை செய்யலாமென நாங்கள் போதிக்
கிறோமென்று சிலர் எங்களைத் தூஷிக்கிற
படியே நாங்கள் ஏன் செய்யக்கூடாது?
அப்படிப்பட்டவர்கள்மேல் வரும் ஆக்கினை
நியாயமே.

ஆனாலும் என்ன? அவர்களைப் பார்க்கி 9
லும் நாங்கள் மேலானவர்களா? எவ்வள
வேனும் மேலானவர்களல்ல. யூதர் கிரேக்
கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்க
ளென்று முன்னமே குற்றப்படுத்தினோமே.
அந்தப்படியே: 10
நீதிமானில்லை, ஒருவனாகிலுமில்லை;
உணர்வுள்ளவனில்லை; 11
கடவுளைத் தேடுகிறவனில்லை;
எல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப் 12
போனார்கள்;
நன்மைசெய்கிறவனில்லை, ஒருவனாகிலு
மில்லை.
அவர்கள் தொண்டை திறந்த பிரேதக்குழி, 13
தங்கள் நாவுகளால் வஞ்சனைசெய்கி
றார்கள்;
அவர்கள் உதடுகளின் கீழே பாம்பின்
விஷம் இருக்கிறது.
அவர்கள் வாய் சபிப்பும் கசப்பும் 14
நிறைந்திருக்கிறது;
அவர்கள் கால்கள் இரத்தம் சிந்துவ 15
தற்கு விரைகின்றன,

16 நாசமும் நிர்ப்பந்தமும் அவர்கள் வழி
களில் உண்டு,
17 சமாதான வழியை அவர்கள் அறிந்து
கொள்ளவில்லை.
18 அவர்கள் கண்களுக்குமுன் தேவபயம்
இல்லை
என்று எழுதியிருக்கிறதே.
19 வாய்கள் யாவும் அடைபடும்படிக்கும்,
உலகத்தார் யாவரும் கடவுளின் ஆக்கினைத்
தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படிக்கும்,
நியாயப்பிரமாணம் சொல்லுகிறவைகளை
யெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்
பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிற
20 தென்று நமக்குத் தெரியும். மனுமக்களில்
எவனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளி
னாலே கடவுளுக்கு முன்பாக நீதிமானாகத்
தீர்க்கப்படுவதில்லை. நியாயப்பிரமாணத்தி
னால் உண்டாவது பாவத்தை அறிகிற அறிவு.
21 இப்பொழுதோ நியாயப்பிரமாணமில்லா
மலே கடவுளின் நீதி வெளியாக்கப்பட்
டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிர
மாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடு
22 கின்றன. அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும்
விசுவாசத்தினாலே, விசுவாசமாயிருக்கிற
எவருக்கும் பலிக்கும் தேவ நீதியே. வித்தி
23 யாசமே இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து
24 தேவமகிமை அடையாதிருக்கிறார்கள்; அவர்
கிருபையினாலேயே கிறிஸ்து இயேசுவிலுள்ள
மீட்பைக்கொண்டு இலவசமாய் நீதிமான்க
25 ளாகத் தீர்க்கப்படுகிறார்கள். கடவுள்
பொறுமையுள்ளவராய் முற்காலத்துப்
பாவங்களைச் சகித்துக்கொண்டதினிமித்தம்
தமது நீதியைக் காண்பிக்கவேண்டுமென்
26 றும், தாம் நீதியுள்ளவரும் இயேசுவினிடம்
விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாய்த் தீர்க்
கிறவருமாய் விளங்கும்படி இக்காலத்திலே
தமது நீதியைக் காண்பிக்கவேண்டுமென்
றும், கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தில், விசு
வாசத்தின் மூலமாய்ப் பலிக்கும் கிருபாதார
27 மாக அவரை விளங்கப்பண்ணினார். இப்படி
யிருக்க, பெருமைபாராட்டுவதெங்கே? அது
நீக்கப்பட்டது. எந்த மார்க்கத்தினால்?
கிரியா மார்க்கத்தினாலா? அல்ல; விசுவாச
28 மார்க்கத்தினாலேயே. நியாயப்பிரமாணத்தின்
கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே
மனுஷன் நீதிமானாகத் தீர்க்கப்படுகிறா
29 னென்று நிதானிக்கிறோமே. கடவுள் யூத
ருக்கு மாத்திரமா கடவுள்? புறஜாதிகளுக்
கும் கடவுள் அல்லவோ? கடவுள் ஒருவர்
என்றால் புறஜாதிகளுக்கும் அவரே கடவுள்.
30 விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தி
னாலும், விருத்தசேதனமில்லாதவர்களை விசு
வாசத்தின் மூலமாயும் நீதிமான்களாகத்
தீர்க்கிறவர் அவரே. அப்படியானால், விசு 31
வாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவ
மாக்குகிறோமா? இல்லவே இல்லை; நியாயப்
பிரமாணத்தை நிலைநிறுத்துகிறோம்.

அப்படியானால், மாம்சத்தின்படி நமக் 4
குப் பிதாவாயிருக்கிற ஆபிரகாமைப்பற்றி
என்ன சொல்லுவோம்? ஆபிரகாம் கிரியை 2
களினாலே நீதிமானாகத் தீர்க்கப்பட்டானா
கில் பெருமைபாராட்டிக்கொள்ள அவ
னுக்கு இடமுண்டு; கடவுள் முன்பாகவோ
அதற்கு இடமில்லை. வேதவாக்கியம் என்ன 3
சொல்லுகிறது? ஆபிரகாம் கடவுளில் விசு
வாசம் வைத்தான், அது அவனுக்கு நீதியாக
எண்ணப்பட்டதென்று சொல்லுகிறது.
வேலைசெய்கிறவனுக்குக் கிடைக்கும் பலன் 4
தயவு என்றெண்ணப்படாமல் கூலி என்
றெண்ணப்படும். கிரியை செய்யாமல், அவ 5
பக்தனை நீதிமானாகத் தீர்க்கிறவரிடம் விசு
வாசம் வைக்கிறவனுக்கோ அவன் விசுவா
சமே நீதியாக எண்ணப்படும். அப்படியே, 6
கிரியைகளில்லாமல் கடவுளால் நீதிமானென்
றெண்ணப்படுகிற மனுஷனின் பாக்கியத்
தைத் தாவீதும் கொண்டாடி:

எவர்கள் அக்கிரமங்கள் மன்னிக்கப்பட் 7
டனவோ,
எவர்கள் பாவங்கள் மூடப்பட்டனவோ,
அவர்கள் பாக்கியவான்கள்;
எவன் பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக் 8
கிறாரோ
அவன் பாக்கியவான்

என்று சொல்லுகிறான்.
இந்தப் பாக்கிய மொழி விருத்தசேதன 9
முள்ளவனுக்கோ, இல்லாதவனுக்கோ?
ஆபிரகாமுக்கு அவன் விசுவாசமே நீதியாக
எண்ணப்பட்டதென்று சொல்லுகிறோமே.
எந்த நிலைமையிலிருந்தபொழுது அது அவ 10
னுக்கு எண்ணப்பட்டது? அவன் விருத்த
சேதனமுள்ளவனாயிருந்தபோதோ, இல்லாத
வனாயிருந்தபோதோ? விருத்தசேதனமுள்ள
வனாயிருந்தபோதல்ல, இல்லாதவனாயிருந்த
போதே. மேலும், விருத்தசேதனமில்லாத 11
வனாயிருந்த காலத்தில் அவனுக்கிருந்த விசு
வாச நீதிக்கு முத்திரையாக அவன் விருத்த
சேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான்.
விருத்தசேதனமில்லாதிருந்தும் விசுவாசிக்
கிற யாவருக்கும் நீதி எண்ணப்படுவதற்கு
அவன் அவர்களுக்குப் பிதாவாயிருக்கும்
படிக்கும், விருத்தசேதனமுள்ளவர்களுக் 12
கும்—அதாவது, விருத்தசேதனத்தைப்பெற்
றதுமன்றி நம் பிதாவாகிய ஆபிரகாம்

விருத்தசேதனமில்லாத காலத்தில் கொண்
டிருந்த விசுவாசத்தின் அடிச்சுவடுகளில்
நடக்கிறவர்களுக்கும்—அவன் பிதாவா
யிருக்கும்படிக்கும் அந்த அடையாளத்
தைப் பெற்றான்.
13 உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற
வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன்
சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தின் மூல
மாய்க் கிடையாமல் விசுவாச நீதியின் மூல
14 மாய்க் கிடைத்தது. நியாயப்பிரமாணத்
தைச் சார்ந்தவர்களே சுதந்தரவாளிகளா
னால் விசுவாசம் வீணாய்ப்போகும், வாக்குத்
15 தத்தமும் அவமாகும். நியாயப்பிரமாணத்
தால் விளைவது கோபாக்கினையே; நியாயப்
பிரமாணமில்லாத இடத்தில் மீறுதலும்
16 இல்லை. ஆதலால், எல்லாச் சந்ததியாருக்
கும்—நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்
களுக்கு மாத்திரமல்ல, ஆபிரகாமின் விசு
வாசத்தையுடையவர்களுக்கும் — வாக்குத்
தத்தம் உறுதிப்படுவதற்காக, அது தயவு
என்று எண்ணப்படும்படி விசுவாசத்தினாலே
17 வருகிறது. அநேக ஜாதிகளுக்கு உன்னைப்
பிதாவாக ஏற்படுத்தினேன் என்று எழுதி
யிருக்கிறபடி, ஆபிரகாம் விசுவாசித்தவரும்,
மரித்தோரை உயிர்ப்பிக்கிறவரும், இல்லாத
வைகளை இருக்கிறவைகள்போல் அழைக்கிற
வருமாகிய கடவுளுக்குமுன் நம்மெல்லா
ருக்கும் பிதாவாயிருக்கிற அவனுக்கு அது
18 உறுதியாக்கப்பட்டது. இப்படியே உன்
சந்ததி இருக்குமென்று சொல்லப்பட்ட
தற்கு இசைய நன்னம்பிக்கைக்கு இட
மில்லாதிருந்தும், அநேக ஜாதிகளுக்குத்
தான் தகப்பனாயிருக்கும்படிக்கு, அவன்
நன்னம்பிக்கைக்கொண்டு விசுவாசித்தான்.
19 ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருந்த
போது, தன் சரீரம் செத்துப்போனதையும்
சாராளின் கர்ப்பம் செத்துப்போனதையும்
அவன் கவனித்துப்பார்த்தும் விசுவாசத்தில்
20 பலவீனப்படாமலும், கடவுளின் வாக்குத்
தத்தத்தைக்குறித்து அவிசுவாசமாய்ச் சந்
21 தேகப்படாமலும், விசுவாசத்தில் பலங்
கொண்டு, கடவுள் தாம் வாக்குப்பண்ணி
னதை நிறைவேற்ற வல்லவரென்று முழு
நிச்சயமாய் நம்பி, அவரை மகிமைப்படுத்தி
22 னான். ஆகையால் அது அவனுக்கு நீதியாக
23 எண்ணப்பட்டது. அது அவனுக்கு நீதி
யாக எண்ணப்பட்டதென்பது அவனுக்காக
24 மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்
டிருக்கிறது. நம்முடைய ஆண்டவராகிய
இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின
வர்மேல் விசுவாசம் வைக்கிற நமக்கும்
அப்படியே எண்ணப்படும் என்று நமக்காக
வும் எழுதப்பட்டிருக்கிறது. அவர் நமது 25
மீறுதல்கள் நிமித்தம் ஒப்புக்கொடுக்கப்பட்
டும், நாம் நீதிமான்களாகத் தீர்க்கப்படுவதற்
காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.

இவ்விதமாக விசுவாசத்தினாலே நீதிமான் 5
களாகத் தீர்க்கப்பட்ட நாம் நம்முடைய
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூல
மாய்க் கடவுளோடு சமாதானமுடையவர்
களாய் நிலைத்திருப்போமாக. நாம் நிலைத் 2
திருக்கிற இந்தக் கிருபைக்குள் பிரவேசிக்
கும் சிலாக்கியத்தையும் அவர்மூலமாய் விசு
வாசத்தினால் பெற்றிருக்கிறோம். கடவுளின்
மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கை
யில் பெருமைபாராட்டுவோமாக. அது 3
மாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையை
யும் | பொறுமை உத்தமத்தையும் உத்தமம் 4
நன்னம்பிக்கையையும் உண்டாக்குகின்றன
வென்று அறிந்து, உபத்திரவங்களிலேயும்
பெருமைபாராட்டுவோமாக. அந்த நம் 5
பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. நமக்கு
அருளப்பட்ட பரிசுத்த ஆவியினால் கடவு
ளின் அன்பு நமது இருதயங்களில் ஊற்றப்
பட்டிருக்கிறதே. எப்படியெனில், நாம் 6
பலவீனராயிருந்தபோதே குறித்த காலத்தில்
கிறிஸ்து அவபக்தருக்காக மரித்தார். நீதி 7
மானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது;
நல்லவனுக்காக ஒருவன் மரிக்கத் துணிந்தா
லும் துணிவான். நாம் பாவிகளாயிருந்த 8
போதே கிறிஸ்து நமக்காக மரித்ததினால்
கடவுள் நம்மேல் வைத்த தமது அன்பை
விளங்கப்பண்ணுகிறார். இப்படியாக, நாம் 9
அவர் இரத்தத்தினாலே இப்பொழுது நீதி
மான்களாகத் தீர்க்கப்பட்டிருக்க, கோபாக்
கினைக்கு நீங்கலாக அவரால் நாம் இரட்சிக்
கப்படுவது அதிக நிச்சயமாமே. நாம் 10
சத்துருக்களாயிருந்தபோது அவர் குமார
னின் மரணத்தினால் அவரோடு ஒப்புர
வாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்
பட்டபின் அவர் ஜீவனாலே நாம் இரட்சிக்
கப்படுவது அதிக நிச்சயமாமே. அதுவுமல் 11
லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நாம்
பெறும்படி செய்த நம்முடைய ஆண்டவ
ராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நாம்
கடவுளில் பெருமைபாராட்டுகிறோம்.
இப்படியாக, ஒரே மனுஷனால் பாவமும் 12
பாவத்தினால் மரணமும் உலகத்தில் வந்தது
போலவும், எல்லா மனுஷரும் பாவஞ்
செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் பர
வினதுபோலவும் இதுவுமாயிற்று. நியாயப் 13
பிரமாணத்திற்கு முன்னும் பாவம் உலகத்தி
லிருந்தது; நியாயப்பிரமாணமில்லாத இடத்

14 திலோ பாவம் எண்ணப்படாது. அப்
படியிருந்தும், மரணமானது ஆதாம்
முதல் மோசே வரைக்கும் ஆதாமின் மீறு
தலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களை
யுங்கூட ஆண்டுகொண்டது; அந்த ஆதாம்
வரப்போகிறவருக்கு முன்னடையாளம்.
15 ஆயினும், கிருபை வரம் மீறுதலைப்போன்ற
தல்ல. எப்படியெனில், ஒருவனுடைய
மீறுதலினால் அநேகர் மரித்திருக்க, கடவு
ளின் கிருபையும் இயேசுகிறிஸ்து என்னும்
ஒரே மனுஷனின் கிருபையினால் வரும்
ஈவும் அநேகருக்கென்று இன்னும் அதிக
16 மாய்ப் பெருகிற்று. இந்த ஈவு ஒருவன்
செய்த பாவத்தின் பலனைப்போன்றதல்ல.
ஒரே மீறுதலுக்கு வந்த தீர்ப்பு ஆக்கினைத்
தீர்ப்பு; அநேக மீறுதல்களுக்கு வந்த
17 கிருபை வரமோ விடுதலைத் தீர்ப்பு. ஒருவ
னுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்
மூலமாய், மரணம் ஆண்டதேயானால்,
கிருபையின் பரிபூரணத்தையும் நீதி வரத்
தின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள்
இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை
அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்
18 சயமாமே. ஆகையால், ஒரே மீறுதலின்
பலன் எல்லா மனுஷருக்கும் ஆக்கினைத்
தீர்ப்பானதுபோல, நீதியான ஒரே செயலின்
பலன் எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்
19 கும் விடுதலைத் தீர்ப்பாயிற்று. எப்படி
யெனில், ஒரே மனுஷனின் கீழ்ப்படியாமை
யினால் அநேகர் பாவிகளாக்கப்பட்டது
போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினால்
அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்.
20 மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமா
21 ணம் இடையில் வந்து சேர்ந்தது. பாவம்
மரணத்தால் ஆண்டதுபோல, கிருபையா
னது நம்முடைய ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவின் மூலமாய் நீதியைக்கொண்டு
நித்திய ஜீவனுக்கேதுவாக ஆளும்படி,
பாவம் எங்கே பெருகினதோ அங்கே
கிருபை அபரிமிதமாய்ப் பெருகிற்று.

6 ஆகையால் என்ன சொல்லுவோம்?
கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே
2 நிலைத்திருப்போம் என்போமோ? இல்லவே
இல்லை. பாவத்திற்கென்று மரித்த நாம்
3 இனி அதில் எப்படி ஜீவிப்போம்? கிறிஸ்து
இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற
நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்
ளாக ஞானஸ்நானம் பெற்றோமென்று
4 அறியீர்களா? ஆகவே, பிதாவின் மகிமையி
னாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்
பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ள
வர்களாய் நடந்துகொள்ளும்படி ஞானஸ்நா
னத்தின் மூலமாய் அவரோடு மரணத்திற்
குள்ளாக அடக்கம்பண்ணப்பட்டோம்.
அவர் மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் 5
பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின்
சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். நாம் 6
இனிப் பாவத்துக்குத் தொண்டுசெய்யாத
படி, பாவசரீரம் அவமாகும்பொருட்டு நமது
பழைய மனுஷன் அவரோடு சிலுவையில்
அறையப்பட்டான் என்று அறிந்திருக்கி
றோம். மரித்தவன் இனிப் பாவத்திற்குக் 7
கடன்பட்டவனல்ல. கிறிஸ்துவோடு நாம் 8
மரித்தோமேயானால் அவரோடு பிழைத்து
மிருப்போமென்று நம்புகிறோம். மரித் 9
தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்ப
தில்லையென்றும், மரணம் இனி அவரை
ஆண்டுகொள்வதில்லையென்றும் அறிந்திருக்
கிறோமே. அவர் மரித்தது பாவத்திற்கென்று 10
ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்
கிறது கடவுளுக்கென்று பிழைத்திருக்கிறார்.
அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற் 11
கென்று மரித்தவர்களாகவும், கிறிஸ்து
இயேசுவுக்குள் கடவுளுக்கென்று பிழைத்
திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்
ளுங்கள்.

ஆகையால், சரீர இச்சைகளுக்கு நீங்கள் 12
கீழ்ப்படிவதற்கேதுவாய், சாவுக்குரிய
உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.
நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் 13
ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடா
மல், மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்
களாய் உங்களைக் கடவுளுக்கு ஒப்புக்
கொடுங்கள்; அப்படியே நீதிக்குரிய ஆயுதங்
களாக உங்கள் அவயவங்களையும் கடவு
ளுக்கு ஒப்புக்கொடுத்துவிடுங்கள். நீங்கள் 14
நியாயப்பிரமாணத்தின் ஆதீனத்திலிராமல்
கிருபையின் ஆதீனத்திலிருக்கிறபடியால்,
பாவம் உங்கள்மேல் ஆளுகை செய்யாது.

ஆகையால் என்ன சொல்லுவோம்? நாம் 15
நியாயப்பிரமாணத்தின் ஆதீனத்திலிராமல்
கிருபையின் ஆதீனத்திலிருக்கிறபடியால்
பாவஞ்செய்வோமோ? இல்லவே இல்லை.
மரணத்துக்கேதுவாகப் பாவத்துக்கானாலுஞ் 16
சரி, நீதிக்கேதுவாகக் கீழ்ப்படிதலுக்கானா
லுஞ்சரி, எதற்குக் கீழ்ப்படிவதற்கென்று
உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கி
றீர்களோ, அதற்கே அடிமைகளாயிருக்கி
றீர்களென்று உங்களுக்குத் தெரியாதா?
முன்னே பாவத்திற்கு அடிமைகளாயிருந்த 17
நீங்கள், எந்த உபதேசச் சட்டத்திற்கு
ஒப்புக்கொடுக்கப்பட்டீர்களோ அந்தச்
சட்டத்திற்கு இப்பொழுது மனப்பூர்வ

மாய்க் கீழ்ப்படிந்ததற்காகக் கடவுளுக்கு
18 ஸ்தோத்திரம். நீங்கள் பாவத்தினின்று
விடுதலையாகி, நீதிக்கு அடிமைகளானீர்கள்.
19 உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம்
மனுஷர் பேசுகிறபிரகாரம் பேசுகிறேன்.
அக்கிரமத்துக்கேதுவாய் - முன்னே நீங்கள்
உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும்
அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்
கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்த
மாவதற்கேதுவாய் உங்கள் அவயவங்களை
நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுத்து
20 விடுங்கள். நீங்கள் பாவத்தின் அடிமைகளா
யிருந்தபோது நீதியின் ஆதீனத்திற்குட்படா
21 திருந்தீர்கள். இப்படியிருக்க, அப்பொழுது
உங்களுக்குக் கிடைத்த பலன் என்ன?
அவற்றினிமித்தம் நீங்கள் இப்பொழுது
வெட்கப்படுகிறீர்களே. அவைகளின் முடிவு
22 மரணம். இப்பொழுதோ நீங்கள் பாவத்தி
னின்று விடுதலையாகிக் கடவுளுக்கு
அடிமைகளானபின், பரிசுத்தமாகுதல் உங்க
ளுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ
23 நித்திய ஜீவன். பாவத்தின் சம்பளம் மர
ணம், கடவுளின் கிருபை வரமோ நம்
முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு
வுக்குள் நித்திய ஜீவன்.

7 சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோ
டிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை
ஆளுகிறதென்று அறியீர்களா? நியாயப்
பிரமாணத்தை அறிந்தவர்களிடம் பேசு
2 கிறேன். எப்படியெனில், புருஷனையுடைய
ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும்
நியாயப்பிரமாணத்தினால் அவனுக்குக் கட்
டுண்டிருக்கிறாள்; புருஷன் மரிப்பானேயா
கில் புருஷனைப்பற்றிய பிரமாணத்தினின்று
3 விடுதலையாகிறாள். ஆகையால், புருஷன்
உயிரோடிருக்கையில் அவள் வேறொருவ
னைச் சேர்ந்துகொண்டால் விபசாரி எனப்
படுவாள்; புருஷன் மரித்துப்போனானே
யாகில், அந்தப் பிரமாணத்தினின்று விடுதலை
யாகிறாள்; அப்போது வேறொருவனுக்கு
அவள் மனைவியானாலும் விபசாரியல்ல.
4 அப்படியே, என் சகோதரரே, கடவுளுக்
கென்று நாம் கனிகொடுக்கும்படி, மரித்
தோரிலிருந்து எழுப்பப்பட்ட கிறிஸ்து என்
னும் வேறொருவரை நீங்கள் சேருவதற்காக,
கிறிஸ்துவின் சரீரத்தினால் நியாயப்பிரமாணத்
5 துக்கு மரித்தவர்களானீர்கள். நாம் மாம்சத்
திற்குட்பட்டிருந்த காலத்தில், மரணத்திற்
கென்று கனிகொடுப்பதற்கேதுவாய், நியா
யப்பிரமாணத்தினாலான பாவ இச்சைகள்
6 நம் அவயவங்களில் கிரியைசெய்தன. இப்
பொழுதோ நாம் எழுத்திற்குரிய பழைய
நிலைமையிலல்ல, ஆவிக்குரிய புதிய நிலைமை
யில் தொண்டுசெய்யும்படி, நாம் எதனால்
கட்டப்பட்டிருந்தோமோ அதற்கு மரித்த
வர்களாகி, நியாயப்பிரமாணத்தினின்று விடு
தலையானோம்.
அப்படியிருக்க, என்ன சொல்லுவோம்? 7
நியாயப்பிரமாணம் பாவம் என்போமோ?
இல்லவே இல்லை. நியாயப்பிரமாணத்தி
னாலேயன்றி நான் பாவத்தை அறியவில்லை;
இச்சியாதே என்று நியாயப்பிரமாணம்
சொல்லாதிருந்தால் இச்சை இன்னதென்று
எனக்குத் தெரியாது. பாவம் கற்பனையை 8
ஏதுவாகக்கொண்டு சகல இச்சைகளையும்
என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம்
இல்லாதிருந்தால் பாவம் செத்ததாயிருக்கும்.
முற்காலத்தில் நியாயப்பிரமாணமின்றி நான் 9
உயிருள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்த
போதோ பாவம் உயிர்கொண்டது, நான்
செத்தேன்; ஜீவனுக்கேதுவான கற்பனை 10
எனக்கு மரணத்துக்கேதுவானதாகக் கண்
டேன். பாவம் கற்பனையை ஏதுவாகக் 11
கொண்டு என்னை வஞ்சித்து, அதன் மூல
மாய் என்னைக் கொன்றுபோட்டது. ஆகவே, 12
நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளது, கற்
பனையுங்கூட பரிசுத்தமும் நீதியும் நன்மையு
மானதே.
இப்படியிருக்க, நன்மையானது எனக்கு 13
மரணமாயிற்றோ? இல்லவே இல்லை; பாவம்
பாவமாகவே விளங்கும்படி, அது எனக்கு
மரணமாயிற்று; பாவம் கற்பனையின் மூல
மாய் அதிகப் பாவமுள்ளதாகும்படி, நன்மை
யானதைக்கொண்டு எனக்கு மரணத்தை
உண்டாக்கினது. நியாயப்பிரமாணம் ஆவிக் 14
குரியதென்று நமக்குத் தெரியும் நானோ
மாம்சமானவன், பாவத்துக்குக் கீழாக
விற்கப்பட்டவன். எப்படியெனில், நான் 15
செய்கிறது இன்னதென்று அறியேன்; நான்
விரும்புகிறதைச் செய்யாமல் வெறுக்கிற
தையே செய்கிறேன். இப்படி, நான் விரும் 16
பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிர
மாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளு
கிறேன். ஆதலால், அதைச் செய்கிறது 17
நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற
பாவமே அதைச் செய்கிறது. என்னிடத் 18
தில், அதாவது என் மாம்சத்தில், நன்மை
வாசமாயிருக்கிறதில்லையென்பது எனக்குத்
தெரியும். விரும்புதல் என்னிடத்தில்
உண்டு, நன்மை செய்தலோ என்னிடத்தில்
இல்லை. எப்படியெனில், நான் விரும்புகிற 19
நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமை
யையே செய்துவருகிறேன். இப்படியாக, 20

நான் விரும்பாததைச் செய்தால், கிரியை
செய்கிறது நான் அல்ல, எனக்குள் வாசமா
21 யிருக்கிற பாவமே. ஆனபடியால், நன்மை
செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமை
உண்டு என்கிற ஒரு பிரமாணத்தைக்
22 காண்கிறேன். உள்ளான மனுஷனைப் பார்த்
தால், கடவுளின் நியாயப்பிரமாணத்தின்
23 மேல் பிரியமாயிருக்கிறேன். என் அவயவங்
களிலோ வேறொரு பிரமாணத்தைக் காண்
கிறேன். அது என் மனத்தின் பிரமாணத்
துக்கு விரோதமாய்ப் போராடி என் அவய
வங்களிலிருக்கும் பாவப்பிரமாணத்துக்கு
24 என்னைச் சிறையாக்குகிறது. நிர்ப்பந்தமான
மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தி
னின்று யார் என்னை விடுதலையாக்குவார்?
25 நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
வின் மூலமாய்க் கடவுளுக்கு ஸ்தோத்திரம்!
இப்படியாக, என் மனத்தினால் கடவுளின்
நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தி
னாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் நான்
தொண்டு செய்கிறேன்.

8 ஆகையால், கிறிஸ்து இயேசுவுக்குள்
ளிருக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு என்ப
2 தில்லை. பாவம் மரணம் என்பவற்றின் பிர
மாணத்தினின்று ஜீவனுடைய ஆவியின் பிர
மாணம் கிறிஸ்து இயேசுவுக்குள் என்னை
3 விடுதலையாக்கிற்றே. அதெப்படியெனில்,
மாம்சத்தினால் பலவீனமாயிருந்த நியாயப்
பிரமாணம் செய்யமுடியாததைக் கடவுள்
தாமே செய்தார். தம் குமாரனைப் பாவ மாம்
சத்தின் சாயலாகவும் பாவ நிவாரணமாகவும்
அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்
4 கினைக்குள்ளாகத் தீர்த்தார். மாம்சத்தின்படி
நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்
தில் நியாயப்பிரமாணத்துக்குரிய நீதி நிறை
5 வேறும்படிக்கே அப்படிச் செய்தார். ஏனெ
னில், மாம்சத்துக்குரியவர்கள் மாம்சத்துக்
கேற்றவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவிக்
குரியவர்களோ ஆவிக்கேற்றவைகளைச் சிந்
6 திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்; ஆவி
யின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.
7 எப்படியென்றால், மாம்ச சிந்தை கடவு
ளுக்கு விரோதமான பகை; அது கடவுளின்
நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாம
லும், கீழ்ப்படிய முடியாமலும் இருக்கிறது;
8 மாம்சத்துக்குள்ளானவர்கள் கடவுளுக்குப்
9 பிரியமாயிருக்கமுடியாது. ஆனாலும், கடவு
ளின் ஆவி உங்களில் வாசமாயிருந்தால்
நீங்கள் மாம்சத்துக்குள்ளானவர்களல்ல,
ஆவிக்குள்ளானவர்களே. ஒருவன் கிறிஸ்து
வின் ஆவியில்லாதவனாயிருந்தால் அவன்
அவருடையவனல்ல. மேலும், கிறிஸ்து 10
உங்களிலிருந்தால் சரீரம் பாவத்தினிமித்தம்
மரித்ததாயிருக்கும், ஆவியோ நீதியினி
மித்தம் ஜீவனாயிருக்கும். அன்றியும், 11
இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின
வரின் ஆவி உங்களில் வாசமாயிருந்தால்,
கிறிஸ்து இயேசுவை மரித்தோரிலிருந்து
எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற
தம் ஆவியினாலே சாவுக்குரிய உங்கள் சரீ
ரங்களையும் உயிர்ப்பிப்பார்.
ஆகையால், சகோதரரே, நாம் கட 12
னாளிகள், மாம்சத்துக்கேற்றபடி நடப்ப
தற்கு மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல.
மாம்சத்துக்கேற்றபடி நடந்தால் நீங்கள் 13
சாவது நிச்சயம்; சரீரத்தின் செய்கைகளை
ஆவியினால் அழித்தாலோ பிழைப்பீர்கள்.
தேவ ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் 14
எவர்களோ அவர்கள் தேவ புத்திரர். திரும்ப 15
வும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்
தனத்தின் ஆவியைப் பெறாமல், புத்திர
சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்; அந்த
ஆவியினால் நாம் அப்பா பிதாவே என்று
கூப்பிடுகிறோம். நாம் கடவுளின் பிள்ளைக 16
ளென்று ஆவியானவர்தாமே நம்முடைய
ஆவியோடுகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் 17
பிள்ளைகளானால் சுதந்தரருமாமே, கடவுளின்
சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரரு
மாமே; அவரோடுகூட நாம் மகிமை அடைவ
தற்கு அவரோடுகூடப் பாடுபட்டால் அப்
படியாகும்.
இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடம் 18
வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்க
வைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.
தேவ புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டி 19
யானது போவலோடு காத்துக்கொண்டிருக்
கிறது. அதேனென்றால், சிருஷ்டியுங்கூட 20
அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று
விடுதலையாக்கப்பட்டு, கடவுளின் பிள்ளை
களுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப்
பெற்றுக்கொள்ளுமென்கிற நம்பிக்கை
யோடே, சிருஷ்டியானது சுய இஷ்டத்தி 21
னாலே அல்ல, கீழ்ப்படுத்தினவரினிமித்
தமே, மாயைக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்
கிறது. இதுவரைக்கும் சர்வசிருஷ்டியும் 22
ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிற
தென்பது நமக்குத் தெரியும். அதுமாத்திர 23
மல்ல, ஆவியின் முதற்பலனைப் பெற்ற
நாமும் நமது சரீர மீட்பாகிய புத்திரசுவி
காரத்திற்குக் காத்திருக்கிறவர்களாய் நமக்
குள்ளே தவித்துக்கொண்டிருக்கிறோம். நாம் 24
பெற்றது நன்னம்பிக்கையோடுகூடிய இரட்
சிப்பு. காணப்படுகிறதை எதிர்பார்ப்பது

நன்னம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்
25 கிறதை எதிர்பார்க்கவேண்டுவதென்ன? நாம்
காணாததை எதிர்பார்ப்போமாகில் அதற்குப்
பொறுமையோடே காத்திருப்போம்.
26 அப்படியே ஆவியானவரும் நமது பல
வீனத்தைப் பார்த்து நமக்கு உதவி செய்
கிறார். நாம் ஏற்றபடி செய்யவேண்டிய
ஜெபம் இன்னதென்று நமக்குத் தெரியாது.
ஆவியானவர் தாமே சொல்லமுடியாத பெரு
27 மூச்சுகளோடு வேண்டுதல்செய்கிறார். ஆவி
யானவர் கடவுள் சித்தத்திற்கிசையப் பரி
சுத்தவான்களுக்காக வேண்டுதல்செய்கிற
படியால், ஆவியானவரின் சிந்தை இன்ன
தென்று இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிற
வருக்குத் தெரியும்.
28 அன்றியும், கடவுளிடம் அன்புகூருகிற
வர்களுக்கு, அதாவது அவர் தீர்மானத்தின்
படி அழைக்கப்பட்டவர்களுக்கு, சகல
மும் நன்மைக்கு ஏதுவாக ஒத்து நடக்க
அவர் செய்கிறாரென்று நமக்குத் தெரியும்.
29 கடவுள் எவர்களை முன்னறிந்தாரோ, தம்
குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்
பேறானவராயிருக்கும்படி தம் குமாரனின்
சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு அவர்களை
30 முன்குறித்துமிருக்கிறார். எவர்களை முன்
குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்
கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை
நீதிமான்களாகத் தீர்த்துமிருக்கிறார்; எவர்
களை நீதிமான்களாகத் தீர்த்தாரோ அவர்களை
மகிமைப்படுத்தியுமிருக்கிறார்.
31 இப்படியிருக்க, இவைகளைக்குறித்து
நாம் என்ன சொல்லுவோம்? கடவுள் நமது
பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்
32 பவன் யார்? தம்முடைய சொந்தக் குமார
னென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும்
அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடேகூட
எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்ப
33 தெப்படி? கடவுள் தெரிந்தெடுத்தவர்கள்
மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? கடவுளே
அவர்களை நீதிமான்களாகத் தீர்க்கிறவர்;
34 ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?
கிறிஸ்து இயேசுவே மரித்தவர்; இது மாத்
திரமோ, அவரே எழுப்பப்பட்டுமிருக்கிற
வர், அவரே கடவுளின் வலதுபாரிசத்தில்
இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்
35 கிறவரும் அவரே. கிறிஸ்துவின் அன்பை
விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்
திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பஞ்
சமோ, நிர்வாணமோ, நாசமோசமோ,
பட்டயமோ?
36 உமது நிமித்தம் நாள்முழுதும் கொல்
லப்படுகிறோம்,
அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்
ணப்பட்டோம்
என்று எழுதியிருக்கிறதே. ஆயினும், நம் 37
மில் அன்புகூருகிறவராலே இவைகளெல்
லாவற்றிலேயும் நாம் முற்றும் ஜெயங்
கொள்ளுகிறவர்களாகவே இருக்கிறோம்.
மரணமோ, ஜீவனோ, தேவதூதரோ, துரைத் 38
தனங்களோ, நிகழ்காரியங்களோ, வருங்
காரியங்களோ, வல்லமைகளோ, |உயர்வோ, 39
தாழ்வோ, வேறெந்தச் சிருஷ்டியானாலும்,
நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து
இயேசுவிலுள்ள கடவுளின் அன்பைவிட்டு
நம்மைப் பிரிக்கமுடியாதென்று நிச்சயித்
திருக்கிறேன்.

எனக்குப் பெருந்துக்கமும் இடை 9
விடாத மனோவேதனையும் உண்டு. கிறிஸ்து 2
வுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்,
நான் சொல்லுகிறது பொய்யல்ல; இதற்கு
என் மனச்சாட்சியும் பரிசுத்த ஆவிக்குள்
எனக்குச் சாட்சி. மாம்சத்தின்படி என் 3
சொந்தத்தாராகிய என் சகோதரருக்காகக்
கிறிஸ்துவைவிட்டு நீங்கிச் சாபத்துக்குட்
பட நான் விரும்புவதுண்டு. அவர்கள் 4
இஸ்ரவேலரே; புத்திரசுவிகாரமும் மகிமை
யும் உடன்படிக்கைகளும் நியாயப்பிரமாண
மும் தேவாராதனையும் வாக்குத்தத்தங்களும்
அவர்களுடையவைகளே; பிதாக்களும் 5
அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி
கிறிஸ்துவும் அவர்களில் தோன்றினாரே.
இவர் சர்வத்திற்கும் மேலான கடவுள், என்
றென்றைக்கும் ஸ்தோத்திரத்துக்குரியவர்;
ஆமேன்.
கடவுளின் வார்த்தை அவமாய்ப்போயிற் 6
றென்பதல்ல. இஸ்ரவேல் வம்சத்தார் அனை
வரும் இஸ்ரவேலரல்லவே. ஆபிரகாமின் 7
சந்ததியாராயிருப்பதினால் அவர்கள் எல்
லாரும் பிள்ளைகள் என்பதல்ல; ஈசாக்கி
னிடமே உன் சந்ததி விளங்குமென்று
சொல்லியிருக்கிறது. அதாவது, மாம்சத் 8
தின்படி பிள்ளைகளானவர்கள் கடவுளின்
பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தத்தின்படி
பிள்ளைகளானவர்களே அந்தச் சந்ததி என்
றெண்ணப்படுகிறார்கள். அந்த வாக்குத் 9
தத்த வார்த்தையாவது: நான் மறுபடியும்
இந்தக் காலத்தில் வருவேன், அப்பொழுது
சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்
என்பதே. இதுவுமல்லாமல், நம் பிதாவா 10
கிய ஈசாக்கு என்னும் ஒருவனாலே கர்ப்ப
வதியான ரெபெக்காளிடத்திலும் இது தெரி
கிறது. தெரிந்தெடுத்தலுக்கு இசைவான 11
தேவதீர்மானம் கிரியைகளினாலல்ல

அழைக்கிறவராலேயே நிலைநிற்கும்படி,
பிள்ளைகள் இன்னும் பிறவாமலும் நன்மை
தீமையொன்றும் செய்யாமலுமிருக்கையில்,
12 மூத்தவன் இளையவனைச் சேவிப்பான் என்று
13 அவளிடம் சொல்லப்பட்டது. அப்படியே:
யாக்கோபில் அன்புகூர்ந்தேன், ஏசாவையோ
பகைத்தேன் என்றும் எழுதியிருக்கிறது.
14 ஆகையால் என்ன சொல்லுவோம்?
கடவுளிடத்தில் அநீதி உண்டென்போமோ?
15 இல்லவே இல்லை. | எவன்மேல் இரக்கமா
யிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்
பேன், எவன்மேல் உருக்கமாயிருப்பேனோ
அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்று
16 அவர் மோசேயினிடம் சொன்னார். ஆகை
யால், விரும்புகிறவனாலுமல்ல ஓடுகிறவ
னாலுமல்ல, இரங்குகிற கடவுளாலே ஆகும்.
17 என் வல்லமையை உன்னிடம் காண்பிக்க
வும், என் நாமம் பூமியெங்கும் பிரஸ்தாப
மாகவும் உன்னைத் தோன்றச்செய்தேன்
என்பதாக வேதவாக்கியம் பார்வோனுக்குச்
18 சொல்லுகிறது. ஆதலால் அவர் தமது
இஷ்டப்படியே, ஒருவன்மேல் இரக்கமா
யிருக்கிறார், ஒருவனைக் கடினப்படுத்து
19 கிறார். இப்படியானால், அவர் இன்னும்
குற்றப்படுத்துவானேன்? அவர் சித்தத்திற்கு
எதிர்த்துநிற்பவன் யார் என்று என்னிடம்
20 சொல்லுவாயோ? மனுஷனே, கடவுளோடு
எதிர்த்து வாதாடுகிற நீ யார்? உருவாக்கப்
பட்ட வஸ்து உருவாக்கினவனைப் பார்த்து:
நீ என்னை ஏன் இப்படி அமைத்தாயென்று
21 சொல்லுமோ? பிசைந்த ஒரே களிமண்ணி
னாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கன
மான உபயோகத்துக்கும், ஒரு பாத்திரத்
தைக் கனவீனமான உபயோகத்துக்கும்
வனைவதற்கு மண்ணின்மேல் அவனுக்கு
22 அதிகாரமில்லையோ? கடவுள் தமது கோபத்
தைக் காண்பிக்கவும் தமது வல்லமையை
விளங்கப்பண்ணவும், அழிவுக்கு உண்
டாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள்
மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடு
பொறுமையாயிருந்தாரானால் என்ன?
23 மேலும் தாம் மகிமைக்காக ஆயத்தமாக்கின
கருணைப் பாத்திரங்கள்மேல், அதாவது
யூதரிலிருந்து மாத்திரமல்ல புறஜாதிகளி
24 லிருந்தும் அவர் அழைத்த நம்மேல், தமது
மகிமையின் ஐசுவரியத்தை விளங்கப்பண்ண
25 வும் சித்தங்கொண்டாரானால் என்ன? அப்
படியே ஓசேயாவின் ஆகமத்தில்:

எனக்கு ஜனமல்லாதவர்களை என் ஜன
மென்றும்,
அன்புகூரப்படாதவளை அன்புகூரப்பட்
டவளென்றும்
பேர் சொல்லுவேன்.
நீங்கள் என் ஜனமல்லவென்று 26
அவர்களுக்குச் சொல்லப்பட்ட இடத்தி
லேயே
அவர்கள் ஜீவனுள்ள கடவுளின் புத்திரர்
எனப்படுவார்கள்

என்று சொல்லியிருக்கிறது. அல்லாமலும், 27
இஸ்ரவேல் புத்திரரின் இலக்கம் சமுத்திரத்
தின் மணலத்தனையாயிருந்தாலும் மீதியா
யிருப்பவர்களே இரட்சிக்கப்படுவார்கள்,
கர்த்தர் தமது வார்த்தையைத் தாமதமில் 28
லாமல் முடித்து, பூமியிலே நிறைவேற்று
வாரே என்று இஸ்ரவேலரைக் குறித்து
ஏசாயா சத்தமிட்டுச் சொல்லுகிறான். அல் 29
லாமலும்:

சேனைகளின் கர்த்தர்
நமக்கு ஒரு சந்ததியை மீதியாக வைக்கா
திருந்தாரானால்,
நாம் சோதோமைப்போலாகி,
கொமோராவுக்கு ஒத்திருப்போம்

என்று ஏசாயா முன்னறிவித்திருக்கிறான்.
இப்படியிருக்க, என்ன சொல்லுவோம்? 30
நீதியைப் பின்தொடராத புறஜாதியார் நீதி
யைக் கண்டடைந்தார்கள்; அது விசுவா
சத்தினால் பலிக்கும் நீதியே. நீதிப்பிரமாணத் 31
தைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலரோ நீதிப்
பிரமாணத்துக்கு வந்தெட்டவில்லை. கார 32
ணம் என்ன? விசுவாசத்தினால் அல்ல, கிரி
யைகளினால் அது ஆவதுபோல் அவர்கள்
அதைத் தேடினார்கள்.

இதோ, தவறுதற்கான கல்லையும் 33
இடறுதற்கான கற்பாறையையும்
சீயோனில் வைக்கிறேன்,
அவரில் விசுவாசம் வைக்கிறவன்
வெட்கப்படுவதில்லை

என்று எழுதியிருக்கிறபடி, தவறுதற்கான
கல்லில் அவர்கள் தடுமாறினார்கள்.

சகோதரரே, அவர்கள் இரட்சிக்கப்பட **10**
வேண்டுமென்பதே என் இருதயத்தின்
விருப்பம், கடவுளை நோக்கி நான் செய்யும்
விண்ணப்பமும் அதுவே. அவர்கள் 2
கடவுளைப்பற்றிய வைராக்கியமுள்ளவர்க
ளென்று அவர்களைக்குறித்துச் சாட்சி
சொல்லுகிறேன்; அதுவோ அறிவோடுகூடிய
வைராக்கியமல்ல. எப்படியென்றால், 3
அவர்கள் கடவுளின் நீதியை அறியாமல்
தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தப்பார்த்து,
கடவுளின் நீதிக்குக் கீழ்ப்படியாதே
போனார்கள்.
விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி பலிக் 4
கும்படி நியாயப்பிரமாணத்திற்கு முடிவு

5 கிறிஸ்துவே. நியாயப்பிரமாணத்தினால்
வரும் நீதியைக்குறித்து: அதன்படி செய்
கிற மனுஷன் அதனால் பிழைப்பான் என்று
6 மோசே எழுதுகிறான். விசுவாசத்தினால்
வரும் நீதியோ: கிறிஸ்துவை இறங்கிவரப்
பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுபவன்
7 யார் என்றும், கிறிஸ்துவை மரித்தோரி
லிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளக்
குழியில் இறங்குபவன் யார் என்றும் உன்
இருதயத்தில் சொல்லவேண்டாம் என்
8 கிறது. பின்னும் அது சொல்வதென்ன?
இந்த வசனம் உனக்குச் சமீபமாய் உன்
வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது
என்று சொல்லுகிறதே; நாங்கள் பிரசங்கிக்
கிற விசுவாசத்தின் வசனம் இதுவே.
9 இயேசுவை ஆண்டவரென்று நீ உன் வாயி
னால் அறிக்கையிட்டு, கடவுள் அவரை
மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன்
இருதயத்தில் விசுவாசிப்பாயாகில் இரட்
10 சிக்கப்படுவாய். நீதி பலிக்கும்படி இரு
தயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்பு
பலிக்கும்படி வாயினால் அறிக்கையிடப்
11 படும். அவரில் விசுவாசம்வைக்கிற எவ
னும் வெட்கப்படுவதில்லை என்று வேத
12 வாக்கியத்தில் சொல்லியிருக்கிறதே. யூத
னென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே
இல்லை; எல்லாருக்கும் ஆண்டவர் ஒரு
வரே. அவர் தம்மைத் தொழுதுகொள்ளு
கிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னர்.
13 ஏனெனில், கர்த்தரின் நாமத்தைத் தொழுது
கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்
14 படுவான். தாங்கள் விசுவாசியாதவரை எப்
படித் தொழுதுகொள்ளுவார்கள்? தாங்கள்
கேள்விப்படாதவரில் எப்படி விசுவாசம்
வைப்பார்கள்? பிரசங்கிக்கிறவனில்லாமல்
15 எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்
படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்?
நற்காரியங்களைச் சுவிசேஷமாய்க் கூறி
அறிவிக்கிறவர்களின் பாதங்கள் எவ்வளவு
அழகாயிருக்கின்றன என்று எழுதியிருக்
கிறது அதுவே.
16 ஆயினும் எல்லாரும் சுவிசேஷத்துக்குக்
கீழ்ப்படியவில்லை. கர்த்தாவே, எங்கள் மூல
மாய்க் கேள்விப்பட்டதை நம்பினவன் யார்
17 என்று ஏசாயா சொல்லுகிறான். ஆகவே,
விசுவாசம் கேள்வியினால் வரும், கேள்வியோ
கிறிஸ்துவைப்பற்றிய வசனத்தினால் வரும்.
18 இப்படியிருக்க, அவர்கள் கேள்விப்படவில்
லையோ என்கிறேன்; கேள்விப்பட்டார்களே;

அவைகளின் சத்தம் பூமியெங்கும்
அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக்
கடைசிவரைக்கும் செல்லுகின்றன.

இஸ்ரவேல் அதை அறியவில்லையோ என் 19
கிறேன்;

ஜனமல்லாதவர்களால்
உங்களுக்கு எரிச்சல் உண்டாக்கு
வேன்;
விவேகமில்லாத ஜனத்தால்
உங்களுக்குக் கோபமூட்டுவேன்

என்று மோசே முதலாவது சொன்னான்.
ஏசாயாவும்: 20

என்னைத் தேடாதவர்களாலே கண்டறி
யப்பட்டேன்,
என்னைக்குறித்து விசாரியாதவர்களுக்கு
வெளிப்பட்டேன்

என்று தைரியமாய்ச் சொல்லுகிறான். இஸ்ர 21
வேலரைக் குறித்தோ: கீழ்ப்படியாததும்
எதிர்பேசுகிறதுமான ஜனத்தண்டைக்கு
நாள்முழுதும் என் கைகளை நீட்டி அழைத்
தேன் என்று சொல்லுகிறான்.

இப்படியிருக்க, கடவுள் தம் ஜனத்தைத் **11**
தள்ளிவிட்டாரோவென்று கேட்கிறேன்;
இல்லவே இல்லை. நானும் இஸ்ரவேலன்,
ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன்
கோத்திரத்திலும் பிறந்தவன். கடவுள் தாம் 2
முன்னறிந்துகொண்ட தம் ஜனத்தைத்
தள்ளிவிடவில்லை. எலியாவைப்பற்றிய
இடத்தில் வேதவாக்கியம் சொல்லுவது
உங்களுக்குத் தெரியாதா? இஸ்ரவே
லுக்கு விரோதமாய் அவன் கடவுளிடம்
விண்ணப்பம் பண்ணினபோது: கர்த்தாவே, 3
உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள்
கொன்றுவிட்டு உம்முடைய பலிபீடங்களை
இடித்துப்போட்டார்கள்; நான் ஒருவன்
மாத்திரம் மீந்திருக்கிறேன், என் உயிரையும்
வாங்கத் தேடுகிறார்கள் என்றானே. அவ 4
னுக்கு வந்த தெய்வவாக்கென்ன? முழங்கால்
முடக்கிப் பாகாலைப் பணியாத ஏழாயிரம்
பேரை எனக்கென்று இன்னும் மீதியாக
வைத்திருக்கிறேன் என்பதல்லவா? அப் 5
படியே இக்காலத்திலும் கிருபையினால்
உண்டாகும் தெரிந்தெடுத்தலின்படி ஒரு
பங்கு மீதியாயிருக்கிறது. அது கிருபை 6
யினாலே உண்டாயிருந்ததானால் இனிக்
கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படி
யல்லவென்றால் கிருபையானது இனிக்
கிருபையல்லவே. அப்படியானாலென்ன? 7
இஸ்ரவேல் தான் தேடுகிறதை அடைய
வில்லை, தெரிந்தெடுக்கப்பட்டவர்களோ
அதை அடைந்தார்கள்; மற்றவர்கள் கடினப்
பட்டார்கள். கனநித்திரையின் ஆவியையும் 8
காணமுடியாத கண்களையும் கேட்கமுடி
யாத காதுகளையும் இந்நாள்வரைக்கும்

கடவுள் அவர்களுக்குக் கொடுத்தார் என்று
எழுதியிருக்கிறது இதுவே.
9 அவர்கள் பந்தி
அவர்களுக்குச் சுருக்கும் கண்ணியும்
இடறலும்
சரிக்குச் சரிக்கட்டுதலுமாகக்கடவது;
10 காணமுடியாதபடி அவர்கள் கண்கள்
அந்தகாரப்படக்கடவது;
எப்போதும் அவர்கள் முதுகைக் குனி
யப்பண்ணும்
என்று தாவீது சொல்லுகிறான்.
11 இப்படியிருக்க, விழுவதற்கோ இடறி
னார்களென்று கேட்கிறேன். இல்லவே
இல்லை. அவர்களுக்குள் வைராக்கியத்தை
எழுப்பிவிடத்தக்கதாய் அவர்கள் தவறி
விழுதல் புறஜாதியாரின் இரட்சிப்புக்கு ஏது
12 வாயிற்று. அவர்கள் தவறிவிழுதல் உலகத்
திற்கு ஐசுவரியமும், அவர்கள் குறைவு
புறஜாதியாருக்கு ஐசுவரியமுமாயிற்றென்
றால் அவர்கள் நிறைவு எவ்வளவு அதிக
ஐசுவரியமாகும்!
13 புறஜாதியாராகிய உங்களுக்கு நான்
சொல்லுகிறேன்: புறஜாதியாருக்கு நான்
அப்போஸ்தலனாயிருக்கிறபடியினாலே என்
14 ஊழியத்தை மேன்மைப்படுத்துகிறேன். இப்
படிச் செய்வதினால ஒருவேளை என் சொந்த
ஜனத்தாருக்குள் வைராக்கியத்தை எழுப்பி,
அவர்களில் சிலரை இரட்சிக்கலாமென்
15 றிருக்கிறேன். அவர்கள் தள்ளிவிடப்படு
வதே உலகத்தை ஒப்புரவாக்குமானால்
அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது எவ்
விதமாயிருக்கும்? மரித்தோரில் ஜீவன்
16 உண்டாவதுபோலாகும் அல்லவா? மேலும்
முதற் பலன் பரிசுத்தமாயிருந்தால்
பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்
கும்; வேர் பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும்
17 பரிசுத்தமாயிருக்கும். சில கிளைகள் தறித்து
விடப்பட்டிருக்க, காட்டொலிவ மரமாகிய
நீ அவைகள் மத்தியில் ஒட்டவைக்கப்பட்டு
ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும்
18 உடன்பங்காளியானாயென்றால், கிளைகளுக்கு
விரோதமாய்ப் பெருமைபாராட்டாதே;
பெருமைபாராட்டுவாயானால், நீ வேரைத்
தாங்குகிறதில்லை, வேர் உன்னைத் தாங்குகிற
19 தென்று நினைத்துக்கொள். நான் ஒட்ட
வைக்கப்படுவதற்கென்று அந்தக் கிளைகள்
20 தறித்துவிடப்பட்டன என்கிறாயே. நல்லது,
அவிசுவாசத்தினிமித்தம் அவைகள் தறித்து
விடப்பட்டன, நீ விசுவாசத்தினால் நிற்கி
றாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்
21 திரு. சுபாவக் கிளைகளையே கடவுள் தப்ப
விடாதிருக்க உன்னையும் தப்பவிடமாட்
டார். ஆகையால், கடவுளின் தயாளத்தை 22
யும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்க
ளிடத்தில் கண்டிப்பு, உன்னிடத்திலோ
தயாளம்; அதில் நீ நிலைத்திருப்பாயானால்
தயாளம், நிலைத்திராவிட்டால் நீயும் வெட்
டுண்டுபோவாய். அன்றியும், அவர்கள் 23
தங்கள் அவிசுவாசத்தில் நிலைத்திராதிருந்தால்
அவர்களும் ஒட்டவைக்கப்படுவார்கள்;
அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்குக்
கடவுள் வல்லவர். சுபாவத்தின்படி காட் 24
டொலிவ மரத்திலிருந்து நீ வெட்டப்பட்டு,
நல்ல ஒலிவமரத்தில் சுபாவத்துக்கு மாறாக
ஒட்டவைக்கப்பட்டாயானால், சுபாவக்
கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவ
மரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக
நிச்சயமல்லவா?
சகோதரரே, நீங்கள் உங்களையே புத்தி 25
மான்களென்று எண்ணாதபடி இந்த இரகசி
யத்தை நீங்கள் அறியாதிருக்க எனக்கு மன
மில்லை. அதென்னவெனில், புறஜாதியாரின்
நிறைவு வரும்வரைக்கும் இஸ்ரவேலரில்
ஒரு பங்குக்குக் கடினமான மனம் உண்டா
யிருக்கிறது. இவ்விதமாக இஸ்ரவேலரெல் 26
லாரும் இரட்சிக்கப்படுவார்கள்.
மீட்கிறவர் சீயோனிலிருந்து வருவார்,
அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்கு
வார்
என்றும்,
நான் அவர்கள் பாவங்களை நீக்கும்போது 27
இதுவே நான் அவர்களோடு செய்யும்
உடன்படிக்கை
என்றும் எழுதியிருக்கிறபடி ஆகும்.
சுவிசேஷத்தின் சம்பந்தமாய் அவர்கள் 28
உங்கள்நிமித்தம் சத்துருக்கள், தெரிந்
தெடுத்தலின் சம்பந்தமாகவோ பிதாக்களி
னிமித்தம் அவர்கள் அன்புகூரப்பட்ட
வர்கள். கடவுளின் கிருபைவரங்களும் 29
அவர் அழைத்த அழைப்பும் மாறாத
வைகள். நீங்கள் முற்காலத்தில் கடவுளுக் 30
குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது
அவர்கள் கீழ்ப்படியாமையினாலே இரக்கம்
பெற்றிருக்கிறதுபோல, அவர்களும் இப் 31
பொழுது கீழ்ப்படியாதிருந்தும், உங்களுக்
குக் கிடைத்த இரக்கத்தினாலே இப்பொழுது
இரக்கம் பெறுவார்கள். எல்லார்மேலும் 32
இரக்கமாயிருக்கவேண்டுமென்று கடவுள்
எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்
அடைத்துப்போட்டார்.
ஆ! கடவுளின் ஐசுவரியம், ஞானம், 33
அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவு
அதிகம்! அவர் நியாயத்தீர்ப்புகள் புத்திக்கு

எட்டாதவைகள், அவர் வழிகள் ஆராய்ச்
சிக்கு எட்டாதவைகள்.
34 கர்த்தரின் மனத்தை அறிந்தவன் யார்?
அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்த
வன் யார்?
35 தனக்குப் பிரதிபலன் கிடைக்கும்படி
முந்தி அவருக்குக் கொடுத்தவன் யார்?
36 சகலமும் அவராலும் அவர் மூலமாயும்
அவருக்கென்றும் இருக்கிறது; என்றைக்
கும் அவருக்கே மகிமை உண்டாவதாக;
ஆமேன்.

12 ஆகையால், சகோதரரே, நீங்கள் உங்கள்
சரீரங்களைப் பரிசுத்தமும் கடவுளுக்குப்
பிரியமுமான ஜீவபலியாகச் சமர்ப்பிக்க
வேண்டுமென்று கடவுளின் இரக்கங்களை
முன்னிட்டு உங்களைக் கேட்டுக்கொள்ளு
கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க
2 ஆத்மீக ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்
சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், கடவுளின்
நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான
சித்தம் இன்னதென்று பகுத்தறிவதற்கு
ஏதுவாய் உங்கள் மனம் புதிதாவதினால்
மறுரூபமாகுங்கள்.
3 ஆகவே, எனக்கு அருளப்பட்ட கிருபை
யினால் நான் சொல்லுகிறேன்: உங்களில்
எவனாகிலும் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி
எண்ணிக்கொள்ளாமல், அவனவனுக்குக்
கடவுள் பகிர்ந்த விசுவாச அளவின்படியே
நிதானமாய் எண்ணிக்கொள்ளக்கடவன்.
4 எப்படியெனில், ஒரே சரீரத்தில் நமக்கு
அநேக அவயவங்கள் உண்டு, எல்லா அவய
5 வங்களுக்கும் ஒரே தொழில் இல்லை; அப்
படியே, அநேகராயிருக்கிற நாம் கிறிஸ்து
வுக்குள் ஒரே சரீரம், ஒருவருக்கொருவர்
6 அவயவங்கள். நமக்கு அருளப்பட்ட
கிருபையின்படியே நாம் வெவ்வேறான
வரங்களுள்ளவர்களானபடியினால், தீர்க்க
தரிசன வரத்தையுடையவன் விசுவாச அள
வுக்கு இசையத் தீர்க்கதரிசனம் சொல்லக்
7 கடவன்; ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்தி
லும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும்,
8 புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதி
லும் நிலைத்திருக்கக்கடவன்; தர்மஞ்செய்கிற
வன் கபடமில்லாமல் செய்யக்கடவன்;
தலைமையாயிருக்கிறவன் ஊக்கமாயிருக்கக்
கடவன்; இரக்கஞ்செய்கிறவன் முகமலர்ச்சி
யோடு செய்யக்கடவன்.
9 உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக.
தீமையை அருவருத்து, நன்மையைப் பற்
10 றிக்கொண்டிருங்கள்; சகோதர சிநேகத்தில்
ஒருவருக்கொருவர் உருக்கமான பட்சம்
காட்டுங்கள், கனம்பண்ணுவதில் ஒருவருக்
கொருவர் முந்திக்கொள்ளுங்கள், முயற்சி 11
யில் தளராதிருங்கள், ஆவியில் அனலா
யிருங்கள், ஆண்டவருக்குத் தொண்டுசெய்
யுங்கள், நன்னம்பிக்கையில் சந்தோஷமா 12
யிருங்கள், உபத்திரவத்தில் பொறுமையா
யிருங்கள், ஜெபத்தில் தரித்திருங்கள்; பரி 13
சுத்தவான்களின் அவசியங்களில் அவர்க
ளுக்குப் பகிர்ந்துகொடுங்கள், அந்நியரை
உபசரிக்கக் கருத்தாயிருங்கள். உங்களைத் 14
துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்,
சபிக்கவேண்டாம், ஆசீர்வதிக்கவே வேண்
டும். சந்தோஷப்படுகிறவர்களோடு சந் 15
தோஷப்படுங்கள், அழுகிறவர்களோடு
அழுங்கள். ஒருவரோடொருவர் ஏக 16
சிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமை
யானவைகளைச் சிந்தியாமல் தாழ்ந்தவர்க
ளோடு இசைந்துபோங்கள். உங்களையே
புத்திமான்களென்று எண்ணிக்கொள்ளா
திருங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் 17
தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்
கும் முன்பாக யோக்கியமானவைகளைச்
செய்யக் கருத்தாயிருங்கள்; கூடுமானால், 18
உங்களாலானமட்டும், எல்லா மனுஷ
ரோடும் சமாதானமாயிருங்கள்; பிரியமான 19
வர்களே, பழிவாங்குவது என் காரியம்,
நானே பதில் செய்வேனென்று கர்த்தர்
சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடி
யால், நீங்கள் பழிவாங்காமல் கோபாக்
கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், 20
உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்கு
ஆகாரங்கொடு; அவன் தாகமாயிருந்தால்,
தாகத்துக்குக் கொடு; இப்படிச் செய்வதி
னால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல்
குவிப்பாய். தீமையினாலே வெல்லப்படா 21
மல், நன்மையினாலே தீமையை வெல்லு.

எந்த மனுஷனும் மேலான அதிகார **13**
முள்ளவர்களுக்கு அடங்கி நடக்கக்கடவன்;
கடவுளாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை;
உண்டாயிருக்கிற அதிகாரங்கள் கடவுளா
லேயே ஏற்பட்டிருக்கின்றன. ஆதலால், 2
அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் கடவு
ளின் ஏற்பாட்டிற்கே எதிர்த்து நிற்கிறான்;
அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்
குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்
கொள்வார்கள். அதிகாரிகள் நற்செய்கை 3
களுக்கல்ல, துர்ச்செய்கைகளுக்கே பயங்கர
மானவர்கள். அதிகாரிக்குப் பயப்படா
திருக்க விரும்புகிறாய் அல்லவா? நன்மை
செய், அப்பொழுது அவனால் உனக்குப் புகழ்
உண்டாகும். உனக்கு நன்மை உண்டாவ 4

தற்கென்று அவன் கடவுளின் ஊழியக்
காரனாயிருக்கிறானே. நீ தீமை செய்வா
யானால் பயந்திரு, அவன் பட்டயத்தை
வீணாய்ப் பிடித்திருக்கவில்லை. அவன் பழி
வாங்குகிறவன், தீமை செய்கிறவன்மேல்
கோபாக்கினை வருவிப்பதற்குக் கடவுளின்
5 ஊழியக்காரன். ஆதலால், கோபாக்கினையி
னிமித்தம் மாத்திரமல்ல மனச்சாட்சியி
னிமித்தமும் நீங்கள் அடங்கியிருப்பது
6 அவசியம். இதற்காகவே நீங்கள் வரி
செலுத்துகிறீர்கள். அவர்கள் இந்த வேலைக்
கென்றே தரித்திருக்கிற கடவுளின் பணி
7 விடைக்காரர். யாவருக்கும் செலுத்த
வேண்டியவைகளைச் செலுத்துங்கள்; எவ
னுக்கு வரிசெலுத்தவேண்டியதோ அவ
னுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வை
செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வை
யையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்
படவேண்டியதோ அவனுக்குப் பயப்
படுங்கள்; எவனைக் கனம்பண்ணவேண்டி
யதோ அவனைக் கனம்பண்ணுங்கள்.
8 ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற
கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவ
னுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்
தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமா
9 ணத்தை நிறைவேற்றிவிட்டான். எப்படி
யென்றால், விபசாரஞ்செய்யவேண்டாம்,
கொலைசெய்யவேண்டாம், களவுசெய்ய
வேண்டாம், இச்சிக்கவேண்டாம் என்கிற
இந்தக் கற்பனைகளும் வேறே எந்தக் கற்பனை
யும், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல
அயலானிடத்திலும் அன்புகூரவேண்டும்
என்கிற ஒரே வார்த்தையில் தொகையாய்
10 அடங்கியிருக்கின்றன. அன்பு அயலானுக்
குத் தீமைசெய்யாது; ஆதலால் அன்பு
நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுத
லாகும்.
11 நீங்கள் நித்திரையைவிட்டு எழுந்திருக்க
வேளையாயிற்றென்று காலத்தை அறிந்தவர்
களாய் இப்படி நடக்கவேண்டும்; நாம்
விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமா
யிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது
12 நமக்கு அதிகச் சமீபமாயிருக்கிறது. இரவு
கடந்துபோகிறது, பகல் சமீபமாயிற்று;
ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம்
தள்ளிவிட்டு, வெளிச்சத்தின் ஆயுதங்களைத்
13 தரித்துக்கொள்ளக்கடவோம். களியாட்டும்
வெறியும் வேசித்தனமும் காமவிகாரமும்
சண்டையும் பொறாமையும் உள்ளவர்
களாய் நடவாமல், பகலில் நடக்கிறவர்கள்
14 போல் சீராய் நடக்கக்கடவோம். துர்
இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணா
மல், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத்
தரித்துக்கொள்ளுங்கள்.

விசுவாசத்தில் பலவீனமாயிருக்கிறவனை 14
ஏற்றுக்கொள்ளுங்கள்; மன ஐயங்களைப்
பற்றி வாதாடாதிருங்கள். எந்தப் பதார்த் 2
தத்தையும் புசிக்கலாமென்று ஒருவன்
நம்புகிறான்; பலவீனனோ மரக்கறிகளைப்
புசிக்கிறான். புசிக்கிறவன் புசியாதிருக்கிற 3
வனை அற்பமாய் எண்ணலாகாது; புசியா
திருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றப்படுத்த
லாகாது; கடவுள் அவனை ஏற்றுக்கொண்
டாரே. வேறொருவனுடைய வீட்டுவேலைக் 4
காரனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்?
அவன் நின்றாலும் விழுந்தாலும் அவ
னுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி;
அவன் நிலைநிற்பான், ஆண்டவர் அவனை
நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே. ஒருவன் 5
ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமான
தாக எண்ணுகிறான்; வேறொருவனோ எல்லா
நாட்களையும் ஒன்றுபோல எண்ணுகிறான்;
அவனவன் தன்தன் மனத்திலே முழு நிச்ச
யம் உடையவனாயிருக்கவேண்டும். நாளைக் 6
கவனிக்கிறவன் ஆண்டவருக்கென்று
கவனிக்கிறான். புசிக்கிறவன் கடவுளுக்கு
நன்றிசெலுத்துகிறபடியால், ஆண்டவருக்
கென்று புசிக்கிறான்; புசியாதிருக்கிறவனும்
ஆண்டவருக்கென்று புசியாதிருக்கிறான்;
அவனும் கடவுளுக்கு நன்றிசெலுத்துகிறான்.
நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக் 7
கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்
கிறதுமில்லை. நாம் பிழைத்தாலும் ஆண்ட 8
வருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தா
லும் ஆண்டவருக்கென்று மரிக்கிறோம்;
ஆகையால், பிழைத்தாலும் மரித்தாலும் நாம்
ஆண்டவருடையவர்களாயிருக்கிறோம்.
மரித்தோருக்கும் ஜீவனுள்ளோருக்கும் 9
ஆண்டவராயிருப்பதற்கென்றே, கிறிஸ்து
மரித்தும் உயிர்த்தும் இருக்கிறார். நீ உன் 10
சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிற
தென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய்
எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கடவு
ளின் நியாயாசனத்திற்குமுன் நிறுத்தப்படு
வோமே. அந்தப்படி: 11

முழங்கால் யாவும் என்முன் முடங்கும்,
நாவு யாவும் கடவுளைப் புகழ்ந்துகொண்
டாடும்
என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்
கிறேன்
என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார்

என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம் 12

மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துக்
கடவுளுக்குக் கணக்கு ஒப்புவிப்பான்.
13 இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒரு
வரையொருவர் குற்றவாளிகளாகத் தீர்க்கா
திருப்போமாக. ஒருவனும் தன் சகோதரன்
முன் தடுக்கலையாவது இடறலையாவது
போடலாகாதென்று தீர்மானித்துக்கொள்
14 ளுங்கள். ஒரு பொருளும் தன்னிலேயே
தீட்டுள்ளதல்லவென்று ஆண்டவராகிய
இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்
கிறேன்; ஒரு பொருளைத் தீட்டுள்ளதென்று
எண்ணிக்கொள்ளுகிறவன் எவனோ அவ
15 னுக்கே அது தீட்டுள்ளதாகும். போஜனத்தி
னிமித்தம் உன் சகோதரனுக்கு விசனமுண்
டாக்கினால் நீ அன்புள்ளவனாய் நடக்கிறவ
னல்ல; உன் போஜனத்தினாலே அவனைக்
கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்
16 தாரே. உங்கள் நன்மை தூஷிக்கப்படா
17 திருப்பதாக. கடவுள் ராஜ்யம் புசிப்பும்
குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும்
பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோ
18 ஷமுமே. இவ்விஷயத்தில் கிறிஸ்துவுக்குத்
தொண்டுசெய்கிறவன் கடவுளுக்குப் பிரிய
மானவன், மனுஷருக்கும் உகந்தவன்.
19 ஆனபடியால், சமாதானத்துக்கும் பரஸ்பர
பக்திவிருத்திக்கும் அனுகூலமானவைகளைப்
20 பின்தொடருகிறோம். போஜனத்தினிமித்தம்
கடவுளின் வேலைப்பாட்டை அழித்துப்
போடாதே. எல்லாப் பதார்த்தங்களும்
சுத்தமுள்ளவைகள் தான்; ஆகிலும் தவறி
விழுவதற்கு ஏதுவாகப் புசிக்கிறவனுக்கு
21 அது தீமையாகும். மாம்சம் புசியாதிருக்
கிறதும், திராட்சரசம் குடியாதிருக்கிறதும்,
உன் சகோதரன் தவறிவிழுவதற்கு ஏதுவான
எதையும் செய்யாதிருக்கிறதும் நலம்.
22 உனக்குள்ள விசுவாசம் கடவுள்முன் உன்
மட்டில் இருக்கட்டும். தான் நல்லதென்று
நிர்ணயித்துக்கொண்ட காரியத்தில் தன்னைக்
குற்றவாளியாகத் தீர்த்துக்கொள்ளாதவன்
23 பாக்கியவான். ஒருவன் மன ஐயத்தோடு
புசிப்பானானால், அவன் விசுவாசமில்லாமல்
புசிக்கிறபடியினால் குற்றவாளியாகத் தீர்க்
கப்பட்டாயிற்று. விசுவாசத்தினால் வராத
யாவும் பாவமே.

15 அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம்
நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீன
ருடைய பலக்குறைவுகளைச் சுமக்கக் கட
2 மைப்பட்டிருக்கிறோம். நம்மில் ஒவ்வொரு
வனும் அயலானுடைய பக்திவிருத்திக்கு
ஏதுவான நன்மை உண்டாகும்படி, அவ
னுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்.
கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல், 3
உம்மை நிந்திப்பவர்களின் நிந்தனைகள்
என்மேல் விழுந்தன
என்று எழுதியிருக்கிறபடி நடந்தார். வேத 4
வாக்கியங்களின் மூலமாய் உண்டாகும்
பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம்
நன்னம்பிக்கை அடையும்படி, முன்
எழுதப்பட்டவைகளெல்லாம் நமக்குப்
போதனையாகவே எழுதப்பட்டன. நீங்கள் 5
ஒருமனப்பட்டவர்களாய் நம்முடைய ஆண்
டவராகிய இயேசுகிறிஸ்துவின் கடவுளும்
பிதாவுமானவரை ஏகவாக்காய் மகிமைப்
படுத்தத்தக்கதாக, பொறுமையையும் ஆறு 6
தலையும் அளிக்கும் கடவுள், கிறிஸ்து இயேசு
வின் மாதிரியின்படி, நீங்கள் ஏக சிந்தை
யுள்ளவர்களாயிருக்க உங்களுக்கு அனுக்
கிரகஞ்செய்வாராக.
ஆதலால், கடவுளுக்கு மகிமை உண் 7
டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது
போல நீங்களும் ஒருவரையொருவர் ஏற்
றுக்கொள்ளுங்கள். பிதாக்களுக்குச் செய் 8
யப்பட்ட வாக்குத்தத்தங்களை உறுதிப்
படுத்துவதற்கும், புறஜாதியாரும் கடவுள்
இரக்கத்தினிமித்தம் அவரை மகிமைப்
படுத்துவதற்கும், கடவுளின் உண்மையி
னிமித்தம் விருத்தசேதனமுள்ளவர்களுக்
குக் கிறிஸ்து ஊழியரானாரென்று சொல்லு
கிறேன். அந்தப்படியே: 9
இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே
உம்மைப் புகழ்ந்து கொண்டாடி,
உமது நாமத்தைத் துதித்துப் பாடுவேன்
என்று எழுதியிருக்கிறது. மேலும்: 10
புறஜாதிகளே, அவர் ஜனத்தோடுகூடக்
களிகூருங்கள்
என்கிறது. மேலும்: 11
புறஜாதிகளே, நீங்களனைவரும் கர்த்த
ரைத் துதியுங்கள்,
ஜனங்களனைவரும் அவரைப் புகழ்வார்க
ளாக
என்றும் சொல்லுகிறது. மேலும்: 12
ஈசாயின் வேரும்
புறஜாதியாரை ஆளும்படி எழும்புகிற
வருமாகிய
ஒருவர் தோன்றுவார்;
புறஜாதியாரின் நன்னம்பிக்கை அவராலே
ஆகும்
என்று ஏசாயா உரைக்கிறான். பரிசுத்த 13
ஆவியின் பலத்தினால் உங்களுக்கு நன்னம்
பிக்கை பெருகும்படி, நன்னம்பிக்கையின்
கடவுள்தாமே விசுவாசத்தினால் உண்டாகும்
சகலவித சந்தோஷத்தினாலும் சமாதானத்
தினாலும் உங்களை நிரப்புவாராக.

14 என் சகோதரரே, நீங்கள் நற்குணம்
நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்
பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர்
புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்க
ளென்று நானும் உங்களைக்குறித்துத் திட்ட
15 மாய் நம்புகிறேன். புறஜாதியாராகிய பலி
பரிசுத்த ஆவியினால் பரிசுத்தமாக்கப்பட்டு,
16 கடவுளுக்கு உகந்ததாகும்பொருட்டு, | கட
வுளைப்பற்றிய நற்செய்தியை அறிவிக்கும்
ஆசாரியனாய், நான் புறஜாதிகளுக்கென்று
இயேசுகிறிஸ்துவின் பணிவிடைக்காரனாகும்
படி கடவுளால் எனக்கு அளிக்கப்பட்ட
கிருபையினிமித்தம், உங்களுக்கு ஞாபகப்
படுத்தும்படி இடையிடையே நான் அதிக
17 தைரியமாய் எழுதியிருக்கிறேன். ஆதலால்
கடவுளுக்கடுத்தவைகளில் பெருமைபாராட்
டுவதற்குக் கிறிஸ்து இயேசுவுக்குள் எனக்கு
18 உரிமை உண்டு. புறஜாதியாரைக் கீழ்ப்
படியச்செய்யும்படி வார்த்தையினாலும்
செய்கையினாலும் அற்புத அடையாளங்
களின் வல்லமையினாலும் பரிசுத்த ஆவி
யின் வல்லமையினாலும் கிறிஸ்து என்னைக்
கொண்டு நடப்பித்தவைகளையல்லாமல்
வேறொன்றையும் நான் சொல்லத் துணிவ
19 தில்லை. இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றி
லும் இல்லிரிக்கம் நாடுவரைக்கும் கிறிஸ்து
வின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்
கித்திருக்கிறேன்.

20 அவர் செய்தியைப் பெறாதவர்கள் காண்
பார்கள்,
கேள்விப்படாதவர்கள் உணர்ந்துகொள்
வார்கள்
21 என்று எழுதியிருக்கிறபடி, மற்றொருவன்
போட்ட அஸ்திபாரத்தின்மேல் கட்டாமல்,
கிறிஸ்துவின் நாமம் சொல்லப்பட்டிராத
இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்க
வேண்டுமென்பதே என் பேராவல்.

22 ஆனதுபற்றி, உங்களிடம் வருகிறதற்கு
23 அநேகந்தரம் தடைப்பட்டேன். இப்
பொழுதோ இந்தத் திசைகளில் எனக்கு
இனி இடம் இல்லாததாலும், உங்களிடம்
வரவேண்டுமென்று அநேக வருஷகாலமாய்
24 எனக்கு வாஞ்சையிருந்ததாலும், ஸ்பானியா
தேசத்துக்கு நான் போகும்படி சமயம்
வாய்க்குமேயானால், அங்கே போகும் வழி
யில் உங்களைக் காணலாமென்றும், உங்கள்
சகவாசத்தால் நான் கொஞ்சமாயினும்
திருப்தியடைந்தபின்பு உங்களால் வழிவிட்
டனுப்பப்படலாமென்றும் நம்புகிறேன்.
25 இப்பொழுதோ, பரிசுத்தவான்களுக்கு
உபகாரஞ்செய்யும்விஷயமாய் எருசலேமுக்
26 குப் போகிறேன். மக்கெதோனியாவிலும்
அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலிருக்
கும் பரிசுத்தவான்களில் தரித்திரரானவர்
களுக்கு ஏதாகிலும் பொருளுதவிசெய்ய
விருப்பங்கொண்டார்கள். ஆம், இப்படிச் 27
செய்கிறதற்கு அவர்கள் கடனாளிகள். எப்
படியென்றால், அவர்களுடைய ஆவிக்குரிய
நன்மைகளில் புறஜாதியார் பங்குபெற்றிருக்
கிறதால், சரீர விஷயங்களில் அவர்களுக்
குப் பணிவிடை செய்வது இவர்கள்
கடமையே. இந்த ஊழியத்தை நான் செய்து 28
முடித்து, இந்தப் பலனை அவர்கள் கையில்
பத்திரமாய் ஒப்படைத்தபின்பு, உங்கள்
நகரத்தின் வழியாய் ஸ்பானியாவுக்குப்
போவேன். நான் உங்களிடம் வரும்போது, 29
கிறிஸ்துவின் சம்பூரண ஆசீர்வாதத்தோடே
வருவேன் என்று எனக்குத் தெரியும்.

சகோதரரே, கடவுளின் சித்தத்தினால் 30
நான் உங்களிடம் சந்தோஷமாய் வந்து
உங்களோடு தேறுதலடையும்படியாக, யூதே 31
யாவில் அடங்காத மனமுள்ளவர்கள் கை
களிலிருந்து நான் விடுவிக்கப்படவும், எருச
லேமில் நான் செய்யப்போகிற பணிவிடை
பரிசுத்தவான்களுக்கு உகந்ததாயிருக்கவும்,
கடவுளிடம் நீங்கள் எனக்காகச் செய்யும் 32
ஜெபங்களில் என்னோடுகூடப் போராட
வேண்டும் என்று நம்முடைய ஆண்டவ
ராகிய இயேசுகிறிஸ்துவையும் ஆவியானவ
ருடைய அன்பையும் முன்னிட்டு உங்களைக்
கேட்டுக்கொள்ளுகிறேன். சமாதானத்தின் 33
கடவுள் உங்களனைவரோடும் இருப்பாராக;
ஆமேன்.

கெங்கிரேயா சபையின் உதவிக்காரி 16
யாகிய நம் சகோதரி பெபேயாளைப்பற்றி
உங்களுக்குச் சிபார்சு செய்கிறேன். ஆண்ட 2
வருக்குள் பரிசுத்தவான்களுக்குத் தகுந்த
படி நீங்கள் அவளை ஏற்றுக்கொண்டு,
எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்
குத் தேவையோ அதிலே அவளுக்கு உதவி
செய்யுங்கள்; அவள் அநேகருக்கு, எனக்குங்
கூட, பேருதவியாயிருந்தவள்.

கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் 3
ஊழியராகிய பிரிஸ்காளையும் ஆக்கிலாவை
யும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராண 4
னுக்காகத் தங்கள் கழுத்தையும் கொடுத்த
வர்கள்; அவர்களுக்கு நான் மாத்திரமல்ல
புறஜாதிகளின் சபைகளெல்லாம் நன்றி
செலுத்துகின்றன. அவர்கள் வீட்டில் கூடி 5
வருகிற சபையையும் வாழ்த்துங்கள்.
ஆசியாவில் கிறிஸ்துவுக்கு முதற்பலனாகிய
என் பிரியமான எப்பைனத்தை வாழ்த்
துங்கள். உங்களுக்காக மிகவும் பிரயாசப் 6

7 பட்ட மரியாளை வாழ்த்துங்கள். அந்திரோ
னீக்கையும் யூனியாவையும் வாழ்த்துங்கள்;
இவர்கள் என் பந்துக்கள், என்னோடு காவ
லில் கட்டுண்டிருந்தவர்கள், அப்போஸ்தல
ருக்குள் பேர்பெற்றவர்கள்; எனக்கு முன்
8 னேயே கிறிஸ்துவுக்குள்ளானவர்கள். ஆண்
டவருக்குள் எனக்குப் பிரியமான அம்பிலி
9 யாத்தை வாழ்த்துங்கள். கிறிஸ்துவுக்குள்
நம் உடன் ஊழியனாகிய உர்பானையும் என்
பிரியமான ஸ்தாக்கியையும் வாழ்த்துங்கள்.
10 கிறிஸ்துவுக்குள் உத்தமனாகிய அப்பெல்
லேயை வாழ்த்துங்கள். அரிஸ்தோபூலுவின்
வீட்டாரைச் சேர்ந்தவர்களை வாழ்த்துங்கள்.
11 என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்
துங்கள். நர்க்கீசுவின் வீட்டாரில் ஆண்ட
வருக்குட்பட்டவர்களை வாழ்த்துங்கள்.
12 ஆண்டவருக்குள் உழைத்தவர்களாகிய
திரிபேனாளையும் திரிபோசாளையும் வாழ்த்
துங்கள். ஆண்டவருக்குள் மிகவும்
உழைத்துவந்த பிரியமான பெர்சியாளை
13 வாழ்த்துங்கள். ஆண்டவருக்குள் தெரிந்
தெடுக்கப்பட்ட ரூபையும் அவன் தாயை
யும் வாழ்த்துங்கள், அவள் எனக்கும் தாய்.
14 அசிங்கிரீத்தையும் பிலெகோனையும் எர்மே
யையும் பத்திரொபாவையும் எர்மாவையும்
அவர்களோடிருக்கிற சகோதரரையும்
15 வாழ்த்துங்கள். பிலொலோகையும் யூலியாளை
யும் நேரேயையும் அவன் சகோதரியையும்
ஒலிம்பாவையும் அவர்களோடிருக்கிற பரி
சுத்தவான்கள் அனைவரையும் வாழ்த்துங்கள்.
16 ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு
வாழ்த்துங்கள். கிறிஸ்துவின் சபைகளெல்
லாம் உங்களை வாழ்த்துகின்றன.
17 அன்றியும், சகோதரரே, உங்களுக்கு
நான் புத்தியாகச் சொல்லுகிறதைக் கவனி
யுங்கள். நீங்கள் கற்றுக்கொண்ட உப
தேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும்
இடறல்களையும் உண்டாக்குகிறவர்கள்
மேல் கண்ணாயிருந்து, அவர்களைவிட்டு வில
குங்கள். அப்படிப்பட்டவர்கள் நம் 18
முடைய ஆண்டவராகிய கிறிஸ்துவுக்கல்ல,
தங்கள் வயிற்றுக்கே தொண்டுசெய்
கிறார்கள். இவர்கள் தங்கள் நயவசனிப்பி
னாலும் இச்சகப் பேச்சினாலும் கபடில்லாத
வர்களின் இருதயங்களை வஞ்சிக்கிறார்கள்.
உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரிய 19
வந்திருக்கிறது. ஆகையால் உங்களைக்குறித்
துச் சந்தோஷப்படுகிறேன்; ஆயினும்,
நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்
குப் பேதைகளுமாயிருக்கவேண்டுமென்று
விரும்புகிறேன். சமாதானத்தின் கடவுள் 20
சாத்தானை உங்கள் கால்களின்கீழே சீக்கிர
மாய் நசுக்கிப்போடுவார். நம்முடைய
ஆண்டவராகிய இயேசுவின் கிருபை உங்க
ளோடிருப்பதாக.

என் உடன் ஊழியனாகிய தீமோத்தேயு 21
வும் என் பந்துக்களாகிய லூகியும் யாசோ
னும் சொசிபத்தரும் உங்களை வாழ்த்து
கிறார்கள். இந்த நிருபத்தை எழுதின 22
தெர்தியுவாகிய நான் ஆண்டவருக்குள் உங்
களை வாழ்த்துகிறேன். என்னையும் சபை 23,
யனைத்தையும் உபசரித்து வருகிற காயு 24
உங்களை வாழ்த்துகிறான். பட்டணத்துப்
பொக்கிஷக்காரனாகிய எரஸ்தும், சகோதரனா
கிய குவர்த்தும் உங்களை வாழ்த்துகிறார்கள்.

அனாதி காலங்களில் மறைவாயிருந்து, 25
இப்பொழுதோ தீர்க்கதரிசன ஆகமங்களின்
மூலமாய் வெளியாக்கப்பட்டு, நித்திய கடவு
ளின் நியமத்திற்கிசைய விசுவாசக் கீழ்ப்படி
தலுக்கென்று சகல ஜாதியாருக்கும் அறி
விக்கப்பட்ட இரகசியத்தின் வெளிப்பாட்
டின்படியே, என் சுவிசேஷத்துக்கும் இயேசு 26
கிறிஸ்துவைப்பற்றிய விளம்பரத்துக்கும்
இசைவாக, உங்களை ஸ்திரப்படுத்த வல்ல 27
வரும், ஏக ஞானசொரூபியாகிய கடவுளு
மானவருக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய்
என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக;
ஆமேன்.

கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம்

1 கடவுளின் சித்தப்படி கிறிஸ்து இயேசு
வின் அப்போஸ்தலனாக அழைக்கப்பட்ட
பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும்,
2 கொரிந்துவில் இருக்கும் தேவசபைக்கு,
அதாவது பரிசுத்தராக அழைக்கப்பட்டுக்
கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்
பட்டவர்களுக்கும், அவர்களுக்கும் நமக்
கும் ஆண்டவராயிருக்கிற இயேசுகிறிஸ்து
வின் நாமத்தை எவ்விடத்திலும் தொழுது
கொள்ளுகிற அனைவருக்கும் எழுதுவதாவது:
3 நம்முடைய பிதாவாகிய கடவுளிடமிருந்
தும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினிட
மிருந்தும் உங்களுக்குக் கிருபையும் சமா
தானமும் உண்டாவதாக.
4 கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களுக்கு
அளிக்கப்பட்ட தேவ கிருபையினிமித்தம்
உங்கள்பொருட்டு எப்பொழுதும் கடவு
5 ளுக்கு நன்றிசெலுத்துகிறேன். ஏனெனில்,
கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியம் உங்களுக்
குள்ளே ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிற
6 படியே, நீங்கள் அவருக்குள் யாவற்றி
லும், எல்லா வாக்கு வரத்திலும் எல்லா
அறிவிலும் ஐசுவரிய சம்பன்னரானீர்கள்.
7 ஆகையால் நீங்கள் யாதொரு கிருபை வரத்தி
லும் குறைவில்லாதவர்களாய் நம்முடைய
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படு
8 வதற்குக் காத்துக்கொண்டிருக்கிறீர்கள். நம்
முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
வின் நாளிலே நீங்கள் குற்றஞ்சாட்டப்படா
தவர்களாயிருக்கும்படி முடிவுபரியந்தம்
9 அவரே உங்களை ஸ்திரப்படுத்துவார். தம்
முடைய குமாரனும் நம் ஆண்டவருமாகிய
இயேசுகிறிஸ்துவோடு ஐக்கியமாயிருப்ப
தற்கு உங்களை அழைத்த கடவுள் உண்மை
யுள்ளவர்.
10 சகோதரரே, நீங்களெல்லாரும் ஒன்
றையே பேசவும், பிரிவினைகளின்றி ஒரே
மனமும் ஒரே கருத்துமுள்ளவர்களாய்
இணைக்கப்படவும் வேண்டுமென்று நம்
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தி
னாலே உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.
என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்கு 11
வாதங்கள் உண்டென்று குலோவேயாளின்
வீட்டார் உங்களைப்பற்றி எனக்கு அறிவித்
தார்கள். உங்களில் ஒருவன், நான் பவுலைச் 12
சேர்ந்தவனென்றும், ஒருவன் நான் அப்
பொல்லோவைச் சேர்ந்தவனென்றும்,
வேறொருவன் நான் கேபாவைச் சேர்ந்தவ
னென்றும், இன்னுமொருவன் நான் கிறிஸ்து
வைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறான்
என்பதே என் கருத்து. கிறிஸ்து பிரிந் 13
திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச்
சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின்
நாமத்திற்குள்ளாகவா ஞானஸ்நானம் பெற்
றீர்கள்? என் நாமத்திற்குள்ளாக ஞானஸ்நா 14
னம் பெற்றதாக எவனும் சொல்லாதபடி,
நான் கிறிஸ்புவுக்கும் காயுவுக்குமேயன்றி 15
உங்களில் வேறெவனுக்கும் ஞானஸ்நானங்
கொடுக்கவில்லை; இதைக்குறித்துக் கடவு
ளுக்கு நன்றிசெலுத்துகிறேன். ஸ்தேபனு 16
வின் வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங்
கொடுத்ததுண்டு. இதுவுமல்லாமல் இன்
னும் வேறு யாருக்காவது நான் ஞானஸ்நா
னங்கொடுத்தேனோ தெரியாது. ஞானஸ்நா 17
னங்கொடுக்க அல்ல, சுவிசேஷத்தைப் பிர
சங்கிக்கவே கிறிஸ்து என்னை அனுப்பினார்.
கிறிஸ்துவின் சிலுவை வியர்த்தமாகாதபடி
சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே
அனுப்பினார்.
சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் 18
போகிறவர்களுக்குப் பைத்தியம், இரட்சிக்
கப்படுகிற நமக்கோ அது தேவ வல்லமை.
ஞானிகளின் ஞானத்தை நான் அழிப் 19
பேன்,
விவேகிகளின் விவேகத்தை அவமாக்கு
வேன்
என்று எழுதியிருக்கிறதே. ஞானி எங்கே? 20
வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்க
சாஸ்திரி எங்கே? உலகஞானத்தைக் கடவுள்
பைத்தியமாக்கவில்லையா? கடவுளின் ஞான 21
நியமத்தின்படி உலகம் தன் ஞானத்தால்
கடவுளை அறிந்துகொள்ளாததால், பைத்திய

மாகத் தோன்றுகிற பிரசங்கப்பொருளினால்
விசுவாசிகளை இரட்சிக்கக் கடவுள் பிரியங்
22 கொண்டார். யூதர் அடையாளங்களைக்
கேட்கிறார்கள்; கிரேக்கர் ஞானத்தைத் தேடு
23 கிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறை
யுண்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்;
அவர் யூதருக்கு இடறல், புறஜாதியாருக்குப்
24 பைத்தியம். ஆகிலும் யூதரோ கிரேக்கரோ
அழைக்கப்பட்டவர்களுக்கே அவர் தேவ
வல்லமையும் தேவ ஞானமுமாகிய கிறிஸ்து.
25 கடவுளின் பைத்தியம் மனுஷ ஞானத்தி
லும் ஞானமாகும்; கடவுளின் பலவீனம்
மனுஷ பலத்திலும் பலமாகும்.
26 சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட
அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி
ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள்
அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை.
27 ஞானிகளை வெட்கப்படுத்த, உலகில் பைத்
தியமானவைகளைக் கடவுள் தெரிந்தெடுத்
தார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்த,
உலகில் பலவீனமானவைகளைக் கடவுள்
28 தெரிந்தெடுத்தார். உள்ளவைகளை அவ
மாக்க, இல்லாதவைகளையும் உலகில் இழி
வானவைகளையும் அற்பமாய் எண்ணப்
பட்டவைகளையும் கடவுள் தெரிந்தெடுத்
29 தார். மனுமக்களில் எவனும் கடவுள்முன்
பெருமைபாராட்டாதபடி அப்படிச் செய்
30 தார். அவராலே நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்
குள்ளானீர்கள்.

பெருமைபாராட்டுகிறவன் கர்த்தரைக்
குறித்தே
பெருமை பாராட்டக்கடவன்

31 என்று எழுதியிருக்கிறபடி, அவர் கடவு
ளால் நமக்கு ஞானமானார், அதாவது நீதியும்
பரிசுத்தமாகுதலும் மீட்பும் ஆனார்.

2 சகோதரரே, நான் உங்களிடம் வந்த
போது, கடவுளைப்பற்றிய சாட்சியத்தைச்
சிறந்த வசனிப்போடாவது சிறந்த ஞானத்
தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை.
2 இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறை
யுண்ட அவரையே அன்றி, வேறொன்றை
யும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்
3 மானித்திருந்தேன். பலவீனத்தோடும் பயத்
தோடும் மிகுந்த நடுக்கத்தோடும் நான்
4 உங்கள் நடுவில் இருந்தேன். உங்கள் விசு
வாசம் மனுஷ ஞானத்திலல்ல தேவ வல்ல
5 மையில் நிற்கும்படி, என் பேச்சும் என்
பிரசங்கமும் மனங்கவரும்படியான ஞான
வார்த்தைகளாக அல்ல, ஆவியும் வல்லமை
யும் விளங்கினவைகளாகவே இருந்தன.
6 ஆயினும், தேறினவர்களுக்குள்ளே
ஞானத்தைப் பேசுகிறோம்; அதுவோ இந்த
உலகத்தின் ஞானமல்ல, அழிந்துபோகிறவர்
களாகிய இந்த உலகத்து அதிகாரிகளின்
ஞானமுமல்ல. யுகாரம்பத்திற்குமுன் 7
கடவுள் நமது மகிமைக்கென்று தீர்மானஞ்
செய்ததும், மறைபொருளாய் வைத்திருந்
ததுமான தேவ ஞானத்தின் இரகசியத்தைப்
பேசுகிறோம். இவ்வுலகத்தின் அதிகாரி 8
களில் ஒருவனும் அதை அறிந்துகொள்ள
வில்லை; அறிந்திருந்தால், மகிமையின்
ஆண்டவரை அவர்கள் சிலுவையில் அறைந்
திருக்கமாட்டார்கள். எழுதியிருக்கிறபடி: 9

தம்மில் அன்புகூருகிறவர்களுக்கென்று
கடவுள் ஆயத்தம்பண்ணினவைகளைக்
கண் காணவுமில்லை,
காது கேட்கவுமில்லை,
அவை மனுஷ இருதயத்தில் தோன்றவு
மில்லை.

கடவுள் தம் ஆவியானவரின் மூலமாய் 10
அவற்றை நமக்கு வெளிப்படுத்தினார். ஆவி
யானவர் எல்லாவற்றையும், கடவுளின்
ஆழங்களையும், ஆராய்ந்துவருகிறார். மனுஷ 11
னிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன்
மனுஷனுக்குரியவற்றை அறிவான்? அப்
படியே கடவுளின் ஆவியேயன்றி ஒருவனும்
கடவுளுக்குரியவற்றை அறிந்துகொண்ட
தில்லை.
நாமோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், 12
கடவுளால் நமக்கு அருளப்பட்டவைகளை
அறியும்படிக்கு, கடவுளிலிருந்து வரும்
ஆவியையே பெற்றோம். மனுஷ ஞானம் 13
போதிக்கும் வார்த்தைகளாலே நாம் அவை
களைப் பேசாமல், ஆவிக்குரியவைகளை
ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்தி,
ஆவியானவர் போதிக்கும் வார்த்தைகளாலே
பேசுகிறோம். ஜன்மசுபாவ மனுஷனோ 14
கடவுளின் ஆவிக்குரியவைகளை ஏற்றுக்
கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்
தியம். அவைகள் ஆவிக்கேற்றபடி நிதா
னிக்கப்படும்; ஆதலால் அவன் அவைகளை
அறியவும் முடியாது. ஆவிக்குரியவன் 15
எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கி
றான்; அவனோ எவனாலும் ஆராய்ந்து நிதா
னிக்கப்படான். கர்த்தருக்குப் போதிக்கத் 16
தக்கதாக அவர் சிந்தையை அறிந்துகொண்
டவன் யார்? நமக்கோ கிறிஸ்துவின் சிந்தை
உண்டு.

மேலும், சகோதரரே, நான் உங்களை **3**
ஆவிக்குரியவர்களென்று பாவித்து உங்க
ளுடனே பேச முடியாமல், மாம்சமானவர்க
ளென்றும் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்

றும் பாவித்துப் பேசவேண்டியதாயிற்று.
2 நான் உங்களுக்குப் பாலைக் குடிக்கக்கொடுத்
தேன், சாப்பாட்டைக் கொடுக்கவில்லை;
நீங்கள் அதை உட்கொள்ள முடியாதிருந்
3 தீர்களே. நீங்கள் இன்னும் மாம்சத்துக்குரி
யவர்களாயிருக்கிறபடியால், இப்போதும்
உட்கொள்ள முடியாதிருக்கிறீர்கள். பொறா
மையும் வாக்குவாதமும் உங்களுக்குள்
இருக்கும்போது, நீங்கள் மாம்சத்துக்குரிய
வர்களும் மனுஷமுறையாய் நடக்கிறவர்
4 களும் அல்லவா? ஒருவன்: நான் பவுலைச்
சேர்ந்தவனென்றும், வேறொருவன்: நான்
அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும்
5 சொன்னால், நீங்கள் மனுஷர்தானே? அப்
பொல்லோ யார்? பவுல் யார்? ஆண்டவர்
அவனவனுக்கு அருளியபடியே, நீங்கள்
விசுவாசிகளாவதற்கு ஏதுவான ஊழியக்
6 காரர்தானே. நான் நட்டேன், அப்
பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், கடவுளோ
7 விளையச்செய்தார். ஆதலால், நடுகிறவனும்
ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்று
மில்லை, விளையச்செய்கிற கடவுளாலே
8 எல்லாமாகும். நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சு
கிறவனும் ஒன்று. தன் தன் உழைப்புக்
குத்தக்க கூலியை அவனவன் பெறுவான்.
9 நாங்கள் கடவுளின் உடன் ஊழியர்;
நீங்கள் கடவுளின் பண்ணை, கடவுளின்
கட்டடம்.
10 எனக்கு அளிக்கப்பட்ட தேவ கிருபை
யின்படி விவேகமுள்ள சிற்பாசாரியைப்
போல நான் அஸ்திபாரம் போட்டேன்,
அதன்மேல் வேறொருவன் கட்டுகிறான்; ஒவ்
வொருவனும் தான் அதன்மேல் இன்ன
விதமாய்க் கட்டுகிறானென்று பார்த்துக்
11 கொள்ளக்கடவன். போடப்பட்டிருக்கிற
அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவையல்லா
மல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவ
12 னாலும் முடியாது. ஒருவன் அந்த அஸ்தி
பாரத்தின்மேல் பொன் வெள்ளி விலையுயர்ந்த
கல் மரம் புல் வைக்கோல் இவைகளை வைத்
13 துக் கட்டினால், அவனவன் வேலைப்பாடு
வெளியாகும்; நாளானது அதை விளங்கப்
பண்ணும். ஏனெனில் அது அக்கினிமய
மாக வெளிப்படும்; அவனவன் வேலைப்பாடு
எத்தன்மையுள்ளதென்று அக்கினியே பரி
14 சோதிக்கும். ஒருவன் கட்டினது நிலைத்
திருந்தால் அவன் கூலியைப் பெறுவான்.
15 ஒருவன் கட்டினது வெந்துபோனால் நஷ்ட
மடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்;
அதுவும் அக்கினியில் அகப்பட்டுத் தப்பி
னதுபோலாகும்.
16 நீங்கள் கடவுளின் ஆலயமென்றும்,
கடவுளின் ஆவி உங்களில் வாசமாயிருக்
கிறாரென்றும் உங்களுக்குத் தெரியாதா?
ஒருவன் கடவுளின் ஆலயத்தைக் கெடுத் 17
தால் அவனைக் கடவுள் கெடுப்பார்; கடவு
ளுடைய ஆலயம் பரிசுத்தமுள்ளது;
நீங்களே அந்த ஆலயம்.
ஒருவனும் தன்னைத்தானே வஞ்சித்துக் 18
கொள்ளவேண்டாம்; உங்களில் ஒருவன்
தன்னை இவ்வுலகத்திலே ஞானியென்று
எண்ணினால், அவன் ஞானியாகும்படிக்குப்
பைத்தியக்காரனாகக்கடவன். இவ்வுலகத்தின் 19
ஞானம் கடவுள் பார்வையில் பைத்திய
மாம்; அப்படியே ஞானிகளை அவர்களின்
தந்திரத்திலே பிடிப்பார் என்றும், ஞானி 20
களின் சிந்தனைகள் வீணென்று கர்த்தர்
அறிவார் என்றும் எழுதியிருக்கிறது. இப் 21
படியிருக்க, ஒருவனும் மனுஷரைக்குறித்
துப் பெருமைபாராட்டலாகாது. எல்லாம்
உங்களுடையதே; பவுலோ அப்பொல் 22
லோவோ கேபாவோ உலகமோ ஜீவனோ
மரணமோ நிகழ்காரியங்களோ வருங்காரி
யங்களோ எல்லாம் உங்களுடையவைகள்.
நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்; கிறிஸ்து 23
கடவுளுடையவர்.

இப்படியாக, எந்த மனுஷனும் எங்க 4
ளைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும்,
கடவுளுடைய இரகசியங்களின் உக்கிரா
ணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கட
வன். மேலும், ஒருவன் உண்மையுள்ளவனா 2
கக் காணப்படுவதே உக்கிராணக்காரரிடம்
மனுஷர் தேடிப்பார்க்கும் இலக்ஷணம்;
என் விஷயத்திலோ, உங்களாலாவது மனு 3
ஷரின் நியாயவிசாரணையினாலாவது நான்
தீர்ப்புப்பெறுவது மிகவும் அற்பமான காரி
யம். நானும் என்னைக்குறித்துத் தீர்ப்புச்
சொல்லுகிறதில்லை. என்னிடம் நான் 4
யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகி
லும் நான் அதனால் நீதிமானாகத் தீர்க்கப்
படுகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்
கிறவர் ஆண்டவரே. ஆனதால், ஆண்ட 5
வர் வருமளவும் காலத்துக்கு முன்னே
நீங்கள் யாதொன்றையுங்குறித்துத் தீர்ப்புச்
சொல்லாதிருங்கள்; மறைந்திருக்கிற இரு
ளான காரியங்களை அவர் வெளிச்சத்துக்குக்
கொண்டுவந்து, இருதயங்களின் யோசனை
களையும் வெளிப்படுத்துவார்; அவனவனுக்
குரிய புகழ் அப்பொழுது கடவுளால் உண்
டாகும்.
சகோதரரே, உங்களில் ஒருவனும் ஒருவ 6
னுக்காக மற்றொருவனுக்கு விரோத
மாய் இறுமாப்புக்கொள்ளாதிருக்கும்படி,

எழுதியிருப்பதற்கு மிஞ்சிப்போகாதிருக்க
வேண்டுமென்று, நீங்கள் எங்கள் விஷயத்
தில் கற்றுக்கொள்ள உங்கள் நிமித்தம்
என்னைக்குறித்தும் அப்பொல்லோவைக்
குறித்தும் நான் இவைகளை உவமானமாக
7 எழுதியிருக்கிறேன். ஏனெனில், உன்னை
விசேஷித்தவனாக்குகிறவர் யார்? உனக்
குள்ளவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது
யாது? நீ பெற்றுக்கொண்டவனேயானால்
பெற்றுக்கொள்ளாதவன்போல் நீ பெருமை
8 பாராட்டுகிறதென்ன? இதற்குள்ளாகத்
திருப்தியடைந்துவிட்டீர்களே, இதற்குள்
ளாக ஐசுவரியவான்களாகிவிட்டீர்களே,
எங்களையல்லாமல் அரசராகிவிட்டீர்களே.
நீங்கள் அரசரென்றால் எனக்குச் சந்தோ
ஷந்தான்; அப்பொழுது நாங்களும் உங்க
9 ளோடு அரசாளுவோமே. அப்போஸ்தல
ராகிய நாங்கள் மரணத்துக்குக் குறிக்கப்
பட்டவர்கள்போலக் கடையானவர்களாகக்
காணப்படும்படி கடவுள் செய்தாரென்று
எண்ணுகிறேன்; தூதருக்கும் மனுஷருக்
கும், பிரபஞ்சம் அனைத்துக்கும் நாங்கள்
10 வேடிக்கைக் காட்சியானோம். நாங்கள்
கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள்
கிறிஸ்துவுக்குள் விவேகிகள்; நாங்கள் பல
வீனர், நீங்கள் பலவான்கள்; நீங்கள் கன
11 வான்கள், நாங்கள் கனவீனர். இந்நேரம்
வரை நாங்கள் பசியுள்ளவர்களும் தாக
முள்ளவர்களும் நிர்வாணிகளும் குத்துண்ட
வர்களும் தங்க இடமில்லாதவர்களுமா
12 யிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலை
செய்து உழைக்கிறோம்; வையப்பட்டு
ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டுச் சகிக்கி
13 றோம்; நிந்திக்கப்பட்டு மன்றாடுகிறோம்;
இந்நேரம்வரைக்கும் உலகத்தின் குப்பை
யைப்போலவும் எல்லாவற்றிலும் அழுக்
கானவைகளைப் போலவும் ஆனோம்.
14 உங்களை வெட்கப்படுத்தும்படி நான்
இவற்றை எழுதவில்லை, நீங்கள் எனக்குப்
பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப்
15 புத்திசொல்லுகிறேன். கிறிஸ்துவுக்குள்
ஆயிரக்கணக்கான உபாத்திமார் உங்களுக்கு
இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்க
ளுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள்
நானே உங்களைச் சுவிசேஷத்தினால் பெற்
16 றேன். ஆகையால், நீங்கள் என்னைப்போல்
நடக்கிறவர்களாகவேண்டுமென்று உங்க
17 ளுக்குப் புத்திசொல்லுகிறேன். ஆண்டவ
ருக்குள் எனக்குப் பிரியமும் உண்மையு
மான குமாரன் தீமோத்தேயுவை இதினிமித்
தமே உங்களிடம் அனுப்பியிருக்கிறேன்.
எங்கும் எந்தச் சபையிலும் நான் போதித்து
வருகிற பிரகாரம், கிறிஸ்துவுக்குள்ளான
என் நடக்கையை அவன் உங்களுக்கு
ஞாபகப்படுத்துவான். நான் உங்களிடம் 18
வரப்போகிறதில்லை என்றாற்போல, சிலர்
இறுமாப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகி 19
லும், ஆண்டவருக்குச் சித்தமானால் நான்
சீக்கிரம் உங்களிடம் வந்து, இறுமாப்பா
யிருக்கிறவர்களின் பேச்சை அல்ல,
அவர்கள் வல்லமையையே அறிந்துகொள்
வேன். கடவுள் ராஜ்யம் பேச்சிலல்ல வல்ல 20
மையிலேயே இருக்கிறது. நீங்கள் விரும்புவ 21
தென்ன? நான் பிரம்போடு உங்களிடம் வர
வேண்டுமோ? அன்போடும் சாந்தமுள்ள
ஆவியோடும் வரவேண்டுமோ?

உங்களுக்குள் விபசாரம் உண்டென்று 5
பிரசித்தமாயிருக்கிறதே; அதுவும் புறஜாதி
யாருக்குள்ளும் கேள்விப்படாத விபசாரம்.
ஒருவன் தன் தகப்பன் மனைவியை வைத்
துக்கொண்டிருக்கிறானாம். இப்படிப்பட்ட 2
காரியம் செய்தவனை உங்களைவிட்டு நீக்கும்
படி நீங்கள் துக்கப்படவேண்டியதாயிருக்க,
இறுமாப்பாயிருக்கிறீர்களே. நான் சரீரத் 3
தில் உங்களோடில்லாதிருந்தும், ஆவியில்
உங்களோடிருக்கிறவனாக, இவ்விதமாய்
இதைச் செய்தவனைக்குறித்து உங்களோடு
இருக்கிறதுபோல நான் தீர்ப்புச்செய்துவிட்
டேன். அப்படிப்பட்டவனுடைய ஆவி 4
ஆண்டவரின் நாளில் இரட்சிக்கப்படும்
படி, நீங்களும் என் ஆவியும் நம்முடைய
ஆண்டவராகிய இயேசுவின் வல்லமையோடு
கூடிவந்திருக்கையில், நம்முடைய ஆண் 5
டவராகிய இயேசுவின் நாமத்தில் அவனை
மாம்சத்தின் அழிவுக்கென்று சாத்தானுக்கு
ஒப்புக்கொடுக்கவேண்டுமென்பதே என்
தீர்ப்பு.
நீங்கள் பெருமைபாராட்டுகிறது அழ 6
கல்ல; புளித்த மா கொஞ்சமேயாயினும்
பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்கி
விடுமென்று உங்களுக்குத் தெரியாதா?
நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிற 7
படியே புதிதான பிசைந்த மாவாயிருக்கும்
படிக்குப் பழைய புளித்த மாவை அப்புறப்
படுத்திவிடுங்கள். நமது பஸ்காவாகிய
கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆத 8
லால், பழைய புளித்த மாவோடல்ல, துர்க்
குணம் பொல்லாப்பு என்னும் புளித்த
மாவோடும் அல்ல, கபடமின்மை உண்மை
என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடு பண்
டிகையை ஆசரிப்போமாக.
வேசிக்கள்ளரோடு கலந்திருக்கக் கூடா 9
தென்று என் நிருபத்தில் உங்களுக்கு எழுதி

10 னேன். நான் பொதுவாய் இவ்வுலகத்து
வேசிக்கள்ளர் பொருளாசைக்காரர் கொள்
ளைக்காரர் விக்கிரகாராதனைக்காரர் இவர்
களைப்பற்றி எழுதவில்லை; அப்படியானால்
நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப்போக
11 வேண்டியதாகுமே. சகோதரனெனப்பட்ட
ஒருவன் வேசிக்கள்ளனாய், பொருளாசைக்
காரனாய், விக்கிரகாராதனைக்காரனாய், உதா
சினனாய், வெறியனாய் அல்லது கொள்ளைக்
காரனாயிருந்தால் அவனோடு கலந்திருக்கக்
கூடாதென்றே நான் உங்களுக்கு எழுதி
னேன். அப்படிப்பட்டவனோடு போஜனம்
12 பண்ணவும் கூடாது. புறம்பே இருக்கிறவர்
களை நியாயந்தீர்ப்பது என் காரியமா?
உள்ளே இருக்கிறவர்களையல்லவோ நீங்கள்
13 நியாயந்தீர்க்கிறீர்கள்? புறம்பே இருக்கிற
வர்களை நியாயந்தீர்ப்பவர் கடவுள். அந்தப்
பொல்லாதவனை உங்களைவிட்டுத் தள்ளிப்
போடுங்கள்.

6 உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடு
வழக்குண்டானால், வழக்காடும்படி அவன்
பரிசுத்தவான்களிடம் போகாமல் அநீதக்
2 காரரிடம் போகத் துணிகிறதென்ன? பரி
சுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்
பார்களென்று உங்களுக்குத் தெரியாதா?
நீங்கள் உலகத்தை நியாயந்தீர்க்கிறவர்க
ளானால், அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள்
3 அபாத்திரரா? தேவதூதரை நியாயந்தீர்ப்போ
மென்று உங்களுக்குத் தெரியாதா? இம்
மைக்குரியவைகளை நீங்கள் தீர்ப்பது பெரிய
4 காரியமா? இம்மைக்குரிய வழக்குகள்
உங்களுக்கு இருக்கும்போது, சபையால்
அற்பமாய் எண்ணப்படுகிறவர்களை ஏற்படுத்
5 திக்கொள்ளுகிறீர்களே! உங்களுக்கு வெட்க
முண்டாகும்படி இதைச் சொல்லுகிறேன்.
சகோதரருக்குள் உண்டான வழக்கைத்
தீர்க்கத்தக்க விவேகி உங்களில் ஒருவனாகி
6 லும் இல்லையா? ஆனால், சகோதரனோடு
சகோதரன் வழக்காடுகிறான், அதுவும்
அவிசுவாசிகளுக்கு முன்பாக வழக்காடு
7 கிறான். நீங்கள் ஒருவரோடொருவர் வழக்
காடுவது எவ்விதத்திலும் உங்களுக்குக்
குறைவு. அதைவிட அநியாயத்தை நீங்கள்
ஏன் சகித்துக்கொள்ளக்கூடாது? நஷ்
டத்தை ஏன் பொறுத்துக்கொள்ளக்
8 கூடாது? நீங்களே அநியாயஞ்செய்கிறீர்கள்,
நஷ்டப்படுத்துகிறீர்கள்; சகோதரருக்கே
9 அப்படிச் செய்கிறீர்கள். அநியாயக்காரர்
கடவுள் ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை
யென்று உங்களுக்குத் தெரியாதா? மோசம்
போகாதிருங்கள்; வேசிமார்க்கத்தார் விக்கிர
காராதனைக்காரர் விபசாரக்காரர் ஆண்
புணர்ச்சி செய்வோர் அதற்கு உடன்படு
வோர் | திருடர் பொருளாசைக்காரர் வெறி 10
யர் உதாசினர் கொள்ளைக்காரராகிய
இவர்கள் கடவுளுடைய ராஜ்யத்தைச் சுதந்
தரிப்பதில்லை. உங்களில் சிலர் இப்படிப் 11
பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும்,
ஆண்டவராகிய கிறிஸ்துவின் நாமத்தினாலும்
நம்முடைய கடவுளின் ஆவியினாலும் கழு
வப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்,
நீதிமான்களாகத் தீர்க்கப்பட்டீர்கள்.
எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு 12
உரிமை உண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியா
யிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க
எனக்கு உரிமை உண்டு, ஆகிலும் நான்
ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன். வயிற் 13
றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயி
றும் உரியது; கடவுள் இதையும் அதையும்
அழியப்பண்ணுவாரே. ஆனால், சரீரம்
வேசித்தனத்திற்கல்ல, ஆண்டவருக்கே உரி
யது; ஆண்டவரும் சரீரத்திற்கு உரியவர்.
ஆண்டவரை எழுப்பின கடவுள் தமது வல் 14
லமையினால் நம்மையும் எழுப்புவார்.
உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்க 15
ளென்று உங்களுக்குத் தெரியாதா? அப்படி
யிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை
எடுத்து வேசியின் அவயவங்களாக்கலாமா?
கூடவேகூடாது. | வேசியோடு இசைந்திருக் 16
கிறவன் அவளோடு ஒரே சரீரமாயிருக்கிறா
னென்று உங்களுக்குத் தெரியாதா? இரு
வரும் ஒரே மாம்சமாவார்களென்று சொல்லி
யிருக்கிறதே. அப்படியே ஆண்டவரோடு 17
இசைந்திருக்கிறவனும் அவரோடு ஒரே
ஆவியாயிருக்கிறான். வேசித்தனத்திற்கு 18
விலகி ஓடுங்கள். மனுஷன் செய்யும் எந்தப்
பாவமும் சரீரத்திற்குப் புறம்பேயிருக்கும்;
வேசித்தனஞ்செய்கிறவனோ தன் சுய சரீரத்
திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.
உங்கள் சரீரம் நீங்கள் கடவுளிடமிருந்து 19
பெற்றதும் உங்களில் தங்கியிருக்கிறதுமான
பரிசுத்த ஆவியின் ஆலயமென்றும், நீங்கள்
உங்களுடையவர்களல்லவென்றும் உங்க
ளுக்குத் தெரியாதா? கிரயத்துக்குக் கொள் 20
ளப்பட்டீர்கள்; ஆதலால் உங்கள் சரீரத்தி
னால் கடவுளை மகிமைப்படுத்துங்கள்.

நீங்கள் எழுதினவற்றின் சம்பந்தமாய் 7
நான் சொல்வதாவது: ஸ்திரீயைத் தொடாம
லிருப்பது மனுஷனுக்கு நல்லதுதான்.
எனினும், வேசித்தனம் சாதாரணமாயிருக் 2
கிறபடியால், ஒவ்வொருவனுக்கும் சொந்த
மனைவியும், ஒவ்வொருத்திக்கும் சொந்தப்

3 புருஷனும் இருக்கவேண்டும். புருஷன்
தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமை
யைச் செய்யக்கடவன். அப்படியே மனைவி
யும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள்.
4 மனைவி தன் சரீரத்திற்கு அதிகாரியல்ல,
புருஷனே அதற்கு அதிகாரி. அப்படியே
புருஷனும் தன் சரீரத்திற்கு அதிகாரியல்ல,
5 மனைவியே அதற்கு அதிகாரி. ஜெபத்திற்கு
வசதியாயிருக்கும்படி, சில காலம் மாத்
திரம் பிரிந்திருப்பதற்கு இருவரும் சம்ம
தித்தாலன்றி, ஒருவரைவிட்டொருவர் பிரிய
வேண்டாம்; இச்சையடக்கம் உங்களுக்கு
இல்லாமையால் சாத்தான் உங்களைத்
தூண்டிவிடாதபடி மறுபடியும் கூடி
6 வாழுங்கள். இதை நான் கட்டளையாகச்
சொல்லவில்லை, அனுமதியாகச் சொல்லு
7 கிறேன். எல்லா மனுஷரும் நான் இருக்
கிறது போலவே இருக்க விரும்புகிறேன்.
ஆகிலும், ஒருவனுக்கு ஒரு விதமாயும்,
மற்றொருவனுக்கு வேறு விதமாயும், ஒவ்
வொருவனுக்கும் கடவுளால் அருளப்பட்ட
அவனவனுக்குரிய வரம் உண்டு.
8 விவாகமில்லாதவர்களுக்கும் விதவைக
ளுக்கும் நான் சொல்லுவதாவது: நான்
இருக்கிறதுபோலவே அவர்களும் இருந்து
விட்டால், அவர்களுக்கு நல்லதுதான்.
9 ஆயினும் விரக்தராயிருக்க முடியாதிருந்
தால், அவர்கள் விவாகஞ்செய்துகொள்ள
வேண்டும். காமத்தால் எரிகிறதைவிட
10 விவாகஞ்செய்துகொள்ளுகிறது நலம். விவா
கஞ்செய்துகொண்டவர்களுக்கோ நானல்ல,
ஆண்டவர் கட்டளையிடுவதாவது: மனைவி
தன் புருஷனைவிட்டு நீங்கிப்போகக்கூடாது.
11 நீங்கிப்போனால் அவள் விவாகமில்லாமல்
இருக்கவேண்டும். அல்லது புருஷனோடு
ஒப்புரவாகவேண்டும்; புருஷனும் தன்
12 மனைவியைத் தள்ளிவிடக்கூடாது. மற்றவர்
களுக்கோ, ஆண்டவரல்ல நானே
சொல்லுவதாவது: சகோதரன் ஒருவனுக்கு
அவிசுவாசியான மனைவி இருந்து, அவள்
அவனோடு கூடிவாழச் சம்மதித்தால், அவன்
13 அவளைத் தள்ளிவிடக்கூடாது. அப்படியே,
ஒரு ஸ்திரீக்கு அவிசுவாசியான புருஷன்
இருந்து, அவன் அவளோடு கூடிவாழச்
சம்மதித்தால், அவள் அவனைத் தள்ளிவிடக்
14 கூடாது. ஏனெனில், அவிசுவாசியான
புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்
படுகிறான். அவிசுவாசியான மனைவியும்
அந்தச் சகோதரனால் பரிசுத்தமாக்கப்படு
கிறாள். மற்றப்படி உங்கள் பிள்ளைகள்
அசுத்தமாயிருப்பார்கள்; இப்பொழுதோ
15 அவர்கள் பரிசுத்தமாயிருக்கிறார்கள். ஆயி
னும், அவிசுவாசி நீங்கிப்போனால் போகட்
டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில்
சகோதரனாவது சகோதரியாவது அடிமைப்
பட்டவர்கள் அல்ல. சமாதானமாயிருக்
கும்படி கடவுள் நம்மை அழைத்திருக்கிறார்.
மனைவியே, நீ உன் புருஷனை இரட்சிப் 16
பாயோ அல்லவோ உனக்கு எப்படித்
தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை
இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்ப
டித் தெரியும்? ஆண்டவர் அவனவனுக்குப் 17
பகிர்ந்ததெப்படியோ, கடவுள் அவனவனை
அழைத்ததெப்படியோ அப்படியே அவ
னவன் நடக்கக்கடவன். எல்லாச் சபை
களிலும் இப்படியே திட்டம்பண்ணுகிறேன்.
ஒருவன் விருத்தசேதனம் பெற்றவனாய் 18
அழைக்கப்பட்டிருக்கிறானா? அவன் விருத்த
சேதனமில்லாதவனாகும்படி வகைதேட
லாகாது; ஒருவன் விருத்தசேதனமில்லாதவ
னாய் அழைக்கப்பட்டிருக்கிறானா? அவன்
விருத்தசேதனம் பெறலாகாது. விருத்த 19
சேதனமும் ஒன்றுமில்லை, விருத்தசேதன
மில்லாமையும் ஒன்றுமில்லை; கடவுளின்
கற்பனைகளைக் கைக்கொள்வதே காரியம்.
அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமை 20
யிலே நிலைத்திருக்கக்கடவன். நீ அடிமை 21
யாய் அழைக்கப்பட்டிருக்கிறாயா? கவலைப்
படாதே; நீ சுயாதீனனாகக்கூடுமானால், சுயா
தீனமடைவது நலம். ஆண்டவருக்குள் 22
அழைக்கப்பட்ட அடிமை ஆண்டவரால்
சுயாதீனனானவன்; அப்படியே சுயாதீனனாய்
அழைக்கப்பட்டவன் கிறிஸ்துவின் அடிமை.
நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள், 23
மனுஷருக்கு அடிமைகளாகவேண்டாம்.
சகோதரரே, அவனவன் தான் அழைக்கப் 24
பட்ட நிலைமையிலே கடவுள் சந்நிதியில்
நிலைத்திருக்கக்கடவன்.
கன்னிகைகளைக்குறித்து ஆண்டவரால் 25
எனக்குக் கட்டளையில்லை. ஆகிலும், நான்
உண்மையுள்ளவனாயிருக்கிறதற்கு ஆண்ட
வரால் இரக்கம் பெற்றவனாய் என் அபிப்
பிராயத்தைச் சொல்லுகிறேன். தற்காலத் 26
துன்பத்தினிமித்தம் ஒருவன் தான் இருக்
கிற நிலைமையிலேயே இருந்துவிடுவது அவ
னுக்கு நல்லதென்று எண்ணுகிறேன். நீ 27
மனைவியோடு கட்டப்பட்டிருக்கிறாயா?
அவிழ்க்கப்பட வகைதேடாதே; நீ மனைவி
யில்லாதவனாயிருக்கிறாயா? மனைவியைத்
தேடாதே. நீ விவாகஞ்செய்துகொண்டா 28
லும் பாவமல்ல; கன்னிகை விவாகஞ்செய்து
கொண்டாலும் பாவமல்ல. ஆனால் அப்
படிப்பட்டவர்கள் சரீரத்தில் உபத்திரவப்
படுவார்கள்; அதற்கு நீங்கள் தப்பவேண்டு

29 மென்றிருக்கிறேன். சகோதரரே, நான்
சொல்லுவதாவது: இனிவரும் காலம்
கொஞ்சமானபடியால் மனைவியுள்ளவர்கள்
30 இல்லாதவர்கள்போலவும், அழுகிறவர்கள்
அழாதவர்கள்போலவும், சந்தோஷப்படுகிற
வர்கள் சந்தோஷப்படாதவர்கள் போலவும்,
வாங்குகிறவர்கள் தாங்கள் வாங்கியவைகளை
31 வைத்துக்கொள்ளாதவர்கள் போலவும், இவ்
வுலகத்தை அனுபவிக்கிறவர்கள் முழுவது
மாய் அதை அனுபவியாதவர்கள் போலவும்
இருக்கவேண்டும்; இவ்வுலகத்தின் வேஷம்
32 கடந்துபோகிறது. நீங்கள் கவலையற்றவர்
களாயிருக்க விரும்புகிறேன். விவாகமில்
லாதவன் ஆண்டவருக்கு எப்படிப் பிரியமா
யிருக்கலாமென்று ஆண்டவருக்குரியவை
33 களுக்காகக் கவலைப்படுகிறான். விவாகஞ்
செய்துகொண்டவனோ தன் மனைவிக்கு எப்
படிப் பிரியமாயிருக்கலாமென்று உலகத்திற்
குரியவைகளுக்காகக் கவலைப்பட்டு இரு
34 மனமாயிருக்கிறான். புருஷனில்லாத ஸ்திரீ
யும், கன்னிகையும், சரீரத்திலும் ஆத்து
மாவிலும் பரிசுத்தமாயிருக்கும்படி ஆண்
டவருக்குரியவைகளுக்காகக் கவலைப்படு
கிறார்கள். விவாகஞ்செய்துகொண்டவளோ
தன் புருஷனுக்கு எப்படிப் பிரியமாயிருக்
கலாமென்று உலகத்திற்குரியவைகளுக்
35 காகக் கவலைப்படுகிறாள். இதை உங்கள்
நன்மைக்கென்றே சொல்லுகிறேன். உங்க
ளைக் கண்ணியில் அகப்படுத்தும்படி நான்
இதைச் சொல்லாமல், நீங்கள் நல்லொழுக்க
முள்ளவர்களாய், கருத்துச் சிதறாமல்
ஆண்டவரைப் பற்றிக்கொண்டிருக்க
வேண்டுமென்று இதைச் சொல்லுகிறேன்.
36 தன் கன்னிகை பருவங்கடந்தபின், அவள்
விஷயமாய்த் தான் செய்கிறது தகுதியல்ல
வென்று ஒருவன் நினைத்தால், அவசியம்
ஏற்பட்டால், தன் மனத்தின்படி அவன்
செய்யட்டும், அது பாவமல்ல. அவர்கள்
37 விவாகஞ்செய்வார்களாக. வேறொருவன்,
தன் இருதயத்தில் உறுதியாய் நின்று, அவ
சியத்தைக் காணாமல், தன் சுயசித்தத்தைப்
பற்றி அதிகாரமுள்ளவனாய், தன் கன்னி
கையை அப்படியே வைத்துக்கொள்ளத் தீர்
மானஞ்செய்வானானால், அவன் செய்வது
38 நல்லதே; ஆகவே, தன் கன்னிகையை விவா
கஞ்செய்துகொடுப்பவன் அப்படிச்செய்வது
நல்லது, விவாகஞ்செய்துகொடுக்காதவன்
அப்படிச் செய்வது மிகவும் நல்லது.
39 புருஷன் உயிரோடிருக்குமளவும் மனைவி
கட்டுப்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்துப்
போனாலோ தனக்கு இஷ்டமானவனை
விவாகஞ்செய்துகொள்ள விடுதலையாகிறாள்.
ஆயினும் ஆண்டவருக்குள்ளேயே விவாகஞ்
செய்துகொள்ளவேண்டும். எனினும், 40
அவள் அப்படியே இருந்துவிட்டால், அதி
கப் பாக்கியவதி என்பது என் அபிப்பிரா
யம். நானும் கடவுளின் ஆவியையுடையவ
னென்று எண்ணுகிறேன்.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட 8
வைகள் சம்பந்தமாய்: நம்மெல்லாருக்கும்
அறிவு உண்டென்று நமக்குத் தெரியும்.
அறிவு இறுமாப்பை உண்டாக்கும்,
அன்போ பக்தி விருத்தியை உண்டாக்கும்.
தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று 2
ஒருவன் எண்ணிக்கொள்வானானால், அறிய
வேண்டிய பிரகாரம் அவன் இன்னும் ஒன்
றையும் அறிந்துகொள்ளவில்லை. ஒருவன் 3
கடவுளில் அன்புகூர்ந்தால் அவன் அவரால்
அறியப்பட்டிருக்கிறான். ஆகவே, விக்கிர 4
கங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப்
புசிக்கிற விஷயத்தின் சம்பந்தமாய்: உலகத்
திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்
றும், ஒருவரேயன்றி வேறே கடவுள் இல்லை
யென்றும் நமக்குத் தெரியும். அநேக தேவர் 5
களும் ஆண்டவன்மாரும் இருக்கிறது
போல, வானத்திலாவது பூமியிலாவது
தேவர்கள் எனப்படுகிறவர்கள் இருந்தாலும்,
பிதாவாகிய ஒரே கடவுள் நமக்கு உண்டு; 6
அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது;
அவருக்கென்று நாமும் உண்டாயிருக்
கிறோம்; இயேசுகிறிஸ்து என்னும் ஒரே
ஆண்டவரும் உண்டு; அவர்மூலமாய்ச்
சகலமும் உண்டாயிருக்கிறது; அவர்மூல
மாய் நாமும் உண்டாயிருக்கிறோம்.
ஆனாலும் எல்லாருக்கும் இந்த அறிவு 7
இல்லை. சிலர் இதுவரைக்கும் விக்கிரகா
ராதனைப் பழக்கத்தால், விக்கிரகத்துக்குப்
படைக்கப்பட்டதாக மதித்துப் புசிக்கி
றார்கள்; அவர்கள் மனச்சாட்சி பலவீனமா
யிருப்பதால் அசுசிப்படுகிறது. போஜனம் 8
நம்மைக் கடவுளுக்கு உகந்தவர் ஆக்காது;
புசியாதிருப்பதினால் நமக்குக் குறைவு
மில்லை, புசிப்பதினால் நமக்கு நிறைவுமில்லை.
ஆனாலும், உங்களுக்கு இருக்கிற இந்தப் 9
பாத்தியத்தினால் பலவீனர் எவ்விதத்திலும்
தவறிவிழாதபடிக்குப் பார்த்துக்கொள்
ளுங்கள். அறிவுள்ளவனாகிய உன்னை விக் 10
கிரகக் கோவிலிலே பந்தியிருக்க ஒருவன்
கண்டால், பலவீனனாயிருக்கிற அவனு
டைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப்
படைக்கப்பட்டவைகளைப் புசிப்பதற்குத்
துணிவுகொள்ளுமல்லவா? பலவீனன் உன் 11
அறிவினால் கெட்டுப்போகிறான்; அவன்

உனக்குச் சகோதரன், அவனுக்காகவும்
12 கிறிஸ்து மரித்தாரே. சகோதரருக்கு விரோத
மாய் நீங்கள் இப்படிப் பாவஞ்செய்து, அவர்
களுடைய பலவீன மனச்சாட்சியைப் புண்
படுத்துகிறதினால் கிறிஸ்துவுக்கு விரோத
13 மாய்ப் பாவஞ்செய்கிறீர்கள். ஆதலால்,
போஜனம் என் சகோதரனை இடறிவிழச்
செய்தால், என் சகோதரன் இடறிவிழாத
படி நான் என்றைக்கும் மாம்சம் புசியாம
லிருப்பேன்.

9 நான் சுயாதீனனல்லவா? நான் அப்
போஸ்தலனல்லவா? நம்முடைய ஆண்டவ
ராகிய இயேசுவை நான் தரிசித்ததில்லையா?
ஆண்டவருக்குள் நீங்கள் என் வேலைப்பா
2 டல்லவா? நான் மற்றவர்களுக்கு அப்
போஸ்தலனல்லாதபோதிலும், உங்களுக்காகி
லும் நான் அப்போஸ்தலன்; என் அப்போஸ்
தல ஊழியத்திற்கு ஆண்டவருக்குள் நீங்
3 களே முத்திரை. என்னை விசாரிக்கிறவர்
களுக்கு நான் சொல்லும் நியாயம் இதுவே.
4 புசிக்கவும் பானம்பண்ணவும் எங்களுக்கு
5 உரிமை இல்லையா? மற்ற அப்போஸ்தலரும்
ஆண்டவரின் சகோதரரும் கேபாவும் செய்
கிறதுபோல, நாங்களும் விசுவாசியாகிய
மனைவியை எங்கும் கூட்டிக்கொண்டுபோக
6 எங்களுக்கு உரிமை இல்லையா? அல்லது,
வேலைசெய்யாமலிருப்பதற்கு எனக்கும்
7 பர்னபாவுக்குந்தானா உரிமை இல்லை? தன்
செலவில் தண்டிலே சேவிக்கிறவன் எவனா
கிலும் உண்டோ? திராட்சத்தோட்டம்
உண்டாக்கி, அதன் கனியைப் புசியாதிருப்
பவன் யார்? மந்தையை மேய்த்து அதன்
8 பாலைச் சாப்பிடாதிருப்பவன் யார்? இவை
களை மனுஷர் வழக்கப்படிதானா சொல்லு
கிறேன்? நியாயப்பிரமாணமும் இவைகளைச்
9 சொல்லுகிறதில்லையா? போரடிக்கிற
மாட்டை வாய் கட்டாதே என்று மோசே
யின் பிரமாணத்தில் எழுதியிருக்கிறதே.
கடவுள் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கி
10 றாரோ? நமக்காகத்தான் இதைச் சொல்லு
கிறாரோ? ஆம், நமக்காகவே அது எழுதி
யிருக்கிறது; ஏனெனில், உழுகிறவன் நன்
னம்பிக்கையோடு உழவேண்டும், போரடிக்
கிறவன் பங்கு கிடைக்குமென்னும் நன்னம்
11 பிக்கையோடு போரடிக்கவேண்டும். நாங்கள்
உங்களுக்கு ஆவிக்குரிய நன்மைகளை
விதைத்திருக்க, உங்கள் சரீர நன்மைகளை
12 அறுத்தால் அது பெரிய காரியமா? மற்ற
வர்கள் உங்களிடத்தில் இந்த உரிமை
கொண்டாடினால், நாங்கள் இன்னும் அதிக
மாய்க் கொண்டாடலாம் அல்லவா? அப்
படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்
திற்கு எங்களால் யாதொரு இடையூறும்
உண்டாகாதபடி, நாங்கள் இந்த உரிமை
யைக் கொண்டாடாமல் எல்லாவற்றையும்
சகிக்கிறோம். தேவாலயத்தில் ஊழியஞ் 13
செய்கிறவர்கள் ஆலயத்திற்குரியவைகளைப்
புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்
துப் பணிவிடைசெய்கிறவர்களுக்குப் பலி
பீடத்திலுள்ளவைகளில் பங்குண்டென்றும்
உங்களுக்குத் தெரியாதா? அப்படியே, சுவி 14
சேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவி
சேஷத்தினால் பிழைப்பு உண்டாகவேண்டு
மென்று ஆண்டவரும் கட்டளையிட்டிருக்
கிறார். நானோ இவற்றில் ஒன்றையும் அனு 15
பவிக்கவில்லை. என் விஷயத்திலும் இப்படி
இருக்கவேண்டுமென்று நான் இவைகளை
எழுதவில்லை. என் பெருமைபாராட்டலை
எவனும் வியர்த்தமாக்கவிடேன்—அதைப்
பார்க்கிலும் நான் மரிப்பது நல்லது. சுவி 16
சேஷத்தை நான் பிரசங்கித்துவந்தாலும்,
பெருமைபாராட்ட எனக்கு இடமில்லை;
அது என்மேல் விழுந்த கடமை. சுவிசே
ஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், ஐயோ!
எனக்குக் கேடு. மன இஷ்டத்தோடு நான் 17
இப்படிச் செய்வேனாகில் எனக்குப் பல
னுண்டு; மன இஷ்டமின்றிச் செய்தாலும்,
உக்கிராண ஊழியம் எனக்கு ஒப்புவிக்கப்
பட்டிருக்கிறதே. இப்படியிருக்க, எனக் 18
குப் பலன் என்ன? நான் சுவிசேஷத்தைப்
பிரசங்கிக்கையில், அதில் எனக்கு இருக்கும்
உரிமையைப் பாராட்டாமல் சுவிசேஷத்
தைச் செலவில்லாமல் அறிவிப்பதே எனக்
குப் பலன்.

நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனா 19
யிருந்தும், அநேகரை ஆதாயப்படுத்திக்
கொள்ளும்படிக்கு என்னையே எல்லாருக்
கும் அடிமையாக்கினேன். யூதரை ஆதாயப் 20
படுத்திக்கொள்ளும்படி யூதருக்கு யூதனைப்
போலவும், நியாயப்பிரமாணத்துக்கு உட்
பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்
படி நான் நியாயப்பிரமாணத்துக்கு உட்
படாதவனாயிருந்தும் நியாயப்பிரமாணத்
துக்கு உட்பட்டவனைப்போலவும் ஆனேன்.
கடவுளின் பிரமாணமில்லாதவனாயிராமல் 21
கிறிஸ்துவின் பிரமாணத்துக்கு உட்பட்டி
ருக்கிற நான் நியாயப்பிரமாணமில்லாதவர்
களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி அவர்
களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்
போலவும் ஆனேன். பலவீனரை ஆதாயப் 22
படுத்திக்கொள்ளும்படி பலவீனருக்குப் பல
வீனனைப்போலானேன்; எப்படியாகிலும்
சிலரை இரட்சிக்கும்படி நான் எல்லாருக்

23 கும் எல்லாமானேன். சுவிசேஷத்தில் உடன்
பங்காளியாகவேண்டுமென்று சுவிசேஷத்தி
னிமித்தம் நான் எல்லாவற்றையும் செய்
கிறேன்.
24 பந்தயச்சாலையில் ஓடுகிறவர்களெல்லா
ரும் ஓடினாலும் ஒருவனே பந்தயத்தைப்
பெறுவானென்று உங்களுக்குத் தெரியாதா?
25 பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். | பந்த
யத்திற்காகப் போராடுகிற ஒவ்வொருவனும்
எல்லாவற்றிலேயும் மிதமாயிருப்பான்.
அவர்கள் அழிவுள்ள கிரீடம் பெறுவதற்கு
அப்படிச் செய்கிறார்கள், நாமோ அழி
வில்லாத கிரீடம் பெறுவதற்கு அப்படிச்
26 செய்கிறோம். ஆதலால், நிச்சயமில்லாத
வனாக நான் ஓடேன்; ஆகாயத்தை அடிக்
27 கிறவனாகச் சிலம்பம்பண்ணேன். மற்ற
வர்களுக்குப் பிரசங்கிக்கும் நானே ஆகா
தவனென்று தள்ளப்படாதபடி என் சரீ
ரத்தை ஒடுக்கி அடிமையாக்கிக்கொள்ளு
கிறேன்.

10 இப்படியிருக்க சகோதரரே, நீங்கள் ஒரு
காரியத்தை அறியாதிருக்க எனக்கு மனம்
இல்லை. அதாவது: நம் பிதாக்களெல்லா
ரும் மேகத்தின் கீழிருந்தார்கள், எல்லாரும்
2 சமுத்திர வழியாய் நடந்துவந்தார்கள். எல்
லாரும் மோசேக்குள்ளாக மேகத்திலும்
சமுத்திரத்திலும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.
3 எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப்
4 புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞான
பானத்தைக் குடித்தார்கள். அவர்களோடு
சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக்
குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே.
5 அப்படியிருந்தும், அவர்களில் பெரும்பால
ரிடத்தில் கடவுள் பிரியமாயிருந்ததில்லை;
அவர்கள் வனாந்தரத்தில் விழுந்து மடிந்
6 தார்கள். அவர்கள் பொல்லாதவைகளை
இச்சித்ததுபோல நாமும் இச்சியாதபடி
இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயின.
7 ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்
கார்ந்து, கூத்தாட எழுந்திருந்தார்களென்று
எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர்
விக்கிரகாராதனைக்காரரானார்கள்; நீங்களும்
8 அப்படி ஆகாதிருங்கள். அவர்களில் சிலர்
வேசித்தனம்பண்ணி ஒரேநாளில் இருபத்து
மூவாயிரம்பேர் மாண்டார்கள்; அதுபோல்
நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக.
9 அவர்களில் சிலர் கர்த்தரைச் சோதித்து,
சர்ப்பங்களால் அழிக்கப்பட்டார்கள். அது
போல் நாமும் அவரைச் சோதியாதிருப்போ
10 மாக. அவர்களில் சிலர் முறுமுறுத்து,
சங்காரக்காரனால் அழிக்கப்பட்டார்கள்;

அதுபோல் நீங்களும் முறுமுறுக்கா
திருங்கள். இவைகள் திருஷ்டாந்தங்களாக 11
அவர்களுக்குச் சம்பவித்தன; யுகாந்த காலங்
களிலுள்ளவர்களாகிய நமக்கு எச்சரிக்கை
யாக எழுதப்பட்டுமிருக்கின்றன. ஆதலால், 12
தான் நிற்கிறதாக எண்ணுகிறவன் விழாத
படி ஜாக்கிரதையாயிருக்கக்கடவன். மனு 13
ஷருக்கு நேரிடும் சோதனையேயல்லாமல்
வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை.
கடவுள் உண்மையுள்ளவர்; உங்கள் திரா
ணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவ
தற்கு அவர் இடங்கொடாமல், சோதனை
யைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட
அதற்குத் தப்பும் வழியையும் உண்டாக்கு
வார்.
ஆகையால், எனக்குப் பிரியமானவர் 14
களே, விக்கிரகாராதனைக்கு விலகி ஓடுங்கள்.
உங்களை விவேகிகளென்றெண்ணிப் பேசு 15
கிறேன். நான் சொல்லுகிறதை நீங்களே
நிதானித்துப் பாருங்கள். நாம் ஆசீர்வதிக் 16
கிற ஆசீர்வாத பாத்திரம் கிறிஸ்துவின் இரத்
தத்தின் ஐக்கியமல்லவா? நாம் பிட்கும் அப்
பம் கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியமல்லவா?
நாம் எல்லாரும் ஒரே அப்பத்தில் பங்கு 17
பெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே
அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.
மாம்சத்தின்படி இஸ்ரவேலராயிருக்கிறவர் 18
களைப் பாருங்கள்; பலிகளைப் புசிக்கிறவர்கள்
பலிபீடத்தோடு ஐக்கியமாகவில்லையா? இப் 19
படியிருக்க, நான் சொல்லுகிறதென்ன? விக்
கிரகத்துக்குப் படைக்கப்பட்டது ஒரு
பொருளென்றும், விக்கிரகம் ஒரு பொரு
ளென்றும் சொல்லுகிறேனோ? இல்லை; 20
அவர்கள் படைக்கிறவைகளைக் கடவுளுக்
கல்ல பேய்களுக்கே படைக்கிறார்களென்று
சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடு
ஐக்கியமாவது எனக்குப் பிரியமில்லை.
நீங்கள் ஆண்டவரின் பாத்திரத்திலும் பேய் 21
களின் பாத்திரத்திலும் பானம்பண்ண முடி
யாது; ஆண்டவரின் பந்திக்கும் பேய்களின்
பந்திக்கும் பங்குள்ளவர்களாக முடியாதே.
நாம் ஆண்டவருக்கு எரிச்சலை மூட்டுகி 22
றோமோ? நாம் அவரிலும் பலவான்களோ?
எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு 23
உரிமை உண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியா
யிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க
எனக்கு உரிமை உண்டு, ஆகிலும் எல்லாம்
பக்திவிருத்திக்கேதுவாகாது. ஒவ்வொருவ 24
னும் தனக்கானதையல்ல பிறனுக்கானதை
நாடக்கடவன். கடையில் விற்கும் இறைச்சி 25
எதையும் வாங்கிச் சாப்பிடுங்கள்; மனச்
சாட்சியினிமித்தம் ஒன்றையும் விசாரிக்க

26 வேண்டியதில்லை. பூமியும் அதன் நிறைவும்
27 கர்த்தருடையதே. அவிசுவாசிகளில் ஒரு
வன் உங்களை விருந்துக்கு அழைக்கும்
போது, போக உங்களுக்கு மனம் இருந்தால்
மனச்சாட்சியினிமித்தம் ஒன்றையும் விசாரி
யாமல் உங்கள்முன் வைக்கிற எதையும்
28 சாப்பிடுங்கள். ஆயினும், இது விக்கிரகத்
துக்குப் படைக்கப்பட்டதென்று ஒருவன்
உங்களுக்குச் சொல்வானானால், அப்படி
அறிவித்தவனிமித்தமும் மனச்சாட்சியினி
மித்தமும் அதைச் சாப்பிடாதிருங்கள்.
29 மனச்சாட்சி என்று நான் சொல்லுவது
உன் மனச்சாட்சி அல்ல, மற்றவன் மனச்
சாட்சியே. என் சுயாதீனம் வேறொருவன்
மனச்சாட்சியினால் நியாயந்தீர்க்கப்படு
30 வானேன்? நான் நன்றியறிதலோடு சாப்
பிட்டால், நான் நன்றிசெலுத்தி அனுப
விக்கிற பொருளைப்பற்றி நான் நிந்திக்கப்
31 படுவானேன்? ஆகையால், நீங்கள் புசித்தா
லும் குடித்தாலும் எதைச் செய்தாலும்,
எல்லாவற்றையும் கடவுளின் மகிமைக்
32 கென்று செய்யுங்கள். யூதருக்கும் கிரேக்க
ருக்கும் கடவுளின் சபைக்கும் இடறலுண்
33 டாக்காதிருங்கள். நானும் அப்படியே என்
சுய நன்மையை நாடாமல் அநேகருடைய
நன்மையை நாடி, அவர்கள் இரட்சிக்கப்
படும்படி எல்லா விஷயங்களிலும் எல்லா
ருக்கும் பிரியமாய் நடந்துவருகிறேன்.

11 நான் கிறிஸ்துவைப்போல் நடக்கிற
படியே நீங்களும் என்னைப்போல் நடந்து
கொள்ளுங்கள்.
2 எல்லாவற்றிலும் நீங்கள் என்னை நினைத்
துக்கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்த
படி, ஒப்புவித்தவைகளை நீங்கள் கைக்
கொண்டு வருகிறதால் உங்களைப் புகழு
3 கிறேன். ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து
தலை, ஸ்திரீக்குப் புருஷன் தலை, கிறிஸ்துவுக்
குக் கடவுள் தலை என்பதை நீங்கள் அறிய
4 வேண்டுமென்று விரும்புகிறேன். ஜெபம்
பண்ணும்போதாவது தீர்க்கதரிசனஞ்சொல்
லும்போதாவது தன் தலையை மூடிக்கொண்
டிருக்கும் எந்தப் புருஷனும் தன் தலையைக்
5 கனவீனப்படுத்துகிறான். ஜெபம்பண்ணும்
போதாவது தீர்க்கதரிசனஞ்சொல்லும்
போதாவது தன் தலையை மூடிக்கொள்ளா
திருக்கும் எந்த ஸ்திரீயும் தன் தலையைக்
கனவீனப்படுத்துகிறாள்; அது அவள் தலை
6 சிரைக்கப்பட்டதற்குச் சரியாகுமே. ஒரு
ஸ்திரீ முக்காடிட்டுக்கொள்ளாவிட்டால் தலை
மயிரைக் கத்தரித்துப்போடட்டும்; தலை
மயிர் கத்தரிக்கப்படுவதும் சிரைக்கப்படுவ
தும் ஸ்திரீக்குக் கனவீனமென்றால் முக்கா
டிட்டுக்கொண்டிருக்கட்டும். புருஷன் 7
கடவுளின் சாயலும் மகிமையுமாயிருக்கிற
படியால், தன் தலையை மூடிக்கொள்ள
வேண்டுவதில்லை; ஸ்திரீயானவளோ புருஷ
னின் மகிமையாயிருக்கிறாள். புருஷன் 8
ஸ்திரீயிலிருந்து தோன்றினவன் அல்ல,
ஸ்திரீயே புருஷனிலிருந்து தோன்றினவள்.
புருஷன் ஸ்திரீக்காகச் சிருஷ்டிக்கப்பட்ட 9
வன் அல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச்
சிருஷ்டிக்கப்பட்டவள். ஆகையால், 10
தூதர்களினிமித்தம் ஸ்திரீயானவள் தலையின்
மேல் முக்காடிட்டுக்கொள்ளவேண்டும்.
ஆயினும், ஆண்டவருக்குள் புருஷனில் 11
லாமல் ஸ்திரீயுமில்லை, ஸ்திரீயில்லாமல்
புருஷனுமில்லை. ஸ்திரீயானவள் புருஷனி 12
லிருந்து தோன்றினதுபோல, புருஷனும்
ஸ்திரீயினால் தோன்றுகிறான்; சகலமும்
கடவுளால் உண்டானது. கடவுளை நோக்கி 13
ஜெபம்பண்ணுகையில் ஸ்திரீ முக்காடிட்டுக்
கொள்ளாமலிருப்பது தகுமோவென்று உங்
களுக்குள்ளே நிதானித்துக்கொள்ளுங்கள்.
புருஷன் தலைமயிரை நீளமாய் வளர்ப்பது 14
அவனுக்குக் கனவீனமென்றும், ஸ்திரீ தலை 15
மயிரை நீளமாய் வளர்ப்பது அவளுக்கு
மகிமையென்றும் இயற்கையாகவே உங்க
ளுக்குத் தெரியவில்லையா? தலைமயிர் அவ
ளுக்கு முக்காடாகக் கொடுக்கப்பட்டிருக்
கிறது. ஆகிலும் ஒருவன் வாக்குவாதஞ் 16
செய்ய மனமாயிருந்தால், எங்களுக்கும்
கடவுளின் சபைகளுக்கும் அப்படிப்பட்ட
வழக்கமில்லையென்று அவன் அறிந்துகொள்
ளக்கடவன்.

நான் சற்பிக்கப்போகிற விஷயத்தில் 17
உங்களைப் புகழேன்; நீங்கள் கூடிவருவது
நன்மைக்கல்ல தீமைக்கேதுவாயிருக்கிறது.
முதலாவது, நீங்கள் சபைகூடும்போது, 18
உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்
விப்படுகிறேன்; அதை ஒருவாறு நம்பு
கிறேன். உங்களில் உத்தமர் இன்னாரென்று 19
வெளியாகும்படிக்கு, மதப்பிரிவுகளும் உங்
களுக்குள் உண்டாயிருக்கவேண்டியதே.
நீங்கள் ஒன்றாய்க் கூடிவரும்போது, நீங்கள் 20
புசிக்கிறது ஆண்டவருடைய இராப்போஜ
னம் அல்ல. நீங்கள் புசிக்கையில் அவனவன் 21
தன் தன் சொந்தப் போஜனத்தை முந்திச்
சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான்,
ஒருவன் வெறியாயிருக்கிறான். புசிக்கிறதற் 22
கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள்
இல்லையா? கடவுளின் சபையை அசட்டை
பண்ணுவதுமல்லாமல், இல்லாதவர்களையும்
அவமானப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு

நான் என்ன சொல்லுவேன்? உங்களைப்
புகழ்வேனோ? இதைக்குறித்து உங்களைப்
23 புகழேன். நான் உங்களுக்கு ஒப்புவித்ததை
ஆண்டவரிடமிருந்தே பெற்றுக்கொண்
டேன். அதாவது: ஆண்டவராகிய இயேசு
தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று
24 இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, நன்றி
செலுத்தி, அதைப் பிட்டு: இது உங்களுக்
காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய
சரீரம்; என்னை நினைவுகூரும்படி இதைச்
25 செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணின
பின்பு அவர் அப்படியே பாத்திரத்தையும்
எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினா
லாகிய புதிய உடன்படிக்கை; இதைப்
பானம்பண்ணும்போதெல்லாம் என்னை
நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்
26 றார். ஏனெனில், நீங்கள் இந்த அப்பத்
தைப் புசித்து, பாத்திரத்தில் பானம்பண்
ணும்போதெல்லாம், ஆண்டவர் வருமளவும்
அவர் மரணத்தைப் பிரஸ்தாபம்பண்ணு
கிறீர்கள்.
27 இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்
ஆண்டவரின் அப்பத்தைப் புசித்து அவர்
பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன்
ஆண்டவரின் சரீரத்தையும் இரத்தத்தை
28 யும் குறித்துக் குற்றவாளியாவான். ஒருவன்
தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்
பத்தில் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம்
29 பண்ணக்கடவன். ஏனெனில், போஜன
பானம்பண்ணுகிறவன் ஆண்டவரின் சரீரம்
இன்னதென்று நிதானித்து அறியாதிருப்பா
னானால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்
படி போஜனபானம்பண்ணுகிறவனாவான்.
30 இதினிமித்தம் உங்களில் அநேகர் பலவீன
ரும் வியாதிக்காரருமாயிருக்கிறார்கள்; பலர்
31 நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை
நாமே நிதானித்தறிந்தால் நாம் நியாயந்
32 தீர்க்கப்படாதிருப்போம். நாம் நியாயந்
தீர்க்கப்படும்போதோ உலகத்தோடு ஆக்
கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடி ஆண்
33 டவரால் சிட்சிக்கப்படுகிறோம். ஆகையால்,
என் சகோதரரே, நீங்கள் போஜனம்பண்
ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒரு
34 வர் காத்திருங்கள். நீங்கள் ஆக்கினைக்கேது
வாகக் கூடிவராதபடி, ஒருவன் பசியா
யிருந்தால் அவன் வீட்டிலே சாப்பிடக்
கடவன். நான் வரும்போது மற்றக் காரியங்
களைத் திட்டம்பண்ணுவேன்.

12 அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய
வரங்கள் சம்பந்தமாய் நீங்கள் அறிவில்லா
திருக்க எனக்கு மனமில்லை. நீங்கள் புற 2
மதஸ்தராயிருந்தபோது, மனம் ஏவினபடி,
ஊமையான விக்கிரகங்களை வணங்கும்படி
நடத்தப்பட்டீர்களென்பது உங்களுக்குத்
தெரியும். ஆதலால், கடவுளின் ஆவியி 3
னாலே பேசுகிற எவனும் இயேசு சாபத்துக்
குட்பட்டவன் என்று சொல்லமாட்டா
னெனவும், பரிசுத்த ஆவியினாலேயன்றி
இயேசு ஆண்டவர் என்று ஒருவனும்
சொல்லமுடியாதெனவும் உங்களுக்குத்
தெரிவிக்கிறேன்.
வெவ்வேறான வரங்கள் உண்டு, ஆவி 4
யானவர் ஒருவரே. வெவ்வேறான ஊழி 5
யங்கள் உண்டு, ஆண்டவர் ஒருவரே. வெவ் 6
வேறான திவ்ய கிரியைகள் உண்டு, எல்லா
ருக்குள்ளும் எல்லாக் கிரியைகளையும் நடப்
பிக்கிற கடவுள் ஒருவரே. ஆவியின் அனுக் 7
கிரகம் பொதுப் பிரயோஜனத்திற்கென்று
அவனவனுக்கு அருளப்படுகிறது. எப்படி 8
யெனில், ஒருவனுக்கு ஆவியினால் ஞான
வாக்கு வரமும், மற்றொருவனுக்கு அதே
ஆவியின் மூலமாய் விவேக வாக்கு வரமும்,
வேறொருவனுக்கு அதே ஆவியினால் விசு 9
வாசமும், மற்றொருவனுக்கு அந்த ஒரே
ஆவியினால் பிணிதீர்க்கும் வரங்களும்,
மற்றொருவனுக்கு வல்ல செயல்களை நடப் 10
பிக்கும் சக்தியும், மற்றொருவனுக்குத் தீர்க்க
தரிசன வரமும், மற்றொருவனுக்கு ஆவி
களைப் பகுத்தறியும் திறமையும், வேறொருவ
னுக்குப் பலவித [1]நாவு வரங்களும், மற்
றொருவனுக்கு அவற்றை விளங்கப்பண்
ணும் திறமையும் அருளப்படுகின்றன. அந்த 11
ஒரே ஆவியானவரே தமது சித்தத்தின்படி
அவனவனுக்கு வெவ்வேறாகப் பகிர்ந்து
கொடுத்து, இவை எல்லாவற்றையும் நடப்
பித்துவருகிறார்.
சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் 12
அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்
லாம் அநேகமாயிருந்தும் சரீரம் எப்படி
ஒன்றோ அப்படியே கிறிஸ்துவும் ஒன்று.
நாம் யூதராயினும் கிரேக்காராயினும் அடிமை 13
களாயினும் சுயாதீனராயினும், எல்லாரும்
ஒரே ஆவியினால் ஒரே சரீரத்திற்குள்ளாக
ஞானஸ்நானம் பெற்றோம். ஒரே ஆவியில்
தாகந்தீர்க்கப்பட்டோம். சரீரம் ஒரே 14
அவயவம் அல்ல, அநேக அவயவங்கள்
அடங்கியது. காலானது, நான் கையல்லாத 15
படியினால் நான் சரீரத்தைச் சேர்ந்ததல்ல
வென்று சொல்லுமானால், அதனால் அது

[1] பரவசப் பேச்சுகள் என்று இப்பதம் பொருள்படும். அப். 10: 45; 19: 6 பார்க்க.

16 சரீரத்தைச் சேராததாகுமோ? காதானது,
நான் கண்ணல்லாதபடியினால் நான் சரீரத்
தைச் சேர்ந்ததல்லவென்று சொல்லுமானால்,
அதனால் அது சரீரத்தைச் சேராததாகுமோ?
17 சரீரம் முழுவதும் கண்ணானால், செவி
எங்கே? முழுவதும் செவியானால், மோப்பம்
18 எங்கே? கடவுள் தமது சித்தப்படி அவய
வங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்தில்
19 அமைத்துவைத்தார். அவையெல்லாம் ஒரே
20 அவயவமாயிருந்தால் சரீரம் எங்கே? உள்ள
படி, அவயவங்கள் அநேகம், சரீரம் ஒன்று.
21 கண் கையைப் பார்த்து: நீ எனக்கு
வேண்டுவதில்லை என்றும், தலை கால்களைப்
பார்த்து: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லை
22 என்றும் சொல்லமுடியாது. அவயவங்
களில் பலவீனமாய்க் காணப்படுகிறவை
23 களே மிகவும் அவசியமானவைகள். மேலும்,
சரீரத்தில் கனவீனமாய்க் காணப்படுகிறவை
களுக்கே அதிகக் கனத்தைக் கொடுக்கிறோம்;
நம் சரீரத்தில் சவுந்தரியமில்லாதவை அதிக
24 அலங்காரம் பெறும். சவுந்தரியமுள்ளவை
களுக்கு அலங்காரம் வேண்டியதில்லை.
கனத்தில் குறைவுள்ளதற்கு அதிகக் கனத்
தைக் கொடுத்து, கடவுள் இவ்விதமாய்ச்
25 சரீரத்தை அமைத்திருக்கிறார். சரீரத்தில்
பிரிவினையுண்டாகாமல் அவயவங்கள் ஒன்
றைக்குறித்து ஒன்று கவலைகொள்ளும்படி
26 இப்படிச் செய்திருக்கிறார். ஒரு அவயவம்
பாடுபட்டால் எல்லா அவயவங்களும்
கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்
பட்டால் எல்லா அவயவங்களும் கூடச்
சந்தோஷப்படும்.
27 நீங்கள் கிறிஸ்துவின் சரீரம், தனித்
28 தனியே அவயவங்கள். முதலாவது அப்
போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்க
தரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும்,
பின்பு வல்லசெயல்களையும், பின்பு குண
மாக்கும் வரங்களையும், உபகார ஊழியங்
களையும், ஆளுகை வரங்களையும், பலவித
நாவு வரங்களையும் கடவுள் சபையிலே
29 ஏற்படுத்தினார். எல்லாரும் அப்போஸ்
தலரோ? எல்லாரும் தீர்க்கதரிசிகளோ?
எல்லாரும் போதகர்களோ? எல்லாரும்
30 வல்ல செயல்களைச் செய்கிறவர்களோ? எல்
லாருக்கும் பிணிதீர்க்கும் வரங்கள்
உண்டோ? எல்லாரும் நாவுகளால் பேசு
கிறார்களோ? எல்லாரும் அப்பேச்சுகளை
31 விளங்கச் செய்கிறார்களோ? மேன்மையான
வரங்களை ஆவலாய் நாடுங்கள். அதிக
மேன்மையான வழியையும் உங்களுக்குக்
காண்பிக்கிறேன்.

நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் 13
பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கு
இராவிட்டால், சத்தமிடும் வெண்கலமும்
ஓசையிடும் கைத்தாளமுமாயிருப்பேன்.
நான் தீர்க்கதரிசன வரத்தையுடையவனா 2
யிருந்து, சகல இரகசியங்களையும் சகல
அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்
கும் சகல விசுவாசமும் உள்ளவனாயிருந்
தாலும், அன்பு எனக்கு இராவிட்டால்,
நான் ஒன்றுமில்லை. எனக்குள்ள யாவற்றை 3
யும் நான் அன்னதானம் பண்ணினாலும்,
சுட்டெரிப்பதற்கு என் சரீரத்தை ஒப்புக்
கொடுத்தாலும், அன்பு எனக்கு இராவிட்
டால், எனக்குப் பிரயோஜனம் ஒன்று
மில்லை.

அன்பு நீடிய சாந்தமுள்ளது, அன்பு 4
தயாளமுள்ளது, பொறாமை கொள்ளாது,
அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பா
யிராது, அயோக்கியமானதைச் செய்யாது, 5
தனக்கானதை நாடாது, கடுங்கோபங்கொள்
ளாது, குற்றத்தைப் பாராட்டாது, | அநியா 6
யத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தோடு
சந்தோஷப்படும்; சகலத்தையும் சகிக்கும், 7
சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்திலும்
நன்னம்பிக்கைகொள்ளும், சகலத்தையும்
பொறுக்கும்.

அன்பு ஒருகாலும் அழியாது. தீர்க்க 8
தரிசனங்களானாலும் ஒழிந்துபோம், நாவு
வரங்களானாலும் ஓய்ந்துபோம், அறிவானா
லும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு 9
குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ்
சொல்லுவதும் குறைவுள்ளது. நிறைவா 10
னது வரும்போதோ குறைவானது ஒழிந்து
போம். நான் குழந்தையாயிருந்தபோது 11
குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தை
யைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்
போல யோசித்தேன்; நான் பெரியவனான
போது குழந்தைக்குரியவைகளை ஒழித்து
விட்டேன். இப்பொழுது கண்ணாடி 12
யிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்
பொழுதோ முகமுகமாய்ப் பார்ப்போம்;
இப்பொழுது என் அறிவு குறைவுள்ளது,
அப்பொழுதோ நான் அறியப்பட்டிருக்கிற
படியே அறிந்துகொள்ளுவேன். இப் 13
பொழுது, விசுவாசம் நன்னம்பிக்கை அன்பு
இம்மூன்றும் நிலைத்திருக்கின்றன; இவை
களில் அன்பே பெரியது.

அன்பை நாடுங்கள்; ஆவிக்குரிய வரங் 14
களைத் தேடுங்கள், விசேஷமாய்த் தீர்க்க
தரிசன வரத்தை ஆவலாய்த் தேடுங்கள்.
நாவு வரத்தால் பேசுகிறவன் மனுஷரோ 2

டல்ல, கடவுளோடே பேசுகிறான். அவன்
ஆவியினால் இரகசியங்களைப் பேசுகிறபடி
யால், அவன் பேசுவது ஒருவனுக்கும்
3 விளங்காது. தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற
வனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும் ஆறு
தலும் உற்சாகமும் உண்டாகும்படி பேசு
4 கிறான். நாவுவரத்தால் பேசுகிறவன்
தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசு
கிறான்; தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனோ
சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகச்
5 சொல்லுகிறான். நீங்களெல்லாரும் நாவு
களால்பேசவேண்டுமென்று விரும்புகிறேன்;
அதிலும் அதிகமாய், நீங்கள் தீர்க்கதரிசனஞ்
சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று
விரும்புகிறேன். நாவுகளால் பேசுகிறவன்
சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகக்
கருத்தை விளங்கச் செய்யாவிட்டால், தீர்க்க
தரிசனஞ்சொல்லுகிறவன் அவனிலும்
பெரியவன்.
6 இப்போதும், சகோதரரே, நான்
உங்களிடம் நாவுகளால் பேசுகிறவனாய்
வந்து, வெளிப்படுத்தல், அறிவு, தீர்க்க
தரிசனம், போதனை இவற்றில் ஒன்றை
யாவது உங்களோடு பேசாவிட்டால், என்
னால் உங்களுக்குப் பிரயோஜனமென்ன?
7 புல்லாங்குழல் சுரமண்டலம் முதலிய
சத்தமிடும் உயிரற்ற வாத்தியங்கள் தொனி
களில் வித்தியாசங்காட்டாவிட்டால், குழ
லால் ஊதுவதும் சுரமண்டலத்தால் வாசிப்
பதும் இன்னதென்று எப்படித் தெரியும்?
8 அந்தப்படி, எக்காளம் விளங்காத சத்த
மிட்டால் எவன் யுத்தத்திற்கு ஆயத்தம்
9 பண்ணுவான்? இப்படியே நீங்களும் விளங்
கக்கூடிய வார்த்தையை நாவினால் வசனியா
விட்டால், பேசுவது இன்னதென்று எப்
படித் தெரியும்? ஆகாயத்தில் பேசுகிறவர்
10 களாயிருப்பீர்களே. உலகத்தில் எத்
தனையோ விதமான சத்தங்கள் உண்டு;
அவற்றில் ஒன்றும் அர்த்தமில்லாததல்ல.
11 சத்தத்தின் கருத்தை நான் அறியாமலிருந்
தால் பேசுகிறவனுக்கு நான் அன்னிய
னாவேன், பேசுகிறவனும் எனக்கு அன்னிய
12 னாவான். அப்படியே, நீங்கள் ஆவிக்குரிய
வரங்களை ஆவலாய் நாடுகிறபடியால், சபைக்
குப் பக்திவிருத்தி உண்டாவதற்கு அவை
களில் தேறும்படி நாடுங்கள்.
13 ஆகையால், நாவுவரத்தால் பேசுகிறவன்
அதை விளங்கச்செய்யும் வரத்துக்காக
14 ஜெபஞ்செய்யக்கடவன். நான் நாவுவரத்தால்
ஜெபஞ்செய்வேனாகில், என் ஆவி ஜெபஞ்
செய்யும், என் மனமோ பயனற்றதாயிருக்
15 கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவ
தென்ன? நான் ஆவியில் ஜெபஞ்செய்வேன்,
மனத்திலும் ஜெபஞ்செய்வேன்; நான் ஆவியில்
பாடுவேன், மனத்திலும் பாடுவேன். இல்லா 16
விட்டால், நீ ஆவியில் ஸ்தோத்திரம் செய்யும்
போது, சபையில் உட்கார்ந்திருக்கும் சாமா
னிய மனுஷன் உன் ஸ்தோத்திர ஜெபத்
திற்கு ஆமென் என்று எப்படிச் சொல்லு
வான்? நீ பேசுகிறது இன்னதென்று அவ
னுக்குத் தெரியாதே. நீ நன்றாய் ஸ்தோத் 17
திரஞ்செய்கிறாய், மற்றவனோ பக்திவிருத்தி
அடையாதிருப்பான். உங்களெல்லாரிலும் 18
நான் நாவுகளால் அதிகமாய்ப் பேசுகிறேன்,
இதற்காகக் கடவுளுக்கு ஸ்தோத்திரஞ்செய்
கிறேன். ஆயினும், நான் சபையிலே பதி 19
னாயிரம் வார்த்தைகளை நாவுவரத்தால் பேசுவ
தைப்பார்க்கிலும் மற்றவர்களுக்குப் போதனை
யாக என் அறிவோடு ஐந்து வார்த்தைகளைப்
பேசுவதே எனக்கு அதிக விருப்பம்.
சகோதரரே, புத்தியிலே குழந்தைகளாகா 20
மல், துர்க்குணத்திலே குழந்தைகளும் புத்தி
யில் பெரியவர்களும் ஆகுங்கள்.
மறுபாஷைக்காரராலும் மற்றவர்கள் 21
உதடுகளாலும்
இந்த ஜனத்தோடு பேசுவேன்;
அப்படிப் பேசினாலும் அவர்கள் எனக்
குச் செவிகொடுப்பதில்லை
என்று கர்த்தர் சொல்லுகிறார்
என்பதாக நியாயப்பிரமாணத்தில் எழுதி
யிருக்கிறது. ஆகவே, நாவுகளால் பேசும் 22
வரம் விசுவாசிகளுக்கல்ல அவிசுவாசி
களுக்கே அடையாளம்; தீர்க்கதரிசனமோ
அவிசுவாசிகளுக்கல்ல விசுவாசிகளுக்கே
அடையாளம். ஆகையால், சபையாரெல் 23
லாரும் ஒன்றாய்க் கூடிவரும்போது, எல்லா
ரும் நாவுகளால் பேசிக்கொள்ளுவார்களா
னால் சாமானிய மனுஷராகிலும் அவிசு
வாசிகளாகிலும் உள்ளே வந்தால் உங்களைப்
பைத்தியம்பிடித்தவர்களென்று சொல்லுவ
தில்லையா? எல்லாரும் தீர்க்கதரிசனஞ் 24
சொல்வார்களானால், அவிசுவாசியாகிலும்
சாமானிய மனுஷனாகிலும் உள்ளே வரும்
போது, அவன் எல்லாராலும் உணர்த்தப்
பட்டு, எல்லாராலும் நிதானிக்கப்படுவான்.
அவன் இருதய அந்தரங்கங்கள் வெளியா 25
கும்; அவன் முகங்குப்புற விழுந்து கடவு
ளைப் பணிந்துகொண்டு: மெய்யாகவே கடவுள்
உங்களுக்குள் இருக்கிறார் என்று அறிக்கை
யிடுவான்.
இப்படியிருக்க, சகோதரரே, முடி 26
வென்ன? நீங்கள் கூடிவரும்போது, ஒருவன்
சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம்
பண்ணுகிறான், ஒருவன் இரகசியத்தை

வெளிப்படுத்துகிறான், ஒருவன் நாவுவரத்
தால் பேசுகிறான், ஒருவன் அதை விளங்கப்
பண்ணுகிறான். எல்லாம் பக்திவிருத்திக்
27 கேதுவாகச் செய்யப்படக்கடவது. யாரா
வது நாவுவரத்தால் பேசுகிறதுண்டானால்,
இரண்டுபேர், மிஞ்சினால் மூன்றுபேர், பேச
லாம், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேச
வேண்டும், ஒருவன் விளங்கச்செய்ய
28 வேண்டும். விளங்கச்செய்கிறவனில்லா
விட்டால் சபையில் பேசாமல், அவனவன்
தனக்கும் கடவுளுக்குமே பேசக்கடவன்.
29 தீர்க்கதரிசிகள் இருவரோ மூவரோ பேச
லாம், மற்றவர்கள் நிதானிக்கவேண்டும்.
30 அங்கே உட்கார்ந்திருக்கிற மற்றொருவனுக்கு
ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், முந்
திப் பேசினவன் பேசாமலிருக்கவேண்டும்.
31 எல்லாருக்கும் அறிவும் ஆறுதலும் உண்
டாவதற்கேதுவாய், நீங்கள் அனைவரும் ஒவ்
வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்ல
32 இடமுண்டு. தீர்க்கதரிசிகளின் ஆவிகள்
தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கின்றன.
33 கடவுள் கலகத்திற்கல்ல, சமாதானத்திற்கே
காரணர்.

பரிசுத்தவான்களின் சகல சபைகளிலும்
34 நடக்கிறபடியே, ஸ்திரீகள் சபைகளில்
பேசாமலிருக்கவேண்டும்; பேச அவர்க
ளுக்கு உத்தரவில்லை, அவர்கள் அடங்கி
யிருக்கவேண்டும். நியாயப்பிரமாணமும்
35 அப்படியே சொல்லுகிறது. அவர்கள் எதை
யாவது கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்
டிலே தங்கள் புருஷரிடம் கேட்டறிந்து
கொள்ளலாம்; சபையில் ஸ்திரீ பேசுவது
36 அவளுக்கு அவமானம். கடவுளின் வசனம்
உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது? அது
உங்களிடத்துக்கு மாத்திரமா வந்து சேர்ந்
தது?

37 ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசியென்றாவது
ஆவிக்குரியவனென்றாவது எண்ணினால்,
நான் உங்களுக்கு எழுதுகிறவைகள்
ஆண்டவரின் கட்டளை என்பதை அவன்
38 அறிந்துகொள்வானாக. ஒருவன் அறிந்து
கொள்ளாவிட்டால், அவனும் அறியப்படா
திருப்பான்.

39 இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரி
சனஞ்சொல்ல ஆவலாய் நாடுங்கள், நாவுக
ளால் பேசுவதற்கும் தடைபண்ணாதிருங்கள்.
40 சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும்
செய்யப்படக்கடவது.

15 சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்
கித்த சுவிசேஷத்தையே உங்களுக்குத் தெரி
யப்படுத்துகிறேன்; அந்தச் சுவிசேஷத்தை
நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள், அதிலே
நிலைத்துமிருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் 2
பிரசங்கித்த வார்த்தையை நீங்கள் உறுதி
யாய்ப் பற்றிக்கொண்டிருந்தால், அதனால்
நீங்கள் இரட்சிக்கப்படுகிறீர்கள். மற்றப்படி
நீங்கள் விசுவாசித்தது விருதாவென்று
சொல்லவேண்டியதாகுமே. நான் பெற்றுக் 3
கொண்டதும் உங்களுக்குப் பிரதானமாக
ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்து
வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களி
னிமித்தம் மரித்து, அடக்கம்பண்ணப் 4
பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்
நாள் உயிரோடெழுப்பப்பட்டார். கேபா 5
வுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசன
மானார். அதன்பின்பு அவர் ஐந்நூறு 6
பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே
வேளையில் தரிசனமானார்; அவர்களில்
பெரும்பாலார் இந்நாள்வரைக்கும் இருக்
கிறார்கள், சிலர் மாத்திரம் நித்திரையடைந்
தார்கள். பின்பு யாக்கோபுக்கும் அப்பால் 7
அப்போஸ்தலரெல்லாருக்கும் தரிசன
மானார். எல்லாருக்கும் கடைசியில், அகா 8
லப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்.
நான் அப்போஸ்தலரில் சிறியவன்; கடவு 9
ளின் சபையைத் துன்பப்படுத்தினபடியால்,
அப்போஸ்தலனென்று பேர் பெறுவதற்கும்
நான் தகுந்தவனல்ல. நான் இப்போது 10
அடைந்துள்ள நிலையிலிருப்பது கடவுளின்
கிருபையினாலேயே; அவர் எனக்கு அருளிய
கிருபை விருதாவாய்ப் போகவில்லை. அவர்க
ளெல்லாரிலும் நான் அதிகமாய் உழைத்
தேன்; ஆகிலும், உழைத்தது நானல்ல,
என்னோடிருக்கும் கடவுளின் கிருபையே.
ஆகவே, நானாகிலும் அவர்களாகிலும், இப் 11
படியே பிரசங்கித்துவருகிறோம், இப்படியே
நீங்கள் விசுவாசித்தீர்கள்.

மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருக் 12
கிறாரென்று கிறிஸ்து பிரசங்கிக்கப்பட்
டிருக்க, மரித்தோரின் உயிர்த்தெழுதல்
இல்லை என்று உங்களில் சிலர் சொல்வ
தெப்படி? மரித்தோரின் உயிர்த்தெழுதல் 13
இல்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுப்பப்பட
வில்லை. கிறிஸ்து எழுப்பப்படவில்லையென் 14
றால், எங்கள் பிரசங்கம் விருதா, உங்கள்
விசுவாசமும் விருதா. மரித்தோர் எழுப்பப் 15
படவில்லையென்றால், கடவுள் எழுப்பாத
கிறிஸ்துவை அவர் எழுப்பினாரென்று
நாங்கள் கடவுளைப்பற்றிச் சாட்சி சொன்ன
தினால் அவர் விஷயமாய்ப் பொய்ச்சாட்சி
சொல்லுகிறவர்களாகக் காணப்படுவோமே.
மரித்தோர் எழுப்பப்படாவிட்டால் கிறிஸ்து 16
வும் எழுப்பப்படவில்லை. கிறிஸ்து எழுப் 17

பப்படாவிட்டால் உங்கள் விசுவாசம் வீணா
யிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்
18 களில் இருக்கிறவர்களாவீர்கள்; கிறிஸ்து
வுக்குள் நித்திரையடைந்தவர்கள் அழிந்து
19 போனார்களே. இம்மைக்கென்று மாத்திரம்
நாம் கிறிஸ்துவில் நம்பிக்கைகொண்ட
வர்களானால் எல்லா மனுஷரிலும் நாம்
பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்.
20 அப்படி அல்லவே, கிறிஸ்து மரித்தோரி
லிருந்து எழுப்பப்பட்டிருக்கிறார்; நித்திரை
யடைந்தவர்களில் முதற்பலன் அவரே.
21 மனுஷனால் மரணம் உண்டானதுபோல,
மரித்தோரின் உயிர்த்தெழுதலும் மனுஷ
22 னால் உண்டானது. ஆதாமுக்குள் எல்லா
ரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்
23 லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவன
வன் தன்தன் வரிசையில் உயிர்ப்பிக்கப்படு
வான்; முதற்பலனானவர் கிறிஸ்து, பின்பு
அவருடைய வருகையில் அவருடைய
24 வர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அப்பால்,
சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்
தையும் வல்லமையையும் அவர் ஒழித்து,
கடவுளும் பிதாவுமாயிருக்கிறவருக்கு
ராஜ்யத்தை ஒப்புக்கொடுக்கும்போது முடிவு
25 வரும். சகல சத்துருக்களையும் தமது பாதத்
தின் கீழ்ப் போடும்வரைக்கும் அவர்
26 அரசாளவேண்டியது. ஒழிக்கப்படும் கடை
27 சிச் சத்துரு மரணம். யாவற்றையும் அவ
ருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினாரே;
ஆகிலும், எல்லாம் அவருக்குக் கீழ்ப்படுத்
தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது,
யாவற்றையும் அவருக்குக் கீழ்ப்படுத்தின
வர் தாமே கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது
28 தெளிவு. எல்லாம் அவருக்குக் கீழ்ப்பட்
டிருக்கும்போது, கடவுளே எல்லாரிலும்
எல்லாமாயிருப்பதற்கு, எல்லாவற்றையும்
தமக்குக் கீழ்ப்படுத்தினவருக்குக் குமாரன்
தாமும் கீழ்ப்பட்டிருப்பார்.
29 இல்லாவிட்டால், மரித்தவர்களுக்காக
ஞானஸ்நானம்பெறுகிறவர்கள் என்ன செய்
வார்கள்? மரித்தோர் எழுப்பப்படுகிறதில்லை
யென்றால், அவர்களுக்காக ஞானஸ்நானம்
30 பெறுவானேன்? நாங்கள் எந்நேரமும்
பிராண அபாயத்துக்கு உட்படுவானேன்?
31 நான் அனுதினமும் சாகிறேன்; சகோதரரே,
நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து
இயேசுவில் உங்களைக்குறித்து நான் பாராட்டு
கிற பெருமையைக்கொண்டு இதைச் சத்திய
32 மாய்ச் சொல்லுகிறேன். நான் வெறும்
மனிதனாக எபேசுவில் துஷ்டமிருகங்க
ளோடு போராடினேனாகில் அதனால் எனக்கு
லாபமென்ன? மரித்தோர் எழுப்பப்படா
விட்டால்,

புசிப்போம் குடிப்போம்
நாளைக்குச் சாவோம்

எனலாமே. | மோசம்போகாதிருங்கள். துர்ச் 33
சகவாசம் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்.
நியாயமானபடி தெளிவடைந்து, பாவஞ் 34
செய்யாதிருங்கள். சிலர் கடவுளைப்பற்றிய
அறிவில்லாதிருக்கிறார்களே. உங்களுக்கு
வெட்கமுண்டாகும்படி இதைச் சொல்லு
கிறேன்.
ஆகிலும், மரித்தோர் எப்படி எழுப்பப் 35
படுவார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே
வருவார்களென்று ஒருவன் கேட்பான். மதி 36
கேடனே, நீ விதைக்கிற விதை செத்தா
லொழிய உயிர்பெறமாட்டாதே. இனி 37
விளையப்போகும் [1]மேனியை நீ விதைக்கா
மல், கோதுமையின் வெறும் விதையையாகி
லும், மற்றொரு விதையையாகிலும் விதைக்
கிறாய். கடவுள் தாம் சித்தங்கொண்ட 38
படியே அதற்கு மேனியைக் கொடுக்கிறார்;
ஒவ்வொரு வகை விதைக்கும் அததற்குரிய
மேனியையே கொடுக்கிறார். எல்லா மாம்ச 39
மும் ஒரேவித மாம்சமல்ல; மனுஷர் மாம்சம்
வேறே, மிருகங்கள் மாம்சம் வேறே,
பறவைகள் மாம்சம் வேறே, மீன்கள் மாம்
சம் வேறே. வானத்துக்குரிய மேனிகளும் 40
உண்டு, பூமிக்குரிய மேனிகளும் உண்டு;
வானத்துக்குரிய மேனிகளின் மகிமை
வேறே, பூமிக்குரிய மேனிகளின் மகிமை
வேறே; சூரியனின் மகிமை வேறே, சந்திர 41
னின் மகிமை வேறே, நட்சத்திரங்களின்
மகிமை வேறே; நட்சத்திரத்துக்கு நட்சத்
திரம் மகிமையிலே வித்தியாசமானது.
மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப் 42
படியே இருக்கும். அழிவில் விதைக்கப்
படும், அழிவின்மையில் எழுப்பப்படும்.
கனவீனத்தில் விதைக்கப்படும், மகிமையில் 43
எழுப்பப்படும். பலவீனத்தில் விதைக்கப்
படும், வல்லமையில் எழுப்பப்படும். ஜன்ம 44
சுபாவ சரீரமாய் விதைக்கப்படும், ஆவிக்
குரிய சரீரமாய் எழுப்பப்படும்; ஜன்ம
சுபாவ சரீரமுண்டென்றால் ஆவிக்குரிய
சரீரமுமுண்டு. அப்படியே, முதல் மனுஷ 45
னாகிய ஆதாம் உயிருள்ள ஆத்துமாவானான்
என்றெழுதியிருக்கிறது; கடைசி ஆதாமோ
உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும், 46
ஆவிக்குரியது முந்தினதல்ல, ஜன்மசுபாவத்
துக்குரியதே முந்தினது; ஆவிக்குரியது

[1] அல்லது வடிவம்.

47 பிந்ினது. முதலாம் மனுஷன் பூமிக்குரிய
மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் பர
48 லோகத்திலிருந்து வந்தவர். மண்ணானவன்
எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும்
அப்படிப்பட்டவர்களே; பரலோகத்
திற்குரியவர் எப்படிப்பட்டவரோ பரலோ
கத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்
49 களே. மேலும், மண்ணானவனின் சாயலை
நாம் அணிந்திருக்கிறதுபோல, பரலோகத்
திற்குரியவரின் சாயலையும் அணிந்துகொள்
வது நிச்சயம்.

50 சகோதரரே, நான் சொல்லுகிறதென்ன
வெனில், மாம்சமும் இரத்தமும் கடவுள்
ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமுடியாது; அழி
வானது அழிவின்மையைச் சுதந்தரிப்பது
51 மில்லை. ஒரு இரகசியத்தை உங்களுக்குச்
சொல்லுகிறேன்: நாமெல்லாரும் நித்திரை
52 யடைவதில்லை; ஒரு நிமிஷத்திலே, இமைப்
பொழுதிலே, கடைசி எக்காளம் தொனிக்
கும்போது நாமெல்லாரும் மறுரூபமடை
வோம். எக்காளம் தொனிக்கும், அப்
பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்க
ளாய் எழுப்பப்படுவார்கள்; நாமும் மறு
53 ரூபமடைவோம். அழிவுக்குரியதாகிய இது
அழிவின்மையையும், சாவுக்குரியதாகிய
இது சாவாமையையும் தரித்துக்கொள்ள
54 வேண்டும். அழிவுக்குரியதாகிய இது அழி
வின்மையையும், சாவுக்குரியதாகிய இது
சாவாமையையும் தரித்துக்கொள்ளும்
போது,

மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது;
55 மரணமே, உன் ஜெயம் எங்கே?
மரணமே, உன் [1]கொடுக்கு எங்கே?

என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறை
56 வேறித் தீரும். மரணத்தின் கொடுக்கு
பாவம், பாவத்தின் வல்லமை நியாயப்பிர
57 மாணம். நம்முடைய ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு ஜெயங்
கொடுக்கிற கடவுளுக்கு ஸ்தோத்திரம்.
58 ஆகையால், எனக்குப் பிரியமான சகோ
தரரே, ஆண்டவருக்குள் உங்கள் உழைப்பு
விருதாவாயிராதென்று அறிந்து, ஆண்ட
வரின் ஊழியத்தில் எப்பொழுதும் பெருகி,
உறுதியுள்ளவர்களும் அசையாதவர்களு
மாய் நிலைத்திருங்கள்.

16 பரிசுத்தவான்களுக்கென்று சேர்க்கப்
படும் தர்மப்பணத்தின் சம்பந்தமாய்:
கலாத்தியா நாட்டுச் சபைகளுக்கு நான் திட்
டஞ்செய்தபடியே நீங்களும் செய்யுங்கள்.
நான் வந்திருக்கும்போது தர்மப்பணம் 2
சேர்க்கப்படாதபடி, வாரத்தின் முதல் நாள்
தோறும் உங்களில் அவனவன் தன்தன்
வரவுக்குத்தக்கபடி தன்னிடம் சேர்த்து
வைக்கக்கடவன். நான் உங்களிடமிருக் 3
கும்போது, தகுதியுள்ளவர்களென்று நீங்கள்
குறிக்கிறவர்கள் எவர்களோ, அவர்கள்
உங்கள் உபகாரப் பணத்தை எருசலே
முக்குக் கொண்டுபோகும்படி அவர்களை
நிருபங்களோடு அனுப்புவேன். நானும் 4
போவது ஏற்றதென்று தோன்றினால்,
அவர்கள் என்னோடு வருவார்கள். நான் 5
மக்கெதோனியா நாட்டில் பிரயாணஞ்செய்
யப்போகிறேன். மக்கெதோனியா நாட்
டைக் கடந்தபின் உங்களிடம் வருவேன்.
நான் போகவேண்டிய இடத்துக்கு நீங்கள் 6
என்னை வழிவிட்டனுப்பும்படி, சிலகாலம்,
ஒருவேளை குளிர்காலம் முடியுமட்டும்,
நான் உங்களோடு தங்கினாலும் தங்குவேன்.
ஆண்டவர் உத்தரவு கொடுத்தால், சில 7
காலம் உங்களோடு தங்கியிருக்கலாமென்று
நான் ஆவலாய் எதிர்பார்க்கிறபடியால்,
இந்தத் தடவை வழியில் உங்களைப் பார்க்க
எனக்கு மனமில்லை. பெந்தெகொஸ்தே 8
பண்டிகைவரைக்கும் எபேசுவில் இருப்
பேன். வேலைக்கு அநுகூலமான பெரிய 9
வாசல் இங்கே எனக்குத் திறக்கப்பட்டிருக்
கிறது; எதிர்க்கிறவர்களும் அநேகர் உண்டு.

தீமோத்தேயு வந்தால், அவன் உங்க 10
ளிடம் பயமில்லாமல் தங்கியிருக்கும்படி
பார்த்துக்கொள்ளுங்கள்; என்னைப்போல்
அவனும் ஆண்டவரின் ஊழியத்தைச் செய்
கிறானே. ஒருவனும் அவனை அற்பமாய் 11
எண்ணலாகாது. என்னிடம் வரும்படி
அவனைச் சமாதானத்தோடு வழிவிட்டனுப்
புங்கள். சகோதரரோடுகூட அவன் வருவா
னென்று நான் எதிர்பார்த்திருக்கிறேன்.
சகோதரனாகிய அப்பொல்லோவின் சம்பந்த 12
மாய்ச் சகோதரரோடுகூட உங்களிடம் வரும்
படிக்கு அவனை மிகவும் கேட்டுக்கொண்
டேன்; இப்பொழுது வர அவனுக்குச் சற்
றேனும் விருப்பமில்லை; சமயம் வாய்க்கும்
போது அவன் வருவான்.

விழித்திருங்கள், விசுவாசத்தில் நிலைத் 13
திருங்கள், புருஷராயிருங்கள், பலங்கொள்
ளுங்கள்; நீங்கள் செய்வதெல்லாவற்றையும் 14
அன்பிலே செய்யுங்கள்.

சகோதரரே, ஸ்தேபனாவின் வீட்டார் 15
உங்களுக்குத் தெரியும்; அவர்கள் அகாயா
நாட்டிலே முதற்பலனானவர்களென்றும்,

[1] தரி. 9: 10 காண்க.

பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்வதற்
குத் தங்களை ஒப்புவித்தவர்களென்றும் உங்க
16 ளுக்குத் தெரியும். இப்படிப்பட்டவர்க
ளுக்கும், ஊழியத்தில் ஒத்துழைக்கிற உடன்
ஊழியர் ஒவ்வொருவருக்கும் நீங்கள்
அடங்கியிருக்கவேண்டுமென்று உங்க
17 ளைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்தேபனு,
பொர்த்துனாத்து, அகாயிக்கு என்பவர்கள்
வந்தது எனக்குச் சந்தோஷம். நீங்கள்
இல்லாத குறைவை அவர்கள் நிறைவாக்கி,
18 என் ஆவியும் உங்கள் ஆவியும் தேறுதலடை
யும்படி செய்தார்கள்; இப்படிப்பட்டவர்களை
அறிந்து பாராட்டுங்கள்.
19 ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை
வாழ்த்துகிறார்கள். ஆக்கிலாவும் பிரிஸ்கா
ளும் தங்கள் வீட்டிலே கூடுகிற சபையோ
டுங்கூட ஆண்டவருக்குள் உங்களை மிகவும்
வாழ்த்துகிறார்கள். சகோதரரெல்லாரும் 20
உங்களை வாழ்த்துகிறார்கள். ஒருவரையொரு
வர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்.
பவுலாகிய நான் என் கைப்பட எழுதி 21
உங்களை வாழ்த்துகிறேன்.
ஒருவன் ஆண்டவரை நேசியாதிருப்பா 22
னானால் அவன் சாபத்துக்குள்ளாகக்கடவன்.
ஆண்டவர் வருகிறார். | ஆண்டவராகிய 23
இயேசுவின் கிருபை உங்களோடிருப்பதாக.
கிறிஸ்து இயேசுவுக்குள் என் அன்பு உங்க 24
ளனைவரோடும் இருப்பதாக.

கொரிந்தியருக்கு எழுதின
இரண்டாம் நிருபம்

1 கடவுளின் சித்தத்தினால் கிறிஸ்து இயேசு
வின் அப்போஸ்தலனான பவுலும், சகோதர
னாகிய தீமோத்தேயுவும், கொரிந்துவில்
இருக்கும் தேவ சபைக்கும், அகாயாநாடு
முழுவதிலுமுள்ள பரிசுத்தவான்கள் எல்லா
2 ருக்கும் எழுதுவதாவது: நம்முடைய பிதா
வாகிய கடவுளிடமிருந்தும் ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்துவினிடமிருந்தும் உங்களுக்
குக் கிருபையும் சமாதானமும் உண்டாவ
தாக.
3 நம்முடைய ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவின் கடவுளும் பிதாவுமானவர்
ஸ்தோத்திரத்துக்குரியவர்; அவர் இரக்கங்
களின் பிதா, சகல ஆறுதலுக்கும் கடவுள்;
4 அவர் எங்களுக்கு அளிக்கும் அதே ஆறு
தலின்மூலமாய், எவ்வித உபத்திரவத்திலும்
இருக்கிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்
செய்யக்கூடியவர்களாயிருக்கும்படி, எங்க
ளுக்கு நேரிடும் சகல உபத்திரவத்திலும்
எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர் அவரே.
5 எப்படியெனில், கிறிஸ்துவின் பாடுகள்
எங்களிடம் பெருகுகிறதுபோல, கிறிஸ்து
வினால் எங்கள் ஆறுதலும் பெருகுகிறது.
6 ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும்,
அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்
கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதலடைந்தா
லும், அதுவும் உங்கள் ஆறுதலுக்கு ஏதுவா
கும். நாங்கள் பாடுபடுகிறதுபோலவே நீங்க
ளும் பாடுபட்டுப் பொறுத்துக்கொள்வதற்கு
7 அந்த ஆறுதல் காரணமாகும். பாடுகளில்
நீங்கள் பங்காளிகளாயிருக்கிறதுபோல் ஆறு
தலிலும் பங்காளிகளாயிருப்பீர்களென்று
நாங்கள் அறிவதினால், உங்களைப்பற்றிய
எங்கள் நன்னம்பிக்கை உறுதியாயிருக்
கிறது.
8 சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு
நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியா
திருக்க எங்களுக்கு மனமில்லை. பிழைப்போ
மென்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்க
தாக, எங்கள் சக்திக்கு மிஞ்சின பெருந்
9 துன்பம் எங்களை அழுத்தியது. நாங்கள்
எங்கள்மேலல்ல மரித்தோரை எழுப்புகிற
கடவுள்மேல் நம்பிக்கையாயிருக்கும்படி,
மரணமே கதியென்று எதிர்பார்த்துக்கொண்
டிருந்தோம். அந்தப் பயங்கர மரணத்தி 10
னின்று அவரே எங்களைத் தப்புவித்தார்,
தப்புவிப்பார்; ஆம், இனிமேலும் எங்களைத்
தப்புவிப்பாரென்று அவர்மேல் நன்னம்
பிக்கையாயிருக்கிறோம். அநேகர் மூலமாய் 11
எங்களுக்குக் கிடைத்த கிருபைக்காக எங்கள்
நிமித்தம் அநேகரால் நன்றிசெலுத்தப்படும்
பொருட்டு, நீங்களும் உங்கள் ஜெபத்தினால்
எங்களுக்கு உதவிசெய்கிறீர்கள்.
நாங்கள் உலகத்திலும், விசேஷமாக உங்க 12
ளிடத்திலும், மாம்சத்துக்குரிய ஞானத்தி
லல்ல, தேவகிருபையில், கடவுளிட
மிருந்து வரும் பரிசுத்தத்தோடும் கபட
மின்மையோடும் நடந்துவந்தோமென்று
எங்கள் மனச்சாட்சி கூறும் சாட்சியமே
எங்கள் மேன்மை. நீங்கள் வாசித்தும் தெளி 13
வாய் அறிந்துமிருக்கிற காரியங்களையேயன்றி
வேறொன்றையும் நாங்கள் உங்களுக்கு
எழுதுகிறதில்லை; முடிவுபரியந்தமும் அப்
படியே அறிந்துகொள்வீர்களென்று நம்பு
கிறேன். நம்முடைய ஆண்டவராகிய 14
இயேசுவின் நாளிலே நீங்கள் எங்களுக்கு
மேன்மையாயிருப்பதுபோல, நாங்களும்
உங்களுக்கு மேன்மையாயிருக்கிறோமென்
பதை ஒருவாறு அறிந்திருக்கிறீர்களே.
இப்படிப்பட்ட நம்பிக்கை எனக்கு 15
இருக்கிறபடியினால் உங்களுக்கு இரண்டு
தரம் நன்மை கிடைக்கும்படி, முதலாவது
உங்களிடம் வரவும், பின்பு உங்கள் நகரத் 16
தின் வழியாய் மக்கெதோனியா நாட்டிற்குப்
போகவும், மக்கெதோனியாவைவிட்டு மறு
படியும் உங்களிடத்திற்கு வந்து உங்களால்
யூதேயா தேசத்துக்கு வழிவிட்டனுப்பப்
படவும் எண்ணங்கொண்டிருந்தேன். நான் 17
இப்படி எண்ணங்கொண்டபோது மன
உறுதி இல்லாதிருந்தேனோ? அல்லது, ஆம்
ஆம் என்பதும், இல்லை இல்லை என்பதும்
என்னிடத்தில் இருக்கத்தக்கதாக, நான்

யோசிக்கிறவைகளை மாம்சத்தின்படியே
18 யோசிக்கிறேனே? நாங்கள் உங்களுக்குச்
சொன்ன வார்த்தை ஆம் என்றும் அல்ல
என்றும் இருக்கவில்லை; கடவுளே அதற்கு
19 மெய்யான சாட்சி. என்னாலும் சில்வானுவி
னாலும் தீமோத்தேயுவினாலும் உங்களுக்
குள்ளே பிரசங்கிக்கப்பட்ட தேவகுமார
னாகிய கிறிஸ்து இயேசு ஆம் என்றும் அல்ல
என்றும் இருக்கவில்லை; ஆம் என்பதே அவ
20 ரிடம் நிறைவேறிற்று. கடவுளின் வாக்குத்
தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவில் ஆம்
என்றும், எங்கள் மூலமாய்க் கடவுளுக்கு
மகிமையுண்டாகும்படி அவரால் ஆமேன்
21 என்றும் இருக்கின்றனவே. உங்களோடு
கூட எங்களையும் கிறிஸ்துவுக்குள்ளாக
ஸ்திரப்படுத்துகிறவரும் நம்மை அபிஷேகம்
22 பண்ணினவரும் கடவுளே. நம்மை முத்தி
ரித்து நமது இருதயங்களில் ஆவியென்னும்
அச்சாரத்தைக் கொடுத்தவரும் அவரே.
23 உங்கள்மேல் தயவுவைத்தே இதுவரைக்
கும் நான் கொரிந்துவுக்கு வராதிருக்கிறே
னென்று என் ஜீவன்மேல் ஆணையிட்டுக்
24 கடவுளைச் சாட்சியாகக் கோருகிறேன். விசு
வாசவிஷயமாய் நாங்கள் உங்களை ஆளுகிற
வர்களல்ல, உங்கள் சந்தோஷத்திற்கு
உடன் ஊழியர்; விசுவாசத்தினாலே நிலை
நிற்கிறீர்கள்.

2 மறுபடியும் துக்கத்தோடு உங்களிடம்
வரக்கூடாது என்று நான் எனக்குள் தீர்மா
2 னித்துக்கொண்டேன். நான் உங்களைத்
துக்கப்படுத்தினால், என்னாலே துக்கமடைந்
திருக்கிறவனே தவிர என்னைச் சந்தோஷப்
3 படுத்துகிறவன் யாவன்? நான் வரும்போது,
என்னைச் சந்தோஷப்படுத்தவேண்டியவர்
களால் நான் துக்கமடையாதபடி இதை
எழுதியிருக்கிறேன். என் சந்தோஷம் உங்க
ளெல்லாருக்கும் சந்தோஷமாகுமென்பது
உங்களெல்லாரையும்பற்றி என் நம்பிக்கை.
4 நீங்கள் துக்கப்படவேண்டுமென்றல்ல,
உங்கள்மேல் எனக்குள்ள பேரன்பை நீங்கள்
அறியவேண்டுமென்றே, மிகுந்த மனவேதனை
யும் இடுக்கமும் உள்ளவனாய், அதிகக் கண்
ணீரோடு உங்களுக்கு எழுதினேன்.
5 ஒருவன் துக்கமுண்டாக்கினானென்றால்,
எனக்கல்ல, ஒருவாறு உங்களெல்லாருக்
கும் துக்கமுண்டாக்கினான்; உங்கள்மேல்
அதிகப் பாரஞ்சுமத்தாதபடி இப்படிச்
6 சொல்லுகிறேன். பெரும்பாலரால் உண்
டான இந்தத் தண்டனையே அப்படிப்பட்ட
7 வனுக்குப் போதும். ஆதலால், அவன்
அதிகத் துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடி,
நீங்கள் இப்பொழுது அவனுக்கு மன்னித்து
அவனை ஆறுதல்படுத்துவது நலம். ஆகை 8
யால், உங்கள் அன்பை அவனுக்கு உறுதிப்
படுத்தும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளு
கிறேன். நீங்கள் எல்லாவற்றிலேயும் கீழ்ப் 9
படிகிறவர்களோ என்று உங்கள் உத்தமத்
தைச் சோதித்தறியவேண்டுமென்றே எழுதி
னேன். எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர் 10
களோ அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்;
எதை நான் மன்னித்திருக்கிறேனோ அதை
உங்கள் நிமித்தம் கிறிஸ்துவின் சந்நிதானத்
திலே மன்னித்திருக்கிறேன். நாம் சாத்தா 11
னால் வஞ்சிக்கப்படாதபடிக்கு அப்படிச்
செய்திருக்கிறேன்; அவன் தந்திரங்கள் நமக்
குத் தெரியாதவைகளல்லவே.
நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கென்று 12
துரோவாவுக்கு வந்தபோது, ஆண்டவருக்
குள் எனக்கு வாசல் திறக்கப்பட்டிருக்க,
என் சகோதரன் தீத்துவை நான் காணாததால் 13
என் ஆவிக்கு அமைதல் இல்லாதிருந்தது.
ஆகவே அவர்களிடம் விடைபெற்றுக்
கொண்டு மக்கெதோனியாவுக்குப் போகும்
படி புறப்பட்டேன்.
கிறிஸ்துவுக்குள் எப்போதும் எங்களை 14
ஜெயகோலமாக நடத்தி, ஒவ்வொரு இடத்
திலும் தம்மை அறிகிற அறிவின் வாசனையை
எங்களைக்கொண்டு வெளிப்படுத்துகிற கடவு
ளுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர் 15
களுக்குள்ளும் கெட்டுப்போகிறவர்களுக்குள்
ளும் கடவுளுக்கு நாங்கள் கிறிஸ்துவின்
சுகந்த வாசனையாயிருக்கிறோம். கெட்டுப் 16
போகிறவர்களுக்கு மரணத்திற்கேதுவான
மரணவாசனை, இரட்சிக்கப்படுகிறவர்
களுக்கோ ஜீவனுக்கேதுவான ஜீவவாசனை. |
இவைகளுக்குத் தகுதியானவன் யார்? அநே 17
கரைப்போல நாங்கள் கடவுளின் வார்த்
தையை லாபத்திற்கென்று கலப்பாக்காமல்,
கபடமின்றி, கடவுளால் ஏவப்பட்டவர்
களாய், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில்
பேசுகிறோம்.

நாங்கள் மறுபடியும் எங்களை உங்களுக் **3**
குச் சிபார்சு செய்துகொள்ளத் தொடங்கு
கிறோமோ? அல்லது சிலருக்குத் தேவையா
யிருக்கிறதுபோல் உங்களிடத்திற்காவது
உங்களிடத்திலிருந்தாவது சிபார்சு கடி
தங்கள் எங்களுக்குத் தேவையோ? எங்கள் 2
இருதயங்களில் எழுதப்பட்டதாய், சகல
மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டுவரு
கிற எங்கள் கடிதம் நீங்கள்தானே. எங்கள் 3
ஊழியத்தினால் உண்டான கிறிஸ்துவின்
கடிதம் நீங்கள் என்பது பிரத்தியட்.

மாகிறது; அது மையினாலல்ல ஜீவனுள்ள
கடவுளின் ஆவியினால், கற்பலகைகளிலல்ல
இருதயங்களாகிய சதையான பலகைகளில்
எழுதப்பட்டிருக்கிறது.
4 நாங்கள் கிறிஸ்துவின்மூலமாய் கடவு
ளிடத்தில் இப்படிப்பட்ட நம்பிக்கை
5 கொண்டிருக்கிறோம். நாங்கள் எங்களாலே
எதையும் யோசிப்பதற்கு நாங்களாகவே
தகுந்தவர்களல்ல; எங்கள் தகுதி கடவுளால்
6 உண்டாயிருக்கிறது. புது உடன்படிக்கை
யின் ஊழியக்காரராகும்படி அவரே எங்க
ளைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த
உடன்படிக்கை எழுத்திற்குரியதல்ல,
ஆவிக்குரியதே; எழுத்து கொல்லும்,
7 ஆவியோ உயிர்ப்பிக்கும். மோசேயின்
முகத்தில் தோன்றிய மகிமையினிமித்தம்
இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை உற்று
நோக்க முடியவில்லை. அது ஒழிந்துபோகும்
மகிமை. இப்படியாக, கற்களின்மேல் பதிக்
கப்பட்டதாய் மரணத்துக்கு ஏதுவான ஊழி
8 யம் மகிமையுள்ளதாயிருந்தால், ஆவியின்
ஊழியம் மகிமையுள்ளதாகும் என்பது
9 அதிக நிச்சயமல்லவா? ஆக்கினைத் தீர்ப்புக்
கேதுவான ஊழியம் மகிமையுள்ளதாயிருந்
தால், நீதிக்கேதுவான ஊழியம் அதிக
10 மகிமையுள்ளதாயிருக்குமே. இப்படியாக,
இதற்குரிய மகிமை சிறந்ததானதால், முற்
காலத்தில் மகிமைப்பட்டிருந்தது இதன்
11 முன்னிலையில் மகிமையுள்ளதல்ல. ஒழிந்து
போவது மகிமையுள்ளதாயிருந்ததானால்,
நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதா
யிருக்குமே.
12 இப்படிப்பட்ட நன்னம்பிக்கை எங்களுக்கு
இருக்கிறபடியால், மிகவும் தைரியமாய்ப்
13 பேசுகிறோம். மேலும், ஒழிந்துபோவதின்
முடிவை இஸ்ரவேல் புத்திரர் உற்றுநோக்
காதபடி மோசே தன் முகத்தின்மேல் முக்
காடுபோட்டுக்கொண்டதுபோல நாங்கள்
14 போடுகிறதில்லை. அவர்கள் மனம் கடினப்
பட்டது; பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகை
யில், அதே முக்காடு இந்நாள்வரைக்கும் நீங்
காமலிருக்கிறது; அது கிறிஸ்துவிலே ஒழிக்
கப்படுகிறதென்பது அவர்களுக்கு வெளிப்
15 படவில்லை. மோசேயின் ஆகமங்கள் வாசிக்
கப்படும்போது, முக்காடு இந்நாள் வரைக்கும்
அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறதே.
16 ஆண்டவரிடம் திரும்பும்போது அந்த
17 முக்காடு எடுபட்டுப்போம். ஆண்டவரே
ஆவியானவர்; ஆண்டவரின் ஆவி எங்
18 கேயோ அங்கே சுயாதீனமுண்டு. நாமெல்
லாரும் முக்காடில்லாத முகத்தால் ஆண்ட
வரின் மகிமையைப் பிரதிபிம்பித்து, ஆவி
யாகிய ஆண்டவராலேயே அந்தச் சாயலாகத்
தானே மகிமையின்மேல் மகிமையடைந்து
மறுரூபமாகிறோம்.

ஆனதுபற்றி, நாங்கள் இரக்கம் பெற் 4
றிருக்கிறபடியே, இந்த ஊழியத்தை
உடையவர்களாகையால் நாங்கள் சோர்ந்து
போகிறதில்லை. இழிவான அந்தரங்க காரி 2
யங்களை வெறுத்துவிட்டு, தந்திரமாய் நடவா
மலும், கடவுளின் வார்த்தையைப் புரட்டா
மலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதி
னாலே கடவுளுக்கு முன்பாக ஒவ்வொரு
மனுஷனுடைய மனச்சாட்சிக்கும் எங்களை
விளங்கப்பண்ணுகிறோம். எங்கள் சுவிசே 3
ஷம் மறைக்கப்பட்டதாயிருந்தால், கெட்டுப்
போகிறவர்களுக்கே மறைக்கப்பட்டதாயிருக்
கும். கடவுளின் சாயலாயிருக்கிற கிறிஸ்துவி 4
னுடைய மகிமை விளங்கும் சுவிசேஷமா
கிய வெளிச்சம் பிரகாசிக்காதபடி இந்த
யுகத்தின் தேவன் அவிசுவாசிகளின் மனத்
தைக் குருடாக்கினான். நாங்கள் எங்களையே 5
பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவை ஆண்
டவரென்றும், இயேசுவினிமித்தம் எங்களை
உங்கள் அடிமைகளென்றும் பிரசங்கிக்கி
றோம். இருளிலிருந்து வெளிச்சம் பிரகா 6
சிக்கக்கடவதென்று சொன்ன கடவுளே
கிறிஸ்துவின் முகத்திலுள்ள தேவமகிமை
யின் அறிவாகிய வெளிச்சம் வீசும்படி
எங்கள் இருதயங்களில் பிரகாசித்திருக்கிறார்.
இந்த மகா உன்னத வல்லமை எங்க 7
ளால் உண்டாகவில்லை, அது கடவுளுக்கே
உரியதென்று விளங்கும்படி இந்தப் பொக்கி
ஷத்தை மண்பாண்டங்களில் உடையவர்
களாயிருக்கிறோம். நாங்கள் எவ்விஷயத் 8
திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிற
தில்லை; மனம் கலங்கியும் மனம் முறிந்துபோ
கிறதில்லை; துன்புறுத்தப்பட்டும் கைவிடப் 9
படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும்
மடிந்துபோகிறதில்லை. இயேசுவின் ஜீவன் 10
எங்கள் சரீரத்தில் வெளிப்படும்படி, இயேசு
வின் மரண அனுபவத்தை எப்பொழுதும்
எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.
எப்படியெனில், சாவுக்குரிய எங்கள் மாம் 11
சத்தில் இயேசுவின் ஜீவன் வெளிப்படும்படி
உயிரோடிருக்கிற நாங்கள் இயேசுவினிமித்
தம் எப்பொழுதும் மரணத்திற்கு ஒப்புக்
கொடுக்கப்படுகிறோம். இப்படியாக, மரணம் 12
எங்களிடத்திலும் ஜீவன் உங்களிடத்திலும்
கிரியைசெய்கிறது. விசுவாசித்தேன், ஆகை 13
யால் பேசினேனென்று எழுதியிருக்கிறபடி,
அந்த விசுவாசத்தின் ஆவியையுடையவர்
களாய் நாங்களும் விசுவாசிக்கிறோம், ஆகை

14 யால் பேசுகிறோம். ஆண்டவராகிய
இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசு
வோடு எழுப்பி, உங்களோடுகூடத் தமக்கு
முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்
15 கிறோம். கிருபையானது அநேகர் மூல
மாய்ப் பெருகி, கடவுளின் மகிமைக்கேது
வாக நன்றியறிதலான ஸ்தோத்திரத்தைப்
பெருகச்செய்யும்படி, எல்லாம் உங்கள்
நிமித்தமே உண்டாயிருக்கின்றன.
16 ஆனபடியினாலே, நாங்கள் சோர்ந்து
போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷன்
அழிந்தாலும், எங்கள் உள்ளான மனுஷன்
நாளுக்குநாள் புதிதாக்கப்பட்டுவருகிறான்.
17 க்ஷணப்பொழுதே நிற்கும் நமது இலேசான
உபத்திரவம் நித்தியகால கனமகிமையை
மென்மேலும் அதிகமாய் நமக்கு உண்டாக்கு
18 கிறது. காணப்படுகிறவைகளையல்ல காணப்
படாதவைகளையே நாம் நோக்கியிருக்கிறோம்;
ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தி
யம், காணப்படாதவைகளோ நித்தியம்.

5 பூமிக்குரிய கூடாரமாகிய நமது வீடு
அழிந்துபோனாலும், கடவுளால் உண்டா
கிய ஒரு கட்டடம் பரலோகத்தில் நமக்கு
உண்டென்று அறிந்திருக்கிறோம். அது
2 கையால் செய்யப்படாத நித்திய வீடு. எப்
படியெனில், இந்தக் கூடாரத்தில் நாம்
தவித்து, நமது பரம வாசஸ்தலத்தைப்
போர்த்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ள
3 வர்களாயிருக்கிறோம்; ஏனெனில் போர்த்துக்
கொண்டால் நிர்வாணிகளாய்க் காணப்
4 படோம். இந்தக் கூடாரத்திலிருக்கிற நாம்
பாரஞ்சுமந்து தவிக்கிறோம்; இந்தப் போர்
வையைக் களைந்துபோட விரும்பாமல்,
சாவுக்குரிய இது ஜீவனாலே விழுங்கப்படுவ
தற்காக மேற்போர்வை தரித்துக்கொள்ள
5 விரும்புகிறோம். இதற்கென்று நம்மைப்
பக்குவப்படுத்தினவர் கடவுளே, ஆவியென்
னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும்
6 அவரே. இந்தத் தேகத்தில் குடியிருக்கை
யில் ஆண்டவரிடம் குடியிராதவர்களா
யிருக்கிறோமென்று அறிந்தும், எப்பொழு
7 தும் தைரியமாயிருக்கிறோம். நாம் தரிசித்து
நடவாமல் விசுவாசித்து நடக்கிறோமே.
8 நாம் தைரியமடைந்து, தேகத்தைவிட்டுக்
குடிபெயர்ந்து ஆண்டவரிடம் குடிபுகுவது
9 நலமென்று விரும்புகிறோம். அதினிமித்தம்,
சரீரத்தில் குடியிருந்தாலும் குடிபெயர்ந்தா
லும் அவருக்கு உகந்தவர்களாயிருக்க
10 வேண்டுமென்பதே நமது பேராவல். சரீரத்
தில் அவனவன் செய்த நன்மைக்காவது
தீமைக்காவது தக்க பலனை அடையும்படி,
நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்
தின்முன் வெளிப்படவேண்டும்.
ஆகையால், கர்த்தருக்குப் பயப்படுவது 11
இன்னதென்றறிந்து, மனுஷரை ஏவி
எழுப்புகிறோம், கடவுளுக்குப் பிரத்தியட்ச
மாயிருக்கிறோம்; உங்கள் மனச்சாட்சிகளுக்
கும் நாங்கள் பிரத்தியட்சமென்று நம்பு
கிறேன். நாங்கள் எங்களை மறுபடியும் 12
உங்களுக்குச் சிபார்சு செய்துகொள்ளாமல்,
உள்ளத்திலல்ல வெளித்தோற்றத்தில்
பெருமை பாராட்டுகிறவர்களுக்கு நீங்கள்
பதில் சொல்லும்படி, எங்களைப்பற்றி நீங்கள்
பெருமைபாராட்டுவதற்கு இடமுண்
டாக்குகிறோம். நாங்கள் மதிமயங்கியிருந் 13
தால் அது கடவுளுக்கென்று ஆகும்,
தெளிந்த புத்தியோடிருந்தால் அது உங்களுக்
கென்றே ஆகும். கிறிஸ்துவின் அன்பு எங் 14
களை நெருக்கி ஏவுகிறது; எல்லாருக்காகவும்
ஒருவர் மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்க
ளென்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித் 15
தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்
காக மரித்து எழுந்தவருக்கென்றே பிழைத்
திருக்கும்படி அவர் எல்லாருக்காகவும்
மரித்தாரென்றும் நிதானிக்கிறோம். ஆகை 16
யால் இதுமுதற்கொண்டு நாங்கள் ஒருவனை
யும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள்
கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தா
லும், இனி ஒருபோதும் அவரை அப்படி
அறியோம். இப்படியிருக்க, ஒருவன் 17
கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், அங்கே புதுச்
சிருஷ்டி; பழையவை ஒழிந்துபோயின,
இதோ, புதிதாயின. இவையெல்லாம் கடவு 18
ளால் உண்டாயிருக்கின்றன. கிறிஸ்துவைக்
கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புர
வாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை
எங்களுக்கு ஒப்புக்கொடுத்தவர் அவரே.
அதெப்படியெனில், கடவுள் உலகத்தாரின் 19
மீறுதல்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள்
உலகத்தைத் தமக்கு ஒப்புரவாக்கிக்
கொண்டு, ஒப்புரவாக்குதலைப்பற்றிய வார்த்
தையை எங்களிடம் ஒப்புவித்தார்.
ஆனபடியினாலே, கடவுள் எங்களைக் 20
கொண்டு கேட்டுக்கொள்ளுகிறபடியால்,
நாங்கள் கிறிஸ்துவுக்குப் பிரதிநிதிகளாய்,
கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று
கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்
கொள்ளுகிறோம். நாம் அவருக்குள் கடவு 21
ளின் நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத
அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

6 கடவுளின் கிருபையை நீங்கள் வீணாய்ப்
பெற்றவர்களாகாதபடி, நாங்கள் உடன்
வேலையாட்களாக உங்களைக் கேட்டுக்கொள்
ளுகிறோம்.
2 அனுக்கிரக காலத்தில் நான் உனக்குச்
செவிசாய்த்து,
இரட்சணிய நாளில் உனக்கு உதவிசெய்
தேன்
என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்
பொழுதே அனுக்கிரக காலம், இதோ, இப்
3 பொழுதே இரட்சணிய நாள். இந்த ஊழியத்
தைக் குறைகூற இடமிராதபடி, யாதொன்
றிலும் இடறலுக்கு ஏது உண்டாக்காமல்,
4 நாங்கள் எவ்விஷயத்திலும் எங்களைக் கடவு
ளின் ஊழியக்காரராக விளங்கப்பண்ணு
கிறோம். மிகுந்த சகிப்பிலும், உபத்திரவங்
களிலும், இக்கட்டுகளிலும், இடுக்கண்களி
5 லும், | அடிகளிலும், காவல்களிலும், கல
கங்களிலும், உழைப்புகளிலும், கண்
விழிப்புகளிலும், உபவாசங்களிலும், |
6 தூய்மையிலும், அறிவிலும், நீடிய சாந்தத்
திலும், தயாளத்திலும், பரிசுத்த ஆவியிலும்,
7 மாயமற்ற அன்பிலும், | சத்திய வசனத்தி
லும், கடவுளின் வல்லமையிலும்; வலதிடது
8 பக்கத்து நீதி ஆயுதங்களிலும், கனத்திலும்
கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும் நற்கீர்த்தி
யிலும், எத்தரென்னப்பட்டாலும் சத்திய
9 வந்தராகவும், அறியப்படாதவர்களென்னப்
பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாக
வும், சாகிறவர்களென்றாலும், இதோ,
உயிரோடிருக்கிறவர்களாகவும், சிட்சிக்கப்
படுகிறவர்களென்றாலும் கொல்லப்படாதவர்
10 களாகவும், துக்கப்படுகிறவர்களென்றாலும்
எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாக
வும், தரித்திரரென்றாலும் அநேகரை ஐசுவரிய
வான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்
லாதவர்களென்றாலும் எல்லாவற்றையும்
உடையவர்களாகவும் எங்களை விளங்கப்
பண்ணுகிறோம்.
11 கொரிந்தியரே, உங்களோடு தாராளமாய்ப்
பேச எங்கள் வாய் திறந்திருக்கிறது, எங்கள்
12 இருதயம் விசாலமாயிருக்கிறது. எங்களில்
நீங்கள் நெருக்குண்டுபோகவில்லை, உங்கள்
உள்ளத்திலேயே நெருக்குண்டவர்களாயிருக்
13 கிறீர்கள். அதற்குப் பிரதிபலனாக உங்கள்
இருதயமும் விசாலமாகவேண்டுமென்று
பிள்ளைகளுக்குச் சொல்வதுபோலச் சொல்லு
கிறேன்.
14 அவிசுவாசிகளோடு ஒரே நுகத்தில் விபரீத
மாய் இணைக்கப்படாதிருங்கள்; நீதிக்கும்
அக்கிரமத்துக்கும் சம்பந்தமேது? வெளிச்
சத்துக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?
கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? 15
அவிசுவாசியோடு விசுவாசிக்குப் பங்கேது?
கடவுளின் ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக் 16
கும் இணக்கமேது? ஜீவனுள்ள கடவுளின்
ஆலயம் நாமே; அதற்கிசைய, கடவுள்
சொல்லுகிறதாவது:
அவர்களுக்குள் வாசம்பண்ணி நடமாடு
வேன்,
அவர்களுக்கு நான் கடவுளாயிருப்பேன்,
அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்.
ஆனபடியால், 17
அவர்கள் நடுவிலிருந்து வந்து பிரிந்
திருங்களென்று கர்த்தர் சொல்லுகிறார்,
அசுத்தமான எதையும் தொடாதிருங்கள்,
அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்
கொண்டு,
உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், 18
நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்தி
களுமாயிருப்பீர்களென்று
சர்வவல்ல கர்த்தர் சொல்லுகிறார். பிரிய 7
மானவர்களே, இந்த வாக்குத்தத்தங்கள்
நமக்கு இருக்கிறபடியினால், மாம்சத்திலும்
ஆவியிலும் உள்ள எல்லா அசுசியும் நீங்க
நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, தேவ பயத்
தில் பரிசுத்தமாகுதலைப் பூரணப்படுத்தக்
கடவோம்.
எங்களுக்கு இடங்கொடுங்கள்; நாங்கள் 2
ஒருவனுக்கும் அநியாயஞ்செய்யவில்லை, ஒரு
வனையும் கெடுக்கவில்லை, ஒருவனையும்
வஞ்சிக்கவில்லை. உங்களைக் குற்றப்படுத்தும் 3
படி நான் இப்போது சொல்லவில்லை.
முன்னே நான் சொன்னபடி, உங்களோடு
கூடச் சாகவும், உங்களோடுகூடப் பிழைக்க
வும், நீங்கள் எங்கள் இருதயங்களில் இருக்
கிறீர்களே. உங்கள் விஷயத்தில் எனக்கு 4
மிகுந்த தைரியமுண்டு, உங்களைப்பற்றி
மிகவும் பெருமைபாராட்டுகிறேன், ஆறுத
லால் நிரப்பப்பட்டிருக்கிறேன், எங்களுக்
குண்டான எல்லா உபத்திரவத்திலேயும் பரி
பூரண சந்தோஷமடைந்திருக்கிறேன்.
நாங்கள் மக்கெதோனியாவில் வந்த 5
போது, எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல்
ஒன்றுமில்லாமல் எல்லா விஷயத்திலும்
உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்
டங்கள், உள்ளே பயங்கள். ஆகிலும், 6
சிறுமைப்பட்டவர்களை ஆறுதல்படுத்துகிற
கடவுள் தீத்து வந்ததினாலே எங்களை ஆறு
தல்படுத்தினார். அவன் வந்ததினால் மாத்திர 7
மல்ல, உங்கள்நிமித்தம் அவன் அடைந்த
ஆறுதலினாலும் ஆறுதல்படுத்தினார். உங்கள்
வாஞ்சையையும் உங்கள் புலம்பலையும் என்

னைப்பற்றிய உங்கள் வைராக்கியத்தையும்
அவன் தெரியப்படுத்தினான்; அதனால் இன்
னும் அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன்.
8 நிருபத்தினால் உங்களைத் துக்கப்படுத்தியிருந்
தும் நான் மனஸ்தாபப்படுகிறதில்லை; அந்த
நிருபம் கொஞ்சப்பொழுதாகிலும் உங்களைத்
துக்கப்படுத்தினதென்று கண்டு நான் மனஸ்
9 தாபப்பட்டிருந்தும் | இப்பொழுது சந்தோ
ஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதினி
மித்தமல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத்
துக்கப்பட்டதினிமித்தமே சந்தோஷப்படு
கிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்ட
மடையாதபடி, கடவுள் சித்தத்திற்கிசைந்த
10 துக்கம் அடைந்தீர்களே. கடவுள் சித்தத்
திற்கிசைந்த துக்கம் பின்பு மனஸ்தாபப்படு
கிறதற்கு இடமில்லாமல், இரட்சிப்புக்கேது
வான மனந்திரும்புதலை உண்டாக்கும்.
லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்
11 கும். யோசித்துப் பாருங்கள்; கடவுள்
சித்தத்திற்கு இசைவாக நீங்கள் துக்கமடைந்
தீர்களே. அதனால் எவ்வளவோ ஊக்கமும்,
பிரதிவாதமும், அருவருப்பும், பயமும், வாஞ்
சையும், வைராக்கியமும், பழிவாங்குதலும்
உங்களிடத்தில் உண்டாயிற்றே. இந்தக்
காரியத்தில் நீங்கள் எல்லாவிதத்திலும் உங்க
ளைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணி
12 னீர்கள். ஆதலால், நான் உங்களுக்கு
அப்படி எழுதியிருந்தும், அநியாயஞ்செய்த
வன் பொருட்டுமல்ல, அநியாயஞ்செய்யப்
பட்டவன் பொருட்டுமல்ல, எங்களைப்பற்றி
உங்களுக்கு உண்டாயிருந்த ஊக்கம்
கடவுள் சந்நிதியில் உங்களுக்கே வெளிப்
13 படும் பொருட்டு அப்படி எழுதினேன். இதி
னிமித்தம் நாங்கள் ஆறுதலடைந்தோம்;
நாங்கள் ஆறுதலடைந்ததுமன்றித் தீத்துவின்
சந்தோஷத்தினால் அதிகச் சந்தோஷப்பட்
டோம். அவன் ஆவி உங்கள் அனைவ
14 ராலும் தேறுதலடைந்ததே. உங்களைப்பற்
றிப் பெருமைபாராட்டி நான் அவனோடே
சொன்ன எதற்காகவும் நான் வெட்கப்பட
வில்லை. நாங்கள் எல்லாவற்றையும் உங்க
ளுக்கு உண்மையாய்ச் சொன்னதுபோல,
தீத்துவினிடம் நாங்கள் உங்களைப்பற்றிப்
பெருமைபாராட்டிச் சொன்னதும் உண்மை
15 யென்று விளங்கிற்று. பயத்தோடும் நடுக்
கத்தோடும் தன்னை ஏற்றுக்கொண்ட உங்க
ளனைவரின் கீழ்ப்படிதலையும் அவன் நினைவு
கூருகையில், உங்கள்பேரில் அவன் அன்பு
16 அதிகமாய்ப் பொங்குகிறது. எவ்விஷயத்
திலும் உங்களைக்குறித்து எனக்குத் திடநம்
பிக்கை இருப்பதால் சந்தோஷப்படுகி
றேன்.

சகோதரரே, மக்கெதோனியா சபைகளில் 8
அளிக்கப்பட்ட கடவுளின் கிருபையை
உங்களுக்கு அறிவிக்கிறோம். உபத்திரவத் 2
தினால் மிகவும் பரீட்சிக்கப்பட்டும், அவர்க
ளுடைய மிகப் பெரிதான சந்தோஷமும்
கொடிய தரித்திரமும் உதாரத்துவ ஐசுவரிய
மாய்ப் பெருகின. அவர்கள் தங்கள் திரா 3
ணிக்குத்தக்கதாகவும் திராணிக்கு மிஞ்சியும்
சுயேச்சையாய்க் கொடுத்தார்களென்பதற்கு
நான் சாட்சி. இந்தக் கிருபையின் விஷய 4
மாக, அதாவது, பரிசுத்தவான்களுக்கென்று
செய்யும் இந்த ஊழியத்தில் தாங்கள் கலந்து
கொள்ளும் விஷயமாக எங்களை மிகவும்
வருந்தி வேண்டிக்கொண்டார்கள். நாங்கள் 5
விரும்பி எதிர்பார்த்தபடி அவர்கள் கொடா
மல், முதலாவது ஆண்டவருக்கும், பின்பு
கடவுளின் சித்தத்தினால் எங்களுக்கும் தங்
களைக் கொடுத்தார்கள். ஆதலால், தீத்து 6
முதலில் தொடங்கினபடியே, இந்தக் கிருபை
யையும் உங்களிடம் நிறைவேற்றும்படி
அவனைக் கேட்டுக்கொண்டோம். அல்லா 7
மலும், விசுவாசத்திலும், வாக்குவரத்திலும்,
அறிவிலும், சகலவித ஊக்கத்திலும், எங்கள்
மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லா
வற்றிலும் நீங்கள் பெருகியிருக்கிறதுபோல,
இந்தக் கிருபையிலும் பெருகியிருங்கள்.
இதை நான் கட்டளையாகச் சொல்லவில்லை. 8
மற்றவர்களின் ஊக்கத்தைக்கொண்டு உங்கள்
அன்பின் உண்மையைப் பரீட்சிக்கும்
பொருட்டே சொல்லுகிறேன். நம்முடைய 9
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிரு
பையை அறிந்திருக்கிறீர்களே. அவர்
ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவ
ருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்க
ளாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்திர
ரானாரே. இதைக்குறித்து என் யோசனையை 10
உங்களுக்கு அறிவிக்கிறேன்; இதைச் செய்
வதற்கு மாத்திரமல்ல, செய்ய விரும்புவதற்
கும் கடந்த வருஷத்திலேயே முதலில்
தொடங்கிய உங்களுக்கு இது நலமாயிருக்
கும். உற்சாகமான விருப்பம் இருந்தது 11
போலவே, உள்ளவைகளுக்குத் தக்கபடி
உங்கள் செய்கையும் நிறைவேறும்படிக்கு,
இப்பொழுது இதை நிறைவேற்றுங்கள்.
ஒருவனுக்கு உற்சாகமிருந்தால், அவனுக்கு 12
இல்லாததின்படியல்ல, உள்ளதின்படியே
அது அங்கீகரிக்கப்படும். மற்றவர்களுக்கு 13
இலகுவும் உங்களுக்குக் கஷ்டமும் உண்
டாகும்படி நான் இதைச் சொல்லாமல், சம
நிலையிருக்கும்படி இதைச் சொல்லுகிறேன்.
மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மிச்சமு 14
மில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக்

குறைவுமில்லை என்று எழுதியிருக்கிறபடி,
15 சமநிலையிருக்கத்தக்கதாக, அவர்கள் நிறைவு
உங்கள் குறைவில் உதவும்படி, தற்காலத்
தில் உங்கள் நிறைவு அவர்கள் குறைவில்
உதவுவதாக.
16 உங்கள்பேரில் எனக்குண்டான அதே
ஊக்கம் தீத்துவின் இருதயத்திலும் தோன்
றும்படி செய்த கடவுளுக்கு ஸ்தோத்திரம்.
17 நாங்கள் கேட்டுக்கொண்டதற்கு அவன்
உடன்பட்டதுமல்லாமல், சுயேச்சையாய்
அதிக ஊக்கமுள்ளவனாக உங்களிடம் வரப்
18 புறப்பட்டான். சுவிசேஷ ஊழியத்தில்
எல்லாச் சபைகளாலும் புகழப்பெற்ற
சகோதரனை அவனோடு அனுப்புகிறோம்.
19 அதுமாத்திரமல்ல, ஆண்டவருக்கே மகிமை
யுண்டாகவும் எங்கள் உற்சாகம் விளங்
கவும், எங்களால் நடத்தப்படும் இந்தத்
தர்ம விஷயமாய், சபைகளால் அவன்
எங்களுக்கு வழித்துணையாகத் தெரிந்து
20 ஏற்படுத்தப்பட்டவன். எங்கள் ஊழியத்
தின் மூலமாய்க் கிடைத்த இந்த மிகுதியான
தர்மப்பணத்தைப்பற்றி ஒருவனும் எங்க
ளைக் குற்றப்படுத்தாதபடி நாங்கள் எச்சரிக்
21 கையாயிருக்கிறோம். கர்த்தருக்கு முன்பாக
மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும்
யோக்கியமானவைகளைச் செய்ய நாங்கள்
22 கருத்தாயிருக்கிறோம். மேலும், ஊக்கமுள்
ளவனென்று அநேக காரியங்களில் நாங்கள்
பலமுறை கண்டறிந்தவனும், இப்பொழு
தும் உங்கள்மேலுள்ள மிகுந்த திடநம்பிக்
கையினாலே அதிக ஊக்கமுள்ளவனுமாகிய
நம் சகோதரனை இவர்களோடு அனுப்பு
23 கிறோம். தீத்து யாரென்றால், அவன் எனக்
குக் கூட்டாளி, உங்களுக்கென்று என்
உடன் ஊழியன்; நம்முடைய சகோதரர்
யாரென்றால், அவர்கள் சபைகளின் அப்
24 போஸ்தலர், கிறிஸ்துவின் மகிமை. ஆத
லால், உங்கள் அன்பையும் நாங்கள் உங்க
ளைப்பற்றிப் பெருமை பாராட்டிச் சொன்ன
தையும் சபைகள் காணும்படி அவர்களுக்கு
விளங்கப்பண்ணுங்கள்.

9 பரிசுத்தவான்களுக்கென்று செய்யும்
இந்த ஊழியத்தைக்குறித்து நான் உங்க
ளுக்கு அதிகமாய் எழுதவேண்டியதில்லை;
2 உங்கள் உற்சாகம் எனக்குத் தெரியும்;
அகாயா ஒரு வருஷமாக ஆயத்தமாயிருக்
கிறதென்று நான் உங்களைப்பற்றி மக்கெ
தோனியரிடம் பெருமையாய்ப் பேசினேன்;
உங்கள் ஊக்கம் பலரை எழுப்பிவிட்டது.
3 அப்படியிருந்தும், உங்களைக்குறித்து நாங்கள்
பெருமைபாராட்டினது இந்தக் காரியத்தில்
பொய்யாய்ப் போகாமலிருக்கவும், நான் முன்
சொன்னபடி நீங்கள் ஆயத்தப்பட்டவர்களா
யிருக்கவும் இந்தச் சகோதரரை அனுப்பு
கிறேன். மக்கெதோனியர் என்னோடு வந்து, 4
உங்களை ஆயத்தப்படாதவர்களாகக் கண்
டால், எங்களுக்கிருந்த நிச்சயத்தினிமித்
தம் நாங்கள் வெட்கப்படுவோம்; நீங்களும்
வெட்கப்படுவீர்களென்று சொல்லவும் வேண்
டுமோ? உங்கள் உபகாரம் லோபத்தனமா 5
யல்ல, நன்கொடையாகவே ஆயத்தமா
யிருக்கவேண்டுமென்பது என் நோக்கம்.
ஆகவே, சகோதரர் உங்களிடத்தில் வந்து,
நீங்கள் முன் வாக்குப்பண்ணின நன்
கொடையை ஆயத்தப்படுத்தும்படி, அவர்
களை ஏவி உங்களிடத்தில் முன்னதாகவே
அனுப்புவது அவசியமென்று எண்ணி
னேன்.
நான் சொல்லுகிறது இதுவே: சிறுக 6
விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக
விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவ 7
னவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயு
மல்ல, தன் மனத்தில் நியமித்தபடியே
கொடுக்கக்கடவன்; முகமலர்ந்து கொடுக்
கிறவனிடத்தில் கடவுள் பிரியமாயிருக்
கிறார். நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழு 8
தும் சர்வ சம்பூரணமுமுள்ளவர்களாய்,
சகலவித நற்கிரியைகளுக்கென்றும் பெரு
கும்படி, சகலவித கிருபையும் உங்களிடம்
பெருகச்செய்யக் கடவுள் வல்லவராயிருக்
கிறார்.
வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் 9
கொடுத்தான்,
அவன் நீதி என்றென்றைக்கும் நிற்கும்
என்று எழுதியிருக்கிறபடியாகும். விதைக் 10
கிறவனுக்கு விதையையும் புசிக்கிறதற்கு
ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கும்
விதையை அளித்து, அதைப் பெருகப்
பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்
திக்கச்செய்வார். நீங்கள் எவ்விஷயத்திலும் 11
எவ்வித உதாரத்துவத்திற்கென்றும் ஐசுவரிய
வான்களாவீர்கள். அதனால் எங்கள் மூல
மாய்க் கடவுளுக்கு நன்றியறிதலான ஸ்தோத்
திரம் உண்டாகும். தர்மப் பணிவிடை 12
யாகிய இந்த ஊழியம் பரிசுத்தவான்கள்
குறைவுகளை நிறைவாக்குகிறதுமல்லாமல்,
அநேகர் கடவுளுக்குச் செலுத்தும் ஸ்தோத்
திரங்களினால் விரிந்தும் பெருகுகிறது.
நீங்கள் அறிக்கையிடும் கிறிஸ்துவின் சுவி 13
சேஷத்திற்குக் கீழ்ப்படிந்ததினிமித்தமும்,
அவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் நீங்கள்
காட்டும் உதாரத்துவ ஐக்கியத்தினிமித்த
மும், இந்த ஊழியத்தின்மூலமாய் விளங்கின

உங்கள் உத்தமத்தை நினைத்து அவர்கள்
14 கடவுளை மகிமைப்படுத்தி, உங்களுக்காக
வேண்டுதல்செய்து, கடவுள் உங்களுக்குப்
பாராட்டின மிகப் பெரிதான கிருபையி
னிமித்தம் உங்கள்மேல் வாஞ்சையாயிருக்
15 கிறார்கள். கடவுள் அருளிய வாக்குக்கடங்
காத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்.

10 உங்கள் முன்னிலையில் தாழ்மையாயும்
தூரத்திலிருக்கும்போது தைரியமாயுமிருக்
கிற பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்
தையும் பொறுமையையும் முன்னிட்டு உங்
2 களைக் கேட்டுக்கொள்ளுகிறதாவது: நாங்கள்
மாம்சத்தின்படி நடக்கிறவர்களென்று
எண்ணுகிற சிலர் விஷயத்தில் துணிந்து
தீர்ப்பிடும்படி நான் மன உறுதியாயிருக்
கிறதுபோல், உங்கள் நடுவிலிருக்கும்போது
நான் தைரியங்காட்டுவதற்கு அவசியமிராத
படி பார்த்துக்கொள்ளவேண்டுமென்று உங்
3 களை வேண்டிக்கொள்ளுகிறேன். நாங்கள்
மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்
4 சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல. எங்கள்
போராயுதங்கள் மாம்சத்துக்குரியவைக
ளல்ல, அரண்களை அழிக்கிறதற்கு, கடவுள்
5 பார்வையில் பலமுள்ளவைகள். அவை
களால் நாங்கள் யுக்திகளையும் கடவுளை
அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற
எல்லா மேட்டிமையையும் அழித்து, எந்த
எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படி
6 யும்படி சிறைப்படுத்துகிறோம். உங்கள்
கீழ்ப்படிதல் பூரணப்படும்பொழுது, எவ்
வகைக் கீழ்ப்படியாமையையும் தண்டிக்க
ஆயத்தமாயிருக்கிறோம்.
7 வெளித்தோற்றத்தின்படி பார்க்கிறீர்களே.
ஒருவன் தான் கிறிஸ்துவினுடையவனென்று
நம்பினால் அவன் கிறிஸ்துவினுடையவனா
யிருக்கிறதுபோல நாங்களும் கிறிஸ்துவி
னுடையவர்களென்று அவன் எண்ணிக்
8 கொள்ளக்கடவன். உங்களை அழிப்பதற்
கல்ல, ஊன்றக் கட்டுவதற்கு ஆண்டவர்
எங்களுக்குக் கொடுத்திருக்கிற அதிகாரத்
தைப்பற்றி நான் சற்று அதிகமாய்ப் பெருமை
9 பாராட்டினாலும் வெட்கப்படேன். நிருபங்
களாலே நான் உங்களைப் பயமுறுத்துகிற
வனாய்க் காணப்படாதபடி இதைச் சொல்லு
10 கிறேன். அவனுடைய நிருபங்கள் பார
யோசனையும் பலமுமுள்ளவைகள், அவன்
தோற்றமோ பலவீனம், அவன் வார்த்தையும்
11 அற்பம் என்கிறார்களே. நாங்கள் தூரத்தி
லிருக்கும்போது நிருபங்களில் எங்கள்
வார்த்தை எப்படியிருக்கிறதோ, நாங்கள்
வரும்பொழுது எங்கள் செய்கையும் அப்
படியே இருக்குமென்று அப்படிப்பட்டவன்
எண்ணிக்கொள்ளக்கடவன்.
தங்களையே மெச்சிக்கொள்ளுகிற சிலருக்கு 12
நாங்கள் எங்களைச் சரியாக்கிக்கொள்ளவும்
ஒப்பிடவும் துணியோம்; தங்களைக்கொண்டே
தங்களை அளந்து, தங்களுக்கே தங்களை ஒப்
பிட்டுக்கொள்ளுகிற அவர்களுக்கு விவேகம்
இல்லை. நாங்களோ அளவுக்கு மிஞ்சிப் 13
பெருமைபாராட்டாமல், நாங்கள் உங்க
ளிடம்வரைக்கும் வந்தெட்டத்தக்கதாகக்
கடவுள் எங்களுக்குக் கொடுத்த பிரமாணத்
தின் அளவின்படி பெருமைபாராட்டுவோம்.
நாங்கள் உங்களிடம் வரைக்கும் வந்தெட் 14
டக்கூடாதவர்கள்போல, எங்கள் எல்லையை
மீறுகிறதில்லை; கிறிஸ்துவின் சுவிசேஷத்தில்
உங்களிடம் வரைக்கும் வந்து சேர்ந்திருக்
கிறோமே. மற்றவர்கள் செய்த ஊழியங் 15
களைப்பற்றி நாங்கள் அளவுக்குமிஞ்சிப்
பெருமை பாராட்டமாட்டோம். உங்கள்
விசுவாசம் பெருகும்போது, நாங்கள் உங்க
ளுக்குள் மிகவும் அதிகமாய் மேன்மை
யடைந்து, கடவுள் கொடுத்த பிரமாணத்துக்
கிசைய, உங்களுக்கு அப்பாலுள்ள பாகங்
களிலும் நற்செய்தியைப் பிரசங்கிக்கும்படி
இடம் பெறுவோமென்று நம்புகிறோம்.
மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பாகத் 16
தில், மற்றவர்களால் ஆயத்தமாக்கப்பட்ட
வைகளைக் குறித்து நாங்கள் பெருமை
பாராட்டமாட்டோம். பெருமைபாராட்டு 17
கிறவன் கர்த்தரைப்பற்றியே பெருமைபாராட்
டக்கடவன். தன்னைத்தான் மெச்சிக்கொள்ளு 18
கிறவன் உத்தமனல்ல, ஆண்டவர் மெச்சிக்
கொள்ளுகிறவனே உத்தமன்.

நான் கொஞ்சம் புத்தியீனமாய்ப் பேசு 11
கிறேன்; நீங்கள் இதைப் பொறுத்துக்கொண்
டால் நலமாயிருக்கும், பொறுத்தும் இருக்
கிறீர்களே. நான் உங்களைப்பற்றிக் கொண் 2
டிருக்கிற வைராக்கியம் தெய்வ வைராக்
கியம். சற்புள்ள கன்னிகையாக உங்களை
ஒரே புருஷனுக்கு, அதாவது கிறிஸ்து
வுக்கு, ஒப்புக்கொடுக்க நியமித்திருக்கிறேன்.
ஆகிலும், சர்ப்பமானது தன் தந்திரத்தினால் 3
ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனம்
கிறிஸ்துவின்மேலுள்ள கபடற்ற பக்தியையும்
கற்பையும் விட்டு விலகிக் கெட்டுப்போகுமோ
வென்று பயப்படுகிறேன். ஏனெனில், 4
ஒருவன் வந்து நாங்கள் பிரசங்கியாத
வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தால்,
அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவி
யையும் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவி
சேஷத்தையும் நீங்கள் பெற்றுக்கொண்டால்,

உங்கள் பொறுமை மிக அழகுதான்!
5 ஆயினும் மகா பிரதான அப்போஸ்தலர்
களிலும் நான் ஒன்றிலும் குறைவுள்ளவ
6 னல்லவென்று எண்ணுகிறேன். நான் பேச்
சில் சாமானியனாயிருந்தும் அறிவில் சாமா
னியனல்ல; எவ்விஷயத்திலும் எல்லாருக்
குள்ளேயும் இந்த அறிவை உங்களுக்கு
வெளிப்படுத்தியிருக்கிறோம்.
7 நீங்கள் உயர்த்தப்படும்படி நான் என்
னைத்தானே தாழ்த்தி, கடவுளின் சுவிசே
ஷத்தை உங்களுக்கு இலவசமாய்ப் பிரசங்
8 கித்தது பாவமோ? உங்களுக்கு ஊழியஞ்
செய்வதற்கு மற்றச் சபைகளிடம் சம்பளத்
தைப் பெற்று அவர்களை நான் கொள்ளை
9 யிட்டேன். நான் உங்களோடிருக்கையில்
எனக்குக் குறைச்சல் நேரிட்டபோதும்,
நான் ஒருவருக்கும் பாரமாயிருக்கவில்லை;
மக்கெதோனியாவிலிருந்து வந்த சகோதரர்
என் குறைவை நிறைவாக்கினார்கள்; எவ்
வகையிலும் உங்களுக்குப் பாரமாயிராதபடி
பார்த்துக்கொண்டேன். இனிமேலும் பார்த்
10 துக்கொள்ளுவேன். என்னைப்பற்றிய இந்தப்
புகழ்ச்சி அகாயாவின் பிரதேசங்களில் பர
வாதபடி ஒருவனும் தடைசெய்வதேயில்லை
என்று என்னிலுள்ள கிறிஸ்துவின் சத்தியத்
11 தைக்கொண்டு சொல்லுகிறேன். இதெல்
லாம் ஏன்? நான் உங்களில் அன்புகூராத
படியினாலேயோ? கடவுளுக்குத் தெரியும்.
12 ஆயினும், எங்களை விரோதிக்கச் சமயந்தேடு
கிறவர்களுக்குச் சமயம் கிடையாதபடிக்கு,
அவர்கள் பெருமை பாராட்டுகிற காரியத்
தில் எங்களைப்போலவே காணப்படும்படி,
நான் செய்கிறதையே இன்னும் செய்வேன்.
13 அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்
தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள்,
கிறிஸ்துவின் அப்போஸ்தலருடைய வேஷம்
14 போட்டுக்கொள்ளுகிறவர்கள். இது ஆச்
சரியமல்ல, சாத்தான் தானும் ஒளியின்
தூதனாக வேஷம் போட்டுக்கொள்ளு
15 கிறானே. ஆகவே, அவன் ஊழியக்காரர்
நீதியின் ஊழியக்காரரின் வேஷம் போட்டுக்
கொண்டால் அது பெரிதல்ல. அவர்கள்
முடிவு அவர்கள் செய்கைகளுக்குத் தக்கதா
யிருக்கும்.
16 பின்னும் நான் சொல்லுகிறேன்: ஒருவ
னும் என்னைப் புத்தியீனனென்று எண்ண
வேண்டாம்; அப்படி எண்ணிக்கொண்டா
லும் நானும் சற்றே பெருமைபாராட்டும்
படி, புத்தியீனனைப்போலாகிலும் என்னை
17 ஏற்றுக்கொள்ளுங்கள். இப்படி நான் பேசு
கிறது ஆண்டவருக்கேற்றபடி பேசாமல்,
பெருமைபாராட்டும் என் தைரியத்தினால்
புத்தியீனனைப்போல் பேசுகிறேன். அநேகர் 18
மாம்சத்தின்படி பெருமைபாராட்டுகிறார்கள்;
நானும் பெருமைபாராட்டுவேன். புத்தி 19
யுள்ள நீங்கள் புத்தியீனரைச் சந்தோஷ
மாய்ப் பொறுத்துக்கொள்ளுகிறீர்களே. ஒரு 20
வன் உங்களை அடிமையாக்கினாலும், ஒருவன்
உங்களைப் பட்சித்தாலும், ஒருவன் உங்களைக்
கைவசப்படுத்தினாலும், ஒருவன் தன்னை
உயர்த்தினாலும், ஒருவன் உங்களை முகத்தில்
அறைந்தாலும் பொறுத்துக்கொள்ளுகிறீர்
களே. எங்களைப் பலவீனராகப் பாவித்து, 21
அவமானப்பட்டவனாய் இப்படிப் பேசு
கிறேன். ஒருவன் எதிலே துணிவாயிருக்
கிறானோ அதிலே நானும் துணிவாயிருக்
கிறேன்; புத்தியீனனாய் இப்படிப் பேசு
கிறேன். அவர்கள் எபிரேயரா? நானும் 22
எபிரேயன்; அவர்கள் இஸ்ரவேலரா? நானும்
இஸ்ரவேலன்; அவர்கள் ஆபிரகாமின் சந்ததி
யாரா? நானும் ஆபிரகாமின் சந்ததியான்.
அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் 23
அதிகம்; மதிமயங்கினவனாய்ப் பேசுகிறேன்:
நான் அதிகமாய் உழைத்தவன், அதிகமாய்க்
காவல்களில் வைக்கப்பட்டவன், மிகுதியாய்
அடிபட்டவன், பலமுறை மரண அவதி
களில் அகப்பட்டவன், ஒன்றுகுறைய நாற் 24
பது அடியாக ஐந்துதரம் யூதர்களால் அடி
பட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடி 25
பட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன்,
மூன்றுதரம் கப்பற்சேதத்தில் அகப்பட்
டேன், நடுக்கடலிலே ஒரு இராப்பகல் போக்
கினேன்; பலமுறை பிரயாணம்பண்ணி 26
னேன்; ஆறுகளால் உண்டான மோசங்களி
லும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என்
ஜனத்தால் நேரிட்ட மோசங்களிலும், புற
ஜாதியாரால் ஏற்பட்ட மோசங்களிலும்,
நகரத்திலும் வனாந்தரத்திலும் சமுத்திரத்
திலும் நேரிட்ட மோசங்களிலும், கள்ளச்
சகோதரரால் உண்டான மோசங்களிலும், |
உழைப்பிலும் களைப்பிலும், பலமுறை கண் 27
விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், பல
முறை உபவாசங்களிலும், குளிரிலும் நிர்வா
ணத்திலும் இருந்தேன். இவைபோன்றவை 28
களேயல்லாமல், எல்லாச் சபைகளையும்பற்
றிய கவலையும் என்னை நாள்தோறும் நெருக்கு
கிறது. ஒருவன் பலவீனனானால் நானும் 29
பலவீனனாகிறதில்லையோ? ஒருவன் இடறி
விழுந்தால் என் மனம் எரியாதோ? நான் 30
பெருமைபாராட்டவேண்டுமானால் என் பல
வீனத்திற்குரியவைகளைப்பற்றிப் பெருமை
பாராட்டுவேன். நான் பொய் சொல்லுகிற 31
தில்லையென்று ஆண்டவராகிய இயேசுவின்
கடவுளும் பிதாவுமானவருக்குத் தெரியும்;

இவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரத்துக்
32 குரியவர். தமஸ்கு பட்டணத்தில் அரேத்தா
ராஜாவின் அதிபதி என்னைப் பிடிக்கவேண்டு
மென்று தமஸ்கருடைய பட்டணத்தைக்
33 காவல்வைத்துக் காத்துவருகையில், நான்
மதிலிலிருந்து ஜன்னல் வழியாய்க் கூடை
யில் இறக்கிவிடப்பட்டு அவன் கைக்குத்
தப்பினேன்.

12 நான் பெருமைபாராட்டவேண்டியது
தான்; அது நல்லதல்ல; ஆயினும், ஆண்ட
வர் அருளிய தரிசனங்களையும் வெளிப்படுத்
2 தல்களையும் சொல்லுகிறேன். கிறிஸ்துவுக்குள்
ளான ஒரு மனுஷனை அறிவேன்; பதினாலு
வருஷங்களுக்குமுன் அவன் மூன்றாம்
வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன்
சரீரத்திலிருந்தானோ சரீரத்திற்குப் புறம்பே
யிருந்தானோ அது எனக்குத் தெரியாது;
3 கடவுளுக்கே தெரியும். அந்த மனுஷன்
பரதீசுக்குள் எடுக்கப்பட்டான்.—அவன்
சரீரத்திலிருந்தானோ சரீரமில்லாதிருந்தானோ
அது எனக்குத் தெரியாது; கடவுளுக்கே
4 தெரியும்.—மனுஷர் பேசக்கூடாததும் வாக்
குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளை அங்கே
5 கேட்டானென்பதையும் அறிவேன். இப்
படிப்பட்டவனைப்பற்றிப் பெருமைபாராட்டு
வேன்; என்னைப்பற்றியோ என் பலவீனங்
களைக்குறித்தேயன்றி வேறொன்றைக் குறித்
6 தும் பெருமைபாராட்டமாட்டேன். நான்
பெருமைபாராட்ட விரும்பினாலும் புத்தியீன
னல்ல, நான் சொல்லுவது உண்மை. என்
னிடம் காண்கிறதற்கும் கேட்கிறதற்கும்
மேலாக ஒருவனும் என்னைப்பற்றி எண்ணாத
7 படி பெருமைபாராட்டாதிருப்பேன். எனக்கு
அருளப்பட்ட வெளிப்படுத்தல்கள் மகத்துவ
மானவைகளானதால், நான் என்னை அதிக
மாய் உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்தில்
ஒரு முள் கொடுக்கப்பட்டது; என்னை நான்
அதிகமாய் உயர்த்தாதபடி, அது என்னைக்
8 குட்டும் சாத்தானின் தூதன். அது என்னை
விட்டு நீங்கவேண்டுமென்று நான் ஆண்டவ
ரிடம் மூன்றுதரம் அதைப்பற்றி வேண்டு
9 தல்செய்தேன். அவரோ என்னிடம்: என்
கிருபை உனக்குப் போதும், பலவீனத்தில்
என் வல்லமை பூரணமாய் விளங்கும்
என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்
லமை என்மேல் அமர்ந்திருக்கும்படி, என்
பலவீனங்களைப்பற்றி நான் மிகவும் சந்தோஷ
10 மாய்ப் பெருமைபாராட்டுவேன். ஆகையால்,
கிறிஸ்துவினிமித்தம் எனக்கு நேரிடும் பல
வீனங்களிலும், அவமானங்களிலும், நெருக்
கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்
களிலும் நான் பிரியங்கொள்ளுகிறேன். நான்
பலவீனனாயிருக்கும்போதே வல்லமையுள்ள
வனாயிருக்கிறேன்.

நான் புத்தியீனனானேன்; இதற்கு என்னை 11
நீங்களே கட்டாயப்படுத்தினீர்கள். நீங்கள்
தான் என்னை மெச்சிக்கொள்ளவேண்டியதா
யிருந்தது. நான் ஒன்றுமில்லை; ஆகிலும்
மகா பிரதான அப்போஸ்தலர்களைவிட எவ்
வகையிலும் நான் குறைவுள்ளவனல்ல. அப் 12
போஸ்தலனுக்குரிய சின்னங்கள், அதாவது,
அற்புதங்களும் அடையாளங்களும் வல்ல
செயல்களும், எல்லாப் பொறுமையோடும்
உங்கள் நடுவில் நிறைவேறின. நான் உங்க 13
ளுக்குப் பாரமாயிராததைத் தவிர வேறெந்த
விஷயத்தில் நீங்கள் மற்றச் சபைகளுக்குத்
தாழ்வாயிருந்தீர்கள்? இந்த அநியாயத்தை
எனக்கு மன்னியுங்கள்.

இப்பொழுது, மூன்றாந்தரம் உங்களிடம் 14
வர ஆயத்தமாயிருக்கிறேன்; நான் உங்களுக்
குப் பாரமாயிருக்கமாட்டேன்; உங்க
ளுடையவைகளையல்ல உங்களையே ஆசிக்
கிறேன்; பெற்றோருக்குப் பிள்ளைகளல்ல,
பிள்ளைகளுக்குப் பெற்றோரே ஆஸ்தியைச்
சேர்த்துவைக்கவேண்டும். ஆதலால் நான் 15
உங்கள் ஆத்துமாக்களுக்காக மிகவும் சந்
தோஷமாய்ச் செலவுபண்ணவும், முழுவதும்
செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்.
உங்கள் மேலுள்ள என் அன்பு பெருகப்
பெருக, என்மேலுள்ள உங்கள் அன்புகுறை
கிறதோ? அது இருக்கட்டும்; நான் உங் 16
களுக்குப் பாரமாயிருக்கவில்லை; ஆயினும்
தந்திரமுள்ளவனாயிருந்து வஞ்சகத்தினால்
உங்களைப் பிடித்தேனாம். நான் உங்களிடம் 17
அனுப்பினவர்களில் எவன்மூலமாயாவது
உங்களிடம் லாபத்தைத் தேடியடைந்த
துண்டா? உங்களிடம் போகும்படி நான் 18
தீத்துவைக் கேட்டுக்கொண்டு, நம்முடைய
சகோதரனையும் அவனோடுகூட அனுப்பி
னேன்; தீத்து உங்களிடம் ஏதாவது லாபத்
தைத் தேடியடைந்ததுண்டா? நாங்கள் அதே
ஆவியையுடையவர்களாய், அதே அடிச்சுவடு
களில் நடக்கவில்லையா?

நாங்கள் உங்களிடம் பிரதிவாதஞ்செய் 19
கிறோமென்று இவ்வளவு நேரமும் நினைத்
துக்கொண்டிருக்கிறீர்களோ? கடவுளுக்கு
முன் கிறிஸ்துவுக்குள் பேசுகிறோம். பிரிய
மானவர்களே, எல்லாவற்றையும் உங்கள்
பக்திவிருத்திக்கென்று செய்கிறோம். ஏனெ 20
னில், நான் வரும்போது, ஒருவேளை உங்களை
நான் விரும்புகிறபடி இருக்கிறவர்களாகக்
காணமலும், நானும் நீங்கள் விரும்புகிறபடி
இருக்கிறவனாக உங்களுக்குக் காணப்படா

மனுமிருப்பேனோவென்றும், சண்டை,
பொறாமை, கோபம், முரட்டாட்டம், அவ
தூறுபண்ணுதல், புறங்கூறுதல், இறு
மாப்பு, கலகம் முதலியவைகள் உங்களி
21 லிருக்குமோவென்றும், நான் மறுபடியும்
வரும்போது என் கடவுள் என்னை உங்கள்
விஷயமாய்த் தாழ்த்த நேரிடுமோவென்றும்,
முன் பாவஞ்செய்து தாங்கள் நடப்பித்த
அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் காம
விகாரத்தையும் விட்டு மனந்திரும்பாமலிருக்
கும் அநேகரைக்குறித்து நான் துக்கப்பட
நேரிடுமோவென்றும் பயந்திருக்கிறேன்.

13 நான் இப்போது மூன்றுந்தரம் உங்க
ளிடம் வருகிறேன். இரண்டு சாட்சிகளின்
வாக்கினாலாவது மூன்று சாட்சிகளின் வாக்
கினாலாவது எந்தக் காரியமும் நிலைவரப்
2 படும். நான் இரண்டாந்தரம் உங்களிடத்தி
லிருந்தபோது முன்னமே சொன்னதையும்,
இப்பொழுது தூரத்திலிருக்கும்போது முன்
னதாகவே சொல்லுகிறதையும், முன் பாவஞ்
செய்தவர்களுக்கும் மற்ற யாவருக்கும்
சொல்லுகிறேன்: நான் மறுபடியும் வருவே
3 னானால் தண்டியாமல்விடேன். கிறிஸ்து
எனக்குள் பேசுகிறார் என்பதற்கு அத்தாட்சி
தேடுகிறீர்களே; அவர் உங்கள் விஷயமாய்ப்
பலவீனரல்ல, உங்களுக்குள் வல்லவரா
4 யிருக்கிறார். அவர் பலவீனராய்ச் சிலுவை
யில் அறையுண்டிருந்தும், கடவுளின் வல்ல
மையினால் பிழைத்திருக்கிறார்; அப்படியே
நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும்,
உங்கள் விஷயமாய் விளங்கிய கடவுளின்
வல்லமையினால் அவரோடுகூட பிழைத்
திருப்போம்.
5 விசுவாசத்தில் நிலைக்கிறீர்களோ வென்று
உங்களை நீங்களே சோதித்தறியுங்கள், உங்
களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள்.
இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறா
ரென்று உங்களை நீங்களே அறியாதிருக்கிறீர்
களோ? நீங்கள் ஆகாதவர்களென்று தள்ளப்
படாவிட்டால் அறிவீர்கள். நாங்கள் ஆகா 6
தவர்களென்று தள்ளப்பட்டவர்களல்ல
வென்பதையும் நீங்கள் அறிவீர்களென்று
நம்புகிறேன். நீங்கள் தீமையொன்றும் 7
செய்யாதிருக்கும்படியாகக் கடவுளை நோக்கி
விண்ணப்பம் பண்ணுகிறோம். நாங்கள்
உத்தமரென்று காணப்படும் பொருட்டல்ல,
நாங்கள் ஆகாதவர்களென்று தள்ளப்பட்ட
வர்கள்போலிருந்தாலும், நீங்கள் நன்மையா
னதைச் செய்யும்பொருட்டே விண்ணப்பம்
பண்ணுகிறோம். சத்தியத்திற்கு விரோதமாக 8
நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது; சத்தியத்
திற்கு அனுகூலமாகவே எல்லாவற்றையும்
செய்கிறோம். நாங்கள் பலவீனரும் நீங்கள் 9
பலமுள்ளவர்களுமாயிருக்கும்போதெல்லாம்
சந்தோஷப்படுகிறோம். நீங்கள் சம்பூரண
ராகவேண்டுமென்றே விண்ணப்பம்பண்ணு
கிறோம். ஆகையால், இடித்துப்போடுவதற் 10
கென்றல்ல ஊன்றக் கட்டுவதற்கென்றே
ஆண்டவர் எனக்குக் கொடுத்திருக்கிற அதி
காரத்தின்படி, நான் உங்களிடம் வந்திருக்
கும்போது கண்டிப்பாயிருக்க நேரிடாத
படிக்கு, நான் தூரத்திலிருக்கையில் இவை
களை எழுதுகிறேன்.
கடைசியாக, சகோதரரே, சந்தோஷமா 11
யிருங்கள், சம்பூரணராகுங்கள், ஆறுத
லடையுங்கள், ஏகசிந்தையாயிருங்கள், சமா
தானமாயிருங்கள்; அப்பொழுது அன்புக்
கும் சமாதானத்துக்கும் காரணராகிய கட
வுள் உங்களோடிருப்பார். ஒருவரையொரு 12
வர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்.
பரிசுத்தவான்களனைவரும் உங்களை வாழ்த்து
கிறார்கள்.
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிரு 13
பையும், கடவுளின் அன்பும், பரிசுத்த ஆவி
யின் ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட
இருப்பதாக.

கலாத்தியருக்கு எழுதின நிருபம்

1 மனுஷரிடமிருந்துமல்ல, மனுஷனாலு
மல்ல, இயேசுகிறிஸ்துவினாலும் அவரை
மரித்தோரிலிருந்து எழுப்பின பிதாவாகிய
கடவுளாலும் அப்போஸ்தலனாகிய பவுலும்,
2 என்னோடிருக்கிற சகோதரரனைவரும் கலாத்
தியா நாட்டிலுள்ள சபைகளுக்கு எழுதுவ
3 தாவது: நம்முடைய பிதாவாகிய கடவுளிட
மிருந்தும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவி
னிடமிருந்தும் உங்களுக்குக் .கிருபையும்
4 சமாதானமும் உண்டாவதாக; இப்பொழு
திருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று
நம்மை விடுவிக்கும்படி, நம்முடைய கடவு
ளும் பிதாவுமானவரின் சித்தப்படியே, இவர்
நமது பாவங்களுக்காகத் தம்மை ஒப்புக்
5 கொடுத்தார்; அவருக்கே என்றென்றைக்கும்
மகிமை உண்டாவதாக; ஆமேன்.

6 கிறிஸ்துவின் கிருபையினால் உங்களை
அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிர
மாய் விட்டு, மற்றொரு சுவிசேஷத்திற்குத்
7 திரும்புவது எனக்கு ஆச்சரியம். அது
வேறொரு சுவிசேஷம் அல்லவே; சிலர் உங்
களைக் கலங்கச்செய்து, கிறிஸ்துவின் சுவி
சேஷத்தைப் புரட்ட விரும்புகிறார்களே
8 யன்றி வேறல்ல. நாங்கள் உங்களுக்குப்
பிரசங்கித்த சுவிசேஷத்திற்கு மாறாக, நாங்க
ளாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூத
னாவது வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்
குப் பிரசங்கிப்பானேயாகில், அவன் சாபத்
9 துக்குள்ளாகக்கடவன். நாங்கள் முன்
சொன்னதையே இப்போது மறுபடியும்
சொல்லுகிறேன்: நீங்கள் ஏற்றுக்கொண்ட
சுவிசேஷத்திற்கு மாறான சுவிசேஷத்தை
ஒருவன் உங்களுக்குப் பிரசங்கிக்கிறதா
யிருந்தால், அவன் சாபத்துக்குள்ளாகக்
கடவன்.

10 இப்பொழுது நான் மனுஷரைப் பிரியப்
படுத்தப் பார்க்கிறேனா, கடவுளைப் பிரியப்
படுத்தப் பார்க்கிறேனா? மனுஷர் தயவை
நாடுகிறேனா? நான் இன்னும் மனுஷர்
தயவை நாடுகிறவனேயானால், கிறிஸ்துவின்
11 அடியான் அல்ல. சகோதரரே, நான் பிரசங்
கிக்கிற சுவிசேஷம் மனுஷ யோசனையின்படி
யானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்
12 கிறேன். நான் அதை மனுஷனிடத்தி
லிருந்து பெற்றதுமில்லை கற்றதுமில்லை;
இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்
படுத்தினார். நான் யூத மார்க்கத்திலிருந்த 13
போது என் நடக்கையைப்பற்றிக் கேள்விப்
பட்டிருக்கிறீர்கள். கடவுளின் சபையை
நான் மிகவும் துன்பப்படுத்திப் பாழாக்கி
வந்தேன். என் பிதாக்களின் பாரம்பரியங் 14
களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ள
வனாய், என் ஜனத்தாரில் என் வயதுள்ள
அநேகரைப்பார்க்கிலும் யூத மார்க்கத்தில்
தேறினவனானேன். என்றாலும், என் தாயின் 15
கர்ப்பத்திலிருந்ததுமுதல் என்னைப் பிரித்
தெடுத்து, தமது கிருபையினால் அழைத்த
வர், தம்முடைய குமாரனை நான் புறஜாதிக 16
ளிடத்தில் நற்செய்தியாய் அறிவிக்கும்
பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்
படுத்தப் பிரியங்கொண்டபோது, உடனே
நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும்
ஆலோசனைபண்ணாமலும், எனக்கு முன்னே 17
அப்போஸ்தலரானவர்களிடம் எருசலேமுக்
குப் போகாமலும், அரபிதேசத்திற்குப் போய்
மறுபடியும் தமஸ்குவுக்குத் திரும்பிவந்தேன்.
அப்பால் மூன்றுவருஷம் சென்றபின்பு, 18
கேபாவைக் கண்டுகொள்ளும்படி நான்
எருசலேமுக்குப் போய் அவனோடு பதி
னைந்து நாள் தங்கியிருந்தேன். ஆண்டவ 19
ரின் சகோதரன் யாக்கோபைத்தவிர அப்
போஸ்தலரில் வேறொருவரையும் நான் காண
வில்லை. நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் 20
பொய்யல்ல, கடவுளுக்கு முன் சொல்லு
கிறேன். அப்பால் சீரியா சிலிசியா பிரதே 21
சங்களில் வந்தேன். ஆயினும், யூதேயா 22
வில்கிறிஸ்துவுக்குள்ளான சபைகளுக்கு முக
மறியாதவனாயிருந்தேன். முன் நம்மைத் துன் 23
பப்படுத்தினவனே, தான் முன் பாழாக்கிவந்த
விசுவாசத்தை இப்பொழுது நற்செய்தி
யாகப் பிரசங்கிக்கிறானென்பதை மாத்திரம்
அவர்கள் கேள்விப்பட்டிருந்து, என்னிமித் 24
தம் கடவுளை மகிமைப்படுத்தினார்கள்.

அப்பால், பதினாலுவருஷம் சென்றபின்பு, 2
நான் பர்னபாவோடு மறுபடியும் எருசலே
முக்குப் போனேன்; தீத்துவையும் கூட்டிக்
கொண்டு போனேன். கடவுள் வெளிப் 2

படுத்திய பிரகாரம் அங்கே போய், புறஜாதி
களுக்குள் நான் பிரசங்கித்துவருகிற சுவி
சேஷத்தை அவர்களுக்கு விவரித்துக் காட்டி
னேன். ஆயினும், நான் ஓடுகிறதும் ஓடின
தும் வீணாகாதபடி, மதிப்புள்ளவர்களுக்கே
தனிமையாய் அதை விவரித்துக்காட்டி
3 னேன். ஆனாலும், என்னோடிருந்த தீத்து
கிரேக்கனாயிருந்தும் விருத்தசேதனஞ் செய்து
கொள்ளக் கட்டாயம்பண்ணப்படவில்லை.
4 நம்மை அடிமைத்தனத்துக்குள்ளாக்க
வேண்டுமென்று, கிறிஸ்து இயேசுவில் நமக்
குண்டான சுயாதீனத்தை உளவு பார்க்கும்
படி பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோ
5 தரர் நிமித்தம் இப்படியாயிற்று. சுவிசே
ஷத்தின் சத்தியம் உங்களிடத்தில் நிலைத்
திருக்கும்படி, நாங்கள் ஒரு நாழிகையேனும்
அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இணங்கவில்லை.
6 ஏதோ விசேஷமானவர்களாக மதிக்கப்பட்ட
வர்கள்—இவர்கள் முன்னே எப்படிப்பட்ட
வர்கள் என்பதைப்பற்றி எனக்குக் கவை
யில்லை; கடவுள் மனுஷரிடத்தில் பட்சபாத
முள்ளவரல்ல — மதிக்கப்பட்ட அவர்கள்
எனக்குப் புதியதொன்றையும் சற்பிக்கவில்லை.
7 அதுவுமல்லாமல், விருத்தசேதனமுள்ளவர்
களுக்கு அப்போஸ்தலனாகும்படி பேதுருவில்
கிரியை செய்தவர் விருத்தசேதனமில்லாத
வர்களுக்கு அப்போஸ்தலனாகும்படி என்னி
8 லும் கிரியை செய்தபடியால், விருத்தசேதன
முள்ளவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி சுவி
சேஷத்தைப் பேதுருவினிடம் அவர் ஒப்பு
வித்ததுபோல, விருத்தசேதனம் இல்லாத
வர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அதை என்
னிடம் ஒப்புவித்ததாகவும் அவர்கள் கண்டு,
9 எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்த
போது, தூண்களாக மதிக்கப்பட்ட யாக்
கோபும் கேபாவும் யோவானும், தாங்கள்
விருத்தசேதனமுள்ளவர்களுக்கும் நாங்கள்
புறஜாதியாருக்கும் பிரசங்கிக்கும்படி,
அன்னியோன்னிய ஐக்கியத்திற்கு அடை
யாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலது
10 கை கொடுத்தார்கள். தரித்திரரை நினைத்
துக்கொள்ள வேண்டுமென்பதை மாத்திரம்
சொன்னார்கள்; அந்தப்படி செய்ய நானும்
உற்சாகங்கொண்டிருந்தேன்.

11 கேபா அந்தியோகியாவுக்கு வந்தபோது,
அவன் குற்றஞ்செய்தவனாகக் காணப்பட்ட
தால் நான் முகமுகமாய் அவனை எதிர்த்
12 தேன். எப்படியென்றால், யாக்கோபினிட
மிருந்து சிலர் வருமுன்னே அவன் புறஜாதி
யாருடன் சாப்பிட்டுவந்தான்; அவர்கள்
வந்தபோதோ, விருத்தசேதனக் கட்சியாருக்
குப் பயந்து, விலகிப் பிரிந்துகொண்டான்.
மற்ற யூதரும் அவனோடே மாயம்பண்ணவே, 13
அவர்கள் மாயத்தினாலே பர்னபாவும் இழுப்
புண்டான். இப்படி அவர்கள் சுவிசேஷ 14
சத்தியததிற்கு நேராய் நடவாததை நான்
கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக
நான் பேதுருவுக்குச் சொன்னதாவது: யூதனா
யிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவா
மல் புறஜாதியார் முறைமையாக நடந்து
கொண்டிருக்க, புறஜாதியாரை யூதர் முறை
மையாக நடக்கும்படி நீர் கட்டாயம்பண்ணு
வது எப்படி? சுபாவத்தின்படி நாம் யூதர், 15
புறஜாதியாரில் பிறந்த பாவிகளல்ல; அப் 16
படியிருந்தும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும்
விசுவாசத்தினாலேயன்றி நியாயப்பிரமாணக்
கிரியைகளினால் மனுஷன் நீதிமானாகத் தீர்க்
கப்படுவதில்லை யென்று அறிந்தவர்களாய்,
நியாயப்பிரமாணக் கிரியைகளினாலல்ல
கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதி
மான்களாகத் தீர்க்கப்படும்படி, நாமும்
கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசம் வைத்
தோம். நியாயப்பிரமாணக் கிரியைகளினாலே
மனுமக்களில் எவனும் நீதிமானாகத் தீர்க்கப்
படுவதில்லையே. கிறிஸ்துவுக்குள் நீதிமான்க 17
ளாகத் தீர்க்கப்படும்படி நாடுகிறபோதே,
நாமும் பாவிகளாகக் காணப்படுவோ
மானால், கிறிஸ்து பாவத்துக்கு ஊழியக்
காரரோ? அல்லவே அல்ல. நான் இடித்துப் 18
போட்டவைகளையே திரும்பக் கட்டினால்,
பிரமாணத்தை மீறுகிறவனாக என்னை நானே
காட்டுகிறவனாவேன். கடவுளுக்கென்று 19
பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தி
னாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே.
கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்டேன்;
பிழைத்திருக்கிறது இனி நான் அல்ல, 20
கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்;
நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்
திருக்கிறது, என்னில் அன்புகூர்ந்து எனக்
காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவ
குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்
திருக்கிறேன். நான் கடவுளின் கிருபையை 21
அவமாக்குகிறதில்லை; நியாயப்பிரமாணத்தி
னால் நீதி உண்டானால், கிறிஸ்து மரித்திருக்க
வேண்டியதில்லையே.

பத்தியில்லாத கலாத்தியரே, உங்களை மயக் **3**
கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையில்
அறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு
முன் வரைந்து காட்டப்பட்டிருந்தாரே.
ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிந்து 2
கொள்ள விரும்புகிறேன்: நீங்கள் ஆவியான
வரைப் பெற்றது நியாயப்பிரமாணக் கிரியை
களினாலா, விசுவாசக் கேள்வியினாலா? ஆவி 3

யில் தொடங்கின நீங்கள் இப்பொழுது
மாம்சத்தில் முடிக்கப் போகிறீர்களோ?
4 நீங்கள் இத்தனை புத்தியீனரா? | இத்தனை
பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களா? உள்ள
5 படி அவைகள் வீணாகுமோ? உங்களுக்கு
ஆவியானவரை அளித்து, உங்களுக்குள்ளே
வல்லசெய்கைகளை நடப்பிக்கிறவர், நியாயப்
பிரமாணத்தின் கிரியைகளைக்கொண்டு அவற்
றைச் செய்கிறாரோ, விசுவாசக் கேள்வியைக்
கொண்டு செய்கிறாரோ?
6 அப்படியே, ஆபிரகாம் கடவுளில் விசு
வாசம் வைத்தான், அது அவனுக்கு நீதி
7 யாக எண்ணப்பட்டது. ஆகவே, விசுவாச
மார்க்கத்தாரே ஆபிரகாமின் புத்திரரென்று
8 அறிந்துகொள்ளுங்கள். மேலும், விசுவா
சத்தினாலே கடவுள் புறஜாதிகளை நீதிமான்
களாகத் தீர்க்கிறார் என்று வேதவாக்கியம்
முன்னாகக் கண்டு: சகல ஜாதிகளும் உனக்
குள் ஆசீர்வதிக்கப்படுமென்று ஆபிரகா
முக்கு நற்செய்தியாக முன்னறிவித்தது.
9 ஆதலால், விசுவாச மார்க்கத்தார் விசுவாச
முள்ள ஆபிரகாமோடு ஆசீர்வதிக்கப்படு
10 கிறார்கள். நியாயப்பிரமாணக் கிரியா மார்க்
கத்தார் அனைவரும் சாபத்திற்காளானவர்கள்;
நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதப்
பட்ட யாவற்றையும் செய்யத்தக்கதாக அவற்
றில் நிலைத்திராதவன் எவனோ அவன் சாபத்
திற்காளானவன் என்று எழுதியிருக்கிறதே.
11 நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் கடவு
ளிடத்தில் நீதிமானாகத் தீர்க்கப்படுகிறதில்லை
என்பது தெளிவாயிருக்கிறது. எப்படி
யெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்
12 பான். நியாயப்பிரமாணமோ விசுவாச மார்க்
கத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற
13 வனே அவைகளால் பிழைப்பான். மரத்
திலே தூக்கப்பட்ட எவனும் சாபத்திற்குள்
ளானவனென்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து
நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின்
சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்
14 கொண்டார். ஆவியைப்பற்றிய வாக்குத்தத்
தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படி
யாகவும், ஆபிரகாமின் ஆசீர்வாதம் கிறிஸ்து
இயேசுவில் புறஜாதிகளுக்குக் கிடைக்கும்
படியாகவும் இப்படிச் செய்தார்.
15 சகோதரரே, மனுஷர் பேசுகிற பிரகாரம்
பேசுகிறேன்: மனுஷர் செய்யும் உடன்
படிக்கை உறுதிபண்ணப்பட்டபின், அதை
ஒருவனும் ரத்துபண்ணுகிறதுமில்லை, அத
னோடே ஒன்றையும் கூட்டுகிறதுமில்லை.
16 ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் வாக்
குத்தத்தங்கள் செய்யப்பட்டன; சந்ததி
களுக்கு என்று அநேகரைக் குறித்துச்
சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒரு
வனைக் குறித்துச் சொல்லுகிறார்; அந்தச்
சந்ததி கிறிஸ்துவே. நான் சொல்வதாவது: 17
நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின் ஏற்
பட்ட நியாயப்பிரமாணமானது வாக்குத்
தத்தத்தை வியர்த்தமாக்குவதற்கேதுவாய்,
முன்னே கடவுளால் உறுதிபண்ணப்பட்ட
உடன்படிக்கையை அவமாக்குவதில்லை.
சுதந்தரம் நியாயப்பிரமாணத்தினாலே உண் 18
டாவதென்றால், அது வாக்குத்தத்தத்தினால்
உண்டானதல்ல; ஆபிரகாமுக்குக் கடவுள்
அதை வாக்குத்தத்தத்தினாலே அருளிச்செய்
தார். அப்படியானால், நியாயப்பிரமாணம் 19
எதற்கு? வாக்குத்தத்தத்தைப்பெற்ற சந்ததி
வருமளவும் மீறுதல்கள் நிமித்தமாக அது
பின்னால் சேர்க்கப்பட்டு, தேவதூதரைக்
கொண்டு மத்தியஸ்தன் கையினால் ஏற்படுத்
தப்பட்டது. மத்தியஸ்தன் ஒருவனுக்குரியவ 20
னல்ல, கடவுளோ ஒருவர். அப்படியிருக்க, 21
நியாயப்பிரமாணம் கடவுளின் வாக்குத்தத்
தங்களுக்கு விரோதமா? அல்லவே அல்ல.
ஜீவனைக் கொடுக்கக்கூடிய நியாயப்பிர
மாணம் அருளப்பட்டிருந்ததானால், உண்
மையாகவே நியாயப்பிரமாணத்தினால் நீதி
உண்டாயிருக்கும். அப்படியிராதபடியால், 22
இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தி
னாலே பலிக்கிற வாக்குத்தத்தமானது விசு
வாசிக்கிறவர்களுக்கு அளிக்கப்படும்படி
வேதவாக்கியம் எல்லாவற்றையும் பாவத்தின்
கீழ் அடைத்துப்போட்டது.
விசுவாசம் வருமுன்னே, இனி வெளிப் 23
படும் விசுவாசத்திற்கென்று நாம் நியாயப்
பிரமாணத்தின்கீழ் அடைபட்டவர்களாய்க்
காவல்பண்ணப்பட்டோம். ஆதலால், நாம் 24
விசுவாசத்தினால் நீதிமான்களாகத் தீர்க்கப்
படுவதற்கு, கிறிஸ்து வருமளவும் நியாயப்
பிரமாணமானது நமக்குக் காவலாளனா
யிருந்தது. விசுவாசம் வந்தபின்போ நாம் 25
காவலாளனுக்குக் கீழ்ப்பட்டவர்களல்ல.
நீங்களனைவரும் கிறிஸ்து இயேசுவைப்பற் 26
றும் விசுவாசத்தினால் கடவுளின் புத்திரரா
யிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் 27
கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்ற
வர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும்
கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்கள்.
இங்கே யூதனென்றும் கிரேக்கனென்று 28
மில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்று
மில்லை, ஆணென்றும் பெண்ணென்று
மில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசு
வுக்குள் ஒரே மனுஷனாயிருக்கிறீர்கள்.
நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், 29

நீங்கள் ஆபிரகாமின் சந்ததி, வாக்குத்தத்தத்
தின்படி சுதந்தரர்.

4 பின்னும் நான் சொல்வதாவது: சுதந்தர
வாளி எல்லாவற்றிற்கும் எஜமானுயிருந்தும்
அவன் சிறுவனுயிருக்குமளவும் அவனுக்கும்
அடிமைக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லை;
2 தகப்பன் குறித்த காலம் வரைக்கும், காரி
யக்காரருக்கும் வீட்டு விசாரணைக்காரருக்
3 கும் அவன் கீழ்ப்பட்டிருக்கிருன். அப்
படியே நாமும் சிறுவராயிருந்த காலத்தில்
இப்பிரபஞ்சத்தின் பூதியங்களுக்கு அடி
4 மைப்பட்டவர்களாயிருந்தோம். நாம் புத்
திரசுவிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும்படி,
நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை
5 மீட்டுக்கொள்வதற்காக, காலம் நிறைவேறின
போது, கடவுள் தம்முடைய குமாரனை
ஸ்திரீயினிடம் பிறந்தவராகவும் நியாயப்பிர
மாணத்திற்குக் கீழ்ப்பட்டவராகவும் அனுப்
6 பிஞர். நீங்கள் புத்திரராயிருக்கிறபடியிஞல்,
அப்பா பிதாவே என்று கூப்பிடும் தம்
முடைய குமாரனின் ஆவியைக் கடவுள்
உங்கள் இருதயங்களில் அனுப்பிஞர்.
7 ஆகையால் இனி நீ அடிமையல்ல, புத்தி
ரனே. நீ புத்திரனேயாஞல் கடவுளின் மூல
மாய்ச் சுதந்தரவாளியுமாயிருக்கிருய்.
8 நீங்கள் கடவுளை அறியாதிருந்த காலத்தில்
உள்ளபடியே தெய்வமல்லாதவைகளுக்கு
9 அடிமைகளாயிருந்தீர்கள். இப்பொழுதோ
நீங்கள் கடவுளை அறிந்திருக்க, அல்லது
திட்டமாய்ச் சொல்லவேண்டுமாஞல் நீங்கள்
கடவுளால் அறியப்பட்டிருக்க, பலமற்ற
அற்பமான பூதியங்களுக்கு நீங்கள் மறுபடி
யும் திரும்புவானேன்? மறுபடியும் புதிதாய்
அவைகளுக்கு அடிமைப்பட விரும்புவா
10 னேன்? நாட்களையும் மாதங்களையும் காலங்
களையும் வருஷங்களையும் பார்க்கிறீர்களே.
11 உங்களுக்காக நான் பட்ட பிரயாசம்
வீணுய்ப்போயிற்றே என்று உங்களைப்பற்றிப்
பயப்படுகிறேன்.
12 சகோதரரே, என்னைப்போலாகுங்க
ளென்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்;
நானும் உங்களைப்போலானேனே. எனக்கு
நீங்கள் அநியாயமொன்றும் செய்யவில்லை.
13 உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான்
முதலாந்தரம் உங்களுக்கு நற்செய்தியைப்
பிரசங்கித்ததற்கு என் சரீர சுகவீனமே கார
14 ணம். அப்படியிருந்தும், உங்களுக்குச்
சோதனையாக என் சரீரத்தில் நேரிட்டதை
நீங்கள் அசட்டைபண்ணவுமில்லை அரோ
சிக்கவுமில்லை; அதற்கு மாருக, தேவதூத
னைப்போலவும் கிறிஸ்து இயேசுவைப்போல
வும் என்னை ஏற்றுக்கொண்டீர்கள். உங்க 15
ளுக்கு இருந்த ஆனந்தம் இப்பொழுது
எங்கே? கூடுமாஞல் உங்கள் கண்களைப்
பிடுங்கி எனக்குக் கொடுத்திருப்பீர்களென்று
உங்களைப்பற்றிச் சாட்சி பகருகிறேன். உள் 16
ளதைச் சொன்னதிஞலே நான் உங்களுக்குச்
சத்துருவானேனே? அவர்கள் உங்களை ஆவ 17
லாய் நாடுகிருர்கள், என்றாலும் நல்மனத்
தோடு நாடவில்லை; நீங்கள் அவர்களை ஆவ
லாய் நாடும்பொருட்டே உங்களை எங்க
ளிடத்திலிருந்து பிரித்துவிட விரும்பு
கிருர்கள். நான் உங்களிடம் இருக்கும் 18
பொழுது மாத்திரமல்ல, எப்பொழுதும் நல்
மனத்தோடு உங்களை ஆவலாய் நாடுகிற
வர்கள் இருப்பது நல்லதுதான். என் சிறு 19
பிள்ளைகளே, கிறிஸ்து உங்களில் உருவாகு
மளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப
வேதனைப்படுகிறேன்; உங்கள் விஷயமாய் 20
எனக்கு ஒன்றும் தோன்றாதபடியால், இப்
பொழுதே உங்களிடம் வந்திருந்து, வேறு
வகையாய்ப் பேச நான் விருப்பமாயிருக்
கிறேன்.
நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டி 21
ருக்க விரும்புகிற நீங்கள் நியாயப்பிரமாணம்
சொல்லுகிறதைக் கேட்கவில்லையா? இதை
எனக்குச் சொல்லுங்கள். ஆபிரகாமுக்கு 22
இரண்டு குமாரர் இருந்தார்களென்று எழுதி
யிருக்கிறது; ஒருவன் அடிமையானவளிடம்
பிறந்தவன், ஒருவன் சுயாதீனமுள்ளவ
ளிடம் பிறந்தவன். அடிமையானவளிடம் 23
பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான், சுயா
தீனமுள்ளவளிடம் பிறந்தவன் வாக்குத்தத்
தத்தின்படி பிறந்தான். இவைகள் உப 24
மானங்கள்; அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்
பாடுகளாம்: ஒன்று சீனாய் மலையில் உண்
டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்
குள்ளாகப் பிள்ளை பெறுகிறது, அது ஆகார்
என்பவள். சீனாய் என்பது அரபி தேசத்தி 25
லுள்ள ஒரு மலை; அது இப்பொழுதிருக்கிற
எருசலேமுக்குச் சரி; இவள் தன் பிள்ளைக
ளோடுகூட அடிமைப்பட்டிருக்கிருள்.
மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், 26
அவளே நமக்குத் தாய்.

பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு, 27
கர்ப்பவேதனைப்படாதவளே, கம்பீரித்து
ஆர்ப்பரி;
வாழ்க்கைப்பட்டவள் பிள்ளைகளைப்பார்க்
கிலும்
ஆதரவற்ற ஸ்திரீயின் பிள்ளைகள் அதிகம்

என்று எழுதியிருக்கிறதே.
சகோதரரே, ஈசாக்கைப்போல நீங்கள் 28
வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள். ஆகிலும். 29

மாம்சத்தின்படி பிறந்தவன் ஆவியின்படி
பிறந்தவனை அக்காலத்தில் எப்படித் துன்பப்
படுத்தினானோ அப்படியே இப்பொழுதும்
30 நடந்துவருகிறது. ஆயினும், வேதவாக்கியம்
சொல்லுகிறதென்ன? அடிமையானவளையும்
அவள் மகனையும் துரத்திவிடு; அடிமையான
வளின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய
மகனோடே சுதந்தரவாளியாவதேயில்லை
31 என்று சொல்லுகிறது. ஆகவே, சகோதரரே,
நாம் அடிமையானவளின் பிள்ளைகளல்ல,
சுயாதீனமுள்ளவளின் பிள்ளைகளே.

5 சுயாதீனத்திற்கென்றே கிறிஸ்து நம்மைச்
சுயாதீனராக்கினார்; அதிலே நிலைத்திருங்கள்,
மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்
குட்படாதிருங்கள்.
2 பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்வ
தாவது: நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்
கொண்டால், கிறிஸ்துவினால் உங்களுக்கு
3 ஒரு பிரயோஜனமுமிராது. மேலும் விருத்த
சேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனு
ஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும்
நிறைவேற்றக் கடமைப்பட்டவன் என்று
மறுபடியும் அப்படிப்பட்டவனுக்கு வற்
4 புறுத்திச் சொல்லுகிறேன். நியாயப்பிரமா
ணத்தினால் நீதிமான்களாகத் தீர்க்கப்பட
விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை
விட்டுப் பிரிந்தீர்கள், கிருபையினின்று
5 விழுந்தீர்கள். நாங்களோ விசுவாசத்தினால்
நீதி கிடைக்குமென்று எதிர்பார்த்து, ஆவி
யினாலே ஆவலோடு காத்திருக்கிறோம்.
6 கிறிஸ்து இயேசுவுக்குள் விருத்தசேதனத்தி
னாலும் பலனில்லை, விருத்தசேதனமில்லா
மையினாலும் பலனில்லை; அன்பினாலே கிரியை நடப்பிக்கிற விசுவாசமே காரியம்.
7 நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்
திற்குக் கீழ்ப்படியாதபடி உங்களைத் தடுத்தது
8 யார்? இந்தப் போதனை உங்களை அழைத்தவ
9 ரால் உண்டானதல்ல. புளித்தமா கொஞ்
சமேயாயினும் பிசைந்தமா முழுவதையும்
10 உப்பப்பண்ணும். நீங்கள் வேறுவிதமாய்ச்
சிந்திக்கமாட்டீர்களென்று ஆண்டவருக்குள்
உங்களைக்குறித்து நான் நம்பிக்கையாயிருக்
கிறேன்; உங்களைக் கலங்கடிக்கிறவன் யாரா
யிருந்தாலும் ஏற்ற ஆக்கினை அடைவான்.
11 சகோதரரே, நான் இன்னும் விருத்தசேதனத்
தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால், ஏன்
இன்னும் துன்பப்படுகிறேன்? அப்படியா
னால், சிலுவையைப்பற்றிய இடறல் ஒழிந்து
12 போயிருக்குமே. உங்களைக் கலங்கடிக்கிற
வர்கள் அங்கசேதனம்பண்ணிக்கொள்வார்க
ளானால் நலமாயிருக்கும்.

சகோதரரே, சுயாதீனத்திற்கென்று நீங்கள் 13
அழைக்கப்பட்டீர்கள்; ஆனாலும் இந்தச்
சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கு ஏது
வாக்கிக்கொள்ளாமல் அன்பினால் ஒருவருக்
கொருவர் பணிவிடை செய்யுங்கள். உன் 14
னிடத்தில் நீ அன்புகூருவதுபோல அய
லானிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற
இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமா
ணம் முழுமையும் நிறைவேறியிருக்கிறது.
நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித் 15
தால், ஒருவராலொருவர் அழிவீர்கள்; அப்
படி நேரிடாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.
பின்னும் நான் சொல்வதாவது: ஆவி 16
யினால் நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது
மாம்ச இச்சையை நீங்கள் நிறைவேற்றுவதே
யில்லை. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் 17
ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்
கிறது; நீங்கள் செய்ய விரும்புகிறவைகளைச்
செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று
விரோதமாயிருக்கின்றன. நீங்கள் ஆவியி 18
னால் நடத்தப்படுகிறவர்களானால், நியாயப்
பிரமாணத்துக்குட்பட்டவர்களல்ல. மாம் 19
சத்தின் கிரியைகள் பிரத்தியட்சமானவை;
அவையாவன: விபசாரம், அசுத்தம், காம
விகாரம், | விக்கிரகாராதனை, மாந்திரியம், 20
பகை, சண்டை, வைராக்கியம், கோபம்,
முரட்டாட்டம், பிரிவினை, மதபேதம், |
பொறாமை, வெறி, களியாட்டு முதலான 21
வைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்து
வருகிறவர்கள் கடவுள் ராஜ்யத்தைச் சுதந்
தரிப்பதில்லையென்று நான் முன் சொன்
னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச்
சொல்லுகிறேன். ஆவியின் கனியோ: அன்பு, 22
சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை,
தயாளம், நற்குணம், உண்மை, | சாந்தம், 23
இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைக
ளுக்கு விரோதமான பிரமாணம் இல்லை.
கிறிஸ்து இயேசுவினுடையவர்கள் தங்கள் 24
மாம்சத்தை அதன் ஆசை இச்சைகளோடு
கூடச் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.
நாம் ஆவியினாலே பிழைத்திருக்கிறவர்க 25
ளானால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கட
வோம். வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், 26
ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒரு
வர்மேல் ஒருவர் பொறாமைகொள்ளாமலும்
இருக்கக்கடவோம்.

சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத் **6**
தில் அகப்பட்டாலும், ஆவிக்குரியவர்களா
கிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடு அப்
படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்
ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடி எச்ச

2 ரிக்கையாயிரு. ஒருவர் பாரங்களை ஒருவர்
சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமா
3 ணத்தை நிறைவேற்றுங்கள். ஒருவன் ஒன்று
மில்லாதிருந்தும் தன்னை ஒரு பொருட்
டென்று எண்ணிக்கொண்டால், தன்னைத்
4 தானே வஞ்சிக்கிறவனாவான். அவனவன்
தன் தன் செய்கையைச் சோதித்துப் பார்க்
கக்கடவன்; அப்பொழுது மற்றவனைப்
பார்க்கும்போதல்ல, தன்னைப் பார்க்கும்
போது பெருமைபாராட்ட அவனுக்கு இட
5 முண்டாகும். அவனவன் தன் தன் சுமை
யைச் சுமப்பானே.

6 மேலும், திருவசன உபதேசத்தைக்
கேட்கிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல
நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கட
7 வன். மோசம்போகாதிருங்கள், கடவுள் தம்
மைப் பரிகாசம்பண்ணவொட்டார்; மனு
ஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்
8 பான். தன் மாம்சத்தில் விதைக்கிறவன்
மாம்சத்திலிருந்து அழிவை அறுப்பான்;
ஆவியில் விதைக்கிறவன் ஆவியிலிருந்து
9 நித்திய ஜீவனை அறுப்பான். நன்மை செய்
கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக;
நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்
10 தில் அறுப்போம். ஆகையால், நமக்கு
வாய்க்கும் சமயத்துக்குத்தக்கதாக யாவருக்
கும், விசேஷமாக விசுவாசக் குடும்பத்தாருக்
கும், நன்மைசெய்யக்கடவோம்.

11 நான் எவ்வளவு பெரிய எழுத்துக்களால்
என் கையாலேயே உங்களுக்கு எழுதினே
12 னென்று பாருங்கள். மாம்சத்தின்படி நல்ல
வர்களாய்க் காணப்பட விரும்புகிறவர்கள்
எவர்களோ அவர்கள் தாங்கள் கிறிஸ்துவின்
சிலுவையினிமித்தம் துன்பப்படாதபடிக்கு
விருத்தசேதனம்பண்ணிக்கொள்ள வேண்டு
மென்று உங்களைக் கட்டாயம்பண்ணு
கிறார்கள். விருத்தசேதனம் பண்ணிக் 13
கொள்ளுகிற அவர்களும் நியாயப்பிரமாணத்
தைக் கைக்கொள்ளுகிறதில்லை; அப்படியிருந்
தும், அவர்கள் உங்கள் மாம்சத்தைப்பற்றிப்
பெருமைபாராட்டும்படி நீங்கள் விருத்த
சேதனம்பண்ணிக்கொள்ள வேண்டுமென்று
விரும்புகிறார்கள். நானோ நம்முடைய 14
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சிலு
வையைப்பற்றியே அல்லாமல் வேறொன்றை
யும்பற்றி ஒருகாலும் பெருமைபாராட்டா
திருப்பேனாக; அதன்மூலமாய் உலகம் எனக்
குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது,
நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறை
யுண்டிருக்கிறேன். விருத்தசேதனமும் 15
ஒன்றுமில்லை, விருத்தசேதனமில்லாமையும்
ஒன்றுமில்லை; புது சிருஷ்டியே காரியம்.
இந்தப் பிரமாணத்தின்படி நடந்துவருகிற 16
வர்கள் எவர்களோ அவர்களுக்கும் கடவு
ளின் இஸ்ரவேலுக்கும் சமாதானமும் இரக்
கமும் உண்டாவதாக.

இனிமேல் ஒருவனும் என்னைத் தொந் 17
தரவு செய்யாதிருப்பானாக; இயேசுவின் அச்
சடையாளங்களை நான் என் சரீரத்தில்
சுமந்துகொண்டிருக்கிறேன்.

சகோதரரே, நம்முடைய ஆண்டவராகிய 18
இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவி
யோடிருப்பதாக; ஆமேன்.

எபேசியருக்கு எழுதின நிருபம்

1 கடவுளின் சித்தத்தினால் கிறிஸ்து இயேசு
வின் அப்போஸ்தலனான பவுல், எபேசுவில்
கிறிஸ்து இயேசுவுக்குள்ளானவர்களும் உண்
மையுள்ளவர்களுமான பரிசுத்தவான்களுக்கு
2 எழுதுவதாவது: நம்முடைய பிதாவாகிய
கடவுளிடமிருந்தும் ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவினிடமிருந்தும் உங்களுக்குக் கிரு
பையும் சமாதானமும் உண்டாவதாக.
3 நம்முடைய ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவின் கடவுளும் பிதாவுமானவர்
ஸ்தோத்திரத்துக்குரியவர். தமது திருவுளத்
திற்கிசைய, கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில்
ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் அவர்
4 நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்; தமக்கு முன்
பாக நாம் பரிசுத்தமுள்ளவர்களும் மாசற்ற
வர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்
தோற்றத்திற்குமுன்னே இவருக்குள் நம்
5 மைத் தெரிந்தெடுத்து, பிரியமானவருக்குள்
அவர் நமக்குத் தந்தருளிய தமது கிருபை
யின் மகிமைக்குப் புகழ்ச்சி உண்டா
6 கும் பொருட்டு, நம்மை இயேசுகிறிஸ்து
வின் மூலமாய்த் தமக்குச் சுவிகாரப்புத்திர
7 ராகும்படி அன்பிலே முன்குறித்தார். அவ
ருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே
கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாய்ப் பாவ
மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு
8 உண்டாயிருக்கிறது. அந்தக் கிருபையை
அவர் சகல ஞானத்தோடும் விவேகத்தோடும்
9 நம்மிடம் பெருகப்பண்ணினார். காலங்கள்
நிறைவேறும்போது, பரலோகத்திலிருக்கிற
வைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமா
கிய சகலத்தையும், கிறிஸ்துவைத் தலையாகக்
கொண்டு அவருக்குள் கூட்டிச்சேர்க்க
10 வேண்டுமென்ற தமது நியமம், தாம் செய்
திருந்த தயவுள்ள தீர்மானத்தின்படியே நிறை
வேறவேண்டுமென்ற தமது சித்தத்தின் இரக
11 சியத்தை நமக்கு அறிவித்தார். முன்னே
கிறிஸ்துவுக்குள் நன்னம்பிக்கைகொண்டி
ருந்த எங்களால் அவருடைய மகிமைக்குப்
12 புகழ்ச்சி உண்டாகும்பொருட்டு, தமது சித்
தத்தின் ஆலோசனைக்கிசைய எல்லாவற்றை
யும் நடப்பிக்கிறவருடைய தீர்மானத்தின்
படியே, நாங்கள் அவருக்குள் முன்குறிக்கப்
பட்டு, அவருடைய சுதந்தரமாக்கப்பட்
டோம். நீங்களும் உங்கள் இரட்சிப்பின் 13
சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு
விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தத்தின்
பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை
போடப்பட்டீர்கள். கடவுளுக்குச் சொந்த 14
மானவர்கள் மீட்கப்படுவார்கள் என்பதற்கு
ஆவியானவர் நமது சுதந்தரத்தின் அச்சாரம்;
தம்முடைய மகிமைக்குப் புகழ்ச்சி உண்டா
கும் பொருட்டு கடவுள் இவை எல்லாவற்
றையும் நடப்பித்தார்.
ஆனபடியினாலே, ஆண்டவராகிய இயேசு 15
வுக்குள்ளான உங்கள் விசுவாசத்தையும்
எல்லாப் பரிசுத்தவான்கள்மேலுமுள்ள
உங்கள் அன்பையும் நான் கேள்விப்பட்டு,
இடைவிடாமல் உங்களுக்காக நன்றி 16
செலுத்தி, என் ஜெபங்களில் உங்களை நினைத்
துக்கொள்ளுகிறேன். நம்முடைய ஆண் 17
டவராகிய இயேசுகிறிஸ்துவின் கடவுளும்
மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள்
அறிந்துகொள்வதினால் ஞானத்தின் ஆவி
யையும் வெளிப்படுத்தலின் ஆவியையும்
உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும்,
தாம் நம்மை அழைத்ததினால் நமக்குண்டா 18
யிருக்கும் நன்னம்பிக்கை இன்னதென்பதை
யும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு இருக்
கும் சுதந்தரத்தின் மகிமையான ஐசுவரியம்
இன்னதென்பதையும், விசுவாசிக்கிறவர்க 19
ளாகிய நம்மிடத்தில் அவர் தமது பலத்த
சக்திக்கேற்றபடி விளங்கப்பண்ணும் தமது
வல்லமையின் மகா மேன்மையான மகத்
துவம் இன்னதென்பதையும் நீங்கள் அறியும்
படிக்கு உங்கள் மனக்கண்களைப் பிரகா
சிப்பிக்கவேண்டுமென்றும் விண்ணப்பஞ்
செய்கிறேன். இவர் கிறிஸ்துவை மரித் 20
தோரிலிருந்து எழுப்பி, எல்லாத் துரைத்
தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்
கும், கர்த்தத்துவத்துக்கும், இந்த யுகத்தில்
மாத்திரமல்ல இனிவரும் யுகத்திலும் உச்ச
ரிக்கப்படும் எந்த நாமத்துக்கும் மேலாக
அவர் உயர்ந்திருக்கும்பொருட்டு, உன்னதங் 21
களில் தமது வலது பாரிசத்தில் அவரை
வீற்றிருக்கச்செய்து, தமது வல்லமையின்

மகத்துவத்தை அவரில் விளங்கப்பண்ணி
22 னார். யாவற்றையும் அவர் பாதங்களுக்குக்
கீழ்ப்படுத்தி, திருச்சபைக்கு அவரை எல்
லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளி
23 னார். அந்தத் திருச்சபை எல்லா விஷயங்
களிலும் எல்லாரிலும் நிரப்பப்பட்டுவருகிற
வருடைய நிறைவான சரீரம்.

2 மீறுதல்களினாலும் பாவங்களினாலும்
மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவர்
2 உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்
காலத்தில் இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடி
யும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளில் இப்
பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதி
காரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியும்
3 நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே
நாங்களெல்லாரும் முற்காலத்தில் எங்கள்
மாம்ச இச்சைகளில் நடந்து, எங்கள் மாம்
சமும் மனமும் விரும்பியபடியே செய்து
வந்து, சுபாவத்தினால் மற்றவர்களைப்போலவே
கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.
4 கடவுளோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவ
ராய், நம்மிடத்தில் பாராட்டிய தமது
5 மிகுந்த அன்பினிமித்தம், மீறுதல்களினால்
நாம் மரித்தவர்களாயிருக்கையிலேயே நம்
மைக் கிறிஸ்துவோடுகூட உயிர்ப்பித்தார்.
கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.
6 கிறிஸ்து இயேசுவுக்குள் அவரோடுகூட
நம்மை எழுப்பி, அவரோடுகூட உன்னதங்
களில் நம்மை உட்காரச் செய்தருளினார்.
7 கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடம்
பாராட்டிய தயாளத்தினாலே தமது கிருபை
யின் மகா மேன்மையான ஐசுவரியத்தை
இனிவரும் யுகங்களில் காண்பிக்கவேண்டு
8 மென்றே இதை நடப்பித்தார். கிருபையி
னாலேயே விசுவாசத்தின் மூலமாய் இரட்சிக்
கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டான
9 தல்ல, இது கடவுளின் ஈவு. ஒருவரும்
பெருமைபாராட்டாதபடி, இது கிரியை
10 களினால் உண்டானதல்ல. ஏனென்றால்,
நற்கிரியைகளுக்கென்று நாம் கிறிஸ்து
இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்களும்,
கடவுளின் கைவேலையுமாயிருக்கிறோம்.
அந்த நற்கிரியைகளில் நாம் நடக்கும்படி
கடவுள் முன்னதாக அவைகளை ஆயத்தம்
பண்ணினார்.
11 ஆகவே, முற்காலத்தில் மாம்சத்தின்படி
புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினால்
செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்
களால் விருத்தசேதனமில்லாதவர்களென்று
12 சொல்லப்பட்ட நீங்கள் | அக்காலத்திலே
கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேல்
ஜனசமூகத்துக்குப் புறம்பானவர்களும், வாக்
குத்தத்த உடன்படிக்கைகளுக்கு அன்னிய
ரும், நன்னம்பிக்கையில்லாதவர்களும், இவ்
வுலகத்திலே கடவுளற்றவர்களுமாயிருந்
தீர்கள் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்.
முன்னே தூரத்திலிருந்த நீங்கள் இப் 13
பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்து
வின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள். எப் 14
படியெனில், அவரே நமது சமாதானம்;
இருதிறத்தாரையும் அவர் ஒன்றாக்கி, பிரி
வுக்கேதுவாக இடையில் நின்ற பகையாகிய
நடுச்சுவரை இடித்து, சட்டதிட்டங்களாகிய 15
நியாயப்பிரமாணத்தைத் தமது மாம்சத்தில்
ஒழித்துவிட்டு, சமாதானஞ்செய்கிறவராய்
இருதிறத்தாரையும் தமக்குள் ஒரே புதிய
மனுஷனாகச் சிருஷ்டிப்பதற்கென்றும், |
பகையைச் சிலுவையினால் கொன்று, அத 16
னால் இருதிறத்தாரையும் ஒரே சரீரத்தில்
கடவுளோடு ஒப்புரவாக்குவதற்கென்றும்
இப்படிச் செய்தார். அவர் வந்து, தூரத்தி 17
லிருந்த உங்களுக்கும் சமீபத்திலிருந்தவர்
களுக்கும் சமாதானத்தை நற்செய்தியாக
அறிவித்தார். நாம் இருதிறத்தாரும் ஒரே 18
ஆவியில் பிதாவினிடம் சேரும் சிலாக்கி
யத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்.
ஆகையால், நீங்கள் இனி அன்னியரும் 19
பரதேசிகளுமல்ல; பரிசுத்தவான்களோடு
கூட நீங்கள் ஒரே ஜனசமூக சிலாக்கிய
முடையவர்கள், கடவுளின் வீட்டார்,
அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர் 20
களின் அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்ட
வர்கள்; கிறிஸ்து இயேசுதாமே கோடிக்கல்.
அவருக்குள் கட்டடம் ஒவ்வொன்றும் 21
இசைவாய் இணைக்கப்பட்டு, ஆண்டவருக்
குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது;
அவருக்குள் நீங்களும் ஆவியின்மூலமாய்க் 22
கடவுளின் வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்
பட்டுவருகிறீர்கள்.

இதினிமித்தம், புறஜாதியாராகிய உங்கள் **3**
பொருட்டு கிறிஸ்து இயேசுவின் கைதியான
பவுலாகிய நான்,—உங்களுக்காக எனக்கு 2
அருளப்பட்டிருக்கிற தேவ கிருபைக்குரிய
உக்கிராண ஊழியம் இன்னதென்று கேட்
டிருப்பீர்களே. அதென்னவெனில், சுவி 3
சேஷத்தினாலே புறஜாதிகள் உடன் சுதந்
தரரும் ஒரே சரீரத்துக்குள்ளானவர்களும்
கிறிஸ்துவுக்குள் வாக்குத்தத்தத்துக்கு உடன்
பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இரக
சியம் வெளிப்படுத்தலின் மூலமாய் எனக்கு
அறிவிக்கப்பட்டது; இதைக்குறித்து நான் 4
மேலே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்;

5 அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின்
இரகசியத்தைப்பற்றிய என் அறிவைத்
6 தெரிந்துகொள்ளலாம்; இந்த இரகசியம்
இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்
போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவி
யின் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்
கிறதுபோல, முற்காலங்களில் மனுப்புத்திர
7 ருக்கு அறிவிக்கப்படவில்லை. கடவுளின்
வல்லமையான சக்திக்கேற்றபடி எனக்கு
அருளப்பட்ட கிருபை வரத்தினால் அந்தச்
சுவிசேஷத்துக்கு நான் ஊழியக்காரனானேன்.
8 கிறிஸ்துவின் ஆராயமுடியாத ஐசுவரியத்
தைப் புறஜாதிகளிடம் நற்செய்தியாய் அறி
விப்பதற்கு, பரிசுத்தவான்களெல்லாரிலும்
சிறியவனாகிய எனக்கு இந்தக் கிருபை
9 அருளப்பட்டிருக்கிறது. நம்முடைய ஆண்
டவராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுள்
கொண்டிருந்த அனாதி தீர்மானத்தின்
10 படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்
களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய
நானாவித ஞானமானது சபையின்மூலமாய்
இப்பொழுது தெரியவரும்பொருட்டாக,
11 எல்லாவற்றையும் சிருஷ்டித்த கடவுளுக்
குள்ளே அனாதிகாலமாய் மறைபட்டிருந்த
இரகசியத்தைப்பற்றிய நியமம் இன்ன
தென்று தெளிவாய்க் காட்டுவதற்கு, இந்தக்
கிருபை எனக்கு அருளப்பட்டிருக்கிறது.
12 கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்
தால் தைரியமும் திடநம்பிக்கையோடு கடவு
ளிடம் சேரும் சிலாக்கியமும் அவருக்குள்
13 நமக்கு உண்டு. ஆகவே, உங்கள்நிமித்தம்
நான் அனுபவிக்கிற உபத்திரவங்களினால்
நீங்கள் சோர்ந்துபோகாதிருக்கும்படி கேட்
டுக்கொள்ளுகிறேன்; அவைகள் உங்களுக்கு
மகிமை.
14 இதினிமித்தம், பரலோகத்திலும் பூலோ
கத்திலுமுள்ள முழுக் குடும்பத்துக்கும்
15 நாமகாரணராயிருக்கிற | பிதாவை நோக்கி
16 நான் முழங்கால்படியிட்டு: நீங்கள் அவ
ருடைய ஆவியினாலே உள்ளான மனுஷ
17 னில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவா
சத்தினாலே உங்கள் இருதயங்களில் கிறிஸ்து
வாசமாயிருக்கவும், அவர் தமது மகிமையின்
ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அனுக்
கிரகம்பண்ணவேண்டுமென்றும், நீங்கள்
அன்பிலே வேரூன்றினவர்களும் அஸ்திபார
18 மிடப்பட்டவர்களுமாய், சகல பரிசுத்த
வான்களோடுங்கூட கிறிஸ்துவினுடைய
அன்பின் அகலம் நீளம் உயரம் ஆழம்
19 இன்னவென்று உணர்ந்து, அறிவுக்கெட்
டாத அந்த அன்பை அறிந்துகொள்ள
வல்லவர்களாகி, கடவுளின் சகல பரி
பூரணமும் கொள்ளுமட்டும் நிரப்பப்பட
வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளு
கிறேன்.
நமக்குள் கிரியை செய்கிற தம்முடைய 20
வல்லமையின்படியே, நாம் வேண்டிக்
கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிக
வும் அதிகமாய்ச் செய்ய வல்லவருக்கு,
திருச்சபையில் கிறிஸ்து இயேசுவுக்குள் தலை 21
முறை தலைமுறையாக என்றென்றைக்கும்
மகிமை உண்டாவதாக; ஆமேன்.

ஆதலால், ஆண்டவருக்குள் கைதியான **4**
நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்:
நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப்
பாத்திரராய் நடந்து, சகலவித மனத்தாழ் 2
மையோடும் சாந்தத்தோடும் நீடிய பொறுமை
யோடும் அன்பில் ஒருவரையொருவர்
தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியான 3
வரின் ஒற்றுமையைக் காத்துக்கொள்வ
தற்கு ஊக்கமாயிருங்கள். உங்கள் அழைப் 4
புக்குரிய ஒரே நன்னம்பிக்கையில் நீங்கள்
அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும்
ஒரே ஆவியும் உண்டு; ஒரே ஆண்டவரும், 5
ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும்,
எல்லாருக்கும் ஒரே கடவுளும் பிதாவும் 6
உண்டு; அவர் எல்லாருக்கும் மேலாகவும்,
எல்லார் மூலமாகவும், எல்லாருக்குள்ளும்
இருக்கிறவர்.
கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் 7
தக்கபடி நம்மில் ஒவ்வொருவனுக்கும்
கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், 8
அவர் உன்னதத்திற்கு ஏறி,
சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக்
கொண்டுபோனார்
மனுஷருக்கு வரங்களை அளித்தார்
என்று சொல்லியிருக்கிறது. ஏறினார் என் 9
பதினாலே அதற்கு முன்னே பூமியின் தாழ்
விடங்களில் அவர் இறங்கியிருந்தாரென்று
விளங்குகிறதல்லவா? இறங்கினவரும், எல் 10
லாவற்றையும் நிரப்பும்படி எல்லா வானங்
களுக்கும் மேலாக ஏறினவரும் ஒருவரே.
அவரே சிலரை அப்போஸ்தலராகவும், சில 11
ரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவி
சேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும்
போதகராகவும் தந்தருளினார். நாம் அனை 12
வரும் தேவகுமாரனைப்பற்றும் விசுவாசத்
திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி,
பூரண புருஷனாகும்வரைக்கும், அதாவது
கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அள
வுக்கு வந்தெட்டும்வரைக்கும், கிறிஸ்துவின் 13
சரீரமாகிய சபையை ஊன்றக் கட்டுவதற்
காக, திருப்பணிவிடை வேலைக்கென்று பரி

சுத்தவான்களைப் பக்குவப்படுத்தும்பொருட்டு
14 இவர்களைத் தந்தருளினார். நாம் இனி மனு
ஷரின் சூதினாலும் வஞ்சனைக்கேதுவான
தந்திரத்தினாலும் நானாவிதப் போதகமாகிய
காற்றினாலும் அலைகள்போல் அடிபட்டுச்
சுழன்று திரிந்து குழந்தைகளாயிராமல்,
15 அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு,
தலையாகிய கிறிஸ்துவுக்குள்ளாக எல்லாவற்றி
லேயும் நாம் வளர்ந்துவரும்படி அப்படிச்
16 செய்தார். அவரிலிருந்து சரீரம் முழுவ
தும், அதற்கு உதவிபுரிகிற ஒவ்வொரு நரம்
பினாலும் இசைவாக இணைக்கப்பட்டும்
ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டதுமாய், ஒவ்வொரு
அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாகக்
கிரியை செய்கிறபடியே, அது அன்பிலே
கட்டப்படுவதற்கேதுவாக ஒரே சரீரமாய்
வளர்ந்துகொண்டேவருகிறது.
17 ஆதலால், ஆண்டவருக்குள் நான்
வற்புறுத்திச் சொல்வதாவது: புறஜாதியார்
தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறது
18 போல நீங்கள் இனி நடக்கலாகாது. மனத்
தில் அந்தகாரப்பட்டு, அவர்கள் தங்கள் இரு
தயக் கடினத்தினிமித்தம் தங்களிலிருக்கும்
அறியாமையினால் கடவுளின் ஜீவனுக்கு அன்
19 னியராகி, உணர்வில்லாதவர்களாய், சகல
வித அசுத்தங்களையும் பேராசையோடு நடப்
பிக்கும்படி காமவிகாரத்திற்குத் தங்களை ஒப்
20 புக்கொடுத்துவிட்டார்கள். நீங்களோ இவ்
விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ள
21 வில்லை. அவர் வார்த்தையை நீங்கள் கேட்டு,
இயேசுவில் சத்தியம் இருக்கிறபடியே அவ
22 ருக்குள் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்
படி, உங்கள் முந்தின நடக்கையின் சம்பந்த
மாய், மோசம்போக்கும் இச்சைகளின்படி
கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள்
23 களைந்துபோடவும், உங்கள் மனத்தின் ஆவி
24 யில் புதுப்பிக்கப்படவும், சத்தியத்தினால்
உண்டாகும் நீதியிலும் பக்தியிலும் கடவு
ளின் சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய
மனுஷனைத் தரித்துக்கொள்ளவும் வேண்டு
மென்று போதிக்கப்பட்டீர்களே.
25 ஆகவே, நீங்கள் பொய்யைக் களைந்து
ஒருவரோடொருவர் மெய்யைப் பேசுங்கள்.
ஏனெனில், நாம் ஒருவருக்கொருவர் அவய
26 வங்களாய் இருக்கிறோம். கோபங்கொண்
டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன்
அஸ்தமிக்குமுன் உங்கள் சினம் ஆறுவதாக;
27 பிசாசுக்கு இடங்கொடாமலுமிருங்கள்.
28 திருடுகிறவன் இனித் திருடாமல், குறைவுள்
ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு
உண்டாயிருக்கும்படி, தன் கைகளால்
நல்ல வேலைசெய்து உழைக்கக்கடவன்.
கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயி 29
லிருந்து வரலாகாது; அவசியத்துக்கு ஏற்ற
படி பக்திவிருத்திக்கேதுவான நல்ல
வார்த்தை உண்டானால், கேட்கிறவர்களுக்
குப் பயன்படும்படி அதையே பேசுங்கள்.
நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்தி 30
ரையாகப் பெற்ற கடவுளின் பரிசுத்த ஆவி
யைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவித 31
கசப்பும், மூர்க்கமும், கோபமும், கூக்குர
லும், தூஷணமும், சகலவித வர்மமும்
உங்களைவிட்டு நீங்கக்கடவது. ஒருவருக் 32
கொருவர் தயாளமாயும் மன உருக்கமாயு
மிருங்கள்; கிறிஸ்துவுக்குள் கடவுள் உங்
களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒரு
வருக்கொருவர் மன்னியுங்கள். ஆதலால், 5
நீங்கள் பிரியமான பிள்ளைகள்போல, கடவு
ளைப் பார்த்துநடக்கிறவர்களாகுங்கள்.
கிறிஸ்து நம்மில் அன்புகூர்ந்து நமக்காகத் 2
தம்மைக் கடவுளுக்குச் சுகந்த வாசனையான
காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்
கொடுத்ததுபோல, நீங்களும் அன்பிலே
நடந்துகொள்ளுங்கள்.

வேசித்தனம், சகலவித அசுத்தம், பொரு 3
ளாசை ஆகிய இவற்றின் பேர் முதலாய்
உங்களுக்குள் சொல்லப்படக்கூடாது,
இதுவே பரிசுத்தவான்களுக்குத் தகுதி; அப் 4
படியே அவமானச் செய்கையும், புத்தி
யீனப் பேச்சும், பகடியான வார்த்தையும்
ஆகாது; நன்றிசெலுத்தலே தகும். வேசிக் 5
கள்ளனாவது, அசுத்தனாவது, விக்கிரகாரா
தனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது
கிறிஸ்துவுக்கும் கடவுளுக்குமுரிய ராஜ்யத்
தில் சுதந்தரமடைவதில்லை என்று நிச்சய
மாய் அறிந்திருக்கிறீர்களே. இவைகளி 6
னிமித்தம் கீழ்ப்படியாதவர்கள்மேல் கடவு
ளின் கோபாக்கினை வரும்; ஆகவே நீங்கள்
எவனுடைய வீண்வார்த்தைகளினாலும்
மோசம்போகவேண்டாம். அவர்களோடு 7
நீங்கள் பங்காளிகளாகவேண்டாம். நீங்கள் 8
முற்காலத்தில் அந்தகாரமாயிருந்தீர்கள்,
இப்பொழுதோ ஆண்டவருக்குள் வெளிச்
சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளை
களாய் நடந்துகொள்ளுங்கள்—வெளிச்சத் 9
தின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும்
உண்மையிலும் விளங்கும்—ஆண்டவருக் 10
குப் பிரியமானது இன்னதென்று சோதித்
தறியுங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியை 11
களுக்கு உடன்பங்காளிகளாகாமல், அவை
களைக் கடிந்துகொள்ளுங்கள். அவர்கள் 12
மறைவில் செய்கிறவைகளைச் சொல்லுகிற
தும் அவலட்சணமே. வெளிச்சத்தினால் 13

கடிந்துகொள்ளப்படுகிறவைகள் எல்லாம்
பிரத்தியட்சமாகும்; பிரத்தியட்சமாவதெல்
14 லாம் வெளிச்சம். ஆதலால்,

தூங்குகிறவனே, விழி,
மரித்தோரைவிட்டு எழுந்திரு,
அப்பொழுது கிறிஸ்து உன்மேல் பிரகா
சிப்பார்

என்று சொல்லியிருக்கிறது.
15 ஆதலால், நீங்கள் விவேகமற்றவர்களா
யிராமல் விவேகமுள்ளவர்களாய் உங்கள்
நடக்கையைப்பற்றி அதிக ஜாக்கிரதையா
16 யிருங்கள். தருணத்தைத் தப்பவிடாமல்
காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்
ளுங்கள்; இந்த நாட்கள் பொல்லாத
17 வைகள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்
களாயிராமல் ஆண்டவரின் சித்தம் இன்ன
18 தென்று உணர்ந்துகொள்ளுங்கள். துன்
மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறி
கொள்ளாமல், ஆவியினால் நிறைந்திருங்கள்;
19 சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும்
ஞானப்பாட்டுக்களினாலும் ஒருவரோடொரு
வர் சம்பாஷித்து, உங்கள் இருதயத்தில்
ஆண்டவரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி,
20 நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
வின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லா
வற்றிற்காகவும் பிதாவாகிய கடவுளுக்கு
21 நன்றிசெலுத்தி, கிறிஸ்துவுக்குப் பயந்தவர்
களாய் ஒருவருக்கொருவர் அடங்கி
யிருங்கள்.
22 ஆண்டவருக்கு அடங்கியிருக்கிறதுபோல
மனைவிகள் தங்கள் புருஷருக்கு அடங்கி
23 யிருக்கவேண்டும். கிறிஸ்து திருச்சபைக்
குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷன் மனை
விக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்
24 திற்கு இரட்சகர். சபை கிறிஸ்துவுக்கு
அடங்கியிருக்கிறதுபோல, மனைவிகளும் எக்
காரியத்திலும் புருஷருக்கு அடங்கியிருக்க
25 வேண்டும். புருஷர்களே, உங்கள் மனைவி
களில் அன்புகூருங்கள். கிறிஸ்து சபையில்
அன்புகூர்ந்து, அது பரிசுத்தமும் மாசற்ற
26 துமாயிருக்கும்படி, தாம் அதைத் திருவசனத்
தோடுகூடிய தண்ணீர் முழுக்கினால் சுத்தி
27 கரித்துப் பரிசுத்தமாக்குவதற்கும், கறை
திரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல்
மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு
முன் நிறுத்திக்கொள்வதற்கும், அதற்காகத்
28 தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். அப்
படியே புருஷரும் தங்கள் சரீரங்களில்
அன்புகூருகிறதுபோல, தங்கள் மனைவிகளி
லும் அன்புகூரக் கடமைப்பட்டவர்கள்.
தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்
29 னில் தானே அன்புகூருகிறான். தன்
சொந்த மாம்சத்தை ஒருவனும் ஒருகாலும்
பகைத்ததில்லையே; கிறிஸ்து திருச்சபையைப்
போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல, ஒவ்
வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்
துக் காப்பாற்றுகிறான். நாம் அவர் சரீரத் 30
தின் அவயவங்கள். இதினிமித்தம், ஒருவன் 31
தன் தகப்பனையும் தன் தாயையும்விட்டுத்
தன் மனைவியோடு இசைந்திருப்பான், இரு
வரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த 32
இரகசியம் பெரிது; கிறிஸ்துவையும் திருச்
சபையையும் குறித்தே நான் இதைச்
சொல்லுகிறேன். எப்படியும், உங்களில் 33
ஒவ்வொருவனும் தன்னில் அன்புகூருகிறது
போல, தன் மனைவியிலும் அன்புகூரக்கட
வன்; மனைவி புருஷனிடம் பயபக்தியா
யிருக்கக்கடவள்.

பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு 6
ஆண்டவருக்குள் கீழ்ப்படியுங்கள், இது
நியாயம். நீ நன்றாயிருப்பதற்கும், பூமியில் 2
நீ நெடுநாள் இருப்பதற்கும், உன் தகப் 3
பனையும் தாயையும் கனம்பண்ணவேண்டு
மென்பதே வாக்குத்தத்தத்தோடுகூடிய முதல்
கற்பனை. பிதாக்களே, உங்கள் பிள்ளைகளைக் 4
கோபப்படுத்தாமல், ஆண்டவருக்கேற்ற
சிட்சையிலும் புத்திசொல்வதிலும் அவர்களை
வளர்த்துவாருங்கள்.

வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் 5
கீழ்ப்படிகிறதுபோல சரீரவிஷயத்தில்
உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்குப்
பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மன
முள்ளவர்களாய்க் கீழ்ப்படிந்து, மனுஷ 6
ரைப் பிரியப்படுத்த விரும்புகிறவர்களாகப்
பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்து
வின் ஊழியக்காரராகக் கடவுளின் சித்தப்
படி மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள். மனுஷ 7
ருக்கென்றல்ல ஆண்டவருக்கென்றே நல்
மனத்தோடு ஊழியஞ்செய்யுங்கள்; அடிமை 8
யானாலும் சுயாதீனனானாலும் அவனவன்
செய்கிற நன்மையின்படியே அவனவன்
ஆண்டவரிடம் பலனை அடைவானென்று
அறிந்துகொள்ளுங்கள். எஜமான்களே, 9
நீங்களும் வேலைக்காரருக்கு அப்படியே
செய்யுங்கள்; அவர்களுக்கும் உங்களுக்கும்
எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறா
ரென்றும், அவரிடம் பட்சபாதமில்லையென்
றும் அறிந்து, பயமுறுத்துவதை விட்டு
விடுங்கள்.

கடைசியாக, ஆண்டவரிலும் அவர் சத்து 10
வத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்.
நீங்கள் பிசாசின் தந்திரங்களுக்கு எதிர்த்து 11
நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, கட

வுவின் சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்
12 கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்
தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்க
ளோடும் அதிகாரங்களோடும் இவ்வந்தகாரத்
தின் லோகாதிபதிகளோடும், உன்னத மண்ட
லங்களிலுள்ள பொல்லாத ஆவிகளோடும்
13 நமக்குப் போராட்டமுண்டு. ஆகையால்,
தீங்குநாளிலே நீங்கள் எதிர்த்துநிற்கவும்,
எல்லாவற்றையும் செய்துமுடித்தவர்களாய்
நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படி,
கடவுளின் சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்
14 துக்கொள்ளுங்கள். ஆகவே, சத்தியத்தால்
உங்கள் அரையைக் கட்டிக்கொண்டவர்
களாயும், நீதியின் மார்க்கவசத்தைத் தரித்
15 துக்கொண்டவர்களாயும், சமாதானத்தின்
சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும்
பாதரட்சையைக் காலில் தொடுத்துக்
16 கொண்டவர்களாயும், பொல்லாங்கன் எய்
யும் அக்கினியஸ்திரங்களையெல்லாம் அவித்
துப்போடத் திராணியுள்ளவர்களாகும்படி,
விசுவாசமென்னும் கேடகத்தை எல்லாவற்
றிலும் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்
17 லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீரா
வையும், தேவவசனமாகிய ஆவியின் பட்ட
18 யத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச்
சமயத்திலும் சகலவித ஜெபத்தோடும் விண்
ணப்பத்தோடும் ஆவியானவரில் ஜெபம்
பண்ணுங்கள்; அதன்பொருட்டு, சகல பரி
சுத்தவான்களுக்காகவும் விடாமுயற்சியாய்
விண்ணப்பம்பண்ணி விழித்திருங்கள். சுவி 19
சேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்
டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் சுவிசேஷத்
தில் தைரியங்கொண்டு, பேசவேண்டியபடி
பேசத்தக்கதாக, என் வாயைத் திறக்கும் 20
போது சுவிசேஷத்தின் இரகசியத்தைத்
தைரியமாய் அறிவிக்கிறதற்கு வாக்குவரம்
எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காக
வும் விண்ணப்பம்பண்ணுங்கள்.

என் காரியங்களையும் என் சுகசெய்தியை 21
யும் நீங்கள் அறியும்படி, பிரியமான சகோ
தரனும் ஆண்டவருக்குள் உண்மையுள்ள
ஊழியனுமாயிருக்கிற தீகிக்கு எல்லாவற்
றையும் உங்களுக்குத் தெரிவிப்பான். இதன் 22
பொருட்டே, நீங்கள் எங்கள் செய்திகளை
அறியவும், அவன் உங்கள் இருதயங்களுக்கு
ஆறுதல்செய்யவும் வேண்டுமென்று அவனை
உங்களிடம் அனுப்புகிறேன்.

பிதாவாகிய கடவுளிடமிருந்தும், ஆண் 23
டவராகிய இயேசுகிறிஸ்துவினிடமிருந்தும்,
சகோதரருக்குச் சமாதானமும் விசுவாசத்
தோடு கூடிய அன்பும் உண்டாவதாக.
நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 24
வில் அழியாத அன்புவைத்திருக்கிற யாவ
ரோடும் கிருபை இருப்பதாக.

பிலிப்பியருக்கு எழுதின நிருபம்

1 கிறிஸ்து இயேசுவின் அடியாரான பவு
லும் தீமோத்தேயுவும் பிலிப்பி பட்டணத்
தில் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தவான்
களாயிருக்கிற அனைவருக்கும் சபையின்
அத்தியட்சர்களுக்கும் உதவிக்காரருக்கும்
2 எழுதுவதாவது: நம்முடைய பிதாவாகிய
கடவுளிடமிருந்தும் ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவினிடமிருந்தும் உங்களுக்குக்
கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.
3 நான் உங்களை நினைக்கும்போதெல்லாம்
என் கடவுளுக்கு நன்றிசெலுத்துகிறேன்.
4 நான் ஜெபஞ்செய்யும்போதெல்லாம் உங்கள்
அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்
5 தோடு ஜெபஞ்செய்து, முதல்நாள் தொடங்கி
இந்நாள்வரைக்கும் நீங்கள் சுவிசேஷ பிர
பல்யத்திற்கு உடன்பங்காளிகளானதற்காக
6 நன்றிசெலுத்துகிறேன். உங்களில் நற்கிரியை
ஆரம்பித்தவர் கிறிஸ்து இயேசுவின் நாள்
மட்டாக அதை முடிய நடத்துவாரென்று
7 திடநம்பிக்கையாயிருக்கிறேன். என் கட்டு
களிலும், நான் சுவிசேஷத்திற்காக உத்தரவு
சொல்லி அதை உறுதிப்படுத்துவதிலும்,
நீங்கள் அனைவரும் என்னோடு தேவகிருபை
யில் பங்குடையவர்களானதால் உங்களை என்
இருதயத்தில் வைத்துக்கொண்டிருக்கிறேன்;
ஆதலால் உங்களெல்லாரையும்பற்றி நான்
8 இப்படி நினைக்கிறது நியாயம். கிறிஸ்து
இயேசுவின் உருக்கமான அன்பினாலே உங்க
ளெல்லார்மேலும் எவ்வளவோ வாஞ்சையா
யிருக்கிறேன் என்பதற்குக் கடவுளே சாட்சி.
9 நன்மை தீமை இன்னதென்று நீங்கள் வகை
யறுக்கும்படி, உங்கள் அன்பு அறிவிலும்
எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிக
10 மாய்ப் பெருகவேண்டுமென்றும், கடவுளுக்கு
மகிமையும் புகழுமாக, இயேசுகிறிஸ்துவி
னால் உண்டாகும் நீதியின் கனியினால் நீங்கள்
11 நிறைந்தவர்களாகி, கிறிஸ்துவின் நாளுக்
கென்று கபடமில்லாதவர்களும் இடறலற்ற
வர்களுமாய் இருக்கவேண்டுமென்றும் உங்க
ளுக்காக விண்ணப்பம்பண்ணுகிறேன்.
12 சகோதரரே, எனக்குச் சம்பவித்தவைகள்
சுவிசேஷ பிரபல்யத்திற்கு ஏதுவாயின
வென்று நீங்கள் அறிந்துகொள்ள விரும்பு
கிறேன். என் கட்டுகள் கிறிஸ்துவுக்குள் 13
ளான கட்டுகளென்று இராயனுடைய
காவற்படையிலுள்ள அனைவருக்குள்ளும்
மற்ற யாவருக்குள்ளும் பிரஸ்தாபமாயிற்று;
ஆகவே, சகோதரரில் மிகுதியானவர்கள் 14
என் கட்டுகளாலே ஆண்டவரில் திடநம்
பிக்கைகொண்டு, பயமில்லாமல் கடவுளின்
வார்த்தையைச் சொல்லும்படி முன்னிலும்
அதிகத் தைரியமாயிருக்கிறார்கள். சிலர் 15
பொறாமையினாலும் விரோதத்தினாலும்
கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள், சிலரோ
நல்மனத்தோடு பிரசங்கிக்கிறார்கள். சுவிசே 16
ஷத்திற்காக நான் உத்தரவு சொல்ல ஏற்படுத்
தப்பட்டவனென்று அறிந்து சிலர் அன்பி
னாலே கிறிஸ்துவை அறிவிக்கிறார்கள்.
சிலரோ என் கட்டுகளோடு உபத்திரவத்தை 17
யும் கூட்ட நினைத்து, நல்லெண்ணத்தோடு
அறிவியாமல் போட்டியாக அறிவிக்கி
றார்கள். இதனாலென்ன? மாயத்தினாலாவது 18
உண்மையினாலாவது எப்படியும் கிறிஸ்து
அறிவிக்கப்படுகிறார்; அதைப்பற்றிச் சந்தோ
ஷப்படுகிறேன், இன்னமும் சந்தோஷப்படு
வேன். உங்கள் வேண்டுதலினாலும் இயேசு 19
கிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும்
அது எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று
எனக்குத் தெரியும். நான் ஒன்றிலும் வெட் 20
கப்படுவதில்லையென்றும், எப்பொழுதும்
போல இப்பொழுதும் எல்லாத் தைரியத்
தோடும் ஜீவனாலாகிலும் மரணத்தினாலாகிலும்
கிறிஸ்து என் சரீரத்திலே மகிமைப்படுவா
ரென்றும், எனக்குண்டாயிருக்கிற பேராவ
லுக்கும் நன்னம்பிக்கைக்கும் ஏற்க அது
எனக்கு இரட்சிப்பாக முடியுமென்றும் எனக்
குத் தெரியும். எனக்கு பிழைத்திருப்பது 21
கிறிஸ்து, சாவது ஆதாயம். ஆயினும் நான் 22
சரீரத்தில் பிழைத்திருப்பதால்என்வேலைக்குப்
பலன் கிடைக்குமேயானால், நான் தெரிந்து
கொள்ளவேண்டியது இன்னதென்று நான்
சொல்லமுடியாது. இருபக்கங்களிலும் நான் 23
நெருக்கப்படுகிறேன்; தேகத்தை விட்டுப்
பிரிந்து கிறிஸ்துவோடிருக்க எனக்கு ஆசை
யுண்டு, அது மிகவும் அதிக நலமாயிருக்கும்.
அப்படியிருந்தும், நான் சரீரத்தில் தரித்திருப் 24

25 பது உங்கள்நிமித்தம் அதிக அவசியம். இந்த
நிச்சயத்தைக்கொண்டு, நான் மறுபடியும்
உங்களிடத்தில் வருவதால், கிறிஸ்து இயேசு
வுக்குள் நீங்கள் என் விஷயத்தில் அதிகமாய்ப்
26 பெருமைபாராட்டும்படி, உங்கள் விசுவாச
வளர்ச்சிக்காகவும் அதனால் உண்டாகும்
சந்தோஷத்திற்காகவும் நான் பிழைத்து,
உங்கள் அனைவரோடுங்கூடத் தரித்திருப்பே
னென்று எனக்குத் தெரியும்.
27 ஆயினும், நான் வந்து உங்களைக் கண்டா
லும் நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே
மனமுள்ளவர்களாய்ச் சுவிசேஷத்தின் விசு
வாசத்திற்காக ஒத்துப் போராடி, எதிர்க்கிற
வர்கள் நிமித்தம் ஒன்றிலும் மிரளாதவர்க
ளாய் ஒரே ஆவியில் நிலைத்திருக்கிறீர்கள்
என்று உங்களைப்பற்றி நான் கேள்விப்படத்
தக்கதாக, கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குப்
28 பாத்திரராக நடந்துகொள்ளுங்கள். நீங்கள்
மிரளாது நிலைத்திருப்பது அவர்கள் அழிந்து
போவதற்கும் நீங்கள் இரட்சிக்கப்படுவதற்
கும் அத்தாட்சியாகும்; இது கடவுளின்
29 செயல். எப்படியெனில், கிறிஸ்துவில் விசு
வாசம்வைக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர்
நிமித்தம் பாடுபடுவதற்கும் நீங்கள் அருள்
30 பெற்றீர்கள். நீங்கள் என்னிடத்தில் கண்ட
தும் எனக்குண்டென்று இப்பொழுது கேள்
விப்படுகிறதுமான அதே போராட்டம் உங்
களுக்குமுண்டு.

2 ஆதலால், கிறிஸ்துவுக்குள் யாதொரு
ஆறுதலும், அன்பினால் யாதொரு உற்சாக
மும், ஆவியினால் யாதொரு ஐக்கியமும்,
யாதொரு உருக்கமான பட்சமும் இரக்க
2 மும் இருக்குமானால், நீங்கள் ஒரே சிந்தை
யும் ஒரே அன்பும் ஒரே மனமுமுடையவர்க
ளாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோ
3 ஷத்தை நிறைவாக்குங்கள். முரட்டாட்
டத்தினாலாவது வீண் பெருமையினாலாவது
ஒன்றையும் செய்யாமல், மனத்தாழ்மையி
னாலே ஒருவரையொருவர் தங்களிலும்
மேன்மையானவர்களாக எண்ணுங்கள்.
4 அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்
5 கானவைகளையும் நோக்கக்கடவன். கிறிஸ்து
இயேசுவிலுள்ள சிந்தையே உங்களிலும்
6 இருக்கக்கடவது; அவர் கடவுளின் ரூபமா
யிருந்தும், கடவுளுக்குச் சமமாயிருப்பதைக்
7 கொள்ளைப்பொருளாக எண்ணாமல், தம்
மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின்
8 ரூபமெடுத்து மனுஷ சாயலானார். அவர்
மனுஷ கோலமாய்க் காணப்பட்டு, மரண
பரியந்தம், சிலுவையின் மரணபரியந்தமும்
கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்
தினார். ஆனதுபற்றி, வானோர் பூதலத் 9
தோர் பூமியின் கீழானோருடைய முழங்
கால் யாவும் இயேசுவின் நாமத்தில் முடங்
கும்படிக்கும், இயேசுகிறிஸ்து ஆண்டவ 10
ரென்று நாவுகள் யாவும் பிதாவாகிய கடவு
ளின் மகிமைக்கென்று அறிக்கைபண்ணும்
படிக்கும் கடவுள் அவரை உயர்த்தி, எல்லா 11
நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்
குத் தந்தருளினார்.
ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, 12
நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிந்தது
போல, நான் சமீபத்திலிருக்கும்பொழுது
மாத்திரமல்ல, நான் தூரத்திலிருக்கிற இப்
பொழுதும், மிகவும் அதிகமாய் உங்கள்
இரட்சிப்பு நிறைவேறும்படி பயத்தோடும்
நடுக்கத்தோடும் உழைத்துக்கொண்
டிருங்கள். தமது தயவுள்ள சித்தம் நிறை 13
வேறும்படி, நீங்க்ள் விரும்பவும் கிரியை
செய்யவும் உங்களில் கிரியை செய்கிறவர்
கடவுளே. நான் வீணாக ஓடினதுமில்லை, 14
வீணாக உழைத்ததுமில்லை என்று கிறிஸ்து
வின் நாளுக்கென்று நான் பெருமை
பாராட்டுவதற்கு ஏதுவாய், ஜீவவசனத்தை
உயர்த்திப் பிடித்து உலகத்தில் சுடர்களைப்
போலக் காணப்படுகிற நீங்கள், கோணலும் 15
மாறுபாடுமுள்ள சந்ததியின் நடுவில் குற்ற
மற்றவர்களும் கபடற்றவர்களும் கடவுளின்
மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படி, எல்லா 16
வற்றையும் முறுமுறுக்காமலும் வாதாடா
மலும் செய்யுங்கள். மேலும், உங்கள் விசு 17
வாசமாகிய பலியோடும் அர்ப்பணத்தோடும்
நான் பானார்ப்பணமாக வார்க்கப்பட்டாலும்
நான் மகிழ்ந்து உங்களனைவரோடும் சந்தோ
ஷப்படுவேன். அப்படியே நீங்களும் 18
மகிழ்ந்து என்னோடுகூட சந்தோஷப்
படுங்கள்.
உங்கள் செய்திகளை அறிந்து நான் தைரி 19
யங்கொள்ளும்படி தீமோத்தேயுவைச் சீக்கி
ரம் உங்களிடம் அனுப்பலாமென்று ஆண்
டவராகிய இயேசுவுக்குள் நம்புகிறேன்.
உங்கள் க்ாரியங்களைப்பற்றி உண்மையாய்க் 20
கவலைப்படுகிறதற்கு, அவனைப்போன்ற நல்
மனமுள்ளவன் வேறொருவனும் என்னிடத்தி
லில்லை. அவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசு 21
வுக்கானவைகளை நாடாமல் தங்களுக்கான
வைகளையே நாடுகிறார்கள். பிள்ளை தகப்ப 22
னுக்குத் தொண்டுசெய்வதுபோல அவன்
என்னோடுகூடச் சுவிசேஷத்தினிமித்தம்
தொண்டுசெய்தானென்று அவன் உத்த
மத்தை அறிந்திருக்கிறீர்கள். ஆகவே, 23
என் காரியங்கள் எப்படி முடிவாகுமென்று
நான் அறிந்தவுடனே அவனை அனுப்பலா

24 மென்று நம்புகிறேன். நானும் சீக்கிரத்தில்
வருவேனென்று ஆண்டவருக்குள் திட
25 நம்பிக்கையாயிருக்கிறேன். எப்பாப்பிரோ
தீத்துவை உங்களிடம் அனுப்புவது அவசிய
மென்று எண்ணுகிறேன். அவன் எனக்குச்
சகோதரன், உடன் ஊழியன், உடன் சேவ
கன், உங்களுடைய ஸ்தானபதி, என்
குறைச்சலில் எனக்கு உதவிசெய்தவன்.
26 அவன் உங்கள் எல்லார்மேலும் வாஞ்சை
யுள்ளவன்; தான் வியாதியாயிருந்ததை
நீங்கள் கேள்விப்பட்டதினாலே மிகவும் வியா
27 குலப்படுகிறான். அவன் வியாதிப்பட்டு
மரணத்தருவாயிலிருந்தது மெய்தான். ஆகி
லும், கடவுள் அவனுக்கு இரங்கினார்; அவ
னுக்கு மாத்திரமல்ல, துக்கத்தின்மேல் துக்கம்
எனக்கு உண்டாகாதபடி எனக்கும் இரங்கி
28 னார். ஆகையால் நீங்கள் அவனைக்கண்டு
மறுபடியும் சந்தோஷப்படவும், என் துக்கம்
குறையவும் அவனை அனுப்ப ஆத்திரப்படு
29 கிறேன். அவனை ஆண்டவருக்குள் எல்
லாச் சந்தோஷத்தோடும் ஏற்றுக்கொள்
ளுங்கள்; இப்படிப்பட்டவர்களை மதிப்பாக
30 எண்ணுங்கள். நீங்கள் எனக்குச் செய்யும்
உதவியில் குறைவாயிருந்ததை நிறைவாக்
கும்படி, அவன் தன் பிராணனையும் பாரா
மல், கிறிஸ்துவின் வேலைக்காக மரணத்தரு
வாயில் இருந்தான்.

3 கடைசியாக, என் சகோதரரே, ஆண்
டவருக்குள் சந்தோஷப்படுங்கள். எழுதி
னதை எழுதுவது எனக்குக் கஷ்டமல்ல,
உங்களுக்கோ நலம்.
2 நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்,
பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கை
யாயிருங்கள், சேதனஞ்செய்கிறவர்களுக்கு
3 எச்சரிக்கையாயிருங்கள். மாம்சத்தில் நம்
பிக்கை வைக்காமல், தேவ ஆவியினால் ஆரா
தனைசெய்து, கிறிஸ்து இயேசுவில் பெருமை
பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ள
4 வர்கள். வேண்டுமானால் நான் மாம்சத்தி
லும் நம்பிக்கை வைக்கலாம். வேறொருவன்
மாம்சத்தில் நம்பிக்கையாயிருக்க நினைத்தால்,
5 நான் அதிகமாய் நினைக்கலாம். நான் எட்
டாம் நாளில் விருத்தசேதனம் பெற்றவன்,
இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்
திரத்தான், எபிரேயரில் பிறந்த எபிரேயன்,
நியாயப்பிரமாண விஷயத்தில் பரிசேயன்;
6 பக்திவைராக்கிய விஷயத்தில் சபையைத்
துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்திற்
குரிய நீதியின் விஷயத்தில் குற்றமற்றவன்.
7 அப்படியிருந்தும், எனக்கு லாபமாயிருந்த
வைகளைக்கிறிஸ்துவினிமித்தம் நஷ்டமென்று
எண்ணியிருக்கிறேன். அது மாத்திரமல்ல, 8
என் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவை
அறிகிற அறிவின் மேன்மையினிமித்தம்
எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணி
வருகிறேன். அவர்நிமித்தம் எல்லாம்
நஷ்டமாய்ப் போகவிட்டேன், குப்பையுமாக
எண்ணிவருகிறேன். கிறிஸ்துவை எனக்கு 9
லாபமாக நான் பெற்றுக்கொள்வதற்கும்,
நியாயப்பிரமாணத்தினால் பலிக்கும் சுய
நீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப்
பற்றும் விசுவாசத்தினால் பலிக்கும் நீதியை,
அதாவது விசுவாசத்தின் மூலமாய்க் கடவுள்
அருளும் நீதியை உடையவனாய், கிறிஸ்து
வுக்குள் இருக்கிறவன் என்று காணப்படுவ
தற்குமே இப்படி எண்ணிவருகிறேன். இவ் 10
விதமாய், நான் அவருடைய மரணத்தின்
சாயலுக்கு ஒப்பாகி, எப்படியாயினும் மரித்
தோரின் உயிர்த்தெழுதலுக்கு வந்து சேருவ
தற்கேதுவாய், அவரையும் அவர் உயிர்த் 11
தெழுதலின் வல்லமையையும் அவர் பாடு
களின் ஐக்கியத்தையும் அறிந்துகொள்ள
வேண்டுமென்றிருக்கிறேன்.
நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் 12
தேறினவனானேனென்று எண்ணாமல்,
கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப்
பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்
கொள்ளத் தொடருகிறேன். சகோதரரே, 13
அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான்
எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன்: பின்
னானவைகளை மறந்து, முன்னானவைகளை
நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் கடவுள் 14
அழைத்த பரம அழைப்பின் பந்தயப்
பொருளைப் பெறுவதற்காக இலக்கை நோக்
கித் தொடருகிறேன். ஆகவே, நம்மில் 15
தேறினவர்கள் யாவருக்கும் இதே சிந்தை
இருப்பதாக; எந்தக் காரியத்திலாவது நீங்கள்
வேறே சிந்தையாயிருந்தால், அதையும்
கடவுள் உங்களுக்கு வெளிப்படுத்துவார்.
ஆகிலும், நாம் எந்த அளவுக்கு வந்தெட்டி 16
யிருக்கிறோமோ, அந்த அளவின்படியே
நடப்போமாக.
சகோதரரே, நீங்கள் ஏகமனமாய் என் 17
னைப்போல நடந்துகொண்டு, நாங்கள் உங்
களுக்கு மாதிரிகாட்டுகிறபடி நடக்கிறவர்
களைக் கவனித்துப்பாருங்கள். அநேகர் 18
நடக்கும் விதத்தைப்பற்றிப் பலமுறை
உங்களோடு பேசி, அவர்கள் கிறிஸ்துவின்
சிலுவைக்குப் பகைஞர் என்று சொன்னேன்;
இப்போதும் கண்ணீரோடு சொல்லுகிறேன்.
அவர்கள் முடிவு அழிவு, அவர்கள் வயிறு 19
அவர்களுக்குத் தெய்வம்; அவர்கள் இலச்சை
அவர்களுக்குப் பெருமை; அவர்கள் பூமிக்

20 குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். நம்முடைய
ஜனசமூக சிலாக்கியம் பரலோகத்தில் இருக்
கிறது. அங்கேயிருந்து ஆண்டவராயிருக்
கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர
21 எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர்
எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்
கொள்ளத்தக்க தமது வல்லமையான செய
லின்படியே, நமது தாழ்வான சரீரத்தைத்
தமது மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக
மறுரூபப்படுத்துவார்.

4 ஆதலால், நான் வாஞ்சைகொள்ளுகிற
என் பிரியமான சகோதரரே, எனக்குச் சந்
தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரிய
மானவர்களே, இந்தப்படியே ஆண்டவருக்
குள் நிலைத்திருங்கள்.
2 ஆண்டவருக்குள் ஒரே சிந்தையாயிருக்க
எயோதியாளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்,
சிந்திகேயாளையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.
3 அன்றியும், என் உத்தம கூட்டாளியே, அவர்
களுக்கு உதவிசெய்யும்படி உன்னையும்
வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் கிலே
மெந்தோடும் மற்ற என் உடன் ஊழியரோ
டுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடு
ஒத்துப்போராடினார்கள்; இவர்கள் நாமங்கள்
ஜீவபுஸ்தகத்தில் இருக்கின்றன.
4 ஆண்டவருக்குள் எப்பொழுதும் சந்தோ
ஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்க
ளென்று திரும்பவும் சொல்லுகிறேன்.
5 உங்கள் பொறுமை எல்லா மனுஷருக்கும்
தெரிந்திருப்பதாக. ஆண்டவர் சமீபமா
6 யிருக்கிறார். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்
படாமல், எல்லா விஷயத்திலும் உங்கள்
விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடுகூடிய
ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் கடவுளுக்
7 குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது,
எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமா
தானம் உங்கள் இருதயங்களையும் உங்கள்
சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்
துக்கொள்ளும்.
8 கடைசியாக, சகோதரரே, உண்மையுள்
ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ள
வைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள்
எவைகளோ, தூயவைகள் எவைகளோ,
அன்புக்குரியவைகள் எவைகளோ, நற்
கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணி
யம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே
9 எண்ணிக்கொண்டிருங்கள். நீங்கள் என்
னிடம் கற்றும் பெற்றும் கேட்டும் கண்டும்
இருக்கிறவைகள் எவைகளோ அவைக
ளையே செய்து வாருங்கள்; அப்பொழுது சமா
தானத்தின் கடவுள் உங்களோடிருப்பார்.

எனக்கு உதவிபுரிய இத்தனை நாளுக்குப் 10
பின் நீங்கள் மறுபடியும் என்னை நினைத்துக்
கொண்டதினால் ஆண்டவருக்குள் மிகவும்
சந்தோஷப்பட்டேன்; இப்படிச் செய்ய
நினைத்திருந்தீர்கள்; சமயம் மாத்திரம் உங்க
ளுக்கு வாய்க்கவில்லை. எனக்குக் குறைச் 11
சல் இருந்தாற்போல் நான் இப்படிச்
சொல்லுகிறதில்லை; எந்த நிலைமையிலும்
நான் மனரம்மியமாயிருக்கப் படித்திருக்
கிறேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரி 12
யும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்;
எவ்விஷயத்திலும் எல்லாவற்றிலும், திருப்தி
யாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும்,
நிறைவுபடவும் குறைவுபடவும் கற்றுக்
கொண்டேன். என்னைப் பலப்படுத்துகிற 13
வருக்குள் எல்லாவற்றையும் செய்ய எனக்கு
வல்லமை உண்டு. ஆகிலும் நான் உபத்தி 14
வப்பட்டபோது, நீங்கள் எனக்குப் பகிர்ந்து
கொடுத்தது நல்லது.. பிலிப்பியரே, சுவி 15
சேஷத்தின் ஆரம்ப காலத்திலே நான் மக்கெ
தோனியாவைவிட்டு வந்தபோது, கொடுக்
கல் வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம்
என்னோடு ஐக்கியப்பட்டதேயல்லாமல்
வேறெந்தச் சபையும் அப்படி ஐக்கியப்பட
வில்லை என்பது உங்களுக்குத் தெரியும்.
நான் தெசலோனிக்கேயிலிருந்தபோதும் 16
என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் ஒரு
முறை மாத்திரமல்ல, இருமுறையும் அனுப்
பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல், 17
பலன் உங்கள் கணக்கில் பெருகவேண்டு
மென்றே நாடுகிறேன். எல்லாவற்றிலும் 18
எனக்கு வேண்டியதைப் பெற்றுக்கொண்
டேன், அதிகமாயும் பெற்றுக்கொண்டேன்.
நீங்கள் அனுப்பினவைகளைச் சுகந்த வாசனை
யாகவும் கடவுளுக்குப் பிரியமான உகந்த
பலியாகவும் எப்பாப்பிரோதீத்துவின் கையில்
வரப்பெற்றுக்கொண்டபடியால் நான் நிறை
வடைந்திருக்கிறேன். என் கடவுள் தம் 19
முடைய மகிமையான ஐசுவரியத்தின்படியே
உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசு
வுக்குள் நிறைவாக்குவார். நம்முடைய 20
கடவுளும் பிதாவுமானவருக்கு என்றென்
றைக்கும் மகிமை உண்டாவதாக ஆமேன்.
பரிசுத்தவான்கள் ஒவ்வொருவரையும் 21
கிறிஸ்து இயேசுவுக்குள் வாழ்த்துங்கள்;
என்னோடிருக்கிற சகோதரர் உங்களை
வாழ்த்துகிறார்கள். பரிசுத்தவான்கள் அனை 22
வரும், விசேஷமாக இராயன் அரமனையைச்
சேர்ந்தவர்களும் உங்களை வாழ்த்துகிறார்கள்.
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் 23
கிருபை உங்கள் ஆவியோடிருப்பதாக.

கொலோசேயருக்கு எழுதின நிருபம்

1 கடவுளின் சித்தத்தினால் கிறிஸ்து இயேசு
வின் அப்போஸ்தலனான பவுலும், சகோதர
2 னாகிய தீமோத்தேயுவும், கொலோசே பட்ட
ணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும்
உண்மையுள்ளவர்களுமான சகோதரருக்கு
எழுதுவதாவது: நம்முடைய பிதாவாகிய
கடவுளிடமிருந்து உங்களுக்குக் கிருபையும்
சமாதானமும் உண்டாவதாக.
3 பரலோகத்தில் உங்களுக்கென்று வைத்
திருக்கிற நன்னம்பிக்கையினிமித்தம்,
கிறிஸ்து இயேசுவில் உங்களுக்குள்ள விசு
வாசத்தையும் சகல பரிசுத்தவான்களுக்கும்
நீங்கள் பாராட்டும் அன்பையும் நாங்கள்
4 கேள்விப்பட்டு, எப்பொழுதும் உங்களுக்
காக வேண்டுதல் செய்து, நம்முடைய ஆண்
டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய
5 கடவுளுக்கு நன்றிசெலுத்துகிறோம். உங்க
ளிடம் வந்த சுவிசேஷத்தின் சத்திய வசனத்
தால் அந்த நன்னம்பிக்கையைப்பற்றி முன்
6 னமே கேட்டறிந்தீர்கள். அந்தச் சுவி
சேஷம் உலகமெங்கும் பலன்தந்து விருத்தி
யாகிறதுபோல, நீங்கள் கடவுளின் கிருபை
யைக் கேட்டு உண்மையாய் அறிந்து
கொண்ட நாள்முதல், உங்களுக்குள்ளும்
7 பலன்தந்து விருத்தியாகிறது. எங்களுக்குப்
பிரியமான உடன் ஊழியனும் உங்களுக்
கென்று கிறிஸ்துவின் உண்மையுள்ள பணி
விடைக்காரனுமாகிய எப்பாப்பிராவினிடம்
நீங்கள் அதைக் கற்றுக்கொண்டீர்கள்.
8 ஆவிக்குள்ளான உங்கள் அன்பை எங்க
ளுக்குத் தெரியப்படுத்தினவனும் அவனே.
9 இதினிமித்தம், நாங்கள் அதைக்
கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடை
விடாமல் வேண்டுதல்செய்கிறோம்; ஆவிக்
குரிய எல்லா ஞானத்தோடும் விவேகத்தோ
டும் அவர் சித்தத்தை அறிகிற அறிவினால்
10 நீங்கள் நிரப்பப்படவேண்டுமென்றும், எவ்
வித நற்கிரியையிலும் நீங்கள் பலன்தந்து,
கடவுளை அறிகிற அறிவில் விருத்தி அடைந்து,
எல்லா விஷயத்திலும் ஆண்டவருக்குப்
பிரியமுண்டாக அவருக்கு உகந்தவர்களாய்
11 நடந்துகொள்ளவேண்டுமென்றும், எல்லா
விதப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்
டாவதற்கு, நீங்கள் அவருடைய மகிமை
யான வல்லமையின்படி எல்லாப் பலத்தி
னாலும் பலப்படுகிறவர்களாயும், வெளிச்சத் 12
திலே பரிசுத்தவான்களின் சுதந்தரத்தில் பங்
கடைவதற்கு உங்களைத் தகுதியுள்ளவர்க
ளாக்கின பிதாவுக்குச் சந்தோஷத்தோடே
நன்றிசெலுத்துகிறவர்களாயும் இருக்க
வேண்டுமென்றும் உங்களுக்காகக் கேட்டுக்
கொள்ளுகிறோம். அவரே நம்மை இருளின் 13
அதிகாரத்தினின்று விடுதலையாக்கி, தமது
அன்பின் குமாரனுடைய ராஜ்யத்தில்
கொண்டுவந்து சேர்த்தார். குமாரனாகிய 14
அவருக்குள் பாவமன்னிப்பாகிய மீட்பு
நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் காணப் 15
படாத கடவுளின் தற்சொரூபம், சர்வசிருஷ்
டிக்கும் முதற்பேறானவர். அவரில் சகல 16
மும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்தி
லுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைக
ளும், காணப்படுகிறவைகளும் காணப்படா
தவைகளும், சிங்காசனங்களோ கர்த்தத்து
வங்களோ துரைத்தனங்களோ அதிகாரங்
களோ யாவும், அவரைக்கொண்டும் அவருக்
கென்றும் சிருஷ்டிக்கப்பட்டன. அவர் 17
எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம்
அவரில் நிலைநிற்கிறது. அவரே திருச்சபை 18
யாகிய சரீரத்திற்குத் தலை; எல்லாவற்றிலும்
முதல்வராகும்படி, அவரே ஆதியும் மரித்
தோரிலிருந்தெழுந்த முதற்பேறுமானவர்.
சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாச 19
மாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின 20
இரத்தத்தினாலே பூலோகத்திலும் பரலோ
கத்திலுமுள்ள யாவையும் அவர்மூலமாய்த்
தம்மோடு சமாதானப்படுத்தி ஒப்புரவாக்கிக்
கொள்ளவும் பிதாவானவர் பிரியங்கொண்
டார். முற்காலத்தில் நீங்கள் புறம்பானவர்க 21
ளாயும் துர்க்கிரியைகளினால் உங்கள் மனத்
தில் சத்துருக்களாயுமிருந்தீர்கள்; இப் 22
பொழுதோ, அவர் அடைந்த மரணத்தின்
மூலமாய் அவருடைய மாம்ச சரீரத்தில்
கடவுள் உங்களை ஒப்புரவாக்கிக்கொண்
டார்; உங்களைப் பரிசுத்தராகவும் மாசற்ற
வர்களாகவும் குற்றஞ்சாட்டப்படாதவர்க
ளாகவும் தமக்குமுன் நிறுத்தவேண்டு
மென்றே அப்படிச் செய்தார். நீங்கள் 23
கேட்டறிந்த சுவிசேஷத்திலுள்ள நன்னம்பிக்

கையைவிட்டு விலகாமல், அஸ்திபாரமிடப்
பட்டவர்களாயும் உறுதியுள்ளவர்களாயும்
அசைக்கப்படாதவர்களாயும் விசுவாசத்தில்
நிலைத்திருப்பீர்களானால், அது நிறைவேறும்.
அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழுள்ள
சகல சிருஷ்டிக்கும் பிரசங்கிக்கப்பட்டு
வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான்
ஊழியக்காரனானேன்.
24 இப்பொழுது உங்கள் நிமித்தம் நான்
அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷப்பட்டு,
கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவான
வற்றை அவருடைய சரீரமாகிய திருச்
சபைக்காக என் மாம்சத்தில் நிறைவாக்கி
25 வருகிறேன். உங்கள்பொருட்டு கடவுளால்
எனக்களிக்கப்பட்ட உக்கிராண ஊழியத்
தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்
26 காரனானேன். அநாதிகாலமுதல் தலைமுறை
தலைமுறையாக மறைக்கப்பட்டிருந்து, இப்
பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு
வெளியாக்கப்பட்டிருக்கிற இரகசியமாகிய
தேவ வசனத்தைப் பூரணமாய் அறிவிக்கும்
படி அந்த ஊழியம் எனக்கு அளிக்கப்பட்
27 டது. புறஜாதிகளுக்குள் விளங்கும் இந்த
இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம்
இன்னதென்று கடவுள் தமது பரிசுத்தவான்
களுக்குத் தெரியப்படுத்தச் சித்தங்கொண்
டார்; கிறிஸ்து உங்களுக்குள் இருப்பதே
அந்த இரகசியம்; அதுவே மகிமையின் நன்
28 னம்பிக்கை. எந்த மனுஷனையும் கிறிஸ்து
வுக்குள் தேறினவனாக நிறுத்தும்படி, எந்த
மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷ
னுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசஞ்
செய்து அவரையே நாங்கள் அறிவித்து வரு
29 கிறோம். எனக்குள் வல்லமையாய்க் கிரியை
செய்கிற அவருடைய சக்தியின்படி அதற்
கென்றே நான் போராடி உழைத்து வரு
கிறேன்.

2 உங்களுக்காகவும் லவோதிக்கேயாவி
லிருக்கிறவர்களுக்காகவும், சரீரத்தில் என்
முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்
காகவும் எவ்வளவோ போராட்டம் எனக்கு
உண்டென்று நீங்கள் அறிய விரும்புகிறேன்.
2 அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட
வும், அவர்கள் அன்பில் ஒன்றாய்ச் சேர்க்
கப்படவும், கிறிஸ்துவாகிய தேவ இரகசியத்
தைப்பற்றிய அறிவையும் விவேகத்தினால்
உண்டாகும் பூரண நிச்சயத்தின் எல்லா
ஐசுவரியத்தையும் அவர்கள் பெறவும்
வேண்டுமென்று போராடி மன்றாடுகிறேன்.
3 அவருக்குள் ஞானம் அறிவு என்பவை
களின் ஐசுவரியங்களெல்லாம் மறைந்திருக்
கின்றன. ஒருவனும் நயவசனிப்பினால் 4
உங்களை மோசம்போக்காதபடி இதைச்
சொல்லுகிறேன். சரீரத்தில் நான் உங்க 5
ளோடில்லாதிருந்தும் ஆவியில் உங்களோ
டிருந்து, உங்கள் ஒழுங்கையும் கிறிஸ்துவின்
மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியை
யும் கண்டு சந்தோஷப்படுகிறேன்.
ஆகையால், ஆண்டவராகிய கிறிஸ்து 6
இயேசுவை நீங்கள் ஏற்றுக்கொண்டபடியே,
அவரில் வேரூன்றினவர்களாகவும், கட்டப்
படுகிறவர்களாகவும், நீங்கள் போதிக்கப் 7
பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்ட
வர்களாகவும், அதிகம் அதிகமாய் நன்றி
செலுத்துகிறவர்களாகவும் அவருக்குள்
நடந்துகொள்ளுங்கள்.
தத்துவசாஸ்திரத்தினாலும் மாயமான வஞ்ச 8
கத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை
கொண்டுபோகாதபடி எச்சரிக்கையா
யிருங்கள்; அவை மனுஷரின் பாரம்பரியத்
துக்கும் இப்பிரபஞ்சத்தின் பூதியங்களுக்
கும் இசைந்தவைகளேயன்றி கிறிஸ்துவுக்கு
இசைந்தவைகளல்ல. தெய்வத்துவத்தின் 9
சகல பரிபூரணமும் சரீரப்பிரகாரமாக அவ
ருக்குள் வாசமாயிருக்கிறது. சகல துரைத் 10
தனத்துக்கும் அதிகாரத்துக்கும் தலையாயிருக்
கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணம்
அடைந்தீர்கள். கையால் செய்யப்படாத 11
விருத்தசேதனத்தை நீங்கள் அவருக்குள்
பெற்றீர்கள்; அது கிறிஸ்துவுக்குரிய விருத்த
சேதனம்; அது மாம்ச சரீரத்தைக் களைந்து
விடுவதே. ஞானஸ்நானத்தில் அவரோடு 12
அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறீர்கள்;
அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின கடவு
ளின் வல்லமையைப்பற்றும் விசுவாசத்தின்
மூலமாய் அந்த ஞானஸ்நானத்தில் அவரோடு
எழுப்பப்பட்டும் இருக்கிறீர்கள். உங்கள் 13
மீறுதல்களினாலும் மாம்சத்தின் விருத்த
சேதனமில்லாமையினாலும் மரித்தவர்களா
யிருந்த உங்களையும் அவரோடு உயிர்ப்பித்து,
நமது மீறுதல்களெல்லாவற்றையும் மன்
னித்து, நமக்கு எதிரிடையாகவும் சற்பனை 14
களால் நமக்கு விரோதமாகவும் இருந்த கை
யெழுத்தைக் குலைத்து, அதை இடையிலி
ராதபடி எடுத்து, சிலுவையில் ஆணியடித்து,
துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் 15
உரிந்துகொண்டு பகிரங்கமான கோலமாக்கி,
சிலுவையிலே அவற்றின்மேல் வெற்றிசிறந்
தார்.
ஆகையால், போஜனபான விஷயத்திலா 16
வது, திருநாள் அமாவாசை ஓய்வுநாள் இவற்
றைப்பற்றிய விஷயத்திலாவது ஒருவனும்
உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக.

17 அவைகள் வருங்காரியங்களுக்கு நிழல்;
18 பொருளோ கிறிஸ்துவிலுள்ளது. மாயமான
தாழ்மையிலும் தேவதூதருக்குச் செய்யும்
ஆராதனையிலும் விருப்பமுற்று, தான் தரி
சித்திருக்கிறவைகளை ஆதாரமாகக்கொண்டு
தன் மாம்ச சிந்தையில் வீண் இறுமாப்புக்
கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்
பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்
19 களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள். இப்ப
டிப்பட்டவன் தலையானவரைப் பற்றிக்கொள்
ளாதவன். அந்தத் தலையாகிய அவரிலிருந்து
சரீரம் முழுவதும் நரம்புகளாலும் கட்டுக
ளாலும் உதவிபெற்று, ஒன்றாய்ச் சேர்க்கப்
பட்டு, தெய்வ வளர்ச்சியாய் வளர்ந்து
கொண்டே வருகிறது.
20 கிறிஸ்துவோடு இப்பிரபஞ்சத்தின் பூதியங்
களுக்கு நீங்கள் மரித்ததுண்டானால், இன்
னும் உலகத்தில் பிழைக்கிறவர்கள்போல,
21 மனுஷ கற்பனைகளின்படியும் போதனை
களின்படியும் நடந்து: பிடிக்காதே, ருசி
பாராதே, தொடாதே என்கிற ஏற்பாடு
22 களுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்
லாம் அனுபவிக்கிறதினாலே அழிந்துபோகும்.
23 இந்தப் போதனைகள் சுய இஷ்ட ஆராதனை
யினாலும் மாயமான தாழ்மையினாலும் சரீர
ஒடுக்கத்தினாலும் ஞானமென்கிற பேர்கொண்
டிருந்தாலும், சரீர இச்சைகளை அடக்குவ
தற்கு அவற்றால் யாதொரு பிரயோஜனமு
மில்லை.

3 ஆகவே, நீங்கள் கிறிஸ்துவோடு எழுப்
பப்பட்டதுண்டானால், கிறிஸ்து கடவுளின்
வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்தி
2 லுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமி
யிலுள்ளவைகளையல்ல மேலானவைகளையே
3 சிந்தியுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்
தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவோடுகூட
4 கடவுளுக்குள் மறைந்திருக்கிறது. நமது
ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்
களும் அவரோடு மகிமையில் வெளிப்படு
வீர்கள்.
5 ஆகையால், பூமிக்குரிய உங்கள் அவ
யவங்களை, அதாவது: விபசாரம், அசுத்தம்,
மோகம், துர் இச்சை, விக்கிரகாராதனை
ஆகிய பொருளாசை என்பவைகளை அழித்
6 துப்போடுங்கள். இவற்றின்பொருட்டே
7 கடவுளின் கோபாக்கினை வரும். முற்காலத்
தில் இவைகளில் நீங்கள் ஜீவித்துவந்தபோது,
நீங்களும் இவைகளின்படி நடந்தீர்கள்.
8 இப்பொழுதோ கோபம், மூர்க்கம், துர்க்
குணம், தூஷணம், உங்கள் வாயில்பிறக்கும்
அவலக்ஷணப் பேச்சு ஆகிய இவைகளெல்
லாவற்றையும் விட்டுவிடுங்கள். ஒருவரி 9
டத்திலொருவர் பொய்சொல்லவேண்டாம்;
பழைய மனுஷனை அவன் செய்கைகளோ
டும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவ 10
ரின் சாயலுக்கு ஒப்பாக அறிவடையும்படி
புதிதாக்கப்படுகிற புதிய மனுஷனைத் தரித்
துக்கொள்ளுங்கள். இதிலே கிரேக்கனென் 11
றும் யூதனென்றும் இல்லை, விருத்தசேதன
முள்ளவனென்றும் விருத்தசேதனமில்லா
தவனென்றும் இல்லை; மிலேச்சனென்றும்
சீத்தியனென்றும் அடிமையென்றும் சுயாதீன
னென்றும் இல்லை; எல்லாம் கிறிஸ்துவே,
எல்லாரிலும் இருக்கிறவர் அவரே.
ஆகையால், கடவுளால் தெரிந்தெடுக்கப் 12
பட்டவர்களும் பரிசுத்தரும் பிரியருமான
நீங்கள் உருக்கமான இரக்கத்தையும் தயா
ளத்தையும் தாழ்மையையும் சாந்தத்தை
யும் நீடிய பொறுமையையும் தரித்துக்
கொண்டு, | ஒருவரையொருவர் தாங்கி, ஒரு 13
வர்மேல் ஒருவருக்குக் குறையுண்டானால்
ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்; ஆண்
டவர் உங்களுக்கு மன்னித்ததுபோலவே
நீங்களும் மன்னியுங்கள். இவை எல்லா 14
வற்றின்மேலும் பூரண சற்குணத்தின் கட்
டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்.
கிறிஸ்துவின் சமாதானம் உங்கள் இருதயங் 15
களில் ஆளக்கடவது; இதற்கென்றே நீங்கள்
ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றி
யறிதலுள்ளவர்களாயிருங்கள். கிறிஸ்து 16
வின் வார்த்தை உங்களுக்குள் நிறைந்து வாச
மாயிருப்பதாக; சகல ஞானத்தோடும் ஒருவ
ருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லி,
சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும்
ஞானப்பாட்டுகளினாலும் உங்கள் இருதயங்
களில் நன்றியறிதலோடு கடவுளைப்போற்றிப்
பாடுங்கள். வார்த்தையினாலாவது செய்கை 17
யினாலாவது நீங்கள் எதைச்செய்தாலும்
அதையெல்லாம் ஆண்டவராகிய இயேசு
வின் நாமத்திலே செய்து, அவர் மூலமாய்ப்
பிதாவாகிய கடவுளுக்கு நன்றிசெலுத்
துங்கள்.
மனைவிகளே, உங்கள் புருஷருக்கு 18
அடங்கியிருங்கள்; இது ஆண்டவருக்குள்
தகுதி. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் 19
அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து
கொள்ளாதிருங்கள். பிள்ளைகளே, பெற்றோ 20
ருக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்படி
யுங்கள்; இது ஆண்டவருக்குள் உகந்தது.
பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் மனந் 21
தளர்ந்துபோகாதபடி அவர்களை எரிச்ச
லாக்காதிருங்கள். வேலைக்காரரே, சரீரத் 22
தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்

களுக்கு எல்லாக் காரியங்களிலும் கீழ்ப்
படிந்து, மனுஷரைப் பிரியப்படுத்த விரும்பு
கிறவர்களாய்ப் பார்வைக்கு ஊழியஞ்செய்
யாமல், ஆண்டவருக்குப் பயப்படுகிறவர்க
ளாய், கபடற்ற இருதயத்தோடு ஊழியஞ்
23 செய்யுங்கள். சுதந்தரமாகிய பலனை ஆண்
டவரால் பெறுவீர்களென்று அறிந்து,
24 எதைச் செய்தாலும் அதை மனுஷருக்
கென்று செய்யாமல் ஆண்டவருக்கென்றே
மனமாரச் செய்யுங்கள். ஆண்டவராகிய
25 கிறிஸ்துவுக்கே தொண்டுசெய்யுங்கள்; அநி
யாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியா
யத்தின் பலனை அடைவான்; பட்சபாதமே
4 இல்லை. எஜமான்களே, உங்களுக்கும் பர
லோகத்தில் எஜமானானவர் இருக்கிறாரென்று
அறிந்து, உங்கள் வேலைக்காரருக்கு நியாய
மும் நேர்மையுமானதைச் செய்யுங்கள்.
2 ஜெபத்தில் தரித்திருங்கள்; ஸ்தோத்திரத்
3 தோடு அதில் விழித்திருங்கள். கிறிஸ்துவின்
இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற
நான் அந்த இரகசியத்தைப் பேசவேண்டிய
4 படி பேசி வெளிப்படுத்துவதற்கு, சுவிசே
ஷம் செல்லும்படியான வாசலைக் கடவுள்
திறந்தருளும்படி எங்களுக்காகவும் விண்
5 ணப்பம்பண்ணுங்கள். புறம்பேயிருக்கிற
வர்கள் விஷயத்தில் விவேகமாய் நடந்து,
தருணத்தைத் தப்பவிடாமல் காலத்தைப்
6 பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஒவ்
வொருவனுக்கும் சொல்லவேண்டிய மறு
மொழி இன்னதென்று நீங்கள் அறியும்படி,
உங்கள் பேச்சு எப்பொழுதும் இனிதாயும்
உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.
7 பிரியமான சகோதரனும் உண்மையுள்ள
ஊழியக்காரனும் ஆண்டவருக்குள் உடன்
ஊழியனுமான தீகிக்கு என் காரியங்களை
யெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்.
8 எங்கள் செய்திகளை நீங்கள் அறியவேண்டு
மென்றும், உங்கள் இருதயங்களைத் தேற்ற
9 வேண்டுமென்றும், உங்களில் ஒருவனும்,
உண்மையும் பிரியமுமுள்ள சகோதரனு
மாகிய ஒநேசிமுவோடு அவனை உங்களிடம்
அனுப்புகிறேன்; இவ்விடத்துச் செய்திகளை
யெல்லாம் அவர்கள் உங்களுக்கு அறிவிப்
பார்கள்.
என் உடன்கைதியாகிய அரிஸ்தர்க்கு 10
உங்களை வாழ்த்துகிறான், பர்னபாவுக்கு நெருங்
கின பந்துவாகிய மார்க்கும் உங்களை வாழ்த்து
கிறான், இவனைக்குறித்துக் கட்டளைபெற்றீர்
களே; இவன் உங்களிடம் வருவானானால்
இவனை ஏற்றுக்கொள்ளுங்கள். யுஸ்து என்ற 11
இயேசுவும் உங்களை வாழ்த்துகிறான். விருத்த
சேதனமுள்ளவர்களில் இவர்கள் மாத்திரம்
கடவுள் ராஜ்யத்தின்பொருட்டு என் உடன்
ஊழியர்; இவர்கள் எனக்கு ஆறுதலாயிருந்
தார்கள். உங்களில் ஒருவனாகிய எப்பாப்பிரா 12
வும் உங்களை வாழ்த்துகிறான்; இவன் கிறிஸ்து
இயேசுவின் அடியான்; நீங்கள் கடவுளுக்குச்
சித்தமான யாவற்றிலும் தேறினவர்களாயும்
பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க
வேண்டுமென்று தன் ஜெபங்களில் இவன்
எப்பொழுதும் உங்களுக்காகப் போராடு
கிறான். இவன் உங்களுக்காகவும் லவோதிக் 13
கேயருக்காகவும் எராப்போலியருக்காகவும்
அதிகமாய்ப் பிரயாசப்படுகிறானென்பதற்கு
நானே சாட்சி. பிரியமான வைத்தியன் 14
லூக்காவும் தேமாவும் உங்களை வாழ்த்து
கிறார்கள். லவோதிக்கேயாவிலிருக்கிற சகோ 15
தரரையும் நிம்பாவையும் அவள் வீட்டில் கூடு
கிற சபையையும் வாழ்த்துங்கள். இந்த நிரு 16
பம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்டபின்பு,
லவோதிக்கேயா சபையிலும் வாசிக்கப்படும்
படி செய்யுங்கள்; லவோதிக்கேயாவிலிருந்து
வரும் நிருபத்தை நீங்களும் வாசிக்கவேண்
டும். ஆண்டவருக்குள் நீ பெற்ற ஊழியத்தை 17
நிறைவேற்றும்படி பார்த்துக்கொள் என்று
அர்க்கிப்பினிடம் சொல்லுங்கள்.
பவுலாகிய நான் என் கைப்பட எழுதி 18
உங்களை வாழ்த்துகிறேன்; என் கட்டுகளை
நினைத்துக்கொள்ளுங்கள்; கிருபை உங்க
ளோடிருப்பதாக.

தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபம்

1 பிதாவாகிய கடவுளுக்குள்ளும் ஆண்டவ
ராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற
தெசலோனிக்கேயர் சபைக்குப் பவுலும் சில்
வானும் தீமோத்தேயுவும் எழுதுவதாவது:
கிருபையும் சமாதானமும் உங்களுக்கு
உண்டாவதாக.
2 உங்கள் விசுவாசக் கிரியையையும்
உங்கள் அன்பின் உழைப்பையும் நம்மு
டைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால்
உண்டாகும் நன்னம்பிக்கையின் பொறுமை
யையும் நம் கடவுளும் பிதாவுமானவர் சந்நிதி
யில் நாங்கள் இடைவிடாமல் நினைத்து,
3 எங்கள் ஜெபங்களில் உங்களை நினைவுகூர்ந்து,
உங்கள் எல்லாருக்காகவும் எப்பொழுதும்
கடவுளுக்கு நன்றிசெலுத்துகிறோம்.
4 கடவுளுக்குப் பிரியமான சகோதரரே,
எங்கள் சுவிசேஷம் பேச்சில் மாத்திரமல்ல
வல்லமையிலும் பரிசுத்த ஆவியிலும் பூரண
நிச்சயத்தோடு உங்களிடம் வந்தபடியால்,
5 நீங்கள் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட
வர்கள் என்று எங்களுக்குத் தெரியும்;
நாங்கள் உங்கள் நடுவிலிருந்தபோது உங்கள்
நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோ
6 மென்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள்
மிகுந்த உபத்திரவத்தில் பரிசுத்த ஆவியின்
சந்தோஷத்தோடு திருவசனத்தை ஏற்றுக்
கொண்டு, எங்களையும் ஆண்டவரையும்
7 பார்த்து நடக்கிறவர்களானீர்கள். இவ்வித
மாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலு
முள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரியா
8 னீர்கள். ஆண்டவரின் வசனம் மக்கெ
தோனியாவிலும் அகாயாவிலும் உங்களிட
மிருந்து தொனித்ததுமல்லாமல், கடவுளைப்
பற்றும் உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்த
மானதால், அதைப்பற்றி நாங்கள் ஏதேனும்
9 சொல்வது அவசியமில்லை. நீங்கள் எங்களை
எப்படி வரவேற்றுக்கொண்டீர்கள் என்பதை
யும், ஜீவனுள்ள மெய்யான கடவுளைச்
10 சேவிப்பதற்கும், அவர் மரித்தோரிலிருந்து
எழுப்பினவரும் வரப்போகிற கோபாக்கினை
யினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிற
வருமான அவர் குமாரனாகிய இயேசு வானத்
திலிருந்து வரக் காத்திருப்பதற்கும் நீங்கள்
விக்கிரகங்களை விட்டுக் கடவுளிடம் மனந்
திரும்பினதையும் ஜனங்களே அறிவிக்கி
றார்கள்.

சகோதரரே, உங்கள் நடுவில் நாங்கள் 2
வந்தது வீணாய்ப்போகவில்லை என்பது உங்
களுக்கே தெரியும். உங்களுக்குத் தெரிந் 2
திருக்கிறபடி, முன்னே பிலிப்பி பட்டணத்
தில் நாங்கள் பாடும் நிந்தையும் அனுபவித்து,
கடவுளின் சுவிசேஷத்தை வெகு போராட்
டத்தோடு உங்களுக்குச் சொல்லும்படி
நம்முடைய கடவுளில் தைரியங்கொண்
டிருந்தோம். எங்கள் போதகம் வஞ்சகத்தி 3
னாலும் துராசையினாலும் உண்டானதல்ல,
அது கபடமுள்ளதுமல்ல. நாங்கள் தகுதி 4
யுள்ளவர்களென்று கடவுள் எங்களை நம்
பிச் சுவிசேஷத்தை எங்கள் கையில் ஒப்பு
வித்தபடியே, மனுஷரையல்ல, எங்கள் இரு
தயங்களைச் சோதித்தறிகிற கடவுளையே பிரி
யப்படுத்தப் பேசுகிறோம். நாங்கள் ஒரு 5
காலும் முகஸ்துதி பேசுகிறவர்களாய் இருக்க
வில்லை, அது உங்களுக்குத் தெரியும்; பொரு
ளாசையுள்ளவர்களாய் மாயம்பண்ணவு
மில்லை, அதற்குக் கடவுள் சாட்சி. நாங்கள் 6
கிறிஸ்துவின் அப்போஸ்தலராகப் பார
மாயிருக்கக்கூடியபோதிலும், உங்களிடத்தி
லாவது மற்றவர்களிடத்திலாவது, மனுஷ
ரிடத்தில் கனத்தைத் தேடவில்லை. பால் 7
கொடுக்கும் தாயானவள் தன் பிள்ளைகளைப்
பேணுகிறதுபோல் நாங்கள் உங்கள் நடுவில்
சாந்தமாய் நடந்துகொண்டோம். நாங்கள் 8
உங்கள்மேல் வாஞ்சையாயிருந்து கடவுளின்
சுவிசேஷத்தை மாத்திரமல்ல, நீங்கள எங்
களுக்குப் பிரியமானவர்களானபடியினாலே
எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்கப்
பிரியமாயிருந்தோம். சகோதரரே, எங்கள் 9
உழைப்பையும் களைப்பையும் நீங்கள் மறந்
திருக்கமாட்டீர்கள்; உங்களில் ஒருவனுக்
கும் பாரமாயிராதபடி இரவும் பகலும்

நாங்கள் கைப்பாடுபட்டு, கடவுளின் சுவிசே
ஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்.
10 விசுவாசிகளாகிய உங்களிடத்தில் நாங்கள்
எவ்வளவு பக்தியோடும் நீதியோடும் குற்ற
மற்றவர்களாய் நடந்தோமென்பதற்கு நீங்
11 களும் சாட்சி, கடவுளும் சாட்சி. தகப்
பன் தன் பிள்ளைகளுக்குப் புத்திசொல்லு
கிறதுபோல உங்கள் ஒவ்வொருவருக்கும்
12 நாங்கள் புத்திசொன்னோம் என்பதும், தமது
ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை
அழைத்துவருகிற கடவுளுக்கு உகந்தவர்
களாய் நீங்கள் நடக்கவேண்டுமென்று உற்
சாகப்படுத்தி வற்புறுத்திப் போதித்துவந்
தோம் என்பதும் உங்களுக்குத் தெரியும்.
13 இதினிமித்தம், கடவுளின் வார்த்தையை
நீங்கள் எங்களாலே கேள்விப்பட்டுப் பெற்
றுக்கொண்டபோது, அதை மனுஷ வசன
மாகவல்ல தேவ வசனமாகவே நீங்கள் ஏற்
றுக்கொண்டதற்காக நாங்கள் இடைவிடா
மல் கடவுளுக்கு நன்றிசெலுத்துகிறோம்;
அது மெய்யாகவே தேவவசனந்தான், விசு
வாசிகளாகிய உங்களுக்குள் அது கிரியை
14 செய்துவருகிறது. எப்படியெனில், சகோ
தரரே, யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசு
வுக்குள்ளான கடவுளின் சபைகளை நீங்கள்
பார்த்து நடந்தீர்கள்; அவர்கள் யூதராலே
எப்படிப் பாடுபட்டார்களோ அப்படியே
நீங்களும் உங்கள் சுயஜனங்களாலே பாடு
15 பட்டீர்கள். அந்த யூதர் ஆண்டவராகிய
இயேசுவையும் தீர்க்கதரிசிகளையும் கொன்ற
வர்கள், எங்களைத் துன்பப்படுத்தினவர்கள்,
கடவுளுக்குப் பிரியமாய் நடவாதவர்கள்,
16 மனுஷர் யாவருக்கும் விரோதிகள்; புறஜாதி
யார் இரட்சிக்கப்படும்பொருட்டு நாங்கள்
அவர்களோடு பேசுவதைத் தடுத்துவருகி
றார்கள்; இவ்விதமாய் எக்காலத்திலும்
தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள்;
கோபாக்கினை முற்றுமுடிய அவர்கள்மேல்
வந்துவிட்டது.
17 சகோதரரே, இருதயத்தில் நாங்கள் உங்
களைவிட்டுப் பிரியாதிருந்தும், சரீரத்தில்
சொற்பகாலம் உங்களைவிட்டுப் பிரிந்திருந்த
படியினாலே உங்கள் முகத்தைப் பார்க்க
வேண்டுமென்று மிகுந்த ஆசையோடு அதிக
18 மாய்க் கவலைகொண்டு, உங்களிடம் வர
விரும்பினோம்; பவுலாகிய நான் ஒருமுறை
மாத்திரமல்ல இருமுறையும் உங்களிடம்
வர விரும்பினேன்; சாத்தானோ எங்களைத்
19 தடுத்துவிட்டான். நம்முடைய ஆண்டவ
ராகிய இயேசுவின் வருகையில் அவர் முன்
பாக எங்களுக்கு நன்னம்பிக்கையும் சந்தோ
ஷமும் புகழ்ச்சியின் கிரீடமுமாயிருக்கிற
வர்கள் யார்? நீங்கள்தான் அல்லவா? | ஆம், 20
எங்கள் மகிமையும் சந்தோஷமும் நீங்களே.

ஆகவே, நாங்கள் இனிப் பொறுத்துக் 3
கொண்டிருக்கமுடியாமல், அத்தேனே பட்
டணத்தில் தனித்துவிடப்படுகிறது நல
மென்று நினைத்து, இந்த உபத்திரவங்களி 2
னாலே ஒருவனும் அசைக்கப்படாதபடி
உங்களை ஸ்திரப்படுத்தவும், உங்கள் விசுவா
சத்தில் உங்களைத் தைரியப்படுத்தவும் நம்
சகோதரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில்
கடவுளின் ஊழியக்காரனுமாகிய தீமோத்
தேயுவை அனுப்பினோம். உபத்திரவங் 3
களை அனுபவிக்கவே நாம் நியமிக்கப்பட்
டிருக்கிறோமென்று உங்களுக்குத் தெரியும்.
உபத்திரவம் நமக்கு நேரிடுமென்று நாங்கள் 4
உங்களிடத்திலிருந்தபோது முன்னதாகவே
உங்களுக்குச் சொன்னோம்; அப்படியே
சம்பவித்ததென்றும் உங்களுக்குத் தெரி
யும். ஆகையால், நான் இனிப் பொறுத் 5
துக்கொண்டிருக்கமுடியாமல், எங்கள்
உழைப்பு விருதாவாய்ப் போகும்படி சோத
னைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தி
விட்டானோ என்று பயந்து, உங்கள் விசு
வாசத்தை அறியும்படி தீமோத்தேயுவை
அனுப்பினேன். இப்பொழுது உங்களிடத்தி 6
லிருந்து அவன் எங்களிடம் வந்து உங்கள்
விசுவாசத்தையும் அன்பையும் குறித்தும்,
நீங்கள் எப்பொழுதும் எங்களைப் பட்சமாய்
நினைத்துக்கொண்டு, நாங்கள் உங்களைக்
காண வாஞ்சையாயிருக்கிறதுபோல நீங்க
ளும் எங்களைக் காண வாஞ்சையாயிருக்
கிறீர்களென்பதைக் குறித்தும் எங்களுக்கு
நற்செய்தி சொன்னதினாலே, சகோதரரே, 7
எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டி
லும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தி
னாலே உங்களைப்பற்றி ஆறுதலடைந்தோம்.
ஆண்டவருக்குள் நீங்கள் நிலைத்திருந்தால் 8
நாங்கள் பிழைத்திருப்போம். நம்முடைய 9
கடவுளின் சந்நிதானத்தில் நாங்கள் உங்
களைப்பற்றி அடைந்திருக்கிற எல்லாச் சந்
தோஷத்திற்காகவும் நாங்கள் கடவுளுக்கு
உங்கள் நிமித்தம் தகுந்தவிதமாய் நன்றி
செலுத்துவது எப்படி? உங்கள் முகத்தை 10
நாங்கள் கண்டு உங்கள் விசுவாசத்தின்
குறைவுகளை நீக்கவேண்டுமென்று இரவும்
பகலும் மிகவும் வேண்டுதல் செய்கிறோமே.
நம்முடைய பிதாவாகிய கடவுள் தாமும் 11
நம்முடைய ஆண்டவராகிய இயேசுவும்
நாங்கள் உங்களிடம் வர எங்கள் வழியை
நேராக்குவாராக. நம்முடைய ஆண்டவ 12
ராகிய இயேசு தம்முடைய பரிசுத்த

வான்கள் அனைவரோடும் வரும்போது,
நம்முடைய கடவுளும் பிதாவுமானவர் சந்
நிதியில் உங்கள் இருதயங்கள் குற்றமற்ற
வைகளாய்ப் பரிசுத்தத்தில் ஸ்திரப்படும்படி
13 யாக, உங்கள்மேலுள்ள எங்கள் அன்பு பெரு
குகிறதுபோல், நீங்கள் ஒருவர்மேலொருவர்
வைக்கும் அன்பிலும், எல்லார்மேலும்
வைக்கும் அன்பிலும் அதிகப்பட்டுப் பெரு
கும்படி கடவுள் அருள்செய்வாராக.

4 கடைசியாக, சகோதரரே, நீங்கள் இன்
னின்ன பிரகாரமாய் நடக்கவும் கடவுளுக்
குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்பதை
எங்களிடம் கேட்டுப் பெற்றுக்கொண்ட
படியே, இன்னும் அதிகமாய்ப் பெருகும்படி
ஆண்டவராகிய இயேசுவுக்குள் உங்களைக்
கேட்டுக்கொண்டு புத்திசொல்லுகிறோம்;
அப்படியே நீங்கள் நடந்துவருகிறீர்கள்.
2 ஆண்டவராகிய இயேசுவினால் நாங்கள் உங்
களுக்கு என்ன கட்டளைகளைக் கொடுத்தோ
3 மென்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள்
பரிசுத்தமாகவேண்டுமென்பதே கடவுளின்
சித்தம்; அதாவது, நீங்கள் வேசிமார்க்கத்
4 துக்கு விலகியிருக்கவும், கடவுளை அறியாத
புறஜாதிகளைப்போல மோக இச்சைக்குட்
5 படாமல், உங்களில் அவனவன் தன் தன்
சரீர பாண்டத்தைப் பரிசுத்தத்திலும் கனத்
6 திலும் ஆள அறிந்துகொள்ளவும், இவ்விஷ
யத்தில் ஒருவனும் வரம்பு கடவாமலும் தன்
சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவும்
வேண்டுமென்பதே கடவுளின் சித்தம். முன்
னமே நாங்கள் உங்களுக்குத் திட்டமாய்
வற்புறுத்திச் சொன்னபடியே இப்படிப்
பட்ட எல்லாவற்றினிமித்தமும் பழிவாங்கு
7 கிறவர் கர்த்தரே. கடவுள் நம்மை அசுத்
தத்திற்கல்ல பரிசுத்தமாவதற்கே அழைத்
8 திருக்கிறார். ஆகையால், அசட்டைபண்ணு
கிறவன் மனுஷனையல்ல தம்முடைய பரி
சுத்த ஆவியை உங்களுக்குக் கொடுத்து
வருகிற கடவுளையே அசட்டைபண்ணு
கிறான்.
9 சகோதர சிநேகத்தைப்பற்றி நான் உங்க
ளுக்கு எழுதுவது அவசியமில்லை; நீங்கள்
ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டு
மென்று கடவுளே உங்களுக்குப் போதித்
10 திருக்கிறார். மக்கெதோனியா முழுவதிலு
முள்ள சகோதரரெல்லாருக்கும் நீங்கள்
அப்படியே அன்புபாராட்டுகிறீர்கள்.
சகோதரரே, நீங்கள் இன்னும் இதில் அதிக
11 மாய்ப் பெருகவும், நாங்கள் உங்களுக்குக்
கட்டளையிட்டபடியே அமைதலுள்ளவர்
களாயிருக்கவும், உங்கள் சொந்த அலுவல்
களைப் பார்க்கவும், உங்கள் கைகளினாலே
வேலைசெய்யவும் பேராவல்கொள்ளவேண்டு
மென்று உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.
அப்படியானால், புறம்பேயிருக்கிறவர்க 12
ளிடம் நீங்கள் யோக்கியமாய் நடந்து, ஒன்றி
லும் குறைவில்லாதிருப்பீர்கள்.
சகோதரரே, நித்திரையடைகிறவர்கள் 13
விஷயத்தில் நீங்கள் அறியாதிருக்க
எனக்கு மனமில்லை; நன்னம்பிக்கையற்ற
மற்றவர்களைப்போல் நீங்கள் துக்கிக்கவேண்
டாம். இயேசுவானவர் மரித்து எழுந்திருந் 14
தாரென்று நம்புகிறோமே, அப்படியே
இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும்
கடவுள் அவரோடுகூடக் கொண்டுவருவார்.
ஆண்டவரின் வருகைமட்டும் உயிரோடு 15
மீந்திருக்கும் நாம் நித்திரையடைந்தவர்
களுக்கு முந்திக்கொள்வதேயில்லை என்பதை
ஆண்டவரின் வார்த்தையாக நாங்கள் உங்
களுக்குச் சொல்லுகிறோம். கட்டளை 16
தொனிக்கவே, பிரதான தூதனின் சத்தத்
தோடும் தேவ எக்காளத்தோடும் ஆண்டவர்
தாமே வானத்திலிருந்து இறங்கிவருவார்;
அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்
முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, 17
உயிரோடு மீந்திருக்கும் நாமும் அவர்க
ளோடு ஆண்டவருக்கு எதிர்கொண்டுபோக
மேகங்கள்மேல் ஆகாயத்தில் எடுத்துக்கொள்
ளப்படுவோம்; இப்படியாக, எப்பொழு
தும் ஆண்டவரோடிருப்போம். ஆகையால் 18
இந்த வார்த்தைகளினால் ஒருவரையொருவர்
தேற்றிக்கொள்ளுங்கள்.

சகோதரரே, காலங்களையும் வேளைகளையும் 5
பற்றி உங்களுக்கு எழுதுவது அவசியமில்லை.
இரவிலே திருடன் வருகிறவிதமாய் ஆண்ட 2
வரின் நாள் வருமென்பது உங்களுக்குத்
திட்டமாய்த் தெரியும். சமாதானம் உண்டு, 3
பயமொன்றுமில்லை என்று சொல்லும்போது,
கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருவது
போல அழிவு சடிதியாய் அவர்கள்மேல்
வரும்; அவர்கள் தப்பிக்கொள்வதேயில்லை.
சகோதரரே, அந்த நாள் திருடன்போல் உங் 4
களைப் பிடித்துக்கொள்ளத்தக்கதாக, நீங்கள்
அந்தகாரத்திலிருக்கிறவர்களல்ல; நீங்களெல் 5
லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகள், பகலின்
பிள்ளைகள்; நாம் இரவுக்கும் இருளுக்கும்
உரியவர்களல்ல. ஆகையால் மற்றவர்கள் 6
தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்
துக்கொண்டு தெளிவுள்ளவர்களாயிருக்கக்
கடவோம். தூங்குகிறவர்கள் இரவில் 7
தூங்குவார்கள்; வெறிகொள்ளுகிறவர்கள்
இரவிலே வெறிகொள்ளுவார்கள். பகலுக் 8

குரியவர்களாகிய நாமோ, விசுவாசம் அன்பு
என்னும் மார்க்கவசத்தையும் இரட்சிப்பின்
நன்னம்பிக்கையென்னும் தலைச்சீராவையும்
தரித்துக்கொண்டு தெளிவுள்ளவர்களாயிருக்
9 கக்கடவோம். கடவுள் நம்மைக் கோபாக்
கினைக்கென்று நியமிக்காமல் நம்முடைய
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூல
மாய் இரட்சிப்படைவதற்கென்றே நியமித்
10 தார். நாம் விழித்திருக்கிறவர்களானாலும்
நித்திரைபண்ணுகிறவர்களானாலும் தம்மோடு
கூட நாம் பிழைத்திருக்கும்படி அவர் நமக்
11 காக மரித்தார். ஆகவே, நீங்கள் செய்து
வருகிறதுபோல, ஒருவரையொருவர் தைரி
யப்படுத்தி ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி
உண்டாகும்படி செய்யுங்கள்.
12 சகோதரரே, உங்கள் நடுவில் உழைத்து
ஆண்டவருக்குள் உங்கள் தலைவர்களா
யிருந்து உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்
13 களை நீங்கள் அறிந்து, அவர்கள் வேலையினி
மித்தம் அன்போடு அவர்களை மிகவும் அதிக
மாய் மதிக்கும்படி உங்களை வேண்டிக்கொள்
ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமா
14 யிருங்கள். சகோதரரே, நாங்கள் இன்னும்
உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறதாவது:
ஒழுங்கற்றவர்களுக்குப் புத்திசொல்
லுங்கள், மனந்தளர்ந்தவர்களை உற்சாகப்
படுத்துங்கள், பலவீனரைத் தாங்குங்கள்,
எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.
15 ஒருவனும் மற்றொருவனுக்குத் தீமைக்குத்
தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களில்
ஒவ்வொருவருக்கும் மற்ற யாவருக்கும் நன்
மையானதையே எப்பொழுதும் நாடுங்கள்.
எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். 16
இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள். 17
எவ்விஷயத்திலும் நன்றிசெலுத்துங்கள், 18
கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைப்பற்றிய
தேவ சித்தம் இதுவே. ஆவியை அணைத்துப் 19
போடாதிருங்கள். தீர்க்கதரிசனங்களை அசட் 20
டைபண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் 21
சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்துக்
கொள்ளுங்கள். எவ்வகையான தீமையை 22
யும் விட்டுவிலகுங்கள்.
சமாதானத்தின் கடவுள் தாமே உங்களை 23
முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள்
ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்
முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
வின் வருகையில் குற்றமற்றதாய்க் காக்கப்
படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண் 24
மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.
சகோதரரே, எங்களுக்காக ஜெபஞ்செய் 25
யுங்கள்.
சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத் 26
தோடு வாழ்த்துங்கள். இந்த நிருபம் சகோ 27
தரர் யாவருக்கும் வாசிக்கப்படவேண்டு
மென்று ஆண்டவர்பேரில் ஆணையிட்டு
உங்களுக்குச் சொல்லுகிறேன்.
நம்முடைய ஆண்டவராகிய இயேசு 28
கிறிஸ்துவின் கிருபை உங்களோடிருப்பதாக.

தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டாம் நிருபம்

1 நம்முடைய பிதாவாகிய கடவுளுக்குள்
ளும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்
குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர்
சபைக்குப் பவுலும் சில்வானும் தீமோத்
2 தேயுவும் எழுதுவதாவது: பிதாவாகிய கடவு
ளிடமிருந்தும் ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவினிடமிருந்தும் உங்களுக்குக்
கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.
3 சகோதரரே, நாங்கள் எப்பொழுதும்
உங்களுக்காகக் கடவுளுக்கு நன்றிசெலுத்தக்
கடமைப்பட்டிருக்கிறோம்; உங்கள் விசு
வாசம் மிகுதியாய் ஓங்கி வளருகிறதினாலும்
நீங்களெல்லாரும் ஒருவரிலொருவர் வைத்
திருக்கிற அன்பு அதிகரிக்கிறதினாலும்
நாங்கள் அப்படிச்செய்வது ஏற்றதாகும்.
4 நீங்கள் சகிக்கிற சகல துன்பங்களிலும்
உபத்திரவங்களிலும் விளங்கும் உங்கள்
பொறுமையையும் விசுவாசத்தையும்பற்றிக்
கடவுளின் சபைகளில் உங்கள் நிமித்தம்
5 நாங்கள் மேன்மைபாராட்டுகிறோம். கடவு
ளின் ராஜ்யத்தினிமித்தம் பாடனுபவிக்கிற
நீங்கள் அந்த ராஜ்யத்திற்குப் பாத்திரராக
எண்ணப்படும்படி, கடவுள் நியாயமான
தீர்ப்புச் செய்கிறவரென்பதற்கு அதுவே
6 அத்தாட்சி. உங்களை உபத்திரவப்படுத்து
கிறவர்களுக்கு உபத்திரவத்தையும், உபத்
திரவப்படுகிற உங்களுக்கு எங்களோடு
இளைப்பாறுதலையும் பிரதிபலனாகக் கொடுப்
7 பது கடவுளுக்கு நியாயமாகும். கடவுளை
அறியாதவர்களுக்கும் நம்முடைய ஆண்
டவராகிய இயேசுவின் சுவிசேஷத்திற்குக்
கீழ்ப்படியாதவர்களுக்கும் நியாயமான ஆக்
8 கினையைச் செலுத்துகிறவராய், ஆண்டவ
ராகிய இயேசு தமது வல்லமையின் தூத
ரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினி
யோடும் வானத்திலிருந்து வெளிப்படும்
9 போது அப்படியாகும். அந்நாளிலே தம்
முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்
தக்கவராயும், நாங்கள் உங்களுக்கு அறிவித்த
சாட்சியத்தை நம்பி ஏற்றுக்கொண்ட உங்க
ளிடத்திலும் விசுவாசமுள்ள எல்லாரிடத்தி
லும் ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர்
வரும்போது, ஆண்டவரின் சந்நிதானத்தி 10
லிருந்தும் அவருடைய வல்லமையான மகி
மையிலிருந்தும் அவர்கள் நீங்கலாகி, நித்திய
அழிவாகிய தண்டனையைப் பெறுவார்கள்.
ஆகையால் நம்முடைய கடவுளும் ஆண்ட 11
வராகிய இயேசுகிறிஸ்துவும் அளிக்கும் கிரு
பையின்படியே, நம்முடைய ஆண்டவராகிய
இயேசுவின் நாமம் உங்களிலும் நீங்கள் அவ
ரிலும் மகிமைப்படும்படியாக, கடவுள் உங் 12
களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்க
வும், எவ்வித சற்குண விருப்பத்தையும் விசு
வாசக் கிரியையையும் உங்களில் பலமாய்
நிறைவேற்றவும் வேண்டுமென்று எப்பொழு
தும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளு
கிறோம்.

அன்றியும், சகோதரரே, நம்முடைய 2
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வருகை
யையும் நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவ
தையும் முன்னிட்டு நாங்கள் உங்களை
வேண்டிக்கொள்ளுகிறதாவது: ஆண்டவ 2
ரின் நாள் வந்தாயிற்றென்று ஒரு ஆவியினா
லாவது வார்த்தையினாலாவது எங்களிட
மிருந்து வந்ததாய்த் தோன்றுகிற ஒரு நிரு
பத்தினாலாவது சொல்லப்பட்டால், உடனே
மனங்கலங்கவும் திகிலடையவும் வேண்
டாம். எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை
மோசம்போக்காதபடி பாருங்கள். அந்த 3
நாள் வருமுன் தேவதுரோகம் நேரிடவேண்
டும், அழிவின் மகனாகிய அக்கிரம மனுஷன்
வெளிப்படவும் வேண்டும். இவன் எதிர்த்து 4
நிற்கிறவன், தெய்வமெனப்படுவதெதுவோ
ஆராதிக்கப்படுவதெதுவோ அவை எல்லா
வற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிற
வன், கடவுளின் ஆலயத்தில் உட்கார்ந்து
தன்னையே கடவுளென்று காண்பிக்கிறவன்.
நான் உங்களிடத்திலிருந்தபோதே இவைகளை 5
உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்தது
ஞாபகமில்லையா? தன் காலத்துக்குமுன் 6
அவன் வெளிப்படாதபடிக்கு இப்பொழுது

தடை செய்கிறது இன்னதென்று உங்களுக்
7 குத் தெரியுமே. அக்கிரமத்தின் இரகசியம்
இப்பொழுது கிரியை செய்கிறது; ஆனாலும்,
இப்பொழுது தடை செய்கிறவன் இடையி
8 லிராதபடி நீக்கப்படவேண்டும். அப்
பொழுதே அந்த அக்கிரமக்காரன் வெளிப்
படுவான்; ஆண்டவராகிய இயேசு தமது
வாயின் சுவாசத்தினால் அவனை அழித்து,
தமது வருகையின் பிரசன்னத்தினாலே நாச
9 மாக்குவார். அந்த அக்கிரமக்காரன் வருகை,
சாத்தானுடைய சக்திக்கு இசைய, பொய்
யான சகல வல்லமையோடும் அடையாளங்
10 களோடும் அற்புதங்களோடும், அழிந்து
போகிறவர்களுக்குள்ளே அநீதத்தினால் உண்
டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்
கும். அவர்கள் தாங்கள் இரட்சிக்கப்படுவ
தற்குச் சத்தியத்தைப்பற்றும் அன்பை ஏற்
றுக்கொள்ளாமற்போனபடியால் அப்படி
11 நடக்கும். இதினிமித்தம், சத்தியத்தை நம்
பாமல் அநீதத்தில் பிரியப்படுகிற யாவரும்
12 தீர்ப்புப்பெறுவதற்கேதுவாய், அவர்கள்
பொய்யை நம்பும்படி வல்ல வஞ்சகத்தைக்
கடவுள் அவர்களுக்கு அனுப்புகிறார்.
13 ஆண்டவருக்குப் பிரியமான சகோதரரே,
நீங்கள் ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்
படுவதினாலும் சத்தியத்தை நம்புவதினாலும்
இரட்சிப்படையும்படி, ஆதிமுதல் கடவுள்
உங்களைத் தெரிந்துகொண்டபடியினால்
நாங்கள் உங்களைப்பற்றி எப்பொழுதும்
கடவுளுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்
14 டிருக்கிறோம். நம்முடைய ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்துவின் மகிமையை நீங்கள்
அடையும்பொருட்டு எங்கள் சுவிசேஷத்தி
னாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை
அழைத்தார்.
15 ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலை
கொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினா
லாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த
16 முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள். நம்
முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
தாமும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய
ஆறுதலையும் நன்னம்பிக்கையையும் கிருபை
யாய் நமக்குக் கொடுத்துவருகிற நம்முடைய
17 பிதாவாகிய கடவுளும், உங்கள் இருதயங்
களைத் தேற்றி, எந்த நற்செய்கையிலும் நல்
வார்த்தையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவா
ராக.

3 கடைசியாக, சகோதரரே, ஆண்டவரின்
வசனம் உங்களிடம் ஓடிவந்ததுபோல எங்
2 கும் ஓடி மகிமைப்படவும் முரடரான
பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள்
விடுவிக்கப்படவும் எங்களுக்காக வேண்டிக்
கொள்ளுங்கள்; விசுவாசம் எல்லாரிடத்
திலுமில்லை. ஆண்டவரோ உண்மையுள்ள 3
வர், அவர் உங்களை ஸ்திரப்படுத்தி, தீயோ
னுக்கு விலக்கிக் காத்துக்கொள்ளுவார்.
மேலும், நாங்கள் கட்டளையிடுகிறவைகளை 4
நீங்கள் செய்து வருகிறீர்களென்றும், இனி
மேலும் செய்வீர்களென்றும் உங்களைப்பற்றி
ஆண்டவருக்குள் திடநம்பிக்கையாயிருக்
கிறோம். கடவுளின் அன்புக்குள்ளும் 5
கிறிஸ்துவின் பொறுமைக்குள்ளும் ஆண்ட
வர் உங்கள் இருதயங்களை நடத்துவா
ராக.

மேலும், சகோதரரே, எங்களிடம் பெற் 6
றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல்,
ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும்
நீங்கள் விட்டுவிலகவேண்டுமென்று நம்மு
டைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்
நாமத்திலே உங்களுக்குக் கட்டளையிடு
கிறோம். நீங்கள் எங்களைப் பார்த்துநடக்க 7
வேண்டிய விதம் இன்னதென்று உங்களுக்
குத் தெரியுமே; நாங்கள் உங்களுக்குள்ளே
ஒழுங்கற்று நடவாமலும், ஒருவனிடத்திலும் 8
இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில்
ஒருவனுக்கும் பாரமாயிராதபடி, உழைப்
போடும் களைப்போடும் இரவும் பகலும் வேலை
செய்து சாப்பிட்டு வந்தோம். எங்களுக்கு 9
அதிகாரமில்லை என்பதினாலல்ல, நீங்கள் எங்
களைப் பார்த்துநடக்கவேண்டுமென்றே எங்
களை உங்களுக்கு மாதிரியாகக் காட்டினோம்.
ஒருவன் வேலைசெய்ய மனமில்லாதிருந்தால் 10
அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள்
உங்களிடமிருந்தபோது உங்களுக்குக் கட்
டளையிட்டோம். உங்களில் சிலர் யாதொரு 11
வேலையும் செய்யாமல், பிறர் வேலையில் தலை
யிட்டு ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று
கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவர்கள் 12
அமைதலாய் வேலைசெய்து, தங்கள் சொந்தச்
சாப்பாட்டைச் சாப்பிடவேண்டுமென்று
நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
வுக்குள் அவர்களுக்குக் கட்டளையிட்டுப்
புத்திசொல்லுகிறோம். நீங்களோ, சகோ 13
தரரே, நன்மைசெய்வதில் சோர்ந்துபோகா
திருங்கள். இந்த நிருபத்தில் சொல்லிய 14
எங்கள் வார்த்தைக்கு ஒருவன் கீழ்ப்படியா
மற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு
அவன் வெட்கப்படும்படி அவனோடு கலவா
திருங்கள். ஆனாலும், அவனைச் சத்துருவாக 15
எண்ணாமல் சகோதரனாகப் பாவித்து அவனை
எச்சரியுங்கள்.

சமாதானத்தின் ஆண்டவர்தாமே எப் 16
பொழுதும் எவ்விதத்திலும் உங்களுக்குச்

சமாதானம் தந்தருளுவாராக. ஆண்டவர்
உங்களனைவரோடும் இருப்பாராக.
17 பவுலாகிய நான் என் கைப்பட எழுதி
உங்களை வாழ்த்துகிறேன்; ஒவ்வொரு நிரு
பத்திலும் இதுவே அடையாளம்; நான்
எழுதுவது இப்படியே. நம்முடைய ஆண் 18
டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை
உங்களனைவரோடும் இருப்பதாக.

தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம்

1 நம்முடைய இரட்சகராகிய கடவுளும்
நமது நன்னம்பிக்கையாகிய கிறிஸ்து இயேசு
வும் கொடுத்த கட்டளைப்படியே கிறிஸ்து
2 இயேசுவின் அப்போஸ்தலனான பவுல், விசு
வாசத்தில் உத்தம பிள்ளையாகிய தீமோத்தேயு
வுக்கு எழுதுவதாவது: பிதாவாகிய கடவு
ளிடமிருந்தும் நம்முடைய ஆண்டவராகிய
கிறிஸ்து இயேசுவினிடமிருந்தும் கிருபை
யும் இரக்கமும் சமாதானமும் உண்டாவ
தாக.
3 நான் மக்கெதோனியாவுக்குப் போகும்
போது உன்னை எபேசுவில் தரித்திருக்கக்
கேட்டுக்கொண்டேன். சிலர் வேற்றுமை
4 யாய்ப் போதகம்பண்ணுகிறார்கள். கடவுள்
நியமித்ததும் விசுவாசத்தை ஆதாரமாகக்
கொண்டதுமான உக்கிராண ஊழியத்திற்கு
ஏதுவாயிராமல் தர்க்க விசாரணைகளுக்கு
ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும், முடி
வில்லாத வம்ச வரலாறுகளையும் கவனித்து
வருகிறார்கள். அவர்கள் இப்படிச் செய்
யாதபடி நீ உபதேசம்பண்ணவேண்டு
5 மென்று உனக்குச் சொன்னேன். அந்த
உபதேசத்தின் நோக்கம் சுத்த இருதயத்தி
லும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசு
6 வாசத்திலும் விளையும் அன்பே. சிலர்
இவற்றை விட்டுவிலகி வீண்பேச்சுக்குச்
7 சாய்ந்துபோனார்கள். தாங்கள் சொல்லு
கிறவைகளும் தாங்கள் சாதிக்கிறவைகளும்
இன்னவென்று அறியாதிருந்தும் நியாயப்பிர
மாணப் போதகராயிருக்க விரும்புகிறார்கள்.
8 நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்
படாமல், அக்கிரமக்காரருக்கும் அடங்காத
வர்களுக்கும் அவபக்தருக்கும் பாவிகளுக்
கும் பக்தியற்றவர்களுக்கும் சீர்கெட்டவர்
களுக்கும் தாய்தந்தையரைக் கொல்லுகிறவர்
9 களுக்கும் கொலைபாதகருக்கும் | வேசி
மார்க்கத்தாருக்கும் ஆண்புணர்ச்சிக்காரருக்
கும் மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும்
பொய்யருக்கும் பொய்யாணை இடுகிறவர்க
10 ளுக்கும், நித்தியானந்தக் கடவுள் என்னிடம்
ஒப்புவித்திருக்கிற தமது மகிமையின் சுவி
சேஷத்திற்கிசைந்த ஆரோக்கியகரமான உப
தேசத்திற்கு எதிரிடையான மற்ற யாவற்
றிற்கும் விரோதமாய் விதிக்கப்பட்டிருக்கிற
தென்று ஒருவன் அறிந்து, நியாயப்பிரமா 11
ணத்தை நியாயமாய் வழங்கினால், அது
நல்லதென்று நமக்குத் தெரியும்.
என்னைப் பலப்படுத்தியிருக்கிற நம் 12
முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு
என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி
இந்த ஊழியத்திற்கு என்னை ஏற்படுத்தின
தற்காக அவருக்கு நன்றிசெலுத்துகிறேன்.
முன்னே நான் தூஷிக்கிறவனும் துன்பப் 13
படுத்துகிறவனும் கொடுமை செய்கிறவனுமா
யிருந்தேன்; ஆயினும், நான் அறியாமல்
அவிசுவாசத்தில் அப்படிச் செய்தபடியினால்
இரக்கம் பெற்றேன். நம்முடைய ஆண்டவ 14
ரின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள
விசுவாசத்தோடும் அன்போடும் என்னில்
அபரிமிதமாய்ப் பெருகிற்று. பாவிகளை 15
இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில்
வந்தார்; இது உண்மையும் எல்லா அங்கீ
கரிப்புக்கும் ஏற்றதுமான வார்த்தை; பாவி
களில் பிரதான பாவி நான். அப்படி 16
யிருந்தும், நித்திய ஜீவனுக்கேதுவாய் இயேசு
கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கப்போகிறவர்
களுக்குத் திருஷ்டாந்தமாவதற்கென்று, பிர
தான பாவியாகிய என்னில் அவர் எல்லா
நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படி
நான் இரக்கம் பெற்றேன். அழிவில்லாத 17
வரும் காணப்படாதவரும் ஒரே கடவுளு
மாகிய நித்திய ராஜாவுக்கு என்றென்றைக்
கும் கனமும் மகிமையும் உண்டாவதாக;
ஆமேன்.
தீமோத்தேயுவே, என் பிள்ளையே, உன் 18
னைக்குறித்து முன் சொல்லப்பட்ட தீர்க்க
தரிசன வசனங்களுக்கு இசைய, நீ அவை
களை முன்னிட்டு, விசுவாசமும் நல்மனச்
சாட்சியுமுடையவனாய் நல்ல போராட்டம்
போராடவேண்டுமென்ற கட்டளையை

19 உனக்கு ஒப்புவிக்கிறேன். இந்த நல்மனச்
சாட்சியைச் சிலர் தள்ளிவிட்டு, விசுவாச
சத்திய விஷயத்தில் கப்பற்சேதத்திற்குட்பட்
20 டார்கள். இமெனேயும் அலெக்சந்தரும்
அப்படிப்பட்டவர்கள்; இவர்கள் இனித்
தூஷியாதபடி சிட்சை பெறுவதற்கேது
வாய் இவர்களைச் சாத்தானுக்கு ஒப்புக்
கொடுத்தேன்.

2 எல்லாவற்றிற்கும் பிரதானமாக நான்
கேட்டுக்கொள்ளுகிறதாவது: எல்லா மனுஷ
ருக்காகவும் விண்ணப்பங்களும் ஜெபங்
களும் வேண்டுதல்களும் ஸ்தோத்திரங்களும்
2 செய்யப்படவேண்டும்; நாம் எல்லா பக்தி
யோடும் நல்லொழுக்கத்தோடும் சமாதான
மும் அமைதியுமாய் நம் வாழ்நாளைக் கழிக்
கும்படி ராஜாக்களுக்காகவும் அதிகாரிகள்
யாவருக்காகவும் அப்படிச் செய்யவேண்
3 டும். இது நன்மையும் நம்முடைய இரட்சக
ராகிய கடவுள் சந்நிதியில் உகந்ததுமாம்.
4 எல்லா மனுஷரும் இரட்சிப்பைப் பெறவும்
சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும்
வேண்டுமென்பதே அவருடைய சித்தம்.
5 கடவுள் ஒருவரே, கடவுளுக்கும் மனுஷருக்
கும் மத்தியஸ்தரும் ஒருவரே; அவர் மனுஷ
6 னாகிய கிறிஸ்து இயேசுதான். எல்லாரையும்
மீட்கும்பொருளாகத் தம்மைத் தாமே ஒப்
புக்கொடுத்தவர் அவரே. இதைப்பற்றிய
சாட்சியம் ஏற்ற காலங்களில் விளங்கும்.
7 இதற்காகவே நான் பிரசங்கியாகவும் அப்
போஸ்தலனாகவும், புறஜாதிகளுக்கு விசுவா
சத்தையும் சத்தியத்தையும் போதிக்கிறவ
னாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்; நான்
சொல்வது பொய்யல்ல, உண்மையே.
8 ஆகவே, புருஷர் எவ்விடத்திலும் பரிசுத்த
மான கைகளை உயர்த்தி, கோபமும் தர்க்
கமுமின்றி ஜெபம்பண்ணவேண்டுமென்பது
9 என் விருப்பம். அப்படியே ஸ்திரீகளும்
சடை பின்னுதலினாலாவது பொன் முத்து
விலையுயர்ந்த ஆடை இவற்றினாலாவது தங்
களை அலங்கரித்துக்கொள்ளாமல், நாணமும்
10 நிதான புத்தியுமுடையவர்களாயும், தங்க
ளைத் தேவபக்தியுள்ளவர்களென்று அறிக்கை
செய்கிற ஸ்திரீகளுக்கேற்றபடி நற்செய்கைகள்
செய்கிறவர்களாயும், தகுதியான வஸ்திரத்தி
னால் தங்களை அலங்கரித்துக்கொள்ளவேண்
11 டும். ஸ்திரீயானவள் எல்லா விஷயத்திலும்
அடங்கி அமைதலாயிருந்து கற்றுக்கொள்
12 ளக்கடவள். உபதேசம்பண்ணவும் புருஷன்
மேல் அதிகாரஞ்செலுத்தவும் ஸ்திரீயானவ
ளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை;
13 அவள் அமைதலாயிருக்கவேண்டும். ஏனெ
னில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்
டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்.
மேலும், ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, 14
ஸ்திரீயே மோசம்போய் மீறுதலுக்குள்ளா
னாள். என்றாலும், நிதான புத்தியோடு விசு 15
வாசத்திலும் அன்பிலும் பரிசுத்தமாகுதலி
லும் நிலைத்திருந்தால் பிள்ளைப் பேற்றின் மூல
மாய் இரட்சிக்கப்படுவாள்.

அத்தியட்சு ஊழியத்தை அபேட்சிக்கிற **3**
வன் நல்ல ஊழியத்தை விரும்புகிறான்;
இது உண்மையான வார்த்தை. ஆகவே, 2
அத்தியட்சனானவன் குற்றஞ்சாட்டப்படாத
வனும், ஒரே மனைவியையுடைய புருஷனும்,
தெளிந்த சிந்தையுள்ளவனும், நிதான புத்தி
யுள்ளவனும், யோக்கியதையுள்ளவனும்,
அன்னியரை உபசரிக்கிறவனும், போதக
சமர்த்தனுமாயிருக்கவேண்டும். அவன் மது 3
பானப் பிரியனும் கலகக்காரனுமாயிராமல்,
பொறுமையுள்ளவனும் சண்டைசெய்யாத
வனும் பண ஆசையில்லாதவனுமாயிருந்து,
தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்து 4
கிறவனும், சம்பூரண நல்லொழுக்கத்தோடு
தன் பிள்ளைகளைக் கீழ்ப்படியப்பண்ணுகிற
வனுமாயிருக்கவேண்டும்.—ஒருவன் தன் 5
சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்
தால் கடவுளின் சபையை அவன் பரிபா
லிப்பதெப்படி?— அவன் இறுமாப்படைந்து 6
பிசாசுக்கு நேரிட்ட ஆக்கினையிலே விழாத
படி, புதிய சீஷனாயிருக்கக்கூடாது. அவன் 7
நிந்தனையிலும் பிசாசின் கண்ணியிலும் விழா
தபடிக்கு, புறம்பானவர்களாலும் நற்சாட்சி
பெற்றவனாயிருக்கவேண்டும்.
அப்படியே, சபை உதவிக்காரர் இரு 8
நாக்குள்ளவர்களாயும், மதுபானப்பிரியரா
யும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்க
ளாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்க
ளாயும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த 9
மனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்க
ளாயும் இருக்கவேண்டும். உதவிக்காரரும் 10
முதலாவது பரீட்சிக்கப்பட்டு, குற்றஞ்
சாட்டப்படாதவர்களாயிருந்தால், ஊழியஞ்
செய்யலாம். அப்படியே உதவிக்காரிகள் 11
நல்லொழுக்கமுள்ளவர்களும் அவதூறு
பண்ணாதவர்களும் தெளிந்த சிந்தையுள்ள
வர்களும் எல்லாவற்றிலும் உண்மையுள்ள
வர்களுமாயிருக்கவேண்டும். உதவிக்காரர் 12
ஒரே மனைவியையுடைய புருஷரும், தங்கள்
பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும்
நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்
டும். இப்படியாக, உதவிக்காரரின் 13
வேலையை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்க

ளுக்கு நல்ல பதவியையும், கிறிஸ்து இயேசு
வின்மேலுள்ள விசுவாசத்தில் மிகுந்த தைரி
யத்தையும் சம்பாதிக்கிறார்கள்.
14 நான் உன்னிடம் சீக்கிரம் வருவேனென்று
15 நம்புகிறேன். தாமதிப்பேனேயாகில், ஜீவ
னுள்ள கடவுளின் சபையும் சத்தியத்திற்குத்
தூணும் ஆதாரமுமாயிருக்கிற கடவுளின்
வீட்டில் நடந்துகொள்ளவேண்டிய வகையை
நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுது
16 கிறேன். அன்றியும், யாவரும் ஒப்புக்கொள்
ளுகிறபடி, தேவபக்திக்குரிய இரகசியம் மகா
மேன்மையுள்ளது:

அவர் மாம்சத்தில் வெளிப்பட்டார்,
ஆவியில் நீதியுள்ளவரென்று தீர்க்கப்பட்டார்,
தேவதூதரால் தரிசிக்கப்பட்டார்,
புறஜாதியாருக்குள் பிரசங்கிக்கப்பட்டார்,
உலகத்தில் விசுவாசிக்கப்பட்டார்,
மகிமையில் எடுத்துக்கொள்ளப்பட்டார்.

4 ஆவியானவர் திட்டமாய்ச் சொல்லுகிற
படி, தங்கள் மனச்சாட்சியில் சூடுண்ட
பொய்யரின் மாயத்தினாலே வஞ்சிக்கிற ஆவி
களுக்கும் பேய்களுக்குரிய உபதேசங்களுக்
2 கும் சிலர் செவிகொடுத்து, கடைசிக்காலங்
களில் விசுவாசத்தைவிட்டு விலகிப்போ
3 வார்கள். விவாகம்பண்ணாதிருக்கவும், விசு
வாசிகளும் சத்தியத்தை அறிந்தவர்களும்
நன்றிசெலுத்தி அனுபவிக்கும்படி, கடவுள்
படைத்த போஜனபதார்த்தங்களை விலக்கவும்
வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளை
4 யிடுகிறார்கள். கடவுள் படைத்ததெல்லாம்
நல்லதே; ஒருவன் நன்றிசெலுத்தி அனுபவித்
5 தால் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல; தேவ
வசனத்தினாலும் ஜெபத்தினாலும் அது பரி
சுத்தமாக்கப்படுகிறதே.
6 இவைகளை நீ சகோதரருக்குச் சொல்லிக்
கொண்டுவந்தால், விசுவாசத்திற்குரிய வார்த்
தைகளாலும் நீ அனுசரித்துவந்த நல்ல உப
தேசத்திற்குரிய வார்த்தைகளாலும் வளர்ந்து,
கிறிஸ்து இயேசுவுக்கு நல்ல ஊழியக்காரனா
7 யிருப்பாய். சீர்கேடும் கிழவிகள் பேச்சுமா
யிருக்கிற கட்டுக்கதைகளுக்கு நீ விலகி,
தேவபக்தியை அப்பியாசித்துக்கொண்டிரு.
8 சரீர அப்பியாசம் கொஞ்சத்திற்குப் பிரயோ
ஜனமுள்ளது; தேவபக்தியோ எல்லாவற்
றிற்கும் பிரயோஜனமுள்ளது; இந்த ஜீவ
னுக்கும் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்த
9 முள்ளது. இது உண்மையான வார்த்தை,
10 எல்லா அங்கீகரிப்புக்கும் ஏற்றது. எல்லா
மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்
கும் இரட்சகராயிருக்கிற ஜீவனுள்ள கட
வுள்மேல் நாம் நன்னம்பிக்கை வைத்திருக்
கிறபடியால், இதற்கென்றே உழைத்தும்
போராடியும் வருகிறோம்.
இவைகளை நீ கட்டளையிட்டுப் போதித்துக் 11
கொண்டிரு. உன் இளமையினிமித்தம் ஒரு 12
வனும் உன்னை அவமதியாதபடி, பேச்சிலும்
நடக்கையிலும் அன்பிலும் விசுவாசத்திலும்
தூய்மையிலும் விசுவாசிகளுக்கு மாதிரியா
யிரு. நான் வருமளவும், வாசிக்கிறதிலும் 13
புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும்
கருத்தாயிரு. மூப்பர் உன்மேல் கைகளை 14
வைத்தபோது தீர்க்கதரிசனத்தின் மூலமாய்
உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி
அஜாக்கிரதையாயிராதே. நீ தேறுகிறது 15
யாவருக்கும் விளங்கும்படி, இவைகளைப்
பற்றி ஜாக்கிரதையாயிருந்து இவைகளில்
நிலைத்திரு. உன்னைக்குறித்தும் உபதேசத் 16
தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவை
களில் நிலைகொண்டிரு; இப்படிச் செய்வா
யானால் உன்னையும் உன் உபதேசத்தைக்
கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளு
வாய்.

முதிர்வயதுள்ளவனைக் கண்டிப்பாய்க் 5
கடிந்துபேசாமல் அவனைத் தகப்பனைப்போ
லவும், பாலிய புருஷரைச் சகோதரரைப்
போலவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளைத் தாய் 2
மாரைப்போலவும், பாலிய ஸ்திரீகளை தூய
மனத்தோடு சகோதரிகளைப்போலவும் பாவித்
துப் புத்திசொல்லு.
உள்ளபடி விதவைகளாயிருக்கிறவர் 3
களைக் கனம்பண்ணு. விதவையான ஒருத் 4
திக்குப் பிள்ளைகளாவது பேரப்பிள்ளைகளா
வது இருந்தால், இவர்கள் முதலாவது
தங்கள் சொந்தக் குடும்ப விஷயத்தில் பக்தி
காட்டவும், பெற்றோர் செய்த நன்மை
களுக்குப் பதில்நன்மைகளைச் செய்யவும்
கற்றுக்கொள்ளக்கடவர்கள்; இது கடவு
ளின் சந்நிதியில் உகந்தது. உள்ளபடி 5
விதவையாய்த் தனித்திருப்பவள் கடவுளில்
நன்னம்பிக்கையுள்ளவளாய் இரவும் பகலும்
வேண்டுதல்களிலும் ஜெபங்களிலும் நிலைத்
திருப்பாள். சுகபோகமாய் வாழ்கிறவள் 6
உயிரோடே செத்தவள். அவர்கள் குற்றஞ் 7
சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி இவை
களைக் கட்டளையிடு. ஒருவன் தனக்குச் 8
சொந்தமானவர்களையும், விசேஷமாய்த் தன்
வீட்டாரையும் பராமரியாமற்போனால்,
அவன் விசுவாசத்தை மறுதலித்தவன்,
அவிசுவாசியிலும் கெட்டவன். விதவை 9
யாகப் பேரெழுதப்படத்தக்கவள் அறுபது
வயதுக்குக் குறையாதவளும், ஒரே புருஷ

10 னுக்கு மனைவியாயிருந்தவளும், பிள்ளைகளை
வளர்த்து அன்னியரை உபசரித்துப் பரிசுத்த
வான்களின் பாதங்களைக்கழுவி உபத்திரவப்
படுகிறவர்களுக்கு உதவிசெய்து எந்த நற்
கிரியையையும் உற்சாகமாய் நடப்பித்து
இவ்விதமாய் நற்கிரியைகளைப்பற்றிய நற்
11 சாட்சிபெற்றவளுமாயிருக்கவேண்டும். இள
வயதுள்ள விதவைகளைப் பேர் எழுதாமல்
விட்டுவிடு; இவர்கள் கிறிஸ்துவுக்கு விரோத
மான இச்சைகளுக்குட்படும்போது விவா
12 கஞ்செய்துகொள்ள விரும்புவார்கள்; இவ்
விதமாய், தாங்கள் முதலில் கொண்டிருந்த
விசுவாசத்தை விட்டுவிடுவதினாலே குற்றத்
13 திற்குள்ளாவார்கள். அதுவுமல்லாமல்,
அவர்கள் சோம்பலுள்ளவர்களாய் வீடு
வீடாய்த் திரியப் பழகுவார்கள்; சோம்ப
லுள்ளவர்களாய் மாத்திரமல்ல அலப்புகிற
வர்களாயும் பிறர்காரியங்களில் தலையிடுகிற
வர்களாயும் தகாதகாரியங்களைப் பேசுகிறவர்
14 களாயும் இருப்பார்கள். ஆகையால், இள
வயதுள்ள விதவைகள் விவாகம்பண்ணவும்
பிள்ளைகளைப் பெறவும் வீட்டை நடத்தவும்
விரோதியின் நிந்தனைக்கு இடங்கொடாம
15 லிருக்கவும் விரும்புகிறேன். இதற்குமுன்
னேயே சிலர் வழிவிலகி, சாத்தானுக்குப்
16 பின்சென்றதுண்டு. விசுவாசியாகிய ஒருத்தி
யிடம் விதவைகளிருந்தால், அவர்களுக்கு
இவள் உதவிசெய்யக்கடவள்; சபையின்
மேல் அந்தப் பாரத்தைச் சுமத்தக்கூடாது.
உள்ளபடி விதவைகளானவர்களுக்குச் சபை
உதவிசெய்யவேண்டுமே.
17 நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை,
விசேஷமாகத் திருவசனத்திலும் உபதேசத்
திலும் உழைக்கிறவர்களை, இரட்டிப்பான
கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்.
18 போரடிக்கிற மாட்டை வாய்கட்டாதே
என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்
திரன் என்றும் வேதவாக்கியம் சொல்லு
19 கிறதே. மூப்பன் ஒருவனுக்கு விரோத
மான பிராதை இரண்டு மூன்று சாட்சிக
20 ளில்லாமல் ஏற்றுக்கொள்ளாதே. மற்றவர்
களுக்குப் பயமுண்டாகும்படி, பாவஞ்செய்
கிறவர்களை எல்லாருக்குமுன்பாகக் கடிந்து
21 கொள். விசாரிக்குமுன் நிர்ணயிக்காமலும்
ஒருபக்கம் சாராமலும் இருந்து, இவைகளை
நீ காத்து நடக்கவேண்டுமென்று கடவு
ளுக்கு முன்பாகவும், கிறிஸ்து இயேசுவுக்கு
முன்பாகவும், நியமிக்கப்பட்ட தூதருக்கு
முன்பாகவும் வற்புறுத்திச் சொல்லுகிறேன்.
22 ஒருவன்மேலும் அவசரமாய்க் கைகளை
வைக்கவேண்டாம்; மற்றவர்கள் பாவங்
களில் பங்காளியாகாதே, உன்னை மாசற்றவ
னாகக் காத்துக்கொள். நீ இனிமேல் தண்ணீர் 23
மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும்
உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்
களுக்காகவும் கொஞ்சம் திராட்சரசமும் உப
யோகித்துக்கொள். சிலருடைய பாவங்கள் 24
வெளிப்படையாயிருந்து நியாயத்தீர்ப்புக்கு
முந்திக்கொள்ளும்; சிலருடைய பாவங்கள்
அவர்களைப் பின்தொடரும். அப்படியே 25
நற்கிரியைகள் வெளிப்படையாகும், நற்
கிரியைகளல்லாதவைகளும் மறைந்திருக்க
முடியாது.

கடவுளின் நாமமும் கிறிஸ்தவ உபதேச 6
மும் தூஷிக்கப்படாதபடி, நுகத்திற்குட்
பட்டிருக்கிற அடிமைகள் யாவரும் தங்கள்
எஜமான்களை எல்லாக் கனத்திற்கும் பாத்திர
ராக எண்ணிக்கொள்ளக்கடவர்கள். விசு 2
வாசிகளான எஜமான்களையுடையவர்கள்
தங்கள் எஜமான்கள் சகோதரர்தானே என்று
அவர்களை அசட்டைபண்ணாமல், தாங்கள்
செய்யும் நல்வேலையின் பலனைப் பெற்றனுப
விக்கிற அவர்கள் விசுவாசிகளும் பிரியருமா
யிருக்கிறபடியால், அதிக ஊக்கமாய் வேலை
செய்யக்கடவர்கள்.

இவற்றைப் போதித்துப் புத்திசொல்லு.
நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 3
வின் ஆரோக்கியகரமான வார்த்தைகளுக்கும்
தேவபக்திக்கேற்ற உபதேசத்திற்கும் ஒரு
வன் உடன்படாமல் வேற்றுமையாய்ப்
போதகம்பண்ணினால், அவன் இறுமாப்புள் 4
ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்
களையும் வாக்குவாதங்களையும்பற்றி நோய்
கொண்டவனுமாயிருக்கிறான்; இவற்றினால்
பொறாமை, சண்டை, தூஷணம், பொல்
லாத சமுசயங்களும், சீர்கெட்ட மனமுள்ள 5
வர்களாலும் சத்தியத்தை இழந்தவர்களாலும்
தேவபக்தியை ஆதாயமென்று எண்ணுகிறவர்
களாலும் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்
களும் பிறக்கும். மனோரம்மியத்தோடு கூடிய 6
தேவபக்தியே சிறந்த ஆதாயம். ஏனெனில், 7
உலகத்திற்குள் நாம் ஒன்றையும் கொண்டு
வந்ததில்லை, உலகத்தைவிட்டு நாம் ஒன்றை
யும் கொண்டுபோகவும் முடியாது. ஊணும் 8
உடையும் நமக்கிருந்தால் போதும். ஐசு 9
வரியவான்களாகவேண்டுமென்று விரும்பு
கிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும்,
மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்
துகிற மதிகேடும் சேதமுமான பலவித
இச்சைகளிலும் விழுகிறார்கள். பண ஆசை 10
எல்லாத் தீமைகளுக்கும் ஒரு வேர்;
சிலர் அந்த ஆசையால் விசுவாசத்தைவிட்டு

மோசம்போய், அநேக வேதனைகளால் தங்
களை உருவக் குத்திக்கொண்டார்கள்.
11 நீயோ, கடவுளின் மனுஷனே, இவை
களை விட்டோடி, நீதியையும் தேவபக்தியை
யும் விசுவாசத்தையும் அன்பையும் பொறு
12 மையையும் சாந்தகுணத்தையும் நாடு. விசு
வாசத்தின் நல்ல போராட்டத்தைப்
போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்;
அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக
சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கைபண்
13 ணியு மிருக்கிறாய். நம்முடைய ஆண்டவரா
கிய இயேசுகிறிஸ்து பிரசன்னமாகும்வரைக்
கும் நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும்
குற்றமில்லாமலும் காத்துவரும்படிக்கு,
14 எல்லாவற்றையும் உயிரோடு காத்துவரு
கிற கடவுளுடைய சந்நிதானத்திலும், பொந்
திய பிலாத்துவின் முன்னின்று நல்ல
அறிக்கைசெய்து சாட்சி பகர்ந்த கிறிஸ்து
இயேசுவினுடைய சந்நிதானத்திலும் உனக்
15 குக் கட்டளையிடுகிறேன். ஏற்ற காலங்களில்
கடவுள் அந்தப் பிரசன்னத்தை வெளியாக்கு
வார். அவரே நித்தியானந்தமுள்ள ஏக சக்க
ராதிபதி, ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா,
16 ஒருவராய்ச் சாவாமையுடையவர், ஒருவரும்
சேரமுடியாத ஒளியில் வாசம்பண்ணுகிற
வர், மனுஷர் ஒருவரும் காணாதவர், காண
வும் முடியாதவர்; அவருக்கே கனமும்
நித்திய வல்லமையும் உண்டாவதாக.
ஆமேன்.
இந்த உலகத்தில் ஐசுவரியமுள்ளவர்கள் 17
மேட்டிமைச் சிந்தையற்றவர்களாயிருக்க
வும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேலல்ல, நாம்
அநுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளை
யும் தாராளமாய்க் கொடுக்கிற கடவுளின்
மேலேயே நன்னம்பிக்கை வைக்கவும்,
நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசு 18
வரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்
கிறவர்களும் உதாரகுணமுள்ளவர்களுமா
யிருக்கவும், உள்ளபடி ஜீவனாயிருப்பதைப் 19
பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்கென்று
தங்களுக்கு நல்ல ஆதாரத்தைச் சம்பாதித்
துக்கொள்ளவும் வேண்டுமென்று அவர்களுக்
குக் கட்டளையிடு.
தீமோத்தேயுவே, உன்னிடம் ஒப்புவிக் 20
கப்பட்டதைக் காத்துக்கொள், சீர்கேடான
வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்
யாய்ப் பேர்பெற்றிருக்கிற ஆட்சேபங்களுக்
கும் விலகு. சிலர் அந்த ஞானத்தைப் 21
பாராட்டி, விசுவாசத்தைவிட்டு விலகிப்
போனார்கள்.
கிருபை உங்களோடிருப்பதாக.

தீமோத்தேயுவுக்கு எழுதின
இரண்டாம் நிருபம்

1 கிறிஸ்து இயேசுவுக்குள்ளான ஜீவனைப்
பற்றும் வாக்குத்தத்தத்திற்கு இசைய, கட
வுள் சித்தத்தினாலே கிறிஸ்து இயேசுவின்
2 அப்போஸ்தலனான பவுல், பிரியமுள்ள
பிள்ளையாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுவ
தாவது: பிதாவாகிய கடவுளிடமிருந்தும்
நம்முடைய ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு
வினிடமிருந்தும் கிருபையும் இரக்கமும்
சமாதானமும் உண்டாவதாக.
3 நான் இரவும் பகலும் இடைவிடாமல்
என் ஜெபங்களில் உன்னை நினைத்துக்
கொண்டு, உன் கண்ணீரை ஞாபகத்தில்
4 வைத்தவனாய், சந்தோஷத்தால் நான் நிரப்
பப்படும்படி உன்னைக் காண வாஞ்சையா
யிருந்து, உன்னிலுள்ள மாயமற்ற விசுவா
5 சத்தை நினைவுகூர்ந்து, என் முன்னோர்
போலவே சுத்த மனச்சாட்சியோடு நான்
சேவித்துவரும் கடவுளுக்கு நன்றிசெலுத்து
கிறேன். அந்த விசுவாசம் முதலாவது உன்
பாட்டியாகிய லோவிசாளிலும் பின்பு உன்
தாயாகிய ஐனிக்கேயாளிலும் நிலைத்திருந்தது;
அது உன்னிலும் நிலைத்திருக்கிறதென்று
திட்டமாய் நம்புகிறேன்.
6 இதினிமித்தமாக, உன்மேல் நான் என்
கைகளை வைத்ததினால் உன்னிலுள்ள தேவ
வரத்தை நீ அனல்மூட்டி எழுப்பும்படி
7 உனக்கு நினைப்பூட்டுகிறேன். பயப்படும்
ஆவியைக் கடவுள் நமக்குக் கொடாமல்,
வல்லமையும் அன்பும் நிதான புத்தியு
முள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.
8 ஆகையால், நம்முடைய ஆண்டவரின்
சாட்சியத்தைப்பற்றியாவது அவர் நிமித்தம்
கைதியாயிருக்கிற என்னைப்பற்றியாவது நீ
வெட்கப்படாமல், கடவுளின் வல்லமைக்
கேற்றபடி என்னோடு சுவிசேஷத்திற்காகத்
9 துன்பத்தைச் சகித்திரு. அவர் நமது கிரி
யைகளின்படி நம்மை இரட்சியாமல், தமது
சொந்தத் தீர்மானத்தின்படியும், ஆதிகால
முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அரு
ளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்
சித்து, பரிசுத்த அழைப்பினாலே நம்மை
அழைத்தார். நம்முடைய இரட்சகராகிய 10
கிறிஸ்து இயேசு பிரசன்னமானதினாலே
அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்
தப்பட்டது; அவர் மரணத்தைப் பரிகரித்து,
ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தி
னாலே பகிரங்கமாக்கினார். அந்தச் சுவிசே 11
ஷத்திற்கு நான் பிரசங்கியாகவும் அப்போஸ்
தலனாகவும் போதகனாகவும் நியமிக்கப்பட்
டேன். இந்தப் பாடுகளை நான் அதினிமித் 12
தம் அனுபவிக்கிறேன்; ஆயினும் நான் வெட்
கப்படேன்; ஏனென்றால், நான் நம்பியிருக்
கிறவரை அறிவேன், நான் அவரிடத்தில்
ஒப்புக்கொடுத்ததை அந்நாள்வரைக்கும் காத்
துக்கொள்ள அவர் வல்லவரென்று திடநம்
பிக்கையாயிருக்கிறேன். என்னிடம் நீ கேட் 13
டிருக்கிற ஆரோக்கியகரமான வார்த்தை
களின் மாதிரியைக் கிறிஸ்து இயேசுவைப்
பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் பற்
றிக்கொண்டிரு. உன்னிடம் ஒப்புவிக்கப் 14
பட்ட அந்த நல்ல பொருளை நமக்குள் வாச
மாயிருக்கிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்
கொள்.

ஆசியாவிலிருக்கிற யாவரும் என்னை 15
விட்டு விலகிப்போனார்களென்று உனக்குத்
தெரியும்; பிகெல்லுவும் எர்மொகேனேயும்
அவர்களைச் சேர்ந்தவர்கள். ஒநேசிப்போரு 16
வின் வீட்டாருக்கு ஆண்டவர் இரக்கம்
கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம்
என்னை இளைப்பாற்றினான்; என் விலங்கைப்
பற்றி அவன் வெட்கப்படவில்லை; அவன் 17
ரோமாவில் வந்திருந்தபோது அதிகக் கருத்
தாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான்;
எபேசுவில் அவன் செய்த பணிவிடையெல் 18
லாம் உனக்கு நன்றாய்த் தெரியும். ஆண்டவ
ரிடம் அந்நாளிலே அவன் இரக்கம் கண்ட
டையும்படி ஆண்டவர் கடாட்சிப்பாராக.

ஆதலால், என் பிள்ளையே, கிறிஸ்து **2**
இயேசுவுக்குள்ளான கிருபையில் நீ பலப்
படு. அநேக சாட்சிகள் முன்னிலையில் நீ 2
என்னிடம் கேட்டறிந்தவைகளை மற்றவர்

களுக்குப் போதிக்கக்கூடிய உண்மையுள்ள
3 மனுஷரிடம் ஒப்புவி. கிறிஸ்து இயேசுவின்
நல்ல போர்ச்சேவகனாய் என்னோடு துன்
4 பத்தைச் சகித்திரு. தண்டில் சேவகம்
பண்ணுகிற எவனும் தன்னைச் சேவகமெழு
திக்கொண்டவனுக்கு உகந்தவனாயிருக்க
விரும்பினால், பிழைப்புக்கடுத்த வேறு அலு
5 வல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான். அன்றி
யும், பந்தய ஓட்டத்தில் ஒருவன் சட்டப்
படி ஓடினாலன்றி முடிசூட்டப்படான்.
6 பாடுபட்டுப் பயிரிடுகிறவன் அதன் பலனில்
7 முந்திப் பங்கடையவேண்டும். நான்
சொல்லுகிறதைக் கவனித்துக்கொள்; ஆண்
டவர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப்
8 புத்தியைத் தந்தருளுவார். இயேசுகிறிஸ்
துவை நினைத்துக்கொள்; அவர் மரித்தோரி
லிருந்து எழுப்பப்பட்டவர், தாவீதின் சந்
ததியில் பிறந்தவர்—நான் பிரசங்கிக்கும்
9 சுவிசேஷம் இதுவே. இந்தச் சுவிசேஷத்தி
னிமித்தம் நான் பாதகன்போலக் கட்டுண்டு
துன்பத்தைச் சகிக்கிறேன். கடவுளின்
வார்த்தையோ கட்டப்பட்டிருக்கவில்லை.
10 இதினிமித்தம், கிறிஸ்து இயேசுவுக்குள்ளா
னதும் நித்திய மகிமையோடு கூடியதுமான
இரட்சிப்பைத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்
பெற்றுக்கொள்ளும்படி அவர்கள் பொருட்
டாக எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்
11 ளுகிறேன். இது உண்மையான வார்த்தை:
நாம் அவரோடுகூட மரித்தால் அவரோடு
12 கூடப் பிழைத்துமிருப்போம். பாடுகளைப்
பொறுத்துக்கொள்வோமானால் அவரோடு
கூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை
மறுதலிப்போமேயானால் அவரும் நம்மை
13 மறுதலிப்பார். நாம் உண்மையில்லாதவர்
களாயிருந்தாலும் அவர் உண்மையுள்ளவ
ராகவே நிலைத்திருக்கிறார்; அவர் தம்மைத்
தாம் மறுதலிக்கமுடியாது.
14 இவைகளை அவர்களுக்கு நினைப்பூட்டு;
ஒன்றுக்கும் உதவாததும் கேட்கிறவர்களைக்
கவிழ்த்துப்போடுகிறதுமான வாக்குவாதங்
களைச் செய்யாதபடி கடவுள் சன்னிதியில்
15 அவர்களுக்கு வற்புறுத்திச் சொல்லு. நீ
வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய
வசனத்தை நேர்மையாய்ப் போதிக்கிறவனா
யும் கடவுளுக்குமுன் உன்னை உத்தமனாக
16 நிறுத்தும்படி கருத்துள்ளவனாயிரு. சீர்
கேடான வீண் பேச்சுகளுக்கு விலகியிரு;
அவைகளால் அவபக்தி மேன்மேலும் விருத்தி
17 யாகும். அவர்கள் வார்த்தை அரிபிளவை
போல் படரும்; இமெநேயுவும் பிலேத்தும்
18 அப்படிப்பட்டவர்கள். உயிர்த்தெழுதல்
நடந்தாயிற்றென்று இவர்கள் சொல்லி,
சத்தியத்தை விட்டு விலகி, சிலருடைய
விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள்.
ஆகிலும், கடவுளின் உறுதியான அஸ்தி 19
பாரம் நிலைத்திருக்கிறது; கர்த்தர் தம்முடைய
வர்களை அறிவாரென்பதும், கர்த்தரின் நாமத்
தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தை
விட்டு விலகக்கடவனென்பதும் அதற்கு
முத்திரை. பெரிய வீடு ஒன்றில் பொன் 20
வெள்ளிப் பாத்திரங்களேயல்லாமல் மண்
மரப் பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில
கனத்திற்கும் சில கனவீனத்திற்கும் உரி
யவை. ஒருவன் இவைகளை விட்டுத் தன் 21
னைச் சுத்திகரித்துக்கொள்வானானால், அவன்
பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு
உபயோகமானதும் எந்த நல் வேலைக்கும்
ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்திற்குரிய
பாத்திரமாயிருப்பான்.

அன்றியும், பாலியத்திற்குரிய இச்சைக 22
ளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயமுள்
ளவர்களாய் ஆண்டவரைத் தொழுதுகொள்
ளுகிறவர்களோடு நீதியையும் விசுவாசத்தை
யும் அன்பையும் சமாதானத்தையும் நாடு.
புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் 23
சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து
அவைகளை விலக்கிவிடு. ஆண்டவரின் 24
ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிரா
மல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும்
போதக சமர்த்தனும் தீமையைப் பொறுத்
துக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும்.
சத்தியத்தை அறியும் அறிவுக்கேதுவான 25
மனந்திரும்புதலைக் கடவுள் எதிர்பேசுகிற
வர்களுக்கு அருளத்தக்கதாகவும், அவரு 26
டைய சித்தத்தைச் செய்வதற்கென்று அவர்
ஊழியக்காரனால் பிடிபட்டவர்களாய்ப் பிசா
சின் கண்ணியிலிருந்து அவர்கள் தப்பி
மறுபடியும் தெளிவடையத்தக்கதாகவும்,
சாந்தமாய் அவர்களுக்கு உபதேசம்
பண்ணு.

மேலும், கடைசி நாட்களில் கொடிய **3**
காலங்கள் வருமென்று அறிந்துகொள். மனு 2
ஷர் தற்பிரியரும், பணப்பிரியரும், வீம்புக்
காரரும், இறுமாப்புள்ளவர்களும், தூஷிக்
கிறவர்களும், பெற்றோருக்குக் கீழ்ப்படியாத
வர்களும், நன்றிகெட்டவர்களும், பக்தியில்
லாதவர்களும், | சுபாவ அன்பில்லாதவர்க 3
ளும், இணங்காதவர்களும், அவதூறு பண்
ணுகிறவர்களும், அடக்கமில்லாதவர்களும்,
கொடுமையுள்ளவர்களும், நன்மையை விரும்
பாதவர்களும், | துரோகிகளும், துணிகர 4
முள்ளவர்களும், இறுமாப்புள்ளவர்களும்,
கடவுளைப் பார்க்கிலும் சுகபோகத்தை அதிக

5 மாய் நேசிக்கிறவர்களும், | தேவபக்தியின்
வேஷத்தைத் தரித்து அதன் வல்லமையை
மறுதலிக்கிறவர்களுமாயிருப்பார்கள்; இப்
6 படிப்பட்டவர்களை விட்டுவிலகு. இவர்
களில் சிலர் வீடுகளில் நுழைந்து, மதியீன
ஸ்திரீகளை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.
அந்த ஸ்திரீகள் பாவங்களைக் குவித்துக்
கொண்டு பற்பல இச்சைகளால் இழுக்கப்
7 பட்டு, எப்போதும் கற்றாலும் சத்தியத்தை
அறியும் அறிவுக்கு ஒருபோதும் வந்தெட்ட
8 முடியாதவர்கள். யந்நேயும் யம்பிரேயும்
மோசேக்கு எதிர்த்து நின்றதுபோல, இவர்
களும் சத்தியத்துக்கு எதிர்த்து நிற்கிறார்கள்;
இவர்கள் துர்ப்புத்தியுள்ள மனுஷர், விசு
வாச விஷயத்தில் ஆகாதவர்களென்று
9 தள்ளப்படுகிறவர்கள். அவர்கள் வெகுதூரம்
முன்னேறுவதில்லை; ஆனாலும், அவர்களு
டைய மதிகேட்டைப்போல இவர்கள் மதி
கேடும் எல்லாருக்கும் பகிரங்கமாகும்.
10 நீயோ, என் போதகம் நடக்கை நோக்கம்
விசுவாசம் நீடிய சாந்தம் அன்பு பொறுமை
ஆகிய இவற்றிலும், அந்தியோகியா இக்கோ
னியா லீஸ்திரா என்னும் பட்டணங்களில்
எனக்கு நேரிட்ட துன்பங்களிலும் பாடுகளி
11 லும் என்னைப் பின்பற்றினாய்; இந்தத் துன்
பங்களெல்லாவற்றையும் சகித்தேன், இவை
யாவற்றினின்றும் ஆண்டவர் என்னை விடு
12 வித்தார். அன்றியும், கிறிஸ்து இயேசுவுக்குள்
தேவபக்தியாய் ஜீவிக்க விரும்புகிற யாவரும்
13 துன்பப்படுவார்கள். பொல்லாதவர்களும்
எத்தர்களுமோவெனில், மோசம்போக்குகிற
வர்களாகவும் மோசம்போகிறவர்களாகவும்
தீமையில் முன்னேறுவார்கள்.
14 நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில்
நிலைத்திரு; அவற்றை இன்னாரிடம் கற்றாய்
என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்,
15 கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தி
னால் உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்
ளவனாக்கக்கூடிய பரிசுத்த ஆகமங்களை நீ
சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்
16 குத் தெரியும். [1]வேதவாக்கியம் ஒவ்வொன்
றும் தேவ ஏவுதலினால் அருளப்பட்டிருக்
கிறது; கடவுளின் மனுஷன் பூரணமுள்ளவ
னாகி, எந்த நற்கிரியையும் செய்யப்பரிபூரண
17 பக்குவமடைவதற்கேதுவாய், அது உபதே
சிப்பதற்கும் கடிந்துகொள்வதற்கும் சீர்
திருத்துவதற்கும் நீதியைக் சற்பிப்பதற்கும்
பிரயோஜனமுள்ளது.

4 கடவுளுக்கு முன்பாகவும், உயிருள்
ளோரையும் மரித்தோரையும் நியாயந்
தீர்க்கப்போகிற கிறிஸ்து இயேசுவுக்கு முன்
பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலை
யும் அவருடைய ராஜ்யத்தையும் நினைத்தவ
னாய் நான் வற்புறுத்திச் சொல்லுகிறதாவது:
திருவசனத்தைப் பிரசங்கி, சமயம் வாய்த்தா 2
லும் வாய்க்காவிட்டாலும் விட்டுவிடாதே;
எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்
தோடும் குற்றத்தை எடுத்துக் காட்டு, கடிந்து
கொள், புத்திசொல்லு; அவர்கள் ஆரோக் 3
கியகரமான உபதேசத்தைத் தாங்கமாட்டா
மல் செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய
இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் திரட்டிக்
குவித்துக்கொண்டவர்களாய், சத்தியத்துக் 4
குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்
குச் சாய்ந்துபோகும் காலம் வரும். நீயோ 5
எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு,
துன்பத்தைச் சகித்திரு, சுவிசேஷகன் வேலை
யைச் செய், உன் ஊழியத்தை நிறை
வேற்று.
நான் இப்பொழுதே பானபலியாக ஊற் 6
றப்படுகிறேன்; நான் பிரிந்துபோகும் காலம்
வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடி 7
னேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்
தைக் காத்துக்கொண்டேன். நீதியின் கிரீ 8
டம் இனி எனக்காக வைக்கப்பட்டிருக்கி
றது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய ஆண்ட
வர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளு
வார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்ன
மாகுதலை அன்போடு எதிர்பார்க்கும் யாவ
ருக்கும் தந்தருளுவார்.
சீக்கிரமாய் என்னிடம் வரப் பிரயத்தனப் 9
படு. தேமா இந்தப் பிரபஞ்சத்தின்மேல் 10
ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து
தெசலோனிக்கேயுக்குப் போய்விட்டான்;
கிரேஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து
தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்
டார்கள். லூக்கா மாத்திரம் என்னோடிருக் 11
கிறான்; மாற்கை உன்னோடு கூட்டிக்
கொண்டுவா, ஊழியத்தில் அவன் எனக்குப்
பிரயோஜனமுள்ளவன். தீகிக்குவை நான் 12
எபேசுவுக்கு அனுப்பினேன். துரோவாவி 13
லிருக்கிற கார்ப்பு என்பவன் வசம் நான்
வைத்துவந்த மேலங்கியையும் புஸ்தகங்களை
யும், விசேஷமாய்த் தோற்சுருள்களையும்,
நீ வருகிறபோது எடுத்துக்கொண்டுவா.
கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு 14
தீமை செய்தான்; அவன் செய்கைகளுக்குத்
தக்கபடி ஆண்டவர் அவனுக்குப் பலனளிப்
பார். நீயும் அவனைப்பற்றி எச்சரிக்கையா 15

[1] தேவ ஏவுதலினால் அருளப்பட்ட வேதவாக்கியம் ஒவ்வொன்றும் கடவுளின் ழி என்றும் திருப்பலாம்.

யிரு; அவன் நமது வார்த்தைகளுக்கு மிகவும்
16 எதிர்த்து நின்றான். நான் முதல் விசா
ரணையில் உத்தரவுசொல்ல நிற்கையில்
எனக்குத் துணைநின்றவன் ஒருவனுமில்லை.
எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; அந்
தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக.
17 ஆண்டவரோ எனக்குத் துணைநின்று, பிர
சங்கவேலை என்னால் நிறைவேறுவதற்கென்
றும், புறஜாதியாரெல்லாரும் சுவிசேஷ செய்
தியைக் கேட்பதற்கென்றும் என்னைப் பலப்
படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்து விடு
18 விக்கப்பட்டேன். ஆண்டவர் எல்லாத்
தீங்கினின்றும் என்னை விடுவித்துத் தம்மு
டைய பரம ராஜ்யத்திற்குள்ளாகும்படி
இரட்சிப்பார்; அவருக்கே என்றென்றைக்
கும் மகிமை உண்டாவதாக. ஆமேன்.
பிரிஸ்காளையும் ஆக்கிலாவையும் ஒநேசிப் 19
போருவின் வீட்டாரையும் வாழ்த்து.
எரஸ்து கொரிந்துவில் இருந்துவிட்டான்; 20
துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்
பட்டவனாக விட்டுவந்தேன். மாரிகாலத் 21
துக்குமுன் நீ வந்துசேரப் பிரயத்தனப்படு.
ஐபூலுவும் பூதேயும் லீனுவும் கிலவுதியாளும்
மற்றெல்லாச் சகோதரரும் உன்னை வாழ்த்து
கிறார்கள்.
ஆண்டவர் உன் ஆவியோடிருப்பாராக. 22
கிருபை உங்களோடிருப்பதாக.

தீத்துவுக்கு எழுதின நிருபம்

1 கடவுளின் அடியானும், இயேசுகிறிஸ்து
வின் அப்போஸ்தலனுமான பவுல், பொது
வான விசுவாசத்தில் உத்தம பிள்ளையாகிய
2 தீத்துவுக்கு எழுதுவதாவது: பிதாவாகிய
கடவுளிடமிருந்தும் நம்முடைய இரட்சக
ராகிய இயேசுகிறிஸ்துவினிடமிருந்தும் கிரு
பையும் சமாதானமும் உண்டாவதாக.
3 பொய்யுரையாத கடவுள் ஆதிகாலமுதல்
நித்திய ஜீவ நன்னம்பிக்கையைப்பற்றி வாக்
கருளி, விசுவாசமும் தேவபக்திக்கேற்ற சத்
தியத்தை அறிகிற அறிவும் கடவுளால் தெரிந்
தெடுக்கப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி,
4 நம்முடைய இரட்சகராகிய கடவுளின் கட்
டளைக்கிசைய என்னிடம் ஒப்புவிக்கப்பட்ட
சுவிசேஷ செய்தியினால் தமது வார்த்தையை
ஏற்றகாலங்களில் வெளிப்படுத்தினார்.
5 குறைவானவைகளைச் சரிப்படுத்தவும்,
நான் உனக்குக் கட்டளையிட்டபடியே ஊர்
தோறும் மூப்பரை ஏற்படுத்தவும் வேண்டு
மென்றே நான் உன்னைக் கிரேத்தாதிவில்
6 விட்டுவந்தேன். குற்றஞ்சாட்டப்படாதவ
னும், ஒரே மனைவியையுடைய புருஷனும்,
துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்
றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளை
களை உடையவனுமாகிய ஒருவன் இருந்தால்
அப்படிப்பட்டவனையே ஏற்படுத்தலாம்.
7 ஏனெனில், அத்தியட்சனானவன் குற்றஞ்
சாட்டப்படாதவனாயிருக்கவேண்டும், இவன்
கடவுளின் உக்கிராணக்காரன்; இவன் சுய
இஷ்டப்பிரியனும் மூர்க்கனும் மதுபானப்
பிரியனும் கலகக்காரனும் இழிவான ஆதா
8 யத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், அன்னி
யரை உபசரிக்கிறவனும், நன்மையான
வற்றை ஆசிக்கிறவனும், நிதானபுத்தியுள்ள
வனும், நீதிமானும், பரிசுத்தவானும், தன்
9 னடக்கமுள்ளவனும், ஆரோக்கியகரமான
உபதேசத்தினாலே புத்திசொல்லவும் எதிர்
பேசுகிறவர்களுக்குக் குற்றத்தை எடுத்துக்
காட்டவும் வல்லவனாயிருக்கத்தக்கதாக நமது
போதனைக்கிசைந்த உண்மையான வச
னத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுகிற
வனுமாயிருக்கவேண்டும்.
10 அநேகர், விசேஷமாய் விருத்தசேதனக்
கட்சியார், அடங்காதவர்களும் வீண் பேச்
சுக்காரரும் மனத்தை மயக்குகிறவர்களுமா
யிருக்கிறார்கள், அவர்கள் வாயை அடக்க
வேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத் 11
துக்காகத் தகாதவைகளை உபதேசித்து,
முழுக் குடும்பங்களையும் கவிழ்த்துப்போடு
கிறார்கள்.

கிரேத்தாத் தீவார் ஓயாப் பொய்யர் 12
துஷ்ட மிருகங்கள்
பெருவயிற்றுச் சோம்பேறிகள்

என்று அவர்களிலொருவனாகிய அவர்கள்
தீர்க்கதரிசியே சொல்லியிருக்கிறான். இந் 13
தச் சாட்சியம் உண்மை; இதினிமித்தம்
யூதரின் கட்டுக்கதைகளுக்கும் சத்தியத்தை
விட்டுவிலகுகிற மனுஷரின் கற்பனைகளுக்
கும் அவர்கள் செவிகொடாமல் | விசுவா 14
சத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்
படி, நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்து
கொள். சுத்தமுள்ளவர்களுக்கு எல்லாம் 15
சுத்தம். கறைபட்டவர்களுக்கும் அவிசு
வாசிகளுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது.
அவர்கள் புத்தியும் மனச்சாட்சியும் கறை
பட்டிருக்கும். கடவுளை அறிந்திருக்கிறோ 16
மென்று அவர்கள் சொல்லுகிறார்கள்; செய்
கைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்;
அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்கள்,
கீழ்ப்படியாதவர்கள், எந்த நற்கிரியைக்கும்
ஆகாதவர்கள்.

நீயோ ஆரோக்கியகரமான உபதேசத்திற் 2
கேற்றவைகளைப் பேசு. முதிர்வயதுள்ள புரு 2
ஷர் தெளிந்த சிந்தையுள்ளவர்களும், ஒழுக்க
முள்ளவர்களும், நிதான புத்தியுள்ளவர்க
ளும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறு
மையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாய்
இருக்கவேண்டும். அப்படியே, முதிர்வய 3
துள்ள ஸ்திரீகளும் ஒழுக்கத்தில் பயபக்தி
யுள்ளவர்களும், அவதூறுபண்ணாதவர்க
ளும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்
களும், நற்காரியங்களைப் போதிக்கிறவர்
களுமாயிருக்கவேண்டும்; அவர்கள் அப்படி 4
யிருந்தால் கடவுளின் வசனம் தூஷிக்கப்
படாதபடி, பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷ
ரிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ள
வர்களும், நிதான புத்தியுள்ளவர்களும், 5
கற்புள்ளவர்களும், தங்கள் வீட்டுவேலை
செய்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள்

புருஷருக்கு அடங்கி நடக்கிறவர்களுமா
யிருக்கும்படி அவர்களுக்கு நற்புத்தி புகட்
6 டக்கூடியவர்களாவார்கள். அப்படியே,
பாலிய புருஷரும் எல்லாவற்றிலும் நிதான
புத்தியுள்ளவர்களாயிருக்க நீ புத்திசொல்லு.
7 நீயும் நற்கிரியைகளுக்கு உன்னை மாதிரி
8 யாகக் காண்பி. எதிரியானவன் நம்மைப்
பற்றித் தீதொன்றும் பேச இடமின்றி
வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்தில் நீ
களங்கமற்றவனும் நல்லொழுக்கமுள்ளவ
னும் குற்றம்பிடிக்கப்படாத ஆரோக்கியகர
மான வார்த்தையைப் பேசுகிறவனுமாய்
9 இரு. வேலைக்காரர், நம்முடைய இரட்சக
ராகிய கடவுளின் உபதேசத்தை எல்லா
வற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக, தங்கள்
எஜமான்களுக்கு எல்லாவற்றிலும் அடங்கி
யிருக்கவும், அவர்களுக்கு உகந்தவர்களா
10 யிருக்கவும், எதிர்பேசாமலும் | திருடாம
லும் சகலவிதத்திலும் நல்லுண்மையைக்
காண்பிக்கவும் அவர்களுக்குப் புத்திசொல்லு.
11 எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை
அளிக்கத்தக்க தேவகிருபையானது பிர
12 சன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகீக
இச்சைகளையும் வெறுத்து, நிதான புத்தியும்
நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய்
13 இந்த உலகத்தில் ஜீவித்து, நாம் எதிர்பார்க்
கும் ஆனந்த நன்னம்பிக்கைக்கும் மகத்தான
நம்முடைய கடவுளும் இரட்சகருமாகிய
கிறிஸ்து இயேசுவின் மகிமைப் பிரசன்னத்
திற்கும் காத்துக்கொண்டிருக்கும்படி நமக்
14 குப் போதிக்கிறது. எல்லா அக்கிரமத்தி
னின்றும், அவர் நம்மை மீட்டுக்கொண்டு,
தமக்குரிய சொந்த ஜனமாகவும் நற்கிரியை
களைச் செய்ய வைராக்கியமுள்ளவர்களாக
வும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத்
15 தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார். நீ
இவைகளை உபதேசித்துப் புத்திசொல்லி
எல்லா அதிகாரத்தோடும் கடிந்துகொள்; ஒரு
வனும் உன்னை அசட்டைபண்ண இடங்
கொடாதே.

3 துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்
கும் அவர்கள் அடங்கிக் கீழ்ப்படிந்திருக்க
வும் எல்லா நற்கிரியையும் செய்ய ஆயத்தமா
2 யிருக்கவும், ஒருவனையும் தூஷியாமலும்,
சண்டைசெய்யாமலும், பொறுமையுள்ளவர்
களாய் எல்லா மனுஷருக்கும் எவ்விஷயத்தி
லும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்
களுககு நினைப்பூட்டு.
3 முற்காலத்தில் நாமும் புத்தியீனரும்,
கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிற
வர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்
களுக்கும் அடிமைப்பட்டவர்களும், வர்மத்
திலும் பொறாமையிலும் காலங்கழிக்கிறவர்
களும், பகைக்கப்படுகிறவர்களும், ஒருவரை
யொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம்.
நம்முடைய இரட்சகராகிய கடவுளின் தயா 4
ளமும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்ன
மானபோதோ, நாம் செய்த நீதியின் கிரியை 5
களினிமித்தம் அவர் நம்மை இரட்சியா
மல், தமது இரக்கத்தின்படியே மறுஜனன
முழுக்கினாலும் பரிசுத்த ஆவியின் புதிதாக்கு
தலினாலும் நம்மை இரட்சித்தார்; தமது 6
கிருபையினால் நாம் நீதிமான்களாகத் தீர்க்
கப்பட்டு நித்திய ஜீவனைப்பற்றிய நன்னம்
பிக்கையின்படி அதற்குச் சுதந்தரராவதற்
கென்று, நம்முடைய இரட்சகராகிய 7
இயேசுகிறிஸ்துவின்மூலமாய் அவர் அந்தப்
பரிசுத்த ஆவியை நம்மேல் நிறைவாய்ப்
பொழிந்தருளினார். இது உண்மையான 8
வார்த்தை; ஆகவே, கடவுளில் விசுவாசம்
வைத்திருக்கிறவர்கள் நற்கிரியைகளைச் செய்
வதில் கருத்தாயிருக்கும்படி நீ இவைகளைப்
பற்றித் திட்டமாய்ப் போதிக்கவேண்டு
மென்று விரும்புகிறேன்; இவைகளே மனுஷ
ருக்கு நன்மையும் பிரயோஜனமுமான
வைகள். புத்தியீனமான தர்க்கங்களையும், 9
வம்சவரலாறுகளையும், சண்டைகளையும்,
நியாயப்பிரமாணத்தைப்பற்றிய வாக்குவா
தங்களையும் விட்டுவிலகு; அவைகள் பிரயோ
ஜனமற்றவை, வீணானவை. வேதப்புரட் 10
டன் ஒருவனை நீ இரண்டொருதரம் எச்ச
ரித்தபின்பு அவனை விட்டுவிலகு: அப்படிப் 11
பட்டவன் வழிவிலகி, தன்னைத்தானே ஆக்
கினைத் தீர்ப்புக்குட்படுத்துகிறவனாய்ப்
பாவஞ்செய்கிறானென்பது உனக்குத் தெரி
யுமே.
அர்த்தெமாவையாவது தீகிக்குவையாவது 12
நான் உன்னிடம் அனுப்பும்போது, நிக்
கொப்போலிக்கு என்னிடம் வரப் பிரயத்
தனப்படு; மாரிகாலம் அங்கே தங்கும்படி
தீர்மானித்திருக்கிறேன். நியாயசாஸ்திரியா 13
கிய சேனாவையும் அப்பொல்லோவையும்
சீக்கிரமாய் வழிவிட்டனுப்பு; அவர்களுக்கு
ஒரு குறைவுமில்லாதபடி பார்த்துக்கொள்.
நம்முடையவர்களும் கனியற்றவர்களாயிரா 14
தபடி, குறைவுகளை நீக்குவதற்கேதுவாய்
நற்கிரியைகளைச் செய்யப் பழகவேண்டும்.
என்னோடிருக்கிற யாவரும் உன்னை 15
வாழ்த்துகிறார்கள். விசுவாசத்தில் எங்களை
நேசிக்கிறவர்களை வாழ்த்து.
கிருபை உங்களனைவரோடுமிருப்பதாக.

பிலேமோனுக்கு எழுதின நிருபம்

கிறிஸ்து இயேசுவின் கைதியாகிய பவுலும்
சகோதரனாகிய தீமோத்தேயுவும், எங்களுக்
குப் பிரியமுள்ளவனும் உடன் ஊழியனு
2 மான பிலேமோனுக்கும், சகோதரி அப்பி
யாளுக்கும், எங்கள் உடன் போர்ச்சேவ
கன் அர்க்கிப்புவுக்கும், உன் வீட்டில் கூடி
3 வருகிற சபைக்கும் எழுதுவதாவது: நம்மு
டைய பிதாவாகிய கடவுளிடமிருந்தும்
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினிடமிருந்
தும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும்
உண்டாவதாக.
4 ஆண்டவராகிய இயேசுவினிடத்திலும்
பரிசுத்தவான்கள் எல்லாரிடத்திலுமுள்ள
உன் அன்பையும் விசுவாசத்தையும் நான்
5 கேள்விப்பட்டு, கிறிஸ்துவுக்குள் நமக்குக்
கிடைத்த எல்லா நன்மையையும் அறியும்
அறிவினாலே உன் விசுவாசத்தின் அன்னி
யோன்னியம் பயன்படவேண்டுமென்று
6 எப்பொழுதும் என் ஜெபங்களில் உன்னை
நினைவுகூர்ந்து என் கடவுளுக்கு நன்றி
7 செலுத்துகிறேன். சகோதரனே, பரிசுத்த
வான்களின் உள்ளங்கள் உன்னாலே தேறுத
லடைந்தபடியால் உன் அன்பினாலே மிகுந்த
சந்தோஷமும் ஆறுதலும் அடைந்திருக்
கிறேன்.
8 ஆகவே, முதிர்வயதுள்ளவனும், இப்
பொழுது கிறிஸ்து இயேசுவின் கைதியுமா
9 யிருக்கிற பவுலாகிய நான், நீ செய்யத் தகுந்
ததை உனக்குக் கட்டளையாகச் சொல்லக்
கிறிஸ்துவுக்குள் எனக்கு அதிகத் தைரிய
மிருந்தும், அன்பினிமித்தம் உன்னை வேண்
10 டிக்கொள்வதே நலம். அதாவது, நான் கைதி
யாயிருக்கையில் பெற்றெடுத்த என் பிள்ளை
யாகிய [1]ஒநேசிமு என்பவனிமித்தம் வேண்
11 டிக்கொள்ளுகிறேன். முற்காலத்தில் அவன்
உனக்குப் பிரயோஜனமற்றவன், இப்
பொழுதோ உனக்கும் எனக்கும் பிரயோஜன
12 முள்ளவன். அவனை உன்னிடம் அனுப்பு
கிறேன்; அவன் என் உள்ளம்போன்றவன்.
13 சுவிசேஷத்தினிமித்தம் நான் கைதியாயிருக்
கிற நிலைமையில், உனக்குப் பதிலாக எனக்
குப் பணிவிடைசெய்வதற்கு அவனை என்னி
டம் நிறுத்திக்கொள்ள ஆசையாயிருந்தேன்.
ஆயினும், நீ செய்யும் நன்மை கட்டாய 14
மானதாயல்ல, மனப்பூர்வமானதாயிருக்கும்
படி, உன் சம்மதமின்றி ஒன்றும் செய்ய
எனக்கு மனமில்லை. இனி அவனை என் 15
றைக்கும் அடிமையாகவல்ல, அடிமையிலும்
மேலானவனாகவும் பிரிய சகோதரனாகவும் நீ
பெற்றுக்கொள்வதற்கென்றே அவன் சிறிது
காலம் பிரிந்துபோனான்போலும். அவன் 16
எனக்கு அதிகப் பிரியமான சகோதரன்;
உனக்கோ மாம்சத்தின்படியும் ஆண்டவருக்
குள்ளும் இன்னும் எவ்வளவு அதிகப் பிரிய
மானவன்! ஆதலால், நீ என்னைக் கூட்டாளி 17
யென்று எண்ணினால், என்னைப்போலவே
அவனை ஏற்றுக்கொள். அவன் உனக்கு 18
யாதொரு அநியாயஞ்செய்ததும் கடன்பட்
டதும் உண்டானால், அதை என் கணக்கிலே
வைத்துக்கொள். பவுலாகிய நான் இதை 19
என் கைப்பட எழுதியிருக்கிறேன், நானே
அதைச் செலுத்தித் தீர்ப்பேன். நீ உன்னைத்
தானே எனக்குக் கடனாகச் செலுத்தவேண்
டியவனென்று நான் உனக்குச் சொல்ல
வேண்டியதில்லையே. ஆம், சகோதரனே, 20
ஆண்டவருக்குள் உன்னால் எனக்குப் பிர
யோஜனமுண்டாகட்டும்; கிறிஸ்துவுக்குள்
என் உள்ளத்தைத் தேற்று. நான் சொல் 21
வதிலும் அதிகமாய் நீ செய்வாயென்று
அறிந்து, உன் கீழ்ப்படிதலைப்பற்றித் திட
நம்பிக்கையுள்ளவனாய் உனக்கு எழுதியிருக்
கிறேன். இதுவுமல்லாமல், உங்கள் விண் 22
ணப்பங்களின் மூலமாய் உங்களுக்கு அனுக்
கிரகிக்கப்படுவேனென்று நான் நம்பியிருக்
கிறபடியால் நான் தங்க ஒரு இடத்தை
ஆயத்தம்பண்ணிவை.

கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் 23
கைதியாயிருக்கிற எப்பாப்பிராவும், என் 24
உடன் ஊழியராகிய மார்க்கும் அரிஸ்தர்க்
கும் தேமாவும் லூக்காவும் உன்னை வாழ்த்து
கிறார்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் 25
கிருபை உங்கள் ஆவியோடிருப்பதாக.

[1] ஒநேசிமு என்ற பெயர் பிரயோஜனமுள்ளவன் என்று பொருள்படும்.

எபிரேயருக்கு எழுதின நிருபம்

1 பூர்வகாலத்தில் பங்கு பங்காகவும் வகை
வகையாகவும் தீர்க்கதரிசிகளின் மூலமாய்
நம்முடைய பிதாக்களுக்குத் திருவுளம்பற்
2 றின கடவுள் | இந்தக் கடைசி நாட்களில்
குமாரன்மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றி
னார். இவரை எல்லாவற்றிற்கும் சுதந்தர
வாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு
3 உலகங்களையும் படைத்தார். இவர் அவரு
டைய மகிமையின் பிரகாசமும் அவர் தத்
துவத்தின் சொரூபமுமாய், எல்லாவற்றை
யும் தமது வல்லமையான வார்த்தையினால்
தாங்குகிறவராய், பாவங்களை நீக்கும் சுத்தி
கரிப்பை உண்டுபண்ணி, உன்னதங்களில்
மகத்துவமானவரின் வலதுபாரிசத்தில் உட்
4 கார்ந்தார். இவர் தேவதூதரைப்பார்க்கிலும்
எவ்வளவு விசேஷமான நாமத்தைச் சுதந்
தரித்துக்கொண்டாரோ அவ்வளவு அதிக
மாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார்.
5 நீர் என் குமாரன்,
இன்று நான் உம்மை ஜனிப்பித்தேன்
என்றும்,
நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன்,
அவர் எனக்குக் குமாரனாயிருப்பார்
என்றும் தூதர்களில் யாருக்காவது எப்போ
6 தாகிலும் அவர் சொன்னதுண்டா? மேலும்,
தம்முடைய முதற்பேறானவரைத் திரும்பவும்
உலகத்தில் பிரவேசிக்கச் செய்யும்போது:
தேவதூதர் யாவரும்
அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள்
7 என்கிறார். தேவதூதரைக் குறித்து:
தம்முடைய தூதரைக் காற்றுகளாகவும்
தம்முடைய பணிவிடைக்காரரை அக்
கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார்
8 என்று சொல்லியிருக்கிறார். குமாரனைக்
குறித்தோ:
கடவுளே, உமது சிங்காசனம் என்
றென்றுமுள்ளது,
உமது ராஜ்யத்தின் செங்கோல் நேர்மை
யான செங்கோல்.
9 நீர் நீதியைச் சிநேகித்து அக்கிரமத்தைப்
பகைத்தீர்;
அதினிமித்தம், கடவுள், உம்முடைய
கடவுளே, உம் தோழரைப்பார்க்கிலும்
உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷே
கம்பண்ணினார்
என்றும்,
கர்த்தாவே, நீர் ஆதியிலே பூமியை அஸ்தி 10
பாரப்படுத்தினீர்;
வானங்கள் உமது கரங்களின் கிரியைகள்;
அவைகள் அழிந்துபோம், 11
நீரோ நிலைநிற்கிறீர்;
அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழ
மையாய்ப்போம்,
ஒரு சால்வையைப்போல் அவற்றைச் 12
சுருட்டுவீர்,
வஸ்திரம்போல் அவைகள் மாற்றப்பட்டுப்
போகும்;
நீரோ மாறாதவர்,
உமது ஆண்டுகள் முடிவடைவதில்லை
என்றும் சொல்லியிருக்கிறது. மேலும், 13
உம்முடைய சத்துருக்களை நான் உமக்குப்
பாதபடியாக்கிப் போடும்வரைக்கும்
நீர் என் வலதுபாரிசத்தில் உட்காரும்
என்று தூதர்களில் யாருக்காவது எப்போ
தாகிலும் சொன்னதுண்டா? இரட்சிப்பைச் 14
சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தம் ஊழி
யஞ்செய்யும்படி அவர்களெல்லாரும்
அனுப்பப்படும் பணிவிடை ஆவிகள்
அல்லவா?

ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு 2
வழுவிப்போகாதபடி அவைகளில் அதிகக்
கவனமாயிருக்கவேண்டும். தேவதூதர் 2
மூலமாய்ச் சொல்லப்பட்ட வசனம் உறுதி
யாக்கப்பட்டு, எந்த மீறுதலுக்கும் கீழ்ப்
படியாமைக்கும் நியாயமான பிரதிபலன்
கிடைத்திருக்க, முதல் முதல் ஆண்டவ 3
ரால் கூறப்பட்டு, பிற்பாடு அடையாளங்கள்
அற்புதங்கள் பலவித வல்ல செயல்கள்
மூலமாகவும், தமது சித்தத்தின்படி பகிர்ந்து
கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களின்
மூலமாகவும் கடவுள் தாமே சாட்சிகொடுக்க,
கேட்டவர்களால் நமக்கு உறுதியாக்கப்பட்ட 4
இவ்வளவு பெரிதான இரட்சிப்பைப்பற்றிக்
கவலையற்றிருப்போமானால் நாம் எப்படித்
தப்பித்துக்கொள்ளுவோம்?

5 வரப்போகிற உலகத்தைப்பற்றி நாம்
பேசிக்கொள்ளுகிறோமே, அதை அவர் தூதர்
களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை.
6 மனுஷனை நீர் நினைப்பதற்கும்
மனுஷகுமாரனை நீர் கண்ணோக்குவதற்
கும்
அவன் எம்மாத்திரம்?
7 தேவதூதரிலும் அவனைச் சற்றுச் சிறிய
வனாக்கினீர்;
மகிமையினாலும் கனத்தினாலும் அவ
னுக்கு முடிசூட்டி,
8 யாவற்றையும் அவன் பாதங்களுக்குக்
கீழ்ப்படுத்தினீர்
என்று ஒருவன் ஒரு இடத்தில் வற்புறுத்திச்
சொன்னான். யாவற்றையும் அவர் அவனுக்
குக் கீழ்ப்படுத்தினதால் ஒன்றையும் அவர்
அவனுக்குக் கீழ்ப்படுத்தாமல் விடவில்லை.
அப்படியிருந்தும், இன்னும் அவனுக்கு
9 யாவும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம். எனி
னும், கடவுள் கிருபையினால் ஒவ்வொரு
வருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கும்
படிக்கு, தேவதூதரிலும் சற்றுச் சிறியவ
ராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை
உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும்
கனத்தினாலும் முடிசூட்டப்பட்டிருக்கிற
10 தைக் காண்கிறோம். தமக்காகவும் தம்மா
லும் சகலத்தையும் உண்டாக்கினவருக்கு,
அநேக பிள்ளைகளை மகிமைக்குள் கொண்டு
வந்து சேர்க்கையில், அவர்களுடைய இரட்
சிப்பின் அதிபதியை உபத்திரவங்களின்
மூலமாய்ப் பூரணப்படுத்துவது தகுதியா
11 யிருந்தது. பரிசுத்தஞ்செய்கிறவரும் பரி
சுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவ
ரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்;
இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று
சொல்ல அவர் வெட்கப்படவில்லை.
12 உமது நாமத்தை என் சகோதரருக்கு
அறிவித்து,
சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடு
வேன்
என்றும்,
13 நான் அவரில் நம்பிக்கையாயிருப்பேன்
என்றும்,
இதோ, நானும் கடவுள் எனக்குக்
கொடுத்த பிள்ளைகளும்
14 என்றும் சொல்லியிருக்கிறாரே. ஆதலால்,
பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும்
உடையவர்களாயிருக்க, அவரும் அவர்
களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தை
யும் உடையவரானார்; மரணத்தின் வல்ல
மையையுடைய பிசாசானவனைத் தமது
15 மரணத்தினால் அழிக்கும்படிக்கும், மரண
பயத்தினால் ஜீவகாலமெல்லாம் அடிமைத்
தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடு
தலைசெய்யும்படிக்கும் அப்படியானார். அவர் 16
தேவதூதருக்கு உதவியாகக் கைகொடா
மல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகவே
கைகொடுத்தார். ஆகவே, ஜனத்தின் பாவங் 17
களை நிவிர்த்திசெய்வதற்கேதுவாக, கடவுளுக்
கடுத்த விஷயங்களில் அவர் இரக்கமும்
உண்மையுமுள்ள பிரதான ஆசாரியரா
யிருக்கும்படி, எல்லாவற்றிலும் தம்முடைய
சகோதரரைப்போல் ஆகவேண்டியதாயிருந்
தது. அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடு 18
பட்டதினால், சோதிக்கப்படுகிறவர்களுக்குச்
சகாயஞ்செய்ய அவர் வல்லவராயிருக்கிறார்.

இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் 3
பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே,
நமது விசுவாச அறிக்கைக்குரிய அப்போஸ்
தலரும் பிரதான ஆசாரியருமாகிய இயேசு
வைக் கவனித்துப் பாருங்கள்; மோசே 2
கடவுளின் வீட்டில் எங்கும் உண்மையுள்ள
வனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்
படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்
கிறார். வீட்டை உண்டுபண்ணினவன் வீட் 3
டைப் பார்க்கிலும் அதிகக் கனத்திற்குரிய
வன்; அதுபோல, மோசேயைப்பார்க்கிலும்
இவர் அதிக மகிமைக்குப் பாத்திரராக எண்
ணப்பட்டார். எந்த வீடும் ஒருவனால் 4
உண்டாக்கப்படும், எல்லாவற்றையும்
உண்டுபண்ணினவரோ கடவுள். சொல்லப் 5
படப்போகிற காரியங்களுக்குச் சாட்சிய
மாக, மோசே பணிவிடைக்காரனாய் அவ
ருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ள
வனாயிருந்தான். கிறிஸ்துவோ குமாரனாக 6
அவருடைய வீட்டின்மேல் அதிகாரியாய்
உண்மையுள்ளவராயிருக்கிறார்; தைரியத்தை
யும் நன்னம்பிக்கையினால் பெருமைபாராட்டு
வதையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப்
பற்றிக்கொண்டிருப்போமாகில் நாமே அவர்
வீடு.

இன்று அவர் சத்தத்தைக் கேட்பீர்களா 7
கில்,
வனாந்தரத்திலே சோதனைநாளில் கோப 8
மூட்டினதுபோல
உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தா
தேயுங்கள்;
அங்கே உங்கள் பிதாக்கள் 9
என்னைச் சோதித்துப் பரீட்சைபார்த்து,
நாற்பது வருஷகாலமாய் என் கிரியை
களைக் கண்டார்கள்.
ஆனபடியால் நான் அந்தச் சந்ததியின் 10
மேல் கோபங்கொண்டு,

அவர்கள் எப்பொழுதும் மனம் வழுவிப்
போகிறவர்களென்று சொன்னேன்.
அவர்களோ என் வழிகளை அறிந்து
கொள்ளவில்லை.
11 ஆகவே, என் இளைப்பாறுதலில் அவர்கள்
பிரவேசிப்பதேயில்லை என்பதாக என்
கோபத்தில் ஆணையிட்டேன்
என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லு
12 கிறாரே. சகோதரரே, ஜீவனுள்ள கடவுளை
விட்டு விலகிப்போவதற்கேதுவான அவிசு
வாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில்
ஒருவனுக்குள்ளும் இராதபடி பாருங்கள்.
13 உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனை
யினால் கடினப்பட்டுப்போகாதபடி, இன்று
என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்
14 கொருவர் புத்திசொல்லுங்கள். நாம் ஆரம்
பத்திலே கொண்ட திடநம்பிக்கையை முடிவு
பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்
போமாகில் கிறிஸ்துவில் பங்குடையவர்
களாய்விட்டோம் என்பது உண்மை.
15 இன்று அவர் சத்தத்தைக் கேட்பீர்களா
கில்,
கோபமூட்டின நாளில் நடந்ததுபோல
உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தா
தேயுங்கள்
என்ற வார்த்தை தொனித்துக்கொண்டிருக்
16 கிறதே. கேட்டபோது கோபமூட்டின
வர்கள் யார்? மோசேயினால் எகிப்தைவிட்டு
வந்த யாவரும் அப்படிச் செய்தார்களல்
17 லவா? மேலும், அவர் நாற்பது வருஷ கால
மாய் யார்மேல் கோபங்கொண்டார்? பாவஞ்
செய்தவர்கள் மேலல்லவா? அவர்களுடைய
சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்றே.
18 பின்னும், என் இளைப்பாறுதலில் பிரவே
சிப்பதேயில்லையென்று அவர் யாரைப்பற்றி
ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைப்
19 பற்றியல்லவா? ஆதலால், அவர்கள் பிரவே
சிக்கமுடியாமற்போனதற்கு அவிசுவாசமே
காரணமென்று பார்க்கிறோம்.

4 ஆனபடியினாலே, அவருடைய இளைப்
பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்
குத்தத்தம் இன்னும் இருக்க, உங்களில் எவ
னும் அதை அடையத் தவறிப்போனவனாய்க்
காணப்படுவானோ என்று பயந்திருக்கக்கட
2 வோம். நற்செய்தி அவர்களுக்கு அறிவிக்
கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்
பட்டது; கேட்ட வார்த்தையோ அவர்களில்
விசுவாசத்தோடு இணைக்கப்படாததினால்
கேட்டவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை.
3 விசுவாசித்திருக்கிற நாமோ அந்த இளைப்பா
றுதலில் பிரவேசிக்கிறோம். உலகத் தோற்ற
முதல் அவருடைய கிரியைகள் முடிந்திருந்
தும்,
என் இளைப்பாறுதலில் அவர்கள் பிரவே
சிப்பதேயில்லை என்பதாக
என் கோபத்திலே ஆணையிட்டேன்
என்று சொல்லியிருக்கிறாரே. கடவுள் தமது 4
கிரியைகளையெல்லாம் முடித்து ஏழாம்
நாளில் ஓய்ந்திருந்தாரென்று ஏழாம்நாளைப்
பற்றி ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்.
அன்றியும், அவர்கள் என் இளைப்பாறுதலில் 5
பிரவேசிப்பதேயில்லை என்று இந்த இடத்தில்
சொல்லியிருக்கிறார். ஆகையால், சிலர் 6
அதில் பிரவேசிப்பது இனிமேல் வரப்போ
கிறதாயிருக்கிறபடியினாலும், நற்செய்தியை
முதலாவது கேட்டவர்கள் கீழ்ப்படியாமை
யினால் அதில் பிரவேசியாமற்போனபடியி
னாலும், இன்று என்கிற இன்னொருநாளைக் 7
குறித்திருக்கிறார். எப்படியெனில், வெகு
காலத்திற்குப்பின்,
இன்று அவருடைய சத்தத்தைக் கேட்
பீர்களாகில்
உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தா
தேயுங்கள்
என்று மேலே சொல்லப்பட்டபடியே
தாவீதின் மூலமாய்ச் சொல்லியிருக்கிறாரே.
யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்கு 8
உட்படுத்தியிருந்தால், அதன்பின் அவர்
வேறொரு நாளைப்பற்றிச் சொல்லியிருக்க
மாட்டார். ஆகையால், கடவுளின் ஜனத் 9
துக்கு ஓய்வுகாலம் இனி வரக் காத்திருக்
கிறது. ஏனெனில், கடவுள் தமது கிரியை 10
களை முடித்து ஓய்ந்திருந்ததுபோல, அவரு
டைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவனும்
தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருக்கிறான்.
ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, 11
எவனும் கீழ்ப்படியாமையைக் காண்பித்து
விழுந்துபோகாதபடிக்கு, இந்த இளைப்பாறு
தலில் பிரவேசிக்க நாம் விடாமுயற்சியா
யிருப்போமாக. கடவுளின் வார்த்தை ஜீவ 12
னும் சக்தியுமுள்ளதாயும், இருபுறமும்
கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்
குள்ளதாயும், ஆத்துமாவையும் ஆவியையும்
கணுக்களையும் ஊனையும் பிரிக்குமட்டாக
ஊடுருவக்குத்துகிறதாயும், இருதயத்தின்
சிந்தனைகளையும் யோசனைகளையும் வகையறுக்
கிறதாயும் இருக்கிறது. அவர் பார்வைக்கு 13
மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; யாவும்
அவர் கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும்
பகிரங்கமாயுமிருக்கிறது; அவருக்கே நாம்
கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.
வானங்களை ஊடுருவிச்சென்ற தேவகுமார 14
னாகிய இயேசு என்னும் மகா பிரதான

ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம்
பண்ணியிருக்கிற அறிக்கையை உறுதியாய்ப்
15 பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நமது
பலவீனங்களுக்காகப் பரிதபிக்கமுடியாத
பிரதான ஆசாரியர் நமக்கு இராமல், எல்லா
விதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும்
பாவமில்லாத பிரதான ஆசாரியரே நமக்கு
16 இருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப்
பெறவும், சமய சகாயம் அருளும் கிருபை
யைக் கண்டடையவும் தைரியமாய்க் கிரு
பாசனத்தண்டையில் சேரக்கடவோம்.

5 மனுஷரில் தெரிந்தெடுக்கப்படும் எந்தப்
பிரதான ஆசாரியனும் பாவங்களினிமித்தம்
காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்
படி, மனுஷருக்காகக் கடவுளுக்கடுத்த காரி
2 யங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான். தானும்
பலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாத
வர்களுக்கும் நெறிதப்பிப்போகிறவர்களுக்
கும் பொறுமை காட்டக்கூடியவனாயிருக்
3 கிறான். அவன் ஜனத்துக்காக எப்படிப் பலி
செலுத்தவேண்டுமோ அப்படியே தன் பல
வீனத்தினிமித்தம் தனக்காகவும் பாவங்களுக்
4 காகப் பலிசெலுத்தவேண்டும். மேலும்,
ஆரோனைப்போலக் கடவுளால் அழைக்கப்
பட்டாலொழிய ஒருவனும் இந்தக் கனமான
5 பதவிக்குத் தானாய் ஏற்படுகிறதில்லை. அந்தப்
படியே கிறிஸ்துவும் பிரதான ஆசாரியராகிற
தற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை;

நீர் என் குமாரன்,
இன்று நான் உம்மை ஜனிப்பித்தேன்

என்று அவரிடம் சொன்னவரே அவரை
உயர்த்தினார்.
6 அப்படியே வேறொரு இடத்திலும்:

மெல்கிசேதேக்கின் முறைமையின்படி
நீர் என்றைக்கும் ஆசாரியர்

7 என்று சொல்லியிருக்கிறார். அவர் மாம்
சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தி
னின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை
நோக்கி உரத்த சத்தத்தோடும் கண்ணீரோ
டும் ஜெபஞ்செய்து வேண்டிக்கொண்டு,
தமது பயபக்தியினிமித்தம் கேட்கப்பெற்று,
8 தாம் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளி
9 னாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம்
பூரணராக்கப்பட்டபின், தமக்குக் கீழ்ப்
படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை
10 அடைவதற்குக் காரணராகி, மெல்கிசே
தேக்கின் முறைமையின்படியான *பிரதான
ஆசாரியர் என்று கடவுளால் நாமம் தரிக்
கப்பெற்றார்.

11 இதைப்பற்றிப் பேச எங்களுக்குப் பல
காரியங்களுண்டு; நீங்கள் மந்தமான செவி
யுள்ளவர்களானபடியால் அவற்றை விளங்
கப்பண்ணுவது அரிது. காலத்தைப் பார்த் 12
தால் போதகராயிருக்கவேண்டிய உங்களுக்
குக் கடவுளுடைய வாக்கியங்களின் ஆரம்ப
பால பாடங்களை மறுபடியும் உபதேசிப்பது
அவசியமாயிருக்கிறது; நீங்கள் பலமான
ஆகாரத்தையல்ல, பாலை உண்ணவேண்டிய
வர்களாகிவிட்டீர்கள். பாலுண்கிறவன் நீதி 13
யின் வசனத்தில் பழக்கமில்லாதவன், அவன்
குழந்தையாயிருக்கிறான். பலமான ஆகா 14
ரமோ நன்மை தீமை இன்னதென்று பகுத்
தறியும்படி, பயிற்சியின் மூலமாய்ப் பழகின
ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய
பூரண வளர்ச்சியடைந்தவர்களுக்கே தகும்.

ஆகவே, கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லிய 6
ஆரம்ப உபதேச வசனங்களை நாம் விட்டு,
பூரணவளர்ச்சி அடையச் செல்வோமாக.
உயிரற்ற கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்
திரும்புதல் கடவுள்மேலுள்ள விசுவாசம்
என்பவைகளும், ஞானஸ்நானங்கள் கைகளை 2
வைத்தல் மரித்தோரின் உயிர்த்தெழுதல்
நித்திய நியாயத்தீர்ப்பு என்பவற்றின் உப
தேசமுமாகிய அஸ்திபாரத்தை மறுபடியும்
போடாதிருப்போமாக. கடவுள் இடங் 3
கொடுப்பாரானால் இப்படியே செய்வோம்.
ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டு, பரம ஈவை 4
ருசிபார்த்து, பரிசுத்த ஆவியின் வரத்தில்
பங்குபெற்று, கடவுளின் நல்வாக்கையும் 5
வரப்போகிற யுகத்தின் வல்லமைகளையும்
ருசிபார்த்தவர்கள் | வழிவிலகி விழுந்தால், 6
கடவுளின் குமாரனை அவர்கள் தாங்களே
மறுபடியும் சிலுவையிலறைந்து அவமானப்
படுத்துகிறபடியினால், மனந்திரும்புவதற்
கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்
பிக்கிறது அசாத்தியம். தன்மேல் அடிக்கடி 7
பெய்கிற மழையைக் குடித்து, பயிர்செய்
விக்கிறவர்களுக்கேற்ற விளைச்சலைத் தரும்
நிலம் கடவுளிடமிருந்து ஆசீர்வாதம்
பெறும். முட்செடிகளையும் நெரிஞ்சில்களை 8
யும் முளைப்பிக்கிற நிலமோ ஆகாதது;
சாபம் அதற்குச் சீக்கிரம் வரும்; சுட்டெரிக்
கப்படுவதே அதன் முடிவு.

பிரியமானவர்களே, நாங்கள் இப்படிப் 9
பேசினாலும் நன்மையானவைகளும் இரட்
சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்
களிடம் உண்டென்று திடநம்பிக்கையா
யிருக்கிறோம். ஏனென்றால், உங்கள் கிரி 10
யையையும் பரிசுத்தவான்களுக்கு நீங்கள்
ஊழியஞ்செய்ததினாலும் செய்துவருகிறதினா
லும் தமது நாமத்திற்கென்று காண்பித்த
அன்பையும் மறந்துவிடுகிறதற்குக் கடவுள்

11 அநீதியுள்ளவரல்லவே. நீங்கள் அசதியாயிரா
மல், விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையி
னாலும் கடவுள் வாக்களித்தவைகளைச் சுதந்
தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றும்
12 படி, உங்களுக்கு நன்னம்பிக்கையின் பூரண
நிச்சயம் உண்டாகும்பொருட்டு, உங்களில்
ஒவ்வொருவரும் முடிவுபரியந்தம் அதே
உற்சாகத்தைக் காண்பிக்கவேண்டுமென்று
ஆசையாயிருக்கிறோம்.
13 ஆபிரகாமுக்குக் கடவுள் வாக்குப்பண்
ணினபோது, ஆணையிடும்படி தம்மிலும்
பெரியவர் ஒருவரும் இல்லாதபடியினாலே
14 தமதுபேரில்தானே ஆணையிட்டு: நிச்சய
மாக உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்
பேன். உன்னைப் பெருகவே பெருகப்பண்
15 ணுவேன் என்றார். அப்படியே, அவன்
நீடிய பொறுமையோடு காத்திருந்து, கடவுள்
16 வாக்களித்ததைப் பெற்றான். மனுஷர் தங்
களிலும் பெரியவர்பேரில் ஆணையிடுவார்கள்;
அவர்கள் செய்யும் சகல விவாதத்திற்கும்
ஆணையிடுவதே உறுதிபண்ணும் முடிவு.
17 ஆகையால், கடவுள் தாம் வாக்களித்ததைச்
சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களுக்குத் தமது
சித்தத்தின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரண
மாய்க் காண்பிக்கவேண்டுமென்று, நடுநின்று
18 ஆணை இட்டார். நம்முன் வைக்கப்பட்டி
ருக்கிற நன்னம்பிக்கையைப் பற்றிக்கொள்ள
அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு மாறாத
இரண்டு விசேஷங்களினால் நிறைவான தைரி
யம் உண்டாகும்படி கடவுள் அப்படிச் செய்
தார். இவைகளில் அவர் எவ்வளவேனும்
19 பொய்சொல்லமுடியாது. அந்த நன்னம்
பிக்கையே நமக்கு நிலையும் உறுதியும் திரைக்
குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரம்.
20 இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்
படி என்றைக்கும் பிரதான ஆசாரியராகி,
நமக்குமுன் ஓடினவராய், நம்பொருட்டு
அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்.

7 இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜா
வும் உன்னதமான கடவுளின் ஆசாரியனு
மானவன்; ராஜாக்களைச் சங்காரஞ்செய்து
திரும்பிவந்த ஆபிரகாமுக்கு எதிர்கொண்டு
2 போய் அவனை ஆசீர்வதித்தவன்; ஆபிரகா
மிடமிருந்து எல்லாவற்றிலும் தசமபாகம்
பெற்றவன். முதலாவது இவன் நீதியின்
ராஜா, இது அவன் பெயருக்கு அர்த்தம்;
பின்பு சாலேமின் ராஜா, இதற்குச் சமா
3 தானத்தின் ராஜா என்று அர்த்தம். இவன்
தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லா
தவன், நாட்களின் துவக்கமும் ஜீவனின்
முடிவுமில்லாதவன்; கடவுளின் குமார
னுக்கு ஒப்பானவன். இவன் என்றென்றைக்
கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.
இவன் எவ்வளவு பெரியவன் பாருங்கள்! 4
கோத்திரப் பிதாவாகிய ஆபிரகாமே உசித
மான கொள்ளைப்பொருட்களில் இவனுக்
குத் தசமபாகம் கொடுத்தான். மெய்தான், 5
லேவியின் புத்திரரில் ஆசாரியத்துவத்தை
அடைகிறவர்கள் நியாயப்பிரமாணத்தின்
படி ஜனங்களிடத்தில் தசமபாகம் வாங்கு
கிறதற்குக் கட்டளைபெற்றிருக்கிறார்கள்.
அவர்கள் ஆபிரகாமின் சந்ததியில் தோன்றிய
தங்கள் சகோதரரிடத்திலிருந்தும் அப்படிச்
செய்கிறார்கள். இவனோ, அவர்கள் வம்சவரி 6
சையில் வராதவனாயிருந்தும், ஆபிரகாமிடத்
தில் தசமபாகம் வாங்கி, வாக்குத்தத்தங்களைப்
பெற்றவனை ஆசீர்வதித்தான். சிறியவன் பெரி 7
யவனாலே ஆசீர்வதிக்கப்படுவான், அதற்குச்
சந்தேகமேயில்லை. மரிக்கும் மனுஷர் இங்கே 8
தசமபாகம் வாங்குகிறார்கள், அங்கேயோ
உயிரோடிருக்கிறானென்று சாட்சி பெற்ற
வன் வாங்கினான். மேலும், தசமபாகம் வாங் 9
குகிற லேவியும் ஆபிரகாமின் மூலமாய்த்
தசமபாகம் கொடுத்தானென்று ஒருவாறு
சொல்லலாம். மெல்கிசேதேக்கு ஆபிரகா 10
முக்கு எதிர்கொண்டுபோனபோது லேவி தன்
முற்பிதாவாகிய ஆபிரகாமில் இருந்தானே.
லேவிய ஆசாரிய முறைமைக்குட்பட்டே 11
இஸ்ரவேல் ஜனங்கள் நியாயப்பிரமாணத்
தைப் பெற்றார்கள்; அந்த முறைமையினாலே
பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால்,
ஆரோனின் முறைமைப்படி என்றில்லாமல்
மெல்கிசேதேக்கின் முறைமைப்படியான
வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டுவ
தென்ன? ஆசாரியத்துவம் மாற்றப்பட்டி 12
ருக்க நியாயப்பிரமாணமும் மாற்றப்பட
வேண்டியதாகுமே. எவரைக்குறித்து 13
இவைகள் சொல்லப்பட்டிருக்கிறதோ அவர்
வேறொரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்;
அந்தக் கோத்திரத்தில் ஒருவனாகிலும் பலி
பீடத்தை அடுத்துத் திருப்பணி செய்த
தில்லையே. நம்முடைய ஆண்டவர் யூதா 14
கோத்திரத்தில் உதித்தாரென்பது பிரசித்தம்;
அந்தக் கோத்திரத்தின் சம்பந்தமாக ஆசாரி
யரைப்பற்றி மோசே ஒன்றும் சொல்ல
வில்லையே. அல்லாமலும், மாம்ச சம்பந்த 15
மான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்
படியல்ல, அழியாத ஜீவனுக்குரிய வல்ல 16
மையின்படி ஆசாரியராகும் வேறொரு ஆசா
ரியர் மெல்கிசேதேக்குக்கு ஒப்பானவராக
எழும்புகிறாரென்றால், மேற்சொல்லியது
இன்னும் அதிகப் பிரசித்தமாகிறது. இவ 17
ரைப்பற்றி:

மெல்கிசேதேக்கின் முறைமையின்படி
நீர் என்றைக்கும் ஆசாரியர்
18 என்று சாட்சி சொல்லியிருக்கிறதே. முந்
தின கட்டளை பலவீனமுள்ளதும் பயனற்
றதுமாய் இருந்ததினிமித்தம் அது தள்ளப்
19 படுகிறது—நியாயப்பிரமாணம் ஒன்றையும்
பூரணப்படுத்தினதில்லை—அதற்குப் பதிலாக
மேலான நன்னம்பிக்கை வருவிக்கப்படு
கிறது; அந்த நம்பிக்கையினால் கடவுளி
20 னிடம் சேருகிறோம். அன்றியும் அவர்கள்
ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்படுகிற
21 வர்கள்; இவரோ:
நீர் என்றைக்கும் ஆசாரியர் என்று
கர்த்தர் ஆணையிட்டார்,
மனம் மாறாமலும் இருப்பார்
எனத் தம்முடனே சொன்னவராலே ஆணை
22 யோடே ஆசாரியராக்கப்பட்டவர். ஆகை
யால், இயேசுவானவர் ஆணையின்மூலமாய்
ஆசாரியரானது எவ்வளவு மேன்மையோ
அவ்வளவு மேன்மையான உடன்படிக்கைக்
23 குப் பிணையாளியானார். அப்படியிருக்க,
மரணம் அவர்களை நிலைத்திருக்கவொட்டா
தாகையால் அவர்கள் அநேக ஆசாரிய
24 ராகி வந்தார்கள். இவரோ என்றைக்கும்
நிலைத்திருக்கிறபடியினாலே இவருடைய
25 ஆசாரியத்துவம் மாறாதிருக்கும். அப்படி
யிருக்க, தம் மூலமாய்க் கடவுளண்டை சேரு
கிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படி
அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவ
ராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்
சிக்க வல்லவராயிருக்கிறார்.
26 பரிசுத்தரும், கபடற்றவரும், மாசில்லாத
வரும், பாவிகளினின்று பிரிக்கப்பட்டவரும்
வானங்களிலும் மேலாக உயர்த்தப்பட்டவரு
மாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரி
27 யரே நமக்கு ஏற்றவர். அவர் மற்றப் பிரதான
ஆசாரியரைப்போல முன்பு சொந்தப் பாவங்
களுக்காகவும் பின்பு ஜனங்களுடைய பாவங்
களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டு
வதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்
டதினால் அதை ஒரேதரம் செய்துமுடித்தார்.
28 நியாயப்பிரமாணம் பலவீன மனுஷரைப்
பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது;
நியாயப்பிரமாணத்தின் பின்பு உண்டான
ஆணையோடுகூடிய வார்த்தையோ, என்
றைக்குமாகப் பூரணராக்கப்பட்ட குமாரனை
ஏற்படுத்துகிறது.

8 நான் சொல்லுகிறவைகளின் முக்கிய
மான பொருள் இதுதான்: பரலோகத்தில்
மகத்துவமானவருடைய ஆசனத்தின் வலது
2 பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவரும், பரி
சுத்த ஸ்தலத்திலும், மனுஷரல்ல கர்த்தரே
ஸ்தாபித்த மெய்யான கூடாரத்திலும் பணி
விடை செய்கிறவருமாகிய பிரதான ஆசாரி
யர் நமக்கு உண்டு. ஒவ்வொரு பிரதான 3
ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளை
யும் செலுத்தும்படி நியமிக்கப்படுகிறான்;
ஆதலால், செலுத்துவதற்கு ஏதோ ஒன்று
இவரிடத்திலும் இருப்பது அவசியம். பூமி 4
யிலே அவர் இருப்பாரானால் ஆசாரியரா
யிரார்; நியாயப்பிரமாண முறைமையின்படி
காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்கள்
இருக்கிறார்களே. இவர்கள் பரலோகத்தி 5
லுள்ளவைகளின் சாயலும் நிழலுமானவற்
றில் திருப்பணி செய்கிறார்கள். மோசே
கூடாரத்தை உண்டுபண்ணப் போகையில்:
மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட
மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும்
செய்யப் பார் என்று கடவுள் அவனுக்குக்
கட்டளையிட்டாரே. இவரோ மேலான வாக் 6
குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட
மேலான உடன்படிக்கைக்கு எப்படி மத்தி
யஸ்தராயிருக்கிறாரோ அப்படியே முக்கிய
மான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்
கிறார். முதலாம் உடன்படிக்கை குறை 7
யில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்
படிக்கைக்கு இடம் தேடவேண்டுவதில்
லையே. அவர்களைக் குற்றப்படுத்தி அவர் 8
சொல்லுகிறதாவது:
வரப்போகிற நாட்களில் இஸ்ரவேல்
வீட்டாரோடும் யூதா வீட்டாரோடும்
நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்து
வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்;
நான் அவர்களுடைய பிதாக்களை எகிப்து 9
தேசத்திலிருந்து கொண்டுவரும்படி
அவர்களைக் கைபிடித்த நாளில்
அவர்களோடு செய்த உடன்படிக்கை
யைப்போன்றதல்ல;
என் உடன்படிக்கையில் அவர்கள் நிலை
நிற்கவில்லையே,
ஆகவே, நான் அவர்களைக் கைவிட்டே
னென்று கர்த்தர் சொல்லுகிறார்.
அந்த நாட்களுக்குப் பின்பு 10
நான் இஸ்ரவேல் வீட்டாரோடு செய்யும்
உடன்படிக்கை இதுவே:
என் பிரமாணங்களை அவர்கள் மனத்திலே
வைத்து,
அவர்கள் இருதயத்தில் அவைகளை எழுது
வேன்;
நான் அவர்கள் கடவுளாயிருப்பேன்,
அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்;
கர்த்தரை அறிந்துகொள் என்று 11
எவனும் தன் ஊரானுக்கும்

எவனும் தன் சகோதரனுக்கும் போதிப்ப
தில்லை;
சிறியவன் முதல் பெரியவன் வரைக்கும்
எல்லாரும் என்னை அறிந்திருப்பார்கள்;
12 ஏனெனில், அவர்கள் அநியாயங்களை
நான் கிருபையாய்ப் பொறுத்து,
அவர்கள் பாவங்களை இனி நினைக்கவே
மாட்டேன்
என்று கர்த்தர் சொல்லுகிறார்.
13 புது உடன்படிக்கையென்று அவர் சொல்லு
கிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்;
பழமையானதும் நாள்பட்டதும் எதுவோ
அது சீக்கிரம் ஒழிந்துபோகும் தன்மை
யுள்ளது.

9 முன்சொன்னபடி, ஆராதனை நியமங்
களும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தலமும் முத
2 லாம் உடன்படிக்கைக்கும் இருந்தன. எப்
படியெனில், அமைக்கப்பட்ட கூடாரத்தின்
முன்பாகத்தில் குத்துவிளக்கும் மேசையும்
தேவசமுகத்து அப்பங்களும் இருந்தன,
அதற்குப் பரிசுத்த ஸ்தலம் என்று பேர்.
3 இரண்டாந்திரைக்கு அப்பால் மகா பரிசுத்த
ஸ்தலமெனப்படும் கூடாரம் இருந்தது.
4 அதில் பொன் தூபகலசமும், முழுவதும்
பொற்றகடு பொதிந்திருந்த உடன்படிக்கைப்
பெட்டகமும் இருந்தன; அந்தப் பெட்ட
கத்தில், மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்
திரமும் ஆரோனின் தளிர்த்தகோலும் உடன்
5 படிக்கைப் பலகைகளும் இருந்தன. கிருபா
சனத்தை மூடும் மகிமையுள்ள கேருபுகள்
பெட்டகத்தின்மேல் இருந்தன; இவைகளைப்
பற்றி விவரமாய்ப்பேச இப்பொழுது சமய
6 மில்லை. இவைகள் இவ்விதமாய் அமைக்
கப்பட்டிருக்க, ஆசாரியர்கள் தங்கள் திருப்
பணியை நிறைவேற்றுகிறவர்களாய்க் கூடா
ரத்தின் முன்பாகத்தில் நித்தமும் பிரவே
7 சிப்பார்கள். கூடாரத்தின் பின்பாகத்திலோ
வருஷத்திற்கு ஒருதரம் பிரதான ஆசாரியன்
மாத்திரம் பிரவேசிப்பான்; தனக்காகவும்
ஜனங்களின் அறிவீனப் பிழைகளுக்காகவும்
படைக்கும் இரத்தத்தோடன்றி அவனும் பிர
8 வேசியான். முதலாங்கூடாரம் நிற்குமளவும்
பரிசுத்த சன்னிதானத்திற்குப் போகிற மார்க்
கம் இன்னும் வெளிப்படவில்லை என்று பரி
சுத்த ஆவியானவர் அதனால் தெரிவிக்கிறார்.
9 அந்தக் கூடாரம் இக்காலம்வரைக்கும் ஏற்
பட்ட உபமானம்; அதற்கேற்றபடியே
படைக்கப்படுகிற காணிக்கைகளும் பலி
களும் ஆராதிக்கிறவனை மனச்சாட்சியில்
பூரணப்படுத்தக் கூடாதவைகளாம்.
இவைகள் சீர்திருத்தலின் காலம்வரைக்கும் 10
நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட
போஜனபானங்களுக்கும் பலவித ஸ்நானங்
களுக்கும் உரிய சரீர நியமங்களேயல்லாமல்
வேறல்ல. வரப்போகிற நன்மைகளுக்குரிய 11
பிரதான ஆசாரியராக கிறிஸ்து வந்து, இந்தச்
சிருஷ்டி சம்பந்தமில்லாததும் கையினால்
செய்யப்படாததும் பெரிதும் உத்தமுமான
கூடாரத்தின் வழியாய், வெள்ளாட்டுக்கடா 12
இளங்காளை இவைகளின் இரத்தத்தைக்
கொண்டல்ல, தமது சொந்த இரத்தத்தைக்
கொண்டு ஒரேதரம் பரிசுத்த ஸ்தலத்திற்குள்
பிரவேசித்து, நித்திய மீட்பைப் பலிக்கச்செய்
தார். வெள்ளாட்டுக்கடா எருது இவை 13
களின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள்
மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்ப
லும் சரீர சுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்
படுத்துமானால், நித்திய ஆவியானவரால் தம் 14
மைத்தாமே மாசற்றவராகக் கடவுளுக்குப்
படைத்த கிறிஸ்துவின் இரத்தம் ஜீவனுள்ள
கடவுளைச் சேவிப்பதற்கு உங்கள் மனச்
சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்
பது எவ்வளவு நிச்சயம்!

முதலாம் உடன்படிக்கையின் காலத்து 15
அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு
மரணம் உண்டானதினால், அழைக்கப்பட்ட
வர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய
சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு
அவர் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரா
யிருக்கிறார் மரண சாசனம் ஒன்று உண்டா 16
னால், அந்தச் சாசனத்தை எழுதினவனுடைய
மரணம் ரூபகாரமாவது அவசியம். மரணம் 17
நேரிட்டபின்பே மரண சாசனம் உறுதிப்
படும், அதை எழுதினவன் உயிரோடிருக்கை
யில் அதற்குப் பலமில்லையே. அதனாலேதான் 18
முதலாம் உடன்படிக்கையும் இரத்தமில்லா
மல் பிரதிஷ்டைபண்ணப்படவில்லை. மோசே 19
ஜனமுழுதுக்கும் நியாயப்பிரமாணத்தின்படி
கட்டளை ஒவ்வொன்றையும் சொல்லி, இளங்
காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்
தத்தைத் தண்ணீரோடும் சிவப்பான ஆட்டு
மயிரோடும் ஈசோப்போடும் எடுத்துப் புஸ்த
கத்தின்மேலும் ஜனங்களெல்லார்மேலும்
தெளித்து, கடவுள் உங்களுக்கென்று கட் 20
டளையிட்ட உடன்படிக்கையின் இரத்தம்
இதுவே என்றான். இவ்விதமாகவே கூடா 21
ரத்தின்மேலும் ஆராதனைக்குரிய சகல பணி
முட்டுகளின்மேலும் இரத்தத்தைத் தெளித்
தான். நியாயப்பிரமாணத்தின்படி சகலமும் 22
இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுமென்று ஒரு

[1] கிரேக்க பதம் உடன்படிக்கையென்றும் மரண சாசனமென்றும் பொருள்படும்.

வாறு சொல்லலாம்; இரத்தஞ்சிந்துதலில்லா
வல் மன்னிப்பில்லை.
23 ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளின்
சாயலானவைகள் இப்படிப்பட்டவைகளி
னாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாயிருந்
தது; பரலோகத்திலுள்ளவைகளோ இவற்றி
லும் மேலான பலிகளால் சுத்திகரிக்கப்
24 படவேண்டியதாம். ஏனெனில், கையினால்
செய்யப்பட்ட பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்து
பிரவேசிக்கவில்லை; அது மெய்யான பரிசுத்த
ஸ்தலத்தின் அடையாளம்; நமது பொருட்டுக்
கடவுளின் சன்னிதியில் இப்பொழுது பிர
சன்னமாயிருப்பதற்கு அவர் பரலோகத்தி
25 லேயே பிரவேசித்தார். பிரதான ஆசாரியன்
அன்னிய இரத்தத்தோடு பரிசுத்த ஸ்தலத்தில்
வருஷந்தோறும் பிரவேசிக்கிறதுபோல அநே
கந்தரம் தம்மைப் பலியிடும்படிக்கு அவர்
26 பிரவேசிக்கவில்லை. அப்படியானால் உலக
முண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்
தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே; இப்
பொழுதோ, தம்மைத்தாமே பலியிடுவதினால்
பாவங்களைத் தொலைக்கும்பொருட்டு யுகமுடி
27 வில் அவர் ஒரேதரம் வெளிப்பட்டார். ஒரே
தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்புப்
பெறுவதும் மனுஷருக்கு விதித்திருக்கிறது
28 போலவே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்
களைச் சுமந்து தீர்க்கும்படி ஒரேதரம் பலி
யிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்
கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளுகிறவ
ராய், பாவசம்பந்தமின்றி இரண்டாந்தரம்
தரிசனமாவார்.

10 நியாயப்பிரமாணம் வரப்போகிற நன்மை
களின் பொருளாயிராமல் அவைகளின்
நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வரு
ஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்
பட்டுவருகிற அதே பலிகளினாலே, கடவுளை
அண்டிக்கொள்ளுகிறவர்களை - அது ஒரு
2 காலும் பூரணப்படுத்தமுடியாது. பூரணப்
படுத்தினதேயானால், ஆராதிக்கிறவர்கள் ஒரு
தரம் சுத்தமாக்கப்பட்டபின், பாவத்தைக்
கண்டிக்கும்மனச்சாட்சி இனி அவர்களுக்கு
இல்லாதபடியால், அந்தப் பலிகளைச் செலுத்
3 துவது நிறுத்தப்படுமல்லவா? ஆனால்
பாவங்கள் உண்டென்பது வருஷந்தோறும்
அந்தப் பலிகளினால் நினைவுகூரப்படுகிறதே.
4 எருது வெள்ளாட்டுக்கடா இவைகளின்
இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமுடி
5 யாது. ஆகையால் அவர் உலகத்தில் பிரவே
சிக்கும்போது:
பலியையும் காணிக்கையையும் நீர் விரும்
பவில்லை,
ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணி
னீர்;
சர்வாங்க தகனபலிகளும் பாவநிவாரண 6
பலிகளும் உமக்குப் பிரியமில்லை.
அப்பொழுது நான்: கடவுளே, உமது சித் 7
தத்தைச் செய்ய, இதோ, வருகிறேன்,
புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதி
யிருக்கிறது என்று சொன்னேன்
என்றார். நியாயப்பிரமாணத்தின்படி செலுத் 8
தப்பட்டுவருகிற பலிகளைப்பற்றி: பலியை
யும் காணிக்கையையும் சர்வாங்கதகனபலி
களையும் பாவநிவாரண பலிகளையும் நீர் விரும்
பவில்லை, அவைகள் உமக்குப் பிரியமில்லை
என்று முதலில் சொல்லி, | பின்பு: கட 9
வுளே, உமது சித்தத்தைச் செய்ய, இதோ,
வருகிறேன் என்று சொன்னார். இரண்டா
வதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை
நீக்கிப்போடுகிறார். இயேசுகிறிஸ்துவின் சரீ 10
ரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினால் அந்தச்
சித்தத்தினாலேயே நாம் பரிசுத்தமாக்கப்பட்
டிருக்கிறோம். எந்த ஆசாரியனும் நாடோ 11
றும் பணிவிடைசெய்கிறவனாயும், பாவங்களை
ஒருகாலும் நிவிர்த்திசெய்யமுடியாத அதே
பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனா
யும் நிற்கிறான். இவரோ, பாவங்களினிமித் 12
தம் ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்
கும் கடவுளின் வலதுபாரிசத்தில் உட்
கார்ந்து, இனி தம்முடைய சத்துருக்களைத் 13
தமது பாதபடியாக்கிப்போடும்வரைக்கும்
காத்துக்கொண்டிருக்கிறார். பரிசுத்தமாக் 14
கப்படுகிறவர்களை இவர் ஒரே பலியினால்
என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்
கிறாரே.
பரிசுத்த ஆவியானவரும் இதைப்பற்றி 15
நமக்குச் சாட்சி சொல்லுகிறார்; எப்படி
யெனில்:
அந்த நாட்களுக்குப் பின்பு 16
நான் அவர்களோடு செய்யும் உடன்
படிக்கை இதுவே:
என் பிரமாணங்களை அவர்கள் இருதயத்
தில் நான் வைத்து
அவைகளை அவர்கள் மனத்தில் எழுது
வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்
என்பதை உரைத்தபின்:
அவர்கள் பாவங்களையும் அவர்கள் அக் 17
கிரமங்களையும்
நான் இனி நினைப்பதேயில்லை
என்பதையும் சொல்லுகிறார். இவைகளுக்கு 18
மன்னிப்பு எங்கே இருக்கிறதோ அங்கே
இனிமேல் பாவநிவாரண பலி இல்லை.
ஆகையால், சகோதரரே, இயேசுவானவர் 19
தமது மாம்சமாகிய திரையின் வழியாய் நமக்

கென்று பிரதிஷ்டைபண்ணியிருக்கிற புதி
தும் ஜீவனுள்ளதுமான மார்க்கத்தின் வழி
20 யாய்ப் | பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்
பதற்கு அவருடைய இரத்தத்தினால் நமக்குத்
தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,
21 கடவுளுடைய வீட்டின்மேல் அதிகாரியான
மகா ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினா
22 லும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்
பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த
ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களா
யும், உண்மையுள்ள இருதயத்தோடும் பூரண
விசுவாச நிச்சயத்தோடும் அண்டிக்கொள்
23 ளக்கடவோம். அல்லாமலும், நன்னம்பிக்
கையின் அறிக்கையை அசையாமல் பற்றிக்
கொள்ளக்கடவோம்; வாக்குப்பண்ணினவர்
24 உண்மையுள்ளவர். மேலும், அன்புக்கும்
நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி
25 ஒருவரையொருவர் கவனித்து, சபைகூடி
வருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல
நாமும் விட்டுவிடாமல், ஒருவரையொருவர்
உற்சாகப்படுத்தக்கடவோம்; நாளானது சமீ
பித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கி
றீர்களோ அவ்வளவு அதிகமாய் உற்சாகப்
படுத்தக்கடவோம்.
26 சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த
பின்பு, வேண்டுமென்று நாம் பாவஞ்
27 செய்துவந்தால், நியாயத்தீர்ப்பு வருமென்று
பயத்தோடு எதிர்பார்த்தலும் விரோதிகளைப்
பட்சிக்கும் கோபாக்கினையுமேயன்றி, பாவங்
களினிமித்தம் செலுத்தத்தக்க பலி இனி
28 இராது. ஒருவன் மோசேயின் பிரமாணத்தை
அசட்டைசெய்தால் இரக்கம் பெறாமல்
இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினால்
29 சாகிறானே. தேவ குமாரனைக் காலின்கீழ்
மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்
படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்
றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிற
வன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்கு
ஆளாவானென்று நினைத்துப்பாருங்கள்.
30 பழிவாங்குவது என் காரியம், நானே பதில்
செய்வேன் என்றும், கர்த்தர் தமது ஜனத்தை
நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்
31 னாரென்று நமக்குத் தெரியும். ஜீவனுள்ள
கடவுளின் கைகளில் அகப்படுவது பயங்
கரம்.
32 முந்தின நாட்களை நினைத்துக்கொள்
ளுங்கள்; அந்த நாட்களில் நீங்கள் பிரகாசிக்
கப்பட்டபின் உபத்திரவங்களாகிய மிகுந்த
33 போராட்டத்தைச் சகித்தீர்களே. நிந்தை
களாலும் உபத்திரவங்களாலும் நீங்கள்
வேடிக்கையாக்கப்பட்டதுமல்லாமல், அவ்
விதப் பாடுகளை அனுபவித்தவர்களுக்குக்
கூட்டாளிகளுமானீர்கள். கட்டுண்டவர்க 34
ளோடு நீங்கள் அனுதாபப்பட்டதுமன்றி,
அதிமேன்மையும் நிலைவரமுமான ஐசுவரியம்
உங்களுக்குண்டென்று அறிந்து, உங்களுக்
குள்ளவைகளைக் கொள்ளையிடச் சந்தோஷ
மாய்க் கொடுத்தீர்கள். ஆகையால், மிகுந்த 35
பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை
விட்டுவிடாதேயுங்கள். நீங்கள் கடவுளின் 36
சித்தத்தைச் செய்து, வாக்குப்பண்ணப்பட்
டதை அடைவதற்குப் பொறுமை உங்க
ளுக்கு அவசியம்.

இன்னும் சொற்பகாலந்தான், 37
வருகிறவர் வருவார், தாமதியார்;
என் நீதிமானோ விசுவாசத்தால் பிழைப் 38
பான்,
பின்வாங்கிப்போவானேயாகில் அவனில்
என் ஆத்துமா பிரியங்கொள்ளாது.

நாமோ கெட்டுப்போவதற்கு ஏதுவாகப் பின் 39
வாங்குகிறவர்களல்ல, ஆத்துமா ஈடேறும்
படி விசுவாசிக்கிறவர்களே.

விசுவாசமானது எதிர்நோக்கி ஆசிக்கிற **11**
வைகளைப்பற்றிய நிச்சயம், காணப்படா
தவைகளைப்பற்றிய உறுதி. இதனாலே முன் 2
னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள். காணப் 3
படுகிறவைகள் கண்ணுக்குத் தோன்றுகிறவை
களால் உண்டாகவில்லையென்று விளங்க,
உலகங்கள் கடவுளின் வார்த்தையினால்
அமைக்கப்பட்டனவென்று நாம் விசுவாசத்
தினால் உணர்ந்துகொள்ளுகிறோம். விசுவா 4
சத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும்
மேன்மையான பலியைக் கடவுளுக்குச்
செலுத்தினான்; அவன் நீதிமானென்று அத
னாலே சாட்சிபெற்றான்; அவனுடைய
காணிக்கைகளைப்பற்றிக் கடவுளே சாட்சி
கொடுத்தார். அந்த விசுவாசத்தினால், அவன்
மரித்தும் இன்னும் பேசுகிறான். விசுவா 5
சத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாத
படி எடுத்துக்கொள்ளப்பட்டான்; கடவுள்
அவனை எடுத்துக்கொண்டபடியினால் அவன்
காணப்படாமற்போனான்; அவன் கடவுளுக்
குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்
கொள்ளப்படுவதற்குமுன்னமே சாட்சிபெற்
றான். விசுவாசமில்லாமல் கடவுளுக்குப் 6
பிரியமாயிருப்பது அசாத்தியம். கடவுளை
அண்டிக்கொள்ளுகிறவன் அவர் இருக்கிறா
ரென்றும் அவர் தம்மை ஆவலாய்த் தேடு
கிறவர்களுக்குப் பலன் அளிக்கிறாரென்றும்
நம்பவேண்டுமே. விசுவாசத்தினாலே நோவா, 7
இன்னும் காணப்படாதிருந்தவைகளைப்பற்
றித் தெய்வ எச்சரிப்புப் பெற்று, தன் குடும்
பத்தை இரட்சிப்பதற்கு, பயபக்தியுள்ளவ

னாய்ப் பேழையை உண்டுபண்ணினான்;
உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று அத
னாலே அவன் தீர்த்து, விசுவாசத்தினால் உண்
டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்.
8 விசுவாசத்தினாலே ஆபிரகாம் அழைக்கப்
பட்டபோது கீழ்ப்படிந்து, தான் சுதந்தர
மாகப் பெறப்போகிற இடத்திற்குப்
போனான்; தான் போகும் இடம் இன்ன
தென்று அறியாமலே புறப்பட்டுப்போனான்.
9 விசுவாசத்தினாலே வாக்குத்தத்த தேசத்திலே
அன்னிய நாட்டில் சஞ்சரிப்பவன்போல்
அவன் பரதேசியாகச் சஞ்சரித்து, அதே
வாக்குத்தத்தத்திற்கு உடன்சுதந்தரராகிய
ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்
10 களில் குடியிருந்தான்; அஸ்திபாரங்களுள்ள
நகரத்துக்கு அவன் காத்திருந்தான்; அதன்
சிற்பாசாரியும் அதைக் கட்டுகிறவரும்
11 கடவுளே. விசுவாசத்தினாலே சாராளும்
வாக்குப்பண்ணினவர் உண்மையுள்ளவ
ரென்றெண்ணி, வயது சென்றவளாயிருந்தும்
12 கர்ப்பந்தரிக்கப் பலமடைந்தாள். ஆகவே,
சரீரம் செத்தவனென்று எண்ணப்படத்
தக்க ஒருவனாலேயே, வானத்திலுள்ள திர
ளான நட்சத்திரங்களைப்போலவும், கடற்
கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போல
வும் ஏராளமானவர்கள் பிறந்தார்கள்.
13 இவர்களெல்லாரும் வாக்குப்பண்ணப்
பட்டவைகளை அடையாமல், தூரத்திலே
அவைகளைக் கண்டு வாழ்த்தி, பூமியில்
தங்களை அன்னியரும் பரதேசிகளுமென்று
அறிக்கையிட்டு, விசுவாசமுள்ளவர்களாய்
14 மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிற
வர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோ
15 மென்று காட்டுகிறார்கள். தாங்கள் விட்டு
வந்த தேசத்தை நினைத்தார்களானால் அதற்
குத் திரும்பிப் போக அவர்களுக்குச் சமயங்
16 கிடைத்திருக்குமே. ஆனால் அதிலும் மேன்
மையானதை, அதாவது, பரம தேசத்தை,
அவர்கள் நாடித்தேடினார்கள். ஆதலால்,
கடவுள் அவர்களுடைய கடவுளென்னப்
பட வெட்கப்படுகிறதில்லை, அவர்களுக்கு
ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே.
17 விசுவாசத்தினாலே, ஆபிரகாம் சோதிக்கப்
பட்டபோது ஈசாக்கைப் பலியாக ஒப்புக்
கொடுத்தான். வாக்குத்தத்தங்களைப் பெற்ற
வன் தனக்கு ஒரேபேறானவனையே பலியாக
18 ஒப்புக்கொடுக்கப் பார்த்தான். ஈசாக்கி
னிடமே உன் சந்ததி விளங்குமென்று அவ
19 னுக்குச் சொல்லப்பட்டிருந்ததே; மரித்
தோரிலிருந்து எழுப்பவும் கடவுள் வல்லவ
ரென்று அவன் எண்ணி அதற்கு அடை
யாளமாக அவனை மீண்டும் பெற்றுக்கொண்

டான். விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங் 20
காரியங்களைக்குறித்து யாக்கோபையும் ஏசா
வையும் ஆசீர்வதித்தான். விசுவாசத்தினாலே 21
யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்
பின் குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து,
தன் கோலின் நுனியிலே சாய்ந்து தொழுது
கொண்டான். விசுவாசத்தினாலே யோசேப்பு 22
இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தை விட்
டுப் புறப்படுவதைப்பற்றித் தன் அந்திய
காலத்தில் பேசி, தன் எலும்புகளைக் குறித்
துக் கட்டளைகொடுத்தான்.
மோசே பிறந்தபோது அவன் சவுந்தரிய 23
முள்ள பிள்ளையென்று அவன் தாய்தகப்பன்
மார் கண்டு, ராஜாவின் கட்டளைக்குப் பயப்
படாமல், விசுவாசத்தினாலே அவனை மூன்று
மாதம் ஒளித்துவைத்தார்கள். விசுவாசத்தி 24
னாலே, மோசே பெரியவனானபோது, பார்
வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்
படுவதை வெறுத்து, பாவ சந்தோஷங் 25
களைச் சொற்பகாலம் அனுபவிப்பதிலும் கட
வுளின் ஜனங்களோடு துன்பத்தை அனுபவிப்
பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் 26
பலனை நோக்கினவனாய், எகிப்தின் ஐசுவரி
யங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும்
நிந்தையையே அதிகச் செல்வமென்றெண்ணி
னான். விசுவாசத்தினாலே, அவன் காண 27
முடியாதவரைக் காண்கிறவன்போல் உறுதி
யுள்ளவனாயிருந்து, ராஜாவின் கோபத்துக்
குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப்போ
னான். முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிற 28
வன் இஸ்ரவேலரைத் தொடாதபடி, விசுவா
சத்தினாலே அவன் பஸ்காவையும் இரத்தம்
பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான்.
விசுவாசத்தினாலே, அவர்கள் வெட்டாந் 29
தரையைக் கடந்துபோவதுபோலச் சிவந்த
சமுத்திரத்தைக் கடந்துபோனார்கள்; எகிப்தி
யரோ அப்படிச் செய்யப்பார்த்தபோது
அமிழ்ந்துபோனார்கள். விசுவாசத்தினாலே 30
எரிகோவின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்
பட்டு விழுந்தன. விசுவாசத்தினாலே ராகாப் 31
என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானமாய்
ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடே
அழிந்துபோகாதிருந்தாள்.
பின்னும் நான் என்ன சொல்லுவேன்? 32
கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா,
தாவீது, சாமுவேல் என்பவர்களையும் தீர்க்க
தரிசிகளையும்பற்றி நான் விவரிக்கப்போனால்
காலம் போதாது. விசுவாசத்தினாலே அவர்கள் 33
ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை
நடப்பித்தார்கள், வாக்குப்பண்ணப்பட்ட
வைகளைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்
களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கி 34

ரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்
குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலங்
கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களா
னார்கள், அன்னியர் சேனைகளை முறியடித்
35 தார்கள். மரித்துப்போன தங்களுடையவர்
களை ஸ்திரீகள் உயிரோடெழுந்திருக்கப்பெற்
றார்கள்; வேறு சிலர், மேன்மையான உயிர்த்
தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச்
36 சம்மதியாமல் வதைக்கப்பட்டார்கள்; வேறு
சிலர் நிந்தைகளையும் அடிகளையும், கட்டு
37 களையும் காவலையும் அனுபவித்தார்கள்; கல்
லெறியுண்டார்கள், சோதிக்கப்பட்டார்கள்,
வாளால் அறுப்புண்டார்கள், பட்டயத்தி
னாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், வறு
மையையும் உபத்திரவத்தையும் தீங்கையும்
அனுபவிக்கிறவர்களாய்ச் செம்மறியாட்டுத்
தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும்
38 போர்த்துக்கொண்டு திரிந்தார்கள். உலகம்
அவர்களுக்கு அபாத்திரமாயிருந்தது; வனாந்
தரங்களிலும் மலைகளிலும் குகைகளிலும்
பூமியின் வெடிப்புகளிலும் அவர்கள் சிதறி
39 யலைந்தார்கள். இவர்களெல்லாரும் தங்கள்
விசுவாசத்தின்மூலமாய் நற்சாட்சி பெற்றும்
வாக்குப்பண்ணப்பட்டதை அடையாமற்
40 போனார்கள். நம்மையல்லாமல் அவர்கள்
பூரணராக்கப்படாதபடிக்கு, சிறந்த நன்மை
யொன்றைக் கடவுள் நமக்கென்று முன்ன
தாக நியமித்திருந்தார்.

12 ஆகையால், மேகம்போன்ற இத்தனை
திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து
கொண்டிருக்க, பாரமான யாவற்றையும்
நம்மை எளிதில் அகப்படுத்துகிற பாவத்தை
யும் விலக்கி, விசுவாச கர்த்தாவும் விசுவாச
சம்பூரணருமாகிய இயேசுவை நோக்கி,
நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறு
2 மையோடு ஓடக்கடவோம். அவர் தமக்கு
முன் வைத்திருந்த சந்தோஷத்தின்
பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலு
வையைச் சகித்து, கடவுளுடைய சிங்கா
சனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.
3 நீங்கள் மனஞ்சோர்ந்து இளைத்துப்போகாத
படிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகள்
செய்த இவ்விதமான விரோதத்தைச் சகித்த
4 அவரையே சிந்தித்துக்கொள்ளுங்கள். பாவத்
துக்கு விரோதமாய்ப் போராடி, இரத்தஞ்
சிந்தும் அளவாக நீங்கள் இன்னும் எதிர்த்து
5 நிற்கவில்லையே. அன்றியும்:

என் மகனே, கர்த்தரின் சிட்சையை
அசட்டைசெய்யாதே.
அவர் கண்டிக்கும்போது சோர்ந்துபோ
காதே.
எவனிடம் கர்த்தர் அன்புகூருகிறாரோ 6
அவனைச் சிட்சிக்கிறார்;
தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனை
யும் தண்டிக்கிறார்

என்று புத்திரருக்குச் சொல்லுகிறதுபோல
உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை
மறந்துவிட்டீர்கள். சிட்சையின் பலனைக் 7
கருதிச் சகியுங்கள்; கடவுள் உங்களைப்
புத்திரராக நடத்துகிறார்; தகப்பன் சிட்சி
யாத புத்திரன் உண்டோ? எல்லாருக்கும் 8
கிடைக்கும் சிட்சையில் நீங்கள் பங்கடை
யாதிருந்தால் நீங்கள் புத்திரரல்ல, வேசி
மக்களே. அன்றியும், சரீரப்பிரகாரமான 9
நம்முடைய பிதாக்கள் நம்மைச் சிட்சித்து
வந்தார்கள், நாம் அவர்களை மதித்துவந்
தோம்; அப்படியிருக்க, நாம் பிழைக்கத்
தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு அதிகமாய்
அடங்கி நடக்கவேண்டுமல்லவா? தங்க 10
ளுக்கு நலமாகத் தோன்றியபடி கொஞ்ச
நாளுக்கென்று அவர்கள் நம்மைச் சிட்சித்
தார்கள்; இவரோ நமது நன்மைக்கென்று,
தமது பரிசுத்தத்தில் நாம் பங்கடைவதற்
கென்றே, நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் 11
சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷகரமாய்த்
தோன்றாமல் துக்ககரமாய்த் தோன்றும்; பிற்
காலத்திலோ அதனால் பயிற்றப்பட்டவர்
களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்
தரும். ஆகவே, நெகிழ்ந்த கைகளையும் 12
தளர்ந்த முழங்கால்களையும் திரும்ப நிமிர்த்தி,
முடமானது பிசகாமல் சொஸ்தமாகும்படி 13
உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்
படுத்துங்கள்.

யாவரோடும் சமாதானமாயிருக்கவும் பரி 14
சுத்தமாக்கப்படவும் நாடுங்கள்; பரிசுத்தமில்
லாமல் ஒருவனும் ஆண்டவரைத் தரிசிப்ப
தில்லையே. ஒருவனும் கடவுளின் கிருபையை 15
இழந்துபோகாதபடிக்கும், யாதொரு கசப்
பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்
டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாத
படிக்கும், உங்களில் ஒருவனும் வேசிக் 16
கள்ளனாகவாவது ஒரேவேளைப் போஜனத்
துக்காகத் தன் சேஷ்ட புத்திர சிலாக்கி
யத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போல்
சீர்கெட்டவனாகவாவது இராதபடிக்கும்
பார்த்துக்கொள்ளுங்கள். ஆசீர்வாதத்தைச் 17
சுதந்தரித்துக்கொள்ள இவன் பிற்பாடு
விரும்பி, கண்ணீர்விட்டு அதை ஆவலாய்த்
தேடியும், மனமாறுதலுக்கு இடங்காணாமல்
ஆகாதவனென்று தள்ளப்பட்டது உங்களுக்
குத் தெரியுமே.

தொடக்கூடியதும் அக்கினி பற்றியெரி 18
கிறதுமான மலையினிடத்திற்கும், மந்தாரம்,

காரிருள், பெருங்காற்று ஆகிய இவைகளி
19 னிடத்திற்கும், எக்காள முழக்கத்தினிடத்
திற்கும், வார்த்தைகளுடைய சத்தத்தினிடத்
திற்கும் நீங்கள் அண்டிவரவில்லையே; அந்தச்
சத்தத்தைக் கேட்டவர்கள் பின்னும் தங்க
ளுக்கு வார்த்தை சொல்லப்படாதபடிக்கு
20 வேண்டிக்கொண்டார்கள். ஏனெனில், ஒரு
மிருகம் மலையைத்தொட்டாலும் அது கல்
லெறியப்படவேண்டுமென்று சொல்லப்
பட்ட கட்டளையை அவர்கள் சகிக்க முடிய
21 வில்லை. அந்தக் காட்சி அவ்வளவு பயங்கரமா
யிருந்ததால், நான் மிகவும் பயந்து நடுங்கு
22 கிறேன் என்று மோசேயும் சொன்னான். நீங்
களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவ
னுள்ள கடவுளின் நகரமாகிய பரம எருச
லேமினிடத்திற்கும், லக்ஷக்கணக்கான தேவ
23 தூதர்களின் மகா சங்கத்தினிடத்திற்கும், பர
லோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறான
வர்களின் சபையினிடத்திற்கும், யாவருக்கும்
நியாயாதிபதியாகிய கடவுளினிடத்திற்கும்,
பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய
24 ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கை
யின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்
கும், ஆபேலின் இரத்தம் பேசினதைப்பார்க்
கிலும் நலமானதைப்பேசுகிற இரத்தமாகிய
தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும்
அண்டிவந்தீர்கள்.
25 பேசுகிறவருக்குச் செவிகொடாமல் வில
கிப்போகாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.
பூமியிலே தெய்வ வாக்காய்ப் பேசினவனுக்
குச் செவிகொடாத அவர்கள் தப்பிப்போ
காமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிற
வரை விட்டு நாம் விலகினால் தப்பிப்போகாம
26 லிருப்பது அதிக நிச்சயமே. அவருடைய
சத்தம் அப்பொழுது பூமியை அசையப்
பண்ணிற்று; இப்பொழுதோ, பூமியைமாத்
திரமல்ல வானத்தையும் இன்னும் ஒருதரம்
நான் அசையப்பண்ணுவேனென்று வாக்குப்
27 பண்ணியிருக்கிறார். இன்னும் ஒருதரம்
என்கிற சொல்லினால், அசையாதவைகள்
நிலைத்திருக்கும்படி, அசையக்கூடியவைகள்
மாறிப்போகும் என்பது குறிக்கப்படுகிறது;
இவைகள் உண்டாக்கப்பட்டவைகளே.
28 ஆகவே, அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறு
கிறவர்களாகிய நாம் பக்தியோடும் பயத்
தோடும் கடவுளுக்குப் பிரியமாய் ஆராதனை
செய்யும்படி நன்றியறிதலுள்ளவர்களாயிருப்
29 போமாக. நம்முடைய கடவுள் பட்சிக்கிற
அக்கினியாயிருக்கிறாரே.

13 சகோதர சிநேகம் நிலைநிற்கக்கடவது.
2 அன்னியரை உபசரிக்க மறவாதிருங்கள்;
அன்னியரை உபசரித்ததினால் சிலர் அறியா
மல் தேவதூதரை உபசரித்ததுண்டு. கட் 3
டுண்டிருக்கிறவர்களோடு நீங்களும் கட்டுண்
டவர்கள்போல் அவர்களை நினைத்துக்கொள்
ளுங்கள்; நீங்களும் சரீரத்திலிருக்கிறவர்க
ளாதலால் தீங்கனுபவிக்கிறவர்களை நினைத்
துக்கொள்ளுங்கள். விவாகம் யாவருக்குள் 4
ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசு
சிப்படாததாயும் இருக்கக்கடவது; வேசிக்
கள்ளரையும் விபசாரக்காரரையும் கடவுள்
நியாயந்தீர்ப்பார். பண ஆசையில்லாதவர் 5
களாய் நடந்துகொள்ளுங்கள், உங்களுக்கு
இருக்கிறவைகளே போதுமென்றெண்
ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதே
யில்லை, உன்னைக் கைவிடுவதேயில்லையென்று
அவர் சொல்லியிருக்கிறாரே. அதனாலே 6
நாம் தைரியங்கொண்டு,

கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்
படேன்,
மனுஷன் எனக்கு என்ன செய்வான்

என்று சொல்லலாமே.
தேவவசனத்தை உங்களுக்குப் போதித்து 7
உங்களை வழிநடத்தினவர்களை நீங்கள்
நினைத்து, அவர்கள் நடக்கையின் முடிவை
நன்றாய்க் கவனித்து, அவர்கள் விசுவாசத்
தைப் பின்பற்றுங்கள். இயேசுகிறிஸ்து 8
நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.
பலவித அன்னிய போதனைகளால் அலை 9
யுண்டு திரியாதிருங்கள். போஜனபதார்த்
தங்களினாலல்ல, கிருபையினாலே இருதயம்
ஸ்திரப்படுவது நல்லது; அவைகளை அனு
சரித்தவர்கள் பிரயோஜனமடைந்ததேயில்லை.
நமக்கு ஒரு பலிபீடமுண்டு, அதில் படைக் 10
கப்பட்டவைகளைப் புசிக்கும்படி கூடாரத்
தில் திருப்பணி செய்கிறவர்களுக்கு அதி
காரமில்லை. எந்த மிருகங்களின் இரத் 11
தத்தைப் பாவங்களினிமித்தம் பிரதான
ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்துக்குள்
கொண்டுவருகிறானோ அந்த மிருகங்களின்
உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்
டெரிக்கப்படும். ஆகையினாலே இயேசுவும் 12
தமது சொந்த இரத்தத்தினால் ஜனத்தைப்
பரிசுத்தஞ்செய்யும்படி நகரவாசலுக்குப்
புறம்பே பாடுபட்டார். ஆகவே, நாமும் 13
அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளை
யத்துக்குப் புறம்பே அவரிடம் புறப்பட்டுப்
போவோமாக. நிலையான நகரம் நமக்கு 14
இங்கே இல்லை; வரப்போகிறதையே ஆவ
லாய்த் தேடுகிறோம். அவருடைய நாமத்தை 15
அறிக்கையிடும் உதடுகளின் கனியாகிய
ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்
போதும் கடவுளுக்குச் செலுத்தக்கடவோம்.

16 நன்மைசெய்யவும் பகிர்ந்துகொடுக்கவும் மற
வாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகள் கட
17 வுளுக்குப் பிரியம். உங்களை நடத்துகிற
வர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்கியிருங்கள்;
அவர்கள் உங்கள் ஆத்துமாக்களுக்காகக்
கணக்கொப்புவிக்கப் போகிறவர்களாய்
விழித்திருக்கிறார்கள்; அவர்கள் மனவேதனை
யோடல்ல சந்தோஷத்தோடு அப்படிச் செய்
யும்படி பாருங்கள்; அவர்கள் மனவேதனை
யோடு அப்படிச்செய்தால் அது உங்களுக்கு
நலமாகாது.
18 எங்களுக்காக ஜெபஞ்செய்யுங்கள்;
நாங்கள் நல்மனச்சாட்சியுள்ளவர்களாய் எல்
லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்பு
கிறோமென்று திடநம்பிக்கையாயிருக்கிறோம்.
19 நான் அதிசீக்கிரமாய் உங்களுக்கு அநுக்கிர
கிக்கப்படும்படி நீங்கள் இப்படிச் செய்ய
மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.
20 ஆடுகளின் பெரிய மேய்ப்பரான நம்மு
டைய ஆண்டவராகிய இயேசுவை நித்திய
உடன்படிக்கையின் இரத்தத்தோடே மரித்
தோரிலிருந்து எழுப்பிவரப்பண்ணின சமா
தானத்தின் கடவுள், இயேசுகிறிஸ்துவைக் 21
கொண்டு தமக்குமுன்பாகப் பிரியமானதை
நம்மில் நடப்பித்து, நீங்கள் தமது சித்தத்
தைச் செய்துவர நன்மையான யாவற்றிலும்
உங்களைப் பூரணப்படுத்துவாராக. அவருக்கே
என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக.
ஆமேன்.

சகோதரரே, இந்தப் புத்திமதியான வார்த் 22
தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்
கொள்ளும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளு
கிறேன்; சுருக்கமாகவே உங்களுக்கு எழுதி
யிருக்கிறேன். நம்முடைய சகோதரனாகிய 23
தீமோத்தேயு விடுதலையாக்கப்பட்டானென்று
அறிந்துகொள்ளுங்கள். அவன் சீக்கிரமாய்
வந்தால் அவனோடு நானும் உங்களைக் காண்
பேன்.

உங்களை நடத்துகிற யாவரையும் பரிசுத்த 24
வான்கள் யாவரையும் வாழ்த்துங்கள். இங்
குள்ள இத்தாலியர் உங்களை வாழ்த்து
கிறார்கள்.

கிருபை உங்களனைவரோடும் இருப்பதாக. 25

யாக்கோபின் நிருபம்

1 கடவுளுக்கும், ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவுக்கும் அடியானாகிய யாக்கோபு
சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்க
ளுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுவ
தாவது:
2 என் சகோதரரே, உங்கள் விசுவாசம்
பரீட்சைக்கு நின்றால் அந்தப் பரீட்சை
பொறுமையை உண்டாக்குமென்றறிந்து,
3 நீங்கள் பலவித சோதனைகளில் அகப்படும்
போதெல்லாம் அதை மிகுந்த சந்தோஷ
4 மாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும்
குறைவாயிராமல் பூரணமும் நிறைவுமுள்ள
வர்களாயிருக்கும்படி, அந்தப் பொறுமை
5 பூரண கிரியை செய்யக்கடவது. உங்க
ளில் ஒருவனுக்கு ஞானம் குறைவாயிருந்
தால் அவன் கடவுளிடம் கேட்கக்கடவன்,
அது அவனுக்குக் கொடுக்கப்படும்; அவர்
கடிந்துகொள்ளாமல் எல்லாருக்கும் உதா
6 ரத்துவமாய்க் கொடுக்கிறவர். ஆயினும்,
அவன் ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் விசு
வாசத்தோடே கேட்கவேண்டும். சந்தேகப்
படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற
7 கடல் அலைக்கு ஒப்பானவன். அப்படிப்
பட்ட மனுஷன் தான் ஆண்டவரிடம்
எதையாகிலும் பெற்றுக்கொள்ளலாமென்று
8 நினைக்கவேண்டாம்; அவன் இருமனமுள்ள
வன், தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவன்.
9 தாழ்ந்த நிலைமையிலிருக்கிற சகோதரன்
தான் உயர்த்தப்பட்டதைப்பற்றிப் பெருமை
10 பாராட்டக்கடவன்; ஐசுவரியவான் தான்
தாழ்த்தப்பட்டதைப்பற்றிப் பெருமை
பாராட்டக்கடவன்; ஏனெனில் ஐசுவரிய
வான் புல்லின் பூவைப்போல் ஒழிந்து
11 போகிறவன். சூரியன் உதித்துத் தீக்காற்று
அடிக்கவே, புல் உலர்ந்து அதன் பூவும்
உதிர்ந்து அதன் அழகான வடிவும் அழிந்து
போகும்; ஐசுவரியவானும் அப்படியே தன்
வழிகளில் வாடிப்போவான்.
12 சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்
கியவான்; அவன் பரீட்சிக்கப்பட்டுத் தேறின
பின், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு
ஆண்டவர் வாக்குப்பண்ணின ஜீவ கிரீடத்
13 தைப் பெறுவான். சோதிக்கப்படுகிற எவ
னும், நான் கடவுளால் சோதிக்கப்படுகி
றேன் என்று சொல்லவேண்டாம்; கடவுள்
தீமைகளினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒரு
வனையும் சோதிக்கிறவருமல்ல. அவனவன் 14
தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்
பட்டு மயங்கிச் சோதனைக்குட்படுகிறான்.
பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்துப் 15
பாவத்தைப் பிறப்பிக்கும்; பாவம் பூரண
மாகவே அது மரணத்தை ஜனிப்பிக்கும்.
எனக்குப் பிரியமான சகோதரரே, மோசம் 16
போகாதிருங்கள். நன்மையான எந்த ஈவும் 17
பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்திறங்கி,
ஜோதிகளின் பிதாவினிடமிருந்து வருகிறது;
அவரிடத்தில் யாதொரு மாறுதலும் வேற்று
மையின் நிழலும் இல்லவேயில்லை. தமது 18
சிருஷ்டிகளில் நாம் ஒருவித முதற்பலனாவ
தற்கு அவர் தாமே சித்தங்கொண்டு, சத்திய
வசனத்தினாலே நம்மை ஜனிப்பித்தார்.
எனக்குப் பிரியமான சகோதரரே, இதை 19
அறிந்துகொள்ளுங்கள்: எந்த மனுஷனும்
கேட்கிறதற்குத் தீவிரமாயும் பேசுகிறதற்குத்
தாமதமாயும் கோபிக்கிறதற்குத் தாமதமாயும்
இருக்கக்கடவன்; மனுஷகோபம் தேவ 20
நீதியை நடப்பிக்கிறதில்லையே. ஆகவே, 21
நீங்கள் எல்லாவித அழுக்கையும் பெருக்க
மான துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு,
உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதும்
உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லது
மான வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்
கொள்ளுங்கள். நீங்கள் திருவசனத்தைக் 22
கேட்கிறவர்களாய் மாத்திரம் இருந்து உங்
களை வஞ்சித்துக்கொள்ளாமல், அதன்படி
செய்கிறவர்களுமாகுங்கள். ஒருவன் திருவச 23
னத்தைக் கேட்டும் அதன்படி செய்யாதிருந்
தால், அவன் கண்ணாடியிலே தன் சுபாவ
முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பா
வான். அவன் தன்னைத்தானே பார்த்து, அப் 24
பால் போனவுடனே தன் சாயல் இன்னதென்
பதை மறந்துவிடுகிறான். சுயாதீனப் பிர 25
மாணமாகிய பூரண பிரமாணத்தை உற்றுப்
பார்த்து அதில் நிலைத்திருக்கிறவனே, கேட்
கிறதை மறக்கிறவனாயிராமல் அதற்கேற்ற
கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கை
யில் பாக்கியவானாயிருப்பான். ஒருவன் தன் 26
நாவை அடக்காமல் தன் இருதயத்தை வஞ்

சிக்கிறவனாய், தன்னைத் தெய்வத்தொண்ட
னென்று எண்ணினால் அவன் தொண்டு
27 வீணாகும். திக்கற்ற பிள்ளைகளையும் விதவை
களையும் அவர்கள் உபத்திரவத்தில் விசாரிக்
கிறதும், உலகத்தால் கறைபடாதபடி தன்
னைக் காத்துக்கொள்ளுகிறதுமே நம்முடைய
கடவுளும் பிதாவுமானவரின் முன்னிலை
யில் மாசற்ற சுத்தமான தொண்டு.

2 என் சகோதரரே, மகிமையுள்ள நம்
முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
வின்மேல் விசுவாசமுள்ள நீங்கள் பட்ச
2 பாதம் காட்டக்கூடாது. பொன் மோதிர
மும் மினுக்கான வஸ்திரமும் தரித்த ஒருவ
னும், அழுக்கு வஸ்திரம் உடுத்தின ஒரு தரித்
திரனும் உங்கள் ஜெபாலயத்திற்குள் வரவே,
3 மினுக்கான வஸ்திரம் தரித்தவனைப் பார்த்து:
நீர் இங்கே வசதியாய் உட்காருமென்று
சொல்லி, தரித்திரனிடமோ: நீ அங்கே நில்,
அல்லது இங்கே என் பாதபடியண்டை
உட்காரு என்று நீங்கள் சொல்வீர்களானால்,
4 உங்களுக்குள்ளே இருமனமுள்ளவர்க
ளாய்ப் பொல்லாத சிந்தனைகளோடு நிதா
5 னிக்கிறீர்களல்லவா? *எனக்குப் பிரியமான
சகோதரரே, கேளுங்கள்: உலகவிஷயமாய்த்
தரித்திரரானவர்களை விசுவாசத்தில் ஐசுவரிய
வான்களாகவும், தம்மிடம் அன்புகூருகிறவர்
களுக்குக் கடவுள் வாக்குப்பண்ணின ராஜ்
யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் அவர்
6 தெரிந்தெடுக்கவில்லையா? நீங்களோ தரித்
திரனைக் கனவீனம்பண்ணுகிறீர்கள். ஐசு
வரியவான்களல்லவோ உங்களை ஒடுக்குகி
றார்கள்? அவர்களல்லவோ உங்களை நியாய
7 ஸ்தலங்களுக்கு இழுக்கிறார்கள்? உங்களுக்கு
இடப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்
8 லவோ தூஷிக்கிறார்கள்? ஆகிலும், உன்
னிடத்தில் நீ அன்புகூருவதுபோல அயலா
னிடத்திலும் அன்புகூரவேண்டுமென்று வேத
வாக்கியத்தில் கண்டிருக்கிற ராஜ பிரமா
ணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நல்லது.
9 பட்சபாதம் காட்டுகிறவர்களாயிருந்தால்
நீங்கள் பாவம் செய்து, மீறிநடந்தவர்க
ளென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்
10 படுவீர்கள். ஒருவன் நியாயப்பிரமாணம்
முழுவதையும் கைக்கொண்டிருந்தும் ஒன்
றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளி
11 யாவான். விபசாரஞ்செய்யவேண்டாம்
என்று சொன்னவர் கொலைசெய்யவேண்டாம்
என்றும் சொன்னார்; எனவே, நீ விபசாரஞ்
செய்யாதிருந்தும் கொலை செய்கிறவனானால்
நீ நியாயப்பிரமாணத்தை மீறினவனாவாய்.
12 சுயாதீனப் பிரமாணத்தினால் நியாயந்தீர்க்
கப்படப்போகிறவர்களாய், அதற்கேற்றபடி
பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள். இரக் 13
கம் காட்டாதவனுக்கு வரும் தீர்ப்பு இரக்க
மற்றதாகும்; இரக்கமோ நியாயத்தீர்ப்பைக்
கீழடக்கிப் பெருமைபாராட்டும்.
என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசு 14
வாசம் உண்டென்று சொல்லியும் கிரியைக
ளில்லாதவனாயிருந்தால் அவனுக்குப் பிர
யோஜனம் என்ன? அந்த விசுவாசம் அவனை
இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோ 15
தரியாவது வஸ்திரமில்லாமலும் அனுதின
ஆகாரமில்லாமலுமிருக்க, உங்களிலொரு 16
வன் அவர்களிடம்: நீங்கள் சமாதானத்
தோடே போங்கள், குளிர்காய்ந்து பசி
ஆறுங்கள் என்று சொல்லியும் சரீரத்திற்கு
வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடா
விட்டால் பிரயோஜனம் என்ன? அப்படியே 17
விசுவாசமும் கிரியைகளில்லாததாயிருந்தால்
தன்னில்தானே உயிரற்றதாகும். ஒருவன்: 18
உனக்கு விசுவாசம் உண்டு, எனக்குக் கிரி
யைகள் உண்டு; கிரியைகளில்லாமல் உன்
விசுவாசத்தை எனக்குக் காண்பி, நானும்
என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே
உனக்குக் காண்பிப்பேன் என்பானே. ஒரே 19
கடவுள் உண்டென்று நம்புகிறாயா? அப்படி
நம்புவது நல்லதுதான்; பேய்களும் நம்பி
நடுங்குகின்றன. வீணனே, கிரியைகளில் 20
லாத விசுவாசம் பயனற்றதென்று நீ அறிய
வேண்டுமா? நம்முடைய பிதாவாகிய ஆபிர 21
காம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்
மேல் ஒப்புக்கொடுத்தபோது, கிரியைகளினா
லல்லவோ நீதிமானாகத் தீர்க்கப்பட்டான்?
அவன் விசுவாசமும் கிரியைகளும் சேர்ந்து 22
கிரியை நடப்பிக்கவே, கிரியைகளினால் விசு
வாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே.
ஆபிரகாம் கடவுளில் விசுவாசம் வைத்தான்; 23
அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது
என்கிற வேதவாக்கியம் இவ்விதமாய் நிறை
வேறிற்று; கடவுளின் சிநேகிதனென்றும்
அவன் பேர் பெற்றான். மனுஷன் விசுவா 24
சத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலே
யும் நீதிமானாகத் தீர்க்கப்படுகிறானென்பதைக்
கண்டுகொள்ளுங்கள். அந்தப்படி, தூதர் 25
களை உபசரித்து வேறுவழியாய் அனுப்பி
விட்ட ராகாபென்னும் வேசியும் கிரியைகளி
னால் அல்லவோ நீதியுள்ளவளாகத் தீர்க்கப்
பட்டாள்? ஆவியில்லாத சரீரம் செத்ததா 26
யிருக்கிறதுபோல கிரியைகளில்லாத விசுவா
சமும் செத்ததாயிருக்கிறது.

என் சகோதரரே, கண்டிப்பான தீர்ப்பு **3**
கிடைக்குமென்றறிந்து அநேகர் போதக

2 ராகாதிருப்பீர்களாக. நாம் எல்லாரும்
அநேக விஷயங்களில் தவறிப்போகிறோம்;
பேச்சில் ஒருவன் தவறாதவனானால், அவனே
உத்தம புருஷன், அவனே தன் சரீரம் முழு
வதையும் கடிவாளத்தினால் அடக்கிக்
3 கொள்ள வல்லவன். குதிரைகள் நமக்கு
அடங்கியிருக்கும்படி அவைகளின் வாய்
களில் கடிவாளம் போட்டு, அவைகளின்
முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம்.
4 பாருங்கள், கப்பல்கள் மகா பெரியவை
களும் கடுங்காற்றுகளால் அடிபடுகிறவை
களுமாயிருந்தாலும், அவைகளை நடத்துகிற
வன் போகக் கருதுமிடம் எதுவோ அதற்கு
நேராக மிகச்சிறிய சுக்கானாலே அவைகளும்
5 திருப்பப்படுகின்றன. அப்படியே நாவும்
சிறிய அவயவமாயிருந்தும் வீம்பானவை
களைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு
எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி
6 விடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது
அநீதி நிறைந்த உலகம்; அது நமது அவய
வங்களில் அமைக்கப்பட்டு முழுச்சரீரத்
தையும் கறைப்படுத்தி, தானே நரகாக்கினி
யினால் கொளுத்தப்படுகிறதாய், சிருஷ்டிச்
சக்கரம் முழுவதையும் கொளுத்திவிடுகிறது!
7 மிருகங்கள் பறவைகள் ஊரும் பிராணிகள்
நீர்வாழும் ஜெந்துக்களாகிய சகல ஜாதிப்
பிராணிகளும் மனுஷ ஜாதியால் அடக்கப்
படுகிறதும் அடக்கப்பட்டதும் உண்டு.
8 நாவை அடக்கவோ ஒரு மனுஷனாலும்
முடியாது, அது நிலையற்ற பொல்லாங்
கானது; சாவுக்கேதுவான விஷம் நிறைந்தது.
9 கர்த்தரும் பிதாவுமானவரை அதனாலே நாம்
துதிக்கிறோம்; தேவசாயலாய் உண்டாக்கப்
பட்ட மனுஷரை அதனாலேயே சபிக்கிறோம்.
10 துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து
வெளிப்படுகின்றன; என் சகோதரரே, இப்
11 படியிருக்கலாகாது. ஒரே ஊற்றுக்கண்ணி
லிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர்
12 சுரக்குமோ? என் சகோதரரே, அத்திமரம்
ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்
திப்பழங்களையும் கொடுக்குமோ? அப்படியே
உவர்ப்பான நீரூற்று தித்திப்பான ஜலத்தைக்
கொடாது.
13 உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்
கிறவன் யார்? அவன் தன் ஞானத்திற்குரிய
சாந்தத்தோடு தன் கிரியைகளை நன்னடக்கை
14 யினாலே காண்பிக்கக்கடவன். உங்கள் இரு
தயத்திலே நீங்கள் கசப்பான பொறாமையை
யும் விரோதத்தையும் வைத்துக்கொண்டிருந்
தால், பெருமைபாராட்டாதிருங்கள்; சத்
தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லா
15 திருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்தி
லிருந்து இறங்கிவருகிற ஞானமல்ல, அது
லௌகீக சம்பந்தமானது, ஜன்மசுபாவத்துக்
குரியது, பேய்த்தனத்துக்கடுத்தது. பொறா 16
மையும் விரோதமும் எங்கே உண்டோ
அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளும்
உண்டு. பரத்திலிருந்து வருகிற ஞானமோ 17
முதலாவது சுத்தமுள்ளது, பின்பு சமாதான
மும் பொறுமையும் இணக்கமுமுள்ளது,
இரக்கமும் நற்கனிகளும் நிறைந்தது, மாறாத
மனமுள்ளது, மாயமற்றது; சமாதானஞ்செய் 18
கிறவர்களுக்கு நீதியாகிய கனி சமாதானத்
திலே விதைக்கப்படுகிறது.

உங்களுக்குள் யுத்தங்களும் சண்டை 4
களும் எதனாலே வருகின்றன? உங்கள் அவ
யவங்களில் போர்செய்கிற இச்சைகளினால்
அல்லவா? நீங்கள் ஆசித்தும் உங்களுக்குக் 2
கிடைக்கவில்லை; கொலைசெய்கிறீர்கள்.
பொறாமைப்பட்டும் அடைய முடியாமற்
போகிறீர்கள்; சண்டை செய்து யுத்தம்
பண்ணுகிறீர்கள். நீங்கள் கேளாமலிருக்கிற
படியால் உங்களுக்குக் கிடைக்கவில்லை.
நீங்கள் கேட்டும் பெற்றுக்கொள்ளுகிறதில்லை. 3
உங்கள் இச்சைகளை நிறைவேற்றச் செல
வழிக்கவேண்டுமென்று தகாத விதமாய்க்
கேட்கிறீர்களே. விபசாரிகளே, உலக சிநே 4
கம் கடவுளுக்கு விரோதமான பகையென்று
உங்களுக்குத் தெரியாதா? ஆகையால், உல
கத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன்
கடவுளுக்குப் பகைஞனாகிறான். அவர் நம் 5
மில் வாசம்பண்ணச் செய்திருக்கிற ஆவியா
னவர் வைராக்கிய வாஞ்சையாய் நம்மை நாடு
கிறாரென்று வேதவாக்கியம் சொல்லுகிறது
வீணென்று நினைக்கிறீர்களா? அவர் அளிக் 6
கும் கிருபை மிகவும் அதிகம். ஆகவே,

இறுமாப்புள்ளவர்களுக்குக் கடவுள்
எதிர்த்துநிற்கிறார்,
தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை
அளிக்கிறார்

என்று சொல்லியிருக்கிறது. ஆகையால் 7
கடவுளுக்கு அடங்கியிருங்கள்; பிசாசுக்கு
எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன்
உங்களைவிட்டு ஓடிப்போவான். கடவுளி 8
டம் சேருங்கள், அப்பொழுது அவரும் உங்
களிடம் சேருவார். பாவிகளே, உங்கள்
கைகளைச் சுத்தமாக்குங்கள்; இருமனமுள்ள
வர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்த
மாக்குங்கள். உங்கள் நிர்ப்பந்தத்தை 9
உணர்ந்து துக்கித்து அழுங்கள்; உங்கள்
நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோ
ஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது. ஆண்ட 10
வருக்கு முன்பாக உங்களைத் தாழ்த்துங்கள்;

அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.
11 சகோதரரே, ஒருவரைப்பற்றி ஒருவர் அவ
தூறாய்ப் பேசாதிருங்கள்; சகோதரரைப்
பற்றி அவதூறாய்ப் பேசி, தன் சகோதர
னைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமா
ணத்தைப்பற்றி அவதூறாய்ப் பேசி நியா
யப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்.
நீ நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்தி
னால், நியாயப்பிரமாணத்தை நீ கைக்கொள்
ளாகிறவனல்ல, அதற்கு நியாயாதிபதியா
12 வாய். நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடு
கிறவரும் நியாயாதிபதியுமானவர் ஒருவர்
உண்டு, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும்
வல்லவர்; அயலானைக் குற்றப்படுத்துகிற
தற்கு நீ யார்?
13 நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு
இன்ன பட்டணத்திற்குப்போய், அங்கே ஒரு
வருஷம் தங்கி வியாபாரஞ்செய்து சம்பாத்
தியம்பண்ணுவோம் என்கிறவர்களே,
14 கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்
குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்
பட்டது? அது கொஞ்சநேரம் தோன்றி, பின்பு
15 தோன்றாமற்போகிற புகையே. ஆகவே
அப்படிச் சொல்லாமல், கர்த்தருக்குச்
சித்தமானால் நாங்கள் உயிரோடிருந்து இன்
னின்னதைச் செய்வோமென்று சொல்வது
16 நியாயம். இப்பொழுது உங்கள் வீம்புகளில்
பெருமைபாராட்டுகிறீர்கள், இப்படிப்பட்ட
17 பெருமைபாராட்டல் யாவும் தீமையே. இப்
படியிருக்க, நன்மைசெய்ய அறிந்தவன்
அதைச் செய்யாமற்போவது அவனுக்குப்
பாவமாம்.

5 ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்
மேல் வருகிற நிர்ப்பந்தங்களினிமித்தம்
2 அலறி அழுங்கள். உங்கள் தானியசம்பத்து
மடித்துப்போனது, உங்கள் வஸ்திரங்கள்
3 பொட்டரித்துப் போயின. உங்கள் பொன்
னும் வெள்ளியும் பாசிபிடித்தன; அவற்றின்
பாசி உங்களுக்கு விரோதமாகச் சாட்சிய
மாகி, அக்கினியைப்போல் உங்கள் மாம்சத்
தைத் தின்னும். கடைசிநாட்களிலே ஐசுவரி
4 யத்தைச் சேர்த்தீர்கள். உங்கள் வயல்களை
அறுத்த வேலைக்காரரின் கூலியை நீங்கள்
அநியாயமாய்ப் பிடித்துக்கொண்டீர்கள்,
அது சத்தமிட்டுக் கூப்பிடுகிறது; அறுப்பு
அறுத்தவர்களின் கூக்குரல் சேனைகளின்
5 கர்த்தருடைய செவிகளில் பட்டது. பூமி
யிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து சுக
போகத்தில் உழன்றீர்கள்; அடிக்கப்படும்
நாளிலே உங்கள் இருதயங்களைப் போஷித்
6 தீர்கள். நீதிமானை ஆக்கினைக்குள்ளாகத்
தீர்த்தீர்கள், கொலை செய்தீர்கள்; அவன்
உங்களுக்கு எதிர்த்து நிற்கிறதில்லை.
இப்படியிருக்க, சகோதரரே, ஆண்டவ 7
ரின் வருகைமட்டும் நீடிய பொறுமையா
யிருங்கள். பயிரிடுகிறவன் பூமியின் நற்
பலனை அடையவேண்டுமென்று முன்மாரி
யும் பின்மாரியும் வருமளவும் அதற்காக
நீடிய பொறுமையோடு காத்திருக்கிறான்.
நீங்களும் நீடிய பொறுமையாயிருங்கள், 8
உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்;
ஆண்டவரின் வருகை சமீபித்திருக்கிறதே.
சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப் 9
படாதபடி ஒருவருக்கு விரோதமாய்
ஒருவர் முறுமுறுக்காதிருங்கள்; இதோ,
நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார். சகோ 10
தரரே, கர்த்தரின் நாமத்தில் பேசின தீர்க்க
தரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய
பொறுமைக்கும் மாதிரியாக வைத்துக்கொள்
ளுங்கள். பொறுத்தார் பாக்கியவான்கள் 11
என்கிறோமே! யோபின் பொறுமையைப்பற்
றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், கர்த்தரால்
உண்டான முடிவையும் கண்டிருக்கிறீர்கள்;
கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும்
உள்ளவர்.
விசேஷமாய், என் சகோதரரே, வானத் 12
தின் பேரிலாவது பூமியின் பேரிலாவது
வேறெதின் பேரிலாவது ஆணையிடவேண்
டாம். நீங்கள் ஆக்கினைத் தீர்ப்புக்குட்
படாதபடி உங்கள் பேச்சில் ஆம் என்பது
ஆம் எனவும், இல்லை என்பது இல்லை என
வும் இருக்கக்கடவது.
உங்களில் ஒருவன் துன்பப்படுகிறானா? 13
அவன் ஜெபம்பண்ணக்கடவன். ஒருவன்
சந்தோஷமாயிருக்கிறானா? சங்கீதம் பாடக்
கடவன். உங்களில் ஒருவன் வியாதியா 14
யிருக்கிறானா? அவன் சபையின் மூப்பரை
வரவழைக்கக்கடவன்; அவர்கள் ஆண்டவ
ருடைய நாமத்தில் அவன்மேல் எண்ணெய்
பூசி ஜெபம்பண்ணக்கடவர்கள். விசுவாச 15
முள்ள ஜெபம் பிணியாளியைக் குணமாக்
கும், ஆண்டவர் அவனை எழுப்புவார்.
அவன் பாவங்களைச் செய்தவனானால் அவை
அவனுக்கு மன்னிக்கப்படும். ஆகவே, 16
நீங்கள் சொஸ்தமடையும்படி உங்கள் பாவங்
களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு
ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்.
நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல்
மிகவும் வல்லமையுள்ளது. எலியா நம்மைப் 17
போன்ற தன்மையுள்ள மனுஷன்; மழை
பெய்யாதபடி அவன் கருத்தாய் ஜெபம்
பண்ணினான்; மூன்றுவருஷம் ஆறுமாதம்
பூமியின்மேல் மழை பெய்யாதிருந்தது.

18 மறுபடியும் ஜெபம்பண்ணினன், வானம்
மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத்
தந்தது.
19 என் சகோதரரே, உங்களில் ஒருவன்
சத்தியத்தைவிட்டு விலகித் தப்பிப்போகும்
போது, மற்றொருவன் அவனைத் திருப்பு
வானுல், தப்பு வழியிலிருந்து பாவியைத் 20
திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தி
னின்று இரட்சித்து, திரளான பாவங்களை
மூடுவானென்று அறிந்துகொள்ளுங்கள்.

பேதுருவின் முதலாம் நிருபம்

1 இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய
பேதுரு, பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்
கியா, ஆசியா, பித்தினியா தேசங்களிலே
2 சிதறியிருக்கிறவர்களில், ஆவியானவரின் பரி
சுத்தமாக்குதலினால் கீழ்ப்படிதலுக்கும்
இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படு
வதற்கும் பிதாவாகிய கடவுளுடைய முன்
னறிவின்படி தெரிந்தெடுக்கப்பட்ட பரதேசி
களுக்கு எழுதுவதாவது: கிருபையும் சமா
தானமும் உங்களுக்குப் பெருகக்கடவது.
3 நம்முடைய ஆண்டவராகிய இயேசு
கிறிஸ்துவின் கடவுளும் பிதாவுமானவர்
ஸ்தோத்திரத்துக்குரியவர். இயேசுகிறிஸ்து
மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே ஜீவ
னுள்ள நன்னம்பிக்கையுண்டாகும்படி,
அவர் தமது மிகுந்த இரக்கத்தின்படியே
4 நம்மை மறுபடியும் ஜனிப்பித்தார். அழியா
ததும் மாசற்றதும் வாடாததுமான சுதந்தரம்
நமக்குக் கிடைப்பதற்கென்றே இப்படிச்
5 செய்தார். கடைசிக்காலத்தில் வெளிப்பட
ஆயத்தமாயிருக்கிற இரட்சிப்புக்கு ஏது
வாக, விசுவாசத்தின் மூலமாய்க் கடவுளின்
வல்லமையினால் காக்கப்பட்டுவருகிற உங்
களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில்
6 வைக்கப்பட்டிருக்கிறது. பொன் அக்கினியி
னால் சோதிக்கப்படும். அழிந்துபோகிற
பொன்னிலும் விலையேறப்பெற்றதாயிருக்கிற
உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு
கிறிஸ்து வெளிப்படும்போது, புகழ்ச்சிக்கும்
கனத்திற்கும் மகிமைக்கும் ஏதுவாகும்படி, |
7 இப்பொழுது, அவசியமானால், பலவித
சோதனைகளால் கொஞ்சக்காலம் நீங்கள்
துக்கப்பட்டிருந்தும், இந்தக் கடைசிக்காலத்
8 தில் அதிகமாய்க் களிகூருகிறீர்கள். அவ
ரைக் காணாமலே அவரில் அன்புகூருகி
றீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியா
மலே அவரில் விசுவாசம் வைத்து, சொல்லி
முடியாததும் மகிமை நிறைந்ததுமான சந்
தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து,
9 உங்கள் விசுவாசத்தின் இலக்காகிய ஆத்தும
10 இரட்சிப்பை அடைகிறீர்கள். உங்களுக்
கென்று ஏற்பட்ட கிருபையைப்பற்றித்
தீர்க்கதரிசனம் உரைத்த தீர்க்கதரிசிகள்
இந்த இரட்சிப்பைக்குறித்துக் கருத்தாய்
ஆராய்ந்து விசாரித்தார்கள். தங்களிலுள்ள 11
கிறிஸ்துவின் ஆவி கிறிஸ்து படும் பாடுகளை
யும் அவற்றிற்குப் பின்வரும் மகிமைகளை
யும்பற்றி முன்னமே சாட்சிபகர்ந்தபோது,
இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும்
அது எப்படிப்பட்ட காலமென்பதையும்
விசாரித்துவந்தார்கள். தங்கள்பொருட் 12
டல்ல உங்கள்பொருட்டே இந்த ஊழி
யஞ்செய்தார்களென்று அவர்களுக்கு வெளி
யாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்
பப்பட்ட பரிசுத்த ஆவியைக்கொண்டு உங்
களுக்கு நற்செய்தியைப் பிரசங்கித்தவர்க
ளால் இவைகள் இப்பொழுது உங்களுக்கு
அறிவிக்கப்பட்டிருக்கின்றன; இவற்றை
உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையா
யிருக்கிறார்கள்.
ஆகவே, நீங்கள் உங்கள் மனத்தின் அரை 13
யைக் கட்டிக்கொண்டு தெளிவுள்ளவர்களா
யிருந்து, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது
உங்களுக்குக் கிடைக்கப்போகிற கிருபை
யில் பூரண நன்னம்பிக்கையுள்ளவர்களா
யிருங்கள். உங்கள் அறியாமையின் காலத் 14
தில் முன்னே இருந்த ஆசைகளுக்கு
இசைந்து நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளை
களாய், உங்களை அழைத்தவர் பரிசுத்தரா 15
யிருக்கிறதுபோல நீங்களும் உங்கள் நடக்கை
யெல்லாவற்றிலும் பரிசுத்தராகுங்கள்; நான் 16
பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தரா
யிருங்கள் என்று எழுதியிருக்கிறதே. அன்றி 17
யும், அவனவன் கிரியைகளின்படி பட்ச
பாதமில்லாமல் நியாயந்தீர்க்கிறவரை நீங்கள்
பிதாவாகத் தொழுதுகொள்ளுகிறவர்களான
தால் பரதேசிகளாய்ச் சஞ்சரிக்கும் காலமள
வும் பயத்தோடே நடந்துகொள்ளுங்கள்.
உங்கள் முன்னோர்களிலிருந்து பாரம்பரிய 18
மாய் நீங்கள் அனுசரித்துவந்த வீணான நடத்
தையினின்று, அழிவுள்ளவைகளாகிய
வெள்ளியினாலும் பொன்னினாலும் நீங்கள்
மீட்கப்படாமல், மாசில்லாத கறையற்ற 19
ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையே
றப்பெற்ற இரத்தத்தினால் மீட்கப்பட்டீர்க
ளென்று உங்களுக்குத் தெரியுமே. அவர் 20

உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்
டவராய், தமது மூலமாய்க் கடவுள்பேரில்
விசுவாசம் வைத்திருக்கிற உங்களுக்காகக்
21 கடைசிக்காலத்தில் வெளிப்பட்டார். உங்கள்
விசுவாசமும் நன்னம்பிக்கையும் கடவுள்
பேரிலேயே இருக்கும்படி, கடவுள் அவரை
மரித்தோரிலிருந்தெழுப்பி அவருக்கு மகி
மையை அருளினார்.
22 மாயமற்ற சகோதர சிநேகத்திற்கென்று
நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்கள்
ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்
களாய், மனமார ஒருவரிலொருவர் ஊக்க
23 மாய் அன்புகூருங்கள்; அழிவுள்ள வித்தினால்
அல்ல, ஜீவனுள்ளதும் நிலைத்திருக்கிறதுமான
தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே
மறுபடியும் ஜனிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.
24 ஏனெனில்

மனுமக்கள் யாவரும் புல்லைப் போன்ற
வர்கள்,
அவர்களின் மகிமையெல்லாம் புல்லின்
பூவைப் போன்றது;
25 புல் உலரும், பூ உதிரும்;
கர்த்தரின் வசனமோ என்றைக்கும் நிலை
நிற்கும்;

உங்களுக்கு நற்செய்தியாக அறிவிக்கப்
பட்ட வசனம் இதுவே.

2 இப்படியிருக்க, கர்த்தர் தயையுள்ளவ
ரென்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால்,
2 சகல துர்க்குணத்தையும் சகல கபடத்தை
யும் மாய்மாலங்களையும் பொறாமைகளையும்
சகல அவதூறுகளையும் ஒழித்துவிட்டு,
3 இரட்சிப்புக்கென்று நீங்கள் வளருவதற்
கேதுவாக, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்
போல் களங்கமில்லாத ஆத்மீகப்பாலின்
4 மேல் வாஞ்சையாயிருங்கள். ஆகாதென்று
மனுஷரால் தள்ளப்பட்டதேயாயினும்
கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டதும் விலை
யேறப்பெற்றதுமான ஜீவனுள்ள கல்லாகிய
5 அவரிடம் சேருகிறவர்களாய் | நீங்களும்
ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்குரிய
வீடாகவும், இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க்
கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைச்
செலுத்தும்படியான பரிசுத்த ஆசாரியக்
கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.
6 அந்தப்படியே:

இதோ, தெரிந்தெடுக்கப்பட்டதும்
விலையேறப்பெற்றதுமாகிய கோடிக்கல்லைச்
சீயோனில் வைக்கிறேன்;
அவரில் விசுவாசம் வைக்கிறவன்
வெட்கப்படுவதில்லை

என்று வேதவாக்கியத்தில் கண்டிருக்கிறது.

ஆகவே, விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு 7
அவர் விலையேறப்பெற்றவர்; விசுவாசியாத
வர்களுக்கோ, வீடுகட்டுகிறவர்கள் ஆகா
தென்று தள்ளின கல் கோடிக்குத் தலைக்கல்
லாகி, தவறுதற்கான கல்லும் இடறுதற்கான 8
சற்பாறையுமாயிற்று. அவர்கள் திருவசனத்
திற்குக் கீழ்ப்படியாமல் இடறுகிறார்கள்;
அதற்கென்றே அவர்கள் நியமிக்கப்பட்ட
வர்கள். நீங்களோ, அந்தகாரத்தினின்று 9
தமது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு
உங்களை வரவழைத்தவரின் குணாதிசயங்களை
அறிவிக்கும்படி, தெரிந்தெடுக்கப்பட்ட சந்
ததியும் ராஜரீக ஆசாரியக் கூட்டமும் பரி
சுத்த ஜாதியும் அவருக்குச் சொந்தமான
ஜனமுமாயிருக்கிறீர்கள். முன்னே நீங்கள் 10
ஜனம் அல்ல, இப்பொழுதோ கடவுளின்
ஜனமானீர்கள்; முன்னே இரக்கம் பெறாத
வர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்ற
வர்கள்.

பிரியமானவர்களே, நீங்கள் அன்னியரும் 11
பரதேசிகளுமாயிருக்கிறபடியால், ஆத்துமா
வுக்கு விரோதமாய்ப் போர் செய்கிற மாம்ச
இச்சைகளை விட்டுவிலகி, புறஜாதியார் உங் 12
களைத் தீமைசெய்கிறவர்கள் என்று எந்த
விஷயத்தில் அவதூறாய்ப் பேசுகிறார்களோ
அந்த விஷயத்தில் அவர்கள் உங்கள் நற்
கிரியைகளைக்கண்டு, அவற்றினிமித்தம் கட
வுள் அவர்களைச் சந்திக்கும் நாளிலே அவரை
அவர்கள் மகிமைப்படுத்தும்படி அவர்களுக்
குள் சீராய் நடந்துகொள்ள உங்களுக்குப்
புத்தி சொல்லுகிறேன்.

மனுஷரால் ஏற்பட்ட அதிகாரம் யாவற் 13
றிற்கும் ஆண்டவர் நிமித்தம் அடங்கி
யிருங்கள்; மேலான அதிகாரமுள்ள ராஜா
வுக்கானாலும் சரி, தீமை செய்கிறவர்களுக்கு 14
ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப்
புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால்
அனுப்பப்படுகிற அதிகாரிகளுக்கானாலும்
சரி, அடங்கியிருங்கள். நீங்கள் நன்மை 15
செய்கிறவர்களாய், புத்தியீன மனுஷரின்
அறியாமையை வாயடைப்பது கடவுளின்
சித்தம். சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் 16
உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு
மூடலாகக் கொண்டிராமல் கடவுளின் அடி
மைகளாய் நடந்துகொள்ளுங்கள். எல்லா 17
ரையும் கனம்பண்ணுங்கள்; சகோதரக்கூட்
டத்தாரில் அன்புகூருங்கள்; கடவுளுக்குப்
பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்
ணுங்கள்.

வேலைக்காரரே, எல்லாப் பயத்தோடும் 18
உங்கள் எஜமான்களுக்கு அடங்கியிருங்கள்;
நல்லவர்களுக்கும் சாந்த குணமுள்ளவர்க

ளுக்கும் மாத்திரமல்ல, நேர்மையில்லாதவர்
19 களுக்கும் அடங்கியிருங்கள். கடவுளைப்
பற்றும் மனச்சாட்சியினிமித்தம் ஒருவன்
அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்
களைப் பொறுமையோடு சகித்தால், அதுவே
20 கடவுளுக்குப் பிரியம். நீங்கள் குற்றஞ்
செய்து அடிக்கப்படும்போது பொறுமை
யோடு சகித்தால் கீர்த்தியென்ன? நீங்கள்
நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமை
யோடு சகித்தால் அதுவே கடவுள் பார்வை
21 யில் பிரியமானது. இதற்கென்றே அழைக்
கப்பட்டீர்கள்; கிறிஸ்துவும் தமது அடிச்
சுவடுகளை நீங்கள் தொடர்ந்துவரும்படி
உங்கள்பொருட்டுப் பாடுபட்டு உங்களுக்கு
22 மாதிரியைப் பின்வைத்துப்போனாரே. அவர்
பாவஞ்செய்யவில்லை, அவர் வாயில் வஞ்ச
23 கம் காணப்படவுமில்லை; அவர் வையப்
படுகையில் பதில் வையவில்லை, பாடுபடு
கையில் பயமுறுத்தவுமில்லை, நியாயமாய்த்
தீர்ப்புச் செய்பவருக்குத் தம் காரியத்தை
24 ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து
நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர்
தாமே தமது சரீரத்தில் நம்முடைய பாவங்
களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவர்
தழும்புகளால் குணமாக்கப்பட்டீர்கள்.
25 ஆடுகளைப்போல் வழிதப்பித் திரிந்தீர்கள்;
இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு
மேய்ப்பரும் அத்தியட்சருமானவரிடத்தில்
திருப்பப்பட்டீர்கள்.

3 அந்தப்படி, மனைவிகளே, உங்கள் புருஷ
ருக்கு அடங்கியிருங்கள்; அப்பொழுது
அவர்களில் யாராவது திருவசனத்திற்குக்
2 கீழ்ப்படியாதவர்களாயிருந்தாலும், பயபக்தி
யோடுகூடிய உங்கள் சற்புள்ள நடக்கையை
அவர்கள் கண்டு, தங்கள் மனைவிகளின்
நடக்கையினாலேயே, பேச்சின்றி, ஆதா
3 யப்படுத்திக்கொள்ளப்படுவார்கள். சடை
பின்னுதல், பொன்னாபரணங்களை அணிதல்,
உயர்ந்த வஸ்திரங்களைத் தரித்தல் ஆகிய புறம்
பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமா
4 யிருக்கலாகாது. சாந்தமும் அமைதலுமுள்ள
ஆவியாகிய அழியாத அலங்காரத்தை உங்கள்
இருதயத்திலுள்ள அந்தரங்க ஆத்துமா
தரித்திருக்கக்கடவது; அதுவே கடவுளின்
5 பார்வையில் விலையுயர்ந்தது. அந்தப்படியே,
பூர்வத்தில் கடவுளில் நன்னம்பிக்கையா
யிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்கள் புருஷ
ருக்கு அடங்கி நடந்தவர்களாய்த் தங்களை
6 அலங்கரித்தார்கள். இப்படியே, சாராள்
ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி
அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள். நீங்கள்
நன்மை செய்து எந்தத் திகிலுக்கும் பயப்
படாதிருந்தால் அவளுக்குப் பிள்ளைகளா
யிருப்பீர்கள்.

அந்தப்படி, புருஷர்களே, ஸ்திரீயானவள் 7
பலவீன பாண்டமென்றறிந்து, விவேகமுள்
ளவர்களாய் அவர்களோடு வாழ்ந்து, அவர்
களும் உங்களோடுகூட ஜீவகிருபைக்குச்
சுதந்தரரானதால் அவர்களுக்குரிய கனத்
தைச் செலுத்துங்கள்; இப்படிச் செய்தால்
உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராது.

கடைசியாக, நீங்களெல்லாரும் ஒரே 8
சிந்தையும் அனுதாபமும் சகோதர சிநேக
மும் உருக்கமும் மனத்தாழ்மையுமுள்ளவர்
களாயிருந்து, தீமைக்குத் தீமையையும் நிந் 9
தைக்கு நிந்தையையும் சரிக்கட்டாமல்
அதற்கு மாறாக ஆசீர்வதியுங்கள்; நீங்கள்
ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்
படி அழைக்கப்பட்டிருக்கிறீர்களே.

ஜீவனைச் சந்தோஷமாய் அனுபவிக்கவும் 10
நல்ல நாட்களைக் காணவும் விரும்புகிற
வன்
பொல்லாப்புக்குத் தன் நாவை விலக்கி,
கபடம் பேசாதபடி தன் உதடுகளைக்
காத்துக்கொண்டு,
தீமையை விட்டு நீங்கி நன்மை செய்து, 11
சமாதானத்தைத் தேடி அதைப் பின்
தொடரக்கடவன்.
கர்த்தருடைய கண்கள் நீதிமான்களை 12
நோக்கும்,
அவருடைய செவிகள் அவர்கள் வேண்டு
தலைக் கவனித்துக் கேட்கும்;
தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தரு
டைய முகம் விரோதம்.

நீங்கள் நலமானவற்றில் வைராக்கிய 13
முள்ளவர்களானால் உங்களுக்குத் தீமை
செய்பவன் யார்? ஆனால், நீதியினிமித்தம் 14
பாடனுபவிக்க நேரிட்டாலும் நீங்கள் பாக்
கியவான்கள்; அவர்கள் பயமுறுத்துதலுக்
குப் பயப்படாமலும் கலங்காமலுமிருந்து,
கிறிஸ்து ஆண்டவராகும்படி அவரை உங்கள் 15
இருதயங்களில் பரிசுத்தரென்று கொண்டா
டுங்கள்; உங்களிலிருக்கிற நன்னம்பிக்கை
யைப்பற்றி உங்களிடம் விசாரிக்கிற எவ
னுக்கும் உத்தரவுசொல்ல எப்பொழுதும்
ஆயத்தமாயிருங்கள். கிறிஸ்துவுக்குள்ளான 16
உங்கள் நன்னடக்கையைத் தூஷிக்கிறவர்கள்
உங்களை அவதூறாய்ப் பேசுகிற விஷயத்தில்
வெட்கப்படும்படி, சாந்தத்தோடும் பயபக்தி
யோடும் நல்மனச்சாட்சியுடையவர்களாய்
உத்தரவு சொல்லுங்கள். தீமைசெய்து 17
பாடனுபவிப்பதிலும், கடவுளுக்குச் சித்தமா
னால், நன்மைசெய்து பாடனுபவிப்பதே மேன்

18 மையாகும். கிறிஸ்துவும் நம்மைக் கடவு
ளிடம் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்
காக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம்
ஒருதரம் மரித்தார்; அவர் மாம்சத்தில் கொல்
லப்பட்டார், ஆவியிலோ உயிர்ப்பிக்கப்பட்
19 டார். அந்த ஆவியிலே அவர் போய், காவலி
20 லிருந்த ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். இந்த
ஆவிகள், பூர்வத்தில் நோவா பேழையை
ஆயத்தம்பண்ணின நாட்களிலே கடவுள்
நீடிய பொறுமையோடு காத்திருந்தபோது,
கீழ்ப்படியாமற்போனவைகள்; சிலர், அதா
வது எட்டுப்பேர் மாத்திரம், பேழையில் பிர
வேசித்து ஜலத்தின் வழியாய்க் காக்கப்பட்
21 டார்கள். அதற்கு ஒப்பனையான ஞான
ஸ்நானம் இப்பொழுது இயேசுகிறிஸ்துவின்
உயிர்த்தெழுதலினால் உங்களை இரட்சிக்
கிறது. அது மாம்ச அழுக்கை நீக்குவதல்ல,
கடவுள் முன்னிலையில் நல்மனச்சாட்சியைப்
22 பற்றிய நிச்சயமாம். இயேசுகிறிஸ்து பரலோ
கத்திற்குப் போய்க் கடவுளின் வலதுபாரிசத்தி
லிருக்கிறார்; தேவதூதர்களும் அதிகாரங்
களும் வல்லமைகளும் அவருக்கு அடங்கி
யிருக்கின்றன.

4 இப்படியிருக்க, கிறிஸ்து மாம்சத்தில்
பாடுபட்டபடியால் நீங்களும் அதே சிந்
தையை ஆயுதமாகத் தரித்துக்கொள்
2 ளுங்கள். மாம்சத்தில் பாடுபட்டவன் இனி
மாம்சத்திலிருக்கும் காலமெல்லாம் மனுஷ
இச்சைகளுக்கென்று பிழைக்காமல் கடவுள்
சித்தத்திற்கென்றே பிழைக்கத்தக்கதாகப்
3 பாவத்தை விட்டு ஓய்ந்திருப்பான். சென்ற
காலத்திலே புறஜாதிகளின் யோசனைப்படி
நடந்துவந்தது போதும்; அப்பொழுது காம
விகாரம், துர்இச்சை, மதுபானம், களி
யாட்டு, குடி, அடாத விக்கிரகாராதனை
4 இவற்றில் நடந்துவந்தீர்கள். அந்தத் துன்
மார்க்க உளையில் அவர்களோடு நீங்கள்
ஓடி விழாமலிருக்கிறதினால் அவர்கள் ஆச்
சரியப்பட்டு உங்களைத் தூஷிக்கிறார்கள்.
5 உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியா
யந்தீர்க்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு
6 அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள். மரித்
தோர் மனுஷீகமுறையாய் மாம்சத்தில் தீர்ப்
புப்பெறவும், தெய்வீகமுறையாய் ஆவியில்
பிழைக்கவும் சுவிசேஷம் 'அவர்களுக்கும்
அறிவிக்கப்பட்டது.
7 எல்லாவற்றிற்கும் முடிவு சமீபம்; ஆத
லால் நிதான புத்தியுள்ளவர்களாயிருங்கள்.
ஜெபம்பண்ணுவதற்கு மனத்தெளிவுள்ளவர்
8 களாயிருங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக,
ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு
கூருங்கள்; அன்பு திரளான பாவங்களை
மூடும். முறுமுறுப்பின்றி ஒருவரையொரு 9
வர் உபசரியுங்கள். கடவுளுடைய பலவித 10
மான கிருபையின் நல்ல உக்கிராணக்கார
ரைப்போல, அவனவன் பெற்ற கிருபை
வரத்தின்படியே அதைக்கொண்டு ஒருவருக்
கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். ஒருவன் 11
போதித்தால் கடவுளின் வாக்கியங்களின்
படியே போதிக்கக்கடவன்; ஒருவன் ஊழி
யஞ்செய்தால் கடவுள் அருளும் சக்தியின்
படியே அதைச் செய்யக்கடவன். இயேசு
கிறிஸ்துவின் மூலமாய்க் கடவுள் எல்லா
வற்றிலேயும் மகிமைப்படும்படி செய்யுங்கள்.
அவருக்கே மகிமையும் வல்லமையும் என்
றென்றைக்கும் உண்டாயிருக்கின்றன.
ஆமேன்.
பிரியமானவர்களே, உங்களைச் சோதிக் 12
கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற
அக்கினியைக்குறித்து ஏதோ புதுமை
யென்று நீங்கள் ஆச்சரியப்படாமல், கிறிஸ் 13
துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள்
களிகூர்ந்து சந்தோஷப்படும்படி, அவரு
டைய பாடுகளுக்குப் பங்காளிகளானதால்
சந்தோஷப்படுங்கள். கிறிஸ்துவின் நாமத்தி 14
னிமித்தம் நீங்கள் நிந்திக்கப்பட்டால்
பாக்கியவான்கள்; மகிமையின் ஆவியும் கட
வுளின் ஆவியுமானவர் உங்கள்மேல் தங்கி
யிருக்கிறாரே. உங்களில் ஒருவனும் கொலை 15
பாதகனாயாவது, திருடனாயாவது, தீமை
செய்பவனாயாவது, அன்னிய காரியங்களில்
தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபட
லாகாது. ஒருவன் கிறிஸ்தவனாய்ப் பாடுபட் 16
டால் அவன் வெட்கப்படாமல் இந்த நாமத்
தினாலே கடவுளை மகிமைப்படுத்தக்கடவன்.
நியாயத்தீர்ப்பு கடவுளின் வீட்டிலிருந்தே 17
துவங்கும் காலம் இது; முதல்முதல் நம்
மிடமிருந்து அது துவங்கினால் கடவுளின்
சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின்
முடிவு என்னவாகும்? நீதிமானே இரட்சிக் 18
கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனுக்
கும் பாவிக்கும் கதி என்ன? ஆகவே, கடவு 19
ளின் சித்தப்படி பாடனுபவிக்கிறவர்கள்
நன்மைசெய்கிறவர்களாய் உண்மையுள்ள
சிருஷ்டிகர்த்தாவுக்கே தங்கள் ஆத்துமாக்
களை ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.
உடன்மூப்பனும், கிறிஸ்துவின் பாடு **5**
களுக்குச் சாட்சியும், வெளிப்படப்போகிற
மகிமைக்குப் பங்காளியுமாகிய நான் உங்
களிலுள்ள மூப்பருக்குப் புத்திசொல்லு
கிறேன். உங்களிடத்திலுள்ள கடவுளின் 2
மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமா
யல்ல கடவுள் சித்தத்தின்படி மனப்பூர்வமா

யும், நீசத்தனமான லாபத்திற்கல்ல உற்சாக
3 மாயும், உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்டவர்
கள்மேல் துரைத்தனம்பண்ணாமல் மந்
தைக்கு மாதிரிகளாயும் மேய்த்துவாருங்கள்.
4 அப்படிச் செய்தால், பிரதான மேய்ப்பர்
வெளிப்படும்போது மகிமையின் வாடாத
5 கிரீடத்தைப் பெறுவீர்கள். அந்தப்படி,
இளைஞரே, முதியோருக்கு அடங்கியிருங்கள்;
நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் ஊழி
யஞ்செய்வதற்கு மனத்தாழ்மையை
அணிந்துகொள்ளுங்கள்;

இறுமாப்புள்ளவர்களுக்குக் கடவுள்
எதிர்த்து நிற்கிறார்,
தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை
அளிக்கிறார்.

6 ஆகையால், ஏற்றகாலத்தில் கடவுள் உங்
களை உயர்த்தும்படிக்கு அவருடைய வல்ல
7 கையின்கீழ் உங்களைத் தாழ்த்துங்கள். அவர்
உங்களுக்காகக் கவலைப்படுகிறவரானபடி
யால் உங்கள் விசாரங்களையெல்லாம் அவர்
8 மேல் வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தி
யுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்;
உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்
சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ
வென்று தேடிக்கொண்டு சுற்றித்திரிகிறான்.
9 விசுவாசத்தில் உறுதியுள்ளவர்களாய் அவ
னுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள
உங்கள் சகோதரக்கூட்டத்தாரில் அதே
பாடுகள் நிறைவேறிவருகின்றனவென்று
உங்களுக்குத் தெரியுமே. கிறிஸ்துவுக்குள் 10
தமது நித்திய மகிமைக்கு உங்களை அழைத்
தவராகிய கிருபாசம்பன்னராகிய கடவுள்
தாமே கொஞ்சக்காலம் பாடனுபவித்த
உங்களைப் பூரணப்படுத்தி, ஸ்திரப்படுத்தி,
பலப்படுத்தி நிலைநிறுத்துவார். அவருக்கே 11
என்றென்றைக்கும் வல்லமை உண்டாவ
தாக. ஆமேன்.

உங்களுக்குப் புத்திசொல்லி, இதுதான் 12
கடவுளின் மெய்யான கிருபை என்று
சாட்சியிட்டு, உங்களுக்கு உண்மையுள்ள
சகோதரனென்று நான் பாவிக்கிற சில்வானு
வின் மூலமாய் நான் சுருக்கமாய் எழுதி
அனுப்பியிருக்கிறேன். இந்த மெய்யான
கிருபையில் நிலைத்திருங்கள்.

உங்களோடுகூடத் தெரிந்தெடுக்கப்பட் 13
டிருக்கிற பாபிலோன் சபையும், என்
குமாரனாகிய மார்க்கும் உங்களை வாழ்த்து
கிறார்கள். ஒருவரையொருவர் அன்பின் 14
முத்தத்தோடு வாழ்த்துங்கள்.

கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் அனைவருக்
கும் சமாதானம் உண்டாவதாக.

பேதுருவின் இரண்டாம் நிருபம்

1 நம்முடைய கடவுளும் இரட்சகருமாகிய
இயேசுகிறிஸ்துவின் நீதியில், எங்களுக்கு
இருக்கிற விசுவாசத்தைப்போன்ற அருமை
யான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு,
இயேசுகிறிஸ்துவின் அடியானும் அப்போஸ்
தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுவதா
2 வது: கடவுளையும் நம்முடைய ஆண்டவ
ராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால்
உங்களுக்குக் கிருபையும் சமாதானமும்
பெருகக்கடவது.
3 தம்முடைய மகிமையினாலும் குணநிசயத்
தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறி
வினால் ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்
டிய யாவற்றையும் அவருடைய திவ்ய வல்
4 லமையானது நமக்குத் தந்தருளினது. இச்
சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்கு
நாம் தப்பியோடி, திவ்ய சுபாவத்துக்குப்
பங்குள்ளவர்களாகும்படி, அருமையும் மகா
மேன்மையுமான வாக்குத்தத்தங்கள் அவை
களினாலே நமக்கு அருளப்பட்டிருக்கின்
5 றன. ஆகவே, இவ்விஷயத்தில் நீங்கள்
அதிக ஊக்கமுள்ளவர்களாய் உங்கள் விசு
வாசத்தில் சற்குணத்தையும், சற்குணத்தில்
6 அறிவையும், அறிவில் இச்சையடக்கத்தை
யும், இச்சையடக்கத்தில் பொறுமையையும்,
7 பொறுமையில் தேவபக்தியையும், | தேவ
பக்தியில் சகோதர சிநேகத்தையும், சகோதர
சிநேகத்தில் அன்பையும் கூட்டி வழங்குங்கள்.
8 ஏனெனில், இவைகள் உங்களில் குடி
கொண்டு பெருகினால், நம்முடைய ஆண்ட
வராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறி
வில் நீங்கள் முயற்சியில்லாதவர்களும் கனி
9 யற்றவர்களுமாயிராதபடி செய்யும். இவைக
ளில்லாதவன் எவனோ அவன் குருடன்,
தூரப்பார்வையற்றவன், தான் முன்செய்த
பாவங்களறச் சுத்திகரிக்கப்பட்டதை மறந்த
10 வன். ஆகவே, சகோதரரே, நீங்கள் அழைக்
கப்பட்டதையும் தெரிந்தெடுக்கப்பட்டதை
யும் உறுதிசெய்துகொள்வதற்கு ஊக்கங்
கொள்ளுங்கள்; இவைகளைச் செய்தால்
11 நீங்கள் ஒருகாலும் இடறுவதேயில்லை. நம்
முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய
இயேசுகிறிஸ்துவின் நித்திய ராஜ்யத்தில் பிர
வேசிக்கும் சிலாக்கியம் இவ்விதமாக உங்க
ளுக்குத் தாராளமாய் அருளப்படும்.

இவற்றை நீங்கள் அறிந்து, இப்பொ 12
ழுது நீங்கள் கொண்டிருக்கிற சத்தியத்தில்
உறுதிப்பட்டிருந்தபோதிலும் எப்பொழுதும்
உங்களுக்கு இவற்றை நினைப்பூட்டிவரு
வேன். இந்தக் கூடாரத்தில் நான் இருக்கு 13
மளவும் உங்களுக்கு இவைகளை நினைப்
பூட்டி உங்களை எழுப்பிவிடுவது என்
கடமை என்று எண்ணுகிறேன். நம்மு 14
டைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
எனக்கு அறிவித்தபடியே, நான் சீக்கிரமாய்
என் கூடாரத்தை விட்டுப்போக நேரிடு
மென்று எனக்குத் தெரியும். நான் சென்று 15
போனபின்பு நீங்கள் எச்சமயத்திலும்
இவற்றை நினைத்துக்கொள்வதற்கு ஏதுவுண்
டாக ஊக்கமாய்ப் பிரயத்தனப்படுவேன்.
தந்திரமான கட்டுக்கதைகளை நாங்கள் பின் 16
பற்றாமல், அவருடைய மகத்துவத்தைக்
கண்ணாரக் கண்டவர்களாக நம்முடைய
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வல்ல
மையையும் வருகையையும் உங்களுக்கு
அறிவித்தோம். இவர் என் நேச குமாரன், 17
இவரில் பிரியமாயிருக்கிறேன் என்ற சத்தம்
உன்னத மகிமையிலிருந்து அவருக்கு உண்
டாகவே, பிதாவாகிய கடவுளால் அவர்
கனத்தையும் மகிமையையும் பெற்றபோது,
நாங்களும் திருமலையில் அவரோடிருந்து 18
வானத்தினின்று பிறந்த அந்தச் சத்தத்தைக்
கேட்டோம். தீர்க்கதரிசன வசனம் நமக்கு 19
அதிகமாய் உறுதியாக்கப்பட்டது. பொழுது
விடிந்து உங்கள் இருதயங்களில் விடி
வெள்ளி உதிக்குமளவும், இருண்ட இடத்
தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்
வசனத்தை நீங்கள் கவனிப்பது நலம்.
வேதவாக்கியங்களில் கண்ட எந்தத் தீர்க்க 20
தரிசனமும் அவனவன் சுய வியாக்கியானத்
திற்குரியதல்லவென்று நீங்கள் முதல்முதல்
அறிந்துகொள்ளவேண்டும். தீர்க்கதரிசனம் 21
ஒருபோதும் மனுஷசித்தத்தினால் உண்டாக
வில்லை; மனுஷர் பரிசுத்த ஆவியினால் ஏவப்
பட்டவர்களாய், கடவுள் வெளிப்படுத்தி
னதைப் பேசினார்கள்.

மேலும், கள்ளத்தீர்க்கதரிசிகள் ஜனங்க **2**
ளுக்குள் தோன்றினார்கள்; அப்படியே உங்க
ளுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்

பார்கள். தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட
ஆண்டவரை அவர்கள் மறுதலித்து, தங்க
ளுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்
கொள்ளுகிறவர்களாய், அழிவை விளைவிக்
கும் வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழை
2 யப்பண்ணுவார்கள். அவர்களின் காமவிகா
ரங்களை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள்
நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்.
3 பண ஆசையுடையவர்களாய், வஞ்சக
வார்த்தைகளால் உங்களைப் பொருளாகக்
கொண்டு வியாபாரம்பண்ணுவார்கள்; பூர்வ
காலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட
ஆக்கினை அயர்ந்திராது. அவர்களின் அழிவு
4 உறங்காது. பாவஞ்செய்த தூதர்களைக்
கடவுள் தப்பவிடாமல் பாதாளத்திலே
தள்ளி, நியாயத்தீர்ப்புக்கென்று வைத்து
வைக்கப்பட்டவர்களாக அந்தகாரக் குழி
5 களுக்கு ஒப்புவித்தார். பூர்வலோகத்தையும்
அவர் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்த
வனாகிய நோவா உட்பட எட்டுப்பேரைக்
காப்பாற்றி, பக்தியில்லாதவர்கள் நிறைந்த
உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்
6 பண்ணினார். சோதோம் கொமோரா என்னும்
பட்டணங்களையும் ஆக்கினைக்குள்ளாகத்
தீர்த்து, சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு,
பிற்காலத்திலே பக்தியில்லாதவர்களாய் நடக்
கப்போகிறவர்களுக்கு அவைகளைத் திருஷ்
7 டாந்தமாக வைத்தார். அக்கிரமக்காரரின்
காமவிகார நடத்தையால் மனவேதனை
அடைந்த நீதிமானாகிய லோத்தை அவர்
8 விடுவித்தார்; இந்த நீதிமான் அவர்கள் நடு
வில் வாசம்பண்ணி, அவர்கள் அக்கிரமக்
கிரியைகளைக் கண்டு, கேட்டு, நீதியுள்ள தன்
மனத்தில் நாடோறும் வாதிக்கப்பட்டான்.
9 இவ்விதமாக, தேவபக்தியுள்ளவர்களைச்
சோதனையினின்று விடுவிக்கவும், அக்கிரமக்
காரரை, விசேஷமாகத் தீட்டானதை இச்
சித்து மாம்சத்திற்கிசைய நடந்து அதிகா
ரத்தை அசட்டைபண்ணுகிறவர்களை, ஆக்
கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு
நாளுக்கென்று வைத்துவைக்கவும் கர்த்த
10 ருக்குத் தெரியும். இவர்கள் துணிகரக்
காரர், சுய இஷ்டப்பிரியர்; மகத்துவங்களைத்
11 தூஷிக்க அஞ்சாதவர்கள். அதிக பலமும்
வல்லமையுமுடைய தேவதூதர்களுங்கூட
கர்த்தருக்கு முன்பாக அவர்களைத் தூஷண
12 மாய்க் குற்றப்படுத்தமாட்டார்களே. இவர்
களோ, பிடிபட்டு அழிவதற்கான தன்மை
யோடு பிறந்த புத்தியற்ற மிருக ஜீவன்களைப்
போல, தங்களுக்குத் தெரியாதவற்றைத்
தூஷித்து, அநீதத்தின் கூலியாக அநீதத்தை
அனுபவித்து, தங்கள் கேட்டிலேயே கெட்
டழிந்து போவார்கள். இவர்கள் பகற் 13
பொழுதில் உல்லாசமாயிருப்பதை இன்ப
மென்றெண்ணுகிறார்கள், கறைகளும் இலச்
சைகளுமாகி உங்களோடு விருந்துண்கையில்
தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாயிருக்கி
றார்கள். அவர்கள் கண்கள் விபசார மயக் 14
கத்தால் நிறைந்தவைகள், பாவத்தை விட்
டோயாதவைகள். இவர்கள் உறுதியில்லாத
ஆத்துமாக்களைத் தந்திரமாய் வசப்படுத்து
கிறவர்கள், பொருளாசையில் பழகின இரு
தயமுடையவர்கள், சாபத்தின் பிள்ளைகள்.
செம்மையான வழியைவிட்டுத் தப்பிநடந்து, 15
பேயோரின் குமாரன் பிலேயாமின் வழியைப்
பின்பற்றினவர்கள்; அவன் அநீதத்தின்
கூலியை ஆசித்து, தன் அக்கிரமத்தினிமித் 16
தம் கடிந்துகொள்ளப்பட்டான்; பேசாத
பொதிமிருகம் மனுஷர் பேச்சைப் பேசி,
தீர்க்கதரிசியின் மதிகேட்டைத் தடுத்தது.
இவர்கள் நீரற்ற சுனைகள், சுழல்காற்றினால் 17
அடியுண்டோடும் மேகங்கள்; காரிருளே
இவர்கள் கதி. வஞ்சக வழியில் நடக்கிறவர் 18
களிடமிருந்து இப்போதுதான் தப்பினவர்களை
இறுமாப்பான வீண்வார்த்தைகளைப் பேசு
கிற இவர்கள் மாம்ச இச்சைகளினால் காம
விகாரங்களைக்கொண்டு தந்திரமாய் வசப்படுத்
திக்கொள்ளுகிறார்கள். தாங்களே கேட் 19
டுக்கு அடிமைகளாயிருக்கையில் அவர்
களுக்குச் சுயாதீனத்தை வாக்குப்பண்ணு
கிறார்கள்; ஒருவன் எதனால் ஜெயிக்கப்பட்
டானோ அதற்கே அவன் அடிமை. ஆண் 20
டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்
துவை அறிகிற அறிவினால் உலகத்தில் தீட்
டானவைகளுக்குத் தப்பினபின் அவர்கள்
மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு
ஜெயிக்கப்பட்டால், அவர்கள் பின்னிலைமை
முன்னிலைமையிலும் கேடுள்ளதாகும்.
அவர்கள் நீதிமார்க்கத்தை அறிந்த பின்பு 21
தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்
பனையைவிட்டு விலகுவதைப் பார்க்கிலும்
அதை அறியாதிருந்தால் அவர்களுக்கு நல
மாயிருந்திருக்கும். நாய் தான் கக்கினதைத் 22
தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே
புரளவும் திரும்பினது என்கிற மெய்யான
பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்ப
வித்திருக்கிறது.

பிரியமானவர்களே, நான் உங்களுக்கு 3
இந்த இரண்டாம் நிருபத்தை எழுதலா
னேன்; பரிசுத்த தீர்க்கதரிசிகளால் முன் 2
சொல்லப்பட்ட வார்த்தைகளையும், ஆண்ட
வரும் இரட்சகருமானவர் உங்கள் அப்
போஸ்தலர் மூலமாய் இட்ட கட்டளையை

யும் நீங்கள் நினைவுகூரவேண்டுமென்று,
இந்த நிருபங்களினால் உங்கள் களங்கமற்ற
மனத்தை எழுப்பிவிட்டு உங்களுக்கு நினைப்
3 பூட்டுகிறேன். கடைசிநாட்களில் பரிகாசக்
காரர் தங்கள் சுய இச்சைகளின்படியே
4 நடந்து, பரிகாசமாய்ப் பேசி: | அவர் வரு
கையைப்பற்றிய வாக்குத்தத்தம் எங்கே?
பிதாக்கள் நித்திரையடைந்த காலம்முதல்
சகலமும் சிருஷ்டிப்பின் ஆரம்பம்முதல்
இருந்தபிரகாரமே இருக்கிறதென்று
சொல்லுவார்கள் என்பதை முதல் முதல்
5 அறிந்துகொள்ளுங்கள். கடவுளின் வார்த்
தையினால் பூர்வத்தில் வானம் இருந்ததென்
பதையும், பூமி ஜலத்தினின்று தோன்றி
ஜலத்தினால் நிலைகொண்டதாய் இருந்ததென்
6 பதையும், அப்பொழுதிருந்த உலகம் ஜலங்
களால் பிரளயத்தின்மூலமாய் அழிந்ததென்
பதையும் அவர்கள் வேண்டுமென்றே மறந்து
7 விடுகிறார்கள். இப்பொழுதிருக்கிற வான
மும் பூமியுமோ அந்த வார்த்தையினாலேயே
அக்கினிக்கு இரையாக வைத்துவைக்கப்
பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்
தீர்க்கப்பட்டு அழிந்துபோகும் நாள்வரைக்
கும் காக்கப்பட்டுவருகின்றன.
8 பிரியமானவர்களே, ஒன்றை நீங்கள்
மறந்துவிடவேண்டாம்: கர்த்தருக்கு ஒரு
நாள் ஆயிரம்வருஷம் போன்றது, ஆயிரம்
9 வருஷம் ஒருநாள் போன்றது. தாமதிக்கிறா
ரென்று சிலர் எண்ணுகிறபடி ஆண்டவர்
தமது வாக்குத்தத்தத்தைப்பற்றித் தாமதியா
மல், ஒருவரும் கெட்டுப்போகாதபடி எல்லா
ரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்
பியே உங்களிடத்தில் நீடிய பொறுமை
10 பாராட்டுகிறார். ஆண்டவரின் நாள் திருடன்
வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது
வானங்கள் மடமடவென்று அகன்றுபோம்,
பூதியங்கள் வெந்துருகிப்போம், பூமியும் அதி
11 லுள்ள கிரியைகளும் வெளியாகும். இவை
களெல்லாம் இப்படி அழிந்துபோகிறவைக
ளாயிருக்கிறபடியால், நீங்கள் எப்படிப்பட்ட
பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ள
வர்களாயிருக்கவேண்டும்! கடவுளின் 12
நாளுக்கு ஆவலோடு காத்திருந்து, அது சீக்
கிரம் வரச்செய்யுங்கள்; அந்த நாள் வரும்
போது வானங்கள் எரிந்தழிந்து, பூதியங்கள்
வெந்துருகிப்போம். அவருடைய வாக்குத் 13
தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும்
புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகக்
காத்திருக்கிறோம்.

ஆகவே, பிரியமானவர்களே, இவைகள் 14
வரக்காத்திருக்கிற நீங்கள் அவர் சன்னிதியில்
கறையற்றவர்களும் மாசற்றவர்களுமாய்ச்
சமாதானத்தோடே காணப்படக் கருத்தா
யிருங்கள். நம்முடைய ஆண்டவரின் நீடிய 15
பொறுமையை இரட்சிப்பென்று எண்
ணுங்கள்; நமக்குப் பிரியமான சகோதரனா
கிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்
தின்படி உங்களுக்கு இவ்விதமாய் எழுதி
யிருக்கிறான்; எல்லா நிருபங்களிலும் இவை 16
களைப்பற்றிப் பேசும்போது அவ்விதமாய்
எழுதியிருக்கிறான். அவன் நிருபங்களில்
அறிகிறதற்கு அரிதானவைகளும் உண்டு;
கல்வியில்லாதவர்களும் உறுதியில்லாதவர்
களும் மற்ற வேதவாக்கியங்களைப் புரட்டு
கிறதுபோல, தங்களுக்கு அழிவு உண்டாக
இவைகளையும் புரட்டுகிறார்கள்.

ஆதலால், பிரியமானவர்களே, இவைகளை 17
முன் அறிந்திருக்கிறவர்களாய், அக்கிரமக்
காரரின் வஞ்சகத்தினால் நீங்கள் இழுப்
புண்டு உங்களுக்குரிய உறுதியிலிருந்து
விலகி விழுந்துபோகாதபடி ஜாக்கிரதையா
யிருங்கள் நம்முடைய ஆண்டவரும் இரட் 18
சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை
யிலும் அவரை அறிகிற அறிவிலும் வள
ருங்கள். அவருக்கே இப்பொழுதும் என்
றென்றைக்கும் மகிமை உண்டாவதாக.

யோவானின் முதலாம் நிருபம்

1 ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்ட
தும், எங்கள் கண்களால் கண்டதும்,
நாங்கள் தரிசித்ததும், எங்கள் கைகளால்
தொட்டதுமான ஜீவவார்த்தையைப்பற்றி
2 உங்களுக்கு அறிவிக்கிறோம்—ஜீவனானது
வெளிப்பட்டது, நாங்கள் அதைக் கண்
டோம், அதைப்பற்றிச் சாட்சியிடுகிறோம்;
பிதாவோடிருந்ததும் எங்களுக்கு வெளிப்பட்
3 டதுமான நித்திய ஜீவன் அதுவே—எங்கள்
ஐக்கியத்தில் நீங்களும் பங்குபெறவேண்டு
மென்று நாங்கள் கண்டதையும் கேட்டதை
யும் உங்களுக்கு அறிவிக்கிறோம்; எங்கள்
ஐக்கியம் பிதாவோடும் அவர் குமாரனாகிய
4 இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது. எங்கள்
சந்தோஷம் நிறைவாகும்படி இவைகளை உங்
களுக்கு எழுதுகிறோம்.
5 நாங்கள் அவரிடம் கேட்டு உங்களுக்கு
அறிவிக்கிற செய்தியாவது: கடவுள்
ஒளியே, அவரில் இருள் எவ்வளவேனு
6 மில்லை. அவரோடு நாம் ஐக்கியப்பட்ட
வர்களென்று சொல்லிக்கொண்டே இருளில்
நடப்போமானால் பொய் சொல்லுகிறவர்
களாவோம், உண்மையைச் செய்கிறவர்க
7 ளல்ல. அவர் ஒளியிலிருக்கிறதுபோல
நாமும் ஒளியில் நடப்போமானால், ஒருவ
ரோடொருவர் ஐக்கியப்பட்டவர்களாவோம்;
அவர் குமாரனாகிய இயேசுவின் இரத்தம்
எவ்வித பாவமும் நீங்க நம்மைச் சுத்திகரிக்
8 கிறது. நமக்குப் பாவமில்லை என்போமா
னால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களா
9 வோம், நமக்குள் உண்மை இல்லை. நமது
பாவங்களை அறிக்கையிட்டால் பாவங்களை
நமக்கு மன்னித்து எவ்வித அநீதமும் நீங்க
நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் நம்பத்தக்க
10 வரும் நீதியுள்ளவருமாயிருக்கிறார். நாம்
பாவஞ்செய்ததேயில்லை என்போமானால் அவ
ரைப் பொய்யராக்குகிறோம், நமக்குள் அவர்
வார்த்தை இல்லை.

2 என் அருமைப் பிள்ளைகளே, நீங்கள்
பாவஞ்செய்யாதபடி இவைகளை உங்களுக்கு
எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானா
னால், நீதிபரரான இயேசுகிறிஸ்து நமக்காகப்
பிதாவினிடம் பரிந்து பேசும் [1]சகாயர்.
நமது பாவங்களுக்கு, நமது பாவங்களுக்கு 2
மாத்திரமல்ல சர்வலோகத்தின் பாவங்களுக்
கும் கிருபாதார பலி அவரே. அவர் கற் 3
பனைகளை நாம் கைக்கொள்ளுகிறதினாலேதான்
அவரை அறிந்திருக்கிறோமென்பதை அறிந்து
கொள்ளுகிறோம். அவரை அறிந்திருக்கிறே 4
னென்று சொல்லிக்கொண்டே அவர் கற்பனை
களைக் கைக்கொள்ளாதவன் பொய்யன், அவ
னுக்குள் உண்மை இல்லை. அவர் வார்த் 5
தையைக் கைக்கொள்ளுகிறவன் எவனோ
அவனில் கடவுளின் அன்பு உள்ளபடி பூர
ணப்பட்டாயிற்று. அவருக்குள் நிலைத்திருக் 6
கிறேனென்று சொல்லுகிறவன் கிறிஸ்து
நடந்தபடியே தானும் நடக்கக் கடமைப்பட்
டிருக்கிறான். நாம் அவருக்குள் இருக்கி
றோமென்பதை இதனாலேதான் அறிந்து
கொள்ளுகிறோம்.
பிரியமானவர்களே, நான் உங்களுக்கு 7
எழுதுகிறது புதிய கற்பனையல்ல, ஆதிமுதல்
உங்களுக்கிருந்த பழைய கற்பனையே; அந்
தப் பழைய கற்பனை நீங்கள் கேட்டிருக்கிற
வார்த்தைதான். மேலும், நான் உங்களுக்கு 8
எழுதுகிறது புதிய கற்பனை. இது அவரிலும்
உங்களிலும் உண்மையானது; ஏனென்றால்
இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி
இப்பொழுதே பிரகாசிக்கிறது. ஒளியில் 9
இருக்கிறேனென்று சொல்லிக்கொண்டே
தன் சகோதரனைப் பகைக்கிறவன் இன்னும்
இருளிலே இருக்கிறான். தன் சகோதரனில் 10
அன்புகூருகிறவன் ஒளியில் நிலைத்திருக்கி
றான்; இடறிவிழுவதற்கான காரணம் அவ
னிடம் இல்லை. தன் சகோதரனைப் பகைக் 11
கிறவன் இருளிலிருக்கிறான், இருளிலே
நடக்கிறான்; இருள் அவன் கண்களைக் குரு
டாக்கினபடியால், தான் போகுமிடம்
இன்னதென்று அவனுக்குத் தெரியாது.
அருமைப் பிள்ளைகளே, அவர் நாமத்தி 12
னிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்
பட்டன, ஆதலால் உங்களுக்கு எழுது
கிறேன். பிதாக்களே, ஆதிமுதலிருக்கிற 13
வரை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள், ஆதலால்
உங்களுக்கு எழுதுகிறேன். வாலிபரே,
தீயோனை நீங்கள் ஜெயித்திருக்கிறீர்கள்,
ஆதலால் உங்களுக்கு எழுதுகிறேன். பிள்ளை 14

[1] யோவான் 14: 16 பார்க்க.

களே, நீங்கள் பிதாவை அறிந்திருக்கிறீர்கள்,
ஆதலால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.
பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள்
அறிந்திருக்கிறீர்கள், ஆதலால் உங்களுக்கு
எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பல
வான்கள், கடவுளின் வார்த்தை உங்களில்
நிலைத்திருக்கிறது, நீங்கள் தீயோனை ஜெயித்
திருக்கிறீர்கள், ஆதலால் உங்களுக்கு எழுதி
15 யிருக்கிறேன். உலகத்திலும் உலகத்திலுள்ள
வைகளிலும் அன்புகூராதிருங்கள். ஒருவன்
உலகத்தில் அன்புகூருவானானால் பிதாவின்
16 அன்பு அவனிடம் இல்லை. ஏனெனில்,
மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை,
ஜீவியத்தின் வீண்பெருமையாகிய உலகத்தி
லுள்ளதெல்லாம் பிதாவுக்குரியதல்ல, உல
17 கத்திற்கே உரியது. உலகமும் அதன் இச்
சையும் ஒழிந்துபோகிறது; கடவுளின் சித்தத்
தைச் செய்கிறவனோ என்றைக்கும் நிலைத்
திருக்கிறான்.
18 பிள்ளைகளே, இது கடைசிக்காலம்; அந்
திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்
விப்பட்டபடி இப்பொழுதும் அந்திக்
கிறிஸ்துகள் அநேகர் தோன்றியிருக்கிறார்கள்;
இது கடைசிக்காலமென்று அதனால் அறிந்து
19 கொள்ளுகிறோம். அவர்கள் நம்மிடத்தி
லிருந்து வெளிப்பட்டவர்கள், ஆகிலும்
அவர்கள் நமக்குரியவர்களல்ல; நமக்குரிய
வர்களாயிருந்தார்களானால் நம்மோடு நிலைத்
திருப்பார்களே. அவர்களில் எவரும் நமக்
குரியவர்களல்லவென்று வெளியாவதற்கே
20 இப்படியாயிற்று. நீங்களோ பரிசுத்தராலே
அபிஷேகவரத்தைப் பெற்று அனைவரும் அறி
21 வடைந்திருக்கிறீர்கள். சத்தியத்தை நீங்கள்
அறியாததினாலல்ல, நீங்கள் அதை அறிந்
திருக்கிறதினாலும், பொய்யானதொன்றும் சத்
தியத்திற்குரியது அல்லாததாலும் உங்களுக்கு
எழுதியிருக்கிறேன்.
22 இயேசுவானவர் கிறிஸ்து அல்லவென்று
சொல்லி மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே
யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும்
23 மறுதலிக்கிற இவனே அந்திக்கிறிஸ்து. குமா
ரனை மறுதலிக்கிற எவனும் பிதாவையுடைய
வன் அல்ல, குமாரனை அறிக்கை பண்ணு
24 கிறவன் பிதாவையும் உடையவன். ஆதி
முதல் நீங்கள் கேட்டறிந்தது உங்களில்
நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள்
கேட்டறிந்தது உங்களில் நிலைத்திருக்குமா
னால், நீங்கள் குமாரனிலும் பிதாவிலும்
25 நிலைத்திருப்பீர்கள். அவர் நமக்கு அருளிய
வாக்குத்தத்தமானது நித்திய ஜீவனே.
26 உங்களை வஞ்சிக்கிறவர்களைக்குறித்து
இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.
அவராலே நீங்கள் பெற்ற அபிஷேக வரம் 27
உங்களில் நிலைத்திருக்கிறது, எவரும் உங்க
ளுக்குப் போதிப்பது அவசியமில்லை. அவர்
அருளிய அபிஷேக வரம் எல்லாவற்றையுங்
குறித்து உங்களுக்குப் போதித்துவருகிறது;
அது உண்மை, பொய்யல்ல; அது உங்க
ளுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்
திருங்கள். இப்படியிருக்க, அருமைப் பிள் 28
ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம்
தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கும்,
அவர் வருகையில் நாம் வெட்கப்பட்டு
அவரைவிட்டுப் போகாதிருக்கும்படிக்கும்
அவரில் நிலைத்திருங்கள். அவர் நீதியுள்ள 29
வரென்று உங்களுக்குத் தெரிந்திருந்தால்,
நீதியைச் செய்கிறவன் எவனும் அவரால்
பிறந்தவனென்று அறிந்துகொள்ளுங்கள்.

பிதா நமக்குப் பாராட்டின அன்பு எவ் 3
வளவு மேன்மையானதென்று பாருங்கள்:
கடவுளின் பிள்ளைகளென்னும் நாமதேயத்தை
நமக்கு அருளிச்செய்தார்; நாம் கடவுளின்
பிள்ளைகளாகவே இருக்கிறோம்; உலகம்
அவரை அறிந்துகொள்ளாததால் நம்மையும்
அறிந்துகொள்ளுகிறதில்லை. பிரியமானவர் 2
களே, இப்பொழுது கடவுளின் பிள்ளைகளா
யிருக்கிறோம், இனிமேல் என்னமாயிருப்
போமென்று இன்னும் வெளிப்படவில்லை;
அவர் வெளிப்படும்போது, அவர் இருக்கிற
படியே நாம் அவரைத் தரிசிப்பதினால்
அவரைப்போலவே இருப்போமென்று நமக்
குத் தெரியும். இப்படிப்பட்ட நன்னம்பிக் 3
கையை அவர்மேல் வைத்திருக்கிறவன் எவ
னும் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது
போலத் தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளு
கிறான். பாவஞ்செய்கிற எவனும் நியாயப் 4
பிரமாணத்துக்கு அடங்காதவன்; நியாயப்
பிரமாணத்துக்கு அடங்காமையே பாவம்.
பாவங்களை நீக்கிவிடவே அவர் வெளிப்பட் 5
டாரென்று உங்களுக்குத் தெரியும்; அவரில்
பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவ 6
னும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற
எவனும் அவரைக் கண்டதுமில்லை, அறிந்
ததுமில்லை. அருமைப் பிள்ளைகளே, ஒரு 7
வனும் உங்களை வஞ்சிக்க இடங்கொடா
திருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதி
யுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதி
யுள்ளவனாயிருக்கிறான். பாவஞ்செய்கிறவன் 8
பிசாசினால் உண்டாயிருக்கிறான்; பிசாசான
வன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான். பிசா
சின் கிரியைகளை அழித்துவிடவே தேவகுமா
ரன் வெளிப்பட்டார். கடவுளால் பிறந்த 9
எவனும் பாவஞ்செய்யான், அவருடைய

வித்து அவனுக்குள் நிலைத்திருக்கிறதே. கட
வுளால் அவன் பிறந்திருக்கிறவனாதலால்
10 அவன் பாவஞ்செய்ய முடியாது. கடவுளின்
பிள்ளைகள் இன்னாரென்றும் பிசாசின் பிள்
ளைகள் இன்னாரென்றும் இதனால் வெளிப்
படும்: நீதியைச் செய்யாத எவனும் கடவு
ளால் உண்டானவனல்ல, தன் சகோதர
னில் அன்புகூராதவனும் கடவுளால் உண்
11 டானவனல்ல. நாம் ஒருவரிலொருவர்
அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதி
12 முதல் கேட்டறிந்த செய்தி. தீயோனால்
உண்டானவனாயிருந்து, தன் சகோதரனைக்
கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்
டாம். இவன் எதினிமித்தம் அவனைக்
கொலைசெய்தான்? இவன் செய்கைகள் தீய
வைகளும், இவன் சகோதரன் செய்கைகள்
நீதியுள்ளவைகளுமானதினிமித்தமேதான்.
13 சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்
14 தால் ஆச்சரியப்படவேண்டாம். நாம்
சகோதரரில் அன்புகூருகிறபடியால் மரணத்
தைவிட்டு ஜீவனுக்குள் வந்தாயிற்றென்று
நமக்குத் தெரியும். அன்புகூராதவன் மர
15 ணத்தில் நிலைத்திருக்கிறான். தன் சகோ
தரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலை
பாதகன்; மனுஷகொலைபாதகன் எவனோ
அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திரா
16 தென்று உங்களுக்குத் தெரியும். அவர் தமது
ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு
இன்னதென்று அறிந்துகொண்டோம்.
சகோதரருக்காக நாமும் நமது ஜீவனைக்
17 கொடுப்பது நமது கடமை. ஒருவன் இவ்
வுலகப் பொருள் உடையவனாயிருந்து, தன்
சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று
கண்டு, அவனுக்கு மனமிரங்காதிருந்தால்
கடவுளின் அன்பு அவனில் நிலைத்திருப்ப
18 தெப்படி? அருமைப் பிள்ளைகளே, வார்த்தை
யினாலும் நாவினாலுமல்ல, கிரியையினால்
19 உண்மையாய் அன்புகூரக்கடவோம். நாம்
சத்தியத்தினால் உண்டானவர்களென்பதை
20 இதனாலே அறிந்துகொள்வதுமன்றி, கடவுள்
நமது இருதயத்தைவிட பெரியவராய்ச் சக
லத்தையும் அறிந்திருக்கிறபடியால், நமது
இருதயம் நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்
கும் எல்லா விஷயங்களைக்குறித்தும் அவர்
முன்பாக நமது இருதயத்தைச் சாந்தப்படுத்
21 திக்கொள்ளுவோம். பிரியமானவர்களே,
நமது இருதயம் நம்மைக் குற்றவாளிக
ளென்று தீர்க்காதிருந்தால் கடவுள் முன்
22 னிலையில் நமக்குத் தைரியம் உண்டு. அவர்
கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவர்
பார்வையில் பிரியமானவைகளைச் செய்கிற
படியினால், நாம் வேண்டிக்கொள்ளு
கிறதெதுவோ அதை அவரிடத்திலிருந்து
பெற்றுக்கொள்ளுகிறோம். அவர் குமார 23
னாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நாம்
விசுவாசமாயிருக்கவும், அவர் நமக்குக் கற்
பித்தபடி ஒருவரிலொருவர் அன்புகூரவும்
வேண்டுமென்பதே அவருடைய கற்பனை.
அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளு 24
கிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும்
அவனில் நிலைத்திருக்கிறார். அவர் நம்மில்
நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தரு
ளின ஆவியினாலே அறிந்துகொள்ளுகிறோம்.

பிரியமானவர்களே, உலகத்தில் அநேக 4
கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதி
னால், நீங்கள் ஒவ்வொரு ஆவியையும் நம்பி
விடாமல், அவைகள் கடவுளால் உண்டான
வைகளோ என்று சோதித்தறியுங்கள். கட 2
வுளின் ஆவியை நீங்கள் அறிந்துகொள்ளும்
வகை இது: மாம்சத்தில் வந்தவராகிய
இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற
எந்த ஆவியும் கடவுளால் உண்டானது;
இயேசுவை அறிக்கைபண்ணாத எந்த ஆவி 3
யும் கடவுளால் உண்டானதல்ல. இதுவே
அந்திக்கிறிஸ்துவின் ஆவி; அது வரப்போகிற
தாகக் கேள்விப்பட்டீர்களே, அது இப்
பொழுதும் உலகத்தில் இருக்கிறது. அரு 4
மைப் பிள்ளைகளே, நீங்கள் கடவுளால்
உண்டானவர்கள்; உலகத்திலிருக்கிறவனி
லும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்; ஆத
லால் நீங்கள் அவர்களை ஜெயித்துவிட்
டீர்கள்; அவர்கள் உலகத்தால் உண்டான 5
வர்கள், ஆகையால் உலகத்துக்குரியவை
களைப் பேசுகிறார்கள்; உலகம் அவர்களுக்
குச் செவிகொடுக்கிறது. நாம் கடவுளால் 6
உண்டானவர்கள்; கடவுளை அறிந்துகொள்
ளுகிறவன் நமக்குச் செவிகொடுக்கிறான்;
கடவுளால் உண்டாகாதவன் நமக்குச் செவி
கொடுக்கிறதில்லை. சத்திய ஆவி இன்னதென்
றும் வஞ்சக ஆவி இன்னதென்றும் இத
னாலே அறிந்துகொள்ளுகிறோம்.

பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் 7
அன்புகூருவோமாக. அன்பு கடவுளால்
உண்டானது. அன்புகூருகிறவன் எவனும்
கடவுளால் பிறந்தவன், கடவுளை அறிந்து
கொள்ளுகிறவன். அன்புகூராதவன் கட 8
வுளை அறியான்; கடவுள் அன்பாகவே இருக்
கிறார். தம்முடைய ஒரேபேறான குமார 9
னால் நாம் பிழைக்கும்படி கடவுள் அவரை
இவ்வுலகத்திற்கு அனுப்பினதினால் கடவு
ளின் அன்பு நம்மிடத்தில் வெளிப்பட்டது.
கடவுளினிடம் நாம் அன்புகூர்ந்ததினாலல்ல, 10
நம்மிடம் அவர் அன்புகூர்ந்து, நமது பாவங்

களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத்
தம்முடைய குமாரனை அனுப்பினதினா
11 லேயே அன்பு விளங்குகிறது. பிரியமான
வர்களே, கடவுள் இவ்விதமாய் நம்மில்
அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிலொரு
வர் அன்புகூரக் கடமைப்பட்டிருக்கிறோம்.
12 கடவுளை ஒருவரும் ஒருபோதும் கண்ட
தில்லை; நாம் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்
தால் கடவுள் நம்மில் நிலைத்திருக்கிறார்;
அவருடைய அன்பு நம்மில் பூரணப்பட்
13 டாயிற்று. அவர் தம்முடைய ஆவியை
நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும்
அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்து
14 கொள்ளுகிறோம். பிதாவானவர் குமாரனை
உலகரட்சகராக அனுப்பியிருக்கிறாரென்று
நாங்கள் கண்ணாரக் கண்டு சாட்சியிடுகி
15 றோம். இயேசுவானவர் தேவகுமாரனென்று
அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில்
கடவுள் நிலைத்திருக்கிறார், அவனும் கட
16 வுளில் நிலைத்திருக்கிறான். கடவுள் நம்மில்
வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்துமிருக்
கிறோம், நம்பியுமிருக்கிறோம். கடவுள்
அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்
திருக்கிறவன் கடவுளில் நிலைத்திருக்கிறான்,
17 கடவுளும் அவனில் நிலைத்திருக்கிறார். அவர்
இருக்கிற பிரகாரமாக நாமும் இவ்வுலகில்
இருக்கிறதினாலே, நியாயத்தீர்ப்பு நாளில்
நாம் தைரியங்கொள்ளத்தக்கதாக, அன்பு
18 நம்மில் பூரணப்பட்டாயிற்று. அன்பில்
பயமில்லை; பூரண அன்பு பயத்தைப்
புறம்பே தள்ளும். பயம் தண்டனை சம்
பந்தமானது; பயப்படுகிறவன் எவனும்
19 அன்பில் பூரணப்பட்டவனல்ல. அவர்
முந்தி நம்மில் அன்புகூர்ந்தபடியால் நாமும்
20 அன்புகூருகிறோம். கடவுளில் அன்புகூரு
கிறேனென்று ஒருவன் சொல்லியும் தன்
சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்
யன்; தான் கண்ட சகோதரனில் அன்புகூரா
தவன் தான் காணாத கடவுளில் அன்புகூர
21 முடியாது. கடவுளில் அன்புகூருகிறவன்
தன் சகோதரனிலும் அன்புகூரவேண்டுமென்
கிற இந்தக் கற்பனையை நாம் அவரிடத்தி
லிருந்து பெற்றிருக்கிறோம்.

5 இயேசுவே கிறிஸ்து என்று நம்புகிற எவ
னும் கடவுளால் பிறந்திருக்கிறான்; பிறப்
பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும்
அவரால் பிறந்தவனிடத்திலும் அன்புகூருகி
2 றான். நாம் கடவுளில் அன்புகூர்ந்து அவர்
கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது, கடவு
ளின் பிள்ளைகளில் அன்புகூருகிறோமென்
3 பதை அறிந்துகொள்ளுகிறோம். நாம் கட
வுளின் கற்பனைகளைக் கைக்கொள்வதே அவ
ரில் அன்புகூருவதாம்; அவருடைய கற்
பனைகள் பாரமானவையல்ல; ஏனென்றால் 4
கடவுளால் பிறந்ததெதுவும் உலகத்தை
ஜெயிக்கும்; நமது விசுவாசமே உலகத்தை
ஜெயித்த ஜெயம். இயேசுவானவர் தேவ 5
குமாரனென்று நம்புகிறவனேயன்றி உல
கத்தை ஜெயிக்கிறவன் யார்? இயேசுகிறிஸ்து 6
வாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தி
னாலும் வந்தவர்; ஜலத்தினால் மாத்திரமல்ல,
ஜலத்தினாலும் இரத்தத்தினாலுமே வந்தார்.
சாட்சியிடுகிறவர் ஆவியானவர்; ஆவியான
வர் சத்தியமே. சாட்சியிடுகிறவர்கள் 7
மூவர், | ஆவி, ஜலம், இரத்தம்; இம்மூவ 8
ருக்கும் ஒரே நோக்கமுண்டு. நாம் மனுஷ 9
சாட்சியை அங்கீகரித்தால் கடவுளின்
சாட்சி அதிலும் விசேஷமானது. அது
அவர் தம்முடைய குமாரனைப்பற்றிக்
கொடுத்த சாட்சி. தேவகுமாரனில் விசு 10
வாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத்
தனக்குள்ளே உடையவன்; கடவுளை நம்
பாதவனோ, கடவுள் தம்முடைய குமாரனைப்
பற்றிக் கொடுத்த சாட்சியை நம்பாததினால்
அவரைப் பொய்யராக்கியிருக்கிறான். கடவுள் 11
நமக்கு நித்திய ஜீவனைத் தந்தருளினாரென்
பதே அந்தச் சாட்சி; இந்த ஜீவன் அவர்
குமாரனில் இருக்கிறது. குமாரனை உடை 12
யவன் ஜீவனை உடையவன், தேவகுமாரன்
இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.
நீங்கள் நித்திய ஜீவனை உடையவர்கள் 13
என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்படி,
தேவகுமாரனுடைய நாமத்தில் விசுவாசமா
யிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதி
யிருக்கிறேன். நாம் எதையாகிலும் அவரு 14
டைய சித்தத்தின்படி கேட்டுக்கொண்டால்
அவர் நமக்குச் செவிசாய்த்தருளுகிறாரென்
பதே அவர் முன்னிலையில் நமக்குள்ள தைரி
யம். நாம் எதைக் கேட்டாலும் அவர் 15
நமக்குச் செவிசாய்த்தருளுகிறாரென்று நமக்
குத் தெரிந்திருந்தால் அவரிடம் நாம் கேட்
டுக்கொண்டவைகளைப் பெற்றுக்கொண்டோ
மென்றும் நமக்குத் தெரியும்.
மரணத்துக்கேதுவல்லாத பாவத்தைத் 16
தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால்,
அவன் வேண்டுதல்செய்து அவனுக்கு ஜீவன்
கிடைக்கச்செய்வானாக; மரணத்துக்கேதுவல்
லாத பாவத்தைச் செய்தவர்களுக்கே இது
பொருந்தும். மரணத்துக்கேதுவான பாவம்
உண்டு, அதைக்குறித்து வேண்டுதல்செய்ய
நான் சொல்லேன். அநீதமெல்லாம் பாவந் 17
தான்; என்றாலும் மரணத்துக்கேதுவல்லாத
பாவமும் உண்டு.

18 கடவுளால் பிறந்திருக்கிற எவனும் பாவஞ்
செய்யானென்று நமக்குத் தெரியும்; கடவு
ளால் பிறந்தவர் அவனைக் காக்கிறார்,
19 தீயோன் அவனைத் தொடான். நாம் கடவு
ளால் உண்டானவர்களென்றும், உலகம்
முழுவதும் தீயோனுக்குள் கிடக்கிறதென்
20 றும் நமக்குத் தெரியும். அன்றியும், நாம்
மெய்ப்பொருளானவரை அறிந்துகொள்வ
தற்குத் தேவகுமாரன் வந்து நமக்கு விவே
கத்தைத் தந்திருக்கிறாரென்றும் நமக்குத்
தெரியும். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து
வில் இருக்கிறவர்களாய், நாம் மெய்ப்பொரு
ளானவரில் இருக்கிறோம்; இவரே மெய்யான
கடவுளும் நித்திய ஜீவனுமாயிருக்கிறவர்.
அருமைப் பிள்ளைகளே, விக்கிரகங்களுக்கு 21
விலகி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

யோவானின் இரண்டாம் நிருபம்

தெரிந்தெடுக்கப்பட்ட அம்மாளுக்கும்
அவள் பிள்ளைகளுக்கும் மூப்பனாகிய நான்
எழுதுவதாவது:
நான் உங்களில் உண்மையாய் அன்பு
கூருகிறேன். நான் மாத்திரமல்ல, சத்தி
2 யத்தை அறிந்திருக்கிற யாவரும் | சத்தியத்தி
னிமித்தம் உங்களில் அன்புகூருகிறார்கள்.
அந்த சத்தியம் நமக்குள் நிலைத்திருக்கிறது,
3 என்றைக்கும் நம்மோடிருக்கும். பிதாவாகிய
கடவுளிடமிருந்தும் பிதாவின் குமாரனாகிய
இயேசுகிறிஸ்துவினிடமிருந்தும், கிருபை
யும் இரக்கமும் சமாதானமும் சத்தியத்திலும்
அன்பிலும் நம்மோடு நிலைத்திருக்கும்.
4 பிதாவினிடமிருந்து நாம் பெற்ற கட்ட
ளைக்கிசைய உன் பிள்ளைகளில் சிலர் சத்தி
யத்தில் நடக்கிறதை நான் கண்டு மிகவும்
5 சந்தோஷப்பட்டேன். இப்பொழுது, அம்
மாளே, நாம் ஒருவரிலொருவர் அன்புகூர
வேண்டுமென்று உன்னை வேண்டிக்கொள்
ளுகிறேன். நான் இதை ஒரு புதிய கற்பனை
யாக எழுதாமல், ஆதிமுதல் நமக்குண்டா
யிருக்கிற கற்பனையாகவே எழுதுகிறேன்.
6 நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்
பதே அன்பு; நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்
கிறபடி அதில் நடக்கவேண்டுமென்பதே
7 இந்தக் கற்பனை. உலகத்தில் வஞ்சகர்
அநேகர் தோன்றியிருக்கிறார்கள்; இவர்கள்
மாம்சத்தில் வருபவரான இயேசுகிறிஸ்துவை
அறிக்கைபண்ணாதவர்கள்; வஞ்சகனும் அந்
திக்கிறிஸ்துவும் இவனே. நாங்கள் பிரயா 8
சப்பட்டுச் செய்தவற்றின் பலனை நீங்கள்
இழந்துபோகாமல் பூரணபலனைப் பெறும்
படி பார்த்துக்கொள்ளுங்கள். கிறிஸ்துவின் 9
உபதேசத்தில் நிலைத்திராமல் அதற்கு மிஞ்சிப்
போகிற எவனும் கடவுளையுடையவனல்ல;
அந்த உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே
பிதாவையும் குமாரனையும் உடையவன்.
ஒருவன் இந்த உபதேசத்தைக் கொண்டு 10
வாராதவனாய் உங்களிடம் வந்தால் அவனை
வீட்டிலே ஏற்றுக்கொள்ளவும்வேண்டாம்,
அவனுக்கு வாழ்த்துதல் சொல்லவும் வேண்
டாம். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லு 11
கிறவன் அவன் துர்க்கிரியைகளுக்குப் பங்
காளியாகிறான்.
நான் உங்களுக்கு எழுதவேண்டிய காரி 12
யங்கள் அநேகம் உண்டு; காகிதத்தினாலும்
மையினாலும் அவைகளை எழுத எனக்கு
மனமில்லை. நமது சந்தோஷம் நிறைவாகும்
படி உங்களிடம் வந்து முகமுகமாய்ப்
பேசலாமென்று எதிர்பார்க்கிறேன். தெரிந் 13
தெடுக்கப்பட்டவளாகிய உன் சகோதரியின்
பிள்ளைகள் உன்னை வாழ்த்துகிறார்கள்.

யோவானின் மூன்றும் நிருபம்

மூப்பனாகிய நான் உண்மையாய் நேசிக்
கிற பிரியமான காயுவுக்கு எழுதுவதாவது:
2 பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்
வடைந்திருக்கிறதுபோல நீ எல்லாவற்றிலும்
வாழ்வடைந்து சுகமாயிருக்கும்படி பிரார்த்
3 திக்கிறேன். நீ சத்தியத்தில் நடக்கிறாயென்று
உன் சத்திய நடக்கையைப்பற்றிச் சகோதரர்
வந்து சாட்சிசொன்னபோது நான் மிகவும்
4 சந்தோஷப்பட்டேன். என் பிள்ளைகள் சத்தி
யத்தில் நடக்கிறார்களென்று நான் கேள்விப்
படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்
தோஷம் எனக்கில்லை.
5 பிரியமானவனே, சகோதரர் அன்னியரா
யினும் அவர்கள் நிமித்தம் நீ படும் பிரயாச
6 மெல்லாம் விசுவாசக் கிரியையே. அவர்கள்
உன் அன்பைக்குறித்துச் சபைக்குமுன்
7 சாட்சிசொன்னார்கள்; அவர்கள் புறஜாதியா
ரிடம் ஒன்றும் வாங்காமல், கிறிஸ்துவின்
நாமத்தினிமித்தம் புறப்பட்டுவந்ததால், கட
வுளுக்கு உகந்தபடி நீ அவர்களை வழிவிட்
8 டனுப்புவது நலமாயிருக்கும். ஆகவே,
நாம் சத்தியத்துக்கு உடன் ஊழியராகும்படி
அப்படிப்பட்டவர்களை உபசரிக்கக் கட
மைப்பட்டிருக்கிறோம்.
9 நான் சபைக்குச் சிலவற்றை எழுதி
னேன்; ஆனாலும், அவர்களில் முதன்மையா
யிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை
ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. ஆனபடியால், 10
நான் வருவேனாகில், அவன் எங்களுக்கு
விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளை
அலப்பி, செய்துவருகிற கிரியைகளை நினைப்
பூட்டுவேன். இது போதாதென்று, சகோ
தரரைத் தானே ஏற்றுக்கொள்ளாமலிருக்
கிறதுமன்றி, ஏற்றுக்கொள்ள மனமுடைய
வர்களையும் தடைசெய்து சபைக்குப் புறம்பே
தள்ளுகிறான்.
பிரியமானவனே, நீ தீமையானதைப் 11
பின்பற்றாமல் நன்மையானதைப் பின்பற்று;
நன்மை செய்கிறவன் கடவுளால் உண்டான
வன்; தீமை செய்கிறவன் கடவுளைக் கண்ட
தேயில்லை. தேமேத்திரியு எல்லாராலும் நற் 12
சாட்சி பெற்றதுமல்லாமல் சத்தியத்தாலும்
நற்சாட்சி பெற்றவன்; நாங்களும் சாட்சி
சொல்லுகிறோம், எங்கள் சாட்சி மெய்
யென்று உனக்குத் தெரியும்.
உனக்கு எழுதவேண்டிய காரியங்கள் 13
அநேகம் உண்டு; மையினாலும் இறகினாலும்
எழுத எனக்கு மனமில்லை. சீக்கிரம் உன் 14
னைக் காணலாமென்று எதிர்பார்க்கிறேன்,
அப்பொழுது முகமுகமாய்ப் பேசிக்கொள்
ளுவோம். உனக்குச் சமாதானம்; சிநேகிதர் 15
உன்னை வாழ்த்துகிறார்கள். சிநேகிதரைப்
பேர்பேராக வாழ்த்துவாயாக.

யூதாவின் நிருபம்

இயேசுகிறிஸ்துவின் அடியானும் யாக்
கோபின் சகோதரனுமான யூதா, பிதாவாகிய
கடவுளுக்குப் பிரியரும் இயேசுகிறிஸ்துவுக்
கென்று காக்கப்படுவோருமாகிய அழைக்
2 கப்பட்டவர்களுக்கு எழுதுவதாவது: உங்க
ளுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும்
பெருகக்கடவது.
3 பிரியமானவர்களே, நமக்குப் பொதுவா
யிருக்கிற இரட்சிப்பைப்பற்றி உங்களுக்கு
எழுதுவது என் முழுக்கருத்தாயிருக்கை
யில், பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்
கப்பட்டுத் தீர்ந்த விசுவாச சத்தியத்திற்
காக நீங்கள் உற்சாகமாய்ப் போராட
வேண்டுமென்று எழுதி உங்களைத் தூண்டு
4 வது அவசியமெனக் கண்டேன். சிலர் கள்ள
வழியாய் நுழைந்துவிட்டார்களே; அவர்கள்
இந்த ஆக்கினைக்கென்று பூர்வத்திலேயே
குறிக்கப்பட்டவர்கள், தேவபக்தியற்றவர்கள்,
நம்முடைய கடவுளின் கிருபையைக் காம
விகாரத்துக்கு ஏதுவாகப் புரட்டுகிறவர்கள்,
நம்முடைய ஒரே எஜமானும் ஆண்டவரு
மாகிய இயேசுகிறிஸ்துவை மறுதலிக்கிற
வர்கள்.
5 எல்லாவற்றையும் தீர அறிந்திருக்கும்
உங்களுக்கு ஒன்றை நினைப்பூட்ட விரும்பு
கிறேன். அதாவது: கர்த்தர் தமது ஜனத்தை
எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கின
பின்பே விசுவாசியாதவர்களை அழித்தார்.
6 தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்
கொள்ளாமல் தங்களுக்குரிய வாசஸ்தலத்தை
விட்டுவிட்ட தூதர்களையும் பெரிதான
நாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய
கட்டுகளில் அந்தகாரத்தின்கீழ் அடைத்து
7 வைத்திருக்கிறார். சோதோம் கொமோராவும்
சுற்றுப்புறங்களும் அவர்களைப்போல் விபசா
ரத்தில் மூழ்கி அன்னிய மாம்சத்தை நாடித்
தொடர்ந்ததினாலே, நித்திய அக்கினியாகிய
தண்டனையடைந்து திருஷ்டாந்தமாகக்
8 கிடக்கின்றன. இப்படியிருந்தும், மாயைக்
கனவு காணும் இவர்களும் அவ்வாறே மாம்
சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு, உன்னத
அதிகாரத்தை அசட்டைபண்ணி, மகத்துவங்
9 களைத் தூஷிக்கிறார்கள். பிரதான தூதனா
கிய மிகாவேல் மோசேயின் சரீரத்தைக்குறித்
துப் பிசாசோடு வாதாடிப் பேசினபோது,
அவனைத் தூஷித்துக் குற்றப்படுத்தத் துணி
யாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வா
ராக என்று மாத்திரம் சொன்னானே. இவர் 10
களோ தங்களுக்குத் தெரியாதவற்றைத்
தூஷிக்கிறார்கள்; பகுத்தறிவில்லாத மிரு
கங்கள்போல் இயற்கை அறிவினால் அறிந்து
கொள்ளுகிறவைகளைத் தங்கள் கேட்டுக்கே
கையாளுகிறார்கள். இவர்களுக்கு, ஐயோ, 11
கேடுவரும்! இவர்கள் காயீனுடைய வழியில்
நடந்து பிலேயாமின் வஞ்சகத்தில் கூலிக்
காக விரைந்தோடினார்கள்; கோராவைப்
போல் எதிர்த்து நிற்பதால் அழிந்தார்கள்.
உங்கள் அன்பின் விருந்துகளில் இவர்கள் 12
கறைகள். உங்களோடுகூடப் பயமின்றி
விருந்துண்டு தங்களைத் தாங்களே போஷித்
துக்கொள்ளுகிறவர்கள்; இவர்கள் காற்று
களால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற
மேகங்கள்; இலை உதிர்ந்து கனியற்று
இரண்டுதரஞ் செத்து, வேரோடு பிடுங்
குண்ட மரங்கள்; தங்கள் அவமானங்களை 13
நுரைதள்ளுகிற அமளியான கடல் அலைகள்;
வழிதப்பி அலைகிற நட்சத்திரங்கள்; காரி
ருளே என்றைக்கும் இவர்கள் கதி. ஆதா 14
முக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கு
தனது தீர்க்கதரிசனத்தில் இவர்களையும்
குறித்தான். இதோ, கர்த்தர் இலட்சக்
கணக்கான பரிசுத்தவான்களோடு வந்து
விட்டார்; யாவர்மேலும் தீர்ப்புச்செய்வதற் 15
கும், தேவபக்தியில்லாதவர்கள் யாவரும்
தேவபக்தியின்றிச் செய்த தேவபக்தியில்லாத
சகல கிரியைகளினிமித்தமும் தேவபக்தி
யற்ற பாவிகள் தமக்கு விரோதமாய்ப்
பேசின கடினவார்த்தைகள் யாவற்றினிமித்
தமும் அவர்களைக் குற்றப்படுத்தித் தீர்ப்ப
தற்கும் வந்துவிட்டார் என்றான். இவர்கள் 16
முறையிட்டுக் குறைகூறுகிறவர்கள், தங்கள்
இச்சைகளின்படி நடக்கிறவர்கள், இவர்கள்
வாய் இறுமாப்பானவைகளைப் பேசும்; சுய
ஆதாயத்தின்பொருட்டு முகதாட்சிணியம்
பாராட்டுகிறார்கள்.
நீங்களோ, பிரியமானவர்களே, நம்மு 17
டைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்
அப்போஸ்தலர் முன்சொல்லிய வார்த்தை

18 களை நினைவுகூருங்கள்; தங்கள் துன்மார்க்க
மான இச்சைகளின்படி நடக்கிற பரி
காசக்காரர் கடைசிக்காலத்தில் தோன்று
வார்கள் என்று உங்களுக்குச் சொல்லி வந்
19 தார்களே. இவர்கள் பிரிவினை உண்டு
பண்ணுகிறவர்கள், ஜென்ம சுபாவமுள்ள
20 வர்கள், ஆவியில்லாதவர்கள். நீங்களோ,
பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்த
விசுவாச சத்தியத்தில் ஊன்றி வளர்ந்து,
பரிசுத்த ஆவிக்குள்ளாக ஜெபம்பண்ணி,
21 கடவுளின் அன்பில் உங்களைக் காத்துக்
கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்
முடைய ஆண்டவர் இயேசுகிறிஸ்துவி
னுடைய இரக்கத்தைப்பெற எதிர்நோக்கி
22 யிருங்கள். அன்றியும், சந்தேக நிலைமையி
லிருக்கிற சிலருக்கு இரக்கம்பாராட்டி,
அக்கினியிலிருந்து பறித்திழுப்பதுபோல 23
அவர்களைத் தப்புவித்து இரட்சியுங்கள்.
வேறு சிலருக்கோ பயத்தோடே இரக்கம்
பாராட்டி, மாம்சத்தால் கறைபட்ட வஸ்
திரத்தையும் வெறுத்துவிடுங்கள்.

இடறிவிழாதபடி உங்களைக் காக்கவும், 24
தமது மகிமையுள்ள சன்னிதானத்தில்
உங்களை மாசற்றவர்களாய் மகிழ்ச்சியோடே
நிறுத்தவும் வல்லமையுள்ளவருக்கு, ஒரே 25
கடவுளும் நம்முடைய இரட்சகருமாகிய
அவருக்கே, யுகாரம்பத்தின் முன்னும் இப்
பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்
களிலும் நம்முடைய ஆண்டவராகிய
இயேசுகிறிஸ்துவின் மூலமாய் மகிமையும்
மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும்
இருப்பதாக. ஆமேன்.

யோவானின் தரிசனம்

1 சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளை
இயேசுகிறிஸ்து தம்முடைய அடியாருக்குக்
காட்டும்படி கடவுள் அவருக்கு அருளிய
தரிசனம். இவர் தம் தூதன் மூலமாய்
அனுப்பி, தம்முடைய அடியானாகிய
யோவானுக்கு அவைகளை விளங்கச்செய்தார்.
2 இவனே கடவுளின் வார்த்தையையும்
இயேசுகிறிஸ்துவின் சாட்சியத்தையும்
குறித்து தான் கண்ட யாவற்றையும் சாட்சி
3 யாகக் கூறினான். இந்தத் தீர்க்கதரிசன
வார்த்தைகளை வாசிக்கிறவனும் கேட்கிறவர்
களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்
கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்;
காலம் சமீபம்.
4 ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும்
யோவான் எழுதுவதாவது: இருக்கிறவரும்
இருந்தவரும் வருபவருமானவரிடத்திலிருந்
தும், அவர் சிங்காசனத்தின்முன் இருக்கிற
5 ஏழு ஆவிகளிடத்திலிருந்தும், உண்மை
யுள்ள சாட்சியும் மரித்தோரிலிருந்து முதற்
பிறந்தவரும் பூமியின் ராஜாக்களுக்கு அதி
பதியுமாகிய இயேசுகிறிஸ்துவினிடத்திலிருந்
தும் உங்கக்ளுகுக் கிருபையும் சமாதானமும்
உண்டாவதாக. நம்மில் அன்புகூருகிறவ
ராய்த் தமது இரத்தத்தினால் நமது பாவங்களி
6 லிருந்து நம்மை விடுதலைசெய்து, தம்முடைய
கடவுளும் பிதாவுமாயிருக்கிறவருக்கு நம்மை
ஒரு ராஜ்யமும் ஆசாரியக்கூட்டமுமாக்
கின அவருக்கே மகிமையும் வல்லமையும்
என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமேன்.
7 இதோ, மேகங்களோடு வருகிறார்; கண்கள்
யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தின
வர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின்
கோத்திரத்தாரெல்லாரும் அவர் நிமித்தம்
மாரடித்துப் புலம்புவார்கள். ஆம், ஆமேன்.
8 இருக்கிறவரும் இருந்தவரும் வருபவரு
மான சர்வவல்ல கடவுளாகிய கர்த்தர்:
நானே [1]அல்பா, நானே ஒமேகா என்று
திருவுளம்பற்றுகிறார்.
9 இயேசுவின் உபத்திரவத்திலும் ராஜ்யத்
திலும் பொறுமையிலும் உங்கள் சகோதர
னும் உடன்பங்காளனுமான யோவானாகிய
நான், கடவுள் வார்த்தையினிமித்தமும்
இயேசுவின் சாட்சியத்தினிமித்தமும் பத்மு
என்னும் தீவில் இருக்கலானேன். ஆண்டவ 10
ரின் நாளில் நான் ஆவிக்குள்ளானேன்.
அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காள
சத்தம்போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக்
கேட்டேன். அது: நீ காண்கிறதை ஒரு 11
புஸ்தகத்தில் எழுதி, எபேசு, சிமிர்னா, பெர்
கமு, தியத்தைரா, சர்தை, பிலதெல்பியா,
லவோதிக்கேயா என்னும் ஏழு சபைகளுக்
கும் அனுப்பு என்று விளம்பினது. அப் 12
பொழுது என்னோடு பேசின சத்தத்தைப்
பார்க்கத் திரும்பினேன்; திரும்பவே ஏழு
பொன் விளக்குத் தண்டுகளையும் | அந்த 13
ஏழு தண்டுகளின் மத்தியில் மனுஷகுமார
னைப்போன்ற ஒருவரையும் கண்டேன்; அவர்
நிலையங்கி தரித்து மார்பருகே பொற்கச்சை
கட்டியிருந்தார். அவர் சிரசும் ரோமமும் 14
வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழை
யைப்போலவும் வெண்மையாயிருந்தன;
அவர் கண்கள் அக்கினிஜுவாலையைப்
போலிருந்தன; அவர் பாதங்கள் உலைக்களத் 15
தில் காய்ந்த துலக்கப்பட்ட வெண்கலம்
போலிருந்தன; அவர் சத்தம் பெருவெள்ள
இரைச்சலைப்போலிருந்தது. அவர் வலது 16
கரத்தில் ஏழு நட்சத்திரங்கள் இருந்தன;
இருபுறமும் கருக்குள்ள பட்டயம் அவர்
வாயிலிருந்து வெளிப்பட்டது. அவர் முகம்
வல்லமையோடு பிரகாசிக்கும் சூரியனைப்
போலிருந்தது. நான் அவரைக் கண்ட 17
போது செத்தவன்போல் அவர் பாதத்தில்
விழுந்தேன். அவரோ தமது வலதுகரத்தை
என்மேல் வைத்து: பயப்படாதே, முதலும்
இறுதியுமானவர் நானே, ஜீவனுள்ளவரும் 18
மரித்துப்போனவரும் நானே, இதோ, என்
றென்றைக்கும் ஜீவனுள்ளவராயிருக்கிறேன்.
நானே மரணத்திற்கும் பாதாளத்திற்கு
முரிய திறவுகோல்களையுடையவர். நீ கண் 19
டிருக்கிறவைகளையும், இப்பொழுது இருக்
கிறவைகளையும், இவைகளுக்குப்பின்பு சம்ப
விக்கப்போகிறவைகளையும் எழுது. என் 20
வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்

[1] அல்பாவும் ஒமேகாவும் கிரேக்க பாஷையில் முதலெழுத்தும் கடைசி எழுத்துமாம்.

களின் இரகசியமும், ஏழு பொன் விளக்குத்
தண்டுகளும் என்னவென்றால், நட்சத்தி
ரங்கள் ஏழும் ஏழு சபைகளின் தூதர்க
ளாம்; விளக்குத் தண்டுகள் ஏழும் ஏழு
சபைகளாம்.

2 எபேசு சபையின் தூதனுக்கு இதை
எழுது:
ஏழு நட்சத்திரங்களைத் தமது வலதுகரத்தில்
பிடித்தவராய், ஏழு பொன் விளக்குத் தண்டு
களின் மத்தியில் உலாவுகிறவர் சொல்லுகிற
2 தாவது: உன் கிரியைகளும் உன் உழைப்பும்
உன் பொறுமையும் எனக்குத் தெரியும்.
பொல்லாதவர்களை நீ சகிக்க முடியாதவன்;
அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்
போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ பரீட்
சித்து, அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்
3 தாய். நீ பொறுமையுடையவன்; என்
நாமத்தினிமித்தம் சகித்தவன், சோர்ந்து
4 போகாதவன். ஆனாலும் உன் பேரில் எனக்கு
ஒரு குறையுண்டு: ஆரம்பத்தில் நீ கொண்
5 டிருந்த அன்பை விட்டுவிட்டாய். ஆகை
யால், நீ எந்த நிலைமையிலிருந்து விழுந்திருக்
கிறாயென்பதை நினைத்து மனந்திரும்பி,
ஆரம்பத்தில் செய்தவற்றைச் செய்; இல்லா
விட்டால் நான் உன்னிடம் வந்து, நீ மனந்
திரும்பாதபட்சத்தில் உன் விளக்குத்தண்டை
6 அதன் இடத்தினின்று நீக்கிவிடுவேன். நான்
வெறுக்கிற நிக்கொலாயரின் கிரியைகளை
நீயும் வெறுக்கிறாய், இது நல்லதுதான்.
7 ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிற
தைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜெயங்
கொள்ளுகிறவனுக்குக் கடவுளுடைய பர
திசிலிருக்கும் ஜீவவிருட்சத்தில் புசிக்க அரு
ளுவேன்.
8 சிமிர்னா சபையின் தூதனுக்கு இதை
எழுது:
ஆதியும் அந்தமுமானவர், மரித்து உயிர்த்
9 தெழுந்தவர் சொல்லுகிறதாவது: உன் உபத்
திரவமும், உன் தரித்திரமும் எனக்குத் தெரி
யும், உள்ளபடி நீ ஐசுவரியமுள்ளவன்; தங்
களை யூதரென்று சொல்லிக்கொள்ளுகிறவர்
களுடைய தூஷணம் எனக்குத் தெரியும்.
உள்ளபடி அவர்கள் யூதரல்ல, சாத்தானின்
10 சபை. நீ படப்போகிற பாடுகளுக்குப் பயப்
படாதே. உங்களைப் பரீட்சிக்கும்படி,
பிசாசு உங்களில் சிலரைச் சிறையில் வைக்
கப்போகிறான்; உங்களுக்குப் பத்துநாள்
உபத்திரவம் இருக்கும். மரணபரியந்தம்
உண்மையாயிரு, நான் உனக்கு ஜீவகிரீ
11 டத்தை அருளுவேன். ஆவியானவர் சபை
களுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன்
கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளுகிறவன்
இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதே
யில்லை.
பெர்கமு சபையின் தூதனுக்கு இதை 12
எழுது:
இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை
யுடையவர் சொல்லுகிறதாவது: நீ குடி 13
யிருக்கும் இடம் சாத்தானின் சிங்காசனம்
இருக்கும் இடம் என்று எனக்குத் தெரியும்;
என் நாமத்தில் நீ பற்றுதலாயிருக்கிறாய்.
சாத்தான் குடியிருக்கும் இடத்தில், உங்கள்
மத்தியில் கொலையுண்ட என் உண்மையுள்ள
சாட்சியாகிய அந்திப்பாவின் நாட்களிலுங்
கூட என்மீதுள்ள விசுவாசத்தை நீ மறுத்து
விடவில்லை. ஆகிலும், உன்பேரில் எனக் 14
குச் சில குறைகள் உண்டு; பிலேயா
மின் போதகத்தில் பற்றுதலாயிருக்கிறவர்கள்
உன்னிடம் இருக்கிறார்கள். விக்கிரகங்
களுக்குப் பலியிட்டவைகளைப் புசிப்பதா
லும் வேசித்தனம்பண்ணுவதாலும் இஸ்ர
வேலின் புத்திரர் இடறிவிழும்படி செய்யப்
பாலாக்குக்குப் போதித்தவன் இவனே. இப் 15
படியாக, நிக்கொலாயரின் உபதேசத்தில்
பற்றுதலாயிருக்கிறவர்களும் உன்னிடத்தில்
இருக்கிறார்கள். ஆகையால், நீ மனந் 16
திரும்பு; இல்லாவிட்டால் நான் சீக்கிரம்
உன்னிடம் வந்து என் வாயின் பட்டயத்
தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்.
ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிற 17
தைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.
ஜெயங்கொள்ளுகிறவனுக்கு மறைந்திருக்கும்
மன்னாவைப் புசிக்கக் கொடுப்பேன். மேலும்,
வெண்மையான கல் ஒன்றை அவனுக்குக்
கொடுப்பேன்; அந்தக் கல்லில் ஒரு புது
நாமம் எழுதியிருக்கும்; அந்த நாமத்தைப்
பெறுகிறவனுக்கேயன்றி வேறொருவனுக்கும்
அது தெரியாது.
தியத்தைரா சபையின் தூதனுக்கு இதை 18
எழுது:
அக்கினிஜுவாலைபோன்ற கண்களும்
துலக்கப்பட்ட வெண்கலம்போன்ற பாதங்
களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதா
வது: உன் கிரியைகளும் அன்பும் விசுவாச 19
மும் ஊழியமும் பொறுமையும் எனக்குத்
தெரியும்; நீ முன்பு செய்த கிரியைகளைப்
பார்க்கிலும் பின் செய்த கிரியைகள் அதிகம்.
ஆகிலும் உன்பேரில் எனக்கு ஒரு குறை 20
உண்டு; யேசபேலென்னும் ஸ்திரீக்கு நீ இடங்
கொடுக்கிறாய். அவள் தன்னைத் தீர்க்கதரி
சினி என்று சொல்லிக்கொண்டு, என்
தாசரை வஞ்சித்து, வேசித்தனஞ்செய்யவும்
விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்

21 கவும் அவர்களுக்குப் போதிக்கிறாள். மனந்
திரும்பும்படி அவளுக்குக் காலம் கொடுத்
தேன்; தன் வேசிமார்க்கத்தைவிட்டு மனந்
22 திரும்ப அவளுக்கு விருப்பமில்லை. நான்
அவளைக் கட்டில்கிடையாய்க் கிடக்கச் செய்
வேன்; அவளோடு விபசாரஞ்செய்கிறவர்கள்
அவளுடைய கிரியைகளைவிட்டு மனந்
திரும்பாவிட்டால், அவர்களையும் மிகுந்த
23 உபத்திரவத்துக்குட்படுத்துவேன். அவள்
பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்.
உள்ளங்களையும் இருதயங்களையும் ஆராய்
கிறவர் நானே என்று அப்பொழுது எல்
லாச் சபைகளும் அறிந்துகொள்ளும்.
அன்றியும், உங்களில் ஒவ்வொருவனுக்கும்
உங்கள் செய்கைகளுக்குத்தக்கபடியே பல
24 னளிப்பேன். தியத்தைராவிலிருக்கிற மற்ற
வர்களாகிய உங்களுக்கு, அதாவது, இந்த
உபதேசத்தை அங்கீகரியாமலும் சாத்தா
னின் ஆழங்களென்று சொல்லப்படுவதை
அறியாமலுமிருக்கிற உங்களுக்கு நான்
சொல்லுகிறதாவது: உங்கள்மேல் வேறொரு
25 பாரத்தையும் சுமத்தமாட்டேன்; நான் வரும்
வரைக்கும் உங்களுக்குள்ளதைப் பற்றிக்
26 கொண்டேயிருங்கள். நான் என் பிதாவி
னிடமிருந்து பெற்றுக்கொண்டதுபோல,
ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரி
யைகளைக் கைக்கொள்ளுகிறவன் எவனோ
அவனுக்கு ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்
27 பேன்; இருப்புக்கோலால் அவன் அவர்களை
மேய்த்து நடத்துவான்; மண் பாண்டங்கள்
போல் அவர்கள் நொறுக்கப்படுவார்கள்.
28 விடிவெள்ளியையும் அவனுக்குக் கொடுப்
29 பேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லு
கிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

3 சர்தை சபையின் தூதனுக்கு இதை
எழுது:
கடவுளின் ஏழு ஆவிகளையும் ஏழு
நட்சத்திரங்களையுமுடையவர் சொல்லுகிற
தாவது: உன் கிரியைகள் எனக்குத்
தெரியும்; உயிருள்ளவனென்று நீ பெயர்
2 கொண்டிருந்தும் நீ செத்தவன். நீ விழித்
திருந்து சாகுந்தருவாயிலிருக்கிற மீந்தவை
களை ஸ்திரப்படுத்திவிடு. உன் கிரியைகள்
என் கடவுளுக்குமுன் பூரணப்பட்டிருக்க
3 நான் கண்டதில்லை. ஆகையால், நீ பெற்
றுக்கொண்டதையும் கேட்டறிந்ததையும்
நினைவுகூர்ந்து, அவற்றைக் கைக்கொண்டு
மனந்திரும்பு. நீ விழித்திராவிட்டால் திருட
னைப்போல் வருவேன்; உனக்கு விரோத
மாய் நான் வரும் வேளையை நீ அறியாய்.
4 ஆனாலும், தங்கள் வஸ்திரங்களைக் கறைப்
படுத்தாத சிலபேர் சர்தையில் உனக்குண்டு;
வெண்வஸ்திரந்தரித்து அவர்கள் என்னோடு
உலாவுவார்கள்; அவர்கள் அதற்கு ஏற்ற
வர். ஜெயங்கொள்ளுகிறவன் இவ்விதமாய் 5
வெண்வஸ்திரந்தரித்தவன் ஆவான். ஜீவ
புஸ்தகத்திலிருந்து அவன் நாமத்தை நான்
கிறுக்கிப்போடவேமாட்டேன். என் பிதா
முன்பாகவும் அவர் தூதர் முன்பாகவும்
அவன் நாமத்தை அறிக்கைபண்ணுவேன்.
ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிற 6
தைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.
பிலதெல்பியா சபையின் தூதனுக்கு 7
இதை எழுது:
பரிசுத்தரும், உண்மையுள்ளவரும், தாவீ
தின் திறவுகோலையுடையவரும், எவனும்
பூட்டாதபடி திறக்கிறவரும் எவனும் திறவா
தபடி பூட்டுகிறவருமானவர் சொல்லுகிறதா
வது: உன் கிரியைகள் எனக்குத் தெரியும். 8
உனக்கு முன்பாக வாசலைத் திறந்துவைத்
திருக்கிறேன்; அதை ஒருவனும் பூட்டமுடி
யாது. உனக்குக் கொஞ்சம் பலமுண்டு,
நீ என் வார்த்தையைக் கைக்கொண்டாய்,
என் நாமத்தை மறுதலிக்கவில்லை. யூதரல்லா 9
திருந்தும் தங்களை யூதரென்று பொய்யாய்ச்
சொல்லுகிறவர்களும் சாத்தான் சபையைச்
சேர்ந்தவர்களுமாகிய சிலரை வரச்செய்
வேன். அவர்கள் வந்து உன் பாதங்களில்
பணியவும், நான் உன்மேல் அன்புகூர்ந்
தேன் என்பதை அறிந்துகொள்ளவும் செய்
வேன். என் பொறுமையைப்பற்றிய வார்த் 10
தையை நீ காத்துக்கொண்டபடியினால், பூமி
யில் குடியிருக்கிறவர்களைப் பரீட்சிக்கும்படி
யாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்
போகிற பரீட்சை வேளைக்கு நான் உன்னைத்
தப்புவித்துக் காத்துக்கொள்ளுவேன். சீக் 11
கிரம் வருகிறேன். ஒருவனும் உன் கிரீ
டத்தை எடுத்துக்கொள்ளாதபடி உனக்குள்
ளதைப் பற்றிக்கொண்டிரு. ஜெயங்கொள் 12
ளுகிறவனை என் கடவுளின் ஆலயத்தில்
தூணாக்குவேன்; அதினின்று அவன் ஒரு
காலும் நீங்கவே நீங்கான். என் கடவுளின்
நாமத்தையும் என் கடவுளுடைய நகரத்தின்
நாமத்தையும், அதாவது, என் கடவுளிட
மிருந்து வானத்தினின்று இறங்குகிறதாகிய
புதிய எருசலேமின் நாமத்தையும், என்
புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.
ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிற 13
தைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.
லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு 14
இதை எழுது:
நம்பத்தக்க மெய்ச்சாட்சியும் கடவுள்
சிருஷ்டிப்புக்கு ஆதியுமான ஆமேன் என்

15 பவர் சொல்லுகிறதாவது: உன் கிரியைகள்
எனக்குத் தெரியும், நீ குளிருமல்ல அனலு
மல்ல; நீ குளிராயாவது அனலாயாவது
16 இருந்தால் நலமாயிருக்கும். இப்படி, நீ
அனலுமின்றிக் குளிருமின்றி வெதுவெதுப்
பாயிருக்கிறதினால் உன்னை என் வாயினின்று
17 வாந்திபண்ணிப்போடுவேன். நீயோ: நான்
ஐசுவரியவான், ஐசுவரியம் சேர்த்துக்
கொண்டவன், எனக்கு ஒரு குறைவுமில்லை
என்று சொல்லுகிறாய்! உள்ளபடி நீ நிர்ப்
பந்தமானவன், பரிதபிக்கப்படத்தக்கவன்,
தரித்திரன், குருடன், நிர்வாணி; இது உனக்
18 குத் தெரியவில்லை. ஆகையால், நீ ஐசுவரிய
வானாகும்படி, நெருப்பில் புடமிட்ட பொன்
னையும் உன் நிர்வாணமாகிய அவலட்சணம்
தோன்றாதபடி உடுத்திக்கொள்வதற்குவெண்
வஸ்திரங்களையும் என்னிடத்தில் வாங்கிக்
கொள்ளவும், நீ பார்வையடையும்படி உன்
கண்களுக்குக் கலிக்கம்போடவும் உனக்கு
19 ஆலோசனை சொல்லுகிறேன். நான் நேசிக்
கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்து
கொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ
20 வைராக்கியமாயிருந்து மனந்திரும்பு. இதோ,
வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒரு
வன் என் சத்தத்தைக் கேட்டுக் கதவைத்
திறப்பானாகில் அவனிடம் உள்ளே வரு
வேன்; நான் அவனோடு போஜனம்பண்ணு
வேன், அவனும் என்னோடு போஜனம்
21 பண்ணுவான். நான் ஜெயங்கொண்டு என்
பிதாவோடு அவர் சிங்காசனத்தில் உட்கார்ந்
ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனும் என்
னோடு என் சிங்காசனத்தில் உட்காரும்படி
22 அருள்செய்வேன். ஆவியானவர் சபைக
ளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன்
கேட்கக்கடவன்.

4 இவைகளுக்குப்பின் நான் பார்க்கவே,
பரலோகத்தில் ஒரு வாசல் திறந்திருந்தது.
மேலும், எக்காள சத்தம்போல என்னுடனே
பேச நான் முதலில் கேட்ட சத்தமானது:
இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு
நேரிடவேண்டியவைகளை உனக்குக் காண்
2 பிப்பேன் என்று சொன்னது. உடனே நான்
ஆவிக்குள்ளானேன். வானத்தில் ஒரு சிங்
காசனம் வைத்திருந்தது, சிங்காசனத்தின்
3 மேல் ஒருவர் வீற்றிருந்தார். வீற்றிருந்தவர்,
பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்
துக்கும் ஒப்பாயிருந்தார். சிங்காசனத்தைச்
சுற்றி ஒரு வானவில் இருந்தது; அது பார்
4 வைக்கு மரகதத்துக்கு ஒப்பாயிருந்தது. அந்
தச் சிங்காசனத்தைச்சுற்றி இருபத்துநான்கு
சிங்காசனங்கள் இருந்தன. இருபத்துநான்கு
சிங்காசனங்களில் இருபத்துநான்கு மூப்பர்
உட்கார்ந்திருந்தார்கள் இவர்கள் வெண்வஸ்
திரம் தரித்தவர்கள், தங்கள் தலைகளில் பொற்
கிரீடம் சூடியவர்கள். சிங்காசனத்திலிருந்து 5
மின்னல்களும் சத்தங்களும் இடிமுழக்கங்
களும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன.
சிங்காசனத்தின்முன் ஏழு தீவட்டிகள்
எரிந்துகொண்டிருக்கின்றன; அவைகள்
கடவுளின் ஏழு ஆவிகள். அந்தச் சிங்கா 6
சனத்தின்முன், பளிங்குக்கொப்பான கண்
ணாடிக் கடல்போன்றதொன்று இருந்தது;
சிங்காசனத்தின் மத்தியிலும் சிங்காசனத்
தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்கள் இருந்
தன; அவைகள் முன்புறமும் பின்புறமும்
கண்கள் நிறைந்தவை. முதலாம் ஜீவன் 7
சிங்கம் போன்றது, இரண்டாம் ஜீவன்
இளங்காளை போன்றது, மூன்றும் ஜீவன்
மனுஷமுகம் போன்ற முகமுடையது, நான்
காம் ஜீவன் பறக்கும் கழுகு போன்றது.
நான்கு ஜீவன்களும் அவ்வாறு சிறகுகளுள் 8
ளவை; சுற்றும் உட்புறமும் கண்கள்
நிறைந்தவை. அவைகள்:

சர்வவல்ல கடவுளாகிய கர்த்தர்
பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்,
அவர் இருந்தவர், இருக்கிறவர், வருபவர்

என்று இராப்பகல் ஓய்வின்றிச் சொல்லிக்
கொண்டிருக்கின்றன. சிங்காசனத்தில் வீற்றி 9
ருந்து என்றென்றைக்கும் ஜீவிப்பவருக்கு
அந்த ஜீவன்கள் மகிமையையும் கனத்தை
யும் நன்றியையும் செலுத்தும்போதெல்லாம்,
இருபத்துநான்கு மூப்பரும் சிங்காசனத்தில் 10
வீற்றிருக்கிறவருக்குமுன் சாஷ்டாங்கமாய்
விழுந்து, என்றென்றைக்கும் ஜீவிப்பவரைத்
தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களைச்
சிங்காசனத்தின்முன் வைத்து:

எங்கள் கர்த்தரே, எங்கள் கடவுளே, 11
மகிமையையும் கனத்தையும்
வல்லமையையும் பெறத் தேவரீர் ஏற்ற
வர்,
நீரே யாவற்றையும் படைத்தீர்,
உமது சித்தத்தினாலே அவை இருந்தன,
அவை படைக்கப்பட்டன

என்பார்கள்.

சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவரின் வலது **5**
கரத்தில் ஒரு புஸ்தகத்தைக் கண்டேன்,
அதில் உட்புறமும் பின்புறமும் எழுதியிருந்
தது. அதற்கு ஏழு முத்திரைகளிடப்பட்
டிருந்தன. வல்லமையுள்ள தேவதூதன் 2
ஒருவனையும் கண்டேன்; அவன் உரத்த சத்த
மிட்டு: புஸ்தகத்தை விரிக்கவும் அதன்
முத்திரைகளை உடைக்கவும் ஏற்றவன் யார்

3 என்று கூறினன். புஸ்தகத்தை விரிக்கவும்
அதைப் பார்க்கவும் கூடியவன் வானத்திலா
வது பூமியிலாவது பூமியின் கீழாவது ஒரு
4 வனுமில்லை. புஸ்தகத்தை விரிக்கவும் அதைப்
பார்க்கவும் ஒருவரும் ஏற்றவராகக் காணப்
படவில்லையே என்று நான் மிகவும் அழு
5 தேன். அழவே, மூப்பரில் ஒருவன் என்
னைப்பார்த்து: அழாதே, புஸ்தகத்தை விரிக்
கவும் அதன் ஏழு முத்திரைகளையும் உடைக்
கவும், தாவீதின் வேர் என்கிற யூதா கோத்
திரச் சிங்கமானவர் ஜெயங்கொண்டிருக்
6 கிறார் என்றான். அன்றியும், சிங்காசனத்
திற்கும் நான்கு ஜீவன்களுக்கும் மூப்பர்
களுக்கும் மத்தியிலே ஒரு ஆட்டுக்குட்டி நிற்
கக்கண்டேன்; அது அடிக்கப்பட்டிருந்தது
போல் காணப்பட்டது. அதற்கு ஏழு
கொம்புகளும் ஏழு கண்களுமிருந்தன;
அந்தக் கண்கள் கடவுளின் ஏழு ஆவிக
ளாம், அவை பூமியெங்கும் அனுப்பப்படும்.
7 அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்கா
சனத்தில் வீற்றிருந்தவரின் வலதுகரத்தி
லிருந்து அந்தப் புஸ்தகத்தை எடுத்தார்.
8 அதை அவர் எடுத்தபோது, நான்கு ஜீவன்
களும் இருபத்துநான்கு மூப்பரும் ஒவ்
வொருவரும் சுரமண்டலத்தையும் பரிசுத்த
வான்களின் ஜெபங்களாகிய தூபவர்க்கங்கள்
நிறைந்த பொற்கலசங்களையும் உடையவர்
களாய் ஆட்டுக்குட்டியின்முன் சாஷ்டாங்க
மாய் விழுந்து:

9 புஸ்தகத்தை எடுக்கவும் அதன் முத்திரை
களை உடைக்கவும்
தேவரீரே ஏற்றவர்.
நீர் கொல்லப்பட்டீர்,
ஒவ்வொரு கோத்திரத்திலும் பாஷை
யிலும் ஜனத்திலும் ஜாதியிலுமிருந்து
உமது இரத்தத்தினால் கடவுளுக்கென்று
அடியாரை மீட்டுக்கொண்டீர்;
10 அவர்களை நம் கடவுளுக்கு ராஜ்யமும்
ஆசாரியக்கூட்டமுமாக்கினீர்;
அவர்கள் பூமியில் அரசாளுவார்கள்
11 என்ற புதுப்பாட்டைப் பாடுகிறார்கள். இன்
னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தை
யும் ஜீவன்களையும் மூப்பரையும் சுற்றிலும்
அநேக தூதரின் சத்தத்தைக் கேட்டேன்;
அவர்கள் தொகை கோடானகோடி, ஆயிர
12 மாயிரம். அவர்கள் மகா சத்தமிட்டு:
வல்லமையையும் ஐசுவரியத்தையும்
ஞானத்தையும் பலத்தையும் கனத்தையும்
மகிமையையும் துதியையும் பெறுவதற்கு,
அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்
ஏற்றவர்
என்று சொல்லிவருகிறார்கள். வானத்திலும் 13
பூமியிலும் பூமியின்கீழும் சமுத்திரத்திலு
முள்ள சர்வ சிருஷ்டியும், அவைகளிலிருக்
கிற சகலமும்:
சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருக்கும்
ஆட்டுக்குட்டியானவருக்கும்
துதியும் கனமும் மகிமையும் வல்லமையும்
என்றென்றைக்கும் இருப்பதாக
என்று சொல்லக்கேட்டேன். நான்கு ஜீவன் 14
களும் ஆமேன் என்றன; மூப்பர் சாஷ்
டாங்கமாய் விழுந்து தொழுதுகொண்
டார்கள்.

ஏழு முத்திரைகளில் ஒன்றை ஆட்டுக் 6
குட்டியானவர் உடைக்கக் கண்டேன்;
அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று:
வா என்று இடிமுழக்கம்போல் சத்தமிட்டுச்
சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, 2
ஒரு வெண்ணிறமான குதிரை காணப்பட்
டது; அதன்மேல் ஏறியிருந்தவன் வில்லைப்
பிடித்துக்கொண்டிருந்தான்; அவனுக்கு ஒரு
கிரீடம் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்
கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்
டான்.

இரண்டாம் முத்திரையை அவர் உடைத்த 3
போது, இரண்டாம் ஜீவன்: வா என்று
சொல்லக்கேட்டேன். அப்பொழுது செந் 4
நிறமான வேறொரு குதிரை புறப்பட்டது;
மனுஷர் ஒருவரையொருவர் கொன்றுபோ
டும்படி சமாதானத்தைப் பூமியிலிருந்து
எடுத்துவிட அதன்மேல் ஏறியிருந்தவனுக்கு
அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய
பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்
டது.

மூன்றாம் முத்திரையை அவர் உடைத்த 5
போது, மூன்றாம் ஜீவன்: வா என்று சொல்
லக்கேட்டேன். நான் பார்த்தபோது, ஒரு
கறுப்புக்குதிரை காணப்பட்டது; அதன்
மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன்
கையில் பிடித்துக்கொண்டிருந்தான். அப் 6
பொழுது: ஒரு [1]திநாரியத்துக்கு ஒரு படி
கோதுமை, ஒரு திநாரியத்துக்கு மூன்று படி
வாற்கோதுமை; எண்ணெயையும் திராட்ச
ரசத்தையும் சேதப்படுத்தாதே என்று சொல்
லுகிற சத்தம்போன்றதொன்று நான்கு
ஜீவன்களின் மத்தியில் உண்டாகக் கேட்
டேன்.

---

[1] மத். 18: 28 பார்க்க.

7 நான்காம் முத்திரையை அவர் உடைத்த
போது, நான்காம் ஜீவன்: வா என்று சொல்லு
8 கிற சத்தத்தைக் கேட்டேன். நான் பார்த்த
போது, மங்கின நிறமான ஒரு குதிரை
காணப்பட்டது; அதன்மேல் ஏறியிருந்தவ
னுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம்
அவனோடு வந்தது. பட்டயத்தினாலும் பஞ்
சத்தினாலும் சாவினாலும் பூமியின் துஷ்ட
மிருகங்களினாலும் கொல்லுவதற்கு, பூமி
யில் காற்பங்கின்மேல் அவைகளுக்கு அதிகா
ரம் கொடுக்கப்பட்டது.

9 ஐந்தாம் முத்திரையை அவர் உடைத்த
போது, கடவுளின் வார்த்தையினிமித்தமும்
தாங்கள் பற்றிக்கொண்டிருந்த சாட்சியத்தி
னிமித்தமும் கொல்லப்பட்டவர்களின் ஆத்
துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன்.
10 அவர்கள் மிகுந்த சத்தமிட்டு: பரிசுத்தமும்
உண்மையுமுள்ள ஆண்டவரே, எதுவரைக்
கும் நியாயந்தீர்க்காமலும், பூமியில் குடி
யிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தப்
பழியை வாங்காமலும் இருப்பீர் என்று
11 கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்களில்
ஒவ்வொருவருக்கும் வெள்ளையங்கி கொடுக்
கப்பட்டது; அன்றியும், அவர்களைப்போல்
கொல்லப்படவேண்டியவர்களாகிய அவர்கள்
உடன்ஊழியரும் சகோதரருமானவர்களின்
தொகை நிறைவாகுமளவும் இன்னும் கொஞ்
சக்காலம் இளைப்பாறவேண்டுமென்று அவர்
களுக்குச் சொல்லப்பட்டது.

12 ஆறாம் முத்திரையை அவர் உடைக்கவே,
நான் பார்த்தபோது, பெரிய பூமியதிர்ச்சி
உண்டாயிற்று. சூரியன் கறுப்பு இரட்
டைப்போல் கறுத்தது; சந்திரன் முழுதும்
13 இரத்தம்போலாயிற்று. பெருங் காற்றினால்
அசையும் அத்திமரத்தின் காய்கள் உதிர்வது
போல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமி
14 யிலே விழுந்தன. வானமும் புஸ்தகச் சுருள்
போல் சுருண்டு மறைந்தது. ஒவ்வொரு மலை
யும் தீவும் நிலைபெயருமாறு அசைக்கப்பட்
15 டது. பூமியின் ராஜாக்கள், பிரபுக்கள்,
சேனைத்தலைவர், தனவான்கள், பலவான்கள்
முதலியோரும், அடிமைகள் சுயாதீனர் யாவ
ரும், குகைகளிலும் மலைப்பாறைகளுக்குள்
16 ளும் ஒளித்துக்கொண்டு, மலைகளையும் பாறை
களையும் பார்த்து: எங்கள்மேல் விழுந்து,
சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருடைய முகத்
திற்கும் ஆட்டுக்குட்டியின் கோபத்திற்கும்
மறைவாக எங்களை மறைத்துவிடுங்கள்.
17 அவர்கள் கோபாக்கினையின் பெரிதான நாள்
வந்துவிட்டதே; நிலைநிற்கக்கூடியவன் யார்
என்கிறார்கள்.

இதற்குப்பின், பூமியின் நான்கு திசை 7
களிலும் நான்கு தேவதூதர் நிற்கக்கண்
டேன். பூமியின்மேலாவது சமுத்திரத்தின்
மேலாவது ஒரு மரத்தின்மேலாவது காற்
றடியாதபடி பூமியின் நான்கு காற்றுகளை
யும் அவர்கள் பிடித்துவைத்திருந்தார்கள்.
வேறொரு தூதன் ஜீவனுள்ள கடவுளின் 2
முத்திரையை வைத்துக்கொண்டு, சூரியன்
உதிக்கும் திசையினின்று ஏறிவரக் கண்
டேன். பூமியையும் சமுத்திரத்தையும்
சேதப்படுத்த அதிகாரம்பெற்ற அந்த நான்கு
தூதரையும் அவன் பார்த்து: நம் கடவு 3
ளுடைய அடியாரின் நெற்றிகளில் நாங்கள்
முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும்
சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்
தாதேயுங்களென்று மகா சத்தமிட்டுக் கூப்
பிட்டான். முத்திரைபோடப்பட்டவர்களின் 4
தொகையைச் சொல்லக்கேட்டேன். இஸ்ர
வேல் புத்திரரின் சகல கோத்திரங்களிலும்
முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து
நாற்பத்து நாலாயிரம் பேர்.

யூதா கோத்திரத்தில் முத்திரை போடப் 5
பட்டவர்கள் பன்னீராயிரம்,
ரூபன் கோத்திரத்தில் பன்னீராயிரம்,
காத் கோத்திரத்தில் பன்னீராயிரம்,
ஆசேர் கோத்திரத்தில் பன்னீராயிரம், 6
நப்தலி கோத்திரத்தில் பன்னீராயிரம்,
மனாசே கோத்திரத்தில் பன்னீராயிரம்,
சிமியோன் கோத்திரத்தில் பன்னீராயிரம், 7
லேவி கோத்திரத்தில் பன்னீராயிரம்,
இசக்கார் கோத்திரத்தில் பன்னீராயிரம்,
செபுலோன் கோத்திரத்தில் பன்னீராயிரம், 8
யோசேப்பு கோத்திரத்தில் பன்னீராயிரம்,
பென்யமீன் கோத்திரத்தில் பன்னீராயிரம்.

இவைகளுக்குப்பின்பு நான் பார்த்த 9
போது, ஒருவனும் எண்ணமுடியாத திர
ளான ஜனக்கூட்டம் காணப்பட்டது.
இவர்கள் சகல ஜாதிகளிலும் கோத்திரங்களி
லும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து
வந்தவர்கள். இவர்கள் வெள்ளை அங்கி
களைத் தரித்துக் கைகளில் குருத்தோலைகளைப்
பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்
டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நின்று
கொண்டிருந்தார்கள். அவர்கள் மகா சத்த 10
மிட்டு:

சிங்காசனத்தில் வீற்றிருக்கிற நம்முடைய
கடவுளுக்கும்
ஆட்டுக்குட்டியானவருக்கும் ஜெயமங்க
லம்

என்று ஆர்ப்பரித்தார்கள். ஆர்ப்பரிக்கவே, 11
தூதர் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்
களையும் நான்கு ஜீவன்களையும் சூழ்ந்து

நின்று, சிங்காசனத்தின்முன் சாஷ்டாங்க
மாய் விழுந்து, கடவுளைத் தொழுதுகொண்டு:
12 ஆமேன்,
துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திர
மும்
கனமும் வல்லமையும் பலமும்
எங்கள் கடவுளுக்கு என்றென்றைக்கும்
இருப்பதாக, ஆமேன்
13 என்றார்கள். அப்பொழுது மூப்பரில் ஒரு
வன் என்னைப் பார்த்து: வெள்ளை அங்கிகளைத்
தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கிருந்து
14 வந்தார்கள் என்று கேட்க, | நான்: என்
ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்
றேன். அப்பொழுது அவன் என்னிடம்:
இவர்கள் பெரிதான உபத்திரவத்திலிருந்து
வந்தவர்கள்; தங்கள் அங்கிகளை ஆட்டுக்
குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து
15 வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள்
கடவுளின் சிங்காசனத்திற்குமுன் இருந்து,
இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே
அவரை ஆராதிக்கிறார்கள்; சிங்காசனத்தில்
வீற்றிருக்கிறவர் இவர்கள்மேல் நிழலிடுவார்.
16 இனி இவர்களுக்குப் பசியிருப்பதுமில்லை,
தாகமிருப்பதுமில்லை; இனி இவர்கள்மேல்
வெயில் படாது, எவ்வித உஷ்ணமும்
17 படாது; சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற
ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து,
ஜீவதண்ணீருள்ள ஊற்றுக்களண்டைக்கு
இவர்களை வழிநடத்துவார். கடவுள் தாமே
இவர்கள் கண்களிலிருந்து கண்ணீர் யாவை
யும் துடைப்பார் என்றான்.

8 ஏழாம் முத்திரையை அவர் உடைத்த
போது, ஏறக்குறைய அரைமணி நேரமளவும்
பரலோகத்தில் அமைதல் உண்டாயிருந்தது.
2 பின்பு, கடவுளுக்குமுன் நிற்கும் ஏழு தூதர்
களையும் கண்டேன். அவர்களுக்கு ஏழு
எக்காளங்கள் கொடுக்கப்பட்டன.
3 வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்
டும் பொற்கலசத்தைப் பிடித்துக்கொண்டு
பலிபீடத்தினண்டையில் நின்றான். சிங்கா
சனத்திற்குமுன் இருந்த பொற்பீடத்தின்
மேல் சகல பரிசுத்தவான்களின் ஜெபங்க
ளோடுங்கூட அவன் செலுத்தும்படி மிகுதி
யான தூபவர்க்கங்கள் அவனுக்குக் கொடுக்
4 கப்பட்டன. அப்படியே பரிசுத்தவான்
களின் ஜெபங்களோடு சேர்ந்த தூபவர்க்கங்
களின் புகை தூதனுடைய கையிலிருந்து
5 கடவுளுக்கு முன்பாக எழும்பிற்று. பின்பு,
அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து,
அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி,
பூமியில் கொட்டினான். கொட்டவே, இடி
முழக்கங்களும் சத்தங்களும் மின்னல்களும்
பூமியதிர்ச்சியும் உண்டாயின.
அப்பொழுது, ஏழு எக்காளங்களையு 6
முடைய ஏழு தூதர்களும் எக்காளம் ஊத
ஆயத்தம்பண்ணிக்கொண்டார்கள்.
முதலாம் தூதன் ஊதவே, இரத்தங்கலந்த 7
கல்மழையும் அக்கினியும் பூமியிலே கொட்
டுண்டன; பூமியில் மூன்றில் ஒரு பங்கு
வெந்துபோயிற்று, மரங்களில் மூன்றில் ஒரு
பங்கு வெந்துபோயிற்று, பசும்புல்லெல்லாம்
வெந்துபோயிற்று.
இரண்டாம் தூதன் ஊதவே, அக்கினி 8
ஜுவாலிக்கிற பெரிய மலைபோன்றதொன்று
சமுத்திரத்தில் எறியுண்டது; சமுத்திரத்தில்
மூன்றில் ஒரு பங்கு இரத்தமாயிற்று. சமுத் 9
திரத்திலிருந்த ஜீவஜெந்துக்களில் மூன்றில்
ஒரு பங்கு செத்துப்போயிற்று; மூன்றில் ஒரு
பங்குக் கப்பல்களும் சேதமாயின.
மூன்றாம் தூதன் ஊதவே, பெரிய நட்சத் 10
திரம் ஒன்று பந்தம்போல் எரிந்து வானத்தி
லிருந்து விழுந்தது; ஆறுகளில் மூன்றில் ஒரு
பங்கின்மேலும் நீரூற்றுக்களின்மேலும் அது
விழுந்தது. அந்த நட்சத்திரத்திற்கு எட்டி 11
என்று பெயர். தண்ணீரில் மூன்றில் ஒரு
பங்கு எட்டிபோல் கசப்பாயிற்று; தண்ணீர்
கசந்ததினால் மனுஷரில் அநேகர் செத்
தார்கள்.
நான்காம் தூதன் ஊதவே, சூரிய சந்திர 12
நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கு அடி
பட்டது; அதனால் மூன்றில் ஒரு பங்கு இரு
ளாயிற்று, பகலில் மூன்றில் ஒரு பங்கு ஒளி
யற்றுப்போயிற்று, இரவிலும் அப்படியே
ஆயிற்று.
பின்னும் நான் பார்த்தபோது, நடுவானத் 13
தில் கழுகு ஒன்று பறந்து மிகுந்த சத்தமிட்
டதைக் கேட்டேன். மீந்திருக்கும் மூன்று
தூதரும் எக்காளங்களை ஊதப்போகி
றார்கள்; பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு
ஐயோ, ஐயோ, ஐயோ, ஆபத்து என்றது.

ஐந்தாம் தூதன் ஊதவே, வானத்திலிருந்து 9
பூமியின்மேல் விழுந்துகிடந்த நட்சத்திரம்
ஒன்றைக் கண்டேன்; பாதாளக் குழியின்
திறவுகோல் அவனுக்குக் கொடுக்கப்பட்
டது. அவன் பாதாளக் குழியைத் திறந்து 2
வைத்தான்; திறக்கவே, பெருஞ்சூளையின்
புகைபோன்ற புகை அந்தக் குழியிலிருந்து
எழும்பிற்று; சூரியனும் ஆகாயமும் அந்தக்
குழியின் புகையினால் அந்தகாரப்பட்டன.
அந்தப் புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் 3
கிளம்பிப் பூமியின்மேல் வந்தன. பூமியி
லுள்ள தேள்களுக்குரிய வல்லமைபோன்ற

வல்லமை அவைகளுக்குக் கொடுக்கப்பட்
4 டது. தங்கள் நெற்றிகளில் கடவுளின்
முத்திரையில்லாத மனுஷரையேயன்றி, பூமி
யின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்
டையும் எந்த மரத்தையும் சேதப்படுத்தக்
கூடாது என்று அவைகளுக்குக் கூறப்பட்
5 டது. மேலும், அவர்களைக் கொல்லக்கூடாது
என்றும், ஐந்து மாதம்ளவும் அவர்களை
வேதனைப்படுத்தலாம் என்றும் அவைக
ளுக்கு விதிக்கப்பட்டது. அவைகளால்
உண்டாகும் வேதனை தேள் மனுஷனைக்
6 கொட்டும் வேதனையைப்போலிருக்கும். அந்
நாட்களில் மனுஷர் மரணத்தைத் தேடு
வார்கள், தேடியும் அவர்கள் அதைக் காண்
பதேயில்லை; சாக விரும்புவார்கள், சாவோ
7 அவர்களை விட்டு ஓடிப்போம். பார்வைக்கு
அந்த வெட்டுக்கிளிகள்யுத்தத்திற்குஆயத்தம்
பண்ணப்பட்ட குதிரைகள்போல் இருந்தன;
அவற்றின் தலைகள்மேல் பொன்மயமான கிரீ
டங்கள்போன்றவை இருந்தன; அவைகளின்
முகங்கள் மனுஷர் முகங்களைப்போலிருந்
8 தன. அவைகளின் கூந்தல் ஸ்திரீகளின்
கூந்தல்போலிருந்தது; அவற்றின் பற்கள்
9 சிங்கங்களின் பற்கள்போலிருந்தன. இருப்
புக் கவசங்களைப்போன்ற மார்க்கவசங்கள்
அவைகளுக்கு இருந்தன. அவைகள் சிறகு
களின் இரைச்சல் யுத்தத்திற்கு ஓடுகிற
அநேக குதிரைகள் பூட்டிய இரதங்களின்
10 இரைச்சலுக்கு ஒப்பாயிருந்தது. அவைகள்
தேள்களைப்போல வால்களையும் கொடுக்கு
களையுமுடையவை. ஐந்து மாதமளவும்
மனுஷரைச் சேதப்படுத்தும் வல்லமை
11 அவைகள் வால்களிலிருந்தது. பாதாளக்
குழியின் தூதன் அவற்றுக்கு அரசன்; எபி
ரேயபாஷையில் [1]அபத்தோன் என்றும்,
கிரேக்கு பாஷையில் [2]அப்பொல்லியோன்
என்றும் அவனுக்குப் பேர்.

12 முதல் ஆபத்து கடந்துபோயிற்று; இவை
களுக்குப்பின்பு, இன்னும் இரண்டு ஆபத்
துகள் வரும்.

13 ஆறும் தூதன் ஊதவே, கடவுள் முன்
னிருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்பு
களிலுமிருந்து உண்டான ஒரு சத்தம் கேட்
14 டேன். ஐபிராத்து என்னும் பெரிய நதியண்
டையில் கட்டப்பட்டிருக்கிற நான்கு தூத
ரையும் அவிழ்த்துவிடு என்று எக்காளம்
பிடித்திருந்த ஆறும் தூதனுக்கு அது
15 உரைத்தது. அப்படியே மனுஷரில் மூன்றில்
ஒரு பங்கைக் கொல்லும்படி, அதே வருஷத்
திற்கும் அதே மாதத்திற்கும் அதே நாளுக்கும்
அதே நாழிகைக்கும் ஆயத்தம்பண்ணப்பட்
டிருந்த அந்த நான்கு தூதர்களும் கட்ட
விழ்த்து விடப்பட்டார்கள். குதிரைச் சேனை 16
யின் தொகை இருபது கோடி; அவை
களின் தொகையைச் சொல்லக் கேட்டேன்.
குதிரைகளையும் அவைகளின்மேல் ஏறியிருந் 17
தவர்களையும் தரிசனத்தில் பின்வருமாறு கண்
டேன்: அவர்கள் அணிந்திருந்த மார்க்கவ
சங்கள் அக்கினி இந்திரநீலம் கந்தகமயமான
வைகள். குதிரைகளின் தலைகள் சிங்கத்
தலைகள் போன்றவை; அவற்றின் வாய்களி
லிருந்து அக்கினியும் புகையும் கந்தகமும்
வெளிப்பட்டன. அவற்றின் வாய்களி 18
லிருந்து வெளிப்பட்ட அக்கினி, புகை, கந்த
கம் ஆகிய இம்மூன்று வாதைகளினாலும்
மூன்றில் ஒரு பங்கு மனுஷர் கொல்லப்பட்
டார்கள். அந்தக் குதிரைகளின் வல்லமை 19
அவற்றின் வாயிலும் வால்களிலும் இருக்கும்;
அவற்றின் வால்கள் பாம்புகளையொத்தவை,
அவற்றிற்குத் தலைகள் உண்டு. அவைகள்
அந்தத் தலைகளினாலேதான் சேதப்படுத்தும்.
இவ்வாதைகளால் கொல்லப்படாத மற்ற 20
மனுஷர், தங்கள் கைகளின் கிரியைகளை
விட்டு நீங்கும்படி மனந்திரும்பவுமில்லை;
பேய்களையும், பொன் வெள்ளி செம்பு கல்
மரம் முதலியவற்றால் செய்யப்பட்ட விக்
கிரகங்களையும் வணங்காமல் விடவுமில்லை;
அந்த விக்கிரகங்களோ காணவும் கேட்கவும்
நடக்கவும் சக்தியற்றவை. அவர்கள் தங்கள் 21
கொலைபாதகங்களையாவது, மாந்திரியங்களை
யாவது, வேசிமார்க்கத்தையாவது, களவுகளை
யாவது விட்டு மனந்திரும்பவுமில்லை.

பின்பு வல்லமையுள்ள வேறொரு தூதன் **10**
வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்.
மேகமே அவனுக்கு ஆடை; அவன் சிரசின்
மேல் வானவில்; அவன் முகம் சூரியன்
போன்றது; அவன் கால்கள் அக்கினி ஸ்தம்
பங்கள்போன்றன. விரிக்கப்பட்ட ஒரு 2
சிறு புஸ்தகத்தை அவன் தன் கையில்
வைத்திருந்தான். அவன் தன் வலதுபாதத்
தைச் சமுத்திரத்தின்மேலும் தன் இடது
பாதத்தைப் பூமியின்மேலும் வைத்து, சிங் 3
கம் கெர்ச்சிப்பதுபோல மகா சத்தமாய்க்
கூப்பிட்டான். அவன் கூப்பிடவே, ஏழு
இடிகளும் சத்தமிட்டு முழங்கின. அவ் 4
வேழு இடிகளின் சத்தமும் முழங்கின
போது, நான் எழுதவேண்டுமென்றிருந்
தேன். அப்பொழுது: ஏழு இடிகள் முழங்கி
உரைத்ததை முத்திரைபோட்டுவிடு, எழுத

[1] சங்காரம். [2] சங்காரக்காரன்.

வேண்டாம் என்ற சத்தம் ஒன்று வானத்தி
5 லிருந்து உண்டாகக் கேட்டேன். சமுத்தி
ரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிறதாக
நான் கண்ட தூதன் தன் வலதுகையை
6 வானத்திற்கு நேராக உயர்த்தி, என்றென்
றைக்கும் ஜீவிப்பவரும், வானத்தையும் அதி
லுள்ளவற்றையும் பூமியையும் அதிலுள்ள
வற்றையும் சமுத்திரத்தையும் அதிலுள்ள
வற்றையும் படைத்தவருமான கடவுள்மேல்
7 ஆணையிட்டு: இனித் தாமதமிராது; கடவுள்
தம்முடைய அடியாராகிய தீர்க்கதரிசிக
ளுக்கு நற்செய்தியாகக் கூறியபடியே, ஏழாம்
தூதனுடைய சத்தத்தின் நாட்களில், அவன்
தன் எக்காளத்தை ஊதும் தருணத்தில்
கடவுளின் இரகசியம் நிறைவேறித் தீரும்
8 என்றான். வானத்திலிருந்து நான் கேட்ட
சத்தம் மறுபடியும் என்னோடு பேசி: நீ
போய், சமுத்திரத்தின்மேலும் பூமியின்
மேலும் நிற்கிற தூதனுடைய கையில்
விரித்திருக்கும் சிறு புஸ்தகத்தை வாங்கிக்
9 கொள் என்று சொல்ல, நான் தூதனிடம்
போய்: அந்தச் சிறு புஸ்தகத்தை எனக்குத்
தாரும் என்றேன். அதற்கு அவன்: நீ
இதை வாங்கித் தின்றுவிடு; இது உன்
வயிற்றிலே கசக்கும், உன் வாயிலோ தேனைப்
போல் தித்திக்கும் என்றான்.

10 நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதன்
கையிலிருந்து வாங்கி அதைத் தின்று
விட்டேன். என் வாய்க்கு அது தேனைப்
போல் தித்திப்பாயிருந்தது; நான் அதைத்
தின்றபோதோ என் வயிறு கசப்பாயிற்று.
11 அப்போது: அநேக ஜனங்களையும் ஜாதிகளையும்
பாஷைக்காரரையும் ராஜாக்களையும் குறித்து
நீ மறுபடியும் தீர்க்கதரிசனஞ் சொல்ல
வேண்டுமென்று எனக்கு உரைக்கப்பட்டது.

11 பின்பு, ஊன்றுகோல்போன்ற ஒரு
நாணற்கோல் என்னிடம் கொடுக்கப்பட்
டது. அப்பொழுது: நீ எழுந்து கடவுளின்
ஆலயத்தையும் பலிபீடத்தையும் அதில்
தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்து
2 விடு; ஆலயத்திற்கு வெளியே இருக்கிற பிரா
காரத்தை விட்டுவிடு, அதை அளக்காதே;
அது புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டதே.
பரிசுத்த நகரத்தை அவர்கள் நாற்பத்திரண்டு
3 மாதமளவும் மிதிப்பார்கள். என் இரண்டு
சாட்சிகளை நான் ஏற்படுத்துவேன்; அவர்கள்
இரட்டுடுத்தி, ஆயிரத்து இருநூற்று அறுபது
நாளளவும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்.
4 பூலோகத்தின் ஆண்டவர் சமுகத்தில் நிற்கிற
இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்
5 குத் தண்டுகளும் இவர்களே. ஒருவன்
அவர்களைச் சேதப்படுத்த விரும்பினால்,
அவர்கள் வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு,
அவர்கள் சத்துருக்களைப் பட்சித்துவிடும்.
அவர்களைச் சேதப்படுத்த விரும்புகிறவன்
எவனோ அவன் அப்படியே கொல்லப்
படவேண்டும். அவர்கள் தீர்க்கதரிசனஞ் 6
சொல்லும் நாட்களிலே மழை பெய்யாத
படிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு
அதிகாரம் உண்டு. தண்ணீரை இரத்தமாக
மாற்றவும், தாங்கள் விரும்பும்போதெல்லாம்
பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்
கவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.
அவர்கள் தங்கள் சாட்சியத்தைச் சொல்லி 7
முடிக்கும்போதோ பாதாளக்குழியிலிருந்து
ஏறிவரும் மிருகமானது அவர்களோடு யுத்
தஞ்செய்து அவர்களை ஜெயித்துக் கொன்று
விடும். அவர்கள் சவங்கள் மகாநகரத்தின் 8
வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம்
என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச்
சொல்லப்படும்; அவர்களுடைய ஆண்ட
வர் சிலுவையில் அறையப்பட்டதும் அவ்
விடத்திலேயே. ஜனங்கள், கோத்திரங்கள், 9
பாஷைக்காரர், புறஜாதியார் இவர்களில்
பலர் மூன்றரைநாள்வரைக்கும் அவர்கள்
சவங்களைப் பார்ப்பார்கள்; அவர்கள் சவங்
களைக் கல்லறைகளில் வைக்கவொட்
டார்கள். பூமியில் குடியிருக்கிறவர்கள் 10
அவர்கள் நிமித்தம் களிகூர்ந்து சந்தோ
ஷங்கொண்டாடி, ஒருவருக்கொருவர் வெகு
மதிகளை அனுப்புவார்கள். அவ்விரண்டு
தீர்க்கதரிசிகளும் பூமியில் குடியிருக்கிறவர்
களை வேதனைப்படுத்தியிருந்தார்களே. அந்த 11
மூன்றரை நாளுக்குப்பின்பு கடவுளிடத்தி
லிருந்து ஒரு ஜீவ ஆவி அவர்களுக்குட்
சென்றது; அவர்கள் காலூன்றி நின்றார்கள்.
அவர்களைப் பார்த்தவர்களை மிகுந்த பயம்
பிடித்தது. இங்கே ஏறி வாருங்கள் என்று 12
வானத்திலிருந்து உண்டான பெரிய சத்தம்
ஒன்றை அவ்விருவரும் கேட்டார்கள்.
அவர்கள் மேகத்தில் ஏறி வானத்திற்குப்
போனார்கள்; அவர்கள் சத்துருக்கள் அவர்
களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந் 13
நேரத்தில் பூமி மிகவும் அதிர்ந்தது. நகரத்
தில் பத்தில் ஒரு பங்கு இடிந்து விழுந்தது;
மனுஷரில் ஏழாயிரம்பேர் பூமியதிர்ச்சி
யினால் மடிந்தார்கள்; மீதியானவர்கள் பய
மடைந்து பரலோகத்தின் கடவுளுக்கு
மகிமை செலுத்தினார்கள்.

இரண்டாம் ஆபத்து கடந்துபோயிற்று, 14
மூன்றும் ஆபத்து சீக்கிரம் வருகிறது.

ஏழாம் தூதன் ஊதவே, வானத்தில் 15
பெரிய சத்தங்கள் உண்டாயின:

உலகத்தின் அரசாட்சி
நம்முடைய கர்த்தருக்கும் அவர் கிறிஸ்துவுக்கும் உரியதாயிற்று,
அவர் என்றென்றைக்கும் அரசாளுவார்
16 என்றன. அப்பொழுது, கடவுளுக்குமுன்
தங்கள் சிங்காசனங்களில் உட்கார்ந்திருந்த
இருபத்துநான்கு மூப்பரும், முகங்குப்புற
விழுந்து:
17 இருக்கிறவரும் இருந்தவருமான
சர்வவல்ல கடவுளாகிய கர்த்தாவே,
உமக்கு நன்றிசெலுத்துகிறேம்;
தேவரீர் உமது மகா வல்லமையை வகித்துக்கொண்டு
ராஜ்யபாரம்பண்ணத் தொடங்கியிருக்கிறீர்.
18 புறஜாதிகள் கோபங்கொண்டார்கள்,
உமது கோபமும் வெளிப்பட்டது.
மரித்தோரை நியாயந்தீர்க்கிறதற்கும்,
தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய அடியாருக்கும் பரிசுத்தவான்களுக்கும்
உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருக்கிற சிறியோர் பெரியோருக்கும் பலன் அளிக்கிறதற்கும்,
பூமியைக் கெடுக்கிறவர்களைக் கெடுக்கிறதற்கும்
காலம் வந்துவிட்டதே
என்று சொல்லிக் கடவுளைத் தொழுது
கொண்டார்கள்.
19 அப்பொழுது பரலோகத்திலுள்ள கடவு
ளின் ஆலயம் திறக்கப்பட்டது. அவருடைய
ஆலயத்தில் அவர் உடன்படிக்கைப்பெட்ட
கம் காணப்பட்டது. மின்னல்களும் சத்தங்
களும் இடிமுழக்கங்களும் பூமியதிர்ச்சியும்
பெருங் கல்மழையும் உண்டாயின.

12 பெரிய அடையாளம் ஒன்று வானத்தில்
காணப்பட்டது; அதென்னவெனில் சூரி
யனை அணிந்த ஒரு ஸ்திரீ. அவள் பாதங்
களின்கீழ் சந்திரன், அவள் சிரசின்மேல்
பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடம்.
2 அவள் கர்ப்பவதியாயிருந்து பிரசவவேதனைப்
பட்டு, பேறுகால வருத்தத்தால் அலறினள்.
3 வேறொரு அடையாளமும் வானத்தில்
காணப்பட்டது: இதோ, அக்கினிமயமான
பெரிய வலுசர்ப்பம். அது ஏழு தலைகளும்
பத்துக்கொம்புகளும் தலைகளின்மேல் ஏழு
4 முடிகளும் உடையது. அதன் வால் வானத்
தின் நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கை
இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்
தள்ளிற்று; பிரசவிக்கப்போகிற ஸ்திரீயின்
முன் அந்த வலுசர்ப்பம் நின்று, அவள் பிரச
வித்தவுடனே அவள் பிள்ளையை விழுங்கி
விடக் காத்துக்கொண்டிருந்தது. அவளுக்கு 5
ஒரு ஆண்பிள்ளை பிறந்தது; அந்த ஆண்
பிள்ளை சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால்
மேய்த்து நடத்தப்போகிறவர். அவள்
பிள்ளை கடவுளிடத்திற்கும் அவருடைய சிங்
காசனத்தினிடத்திற்கும் விரைவில் எடுத்துக்
கொள்ளப்பட்டது. ஸ்திரீயோ வனாந்தரத் 6
திற்கு ஓடிவிட்டாள்; ஆயிரத்து இருநூற்று
அறுபது நாளளவும் அவளைப் போஷித்துக்
காப்பாற்றும்படி கடவுள் ஆயத்தஞ்செய்
திருந்த இடம் அங்கே அவளுக்கு இருந்தது.
மேலும், வானத்தில் யுத்தம் உண்டா 7
யிற்று; மிகாவேலும் அவன் தூதரும் வலு
சர்ப்பத்தோடு யுத்தம்பண்ணினார்கள். வலு
சர்ப்பமும் அதன் தூதரும் யுத்தம்பண்ணி
யும், | ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் 8
இவர்களுக்கு இடம் இல்லாமற்போயிற்று.
பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் 9
எறியுண்டது; அதற்குப் பிசாசு என்றும்
சாத்தான் என்றும் பேர் வழங்கும். உலக
மனைத்தையும் வஞ்சிப்பது அதுவே. அந்தச்
சர்ப்பம் பூமியில் எறியுண்டது; அதன் தூதர்
களும் அதனோடு எறியுண்டன. அப் 10
பொழுது வானத்தில் உண்டான ஒரு பெரிய
சத்தங்கேட்டேன்:
நம்முடைய கடவுளுக்குரிய ஜெயமும்
வல்லமையும் ராஜ்யமும்,
அவருடைய கிறிஸ்துவுக்குரிய அதிகாரமும் இப்பொழுது வந்தாயிற்று.
நம் சகோதரர்மேல் குற்றஞ்சாட்டினவன் எறியுண்டான்;
கடவுளின் சன்னிதானத்தில் நம் சகோதரர்மேல்
இவன் இரவும் பகலும் குற்றஞ்சாட்டுகிறவன்.
மரணம் வருவதாயிருந்தாலும் 11
தங்கள் உயிரைப் பொருட்டாக மதியாதவர்களாய்,
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைக் கொண்டும்
தங்கள் சாட்சியத்தின் வசனத்தைக் கொண்டும்
அவர்கள் அவனை ஜெயித்தார்கள்.
வானங்களே, அவற்றில் தங்குகிறவர்களே, 12
இதினிமித்தம் களிகூருங்கள்.
பூமிக்கும் சமுத்திரத்திற்கும், ஐயோ, ஆபத்து வரும்,
பிசாசு தனக்குக் கொஞ்சக்காலம் மாத்திரம் உண்டென்றறிந்து,
மிகுந்த கோபங்கொண்டவனாய் உங்களிடத்தில் இறங்கிவிட்டானே
என்றது.

13 வலுசர்ப்பம் தான் பூமியில் எறியுண்ட
தைக் கண்டு, ஆண்பிள்ளை பெற்ற ஸ்திரீ
14 யைப் பிடிக்கத் தொடர்ந்தது. வனாந்தரத்தி
லுள்ள தன் இடத்திற்கு அந்த ஸ்திரீ
பறந்துபோகும்படி, பெருங் கழுகின்
இரண்டு சிறகுகள் அவளுக்குக் கொடுக்கப்
பட்டன. அங்கே அவள் அந்தப் பாம்
புக்கு மறைவாக ஒரு காலமும் காலங்க
ளும் அரைக்காலமும் பராமரிக்கப்படுவாள்.
15 அப்பொழுது, அந்த ஸ்திரீயை வெள்ளம்
அடித்துக்கொண்டுபோகும்படி, பாம்பு தன்
வாயிலிருந்து நதிபோன்ற வெள்ளத்தை
16 அவள் பின்னே கக்கிவிட்டது. பூமியோ
ஸ்திரீக்கு உதவிசெய்து, தன் வாயைத்திறந்து,
வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து கக்கின
17 வெள்ளத்தை உறிஞ்சிவிட்டது. அப்பொ
ழுது வலுசர்ப்பம் ஸ்திரீயின்மேல் கோபங்
கொண்டு, கடவுளின் கற்பனைகளைக் கைக்
கொள்ளுகிறவர்களும் இயேசுவின் சாட்சி
யத்தைப் பற்றிக்கொள்ளுகிறவர்களுமாகிய
அவள் சந்ததியாரில் மீதியானவர்களோடு
18 யுத்தம்பண்ணப்போயிற்று. அது கடற்கரை
மணலின்மேல் நின்றது.

13 சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி
வரக் கண்டேன்; அதற்குப் பத்து கொம்பு
களும் ஏழு தலைகளும் இருந்தன, அதன்
கொம்புகள்மேல் பத்து முடிகளும் அதன்
தலைகள்மேல் தூஷண நாமங்களும் இருந்
2 தன. நான் கண்ட மிருகம் சிவிங்கியைப்போ
லிருந்தது; அதன் கால்கள் கரடியின் கால்
களைப்போலவும் அதன் வாய் சிங்கத்தின்
வாயைப்போலவும் இருந்தன; வலுசர்ப்பம்
தன் வல்லமையையும் தன் சிங்காசனத்தை
யும் பெரிய அதிகாரத்தையும் அதற்குக்
3 கொடுத்தது. அதன் தலைகளில் ஒன்று
மரணத்துக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக்
கண்டேன். மரணத்துக்கேதுவான அந்தக்
காயமோ ஆறிச்சொஸ்தமடைந்தது. உலகம்
முழுவதும் ஆச்சரியப்பட்டு மிருகத்தின்பின்
4 சென்றதுமல்லாமல், அந்த மிருகத்திற்கு
அதிகாரத்தைக் கொடுத்ததினிமித்தம் அந்த
வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். மிருகத்
திற்கு ஒப்பானவன் யார், அதனோடு யுத்தம்
பண்ண வல்லவன் யார் என்று சொல்லி
5 மிருகத்தையும் வணங்கினார்கள். பெருமை
யானவைகளையும் தூஷணங்களையும் பேசும்
வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லா
மலும், நாற்பத்திரண்டு மாதமளவும் தன்
இஷ்டப்படி செய்ய அதற்கு அதிகாரம்
6 கொடுக்கப்பட்டது. அது கடவுளுக்கு
விரோதமாய்த் தூஷணங்களைச் சொல்லவும்,
அவர் நாமத்தையும், அவர் கூடாரத்தையும்,
அதாவது, பரலோகக் கூடாரத்திலிருக்கிறவர்
களையும் தூஷிக்கவும் தன் வாயைத் திறந்தது.
மேலும், பரிசுத்தவான்களோடு யுத்தம் 7
பண்ணி அவர்களை ஜெயிக்க அது இடம்
பெற்றதுமல்லாமல், சகல கோத்திரங்கள்
மேலும் ஜனங்கள் மேலும் பாஷைக்காரர்
மேலும் ஜாதிகள்மேலும் அதிகாரமும் பெற்
றது. பூமியில் குடியிருக்கிறவர்கள் யாவரும், 8
அதாவது, உலகத்தோற்றமுதல் அடிக்கப்
பட்ட ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்த
கத்தில் பேரெழுதப்பட்டிராதவர்கள் யாவரும்
அதை வணங்குவார்கள். ஒருவனுக்குக் காது 9
இருந்தால் அவன் கேட்கக்கடவன். ஒருவன் 10
சிறையிருப்புக்குரியவனானால் சிறைப்
பட்டுப்போவான்; ஒருவன் பட்டயத்தினால்
கொல்லுவானானால் அவன் பட்டயத்தினாலே
கொல்லப்படவேண்டும். பரிசுத்தவான்களின்
பொறுமையும் விசுவாசமும் இதிலேதான்
விளங்கும்.

பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து 11
எழும்பிவரக் கண்டேன். ஆட்டுக்குட்டி
யின் கொம்புகளைப்போன்ற இரண்டு கொம்
புகள் அதற்கு இருந்தன. அது வலுசர்ப்
பத்தைப்போல் பேசினது. முதலாம் மிரு 12
கம் அதற்குக் கொடுத்த அதிகாரம் முழு
வதையும் அது அதன்முன்பாகச் செலுத்து
கிறது. மரணத்துக்கேதுவான காயம் ஆறிச்
சொஸ்தமடைந்த முதலாம் மிருகத்தைப்
பூமியும் அதன் குடிகளும் வணங்கும்படி
அது செய்கிறது. அன்றியும், மனுஷர் 13
காண வானத்திலிருந்து பூமியின்மேல் அக்
கினி இறங்கத்தக்கதாக, அது பெரிய அடை
யாளங்களைச் செய்கிறது. பட்டயத்தினால் 14
காயப்பட்டும் பிழைத்திருந்த மிருகத்திற்கு
ஒப்பான ஒரு சொரூபம் பண்ணவேண்டு
மென்று பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு
அது சொல்லி, மிருகத்தின்முன் செய்யும்படி
தனக்கு அளிக்கப்பட்ட அடையாளங்களைக்
கொண்டு பூமியில் குடியிருக்கிறவர்களை வஞ்
சிக்கிறது. அம்மிருகத்தின் சொரூபம் பேச 15
வும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத
எவரையும் கொல்லும்படி செய்யவும், மிரு
கத்தின் சொரூபத்திற்கு உயிர் கொடுக்கும்படி
அதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. சிறி 16
யோர் பெரியோர் தனவந்தர் தரித்திரர் சுயா
தீனர் அடிமைகள் யாவரும் தங்கள் தங்கள்
வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு
முத்திரையைப் பெறும்படியாகவும், அதைப் 17
பெற்றுக்கொள்ளாதவன் எவனும் கொள்ள
வும் விற்கவும் முடியாமற்போகும்படியாக
வும் செய்கிறது. இந்த முத்திரை அந்த மிரு

கத்தின் நாமம், அல்லது அதன் நாமத்தின்
18 இலக்கமேயாம். இதிலேதான் ஞானம் விளங்
கும்; விவேகமுள்ளவன் மிருகத்தின் இலக்
கத்தைக் கணித்துப்பார்ப்பானாக. அது ஒரு
மனிதனின் இலக்கம்; அதன் இலக்கம் அறு
நூற்று அறுபத்து ஆறு.

14 பின்னும் நான் பார்த்தபோது, சீயோன்
மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவர் நின்று
கொண்டிருந்தார். அவரோடு இலட்சத்து
நாற்பத்து நாலாயிரம்பேர் இருந்தார்கள்.
இவர்கள் நெற்றிகளில் அவர் நாமமும் அவர்
பிதாவின் நாமமும் எழுதப்பட்டிருந்தன.
2 அநேக தண்ணீர்களின் இரைச்சலையும்
பலத்த இடிமுழக்கத்தையும்போன்ற சத்தம்
வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன்.
நான் கேட்ட சத்தம் சுரமண்டலக்காரர்
தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற ஓசை
3 யைப் போலிருந்தது. அவர்கள் சிங்காச
னத்திற்கு முன்பாகவும் நான்கு ஜீவன்களுக்
கும் மூப்பர்களுக்கும் முன்பாகவும் புதுப்
பாட்டைப் பாடினார்கள்; பூமியிலிருந்து கிர
யத்துக்குக் கொள்ளப்பட்ட இலட்சத்து
நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல்
வேறொருவரும் அந்தப் பாட்டைக் கற்றுக்
4 கொள்ள முடியாதிருந்தது. இவர்கள் ஸ்திரீ
களால் தங்களைக் கறைப்படுத்தாதவர்கள்;
இவர்கள் விரத்தரே. இவர்கள் ஆட்டுக்
குட்டியானவர் போகுமிடமெல்லாம் அவ
ரைப் பின்பற்றுகிறவர்கள், கடவுளுக்கும்
ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக
மனுஷரிலிருந்து கிரயத்துக்குக் கொள்ளப்
5 பட்டவர்கள். இவர்கள் வாயிலே பொய்
காணப்படவில்லை; இவர்கள் மாசற்றவர்கள்.
6 பின்பு, வேறொரு தூதன் நடுவானத்தில்
பறக்கக்கண்டேன்; பூமியில் குடியிருக்கிற
ஜாதிகள் கோத்திரத்தார் பாஷைக்காரர்
ஜனங்கள் யாவருக்கும் அறிவிக்கும்படி நித்
திய சுவிசேஷம் அவனிடத்திலிருந்தது.
7 அவன் மிகுந்த சத்தமிட்டு: கடவுளுக்குப்
பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள்;
அவர் நியாயத்தீர்ப்புச்செய்யும் வேளை வந்து
விட்டது. வானத்தையும் பூமியையும்
சமுத்திரத்தையும் நீரூற்றுக்களையும் உண்
டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்கள்
என்று கூறினான்.
8 இரண்டாம் தூதன் ஒருவன் அவனுக்
குப்பின் வந்து: விழுந்தது! விழுந்தது!
மகா பாபிலோன் விழுந்தது! தன் வேசித்
தனமாகிய உக்கிர மதுவைச் சகல ஜாதி
களுக்கும் குடிக்கக் கொடுத்தாளே என்
றான்.

மூன்றாம் தூதன் ஒருவன் அவர்களுக்குப் 9
பின் வந்து மிகுந்த சத்தமிட்டு: ஒருவன்
மிருகத்தையும் அதன் சொரூபத்தையும்
வணங்கி, தன் நெற்றியிலாவது தன் கையி
லாவது அதன் முத்திரையைப் பெற்றுக்
கொள்வானானால், அவன் கடவுளின் உக்கிர 10
மாகிய மதுவைக் குடிப்பான்; அது கடவு
ளின் கோபாக்கினைப் பாத்திரத்தில் கலப்பில்
லாமல் வார்க்கப்பட்டது. அவன் பரிசுத்த
தூதர்கள் முன்னும் ஆட்டுக்குட்டியானவர்
முன்னும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும்
வாதிக்கப்படுவான். அவர்கள் வாதையின் 11
புகை என்றென்றைக்கும் எழும்பும்; மிருகத்
தையும் அதன் சொரூபத்தையும் வணங்கு
கிறவர்களுக்கும், அதனுடைய நாமத்தின்
முத்திரையைப் பெற்றுக்கொள்ளுகிறவன்
எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதல்
இராது. கடவுளின் கற்பனைகளையும் இயேசு 12
வைப்பற்றும் விசுவாசத்தையும் காத்துக்
கொள்ளுகிற பரிசுத்தவான்களின் பொறுமை
இதிலேதான் விளங்கும் என்று கூறினான்.
பின்பு, வானத்திலிருந்து ஒரு சத்தம் 13
உண்டாகக்கேட்டேன்; அது: ஆண்டவருக்
குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கிய
வான்கள் என்றெழுது; ஆம், அவர்கள்
தங்கள் உழைப்பினின்று இளைப்பாறு
வார்கள், அவர்களுடைய கிரியைகள் அவர்
களோடு கூடப்போகுமென்று ஆவியான
வரும் சொல்லுகிறார் என்றது.
பின்னும் நான் பார்த்தபோது, வெண்மை 14
யான மேகம் காணப்பட்டது. அந்த மேகத்
தின்மேல் மனுஷகுமாரனுக்கொப்பான ஒரு
வர் உட்கார்ந்திருந்தார்; அவர் சிரசின்மேல்
பொற்கிரீடமும், அவர் கையில் கருக்குள்ள
அரிவாளும் இருந்தன. அப்பொழுது 15
வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து
வெளிப்பட்டான். மேகத்தின்மேல் உட்
கார்ந்திருந்தவரை அவன் பார்த்து மிகுந்த
சத்தமிட்டு: உமது அரிவாளை நீட்டி
அறுத்துவிடும்; அறுக்கிறதற்குக் காலம்
வந்தது; பூமியின் விளைச்சல் முதிர்ந்தது
என்றான். அப்பொழுது மேகத்தின்மேல் 16
உட்கார்ந்தவர் தமது அரிவாளைப் பூமியின்
மேல் நீட்டினார்; பூமி அறுவடையாயிற்று.
வேறொரு தூதன் பரலோகத்திலுள்ள 17
தேவாலயத்திலிருந்து வெளிப்பட்டான்;
அவனிடமும் கருக்குள்ள அரிவாள் இருந்
தது. இன்னும் ஒரு தூதன் பலிபீடத்தி 18
லிருந்து வெளிப்பட்டான்; இவன் அக்கினி
யின்மேல் அதிகாரமுடையவன். கருக்குள்ள
அரிவாளையுடையவனை இவன் பார்த்து
மிகுந்த சத்தமிட்டு: கருக்குள்ள உமது

அரிவாளை நீட்டி, பூமியின் திராட்சக்குலை
களை அறுத்துவிடும். அதன் பழங்கள்
பழுத்துவிட்டன என்று கூப்பிட்டுச் சொன்
19 னான். அப்பொழுது அந்தத் தூதன் தன்
அரிவாளைப் பூமியின்மேல் நீட்டி, பூமியின்
திராட்சக்குலைகளை அறுத்து, கடவுளுடைய
கோபாக்கினையின் பெரிய ஆலையில் இட்
20 டான். நகரத்திற்கு வெளியே ஆலை மிதிக்
கப்பட்டது; அந்த ஆலையிலிருந்து ஆயிரத்து
அறுநூறு [1]ஸ்தாதி தூரமளவும் குதிரை
களின் கடிவாள உயரமாக இரத்தம் பெரு
கிற்று.

15 பின்பு, பெரிதும் ஆச்சரியமுமான
வேறொரு அடையாளத்தை வானத்தில் கண்
டேன்; அது ஏழு வாதைகளையுடைய ஏழு
தூதரே. இவைகள் கடைசி வாதைகள்.
இவற்றோடே கடவுளின் கோபாக்கினை
முற்றுப்பெறும்.
2 அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக்
கடல்போன்றதொன்றைக் கண்டேன். மிரு
கத்திற்கும் அதன் சொரூபத்திற்கும் அதன்
நாம இலக்கத்திற்கும் தப்பி ஜெயங்கொண்ட
வர்கள் கடவுளின் சுரமண்டலங்களைப் பிடித்
தவர்களாய் அந்தக் கண்ணாடிக்கடலருகே
3 நின்றுகொண்டிருந்தார்கள். இவர்கள் கட
வுளின் அடியானாகிய மோசேயின் பாடலை
யும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலையும்
பாடி:

சர்வவல்ல கடவுளாகிய கர்த்தாவே,
தேவரீரின் கிரியைகள் மகத்துவமா
னவை, ஆச்சரியமானவை.
ஜாதிகளின் ராஜாவே,
உமது வழிகள் நியாயமானவை, உண்
மையானவை.
4 கர்த்தாவே,
உமக்குப் பயப்படாமலிருப்பவர் யார்?
உமது நாமத்தை மகிமைப்படுத்தாம
லிருப்பவர் யார்?
தேவரீர் ஒருவரே பரிசுத்தர்.
சகல ஜாதிகளும் வந்து உமக்குமுன்
பணிவார்கள்.
உமது நீதிநியாயங்கள் பகிரங்கமாயின

என்றார்கள்.
5 இவைகளுக்குப்பின்பு நான் பார்த்த
போது, பரலோகத்தில் சாட்சியக் கூடாரமா
6 கிய ஆலயம் திறக்கப்பட்டது. அந்த ஆல
யத்திலிருந்து ஏழு வாதைகளையுடைய அவ்
வேழு தூதரும் சுத்தமும் பிரகாசமுமான
வஸ்திரந்தரித்தவர்களாயும், மார்பில் பொற்
கச்சை கட்டினவர்களாயும் வெளிப்பட்
டார்கள். அந்த நான்கு ஜீவன்களில் ஒன்று 7
என்றென்றைக்கும் ஜீவிக்கும் கடவுளின்
கோபாக்கினை நிறைந்த ஏழு பொற்கலசங்
களை அந்த ஏழு தூதர்களுக்கும் கொடுத்
தது. அப்பொழுது கடவுளின் மகிமையா 8
லும் வல்லமையாலும் உண்டான புகை
தேவாலயத்தை நிரப்பிற்று; ஏழு தூதரின்
ஏழு வாதைகளும் நிறைவேறித் தீருமளவும்,
எவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்க முடி
யாதிருந்தது.

அப்பொழுது: நீங்கள் போய், கடவுளின் **16**
கோபாக்கினை நிறைந்த ஏழு கலசங்களையும்
பூமியில் ஊற்றிவிடுங்கள் என்று அந்த ஏழு
தூதருக்கும் சொல்லுகிற பெரிய சத்தம்
தேவாலயத்திலிருந்து உண்டாகக் கேட்
டேன்.
முதலாம் தூதன் போய்த் தன் கலசத் 2
தைப் பூமியின்மேல் ஊற்றவே, மிருகத்தின்
முத்திரையைத்தரித்து அதன் சொரூபத்தை
வணங்கும் மனுஷருக்குப் பொல்லாத
கொடிய புண் உண்டாயிற்று.
இரண்டாம் தூதன் தன் கலசத்தைச் 3
சமுத்திரத்தில் ஊற்றவே, அது செத்தவன்
இரத்தம்போன்ற இரத்தமாயிற்று. சமுத்தி
ரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டன.
மூன்றாம் தூதன் தன் கலசத்தை ஆறுகளி 4
லும் நீரூற்றுக்களிலும் ஊற்றவே, அவைகள்
இரத்தமாயின. அப்பொழுது தண்ணீர் 5
களின் தூதன்: இருக்கிறவரே, இருந்தவரே,
பரிசுத்தரே, தேவரீர் இப்படி நியாயந்தீர்த்து
உமது நீதியை விளங்கச் செய்தீர்; பரிசுத்த 6
வான்கள் இரத்தத்தையும் தீர்க்கதரிசிகள்
இரத்தத்தையும் அவர்கள் சிந்தினபடியால்
இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக்
கொடுத்தீர்; அவர்களுக்கு ஏற்றது அதுதா
னென்று சொல்லக்கேட்டேன். அப்பொழுது 7
பலிபீடம்: ஆம், சர்வவல்ல கடவுளாகிய
கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் உண்
மையும் நீதியுமானவை என்று சொல்லக்
கேட்டேன்.
நான்காம் தூதன் தன் கலசத்தைச் சூரி 8
யன்மேல் ஊற்றவே, தீயினால் மனுஷரைத்
தகிக்கும்படி அதற்கு உத்தரவளிக்கப்பட்
டது. அப்பொழுது மனுஷர் மிகுந்த உஷ் 9
ணத்தினால் தகிக்கப்பட்டு, இந்த வாதை
களின்மேல் அதிகாரமுள்ள கடவுளின் நாமத்
தைத் தூஷித்தார்களேயல்லாமல், அவருக்கு
மகிமை செலுத்தும்படி மனந்திரும்பவில்லை.

---

1 ஸ்தாதி = சுமார் 200 கெஜம்.

10 ஐந்தாம் தூதன் தன் கலசத்தை மிருகத்
தின் சிங்காசனத்தின்மேல் ஊற்றவே, அதன்
ராஜ்யம் இருளடைந்தது; அவர்கள் வேதனையி
னிமித்தம் தங்கள் நாவுகளைக் கடித்துக்
11 கொண்டார்கள். தங்கள் வேதனைகளி
னிமித்தமும் தங்கள் புண்களினிமித்தமும்
பரலோகத்தின் கடவுளை அவர்கள் தூஷித்
தார்களேயல்லாமல், தங்கள் செய்கைகளை
விட்டு மனந்திரும்பவில்லை.
12 ஆறும் தூதன் தன் கலசத்தை ஐபிராத்து
என்னும் மகா நதியின்மேல் ஊற்றவே, சூரி
யன் உதிக்கும் திசையிலிருந்து வரும் ராஜாக்
களுக்கு வழி ஆயத்தமாகும்படி அதன்
13 தண்ணீர் வற்றிப்போயிற்று. அப்பொழுது
வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயி
லும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து
தவளைக்ள்போன்ற மூன்று அசுத்த ஆவிகள்
14 வரக் கண்டேன். அவைகள் அடையா
ளங்களைச் செய்கிற பேய்களின் ஆவிகள்;
அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்
களைச் சர்வவல்ல கடவுளுடைய பெரிதான
நாளின் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்க
அவர்களிடம் புறப்பட்டுப் போகின்றன—
15 இதோ, திருடன்போல் வருகிறேன்; விழித்
திருக்கிறவனாய், தன் மானம் தெரிய நிர்வாண
மாகி நடவாமல் தன் வஸ்திரங்களைக் காத்துக்
16 கொள்ளுகிறவன் பாக்கியவான்—எபிரேயு
பாஷையில் அர்மகெதோன் எனப்படும்
இடத்தில் அவர்களைக் கூட்டிச்சேர்த்தன.
17 ஏழாம் தூதன் தன் கலசத்தை ஆகாயத்
தில் ஊற்றவே: ஆயிற்று என்ற பெரிய
சத்தம் ஒன்று ஆலயத்திலுள்ள சிங்காசனத்தி
18 லிருந்து பிறந்தது. உடனே மின்னல்களும்
சத்தங்களும் இடிமுழக்கங்களும் உண்டா
யின; பெரிய பூமி அதிர்ச்சியும் உண்டா
யிற்று. பூமியின்மேல் மனுஷர் தோன்றிய
நாள்முதல் அப்படிப்பட்ட பெரிய பூமி
19 யதிர்ச்சி உண்டானதேயில்லை. அப்பொழுது
மகா நகரம் மூன்று பங்காய்ப் போயிற்று.
புறஜாதிகளின் நகரங்களும் விழுந்தன. கட
வுளின் உக்கிர கோபாக்கினையாகிய மது
நிறைந்த பாத்திரத்தை மகா பாபிலோனுக்
குக் குடிக்கக் கொடுக்கும்படி, அது அவர்
20 சன்னிதியில் நினைவுகூரப்பட்டது. தீவுகள்
யாவும் அகன்றுபோயின; பர்வதங்களும்
21 காணப்படாதேபோயின. மேலும், தாலந்து
நிறையான பெரிய கற்களைப் பொழியும் கல்
மழை வானத்திலிருந்து மனுஷர்மேல் பெய்
தது; அந்தக் கல்மழையினால் உண்டான
வாதை மிகக் கொடியதாயிருந்ததால், மனு
ஷர் அதினிமித்தம் கடவுளைத் தூஷித்
தார்கள்.

ஏழு கலசங்களையுடைய ஏழு தூதரில் 17
ஒருவன் வந்து என்னோடு பேசி: இங்கே வா,
அநேக தண்ணீர்கள்மேல் உட்கார்ந்திருக்கிற
மகா வேசிக்கு வரும் தீர்ப்பை உனக்குக்
காண்பிப்பேன். பூமியின் ராஜாக்கள் அவ 2
ளோடு வேசித்தனம்பண்ணினார்கள். பூமி
யின் குடிகள் அவள் வேசித்தன மதுவால்
வெறிகொண்டார்கள் என்றான். என்னை 3
ஆவியில் வனாந்தரத்திற்குக் கொண்டுபோ
னான். அங்கே சிவப்பான மிருகத்தின்மேல்
உட்கார்ந்திருந்த ஒரு ஸ்திரீயைக் கண்டேன்.
அந்த மிருகம் தூஷண நாமங்கள் நிறைந்
தது; அதற்கு ஏழு தலைகளும் பத்துக்
கொம்புகளும் இருந்தன. அந்த ஸ்திரீ 4
இரத்தாம்பரமும் சிவப்பாடையும் தரித்து,
பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்
துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டிருந்தாள்.
அருவருப்புகளும் தன் வேசித்தனத்தின்
அசுத்தங்களும் நிறைந்த பொற்பாத்திரத்தை
அவள் தன் கையில் பிடித்திருந்தாள். மகா 5
பாபிலோன் வேசிகளுக்கும் பூமியி
லுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்
னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்
தது; இதற்கு இரகசிய அர்த்தம் உண்டு.
அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத் 6
தினாலும் இயேசுவினுடைய சாட்சிகளின்
இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிற
தைக் கண்டேன். அவளைக் கண்டு நான்
மிகவும் ஆச்சரியப்பட்டேன். தூதன் 7
என்னைப் பார்த்து: நீ ஆச்சரியப்படுவ
தேன்? இந்த ஸ்திரீயின் இரகசியத்தையும்,
ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும்
உடையதாய் இவளைச் சுமக்கிற மிருகத்தின்
இரகசியத்தையும் உனக்குச் சொல்லுகிறேன்,
கேள்: நீ கண்ட மிருகம் முன்னே இருந் 8
தது, இப்பொழுது இல்லை, பாதாளக்
குழியிலிருந்து இனி ஏறி வரும், பின் நாச
மடையும். உலகத்தோற்றம் முதல் ஜீவ
புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின்
குடிகள், இருந்ததும் இராமற்போனதும்
இனி வருவதுமான அந்த மிருகத்தைப்
பார்த்து ஆச்சரியப்படுவார்கள். இங்கே 9
தான் விவேகமுள்ள மனம் வேண்டும்:
அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்
திருக்கிற ஏழு மலைகளாம். ஏழு ராஜாக் 10
களும் உண்டு; இவர்களில் ஐந்துபேர் விழுந்
தார்கள், ஒருவன் இருக்கிறான், மற்றவன்
இன்னும் வரவில்லை; வரும்போது அவன்
தரித்திருப்பது கொஞ்சக்காலமே. இருந்த 11
தும் இராமற்போனதுமாகிய மிருகமே எட்
டாவது ராஜன், அவன் அவ்வேழுபேரில்
ஒருவன், நாசமடையப்போகிறவன். நீ 12

கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்
களாம்; இவர்கள் இன்னும் ராஜாதிகாரம்
பெறவில்லை. ஆயினும், மிருகத்தோடுகூட
இவர்கள் ஒரு மணி நேரமளவும் ராஜாதிகாரம்
13 பெற்றுக்கொள்ளுகிறார்கள். இவர்கள் ஒரே
கருத்துள்ளவர்களாய்த் தங்கள் வல்லமை
யையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக்
14 கொடுக்கிறார்கள். இவர்கள் ஆட்டுக்குட்டி
யானவரோடு யுத்தம்பண்ணுவார்கள். ஆட்
டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தாவும்
ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்
களை ஜெயிப்பார், அவரோடிருக்கிறவர்களும்
ஜெயிப்பார்கள்; இவர்கள் அழைக்கப்பட்ட
வர்கள், தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், உண்
15 மையுள்ளவர்கள் என்று சொன்னான். பின்
னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி
உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்
டாயே, அவைகள் ஜனங்களும் கூட்டங்
16 களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம். அந்
தப் பத்துக் கொம்புகளையும் மிருகத்தையும்
நீ கண்டாயே, அவைகள் அந்த வேசியைப்
பகைத்து, அவளைப் பாழும் நிர்வாணமு
மாக்கி, அவள் மாம்சத்தைப் பட்சித்து,
அவளை நெருப்பினால் சுட்டெரித்துப்போடும்.
17 கடவுளின் வார்த்தைகள் நிறைவேறித் தீரு
மளவும், அவைகள் அவர் கருத்தை நிறை
வேற்றி ஒரே கருத்துள்ளவைகளாய்த் தங்கள்
ராஜ்யத்தை மிருகத்திற்குக் கொடுக்கிறதற்கு,
அவர் அவைகளுடைய இருதயங்களை ஏவி
18 னார். நீ கண்ட ஸ்திரீ பூமியின் ராஜாக்கள்
மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகர
மேயாம் என்றான்.

18 இவைகளுக்குப்பின்பு, மிகுந்த அதிகார
முடைய வேறொரு தூதன் வானத்திலிருந்து
இறங்கிவரக் கண்டேன். அவன் மகிமை
2 யினால் பூமி பிரகாசமடைந்தது. அவன்
பலத்த சத்தமிட்டு: விழுந்தது! விழுந்தது!
மகா பாபிலோன் விழுந்தது. அது பேய்
களின் குடியிருப்பும், சகல அசுத்த ஆவி
களுக்கும் உறைவிடமும், அசுத்தமும் அரு
வருப்புமான சகலவித பறவைகளுக்கும்
3 உறைவிடமும் ஆயிற்று. அவள் வேசித்தன
மாகிய உக்கிர மதுவைச் சகல ஜாதிகளும்
குடித்தார்கள்; பூமியின் ராஜாக்கள் அவ
ளோடு வேசித்தனம்பண்ணினார்கள்; அவ
ளுடைய அளவற்ற சுகபோகத்தினால் பூமி
யின் வர்த்தகர் தனவந்தரானார்கள் என்று
சொன்னான்.
4 பின்பு, வானத்திலிருந்து வேறொரு சத்தம்
உண்டாகக் கேட்டேன்: என் ஜனமே,
அவளை விட்டு வெளியே வாருங்கள், அவள்
பாவங்களில் நீங்கள் பங்காளிகளாகாதே
யுங்கள்; அவள் வாதைகளில் பங்கு பெறா
தேயுங்கள். அவள் பாவங்கள் வானமட் 5
டும் போய் எட்டின; அவள் அநியாயங்களைக்
கடவுள் நினைத்துக்கொண்டார். அவள் 6
கொடுத்தபடியே அவளுக்குக் கொடுத்துத்
தீருங்கள்; அவள் செய்கைகளுக்கு இரட்
டிப்பாகவும் செய்துவிடுங்கள். அவள்
கலந்து கொடுத்த பாத்திரத்திலேயே இரட்
டிப்பாக அவளுக்குக் கலந்து கொடுங்கள்.
அவள் தன்னை மகிமைப்படுத்திச் சுகபோக 7
மாய் வாழ்ந்ததெவ்வளவோ அவ்வளவாய்
வாதையையும் துக்கத்தையும் அவளுக்குக்
கொடுத்துவிடுங்கள். நான் ராஜஸ்திரீயாய்
வீற்றிருக்கிறேன், நான் விதவையல்ல, நான்
துக்கத்தைக் காண்பதேயில்லை என்று
அவள் தன் இருதயத்தில் சொல்லுகிறாளே.
இதினிமித்தம், சாவு துக்கம் பஞ்சமாகிய 8
வாதைகள் அவளுக்கு ஒரேநாளில் வரும்;
அவள் அக்கினியினால் சுட்டெரிக்கப்படு
வாள்; அவளை நியாயந்தீர்க்கும் கடவுளாகிய
கர்த்தர் வல்லமையுள்ளவர். அவளோடு 9
வேசித்தனஞ்செய்து சுகபோகமாய் வாழ்ந்த
பூலோக ராஜாக்கள் அவள் வேகிறதினால்
உண்டாகும் புகையைப் பார்த்துப்பார்த்து
அவள்நிமித்தம் அழுது மாரடிப்பார்கள்;
அவள் வாதையைக் கண்டு பயந்து தூரத் 10
திலே நின்று: ஐயையோ! பாபிலோன் மகா
நகரமே! பலமான பட்டணமே! ஒரே நாழி
கையில் உனக்குத் தீர்ப்பு வந்துவிட்டதே
என்பார்கள். பூமியின் வர்த்தகரும் தங்கள் 11
சரக்குகளை இனிக் கொள்வாரில்லாதபடி
யால் அவள்நிமித்தம் அழுது புலம்பு
வார்கள். அவர்கள் சரக்குகளாவன: பொன், 12
வெள்ளி, இரத்தினம், முத்துக்கள், சிறந்த
வஸ்திரம், இரத்தாம்பரம், பட்டாடை, சிவப்
பாடை, சகலவித வாசனைக் கட்டைகள்,
தந்தத்தினால் செய்த சகலவித சாமான்கள்,
விலையுயர்ந்த மரம் செம்பு இரும்பு வெள்
ளைக்கல் இவற்றால் செய்த சகலவித
சாமான்கள், | இலவங்கம், ஓமம், தூப 13
வர்க்கங்கள், பரிமள தைலம், சாம்பிராணி,
திராட்சரசம், எண்ணெய், மெல்லியமா,
கோதுமை, ஆடுமாடுகள், குதிரைகள், இர
தங்கள், அடிமைகள், மனுஷருடைய
ஆத்துமாக்களே. உன் ஆத்துமா இச்சித்த 14
பழவர்க்கங்கள் உன்னைவிட்டு நீங்கிப்போ
யின. சகல இன்பங்களும் ஆடம்பரங்களும்
உன்னைவிட்டு ஒழிந்துபோயின; அவைகள்
இனிக் காணப்படுவதேயில்லை. இவைகளைக் 15
கொண்டு வர்த்தகஞ்செய்து அவளால் தன
வந்தரானவர்கள் அவள் வாதையைக்கண்டு

பயந்து தூரத்திலே நின்று, அழுது புலம்பி:
16 ஐயையோ! மகாநகரமே! சிறந்த வஸ்திரத்
தையும் இரத்தாம்பரத்தையும் சிவப்பாடை
யையும் தரித்து, பொன்னினாலும் இரத்தி
னங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்
17 கப்பட்டிருந்தவளே! இவ்வளவு ஐசுவரிய
மும் ஒரே நாழிகையில் பாழாய்ப்போயிற்றே
என்று சொல்லுவார்கள். மாலுமிகள் யாவ
ரும், எங்கேயாகிலும் கப்பல்யாத்திரை செய்
கிறவர்கள் யாவரும், கப்பலாட்களும், சமுத்
திரத்தில் தொழில்செய்து பிழைக்கிற யாவ
18 ரும் தூரத்திலே நின்று, அவள் வேகிறதினால்
உண்டாகும் புகையைக் கண்டு: இந்த மகா
நகரத்திற்கு ஒப்பான நகரம் எது என்று
19 சத்தமிட்டார்கள். அவர்கள் தங்கள் தலை
கள்மேல் புழுதியைப் போட்டுக்கொண்டு
அழுது புலம்பி: ஐயையோ, மகாநகரமே,
சமுத்திரத்தில் கப்பல்களையுடைய அனைவ
ரும் இவள் அருஞ்செல்வத்தைக்கொண்டு
இவளால் தனவந்தரானார்கள்; ஒரே நாழிகை
யில் இவள் பாழாய்ப்போனாளே என்று ஓல
20 மிட்டார்கள். பரலோகமே, பரிசுத்தவான்
களே, அப்போஸ்தலர்களே, தீர்க்கதரிசிகளே,
அவள்நிமித்தம் களிகூருங்கள். உங்கள்நிமித்
தம் கடவுள் அவளிடம் பழிவாங்கினாரே.
21 அப்பொழுது, வல்லமையுள்ள தூதன்
ஒருவன் பெரிய திரிகைக்கல்லையொத்த ஒரு
கல்லை எடுத்து, சமுத்திரத்தில் அதை எறிந்து:
பாபிலோன் மகாநகரம் இப்படியே வேக
மாய் எறிந்துவிடப்படும்; இனி அது காணப்
22 படுவதேயில்லை. சுரமண்டலக்காரர் பாடகர்
நாகசுரக்காரர் எக்காளம் ஊதுவோர் இவர்
களுடைய சத்தம் இனி உன்னிடத்தில்
கேட்கப்படுவதேயில்லை; எந்தத் தொழிலை
யும் செய்யும் தொழிலாளி எவனும் இனி
உன்னிடத்தில் காணப்படுவதேயில்லை;
திரிகை அரைக்கும் சத்தம் இனி உன்னிடத்
23 தில் கேட்கப்படுவதேயில்லை. விளக்கு
வெளிச்சம் இனி உன்னிடத்தில் பிரகாசிப்
பதேயில்லை. மணவாளன் மணவாட்டி
களின் குரல் இனி உன்னிடத்தில் கேட்கப்
படுவதேயில்லை. ஏனெனில், உன் மாந்திரி
யத்தால் எல்லா ஜாதிகளும் வஞ்சிக்கப்பட்ட
படியால் உன் வர்த்தகர் பூமியில் பிரபுக்க
24 ளானார்கள்; தீர்க்கதரிசிகளின் இரத்தமும்
பரிசுத்தவான்களின் இரத்தமும் பூமியில்
கொல்லப்பட்ட அனைவரின் இரத்தமும்
அவளிடத்தில் காணப்பட்டது என்று
விளம்பினான்.

19 இவைகளுக்குப்பின்பு, திரளான ஜனக்
கூட்டத்தின் ஆரவாரம்போன்ற சத்தம் பர
லோகத்தில் உண்டாகக் கேட்டேன்.
அவர்கள்:
அல்லேலூயா!
ஜெயமும் மகிமையும் வல்லமையும்
நம்முடைய கடவுளுக்கே உரியன.
அவர் நியாயத்தீர்ப்புகள் உண்மையான 2
வை, நீதியானவை.
தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த
மகாவேசியை அவர் நியாயந்தீர்த்தார்.
தம்முடைய அடியாரின் இரத்தத்திற்காக
அவளிடம் பழிவாங்கினார்
என்றார்கள். மறுபடியும் அவர்கள்: அல் 3
லேலூயா! என்று சொன்னார்கள். அவள்
புகை என்றென்றைக்கும் எழும்புகிறது.
இருபத்துநான்கு மூப்பரும் நான்கு ஜீவன் 4
களும் சாஷ்டாங்கமாய் விழுந்து, சிங்கா
சனத்தில் வீற்றிருக்கும் கடவுளை வணங்கி:
ஆமேன், அல்லேலூயா என்றார்கள். சிங்கா 5
சனத்திலிருந்து பிறந்த ஒரு சத்தம்:
நம்முடைய கடவுளின் அடியாரே,
அவருக்குப் பயப்படுகிறவர்களே,
சிறியோரே, பெரியோரே,
நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்
என்று உரைத்தது. பின்னும், திரளான 6
ஜனக்கூட்டத்தின் ஆரவாரம்போன்றதும்
அநேக தண்ணீர்களின் இரைச்சல்போன்ற
தும் பலத்த இடிமுழக்கம்போன்றதுமான
ஒரு சத்தம் கேட்டேன்:
அல்லேலூயா!
சர்வவல்ல கடவுளாகிய நம்முடைய
கர்த்தர்
ராஜ்யபாரம்பண்ணத் தொடங்கியிருக்
கிறார்.
நாம் சந்தோஷப்பட்டுக் களிகூரக்கட 7
வோம்;
அவருக்கு மகிமை செலுத்துவோம்,
ஆட்டுக்குட்டியானவருடைய கலியா
ணம் வந்துவிட்டது,
அவர் மனைவி தன்னை ஆயத்தம்பண்ணிக்
கொண்டாள்;
பிரகாசமும் சுத்தமுமான சிறந்த வஸ்திரம் 8
தரித்துக்கொள்ளும்படி அருள்பெற்றாள்;
அந்தச் சிறந்த வஸ்திரம்
பரிசுத்தவான்களின் நீதிக்கிரியைகளே
என்று அது உரைத்தது.
பின்னும் அவன்: ஆட்டுக்குட்டியானவ 9
ரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்
டவர்கள் பாக்கியவான்கள் என்றெழுது
என்று என்னிடம் சொன்னான். மேலும்:
இவைகள் கடவுளின் சத்திய வசனங்கள்
என்று என்னிடம் சொன்னான். அப் 10
பொழுது அவனை வணங்கும்படி அவன்

பாதத்தில் விழுந்தேன்; அவனோ என்னிடம்:
வேண்டாம், வேண்டாம்! உன்னோடும்
இயேசுவின் சாட்சியத்தையுடைய உன்
சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்
காரன், கடவுளையே வணங்கு. ஏனெனில்,
இயேசுவின் சாட்சியம் தீர்க்கதரிசனத்தின்
ஆவி என்றான்.
11 பின்பு வானம் திறந்திருக்கக் கண்டேன்.
இதோ, ஒரு வெண்குதிரை! அதன்மேல்
ஏறியிருந்தவர் நம்பத்தக்கவர், உண்மையுள்
ளவர் எனப்படுகிறவர். அவர் நீதியாகத் தீர்ப்
12 புச்செய்து, யுத்தம்பண்ணுகிறார். அவர்
கண்கள் அக்கினிஜுவாலை மயமானவை.
அவர் சிரசின்மேல் அநேக கிரீடங்கள் இருக்
கின்றன; எழுதப்பட்ட ஒரு நாமம் அவ
ருக்கு உண்டு, அவருக்கேயன்றி அது
13 வேறொருவருக்கும் தெரியாது. இரத்தத்தில்
தோய்க்கப்பட்ட வஸ்திரம் ஒன்றை அவர்
தரித்திருந்தார். கடவுளின் வார்த்தை
14 என்பது அவர் நாமம். வானத்திலுள்ள
சேனைகள் வெண்மையும் சுத்தமுமான சிறந்த
வஸ்திரம் தரித்தவர்களாய் வெண் குதிரை
களின்மேல் ஏறி அவருக்குப் பின்சென்
15 றார்கள். புறஜாதிகளைச் சங்கரிக்கும்படி
அவர் வாயிலிருந்து கூர்மையான பட்டயம்
புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்
அவர்களை மேய்த்து நடத்துவார்; அவர் சர்வ
வல்ல கடவுளின் உக்கிரகோபாக்கினையாகிய
16 மதுவின் ஆலையை மிதிக்கிறார். ராஜாதி
ராஜா கர்த்தாதி கர்த்தா என்ற நாமம்
அவர் வஸ்திரத்திலும் தொடையின் மேலும்
எழுதியிருந்தது.
17 பின்பு, தூதன் ஒருவன் சூரியனில் நிற்
கக்கண்டேன். நடுவானத்தில் பறக்கும்
சகல பறவைகளையும் அவன் பார்த்து:
வாருங்கள், கடவுளின் மகா விருந்துக்குக்
18 கூடிவாருங்கள். ராஜாக்களின் மாம்சத்தை
யும், சேனைத்தலைவரின் மாம்சத்தையும், பல
வான்களின் மாம்சத்தையும், குதிரைகளின்
மாம்சத்தையும், அவைகளின்மேல் ஏறியிருக்
கிறவர்களின் மாம்சத்தையும், சுயாதீனர்
அடிமைகள் சிறியோர் பெரியோர் மாம்சத்
தையும் பட்சிக்கும்படி வாருங்கள் என்று
மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.
19 மிருகமும் பூமியின் ராஜாக்களும்
அவர்கள் சேனைகளும் குதிரையின்மேல் ஏறி
யிருக்கிறவரோடும் அவர் சேனையோடும் யுத்
தம்பண்ணும்படி கூடியிருக்கக் கண்டேன்.
20 மிருகம் பிடிபட்டது; அதோடுகூட கள்ளத்
தீர்க்கதரிசியும் பிடிபட்டான். இவனே
மிருகத்தின் முன்பாக அடையாளங்களைச்
செய்து, மிருகத்தின் முத்திரையைத் தரித்
துக்கொண்டவர்களையும் அதன் சொரூ
பத்தை வணங்கினவர்களையும் தான் செய்த
அடையாளங்களினால் வஞ்சித்தவன். கந்த
கம் எரிகிற அக்கினிக்கடலிலே இருவரும்
உயிரோடே தள்ளப்பட்டார்கள். குதிரை 21
யின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து
புறப்படும் பட்டயத்தால் மற்றவர்கள் கொல்
லப்பட்டார்கள்; பறவைகள் யாவும் அவர்க
ளுடைய மாம்சத்தை வயிறாரத் தின்றன.

பின்பு, வானத்திலிருந்து தூதன் ஒருவன் **20**
இறங்கிவரக் கண்டேன்; பாதாளக்குழியின்
திறவுகோலையும், ஒரு பெரிய சங்கிலியையும்
அவன் தன் கையில் வைத்திருந்தான். பிசா 2
சென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட
பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன்
பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும்
கட்டிவைத்து, பாதாளக்குழியில் எறிந்து 3
விட்டான்; அந்த ஆயிரம் வருஷம் முடியு
மளவும் இனி அது ஜனங்களை வஞ்சியாத
படி அவன் அதை அடைத்து, மேலே
முத்திரை போட்டான்; இவைகளுக்குப்
பின்பு அது கொஞ்சகாலம் கட்டவிழ்க்கப்
படவேண்டும்.

பின்பு, சிங்காசனங்களைக் கண்டேன். 4
நியாயந்தீர்க்கும் அதிகாரம் பெற்றவர்கள்
அவைகளில் உட்கார்ந்திருந்தார்கள். இயேசு
வின் சாட்சியத்தினிமித்தமும் கடவுளின்
வார்த்தையினிமித்தமும் சிரச்சேதம் பண்
ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும்,
மிருகத்தையாவது அதன் சொரூபத்தையா
வது வணங்காமலும், தங்கள் நெற்றியிலும்
தங்கள் கையிலும் அதன் முத்திரையைத்
தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும்
கண்டேன். அவர்கள் உயிர்பெற்றுக்
கிறிஸ்துவோடு ஆயிரம் வருஷம் அரசாண்
டார்கள். மரணமடைந்த மற்றவர்கள் 5
அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிர்
பெறவில்லை. இதுவே முதலாம் உயிர்த்
தெழுதல். முதலாம் உயிர்த்தெழுதலில் 6
பங்கடைகிறவன் பாக்கியவான், பரிசுத்தன்;
இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு
அதிகாரம் இல்லை; இவர்கள் கடவுளுக்கும்
கிறிஸ்துவுக்கும் ஆசாரியர்களாயிருந்து,
அவரோடுகூட ஆயிரம் வருஷம் அர
சாளுவார்கள்.

அந்த ஆயிரவருஷம் முடியும்போது, சாத் 7
தான் தன் காவலிலிருந்து விடுதலையாவான்.
விடுதலையாகவே, பூமியின் நான்கு திசை 8
களிலுமுள்ள ஜனங்களையும் கோகு மாகோகு
என்பவர்களையும் வஞ்சித்து, யுத்தத்திற்குக்
கூட்டிச்சேர்க்கும்படி அவன் புறப்படுவான்;

அவர்கள் தொகை கடற்கரை மணலத்தனை
9 யாகும். பூமியெங்கும் அவர்கள் பரவி,
பரிசுத்தவான்களின் பாளையத்தையும் பிரிய
மான நகரத்தையும்வளைந்துகொண்டார்கள்;
அப்பொழுது வானத்திலிருந்து அக்கினி
இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது.
10 மேலும், அவர்களை வஞ்சித்துக்கொண்
டிருந்த பிசாசு அக்கினியும் கந்தகமும்
நிறைந்த கடலிலே எறிந்துவிடப்பட்டான்;
அங்கேதான் மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசி
யும் இருந்தார்கள்; இரவும் பகலும் என்
றென்றைக்கும் அவர்கள் வாதிக்கப்படு
வார்கள்.
11 பின்பு, வெண்மையான பெரிய சிங்கா
சனத்தையும் அதில் வீற்றிருப்பவரையும்
கண்டேன். பூமியும் வானமும் அவர் சமு
கத்தைவிட்டு அகன்றுபோயின. அவை
12 களுக்கு இடமில்லாமற்போயிற்று. மரித்
தோராகிய சிறியோரையும் பெரியோரையும்
சிங்காசனத்துக்குமுன் நிற்கக் கண்டேன்;
புஸ்தகங்கள் விரிக்கப்பட்டன; ஜீவபுஸ்தக
மென்னும் வேறொரு புஸ்தகமும் விரிக்கப்
பட்டது; அந்தப் புஸ்தகங்களில் எழுதியவை
களைக்கொண்டு மரித்தோர் தங்கள் தங்கள்
செய்கைகளுக்குத் தகுந்தபடி தீர்ப்புப்
13 பெற்றார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள
மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதா
ளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்பு
வித்தன, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள்
செய்கைகளுக்குத் தகுந்தபடி தீர்ப்புப் பெற்
14 றார்கள். மரணமும் பாதாளமும் அக்கினிக்
கடலிலே எறியப்பட்டன. அந்த அக்கினிக்
15 கடலே இரண்டாம் மரணம். ஜீவபுஸ்த
கத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படா
தவன் அக்கினிக்கடலில் எறியுண்டான்.

21 பின்பு, புதிய வானத்தையும் புதிய பூமி
யையும் கண்டேன். முந்தின வானமும்
முந்தின பூமியும் ஒழிந்துபோயின, சமுத்திர
2 மும் இல்லாமற்போயிற்று. புதிய எருசலே
மாகிய பரிசுத்தநகரம் கடவுளிடத்தினின்று
வானத்திலிருந்து இறங்கிவரக் கண்டேன்;
அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்
பட்ட மணவாட்டியைப்போல் ஆயத்தமாக்
3 கப்பட்டிருந்தது. மேலும், சிங்காசனத்தி
லிருந்து பெருஞ்சத்தம் உண்டாகக் கேட்
டேன்: இதோ, கடவுளின் கூடாரம் மனுஷ
ரிடத்திலிருக்கிறது; அவர்களிடத்தில் அவர்
தங்குவார், அவர்கள் அவர் ஜனங்களா
யிருப்பார்கள், கடவுள் தாமே அவர்களோ
4 டிருப்பார். அவர்கள் கண்களினின்று
கண்ணீர் யாவையும் துடைப்பார். இனி
மரணமும் இல்லை, துக்கமும் இல்லை, அலறு
தலும் இல்லை, வேதனையும் இல்லை; முந்தின
வைகள் ஒழிந்துபோயின என்று அது விளம்
பினது. சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவர்: 5
இதோ, நான் எல்லாவற்றையும் புதிதாக்கு
கிறேன் என்றார். பின்னும் அவர்: எழுது,
இவ்வார்த்தைகள் நம்பத்தக்கவை, உண்மை
யானவை என்றார். அன்றியும், அவர்: 6
நிறைவேறின. நானே அல்பா, நானே
ஒமெகா, ஆதியும் அந்தமும் நானே. தாகமா
யிருக்கிறவனுக்கு ஜீவதண்ணீர் ஊற்றில்
இலவசமாய்க் குடிக்கக் கொடுப்பேன்.
ஜெயங்கொள்ளுகிறவன் இவற்றைச் சுதந் 7
தரித்துக்கொள்ளுவான்; நான் அவனுக்குக்
கடவுளாயிருப்பேன், அவன் எனக்குப்
புத்திரனாயிருப்பான். பயப்படுகிறவர்களுக் 8
கும், விசுவாசமற்றவர்களுக்கும், அருவருப்
பானவர்களுக்கும், கொலைபாதகருக்கும்,
வேசிக்கள்ளருக்கும், மாந்திரியக்காரருக்கும்,
விக்கிரகாராதனைக்காரருக்கும், சகல பொய்
யருக்குமோவெனில் அக்கினியும் கந்தகமும்
எரிகிற கடலே கதியாகும்; இரண்டாம்
மரணம் இதுவே என்று என்னிடம் சொன்
னார்.
பின்பு, கடைசியான ஏழு வாதைகள் 9
நிறைந்த ஏழு கலசங்களையுடைய ஏழு தூத
ரில் ஒருவன் வந்து என்னோடு பேசி: இங்கே
வா, ஆட்டுக்குட்டியானவருடைய மனைவி
யாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிப்
பேன் என்று சொன்னான். பெரிதும் உயரமு 10
மான ஒரு மலையின்மேல் அவன் என்னை
ஆவியில் கொண்டுபோய், எருசலேமாகிய
பரிசுத்த நகரம் வானத்திலிருந்து கடவு
ளிடத்தினின்று இறங்கிவருகிறதை எனக்
குக்காண்பித்தான். அது கடவுளின் மகிமை 11
பொருந்தியது; அதன் தேஜஸ் விலையுயர்ந்த
இரத்தினத்திற்கும், பளிங்குபோல் ஒளிவீசும்
வச்சிரக்கல்லுக்கும் ஒப்பாயிருந்தது. பெரி 12
தும் உயரமுமான மதிலும் பன்னிரண்டு
வாசல்களும் அதற்கிருந்தன. வாசல்களில்
பன்னிரண்டு தூதர் நின்றார்கள். இஸ்ரவேல்
புத்திரராகிய பன்னிரண்டு கோத்திரத்தா
ருடைய நாமங்கள் அவைகளில் எழுதியிருந்
தன. கிழக்கே மூன்று வாசல், வடக்கே 13
மூன்று வாசல், தெற்கே மூன்று வாசல்,
மேற்கே மூன்று வாசல். நகரத்தின் மதிலுக் 14
குப் பன்னிரண்டு அஸ்திபாரக் கற்கள் இருந்
தன; ஆட்டுக்குட்டியானவரின் பன்னி
ரண்டு அப்போஸ்தலருடைய பன்னிரண்டு
நாமங்கள் அவற்றில் எழுதியிருந்தன. என் 15
னுடனே பேசின தூதன் நகரத்தையும் அதன்
வாசல்களையும் அதன் மதிலையும் அளக்கிற

தற்கு ஒரு பொற்கோலை அளவுகோலாக
16 வைத்திருந்தான். அந்த நகரம் சதுரமா
யிருக்கிறது, அதன் நீளமும் அகலமும் ஒரே
அளவு. அவன் அந்தக் கோலினால் நகரத்தை
அளந்தான்; அதன் அளவு பன்னீராயிரம்
ஸ்தாதி[1]; அதன் நீளமும் அகலமும் உயர
17 மும் சமம். அவன் மதிலை அளந்த அளவு
நூற்றுநாற்பத்து நான்கு முழம். இது
மனுஷ அளவு; தூதனின் அளவும் அதுவே.
18 அதன் மதில் வச்சிரக்கல்லால் கட்டியிருந்
தது; நகரம் சுத்தமான கண்ணாடிக்கொப்
19 பான பசும்பொன்னாயிருந்தது. நகரத்து
மதிலின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தி
னங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.
முதல் அஸ்திபாரம் வச்சிரக்கல், இரண்டா
வது நீலம், மூன்றாவது மாணிக்கம், நான்கா
20 வது மரகதம், ஐந்தாவது கோமேதகம்,
ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்
தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதா
வது புஷ்பராகம், பத்தாவது வைடூரியம்,
பதினோராவது இந்திரநீலம், பன்னிரண்டா
21 வது சுகந்தி. பன்னிரண்டு வாசல்களும்
பன்னிரண்டு முத்துக்கள்; ஒவ்வொரு வாச
லும் ஒவ்வொரு முத்தாலானது. நகரத்தின்
வீதி தெளிவான கண்ணாடிபோன்ற பசும்
22 பொன். தேவாலயத்தை நான் அதிலே
காணவில்லை; சர்வவல்ல கடவுளாகிய கர்த்
தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு
23 ஆலயம். நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்
கச் சூரியனும் சந்திரனும் வேண்டுவதில்லை;
கடவுளின் மகிமையே அதைப் பிரகாசிப்
பித்தது. ஆட்டுக்குட்டியானவரே அதற்கு
24 விளக்கு. அதன் வெளிச்சத்தில் ஜாதிகள்
நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள்
மகிமையை அதற்குள் கொண்டுவருகி
25 றார்கள். அதன் வாசல்கள் பகலில் அடை
படுவதேயில்லை; அங்கே இராக்காலம் கிடை
26 யாது. ஜாதிகளின் மகிமையையும் மேன்மை
யையும் அதற்குள் கொண்டுவருவார்கள்.
27 அசுத்தமான எதுவும், அருவருப்பையும்
பொய்யையும் நடப்பிக்கிற எவனும் அதில்
பிரவேசிப்பதேயில்லை; ஆட்டுக்குட்டியான
வரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள்
மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்.

22 பின்பு, பளிங்குபோல் தெளிவான ஜீவ
தண்ணீருள்ள நதி கடவுளும் ஆட்டுக்குட்டி
யானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து
புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்
2 தான். நகர வீதியின் மத்தியிலும், நதியின்
இருகரையிலும் பன்னிரண்டுவிதக் கனி
களைத் தரும் ஜீவவிருட்சம் இருந்தது; அது
மாதந்தோறும் தன் கனியைக்கொடுக்கும்;
விருட்சத்தின் இலைகள் ஜாதிகளின் ஆரோக்
கியத்திற்கு ஏதுவானவை. இனி ஒரு சாபமு 3
மிராது. கடவுளும் ஆட்டுக்குட்டியானவரு
மிருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்; அவர்
அடியார் அவரைச் சேவித்து, அவருடைய 4
சமூகத்தைத் தரிசிப்பார்கள்; அவர் நாமம்
அவர்கள் நெற்றிகளிலிருக்கும். இனி இராக் 5
காலமிராது; விளக்கு வெளிச்சமும் சூரிய
வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவ
தில்லை; கடவுளாகிய கர்த்தரே அவர்கள்
மேல் ஒளிவீசுவார், அவர்கள் என்றென்
றைக்கும் அரசாளுவார்கள்.

பின்பு, அவர் என்னிடம்: இந்த வார்த் 6
தைகள் நம்பத்தக்கவை, உண்மையானவை.
சீக்கிரம் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்
முடைய அடியாருக்குக் காண்பிக்கும்
பொருட்டு, தீர்க்கதரிசிகளுடைய ஆவி
களின் கடவுளாகிய கர்த்தர் தம் தூதனை
அனுப்பினார். சீக்கிரம் வருகிறேன்; இந்தப் 7
புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வார்த்தை
களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான்
என்றார்.

இவைகளைக் கண்டவனும் கேட்டவனும் 8
யோவானாகிய நானே. நான் கண்டு கேட்ட
போது இவைகளை எனக்குக் காண்பித்த
தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில்
விழுந்தேன். அவனோ: வேண்டாம், வேண் 9
டாம்! உன்னோடும் தீர்க்கதரிசிகளாகிய
உன் சகோதரரோடும் இந்தப் புஸ்தகத்தின்
வார்த்தைகளைக் கைக்கொள்ளுகிறவர்களோ
டுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; கடவு
ளையே வணங்கு என்றான்.

பின்னும் அவர் என்னிடம் சொன்னதா 10
வது: இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன
வார்த்தைகளை முத்திரைபோடவேண்டாம்;
காலம் சமீபம். அநியாயஞ்செய்கிறவன் 11
இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்
தன் இன்னும் அசுத்தனாயிருக்கட்டும்; நீதி
மான் இன்னும் நீதியைச் செய்யட்டும்; பரி
சுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தனாயிருக்
கட்டும். சீக்கிரம் வருகிறேன்; ஒவ்வொரு 12
வனுக்கும் அவனவன் செய்கைகளுக்குத்
தகுந்தபடி நான் அளிக்கும் பலன் என்னோ
டிருக்கிறது. நானே அல்பா, நானே 13
ஒமெகா, முதலும் இறுதியுமானவர் நானே,
ஆதியும் அந்தமும் நானே. ஜீவவிருட்சத்தில் 14
உரிமை பெறுவதற்கும், வாசல்கள் வழி

[1] தரிசனம் 14: 20 பார்க்க.

யாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும்
தங்கள் அங்கிகளைத் தோய்த்து வெளுக்கிற
15 வர்கள் பாக்கியவான்கள். நாய்களும் மாந்திரி
யக்காரரும் வேசிக்கள்ளரும் கொலைபாதக
ரும் விக்கிரகாராதனைக்காரரும் பொய்யில்
பிரியப்பட்டு அதைச் செய்கிற யாவரும்
புறம்பே இருப்பார்கள்.
16 சபைகளுக்காக இவற்றை உங்களுக்குச்
சாட்சியமாய்க் கூறுவதற்கு இயேசுவாகிய
நான் என் தூதனை அனுப்பினேன். தாவீ
தின் வேரும் சந்ததியும் நானே, பிரகாச
முள்ள விடிவெள்ளியும் நானே.
17 ஆவியும் மணவாட்டியும் வா என்கி
றார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக.
தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்ப
முள்ளவன் ஜீவ தண்ணீரை இலவசமாய்ப்
பெற்றுக்கொள்ளக்கடவன்.
18 இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன
வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான்
சாட்சியாகக் கூறுகிறதாவது: ஒருவன்
இவைகளோடு எதையாகிலும் கூட்டினால்,
இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதை
களைக் கடவுள் அவன்மேல் கூட்டுவார்.
ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத் 19
தின் வார்த்தைகளிலிருந்து எதையாகிலும்
எடுத்துவிட்டால், இந்தப் புஸ்தகத்தில்
எழுதியிருக்கிற ஜீவவிருட்சத்திலிருந்தும்
பரிசுத்த நகரத்திலிருந்தும் கடவுள் அவன்
பங்கை எடுத்துவிடுவார்.
இவைகளைச் சாட்சியாகக் கூறுகிறவர்: 20
ஆம், சீக்கிரம் வருகிறேன் என்கிறார்.
ஆமேன், ஆண்டவராகிய இயேசுவே,
வாரும்.
ஆண்டவராகிய இயேசுவின் கிருபை 21
அனைவரோடுங்கூட இருப்பதாக.


ஆபிரகாம்
பிரயாணம் பண்ணின
தேசங்கள்
அஸ்கெனஸ்
அராராத்
கர்கெமீஷ்
காரான
பத்தான் அராம
இப்சா
ஆமாத்
நினிவே
காலாகு
அசூர்
மேதியா
வ
சிப்புரு தீவு
மேல் சமுத்திரம்
தீரு
தமஸ்கு
ஆராம்
எர்மோன
இன்னரோத்
கர்மேல்
கிலியாத்திலுள்ள ராமோத்
எருசலேம்
எபிரோன்
மோவாப்
ஏதோம்
சோவான்
கோசேன்
சுக்கோத்
காதேஸ்பர்னெயா
ஏலாத்
மாரா
ஏலீம்
ரெவிதீம்
சீனாய்
சிவந்த சமுத்திரம்
அரபியா
இபிராத்து
இதெக்கேல்
பாபிலோன்
பாபேல்
கல்தேயா
ஊர்
சூசான்
ஏலாம்
பாரசீகம்
50 100 200 300
HJA



1. ரூபன்
2. சிமியோன்
3. யூதா
4. செபுலோன்
5. இசக்கார்
6. தாண்
7. காத்
8. ஆசேர்
9. நப்தலி
10. எப்பிராயீம்
11. மனாசே
12. பென்யமீன்
சீதோன்
தீரு
லீபனோன்
எர்மோன்
தமஸ்கு
தாண்
காதேஸ்
மேரோம் ஏரி
அக்கோ
காசோர்
பாசான்
கின்னரேத்
கர்மேல்
அபேக்
தாபோர்
தோர்
மகித்தோ
இஸ்ரியேல்
கிலெயாத்
தானாகு
பேத்சியான்
தோத்தான்
கில்போவா
ஏபால்
கெரிசீம்
சீகேம்
சுக்கோத்
பெனீயேல்
யாப்போக்கு
யோப்பா
சீலோ
எக்ரோன்
ஒப்ரா
பேதேல
ஆயி
ரப்பா
பேத்கொரோன்
எரிகோ
கில்கால்
ராமா
அம்மோனியர்
எருசலேம்
எஸ்போன்
பெத்லகேம்
நெபோ
தெக்கோவா
உப்புக்கடல்
கெசர்
எபிரோன்
சீப்
தெபீர்
என்கேதி
பெலிஸ்தியர்
அரபியா
மோவாபியர்
பெயேர்ஷெபா
ராபா
கிர்
ரெகொபோத்
மேல் சமுத்திரம்
ஏதோம்
5 10 20 40 60
இஸ்ரவேல்
கோத்திரத்தாரின்
தேசப் படம்



பலெஸ்தீன தேசம்
புதிய ஏற்பாட்டின்
காலத்தில்.

பவுல் அப்போஸ்தலன் பிரயாணம் பண்ணின தேசங்கள்.
இத்தாலியா
ரோமாபுரி
முச்சத்திரம்
அப்பியுசந்தை
புத்தேயோலி
தல்மாத்தியா
மக்கெதோனியா
தெசலோனிக்கே
பிலிப்பி
பெரோயா
நிக்கொப்போலி
ரேகியு
சீரகூசா
மெலித்தா
அகாயா
கொரிந்து
அத்தேனே
சமொத்திராக்கே
துரோவா
அஸ்ஸோ
பெர்கமு
சிமிர்னா
சர்தை
எபேசு
மிலேத்து
கோஸ்
கினீது
ரோது
தியத்தைரா
பிலதெல்பியா
அந்தியோகியா
லவோதிக்கேயா
கொலோசே
அத்தாலியா
பெர்கே
பத்தாரா
மீரு
ஆசியா
பித்தினியா
பொந்து
கலாத்தியா
கப்பத்தோக்கியா
இக்கோனியா
லீஸ்திரா
தெர்பை
தர்சு
செலூக்கியா
அந்தியோகியா
சீப்புரு
சாலமி
பாப்போ
கிரேத்தா
பேனிக்ஸ்
லசேயா
சல்மோனே
கிலவுதா
மத்தியதரைக்கடல்
சீதோன்
தீரு
தமஸ்கு
பித்தொலெமாய்
செசரியா
யோப்பா
எருசலேம்
அரபிதேசம்
அலெக்சந்திரியா
எகிப்து
சிரேனே
சிரேனே
வ
50
100
200
300